V211,31 N64
N64.22.
138008.

V211,31 1.64
N64.22

138008
600 008.

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

## FOURTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

**16th to 18th and 20th to 22nd July 1964.**

**Volume XXII (Nos. 1 to 6).**

TABLE OF CONTENTS.

PAGES

*Thursday, 16th July* 1964.

Condolence Resolution re. the Demise of Sri Jawaharlal Nehru, Prime Minister of India .. .. .. .. .. .. .. 1–17

*Friday, 17th July* 1964.

I Questions and Answers .. .. .. .. .. .. 19–48

II Adjournment Motions—

(1) Collapse of Saraswathi High School Building, Maninagaram, Madurai .. .. .. .. .. .. 48–51

(2) Soaring prices of foodstuffs and essential commodities .. 51–52

(3) Rehabilitation of Tamilian re-patriates from Burma .. .. 52–54

(4) Stoppage of stipends to "Tamil medium" Students and introduction of Tamil medium in Government Colleges. 54–56

III Announcement—

Business of the House .. .. .. .. .. .. 56–60

IV Presentation of Reports—

(1) Report of the Committee on Estimates .. .. .. 60

(2) Reports of the Committee on Public Accounts .. .. 60

V Government Bills—

(1) The Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964) .. .. .. .. .. .. 60

(2) The Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964) .. .. .. 60

(3) The Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964 (L.A. Bill No. 14 of 1964) .. .. .. .. .. .. .. .. 61

(4) The Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 15 of 1964). 61

(5) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 16 of 1964). 61

(6) The Madras Maternity Benefit (Repeal) Bill, 1964 .. .. 61

VI First Supplementary Statement of Expenditure for 1964–65—Presentation .. .. .. .. .. .. .. 61–64

PAGE

*Friday, 17th July* 1964—cont.

VII Demand for Grant for Excess Expenditure in 1959-60—Presentation .. .. .. .. .. .. .. .. 64–65

VIII Government Motions—
(1) Election to the Committee on Estimates for 1964–65 .. 65–66
(2) Election to the Committee on Public Accounts for 1964–65 66–67

IX Discussion on the Madras State Electricity Board Budget for 1964–65 .. .. .. .. .. .. .. .. 67–123

X Papers laid on the Table of the House .. .. .. .. 123–140

*Saturday, 18th July* 1964.

I Questions and Answers .. .. .. .. .. .. 144–174

II Adjournment Motions—
(1) Administrative lapses in the licensing and inspection of godowns .. .. .. .. .. .. .. .. 174–177
(2) Students' agitation in the Victoria Hostel, Madras .. .. 177–178

III Government Bill—
The Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 .. .. .. .. .. .. .. 178

IV Discussion on the Madras State Electricity Board Budget for 1964–65—*cont.* .. .. .. .. .. .. .. 178–241

V Announcement—
Business of the House .. .. .. .. .. .. 241–242

VI Papers laid on the Table of the House .. .. .. 242–243

*Monday, 20th July* 1964.

I Questions and Answers .. .. .. .. .. .. 247–323

II Adjournment Motions—
(1) Paucity of seats in Pre-University Classes .. .. ..
(2) Uncertainty *re.* location of Steel Plant at Salem .. .. 323–324

III Calling attention to collapse of Saraswathi High School Building, Maninagaram, Madurai .. .. .. .. 324–327

IV Government Bills—
(1) The Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 .. 327
(2) The Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 1964) .. .. .. .. .. .. 356–359
(3) The Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964) as amended by the Joint Select Committee .. .. .. .. .. .. .. .. 359–384

V Discussion on the Madras State Electricity Board Budget for 1964–65—*cont.* .. .. .. .. .. .. .. 327–356

VI Discussion for Short Duration *re.* collapse of building of Saraswathi High School, Maninagaram, Madurai .. .. .. 384–411

VII Government Motion for suspension of rule 58 of the Assembly Rules .. .. .. .. .. .. .. .. .. 400

VIII Papers laid on the Table of the House .. .. .. 411–412



PAGES

*Tuesday, 21st July* 1964.

I Questions and Answers .. .. .. .. .. .. 435–467

II Adjournment Motion *re.* proposed strike by Madras City College students .. .. .. .. .. .. 467–469

III Calling attention to the agitation in the Victoria Hostel, Madras .. .. .. .. .. .. .. .. 469–470

IV Government Bills—
(1) The Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 .. .. .. .. 470–471
(2) The Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 .. .. .. .. 471
(3) The Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964), as amended by the Joint Select Committee—*cont.* .. .. .. .. .. .. 471–479
(4) The Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964) as amended by the Select Committee .. .. .. .. .. .. .. .. 479–515
(5) The Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964 (L.A. Bill, No. 14 of 1964), as amended by the Select Committee .. .. 516–524
(6) The Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 5 of 1964), as amended by the Select Committee .. .. .. .. .. 524–530

V Papers laid on the table of the House .. .. .. .. 530

*Wednesday, 22nd July* 1964.

I Questions and Answers .. .. .. .. .. .. 543–578

II Calling attention to the need for postponement of recovery of Government loans in the Nilgiris district .. .. .. 579–580

III Announcements—
(1) Election to the Committee on Public Accounts .. .. 580–581
(2) Election to the Committee on Estimates .. .. .. 581
(3) The Madras Appropriation (No. 4) Bill, 1964 .. .. .. 648
(4) The Madras Appropriation (No. 5) Bill, 1964 .. .. 650
(5) The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 .. .. .. .. .. .. 650

IV Government Bills—
(1) The Madras City Tenants Protection (Amendment) Bill, 1964 .. .. .. .. .. .. .. .. .. 581
(2) The Madras Appropriation (No. 4) Bill, 1964 .. .. 648
(3) The Madras Appropriation (No. 5) Bill, 1964 .. .. 648
(4) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 .. .. .. .. .. 649
(5) The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964 .. .. .. .. .. .. .. 650

V Government Motion—
Change in the Order of Business .. .. .. .. .. 582

PAGES

## *Wednesday 22nd July* 1964—cont.


VI Voting on Demand for Grant for Excess Expenditure in 1959-60 —Demand No. XIII—*Administration of Justice* .. .. 582

VII First Supplementary Statement of Expenditure for 1964-65—General Discussion .. .. .. .. .. .. .. 582-644

VIII Voting on Demands for Grants for further Expenditure for 1964-65—

Demand No. III—General Sales Tax and Other Taxes and Duties—Administration .. .. .. .. .. 644

Demand No. VI—State Legislature .. .. .. .. 644

Demand No. VIII—Head of State, Ministers and Headquarters Staff.
Demand No. IX—District Administration and Miscellaneous.
Demand No. X—Administration of Justice .. .. ..
Demand No. XII—Police .. .. .. .. ..
Demand No. XIII—Education .. .. .. .. ..
Demand No. XIV—Medical .. .. .. .. ..
Demand No. XVI—Agriculture .. .. .. .. .. } 645

Demand No. XVIII—Animal Husbandry .. .. ..
Demand No. XIX—Co-operation .. .. .. ..
Demand No. XX—Industries .. .. .. .. ..
Demand No. XXIV—Labour including Factories .. ..
Demand No. XXVI—Irrigation .. .. .. .. ..
Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. .. .. } 646

Demand No. XXIX—Public Works—Grants-in-aid .. ..
Demand No. XXXIII—Miscellaneous .. .. .. ..
Demand No. XXXIV—Stationery and Printing .. ..
Demand No. XL—Capital Outlay on Industrial Development.
Demand No. XLI—Capital Outlay on Irrigation .. ..
Demand No. XLII—Capital Outlay on Public Works .. ..
Demand No. XLIV—Capital Outlay on Forests .. .. } 647

Demand No. XLVI—Capital Outlay on Schemes of Government Trading .. .. .. .. .. .. ..
Demand No. XLVII—Loans and Advances by the State Government .. .. .. .. .. .. .. .. } 648

IX Papers laid on the Table of the House .. .. .. .. 653




## *How to use the Index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question. In the case of Bills and Financial Business, the entry will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the papers laid on the table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | |
|---|---|
| A.M./Ad. Motion .. .. | Adjournment Motion. |
| Ann. .. .. .. | Announcement. |
| B.O.H. .. .. .. | Business of the House. |
| C.A. .. .. .. .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. .. .. .. | Calling Attention Statement. |
| Consid. .. .. .. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. ... .. .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. .. .. .. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. .. .. .. | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. .. .. .. | Demands for Supplementary Grants. |
| G.A. .. .. .. .. | Governor's Address. |
| G.D. .. .. .. .. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. .. | Half-hour Discussion. |
| Int. .. .. .. .. | Introduction stage of a Bill |
| L.A. .. .. .. .. | Legislative Assembly. |
| L.C. .. .. .. .. | Legislative Council. |
| M. .. .. .. ... | Motion. |
| P.M. .. .. .. .. | Privilege Motion. |
| R/Res. .. .. .. .. | Resolution. |
| St. .. .. .. .. | Statement. |

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 17th July 1964.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, MR. SPEAKER (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I. QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS

MR. SPEAKER: Question Nos. 493, 494, 495, 506, 512 and 513 relating to the Hon. Minister for Works are postponed at the request of the concerned Hon. Minister. In this connection, I would like to say one thing. Whenever an Hon. Minister wants the questions to be answered by him to be postponed, it is not proper to ask his Personal Assistant to write a letter to the Speaker. Several times the Personal Assistants have been informed about it, but I am sorry to say that they do not pay heed to it.

### முதியோர் உதவித் தொகை

* 491 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

ஆரம்பத்தில் கொடுக்கப்பட்ட முதியோர் உதவித்தொகை தற்போது எவ்வளவு பேருக்குக் கொடுக்காமல் நிறுத்தப்பட்டிருக் கிறது? மாவட்ட வாரியான புள்ளிவிவரம் சபைமுன் வைக்கப் படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது குறித்து ஓர் அறிக்கை[a] சபையில் வைக்கப்பட்டுள்ளது.

புலவர் கா. கோவிந்தன்: இதில் ஒரு காரணமாக சொல்லப் பட்டிருப்பது, அனேகம் பேர்கள் பிச்சை எடுக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதாகும். இப்பேர்ப்பட்டவர்களுக்குப் பிழைக் கவும் வழியில்லை, பிச்சை எடுப்பதற்கும் வழியில்லை. ஆகவே, இக்காரணத்தைக் காட்டித் தடுப்பது முறை தானா? ஆகவே பிச்சை எடுப்பதை நிறுத்துகின்ற முறையில் முதியோர் உதவித் தொகை கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: பென்ஷன் வாங்கிக்கொண்டு பிச்சை எடுப்பதை நிறுத்துகின்ற முறையில் முதியோர் உதவித் கொள்கை. பென்ஷனும் வாங்கிக்கொண்டு பிச்சை எடுப்பது கூடாது என்று சொல்வது நியாயம் என்றுதான் நினைக்கிறேன்.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், முதியோர் உதவித் தொகை வேண்டும் என்று கேட்கின்ற மனுக்கள் உடனுக்குடன் பரிசீலனை செய்யப்படுவதில்லை, பல மாதங்கள் ஆகின்றன. ஆகவே இந்தத்

---

[a] Printed as Appendix I at pages 123–124.

தொகை கிடைக்குமா கிடைக்காதா என்கின்ற சந்தேகம் வருகிறது. ஆகவே இந்த மனுக்களை எல்லாம் உடனுக்குடன் பரிசீலனை செய்வதற்கு ஏதாவது வழி வகை செய்ய முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்தத் திட்டம் ஆரம்பித்த உடனேயே, இதற்கென்று தனியாக அதிகாரிகளைப் போட்டோம். சீக்கிரமாக இவைகளைப்பற்றி பரிசீலனை செய்து பென்ஷன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது ஆரம்பத்தில் வந்த மனுக்கள் எல்லாம் முடிந்து விட்டதினால் அந்த அதிகாரிகள் தேவையில்லை என்று நினைத்து நிறுத்தியிருக்கிறோம். தனியாக இன்னின்ன இடங்களிலே காலதாமதம் ஆகிறது என்று எழுதி அனுப்பினால் அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்ற நேரத்தில், பென்ஷன் வாங்கினவர்கள் பிச்சை எடுக்கிறார்கள். அதனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பென்ஷன் நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் அப்படி பிச்சை எடுக்கிறார்கள் என்று எந்த அடிப்படையில் கண்டு பிடிக்கப்படுகிறது ? எந்த அடிப்படையில் பென்ஷன் நிறுத்தப்படுகிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்காக மனு செய்கின்றவர்களைப்பற்றி அதிகாரிகள் முதலில் விசாரிக்கின்றார்கள். பிச்சை எடுக்கின்றார்கள் என்று, பென்ஷன் அனுமதித்த பின்னால் தெரிந்தால், அந்த ஊதியத்தை நிறுத்திவிடுகிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இப்போது நிறுத்தப்பட்டிருப்பது பிச்சை எடுக்கின்றார்கள் என்ற காரணத்திற்காக மட்டுமல்ல. இதில் சொல்லப்பட்டிருக்கின்ற காரணங்களில், பிச்சை எடுக்கிறார்கள் என்றும், உண்மையான கேஸ்கள் அல்ல என்றும், அவர்களுடைய இருப்பிடம் தவறாக இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் பல உண்மையான கேஸ்களிலும் கூட, அங்கங்கேயுள்ள கிராம அதிகாரிகளுடைய துர்போதனையினாலும், தொந்தரவுகளினாலும், இந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இப்பேர்ப்பட்டவர்கள் அப்பில் செய்யும்போது, இதைப்பற்றி உடனடியாக கவனித்து, மீண்டும் இந்த உதவித் தொகையை ஸாங்ஷன் செய்வதற்கு கலெக்டர்களுக்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்காக கலெக்டர்களுக்கு தனியாக உத்தரவு தேவையில்லை. இவ்விதம் பாதிக்கப்பட்டவர்கள், தங்களுடைய கோரிக்கைகளை மீண்டும் கலெக்டர்களிடத்தில் சொல்லி மீண்டும் விசாரணை செய்யவேண்டும் என்று கோரினால் கலெக்டர்கள் அதை கவனிப்பார்கள்.

**புலவர் கா. கோவிந்தன் :** பென்ஷன் வாங்குகின்றவர்கள் பிச்சை எடுப்பது தவறு என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்த உதவித் தொகை கொடுப்பதற்கு முன்னாலேயே இவர்கள் பிச்சை எடுக்கிறார்கள் என்கின்ற காரணத்தைச் சொல்லி மனுவை நிராகரிப்பது தவறல்லவா ? ஆகவே இப்போது இருக்கின்ற முறையை மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தேசிக்குமா ?





**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** பிச்சை எடுக்காதவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பது என்பதுதான் இந்தத் திட்டம். பிச்சை எடுக்கின்றவர்களுக்கும் இந்த உதவித் தொகை கொடுக்கவேண்டும் என்று சொல்வது சர்க்கார் வகுத்திருக்கின்ற விதிகளுக்கு முரணாக இருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த முதியோர் உதவித் தொகைக்காக எத்தனை பேர்கள் மனு செய்து கொண்டார்கள் ? அதில் எத்தனை பேர்களுக்கு இந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 1963, டிசம்பர் மாதம் வரையிலும் 62,695 பேர்களுக்கு இந்த பென்ஷன் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. எத்தனை பேர்கள் மனுச் செய்துகொண்டார்கள் என்கின்ற விவரத்திற்கு தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் :** இந்த உதவித் தொகை கொடுப்பது சம்பந்தமாக ஒவ்வொரு வருஷத்திற்கும் இவ்வளவுதான் ஸாங்ஷன் செய்ய வேண்டும் என்று ஏதாவது டார்ஜெட் இருக்கிறதா ? அதன்படிதான் ஸாங்ஷன் செய்யப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படியில்லை. பொதுவாக இந்தத் திட்டம் கொண்டுவந்தபோது சுமார் 4,000 அல்லது 5,000 பேர்களுக்கு கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் நினைத்தார்கள். ஆனால் கொடுக்க ஆரம்பித்த பின்னால் பார்த்தபோது, தற்போது உள்ள விவரப்படி 1963, டிசம்பர் வரை சுமார் 62 ஆயிரம் பேர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. யார் இதற்கு தகுதியாக இருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்கப்படுகிறது.

Sri S. NANJUNDA ROW : Sir, there is inordinate delay in sanctioning old-age pensions. Will the Government be pleased to give instructions regarding avoidance of delays in regard to this matter?

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, the Government normally try to avoid delays but there are matters which are very difficult of verification and therefore, without verification, we can not give away pensions and a certain amount of delay will occur. But if there is any inordinate delay, the hon. Member may bring it to the notice of the Government and the Government will immediately look into it.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த பென்ஷன் தொகை கிடைப்பதற்கு முன்பு பிச்சை எடுக்கின்றவர்கள், இனிமேல் பிச்சை எடுக்கவில்லை என்று உறுதி கொடுத்தால் அவர்களுக்கு இந்த

[17th July 1964

உதவித் தொகை கொடுக்கலாம் அல்லவா? அதன் மூலம் பிச்சை எடுப்பதும் நின்றுவிடும் அல்லவா? ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் யோசனை செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இந்த யோசனைகளை எல்லாம் அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் இதைப்பற்றி ஆலோசிக்கலாம்.

**திரு. எஸ். பொன்னுசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பென்ஷன் கிடைப்பதற்காக மனுக்கள் கொடுத்து ஆறு மாதங்கள் ஆனாலும்கூட, இதைப்பற்றி விசாரிக்காமல், எந்த விதமான பதிலும் வருவதில்லை. ஆகவே இன்னின்ன காரணத்திற்காக அனுமதிக்கவில்லை என்று பதில் அனுப்புவதற்காகவாவது அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ஏதாவது ஒன்றிரண்டு கேஸ்கள் வேண்டுமானால் கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிறபடி இருக்கலாம். சாதாரணமாக எடுத்துப்பார்த்தால், சுமார் 62 ஆயிரம் பேர்களுக்கு இந்த உதவி செய்து கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்த்தால் இதில் பெரிய காலதாமதம் ஏற்படுகிறது என்று சொல்வது அவ்வளவு பொருத்தமல்ல. ஆகவே இந்தக் குற்றச்சாட்டு பொருத்தமாகாது.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, இந்த உதவி கொடுப்பதற்காக வயதை கணக்கிடுவதற்கு வோட்டர்ஸ் லிஸ்டை வைத்துக்கொள்கிறார்கள். ஆனால் இந்த லிஸ்டில் வயது தவறாக கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதை மாற்றி அவர்கள் சொல்லுகின்ற பிற ஆதாரங்களை எடுத்துக்கொண்டு விசாரித்து உதவி செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொண்டால் நாட்டில் ஒரு பெரிய குழப்பம்தான் ஏற்படும். உண்மையான வயதை என்னென்ன முறையில் கண்டுபிடிக்க முடியுமோ அதை அதிகாரிகள் செய்கிறார்கள். டாக்டர் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். ஜாதகத்தை கொடுக்கிறார்கள். இவைகளை வைத்து எந்தெந்த முறையில் சரியான வயதை நிரூபிக்க முடியுமோ அதைச் செய்யவேண்டும்.

### *Colony for Ex-Servicemen*

* 492 Q.—SRI C. M. AMBIKAPATHI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any colony has been constructed for the Ex-servicemen at Jambuvanodai village in Tiruthuraipoondi taluk of Thanjavur district;

(b) if so, the year in which it was started; and

(c) the number of members to whom lands have been granted and the extent of land so granted?



17th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) A land colonisation co-operative society for the benefit of ex-servicemen was organised in the Jambuvanodai village. The society was registered on 15th August 1952 and started on its work on 20th August 1952.

(c) There are 120 members on the rolls of the society with a paid up share capital of Rs. 30,000 (contributed by members). The extent of lands alienated by Government to the society was 742·65 acres.

**திரு. சி. ம. அம்பிகாபதி:** மாஜி ராணுவத்தினர்களுக்கு அளிக்கப்பட்ட நிலத்தை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் கொடுத்த மான்யத் தொகை எவ்வளவு என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** மத்திய சர்க்காரிலிருந்து சாங்ஷன் செய்தது 90 ஆயிரம் ரூபாய். ராஜ்ய சர்க்காரிலிருந்து சாங்ஷன் செய்தது 60 ஆயிரம். "போஸ்ட்வார் சர்வீஸஸ் ஃபண்ட்"டிலிருந்து கொடுத்தது 60 ஆயிரம். இதில் அவர்கள் மத்திய சர்க்காரிலிருந்து கொடுத்ததில், 61,094 ரூபாயையும், ராஜ்ய சர்க்காரிலிருந்து 60 ஆயிரத்தையும், போஸ்ட்வார் சர்வீஸ் ஃபண்டிலிருந்து கொடுக்கப்பட்ட 60 ஆயிரத்தையும் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர்:** மத்திய சர்க்காரினால் கொடுக்கப்பட்ட தொகை பூராவும் செலவு ஆகாத காரணம் என்ன? விண்ணப்பங்கள் அதிகம் வரவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது ஒரு சொஸைட்டிக்கு கொடுக்கப்பட்டது. எவ்வளவு தேவையோ அவ்வளவு அவர்கள் உபயோகப்படுத்தியிருக்கிறார்கள்.

### *Electricity for Agriculture*

* 496 Q.—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that the Central Government has urged the State Government to reduce the rates of electricity for agricultural purposes; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) No. communication on the subject has been received by us from the Central Government.

[17th July 1964

### தலைமை அதிகாரிகள் பணியாற்றுதல்

* 497 கேள்வி.—திரு. மு. கருணாநிதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்கத் தலைமை அலுவலகங்களில் பணியாற்றும் தலைமை அதிகாரிகள் (Heads of Departments) ஒரே அலுவலகத்தில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றலாம் என்பதற்கு ஏதேனும் கால அளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த தலைமை அதிகாரிகளை ஒரு இலாகாவிலிருந்து இன்னொரு இலாகாவிற்கு மாற்றுவதில் அரசாங்கம் கையாளும் கொள்கை யாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : Exigencies of the administration.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஒரு இலாகா தலைமை அதிகாரியை திடீரென்று இன்னொரு இலாகாவிற்கு மாற்றி விடுகிற காரணத்தினால் அந்த இலாகாவைப்பற்றி அறிந்து கொள்ளாமல், கணக்குத் தணிக்கை குழுவிலேகூட விவரங்களை பூரணமாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. அதை ஆலோசித்தாவது அதிகாரிகளை மாற்றும்போது எக்ஸ்பீரியன்ஸைப் பார்த்து பின்னால் மாற்ற அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் தேவை எப்படி இருக்கிறதோ அதை அனுசரித்துத்தான் இலாகாவிலிருந்து மாற்றப்படுவார்கள்.

### பால் பண்ணை

* 498 கேள்வி.—திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட வாரியாக ஒரு பால் பண்ணை வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : No.

### அரசாங்க மருத்துவ மனை

* 499 கேள்வி.—திருமதி ஏ. கிருஷ்ணவேணி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் தேனியில் ஒரு அரசாங்க மருத்துவ மனை ஏற்படுத்தும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், எப்போது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) 1965-66-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்போது, தேனியில் அரசாங்க மருத்துவமனை ஒன்று திறப்பது பற்றி யோசிக்கப்படும்.



17th July 1964]

* 500 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் உள்ள அரசினர் மருத்துவ விடுதிக்கு கட்டடம் கட்டும் திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

(இ) அங்கு படுக்கைகளை மேலும் அதிகரிக்கும் நோக்க முண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) மருத்துவ மனைக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகத் தேவைப்படும் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. தேசீய நெருக் கடியை முன்னிட்டு கட்டட வேலையை இப்போது மேற்கொள்ள இயலாது.

* 501 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் சர்க்கார் மருத்துவமனையை விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தேசீய நெருக்கடி காரணமாக இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

* 502 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to increase the number of beds in the Kuzhithurai Government Hospital in Kanyakumari district during 1964 ;

(*b*) the number of beds in the hospital at present ; and

(*c*) whether there is any proposal to shift it from the present location ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) The Government have generally approved of the proposal for the construction of a new ward of 32 beds for the hospital. Its bed strength can be increased only after additional accommodation is constructed.

(*b*) Twenty.

(*c*) Yes.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் புதிய மருத்துவ விடுதிகளைத் தொடங்குவதில் கையாளும் முறைகள் யாவை ? அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதிய மருத்துவ மனைகள் கட்டுவதாக இருந்தால் முதலாவதாக நிலம் ஆர்ஜிதம் செய்தாகவேண்டும். ஏற்கனவே இருக்கிற சிறிய கட்டடங்களுக்கு

பதில் புதிய கட்டடம் ஏற்படுத்த போதுமான நிலம் இல்லாத காரணத்தினால் நிலம் ஆர்ஜிதம் செய்த பிறகு, தக்கவாறு எஸ்டிமேட் போட்ட பிறகு, வரவு-செலவுத் திட்டத்தில் எந்த அளவுக்குப் பணம் ஒதுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒதுக்கி அதன் பிறகு தான் கட்ட முடியும்.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, ஆலங்குடியில் உள்ள அரசினர் மருத்துவமனைக்கு நில ஆர்ஜிதம் முடிந்தும் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற காரணம் என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆலங்குடி ஆஸ்பத்திரியில் ஏற்கெனவே 50 படுக்கை உள்ள மருத்துவ மனையாகக் கட்ட வேண்டும் என்று அரசாங்கம் முடிவு செய்தார்கள். அதன் பிறகு தற்போது இருக்கிற இன்-பேஷண்ட்ஸ், அவுட்-பேஷண்ட்ஸ் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது 50 படுக்கை கொண்ட ஆஸ்பத்திரிக்கு அவசியம் இல்லை, அந்த அளவுக்குக் கட்டினால் ஏறத்தாழ 8 லட்சம் ரூபாய் செலவு ஆகும், 32 படுக்கை உள்ள ஆஸ்பத்திரி கட்டினால் போதும், அதை 4 முதல் 6 லட்சம் ரூபாய் அளவில் கட்டலாம் என்ற மதிப்பீடு காரணமாக, அது 1965-66-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** முதலிலே பொது கேள்விக்கு பதில் அளிக்கும்போது அமைச்சர் அவர்கள் ஆலங்குடி ஆஸ்பத்திரி எமர்ஜென்ஸி காரணமாக ஒத்திபோடப்பட்டது என்று சொன்னார்கள். தேனி ஆஸ்பத்திரி அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். எமர்ஜன்சி ஆலங்குடிக்கு மட்டுமா? ஆலங்குடியும் அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் சேர்க்கப்படும் என்று அமைச்சர் உறுதி சொல்வார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆலங்குடியாக இருந்தாலும், தேனியாக இருந்தாலும், புது மருத்துவமனை கட்டடம் கட்டுவதில் எங்கே அத்தியாவசியமாக இருக்கிறதோ அதற்கு ப்ரையாரிட்டி கொடுக்கவேண்டும் என்று சுகாதார அமைச்சர் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். அதன் காரணமாக ப்ரையாரிட்டி கொடுத்து 1965-66 வரவு-செலவுத் திட்டத்தில் இவைகளை எடுத்துக்கொள்ளவேண்டும். என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது. இதில் ஆலங்குடியும் சேர்க்கப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, 1964-65-ல் எத்தனை புதிய மருத்துவ மனைகள் கட்ட திட்டமிடப்பட்டிருக்கிறது என்று அறியலாமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**SRI M. WILLIAM :** May I know whether any proceedings had been initiated for acquiring additional lands for the hospital at Kuzhithurai?



THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Yes. With regard to Kuzhithurai hospital, Government have already taken serious notice of it and they also feel it is a necessity to extend the present hospital. Since the present hospital is located in an area of 1 acre and 54 cents, it will not be possible for Government to extend the building in that area. For that reason Government have taken acquisition proceedings to acquire further land for extension of the hospital.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, தேசிய நெருக்கடி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிற ஆரம்ப சுகாதார நிலையங்களை உடனடியாக எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எங்கெல்லாம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அவசியமோ அதற்குத் தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள் தேசிய நெருக்கடியை உத்தேசிக்காமல்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தேசிய நெருக்கடி காரணமாக கட்டடங்கள் கட்டும் வேலையை நிறுத்தவேண்டுமென்று சர்க்கார் கருதியிருந்தாலும், ஆஸ்பத்திரிகளைப் பொறுத்த வரையில் இந்தக் கொள்கையைத் தளர்த்த அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா? அப்படியானால் எந்த ஆண்டிலிருந்து தளர்த்தப்படும்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஆஸ்பத்திரி கட்டுகிற முறையிலே, அரசாங்கம் இப்பொழுது கட்டடங்கள் கட்டக் கூடாது என்ற முறையை வைத்திருந்த போதிலும், அத்தியாவசியமாக இருக்கிறவைகளை 1965-66-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்திருக்கிறார்கள் என்று நான் ஏற்கனவேயே சொன்னேன்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** தேவகோட்டையில் ஆஸ்பத்திரி கட்டுவதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தும், பட்ஜெட்டில் பணம் ஒதுக்கப்பட்டிருந்தும், இன்னும் அந்த வேலை ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

MR. SPEAKER : It does not come under any of these questions.

### *Disbursement of deposit amount*

* 503 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to Unstarred Question No. 1 placed on the Table on 24th January 1964, the reason for the undue delay in disbursing the deposit amount to the landowners?

[17th July 1964

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கிருமருதூர் கிராமத்தின் குக்கிராமமான செல்லியம்பட்டி ஆரம்பத்தில் அஞ்சு கோயில் தேவஸ்தானத்துக்குச் சொந்தமாயிருந்தது. பிறகு, அந்தக் குக்கிராமத்திலுள்ள நிலங்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டது. சாலை அமைக்க எடுத்துக்கொண்ட இந்த நிலங்கள் இன்னும் முடிவாகத் தரப் பிரிவினை செய்யப்படவில்லை. முடிவாக நிலங்கள் தரப் பிரிவினை செய்யப்பட்ட பின், நிலச் சொந்தக்காரர்களுக்கு டிபாசிட் தொகை பட்டுவாடா செய்யப்படுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படும்.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் செட்டில்மெண்டு பற்றி குறிப்பிட்டார்கள். இந்தப் பகுதியிலே செட்டில்மெண்டு முடிந்து பல ஆண்டுகள் ஆகின்றன. இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னது ஜனவரி 1964-ல். இப்பொழுது ஏழு மாதங்கள் சென்றுவிட்டன. இன்னும் நிலத்துக்கு, உரியவர்களுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படாததற்கு உண்மையான காரணம் என்ன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சர்வே பார்டி சர்வே செய்யும் பொழுது ரோடு புறம்போக்காக அந்த நிலம் இருந்தது. ரோடு புறம்போக்கு என்று அந்தப் பிரிவினை அடிப்படையில் நஷ்ட ஈடு கொடுக்க முடியாது. அதை 'ரயத்வாரி வெட் அண்டு டிரை' என்று மாற்றினால் தான் அந்த நஷ்ட ஈடு தொகை கொடுக்க முடியும். ஆகவே, இந்த கிளாஸிபிகேஷன் பற்றி போர்டு ஆப் ரெவின்யூ பைனலைஸ் செய்த பிறகு தான் நஷ்ட ஈடு கொடுக்க முடியும்.

**திரு. செ. மாதவன் :** ரோடு போடுவதற்கு நிலம் எடுக்கும் பொழுது அது நிலமாக இருந்தது; காடாக, வயலாக இருந்தது. ஆனால் ரோடு போட்டு முடிந்தவுடனே செட்டில்மெண்டில் புறம்போக்கு என்று எடுத்துவிட்டார்கள். அதன் காரணமாகத் தான் காலதாமதம் ஆகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி உடனடியாக விசாரித்து ரோடு போடுவதற்கு முன்னால் செட்டில்மெண்டில் எப்படி இருந்ததோ அந்த அடிப்படையில், நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

MR. SPEAKER : That must be settled by the Board of Revenue. The question as to whether it is a poramboke or ryotwari land has to be decided. Then only the money can be disbursed.

**திரு. செ. மாதவன் :** ரோடு போடுவதற்கு எடுத்துக்கொள்ளும் பொழுது நிலமாக இருந்தது. ரோடு போட்டு முடிந்தவுடனேயே செட்டில்மெண்டில் சர்வே பார்டி பார்க்கும்பொழுது ரோடாக இருந்ததனால் அவர்கள் ரோடு புறம்போக்கு என்று சொல்லி விட்டார்கள்.

MR. SPEAKER : Who is to decide whether it is a poramboke or ryotwari land?



17th July 1964]

SRI S. MADHAVAN : It has already been decided after the land was taken for roads. Now the ryots are losing. The Settlement Authorities have already decided. There is no appeal to the Board.

MR. SPEAKER : The Hon. Minister says that it must be finally settled by the Board and then only the money can be disbursed.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ரோடு புறம்போக்கு என்பதை 'வெட் அண்டு டிரை' என்று மாற்றுவதற்கு போர்டு ஆப் ரெவின்யூ பைனலாக முடிவு செய்ய வேண்டும்.

**திரு. செ. மாதவன் :** ரோடு போடுவதற்கு முன்னால் அரசாங்கம் ரையத்துகளிடம் சம்மதம் கேட்டது, சம்மதமும் கொடுக்கப்பட்டது. இதற்கு இடையிலே செடில்மெண்டு வந்ததினால் ரோடாக இருந்த காரணத்தினால் செடில்மெண்டு அதாரிடீஸ் ரோடு புறம்போக்கு என்று எடுத்துவிட்டார்கள். அது உண்மையாகவே பட்டா நிலம் தான். இதனால் காலதாமதம் ஆகிறது

MR. SPEAKER : Again supposing the authorities made a mistake and classified it as a poramboke land, an appellate authority must decide whether it is a ryotwari or poramboke land. Then only the Government can disburse the amount.

**புலவர் கா. கோவிந்தன் :** என்னுடைய தொகுதியிலே இலுப்பை போன்ற சில ஊர்களிலே ரோடுகள் போட்டிருக்கிறார்கள். அந்த இடத்திற்குக் காம்பென்சேஷனும் கொடுக்கவில்லை. அந்த இடத்திற்குத் தீர்வையும் வாங்குகிறார்கள். இப்படிப்பட்ட இடங்களிலே சர்க்கார் உடனடியாக பணம் கொடுக்கவும், நிலத் தீர்வையை நீக்கவும் முன்வருமா ?

MR. SPEAKER : There is no specific question about it.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** சம்பந்தப்பட்ட தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை. கனம் அங்கத்தினர் இதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதன் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : When the roads were formed, the consent of the pattadars was taken. What was the necessity for the authorities to take consent of the pattadars, if the pattadars are not entitled to a particular land. The lands were subsequently classified as poramboke lands. In such cases, compensation should be paid to those from whom consent was taken for acquiring lands.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இது தேவஸ்தானம் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இருப்பதினால், கிளாஸிபிகேஷன் எல்லாம் வருகிறது. இது சாதாரண பிரச்னை இல்லை.

**திரு. செ. மாதவன் :** இந்த நிலத்தை ரோடுக்கு ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னால், அந்தப் பட்டாதார்களிடம் சம்மதம் வாங்கப்பட்டதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்தத் தகவல் இப்பொழுது என்னிடம் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** போடப்படுகிற ரோடுகளெல்லாம் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களுடைய அனுமதியைப் பெற்றுத் தான் போடுகிறார்களா ? அல்லது தேவைப்படுகிறது என்றால், சர்க்கார் எடுத்துக் கொள்கிறார்கள் என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நிலச் சொந்தக்காரர்கள் அனுமதி கொடுத்தால் தான் ரோடுகள் போடப்படும்.

*Saraswathi Mahal, Thanjavur*

* 504 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of persons who have been appointed to do research work in the Thanjavur Saraswathi Mahal ; and

(*b*) if so, the nature of the work and the results of such research, if any?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) One.

(*b*) The Research Pandit was working in Manuscripts in Medicine, Music and Dance. So far 12 books on Music and dance and 18 books on medicine have been published.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த ஆராய்ச்சியாளர்களாக அமர்த்தப்படுகிறவர்களுக்கு அதிலுள்ள படிப்பின் அளவைப் பற்றி யோசித்துத்தான் அந்த வேலை கொடுக்கப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அப்படித்தான் கொடுக்கப்படும். அதைப்பற்றி கனம் அங்கத்தினருக்கு சந்தேகம் இருந்தால், அந்த சந்தேகத்தை சர்க்காருக்கு எழுதி அனுப்பலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** ஆராய்ச்சி செய்யப்பட்டு வெளியிடப்படுகின்ற புத்தகங்கள் தமிழிலே வெளிடப்படுகின்றனவா ? அல்லது பல்வேறு மொழிகளிலே வெளியிடப்படுகின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** முதலிலே எந்த மொழியில் அந்த ஏடுகள் இருக்கின்றனவோ அந்த மொழியில் வெளியிடப்படும். அதற்குப் பிறகு அவைகளை மற்ற மொழிகளில் வெளியிடுவதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்யும்.

**திரு. சா. கணேசன் :** தஞ்சையிலே இருந்து வெளிவந்திருக்கிற சுமார் 30 புத்தகங்களிலே பெரும்பாலானவற்றில், ஆராய்ச்சித் துறையிலே தலையிட்டவர்கள் அந்த நூல் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியிலே தொடர்போ அல்லது தேர்ச்சியோ பெறாமையினால்,



பிழைகளும், தவறுகளும், கருத்து மாறுபாடுகளும் நிறைந்திருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட விஷயம் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ? அப்படியானால் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த விதமான தகவல் சர்க்காருக்கு வரவில்லை. இரண்டுவிதமான 'ரிஸர்ச் வொர்கர்ஸ்' இருக்கிறார்கள். சிலர் தாங்களாகவே சென்று அந்த லைப்ரரியில் படித்து அவர்கள் பல வெளியீடுகள் செய்கிறார்கள். அந்த ஸ்தாபனம் சர்க்கார் ஸ்தாபனம் அல்ல. லைப்ரரியைச் சேர்ந்தவர்கள் சிலரை நியமித்திருக்கிறார்கள். அவர்கள் சில வெளியீடுகளை வெளியிடுகிறார்கள். சர்க்காரைப் பொறுத்தவரையில் ஒரு ரிஸர்ச் ஆபிஸரை நாம் நியமனம் செய்திருக்கிறோம். அவர்கள் வெளியீட்டை பற்றித்தான் நான் பதில் சொன்னேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** சரஸ்வதி மஹால் லைப்ரரியில் சுவடி ஆராய்ச்சி செய்யும் அலுவலர்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கப் படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சம்பளத் தொகை பற்றிய தகவல் என்னிடம் இல்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஆராய்ச்சி செய்ய வருகிறவர்களுக்கு ஏதாவது தகுதியை நிர்ணயித்திருக்கிறார்களா ? ஆராய்ச்சியாளர்கள் தாங்களாகவே ஆராய்ச்சி செய்கிறார்களா ? அல்லது ஒரு பேராசிரியரின் கீழ் இருந்து ஆராய்ச்சி செய்கிறார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதை ஆராய்ச்சி என்று சொல்லுவது பொருத்தமாக இருக்காது. ஆராய்ச்சி 'இன் தி ஸென்ஸ் ரிஸர்ச்' என்று சொல்ல முடியாது. அவர்கள் சுவடிகளில் இருப்பதை எடுத்து பிரசுரம் செய்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆந்திர சர்க்காரிலிருந்து சில தெலுங்கு ஏடுகளை சரஸ்வதி மஹாலிலிருந்து ஆந்திராவுக்கு எடுத்துப்போக வேண்டும் என்று ஏதாவது கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படியானால் அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதுபற்றி தனிக் கேள்வி போட வேண்டும்.

I have got the information regarding salary in the file. The salary is Rs. 150.

**திரு. இராம. அரங்கண்ணல் :** இந்த அருமையான நூலகத்தில் நல்ல ஆராய்ச்சிக்குரிய நல்ல நூல்கள் இருப்பதனால், மத்திய அரசு தனது கல்வித் துறை நிபுணர்களை அனுப்புவதற்காக யோசனை ஏதேனும் நமது அரசாங்கத்தினிடம் வந்து இருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமான உத்தேசம் இல்லை.

[17th July 1964

**திரு. சி. பொன்னுசாமி :** இந்த வெளியீட்டின் மூலமாக நம் நாட்டின் கலைச் செல்வத்திலே உள்ள மதிப்பை அதிகப்படுத்துவதற்கு வாய்ப்புகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நம்மிடத்தில் பல கலைகள் பல்லாயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பே இருந்திருக்கின்றன. அவைகள் எல்லாம் இந்தச் சுவடிகளில் பொறிக்கப் பட்டிருக்கின்றன. அவை மக்களுக்குத் தெரியாமல், அந்தச் சுவடிகளிலிருந்து பார்ப்பதற்கும் படிப்பதற்கும் வசதி இல்லாமல் இருக்கிறது. இவ்வாறு வெளியிடுவதன் மூலமாக, நம்முடைய பழைய அறிவு மேலும் பலப்படுத்தப்படும் என்று நினைக்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** எந்த மொழியிலிருந்து எந்த நூலை வெளியிட்டாலும், கட்டாயம் தமிழிலே மொழி பெயர்த்து வெளியிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் ஒரு ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார். அதை எழுதி அனுப்பினால், அதன் ஃபினான்ஷியல் இம்பிளிகேஷன்களைப் பார்த்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இதுவரையில் வெளிவந்த வெளியீடுகள் எந்தெந்த மொழிகளில் வெளிவந்திருக்கின்றன ? அவ்வாறு எத்தனை புத்தகங்கள் வெளிவந்திருக்கின்றன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். சர்க்காரிடத்தில் இருக்கிற தகவலைத் தவிர, சரஸ்வதி மஹால் லைப்ரரி அதாரிடி அவர்களிடமிருந்து தகவல் சேகரித்துக் கொடுக்க வேண்டும்.

**திரு. சா. கணேசன் :** சில நிமிஷங்கள் இந்த விஷயத்தைப் பற்றி விவாதம் பண்ணினால், சிறப்பாகவும், பயனுள்ளதாகவும் இருக்குமென்று நான் கருதுகிறேன். அதற்கு அனுமதி கொடுத்தால், வினாப் போடுவதை நிறுத்திக்கொண்டு, இன்னும் பயனுள்ள காரியத்தைச் செய்யலாம் என்று நான் நினைக்கிறேன். இதற்கு தலைவர் அவர்கள் அனுமதி கொடுத்தால் பலன் இருக்குமென்று நான் கருதுகிறேன்.

MR. SPEAKER : Does the hon. Member want a half-hour discussion?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்கள் அதற்கு உரியதாக இருக்கிறது என்று நினைத்தால், எனக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : But is it a matter for a half-hour discussion? I do not think so.



17th July 1964]

**திரு. சா. கணேசன் :** நான் கனம் சபாநாயகர் இஷ்டத்திற்குக் கட்டுப்படுகிறேன். கேள்வி மேல் கேள்விகள் போடும்பொழுது, விளக்கம் சொல்லி தெளிவுபடுத்த முடியவில்லை.

MR. SPEAKER : A half-hour discussion is meant for some matter of urgent importance and not for research and other things.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களிடம் நான் முதலிலேயே விண்ணப்பித்துக் கொள்கிறேன். பின்னர் இது கேள்வி ரூபத்தில் இல்லை என்று சொல்லிவிடக் கூடாது. (சிரிப்பு.)

**கனம் சபாநாயகர் :** பரவாயில்லை. கேள்வியைப் போடலாம்.

**திரு. சா. கணேசன் :** தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலிலே சரபோஜி மன்னரால் செய்யப்பட்ட முதல் காரியம், பல மொழிகளில் இருந்த சிறந்த கலைகளை எல்லாம் தமிழிலே ஒன்றாக ஆக்கியதுதான். அந்த நூல்கள் எல்லாம் தமிழிலே வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் துறைகள் வேறு. சிற்பம், இசை, மருத்துவம், மாட்டு வாகடம், குதிரை வாகடம் இவற்றை எல்லாம் பதிப்பிப்பதற்கு ஒரே ஒரு ஆளைப் போடுவதென்றால், அவர் எல்லாத் துறைகளிலும் சர்வக்ஞராக விளங்க முடியாது. அந்தந்தத் துறையிலுள்ள நிபுணர்களைப் போட்டால், அவற்றைச் செம்மையாகப் பதிப்பிக்க முடியும். சில நூல்கள் செம்மையாக வெளி வந்திருக்கின்றன. சில அபத்தமாக வெளி வந்திருக்கின்றன. ஆகவே தகுதியான ஆட்களை அமர்த்தி, தரம் பிரித்துப் போடுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரிஸர்ச் பண்டிட் ஒருவரை சர்க்கார் நியமித்திருக்கிறார்கள் என்று சொன்னேன். அதைத் தவிர, மத்திய சர்க்காரிலிருந்து ஸ்காலர்ஷிப் பெற்ற ஒருவர் அங்கே ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார். சென்னை சங்கீத நாடக சபையிலிருந்து ஒரு ஆராய்ச்சியாளரை நியமித்திருக்கிறார்கள். மத்திய சர்க்கார் நியமித்தவருடைய தகுதியைப் பற்றியோ, சங்கீத நாடக சபை நியமித்தவருடைய தகுதியைப் பற்றியோ, இந்த சர்க்கார் பொறுப்பு எடுத்துக்கொள்ள முடியாது.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்த அலுவலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குக் குறைந்த சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதை அதிகமாக்க வேண்டுமென்று அவர்கள் கோரியிருக்கிறார்கள். ஆகவே சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தனிக் கேள்வி போட்டால், பொறுப்பு யாருடையது என்பதைப் பார்த்துச் சொல்லலாம்.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அங்கே அருமையான நூல்கள் இருக்கிற காரணத்தால் இந்த ஆராய்ச்சியை தமிழ் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கலாமல்லவா ?

[17th July 1964

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இதுவும் ஒரு ஆலோசனை. இதைக்குறித்து விவரமாக சர்க்காருக்கு எழுதி அனுப்பினால், அரசாங்கம் பரிசீலனை செய்யலாம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** "அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது" என்று நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அணு சம்பந்தப்பட்ட சுவடிகள் சரஸ்வதி மஹாலில் இருக்கின்றனவா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனக்கு இன்னும் அந்த நிபுணத்துவம் ஏற்படவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் அது ஒரு ஆராய்ச்சி நிலையம் அல்ல, அங்கே நூல்களை வெளியிடத்தான் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். "படித்தவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்" என்று சொல்லுவார்கள். இதற்கு சிறந்த அறிவாளிகள் வேண்டும். ரூபாய் 150 சம்பளம் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். ரூபாய் 150-க்கு ஒரு பெரிய பேராசிரியரைப் போட முடியாது. அதிகச் சம்பளத்தைக் கொடுத்து, ஒரு பெரிய பேராசிரியரைப் போடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** யூனியன் சர்க்கார் கொடுக்கிற ஸ்காலர்ஷிப், சங்கீத நாடக சபை கொடுக்கிற ஸ்காலர்ஷிப் ஆனதால், இது அவர்களுடைய பொறுப்பு. இந்த சர்க்காருடைய பொறுப்பல்ல. அதனால் இதைப் பற்றி சர்க்கார் முடிவு சொல்ல இயலவில்லை.

### பிராந்திய பொறியியல் கல்லூரி, திருச்சி

* **505 கேள்வி.—திரு. பி. முருகையன் : / திரு. கே. ஏ. மதியழகன் :** } கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சியில் மத்திய சர்க்காரால் துவங்கப்பட இருக்கும் பிராந்திய பொறியியல் கல்லூரியில் நமது மாநிலத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எத்தனை இடம் ஒதுக்கப்படும் ; மாவட்ட வாரியாக ?

THE HON. SRI R. VENKATARAMAN : Sixty seats were allotted to students from Madras State.

**திரு. கே. ஏ. மதியழகன் :** வருகிற ஆண்டிலாவது, இந்த மாநிலத்திலே இந்தக் கல்லூரி அமைந்திருப்பதை மேற்கொண்டு, இந்த மாநிலத்திற்கு அதிக இடங்கள் ஒதுக்கப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ரீஜனல் என்ஜினியரிங் காலேஜ் அமைக்கிறபொழுது, மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் சில நிபந்தனைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.



17th July 1964]

அதன்படி 50 சதவிகிதம் அதிலே இருக்கிற இடங்களை சென்னை ராஜ்யத்தில் இருக்கிற மாணவர்களுக்கும் எஞ்சியிருக்கிற 50 சதவிகித இடங்களை மற்ற ராஜ்யங்களிலுள்ள மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை இருக்கிறது. அதேபோல்தான் இந்தியாவின் பல பகுதிகளில் உள்ள ரீஜினல் எஞ்சினியரிங் காலேஜ்களில் இந்த முறை அனுஷ்டிக்கப்படுகிறது. எந்த இடத்திலே வைத்தாலும், சம்பந்தப்பட்ட ராஜ்யத்திற்கு 50 சதவிகிதம் என்றும், மற்ற ராஜ்யங்களுக்கு 50 சதவிகிதம் என்றும் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இதை மாற்ற இயலாது.

**திரு. கோ. சி. மணி :** மொத்த இடங்கள் எத்தனை ? அதில் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கியிருக்கிற இடங்களை மாவட்ட ரீதியாக பிரித்துக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இந்த ஆண்டுக்கு ஒதுக்கிய 120 இடங்களில், 60 சென்னை ராஜ்யத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜில்லாவாரியாகவோ அல்லது வேறு எந்த முறையிலும் அது ஒதுக்கப்படவில்லை. மார்க்குகள் அடிப்படையில்தான் ஸீட்டுகள் வழங்கப்படுகின்றன.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** மற்ற பொறியியல் கல்லூரிகளில் மாவட்ட வாரியாக இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. அதேபோல் இந்தக் கல்லூரியிலும் இடங்களை ஒதுக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்தவிதமாக ஒதுக்கக் கூடாது. 'எஃபிசியன்சி, எபிலிட்டி' இதையெல்லாம் வைத்துத்தான் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்த ரீஜினல் எஞ்சினீயரிங் கல்லூரிகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் இடங்களும் இங்கே கொடுக்கப்படுகின்றன.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த எஞ்சினீயரிங் கல்லூரியில் பெண்களுக்காகக் கொடுக்கப்படும் இடங்களைப் பொறுத்தவரையில் இரண்டு பெண்கள் சேர்ந்து படித்தால்தான் கொடுக்கமுடியும் என்று சொன்னபொழுது ஒரு பெண்ணுக்கு மாத்திரம் இடம் கிடைத்து, இரண்டாவது பெண்ணுக்கு இடம் கிடைக்காத காரணத்தால் ஏற்கனவே இடம் கிடைத்த பெண்ணும் அந்த இடத்தை விட்டுக்கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே அதனை மாற்றியமைத்து அந்தப் பெண் சேருவதற்கு அனுமதியளிப்பார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எனக்கு அந்த விவரம் தெரியாது. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்து பதில் சொல்கிறேன்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ரீஜனல் இன்ஜினீரிங் கல்லூரிக்கும் நமது மாநிலத்திலுள்ள மற்ற கல்லூரிகளுக்கும் படிப்பிலோ தரத்திலோ வித்தியாசம் இருக்கிறதா ?

[17th July 1964

(இ) & (உ) தற்போது அரசாங்கத்தின் யோசனையிலுள்ள 1958-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்திற்கான திருத்தங்கள் முடிவு செய்யப்பட்டவுடன், வட்டாரங்களின் தரப்பிரிவினையைத் திருத்த உத்தேசிக்கிறோம்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, சென்ற பட்ஜெட் கூட்டத்தின் போதே, இப்படிப்பட்ட ஒரு யோசனை அரசாங்கத்திற்கு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்று பதில் சொன்ன நேரத்திலும், அந்த யோசனை அப்படியே இருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்ற அளவிற்கு அமைச்சர் அவர்கள் ஒரு முடிவான அபிப்பிராயத்தைச் சொல்வாரா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** தற்போது அரசாங்கத்தின் யோசனையிலுள்ள காம்ப்ரஹென்ஸிவ் அமெண்டிங் ஆக்ட் முடிந்த பிறகுதான் அந்த ரிவிஷன் செய்ய முடியும் என்று முதல் கேள்விக்கே பதிலளித்தேன்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** தலைவர் அவர்களே, கோயமுத்தூர் ஜில்லாவில் பல்லடம் போன்ற வறண்ட பிரதேசங்களில் முழு நிதி உதவித் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அந்தத் தகவல் தற்போது என்னிடம் இல்லை.

**திரு. கோ. சி. மணி:** பஞ்சாயத்துத் தேர்தல் ஆரம்பிப்பதற்குள்ளாக அமைச்சர் அவர்கள் இந்தப் பரிசீலனையை முடித்து விடுவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** சட்டத்தைத் திருத்தக்கூடிய பிரச்னை முடிந்த பிறகுதான் இது எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்று கூறினேன். பஞ்சாயத்திற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** சாலைகள் போடுவதற்காக வழங்கப்படும் மானியங்களில், இப்பொழுது ஜனத்தொகை அடிப்படையில், நபர் ஒன்றுக்கு 60 ந.பை. தான் கொடுக்கப்படுகிறது. ஆனால், எங்கள் நீலகிரி ஜில்லா மலைப் பிரதேசமாக இருப்பதால், அங்கே ரோடு போடுவதற்குப் பெரும் செலவு ஆகிறது என்று ஏற்கெனவே பல முறை இந்தச் சபையிலே சொல்லி இருக்கிறோம். ஆகவே ரூபாய் 1-20 ந.பை. அளவில் உயர்த்திக்கொடுக்குமாறு அரசாங்கம் உத்தரவிடுமா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் பதில் கூறலாம்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** இந்த மானியம் வழங்குவதற்காகப் பஞ்சாயத்து யூனியன்களைப் பாகுபடுத்தும்போது, விவசாயம், நீர்ப்பாசனம், கல்வி ஆகிய தலைப்புக்களில் பரிசீலனை



17th July 1964]

நடத்தப்படுகிறதா? அல்லது மொத்தமாக வருமான அடிப்படையிலே இந்தப் பரிசீலனை நடத்தப்படுகிறதா? அல்லது ஜனத்தொகை அடிப்படையில் பரிசீலனை நடத்துவார்களா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** நபர்வாரி கிராம நில வரியின் அடிப்படையில்தான் இந்த க்ளாஸிஃபிகேஷன் செய்யப்படுகிறது. ஏ, பி, சி, டி என்பதற்குத் தனித் தனியாக இவ்வளவு சத விகிதம் என்று ஒதுக்கப்பட்டிருப்பதைக் கனம் அங்கத்தினர் அவர்கள் அறிவார்கள்.

### சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் (சேத்தியாதோப்பு)

*508 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலூகா, சேத்தியா தோப்பில் ஒரு சப்-ரிஜிஸ்திரார் ஆபீஸ் திறக்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

### எண்ணெய் வள ஆராய்ச்சி.

*509 கேள்வி—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் தாலூகா, திட்டச்சேரியில் எண்ணெய் கண்டுபிடிக்க பரிசோதனை செய்யப்படுகிறதா?

(இ) ஆமென்றால், விவரமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) & (b) The Geological Survey of India have carried out geophysical investigation along the coastal areas. The investigations have revealed that Oil under-sedimentary formations to a thickness of 5,000 to 6,000 ft. lie the area between Tittacheri in Nannilam taluk, Thanjavur district and Karaikal. The sediments get thicker in 9,000 to 10,000 feet near Nagapattinam. The Geological Survey of India have recommended test drilling to be carried out near Thirumalairajanpattinam, after further work is carried out in the area.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ருஷ்ய நாட்டைச் சேர்ந்த ஜியாலஜிகல் ரிசர்ச் துறையின் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கின்றபோது, "காவிரிப் படுகையிலே இருக்கும் பாறைகளினுடைய அமைப்பினால், அங்கே எண்ணெய்க் கிணறு இருப்பதற்கான சாத்தியக்கூறு இருக்காது" என்று கூறியிருக்கின்றாரே, அது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ருஷ்ய நிபுணர்கள், "அங்கே எண்ணெய் இருக்கலாம்" என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

[17th July 1964

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தப் பரிசோதனை முடிவதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது சொல்ல முடியாது. ஆயில் எக்ஸ்பிளோரேஷன் பல நாடுகளில் செய்யப்பட்டதைப் பார்த்தால், பல வருஷங்கள்—இருபது முப்பது வருஷங்கள்கூட —இத்தகைய ஆராய்ச்சி செய்திருக்கிருர்கள். எண்ணெய் கண்டு பிடிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, இந்த எண்ணெய் வள ஆராய்ச்சிக்காக ட்ரில்லிங் மிஷின்களெல்லாம் விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்பட்டனவா ? அல்லது இதற்காகத் தனியாக வாங்கப்பட்ட மிஷின்கள் வேலை செய்கின்றனவா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்பட்ட ட்ரில் எல்லாம் கேணி தோண்டுவதற்குக்கூட சில இடங்களில் உபயோகமாக இருக்காது. எண்ணெய் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சியில் 2,000, 3,000, 6,000 அடி எடுக்கவேண்டிய ஹெவி ட்ரில் தேவைப்படுவதால், அவை விவசாய இலாகாவிலிருந்து எடுக்கப்படவில்லை.

திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சிக்குத் தேவையான எல்லா இயந்திரங்களும் வந்துவிட்டனவா அல்லது இன்னும் பாக்கி இருக்கிறதா ? அப்படிப் பாக்கி இருக்குமானல், அதன் காரணமாக வேலை நிறுத்திவைக்கப்படவேண்டிய நிலை இருக்கிறதா ? இதற்காக நில ஆர்ஜிதம் எல்லாம் செய்தாகி விட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்கு வேண்டிய இயந்திரங்களெல்லாம் சிறிது சிறிதாக வந்துகொண்டே இருக்கின்றன. எல்லா இயந்திரங்களையும் சேர்த்த பிறகுதான் வேலை ஆரம்பிக்க வேண்டும் என்பதில்லை. முதலில் சில இயந்திரங்கள் வேண்டும்; பிறகு 2,000 அடி ஆழம் போன பிறகு புது இயந்திரங்கள் வேண்டியிருக்கும். அவற்றின் மூலம் கீழே தோண்ட வேண்டி இருக்கிறது. மேலும் நம் நாட்டிலே அவற்றிற்கு வேண்டிய 'ஸ்பேர்ஸ்' கிடைக்காததால், சிறிது காலதாமதம் ஏற்படுகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை, திருமலராயன்பட்டணம் இவற்றின் பக்கத்தில் எண்ணெய் ஊற்றுக்களுக்காக தோண்ட வேண்டும் என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இதுவரையில் நடந்த ஆராய்ச்சியின் பயனை நம்பிக்கை ஊட்டத் தக்க வகையில் விளைவுகள் ஏற்பட்டு இருக்கின்றனவா என்று தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதுவரையில் செய்த ஆராய்ச்சியின் பயனை அங்கே எண்ணெய் இருக்கிறது என்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்றுதான் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறது.



17th July 1964]

*Full Finance Scheme.*

*510 Q.—Sri M. WILLIAM: Will the Hon. the Minister for Food be pleased to state whether there is any proposal to extend Full Finance Scheme to the backward areas in Kanyakumari district?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: ஆம். இத் திட்டம் 1964-65-ல் கீழ்க்கண்ட அபிவிருத்தி வட்டாரங்களுக்கு விஸ்தரிக்கப்படும் :—

1. முன்சிறை.
2. ராஜக்கமங்கலம்.
3. மேல்புறம்.
4. கிள்ளியூர்.
5. தோவாளை.

Sri M. WILLIAM: Will the Government introduce the Scheme in Melpuram and other Blocks in Kanyakumari district during this year?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இது 1964-65-ல் சேர்க்கப்படுவதைப் பற்றித்தான். மூன்ருவது திட்டம் முடிவதற்குள் மற்ற எல்லா இடங்களிலும் இது வரும்.

Sri C. CHIRANJEEVULU NAIDU: Sir, in view of the fact that the ryots who applied for loans even in non-Full Finance Scheme areas are being denied the loans for the reason that they are members of the Co-operative Societies, will the Government issue necessary instructions to the Panchayat Union Commissioners to the effect that loans may be granted to the ryots even in non-Full Finance Scheme areas ever though they are members of the Co-operative Societies?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: ஃபுல் ஃபைனன்ஸ் ஸ்கீம் என்ருல், அந்த ஸ்கீம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கு எல்லோரும் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டும். மற்றபடி ஏதாவது ஸ்பெஷல் லோன் என்ருல், அது அவர்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மூலம் அல்லது சர்க்கார் மூலம் கொடுக்கப்படும். புல் ஃபைனன்ஸ் ஸ்கீம் இல்லாத இடத்தில் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், மற்றபடி கம்யூனிடி டெவலெப்மெண்ட் இலாகா மூலமும் சர்க்கார் மூலமும் வாங்குகிருர்கள்.

புவனேஸ்வர் மகாநாட்டு ஆண்டு மலரில் விளம்பரம்.

*311 கேள்வி.— திரு. து. ப. அழகமுத்து : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புவனேஸ்வர் நகரில் நடைபெற்ற அகில இந்திய [illegible] மகாநாட்டில் வெளியிட்ட ஆண்டு மலரில் [illegible] விளம்பரம் கொடுத்ததா ?

(இ) எந்தெந்த இலாகாக்கள் விளம்பரம் கொடுத்தன?

(உ) அதற்காகச் செலவிடப்பட்ட தொகை என்ன?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) புவனேஸ்வர் நகரில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டில் வெளியிட்ட ஆண்டு மலரில் தமிழ்நாடு அரசாங்கம் விளம்பரம் கொடுத்தது.

(இ) பொது (செய்தி விளம்பர)த் துறையும் தொழில் வர்த்தகத் துறையும் விளம்பரம் கொடுத்தன.

(உ) விளம்பரத்துக்கான தொகை ரூ. 3,000.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, ஒரு கட்சியின் தனிப்பட்ட அரசியல் கட்சியினர் மகாநாட்டிற்கு இப்படி விளம்பரம் கொடுத்திருப்பது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது ஆகாதா, இது மரபா? அப்படியென்றால், எல்லாக் கட்சி மாநாடுகளிலும் விளம்பரம் கொடுக்கப்படுமா?

**கனம் திரு. கோ. பூவராகன்:** இந்த ஆண்டு மலருக்குக் கொடுத்தது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தது ஆகாது. பொதுவாக எந்தப் பத்திரிகைகள் அரசாங்க திட்டங்கள், காரியங்கள் இவற்றிற்கு உகந்ததாக இருக்கின்றதோ, அந்தப் பத்திரிகைகளுக்கும் மற்றும் அந்த வட்டாரத்தில் அதிகம் மக்கள் படிக்கக் கூடியதாக உள்ளதுமான பத்திரிகைகளும் விளம்பரம் கொடுக்கிறோம். அது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகாது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், நம்முடைய அரசாங்கத்திற்கு விளம்பரத்தில் ஆசை ஏற்பட்டிருப்பதை வரவேற்கிறோம். எந்த அடிப்படையில் குறிப்பிட்ட இந்த மாநாட்டில் கொண்டு வரப்பட்ட மலருக்கு விளம்பரம் கொடுக்க வேண்டும் என்ற ஆசை செய்தித் துறை அமைச்சருக்கு ஏற்பட்டது.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, விளம்பரம் கொடுப்பது என்பது, எதன் மூலம் சர்க்கா ருடைய அலுவல்கள், திட்டங்கள், தொழில் துறை வளர்ச்சி இவைகளை அதிகமான மக்கள் பார்த்து தெரிந்து கொள்ள முடியும் என்று தெரிகிறதோ அதன் மூலம் விளம்பரம் செய்வது என்பது தான் அடிப்படைக் கொள்கை. சர்க்காருடைய அபிப்பிராயத்தில் இந்த ஆண்டு மலர் பொது மக்களால் அதிகமாக வாங்கி பார்க்கப் படும், விளம்பரம் நல்ல முறையில் கொடுக்கலாம் என்று இருந்த தால் அந்தவிதமான விளம்பரம் கொடுத்தார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், நம்முடைய கனம் தொழில் அமைச்சருடைய விளக்கத்திற்கு பிறகுகூட விளம்பரத்தின் அவ சியம் சரியாக புரியவில்லை. புவனேசுவர காங்கிரஸ் வெளியீட்டு மலர் ஒரு பத்திரிகை அல்ல. தொடர்ந்து வெளியிடும் பத்திரிகை அல்ல. அது ஒரு கட்சி மாநாடு. கட்சி வேறு, அரசாங்கம் வேறு. காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தில் இருக்கலாம். இப்படி சர்க்கார் உதவி செய்துதான் மலர் வெளியீட்டுச் செலவை ஈடு செய்ய வேண்டும், வேறு யாரும் வாங்கி படிக்க மாட்டார்கள் என்ற எண்ணத்தில் சர்க்கார் உதவி செய்தார்கள் என்று பொது மக்கள் கருதினால் அது தவறு என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எதிர்க் கட்சி அங்கத்தினர்களுக்கு சர்க்கார் செய்வதை குறை கூறுவதற்கு எல்லா விதமான உரிமையும் உண்டு. கனம் கல்யாணசுந்தரம் அதை பிரயோகித்து விட்டார்கள் என்பதை ஒப்புக் கொள்கிறேன். எந்த மலராக இருந்தாலும், அதன் மூலம் விளம்பரம் ஏற்படும், அதை மக்கள் பார்ப்பார்கள் என்று நினைத்தால் அதில் விளம்பரம் கொடுப்பதில் தவறு ஒன்றும் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல்:** சார், இந்த மாநாடு கட்சி முறையில் நடத்தப்பட்ட ஒன்று. அதுவே ஆளும் கட்சியாக இருக்கிறது. அதற்கு விளம்பரம் அளிக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கட்சி மாநாடுகளுக்கு ஏராளமான மக்கள் வருகின்றார்கள். அந்த மாநாட்டில் போடப்படும் மலர்களுக்கும் விளம்பரம் கொடுக்கும் பெருந்தன்மையை எதிர்பார்க்லாமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்தவிதமாக அப்ளிகேஷன் போட்டால் சர்க்கார் பரிசீலனை செய்வார்கள்.

**திரு. சா. கணேசன்:** தலைவர் அவர்களே, புவனேசுவர காங்கிரஸ் சென்னை அரசாங்கத்திற்கு அப்படி அப்ளிகேஷன் போட்டார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** யார் யார் மலர் வெளியிடுகிறார்களோ அவர்கள் அப்ளிகேஷன் போடுவார்கள். அப்ளிகேஷன் பேரில்தான் விளம்பரம் கொடுக்கிறார்கள். விளம்பரத்தை வைத்துக் கொண்டு சர்க்கார் தெருத்தெருவாக செல்வதில்லை என்பதை திரு. கணேசன் அவர்களும் அறிந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. டி. எல். சசிவர்ணத்தேவர்:** தலைவர் அவர்களே, இந்த மலர் எவ்வளவு பிரதிகள் அச்சிடப்பட்டன, எவ்வளவு மக்களால் வாங்கப்பட்டன என்பதற்கான கணக்கு கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** தனிக்கேள்வி போட்டால் அவைகளை சேகரித்துக் கொடுக்கலாம். ஆனால் இது அகில இந்தி யாவும் சம்பந்தப்பட்டது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், கனம் தொழில் அமைச்சர் சொல்வதைப் பார்த்தால், ஏதோ சப்சிடிக்கு மனுப் போட்டால் செய்யப்படுவது போல இருக்கிறது. அதை அப்படி கருதக்கூடாது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் இந்த மலரை பெரும்பாலும் பார்ப்பார்கள். ஆனால் எல்லா கட்சிகளை சேர்ந்தவர்களும் சர்க்காரின் கொள்கைகளை தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே கட்சி வித்தியாசம் இல்லாமல் விளம்பரம் கொடுப்பது என்றோ, அல்லது எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ஆனாலும் கொடுக்கக்கூடாது என்றோ ஒரு திட்டமான கொள்கையை கையாள வேண்டும். அதுபற்றி ஆலோசனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் புவனேஸ்வர காங்கிரஸ் வெளியீட்டை காங்கிரஸ்காரர்கள்தான் பார்ப்பார்கள் என்று சொல்வதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. அகில

இந்தியாவிலும், உலகத்திலும் அந்த மலரை பார்க்கிறார்கள். நாட்டின் நிர்வாகத்தில் உள்ள பல காரியங்கள் பற்றியும், அந்த நிர்வாகத்தில் உள்ள பல தலைவர்களாலும் கட்டுரைகள் அந்த மலரில் வெளியிட்டிருப்பதன் காரணமாக அதை பல பேர் வாங்கிப் பார்க்கிறார்கள், அதனால் ஏராளமான விளம்பரம் ஏற்படும் என்ற காரணத்தினால் தான் கொடுக்கப்பட்டது.

### *Power Supply to Kerala*

* 514 Q.—Sri M. KALYANASUNDARAM : Sri K. A. MATHIALAGAN : } Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any representation has been received from the Kerala Government for the supply of power from Neyveli Project: and

(b) if so, the details thereof and the action taken thereon?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) & (b) Yes. The Government of Kerala requested this Government to spare power temporarily from the Neyveli Lignite Project to help them to tide over the acute shortage facing them. We have agreed to spare them 21,000 K.W. of power during night hours.

9-30 a.m. திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்த ஏற்பாடு எப்போதும் நிரந்தரமான ஏற்பாடா? அல்லது தற்காலிகமாக அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய கஷ்டத்தைத் தீர்க்க ஏற்பட்டு இருக்கக்கூடிய ஏற்பாடா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இது தற்காலிக ஏற்பாடு தான். மழை வந்த பிறகுகூட அவர்கள் இது தங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

* 515 கேள்வி—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: திரு. கே. ஏ. மதியழகன் : திரு. எஸ். ஜே. ராமசாமி : } கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(1) பயணப் படி, (2) அன்றாடப் படி, (3) மோட்டார் வண்டி நிர்வாக செலவு ஆகியவை சம்பந்தமாக 1963-64 ஜனவரி முடிய ஒவ்வொரு அமைச்சருக்கும் ஆன செலவு எவ்வளவு, மாத வாரியாக ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சபையில் ஒரு அறிக்கை* வைக்கப்பட்டுள்ளது.

* 125-128-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



திரு. மீ. கலியாணசுந்தரம் : மேஜை மீது வைத்திருக்கக்கூடிய அறிக்கையைப் பார்த்தால் நமது கனம் உள் துறை அமைச்சர் திரு. கக்கன் உபயோகப்படுத்தக்கூடிய கார் மாத்திரம் அதிகப் பழுது அடையாமல் ஓடிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய கார்கள் ஓட்டை உடைசலானவையா? மற்ற மந்திரிகளுக்கும் இந்த மாதிரியாக நல்ல கார்களைக் கொடுக்கவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : என் கார் கூட அதிக ரிப்பேர் ஆனதாகத் தெரியவில்லை. இதை நான் இப்பொழுது தான் பார்க்கிறேன். ஒரு முறை தான் 440.22 ரூபாய் செலவாயிற்று. அப்புறம் செலவாகவில்லை. பொதுவாக, மைனர் ரிப்பேராக இருந்தாலும் அவை அலட்சியம் செய்யப்படாமல் உடனடியாகக் கவனிக்கப்படுவதன் மூலமாகத்தான் கார்கள் நீண்டகால சர்விஸ் செய்யும். ஆகையால் கார் ரிப்பேர் செலவு அநாவசியமென்று நினைக்கக்கூடாது ?

திரு. மீ. கலியாணசுந்தரம் : அமைச்சர் அவர்களுடைய கார்கள் எந்தப் பட்டறையில் பழுது பார்க்கப்படுகின்றன? அரசாங்கத்திற்குச் சொந்தமான ஸ்டேட் டிரான்ஸ் போர்ட் பட்டறையிலா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எல்லாக் கார்களும் அங்கேயே பழுது பார்க்கப்படுவதாகச் சொல்ல முடியாது. கார்கள் எந்த எந்த மேக் என்று பார்க்க வேண்டும். அம்பாஸிடராக இருந்தால் பழுது பார்ப்பார்கள். எந்த எந்த மேக் கார்களை எந்த எந்த இடத்தில் பழுது பார்ப்பதற்கு வசதி இருக்கிறதோ அங்கே தான் பார்ப்பார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : குறைந்தபட்ச திட்டமாக அமைச்சர்கள் ஒரு மாதத்தில் ஒரு வாரமாவது தலைநகரில் இருந்து காரியங்களை கவனிக்கிற ஏற்பாட்டைச் செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அந்தப் பொறுப்பைக் கூட அமைச்சர்களுக்குக் கொடுக்கவில்லையென்று சொன்னால் அமைச்சர்கள் என்று பதவி வகிப்பதில் பயன் இல்லை.

### முசிரி போலீஸ் நிலைய சம்பவம்

* 516 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், முசிரி நகரத்தில் உள்ள போலீஸ் நிலையத்தில் ஒருவரைப் போலீசார் அடித்ததால் மரணமடைந்தது உண்மையா?

(இ) ஆமெனில், அதன்மீது விசாரணை நடத்தப்பட்டதா?

(உ) இதுபற்றி எடுத்த மேல் நடவடிக்கை என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) to (c) As the matter is sub-judice, the question cannot be answered at this stage.

[17th July 1964

### X-Ray Block

* 517 *Q.*—SRI K. CHEEMAICHAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal for the construction of an X-Ray Block and theatre in Sivaganga Government Hospital; and

(*b*) if so, the stage at which it stands?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) & (*b*) The construction of X-Ray block in the hospital has been deferred on account of the National Emergency. The existing operation theatre in the institution is just enough for conducting operations. The question of constructing another theatre adjoining the present one is under the consideration of the Director of Medical Services.

* 518 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that an X-Ray unit has not been supplied to the Tiruchendur Government Hospital though the X-Ray block has already been constructed there; and

(*b*) if so, when the X-Ray unit will be supplied?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*). & (*b*) The X-Ray plant has since been supplied and installed in the hospital on 21st March 1964.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இப்போதுள்ள மருத்துவ முறையில் எக்ஸ்ரே இல்லாமல் நோயின் தன்மையை ஆராய்ந்து சிகிச்சை செய்ய வாய்ப்பு இல்லை. ஆகையால் தாலுகா தலைநகரங்களிலுள்ள மருத்துவ மனைகளிலாவது தவறாமல் எக்ஸ்ரே யூனிட்டை அமைக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தேசிய நெருக்கடி முடிந்த பிறகுதான் எல்லாம் ஆலோசனை செய்து அவசியங்களை ஆராய்ந்து செய்ய முடியும்.

**திரு. சா. கணேசன் :** நமக்கு வருகிற நோய்களுக்கு எல்லாம் தேசிய நெருக்கடி இருக்கிறது என்பது புலப்படவில்லை. ஆகவே இந்த நோய்களைப் பொறுத்த அளவிலாவது, தேசிய நெருக்கடி என்பதை அப்பால் வைத்துவிட்டு, தக்க கவனம் செலுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தேசிய நெருக்கடி ஒருபுறம் இருக்க பண நெருக்கடி தான் உடனடியாக இந்த விஷயத்தில் கவனம் செலுத்த முடியாமல் இருப்பதற்குக் காரணம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தேசிய நெருக்கடி என்பது பண நெருக்கடிக்கு ஆகுபெயர்.



17th July 1964]

### சேலத்தில் மருத்துவக் கல்லூரி.

*519 கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரயில்வே செஸ் நிதியைக் கொண்டு சேலத்தில் மருத்துவக் கல்லூரி அமைப்பது பற்றி ஏதேனும் கோரிக்கைகள் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** (அ) ஆம்.

(இ) சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியை வெளியூரில் தகுந்த இடத்திற்கு மாற்றும் திட்டத்தோடு இக் கோரிக்கை களை அரசாங்கம் ஆராய்ந்தது. திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியை அமைப்பதெனக் கடைசியாக முடிவு செய்யப்பட்டது. மூன்றுவது திட்டக் காலத்தில் புதியதாக அரசாங்க மருத்துவக் கல்லூரி எதையும் திறக்கும் திட்டம் இல்லை.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** சேலத்தில் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதாக இருந்தார்கள். அதைத் திருநெல்வேலிக்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அந்த யோசனை ரொம்ப நாளைக்கு முன்னே பரிசீலிக்கப்பட்டுக் கைவிடப்பட்டு விட்டது. அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கியக் காரணம் சரியான தண்ணீர் வசதி இல்லாததுதான். ஆகவேதான் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டது.

**திரு. ப. கமலநாதன்:** தலைவர் அவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதியை சேலத்திற்கு ஒதுக்கின நேரத்தில் அந்த நிதியைக் கொண்டு சிறிய சிறிய கட்டடங்களைக் கட்டிக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் வட, தென் சேல அபிவிருத்தி மாவட்டங்களில் அந்த நிதியைக் கொண்டு மருத்துவக் கல்லூரி அங்கே ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டும், அந்த நிதியைக் கொண்டு இந்தச் சிறிய திட்டங்களை நிறைவேற்றலாம் என்றால் அரசாங்கத் திடமிருந்து தங்களுக்கு எவ்விதத் தாக்கீதும் இதுபற்றி வரவில்லை என்று கலெக்டர் கூறுகிறார். ஆகவே உடனடியாக மருத்துவக் கல்லூரி சேலத்தில் ஏற்படுத்தப் போவதில்லையாதலால் அந்த ரயில்வே செஸ் நிதியை முன்பு சொன்னது போலச் சிறு சிறு கட்டிடங்களுக்குப் பயன்படுத்தலாம் என்று உத்தரவிடுவார்களா ? இப்படி உத்தரவிடுவதனால் வீணாக முடங்கிக் கிடக்கும் 25 லட்சம் ரூபாயை பல வேலைகளுக்குப் பயன் படுத்த முடியும்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** சார், அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. ஆனாலும் கனம் அங்கத்தினர் கூறியதை மனதில் வைத்து ஆவன செய்கிறேன்.

### கால்நடை தீவன உற்பத்தி நிலையம்

*520 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் கால்நடைத் தீவன உற்பத்தி நிலையங்களை நிறுவும் உத்தேசமுண்டா?

(இ) ஆமெனில், அவைகள் எங்கெங்கு நிறுவப்படும்?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[ *Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) COLLAPSE OF THE SARASWATHI HIGH SCHOOL BUILDING, MANINAGARAM, MADURAI.

MR. SPEAKER: The hon. Member, Sri M. Kalyanasundaram, has given notice of an adjournment motion to discuss the inadequate relief given to the families of the victims in the collapse of the building of the Saraswathi High School, Maninagaram, Madurai.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய சபை காலம் கடந்து கூடுகிறது. குறைந்த நாட்களே கூடுகிறது. அதற்குள் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல வேண்டிய கடமையினால் உடனடியாக இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக்கொண்டு வந்திருக்கிறேன். குறிப்பாக மதுரையில் ஒரு பள்ளிக்கூடக் கட்டிடம் திடீரென்று இடிந்து விழுந்ததும், அதனால் பல மாணவிகள் உயிர் இழந்ததும், அதன் காரணமாக நாடு பூராவும் துக்கப்பட்டதும் யாவரும் அறிந்த விஷயம். இதுபற்றி அரசாங்கமே ஓர் அறிக்கையைச் சபை முன்பு வைத்து விவாதம் செய்வதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பார்கள் என்று எதிர்பார்த்தோம். அத்தகைய முக்கியமான விஷயத்தில் எங்களுடைய யோசனைகள் மிகவும் உதவியாகக் கூட இருக்கலாம். அப்படிச் செய்யும்படியாக நான் பிசினஸ் அட்வைசரிக் கமிட்டியில் கூறியபோது கனம் அமைச்சர் அவர்கள் அதற்குத் தேவையில்லை என்று கூறிவிட்டார்கள். காலம் கடந்து விட்டது என்று சொன்னாலும் சபை இப்போதுதான் கூடுகிறது. முப்பத்தைந்து மாணவிகள் உயிர் துறந்திருப்பதும், இன்னும் ஆசிரியைகள் உட்பட பலர் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருவதும் எல்லோருக்கும் தெரியும். சிலர் இப்போது தான் மருத்துவ மனையை விட்டு வந்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு





முக்கியமான விஷயத்தைப் பற்றி சபை விவாதிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். உயிர் துறந்த மாணவிகளின் குடும்பத்திற்குப் போதுமான உதவியை அரசாங்கம் அளிக்க முன் வருவது அவர்கள் பொறுப்பாகும் என்பது என்னுடைய கருத்து. அத்தகைய பிரச்சினைகள் இந்தச் சபை முன்பு விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதனால் இதற்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும். அமைச்சர் அவர்களே இதுபற்றிய ஓர் அறிக்கையைக் கொண்டு வராததனால், நான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைப் பிரேரிக்க விரும்புகிறேன்.

* திரு. சா. கணேசன்: கனம் சபாநாயகர் அவர்களே இதே விஷயத்திற்காகத்தான் நான் இந்தச் சபையின் மற்ற வேலைகளை ஒத்திவைத்துவிட்டு, இந்த விஷயத்தை விவாதித்து அதன் மூலம் ஏற்பட்ட கஷ்டங்களையும், நஷ்டங்களையும் புரிந்துக்கொண்டு, இனிமேல் இத்தகைய தவறுகள், தீய விபத்துக்கள் ஏற்படாமல் இருப்பதற்குரிய வழிவகைகளை வகுப்பதற்குரிய வகையில் சபையிலே விவாதத்தைத் தொடங்கி அதன் பயனாக ஒரு நல்ல நடைமுறையை ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் ஒரு ஒத்தி வைப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து இருக்கிறேன். இதற்கு அவசியமில்லை, காலம் தாழ்ந்துவிட்டது என்று சொல்வது அவ்வளவு நியாயமாகப்பட வில்லை. அது நடந்த பிறகு இப்போது தான் நாம் முதலில் கூடுகிறோம். இதற்கு முன்பே சபை கூடியிருந்தால் இத்தகைய பிரேரணையை முன்பே கொண்டு வந்து விவாதித்து நல்ல வழிமுறைகளை ஏற்படுத்த வாய்ப்பு இருந்திருக்கும். அப்படியின்றி இப்போதுதான் சபை கூடுகிறது என்பதனால் இதைப்பற்றி சபை விவாதிக்க நேரம் கொடுப்பதுதான் சரியானதாக இருக்கும். காலம் கடந்தது என்று சொல்வது பொருந்தாது என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, மதுரை மட்டுமல்லாது இன்னும் பல இடங்களிலே இப்படிப் பல பள்ளிகள் இடிந்து விழுந்திருக்கின்றன; ஆனால் உயிர்ச் சேதம் இல்லை. ஆகவே, பள்ளிகளுக்கான கட்டடங்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதை வரையறை செய்யவேண்டும். பள்ளிக்கூடங்கள் தொடங்குவதற்கு முன் கட்டடங்களைச் சோதித்துப் பார்க்க வேண்டும், சிறு பிள்ளைகள் படிக்கும் பள்ளிகள் 'டெரஸ்டு பில்டிங்' ஆக இல்லாமல் கூரைகள் வேய்ந்தவையாக இருந்தால் விபத்துக்கள் ஏற்படாது என்பன போன்றவற்றையெல்லாம் வகுக்கவும், சிந்திக்கவும் நல்ல வாய்ப்பு ஏற்படும் நிலையை ஆட்சியாளர்கள் ஏற்படுத்தித் தரவேண்டும். இன்றியமையாத, முக்கியமான, நியாயமான, தேவையான விஷயத்தைப் பற்றி விவாதிப்பதற்கு வழி விட்டுத் தரவேண்டுமென்று உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களை வேண்டிக் கொண்டு நீங்களும் இதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI V. R. NEDUNCHEZHIAN: I want to support the adjournment motion.

[17th July 1964

SRI M. KALYANASUNDARAM : The Hon. Leader of the opposition can also speak, if he wants.

MR. SPEAKER : That would be setting up a bad précedent.

*திரு இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, மதுரைப் பள்ளிக்கூடம் விழுந்த நிகழ்ச்சி, நாட்டு மக்கள் அத்தனை பேரையும் கலங்கச் செய்தது என்பதையும், அதனால் கவலைக்கு இடமான நிலைமை உருவாயிற்று என்பதையும் நாம் அறிவோம். அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இந்த மன்றம் இப்போதுதான் கூடுகிறது. ஆகவே, இப்போது இந்த மன்றத்தின் நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இது பற்றி விவாதிப்பது, தக்க நடவடிக்கைகளை எடுக்கவும், சீரான நிலையை உருவாக்கவும் பயன்படுகின்ற முறையில் அமையும். அந்த வகையில் சபை நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, இதுபற்றி விவாதிப்பதற்கு அனுமதி அளிக்க வழிவகை செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI R. V. SWAMINATHAN : I want to make a submission to the Hon. Minister.

MR. SPEAKER : The hon. Member can do it afterwards.

*கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, விவாதிக்க வேண்டிய எல்லாப் பிரச்சினைகளும் ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரித்தாகாது. எத்தனையோ விஷயங்கள் விவாதிப்பதற்கு உரித்ததாக இருக்கலாம். ஆனால் அவை எல்லாம் ஒத்தி வைப்புப் பிரேரணையின் கீழ் வர முடியாது. இந்த விஷயம் சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர்கள் சிலர் கேள்விகள் கொடுத்திருக்கிறார்கள்; சிலர் ஸ்டேட்மெண்ட் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சர்க்கார் அவற்றுக்கான பதிலை இந்தக் கூட்டமுடிவிற்குள் கொடுக்கத் தயாராக இருக்கிறது. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றிக் கேள்விகள் கேட்கும்போது பதில் சொல்லலாம். ஆகவே, இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரித்தானது அல்ல என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER : As the hon. Members feel, it is not a recent thing. So many enquiries are going on. The second point is that nothing more than the ordinary administration of the law is involved in this. So I withhold consent to these motions. After questions are answered, if necessary, we can have a one hour discussion.

SRI SAW GANESAN : Thank you, Sir.

SRI R. V. SWAMINATHAN : I want to make a submission through you, Sir, to the Hon. Minister. In view of the importance of this subject, may I know whether the Government would come forward with a statement so that we could have a discussion on it. I think one hour discussion would not be enough. We should



17th July 1964] [Sri R. V. Swaminathan ]

have at least half-a-day for that. We in the Congress benches here are more interested in this subject than many Opposition Members. We have many things to speak on this subject.

MR. SPEAKER : Has the hon. Member given notice of it?

SRI R. V. SWAMINATHAN : If the Chair permits, I shall give it.

திரு. சா. கணேசன்: கனம் திரு. சாமிநாதன் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்றால் முதலிலேயே இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பது பற்றிய பிரச்சினையை எழுப்பி இருக்க வேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யாததிலிருந்தே அவர்களுக்கு அக்கறை இல்லையென்பது தெரிகிறதல்லவா என்று கேட்க விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member cannot ask the hon. Member Sri R. V. Swaminathan to reply nor can he answer.

SRI M. KALYANASUNDARAM : May I make a submission?

MR. SPEAKER : Yes. The hon. Member can make a submission to me.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கனம் சபாநாயகர் அவர்களே, நீங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்தாயிற்று. ஆனால் சபையிலே இருக்கக்கூடிய அபிப்பிராயத்தைப் பார்த்தால் இந்தப் பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்பதிலே எல்லோரும் ஆர்வத்துடன் இருக்கிறார்கள். இது தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தைப் பொறுத்த பிரச்சினை அல்ல; இது நிர்வாக சம்பந்தமான பிரச்சினை. இந்தச் சபை கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினை. ஆகவே, இதன் மீது ஒரு அறிக்கையை வைத்து அந்த அறிக்கையின் மீது விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தொழில் அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, தாங்கள் கூறியது போல் கேள்விகளுக்குப் பதில்கள் கொடுக்கலாம். அதற்குப் பிறகும் விவாதிக்க வேண்டுமென்றால் ஒரு மணி நேர அவகாசம் கொடுத்து விவாதிக்கலாம். அந்த ஒரு மணி நேரம் போதாது என்று கருதினால் அந்த விதியை ஒத்தி வைத்து அதிகமான நேரம் வேண்டுமானாலும் விவாதம் செய்யலாம்.

## (2) SOARING PRICES OF FOODSTUFES AND ESSENTIAL COMMODITIES.

MR. SPEAKER : Now we take up the adjournment motion given notice of by the hon. Member Sri Rama Arangannal.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, நாட்டிலே உயர்ந்து வருகிற விலைவாசிப் பிரச்சினையைப் பற்றி இந்த மன்றம் விவாதிக்க வேண்டுமென்பதற்காகத் தங்களுடைய மேலான

[திரு. இராம. அரங்கண்ணல்] [17th July 1964

அனுமதியை நான் கோருகின்றேன். நான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வந்திருப்பதற்குக் காரணம் கடந்த சில நாட்களாக விலைவாசிப் பிரச்சினையை எப்படியாவது கட்டுப் படுத்த வேண்டுமென்பதற்கான விளக்கங்கள் நம்முடைய அரசாலும், மத்திய அரசாலும் வழங்கப்பட்டுக் கொண்டிருக் கின்றன. நான்கைந்து நாட்களுக்கு முன்னால் இங்கே ஏதோ மாநாடு கூட்டப்பட்டு மத்திய அரசு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டதாகவும் ஏடுகளிலே பார்த்தோம். அதுமட்டுமின்றி குறிப்பாக தானியப் பொருள்களைப் பற்றிப் பற்பலவிதமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப் பற்றியெல்லாம் விவாதிப்பதற்கு இது நல்ல வாய்ப்பாக அமையும். இப்போது ஆடி மாதமாக இருக்கின்ற காரணத்தால் இப்போது தான் விவசாயிகள் விதைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அறுவடை நேரத்தில் இதைப்பற்றி முடிவு எடுக்காது இப்போது முடிவு எடுக்கும் வகையிலும் உறுப்பினர்கள் தங்களுடைய கருத்தைச் சொல்லுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதற் காகவும் என்னுடைய ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, மேலான தொழில் அமைச்சர் அவர்கள் என்னுடைய இந்தக் கருத்துக்கு ஆதரவாக இசைவு தருவார்கள் என்று கருதுகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, விலைவாசிப் பிரச்சினை திடீரென்று இன்றைக்கு ஏற்பட்டிருந்தால் அது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு ஒத்ததாக இருக்கும். எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும் விலை ஏறிக்கொண்டுதான் இருக்கிறது. ஆகவே, இது ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு உரித்தானது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றப்படி இப்போது உணவு தானியக் கொள்கை சம்பந்தமாக பல யோசனைகள் நடந்து கொண்டிருக்கின்றன. எந்த விதமான தெளிவான முடிவையும் மத்திய சர்க்கார் எடுக்கவில்லை. எந்த விதமான முடிவும் எடுக்காத நிலையில் இன்ன காரியம்தான் செய்ய வேண்டுமென்று திட்டவட்டமாக எதுவும் சொல்ல இயலாது. ஆகவே, இந்தச் சமயத்தில் இதை எடுத்துக் கொள்வது உசிதமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The rise in prices of foodstuffs and essential commodities is a continuing one and cannot be said to be a matter which arose suddenly to warrant an adjournment motion. Therefore, consent to the motion is withheld.

### (3) REHABILITATION OF TAMILIAN REPATRIATES FROM BURMA.

* **SRI K. A. MATHIALAGAN:** Mr. Speaker, I have given notice of the following adjournment motion under rule 42 of the Assembly Rules:—



17th July 1964] [Sri K. A. Mathialagan]

"That the House do stand adjourned to discuss the following matter of urgent public importance, viz., the failure of the Government to take adequate steps to rehabilitate the Burma Tamils and also the failure of the Government to impress upon the Union Government regarding harassment and expropriation of properties of Burma Tamils"

கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொண்டு வந்திருக்கும் இந்த ஒத்திவைப்பு பிரேரணையின் அவசியத்தைப்பற்றி அதிகமாக வற்புறுத்தவேண்டிய தேவையில்லை என்று கருதுகிறேன். இன்றைய தினம் பர்மாவில் இருக்கின்ற தமிழர்கள் 20, 30 வருடங்கள் அங்கே தங்கள் செய்த உழைப்பை எல்லாம் நாசம் செய்து விட்டு, அங்குள்ள அரசாங்கத்தின் கொள்கையின் காரணமாக, இன்றைக்கு அவர்கள் நிராதரவாக விடப்பட்டிருக்கிறார்கள். இதனுடைய எதிரொலி நமக்கெல்லாம் தெரிகிறது. இவ்விதம் நம்முடைய பிராந்தியங்களுக்கு வாவிருக்கின்ற இந்தத் தமிழர் களுடைய குறைகளைப் போக்குவதற்கு இந்த சர்க்கார், உண்மை யிலேயே மத்திய சர்க்காரிடத்தில் நல்ல வகையில் சொல்வதற்குத் தவறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இருந்து கொண்டிருக் கிறது. இவ்விதம் 20, 30 வருடங்கள் தங்கள் உழைப்பை எல்லாம் பர்மாவில் கொடுத்துவிட்டு இன்று வெறுங்கையுடன் இங்கு நிராதரவாக வாவிருக்கின்றவர்களுக்கு, கிழக்கு பாகிஸ்தான் போன்ற இடங்களிலிருந்து வந்திருக்கின்ற அகதிகளுக்குச் செய்து கொடுக்கின்ற அளவுக்குக்கூட உதவி செய்து கொடுக்காமல், ஏதோ பெயரளவுக்குச் செய்து கொடுப்பது வெறும் கண்துடைப்பாகத்தான் இருக்கிறது. மற்றவர்களுக்கு ஏற்க் கொள்ளப்பட்டிருப்பது போல். இவர்களுக்குத் தொழில் வாய்ப்பு அளிக்கப்பட்டிருப்பதாகவோ, மற்ற வசதிகள் கொடுக்கப் பட்டிருப்பதாகவோ தெரியவில்லை. இதைப்பற்றி நம்முடைய தமிழ்நாடு சட்ட மன்றம் முறையானதாக விவாதிக்க வேண்டியது மிக அவசியம் எனக் கருதுகிறேன். இந்த சர்க்கார் தமிழர் களுடைய சர்க்கார் என்று இருந்தும், தமிழர்கள் என்ற அங்கங்களில் இருந்தும், மதராஸ் சர்க்கார் பகுதியிலும், விளக்கமாகச் சொன்னால், ஆகில இந்திய காங்கிரஸின் தலைவராக இருக்கக் கூடிய திரு. காமராஜ் அவர்களுடைய சொந்த மாவட்டமாகிய ராமநாத புரம் மாவட்டத்திலும் ஏபிரக்கணக்கான பேர்கள் அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட ஒரு பிரச்சினையைப் பற்றி விவாதிப்பதற்கு இந்த மன்றத்திற்கு இந்த அரசாங்கத் திற்குப் பொறுப்பு இருக்கிறது. அந்த முறையில் நான் இந்த ஒத்தி வைப்பு பிரேரணையைக் கொடுக்கிறேன் இதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு பிரச்சினையைப்பற்றி விவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்காக ஒத்தி வைப்புப் பிரேரணையைக் கொண்டு வரவேண்டியதில்லை. அந்த முறையில் இதைக் கொண்டு வந்திருப்பதைப் பார்த்து சற்று ஆச்சரியப்படுகிறேன். முதலில் இந்தப் பிரச்சினையின் மீது நமது சர்க்கார் எந்த விதமான

[திரு ஆர். வெங்கட்டராமன்] [17th July 1964

நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்வது தவறு. நமது சர்க்கார் அதற்காக எந்த விதமான ஏற்பாடுகளும் செய்யவில்லை என்று சொல்வதும் தவறு. மத்திய சர்க்காரிடத்தில் இது சம்பந்தமாகப் பேசி பல ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறோம். கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த விவரங்களை எல்லாம் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால், கேள்வி போட்டு இந்த விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அதல்லாமல் இந்தப் பிரேரபணை கொண்டு வந்ததற்கு வேறு ஏதாவது நோக்கம் இருந்தால் அந்த நோக்கத்திற்கு இது உகந்ததாக இருக்கும்.

MR. SPEAKER : The notice given by Sri K. A. Mathialagan comprises two parts—(1) the failure of the Government to take adequate steps to rehabilitate the Burma Tamils and (2) the failure of the Government to impress upon the Government of India regarding the harassment and expropriation of properties of Burma Tamils. As regards item 1, it is understood from the concerned department that the first ship carrying the Burma Tamils will be coming to Madras on the 23rd and the second ship on the 29th of July. Hence the question of adequate steps for rehabilitating them will arise only after they have actually landed in India.

Regarding item 2, no direct responsibility of the State Government is involved. This Government can only recommend to the Government of India. The Hon Minister for Industries has stated that they have moved and are taking steps in the matter. If the hon. Member wishes, he may give notice of a resolution or some other appropriate motion for discussing the subject. This cannot be a matter for an adjournment motion. Therefore, consent to the motion is withheld.

## (4) STOPPAGE OF STIPENDS TO "TAMIL MEDIUM" STUDENTS AND INSTRUCTION OF TAMIL MEDIUM IN GOVERNMENT COLLEGES.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக்கொண்டு, இதில் படிக்கின்ற மாணவர்களுக்குச் சலுகை, உதவித் தொகை அளிக்கப்பட்டு வந்தது. இந்த மாநிலத்தில் ஆட்சி மொழி தமிழ் என்று வந்த பின்னால், தமிழ் மொழிக்கு உறுதுணை புரிகின்ற வகையில் கல்லூரியில் தமிழைப் பாட மொழியாக ஏற்படுத்தி, அதை அமலுக்குக் கொண்டு வந்தோம். மேலும் இதில் அக்கறை செலுத்துகின்ற மாணவர்களுக்கு உதவி அளிக்கப்படவேண்டும் என்ற அளவில், தமிழைப் பாட மொழியாகக் கொண்டுள்ள மாணவர்களுக்குச் சலுகை அளிப்பது என்றும், 1964-ல் எல்லாக் கல்லூரிகளிலும் தமிழைப் பாட மொழியாகக் கொண்டு வந்து விடலாம் என்ற நம்பிக்கையும் ஆரம்பக் கட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. ஆரம்பக் கட்டத்தில் இதற்காக தமிழைப் பாடமொழி யாக எடுத்துப் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி அளிக்கின்ற



17th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வகையில், 30 ரூபாய் அளிக்கப்பட்டது. ஆனால் இப்போது அந்த உதவி நிறுத்தப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக மாணவர்கள் இந்த திட்டத்திற்கு வராத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்விதம் வராத நிலை ஏற்பட்டதன் காரணமாகக் கோவைக் கல்லூரியில் திறக்கப்பட்டிருந்த பயிற்சி வகுப்புகள் எல்லாம் நிறுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விதம் எடுத்துக்கொண்ட கொள்கையை நிறைவேற்ற முடியாத அளவுக்கு நிலைமை வந்திருக்கின்றது. திடீரென்று உதவியை நிறுத்துவதன் காரணமாக மாணவர்களுக்கு ஊக்கம் வளருவதற்கு வழியில்லாத நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. தற்போது பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில் மாணவர்கள் நல்ல முறையில் சேர்வதற்கான நிலையில் நல்லதொரு முடிவினை இந்த மன்றம் எடுப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். எனவே இந்தத் தீர்மானத்தை அனுமதித்து இதைப்பற்றி விவாதித்து, இந்த மன்றம் நல்லதொரு முடிவை எடுக்குமானால் நாம் மேற்கொண்ட கொள்கையை நிறை வேற்றுவதற்கு வழிவகையாக அமையும் என்று கருதித்தான் இந்த ஒத்தி வைப்புப் பிரேரபணையைக் கொண்டு வந்திருக் கிறேன். இதற்கு அனுமதி அளிப்பதன் மூலமாக இதற்கு நல்ல தொரு வழி செய்து கொடுக்கவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, College admission and scholarship are matters of routine ordinary administration. An adjournment motion must involve something more than routine administration. I submit that it is not a fit subject for an adjournment motion.

MR. SPEAKER : The motion contains two matters. The first matter is the stoppage of stipends. The Government have made it specifically clear as early as 23rd January 1963 that stipends will not be given beyond the academic year 1963–64. Hence, this is not a matter of recent occurrence. Further, there is a notice under Rule 57 pending.

The second matter is about the failure of the Government to introduce Tamil medium in some more Government colleges. This cannot form the subjectmatter of an adjournment motion as it does not refer to anything which has recently happened. Therefore consent to the motion is withheld.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : இங்கு கொண்டு வரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணைகள் எல்லாம் மிகவும் முக்கியமானவை. மதுரை பள்ளிக்கூட சம்பவம், பர்மா தமிழர்கள் பிரச்னை, உணவுப் பிரச்னை, கல்லூரியில் தமிழ் பாடமொழியாவது இவைகள் எல்லாம் மிகவும் முக்கியமானவைகளாக இருக்கின்ற காரணத்தினால், இவைகளை விவாதிப்பதின் மூலமாக எங்களுடைய கருத்துக் களை இங்கே எடுத்துச் சொல்வதற்கும், அமைச்சர்களிடமிருந்து தெளிவான பதிலைப் பெற்றுக்கொள்வதற்கும் நல்லதொரு வாய்ப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [17th July 1964

பாக இருக்கும், ஆகவே இதற்கெல்லாம் ஒரு வாய்ப்புக் கொடுக்கின்ற முறையில் ஒவ்வொரு பிரச்னை மீதும் ஒரு மணி நேர விவாதத்திற்காவது அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. SPEAKER : We shall take them under Rule 57.

(Mr. Deputy Speaker in the Chair)

10-00 a.m.

III.—ANNOUNCEMENT.

BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that the Business Advisory Committee, which met yesterday has decided the following programme of business for the present sitting of the Legislative Assembly :—

| | | |
|---|---|---|
| 17th July 1964 (Friday). 18th July 1964 (Saturday). | Discussion on the Madras State Electricity Board Budget for the year 1964–65. | |
| 19th July 1964 (Sunday). | HOLIDAY. | |
| 20th July 1964 (Monday). | Consideration and passing of— | |
| | 1 Amendment carried in the Council to the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964. | |
| | 2 The Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 as amended by the Joint Select Committee. | |
| | 3 The Madras (Tranferred Territory) Ryotwari Settlement Bill, 1964. | As amended by the Select Committee. |
| | 4 The Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964. | |
| | 5 The Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964. | |
| | 6 The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964. | |
| 21st July 1964 (Tuesday). | Government Bills. | |
| 22nd July 1964 (Wednesday). | (i) Discussion and voting on the First Supplementary Statement of Expenditure for the year 1964-65. | |
| | (ii) Voting on Demand for Grant for Excess Expenditure for the year 1959-60. | |
| 23rd July 1964 (Thursday). | NON-OFFICIAL DAY. | |
| 24th July 1964 (Friday). | (i) Consideration and passing of Appropriation Bills. | |
| | (ii) Discussion on the M.P.S.C. Report for the year ending 31st March 1963. | |
| | (iii) Government Bills. | |
| 25th July 1964 (Saturday). | Government Bills if any. | |



17th July 1964] [Mr. Deputy Speaker]

SRI M. KALYANASUNDARAM : Regarding the programme of the House, I wish to make a submission, Sir. Yesterday, during the discussions at the meeting of the Business Advisory Committee, I said that a day may be allotted for discussion on the "Food Situation" in the State. Ofcourse, it is a continuing problem. Every year, we have been discussing this question. Yesterday also, I raised it. But I was helpless. The officiating Leader of the House did not agree and the Leader of the Opposition did not support me. Small parties like ours is a sandwich between the two parties. Therefore, I move an amendment to the programme that a day may be allotted for discussing the "Food Situation."

MR. DEPUTY SPEAKER : I think it would be better to consult the Government and the Leader of the Opposition before any decision is taken.

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I would appreciate if the hon. Member Sri Kalyanasundaram asked for a meeting of the Business Advisory Committee to put forward his plea. It was explained at the last meeting that the whole situation is in such an unsettled position and the Government of India have not formulated any scheme. Therefore, while discussing the subject, the Government would not be able to contribute effectively to the discussion. If there is some indication of the way in which the situation would be tackled, then it would be possible for the Government to see whether discussion can be had. It is for these reasons, yesterday the B.A.C. did not allot a day for this purpose. The matter may be taken up again before the B.A.C. and the subject may be discussed. If there is anything for the Government to contribute, it will not shirk and will not withhold discussion.

* திரு. கே. ஏ. மதியழகன் : கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்னையில் எந்த முடிவுக்கும் வரவில்லை, அதனால் இந்த விவாதம் நடைபெறுவதற்கில்லை என்று சொன்னார்கள். எந்த முடிவுக்கும் வராமல் இருக்கின்ற நிலையில்தான் இந்த மன்றமும் தன்னுடைய நல்ல விலைமதிக்க முடியாத கருத்துக்களை எடுத்துச் சொல்லி, உணவுப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான பரிகாரங்களை எடுத்துச் சொல்லலாம். இங்கு எடுத்துச் சொல்லப்படும் கருத்துக்கள் அரசாங்கம் நல்லதொரு முடிவுக்கு வருவதற்கு உபயோகமாக இருக்கலாம். ஆகவே, உணவுப் பிரச்னை குறித்த விவாதத்தை அருள் கூர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[17th July 1964

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், நாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டி மறுபடியும் கூடவேண்டுமென்று கூறியிருக்க வேண்டுமென்று அமைச்சர் கூறுகிறார்கள். எனக்கு பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை. பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியில் உள்ள கட்சித் தலைவர்கள் மட்டும் சேர்ந்து முடிவு செய்தால் போதாது. உணவுப் பிரச்னை என்பது மிக முக்கியமான பிரச்னை. முதல் அமைச்சர்கள் மாநாடு கூட்டி சில முடிவு எடுத்திருக்கிறார்கள். எடுத்துள்ள முடிவுகள் இறுதியானதாக இல்லாமல் இருக்கலாம். இறுதி முடிவு எடுப்பதற்கு 7 ஆண்டுகள் ஆகலாம். இறுதி முடிவு எடுக்காத சமயத்தில் தான் முக்கியமாக விவாதிக்க வேண்டும். மக்களுக்கு மூன்று வேளை சாப்பாடு கொடுப்பது என்பதை விட வேறு அத்தியாவசியமான பிரச்னை ஏதாவது உண்டா என்று ஆச்சரியமாக இருக்கிறது. அத்தகைய முக்கிய பிரச்னையைப்பற்றி விவாதித்து இங்கு சொல்லப்படும் கருத்துக்களைக் கொண்டு நல்ல முடிவு எடுப்பதற்கு வசதி ஏற்படும் என்பதற்காகத்தான் இந்தச் சபையில் இந்தப் பிரச்னையைக் கிளப்பியிருக்கிறேன். தயவு செய்து மன்னிக்க வேண்டும்—பிஸினஸ் அட்வைஸரி கமிட்டி கூடி விவாதிக்கவேண்டுமென்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு ஆட்சேபனை இல்லை. அந்த விவாதம் நேரம் ஒதுக்குவதைப் பற்றியதாக இருக்க வேண்டுமே தவிர, எப்படி இந்தக் கோரிக்கையை நிராகரிப்பது என்பதற்காக இருக்கக்கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் துணை தலைவர் அவர்களே, உணவுப் பிரச்னை குறித்து விவாதிக்க நேரம் ஒதுக்கவேண்டும் என்பதைக் கனம் சபாநாயகர் அவர்களிடத்தில் நான் எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எடுத்துச் சொல்லுகிற மாதிரி இது முக்கிய பிரச்னை ஆகும். மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து சில பல முடிவுகள் எடுத்தாலும், நாட்டு நிலைமையை அறிந்துகொள்ள மன்றத்திற்கு வந்திருக்கிற உறுப்பினர்கள் நிலைமையை எடுத்துத் தெளிவுபடுத்துவது நல்லதாக இருக்கும். அரசாங்கம் முடிவு எடுப்பதற்கும் விவாதம் மிகவும் பயன்படும் ஒன்றாக இருக்கும். பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியைக் கூட்டாமலேயே கனம் அமைச்சர் அவர்கள் இதற்கு இடம் ஒதுக்கித் தரலாம். அல்லது பிஸினஸ் அட்வைசரி கமிட்டியைக் கூட்டி நேரம் ஒதுக்கித்தர வழிவகை ஏற்படுமானால் அதைக் கூட்டியாவது இதைப் பற்றி விவாதிக்க நேரம் ஒதுக்கித் தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் அவர்கள் "இப்போது இது மிக மிக முக்கிய பிரச்னை, இதை விட உயர்ந்த பிரச்னை உண்டா?" என்று கேட்டார்கள். ஏன் ஒரு ஸ்டேட் மெண்ட்டாவது வைக்கவேண்டுமென்று என்னிடம் கேட்கவில்லை என்று எனக்குப் புரியவில்லை. "இவ்வளவு முக்கிய பிரச்னை, மக்களைப் பொருத்ததாக இருக்கிறது, மூன்று வேளை சாப்பாட்டுக்குக் கூட



17th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

வழி செய்ய வேண்டாமா?" அதை விட முக்கிய பிரச்னை என்ன இருக்கிறது சர்க்காருக்கு?" என்று சொல்லுகிறவர்கள் 41-வது விதிப் பிரகாரம் ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தால் அதை உண்மையாகவே முக்கிய பிரச்னையாக அவர்கள் கருதியிருக்கிறார்கள் என்று நினைக்கலாம். இப்போது ஏதோ திடீரென்று கேட்கிறார்கள். சர்க்கார் நேற்று எடுத்த முடிவை மாற்றிக் கொள்ளுவதற்கு இயலாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், இந்தப் பிரச்னையை இவர்கள் ஏன் ஒத்துக்கொள்ளவில்லை என்று கேட்டார்கள் . . . .

MR. DEPUTY SPEAKER: There is no point of order.

**திரு மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாங்கள் இப்போதுதான் ஏதோ அக்கறை காட்டுகிற மாதிரி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் இந்தச் சபையிலே அப்படித்தான் பேச வேண்டும். அவர்கள் கொண்ட நிலையை நிலைநாட்ட அப்படித்தான் பேசவேண்டும் . . . .

MR. DEPUTY SPEAKER: There is a non-official day on the 23rd July 1964.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஒரு அங்கத்தினர் ஒரு ரெசலூஷன் தான் கொடுக்க முடியும். அதற்கும் டேட் தீர்ந்து விட்டது. இதே பிரச்னை மீது நான் கேள்வி போட்டிருக்கிறேன். கேள்வி இந்தச் சபையின் முன் உடனடியாக வருமா என்றால் அதற்குச் சந்தர்ப்பம் இல்லை. அதனால் இந்த விவாதத்திற்கு அவசியம் இருக்கிறது. இந்தப் பிரச்னை குறித்து சபையின் கருத்துக்களை அறிய முடியும். இங்கிருந்து அமைச்சர் முடிவைத் தூக்கிச் செல்லுகிற நேரத்தில் மத்திய அரசின் கருத்துக்கு மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தாலும் அதை அமைச்சர் அவையின் கருத்தாகவோ அல்லது முதல் அமைச்சரின் கருத்தாகவோ இல்லாமல் அது சபையின் கருத்தாகப் போகும். அதையே சபையின் கருத்தாக எடுத்துச் சொல்ல உதவியாக இருக்கும். எங்கள் பேரில் சொல்லித் தப்பித்துக் கொள்ள உதவியாகவும் இருக்கும். ஆகையால் அரசாங்கத்தின் முடிவைப் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கேள்வி கொடுத்திருந்தால் இந்த செஷனுக்குள் அதற்குப் பதில் கொடுக்க சர்க்கார் தயாராக இருக்கிறது. அந்தக் கேள்வி முடிந்த பிறகு மேற்கொண்டு விவாதம் செய்ய அவசியம் இருக்கிறது என்று கனம் சபாநாயகர் கருதினால், அவர்கள் அதற்கு நேரம் ஒதுக்கினாலும் சர்க்கார் மறுக்காது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**MR. DEPUTY SPEAKER:** I think the hon. Member is not pressing his amendment.

[17th July 1964

SRI M. KALYANASUNDARAM : I am sorry the Hon. officiating Leader of the House is not conciliatory and he is firm in his stand. I press my amendment.
வோட்டு எடுத்துத் தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தத்தை உண்டாக்க வேண்டுமென்று நான் விரும்பவில்லை. மீண்டும் பிஸினஸ் அட்வைஸரி கமிட்டியாவது சந்தித்து முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The procedure under rule 197 of the Madras Assembly Rules is : As soon as may be after the report has been made to the House, a motion may be moved by a member of the Committee designated by the Speaker 'that this House agrees with the allocation of time proposed by the Business Advisory Committee in regard to such and such Bill or Bills ' or some other item. Such a motion has not been moved. It is not proper to move an amendment in the absence of such a motion and hence, the amendment is not in order.

## IV.—PRESENTATION OF REPORTS.

### (1) REPORT OF THE COMMITTEE ON ESTIMATES.

SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Deputy Speaker, Sir, I rise to present the Second and Third Reports of the Committee on Estimates on ' Police ' and ' Madras Dairy and Milk Project ' respectively.

### (2) REPORTS OF THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

SRI V. R. NEDUNCHEZHIYAN : Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Madras for the year 1961-62 and the Audit Report, 1963.

I also present the Report of the Committee on the Audit Report on the Accounts of the Madras State Electricity Board for the year 1957-58.

## V.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS PREVENTION OF BEGGING (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 4 OF 1964).

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I rise to present the Report of the Joint Select Committee on the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964).

### (2) THE MADRAS (TRANSFERRED TERRITORY) RYOTWARI SETTLEMENT BILL, 1964 (L.A. BILL NO. 13 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to submit the Report of the Select Committee on the Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964).



17th July 1964]

### (3) THE KANYAKUMARI SREEPANDARAVAKA LANDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1964 (L.A. BILL NO. 14 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I beg to submit the Report of the Select Committee on the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964 (L.A. Bill No. 14 of 1964).

### (4) THE MADRAS (TRANSFERRED TERRITORY) THIRUPPUVARAM PAYMENT ABOLITION BILL, 1964 (L.A. BILL NO. 15 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to present the Report of the Select Committee on the Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 15 of 1964.)

### (5) THE MADRAS MINOR INAMS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 16 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg to present the Report of the Select Committee on the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 16 of 1964).

### (6) THE MADRAS MATERNITY BENEFIT (REPEAL) BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I beg for leave to introduce the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964.

MR. DEPUTY SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Maternity Benefit (Repeal) Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. DEPUTY SPEAKER : The Bill is introduced.

## VI.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—PRESENTATION.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டின் முதல் துணை மதிப்பீடுகளைச் சபை முன்பு நான் இப்போது சமர்ப்பிக்கின்றேன். பல்வேறு மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை சபையின் முன் வைக்கப்பட்டுள்ளது. துணை மானியக் கோரிக்கைகளின் மொத்த மதிப்பு சுமார் 2 கோடியே 82 லட்சம் ரூபாய் ஆகும். இதில் சுமார் 1 கோடியே 47 லட்சம் ரூபாய் ரெவின்யூ கணக்கிலும்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th July 1964.

சுமார் 1 கோடியே 35 லட்சம் ரூபாய் மூலதன, கடன் கணக்கு
களிலும் அடங்கும். தற்போது சபைமுன்னர் உள்ள துணை
மதிப்பீடுகளில் பெரும்பாலானவை நடப்பு ஆண்டில் அனுமதி
அளிக்கப்பட்ட "புதுப் பணித்" திட்டங்களைப் பற்றியனவாகும்.
முன்பு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் பெற்றதைவிட
அதிகம் செலவாகக் கூடுமெனத் தென்படும் சில மானியங்களின்கீழ்,
அதிகப்படியான நிதி ஒதுக்கம் பெறவும் இவ் வாய்ப்பை பயன்
படுத்திக் கொண்டுள்ளோம்.

நமது பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிக்கவும், தற்
போதைய விலைவாசி நிலையில் அபிவிருத்தி காணவும் உற்பத்தியைப்
பெருக்க வேண்டியதன் அவசியத்தையும் சபையினர் நன்கு அறி
வார்கள். விவசாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் வேகம்
அதிகரிக்கப்பட்டு, நிதி அளவிலும், செயல் அளவிலும் விரிவான
ஒரு திட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. நெல்
உற்பத்தி தீவிர சாகுபடித் (Intensive cultivation) திட்
டத்தை செங்கற்பட்டு, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்
களில் கூடுதலான பகுதிகளிலும், புன்செய்த் தானியங்களைப் பற்றிய
தீவிர சாகுபடித் திட்டத்தை இராமநாதபுரம், திருநெல்வேலி
மாவட்டங்களில் பாசன வசதி பெற்ற பகுதிகளிலும் இவ்வாண்டு
செயல்படுத்த அனுமதியளித்துள்ளோம். துணை மதிப்பீடுகளில்
9.25 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ள இத்
திட்டத்தின்மூலம் ஏறக்குறைய 35,000 டன் உணவு உற்பத்தித்
திறன் உருவாக்கப்படும். விவசாயத் துறையிலும், அதையொட்டிய
மீன்வளம், பால்பண்ணை போன்ற துறைகளிலும், உற்பத்தியைப்
பெருக்க ஒரு "விரைவுத் திட்டத்தை" (Crash programme)
உருவாக்கி ஊக்கமுடன் செயல்படுத்த வேண்டுமென இந்திய
அரசாங்கத்தார் அண்மையில் அறிவித்துள்ளனர். இவ்வாண்டு
திட்டச் செலவுக்காக முன்னமே ஒப்புக்கொள்ளப்பட்ட நிதி உத
விக்கும் மேலாகவே, இந்த விரைவு விவசாயத் திட்டத்துக்கு நிதி
உதவி அளிக்க மத்திய அரசாங்கம் முன் வந்துள்ளது. இதற்
கேற்ப, குறைந்த காலத்தில் விரைந்து விவசாய உற்பத்தியைப்
பெருக்கும் விரிவான திட்டமொன்றைத் தயாரித்து வருகிறோம்.
தக்க சமயத்தில் இத் திட்டத்திற்காகச் சபையின் அனுமதி
கோரப்படும்.

நடுத்தர, சிறிய பாசனத் திட்டங்களைச் சீக்கிரத்தில் நிறை
வேற்றி முடிப்பது, குறிப்பிடத்தக்க அளவில் விவசாய உற்பத்தி
யைப் பெருக்குவதற்கு உதவி புரியும். எனவே, தென் ஆர்க்காட்டி
லுள்ள கோமுகி நதித் திட்டம், கன்னியாகுமரியிலுள்ள சிற்றாறு-
பட்டினங்கால் திட்டம் போன்ற நடுத்தரப் பாசனத் திட்டங்களை
நிறைவேற்றும் வேகத்தை அதிகரித்துள்ளோம். இதற்காக இந்தத்
துணை மதிப்பீடுகளில் 50 லட்சம் ரூபாய் கூடுதல் நிதி ஒதுக்
கத்திற்கு வழி செய்துள்ளோம். நமது ராஜ்யத்தின் பல்வேறு
பகுதிகளுக்குப் பயன்தரும் பல சிறிய பாசனத் திட்டங்
களுக்கும் அனுமதி அளித்துள்ளோம். மானியக் கோரிக்கை



17th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

நாற்பத்தியொன்றின்கீழ் உள்ள குறிப்புகளில் இத் திட்டங்களைப்
பற்றிக்கொடுத்துள்ள விவரங்களைக் கனம் அங்கத்தினர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருவதற்காக இவை போன்ற
பல்வேறு திட்டங்களில் முழுக் கவனத்தையும் செலுத்தி வரு
வதோடு, உணவுத் தானிய வியாபாரிகளின் மீதுள்ள கட்டுப்பாடு
களை நல்லவண்ணம் செயல்படுத்துவதற்காக ஒரு நிர்வாக அமைப்
பையும் உருவாக்கி வருகிறோம். உணவுத் தானிய வியாபாரிகளிட
மிருந்து கணக்கு விவரங்கள் வருவதைக் கவனிக்கவும், லைசன்ஸ்
விதிகளை நல்ல முறையில் அமுல் நடத்தவும், தஞ்சாவூர், திருச்சி
ராப்பள்ளி, கோயம்புத்தூர், சென்னை ஆகிய மாவட்டங்களில் தனி
யாக அலுவலர்களை நியமித்துள்ளோம். இதேபோல் மற்ற மாவட்
டங்கட்கும் இப் பணிகளுக்காகத் தனியாக அலுவலர்கள் நியமிக்
கப்படுவர். இந்தத் தனிப் பணியாளர்களுக்காகும் செலவில்
பாதியை இந்திய அரசாங்கத்தார் தர ஒப்புக் கொண்டுள்ளனர்.
இதற்காகக் கூடுதலாக நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்காக ஆகும்
செலவிற்கென 8 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் இந்தத் துணை மதிப்
பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு
புதுத் திட்டங்களுள், இரண்டு திட்டங்கள் நாட்டின் பாதுகாப்பு
முயற்சியைப் பற்றியவையாகும். சென்னையில் "உடற்கூறியல்
சம்பந்தமான இராணுவ ஆராய்ச்சி நிலையத்தை" (Defence
Institute of Physiology and Allied Sciences) அமைப்ப
தற்காக நிலம் கொடுக்க நாம் ஒப்புக்கொண்டுள்ளோம். வீட்டு
வசதி போர்டிடம் இருந்து இதற்காகப் பெற்ற நிலத்தின் விலையான
9.85 லட்சம் ரூபாய் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.
திருச்சிராப்பள்ளியில் நிறுவப்படுகின்ற சிறு ஆயுதத் தொழிற்
சாலைக்கான கட்டிட வேலைகளைச் செய்துதர நாம் ஒப்புக்கொண்
டுள்ளோம். கட்டிட வேலைகள் சம்பந்தமாகத் திட்டமிடவும்,
அவற்றை நிறைவேற்றவும் ஒரு மேற்பார்வைப் பொறியாளரின்கீழ்
விசேஷ அலுவலர்களை நியமிக்க அரசாங்கம் அனுமதி அளித்
துள்ளது. இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கட்காக சுமார்
3 லட்ச ரூபாய் நிதி ஒதுக்கம் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்
டுள்ளது. இத் தொகை இறுதியில் இந்திய அரசாங்கத்திட
மிருந்து பெறப்படும்.

திட்ட வேலைகளுக்கான செலவினங்கள் அதிகரித்து வந்து
கொண்டிருக்கும் சூழ்நிலையில், முக்கியமான வளர்ச்சித் திட்டங்
களை ஆராய்ந்து மதிப்பிட மாநிலத்தில் ஏற்ற அமைப்பு ஒன்றை
உண்டாக்கவேண்டியதைப் பற்றி அரசாங்கம் சில நாட்களாக
எண்ணி வந்துள்ளது. திட்டக் கமிஷனும், அத்தகைய மதிப்பீடு
செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வந்துள்ளது.
புள்ளிவிவர இயக்குநர் அலுவலகத்தில் சிறிய "ஆய்வுப் பகுதி"
(Evaluation Cell)) ! ஒன்றை அமைப்பதன் மூலம் இப்
பணியைத் தொடங்கியுள்ளோம். இப்பகுதி நன்கு பயிற்சி பெற்ற
புள்ளி-இயல் அலுவலர்களையும், கணக்குத்துறை ஊழியர்களையும்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th July 1964

கொண்டதாகவிருக்கும். தற்போது செயல்பட்டு வரும் திட்டங்களில் முக்கியமான தோந்தெடுக்கப்பட்ட சிலதிட்டங்களை இக்குழுவினர் ஆராய்வர். இவர்கள் சேகரித்து ஒழுங்குபடுத்தித் தரும் புள்ளிவிவரங்களின் அடிப்படையில், குறிப்பிட்ட திட்டத்துடன் தொடர்பில்லாதவரும், ரெவின்யூ போர்டு உறுப்பினர் போன்ற உயர்ந்த நிலையில் உள்ளவருமான அதிகாரி ஒருவர் அத்திட்டத்தின் எல்லா அம்சங்களையும் ஆய்வு செய்வார்.

நிதி நிலைமையில் சிரமங்களிருந்தபோதும், கடந்த ஜூன் மாதம் முதல் அரசாங்கம் தனது ஊழியர்கட்கு அகவிலைப்படியை உயர்த்தியுள்ளது. தல ஸ்தாபன ஊழியர்கட்கும், அரசாங்க உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கட்கும் அனுமதிக்கப்பட்டுள்ள இந்த உயர்வுக்கு ஆண்டுதோறும் 1.5 கோடி ரூபாய் செலவாகும். இதற்காக சட்டசபையின் ஒப்புதல் "71. பலவகை" என்ற தலைப்பின் கீழ் ஓர் அடையாள மானியம் மூலம் பெற முன்வந்துள்ளோம்.

கிழக்குப் பாகிஸ்தானத்திலிருந்து பெருமளவில் அகதிகள் நம் நாட்டிற்குள் வந்திருப்பது சபையினர் அறிந்ததே. அவர்களுக்கு மறுவாழ்வளிப்பது ஒரு தேசியப் பிரச்னை. இந்திய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 1,000 குடும்பங்களைக் குடியமர்த்தும் பொறுப்பை ஏற்க மாநில அரசாங்கம் முன்வந்துள்ளது. இந்த அகதிகளுக்கு மறுவாழ்வளிக்க ஆகும் ஆரம்பச் செலவுகளுக்காக துணை மதிப்பீடுகளில் 9 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஆகும் செலவு மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்படும். என்னுடைய உரையை முடிக்குமுன்பாக, நமது மாநிலத்தில் லஞ்சப் புகார் கண்காணிப்பு நெறியாளரகம் (Directorate of Vigilance and Anti-Corruption) அமைக்கப்பட்டிருப்பதை சபையினரது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அரசாங்க ஊழியர்கள் மீதான லஞ்சக் குற்றச் சாட்டுகளை விரைவில் நன்கு விசாரிப்பதற்காகத் தேவையான கூடுதல் பணியாளர்கட்கும் அனுமதியளித்துள்ளோம். நடப்பு ஆண்டில் இதற்காக எதிர்பார்க்கும் செலவுக்காக, துணை மதிப்பீடுகளில் 17.72 லட்ச ரூபாய்க்கு வகை செய்யப்பட்டுள்ளது.

துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மற்ற திட்டங்களைப் பற்றிக் குறிப்பாகக் கூற வேண்டியது வேறு ஒன்றுமில்லையென்று கூறி, இத் துணை மதிப்பீடுகளைச் சபை ஏற்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

## VII. DEMAND FOR GRANT FOR EXCESS EXPENDITURE IN 1959-60—PRESENTATION

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Deputy Speaker, Sir, I rise to present the Statement of Demand for Grant for excess expenditure in the year 1959-60. The actual expenditure was found to be in excess of the final sanctioned appropriation under certain



17th July 1964] [Sri R. Venkataraman]

grants. On the recommendation of the Public Accounts Committee, the approval of the Legislature has already been obtained by Madras Appropriation (No. 5) Act, 1963, for an excess expenditure of Rs. 1,80,30,300.

It is found that an excess expenditure of Rs. 3,811 over the final sanctioned appropriation under 'Demand XIII. Administration of Justice' has also to be got regularised. Demand for the grant of this excess expenditure of Rs. 3,811 is now presented to the Legislative Assembly.

I commend for the acceptance of the House, the Statement of Demand for Grant for excess expenditure in the year 1959-60.

## VIII.—GOVERNMENT MOTIONS.

### (1) ELECTION TO THE COMMITTEE ON ESTIMATES FOR 1964-65.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Deputy Speaker, Sir, I move—

*" That with reference to Rule EPC of the Madras Legislative*
*" That with reference to Rule 164 of the Madras Legislative*
*Assembly Rules, this Assembly do proceed on a date to be fied by*
*by the Hon. Speaker, to elect fourteen Members to be Members of*
*the Committee on Estimates for the year 1964-65 ".*

கனம் உதவி சபாநாயகர்
**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நடைபெறவேண்டு
அவர்களே, எஸ்டிமேட்ஸ் கமிட்டி தேர்தல்
மென்று அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை
நான் ஆதரிக்கிறேன். இந்த எஸ்டிமேட்ஸ் கமிட்டி நல்ல வேலை
செய்கிறது. பல அறிக்கைகள் இந்த சபைமுன்பு வைக்கப்பட்டிருக்
கின்றன. இன்றுகூட போலீஸைப் பற்றியும், பால் பண்ணையைப்
பற்றியும் இரண்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.
நான் இந்த சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது என்ன
வென்றால், இந்த அறிக்கைகள் எல்லாவற்றையும் இங்கே விவா
திக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. ஆனால் சில குறிப்பிட்ட
அறிக்கைகளையாவது இங்கே விவாதிப்பதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டும். பால் பண்ணை சம்பந்தமான அறிக்கையை விவாதத்
திற்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது ஒன்று.

எஸ்டிமேட்ஸ் கமிட்டி வேலை செய்யும் முறை
இரண்டாவதாக, சொல்ல விரும்புகிறேன்.
யைப்பற்றி நான் சில வார்த்தைகள்
அதன் எண்ணிக்கை 14 என்று இருப்பதை விஸ்தரிக்க வேண்டுமா
என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்தின் அனுமதி பெற்றபிறகு
சட்டசபை விதிகளை மாற்றலாம். இருபது வரைக்கும் அந்த எண்
ணிக்கையை உயர்த்தலாமா என்பதை சர்க்கார் ஆலோசிக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியிருந்தால்தான்
எஸ்டிமேட்ஸ் கமிட்டியானது ஒருசில இலாக்காக்களை மட்டுமாவது
எடுத்துக்கொண்டு விரிவாக ஆராயமுடியும். இப்பொழுது ஐந்
தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சட்ட
சபையின் பதவிக்காலமும் ஐந்தாண்டுகளாக இருக்கிறது. இந்த

[திரு. மீ. கலியாணசுந்தரம்] 17th July 1964

ஐந்தாண்டு காலத்திற்குள் முக்கியமான இலாக்காக்களைப் பரிசீலிப்பதற்காகவாவது எஸ்டிமேட்ஸ் கமிட்டிக்கு வாய்ப்பு இருக்க வேண்டும். இந்த கமிட்டி பூராவுமே உட்கார்ந்துகொண்டு ஒரு இலாகாவைப் பரிசீலனை செய்வதிலே காலதாமதம் ஏற்படுகிறது. கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்வதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் சுற்றுப் பிரயாணம் செய்வதினால் அதிகமான ப்ரயோசனம் ஏற்பட்டுவிடாது. திட்டங்களைப் பற்றி நேரடியாகத் தெரிந்து கொள்வதற்கு ஓரளவு சுற்றுப்பிரயாணம் தேவை. ஆனால் சில உப குழுக்களை நியமித்தால் உட்கார்ந்துகொண்டே ஒவ்வொரு இலாகாவையும் விரிவாகப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பித்தால், அந்த அறிக்கை சிறப்பு உடையதாக இருக்கும். சில அறிக்கைகளைப் பார்க்கும்பொழுது, மேலெழுந்தவாரியாக இருப்பதாகத் தோன்றுகிறது. இன்னும் ஆழமாகப் பரிசீலனை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் சம்பந்தப்பட்ட நிர்வாகத்திற்கும், சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் இந்த சபை அளிக்கக்கூடிய பெரிய உதவியாக அது அமையும். ஆகவே, உப குழுக்களை அமைக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. எண்ணிக்கையையும் விரிவாக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The question is—

"That with reference to Rule 164 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. Speaker, to elect fourteen Members to be Members of the Committee Estimates for the year 1964–65".

The motion was put and carried.

MR. DEPUTY SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 11 a.m. Monday the 20th July 1964 as the time within which the nomination papers of candidates for election to the Committee on Estimates should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on 20th July 1964. I also fix 3 p.m. on 21st July 1964 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, viz., 14, a poll will be taken on Wednesday, the 22nd July 1964 between the hours of 9 a.m. and 1 p.m.

(2) ELECTION TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS FOR 1964–65.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, I move—

'That with reference to Rule 173 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. Speaker to elect fourteen Members to be Members of the Committee on Public Accounts for the year 1964-65'.



17th July 1964]

MR. DEPUTY SPEAKER : The question is—

"That with reference to Rule 173 of the Madras Legislative Assembly Rules, this Assembly do proceed on a date to be fixed by the Hon. Speaker, to elect fourteen Members to be Members of the Committee on Public Accounts for the year 1964–65."

The motion was put and carried.

MR. DEPUTY SPEAKER : In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote I fix 11 a.m. Monday the 20th July 1964 as the time within which the nomination papers of candidates for election to the Committee on Public Accounts should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

The nomination papers will be taken up for scrutiny at 1 p.m. on 20th July 1964. I also fix 3 p.m. on 21st July 1964 as the last hour and date for the withdrawal of candidature.

If the number of candidates nominated exceeds the number of seats to be filled, viz., 14, a poll will be taken on Wednesday, the 22nd July. 1964 between the hours of 9 a.m. and 1 p.m.

## IX.—DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1964-65.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இச்சபை முன்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டுக்கான ஆண்டு நிதிநிலை அறிக்கையையும், 1963-64-ஆம் ஆண்டுக்கான உப நிதிநிலை அறிக்கையையும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு பிரேரேபிக்கிறேன்.

இந்த அறிக்கை அச்சிட்டு கனம் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் இதற்கு முன்பே வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதனால் அதை மீண்டும் படித்து அதற்கான அவகாசத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் விரும்பவில்லை. குறிப்பிட்ட சில விஷயங்களை ( silent features ) மட்டும் சொல்லிவிட்டு விவாதத்தை தொடங்கலாமென்று நான் நினைக்கிறேன்.

சென்ற ஆண்டிலே கனம் அங்கத்தினர்கள் குறிப்பிட்ட பல் வேறு யோசனைகள் எல்லாவற்றையும் தொகுத்து, இந்த ஆண்டிலே அதன்மீது என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் இப்பொழுது மேஜைமேல் வைத்திருக்கிறோம். இந்த ஆண்டின் மின்சார போர்டின் அறிக்கையைப் பற்றி விவாதம் ஆரம்பிக்கிறபொழுது நமக்கு ஏற்பட்ட ஒரு மிக நெருக்கடியான சம்பவத்தைப்பற்றி நான் முதலிலே கூற வேண்டும். ஓரளவு நம்முடைய ராஜ்யத்தில் மின்விசை உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளைத் துரிதமாக எடுத்துக் கொண்டு வந்தாலும், பருவமழை தவறியதன் காரணமாக இந்த

ஆண்டு கோடை காலத்தில் 17, 18 நாட்கள் நாம் மின் வெட்டு செய்யும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எப்படியாவது வெட்டு இல்லாமல் சமாளிக்க வேண்டுமென்பதற்காக மின்சார போர்டார் 5, 6 மாதங்களுக்கு முன்பிருந்தே ரிசர்வாயர்களில் இருக்கும் தண்ணீரை யெல்லாம் மிகவும் சிக்கனமாக உபயோகப்படுத்தி அதை நல்ல முறையிலே மின்விசை உற்பத்திக்காகப் பயன்படுத்தி வந்தார்கள் என்றாலும் பருவ காலம் தவறி ஒரு மாதம் மழை
10-30 a.m. ஏற்படாத காரணத்தினால் நம் ராஜ்யத்தில் மின்வெட்டு ஏற்படும் நிலைமை ஏற்பட்டது. பருவ காலத்தை நம்பி, மழையை நம்பி அமைத்திருக்கிற மின்விசைத் திட்டங்களிலெல்லாம் எப்பொழுதும் இந்தவிதமான நெருக்கடி ஏற்படும் என்பது எல்லோரும் அறிந்த உண்மைதான். அதே சமயத்தில் ஹைட்ரோ எலக்ரிக் பவர் ஸ்டேஷன் குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்கிறது என்பதையும் நாம் அறிவோம். ஆகவே நம் ராஜ்யத்தில் அந்த அளவுக்கு, நீர் மின்சார உற்பத்திக் குறைவை ஈடுசெய்யும் அளவுக்கு அனல் மின்சார உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் புதிதாக சில திட்டங்களை மத்திய சர்க்காருக்குக் கொடுத்தோம். அந்தத் திட்டங்கள் இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று மிக்க மகிழ்ச்சியோடு சபை முன்னால் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எண்ணூரிலே 300 மெகா வாட் உற்பத்தி செய்யவும், தூத்துக்குடியில் 100 மெகா வாட் உற்பத்தி செய்யவும் அனல் மின்சாரத் திட்டங்களை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொண்டு அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுக்க நமக்கு உத்தரவு அளித்திருக்கிறார்கள். அதே போல அணு மின்சார உற்பத்தி செய்யும் கல்பாக்கம் திட்டத்திற்கும் பிளானிங் கமிஷனிலிருந்து பூர்வாங்க வேலைகளுக்கு அனுமதி தரப்பட்டு இருக்கிறது. Permission for advance action has been given for the 400 M.W. Atomic Power Station at Kalpakkam.

இந்த ஆண்டு நிதி நிலையைப் பார்க்கும்போது மூலதனத்திற்கு 1963-64-ல் நமக்கு வேண்டும் என்று ரூபாய் 20 கோடி 50 லட்சம் ஒதுக்கியிருந்தோம். ஆனால் 1963-64ல் நாம் செலவிட்ட தொகை 28 கோடி இரண்டு லட்சமாக உயர்ந்துவிட்டது. அதற்கு முக்கிய காரணம் 3-வது திட்டத்திலே நிறைவேற்ற வேண்டிய பல திட்டங்களை துரிதமாக நாம் நிறைவேற்றியதும் புதிதாக சில திட்டங்களை ஏற்றுக்கொண்டதும்தான். சர்க்காரிலிருந்து நமக்கு 1963-64-க்கு கடனாக ரூபாய் 9 கோடி கொடுப்பதாக இருந்தது. நம் திட்டம் விரிவடைந்ததன் காரணமாக சர்க்காரிலிருந்து ரூபாய் 17 கோடி 20 லட்சம் கடனாகக் கிடைத்தது. அதன் காரணமாக திட்டத்தை விரைவாக நிறைவேற்ற வசதி ஏற்பட்டது. 1964-65-ம் ஆண்டுக்கு திட்டங்களுக்கு மூலதனச் செலவு என்ற வகையில் ரூபாய் 24 கோடி ஒதுக்கியிருக்கிறோம் அந்த மூலதனச் செலவை சரிக்கட்ட ரூபாய் 15 கோடி கடனளிக்க அரசாங்கம் முன் வந்து இருக்கிறது. வருமானக் கணக்குகளை எடுத்துப் பார்க்கும் போது மின்சார போர்டின் நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதைத்





தெரிவிக்க விரும்புகிறேன். 1963-64ம் ஆண்டில் நாம் எதிர்பார்த்த ரெவின்யூ வருமானம் ரூபாய் 22 கோடி 23 லட்சம். ஆனால் நமக்குக் கிடைத்த வருமானம் ரூபாய் 23 கோடி 29 லட்சம் ஆக 1.26 கோடி உபரியாக, நாம் எதிர்பார்த்ததை விட அதிகமாக சென்ற ஆண்டில் வருமானம் கிடைத்திருக்கிறது. அதற்கான செலவுகள் எப்படிச் செய்யப்பட்டன என்பதை அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில் விரிவாகக் காணலாம். அதன்படி இயக்கும் செலவும், பராமரிப்புச் செலவும் 12.91 கோடி. தேய்மான ரிசர்வ் நிதிக்கு 3.42 கோடி. அரசாங்கக் கடன்களுக்கு வட்டி 5.56 கோடி. இன்னும் தரவேண்டிய இதர வட்டித் தொகைகள் 71 லட்சம். இதர ரிசர்வ் நிதிக்கு 86 லட்சம். ஆக மொத்தச்செலவு 23 கோடி 49 லட்சம். 1964-65-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்படும் ரெவின்யூ 27.71 கோடி. சென்ற ஆண்டு திருத்தப்பட்ட மதிப்பீட்டில் எதிர்பார்த்த வருவாயை விட 4.22 கோடி அதிகமாக வருவாய் வரும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்கான செலவுகளும் அறிக்கையின் நான்காவது பக்கத்தில் விவரமாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இயக்கும் செலவும் பராமரிப்புச் செலவும் 15.50 கோடி. தேய்மான நிதிக்கு 3.73 கோடி. அரசாங்கக் கடன்களுக்கு வட்டி 6.77 கோடி. இதர வட்டித் தொகைகள் 84 லட்சம். இதர நிதிகளுக்கு 85 லட்சம். ஆக மொத்தம் 27.71 கோடி, 1964-65-ஆம் ஆண்டினுடைய செலவாக எதிர்பார்க்கிறோம்.

இன்றைக்கு நம்முடைய ராஜ்யத்தில் மின்விசை வினியோகத்தை எடுத்துக் கொண்டாலும் கூடுமான அளவுக்கு விவசாயத்திற்கும் போதிய அளவு கிராமங்களில் விஸ்தரிப்பதற்கும் நாம் முக்கியத்துவம் அளித்திருக்கிறோம். சென்னை ராஜ்யத்தில் படிப்படியாக விவசாயிகளுக்கு அமைத்திருந்த பல்வேறு நிபந்தனைகளையெல்லாம் அகற்றி வந்திருக்கிறோம் என்பது கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும். விவசாயத்திற்குப் போதுமான உதவி செய்ய வேண்டும் என்பதும் அதன் மூலம் உற்பத்திப் பெருக வழிவகை செய்ய வேண்டும் என்பதும் சர்க்காரின் லட்சியம். மேலும் புதிய திட்டங்கள் பல நம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு இப்பொழுதே அதைக் குறித்து பூர்வாங்க ஆலோசனைகள் செய்து வருகிறோம். நான்காவது திட்டத்தில் நம்மிடத்தில் உள்ள சிறிய சிறிய பாசனத் திட்டங்கள் எல்லாவற்றையும் பயன் படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்பட வேண்டும். அதோடு கூட நம் நெய்வேலியில் இருக்கக்கூடிய திட்டத்தை விரிவுபடுத்தி இரண்டாவது ஒரு சுரங்கம் ஆரம்பித்து தனியாக ஆயிரம் மெகாவாட் உற்பத்தி செய்யக்கூடிய திட்டத்தை உருவாக்க வேண்டும் என்று முயற்சிகள் செய்து வருகிறோம்.

டிரான்ஸ்மிஷன் லயன்கள் சம்பந்தமாகவும் நம் ராஜ்யத்தில் பெரிய முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களோடு இணைப்பது சம்பந்தமான காரியங்கள் விரைவாக நிறைவேறி வருகின்றன. இன்னும் புதிய திட்டங்களைப்பற்றிச் சொல்லும் போது ஆனைமலை, பரம்பிக்குளம் திட்டத்தைக் குறிப்பாகச்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [17th July 1964

சொல்ல வேண்டும். சற்றேறக்குறைய 185 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய திட்டம் இன்றைக்கு உருவாகிக்கொண்டு வருகிறது. அதோடு கோடையாறு திட்டத்தை விரைவில் அமைக்க ஏற்பாடு செய்துவருகிறோம். அதில் 100 மெகாவாட் மின்சக்தி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்குச் சிறந்த உதவி செய்து வருகிற பணியாளர்களுக்கும், குறிப்பாக எலக்டிரிசிடி போர்டு சேர்மேன் அவர்களுக்கும் அங்கத்தினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன். தமிழ் நாட்டினுடைய மின் போர்டு சம்பந்தமான அறிக்கையைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

*** புலவர் கா. கோவிந்தன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மாநில மின்சாரக் கழகத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் விவாதத்தைத் தொடங்கி வைக்கின்ற முகத்தான் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மின்சாரம் இல்லையென்றால் ஒரு நிமிஷ நேரமும் நம்முடைய வாழ்க்கை கழியாது என்று சொல்லும் அளவுக்கு மின்சாரம் இன்றியமையாத ஒன்றாக ஆகியிருக்கிறது. ஆனால், அந்த மின்சாரம் நமக்கு வேண்டும் போது, வேண்டிய அளவு கிடைக்கின்றதா என்று கேட்டால், அது இல்லை என்பதை அமைச்சர் அவர்களே கூறினார்கள். அமைச்சர் அவர்கள், இந்த 'இல்லை இல்லை' என்ற பாட்டை ஆண்டு தோறும் பாடிக்கொண்டே இருக்கிறாரேயொழிய, அது போதும் என்ற அளவுக்குக் கிடைத்துவிட்டது என்பதற்கான வழிவகைகளைச் செய்துவிட்டோம் என்று கூறுகின்ற ஒரு வாய்ப்பை இந்த அமைச்சர் எந்த ஆண்டு பெறுவாரோ, அது தெரியவில்லை.

சாதாரணமாக, விவசாயி தன்னுடைய கிணற்று நீரைக் கொண்டு நிலத்தை உழுவதற்கு மின்சாரத்தை நம்பியிருக்கின்ற நிலைமை இப்பொழுது ஏற்பட்டுவிட்டிருக்கிறது. 'ஒரு காலத்திலே வானம் பார்த்த பூமியாக இருந்தது, அந்த நிலை இருந்த காரணத்தால்தான் விவசாயம் பெருகவில்லை' என்ற காரணத்தைக் காட்டி, 'அவனுக்கு வேண்டுமளவு நீரைக் கொடுப்பதற்கு இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்' என்று சொல்லிவிட்டு, இப்போதும்கூட, வானத்தைப் பார்த்து நிற்கும் நிலையில் விவசாயிகளை வைத்திருக்கிறார்கள். கடந்த இரண்டு மாத காலத்தில், தன்னுடைய கிணற்றுக்கு மின்சார மோட்டார் வைத்துவிட்டு விவசாயி பட்ட பாடு இருக்கிறதே அது மிக மிக வருந்தத்தக்க பாடாகும்.

கம்ப ராமாயணத்தில்,

> "வில்லை ஊன்றிய கையொடும் வெய்துயிர்ப்போடும் கங்குல்
> எல்லை காண்பனவும் நின்றான் இமைப்பிலன் சிறிதும்
> என்றான்"

என்று ஓரிடத்தில் வருகிறது. அதுபோல், இரவிலே எந்த நேரத்தில் மின்சாரம் வருமோ, வருகின்ற அந்த மின்சாரம் எந்த நேரத்தில் ஒரு ஃபேஸில் நின்றுவிடுமோ என்று இரவெல்லாம் கண் விழித்திருந்த கொடுமையை நாம் சில ஆண்டுகளாகப் பார்த்து வருகிறோம். இந்தக் கொடுமை தீர அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டும். அதைச் சொல்லும் நேரத்தில், மின்சாரக் குழுத் தலைவரின் முகத்தை நான் பார்க்கிறேன். 'நாங்கள் என்ன செய்ய முடியும்?' என்று கேட்பது போன்ற பார்வைதான் அவருடைய முகத்திலே இருக்கிறது.



17th July 1964] [புலவர் கா. கோவிந்தன்]

**கனம் உதவி சபாநாயகர்:** கனம் அங்கத்தினர் அவர்கள், காலரியில் இருக்கிறவர்களின் முக பாவனையை எல்லாம் பார்த்து இங்கே குறிப்பிடுவது பார்லிமெண்டரி சம்பிரதாயத்திற்கு உகந்ததாகாது.

**புலவர் கா. கோவிந்தன்:**

> "நீயும் தவறிலை நின்னைப் புறங்கடைப் போதர விட்ட
> நுமரும் தவறிலர் இறையே தவறுடையான் . . ."

என்ற ஒரு தொடரைப் படித்தது நினைவுக்கு வருகிறது. மின்சாரம் இல்லாத குறைக்காக மின்சார போர்டைக் குற்றங்குறை கூற நான் தயாராக இல்லை. வேண்டிய அளவு மின்சாரத்தைச் செய்து தராத அரசாங்கத்தின் மீதுதான் நான் குறை கூற வேண்டியிருக்கிறது.

சென்ற ஆண்டு மின்சாரத்தைப் பெருக்குவதற்குப் பல வழிமுறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வழிமுறைகளைப்பற்றி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப்பற்றியெல்லாம் மின்சாரக் கழகம் நமக்கு அறிக்கை மூலம் பதில் அளித்திருக்கிறது. ஆனால், அளித்திருக்கும் அந்தப் பதிலையேதான், அதிலே என்ன கூறப்பட்டிருக்கிறதோ அதே பாட்டைத்தான் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் அறிக்கையிலும் கூறி இருக்கிறார்கள்.

அனல் மின்சாரத்தைப்பற்றிய அறிக்கையில் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர் இதைப்பற்றிச் சென்ற ஆண்டு கூறிய கருத்துக்களுக்கு அங்கே கொடுக்கப்பட்டிருக்கும் முறையைப் பார்க்க வேண்டும். இங்கே அமைச்சர் அவர்களின் இந்த அறிக்கையில் அதே வாசகம்தான் வேறு விதத்தில் காணப்படுகிறது.

"I am happy to convey to the Members that the Planning Commission and the Government of India have agreed to give clearance for advance action for the two Thermal Projects to generate 300 M.W. at Ennore and 100 M.W. at Tuticorin."

"பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குத் திட்டக் கமிஷனும் இந்திய அரசாங்கமும் அனுமதித்துள்ளனர்" என்றுதான் இருக்கிறதே தவிர, ஓராண்டுக் காலத்திலே அதற்கான செயல் முறையை இந்த அரசாங்கம் என்ன மேற்கொண்டது என்று திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் சொல்லவில்லை.

அணு மின்சாரத்தைப்பற்றிச் சொன்னார்கள். அதற்கும் அங்கே என்ன பதில் கூடப்பட்டிருக்கிறதோ அதேதான் கூறப்பட்டிருக்கிறதேயொழிய, ஓராண்டு இடைவெளியில் அதற்கான முயற்சி எந்த

[புலவர் கா. கோவிந்தன்] [17th July 1964

அளவுக்கு மேற்கொள்ளப்பட்டுவிட்டது என்பதைப்பற்றித் திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் கூற முடியவில்லை.

இந்த நிலையில் நான் இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அனல் மின்சாரம் நமக்கு எந்த அளவுக்குப் பயன் அளிக்கும், எத்தனை காலம் பயன் அளிக்கும் என்பதை இந்த அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும். நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு அனல் மின்சாரம் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அந்த நெய்வேலி நிலக்கரி எந்த ஆண்டுவரை கிடைக்குமோ எந்த அளவுக்குக் கிடைக்குமோ அந்த அளவுக்குத்தான் நெய்வேலி அனல் மின்சாரத்தை நாம் பெற முடியும். அந்த நிலக்கரிப் படிவம் வற்றிவிட்டால் அனல் மின்சாரத்திற்கான மூலப் பொருளை வேறொரு இடத்திலிருந்து தேடவேண்டியிருக்கிறது. ஆகவே, இன்றைக்கிருக்கும் நிலையில், இன்னும் 20 ஆண்டுக் காலத்திற்குத்தான் அங்கே கிடைக்கும் நிலக்கரி போதுமானதாக இருக்கும். இந்த நிலையில் அனல் மின்சாரத்தை மட்டும் நம்பி இராமல் அணு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும் என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

பல அணைக்கட்டுக்கள் இருக்கின்றன. அதிலே சில பாசனத்திற்காக இருக்கிற நீர்த் தேக்கங்களாகவும் சில மின்சார உற்பத்திக்காகவும் இருக்கும் நீர்த் தேக்கங்களாகவும் இருக்கின்றன. மேட்டூரில் மின்சாரம் உற்பத்தி செய்கின்றோம். அப்படி மின்சாரம் உற்பத்தி செய்கின்ற ஓரிடத்தில் மட்டும் கொள்ளாமல், இன்னும் வேறிடத்தில் அப்படிப்பட்ட அணையைக் கட்டி மின்சார உற்பத்திக்கு வழிவகை செய்ய முடியுமா என்று அரசாங்கம் நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை இப்பொழுது ஓரிடத்தில் மேற்கொண்டு வருகிறார்கள். அதை எல்லா நீர்த் தேக்கங்களுக்கும் கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் இங்கே கூறுகிறேன்.

அடுத்து, இப்பொழுது நமக்குத் தட்டுப்பாடு வருவதெல்லாம் ஜூன், ஜூலை ஆகிய இந்த இரண்டு திங்களில்தான். ஜூன், ஜூலை ஆகிய இரண்டு திங்களுக்கு நமக்கு எவ்வளவு தண்ணீர் தேவை, எவ்வளவு தண்ணீர் இருந்தால் இந்த ஜூன், ஜூலை திங்களில் இப்படிப்பட்ட தட்டுப்பாடு இல்லாமல் அந்த நிலையங்கள் வேலை செய்வதற்கு வழி செய்ய முடியும் என்பதை ஆராய்ந்து, அந்த நீர்த் தேக்கங்களினுடைய நீர்ப்பிடிப்பின் அளவைக் கொஞ்சம் உயர்த்தினால், இந்த இரண்டு திங்களுக்கு வேண்டிய நீரை அங்கே தேக்கி வைத்துக்கொள்ள முடியும். மேட்டூர் அணை நிறைந்துவிட்டால், மேலும் வருகிற தண்ணீர் கடலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த நீர் அப்படியே கடலோடு சேர்ந்து வீணாக்கப்படாமல் இருக்க மேட்டூர் அணைக்குமேல் இரண்டு அடி உயர்த்திவிட்டால், இரண்டு திங்களுக்கு எவ்வளவு தண்ணீர் தேவையோ, அந்த அளவுக்கு அணைக்கட்டை உயர்த்தினால்



17th July 1964] [புலவர் கா. கோவிந்தன்]

இரண்டு திங்களிலே அந்த நீர் வழி பெறும் மின்சாரம் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க வழி செய்ய முடியும். இதைத்தான் அரசாங்கம் கவனித்து வழிவகை செய்ய வேண்டும்.

அடுத்து, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஓரிடத்தில் சொல்லியிருக்கிறார்கள், அலையிலிருந்து மின்சாரம் பெறுவதற்கான வழிமுறை ஆராய்ச்சி நிலையிலே இருக்கிறது என்று. சென்ற ஆண்டு இதே மன்றத்தில் பல உறுப்பினர்கள், காற்றிலிருந்தும், அலையிலிருந்தும், சூரியனுடைய ஒளியிலிருந்தும் மின்சாரம் உற்பத்திக்கு வழி செய்யவேண்டும் என்று சொன்னார்கள். நமக்கு இயற்கையிலே கிடைக்கக்கூடிய மின்சாரங்களையெல்லாம் கண்டுபிடித்துப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சியை இப்பொழுதிருந்தே மேற்கொள்ளவேண்டும். நீர்வழி மின்சாரம் இனி இல்லை, அனல் மின்சாரம் இனி இல்லை என்ற நிலைக்குப்பிறகுதான் மற்றவற்றைப் பற்றி நினைப்போம் என்று இல்லாமல், வருமுன் காப்போனாக, இப்பொழுதிருந்தே புதிய வழிமுறைகளைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களை நான் உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் வடாற்காடு மாவட்டத்தைப்பற்றிப் பாராட்டிக் கூறியிருக்கிறார்கள். "வடாற்காடு மாவட்டத்தில் மின்சார சக்தியினால் இயங்கும் பம்ப் செட்களைக் கொண்டு இறைவைப் பாசனம் நடைபெறுவதால், அம் மாவட்டம் உணவு உற்பத்தியில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அடுத்தபடியாக நிற்கிறது" என்று அமைச்சர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாவட்டத்தில் மின்சாரம் பெறுவதில் விவசாயிகள் எவ்வளவு தொல்லைக்கு உள்ளாகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம். அந்தப் பகுதியில் பாலாறு பேஸியின் க்ளியரன்ஸ் ஸர்டிபிகேட் பெறுவதில் தொல்லை இருக்கிறது. எங்கோ ஓடும் பாலாறு. அதில் நீர் இருக்கிறதா, இல்லையா என்று தெரியாது. "பக்கத்திலே கிணறு எடுத்தால் பாலாற்றிலே ஓடும் நீர் வற்றிவிடும், ஆகவே, அந்தப் பக்கத்தில் கிணறு வெட்ட நீங்கள் மின்சாரம் கொடுக்கக் கூடாது" என்ற கட்டுப்பாட்டை வைத்துவிட்டார்கள். இந்தக் கட்டுப்பாடு எப்படி வந்தது? மின்சாரக் கழகம் அப்படிப்பட்ட ஒரு நிலையை எதிர்பார்க்காமல் கொடுத்து வந்தது. ஆனால், அங்கேயிருக்கும் வருவாய்த் துறையினர், "எங்களைக் கேட்காமல் நீங்கள் கொடுக்கக்கூடாது" என்று செல்கிறார்கள். அதனால், "நீங்கள் கலெக்டரிடமிருந்து க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட் வாங்கி வாருங்கள், நாங்கள் பிறகு தருகிறோம்" என்று மின்சாரக் கழகம் கூறிவிடுகிறது. இந்த நிலையில், தாசில்தாரிடமும் அஸிஸ்டென்ட் இன்ஜினீர், E. E. இப்படிப்பட்டவர்களிடமெல்லாம் மாறி மாறி அலையவேண்டியிருப்பதால் கால்கல் ஒடிவதோடு காசும் வீணாகிறது. இப்படிப்பட்ட இடர்ப்பாடெல்லாம் இருக்கிறது. பத்தடிக்குப் பக்கத்தில் கிணறுகள் தோண்டினாலும்கூட, ஒரு கிணற்றில் தண்ணீர் இன்னொரு கிணற்றுக்குப் போவதில்லை. அப்படியிருக்க ஆற்றுக்கு 100 அடி, 200 அடி தூரத்தில் கிணறு வெட்டினால் ஆற்றுத் தண்ணீர் கிணற்றுக்கு வந்து, ஆற்றில் தண்ணீர் குறைந்துவிடும் என்று சொல்வது

ஆச்சரியமாக இருக்கிறது. பாலாற்றில் நீர் ஓடுவது அரிது. மணல் தான் ஓடும். அந்த நீர் இங்கே வந்துவிடும் என்று காரணம் காட்டி, பாலாறு கேஸின் க்ளியரன்ஸ் சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்ற விதியை வற்புறுத்தி விவசாயியைக் கொடுமைப் படுத்தும் நிலை உண்டாகியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, மின்சார போர்டாருக்கும் வருவாய்த்துறைக்கும் போராட்டம் நடைபெறுகிறதோ என்று சந்தேகப்படும் அளவுக்கு இருக்கிறது. ரெவின்யூ துறை, "எங்கள் உத்தரவு இல்லாமல் நீங்கள் பம்ப் செட் கொடுத்துவிட்டால் உன்னைக் கோர்ட்டுக்கு இழுத்துவிடுவேன்" என்ற நிலையை உண்டாக்கிவிட்டே மின்சாரக் கழகம் நில உடமையை உறுதி செய்ய கிராம அதிகாரி சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என முன்பிருந்த முறை செல்லாது, தாசில்தார் கொடுத்தால்தான் செல்லும், ரெவின்யூ டிவிஷனல் அதிகாரி கொடுத்தால்தான் செல்லும் என்று வற்புறுத்தத் தொடங்கிவிட்டார்கள். அவர்கள் இவர்களுக்கு ஒரு இக்கட்டை வைத்தார்கள் என்பதற்காக இவர்கள் அவர்களுக்கு ஓர் இக்கட்டை ஏற்படுத்தியிருக்கிறார்கள். எப்படி இருந்தாலும் இன்றையதினம் ஒரு விவசாயி தன்னுடைய நிலம் தன்னுடையதுதான் என்பதைக் காட்டுவதற்கான ஓனர்ஷிப் சர்ட்டிபிகேட்டைப் பெறுவதற்குப் படுகிற பாடு இன்னதென்று சொல்ல முடியாது. ஒரு விவசாயி தன்னுடைய நிலத்தை இது தன்னுடையது தான் என்று காட்டுவதற்காக தன் சொந்தப் பொறுப்பில் நாற்பது, ஐம்பது ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் அந்த மாவட்டத்தில் சுற்றுப் பயணம் செய்கிறபோது இதுபற்றி அந்த விவசாயிகளிடமே நேரில் கேட்டு அவர்களுக்குள்ள சங்கடங்களை அறியலாம். ஆகவே இந்த நிலையை மாற்றுவதற்கு உடனடியாக ஏதாவது வழிவகை செய்ய வேண்டும் என்பதாக நான் தங்கள் மூலமாக அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தெரு விளக்கு பற்றி ஒரு கருத்தை இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், "அந்தக் கிராமப் பகுதிகள் மிகவும் பின் தங்கிய பகுதியைச் சேர்ந்தவை, அவற்றின் மூலம் போர்டுக்குக் குறைந்த அளவு வருவாய் வருவது கூட அரிது. இதைக் கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் கிராமங்களுக்கு மின்வசதி அளிக்கும் திட்டங்களை விசேஷ உத்தரவாதத் தொகையை எடுத்து விட்டதனால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுகட்டும் வகையில் எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்று போர்டு ஆராய்ந்து வருகிறது" என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். குறிப்பாக கிராம பகுதிகளில் பஞ்சாயத்தினுடைய நிதி நிலையை ஆராய்ந்து அங்கே இருக்கிற கோட்டாட்சித் தலைவர்கள் தெருவிளக்குகள் அமைக்க நிதி வசதி இல்லை என்று சொன்னால் இந்த வசதியை ஏற்படுத்திக் கொடுக்க மாற்று யோசனை அவசியமாகிறது. குறிப்பாக அரிஜன காலனிக்கு மின் விளக்குகள் அமைத்துக் கொடுக்க ஆகும் செலவை அரிஜன் இலாகாவில் ஒதுக்கப்பட்டுள்ள பணத்தை உபயோகப் படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. ஊராட்சித்



தலைவர்கள் தெரு விளக்குகளை அமைத்துவிட்டு அதற்கு ஆன செலவில் துண்டு விழும் தொகையை அரிஜன இலாகாவிலிருந்து பெறலாம் என்று எண்ணினார்கள். ஆனால் இப்பொழுது அரிஜன காலனிக்கு தெரு விளக்குகள் அமைப்பதற்கு ஆகும் செலவை மட்டும்தான் அந்த இலாகாவிலிருந்து பெற முடியும் என்பதாகச் சொல்கிறார்கள். காலனிக்கு இரண்டு விளக்கு இருந்தால் போதும் ஊருக்கு நான்கு விளக்கு ஆகும் என்றால் தங்கள் ஊருக்கு விளக்கு போடாமல் அரிஜன காலனிக்கு மட்டும் விளக்குப்போட யாரும் முன் வரமாட்டார்கள். நான் சாதி வேறுபாட்டைக் கண்டு சொல்லவில்லை. சாதி வேறுபாடு சட்டத்தின் மூலம் இல்லை என்று சொல்லலாம். ஆனால் நடைமுறையில் எந்த ஊராட்சி மன்றமும், மன்றத் தலைவரும் தம்முடைய ஊரின் தேவைக்கு இல்லாது காலனியின் நலனுக்காக மட்டும் விளக்குப் போட முன்வருவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகவே, அரிசனக் காலனியைச் சேர்ந்த ஊருக்கும் பற்றாக்குறை ஏற்பட்டால் நிதி உதவியை அரிசன இலாகா மூலம் அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. வை. சங்கரன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய ராஜ்யத்திலே மின்சாரத்துறையானது வெகு வேகமாக முன்னேறியுள்ளது. மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது பல மடங்கு நாம் முன்னேறி இருக்கிறோம். அதற்காக இந்த மின்சாரத்துறை இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளையும் போர்டு சேர்மேன் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். உண்மையில் ஓர் அளவுக்கு ஹைட்ரோ ஸ்கீம் எல்லாவற்றையும் நாம் நல்ல முறையில் எடுத்து நிறைவேற்றியுள்ளோம். அதன் முழுப் பலனையும் அனுபவித்துவருகிறோம். அதேபோன்று தர்மல் ஸ்டேஷன்களை ஆரம்பிப்பதற்கும் அடாமிக் பவர் ஸ்டேஷனை ஆரம்பிப்பதற்கும் திட்டமிட்டு முறையாக முன்னேறி வருகிறோம். இருப்பினும் இத்துறையில் இருக்கக்கூடிய ஒரு சில குறைகளை எடுத்துச் சொல்வது அந்தக் குறைகளை தீர்க்க வேண்டும், அந்தக் குறைகள் ஏற்படாதபடி திருத்தங்கள் செய்யப் பட வேண்டும் என்பதற்காகத்தான். குறிப்பாக இந்த வருஷத்தில் பவர் கட் 20 நாளைக்கு 100 சதவிகிதம் ஏற்படும்படியான நிலைமை இருந்ததைப் பார்க்கிறோம். போன ஆண்டே கூட நான் இந்த பவர் கட்டினால் ஏற்படும் கஷ்டங்களை நீக்க ஒரு யோசனை சொன்னேன். இப்போதும் கூட சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மின்சார உற்பத்தி ரெயினி சீசன் கெபாஸிடியைக் கொண்டு இரிகேஷன் சீசன் கெபாஸிடியைக் கொண்டு, அந்த அளவுக்குப் புதியதாகத் தோன்றுகிற வருடம் பூராவும் நடத்தப்படுகிற தொழில்களுக்கெல்லாம் கொடுத்துக் கொண்டே போகக்கூடாது. நம்முடைய Summer capacity -யை மட்டும் கணக்கெடுத்துக்கொண்டு அப்போது நாம் சப்ளை செய்கிற பவரை அளவாக வைத்து புதுத் தொழில்களுக்கு அனுமதி அளிக்கவேண்டும். நாம் ஏற்கனவே சப்ளை செய்வதற்காக

[திரு. வை. சங்கரன்] [17th July 1964

ஒத்துக்கொண்ட தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்படும் படியாக (to increase the possibility of power cut) புதிது புதிதாக தோன்றுகிற தொழில் ஸ்தாபனங்களுக்கு மின் சக்தியை அளிக்கும் நம்முடைய லயபிலிடியை விஸ்தரித்துக் கொண்டு போகக் கூடாது. ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் தடை படுகிற காலங்களில் தர்மல் ஸ்டேஷன்களின் மூலம் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துக் கொள்வதற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவேண்டும். எண்ணூரில் இரண்டு மூன்று ஆண்டுகளில்தான் தெர்மல் ஸ்டேஷன் ஏற்பட முடியும். அதுவும் இப்பொழுதில் இருந்தே போதுமான கட்டி டங்கள் கட்ட ஆரம்பித்தால் கூட இரண்டு மூன்று ஆண்டு ஆகலாம். இன்னொன்று முக்கியமான விஷயம். இந்தப் பவர் கட்டை பேஸ்டு கட்டாக வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும். non-essential load ஐ நிறுத்திக் கொள்ளுவார்கள். திடீரென்று முழுவதும் நூற்றுக்கு நூறு அமுலாக்குவதால் ஆயிரக்கணக்கானவர்கள் தொழில்களை இழந்துவிடுகிறார்கள். போன வருட அநுபவத்தில் இருந்தே நாம் இந்த வருடம் பவர்
11-00 a.m. கட் வந்தால் என்ன செய்வது என்பதற்குத் தக்க பாதுகாப்போடு இருந்திருக்க வேண்டும். மழை வந்துவிடும் என்று எதிர்பார்த்து ரிஸ்க் எடுத்துக் கொள்வதைவிட ஆரம்பத்தில் இருந்தே ஜாக்கிரதையாக phased cut போட்டு இருந்தால் இவ்வளவு பெரிய நஷ்டம் வராமல் தவிர்த்திருக்க முடியும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த யோசனையை இண்டஸ்ட்ரியலிஸ்டைக் கலந்து சொல்லுகிறார்களா அல்லது தானாகச் சொல்லுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. வை. சங்கரன்:** என்னுடைய சொந்த யோசனையாகத்தான் சொல்லுகிறேன். திடீரென்று முழுவதையும் நிறுத்திவிடாது சுமார் 1 மாதமாவது அட்வான்ஸ் நோட்டீஸ் கொடுக்கவேண்டும். இந்த யோசனையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

அடுத்தபடியாக, 'ப்ளானிங் அண்டு யூடிலிசேஷன் ஆப் பண்ட்ஸ் மேட் அவைலபிள்' என்ற விஷயத்தில் 'லாக் ஆப் பிளானிங்' இருக்கிறது. கன்ஸ்ட்ரக்ஷன் ஒர்க்ஸ் எக்ஸ்டென்ஷன்' ஜனவரியில் நிறுத்தப்பட்டது. பல கண்டிராக்டர்களுக்கு நிறைவேற்றப் பட்ட வேலைகளுக்குப் பேமெண்ட் செய்யப்படாமல் பல மாதங்களாகத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். பல வருஷங்களுக்கு வேண்டிய சாமான்களைப் பர்சேஸ் பண்ணி ஸ்டாக் செய்யப்பட்டதால் எக்சிக்யூஷன் ஆப் ஒரக்சுக்குப் போதிய பணம் இல்லை. பர்சேஸ் ஆப் ஸ்டாக்குக்கு ஏராளமான பணம் கன்ஸூம் செய்யப்பட்டுவிட்டது. எவ்வளவு ஸ்டாக் வைத்துக் கொள்ளவேண்டும், எக்சிகியூஷனுக்கு எவ்வளவு பணம் ஒதுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் முன்னாலேயே திட்டமிட்டுச் செய்யவேண்டும். ஒரேயடியாக சாமான்களை வாங்கிப் போட்டு



17th July 1964] [திரு. வை. சங்கரன்]

விட்டாலும் சாமான்கள் நாளடைவில் கெட்டுப் போகும் நிலை
ஏற்பட்டுவிடும். இதைக் கருதித்தான் ஒரு ஸ்டோர்ஸ் பர்சேஸ்
கமிட்டி இருந்தால் நன்றாக இருக்கும் என்று முன்பே தெரிவித்
தேன். ஆகவே, வரக்கூடிய ஆண்டில் அதிக நிதி ஒதுக்குவதோடு
கூட, எக்சிக்யூஷனுக்கு இவ்வளவு சாமான்கள் வாங்குவதற்கு இவ்
வளவு என்று பிளான் பண்ணி செலவிட வேண்டும். ஒரேயடியாக
எல்லாவற்றையும் காபிடல் கூட்சை வாங்கி விடக்கூடாது என்று
சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மெம்பர்ஸ் ஆப் தி போர்டுக்குப் பவர்ஸ் டிபைன் பண்ண
வேண்மென்று முன்பே சொன்னேன். அது கன்சிடரேஷனில்
இருப்பதாக பதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது அஷ்யூரன்
சாக இருக்கிறது. 'பவர்ஸ் ஆப் தி சேர்மன்' என்ன என்று
சொல்லப்படவில்லை. 'ஃபுல் டைம் அக்கவுண்ட்ஸ் மெம்பர்'
போர்டில் இருக்கிறார். அவர்களுக்கு என்ன பவர்ஸ் என்ன
டியூட்டிஸ் என்று சொல்லப்படவில்லை. சேர்மனுடைய பவர்ஸ்
டிபைன் செய்யப்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

'அட்மினிஸ்ட்ரேட்டிவ் மெம்பர்' என்று தனியாக ஸ்டாச்சுட்ரி
ரூலில் ஒரு புரொவிஷன் இருக்கிறது. இப்போது யார் அட்
மினிஸ்ட்ரேஷன் மெம்பர் என்று தெரியவில்லை. யார் அட்மினிட்
ரேஷன் மெம்பர் என்று போடப்படவேண்டும். பவர்ஸையும்
டிபைன் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புரொமோஷன், பனிஷ்மெண்ட் போன்ற
வற்றுக்கு அப்பீல் செய்யவேண்டுமென்றால் ஒரு அப்பலெட்
அத்தாரிட்டி இருக்க வேண்டும். இப்போது போர்டுதான்
அப்பாயிண்ட் செய்யவேண்டியிருக்கிறது. அவர்களே அப்பலெட்
அத்தாரிடி என்று சொல்லும்போது சரியான நியாயம் கிடைக்கும்
என்று சொல்ல முடியாது. அப்பீலுக்கு எவ்வாறு Local Board-
களுக்கு கவர்ண்மென்டோ, அம்மாதிரி புரொவிஷன் இல்லை
யென்றால் சரியாக இருக்காது.

ஒயர்மென் காண்டிராக்டர்கள் லைசென்ஸ் ரென்யூவலுக்குப்
போனால் எலக்ட்ரிக் இன்ஸ்பெக்டர்கள் பல மாதங்கள் கால
தாமதப்படுத்தி விடுகிறார்கள். அதன் காரணமாக ஐந்தாறு
மாதங்களுக்கு அவர்கள் எந்த வேலை செய்தாலும் கனெக்ஷன்
கொடுக்க முடியாத நிலை இருக்கிறது என்று முன்பு எடுத்துச்
சொன்னேன். இப்போது அஷ்யூரென்சுக்குக் கொடுத்த பதிலிலே
அதைப்பற்றித் தனியாக இன்ஸ்பெக்டருக்கு விண்ணப்பித்துக்
கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்ஸ்பெக்டர்
சரியாக நடக்காததன் காரணமாகத்தான் காலதாமதமே ஏற்படு
கிறது. மறுபடியும் அவர்களிடமே விண்ணப்பித்துக் கொள்ள
வேண்டுமென்றால் அது பொருத்தமாக இருக்காது என்று
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பம்பு செட்டுகளுக்கு 250 வாட்ஸ் மின்சாரம் சரியாக வாராத
காரணத்தால் பம்பு செட்டுகள் எரிந்து போகும்படியான நிலை
ஏற்படுகிறது. அதையும் நல்ல முறையில் கவனிக்கவேண்டு

[திரு. வை. சங்கரன்] [17th July 1964

மென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பீலை எடுத்துக் கொண்டால் 'லேபர் லாஸ்' படி ஐநூறு ரூபாய்க்குக்கீழ் உள்ளவர்கள் அப்பீல் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஐநூறு ரூபாய்க்கு மேல் உள்ளவர்கள் அப்பீல் செய்து கொள்ளமுடியாத நிலை இருக்கிறது.

இன்ஷூரன்ஸ் சம்பந்தமாக எடுத்துக்கொண்டால் லைவ் லைனில் வேலை செய்பவர்களுக்கு மாத்திரந்தான் இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கிறது. மற்றவர்களுக்கு ஒர்க்மென்ஸ் காம்பன்சேஷன் ஆக்ட்-படி காம்பன்சேஷன் பெறலாம் என்று இருக்கிறது. கைவிரல் போனால் 15 ரூபாய், கால் போனால் 50 ரூபாய் என்ற அளவில்தான் காம்பன்சேஷன் இருக்கிறது. லைனாக இருந்தாலும், இயந்திரமாக இருந்தாலும் இந்தத் துறை அதிக ரிஸ்கி ஜாப் ஆக இருப்பதால் எல்லோருக்கும் நல்ல முறையில் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். 'எனர்ஜி லாஸ் டிரான்ஸ்மிஷன் டிஸ்ட்ரிப்யூஷனுக்கு 17 சதவிகிதம் என்று போடப்பட்டிருக்கிறது. மற்ற ராஜ்யங்களோடு கம்பேர் செய்து இதைக் குறைக்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்தால் இந்தத் துறை இன்னும் நல்ல முறையில் முன்னேற்றம் அடையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. ர. நல்லசிவம்: மதிப்புக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் மின்சாரம் என்று சொல்லும்போது அது விவசாயத்திற்கும் தொழிலுக்கும் ஒரு உயிர்நாடியான அம்சமாக வந்துவிட்டது. இன்றைக்கு வேகமாக முன்னேறி இருக்கும் விஞ்ஞான யுகத்தில் மின்சாரந்தான் விவசாயம், தொழில் இரண்டுக்கும் முதுகெலும்பு என்று சொல்லும் அளவுக்கு வளர்ந்திருக்கிறது. மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் மிக ஜாக்கிரதையாகச் செயலாற்றவிட்டால் உணவு உற்பத்தியிலோ, தொழில் அபிவிருத்தியிலோ முன்னேற்றம் எதுவும் காண முடியாது. இதைச் சர்க்கார் அடிப்படையாகக் கருத்தில் கொண்டிருக்கிறது என்று நம்புகிறேன். ஒரு விஷயத்தை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குத் தலைவர்கள் அவர்கள் மூலமாகக் கொண்டு வர விரும்புகிறேன்.

நீர்ப்பாசன அணைகளாக இருந்தாலும் சரி, மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சார அணைத் திட்டங்களாக இருந்தாலும் சரி, கடந்த வருஷம் தண்ணீர் பற்றாத காரணத்தால் மின்சாரத்தைப் போதுமான அளவுக்கு உற்பத்தி செய்ய முடியவில்லை. இதன் காரணமாக விவசாயம், தொழில் இரண்டும் அப்படியே நின்றுவிட்டன. இதற்குக் காரணம், இந்த மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் அணைப்பகுதிகளிலே பெருவாரியான மரங்கள் வெட்டப்பட்டிருக்கின்றன என்ற தகவலை முன்பே சொன்னேன். நீர்ப்பாசன அமைச்சர் அவர்களும், ரெவின்யூ அமைச்சர் அவர்களும் இதிலே அதிகக் கவனம் செலுத்தி அணைக்கட்டுப் பகுதிகளிலே மரங்கள் வெட்டப்படாமல் இருப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த அணை



17th July 1964] [திரு. க. ர. நல்லசிவம்]

பகுதிகளில் எல்லாம் மழை இல்லை என்பதைச் சமீபத்தில் பத்திரிகைகளில் பார்த்தோம். அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தை ஆழமாக மனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த வருஷம் மின்சார வெட்டு ஏற்பட்டதன் காரணமாகத் தொழிலாளிகளும் விவசாயிகளும் மிகுந்த தொல்லைக்குள்ளாயினர். இந்த நிலைமைக்குச் சர்க்கார் மீது அதிகப்படியாகக் குற்றம் சொல்லாவிட்டாலும் கூட, அனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்தி இந்த நிலைமைகளைத் தவிர்க்க முன்வரவேண்டும். குறிப்பாக விவசாயிகள் இரண்டு தண்ணீர், மூன்று தண்ணீர் பாய்ச்ச முடியாமல் ஒரு தண்ணீர் மட்டுமே பாய்ச்ச முடிந்த காரணத்தால் நிலங்கள் எல்லாம் காய்ந்து விடுகின்ற நிலைமையைப் பார்த்தோம். ஆகவே, இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் சினிமாக் கொட்டகைகள் மற்றும் ஆடம்பரங்களுக்குச் செலவாகும் மின்சாரத்தை முழுமையாக வெட்டி இதனை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும். வீடுகளில் கூட சிம்னி விளக்கை வைத்துக்கொண்டு அவர்களுக்கெல்லாம் அடியோடு மின்சாரத்தை வெட்டிவிட்டால் கூடப் பரவாயில்லை. விவசாயிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் முதல் இடம் கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும்.

அடுத்தபடியாக, அனல் மின்சார உற்பத்தி சம்பந்தமாக சர்க்கார் அதிகப்படியான அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இப்போது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தொழில் துறை சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் ஒன்றில் சர்க்கார் முடியுமானால் உடனடியாக நிறைவேற்றி கொடுக்கவேண்டும், அல்லது தனியார் துறையிலேயே அவர்கள் ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவி செய்து கொடுக்க வேண்டும். மத்திய சர்க்கார் இதற்கு ஏதோ அனுமதி கொடுக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இதன் காரணமாக என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டன என்பதை சமீபத்தில் மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களில் தொழிலாளர்கள் எந்த நிலைமைக்கு உள்ளானார்கள் என்பதைக் காண முடிந்தது. ஒன்று சர்க்காரே அனல் மின்சார நிலையத்தை அமைக்கவேண்டும், அல்லது சர்க்காரால் உடனடியாக முடியாவிட்டால் மத்திய அரசாங்கமோ அல்லது மாநில அரசாங்கமோ, தனியார் துறையில் அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்த முற்படுவார்களானால் அவர்களுக்குத் தக்க உதவி செய்து கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

மேலும் தற்போதுள்ள கட்டண விகிதமானது, விவசாயத்தைப் பொறுத்தவரையில் மிக பளுவாக இருக்கிறது. இந்த நிலையில் கூட, தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, இப்போது இருக்கின்ற கட்டணம் இன்னும் உயருமோ என்ற பயம் ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் ஆரம்பத்தில் இதைப்பற்றி குறிப்பிடுகின்ற நேரத்தில் இப்போதுள்ள நிலைமையில் நியாயமான அளவுக்கு வருமானம் வரவில்லை என்றும், லாபகரமான முறையில் இல்லை என்றும்

குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதைப் பார்த்தால் இப்போது இருக்கின்ற கட்டணத்தை இன்னும் உயர்த்திவிடுவார்களோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. இன்னும் கட்டணத்தை உயர்த்தினால் நிச்சயமாக விவசாயம் படுத்துப் போகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது எட்டு நயாபைசா என்று போடப்பட்டிருக்கிறது. இதை குறைத்தால் தான் விவசாயத்தை இப்போது இருப்பதைக் காட்டிலும் நல்ல முறையில் உற்பத்தியைக் காணமுடியும். மத்திய சர்க்கார் இதைப் பற்றி தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருப்பதாகப் பத்திரிகை மூலம் தெரிந்தது. விவசாயத்திற்கு அதிகமாக கட்டணத்தைப் போடக் கூடாது என்பதை மத்திய சர்க்காரும் உணர்ந்திருக்கிறது. (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் 9 பைசா போடலாம் என்று சொல்லுகிறார்கள்.) அவ்விதம் மத்திய சர்க்கார் சொன்னாலும் கூட நம்முடைய மாநில அரசாங்கம் இங்குள்ள கஷ்டங்களை எல்லாம் நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து அவைகளை போக்குவதற்கும், குறைவான கட்டணத்தைக் கொண்டு வருவதற்கும் முயற்சி எடுக்கவேண்டும். விவசாயத்தில் என்னென்ன கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதை நாம் நேரிடையாக பார்க்கின்றோம். ஆகவே தான் இதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. டீஸல் இன்சின் உபயோகித்துக்கொண்டிருந்த காலத்தில் சர்க்கார், விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் கட்டணத்தைக் கூட்டுவதில்லை என்று ஒரு வாக்குறுதியைக் கொடுத்தார்கள். பின்னால் மின்சார மோட்டார்களை ஏற்படுத்திய பின்னால் பார்க்கும்போது, டீசல் இன்சினுக்கு எந்த அளவு செலவானதோ அதற்கும் மேலாகவே மின்சார மோட்டார்களுக்கும் செலவாகிறது. விலைவாசி உயர்ந்துகொண்டு போகின்ற நேரத்தில் பயங்கரமான அளவில் நிலைமை உருவாகிக்கொண்டு வருகின்றது. ஆகவே சர்க்கார் தனியாக இதற்கென்று ஒரு நிதியை ஒதுக்கியாவது, வட்டி வாங்கியாவது, ஏதாவது உதவி செய்து கொடுத்தால் உணவு உற்பத்தியை பெருக்குவதற்கு சாதகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, புஞ்சைப் பாசனத் திட்டங்களை போடும் போது, சில குறிப்புகளை நாம் கவனித்துக்கொள்ளவேண்டும். எப்போதும் இதற்கும் தண்ணீர் கிடைப்பதில்லை. கிணறுகளிலிருந்து மின்சாரம் மூலமாகத்தான் தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகிறது. தண்ணீர் வருகின்ற காலத்தில்தான் இந்தப் புஞ்சை பயிர்களைச் செய்யமுடிகிறது. அப்படியில்லாமல் மின்சாரம் மூலம் போதிய அளவு தண்ணீர் கிடைப்பதாக இருந்தால் மிக வசதியாக இருக்கும். இதற்கு அரசாங்கம் வேகமாக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். இதன் மூலமாக விவசாயிகளும் நல்ல பயனை அடைவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திற்கு மின்சாரத் துறையினரைப் பொறுத்த அளவில் யாரும் வருவதில்லை. பல் வேறு பகுதிகளில் வருகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும் கூட,





ஒருசில இடங்களில் மின்சாரத் துறையைப்பற்றி எந்த விதமான தகவலும் அறிந்துக்கொள்ள முடிவதில்லை. ஆகவே நான் கேட்டுக் கொள்வது அரசாங்கத்திற்கு சிறிது நஷ்டம் இருந்தாலும் கூட, ஜில்லா மட்டத்தில் இருந்த மின்சாரக் குழுவை முன்னால் இருந்தது போல் ஏற்படுத்தியாகவேண்டும். இன்றைக்கு பல வேலைகள் நடைபெறாமல் இருக்கின்றன. இவைகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்க வழிசெய்யவேண்டும். ஒன்று, எல்லா மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்கும் மின்சாரத்துறை அதிகாரிகள் வரவேண்டும், அல்லது ஜில்லா மட்டத்தில் முன் இருந்தது போல் ஒரு மின்சாரக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, லைசென்ஸ்தாரர்கள், கம்பெனிகாரர்கள் மேற்கொண்டிருக்கின்ற இடங்களில் எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்படுவதில்லை. இவர்களுடைய நிர்வாகத்தை எல்லாம் சர்க்காரே மேற்கொள்ளவேண்டும் என்பது நீண்ட நாள் இருந்து வருகிற கோரிக்கை. ஆகவே இவர்களை வேகமாக அகற்றிவிட்டு, சர்க்காரே அதை எடுத்துக்கொள்வது நல்லது.

கடைசியாக, நீர்ப்பாசனத் திட்டத்தையும் இணைத்து மின்சாரத் திட்டத்தைப் போடும்போது, இரண்டு காரியங்களையும் பார்த்து காரியங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனியான முறையில் இரண்டு திட்டத்தையும் வைத்துக்கொள்ளவேண்டும். அப்போது தான் இதில் ஏற்படுகின்ற சங்கடங்களைத் தீர்க்க முடியும். அதோடு முக்கியமாக விவசாயத் துறைக்கு இருக்கின்ற கட்டணம் அதிகமாக இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. டி. கார்ச்சா கவுடர்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். குறிப்பாக நமது மாநிலம் மின்சாரத்துறையில், கிராமங்களுக்கு மின்விசை அளிப்பதிலும், விவசாயத்திற்கு மின்சாரத்தைக் கொடுப்பதிலும் மிகவும் போற்றத்தக்க வகையில் முன்னேறியிருக்கிறது. நம்முடைய அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் மின்சாரத் துறையில் முதலீடு செய்திருக்கும் பணத்திற்கு வருமானம் வருவதும் நமது மாநிலத்தில் 4.7 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. இவ்விதமான முன்னேற்றங்களுக்கெல்லாம் காரணமாய் இருக்கின்ற நமது அமைச்சர் அவர்களையும், மின்சார போர்ட் சேர்மன் அவர்களையும், பிரதம என்சினியர் அவர்களையும் இந்த சமயத்தில் பாராட்டிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக நீர்நிலை மின்சாரத் திட்டங்களை எடுத்துக்கொண்டால், பெரும்பாலும் எனது தொகுதியில், ஊட்டியில்தான் இருக்கிறது. அந்த இடத்தில் வருடா வருடம் தக்க நேரத்தில் மழை பெய்யாததின் காரணமாக அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுவதையும், அதன் காரணமாக பயங்கரமான நிலைமை ஏற்படுவதையும் சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டிலும் பார்த்தோம். மழை ஏன் பெய்ய

இல்லை என்பதை யாரும் சரியாகக் காரணம் காட்டுவதில்லை. எனக்கு முன்பு பேசிய கனம் நல்லசிவம் அவர்கள் நீர்நிலைகளில் தண்ணீர் பெருக வேண்டுமென்றால் மழை வேண்டும், அதற்காக நீர் நிலைகளில் நிற்கின்ற மரங்களை வெட்டக்கூடாது, அப்படி வெட்டினால் பருவ மழை தவறிவிடுகிறது என்றும் சொன்னார்கள். ஆனால் தென் மேற்கு பருவ மழை எங்கே உற்பத்தியாகிறது, எங் கெங்கே பெய்து விட்டு நீலகிரி ஜில்லாவில் வருகிறது என்பதைப் பற்றி இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், தங்கள் மூலமாக. எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், 50 சத விகிதம் காடுகளாக இருக்கிறது. 989 சதுர மைல்களில் பாதிக்கு மேல் காடுகளாகத்தான் இருக்கிறது. இப்போது இருக்கின்ற நிலை மையில் 17 சதவிகிதம் இருக்கின்ற காடுகளை 33 சதவிகிதம் ஆக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். இப்படியிருந்தும், நீலகிரியைப் பொறுத்தளவில் 50 சதவிகிதம் காடுகள் இருக்கிறது. பொதுவாக மரங்களை வெட்டிவிட்டால் மழை பெய்யாது என்பது உண்மையாயினும், இந்த நேரத்தில் ஒருசில குறிப்புகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இருக்கின்ற இயற்கைக் காடுகளை (நேச்சுரல் ஃபாரஸ்ட்) எல்லாம் விறகுக்காக ஃபாரஸ்ட் டிப்பார்ட்மென்டிலுள்ளவர்கள் வருஷா வருஷம் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். மழைக்கு ஆதாரவாக இருக்கும் இப்பேர்ப் பட்ட காடுகளை எல்லாம் நாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சாதாரண ஜனங்கள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று பட்டா வைத்திருப்பவர்கள் தங்களுடைய தேவைக்காக ஏதாவது மரங்களை வெட்டினால் அவ்விதம் வெட்டக்கூடாது என்று கடுமையான சட்டங்களைப்போட்டு, அதன் மூலமாக அபராதங்கள் போடுவதும், ஜனங்கள் கஷ்டப்படுவதுமாக இருந்து கொண்டிருக் கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். மழை வருவதற்கு ஃபாரஸ்ட்டுகள் தான் காரணம் என்றால் தயவு செய்து நேச்சுரல் பாரஸ்ட்டுகளை அழிப்பதை நிறுத்தியாக வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டங்களை ஆரம்பிக்கும்போது, குந்தா திட்டங்களை ஆரம்பிக்கும்போது, ஸப்மெர்ஜ் ஆகக் கூடிய ஏரியாவில் உள்ள பட்டாதார்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னாலேயே தங்கள் நிலங்களை எலெக்ட்ரிசிட்டி போர்டார் எடுத்துக்கொள்ளுமாறு அனுமதித்தார்கள். அவர்கள் விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு அந்த பூமிகளுக்கு பதில் வேறு பூமி கிடைக்கும், அதுவும் உடனடியாகக் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நில ஆர்ஜித நடவடிக்கை எடுப்பதற்கு முன்னாலேயே அரசாங்கம் வேண்டுவன செய்ய அனுமதித்திருக் கிறார்கள். ஆனால் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பல மாநிலங்கள் மின்சார வசதி பெற்றும், பல இடங்களில் இந்தப் பூமிகளை இழந்த பட்டாதார்களுக்கு வேறு பூமி கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலையை இன்று சந்தர்ப்பத்திலே அமைச்சருக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இப்போது என்ன சொல்லு கிறார்கள் என்றால், காம்பென்சேஷன் கொடுத்திருக்கும் தொகை



பட்டாதார்களுக்குப் போதாது என்று யார் யார் சிவில் கோர்ட்டு களுக்குப் போயிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் மாற்று பூமி கொடுப்பதில்லை, அந்த வழக்குகளை வாபஸ் வாங்கினால்தான் கொடுப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தன்னுடைய பூமிக்கு அதிகமான காம்பென்ஸேஷன் வேண்டு மென்று கோர்ட்டுகளுக்குப் போவது இந்த நாட்டிலே தடை செய்யப்படுமானால் ஜனநாயகம் எந்த அளவிலே நிற்கும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கோர்ட்டுக்குப் போகும் உரிமையை நாம் மறுப்பது அவ்வளவு சரியல்ல என்று அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். பூமியை இழந்து தவிக்கக் கூடியவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவுக்கு நிலம் வைத்து உள்ளவர்கள் அல்ல. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள். 1957-ம் ஆண்டிலிருந்து அதையும் இழந்து பூமியின்றி சங்கடப்பட்டுக் கொண்டிருக் கிறார்கள். அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கோர்ட்டுக்குப் போவதை . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் பேச் சிலிருந்து ஏதோ சர்க்கார் நீதி மன்றங்களுக்குப் போவதற்குத் தடை விதித்திருக்கிறது என்ற எண்ணம் ஏற்படும் என்ற காரணத் தினால் நான் இதைப்பற்றிச் சிறிது விளக்குகிறேன்.

அதிகமான காம்பென்சேஷன் வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போவதை சர்க்கார் தடை செய்யவில்லை. மாற்று நிலம் வேண்டு மென்று சொன்னால் வாங்கிக்கொள்ளுங்கள், அல்லது சட்டப்படி இருக்கிற உரிமை வேண்டுமென்றால் வாங்கிக்கொள்ளுங்கள் என்று தான் சொல்லுகிறோம். சட்டப்படி இருக்கிற உரிமையைப் பெறு வதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. சட்டப்படி உரிமை வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் சட்டப்படியுள்ள உரிமையோடு நிற்கவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** முதலிலே அரசாங்கம் அவர்களுக்குச் சொன்னதெல்லாம் காம்பென்சேஷனை முதலிலே வாங்கிக் கொள்ளுங்கள், உங்கள் பூமிக்கு மாற்று பூமி கொடுக்கிறோம், அந்த நிலத்திற்கு ஒரு விலையை நிர்ணயிக்கிறோம், அந்தத் தொகையை அரசாங்கத்திற்குக் கட்டிவிட்டால் பூமி கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்ததன் பேரில் நில ஆர்ஜிதம் செய்யாமலேயே அரசாங்கத்திற்கு தங்கள் நிலத்தை ஒப்படைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக உதக மண்டலம் தாலுகாவிலே, பிக்கட்டி கிராமத்தில் 392-1, 362-1 சர்வே எண்கள் உள்ள பூமி கொடுக்க ஏற்பாடு செய்து, சர்வே செய்து, அவரவர்களுக்கு வேண்டிய நிலங்களுக்கு சர்வே ஸ்டோன்ஸ் பதித்த பிறகு, கோர்ட்டுக்குப் போயிருக்கிற காரணத்தினால் கொடுக்க முடியாது என்ற வாதம் எழும்பியிருக்கிறது. ஆகை யால் அமைச்சர் அவர்கள் கருணையுடன் பார்த்து கஷ்டப்படும் விவசாயிகளுக்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமானால் நல்லது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இல்லை என்பதை யாரும் சரியாகக் காரணம் காட்டுவதில்லை. எனக்கு முன்பு பேசிய கனம் நல்லசிவம் அவர்கள் நீர்நிலைகளில் தண்ணீர் பெருக வேண்டுமென்றால் மழை வேண்டும், அதற்காக நீர் நிலைகளில் நிற்கின்ற மரங்களை வெட்டக்கூடாது, அப்படி வெட்டினால் பருவ மழை தவறிவிடுகிறது என்றும் சொன்னார்கள். ஆனால் தென் மேற்கு பருவ மழை எங்கே உற்பத்தியாகிறது, எங்கெங்கே பெய்து விட்டு நீலகிரி ஜில்லாவில் வருகிறது என்பதைப் பற்றி இந்த சமயத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன், தங்கள் மூலமாக. எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், 50 சதவிகிதம் காடுகளாக இருக்கிறது. 989 சதுர மைல்களில் பாதிக்கு மேல் காடுகளாகத்தான் இருக்கிறது. இப்போது இருக்கின்ற நிலைமையில் 17 சதவிகிதம் இருக்கின்ற காடுகளை 33 சதவிகிதம் ஆக்க வேண்டும் என்பதுதான் நமது குறிக்கோள். இப்படியிருந்தும், நீலகிரியைப் பொறுத்தளவில் 50 சதவிகிதம் காடுகள் இருக்கிறது. பொதுவாக மரங்களை வெட்டிவிட்டால் மழை பெய்யாது என்பது உண்மையாயினும், இந்த நேரத்தில் ஒருசில குறிப்புகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இருக்கின்ற இயற்கைக் காடுகளை (நேச்சுரல் ஃபாரஸ்ட்) எல்லாம் விறகுக்காக ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்டிலுள்ளவர்கள் வருஷா வருஷம் வெட்டிக் கொண்டிருக்கிறார்கள். மழைக்கு ஆதரவாக இருக்கும் இப்பேர்ப்பட்ட காடுகளை எல்லாம் நாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் சாதாரண ஜனங்கள் ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று பட்டா வைத்திருப்பவர்கள் தங்களுடைய தேவைக்காக ஏதாவது மரங்களை வெட்டினால் அவ்விதம் வெட்டக்கூடாது என்று கடுமையான சட்டங்களைப்போட்டு, அதன் மூலமாக அபராதங்கள் போடுவதும், ஜனங்கள் கஷ்டப்படுவதுமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். மழை வருவதற்கு ஃபாரஸ்ட்டுகள் தான் காரணம் என்றால் தயவு செய்து நேச்சுரல் பாரஸ்ட்டுகளை அழிப்பதை நிறுத்தியாக வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தத் திட்டங்களை ஆரம்பிக்கும்போது, குந்தா திட்டங்களை ஆரம்பிக்கும்போது, ஸப்மெர்ஜ் ஆகக் கூடிய ஏரியாவில் உள்ள பட்டாதார்களுடைய நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு முன்னாலேயே தங்கள் நிலங்களை எலெக்ட்ரிசிட்டி போர்டார் எடுத்துக்கொள்ளுமாறு அனுமதித்தார்கள். அவர்கள் விவசாயம் செய்வதற்கு அவர்களுக்கு அந்த பூமிகளுக்கு பதில் வேறு பூமி கிட்டும், அதுவும் உடனடியாகக் கிட்டும் என்ற நம்பிக்கையில் நில ஆர்ஜித நடவடிக்கை எடுப்பதற்கு முன்னாலேயே அரசாங்கம் வேண்டுவன செய்ய அனுமதித்திருக்கிறார்கள். ஆனால் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பல மாநிலங்கள் மின்சார வசதி பெற்றும், பல இடங்களில் இந்தப் பூமிகளை இழந்த பட்டாதார்களுக்கு வேறு பூமி கொடுக்கப்படாமல் இருக்கின்ற நிலையை இந்தச் சந்தர்ப்பத்திலே அமைச்சருக்குக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக இப்போது என்ன சொல்லுகிறார்கள் என்றால், காம்பன்சேஷன் கொடுத்திருக்கும் தொகை





பட்டாதார்களுக்குப் போதாது என்று யார் யார் சிவில் கோர்ட்டுகளுக்குப் போயிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் மாற்று பூமி கொடுப்பதில்லை, அந்த வழக்குகளை வாபஸ் வாங்கினால்தான் கொடுப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒருவர் தன்னுடைய பூமிக்கு அதிகமான காம்பென்ஸேஷன் வேண்டுமென்று கோர்ட்டுகளுக்குப் போவது இந்த நாட்டிலே தடை செய்யப்படுமானால் ஜனநாயகம் எந்த அளவிலே நிற்கும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கோர்ட்டுக்குப் போகும் உரிமையை நாம் மறுப்பது அவ்வளவு சரியல்ல என்று அமைச்சர் அவர்களுக்குக் கூறிக்கொள்கிறேன். பூமியை இழந்து தவிக்கக் கூடியவர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவுக்கு நிலம் வைத்து உள்ளவர்கள் அல்ல. ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் வைத்திருக்கக் கூடியவர்கள். 1957-ம் ஆண்டிலிருந்து அதையும் இழந்து பூமியின்றி சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கோர்ட்டுக்குப் போவதை . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் பேசுவதிலிருந்து ஏதோ சர்க்கார் நீதி மன்றங்களுக்குப் போவதற்குத் தடை விதித்திருக்கிறது என்ற எண்ணம் ஏற்படும் என்ற காரணத்தினால் நான் இதைப்பற்றிச் சிறிது விளக்குகிறேன்.

அதிகமான காம்பென்சேஷன் வேண்டுமென்று கோர்ட்டுக்குப் போவதை சர்க்கார் தடை செய்யவில்லை. மாற்று நிலம் வேண்டுமென்று சொன்னால் வாங்கிக்கொள்ளுங்கள், அல்லது சட்டப்படி இருக்கிற உரிமை வேண்டுமென்றால் வாங்கிக்கொள்ளுங்கள் என்றுதான் சொல்லுகிறோம். சட்டப்படி இருக்கிற உரிமையைப் பெறுவதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. சட்டப்படி உரிமை வேண்டுமென்று சொல்லுகிறவர்கள் சட்டப்படியுள்ள உரிமையோடு நிற்கவேண்டுமென்றுதான் சொல்லுகிறோம்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** முதலிலே அரசாங்கம் அவர்களுக்குச் சொன்னதெல்லாம் காம்பென்சேஷனை முதலிலே வாங்கிக் கொள்ளுங்கள், உங்கள் பூமிக்கு மாற்று பூமி கொடுக்கிறோம், அந்த நிலத்திற்கு ஒரு விலையை நிர்ணயிக்கிறோம், அந்தத் தொகையை அரசாங்கத்திற்குக் கட்டிவிட்டால் பூமி கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்ததன் பேரில் நில ஆர்ஜிதம் செய்யாமலேயே அரசாங்கத்திற்கு தங்கள் நிலத்தை ஒப்படைத்திருக்கிறார்கள் என்ற உண்மையை அமைச்சர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். குறிப்பாக உதகமண்டலம் தாலூகாவிலே, பிக்கட்டி கிராமத்தில் 392-1, 362-1 சர்வே எண்கள் உள்ள பூமி கொடுக்க ஏற்பாடு செய்து, சர்வே செய்து, அவரவர்களுக்கு வேண்டிய நிலங்களுக்கு சர்வே ஸ்டோன்ஸ் பதித்த பிறகு, கோர்ட்டுக்குப் போயிருக்கிற காரணத்தினால் கொடுக்க முடியாது என்ற வாதம் எழும்பியிருக்கிறது. ஆகையால் அமைச்சர் அவர்கள் கருணையுடன் பார்த்து கஷ்டப்படும் விவசாயிகளுக்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமானால் நல்லது என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக இந்த நீர் நிலைகளில் ஏற்படும் ஸில்ட் பற்றி போன வருஷமே கூறியிருக்கிறேன். வருஷா வருஷம் குந்தா ஃபோர்பே டாமிலும் சரி, மற்ற டாம்களிலும் அதிக அளவுக்கு மண் மேடிட்டுக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம். அந்த நிலையை எப்படித் தடுப்பது என்று சேர்மனைக் கேட்டபோது வெளிநாட்டிலிருந்து மண் வாரும் யந்திரம் வருகிறது, அதைக் கொண்டு எடுத்துப் போட்டு விட்டால் சரியாகிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். யந்திரங்களை வாங்கி மண் மேடிட்டிருக்கும் நீர் நிலைகளிலிருந்து மண்ணை அகற்றி கூடிய வரையில் மண் மேடிடாமல் பார்த்துக்கொள்ள முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுவுமின்றி மண் மேடிடுவதற்கான காரணம் என்ன என்று யோசிக்க வேண்டும்.' உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால், சில்லஹள்ளா என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆறு நேராக குந்தா ஃபோர்பே டாமில் விழுகிறது. மக்கள் விவசாயம் செய்வதற்காக ஆற்றின் இரு பக்கத்திலும் ஆற்று ஓரம் வரை விவசாயம் செய்து மண்ணைத் திருப்பிக் கொண்டு வருவதால் பூரா மண்ணும் ஆற்றில் வந்து விழுகிறது. நான் ஒரு யோசனை கூற ஆசைப்படுகிறேன். ஆற்று ஓரத்தில் இரண்டு புறத்திலும் ஒரு ஃபர்லாங் தூரத்திற்கு யாதொரு விவசாயமும் செய்யக் கூடாது என்று தடை செய்து அந்தப் பகுதியில் மாங்கனை நடுவதனாலும், அல்லது நல்ல புல் நடுவதனாலும் மண் தடுத்து நிறுத்தப்படுவதற்கு மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுவுமின்றி, கடைசியாக இப்போது இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி ரிப்போர்ட்டிலே 1957-ம் ஆண்டுக்கு முன் உள்ள சர்க்காரிலிருந்து போர்டுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துகளின் விலை மதிப்பை இது வரையிலும் எந்த இனத்தில் வைப்பது என்று முடிவு கட்டாமல் இருக்கிற நிலையைப் பார்க்கிறோம். அதாவது

"In respect of the assets created out of Revenue prior to 1st July 1957 and transferred to the Madras State Electricity Board on its formation, the value of the assets has not been assessed. Likewise, outstanding revenue due to the State Government amounting to Rs. 2.34 crores as on 30th June 1957 was taken over by the Board on 1st July 1957. As it is now over seven years since the Board was set up, the Committee suggests that an early decision in regard to treatment of these assets, viz., whether as a loan or as a gift, be taken."

என்று கமிட்டியார் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். அந்த நிலைமையையும் அமைச்சர் அவர்கள் தீவிரமாக ஆலோசித்து முடிவு கட்டுமாறு கேட்டுக்கொண்டு, கடைசியாக இந்த நிலைப் பிரச்னையை அமைச்சர் அவர்கள் சாவகாசமாக யோசித்து ஏதாவது அனுகூலம் செய்தால் நான் மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.





* திரு. பி. வி. சீராமுலு: கனம் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டு மின்சார போர்டின் நிதிநிலை அறிக்கை பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே கிட்டத்தட்ட இந்த ஆண்டு வரையில் 19,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதாகவும் 1,70,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒவ்வொரு மாவட்டம்தோறும் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, அதேபோல மின்சாரப் பம்ப்செட்டுகள் எத்தனை இருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டிருந்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்த அளவுக்கு மின்சார போர்டார் தங்களுடைய திறமையைக் காட்டியிருக்கிறார்கள் என்பதனைப் பற்றிச் சிந்திக்க ஏதுவாக இருக்கும். அதாவது அடுத்து வரும் ஆண்டிலாவது மாவட்டவாரியாக குறிப்பிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்பது நாடு அறிந்த விஷயம். அதிலும் வடசேலம் மிக மிகப் பின்தங்கியது. கடந்த மூன்று ஆண்டு காலமாக 356 கிராமங்களுக்கு வட சேலத்தில் கொடுக்கப்பட்டதாக, ஸாங்க்ஷன் செய்யப்பட்டதாக அறிக்கை கூறுகிறது. ஆனால் இது வரையில் 148 கிராமங்களுக்குத்தான் மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. மீதி 208 கிராமங்களுக்கு இன்னும் போடவில்லை என்று டிஸ்ட்ரிக்ட் டெவலப்மெண்ட் கவுன்சிலிலேயே அதிகாரிகள் கூறியிருக்கிறார்கள். ஏன் என்று கேட்டால் கம்பங்கள் இல்லை, வயர் இல்லை, செய்ய இப்போது தோது இல்லை, பண வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் போர்டாரை அணுகி, தலைவரைக் கேட்டபோது கம்பங்கள் ஏராளமாக, லட்சம் லட்சமாகச் செலவு செய்து வைத்திருக்கிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள். அதிகாரிகளிடத்தில் செல்லும்போது ஒரு பஞ்சாயத்துக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டால் அந்த பஞ்சாயத்தோ, அல்லது அந்த பஞ்சாயத்தில் உள்ளவர்களோ கம்பங்களை எடுத்துக் கொண்டு வந்தால் நாங்கள் போட்டுக் கொடுக்கிறோம் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். எந்தக் கணக்கில் செலவு எழுதுவது, எப்படி நிர்ணயிப்பது, சாங்க்ஷன் செய்வது அரசாங்கமாக இருந்தாலும் பஞ்சாயத்து செலவை ஏற்க முடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 19,000 கிராமங்களுக்கு மாநில சர்க்கார் மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் கிட்டத்தட்ட 12,500 பஞ்சாயத்துக்கள் நம் மாநிலத்தில் இருக்கின்றன. பஞ்சாயத்துக்களுக்காவது சர்க்கார் மின்சாரம் வழங்கியிருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. 19,000 கிராமங்கள் என்றால், பஞ்சாயத்துக்கள் அல்லாத, கம்பங்கள் போடும் வழியில் கிராமங்கள் இருந்தால் அப்படியே எலெக்ட்ரிக் கனெக்ஷன் கொடுத்திருப்பதாகப் புள்ளிவிவரம் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் என்னுடைய தொகுதியிலே மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. மூன்றில் காவிரிப்பட்டணம் யூனியனில் 42 பஞ்சா

11-30 a.m. யத்துக்கள் இருக்கின்றன. அவைகளுள் 26 பஞ்சாயத்துக்களுக்குத் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே போலத்தான் கிருஷ்ணகிரியில் 28 பஞ்சாயத்துக்களில், 11-க்குத்தான் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. வேப்பனப்பள்ளி பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், கிட்டத்தட்ட 4 கிராமங்களுக்குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டுக்குள்ளாகவாவது கூடியவரை இருக்கப்பட்ட அத்தனை பஞ்சாயத்துக்களுக்கும் மின்சாரம் விநியோகம் செய்யும்படி அரசாங்கத்தாரையும், மின்சார போர்டாரையும் நான் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கே. ஆர். பி. ரிசர்வாயருக்கும், சாத்தனூர் ரிசர்வாயருக்கும் இரண்டாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. காமராஜ் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆனால், கே. ஆர். பி. ரிசர்வாயரில் இதுவரையில் சரியாக மின்சார விளக்குகள் போடப்படவில்லை. அதே சமயத்தில் சாத்தனூர் ரிசர்வாயரைப் போய் பார்க்கிறவர்களைக் கேட்டால் தெரியும். சாத்தனூர் ரிசர்வாயருக்கு ரூ. 5, 6 லட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. கே. ஆர். பி. ரிசர்வாயருக்கு ரூ. 3 லட்சம் சாங்க்ஷன் செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் அங்கே மின்சார விளக்குகள் போடப்படாத காரணத்தினால், போகிறவர்களையும் வருகிறவர்களையும் அந்த இடத்திற்கு வராத ஒரு சூழ்நிலைக்கு அரசாங்கம் ஆளாக்கியிருக்கிறது என்றுதான் நான் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக விசேஷ உத்திரவாத தொகை ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 50 அரசாங்கம் பெற்றிருக்கிறது. கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் ஆகியும் விசேஷத் தொகை திருப்பிக் கொடுக்கப்படாத சூழ்நிலை இருக்கிறது. 10 ஆண்டுகள் ஆகிறதே, விசேஷத் தொகையை திருப்பிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டால், 'சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம். இன்னும் உங்களுடைய பேப்பர் வரவில்லை' என்று சொல்லுகிறார்கள். ஆகவே, விசேஷத் தொகையை பணமாகவோ அல்லது அதற்குண்டான சர்டிபிகேட்டாகவோ கொடுக்க ஏற்பாடு செய்யும்படி போர்டாரையும், அரசாங்கத்தையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல. சென்ற ஆண்டில் 4¾ சதவிகிதம் லோன் ஒன்று எலக்டிரிசிடி போர்டில் ப்ளோட் செய்தார்கள். ஆனால் பெயர் அளவுக்குத்தான் 4¾ சதவீதம் என்று இருக்கிறது. ஒரு விவசாயியோ, தொழில் அதிபரோ மற்றவர்களோ ரூ. 100 லோன் கொடுத்தால், அவர்களுக்கு உண்மையில் வருகிற வட்டிப் பணம் 1.66 சதவீதம்தான். இன்கம் டாக்ஸ் கிளியரன்ஸ் ஆகி கொடுத்திருந்தால் கிட்டத்தட்ட 4¾ சதவீதம் அடிப்படையில் இருக்கலாம். இதிலே இன்கம்டாக்ஸ் வேறு. சூபர் டாக்ஸ் வேறு. சர்சார்ஜ் வேறு என்று நீக்கினால் மீதி 1.66 சதவீதம் தான் விவசாயிக்கு வருகிறது. ரூ. 100 கொடுத்த விவசாயிக்கு 1.66





சதவீதம்தான் கிடைக்கக்கூடிய சூழ்நிலை, சுமார் ரூ. 2.75 செலவு செய்து ரூ. 1.66 பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதைக் கவனித்து அரசாங்கத்தாரும், போர்டாரும் ஆவன செய்யவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்கு ஒரு விதிவிலக்கும், அரசாங்கத்திற்கு ஒரு விதிவிலக்கும், போர்டுக்கு ஒரு விதிவிலக்கும் என்றுதான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. எந்த ஒரு பஞ்சாயத்தும் நாஷனல் சேவிங் சர்டிபிகேட்தான் வாங்கவேண்டும் என்று ஒரு விதி இருக்கிறது. எலக்டிரிசிடி போர்டுக்கு ஒரு பஞ்சாயத்தோ அல்லது பஞ்சாயத்து யூனியனோ ரூ. 10,000 கடன் கொடுக்கலாம் என்ற விதியும் இல்லை. ஆனால் எப்படி அவர்கள் எலக்டிரிசிடி போர்டுக்கு கடன் கொடுத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. சேவிங் சர்டிபிகேட்டைத் தவிர, மற்ற எந்தவிதமான லோன்கள் 'ப்ளோட்' செய்யப்பட்டாலும்கூட, அதில் பங்கு பெறக்கூடாது என்ற விதி அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது எலக்டிரிசிடி போர்டு 'ப்ளோட்' செய்யும் லோனுக்கு மட்டும் ஏன் விதிவிலக்கு என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கக்கன்புரத்தில் கிட்டத்தட்ட 3, 4 ஆண்டுகளுக்கு முன்பாக காதி போர்டார் பேபர் தொழிற்சாலை நடத்த வேண்டுமென்று திட்டம் போட்டு ரூ. 1 அல்லது 1¼ லட்சம் செலவு செய்ய ஆக்கம் கொடுக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும், கக்கன்புரத்திற்கு மின்சாரம் வராத காரணத்தினால், ரூ. 30,000, ரூ. 40,000 இது விஷயமாக செலவு செய்தும்கூட பாழடைந்து கிடக்கிற சூழ்நிலை உண்டாக்கப்பட்டிருக்கிறது. இனிமேலாவது கக்கன்புரத்திற்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்று அரசாங்கத்தை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிதிநிலை அறிக்கையிலே முக்கியமாக ஹொகனகல் திட்டத்தைப்பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடப்படாதது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். அடுத்து வரும் நிதி ஆண்டிலாவது ஹொகனகல் திட்டத்தை ஏற்று சீரும் சிறப்புமாக அதை நடத்திக்கொடுக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கனம் அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபொழுது, கடல் நீரை தூய நீராக்குவதற்கு திட்டம் ஒன்று இருப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆனால், உலக சுகாதார மத்திய கேந்திரம் உலகத்தில் இரண்டு நாடுகளில் மிகவும் அத்தியாவசியமாக கடல் நீரை தூய நீராக்குகிற திட்டம் இருந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். அவை இரான், இராக் என்ற நாடுகள். ஏனென்றால், இரான், இராக் ஆகிய நாடுகளில் எவ்வளவு கிணறுகள் வெட்டினாலும் எண்ணெய்தான் வருகிறதே தவிர தண்ணீர் வரவில்லை. அப்பேர்ப்பட்ட நாடுகளில் ஆயிரம் காலன்களுக்கு ரூ. 8 செலவாகிறது. அம்மாதிரி ரூ. [illegible] செலவழிக்க

[திரு. பி. வி. சீராமுலு] [17th July 1964

முடியாத சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஆகவே, காவேரி திட்டத்தை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி சி. குழந்தையம்மாள்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மின்சார போர்டு நிதிநிலை அறிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். மின்சார வெட்டு காலங்களிலே பொதுவாக மிக இன்றியமையாத துறைகளிலே மின்சாரம் உபயோகிப்பதைத் தவிர, விளம்பரம் என்ற பெயரிலே பீடி, சிகரெட், புகையிலை, சினிமா போன்ற பல்வேறு பகுதிகளில் நிறைய மின்சாரம் செலவு செய்யப்படுகிறது. அதை மின்சார வெட்டு காலங்களிலே பூரணமாக நிறுத்தவேண்டும் என்ற ஒரு யோசனையை நான் கூறிக்கொள்ள விருமபுகிறேன். நகர்ப்புறங்களிலே இப்படி விளம்பரங்கள் என்ற பெயரால் மின்சாரத்தை விரயமாக்கினால், அது கிராமத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. புகையிலை, பீடி, சிகரட், சினிமா ஆகியவை பற்றி நகரங்களிலும், கிராமங்களிலும் ஏராளமாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தினால், மின்சாரத்தை உபயோகித்து இந்த விளம்பரம் அவசியமில்லை என்ற என்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற 3 லைட்கள் என்று சொல்லுவது 150 வோல்டேஜ். நான் வரக்கூடிய சூலூர் வட்டாரத்தில் ஒரு கிணறு 150 அடி ஆழம் இருக்கும். 100 அடி ஆழத்தில் கிணற்றில் இறங்கி இரவிலே தண்ணீர் விடவேண்டும். களத்தில் வேலை செய்வது, மாட்டுக்குத் தண்ணீர் காட்டுவது, இரவு நேரங்களில் தீனி போடுவது போன்றவைகளெல்லாம் செய்வதற்கு குறைந்தபட்சம் 5 லைட்களாவது இருக்க வேண்டும். அப்பொழுதுதான் களத்தில் வேலை செய்ய முடியும். ஆகையினால் மூன்று விளக்குகள் என்று இருப்பதை, விவசாயிகளின் சௌகரியம்போல அவர்கள் 300 வோல்டேஜ் எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கவேண்டும். அப்படியில்லை என்றால் 5 விளக்குகள் போட்டுக்கொள்வதற்கு மின்சார போர்டார் விவசாயிகளுக்கு அனுமதி அளிக்கவேண்டும் என்று விவசாயிகளின் சார்பாக நான் கேட்டுக் கொள்கிறேன். மாகாணத்தில் இருக்கிற மற்ற விவசாயிகளுக்கும், கோவையில் இருக்கிற விவசாயிகளுக்கும் வேறுபாடு இருக்கிறது என்பதை மிகவும் தாழ்மையுடன் இந்தச் சபையிலே தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே கிணறுகள் நிறைய ஆழமாக இருக்கிற காரணத்தினால் நான் இதை வற்புறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது விவசாய இலாகாவிலிருந்து போர் வெல் போடுவதற்கு ஏராளமாக போரிங் மெஷின்கள் கொடுக்கிறார்கள். நிறைய குழாய்க் கிணறுகள் போடுகிறார்கள். குழாய்க்



17th July 1964] [திருமதி சி. குழந்தையம்மாள்]

கிணறுகளுக்கு உபயோகப்படும்படியான பம்பு வெபேரியில் செய்யப்படுகிறது. ஒரு பம்பு குறைந்தது ரூ. 5,500 விலை. அது தண்ணீருக்குள் இருந்து தண்ணீரை இழுக்கிறது. குழி போடுவதற்கு 250, 300 அடி ஆழத்தில்தான் தண்ணீர் வருகிறது. பத்து ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து சாதாரணமாக கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு என்ன செலவாகுமோ அதைப்போல 1¾ பங்கு இங்கே செலவாகிறது, போரிங் குழாய் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைப்பதற்கு. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று வறண்ட பிரதேசங்களில் குழாய் கிணறுகள் போடுவதற்கு, விவசாயிகளுக்கு கிணறு வெட்டுவதற்கு எப்படி குறைந்தபட்சம் ரூ. 1,000 மான்யம் கொடுக்கப்படுகிறதோ அதே போல 10 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கிற அளவுக்கு மின்சாரத் தொகை கட்டினால் போதும், எஞ்சியிருக்கிற தொகையை மான்யமாகக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தையும் மின்சார போர்டாரையும் கேட்டுக்கொள்கிறேன். இரண்டு 10 ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்து தண்ணீர் இறைத்தால் என்ன செலவாகிறதோ அந்தச் செலவில்தான் பருத்தி, கரும்பு உற்பத்தி செய்யவேண்டியிருக்கிறது. சாதாரணமாக எனக்குத் தெரிந்த ஒரு விவசாயிக்கு 21 ஏக்கர் நிலம் இருக்கிறது. அவர் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 மின்சாரக் கட்டணம் செலுத்துகிறார். வருடத்திற்கு சுமார் ரூ. 10,000 மின்சாரக் கட்டணம் செலுத்திவிட்டால், அரும்பாடுபட்டுவிட்டு, வருடக் கடைசியில் என்ன லாபம் என்று பார்த்தால், கடன்தான் மிச்சமாகிறது. ஆகவே இந்தக் குழாய்க் கிணறுகளை உபயோகிப்பவர்களுக்கு மின்சார போர்டிலிருந்து ஒரு சிறிய தொகை மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சப் டிவிஷன் செய்வதைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தை கிராமங்களுக்கும் வீதிகளுக்கும் வழங்குவதிலே மின்சார போர்டு மின் வேகத்திலே செல்லுகிறது. அதற்காக என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணன், தம்பி இரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்றால், சப் டிவிஷன் செய்து கொடுத்தால், மின்சாரத்திற்கு அனுமதி கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். சப் டிவிஷன் செய்வதற்காக ரெவின்யூ இலாகாவிற்குப் போனால், 2½ அல்லது 3 வருஷம் ஆகிறது. 2½ வருஷ காலத்திற்கு பம்பு செட்டுகளை வாங்கி வைத்துக் கொண்டு காத்திருக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கிராமங்களிலே இருக்கிற ஒவ்வொரு பொழிக்கும் அனுபவ பாத்தியம் இருக்கிறது. புதிதாகப் போடப்பட்ட பொழிக்கும், 10 ஆண்டு காலமாக இருக்கிற பொழிக்கும் வித்தியாசம் இருக்கிறது. அண்ணன், தம்பி இருவருக்குமிடையே சப் டிவிஷன் எப்பொழுது நடந்தாலும், அனுபவ பாத்தியதையை வைத்தோ அல்லது ரிஜிஸ்டிரார் ஆபீசில் பாகப் பிரிவினை செய்து கொண்டதை வைத்தோ மின்சார போர்டு மின்சாரம்

வழங்க வேண்டும். இல்லாவிட்டால் மின்சார போர்டே கனம் ரெவின்யூ அமைச்சரை அணுகி—நாங்கள் பல தடவை சொல்லி யாகிவிட்டது—சீக்கிரமாக சப்டிவிஷன் செய்வதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மினிமம் காரண்டி கட்டுவதை எடுத்தது விவசாயிகளுக்கு ஓரளவு பெரும் நன்மை செய்திருக்கிறது. அணு மின்சார உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருவதற்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு, அந்த உற்பத்தி நிலையத்தை கோவையில் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே ஏராளமான மில்கள் இருக்கின்றன. மின்சார போர்டுக்கு நிறையப் பணம் கொடுப்பது கோயம்புத்தூர் வாசிகள்தான். மெயின்டினன்ஸ் செலவையும் கொடுக்கிறார்கள். அங்கேயே உற்பத்தி செய்து கொடுத்தால், ஓரளவுக்கு எங்களுக்கு லாபகரமாக இருக்கும்.

எனக்கு முன்பு பேசிய புலவர் ஒரு பாடலைப் பாடினார். "நீயும் தவறிலை, நின்னைப் புறங்கடைப் போதரவிட்ட நுமரும் தவறிலர் . . . . ." என்று பாடலைப் பாடினார். எல்லோருக்கும் பாடத் தெரிந்தாலும், அதை சமய சந்தர்ப்பம் பார்த்துச் சொல்ல வேண்டும். மின்சார போர்டார் மின்சாரத்தை மின் வேகத்தில் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மின்சாரம் இல்லாத ஊரே கிடையாது. 100-க்கு 99 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கப்படுகிறது. அங்கத்தினர் அவர்கள் ஊரிலே யாருக்கோ மின்சாரம் கொடுக்கவில்லை என்பதற்காக, மின்சார போர்டு மேல் தவறில்லை, அமைச்சர் மேல் தவறு என்று சொன்னார்கள். சென்னை மாநிலம் பாரத நாட்டிலேயே இரண்டாவது, மூன்றாவது நிலையில் இருந்து கொண்டு, மின்சாரத்தை அதி வேகமாக தொழிலாளிகளுக்கும், விவசாயிகளுக்கும் கொடுப்பதற்கு பாராட்டுதலைத் தெரிவிப்பதற்குப் பதிலாக, குற்றவாளியைப் போல பாவித்து பாட்டுப் பாடினார்கள். அகப்பொருள், புறப் பொருள் சொல்வதெல்லாம் சட்டசபைக்கு எவ்வளவு தூரம் பொருந்தும் என்பதைப் பார்க்க வேண்டும். பொருத்தமில்லாத ஒரு காதல் பாட்டைச் சொல்லி, மந்திரிகளைக் குறை சொன்னால், சட்டசபை மெம்பர் பதவியை விட்டு விலகிப் போனாலும், அந்தப் பாவம் விலகிப் போகாது. பாடல்கள் தெரியும் என்பதற்காக, குற்றமில்லாத ஒருவரைக் குற்றம் சாட்டினால், ஆன்ம சாந்திக்குக்கூட இடமில்லாமல் போய் விடும். இப்படிப்பட்ட தவறுகளை மீண்டும் சட்டசபையிலே கனம் அங்கத்தினர் செய்யமாட்டார் என்று நினைக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் அங்கத்தினரும் ஒரு பாட்டுச் சொன்னால் போச்சு ! (சிரிப்பு.)

திருமதி சி. குழந்தையம்மாள் : எங்களுக்கு இருக்கும் ஒரு சிறு குறையை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தொகுதியிலே பைகாரா எலெக்



டிரிக் ஸிஸ்டமும், மேட்டூர் எலெக்டிரிக் ஸிஸ்டமும் இருக்கின்றன. சோமனூர் மேட்டூர் ஸிஸ்டத்தில் இணைந்திருக்கிறது. டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்திற்கு நாங்கள் அழைத்தாலும் அங்குள்ளவர்கள் வருவதில்லை. வருவதற்கு அவர்களுக்கு நேரம் இருக்காது. 100 மைலுக்கு அப்பாலிருந்து வரவேண்டும். பைகாரா ஸிஸ்டத்தோடு சேர்த்து விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதைப் பற்றி சேர்மன் அவர்களுக்கும் நான் தெரிவித்திருக்கிறேன். பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். எங்கே இருந்தாலும் கஷ்டமில்லாமல் தானே இருக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். கஷ்டம் இல்லாமல் இருப்பதோடு குறைகளைச் சொல்லுவதற்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். 100 மைலுக்கு அப்பால் சென்று சொல்லுவது என்றால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே சோமனூர் வட்டாரத்தை பைகாரா ஸிஸ்டத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மின்சாரத்தை அதிக அளவுக்கு உற்பத்தி செய்து கேரள ராஜ்யத்திற்குக் கடன் கொடுக்கக் கூடிய வகையில் இருக்கிறோம் என்பதற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த மின்சார இலாகாவானது, நல்ல முறையில் பணி புரிந்து, விவசாயிகளுக்கும், குறிப்பாக கிராம மக்களுக்கும் நல்ல சேவை செய்து வருவதற்காக அங்கே இருக்கிற என்ஜினியர்களுக்கும், மற்றவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மின்சார போர்டு நிதி நிலை அறிக்கையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது நாடு மின்சாரத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இதற்குக் காரணமாய் இருக்கும் மின்சார இலாகா அமைச்சர் அவர்களுக்கும், மின்சார-போர்டு குழுவினருக்கும், மற்றவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பொழுதெல்லாம் அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுகிறது. அந்த சமயங்களில் விவசாயிகளுக்கு முன்கூட்டியே தகவல் கொடுப்பதில்லை. "ஷட்டவுன்" செய்யும் காலத்தில் அவர்களுக்குத் தகவல் கொடுப்பது மிகவும் அவசியம். விவசாயிகள் நடவை நடவேண்டும் என்றால், இரண்டு நாட்களுக்கு முன்பு ஆட்களைச் சேகரம் செய்து, அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. தகவல் கொடுக்காவிட்டால், இவ்வாறு ஆட்களைச் சேகரம் செய்ததெல்லாம் வீணாகிறது. அவர்களுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே இந்த "ஷட் டவுனை"ப் பற்றி தகவல் கொடுப்பதற்கு மின்சார போர்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மிகவும் பின் தங்கிய இடங்களிலே 10 சதவிகிதம் வருமானம் வந்தால் தான் மின்சாரம் கொடுக்கப்படுமென்ற கொள்கை அனுஷ்டிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு இதைப்

[திரு. ரா. க. வீரப்ப செட்டியார்] [17th July 1964

பற்றிச் சொன்னபொழுது, 10 சதவிகிதம் ரொம்பவும் குறைவாக இருக்கிறது என்று பதில் அளிக்கப்பட்டது. இதை நீக்க வேண்டும். பின்தங்கிய பகுதிகளுக்கு மின்சாரம் அவசியம் கொடுக்க வேண்டும். அதனால் ஏற்படும் குறைவை அரசாங்கமே மானிய மாகக் கொடுத்து, பின் தங்கிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். உதாரணமாக, என்னுடைய பகுதியிலே சிவாடி என்ற கிராமம் இருக்கிறது. 50 ஹார்ஸ் பவர் சேகரித்தால் மின்சாரம் கொடுக்கப்படுமென்று சொன்னார்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டும் 40 ஹார்ஸ் பவர் தான் சேகரிக்க முடிந்தது., இரண்டு வருஷ கால மாக அந்த கிராமம் மின்சாரம் இல்லாமல் இருந்து வருகிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்களில் அரசாங்கம் அந்தப் பகுதி களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புறம்போக்கு நிலங்களில் கிணறுகள் வெட்டி, ரொம்ப காலமாக அது அவர்களுடைய சுவாதீனத்தில் இருந்து வருகிறது. அப்பேர்ப்பட்ட கிணறுகளுக்கு மின்சார போர்டு பம்பு செட்டு கனெக்ஷன் கொடுப்பதற்கு மறுக்கிறது. சுவாதீன அனுபவத்தை வைத்துக்கொண்டு, பம்பு செட்டு கனெக்ஷன் கொடுக்க மின்சார போர்டு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து ஏரியாக்களில் தெரு விளக்குகள் போடுகிறார்கள். மின்சாரக் கட்டணம் ஒரு மாதம் கட்டத் தவறிவிட்டால், உடனே ஃப்யூஸை எடுத்து விடுகிறார்கள். பஞ்சாயத்துகள் பப்ளிக் ஆபீஸ் களாக இருப்பதனால், அதையும் தனிப்பட்ட மனிதன் போல பாவித்து, கட்டணம் கட்டத் தவறினால், ஃப்யூஸை எடுக்காமல், ஒரு கால அளவை நிர்ணயித்து அதற்குள் அவர்கள் கட்டா விட்டால் ஃப்யூசை எடுக்க வேண்டும் என்று மின்சார போர்டு ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்பொழுது ஒரு உதவி என்ஜினியர் ரூ. 1,000 வரையிலும் எஸ்டிமேட்ஸ் சாங்ஷன் செய்யலாமென்று இருக்கிறது. அது மிகவும் குறைவு. அதை ரூ. 2,500 ஆக உயர்த்தினால், மின்சார விஸ்தரிப்புக்கு நலமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்தில் தெரு விளக்கு போட வேண்டும் என்றால் வழியிலே மரங்கள் இருக்கின்றன. அவைகளின் கிளைகளை வெட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. சம்பந்தப்பட்ட என்ஜினியர்களுக்கு எழுதி கிளைகளை வெட்டி வேலை செய்ய கால தாமதம் ஏற்படுகிறது. துரிதமாக பஞ்சாயத்து தெருவிளக்கு போட முடிவது இல்லை. இந்த விஷயத்தில் மின்சார இலாகா அமைச்சர் பொதுப் பணித்துறை அமைச்சருக்கு எழுதி உடனே கிளைகளை வெட்டுவதற்கு உடனுக்குடன் உத்தரவளிக்கும் வகை யில் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.

[illegible]



17th July 1964] [திரு. ரா. க. வீரப்ப செட்டியார்]

என்னுடைய பகுதியில் மேட்டூர் சிஸ்டத்தில் கரிமங்கலத்தில் சப்-ஸ்டேஷன் இருக்கிறது. அங்கே ஒரே ஒரு சூபர்வைசர் தான் வேலை செய்கிறார். வேலை அதிகமாக இருப்பதால் அவரால் சமாளிக்க முடியவில்லை. காலதாமதம் ஏற்படுகிறது. கரிமங்கலம் டிஸ்டிரிபியூஷனுக்கு ஒரு ஜே. இ. போட பிரபோசல் இருப்பதாக கேள்விப்படுகிறேன். அதை உடனே அமலாக்க வேண்டும் என்றும் டிஸ்ட்டிரிபியூஷனில் காலதாமதத்தை தவிர்க்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதோடுகூட ஹோகனக்கல் திட்டத்தை எவ்வளவு சீக்கிரமாக அமுலாக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதை அமுலுக்கு கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார இலாகா 64-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன். மின்சார போர்டானது பாரத நாட்டிலே, நம் தமிழ் நாட்டிலே, புரட்சிகரமாக அதிக மான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். முன்பு எல்லாம் பாரதத் திலே, தென்னகத்திலே தொழில் வளம் ஏற்படவில்லை. வடநாட்டுப்பகுதியில் அதிகமான மின்சார நிலையங்கள் ஏற்பட்டு விட்டன என்று குறைபட்டுக் கொண்டவர்கள் எல்லாம் இன்றைக்கு தென்னகத்திலே அதிகமான மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம் என்பதை ஒப்புக்கொள்வார்கள். இந்த அறிக்கை யிலே பார்த்தால் ஹோகனக்கல் திட்டம் நீங்கலாக தமிழ் நாட் டிலுள்ள நீர்வளம் அத்தனையையும் பயன்படுத்தியாகிவிட்டது என்பதை கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள் என்று குறிப்பிடப் பட்டு இருக்கிறது. ஆகவே நம் நாட்டில் இருக்கக்கூடிய எல்லா நீர்வளத்தையும் பயன்படுத்தியாகிவிட்டது. இனி நீர் மின்சாரம் தயாரிக்க நம்மிடம் எந்த திட்டமும் இல்லை என்பதைப் பார்க்கும் போது நாம் அத்தனை பேரும் மிக்க மகிழ்ச்சி அடைய வேண்டும். அது மட்டும் இல்லை. ஹோகனக்கல் திட்டத்தைப்பற்றி மைசூர் அரசாங்கத்தோடும் மத்திய சர்க்காரோடும் கலந்து ஆலோசித்து ஒப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் ஒருவர் ஹொகனக்கல் திட்டத்தைப்பற்றி குறிப்பிடவில்லை என்று சொன்னார்கள். இங்கு ஒரு பக்கமே அதைப்பற்றி இருக்கிறது என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எண்ணூறு மெகா வாட் உற்பத்தி செய்யக் கூடிய அளவில் நம் சர்க்கார் திட்டம் தயா ரித்து இருக்கிறார்கள். மைசூர் அரசாங்கம் 1,200 மெகாவாட் உற் பத்தி செய்யும் அளவுக்கு திட்டம் சமர்ப்பித்து இருக்கிறார்கள். இவை இரண்டையும் ஒட்டு மொத்தமாக பார்த்தால் இரண்டா யிரம் மெகாவாட் செய்யக் கூடிய ஒரு திட்டம் என்பது புலப்படு கிறது. ஆனால் இதில் சில விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை. நம் முடைய 800 மெகாவாட்டில் மைசூருக்கு பங்கு உண்டா? மைசூர் திட்டத்திலே தயாரிக்கும் 1,200 மெகாவாட்டில் நமக்கு பங்கு

[illegible] என்பனவை பற்றி விளக்கம் கொடுத்தால் பேசுவதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை அமைச்சருக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அறிக்கையிலே "எல்லோருக்கும் திருப்தி அளிக்கும் வகையில் இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணலாம் என நம்புகிறேன்" என்று அமைச்சர் அவர்கள் ஒரு நம்பிக்கையும் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அளவிலே ஒரு நாட்டில் இருக்கக்கூடிய எல்லா நதிகளையும் உபயோகித்த பிறகும் கூட இன்னும் நாட்டில் அதிகமாக மின் சக்தியை கொடுக்க வேண்டிய நிலையில் தான் இருக்கிறோம் என்றால், அது நம் நாட்டில் தொழில் வளம் அதிகரித்திருக்கிறது என்பதைத்தான் எடுத்துக் காட்டுகிறது. தொழில் வளத்தை பொறுத்து மின்சாரத் தேவை இருக்கிறது. முன்பு நாட்டு மக்கள் சிறு சிறு கைத்தொழில்களாக செய்து வந்தவைகளைக்கூட இன்றைக்கு மின்விசையின் உதவியால் செய்வதன் மூலம் சிக்கனத்தையும் லாபத்தையும் காண்கிறார்கள். அதே மாதிரி மின்சார இலாகாவும் திட்டங்களை நிறைவேற்றுவதில் மிகச்சிக்கனமான அளவில் செய்திருக்கிறார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் நாட்டில் செலவு மிகமிகக் குறைவு என்பதை பார்க்கிறோம். இங்கே நம்முடைய செலவு 61 சதவிகிதம் தான். அதே சமயத்தில் மற்ற மாநிலங்களில் அது 105, 98 என்ற வகையில் இருக்கிறது. மின்சார போர்டிலே மிகச் சிக்கனமான செலவு செய்திருக்கிறார்கள் என்று புலப்படுகிறது. இது நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயம்.

இன்றைக்கு நாம் எல்லா நதிகளையும் பயன்படுத்தியாகிவிட்டது. இந்த நிலையில் அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதை நாம் மேற்கொள்ள வேண்டும். அதோடு அண்மையில் மேலை நாடுகளுக்கு சென்று வந்த அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், கடல் அலையிலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டுமா என்பதை சிந்தனை செய்தாக வேண்டும். அப்படி கடல் அலையிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்றால் அதில் நாம் அதிகமான கவனம் செலுத்த முடியும். அது சம்பந்தப்பட்ட ஆராய்ச்சியை அவசரமாக செய்தாக வேண்டும். தமிழ் நாட்டிலே தான் மிக நீண்ட கடற்கரை இருக்கிறது. ஆகவே அந்த முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய நம் நாட்டில் வழிவகை இருக்கிறது. அதற்கான வகையில் மின்சார போர்டார் தங்கள் கவனத்தை திருப்ப வேண்டும் என்று
12 noon கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நமது மாநிலத்திற்கு 1962-63 வது வருஷத்திலே தேவைப்பட்ட அதிக அளவு மின்சாரம் 533 மெகா வாட் வரையறுக்கப்பட்டது. ஆனால், 1963-64-வது வருஷத்திலே 640 மெகாவாட் நாம் செலவு செய்ய வேண்டிய அளவிலே வந்திருக்கிறோம். நமது நாட்டிலே ஓராண்டுக்கு 100 மெகாவாட் அதிகரிக்கக் கூடிய அளவில். தேவைக்குக் குறிப்பிட்ட அளவுக்கு மேல் 100 மெகாவாட் அதிகரிக்கக்கூடிய அளவில் மின்சார உற்பத்தி செய்து, அதைப் பயன்படுத்தியிருக்கிறோம் என்று சொன்னால், எவ்வளவு அதிகமாக நாட்டு மக்களுக்கு நாம் மின்





விசையை அதிகரித்துக் கொடுத்திருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது மிக மிகப் பெருமைப்படும் அளவில் தமிழ்நாட்டு மக்களாகிய நாம் இருக்கிறோம் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்களுடைய உரையின் ஐந்தாவது பக்கத்தில், "திருத்தி நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் அனேகமாகக் கூடிய விரைவில் அமுலுக்கு வரலாம்" என்று குறிப்பிட்டிருப்பது சற்று அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. திருத்தியமைக்கப்பட்ட கட்டணங்கள் வேகமாகக் கூடிய விரைவில் அமுலுக்கு வரலாம் என்று சொன்னால், கட்டணத்தை ஏதாவது உயர்த்திவிடுவார்களோ என்கிற அச்சம் மனத்திலே ஏற்படக் கூடியதாக இருக்கிறது. மின்சார உற்பத்தியானது லாபகரமாக இல்லை, அதற்காகக் கட்டணத்தை அதிகரிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு கட்டணத்தை ஒருகால் உயர்த்துவதாக இருந்தாலும், விவசாய உற்பத்திக்குப் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணத்தையும், அன்னியச் செலாவணியை ஈட்டித்தரக்கூடிய தேயிலை உற்பத்திக்குப் பயன்படுத்தும் கட்டணத்தையும் உயர்த்தாமலிருக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் உணவு உற்பத்தி பாதிக்கப்படக் கூடும். அதேபோல, தேயிலை உற்பத்தி குறைந்துவிட்டால், அன்னிய நாட்டுச் செலாவணி கிடைப்பதும் குறைந்துவிடும் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். விவசாயத்திற்கான மின்சாரக் கட்டணத்தை உயர்த்தக்கூடாது என்று கேட்டுக்கொள்வதோடு, அன்னிய நாட்டுச் செலாவணியை இந்த நாட்டுக்குத் தேடித்தரக்கூடிய தேயிலை உற்பத்தியைப் பாதிக்காத வகையில் அமைச்சர் அவர்கள் கவனித்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மின்சாரக் கட்டணத்தை ஒருகால் அதிகரிக்க வேண்டும் என்ற எண்ணத்திலே இருப்பாரானால், அதை அதிகரிக்கக்கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தேயிலை உற்பத்தியை பொருத்த வரையில் அதற்குச் சென்ற ஆண்டே மின்சாரக் கட்டணத்தை அதிகமாக உயர்த்திவிட்டோம். அதற்குப் பிறகு, தேயிலை உற்பத்தி அவ்வளவு சீரான நிலையில் இல்லாததால் மிகவும் கஷ்டமான நிலை இருந்துகொண்டிருக்கிறது. மறுமுறையும் மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் நமக்குச் சில இடைஞ்சல்கள் அதிலிருந்து ஏற்படும் என்று நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே நான் பேசும்போது, "குன்றுப் பகுதிகளில் மூலதனச் செலவு பத்து சத விகிதம் வருமானம் வரும் என்று எதிர்பார்க்க முடியாது. எனவே குன்றுப் பகுதிகளில் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்குரிய வருவாய் விஷயங்கள் வேறு விதமாக மதிப்பிடப்படவேண்டும்," என்று பேசியிருந்தேன். அதற்கு போர்டார் அளித்திருக்கும் பதிலில், "[illegible] வருவாய் வரும்பொழுதே தேவைப்பட்ட

வருவாய்த் தரத்தை எய்த முடியவில்லை. எனவே இச் சதவிகிதத்தைக் குறைப்பது சாத்தியமாக இல்லை" என்று காணப்படுகிறது. என்னுடைய விளக்கம் என்னவென்றால், குன்றுப் பகுதிகளுக்கும் வேறு மாவட்டங்களுக்கும் நாம் மின்சார வேலை செய்யும்போது, சாதாரணமாக ஒரு கிராமத்திற்கு 40,000 ரூபாய் அளவில் திட்டம் தயார் செய்திருக்கிறோம் என்று சொன்னால், அந்தக் கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சப்ளை கொடுக்கிறோம். நாற்பதாயிரம் ரூபாய் செலவில் குன்றுப் பகுதிகள் இல்லாத வேறு மாவட்டத்தில் ஒரு திட்டத்தை நிறைவேற்றலாம் என்று சொன்னால், அந்தக் குறிப்பிட்ட எண்ணிக்கை வீடுகளுக்கு குன்றுப் பகுதி மாவட்டத்தில் மின்சாரம் அளிப்பதென்றால் அந்தத் தொகை போதாது. அதே திட்டத்தை நிறைவேற்ற அங்கே 60,000 ரூபாய் வேண்டியிருக்கும். எல்லா மாவட்டங்களிலும் 40 ஆயிரம் ரூபாய் செலவாகும்போது நீலகிரி மாவட்டத்தில் 60 ஆயிரம் ரூபாய் செலவாகும். சமப் பகுதியில் உள்ள ஒரு கிராமத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையினால் ஏற்படும் பலனைவிட, குன்றுப் பகுதியிலுள்ள ஒரு கிராமத்திலுள்ள அதே ஜனத்தொகைக்கு அந்தத் தொகை போதாது. அந்த இடத்தில் தொகை உயருகிறது என்பதைப்பற்றித்தான் விளக்கிச் சொன்னேன். அதைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு பதிலளித்து விட்டார்கள் என்று நான் கருதுகிறேன். இதை மறுபரிசீலனை செய்து, நீலகிரியிலுள்ள கிராமப்புறத்தில் இருக்கும் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 8 சதவிகிதம், 7 சதவிகிதம் வருமானம் வந்தாலும் போதும் என்று சப்ளை கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, எல்லா இடங்களுக்கும் ஒரே மாதிரியான முறையைத்தான் சொல்கிறேனே தவிர, எங்களுக்கு மாத்திரம் குறைத்து விடுங்கள் என்று நான் கூறவில்லை என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்த வரையில் லாபம் கிடைத்திருக்கிறது. நஷ்டம் ஏற்பட்டுவிடவில்லை. பல லட்சக்கணக்கான ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. மின்சாரத்தைப் பொறுத்த வரையிலும்கூட, அதிக லாபக் கண்ணோட்டத்தோடு, வியாபாரத் துறையிலே நம் சர்க்கார் கவனத்தைத் திருப்பிவிடக்கூடாது. அதிகத் தொழில் வளம் ஏற்பட வேண்டும். அதிகத் தொழில் உற்பத்தி ஏற்பட வேண்டும், நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோமே அல்லாது, மின்சாரத்தை விற்று அதிலிருந்து அதிகமாகக் காசு சம்பாதித்துக்கொண்டு, அதிலிருந்து லாபம் சம்பாதித்துச் சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தை வைக்கக்கூடாது. லாபமும் இல்லை, நஷ்டமும் இல்லை என்ற அளவிலே சீரான முறையில் இந்த இலாகாவை நாம் நடத்த வேண்டுமேயல்லாது லாபம் வருகிறதா என்ற கண்ணோட்டத்தில் நாம் இருக்கக்கூடாது என்று பணிவன்போடு நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மின்சாரக் கட்டணத்தைக் குறைத்தால் அதிகத்தொழில் வளம் ஏற்பட்டு, தொழில் வளத்திலிருந்து நாட்டிலே இருக்கும் வேலை



இல்லாத் திண்டாட்டம் ஒழிந்து நாட்டினுடைய வருவாய் அதிகரிப்பதற்கு ஏதுவாக இருக்குமென்று சொல்லிக் கொண்டு எந்த ஒரு காரணத்தைக் கொண்டும், லாபத்திற்காக மட்டும் இதைச் செய்யக்கூடாது என்று சொல்லி, இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-வது ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பேரில் இங்கு நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு என்னுடைய கருத்துக்களையும் சொல்வதற்குக் கிடைத்த வாய்ப்புக்கு நான் நன்றி செலுத்துகிறேன்.

தமிழ்நாடு மின்சார போர்டினுடைய நிலைமைகளைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இங்கு ஆற்றிய உரையும், அவர்கள் உரை அடங்கியுள்ள புத்தகத்தில் உள்ள அட்டவணைகளும் உண்மையிலேயே மிக அழகாக அமைந்து இருக்கின்றன. நம்முடைய மாநில மின்சாரத் துறையில், மூலதனத்திலாகட்டும், லாபத்திலாகட்டும், வருமானத்திலாகட்டும், எல்லாவற்றையும் மிக அழகாக அச்சடித்திருக்கிறார்கள். அந்த அழகான அட்டவணைகளை நாங்கள் என்றையதினமும் ஆட்சேபனை செய்ததில்லை.. அதெல்லாம் நமக்கு உண்மையிலேயே பெருமைதான். நாமெல்லாம் பாராட்ட வேண்டியதுதான். அதை நாங்கள் பல முறை இந்த மன்றத்திலே பாராட்டியிருக்கிறோம். அதே போல, அந்த அட்டவணையைவிட இன்னும் அழகாக அமைச்சர் அவர்கள் இங்கே ஆற்றியிருக்கும் உரையும் அமைந்திருக்கிறது. அந்தச் சொல் மிக அழகாக, கவர்ச்சியாக இருக்கிறதே தவிர, சில உண்மைகளுக்குப் பட்டுச் சீலை போடுவதாகத்தான் இருக்கிறது என்று அருள் கூர்ந்து உங்கள் அனுமதியின் பேரில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் நான் இப்படிச் சொல்கிறேன்? "எவ்வளவோ செய்திருக்கிறோம், அஸ்ஸாம் மாநிலத்தைப் பாருங்கள், பீகார் மாநிலத்தைப் பாருங்கள், அதைப் பாருங்கள், இதைப் பாருங்கள்" என்று சொல்வதைப் பார்த்து, ஏதோ எதிர்க்கட்சிக்காரன் என்ற இலக்கணத்திற்கேற்பக் குறையாகக் கூறவில்லை. இந்த மன்றத்திலே நாங்கள் பல நேரங்களில் எடுத்து வைத்த விவகாரம்தான். அதை அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் முன்னால் சமர்ப்பிப்பது எங்கள் பிரதான கடமை என்று நான் கருதுகிறேன்.

அமைச்சர் அவர்கள் பேசும்போது, 'மின்சார வெட்டு ஏற்பட்டதற்குக் காரணம், பருவ மழை தவறியது' என்று சொன்னார்கள். மின்சார வெட்டு ஏற்படுவதற்குக் காரணம் பருவ மழை தவறுவதுதான் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்வதற்கில்லை என்று மிகவும் வருத்தத்தோடு அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்கிறேன். மின்சார வெட்டுக்குக் காரணம் பருவ மழை தவறியது அல்ல என்று நான் வலியுறுத்திச் சொல்கிறேன். ஏன் நான் அப்படிச் சொல்கிறேன்

ஏன்றால், இந்தக் குறைபாட்டுக்குக் காரணம் நாம் திட்டமிடுவதில் ஊனம் இருக்கிறது என்பதுதான். சரியானபடி நாம் திட்டமிடாமல், நீர் மின்சாரத்தையே நம்பித் திட்டமிட்டதன் விளைவு தான் இது. பருவ மழைக் குறைவு என்கிற காரணத்தைச் சொல்வதில் பிரயோஜனம் இல்லை. பருவமழை பெய்கிற இயற்கைக் கோளாறு, முனிபுங்கவர்கள் இருந்த அனாதி காலந்தொட்டுத் தான் இருந்து வருகிறது. புதியது ஒன்றுமில்லை. ஆனால், சோஷலிச சமுதாயத்தில், ஜனநாயக அமைப்பில், திட்டமிட்ட பொருளாதாரத்திலும்கூட நீர்வழி மின்சாரத்திற்குத்தான் நாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறோம். அது மட்டும் போதாது. மற்ற வழிகளையும் நாம் கையாளவேண்டும் என்று பல நேரங்களிலும் எடுத்துச் சொன்னதை ஏற்காத காரணத்தால்தான், இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டது. ஆகவே, பருவ மழையை குறை கூறுவதிலே பிரயோஜனம் இல்லை.

நான் சிறைச்சாலையில் இருந்தபோது, அமைச்சர் அவர்கள் குந்தா திட்ட முதல் பவர் ஹவுசில் மூன்றாவது ஜெனரேட்டரைத் திறந்து வைத்த நேரத்தில் பேசிய உரையைப் பத்திரிகையிலே நான் படித்தது நன்றாக நினைவுக்கு வருகிறது. அவர் அங்கே பேசியபோது, "இந்த வருஷம் மின்சார வெட்டு ஏற்படாது." என்று ஏப்ரல் மாதத்தில் பேசினார்கள். அவருடைய ஆருடம் பொய்த்து விட்டது. ஜூன் மாதம் மின்சார வெட்டு வந்தது. அதே மாதிரித்தான் அமைச்சரின் பல ஆருடங்கள் பலிப்பதில்லை.

The Hon. Sri R. Venkataraman assured categorcially that there will be no power-cut.

THE HON. SRI R. VENKATARAMAN : If the monsoon comes in time.

திரு. கே. ஏ. மதியழகன் : மின்சார வெட்டு இருந்த 18 நாட்களில் மட்டும் பஞ்சாலைகளில் உற்பத்தியாக வேண்டிய துணி உற்பத்தியில் ஆறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 3,800 பேல் நூல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. 5,300 பேல் துணி உற்பத்தி நஷ்டமாயிருக்கிறது. இதனால் உற்பத்தி மட்டும் இந்த அளவு நஷ்டம். 96 பஞ்சாலைகளில் ஒரு லட்சம் தொழிலாளிகள் வேலை செய்யாதபோது அவர்களுக்குக் கொடுத்த தொகை கோயம்புத்தூரில் மட்டும் 71 லட்சம் 30 ஆயிரம் ரூபாய் ஆகும்.

இன்னொன்று கூட நான் சொல்வேன், நமது சர்க்காருக்கேகூட மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம் ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள மில்களின் மூலம் மின்சாரக் கட்டணமாக இந்தப் பதினெட்டு நாட்களில் இடைக்க வேண்டிய ஆறு லட்சம் ரூபாய் நஷ்டம். இதை நான் சொல்வதற்குக் காரணம் இவை எல்லாவற்றையும்விட நன்றாக உழைக்கும் நகரங்கள் சோம்பிக்கிடந்தன. கோயம்புத்தூரைச் சுற்றியுள்ள தெருக்களைப்போய்ப் பார்த்தால் எவ்வளவு இருள் சூழ்ந்து கிடந்தது என்று தெரியும். இந்த நிலைக்குக் காரணம் சர்க்கார் திட்டத்தில் உள்ள பலவீனமே தவிர



நிர்வகிக்கும் அதிகாரிகளின் குறையல்ல. நான் போன ஆண்டு பேசிய பொழுதே நீர் வழி திட்டத்தைப் பொருத்த மட்டில் எல்லாவற்றையும் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறோம், குறிப்பாக குந்தா மின்சாரத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றிய மின்சாரத்துறை தலைவர் அப்பாத்துரை அவர்கள் பெயரையே அத்திட்டத்திற்கு வைத்து அப்பாத்துரைத் திட்டம் என்று அதை அழைக்கலாம், என்று சொன்னேன்.

கனம் உதவி சபாநாயகர் : அதிகாரிகளின் பெயரை குறிப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : ரஷ்யா போன்ற நாடுகளில் இந்த வகையில் உழைப்பாளிகளை பாராட்டுகிறார்கள். இந்த மின்சார வெட்டு என்பது இந்த ஆண்டு மட்டும் நமக்கு ஏற்படவில்லை. வருஷாவருஷம் ஏற்படுகிறது. நாங்களும் இம்மாதிரி வெட்டு வருவதைத் தடுக்க இன்னென்ன வழிகளை மேற்கொள்ள வேண்டும் என்று திருப்பித் திருப்பி சொல்லி வருகிறோம். நாங்கள் சொல்லும் போது எல்லாம் சரியாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களே தவிர இந்த ஆண்டும் கூட மின்சார வெட்டு விழுந்திருக்கிறது. "இந்தக் கோடையில் ஏற்பட்ட அனுபவமானது மாநிலத்தில் நீர் மின்சார உற்பத்திக்கும் அனல் மின்சார உற்பத்திக்குமிடையே சீரான பொருத்தமில்லாத நிலைமையையே எடுத்துக் காட்டியது" என்று கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். (கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : மீண்டும் எடுத்துக்காட்டியது என்று குறிப்பிட்டுள்ளேன்) அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன், சங்கடமான கால கட்டத்தில் எல்லோரும் ஒத்துழைத்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி பாராட்டிப் போவதில் பயன் இல்லை.

நம்முடைய நீர் மின்சார உற்பத்திக்கும் அனல் மின்சார உற்பத்திக்கும் இடையே ஒரு சீரான இணைப்பு உடனடியாக ஏற்படும்படி ஆவன செய்ய வேண்டும். கல்பாக்கத்தில் அணு மின்சார நிலையத்தை ஆரம்பிக்க வேண்டும். என்னூரில், நாகப்பட்டிநத்தில், தூத்துக்குடியில் தர்மல் நிலயங்களை உடனடியாக ஏற்படுத்த முன் வரவேண்டும். இதைப்பற்றிச் சொன்ன நேரத்தில் எல்லாம் இவற்றிற்கு ஏதாவது பதில் சொல்லி வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் கூட என்னூரில் 300 மெகவாட் உற்பத்திக்கும் தூத்துக்குடியில் 100 மெகாவாட் உற்பத்திக்கும் ஆக இரண்டு அனல் மின்சார நிலையங்களை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்திய அரசாங்கம் அனுமதித்துள்ளது, என்று குறிப்பிட்டுள்ளார்கள். பூர்வாங்க நடவடிக்கை என்றால் என்ன? பூர்வாங்க நடவடிக்கைகள் என்று என்ன எடுத்திருக்கிறார்கள். கல்பாக்கத்தில் அணு மின்நிலையம் பற்றி என்ன முடிவு ஏற்படப்போகிறது என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உண்மையிலேயே நான் ஐப்பசி ஒன்றைச் சேலத்தைப்பற்றி எவ்வளவோ சொல்லப்பட்டது. அங்கே

கிடைக்கும் கனியை எங்கெங்கோ அனுப்பியிருப்பதாக சொன்னார்கள். மத்திய நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள் இதை வன்மையாக எதிர்ப்பதாகவும் சொன்னார்கள். பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதால் அதிகாரிகள் அங்கே போய் ஒன்றிரண்டு முறை பார்த்து வந்தது, ரோடு போடுதல், நில ஆர்ஜிதம்தான் பூர்வாங்க நடவடிக்கையா? இங்கே தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்துவது என்றால் இவ்வளவு காலதாமதம் ஆகிறபோது துர்க்காபூரில், குஜராத்தில் எப்படி தெர்மல் ஸ்டேஷன் வந்தது என்று யோசிக்க வேண்டும். நாம் சரியான முறையில் திட்டமிட்டு செயல்பட தவறிவிட்டோம். இதுதான் நம் திட்டத்திலுள்ள ஊனம். இப்பொழுதாவது அமைச்சர் அவர்கள் நம்முடைய கல்பாக்கம் திட்டம் எப்படி எப்போது உருவாகும் என்பதுபற்றி திட்டவட்டமாக தெளிவு படுத்த வேண்டும். மூன்று மாதங்களுக்கு முன்னால் அடாமிக் எனர்ஜி தலைவர் பம்பாய் விமான நிலயத்தில் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்—மார்ச்சு 18-ம் தேதி—“கல்பாக்கத்திலே அணு மின் நிலையம் ஏற்படுவது என்பது பற்றிய விவகாரம் பூர்வாங்க பரிசீலனையில்தான் இருக்கிறது, இன்னும் இந்திய சர்க்கார் இதைப்பற்றி முடிவு எடுக்கவில்லை” என்று சொல்லியிருக்கிறார்கள். ஏன் இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

The Government of India and the Planning Commission have promised clerance for advance action for two thermal projects to ge..orate 300 M.W. at Ennore on 100 M.W. at Tuticorin.

என்று ஒரே ஒரு வாக்குறுதியை மட்டும் அளித்து விட்டால் போதாது. ரெவின்யூ இலாகா அதிகாரிகள் அந்த இடத்தைப் போய் பார்த்துவிட்டு வந்தார்கள் என்பதை பூர்வாங்க நடவடிக்கையாக கொள்ள முடியாது. எங்களுடைய கட்சி பொதுக்குழு ஞாயிற்றுக்கிழமை கும்பகோணத்தில் கூடியபோது கல்பாக்கம் மின் நிலையத்தைப் பற்றியும் என்னூரிலும், தூத்துக்குடியிலும் அனல் மின் நிலையத்தைப் பற்றியும், சேலம் இரும்பாலைப் பற்றியும் சர்க்கார் போக்கில் மிக்க கவலைப்படும் வகையில் பலர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். எத்தனையோ திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டு, பூர்வாங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன என்று உறுதி அளிக்கப்பட்டு கைவிடப்பட்டன என்பதை பார்க்கிறோம். ரோலிங் மில் வரும் என்று சொல்லி அது கைவிடப்படவில்லையா? ஆகவே அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து இது பற்றி திட்டவட்டமாக தெளிவு படுத்த முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சர் அவர்களுடைய திறமையிலோ மின்சார போர்டினுடைய நிர்வாகிகளிடத்திலோ ஊழியர்களிடத்திலோ உள்ள திறமையைப் பற்றியோ எங்களுக்கு ஒன்றும் சந்தேகமில்லை. அமைச்சர் அவர்களுடைய நிர்வாகத் திறமை எனக்கு நன்றாகத் தெரியும். அவருடைய அறிவாற்றலைப்பற்றி நான் நன்றாக உணர்வேன். நான் அவருடைய திறமையை குறை சொல்வதாக நினைக்க கூடாது. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பொறுப்

D V211, 31 (N64)



A164.22



பையே ஏற்று நடத்தக்கூடிய ஆற்றலாளர்தான் கனம் அமைச்சரவர்கள். இன்றைக்கு இத்தகைய ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த ஒருவர் அந்த இலாகாவை நிர்வகிக்கும்போது மேல் நாட்டினர்களால் பாராட்டப்படுகின்ற திறனுடைய ஒருவர் அந்த மின்சார போர்டு தலைவராக இருக்கும்போது இத்தகைய குறைபாடு நீடிக்கிறது என்றால் உண்மையிலேயே இதை அகற்ற வேண்டும் என்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது நான் தெளிவாகிறது. ஹொகேனக்கல் திட்டத்தைப்பற்றி மைசூர் நிஜலிங்கப்பா அவர்களுடன் பேசுகிறோம் என்று சொல்லிக் கொண்டே இருந்தால் என்றைக்குத்தான் இந்த பேச்சு வார்த்தை முடியப்போகிறது. நாங்கள் ஒரு திட்டத்தை தயாரித்துக் கொடுத்தோம். மைசூர் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளாமல் வேறு ஒரு திட்டம் கொடுத்து இருக்கிறது என்றால் இவர்கள் கொடுத்த திட்டம் என்ன? அவர்கள் கொடுத்த திட்டம் என்ன? இது பற்றி பேசி முடிவு காண இத்தனை தாமதமா? உலகத்தையே ஒரு நாளில் சுற்றி வரக்கூடிய இந்த காலத்தில் மைசூருக்குப் போய் வர எவ்வளவு நேரமாகும். உடனடியாக இது பற்றி பேசி முடிவு காண தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் கனவு போல நினைத்துப் பேசுவதில் பயன் இல்லை. அமைச்சர் அவர்கள் இணைப்பைப் பற்றிச் சொன்னார்கள். தென்பிராந்திய கிரிட் வரும், பிறகு ஆல் இண்டியா கிரிட் அதக்கூடவரும் என்றார்கள். தென்பிராந்திய கிரிட்டோடு நிற்க வேண்டும். ஆல் இண்டியா கிரிட் கூடாது. கேடுதான் பயக்கும். கல்பாக்கம் அணு மின் நிலயம் 1,000 மெகாவாட் திறனுடையதாக அமைக்க வேண்டும். நெய்வேலி அனல் மின்சார நிலைய மெகாவாட் திறனை விரைவில் பெருக்க வேண்டும்.

600 008.

கேபிள் போன்றவற்றையெல்லாம் நாமே உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொன்னேன். அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எவ்வளவு காலத்திற்குத்தான் பரிசீலனையில் இருப்பது? இந்தச் சபை கலைவது வரை பரிசீலனையில் இருப்பதா? புதிதாக அடுத்த சட்டசபை மெம்பர்கள் வருகிற வரை பரிசீலனையில் இருப்பதா?

இன்னும் சில இடங்களில் ஜமீன் திட்டுகளைப் போல் எமெட்டு லைசென்ஸ்தாரர்கள் இருக்கிறார்கள். ஏதோ 15,000 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். நாகப்பட்டினம் பகுதியில் பல கிராமங்களில் மின்சார விஸ்தரிப்பு செய்யப்படவில்லை. தனிப்பட்ட லைசென்ஸ்தாரர்கள் மின்சார விஸ்தரிப்பைச் சரிவரச் செய்வதில்லை. ஆகவே, ஜமீன்களைப் போல் இருக்கும் தனியார் லைசென்ஸ்காரர்களையும் நீக்குவதற்கு வழி வகை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்னைகளில் பருவமழை இல்லாமையைக் காரணமாகக் காட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அணு மின்சார நிலையங்களை அமைப்பதன் மூலம் இதற்குப் பரிகாரம் தேட முடியும். அந்தப் பரிகாரத்தைச் சொல்லளவில் இல்லாமல் திட்டத்தைக்

[திரு. கே. ஏ. மதியழகன்] [17th July 1964

கொண்டு வருவதற்கு எல்லா ஆற்றலும் வாய்ந்த அமைச்சர் அவர்கள் முயலவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சார இலாகாவைப் பற்றி வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையின் மீது ஒருசில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். சென்னை மாகாணத்தினுடைய வளர்ச்சிக்கே காரணமாக இருப்பது மின்சார வளர்ச்சிதான் என்று சொன்னால் அது மிகையாகாது. விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் துரிதமான முன்னேற்றத்தில் அகில இந்தியாவிலும் பெருமைப்படக்கூடிய ஒரு இடத்தை அடைந்திருக்கிறோம். அதற்கு முற்றிலும் காரணமாக இருக்கக்கூடிய மின்சார இலாகா பாராட்டுக்குரியது என்று சொல்ல விரும்பப்படுகிறேன். பெரிய சிக்கலான குந்தா போன்ற திட்டங்களைக்கூட குறுகிய காலத்தில், ஏற்கனவே திட்டமிட்டிருந்த காலத்தையும் விடக் குறைந்த காலத்தில் அந்நிய நாட்டு நிபுணர்கள் எல்லாம் கூட வியக்கத் தக்க வகையில் நிறைவேற்றியதைப் பாராட்டாமல் இருப்போமானால், அவ்வாறு பாராட்டாமல் இருப்பவர்கள் நல்லதைப் பாராட்டத் தெரியாதவர்கள். தவறியவர்கள் என்றுதான் கூற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் அவர்கள் எதிலும் நம்பிக்கையே இல்லாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் மேலேயே அவர்களுக்கு நம்பிக்கை இல்லாத நிலையிலே அரசாங்கத் திட்டங்களில் நம்பிக்கை இல்லாது பேசினார்கள். எந்த நாடும் முன்னேற வேண்டுமென்றால் நம்பிக்கையோடுதான் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். நம்பிக்கை இல்லாமல் என்ன நடக்குமோ, நாளைக்கு இருப்போமோ என்று எண்ணிக் கொண்டிருந்தால் எந்தக் காரியத்தையும் செய்யமுடியாது. நம்பிக்கையோடுதான் நாம் முன்னேற முடியும். போடுகிற திட்டங்கள் எல்லாம் வராது, ஹொகேனகல் திட்டமா வராது, கல்பாக்கம் அணு மின் நிலையமா வராது, சேலம் இரும்பு கரும்பாக மாறிவிட்டது என்று சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி முன்னேற்றம் ஏற்பட முடியும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** 'கரும்பாக மாறிவிட்டது' என்று சொன்னால் அதை வரவேற்பார்கள்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** நாம் இரும்பு என்று சொன்னால் அவர்கள் கரும்பு என்று சொல்ல ஆசைப்படுவார்கள் என்ற காரணத்தால்தான் 'கரும்பு' என்று சொன்னேன். எத்தனையோ திட்டங்களைத் திறமையாக நாம் நிறைவேற்றி இருக்கிறோம். அதோடு நாம் விழிப்போடு இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் பல புதிய திட்டங்களையும் நாம் இந்தச் சபை முன் கொண்டு வருகிறோம். ஏதோ இவர்களுக்காகத் திட்டம் தீட்டுவது மாதிரிப் பேசினார்கள். மக்களுக்காகத் திட்டங்கள் தீட்டப்படுகின்றனவே தவிர, மாற்றுக் கட்சிக்காகப் பயந்தோ, மாற்றுக் கட்சியினரிடமிருந்து அறிவை இரவல் வாங்கியோ



17th July 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

திட்டம் தீட்ட வேண்டிய நிலைமை இல்லை. மின்சார இலாகா போட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் மகத்தான திட்டங்கள். இனிமேல் மின்சார வெட்டு என்ற நிலைமை ஏற்படாதவாறு தடுப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். ஆயினும் பருவ மழை தவறியதால் மின்சாரத் தடை ஏற்பட்டது என்பதை ஒரு பெரிய குற்றச்சாட்டாகக் கூறுவதில் பொருளில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் சட்டம் பயின்றவர்கள்தான். சட்டத்தில் 'விஸ் மேஜர்' என்று உண்டு. மனிதனுடைய சக்திக்கு அப்பாற்பட்ட நிலையில் தவறுகள் ஏற்பட்டு விடலாம். பருவ மழை தவறி விட்டது அரசாங்கத்தின் சக்திக்கு அப்பாற்பட்டது. அதற்குக் காரணம் மக்களின் அதிர்ஷ்டக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். அதே சமயத்தில் நாம் நன்றாகச் சிந்தித்து அத்தகைய நிலைமைகளையும் தவிர்க்க முடியும் என்ற வகையிலேதான், அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற முயற்சியில் ஈடுபடுகிறோம். அந்த மாதிரி அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தும்போது எந்தெந்த மாவட்டங்களில் அதிகத் தொழில்கள் இருக்கின்றன என்று பார்த்து அங்கே தொடங்கலாம். ஆங்காங்கு உள்ள தொழில் அதிபர்களே முன்வந்து தனியார் துறையில் அனல் மின்சாரம் நிலையம் அமைக்க அனுமதி கொடுக்கலாம். (குறுக்கீடு) அவர்கள் முதலாளிகள் என்று சொன்னால், அந்த முதலாளிகளிடம் இருந்து எப்படிப் பணத்தை வாங்குவது என்றும் தெரியும். தேவைப்பட்டால் தேசிய மயமாக்கவும் முடியும். தொழிலுக்கு எவ்வாறு மின்சாரம் கொடுப்பது அவசியமோ அதேபோன்று கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதும் மிகவும் முக்கியமானதாகும். இது வரை சற்றேறக்குறைய 16,826 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்திருக்கிறோம். மூன்றாவது திட்ட கால முடிவிற்குள் 19,000 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டிருக்கிறோம். கிராமத்திற்கு மின்சாரம் கொடுப்பதன் காரணமாக அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலையே மாறுகிறது. தங்கள் கிராமங்களில் மின்சாரம் இல்லை என்றால் பக்கத்தில் மின்சாரம் இருக்கக்கூடிய கிராமத்தில் போய்க் குடியேற மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுப்பதில் முழு கவனம் செலுத்த வேண்டும். அவ்வாறு மின்சாரத்தைக் கொடுப்பதன் காரணமாக சென்னையிலே இருப்பவர்களைப் போல் பத்து மடங்கு வசதியோடு அவர்கள் வாழக் கற்றுக் கொண்டார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து விட்டது. தொழில் வளர தொழிற் பகுதிகளுக்கும் விவசாயம் வளர கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்பது மிகவும் அவசியமாகும். அந்த வகையில் நாம் மகத்தான வளர்ச்சி அடைந்திருக்கிறோம். குறிப்பாக சில இடங்களில் உள்ள லைசென்ஸ்தாரர்கள் சரியானபடி விஸ்தரிப்பைச் செய்வதில்லை. அரசாங்கம் திடீரென்று அவற்றைத் தேசிய மயமாக்கிவிடுமோ என்ற பயத்தில் புதிய விஸ்தரிப்புக்களைச் செய்ய முன்வர மாட்டேன் என்கிறார்கள். அவ்வாறு விஸ்தரிப்புச்

செய்யவேண்டுமென்று சொன்னால் அரசாங்கத்திலிருந்து கடன் வாங்கிக் கொடுங்கள், விஸ்தரிக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவ்வாறு அரசாங்கத்தை நாங்கள் அணுகி அதற்கான தொகை ஒதுக்கப்பட்டு அவர்கள் விஸ்தரிப்புச் செய்வதற்கு மிகுந்த கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, அந்த லைசென்ஸ்தாரர்கள் எல்லாம் கட்டாயமாக இன்னின்ன பகுதிகளுக்கு மின்சார விஸ்தரிப்பைச் செய்துதான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்தினால் வேலை துரிதமாக நடக்க வழி ஏற்படும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி ஏரியாக்களை 'சீஸ்' பண்ண வேண்டுமென்று போன வருஷம் ரிப்போர்ட்டில் கூறியிருக்கிறோம்.

திருமதி டி. என். அனந்தநாயகி: அது மகிழ்ச்சிக்குரியது. If we seize the areas, we can give electrification. இது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது. இதன் மூலம் பல கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க முடியும்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் வட சென்னையில் ஒரு தெர்மல் ஸ்டேஷன் ஏற்படுத்தினால் நல்லது. என்னூர் பகுதியில் ஆரம்பிக்க இருக்கிறது என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது. மேற்கு சென்னையில் பல தொழில்களை ஆரம்பிக்கிற காரணத்தால் இப்போது ஏற்படுத்த இருக்கும் தெர்மல் ஸ்டேஷன் இரண்டுக்கும் போதுமானதாக இருக்குமா என்று தெரியவில்லை. ஆகவே, இன்னும் ஒன்று ஆரம்பித்தால் நன்றாக இருக்கும். வட சென்னையில் விளக்குகள் எல்லாம் மங்கலாக ஹரிகேன் லைட் மாதிரி எரிகிறது. நல்ல வெளிச்சமாக எரியாததற்கு என்ன காரணம் என்பதை டெக்னிகல் பீப்பிளை வைத்து ஆராய்ந்து பரிகாரம் காணவேண்டும். எலக்ட்ரிசிடி திடீரென்று நின்றுவிட்டால் சென்னையில் உடனே சரிசெய்யப்பட்டு எலக்ரிசிடி வந்து விடுகிறது. ஆனால் வெளி இடங்களில் அவ்வாறு உடனே சரி செய்யப்படுவதில்லை. அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. தற்போது சென்னையிலுள்ள தேவஸ்தான வீடுகளில் எல்லாம் மின்சார விளக்குகள் கிடையாது. பெரிய வீடுகளாக இருக்கின்றன. பத்துப் பதினைந்து வீடுகள் இருக்கின்றன. தேவாலயங்களைச் சேர்ந்தவர்கள் மின்சார விளக்குகளைப்போட முன்வரவில்லை என்றாலும் மின்சார இலாகாவாவது அக்கறை காட்டி துரிதமாக அங்கு மின்சார விளக்குகளை போட்டால் மக்களுக்கு நன்மையாக இருக்கும்.

12-30 p.m. அதோடு, பல இடங்களிலும் எலக்ட்ரிஸிட்டி வொர்க்கர்களுக்கு க்வார்ட்டர்ஸ் கட்டி கொடுத்திருக்கிறார்கள். இவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். ஆகவே நகரத்திலிருக்கின்ற தொழிலாளர்களுக்கும் நல்லமுறையில் க்வார்ட்டர்ஸ் செய்து கொடுக்கவேண்டும். அப்படி செய்து கொடுத்தால் இன்னும் நாம் பாராட்டுக்கு உரியவர்களாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த துறையில் உழைக்கின்றவர்களுக்கு நல்லவசதி செய்து கொடுக்கவேண்டும். திறமையாகவும், நல்லமுறையிலும் வேலை செய்கின்ற இந்த தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கவேண்டியது மிகவும் அவசியம். மேலும் அபாயகரமான சூழ்நிலையில் இவர்கள் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. நாம் அடிக்கடி பத்திரிகைகளில் பார்க்கின்றோம். ஹைடென்ஷன் பவர் போகின்ற இடத்தில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர் மாண்டுவிட்டார் என்றெல்லாம் செய்திகளை பார்க்கிறோம். இம்மாதிரி அபாயத்தில் ஈடுபடுகிறவர்களுக்கு நல்லமுறையில் இன்ஷூரன்ஸ் வசதி செய்து கொடுக்கவேண்டும். இவ்விதமான வசதிகள் செய்து கொடுப்பதன் மூலமாக இன்னும் திறமையான முறையில் இந்தத் துறையிலுள்ள தொழிலாளர்கள் வேலை செய்வதற்கு வழி ஏற்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





விவசாயிகளுக்கு சலுகைகள் கொடுக்கின்ற விஷயத்தில், அவர்களுக்கு துரிதமாக சலுகை செய்து கொடுக்கவேண்டும். இப்போது பலவிதமான முறையில் அவர்களுக்கு சார்ஜ் போடப்படுகிறது. அவர்கள் பம்ப் செட் ஏற்படுத்துவதற்காக எவ்வளவோ கஷ்டப்படவேண்டியிருக்கிறது. உதாரணமாக சொல்லப்போனால், ஒருவர் காஞ்சிபுரத்திற்கு அப்ளிகேஷன் கொண்டு கொடுத்தபோது, திருவள்ளூரில் கொண்டுபோய் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். பின்னால் மூன்று மாதம் கழித்து திருவள்ளூரிலிருந்து காஞ்சிபுரத்தில்தான் கொடுக்கவேண்டும் என்று திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இவ்விதமாக கஷ்டங்களை கொடுக்காமல், இன்னின்ன இடங்களுக்கு இன்னின்ன இடங்களில் மனுச்செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்குச் சொல்லிவிட்டால் அவர்களுக்கு இவ்விதமான சிரமங்கள் ஏற்படாது பார்த்துக் கொள்ளலாம். இந்த விவரங்களை நன்றாகத் தெரிந்து கொள்ளாமல், கள்ளங் கபடமற்ற, பள்ளிக்கூடத்திலேயே ஒதுங்காத விவசாயிகள் எப்படி வாங்குவது, யாரிடத்தில் கேட்பது, என்று தெரியாமலே இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தந்த பிளாக் லெவலில் இதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தால் இன்னும் நல்ல முறையில் பாராட்டக் கூடியதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்தத் துறையை எல்லோரும் பாராட்டுகின்ற முறையில் நிர்வகித்து வருகிறார்கள். ஆடிட்டில்கூட, இரண்டே நாளில் ஒன்றிரண்டு குற்றங்களை மட்டும் தான் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் ஸ்டேட் ரீ-ஆர்கனைசேஷன்-னில் நான்கு லட்சம் ரூபாய் வசூல் ஆகவில்லை என்றும், உபயோகிப்போர்களிடமிருந்து இரண்டு லட்சம் ரூபாயும், இன்னும் இரண்டு லட்ச ரூபாயும் வசூலாகவில்லை என்று மட்டும் குறையை குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை பெரிய குறையாக எடுத்துக்கொள்வதற்கில்லை. இந்தத் துறை இன்னும் வேகமாக நடைபெறவேண்டும்.

அணு சக்தி மின்நிலையம் ஏற்படுத்துகின்ற விஷயத்தில் நாம் ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும். இதில் ஒரு சிறு தவறு வந்தால்கூட, இதை திறமையாக நடத்த முடியாது என்று சொல்லு

கின்றார்கள். ஆகவே இதை திறமையாக நடத்துவதற்கு சென்னை நகரம் தான் உரிய இடம் என்று தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆகவே இதை திறமையாக, மின் வேகத்தில், சிறப்பாக நடத்தி, மற்றவர்களுக்கு நம்முடைய மாநிலம் ஒரு வழிகாட்டியாக அமைய வேண்டும். எதிர்கட்சியினருக்கும் இந்த நாட்டில் நல்லமுறையில் வாழமுடியும் என்ற நம்பிக்கையையும் ஊட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. வி. எஸ். எஸ். மணி**: கனம் துணைத் தலைவர் அவர்களே, மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த சில நாட்களாக ஏற்பட்ட அனுபவத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்து கொண்டிருக்கும்போது, குறிப்பாக பெரிய மில்களில் திடீரென மின்சாரம் தடைசெய்யப்பட்டு விடுகிறது. இந்தவிதமாக முன்னறிவிப்பும் இல்லாமல் மின்சாரம் தடைசெய்யப்படுகின்ற காரணத்தால் ஓடிக்கொண்டிருக்கும் இயந்திரங்கள் எல்லாம் பழுதடைந்து பெருவாரியான நஷ்டங்களுக்கு ஆளாகுகிறார்கள் பெரிய மில் அதிபர்கள். அது மட்டுமல்ல. தொழிலாளர்கள் தொழிற்சாலைகளில் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டால் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வேலை செய்தால்கூட, முழு நேர சம்பளம் கொடுக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் மில் அதிபர்களுக்கு பெருவாரியான அளவில் நஷ்டம் ஏற்பட்டு விடுகின்றது என்பதை உங்கள் மூலமாக மின்சார போர்டாருக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தெருவிளக்கு சம்பந்தமாக, சில பஞ்சாயத்து பகுதிகளில் தெரு விளக்குகளுக்காக ஸாங்ஷன் செய்தும், அதற்குரிய பணத்தை கட்டின போதிலும் பல ஆண்டுகளாக வேலை துவக்கப்படாமல் இருந்து கொண்டிருப்பதைப்பற்றி என்னுடைய தொகுதிகளிலுள்ளவர்கள் என்னிடத்தில் புகார் செய்து வருகிறார்கள். எனது மதுரை பா வட்டத்தில், ரெட்டியார் சத்திரம் யூனியனைச் சார்ந்த டி. புதுப்பட்டி பஞ்சாயத்து, கோடல்வாவி பஞ்சாயத்து முதலிய பகுதிகளில் 1960-ல் தெரு விளக்குக்காக ஸாங்ஷன் செய்து அதற்கான பணத்தை கட்டியும், நான்கு வருஷங்களாக பெரு முயற்சி செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுத்திருப்பதாக தெரியவில்லை. இதைப்பற்றி என்னிடம் புகார் சொன்னார்கள். இந்த நிலை உண்மையிலேயே இருக்குமானால், கிராமங்கள் தோறும் நாங்கள் தாராளமாக மின்சாரத்தை கொடுத்துவிட்டோம் என்று சொல்வது பொய்யாகத்தான் இருக்கும். ஆகவே இந்த நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு மின்சாரம் மிகவும் உதவியாக இருக்கிறது என்று நாம் அனைவரும் சொல்லுகிறோம். இதன் மூலம் உற்பத்தியை அதிகப்படுத்த முடியும் என்று சொல்லுகிறோம். ஒவ்வொரு விவசாயியும் மிகவும் கஷ்டப்பட்டு தன்னுடைய பொருட்களை எல்லாம் விற்று தன்னுடைய கிணற்றுக்கு மோட்டார் பம்பு வைக்கவேண்டும் என்று விரும்பி மோட்டார் பம்பு வைக்கிறான். அவ்விதம் பம்பு செட்டு வைத்த பின்னர் மின்





சாரத் துறை அதிகாரிகளிடம் போய் பெர்மிஷன் வேண்டும் என்று கேட்கும்போது முன் தொகை டிபாசிட்டு கட்ட சொல்லிவிட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் இருப்பதின் காரணமாக பல ஆண்டுகளாக கனக்ஷன் கிடைக்காத நிலை ஏற்படுகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் இந்த நிலையை இருந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது என்று கேட்டால், அந்த ஏழை விவசாயிகள் என்ன சொல்லுகின்றார்கள் என்றால், ஏதோ மேல் மட்டத்திலுள்ள அதிகாரிகள் எல்லாம் நல்ல முறையில்தான் பணியாற்றுகின்றார்கள். ஆனால் கீழே இருக்கக் கூடிய-கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகள் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய மாமூல் என்றும் தொகையை கொடுத்தால் தான் கனக்ஷன் கொடுப்பார்கள் என்றும், அவ்விதம் கொடுக்க மறுத்தாலோ கனக்ஷன் கொடுப்பதில்லை என்றும் சொல்லுகிறார்கள். இந்தவிதமான குற்றச்சாட்டுகள் எல்லாம் வந்தன. இதைப்பற்றி அந்தந்த காலத்தில் மேல் அதிகாரிகளுக்கும் தெரிவித்திருக்கிறேன். ஆகவே இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மின்சாரக் கட்டணத்தை ஒரு குறித்த காலத்தில் கட்டத் தவறினால் கனக்ஷனை வெட்டிவிடுகிறார்கள். மீண்டும் கனக்ஷன் கொடுக்கவேண்டும் என்றால் ஐந்து ரூபாய் பெனல்டி கட்டவேண்டிய விதி இருக்கிறது. அதுவரை "ஃப்யூஸை" எடுத்துவிடுகிறார்கள். இவ்விதம் ஐந்து ரூபாய் என்ற விதி வைத்திருப்பது மிகவும் அதிகமாக இருக்கிறது. இதை குறைக்கவேண்டும். ஏதோ குறித்த காலத்தில் கட்டவில்லை என்பதற்காக பெனல்டி போடவேண்டுமென்றால் ஒரு ரூபாய் அல்லது இரண்டு ரூபாய் என்று போட்டால் போதுமானது. அவ்விதமில்லாமல் ஐந்து ரூபாய் என்றிருப்பது மிகவும் பாதமாக இருக்கிறது என்று கருதுகிறேன். இந்த விதியை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை நகரத்தில் ஒரு நாள் ஏற்பட்ட மின்சார வெட்டின் காரணமாக என்ன நிலை ஏற்பட்டது என்பதைப்பற்றி அங்குள்ள ஒரு செய்தித் தாளில் தலையங்கம் எழுதியிருந்தார்கள். அதை வாசித்து காட்ட ஆசைப்படுகிறேன் . . .

**கனம் உதவி சபாநாயகர்**: கனம் அங்கத்தினர் செய்தித் தாளில் இருப்பதைப் படிக்கக் கூடாது.

**திரு. வி. எஸ். எஸ். மணி**: மதுரையில் முன் அறிவிப்பு இல்லாமல் திடீரென்று மின்சாரம் தடை செய்யப்படுவதால் நகரமே இருளுக்குள் ஆழ்ந்தவிடக் கூடிய நிலை ஏற்படுகிறது. நகரத்தில் இருக்கக்கூடிய பெரிய வியாபாரிகள் கடையில் பணத்தை எண்ணிக்கொண்டிருக்கும்போது மின்சாரம் நின்றுவிட்டால், அந்த பணத்திற்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது என்று தெரியவில்லை. ஒருவன் அறை குறையாகச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மின்சாரம் தடைபட்டுவிட்டால் அவன் கைகளை அலம்பக்கூட வெளிச்சம் இல்லாமல் கஷ்டப்படுகிறான். இந்த விதமாக மின்சாரத் தடை மதுரையைப் பொறுத்த வரையில்

அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது. மதுரை வாசிகள் அதிகாரிகளை அணுகிக் கேட்டால் காரணம் சரியாகச் சொல்லப்படுவதில்லை என்ற புகார் வந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இதைப்பற்றி மின்சார கழகத்தார் கவனித்து தகுந்த பரிகாரம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. கே. எஸ். நடராஜ கவுண்டர்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ் நாட்டிலே தொழிலும் விவசாயமும் நன்கு முன்னேறியிருக்கிறது. தொழில்கள் வளர்ச்சி அடைய அடைய, விவசாயம் பெருகப் பெருக மின்சாரத்தின் தேவை அதிகரித்துக் கொண்டு போகிறது. அந்த முறையிலே நம் தமிழ்நாட்டு அரசாங்கமும், மின்சார துறையில் வேலை செய்கிறவர்களும் சிறந்த முறையிலே, இந்தியாவிலேயே பாராட்டக் கூடிய அளவுக்கு தங்களுடைய திறமையான நிர்வாகத்தையும் சிறந்த சேவையையும் செய்திருப்பதற்கு நான் முதலிலேயே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அத்தகைய நன்றியை யாராவது தெரிவித்துக் கொள்ளாமல் இருந்தால் அவர்கள் இந்த நாட்டிலே பெரிய தவறு செய்தவர்கள் ஆவார்கள். இன்று, வளர்ச்சி அடைந்துகொண்டு போகும் சமுதாயத்தில் மின்சாரம் மிகவும் இன்றியமையாததாகும். ஆனால் இன்றைக்கு சில காலங்களிலே இயற்கை அன்னையின் கோபத்திற்கு இலக்கு ஆகும்போது மின்சார வெட்டுகள் ஏற்பட்டன. ஆனால் இயற்கை அன்னையின் கோபத்தினால் வெட்டு ஏற்படுவதை வைத்துக்கொண்டு, இதனாலேயே நாடு அழிந்துவிட்டது, நமக்கு பெரிய நஷ்டம் ஏற்பட்டு விட்டது என்று கூறி முடித்துவிட முடியாது. எதிர் கட்சியில் உள்ள துணைத் தலைவர் அவர்கள் கடந்த காலத்தைப் பற்றி ஆருடம் நன்கு கணிப்பார்கள். நன்றாகவும் சொல்லுவார்கள். ஆனால் எதிர் காலத்தைப்பற்றி ஆருடம் சொல்லவும் தெரியவில்லை, சொல்லுவதும் சரியாக இருக்காது. மனிதன் விஞ்ஞான யுகத்தில் போராடிக் கொண்டிருக்கும் காலம் இது. இந்தக் காலத்திலே நம்முடைய தமிழகத்திலே விஞ்ஞான உலகத்துடன் போராடி பாரதத்திற்கே பெருமை தேடித்தரத் தக்க வகையில் மிகுந்த திறமைசாலியாக இருக்கிறார் அமைச்சர் வெங்கட்டராமன் அவர்களும், இந்த மின்சார போர்டுக்கு தலைமை வகிக்கும் அதிகாரிகளும் மற்ற ஊழியர்களும். அலையிலிருந்து மின்சாரத்தை ஏற்படுத்துவதா, அணுவிலிருந்து மின்சாரத்தை ஏற்படுத்துவதா, தெர்மல் ஸ்டேஷன்கள் மூலமாக மின்சாரத்தைப் பெருக்குவதா, அல்லது இதையெல்லாம் காட்டிலும் இயற்கை அன்னையின் சீற்றத்தால் வெள்ளம் வருகிற காரணத்தினால் எல்லா நதிகளையும் ஒன்றுக்கொன்று இணைத்து எல்லா நதிகளையும் வற்றா நதிகளாக்கி அதிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதா என்று பார்த்துச் செய்ய வேண்டியிருப்பதால் நாம் செய்ய வேண்டியது பெரிய சேவை



யாகும். இதைத்தான் அலையிலே, அணுவிலே, சூரிய ஒளியிலே, காற்றிலே அல்லது வேறு என்னென்ன வகையிலே மின்சாரம் உற்பத்தி செய்யலாம் என்று அமைச்சர் அவர்களும், அவர்கள் இலாகாவும் சிறந்த முறையிலே அதற்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லும்போது, 19,000 கிராமங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறும்போது சில நண்பர்கள் சில பஞ்சாயத்துக்களுக்கே மின்சாரம் கிடையாது என்று சொல்லுகிறார்கள். இன்றைக்கு கிராமம் என்று சொன்னால் பஞ்சாயத்து இல்லாத கிராமமே இந்திய நாட்டில் கிடையாது. நான் ஒரு கிராம வாசி என்ற முறையில் சொல்லிக் கொள்கிறேன், விவசாயத் துறையில் எங்களுடைய ஊருக்கு அருகாமையில் உள்ள எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு, உறங்கிக் கிடந்த கிராமங்கள் விழிப்பு அடைந்து, சிறு தொழிலிலும், விவசாயத்திலும் நல்ல முறையில் முன்னேற்றம் அடைந்து வாழவழி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் சில காலங்களில் மின்சார வெட்டு ஏற்படும்போது அதற்காக அணு மின்சார நிலையம் அமைப்பதைப் பற்றிப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னால், உடனடியாகச் செய்யவில்லை, அவர்கள் தவறிவிட்டார்கள், அதற்கு அரசாங்கம்தான் பொறுப்பு, அதற்கு அமைச்சர்தான் பொறுப்பு என்று சொல்லுகிறார்கள். இந்திய நாட்டில் திட்டமிட்டுச் செயல்படும்போது எந்தத் திட்டமாக இருந்தாலும் நிபுணர்களால்தான் தங்களுடைய தொழில் நுணுக்க அறிவுகளை வைத்துக் கொண்டு, விஞ்ஞான அறிவை வைத்துக்கொண்டு திட்டங்களை உறுதியாகச் செய்ய முடியும். எதிர் கட்சி நண்பர்கள் வட நாட்டில் திட்டங்களையெல்லாம் பெரிது பெரிதாகச் செய்து முடித்து விட்டார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் எதிர் கட்சி துணைத் தலைவர் அவர்களிடம் ஏதாவது மந்திரக் கோல் இருந்து இந்தத் திட்டங்களையெல்லாம் ஒரே நாளில் ஆக்கிக் கொடுக்க முடியும் என்றால் பாராட்டலாம், போற்றலாம், அவர்களுக்கு வாழ்த்து கூறலாம், நீடூழி வாழ்க, வாழ்க என்று மாலை அணிவிக்கலாம். மின்சார வெட்டுகள் ஏற்படாமல் இருக்க சரிவர கவனம் செலுத்த அரசாங்கம் முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அணு மின்சார நிலையம் அமைத்தாவது, அனல் மின்சார நிலையம் அமைத்தாவது, கடல் அலை மின்சார நிலையம் அமைத்தாவது, அல்லது ஆறுகளை இணைத்தாவது வரும் காலத்தில் மின்சார வெட்டு இல்லாமல் செய்வார்கள் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு இருக்கிறது. அந்த முறையிலே அவர்களைப் பாராட்டிக்கொண்டு, இன்னும் நம் நாட்டில் இவைகளையெல்லாம் செய்து முடித்தாலும்கூட, தொழில் வளர்ச்சி ஏற்படும்போது, கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுத்தாலும், அணு மின்சார நிலையம் ஏற்படுத்தி மின்சாரம் எடுத்தாலும் எப்படியோ இந்த நிலைமை சரியாகப் போய்விடும் என்று நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் மீண்டும் நமது தேவைகள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கிறது. அந்த முறையில் [illegible] தேவை

அதிகரிக்க அதிகரிக்க, புதிய புதிய முறைகளைக் கொண்டு நம் அரசாங்கம் ஆவன செய்யும் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டு, இதற்காக என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, இருக்கக் கூடிய குறைகள் இரண்டொன்றை மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுக்கும்போது சில சந்தர்ப்பங்களில் கஷ்டமாகப் போகிறது. சோளம் போன்றவற்றிக்கு இரவில் தண்ணீர் பாய்ச்சுவது கஷ்டமாக இருக்கிறது. பகலில் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணத்தை உயர்த்தாமல் இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. செ. மாதவன்:** மதிப்புக்குரிய துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே இந்த அரசாங்கமும், மின்சார போர்டும், மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கும், மின்சாரத் திட்டங்களை விரிவுபடுத்துவதற்கும் ஆற்றியிருக்கிற தொண்டுகளுக்குப் பாராட்டுத் தெரிவிப்பது பொருத்தமுடையது என்றே கருதுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட பல திட்டங்களை நிறைவேற்றிய பின்னாலேகூட நம் மாநிலத்தில் ஆண்டுதோறும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டு வரக்கூடிய சூழ்நிலையைத்தான் வருத்தத்தோடு நாங்கள் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். இதில் உள்ள சிக்கலைப் பற்றி நம் அமைச்சரே நன்றாக உணர்ந்திருக்கிறார். தண்ணீர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதை மட்டும் நம்பியிருப்பதால் ஏற்படக்கூடிய விளைவுதான் இதற்குக் காரணம் என்பதை அவர்கள் உணர்ந்துதான் தன்னுடைய உரையிலேகூட அனல் மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பற்றியும், அலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதைப் பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் எங்கள் தரப்பிலிருந்து தெரிவித்துக்கொள்ளப்பட்ட கருத்துக்களெல்லாம் எங்கள் உள்ளத்திலே ஏற்படக்கூடிய அச்சத்தின் விளைவால் ஏற்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் உணருவார்கள் என்று நம்புகிறேன். அனல் மின்சாரத் திட்டம் என்றால், அது நம்முடைய மாநிலத்தில் திட்டம் போடுவதோடு நின்றுவிடாது, மத்திய சர்க்கார் அனுமதி அதற்குத் தேவை என்ற நிலை இருப்பதினால், மத்திய சர்க்காருடைய திட்டக்குழு இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவில் எவ்வளவு ஆதரவு கொடுத்திருக்கிறது என்ற நிலையை கடந்த கால சரித்திரத்திலிருந்து பார்க்கும் போதுதான் எங்களுக்கு அச்சம் ஏற்படுகிறது. ஆகையால் அந்த அச்சத்தை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். சேலம் இரும்பு ஆலைக்கு ஏற்பட்ட சூழ்நிலையை நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதே நிலையில் அனல் மின்சாரத் திட்டங்களும் ஏட்டு அளவில், பேச்சு அளவில் நின்றுவிடாமல், நிச்சயம் ஆக்க வேலையாக மாறி



னால்தான் மின்சாரத் தட்டுப்பாடு நம்முடைய மாநிலத்தில் வாராமல் இருப்பதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்தை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

மின்சார போர்டுக்கும், நம்முடைய மாநில அரசுக்கும் எத்தகைய தொடர்பு இருக்கிறது என்பதில் இன்னும் ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வாராமல் இருப்பது வருந்தத்தக்கதொன்றாகும். 1957-ம் ஆண்டிலே இந்தக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட அஸெட்ஸில் எந்த அளவுக்கு நம்முடைய மாநில அரசுக்கு உரிமை இருக்கிறது என்பதை இன்னும் திட்டவட்டமாக வரையறுக்காமல் இருப்பது வருந்தக்கூடியதாகும். சுமார் ரூபாய் 71 கோடி மூலதனமாக கணக்குக்காட்டுப்பட்டு அது கடனாக பாவிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டிருப்பதை நாம் அறிக்கையில் பார்க்கும்பொழுது, அந்த 71 கோடி ரூபாய்க்கு நம்முடைய அரசாங்கத்திற்கு உரிமை என்ன என்று வரையறுப்பதற்கு இன்னும் ஏன் முடியாமல் இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். எனக்குத் தோன்றக்கூடிய காரணம் எல்லாம் இது மத்திய சர்க்காருடைய பிடிப்பிலே சென்றுவிடுமோ என்பதுதான். அப்படி சென்றுவிட்டால் இந்த 71 கோடி ரூபாயின் கதி என்னவென்று அச்சம் எங்கள் பக்கத்தில் இருக்கிறது. நான் இதிலுள்ள குறைபாடுகளை சொல்லிக்கொள்ள முற்படுகிறேன். ரூபாய் 72 கோடிக்கு வட்டியாக வசூலிப்பது எவ்வளவு லட்சம் என்று நாம் கணக்குப் பார்த்தோமானால், கடன் வாங்கி அந்தக் கடன் மூலம் தொழில் நடக்கிறது என்றால் அந்தத் தொழில் எப்படி உருப்பட முடியும் என்று நாம் சந்தேகப்படுகிறோம். கடனுக்கு வட்டி கொடுப்பதுதான் மின்சார போர்டின் வேலை என்ற ஒரு நிலை இன்றைக்கு நம்முடைய மாநிலத்தில் இருப்பது வருந்தத்தக்க ஒரு சூழ்நிலையாகும். இதற்கு எவ்வளவு விரைவிலே ஒரு முடிவு கட்ட முடியுமோ அவ்வளவு விரைவிலே முடிவு கட்டவேண்டும். ரூபாய் 71 கோடி என்று கணக்குப் போட்டிருக்கிறார்கள். அதையே எப்படிக் கணக்கிட்டிருக்கிறார்கள் என்று சந்தேகமாக இருக்கிறது. ஒரு அளவிலே அந்த 71 கோடி ரூபாய் மூலதனமா அல்லது அது நம்முடைய பங்கு தொகையாக பாவிக்கப்படவேண்டுமா என்பதுபற்றி கூடிய சீக்கிரம் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டில் இந்த போர்டுக்கு ஏற்பட்ட ஒரு பொருளாதாரக் குழப்பம் பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். சில மாதங்களுக்கு முன்பாக பணத்திற்காக பில்கள் கொடுக்கப்பட்டபொழுது, தனிப்பட்ட முறையில் சென்று பில்களை ஏப்ரல் மர்தத்திற்கு அப்பால் கொண்டுவரவேண்டும், அதற்குப் பின்னால் தான் பணம் இருக்கும் என்று சொல்லக்கூடிய சூழ்நிலை இந்த போர்டுக்கு ஏற்பட்டது. இந்த வருஷம் இப்படிப்பட்ட பொருளாதாரத் தட்டுப்பாடு இந்தக் கழகத்திற்கு ஏற்பட்டது. இதற்குக் காரணம் வட்டி கொடுக்கக்கூடிய ஒரு முறைதான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வட்டி வசூலிக்கும் கட

ருக பாவிப்பது ஓரளவுக்கு எந்த முறையில் தவறு, எந்த முறையில் சரி என்பதை தீர பரிசீலித்து ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுவுமல்லாமல், போர்டு சட்டதிட்டங்களிலே நம்முடைய அரசாங்கத்திற்கு எவ்வளவு பங்கு, அதனுடைய நிர்வாகத்தில் தலையிடுவதற்கு எவ்வளவு உரிமை இருக்கிறது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். உதாரணத்திற்காகச் சொல்லுகிறேன். சட்டத்தில் கடன் கொடுப்பதற்கு ப்ரொவிஷன் இருக்கிறது, இடம் இருக்கிறது. ஆனால், கொடுக்கப்பட்ட கடனை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுப்பதற்கு ஏதாவது வழிவகை இருக்கிறதா சட்டத்தில் என்றால், இல்லை. அதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்றால், திட்டம் இல்லை. இந்த நிலைமையில் கொடுக்கப்பட்ட கடனுடைய கதி என்ன? வட்டி வசூலிப்பதற்கு ப்ரொவிஷன் இருக்கிறது, கடனுடைய கதி என்ன என்பதற்கு சட்டத்தில் இடமில்லை. அதைப்பற்றியும் நம்முடைய அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

வட்டி கொடுப்பதினாலே போர்டு அதிகாரிகள் ஒரு குறையைச் சொல்லுகிறார்கள். திட்டம் நிறைவேற்றினால் 10 சதவிகிதம் ரிடர்ன் வேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் உரையிலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இதனுடைய விளைவு என்ன என்று பார்க்கவேண்டும். பின்தங்கிய பகுதிகளில் வீடுகளிலே சில கூரை வீடுகளாக இருக்கின்றன. கூரை வீடுகள் உள்ள கிராமங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. கூரை கட்டடங்களுக்கு மின்சாரம் கொடுக்கக்கூடாது என்று ஏதோ ஒரு வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் காரணமாக இப்படிப்பட்ட ஒரு மெமோவை போர்டார் அனுப்பியிருக்கிறார்கள். இதனுடைய விளைவு என்ன? குறிப்பாக, ராமநாதபுரம் மாவட்டத்தில் கூரை வீடுகள் உள்ள கிராமங்கள் இருக்கின்றன. அங்கே மின்சாரம் கொடுக்கப்படாததினால் அந்தத் திட்டங்களெல்லாம் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டன. ஏற்கனவே திட்டம் போடப்பட்டபொழுது கூரை வீடுகளை கணக்கில் எடுத்துக்கொண்டுதான் திட்டம் போடப்பட்டிருக்கிறது. போர்டாரின் இப்படிப்பட்ட மெமோவின் காரணமாக அந்தத் திட்டமெல்லாம் அப்படியே நிற்கிறது. அதிகாரிகளை அணுகிக் கேட்டால், இப்படிப்பட்ட பின்தங்கிய பகுதிகளிலே 'இண்டரஸ்டு ப்ரி லோன்' கொடுக்க அரசாங்கம் முன்வந்தால், 10 சதவிகிதம் ரிடர்னை குறைப்பதற்கு நாங்கள் முயலலாம் என்று அங்குள்ள அதிகாரிகள் கூறுகிறார்கள். அதையாவது பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுகாவில் மதுராபுரி, வேங்கைப்பட்டி ஆகிய இடங்களில் கூரை வீடுகளை கணக்கில் எடுத்துக்கொண்டு திட்டம்போட்டு, கீழுள்ள என்ஜினியர்கள் அதற்கு அனுமதி கொடுத்து, போர்டுக்கு வந்து திட்டத்தட்ட 7 மாதங்களாக தவிக்கிறது. இதைப்பற்றி [illegible] விசாரிக்கவேண்டும். போர்டு அனுப்பிய கூரை வீடுகளைப்பற்றிய





சர்குலரின் விளைவு என்ன? ஏழு மாதங்களாக திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதை மறுபரிசீலனை செய்து பின்தங்கிய பகுதிகளுக்கு ஒன்று 'இண்டரஸ்டு பிரி லோன்' கொடுக்க முன்வர வேண்டும். அல்லது 10 சதவிகிதம் ரிடர்ன் பார்க்கவில்லை என்று சொல்லவேண்டும். கூரைவீடுகள் பற்றிய இந்தப் பிரச்னையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாகத்தைப்பற்றி நான் சொன்னேன். இந்த நிர்வாகம் திட்டங்களை நிறைவேற்றுவதிலே மிகுந்த அக்கரை காட்டுகிறது. குந்தா திட்டத்தில் அவர்களுடைய திறமையைப் பார்க்கிறோம், அது பாராட்டுதலுக்குரியது. ஆனால், நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தத் தரப்பில் பேசிய அங்கத்தினர்கள் கூட இதுபற்றி குறிப்பிட்டார்கள். இந்த போர்டு எத்தனை லட்சத்திற்கு மெடீரியல்ஸ் வாங்குகிறது, பொருள்கள் வாங்குகிறார்கள், அதற்குக் கணக்கு என்ன, அவைகள் எங்கே எப்படி செலவழிக்கப்படுகிறது, திட்டங்களுக்கு பயன்படுத்தப்பட்ட பொருள்கள் எவ்வளவு, வீணாகிய பொருள்கள் எவ்வளவு, மீதியிருக்கக்கூடிய பொருள்கள் எவ்வளவு என்பதெற்கெல்லாம் கணக்கு இருக்கிறதா என்றால், அந்த முறையில் ஊழல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது இந்த நிர்வாகத்தில் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்குக் காரணம் 'ஸ்டாக் வெரிபிகேஷனுக்கு' 'இண்டிபெண்டண்ட் ஆர்கனேஸேஷன்' ஏற்படுத்தவில்லை. சீப் என்ஜினியர் இலாகா இருக்கிறது. அவர்கள் எவ்வளவு பொருள்கள் வாங்குகிறார்கள், எவ்வளவு செலவழிக்கப்படுகிறது, மீதம் என்ன, பொருள்கள் எங்கே இருக்கின்றன, எந்த இடத்தில் இருக்கின்றன என்று 'வெரிபை' பண்ணுவதற்கு, 'செக்' செய்வதற்கு இன்றைய நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற முறை தவறு என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அரசாங்கத்தின் நிர்வாகத்திலுள்ளவர்களைவிட, தனிப்பட்ட ஒருவர் கீழே இயங்கக்கூடிய ஒரு அமைப்புத்தான் இப்படிப்பட்ட பணிகளைச் செய்யவேண்டும் என்று நம்முடைய மாநில அரசாங்கமே ஒத்துக் கொண்டிருக்கிறது கொள்கை அளவிலே. அந்தக் கொள்கையை மின்சார போர்டு ஒத்துக்கொள்ள மறுக்கிறது. இந்த வருஷம் கொடுக்கப்பட்ட அறிக்கைக் குறிப்பிலே கூறப்பட்ட குறைகள், நிவர்த்தி செய்யப்பட்டவிதம் என்பதைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். அதிலே இந்தக் கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் ஏன் அப்படிச் சொல்லுகிறார்கள் என்பதற்கு விளக்கம் கொடுக்கவில்லை. போர்டு இருக்கிறது, போர்டின் கீழே சில நிர்வாகிகள் இருக்கிறார்கள், சீப் இன்ஜினியரின் கீழே சில நிர்வாகிகள் இருக்கிறார்கள். இதற்கு அனுமதி கொடுக்க ஏன் போர்டு மறுக்கிறது என்று தெரியவில்லை. அதிலே அவர்களுக்கு என்ன சங்கடம் இருக்கிறது என்பதற்கு விளக்கம் தரப்படவில்லை. அதே சமயத்தில் ரயில்வே போர்டில் இந்த மாதிரி முறை இருக்கிறது, தனிப்பட்ட ஒரு அமைப்பில் இந்த மாதிரி முறைக்கு அனுமதி கொடுக்கப்பட்

டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வொர்க்ஸ் ஆர்டர்ஸ், எஸ்டிமேட்ஸ் இவைகளைப்பற்றி நான் சில கருத்துக்கள் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த வொர்க் ஆர்டர்ஸ் என்பது எந்த இடத்திலே எவ்வளவு வேலை நடந்தது, எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, இதையெல்லாம் கணக்குப் போட்டு 'குளோஸ்' செய்ய வேண்டும். இதைச் செய்கிறார்களா என்றால், இல்லை. 30-9-1963-ல் 1,22,161 வொர்க் ஆர்டர்ஸ் 'பெண்டிங்' ஆக இருந்தது என்றால் இதனுடைய விளைவு என்ன? ஸ்பாட்டில் என்ன வேலை செய்கிறார்கள், எவ்வளவு பொருள்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, எவ்வளவு செலவழிக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு மீதப்படுத்தப்பட்டிருக்கிறது என்ற நிலை போர்டுக்குத் தெரியவில்லை, மேலே உள்ள அதிகாரிகளுக்கும் தெரியவில்லை என்ற நிலைமையைத்தான் இது சுட்டிக்காட்டுகிறது. இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே மாதிரி பல திட்டங்கள் போடும்பொழுது ஒவ்வொன்றுக்கும் எவ்வளவு முதல் வேண்டும் என்று எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். அப்படி தயாரித்து அதை சூபரின்டெண்டிங் என்ஜினியர் பார்த்து, சீப் என்ஜினியர் அப்ரூவலுக்கு அனுப்புகிறார்கள். இதிலே ஏற்படக்கூடிய காலதாமதத்தின் விளைவு என்ன என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். கிராமங்களில் இது அதிக ஏமாற்றத்தைத் தருகிறது, கிராமங்கள் அதிகம் பாதிக்கப்படுகிறது என்பதை அரசாங்கம் உணரவேண்டும் என்று நான் சொல்லிக்கொள்ள
1-00 p.m. ஆசைப்படுகிறேன். ராமநாதபுரம் மாவட்டத்திலே திருப்பத்தூர் பகுதியிலே காளாப்பூர், கண்ணமங்கலப்பட்டி ஆகிய இரண்டு ஊர்களுக்கும் எஸ்டிமேட் போடப்பட்டது. சூபரின்டெண்டிங் என்ஜினியரால் அது அனுமதிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் சீஃப் என்ஜினியருக்கு வந்தது. ஆனால் அந்த வேலையை ஆரம்பிக்கும் பொழுது, அங்கேயுள்ள அதிகாரிகள் புதுப் பிரச்சினைகளைக் கிளப்பினார்கள். ஏற்கனவே எஸ்டிமேட் போட்டவர்கள் இரண்டு போஸ்டுகள் தேவை என்று சொல்லக் கூடிய பகுதிகளுக்கு, உண்மையாகவே அளந்து பார்க்கும்பொழுது 5 போஸ்டுகள் தேவைப்படுகின்றன, ஆகவே ஏற்கனவே போட்ட திட்டம் தவறு என்ற அனுகுண்டைத் தூக்கிப் போட்டார்கள். அங்குள்ள ஏழை மக்களிடமிருந்து டெபாசிட் வாங்கியிருக்கிறார்கள். அதன் காரணமாக, ஏழை விவசாயிகள் ஆயிரக்கணக்கான ரூபாய்களைப் போட்டு, பம்பு செட்டுகளை வாங்கிவிட்டார்கள். கடைசியில் அங்கு யாரோ ஒரு என்ஜினியர் செய்த தவறுக்காக, அங்குள்ள ஏழை மக்கள் கஷ்டப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எஸ்டிமேட் போடுவதிலே தவறு இருக்கிறதா என்பதை ஆங்காங்கே செக் பண்ணுவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யலாம் அல்லவா?





"டிரான்ஸ்பர்" அக்கவுண்ட்ஸ் என்று வைத்திருக்கிறார்கள். அதாவது திட்ட வேலை நடக்கக்கூடிய ஓர் இடத்திலிருந்து ஸ்டோருக்கு சாமான்களை எடுத்துச் செல்வதற்குப் பதிலாக, இன்னொரு திட்ட வேலை நடக்கிற இடத்திற்கு அனுப்பலாம் என்று வைத்திருக்கிறார்கள். உண்மையாகவே அது வேறு வேலை நடக்கிற இடத்திற்குச் செல்லுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். 1957-ம் ஆண்டில் ரூபாய் 23 லட்சம் இப்படிப்பட்ட ஒரு மாறுதல் கணக்கிலே வைத்திருக்கிறார்கள். இவ்வளவு பெரிய தொகைக்கான பொருள்கள் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் போனால், போர்டின் நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது, அதற்கு இடமில்லாமல் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, ஓனர்ஷிப் சொர்டிபிகேட் ரெவின்யூ இலாகாவிலே வாங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் சரி என்று மின்சார போர்டு சொல்லியிருக்கிறது. அது எவ்வளவு தூரம் சரி என்று எனக்குப் புரியவில்லை. ரெவின்யூ இலாகா, பட்டாவிலே என்ன சர்வே நம்பர் இருக்கிறது என்று சொல்லுவார்கள் Patta is not a title என்று நம்முடைய உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.
A mere entry in the Revenue records cannot establish a title என்று தீர்ப்புக் கொடுத்திருக்கிறது. ஏதோ ஒரு வழக்கில் போர்டுக்கு ஏற்பட்ட கஷ்டத்தை வைத்துக்கொண்டு, ரெவின்யூ டிபார்ட்மெண்டுக்கு அனுப்பி, ஏழை விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுக்காமல், இந்த போர்டு அதிகாரிகளே ரிகார்டு மூலமாக பரிசீலித்து முடிவு செய்தால், விவசாயிகளுடைய கஷ்டம் குறையும் என்பதை வற்புறுத்தி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் நிதிநிலை அறிக்கையை வரவேற்று ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். மின்சாரத்தைப் பற்றிச் சொல்லும்போது, ஏனைய மாநிலங்களைவிட நமது தமிழ் மாநிலம்தான் முன்னணியில் இருக்கிறது என்பதை நாமெல்லோரும் அறிவோம். மின்வேகத்தில் முன்னேறுகிற இந்த மின்சார இலாகா ஆற்றல் மிகுந்த அமைச்சர் அவர்களால் நிர்வகிக்கப்படுகிறது. அவர்களுக்குத் துணையாக உள்ள அலுவலர்களும், அதிகாரிகளும், மற்றும் மின்சார போர்டைச் சேர்ந்தவர்களும் நல்ல முறையில் பணியாற்றி வருவதைப் பார்க்கிறோம். நூறு மெகவாட்ஸ் அதிகமாக மக்களுக்குத் தேவைப்படுகிற அளவுக்கு, இன்றைக்கு மின்சாரத் துறை முன்னேறியுள்ளது. பருவ மழை பொய்த்துவிட்டால் பயிர்கள் வாடிவிடுமே என்ற அச்சம் நீங்க ஆறுகண்ட இடங்களிலெல்லாம் அணைக்கட்டுகள் கட்டி பயிர்கள் வாடாமல் இருக்க முன்கூட்டியே தேக்கி வைத்து பயிரை வளர்த்து வருகிறோம். பருவ மழை பொய்த்து விட்டது. மின்சார வெட்டு வராமல் இருக்க வேண்டுமே என்று அஞ்சக்கூடிய [illegible]

விட்டது. ஆகவே நீர் மின்சாரத்தை மட்டுமே நம்பி இல்லாமல், அனல் மின்சாரம், அணுமின்சாரம் ஆகியதையும் அடுத்து அலை கடலிலிருந்து எப்படி மின்சாரத்தை எடுத்து இந்த நாட்டு மக்களுக்கு வழங்கலாம் என்று ஆராய்ந்து வரும் நமது அமைச்சர் அவர்களை நாம் எல்லோரும் பாராட்ட கடமைப் பட்டிருக்கிறோம். கம்பராமாயணத்தில் இராமன் காலத்திலே, மின்சாரம் இல்லாத காலத்திலே நடந்ததை உதாரணமாகக் காட்டுவதைவிட கடல் கடந்து சென்று அலையிலிருந்து மின்சாரம் கொண்டு வருகிற ஆராய்ச்சியிலே நமது அமைச்சர் அவர்கள் ஈடுபட்டிருப்பதை பாராட்டியிருந்தால் அதை நான் வரவேற்றிருப்பேன். பருவ மழை இன்றுதானா பொய்த்துவிட்டது, முனிபுங்கவர் காலத்திலேகூட பொய்த்து விட்டதே என்று எதிர்கட்சி துணைத்தலைவர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் முனிபுங்கவர் காலத்தில் இதுபோன்று மின்சாரத் திட்டங்கள் இல்லாமல் இருந்ததை அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். மற்ற மாநிலங்களை விட நமது மாநிலத்தில்தான் மின் வேகத்தில் மின்சாரம் பரவிக்கொண்டிருக்கிறது. ஐந்நூறு மெகவாட்ஸிலிருந்து 600 மெகவாட்ஸ் வரை அனல் மின்சாரம் கொண்டு வருவதற்கு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. மக்களுடைய தேவையை அதிகமாக்குவதற்காகத்தான் நம்முடைய திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். திட்டங்களிலே அடிப்படைத் தவறு இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வளரும் சமுதாயத்திற்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றன; அவைகளை எந்தெந்த முறைகளில் நிறைவேற்றலாம் என்பதற்காகத் திட்டங்கள் கொண்டு வந்தது இந்த அரசாங்கம் என்பதை நாம் எல்லோரும் உணரவேண்டும். அந்த வகையிலே பல நல்ல திட்டங்களை நமது அரசாங்கம் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பாக மின்சாரத்திட்டங்களை நல்ல வகையிலே மிகவும் துரிதமாக நிறைவேற்றி இருக்கிறார்கள். கனம் மாதா கவுடர் சொன்னபடி வருமானத்தை மட்டுமே முக்கிய குறிக்கோளாகக் கொள்ளாமல் மக்களுடைய தேவையை பூர்த்தி செய்வதுதான் முக்கியமான அம்சம் என்ற அடிப்படையில் இந்த இலாகாவினர் பணியாற்ற வேண்டும். ஒரு கோடிக்கு மேலாக வருவாயை அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள். இப்பொழுது விவசாயத்திற்கும் சரி, வியாபாரத்திற்கும் சரி, தொழில் வளர்ச்சிக்கும் சரி, நமது அன்றாட வீட்டுத் தேவைக்கும் சரி, மின்சாரம் வேண்டியிருக்கிறது. காலை பல் துலக்குவதிலிருந்து இரவு படுக்கை அறைக்குச் செல்லும் வரை நமக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. இரவு ஒரு நிமிஷம் மின்சாரம் விசிறி நின்றுவிட்டாலும்கூட நாம் விழித்துவிடுகிற அளவுக்கு மின்சாரம் நம்மை பின்னிப் பின்னி வரக்கூடிய ஒரு இன்றியமையாத அம்சமாகியிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கத்திற்கு வருவாய்தான் பிரதானம் என்று பார்க்காமல் மக்களுடைய தேவைதான் முக்கியம் என்பதை இந்த மின்சார இலாகாவினர் மனதில் கொள்ளவேண்டும்.





குறிப்பாக நெல்லையிலே உள்ள ஒரு முக்கியமான குறையை நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். லைசென்ஸ்தார்கள் முறையைப்பற்றி எங்கள் மாவட்டத்திலுள்ள அங்கத்தினர்கள் எல்லோருமே எடுத்துச் சொன்னார்கள். நெல்லையை பொறுத்தவரையில் அவர்கள் ஒரு பெரிய தொல்லையாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு சாபக்கேடாக இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் அதற்கு என்னை மன்னிக்கவேண்டும். அந்திசந்தி வேளைகளில் எல்லாம் விளக்குகள் நின்று விடுகின்றன. மழை பெய்து வானத்திலே இடி இடிக்கும் நேரங்களில் எல்லாம் மக்கள் மனத்திலும் இடி இடித்து அங்கே விளக்குகள் அணைந்து விடுகின்றன. நெல்லை—தூத்துக்குடி எலெக்டிரிக் கம்பெனி நிர்வாகத்தைப்பற்றித்தான் நான் சொல்லுகிறேன். அவர்களிடம் உள்ள பழைய டிரென்ஸ்பார்மர்கள் பழுது அடைந்துவிட்டன. நாங்கள் இதைப்பற்றி கேட்டால் அங்கே உள்ள இஞ்ஜினியர்கள் 'நாங்கள் அரசாங்கத்திலிருந்து கடன் கேட்டிருக்கிறோம், இன்னும் கடன் வழங்க வில்லை, அதை சீக்கிரம் கொடுக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்தைக் கேட்டால், லைசென்ஸ்தார்கள் தாங்களாகவே கொடுத்துவிடுவார்களானால் அதை நாங்கள் எடுத்துக்கொள்ளுவோம் என்று சொல்லுகிறார்கள். ஒரு காலத்திலும் அவர்கள் கொடுக்கமாட்டார்கள். ஐந்து மைல் சுற்றளவு என்று லீஸ்படி இருக்கிறது, நீங்கள் கேட்ட இடங்களுக்கு எப்படி மின்சாரம் கொடுக்க முடியும் என்று விடாப்பிடியாக இருக்கிறார்கள். நாங்கள் சென்னைக்கு வரும்போதெல்லாம் பார்த்தால், சென்னையில் விளக்கு அணைவதே கிடையாது. என்ன மழை பெய்தாலும், இடி இடித்தாலும், அந்தத் தொல்லை இங்கு இல்லை. நெல்லை போன்ற இடங்களிலே நல்ல முகூர்த்த வேளையில் சேலையோ, வேஷ்டியோ எடுக்கும்போது விளக்கு அணையும் கடைகளில் எல்லாம் இந்த விளக்கோடு பெட்ரமக்ஸ் விளக்கையும் வைத்திருப்பார்கள். அதற்கு வேறு சிலவு. மாணவ மாணவிகள் மாலை வேளைகளில் வீட்டிற்கு வந்தபிறகு படிப்பதற்கு உட்கார்ந்தால், அவர்கள் உற்சாகத்தைக் குறைப்பது போல, விளக்குகள் அணைந்து விடும். இரவு வேலைகளில் சாப்பிடும்பொழுது வாயில் சோற்றைப் போட்டுக்கொள்ளும்போது விளக்குகள் நின்று விடும். நெல்லை மக்களுக்கு இது ஒரு பெரிய தொல்லையாக இருக்கிறது. ஒன்று அரசாங்கம் எடுத்துக் கொள்வதாக இருந்தால் சீக்கிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்கு கடன் வசதியாவது உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம மக்களுக்கு மின்சாரம் கொடுப்பதிலே, 7, 8 கிராமங்களுக்கு என்று திட்டம் போடுகிறார்கள். பிறகு ஒன்றிரண்டு கிராமங்களை விட்டுவிட்டு, ஐந்து கிராமங்களுக்குத்தான் கொடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். மேற்கொண்டு பணம் செலவாகிறது, போட்ட எஸ்டிமேட்டுக்கு மேல் போகிறது என்று சொல்லுகிறார்கள். உதாரணமாக, செட்டிகுளம் கிராமத்தை

அந்த லிஸ்டிலே சேர்த்துக் கொள்ள முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதற்கு மட்டும் கிராமத்தார் 6,000 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அவர்கள் எந்தக் காலத்தில் கொடுப்பது? அங்கே மொத்தம் இருப்பதே 600 பேர்கள்தான் இருக்கும். இந்த நிலையில் என்ன செய்வது என்றே எங்களுக்குத் தெரியவில்லை. இந்த கஷ்டமான நிலையை நிவர்த்திக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு ஆலோசனை குழு வைத்திருந்தால் நலமாக இருக்கும். அதில் எம்.எல்.ஏ-க்களும் மற்ற பொது நல ஊழியர்களும் இடம் பெற வாய்ப்பு அளித்தால் அவர்கள் அதிகாரிகளுடன் நெருங்கிப் பழகி மக்களின் தொல்லைகளை எடுத்துச் சொல்ல ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூறிக் கொண்டு, எனக்கு இந்த சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** மன்ற உதவித்தலைவர் அவர்களே, 1964-65க்கான மின்சாரக் கழகத்தின் நிதி நிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். சர்க்கார் இலாக்காக்கள் எல்லாவற்றிலும் குறிப்பாக இந்த இலாகாவைப் பொறுத்த மட்டில் இதுவரை பேசியிருக்கிற அத்தனை எதிர்கட்சி அங்கத்தினர்களும் இந்த இலாகாவினரை பாராட்டித்தான் பேச்சை ஆரம்பித்து இருக்கிறார்கள். இருந்தபோதிலும் கூட ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நாங்கள் குறை சொல்லுகிறோம் என்பதை மட்டும் எடுத்துக் காட்டி முடிக்கிறார்கள். இதில் இருந்து பாராட்டு என்பதன் பொருள் என்ன என்றே எனக்குப் புலப்படவில்லை. எதற்கும் ஆமாம் சாமி போட வேண்டுமா என்று புரியவில்லை. அப்படி ஆமாம் போடுவதாக இருந்தால், ஒரே வரியில் முடித்துவிட்டு உட்கார்ந்து விடலாம். ஆனால் இந்த விஷயம் இந்த அரசாங்கத்துள்ளே முடிந்துவிடும் ஒன்று அல்ல. இந்த மன்றத்தோடு முடிகிற விவகாரம் அல்ல இது. ஒரு திட்டம் என்று சொல்லப்போனால், முதலில் நிபுணர்கள் அதைத் தீட்ட வேண்டும், அதன் பேரில் மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி அமைச்சர் அங்கே தூது போகவேண்டும். அதன் பிறகு அவர்கள் அதை அனுமதிக்க வேண்டும், அதன் பிற்பாடு நாம் அதை நிறைவேற்றப் புகுகிறோம். இன்றைக்கு 18 நாள் மின்சார வெட்டு என்றால், அதனால் ஏற்படும் நஷ்டம் எவ்வளவு, எவ்வளவு தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போகிறது என்பதையெல்லாம், பார்க்கவேண்டும். இதற்கு உறுதுணையாக இருக்க அனல் மின்சாரம் உற்பத்தி செய்யவேண்டும் என்று இரண்டு தனியார் முயற்சியையும் சர்க்கார் சிபாரிசு செய்தார்கள், ஆனால் மத்திய அரசு அதை ஏற்றுக் கொள்ளாமல் ரத்து செய்து இருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். இந்த மாதிரி நிலையில் நாங்களும் ஆமாம் சாமி போடுவதானால் தகப்பன் சாமி அதிகமாகவேதான் ஏமாற்றிவிடுவார்கள். எனவே





தான் பாராட்டினாலும், குறைகளையும் எடுத்துச் சொல்வதனால்தான், அது ஆளும் கட்சியினருக்கும், அரசுக்கும் கூட லாபமாக இருக்கும், மின்சாரக் கழகத்திற்கு லாபமாக இருக்கும்.

இன்றைக்கு நாம் எட்டு தனியார் நிறுவனங்களுக்கு வினியோகத்தை விட்டு வைத்திருக்கிறோம். உற்பத்தி செய்வது நாம், வினியோகம் மட்டும் அவர்கள் செய்கிறார்கள். சென்ற ஆண்டு கூட நான் குறிப்பிட்டேன், கும்பகோணத்தில் உள்ள கார்ப்பொரேஷனை நீக்கி விட்டு முனிசிபாலிட்டிக்கு பொறுப்பைக் கொடுக்க வேண்டும் என்று. அது சம்பந்தமாக கும்பகோணம் முனிசிபாலிடியும் தீர்மானம் போட்டிருக்கிறது. பல முறை போட்டு இருக்கிறது. இந்த அறிக்கையில் கூட "மாநிலத்தில் விரிந்து பரந்து கிடக்கும் கிராமப் பகுதிகளுக்கு மின் சக்தி வழங்க வேண்டிய ஆதாரம் தனியார் நிறுவனங்களுக்கோ அல்லது ஸ்தல ஸ்தாபன அதிகார சபைகளுக்கோ இருக்க ஏதுவில்லை" என்று கண்டிருக்கிறது. இந்த கார்ப்பொரேஷன் 700-க்கும் மேற்பட்ட உட்கிராமங்களைக் கொண்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கவேண்டும். ஆனால் அந்தப் பணியை அதனால் நல்ல முறையில் செய்யமுடியவில்லை. முதலாவது திட்டத்திலேயே சேர்க்கப்பட்ட கிராமத்திற்கேகூட இன்னும் மின்சக்தி வழங்கவில்லை. 19,000 கிராமங்களுக்கு மின் சக்தி கிடைத்திருக்கும் இந்த நிலையிலும் அந்தக் கிராமத்திற்கு இன்னும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அந்த கிராமம் முதலாவது திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருந்தும், இன்றுவரை எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. பொது மக்களுக்கு நன்மை செய்வதற்காக ஏற்பட்ட ஸ்தாபனம் என்ற எண்ணமே குடந்தை கார்ப்பொரேஷனுக்கு இல்லை. உதாரணமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என் தொகுதி பல உட்கிராமங்களைக் கொண்டது. பல ஆதித்திராவிட தெருக்கள் நஞ்சை நிலப்பகுதியில் நடுநடுவே இருக்கும். என்னுடைய தொகுதி 31 மைல் நீளம் உள்ளது. அங்கு கிராமங்கள் இருக்கும் நிலைமை கனம் தொழில் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் கிட்டத்தட்ட எல்லா கிராமங்களுக்குமே சென்று இருப்பார்கள் அந்த ஆதித்திராவிட தெருக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்க முடியாததற்குக் காரணம் அதற்கான கட்டணத்தை பஞ்சாயத்து யூனியன் கட்டவேண்டும் என்று குடந்தை கார்ப்பொரேஷன் கேட்கிறது. ஆனால் அந்தத் தொகை பஞ்சாயத்து யூனியன் எங்கிருந்து கொடுக்க முடியும், அவர்கள் பல வருஷங்கள் வருமானத்தையெல்லாம் சேர்த்து, செலவே செய்யாமல் மீதம் பிடித்து வைத்தால் கூட அந்தத் தொகையை அவர்களால் கட்ட முடியாது. அவ்வளவு அதிகமான தொகையை கேட்கிறார்கள். அதே சமயத்தில் மின்சார போர்டார் மக்களுக்கு நன்மை செய்வது ஒன்றையே குறியாகக் கொண்டு பணி புரிவதால் அம்மாதிரி இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்துக் கொடுக்கிறார்கள். அம்மாதிரி குத்தாலம் யூனியனுக்கு செய்து கொடுத்திருக்கிறார்கள், மூன்று மாதங்களுக்கு முன்பு

அவர்கள் லாப நஷ்டக்கணக்கைப் பார்ப்பது இல்லை. உற்பத்தியை நாம் செய்து விட்டு வினியோகத்தை மட்டும் ஏன் தனியார் ஸ்தாபனத்திடம் கொடுக்க வேண்டும் என்பது தான் புரியவில்லை. அவர்கள் வியாபார அடிப்படையில் இயங்குகிறார்கள். அவர்களால் அறுத்த கம்பிக்கு கூட மாற்றுக் கம்பிப்போட முடியவில்லை. வளைந்து போன ஒரு போஸ்டுக்கு மூன்று நாள் வரை சரி செய்ய முடியவில்லை. நான் இருக்கும் ஆடுதுறையிலேயே இது நடந்தது. கேட்டால் ஹைவேசில் உள்ள மரங்களால் தான் இப்படி. கம்பிகள் அறுந்து போகின்றன என்று சொல்கிறார்கள்.

இன்றைக்கு நாம் மின்சார வெட்டினால் 18 நாள் அவதியுற்றோம். இன்னின்ன காலங்களில் மின்சாரம் தடை செய்யப்படும் என்ற ஒரு உத்தரவோ அல்லது அறிவிப்போ கிடையாது. பத்திரிகையில் வந்த அளவுக்கு படித்தவர்களுக்கு மட்டும் மின்சார வெட்டு என்பது தெரியும். ஆனால் எந்த நேரத்திலே அணையும், எந்த நேரத்திலே எரியும் என்பது ஒன்றும் தெரிவது இல்லை. உதாரணத்திற்கு சொல்லப்போனால் டூரிங் சினிமாவை எடுத்துக் கொள்வோம். முதலில் டிக்கெட் கொடுத்து விடுகிறார்கள். டிக்கெட் கொடுக்கும் வரை விளக்குகள் எரிகின்றன. உள்ளே போய் வணக்கமும் சொல்லுகிறார்கள். அதன் பிறகு விளக்கு அணைந்து விடுகிறது. உள்ளே ஒரே அமளி துமளி. நாற்காலிகளை எடுத்து எறிகிறார்கள். ஷோ ஆரம்பிக்க முடியாமல் போய் விடுகிறது. இத்தனை மணிக்கு மின்சார வெட்டு என்று அறிவித்து விட்டால் நலமாக இருக்கும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தட்டுப்பாடு ஏற்பட்டும் லோ-டென்ஷன் உபயோகத்தில் நாங்கள் ஒரு யூனிட்கூட குறைக்கவில்லை. ஹை-டென்ஷன், நான்-கண்டினியுவஸ் இண்டஸ்ட்ரீஸ் இவைகளுக்குத்தான் கட்டு விதிக்கப்பட்டது. சினிமாவுக்கு பவர் வரவில்லை என்றால் அது கொட்டகைக்காரர் தவறாக இருக்க வேண்டும், அல்லது டிஸ்டிரிபியூஷன் செய்யும் லைசன்ஸியின் தவறாக இருக்க வேண்டும். ஜெனரேஷன் தவறு இல்லை, என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, நான் இப்பொழுது குறிப்பிட்டதும் அரசாங்கத்தைப் பற்றியதல்ல. தனியார் துறை நிறுவனத்தைப் பொறுத்துத்தான் சொல்கிறேன். மின்சார போர்டைப்பற்றிக்கூட நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. தனியார் துறையில் இருக்கும் அந்த நிறுவனம் ஏனோ தானோ என்று, எப்படியும் கரண்ட் விற்றுவிடும், பணம் வந்துவிடும் என்று தன்னிச்சையாகத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தான் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். தனியார் துறையில் இருப்பதை நிச்சயம் எப்பாடு பட்டாவது தேசியமயமாக்கவேண்டும். வாங்கிய கடன் போதாது என்றால், மேலும் கடன் எழுப்பியாவது, தனியார் நிறுவனங்களின் இஷ்டத்திற்குக் காரியங்கள் நடக்க விடாமல், அவற்றைத் தேசியமயமாக்கவேண்டும். அப்படித்





தேசியமயமாக்கி மின்சார வசதி செய்யும்போது, குறிப்பாக ஆதித் திராவிட மக்கள் வசிக்கும் தெருக்களுக்கு மின்சார வசதி செய்து கொடுத்து உதவ வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த பட்ஜெட் சம்பந்தமாகச் சில குறைபாடுகளை நான் இங்கே சொல்ல முன்வருகிறேன். இந்த மாநிலத்திலுள்ள மாவட்டங்களிலேயே தஞ்சை மாவட்டம்தான் மின்சார விஸ்தரிப்பு சம்பந்தப்பட்ட வரையில் மிகவும் பின்தங்கிய ஒரு மாவட்டமாக இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மற்ற மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கு எப்படி விவசாய உற்பத்திக்காக மின்சார வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றனவோ, அதைப் போலவே தஞ்சை ஜில்லாவில் இருக்கும் விவசாயிகளுக்கும் செய்து கொடுக்கவேண்டும். அப்படிக் கொடுத்தால்தான், அந்த விவசாயிகள் ஆறு மாதம் தண்ணீர் இருக்கும்போது விவசாயம் செய்துவிட்டு. தண்ணீர் இல்லாத காலங்களில் சும்மா இருக்கும் நிலைமை ஏற்பட்டிருப்பதைத் தடுத்து, அதிகமாக உணவு உற்பத்தியைச் செய்வதற்கு மின்சாரத்தை உபயோகப்படுத்த முடியும். இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்திலிருக்கும் மின்சார வசதியை எல்லாக் கிராமங்களிலும் விஸ்தரிப்பதற்குத் துரிதமாக நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு போர்டுக்குச் சொந்தமான மின்சாரம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தனியார்த் துறையில் இருக்கும் மின்சார விஸ்தரிப்பிலே ஏற்பட்டிருக்கக்கூடிய கோளாறுகளைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய ஆடுதுறை மெம்பர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் இஷ்டத்திற்கு, வேண்டுமானால் மின்சாரம் கொடுப்பது, இல்லையென்றால் நிறுத்திக்கொள்வது என்ற நிலை இருக்கிறது. தஞ்சை மாவட்ட மக்களுக்கு உபயோகத்திற்கு இல்லாத முறையில் அவர்கள் மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால், மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. இந்த மூன்று பஞ்சாயத்து யூனியன்களிலும், 94 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவற்றில் 29 பஞ்சாயத்துக்களிலேதான் மின்சார விஸ்தரிப்பு செய்திருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதி என்னுடைய திருத்துறைப்பூண்டித் தொகுதியாகும். அந்தத் தொகுதியில் மின்சார விஸ்தரிப்பு போதுமான அளவுக்கு இல்லை. மின்சார விஸ்தரிப்பு லைசன்ஸ்தாரின் பொறுப்பில் இருப்பதால், போர்ட்டில் கேட்டால், "உங்கள் பகுதி லைசென்ஸ்தாரின் ஏரியாவில் இருக்கிறது; நாங்கள் ஏதும் செய்வதற்கில்லை" என்று போர்டார் சொல்கிறார்கள். லைசென்ஸ்தாரர்களைக் கேட்டால்

[திரு. ஆ. கு. சுப்பையா] [17th July 1964

"போர்டிலே எடுத்துக்கொள்வதாகக் கேட்டிருக்கிறார்கள்; நாங்கள் சில குறிப்பிட்ட கிராமங்களைப் போர்டுக்குக் கொடுத்து விட்டோம்" என்று அவர்கள் சொல்கிறார்கள். சில கிராமங்களை லைசென்ஸ்தார்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமங்களின் வருமானத்தை எதிர்பார்த்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கவும் முன்வருவது கிடையாது. இதை அரசாங்கத்திற்குப் பல தடவை நாங்கள் தெரியப்படுத்தியிருக்கிறோம். திருத்துறைப் பூண்டி பஞ்சாயத்து யூனியனில் ஆலத்தம்பாடி கிராமத்தில் 26,000 ரூபாய் செலவு செய்து ஒரு ஓவர்ஹெட் டாங்க கட்டி ஐந்து வருஷம் ஆகிறது. அந்தக் கிராமத்தில் மின்சாரம் இருக்கிறது. பக்கத்திலே இருக்கும் பொண்ணிரை கிராமத்தில்தான் ஓவர் ஹெட் டாங்க் இருக்கிறது. ஐந்து வருஷமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். பத்தாயிரம் ரூபாய் வரையில் பணம் கட்டினால்தான் மின்சாரம் கிடைக்கும் என்று தென் மதராஸ் எலக்ட்ரிக் ஸப்ளை கார்பொரேஷன் சொல்கிறார்கள். ஆகவே, அதை சர்க்காருக்கு விட்டுக் கொடுங்கள் என்று சொன்னோம். நாங்கள் சொன்னால் விட்டுக் கொடுக்க அவர்கள் முன்வருவதில்லை. ஓவர் ஹெட் டாங்க் மட்டுமல்ல. ரயில்வே ஸ்டேஷனுக்கும் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நான்கு ரைஸ் மில்களுக்கும் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், இந்த மின் சாரம் தனியார் பொறுப்பில் இருப்பதால் அங்கிருக்கும் ஜனங்களுக்கு உபயோகம் இல்லாத முறையில் மின்சாரம் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் எந்தவிதமான பிரயோ ஜனமும் கிடையாது. கண்டிப்பாக எடுத்துக்கொள்ளவேண்டு மென்றால், லைசன்ஸிங் ஏரியாவில் ஏதோ ஒரு கிராமத்தை எடுத்துக்கொள்கிறார்கள். நீர்முளை கிராமத்தை எடுத்துக்கொள்ளு வதாகச் சொல்லி எடுத்துக் கொள்ளவில்லை. பள்ளங் கோவில், விளக்குடி கிராமத்தில் மெயின் ரோடில் விளக்கு போட்டுவிட்டு அதைச் சுற்றி இருக்கும் பத்துக் குக்கிராமங்களுக்குப் போடுவ தில்லை. ஹரிஜனச் சேரிகளுக்கு போடுவதில்லை. "ஹரிஜனச் சேரிகளுக்குப் போடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் அந்த லைசென்ஸ் தாரர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்" என்று சொல்கிறார்கள். அது சொல்லளவில் இருக்கிறதே தவிர, நடைமுறையில் சேரி களுக்குப் போடுவதே இல்லை. உதாரணமாக இந்த வருஷம் என்னுடைய தொகுதியில் மூன்று கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்தார்கள். சில கிராமங்களில் மெயின் ரோடு களுக்கு அருகில் இருக்கும் தெருக்களில் மாத்திரம் மின் விளக்கு போட்டுவிட்டு, சேரிகளுக்குப் போட முடியாது என்று சொல்லி விட்டார்கள். கேட்டால், "வருமானம் கிடையாது; நாங்கள் எங்கிருந்து செய்வது? எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை; கடன் கொடுக்கவும் அரசாங்கம் மறுக்கிறார்கள்" என்று சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட வருஷங்களுக்குள்



17th July 1964] [திரு. ஆ. கு. சுப்பையா]

தனியார்த் துறையில் லைன் மின்சாரத்தையெல்லாம் அரசாங்கமே எடுத்துக்கொள்வதுதான் சரியாக இருக்க முடியும். அப்பொழுது தான் நாங்கள் அதிலே ஏற்படக்கூடிய குறைகளை அரசாங்கத்திடம் சொல்ல முடியும். அரசாங்கத்திடம் சொன்னால், 'லைசன்ஸ்தார்கள் பொறுப்பு நாங்கள் என்ன செய்வது?' என்று அவர்கள் தட்டிக் கழிக்கும் நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் நடத்தி னால் நாங்கள் சொல்லக்கூடிய யோசனைகளைக் கேட்டு, குறைகளை நிவர்த்திக்கக்கூடிய நிலை ஏற்படும். ஆகவே; அரசாங்கம் மின் சாரங்களையெல்லாம் லைசன்ஸ்தாரர்களிடமிருந்து எடுத்து அந்தப் பொறுப்பை போர்டே எடுத்துக்கொள்ளவேண்டும். தனியார் பொறுப்பில் இருக்கும் மின்சாரத்தை எப்பொழுது அரசாங்கம் எடுத்துக்கொள்வார்களோ என்ற ஐயப்பாட்டோடு அவர்கள் இருந்து கொண்டு, அபிவிருத்தி ஒன்றும் செய்யாமலே இருக்கிறார் கள். ஆகவே, இதையும் அரசாங்கம் நிவர்த்திக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

எங்கள் மாவட்டத்திலே அதிகமாக மின்சார வசதியைப் பெருக்குவதற்கு, நாகப்பட்டிணத்தில் அனல் மின்சார நிலையம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று சென்ற ஆண்டு கோரினோம். அதை எண்ணூரிலும், தூத்துக்குடியிலும் ஆரம்பிக்கப் போவதாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் திட்டக் கமிஷன் அங்கீகரித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். என்றாலும், இதை மீண்டும் பரிசீலனை செய்து, திட்டக் கமிஷனைக் கேட்டு, தஞ்சை மாவட்டத்தில் பின் தங்கிய பிரதேசத்திற்கு மின்சார சப்ளை செய்வதற்காகவேண்டி நாகப்பட்டிணத்தில் அனல் மின் சார நிலையம் ஏற்படுத்துவது பற்றி மறு பரிசீலனை செய்யவேண்டு மென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 1-28 p.m.

### X.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A.—Statutory Rules and Orders.

* 153. *Notification issued with G.O. Ms. No. 360, Rural Development and Local Administration, dated 14th February 1964 regarding the constitution of Dharmapuri Municipality consisting of the local area within the jurisdiction of Dharmapuri Panchayat in Salem district with effect on and from 1st April 1964. [Laid on the Table of the House under section 304 (d) of the Madras District Municipalities Act, 1920 (Madras Act V of 1920).]*

* 154. *Notification issued with G.O. Ms. No. 319, Rural Development and Local Administration, dated 11th February 1964 regarding the constitution of Allinagaram Municipality consisting of the local area within the jurisdiction of the Allinagaram Town*

*Panchayat in Madurai district with effect on and from 1st April 1964.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 155. *Notification issued with G.O. Ms. No.* 362, *Rural Development and Local Administration, dated* 14*th February* 1964 *regarding the constitution of Alandur Municipality consisting of the local areas within the jurisdiction of the Alandur Town Panchayat, Adambakkam, Nanganallur and Pazhavanthangal Village Panchayats in Chingleput district with effect on and from 1st April* 1964. [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

* 156. *Notification issued with G.O. Ms. No.* 1458, *Public (General-M), dated* 16*th September* 1963 *amending the Notification specifying offices by categories in the Highways and Rural Works and Public Health Departments in which Tamil is used as official language.* [*Laid on the Table of the House under section* 6 *of the Madras Official Language Act*, 1956 (*Madras Act XXXIX of* 1956).]

* 157. *Notification issued with G.O. Ms. No.* 346, *Rural Development and Local Administration, dated* 13*th February* 1964 *changing the name of "Lakshminaickenpalayam Panchayat Union" as "Sultanpet Panchayat Union" in West Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 179 (4) *of the Madras Panchayats Act*, 1958 (*Madras Act XXXV of* 1958).]

* 158. *Notification issued with G.O. Ms. No.* 994, *Industries, Labour and Co-operation (Labour), dated* 20*th February* 1964 *appointing the Inspectors and authorities under the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958 *in the Added Territories.* [*Laid on the Table of the House under section* 41 (3) *of the Madras Beedi Industrial Premises (Regulation of Conditions of Work) Act*, 1958 (*Madras Act XXXII of* 1958).]

* 159. *Notification issued with G.O. Ms. No.* 9, *Legislative Assembly, dated* 6*th March* 1964 *amending Rule* 8 *of the Madras Legislature Travelling Allowance Rules*, 1955 *published with Public (Elections-III) Department Notification No.* 26, *dated* 18*th July* 1955. [*Laid on the Table of the House under section* 14 (3) *of the Madras Payment of Salaries and Removal of Disqualifications Act*, 1951 (*Madras Act XX of* 1951).]

* 160. *Notification issued with G.O. Ms. No.* 3666, *Food and Agriculture, dated* 19*th December* 1963 *directing the Coimbatore Market Committee to establish regulated markets for the purchase and sale of cotton, groundnut and tobacco at Punjai Puliampatti*





*and Andhiyur in Coimbatore district.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

* 161. *Notification issued with G.O. Ms. No.* 512, *Rural Development and Local Administration, dated* 6*th March* 1964 *issuing the instructions regarding the procedure for election of Chairmen of Tiruvottiyur and Cuddalore Municipal Councils.* [*Laid on the Table of the House under section* 304 (*d*) *of the Madras District Municipalities Act*, 1920 (*Madras Act V of* 1920).]

† 162. *Notification issued with G.O. Ms. No.* 324, *Home, dated* 4*th February* 1964 *exempting from the payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *motor car bearing registration No. MSW* 9862 *belonging to the Trade Commissioner for France to South India on and from the date on which the vehicle was brought into this State.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

† 163. *Notification issued with G.O. Ms. No.* 121, *Food and Agriculture, dated* 17*th January* 1964 *regarding establishment of regulated market at Lalgudi, Perambalur, Keeranur, Pudukkottai and Thottiam in Tiruchirappalli district for the purchase and sale of paddy, groundnut, chillies, etc.* [*Laid on the Table of the House under section* 29 (4) *of the Madras Agricultural Produce Markets Act*, 1959 (*Madras Act* 23 *of* 1959).]

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** குரங்குப் பள்ளம் பெரும் பள்ளம் ஆகியவை ஈரோடுக்கு அருகில் உள்ளதா? இத்திட்டத்தில் காசிப் பள்ளத்தைச் சேர்க்க வேண்டுமென்று பஞ்சாயத்து போர்டுகள் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறதா? அவர்கள் அனுப்பியுள்ள மனுக்கள் அரசாங்கத்திற்குக் கிடைத்தனவா? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட ஊர்கள் ஈரோடுக்கு ரொம்ப தூரத்தில் இல்லை. சமீபத்தில் தான் இருக்கிறது. காசிப்பாளையம் சம்பந்தப்பட்ட தகவல் என்னிடம் இல்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தத் திட்டத்திற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டுவிட்டாதா? அப்படியானால் எவ்வளவு ரூபாய்?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஏற்கனவே சாங்ஷனாகியிருக்கிறது எட்டு லட்சம் ரூபாய்.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இது போன்ற பல திட்டங்களை ஜில்லா வாரியாக போடப்பட்டு இருக்கின்றன. அவைகளை ஜில்லா வாரியாகவே, கனம் அங்கத்தினர்களுக்குத் தெரியும்படியாக, சட்டசபையில் வைக்க முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மைனர் இரிகேஷன் வேலைகளை அங்கங்கேயுள்ள பஞ்சாயத்துகளிடமே விட்டுவிட்டோம். ஸ்பெஷல் திட்டங்களைத்தான் நம்முடைய அரசாங்கமே பி.டபிள்யூ.டி. அதிகாரிகளைக் கொண்டு செய்ய முன் வந்திருக்கிறது. எந்த எந்த ஜில்லாக்களில் எந்த எந்த திட்டங்களைப் போட வாய்ப்பு இருக்கிறதோ அவற்றைப் பரிசீலித்து எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த இரண்டு பள்ளங்களிலும் அதிகத் தண்ணீர் இல்லையென்று நினைக்கிறேன். பவானி வாய்க் கால்களில் வடிகால் தண்ணீரைத்தான் இவற்றுக்கு பாசனம் செய்யப்படும். இதனால் பவானி ஆயக்கட்டுகள் பாதிக்காமல் இருக்கும் என்ற உத்தரவாதம் அளிக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்வதால் பவானி ஆயக்கட்டுகள் நிச்சயமாகப் பாதிக்கப்படாது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :** அதிகாரம் பெற்ற இந்த இரண்டு திட்டங்களையும் துரிதமாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** நான் முன்பே உடனே நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்திருக்கிறேன். வெகு சீக்கிரம் அஸ்திவாரக் கல் நாட்ட நடவடிக்கை எடுத்துக் கொள்ளப் படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



18th July 1964]

*Aerial spray of pesticides*

* 523 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon the Minister for Home be pleased to state—

(*a*) the details of the aerial spraying of pesticides on crops, resorted to in the State during the year 1962–63 and during the current year so far;

(*b*) the total cost of these operations; and

(*c*) whether there is any proposal to purchase a plane to be used for such operations?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

(*c*) No, Sir.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, சாகுபடி காலத்தில் அதிகமான பூச்சிகள் விழுந்து பயிற் கெட்டுப்போவதால் ஹாண்டு ஸ்ப்ரேயர்களை அதிகமாக வழங்குவ தோடு, பவர் ஸ்ப்ரேயர்களையும் ஜில்லாவாரியாக வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** எங்கெல்லாம் ஸ்ப்ரேயர்களைக் கொண்டு உதவி செய்ய முடியுமோ அங்கெல்லாம் உதவி செய்கிறோம். மேலும் வாங்குவதற்கு மத்திய அரசாங்கத்திடம் அந்நியச் செலா வணிக்கு அனுமதி கேட்டு இருக்கிறோம். கிடைக்கிறபோது அதிக மாக வாங்கப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிற செலவுகளில் விவசாயிகளிடமிருந்து பாதி அளவு வாங்கப்படு கிறதா, அல்லது பூரா செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொள் கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இந்தச் செலவிலே 50 per cent subsidy on chemicals for groundnut growers and 20 per cent for other growers. வெறுமனே இருக்கிற தரிசு நிலங்களில் ஏரோப் பிளேன் மூலம் மருந்து தெளிக்கிறபோது அந்தச் செலவை மட்டும் பூராவும் மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கோவை ஜில்லாவில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பது போல் நீலகிரி ஜில்லாவில் உருளைக் கிழங்கு நோயைத் தடுக்க விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக் கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அதனால் பயன் ஏற்படுமா என்று பரிசீலிக்கவேண்டும்.

---

a Printed as Appendix I on pages 244.

[18th July 1964

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சை ஜில்லாவில் பூச்சிகளால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. அங்கு விமானம் மூலம் மருந்து தெளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விமானம் மூலம் மருந்து தெளிப்பதற்குச் சாதகமாக இருக்கவேண்டும். மரங்கள் ஜாஸ்தி இருக்கக் கூடாது. இப்போது கோவை ஜில்லாவில் தென்னாற்காடு ஜில்லாவிலும் வேர்கடலை உற்பத்தி செய்யப்படுகிற பகுதிகளில் விமான மூலம் மருந்து தெளிக்கப்படுகிறது. மற்ற இடங்களிலும் அவ்வாறு மருந்து தெளிக்கவேண்டுமென்று சொன்னால் அது பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கப்பட வேண்டும்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** திண்டிவனம் தாலூகாவில் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பதற்கு ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்பட்டு நிறுத்திவிட்டார்கள். அதனால் ஏற்பட்ட நஷ்டம் விவசாயிகளைப் பாதிக்குமா அல்லது சர்க்காரே அதனை ஏற்றுக் கொள்ளுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விமானம் கிடைக்கும் என்று ஏற்பாடு செய்தோம். விமானம் கிடைக்காத காரணத்தால் ஸ்ப்ரேயர்ஸ் கொண்டு போய் எவ்வளவு தூரம் பூச்சி மருந்துகள் தெளிக்க முடியுமோ அந்த அளவுக்கு செய்யப்படுகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இப்போது மருந்து தெளிக்கப்படுவதற்கு விமானம் மத்திய அரசாங்கத்திலிருந்து கடனாக வாங்கப்படுகிறதா? இந்த முறை காரணமாக நல்ல பலன் ஏற்படுகிறது என்றால் நம்முடைய அரசாங்கமே விவசாய இலாகாவுக்கு என்று தனியாக இம்மாதிரி விமானங்கள் வைக்க ஏற்பாடு உண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விமானத்தை மத்திய அரசாங்கத்திலிருந்து நாம் வாங்குகிறோம். நாமே தனியாக விமானம் வாங்கி இதற்குப் பயன்படுத்தவேண்டுமென்று சில பஞ்சாயத்து யூனியன்களிலிருந்து தீர்மானம் வந்தது. ஆனால் அவ்வாறு தனியாக வைத்துக் கொண்டால் நிறையச் செலவாகும் என்ற காரணத்தால் தேவைப்படும்போதெல்லாம் எழுதினால் மத்திய அரசாங்கத்தினர் விமானம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இந்த மாதிரிப் பூச்சிகளை ஒழிக்க உடனே மருந்து தெளிக்கவேண்டும். நம்முடைய அரசாங்கத்திற்குத் தகவல் வந்து, நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு விமானத்திற்கு எழுதி வருவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் தெரியவில்லை. பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஸ்ப்ரேயர்ஸ் கொடுத்திருக்கிறோம். பூச்சிகள் வந்தவுடன் ஸ்பேரேயர்ஸ் கொண்டு மருந்து தெளிப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



18th July 1964]

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** தஞ்சை ஜில்லாவில் தீவிர சாகுபடி திட்டம் அமலில் இருக்கிறது. அங்கு பூச்சி விழுந்து விட்டால் ஆகாய விமானம் வந்து மருந்து தெளிக்க வேண்டுமென்றால் தாமதமாகிவிடும். ஆகவே, ஜப்பானில் இருந்து அதிக அளவுக்கு பவர் ஸ்ப்ரேயர்ஸை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பவர் ஸ்ப்ரேயர்ஸ் வாங்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அவ்வாறு அதிகமாக வாங்குவது அந்நியநாட்டுச் செலாவணியைப் பொறுத்திருக்கிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** விமானம் மூலம் மருந்து தூவுவதற்கும், ஸ்ப்ரேயர்ஸ் மூலம் தூவுவதற்கும் பொருளாதார அடிப்படையில் ஏதாவது கணக்கு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? எது லாபகரமானது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** விமானம் மூலம் பொள்ளாச்சி பகுதியில் தெளிக்கப்பட்டதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. 3·45 ந.பை. ஆயிற்று. இதர கிராமங்களில் ஏக்கருக்கு ரூ. 2-45 ந.பை. ஆயிற்று. ஸ்ப்ரேயர்ஸ் மூலம் மருந்து தெளிக்கின்றதால் ஏற்பட்ட செலவு கணக்கு இப்போது இல்லை.

**திரு. மா. இராசாங்கம் :** பாக்கேஜ் ஸ்கீம்படி விமானம் மூலம் மருந்து தூவ வேண்டுமானால் ஒரே இடத்தில் அதிக நிலம் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். போடி, கம்பம் வட்டாரத்தில் 20,000 ஏக்கரில் கடலை விவசாயம் செய்யப்படுகிறது. அங்கு விமானம் மூலம் மருந்து தூவ நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி :** பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகள் இப்போது அதிகமாக இருக்கிறது. இதற்கு முன்னால் இந்த மாதிரிப் பூச்சிகள் இல்லை. ஏதனால் இந்த மாதிரிப் பூச்சிகள் வருகிறது என்று ஆராய்ச்சி செய்யப்பட்டதா ?

MR. SPEAKER : They are politically conscious.

**கனம் திரு. பூ. கக்கன் :** உண்மையில் முன்பெல்லாம் இந்த மாதிரிப் பூச்சிகள் ஜாஸ்தி கிடையாது. இப்போது கூடுதலாகத் தான் இருக்கிறது. இதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் என்ன காரணம் என்று சொல்லப்படும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** மலைப் பிரதேசமாக இருப்பதால் நீலகிரி ஜில்லாவில் விமானம் மூலம் மருந்து தூவ முடியாது என்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே, ஸ்ப்ரேயர்களைக் கொண்டு தான் மருந்து அடிக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கு சப்சிடி 75 சத விகிதம் கொடுக்கவேண்டுமென்று ஜில்லா அபிவிருத்திக் கூட்டத்தில் தீர்மானம் போட்டு அரசாங்கத்திற்கு அனுப்பினோம். அரசாங்கம் அதன் பேரில் என்ன முடிவு எடுத்தது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தீர்மானங்களைப் பற்றிய தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

[18th July 1964

திரு. சா. கணேசன் : விமானம் மூலம் கிருமிநாசினிகளைத் தெளிக்கும்போது நல்ல பயிர்களிலும் அந்தக் கிருமிநாசினி விழுமாதலால் நல்ல பயிர்கள் பாழாகாதவாறு ஆவன செய்ய அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அது நல்ல பயிர்களை ஒன்றும் சேதப் படுத்தாது. நல்ல பயிர்களுக்கும் சாதகமாகத்தான் இருக்கிறது.

அரசாங்க பஸ் சர்வீஸ்

* 524 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரியிலிருந்து சென்னைக்கும் பெங்களூருக்கும் (State Express Buses) அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்கள் விட உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. எம். வி. கரிவேங்கடம் : கிருஷ்ணகிரியில் ஆறு மணி அளவுக்கு ஒரு எக்ஸ்பிரஸ் பஸ் புறப்படுகிறது. தருமபுரியிலிருந்து 4 மணி அல்லது 5 மணிக்குப் புறப்படுகிற அளவுக்கு துரித பஸ் விட அரசாங்கம் முன் வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 'உத்தேசம் இல்லை' என்று சொன்னேன்.

* 525 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) Whether the Government have received a resolution from Madras City Bus Passengers Association requesting the Government to extend concessions to School and College-going students charging only 50 per cent of the fare; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) A Memorandum has been received from the Bus Passengers Association, Madras suggesting among other things that students concessions and issue of half tickets may be considered.

(b) The suggestion is under consideration of the Government.

திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கெனவே விலைவாசி உயர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிற சென்னை நகர மக்கள் பஸ் கட்டண உயர்வினால் தாங்க முடியாது தவிக்கிறார்கள். ஆகவே, பஸ் கட்டண உயர்வை ரத்து செய்வது பற்றி அரசாங்கம் புனராலோசனை செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விலைவாசி உயர்வு காரணமாகத்தான் பஸ் கட்டணத்தையும் உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டது. பெட்ரோல் விலை உயர்ந்து விட்டது ; டீசல் விலை உயர்ந்து



18th July 1964]

விட்டது, சேசிஸ் விலை உயர்ந்து விட்டது. கூலி, சம்பளம் உயர்ந்து விட்டது. அதனால் கட்டணத்தை உயாத்தவேண்டிய நிலை ஏற்பட்டது. ரத்து செய்ய உத்தேசம் இல்லை.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கட்டணச் சலுகை பள்ளிக்குச் செல்லும்போது மட்டும் மாணவர்களுக்குக் கொடுக்க உத்தேசமா? அல்லது 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு அரைக் கட்டணச் சலுகை கொடுக்க உத்தேசமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இவைதான் பரிசீலனையில் இருக்கின்றன.

* 526 கேள்வி.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலிருந்து சிதம்பரம் வழியாகப் போகும் ஸ்டேட் ட்ரான்ஸ்போர்ட் ( State Transport Bus ) பஸ்ஸை மேலும் இரண்டாக அதிகரிக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

உளவு நாய்கள்

* 527 கேள்வி.—திரு. எம். கரிவேங்கடம் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது போலீசார் வசம் உள்ள போலீஸ் நாய்கள் எத்தனை ?

(இ) 1962-63-ல் அவற்றைப் பராமரிக்க ஆன செலவு எவ்வளவு?

(உ) அண்டை ராஜ்யங்களுக்கு போலீஸ் நாய்கள் அனுப்பப் படுவது உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 9 நாய்கள்.

(இ) ரூ. 11,973-16 ந.பை.

(உ) ஆம்.

* 528 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Home be pleased to state whether it is a fact that the Government have dorpped the proposal of stationing the detective dog squads in each district headquarters?

THE HON. SRI P. KAKKAN : The Government have not considered and dropped any proposal of stationing detective dog squads in each district headquarters.

மாவட்ட தலைமையிடங்கள் ஒவ்வொன்றிலும் போலீஸ் நாய்களை வைத்து வரும் திட்டத்தை அரசாங்கம் யோசிக்கவும் இல்லை ; இத்திட்டத்தைக் கைவிடவும் இல்லை.

[18th July 1964

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலிருந்து மற்ற மாவட்ட தலைநகரங்களுக்கு இந்த போலீஸ் நாய் வருவதற்குள்ளாக குற்றங்கள் புரிந்த நேரம் கடந்து விடுவதால், இங்கிருந்து அனுப்பப்படுகின்ற நாய்களுக்கு துப்பு அறியக் கூடிய சக்தி இல்லாமல் துப்பு கண்டுபிடிக்க முடியாமல் போய் விடுகிறது. ஆகவே எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் ஒன்றிரண்டு நாய்களை வைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இதைப்பற்றி பரிசீலனை செய்து பார்த்ததில் எல்லா தலைநகரங்களிலும் வைப்பதற்கு முடியாது என்பது தெரியவந்தது. முக்கியமாக கோவை, திருச்சி, மதுரை போன்ற பெரிய நகரங்களில் வைப்பது என்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்போது மதுரையில் மட்டும் மூன்று நாய்களை வைத்துக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதர பெரிய நகரங்களிலும் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஸ்க்வார்ட் வைப்பது முடியாது என்றிருந்தாலும், டி. ஐ. ஜி. ரேஞ்ச் என்ற அளவில் ஒவ்வொரு ரேஞ்சுக்குமாவது இந்த ஸ்க்வார்ட் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்த முறையில் தான் வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, பிற மாநிலங்களிலிருந்து இந்த மாநிலத்திற்கு பயிற்சி பெறுவதற்காக நாய்கள் அனுப்பப்படுகின்றனவா? அப்படியென்றால் எத்தனை நாய்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன?

**கனம் திரு. பூ. கக்கன்:** அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த துப்பறியும் நாய்கள் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதோடு, அப்பாவிகளையும் கண்டுபிடித்துக் கொடுக்கிறது என்கின்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அது உண்மையென்றால், இதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்:** துப்பறியும் நாய்கள் குற்றவாளிகளைத் தான் கண்டுபிடிக்கின்றன. அப்பாவிகளை கண்டுபிடிப்பது இல்லை. அம்மாதிரி அப்பாவிகளை கண்டுபிடிக்கின்றன என்று கனம் அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்தால் அதைப்பற்றியுள்ள விவரத்தை அரசாங்கத்திற்கு எழுதி அனுப்பினால், அதைப்பற்றி பரிசீலனை செய்யலாம்.

**திரு. கே. ஆர். எம். கரியமாணிக்கம் அம்பலம்:** இது போன்ற நாய்களை தனிப்பட்டவர்கள் வளர்த்து வந்தால், அதற்கு அரசாங்கத்தினிடமிருந்து தனிப்பட்டவர்களுக்கு ஏதாவது சப்ஸிடி கொடுக்க உத்தேசமுண்டா?



18th July 1964]

**கனம் திரு. பூ. கக்கன்:** அவ்வித உத்தேசமில்லை. இதனால் பெரிய சங்கடங்கள் ஏற்படலாம்.

**திருமதி பி. கே. ஆர். லட்சுமிகாந்தம்:** தலைவர் அவர்களே, துப்பறிவதற்காக தேர்ந்தெடுக்கப்படுகிற நாய்கள் எந்த வகையை சேர்ந்தது, எங்கிருந்து இவைகள் கொண்டு வரப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ள முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இதர நாடுகளில் எந்த வர்க்கத்திற்கு பயிற்சி கொடுக்கிறார்களோ அதைப்பார்த்து தான் நாமும் பயிற்சி கொடுத்து வருகிறோம். கானடா, யு.எஸ்.ஏ. யு.கே. பாலஸ்தீன், நெதர்லாண்ட்ஸ், தென் ஆப்ரிக்கா போன்ற நாடுகளில் எந்த வர்க்கத்தை எடுத்த பயிற்சி கொடுக்கிறார்களோ அந்த முறையில் இங்கும் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** இந்த உளவு நாய்களுக்கு குற்றவாளிகளை கண்டுபிடிக்ககூடிய சக்தி இருப்பதற்கு காரணம் என்ன? இந்த சக்தி எங்கிருந்து கிடைக்கிறது? இது தெய்வீக சக்தியா என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா?

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, the question must relate to the responsibility of the Government but the question is, how did the dog get intelligence? How can the Minister answer it?

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** இந்த துப்பறிகின்ற நாய்கள் கொலைகள், களவுகள் நடந்த இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் கொலை நடந்த இடத்தில், அவர்களுடைய உறவினர்கள் வருகிறார்கள். அவர்களையும் சில வேளைகளில் இந்த நாய்கள் அடையாளம் காட்டுகிறது. பத்திரிகை நிருபர்களையும் அடையாளம் காட்டக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவ்விதமாக சரியாக கண்டுபிடிப்பதில்லை. உயர் நீதி மன்றம் கூட, இதை ஸைன்டிஃபிக் இன்வெஸ்டிகேஷன் என்று சொல்ல முடியாது, இது சிறந்த முறை அல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ததா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கொலை, களவுகள் இவைகள் நடந்த பின்னால் தான் நாய்களை அனுப்ப முடியும். அதற்கு முன்பே எவ்விதம் அனுப்புவது? இந்த நாய்கள் வேறு ஆட்களை கண்டுபிடிக்கிறது என்று சொல்வது அவ்வளவு சரியல்ல, இதைப்பற்றிய முழு தகவல் வேண்டுமானால் தனிக்கேள்வி போடவும்.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, இந்த துப்பறியும் நாய்கள் கொலைக் குற்றம் செய்தவர்களை சரிவர கண்டுபிடிக்காமல் அப்பாவிகளையும் கண்டுபிடிக்கின்றன. ஆகவே இந்த நாய்களையே நம்பியிருக்கக்கூடாது என்று மைசூர் மாநிலத்திலுள்ள போலீஸ்

அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்திருக்கிறார். அது இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அப்படியென்றால் அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்** : அவ்விதம் கருத்து தெரிவித்திருக்கலாம். ஆனால் இந்த நாய்களின் மூலம் பல கேஸ்கள் வெற்றிகரமாக கண்டுபிடிக்க முடிந்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. கு. சுப்பையா** : எந்த ஜாதி நாயை இந்த பயிற்சிக்கு எடுத்துக்கொள்கிறார்கள்?

**கனம் திரு. பூ. கக்கன்** : பல வர்க்கத்தை சேர்ந்ததையும் எடுத்துக் கொண்டு பயிற்சி கொடுக்கிறார்கள்.

### திக்கற்றவர்களுக்கு நிதி உதவி

* 529 **கேள்வி.—திரு. செ. மாதவன்** : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம், திக்கற்றவர்கள், உறுப்பிழந்தவர்கள் ஆகியவர்களின் குழந்தைகளுக்கு நிதி உதவி அளிப்பது சம்பந்தமாக திட்டம் ஏதேனும் அனுப்பியுள்ளதா?

(இ) அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. செ. மாதவன்** : மத்திய சர்க்காரால் அனுப்பப்பட்ட திட்டத்தின் விவரம் என்ன? இதற்காக எத்தனை கோடி ரூபாய் மாநிலங்களுக்கு உதவி செய்யப் போகிறது? இதற்காக உதவித் தொகை எப்போது கிடைக்கும்.?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : மத்திய அரசாங்கத்தால் டெஸ்டிட்யூட்ஸ், ஹாண்டிஹாப்ட், டிசேபிள்ட் . . .

இவர்களுக்கு உதவி செய்வதற்காக நாம் 25 சத விகிதம் கொடுக்க வேண்டும் என்றும், அவர்கள் 75 சத விகிதம் கொடுப்பதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்த திட்டத்தைப் பற்றி "டைரக்டர் ஆஃப் விமன் வெல்பேர்" பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்** : தலைவர் அவர்களே, இந்த பரிசீலனை எப்போது முடியும்? மத்திய அரசாங்கத்தால் கொடுக்கப்படும் உதவி எப்போது எதிர்பார்க்கப்படுகிறது? இந்தத் திட்டம் எப்போது அமுலுக்கு வரும்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்** : பரிசீலனை சீக்கிரம் முடிந்துவிடும் என்று நினைக்கிறேன். பரிசீலனை முடிந்ததும் அமலுக்கு வரும்.



### *Bikaneer sheep*

* 530 Q.—SRI K. A. MATHIALAGAN AND SRI RAMA-ARANGANNAL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether 326 Bikaneer sheep were purchased at a total cost of Rs. 32,818 for the Research Station at Chinnasalem from Rajasthan;

(b) whether it is a fact that most of them have since died; and

(c) if so, how many have died up to September 1963?

THE HON. SRI P. KAKKAN : (a) to (c) Three hundred and twenty-six sheep were purchased in July 1959, from Rajasthan at a total cost of Rs. 32,818 out of which 80 sheep were allotted to the Sheep Breeding Research Station, Chinnasalem. The remaining 246 sheep were also kept at the Research Station, Chinnasalem for rearing and acclamatisation before distribution to the other Sheep and Wool Extension Centres in this State as the Liason officer (Sheep and Wool), Indian Council of Agricultural Research requested to rear the Rajasthan sheep in the farm atleast for one year before distribution in the villages. During that period, 112 rams died and the remaining 134 rams were distributed to the following six centres :

1. Ammayagaram I.
2. Ammayagaram II.
3. Thondapadi I.
4. Thondapadi II.
5. Murugur.
6. Veeraganur.

Subsequently, 163 more sheep died up to September 1963 at the various centres thus totalling the number of deaths to 275.

**திரு. சா. கணேசன்** : இது செம்மறி ஆடா அல்லது வெள்ளாடா? இங்கு 'ஷீப்' என்று இருக்கிறது, அங்கு 'ராம்' என்று அமைச்சர் கூறினார்கள். ஒரு ஆடு 1,000 ரூபாய் விலை அளவுக்கு வருகிறது. இவ்வளவு விலையில் சிறப்பான ஆடு என்ன காரணத்திற்காக வாங்கப்பட்டது? இவ்வளவு வாங்கியதில் 51 ஆடுகளைத் தவிர பாக்கியெல்லாம் செத்துப்போய்விட்டன என்ற செய்தி வந்தது. இவ்வளவு விலை எதற்காக? எதன் காரணமாகச் செத்தன? கவனக் குறைவினால் செத்தனவா? அல்லது சீதோஷ்ண ஸ்திதியால் நிலை காரணத்தினால் செத்தனவா? சீதோஷ்ணத்திற்கும் தகும் என்ற செத்தன என்றால் இந்த 9-60 a.m.

[18th July 1964

கருத்தை அல்லது இந்த சீதோஷ்ணத்திற்கும் தகாது என்ற கருத்தை அந்தத் துறை அதிகாரிகள் யோசனை சொன்னார்களா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வி மாதிரி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் கூட்டி வைத்து, இதற்குக் காரணம் என்ன, ஏன் இத்தனை ஆடுகள் இறந்தன, கவனக் குறைவினால் இறந்தனவா? அல்லது சீதோஷ்ண ஸ்திதி காரணத்தினால் இறந்தனவா என்று நான் விசாரித்தேன். அந்த இடத்திலிருந்து இங்கு வரும்போது சீதோஷ்ண ஸ்திதி மாறுவதால் இந்த ஆடுகள் இறந்து விட்டன என்று சொன்னார்கள். கவனக் குறைவு என்று சொல்ல முடியாது என்று முன்பு இருந்த கால் நடை இலாகா டைரக்டர் சொன்னார்கள். இன்னும் கொஞ்சம் நன்கு கவனித்திருக்கவேண்டும் என்ற முறையில் சென்ஷர் செய்கிற மாதிரி ப்ளாக் மார்க் அந்த அதிகாரிக்குக் கொடுக்கவேண்டுமென்று நானே ஏற்பாடு செய்திருக்கிறேன்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, சீதோஷ்ண நிலையால் இறப்பதாக இருந்தால் ஒரே நேரத்தில் எல்லா ஆடுகளும் இறந்திருக்கவேண்டும். இறந்ததெல்லாம் படிப்படியாக இறந்திருக்கின்றன. அனுப்பும்போதும் இறந்திருக்கின்றன. இதைப் பற்றி அந்த வட்டாரத்தில் குறிப்பிடும்போது கொடுத்த மருந்து வகைகள் சிலவற்றால் இப்படிப்பட்ட விபரீதம் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. இந்தப் புகார் அமைச்சருக்கு வந்ததா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அப்படி ஒன்றும் தகவல் இல்லை. சீதோஷ்ண ஸ்திதி காரணமாகத்தான் இறந்திருக்கின்றன. இங்கே நமக்கே தெரியும் கோழிகள் ஆடுகள் எல்லாம் திடீரென்று இறந்து போகும். சாகாமல் இருக்கத்தான் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கவனக் குறைவாக இருந்ததாகச் சொல்ல முடியாது என்று சொல்லுகிறார்கள். இந்த சீதோஷ்ண மாற்றம் காரணமாக ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிறார்கள்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** சீதோஷ்ண நிலையால் இந்த ஆடுகள் செத்ததாகச் சொல்லப்படுகிறது. மீதி ஆடுகளையாவது விற்று பணமாக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது அந்த இடத்தைவிட்டு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா?

**கனம் திரு. திரு. பூ. கக்கன்:** பல கிராமங்களில் ஆடுகளைக் கொடுத்திருப்பதில் பல ஆடுகள் தப்பித்து இருக்கின்றன. அவைகள் நன்றாகவே இருக்கின்றன. மேலும் இதை அபிவிருத்தி செய்யலாம் என்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறோம். ராஜஸ்தான் வர்க்கம் நல்ல வர்க்கம். ஏற்கனவே இறந்து விட்டிருந்தாலும் மேலும் பரிசீலனை பண்ணிப் பார்க்கவேண்டும், லாபகரமாக வருவதை மறுபடியும் முயற்சி செய்து பார்க்கவேண்டும் என்று அதிகாரிகளும் சொல்கிறார்கள். ஜாஸ்தியாக வைக்காமல் கொஞ்சம் கொஞ்சமாக வைத்து எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் வைக்கலாம் என்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.



18th July 1964]

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, யாருடைய சிபாரிசின் அடிப்படையில் இவ்வளவு அதிக விலை கொடுத்து ஆடுகள் வாங்கப்பட்டன என்று அறியலாமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** டைரக்டர் ஆஃப் அனிமல் ஹஸ்பண்ட்ரி சிபாரிசு செய்து ராஜஸ்தானுக்கு அதிகாரி போய் அங்கிருந்து வாங்கப்பட்டன.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** ஸார், இந்த வர்க்க ஆட்டை நம்முடைய ராஜ்யத்திற்கு வாங்கி எடுத்து வருவதற்கு முன்னதாகவே நாம் சீதோஷ்ண நிலைக்கு ஏற்றதா என்று பரிசீலனை செய்திருக்க வேண்டும். இப்போது அமைச்சர் கொடுக்கும் பதிலைப் பார்த்தால் வேறு இடங்களில் ஏற்ற சீதோஷ்ண நிலை இருக்கும் என்று தெரிகிறது. அப்படி இருக்கும்போது இவ்வளவு ஆடுகள் சாகும் வரையில் பார்த்திராமல் உயர்தர அதிகாரியைக் கொண்டு போஸ்ட் மார்ட்டெம் எக்ஸாமினேஷன் செய்து அப்போதே அவைகளைப் பாதுகாக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

**கனம் திரு. பூ. கக்கன்:** எல்லாவற்றையும் ஒரே இடத்தில் வைக்கவில்லை. பல இடங்களில் தான் வைத்திருக்கிறார்கள். அந்த இடங்களிலும் செத்திருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### பாக்குச் செடிப் பண்ணைகள்

* 531 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் சேலம் மாவட்டத்தில் எங்கெங்கு பாக்குச் செடிப் பண்ணைகள் ஏற்படுத்தப்படும்?

**கனம் திரு. பூ. கக்கன்:** சேலம் மாவட்டத்தில் பாக்குச் செடிப் பண்ணைகள் ஏற்படுத்தும் உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

At present there is no proposal to open Arecanut Nurseries in Salem district.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** இப்போது பாக்கு நமது மாகாணத்தில் வெளியிலிருந்து இறக்குமதி குறைவாக இருப்பதால் ஸ்மக்ளிங் மூலமாக வெளியிலிருந்து வருகிறது. நம் மாகாணத்தில் அநேக ஜில்லாக்களில் பாக்கு விளைந்து வருமானம் வரக் கூடியதாக இருப்பதால், இதையும் தென்னையைப் போன்று அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஆறு இடங்களில் அரிக்காநட் நர்சரி ஏற்படுத்த ஏற்பாடு செய்திருக்கிறது.

[18th July 1964

Model orchard-cum-Nursery at Nagercoil, Kanyakumari district.
Model orchard-cum-Nursery at Thimmapuram.
Model orchard-cum-Nursery at Periyakulam, Madurai district.
Model orchard-cum-Nursery at Pattukottai, Thanjavur district.
Fruit Station at Kallar and Burliar (Nilgiris and Coimbatore).
Model orchard-cum-Nursery at Curtallam, Tirunelveli district.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இறக்குமதியைத் தடை செய்து விட்டபடியால் அதிகமாக விலை ஏறியும், ஸ்மக்ளிங் ஜாஸ்தியாக நடப்பதால் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டம் என்ன ? பாக்கு அதிகமாக வர ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பாக்கு வருவதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த பாக்குச் செடி அதிகமாக ஏற்படுத்த விவசாயப் பண்ணைகளில் விரிவு படுத்தும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ? தென்னை போன்ற கன்றுகளுக்கு பாதி விலையில் கொடுப்பதுபோல மான்யமாகக் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சப்ஸிடியைப் பொறுத்த வரையில் தனியாகக் கேள்வி போடவேண்டும். அதிகமாகக் கிடைக்க ஆறு இடங்களில் நர்சரி ஏற்படுத்தியிருக்கிறோம். மேலும் பல இடங்களில், வாய்ப்பு இருக்கும் இடங்களில், அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்பது அரசாங்கத்தின் திட்டமாகும்.

## நடமாடும் மருத்துவ மனை

*532 **கேள்வி.—திரு. மா. இராசாங்கம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதில் அளிப்பாரா—

நகர்புறத்தைவிட்டு ஒதுங்கிக்கிடக்கிற கிராமப்புறங்களுக்கு எளிதில் மருத்துவ உதவி கிடைக்கும்படி ஊர்ஊராகச் சென்று வரக் கூடிய நடமாடும் மருத்து மனை ( Mobile Dispensary ) களை ஏற்படுத்த உத்தேசமுண்டா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** மாவட்டங்களில் பற்பல இடங்களில் பத்து மொபைல் மருத்துவ வண்டிகள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மதுரை மாவட்டத்தில் ஆதிவாசிகளின் நலனுக்கென மற்றொரு மொபைல் மருத்துவ வண்டிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் பல் சிகிச்சைக்காக மொபைல் மருத்துவ வண்டி ஒன்றும் சென்னை கண் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்கான மொபைல் மருத்துவ வண்டி ஒன்றும் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் கண் சிகிச்சைக்காக மற்றொரு மொபைல் மருத்துவ வண்டியும் உள்ளன. இவ் வண்டிகள் அருகிலுள்ள பல கிராமங்களுக்குச் சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்றன. மேலும் மொபைல் மருத்துவ வண்டிகளைத் துவக்க அனுமதிக்கும் உத்தேசம் இப்போது இல்லை.



18th July 1964]

**திரு. ஜே. மாதா கவுடர் :** நீலகிரியிலே ஆதிவாசி மக்களுக்குக் கொடுத்திருக்கும் மொபைல் வான் வருஷத்தில் 11 மாதங்கள் ரிப்பேர் ஆகி விடுகிறது. புது வண்டி வேண்டும் என்று கேட்கப் பட்டிருக்கிறது. புது வண்டி கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** பதினொரு மாதங்கள் அவுட்-ஆஃப்-ஆர்டர் அல்ல. இரண்டு மாதங்கள் அவுட்-ஆஃப் ஆர்டராக இருந்தது. இப்போது ரெகுலராக ஃபங்ஷன் செய்கிறது.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** இந்த நடமாடும் மருத்துவ மனை வண்டிகள் ஏற்கெனவே ப்ரைமரி ஹெல்த் சப்-சென்டர் சாங்ஷன் ஆகி எமர்ஜென்ஸி காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இடங்களில் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு இந்த வண்டி வேண்டுமென்று வற்புறுத்தியும் கொடுக்கப்படவில்லை. ஒன்று இந்த வண்டி கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் சப்-சென்டர் கட்ட பணம் கொடுக்கவேண்டும். அந்த முறையில் இரண்டில் ஒன்று செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ப்ரைமரி ஹெல்த் சென்டரில் ஒரு மொபைல் வான் எல்லா இடத்திலும் இருக்கிறது. பக்கங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்று மருத்துவ வசதிகள் கொடுத்து வருகிறார்கள். அப்படி எங்காகிலும் குறிப்பாக இல்லை என்றால் தனிப்பட்ட முறையில் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

## கூட்டுறவு விவசாய பாங்கு

*533 **கேள்வி.—திரு. எஸ். ஜே. இராமசாமி :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலூகா சித்தேரி கிராம கூட்டுறவு விவசாய பாங்கியில் தானிய ஈட்டுக் கடன் பேரில் மோசடி நடந்தது உண்மையா ?

(இ) ஆமெனில், விபரமென்ன ?

(உ) இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் ? அவர்கள்மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் :** (அ) அரக்கோணம் தாலூகாவில் "சித்தேரி விவசாய பாங்க்" என்கிற பெயரில் கூட்டுறவு விவசாய பாங்க் எதுவும் இல்லை.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, அங்கே இருக்கக் கூடிய பாங்க் இல்லை என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஆனாலும் அந்த இடத்திற்குப் பக்கத்தில் இருக்கும் கிராமத்திலாவது இந்தத் தகராறு நடந்திருக்கிறது . . .

[18th July 1964

MR. SPEAKER : The hon. Member has put a specific question regarding 'Sitheri Agricultural Bank ''.

திரு. எஸ். ஜே. ராமசாமி: அந்த கிராமத்தின் எல்லையில் உள்ளது . . .

கனம் சபாநாயகர்: எந்த ஊரில் ?

திரு. எஸ். ஜே. ராமசாமி: சித்தேரி, அரக்கோணம் தாலுகா.

கனம் சபாநாயகர்: அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லி விட்டார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: சித்தேரியின் பக்கத்தில் இருக்கிற ஊர்.

கனம் சபாநாயகர்: என்ன ஊர் ?

திரு. எஸ். ஜே. ராமசாமி: சித்தேரியின் பக்கத்தில் இருந்தாலும் அந்தப் பக்கத்து மக்கள் . . .

MR. SPEAKER : The hon. Member may make it clear and renew the question later, if he wants.

* 534 கேள்வி—திரு. சி. சிவசுப்ரமணியன்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்கா, எடையார் கிராமத்தில் கூட்டுறவு விவசாய பாங்கு வேண்டுமென்று கிராம ஜனங்கள் அரசாங்கத்திற்கு அண்மையில் ஏதேனும் மனு செய்துள்ளார்களா ?

(இ) அப்படியானால், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சாக்கரை மன்றாடியார்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Cost of cultivation*

* 535 Q.—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the particulars regarding the cost of cultivation have been collected for each crop district-war; and

(b) if so, whether it will be placed on the table of the House?

THE HON. SRI P. KAKKAN : (a) A survey to estimate the cost of cultivation of rice alone was conducted in the two districts of Thanjavur and Coimbatore for fasli 1372 (1962–63).

(b) The processing and analysis of the data collected is in progress and a report will be prepared on completion of this work.



18th July 1964]

(அ) 1372-ம் பசலியில் (1962-63) தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் அரிசிக்கு மட்டும் ஆகும் சாகுபடிச் செலவை மதிப்பிட சர்வே ஒன்று நடத்தப்பட்டது.

(இ) சேகரித்த புள்ளிவிவரங்களைத் தொகுத்து ஆராயும் வேலை நடந்து வருகிறது. இவ்வேலை பூர்த்தியானவுடன் ஓர் அறிக்கை தயாரிக்கப்படும்.

### பாலம் கட்டுதல்

* 537 கேள்வி.—திரு. செ. சீனிவாசன்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை-இராமநாதபுரம் சாலையையும் பரமக்குடி நயினார் கோவில் சாலையையும் இணைத்துப் பரமக்குடி நகரில் கிழக்கு சுப்பிரமணியசுவாமி கோயிலுக்கு அருகிலுள்ள வைகை ஆற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைக்கும் உத்தேசமுண்டா ?

(இ) இல்லையெனில், பரமகுடி, எமனேசுவரம் நகர்களிலுள்ள நெசவாளர்களுக்கு உதவியாக ஓரளவு கடனாகவும், ஓரளவு மானியமாகவும் பெறும் அடிப்படையில் பாலம் கட்டுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) இல்லை.

(இ) மேற்கூறிய இடத்திலிருந்து சுமார் ஆறு பர்லாங்கு தூரத்தில் ஏற்கனவே ஒரு பாலம் இருப்பதால், இங்கு பாலம் கட்டுவதற்கு அவசரம் ஏதுமில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

* 538 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டம், நிலக்கோட்டை தாலுக்கா வத்தகுண்டு பிர்க்காவில் உள்ள ரங்கப்பநாயக்கன்பட்டி, ராமநாயக்கன்பட்டி கிராமங்களை இணைத்து வைகையில் ஒரு பாலம் அமைக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: இந்தப் பாலமானது மிகவும் அவசியம். மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் நேரில் பார்த்த பிறகு இதற்கு ரூ 2 3/4 லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியானால் இதை மறுபரிசீலனை செய்து அங்கே இந்த பாலத்தை அமைப்பதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ரூ. 2.75 லட்சத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டது. எஸ்டிமேட் போட்டுவிட்டால் உடனே பாலம் கட்டுவது என்று அர்த்தமில்லை. இது இரண்டு கிராமங்களுக்குத்

தான் 'ஸர்வ்' ஆகும், ஆகவே அவசியமில்லை என்று கருதி 'டிராப்' செய்யப்பட்டது. மேற்கொண்டு இதை டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சிலும் 'ரெகமண்டு' செய்யவில்லை. அந்த லிஸ்டில் இது இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது இரண்டு கிராமங்களுக்குத் தான் இது பயன்படும் என்று கூறினார்கள். அம்மாதிரி இல்லை. 18 கிராமங்களைச் சேர்ந்த கிட்டத்தட்ட 10,000 ஜனத்தொகைக்கு இது பயன்படும். அந்தப் பகுதியில் வசிக்கும் ஜனங்கள் வத்தக்குண்டுக்கு 18 மைல் சுற்றிவர வேண்டும். விவசாயப் பொருள்களைக் கொண்டு வரவேண்டும். 18 மைல் நடந்து வர முடியாது. இந்தப் பாலம் இந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பயன்படும். தயவு செய்து இதை மீண்டும் பரிசிலனை செய்து அடுத்த ஆண்டிலாவது இந்த பாலத்தை எடுத்துக்கொள்வதற்கு வழிவகை செய்யப்படுமா ?

Mr. SPEAKER : The Hon. Minister will consider the request of the hon. Member.

* 539 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி தாலூகாவிலுள்ள சின்னாற்றுக் குறுக்கே பாலக்கோடு-பென்ரம்பட்டி ரோட்டில் மேம்பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : இந்தப் பாலம் எப்பொழுது கட்ட துவங்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பாக்கியுள்ள 'ஸ்பில் ஓவர்' திட்டங்கள் முடிந்தவுடனே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் இவைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

* 540 கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நாகை தாலுக்காவில் ஓடும் பாண்டவையாற்றின் குறுக்கே ஆந்தைக் குடியிலிருந்து சிகார் ரோட்டை இணைக்க பாலம் கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஆந்தைக்குடி-வலிவலம் காலையில் 0/3 மையில் பாண்டவையாற்றின் குறுக்கே பாலம் கட்டும் வேலைக்கான டெண்டர் இப்போதுதான் முடிவு செய்யப்பட்டு. வேலையை





மேற்கொள்வதற்கான உத்தரவும் சென்னை வட்டார (நெடுஞ்சாலை-கிராமப் பணிகள்) மேற்பார்வைப் பொறியாளரால் சம்பந்தப்பட்ட காண்டிராக்டருக்கு வழங்கப்பட்டுள்ளது.

### விவசாயிகளிடம் கடன் தொகையை வசூலித்தல்

* 541 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தீவிர சாகுபடித் திட்ட கிராமங்களிலும், இதர கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்கிய கடன்களை கொடுப்பதற்கு இயலாத நிலையில் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பதால் இந்த ஆண்டு வசூலை ஒத்தி வைக்கக்கோரி கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்கத்தை கேட்டிருக்கிறார்களா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :

(அ) இல்லை.

(இ) எழாது.

திரு. மா. இராசாங்கம் : வருவாயற்ற காலத்தில் கூட்டுறவு சங்கங்களிலிருந்து வாங்கப்பட்ட கடன்கள் வசூலிக்கப்படுவதால் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். வருவாய் உள்ள காலத்தில் கடனை வசூலிக்க சர்க்கார் ஏதாவது உத்தரவிடுமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : வருவாய் காலத்தில் தான் வசூலித்துக்கொண்டிருக்கிறோம் 'ஷார்ட் டேர்ம் லோன்' என்று சொல்வது அது தான்.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்த வருஷம் தஞ்சாவூர் ஜில்லாவில் மகசூல் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிக்கொடுக்க முடியாமல் அதிக ரூபாய் வசூல் தங்கிப் போயிருக்கிறது. ஆகவே, இந்த வருஷம் மாத்திரம் இந்தக் கடன் வசூலை நிறுத்தி வைப்பது பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : கனம் மெம்பர் அவர்கள் கேட்ட முக்கிய கேள்விக்குப் பதில் சொல்லும் பொழுது, தனிப்பட்ட துறையிலே உள்ளவர்கள் எழுதின தகவல் தான் வந்திருக்கிறது. சொசைட்டிகளின் மூலம் இந்தக் கடன் வசூலை தள்ளிவைக்கவேண்டும் அல்லது ஒத்திவைக்கவேண்டும் என்ற தகவல் வரவில்லை. அந்த அடிப்படையில் தான் 'இல்லை' என்று பதில் சொன்னேன். தனிப்பட்டவர்கள் தான் எழுதினார்கள். அங்கு இருக்கும் 5 சொசைடிகள் என்ன நிலையில் இருக்கின்றன என்பது பற்றி எங்களுக்கு எழுதவேண்டும். அங்கு ஒரு

[18th July 1964

ஜாயிண்டு ரிஜிஸ்டிரார் தஞ்சாவூர் ஸ்பெஷல் ஸ்கீமை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை விசாரித்து உடனே எழுதவேண்டும் என்று சர்க்கார் அவர்களுக்கு உத்தரவு போட்டிருக்கிறது.

## கொளவாய் ஏரி

* 542 கேள்வி—திரு. செ. கோ. விசுவநாதன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரிலுள்ள "கொளவாய் ஏரி" யை சீரமைக்கும் திட்டம் ஏதேனும் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அந்தத் திட்டம் எந்த நிலையிலுள்ளது?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) கொளவாய் ஏரியைச் செப்பனிடத் திட்டம் ஏதும் இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(a) There is no proposal to repair the Kolavoy eri.

(b) Does not arise.

திரு. முனு. ஆதி : இந்தக் கொளவாய் ஏரியில் தண்ணீர் எப்பொழுதும் வற்றுவதில்லை. அதை விவசாய நிலங்களுக்குப் பாய்ச்சுவதற்கு வழிவகை செய்ய அரசாங்கம் முன்வருமா? அல்லது இப்பொழுது எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருக்கிறது என்ற தகவலை அறியலாமா?

கனம் திரு. பூ. கக்கன் : இது பெரிய ஏரி தான். 689 ஏக்கர் நிலங்களுக்கு அந்த ஏரி பயன்படுகிறது. உள்வாய் புறத்தில் நிறைய நிலம் இருக்கிறது. கண்மாயை ஆழப்படுத்துவதற்கு உத்தேசமில்லை. உள்வாயிலுள்ள நில விஸ்தீரணம் ஜாஸ்தியாக இருப்பதால், அந்த நிலங்களை விவசாயத்திற்குப் பயன்படுத்தலாமா என்பது பற்றி பரிசீலனையில் இருக்கிறது.

## *Stainless steel sheets*

* 543 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the basis on which quotas of stainless steel sheets for making utensils are allotted for Madras State;

(b) the steps taken for increasing the allotment; and

(c) how distribution is made for the manufactures in the State?



18th July 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Allotment of stainless steel to various States is made by the Iron and Steel Controller, Calcutta. The basis for the allotment is not disclosed to the State Governments.

(b) The Government of India have been urged to increase the ceiling of foreign exchange for all imported steel items including stainless steel sheets.

(c) Allotments received up to March 1962 were distributed among the utensil manufacturers on a pro rata basis. No allotment has been received subsequently. It is hoped that allotment will be resumed by the Iron and Steel Controller as and when the supply position warrants.

திரு. மீ. கலியாணசுந்தரம் : 'ஐர்ன் ஆண்டு ஸ்டீல் கண்ட்ரோலர்' நம்முடைய ராஜ்ய அரசாங்கம் கேட்ட அளவுக்கு கோட்டாவை உயர்த்தாதது ஒரு குற்றம். அதனால் தொழில் பாதிக்கப்படுகிறது. கிடைத்த கோட்டாவில் சென்னை நகரத்தில் உற்பத்தி பண்ணக் கூடிய பெரிய வியாபாரிகளுக்கு, கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் செய்பவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலுள்ள சிறு தொழில்கள் செய்கிறவர்களுக்கு அதிகமாகக் கொடுக்கப்படவில்லை. உபயோகப்படுத்துகிற பொது மக்களுக்கு மலிவான விலையில் பாத்திரம் கிடைக்கக்கூடிய வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து சரியாக விநியோகம் செய்வதில் கவனம் செலுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விநியோகம் சம்பந்தப்பட்ட வரையில் சர்க்கார் மிகவும் கண்காணிப்பாக இருக்கிறது. எங்களுடைய 'அஸிஸ்டெண்டு டைரக்டர் ஆப் இண்டஸ்ரீஸ்' அடிக்கடி சென்று இந்த 'ஸ்கார்ஸ் கமாடிடீஸ்' உற்பத்தி செய்கிறவர்களுடைய பாக்டரிகளையெல்லாம் பார்வையிடுகிறார்கள். இதற்கும் மீறி ஏதாவது தகவல் கனம் அங்கத்தினர் அவர்களிடத்தில் இருக்குமானால், அதை எங்களிடம் கொடுத்தால். உடனே இன்வெஸ்டிகேஷன் செய்து, அவ்வாறு தவறு செய்பவர்களுடைய கோட்டாவை 'கான்சல்' செய்வதற்கு தயாராக இருக்கிறோம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அந்தத் தகவலை நான் அமைச்சர் அவர்களுக்கு நேரடியாகக் கொடுக்க விரும்புகிறேன். இந்தச் சபையில் கொடுக்க விரும்பவில்லை. அது ஒரு புறம் இருக்க, சென்னை நகரத்திற்கு மட்டும் கொடுக்கப்பட்ட கோட்டா எவ்வளவு, மற்ற எல்லா மாவட்டங்களுக்கும் சேர்ந்து ஒதுக்கப்பட்ட கோட்டா எவ்வளவு என்ற தகவலை அமைச்சர் அவர்கள் கொடுப்பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நம்முடைய ராஜ்யத்தில் எத்தனை 'ஸ்டைன்லஸ் ஸ்டீல் மான்யுபாக்சரர்ஸ்' இருக்கிறார்கள் என்ற லிஸ்டு இருக்கிறது. அவர்களுக்கு இதற்கு முன்பு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும் லிஸ்டு இருக்கிறது. எவ்வளவு நமக்கு கோட்டா கிடைக்கிறதோ அதை 'ப்ரோ ரேடாவாக' கொடுக்கிறோம். சென்னை நகரத்தில் முன்பு அதிகமாக

உபயோகப்படுத்தியிருந்தால், ப்ரோ ரேடா' படி. சென்னை நகரத்திற்கு அதிகமாக வரும். சென்னை நகரத்திற்கு என்று தனியாக அதிமான ஒதுக்கீடு கிடையாது.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில் ஆரம்பத்திலேயே சாதுர்யமாக அதிகமாக வாங்கி இப்பொழுது ப்ரோ ரேட்டாவும் அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் மாவட்டத்தில் ரூ. 600-க்குத் தகடுகள் வாங்கலாம் என்று சொல்லும் பொழுது, எந்த அந்நிய நாட்டிலும் ஃபாரன் எக்ஸ்சேஞ் கிடைக்க வழியில்லாமல், கோட்டா வாங்கினவர்கள் பெரிய முதலாளிகளிடம் விற்று விடுவதனால், கள்ள மார்க்கட் பெருகுகிறது என்பது அமைச்சரின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** எந்த ஒரு சரக்கிலும் பற்றுக்குறை இருக்குமானால், அதைப் பயன்படுத்திக்கொண்டு, கோட்டா வாங்கினவர்கள் விற்பார்கள். அதைத் தடுப்பது கஷ்டம். அந்தவிதமான தகவல் கொடுத்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. முனு. ஆதி :** கோட்டா கேட்கிறபொழுது, எத்தனை டன்கள் கேட்கிறார்களோ, அவ்வளவுக்கும் சாமான்களாகச் செய்து விட்டார்களா என்பதற்கு ஒரு அதிகாரியை நியமித்து, பரிசோதனை செய்து, கள்ள மார்க்கட்டைத் தடுக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு உண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு தான் செய்யப்படுகிறது. கோட்டா கொடுத்த அளவுக்கு வியாபாரம் செய்கிறார்களா என்று விற்பனைக் கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** நம்முடைய ராஜ்யத்தில் கொடுக்கப்படுகிற கோட்டாவை வாங்கி, அவர்கள் செய்கின்ற சாமான்களுக்கு மேல், கேரளா போன்ற ராஜ்யங்களிலிருந்து தகடுகளை அதிகமான விலைக்கு வாங்கி, கண்டிரோல் விலைக்கு வாங்கினதாக எழுதுகிறார்கள். இப்படி மற்ற ராஜ்யங்களில் பயன்படுத்தாதவர்களிடமிருந்து சரியான விலைக்கு வாங்குவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நம்முடைய ராஜ்யத்தில் சட்டங்களை அமல் நடத்துவதே சிரமமாய் இருக்கிறது. அப்படி இருக்கும்போது, மற்ற ராஜ்யங்களில் தவறுகள் நடக்காதபடி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னால், அது சுலபமான காரியம் அல்ல. பொதுவாக வகுத்திருக்கிற திட்டப்படி எந்தெந்த ராஜ்யங்களில் இப்பொழுது பற்றுக்குறை இருக்கிறது என்பது தான் இப்பொழுது ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சம்பந்தப்பட்ட வரை நிலைமை. அதைத் தவறாக உபயோகிக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சென்னை நகரத்தில் அதிக கோட்டா பெறுகிறவர்கள், அதற்குத் தகுந்தாற்போல தொழிலாளிகள் வைத்து நடத்துகிறார்களா, மாதச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா, உற்பத்தி நடைபெறுகிறதா என்றெல்லாம் பரிசீலிக்கப்படுகிறதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஏதாவது சில புகார்கள் எழுதிக் கொடுத்தால், அவை மாத்திரம் அல்லாமல், இன்னும் சில நுணுக்கமான விஷயங்களும் இருக்கின்றன, அவையும் சேர்த்து விசாரணை செய்யப்படும்.

### சர்க்கரை விநியோகம்

*544 **கேள்வி.—திரு. செ. மாதவன் :** கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொதுமக்களுக்கு சீனி வழங்கும் உரிமை பெறும் வியாபாரிகளுக்கு புதிய கட்டுப்பாடுகள் எவையேனும் 1963-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் விதிக்கப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவைகளின் விவரமென்ன ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :**

(அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

**திரு. செ. மாதவன் :** மத்திய சர்க்கார் கொடுக்கும் சீனியை நம்முடைய மாநிலத்தில் மாவட்டம் தோறும் சப்ளை செய்வதிலே என்ன கொள்கை அனுசரிக்கப்பட்டு வருகிறது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** முன்பு சர்க்கரை எவ்வளவு கொடுக்க வேண்டுமென்ற கணக்கை வைத்து, இப்பொழுது ஆங்காங்கே இருக்கக்கூடிய மாவட்டங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

*545 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Food be pleased to state the details of the conclusions reached at the conference of the Collectors held in Madras, during the third week of December 1963, regarding proper distribution of sugar and for checking black-marketing in these commodities?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : The Collectors' Conference was purely a departmental one, wherein the participants exchanged views on various administrative matters. It was not open to non-officials. The Government, therefore, consider that it will not be in public interest to furnish information required by the Member.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கலெக்டர் மகாநாட்டில் நடந்த நிர்வாக அலுவல்களைப் பற்றி நான் தகவல் கேட்கவில்லை. சர்க்கரை விநியோகம் சம்பந்தமாக அங்கே விவாதிக்கப்பட்டதா ?

[a] 245–246-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[18th July 1964

அப்படியானால் என்னென்ன யோசனைகள் சொன்னார்கள்? அவை பரிசீலனை செய்யப்பட்டனவா? அதிலே என்ன ரகசியம் இருக்கலாம் என்று தெரியவில்லை.

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அதிலே பல ரகசியங்கள் பேசப்பட்டன. நான் முதலிலேயே சொன்னேன் . . .

MR. SPEAKER : The hon. Member asks about the ways and means adopted to check black-marketing. Anyhow, the hon. Member may put a separate question if he wants.

**திருமதி சி. குழந்தையம்மாள் :** அங்கே நடந்த மகாநாட்டிலே என்ன ரகசியங்கள் பேசிக்கொண்டாலும் கவலை இல்லை. கிராமங்களிலே இருக்கிறவர்களுக்கு சர்க்கரை தாராளமாகக் கிடைக்கவில்லை என்பது குற்றச்சாட்டு. கிராமத்திலுள்ளவர்கள் ஒரு கிலோவுக்கு ரூ. 2-1/2 கொடுக்க வேண்டியிருக்கிறது. ஒரு கிலோ என்பது முக்கால் பவுண்டு கூட இல்லை. அந்த அளவுக்கு கிராமங்களில் விலை ஏற்றம் இருக்கிறது. கிராம மக்களுக்கு சர்க்கரை நியாய விலைக்குக் கிடைப்பதற்காக பேசப்பட்ட ரகசியம் வெளிவர வேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்.

MR. SPEAKER : The hon. Member has made a speech and not put a question.

*Spindles for Madras State*

* 546 *Q*.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the total number of spindles allotted for Madras State during the Third Five-Year Plan;

(*b*) the number of spindles allotted for private sector and co-operative sector; and

(*c*) the total number of spindles licensed in Madras State so far during the current plan—

(i) in the private sector;

(ii) in the co-operative sector?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Under the Third Five-Year Plan, one lakh spindles were allotted to Madras State.

(*b*) & (*c*) No separate allotment was made for the private and the co-operative sectors. Apart from the allotment mentioned in the answer to clause (*a*) above, *ex-gratia* allotments of spindles have been made on an *ad hoc* basis for reasons such as expansion of uneconomic units to the minimum economic level, for the manufacture of textiles for export, etc. The total spindlage actually sanctioned during the Third Plan is 5,32,688 spindles for the private sector and 1,20,000 spindles for the co-operative sector.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இப்படி ஒதுக்கப்பட்ட கதிர்களில் தனியார் துறையிலிருந்து எவ்வளவு விண்ணப்பங்கள் வந்தன? அதில் யார் யாருக்கு உரிமை வழங்கப்பட்டது? அவர்களுடைய



18th July 1964]

பெயரின் பட்டியல் என்ன? எந்தெந்த மாவட்டங்களில் இந்த நூற்பு ஆலைகள் அமையும் என்பதைச் சொல்லுவார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : தனிக் கேள்வி போட்டால் ஒரு ஸ்டேட்மெண்ட் மேஜை மீது வைக்கப்படும்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** கூட்டுறவு நூற்பு ஆலை வழங்கப்பட்ட இடங்களில் ஆரம்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தனியார் துறைக்கு மாற்றிக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அந்த மாதிரி உத்தேசம் இல்லை. கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டு, கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். எஸ். செல்வராஜன் :** எகனாமிக் யூனிட் என்ற அளவு எத்தனை ஸ்பிண்டில்கள்? இந்த மாகாணம் முழுவதற்கும் எகனாமிக் யூனிட் அளவுக்கு, நூற்பு ஆலைகளின் மொத்தத் தொகையைச் சேர்த்துப் பார்த்தால், எவ்வளவு கதிர்கள் தேவைப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கட்டுபடியாகக் கூடிய யூனிட் என்பது அந்தந்த காலத்தைப் பொருத்து நிர்ணயம் செய்யப்படுகிறது. இதற்கு முன்பு 12,000 கதிர்கள் இருப்பதை ஒரு எகனாமிக் யூனிட்டாகக் கருதி வந்தோம். 1963, அக்டோபரிலிருந்து, 26,000 ஸ்பின்டில்கள் ஒரு எகனாமிக் யூனிட் என்று கருதுகிறோம். அந்த விதமான எகனாமிக் யூனிட்டாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மனுப்போட்டவர்களுக்கு ஐந்து லட்சம் சில்லரை ஸ்பிண்டில்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவு பேர்கள் இன்னும் அன்-எகனாமிக் யூனிட் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு தனிக்கேள்வி போடவேண்டும்.

**திரு. வி. எஸ். எஸ். மணி :** நமது மாநிலத்திற்கு இன்னும் அதிகப்படியான கதிர்கள் தேவை என்று மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கொடுத்திருக்கிற ஸ்பிண்டில்களே இன்னும் யூடிலைஸ் ஆகவில்லை. மேற்கொண்டு லாப்ஸ் ஏற்படுமானால், அதையும் இந்த ராஜ்ய சர்க்கார் பெறுவதற்கு முயற்சி செய்யும்.

## நூற்பு ஆலை

* 547 கேள்வி.—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

செங்கல்பட்டு மாவட்டத்தில் தனியார் துறையில் நூற்பு ஆலை ஒன்று அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா?

[18th July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : A licence has been granted for the establishment of a cotton spinning mill with 12,000 spindles in the private sector at Tiruvellore in the Chingleput district.

### கால்நடை மருத்துவ சாலை

* 548 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964-ல் சேலம் மாவட்டத்தில் கால்நடை மருத்துவச் சாலைகளைத் துவக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், அவை எங்கெங்கு திறக்கப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) ஒன்பது கால்நடை மருத்துவ மனைகள் கீழ்க்கண்ட இடங்களில் திறக்க உத்தேசங்கள் பரிசீலனையில் உள்ளன :—

(1) உதான்கரை (2) பென்னாகரம்
(3) பாலகோடு (4) கலமங்கலம்
(5) பாப்பிரெட்டிபட்டி (6) தர்மபுரி
(7) இடப்பாடி (8) வென்னாண்டூர்
(9) பள்ளிபாளயம்.

(a) Yes.

(b) Proposals to open Veterinary Dispensaries in the following places in 1964–65 are under consideration.

(1) Uthangarai. (2) Pennagaram.
(3) Palacode. (4) Kalamangalam.
(5) Pappireddipatti. (6) Dharmapuri.
(7) Idappady. (8) Vannandur.
(9) **Pallipalayam.**

9–30 a.m. **திரு. வி. ஆர். பெரியண்ணன் :** தலைவர் அவர்களே, சேந்தமங்கலத்தில் ஒரு கால் நடை வைத்தியசாலை வைக்க இந்த ஆண்டிலேயே ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தக் தகவல் என்னிடம் இல்லை தனிக் கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

* 549 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை, திருவள்ளுவர் நெசவு கூட்டுறவுச் சங்கம் காலனிக்காக நிலம் ஆர்ஜிதம் செய்துதரும்படிக் கேட்டு 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதியில் மனு செய்தார்களா ?



18th July 1964]

(இ) ஆமென்றால், அந்த மனுமீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) As the lands required to be acquired by the Society are fertile wet lands and as no new housing schemes are now being sanctioned by the Government in view of the National Emergency, the request has been turned down.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், எமர்ஜன்ஸி மட்டும் காரணமா அல்லது அதிக விலை உயர்ந்த நிலம் என்ற காரணத்திற்காக நிராகரிக்கப்பட்டதா ? வேறு நிலம் பற்றி யோசிக்கப்பட்டால் அதை அரசாங்கம் கவனிக்க முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அது இரண்டு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டது. சர்க்காருக்குப் பொதுவாக ஒரு கொள்கை இருக்கிறது, நல்ல நஞ்சை நிலத்தை வீடு கட்டும் திட்டத்திற்காக கூடுமான அளவு ஆர்ஜிதம் செய்வதில்லை என்பது. 'கூடுமான அளவு' என்பதை நான் வற்புறுத்துகிறேன். அடுத்த படியாக, இப்பொழுது பணம் இல்லை. இந்த மூன்றாவது திட்டத்திலே இனிமேல் வீவர்ஸ் ஹௌஸிங்குக்கு கொடுக்க பணம் இல்லாத காரணத்தினால், அதை நிறுத்தி வைத்திருக்கிறோம்.

550 கேட்கப்பட்டது, பதிலளிக்கப்பட்டது.

### *N.C.C. Training*

* 550 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of Colleges in which N.C.C. training is given to male students;

(b) the number of students who underwent training during 1963–64; and

(c) the expenditure incurred in this regard during 1963–64.

THE HON SRI R. VENKATARAMAN : (a) 60;

| | | |
|---|---|---|
| (b) Colleges | ... | 41,497 |
| Polytechnics | ... | 6,055 |
| Industrial Training Institutes | ... | 2,052 |
| Total | ... | 49,604 |

(c) Rupees 36 lakhs (approximately).

**திரு. மா. இராசாங்கம் :** தேசிய மாணவர் படைப் பயிற்சி பெண்களுக்கும் கொடுப்பதனால், பெண்மையின் மென்மை கெட்டுப் போகும் என்ற உண்மை சர்க்காருக்குத் தெரியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அரசாங்கத்திற்குத் தெரியுமா என்பது ஒருபுறம் இருக்க, இந்தக் கருத்து ரொம்பப் பழமையான ஒரு கருத்து, அது நவீன உலகத்திற்கு உகந்த கருத்து அல்ல என்று அங்கத்தினருக்குச் சொல்ல விரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர்:** அது பெண்களின் கருத்தா, கனம் அங்கத்தினரின் கருத்தா? (சிரிப்பு)

**திருமதி சி. குழந்தையம்மாள் :** தலைவர் அவர்களே, கல்லூரிகளிலே ஒரு கல்லூரிக்கு 20 மாணவிகள் என்ற அளவில்தான் இந்த தேசீயப் பாதுகாப்புப் படைக்கு எடுக்கிறார்கள். மெடிகல் காலேஜுக்கு போக விரும்புகிறவர்கள் இந்த சர்ட்டிபிகேட்டு இருக்கவேண்டும் என்று சொல்லப்படுகிற காரணத்தினால், பலர் இந்தப் பயிற்சிக்குச் சேர வேண்டும் என்று விரும்பி, மாணவர்கள் தங்கள் செலவிலேயே கூடச் சேர விரும்புகிறார்கள். அப்படிப் பட்டவர்களுக்குகாவது, மாணவர்கள் செலவிலேயே பயிற்சி கொடுக்க அதிகமாக அவர்கள் எண்ணிக்கையைச் செய்ய அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மாணவர்கள் சம்மந்தப் பட்டவரையில், சற்றேறக்குறைய அவர்கள் எல்லோருக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆனால், மாணவிகள் பயிற்சியில் தான் சற்றுக் குறைவு இருக்கிறது. அதை எல்லோருக்கும் அளிக்க வசதி இல்லை, கனம் அங்கத்தினர் ஒரு தனிக் காலேஜோ அல்லது ஹைஸ்கூலோ விசேஷ சலுகை பெறவேண்டும் என்று நினைத்தால் அதுபற்றி எழுதி அனுப்பினால் கவனிக்கலாம் என்று கூறவிரும்புகிறேன்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) ADMINISTRATIVE LAPSES IN THE LICENSING AND INSPECTION OF GODOWNS.

MR. SPEAKER : The hon. Member Sri M. Kalyanasundaram has given notice of an adjournment moton relating to some incident of explosion in Madras City.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சார், மே மாதம் 19ம் தேதி சென்னை நகரத்தில் ஒரு கோடௌனில் வைக்கப்பட்டிருந்த ரசாயனப் பொருள் தீப்பற்றி, அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஆபத்துக்குள்ளாகி, 21 பேர்கள் உயிர் இழந்திருக்கிறார்கள். (குறுக்கீடு) ஆம் ஒரு பெண் உள்பட 21 பேர்கள் மரணம் அடைந்திருக்கிறார்கள். அது தவிர பல பேர்கள் காயம் அடைந்திருக்கிறார்கள். விசாரிக்கும்போது, அந்தக் கோடவுனில் அனுமதியின்றி அதாவது லைசென்சு இல்லாமல் வெடி பொருள்களைச் சேர்த்து வைத்திருக்கிறார் என்றும் அதனால் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிகிறது. அவர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இதில் எந்த எந்த இலாகாவினர் சம்மந்தப்பட்டிருக்கிறார்கள், ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை



என்ற விவரங்கள் சபைக்கும் மக்களுக்கும் தெரியவேண்டும். தக்க நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும். ஒரு தனிப்பட்டவர் தன்னுடைய சுயநலத்திற்காக செய்த காரியத்தின் விளைவாக 21 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு நஷ்ட ஈடுகூட கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்கப்படாததற்குகாரணம் என்ன? 302-வது செக்ஷன்படியாவது அவரைக் கைது செய்திருக்க வேண்டும். ஆனால் அவர் இன்று வரை சௌகரியமாக இருந்து வருகிறார். உயிரிழந்தவர்கள் குடும்பத்தார் கதி என்ன? இதையெல்லாம் விவாதிக்க வேண்டும் என்பதற்காகத்தான் ஒத்தி வைப்புப் பிரேரணையை சபை முன் கொண்டு வர விரும்புகிறேன்.

*** கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னை சம்பந்தமாக சட்டசபை விதிகளுக்கு உட்பட்டு ராஜ்ய சபையில் இதை விவாதிக்கலாமா என்பது ஒன்று; இரண்டாவதாக இதில் இருக்கும் நியாய கோரிக்கைகள். நடந்த விபத்து குறித்து சர்க்கார் தரப்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கிறேன். இப்படி நடக்கக்கூடாது என்பது தான் சர்க்காரின் நோக்கம். ஆனால் இந்த ஒத்தி வைப்புப் பிரேரணை சம்பந்தப்பட்ட மட்டில் நம்முடைய சட்டசபை விதிகள்படி சட்ட சபையில் அதை விவாதிக்க இயலாது என்பது தான் என்னுடைய எண்ணம். காரணம் இதில் உள்ள பொறுப்பு ராஜ்ய சர்க்காருக்கு மிகக் குறைவு.

In this connection I have to place a few facts for the consideration of the House. The subject of 'Arms', Firearms Ammunition and Explosives fall under item 5 of List-I-Union List of the Seventh Schedule to the Constitution of India. The manufacture, possession, use, sale, transport and importation of explosives is regulated by the Indian Explosives Act, 1884 (Central Act IV of 1884) and the Explosives Rules, 1940 framed by the Government of India. The licensing of premises, inspection, etc., are covered by the provisions of the above Act and Rules. In some cases, the District Magistrate (Executive) including the Additional District Magistrates in the districts and the Commissioner of Police in the City issue licences. In other cases, the Inspector of Explosives or the Chief Inspector of Explosives issues the licence. Thus the State Government and their officers are exercising only such of the powers under the Indian Explosives Act, 1884 and the Explosives Rules, 1940 as are delegated to them. Under the Madras City Municipal Corporation Act and the Madras District Municipalities Act, the Commissioner of Corporation issue licence for storage of explosives in godowns. Therefore it is a matter falling primarily under jurisdiction of Government of India with regard to issue of licences for storage of explosives. The other point here is that the premises wherein the explosion occurred is not a licensed premises and the Commissioner of Police is taking action for prosecuting the owner. I therefore submit there is no case for adjournment of this House.

[18th July 1964

Mr. SPEAKER : Is it pending before the Court?

The Hon. Sri R. VENKATARAMAN : They are taking steps to prosecute. The point is this is not within the responsibility of the State Government. The issue of licence on which the hon. Member Sri M. Kalyanasundaram wants to raise a discussion is primarily within the jurisdiction of the Government of India.

Mr. SPEAKER : The Madras Corporation and State Government have got a hand in it.

The Hon. Sri R. VENKATARAMAN. Their's is only delegated authority. The responsibility is that of the Government of India. The State Government and Madras Corporation function here as persons who have been delegated authority to carry out certain duties according to the rules and regulations of the Government of India.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுவது சரிதான். சட்டம் மத்திய சர்க்காருடைய சட்டம். ஆனாலும் அதில் ஒரு பகுதி ராஜ்ய சர்க்காருக்கும் போலீசுக்கும் கார்ப்பொரேஷனுக்கும் நிர்வாகப் பொறுப்பு இருக்கிறது. லைசென்ஸ் வழங்குவது மத்திய சர்க்காராக இருக்கலாம். ஆனாலும் ராஜ்ய சர்க்காருக்கு பொறுப்பு இருக்கிறது. ஆகவே அதை இங்கே விவாதிக்க இடம் இல்லை என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அது ஒரு புறம் இருக்க உயிர் இழந்தவர்கள் கதி என்ன? அவர்கள் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வழி உண்டா? ரூல் 57-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அதை விவாதிக்க அனுமதி கொடுத்தால் நலம் என்று கூறிக்கொள்ளுகிறேன்.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, it is a well established principle that an adjournment motion is considered to be a censure on the Government and that the Government must have a responsibility in the mater if the Government are to be censured. Therefore, it is not a matter which comes under an adjournment motion.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அட்ஜர்ன்மெண்ட் மோஷன் ஸென்ஷ்யூராகக் கருதப்படும் என்பது பழைய கால சம்பிரதாயமாக இருக்கலாம். இப்பொழுதெல்லாம், கனம் சபாநாயகர் அனுமதித்தால் அட்ஜொர்ன்மெண்ட் மோஷன் எடுத்துக் கொள்ளப்படுகிறது. கனம் சபாநாயகர் அனுமதி அளித்து விவாதம் நடத்தப்பட்டும் மந்திரி சபை நீடித்து வருகிறது. ஒத்திவைப்புப் பிரேரணை அனுமதிக்கப்பட்டு விவாதம் நடந்ததனால் மந்திரிசபை ராஜீனமா செய்த சம்பவத்தை நான் இதுவரை இங்கே பார்க்கவில்லை.

Mr, SPEAKER : Any debate or discussion may take place on a motion under any other rule but not under the rule relating to an adjournment motion. It may come under rule 57 or in the form of a half-hour discussion or a short notice question.



18th July 1964]

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** நான் ஷார்ட் நோட்டீஸ் கொஸ்சின் கொடுத்திருக்கிறேன்.

Mr. SPEAKER : So there is no need for an adjournment motion.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** நான் கொடுத்திருக்கும் ஷார்ட் நோட்டீஸ் கொஸ்சினுக்கு இந்த நான்கு நாட்களுக்குள் பதில் சொல்லிவிடட்டும். இந்தச் சபையில் ஒத்திவைப்புப் பிரேரணையின் மீது விவாதமே வேண்டாம். அல்லது நான் ரூல் 57-இன் கீழ் கொடுத்திருக்கும் பிரேரணையை எடுத்துக்கொண்டு அதன் மீது விவாதம் நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஒத்துக்கொண்டால் நான் இதைக்கூட வற்புறுத்தவில்லை.

The Hon. Sri R. VENKATARAMAN : There cannot be a condition. It does not come within the four corners of rule 42 of the Assembly Rules. Once that is decided, then the Government will consider the request. . . .

Mr. SPEAKER : As the Hon. Minister says, there cannot be a condition for deciding this adjournment motion.

The issue of licence for possessing, stocking, etc., of explosives is governed by the provisions of the Indian Explosives Act (Central Act) and the rules made thereunder. Certain powers have been delegated to the State Government and they function under those powers. Of course, the Corporation of Madras is also concerned in the matter. Though this is a serious matter involving death of 20 persons, there does not seem to be any direct responsibility on the part of the State Government. But, all the same, I hope the Government will go into the matter and suggest suitable action to be taken in the matter. Therefore, consent to the adjournment motion is withheld.

(2) Students' agitation in the Victoria, Hostel, Madras.

Mr. SPEAKER : The hon. Member, Sri Kalyanasundaram, has given notice of another adjournment motion regarding the students' agitation in the Victoria Hostel, Madras.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, விக்டோரியா ஆஸ்டலில் பெரும்பாலும் ப்ரெஸிடென்சி காலேஜ் மாணவர்கள் தான் தங்குகிறார்கள். மாணவர்கள் மூன்று தினங்களாக ஆஸ்டலில் சாப்பிடுவது இல்லை. காரணம் வார்டனுக்கும் அவர்களுக்கும் தகராறு. காலேஜ் நிர்வாகிகளோ வார்டனோ முன்பு கொடுத்த வாக்குறுதியை மீறியிருக்கிறார்கள் என்று அவர்கள் புகார் சொல்கிறார்கள். நெருப்பு இல்லாமல் புகை இருக்காது. மாணவர்கள் எல்லோருமே சேர்ந்திருப்பதைப் பார்த்தால், எல்லோரும் ஏதோ பிடிவாதமான முறையில் இருப்பதாகத் தெரியவில்லை. எப்படியிருந்தாலும், மாணவர்களுக்கும் வார்டனுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்பட்டு ஆஸ்டலிலே சுமுகமான

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th July 1964

நிலைமை ஏற்பட வேண்டும். அரசாங்கம் தலையிட்டு அல்லது டி.பி.ஐ.-யை அனுப்பி வைத்து அங்குள்ள நிலைமையைக் குறித்து விசாரணை செய்து, அமைதியை நிலைநாட்டுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவந்திருக்கிறேன். இதே நிலைமை நீடிக்குமானால் மாணவர்கள் இன்னும் வேறு வழியிலே கிளர்ச்சியைத் திருப்பி விடுவார்களானால் சங்கடம் இன்னும் அதிகமானாலும் ஆகலாம். சங்கடம் அதிகம் வளர இடம் கொடுக்காமல் உடனடியாக அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் அவசரமும், அவசியமும் உள்ள இராஜ்ய அரசாங்கத்தின் நேரடியான பார்வைக்குப்பட்டதாக இருக்கும் இந்த விஷயத்தை ஒததிவைப்புப் பிரேரணையாகக் கொண்டுவந்திருக்கிறேன்.

MR. SPEAKER : A notice calling the attention of the Minister to the above matter has already been admitted. Besides I do not think that this is such a matter as can come within the scope of an adjournment motion. This is, after all, a matter which comes under the ordinary administration and therefore I withhold consent to it.

## III.—GOVERNMENT BILL.

### THE MADRAS PANCHAYATS (AMENDMENT AND MISCELLANEOUS PROVISIONS) BILL, 1964.

THE HON. SRI S. M. A. MAJID : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964'.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI S. M. A. MAJID : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## IV.—DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1964-65—*cont.*

MR. SPEAKER : Now the discussion on the Madras State Electricity Board Budget will continue.

SRI M. KALYANASUNDARAM : Sir, on a point of order.

The Hon. Minister's speech was circulated to us yesterday and in that speech, he has stated—

' The recommendations of the Committee as approved by the Board and the Madras State Electricity Consultative Council are now under consideration of the Government. The revised tariffs



18th July 1964] [Sri M. Kalyanasundaram]

are likely to be given effect to shortly and the surcharge imposed with effect from 31st October 1963 will be abolished on and from the date of introduction of revised tariffs '.

I request the Hon. Minister to kindly give me information about the recommendations of the Tariff Revision Committee because the Hon. Minister has referred to them in his speech. The House is not aware of it and it is kept in the dark. I want to know whether it involves an increase in the tariff rate and if so, how much increase. In spite of the withdrawal of the surcharge, the tariff rate may be increased. I want to know whether it is reasonable or excessive. All these facts must be known to this House when we are discussing the whole Budget. If he had not referred to it, then I also would not have raised this point now. Having referred to it, it is not proper for the Government to withhold this information from this House especially when it is so essential for a discussion on this Budget.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்காரினுடைய முடிவுகளை வெளியிடுவதற்கு எப்போதும் தயங்கமாட்டார்கள். சர்க்காருக்குக் கமிட்டிகள் செய்கின்ற சிபார்சுகள் எல்லாவற்றையும் வெளிடவேண்டுமென்று சொன்னால், அதை வெளியிட முடியும். வெளியிட முடியாது என்பதைப் பரிசீலனை செய்து முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது. சிபார்சுகள் 'ஸ்டேஜ்' இல் அவற்றை வெளியிட முடியாது. அவைகள் பரிசீலனை செய்யப்பட்டு, சர்க்காரினுடைய முடிவு எடுக்கப்பட்டவுடன், அது வெளியிடப்படும். அப்பொழுது அது சம்பந்தமாக விவாதிப்பதற்கு இந்தச் சபைக்கு உள்ள முழு உரிமையும் விதிகளிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அப்பொழுது அதை விவாதிக்க முடியும்.

These recommendations are considered confidential and therefore it is not possible to place them before the House.

MR. SPEAKER : Has the hon. Member got anything more to say?

SRI M. KALYANASUNDARAM : Let him at least tell the House. . . .

MR. SPEAKER : The hon. Member can ask for information in that way. But is it a point of order?

SRI M. KALYANASUNDARAM : Having referred to the matter in his speech. . . .

MR. SPEAKER : As the Hon. Minister has stated that the recommendations re confidential, can they be placed before the House?

SRI M. KALYANASUNDARAM : The matter may be confidential but it has been placed before the Electricity Board and also before the Consultative Council. Is this House inferior to the Consultative Council?

MR. SPEAKER: No question of inferiority or superiority arises here. When the matter is in the process of discussion and no final decision has been taken, can we ask the Government to place all the recommendations before the House?

SRI M. KALYANASUNDARAM: What is wrong? The views of the Government may be confidential. I am not asking for the views of the Government. I am asking only about the recommendations. After all, this Government are subordinate to the House.

MR. SPEAKER: There is no doubt about it. The Government are subordinate to the House but they cannot give infructuous answers to the House.

SRI M. KALYANASUNDARAM: The Government are answerable to the House. Our Hon. Minister for Industries is a shrewd man and he has got the knack of blaming the Opposition later by saying: 'I placed all the facts at the time of presenting the Budget and the Opposition did not oppose it. So I took it that they agreed to it.'

THE HON. SRI R. VENKATARAMAN: He has made the position clear and we can discuss it later.

MR. SPEAKER. There is no point of order.

Now the hon. Member Sri Vadivelu will speak.

**திரு. மு. பொ. வடிவேலு:** கனம் சட்ட மன்றத் தலைவர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டுக்கான மின்சார போர்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலுக்கா பாலாறு பேசின் ரூல்ஸ் விதிகளின் கீழ் பல பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்க முடியாத அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது. உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்து, நம்முடைய சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்று சொல்லப்படுகிற இந்தக் காலத்தில் விவசாயிகள் தங்களுடைய பம்பு செட்டுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் பெற முடியாத அளவிற்கு பாலாறு பேசின் ரூல்ஸ் இருப்பதை சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அங்கு வாணியம் பாடி அருகில் பாலாறு ஓடுகிறது. என்றாலும் கூட எழுநூறு, எண்ணூறு அடிக்கு மேலாக உள்ள பல கிராமங்களில் கூட பம்பு செட்டு வைக்க அனுமதி மறுக்கப்படுகிறது. 1800-ஆம் ஆண்டு செட்டில்மெண்டு ரிஜிஸ்ட்ரேஷன் பிரகாரம் அந்தப் பகுதியில் பல ஸ்ப்ரிங்குகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டு, அந்த கிராமங் களுக்கும் இந்த விதி பொருந்தும் என்று சொல்லப்படுகிறது. செட்டில்மெண்டில் லைட் ஸ்ப்ரிங்காக இருக்கிறது என்று சொல்லப் பட்டாலும், தற்சமயம் அந்த மாதிரி ஊற்றுகள் இருக்கின்றனவா என்று பரிசீலிக்காமல் அந்த விதிகளை வைத்திருப்பது சரியல்ல. இதனால் பதினாறு ரெட்டூர் பஞ்சாயத்துகளும் நியமிக்கப்





பஞ்சாயத்துப் பகுதியிலும் நானூறு, ஐநூறு பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் ஏற்படுத்த முடியாமல் கஷ்டம் இருக்கிறது. அடுத்து கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட் பெறுவது, கலெக்டரிடம் எம்.எல்.ஏ. சென்று சொன்னாலே நான்கைந்து மாதம் ஆகிறது என்று சொன்னால் சாதாரண ஒரு விவசாயி இந்தக் கிளியரன்ஸ் சர்ட்டி பிகேட் பெறுவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறான் என்று சொல்ல வேண்டியதில்லை. ஆகவே ஆங்காங்கு உள்ள பஞ்சாயத்துக் கமிஷனர்களே இந்த சர்ட்டிபிகேட்டை வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வது பொருத்தமாக இருக்குமென்று தெரிவித்துக் கொள் கிறேன். வடாற்காடு மாவட்டத்தில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினர்கள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்து விட்டார்கள் என்பதனாலோ, என்னவோ இந்த பாலாறு பேசின் விதிகளை வாணியம்பாடிக்கு ஆறு, ஏழு மைல் அப்பாலுள்ள குக் கிராமங்களுக்கும் கூட விஸ்தரித்து இருக்கிறார்கள்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பாலாறு பேசின் ரூல்ஸ் என்பது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக் கப்பட்டதற்குப் பிறகு வைக்கவில்லை. ரொம்ப நாட்களாகவே இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. மு. பொ. வடிவேலு:** நீண்ட நாட்களாகவே இருந்து கொண்டிருக்கிறது என்றாலும்கூட இப்போது அந்த விதிகளின் கீழ் பாலாற்றுக்கு அப்பால் வெகு தூரத்தில் கடல் மட்டத்திற்கு 700, 800 அடி உயரமாக உள்ள பல குக்கிராமங்களுக்கும் பொருந் தும் என்பதாகச் செய்யப்பட்டிருப்பதை கனம் அமைச்சர் அவர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த இடங்களில் எல்லாம் லைவ் ஸ்பிரிங் கிடையாது. எப்போதோ இருந்ததை இப்பொழுதும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இந்த பாலாறு பேசின் விதிகளைத் தளர்த்த வேண்டும். இரண்டாவது கிளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டை பஞ்சாயத்துக் கமிஷனர்கள் கொடுக்கலாம் என்று செய்யவேண்டும்.

அடுத்து மேட்டூர் அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தினால் இரவு நேரங்களில் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கப்படு கிறது. இரவு நேரங்களில் கொடுப்பதனால் பாசனம் செய்வது கஷ்டமாக இருக்கிறது. ஆகவே தொழில்களுக்கு இரவு நேரங் களில் மின்சார சப்ளை செய்து பகல் நேரங்களில் விவசாயத்திற்குக் கொடுக்க வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பம்பு செட்டுகள் ஷெட்டில் லைட் இருக்கிறது. அதற்கு தனியாக லைட் சார்ஜ் என்று வசூலிக்கிறார்கள். வடவேலூர் டி.டி.ஸி. மீட்டிங்கில் கேள்வி கேட்ட போது மின்சார இலாக்கா பிரதிநிதி யாக வந்தவர் அப்படி வாங்குவது கிடையாது என்று குறிப்பிட் டார்கள். ஆனால் சட்டத்தின்படி வாங்கக் கூடாது என்று

இருந்தும்கூட எங்கள் பகுதியில் ஷெட்டில் இருக்கும் லைட்டுக்குத் தனியாகச் சார்ஜ் வாங்குகிறார்கள். இதையும் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, தெரு விளக்குப் போட பஞ்சாயத்துக்கள் தீர்மானம் நிறைவேற்றி ஸ்கெச் போட்டு, கலெக்டரிடம் சால்வன்ஸி சர்ட்டிபிகேட் வாங்கியும் கூட நிம்மப்பட்டு பஞ்சாயத்து கிராமத்தில் ஒண்ணரை ஆண்டு ஆகிறது—இன்னமும் தெரு விளக்குப் போடவில்லை. பல அதிகாரிகளைச் சென்று பார்த்தும் கூட என்ன காரணத்தினால் தடை படுகிறது என்று புரியவில்லை. பொதுமக்கள் பஞ்சாயத்து தலைவர் ஆகியவர்களுக்குச் சலிப்பு ஏற்படக்கூடிய அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. தெரு விளக்கு சாங்ஷன் ஆகிவிட்டாலும் கூட மின்சார இலாகா செய்ய வேண்டும். அவர்கள் பெட்டி காண்டிராக்டர்களிடம் விட்டுவிடுகிறார்கள். அதனால் வேலை நடைபெறாமல் இருக்கிறது. ஆகவே உடனடியாக இந்த கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புச் செய்யவேண்டுமென்று உங்கள் மூலமாக கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் சுய தேவை பூர்த்தி ஏற்பட வேண்டுமானால், உணவு உற்பத்தி பெருக வேண்டுமானால் வடாற்காடு மாவட்டத்தில் திருப்பத்தூர் தாலூக்காவில் பாலாறு பேசின் விதிகளைத் தளர்த்தி, க்ளியரன்ஸ் சர்ட்டிபிகேட்டை பஞ்சாயத்து கமிஷனர்களே கொடுக்கலாம் என்பதாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. என். சின்னமுனுசாமி செட்டி: கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்ட்டின் 1964-65-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம் மாநிலத்தில் மின்சார வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதைக் கண்டு பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். அதேசமயத்தில் எனது தொகுதியில் இருக்கும் குறைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஹொசூரில் இருந்து கிருஷ்ணகிரி 32 மைலில் இருக்கிறது. ராயக்கோட்டையில் இருந்து மைசூர் எல்லைக்கு 30 மைலாகிறது. அதேபோல ஆந்திர எல்லைக்கும் 30 மைலாகிறது. இந்தப் பரப்பளவில் ஏறக்குறைய 300, 400 கிராமங்கள் இருக்கின்றன. இந்த கிராமங்களுக்கு இதுவரையில் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் ஒரு கிராமத்திற்குக் கூடக் கொடுக்கப்படவில்லை. இப்படி இருந்தால் அந்தப் பகுதியில் இருக்கும் ஏழை விவசாயிகள் எப்படி முன்னேற முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக பேரிகையில் மின்சாரத் திட்டம் வரப்போவதாக 63-ம் வருஷமே சொல்லப்பட்டது. மின்சார சூப்ரவைசர் மூலமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதுசமயம் அதற்கு





வேண்டிய முன் பணத்தையும் வசூலித்து, அக்ரிமெண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள், இருந்தும் கடந்த ஒண்ணரை ஆண்டாக மின்சாரம் வரவில்லை. இதுவரைக்கும் அந்தப் பகுதியில் மின்சார வசதி செய்யப்படவில்லை என்பதை அறிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல், சூளகிரிக்கும் ஒரு ஸ்கீம் வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள், இது வரைக்கும் அந்த ஏரியாவில் அக்ரிமெண்டு எதுவும் செய்யப்படவில்லை. பிற்பட்ட பகுதிகளில் போக்குவரத்து வசதி இல்லாமல் இருப்பதால் எந்த ஆபீசரும் அந்த ஏரியாவுக்கு வந்து பார்ப்பதில்லை. அந்தப் பகுதிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அவை முன்னேற்றம் அடையும்படியாக அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் ஒரு அணைக்கட்டு கூட இல்லை. அப்படிப் பட்ட நிலையில் மின்சார வசதியைச் செய்து கொடுத்தால்தான் கிணற்றுக்கும் பம்ப் செட் வைத்து விவசாயம் செய்ய வசதி இருக்கும். ஆகவே, அந்தப் பகுதியில் மின்சார வசதியைச் செய்து கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கூறி இந்தச் சபையில் எனக்குப் பேச அனுமதி கொடுத்த சபா நாயகர் அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிந்துக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். 1-00 a.m

திரு. கரு. சீமைச்சாமி: மதிப்புக்குரிய தலைவர் அவர்களே, தொழிற்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் நிதி நிலை அறிக்கை மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1964-ம் ஆண்டிலே மின்சார வெட்டு நிச்சயமாக இருக்காது என்று சென்ற தடவை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது 'பருவ மழை தவறி விட்டது; நாங்கள் என்ன செய்வோம்' என்று கூறுகிறார்கள். வருஷத்தில் 11 மாதங்கள் மக்களால் பாராட்டப்படுகிற மின்சாரா இலாகா இந்த ஒரு மாத காலம் ஜனங்களாலே பாராட்ட முடியாத நிலைமைக்கு இருப்பதைப் பற்றி வருந்துகிறேன். அமைச்சரும், மின்சார போர்டும் நன்றாகப் பரிசீலனை செய்து இந்த ஒரு மாதத்திற்கு மின்சார வெட்டு இல்லாமல் தவிர்ப்பதற்கான முயற்சியினை எடுத்துக்கொண்டால் அது உண்மையிலேயே பாராட்டுக்குரிய காரியமாகும். நீலகிரிப்பகுதியில் இந்தத் தடவை மழை பெய்யவில்லை. அவ்வாறு மழை பெய்யாததற்குக் காரணம் அங்குள்ள காடுகள் அழிக்கப்பட்டிருப்பதுதான். நீலகிரி பகுதியில் உருளைக்கிழங்கு பயிரினால் அதிக நஷ்டம் ஏற்படுவதையொட்டி பலர் காடுகளை அழித்து தேயிலைத் தோட்டங்களாக ஆக்கிவிடுகிறார்கள். நீலகிரியைச் சுற்றியுள்ள பகுதியில் மழை பெய்திருக்கிறது; ஆனால் ஜல மின்சார நீர்த் தேக்கப் பகுதியில் மழை பெய்யவில்லை. அதன் காரணமாக இந்த மின்சாரவெட்டு முந்திக் கொண்டு வருகிறது. 1962-ல் ஜூலை மாதத்தில் வெட்டு வந்தது; 1963-ல் ஜூன் மூன்றாவது வாரத்தில் வெட்டுவந்தது. 1964-ல் ஜூன் மாதம் இரண்டாவது வாரத்திலேயே வெட்டு வந்துவிட்டது. இதிலிருந்து பருவ மழை நிச்சயமாகத்

[திரு. கரு. சீமைச்சாமி] [18th July 1964

தவறிக் கொண்டே வருகிறது என்பது தெரிகிறது. குன்னூரில் ஜூன் மாதம் 10-ம் தேதி வாக்கில் 2 அங்குலம் மழை பெய்திருக்கிறது; உதகையில் இரண்டு அங்குலம் மழை பெய்திருக்கிறது; கோவையில் 3/4 அங்குலம் மழை பெய்திருக்கிறது; குந்தா பகுதியில் மழை பெய்யவில்லை, பைகாரா பகுதியில் மழை பெய்யவில்லை. அதற்குக் காரணம் அந்தப் பகுதியில் காடுகள் அழிக்கப்பட்டிருப்பதுதான். அந்தப் பகுதிகளில் அரசாங்கமே மரம் நடுவதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கதாகும்.

ஆனால் எந்தக் காரணத்தைக் கொண்டும் மின்சார வெட்டு விவசாயத்திற்கு இருக்கக்கூடாது. நாளுக்கு நாள் வளர்ந்து வரும் ஜனத்தொகைப் பெருக்கத்தின் காரணமாக உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டியது மிக அவசியமான காரியமாக இருக்கிறது. ஆகவே, விவசாயத்திற்கு நிச்சயமாக மின்சார வெட்டு இருக்கக்கூடாது என்று வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மின்சார வெட்டின் காரணமாக கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் ஆயிரக்கணக்கான வாழைத் தோட்டங்களும் கரும்புத் தோட்டங்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பகுதியிலுள்ளவர்கள் ஆயில் எஞ்சின் வாங்க பெரிய நகரங்களுக்குச் சென்றும் கூட கிடைக்காத காரணத்தால் லட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாதிரி மின்சார வெட்டைத் தவிர்க்க அனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். ஜனங்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதினால், அதை அமைப்பதால் ஏற்படக்கூடிய நஷ்டத்தையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜில்லாவுக்கு ஒரு அனல் மின்சார நிலையத்தை அரசாங்கம் ஏற்படுத்தி மின்சார வெட்டைத் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிழக்கு ராமநாதபுரம், மானாமதுரை பகுதியிலுள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி செய்வதற்காக சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை சரியாகச் செலவழிக்கப்படாமல் சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது என்று கேள்விப்பட்டேன். அந்தப் பகுதியில் ரோடு வசதி இல்லாத காரணத்தால் அதிகாரிகள் அங்கு சென்று விவரங்களைச் சேகரிக்க முடியாமல் அந்தத் தொகை சரண்டர் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கிராமத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தீர்மானங்கள் நிறைவேற்றி எந்தெந்த கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறது. அந்தப் பஞ்சாயத்து யூனியன் சேர்மன் வேண்டிய விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வைகை ஆற்றின் இரு மருங்கிலும் இரண்டு பர்லாங்கு தூரம் வரை கிணறுகளை வெட்டியிருக்கிறார்கள். அந்தப் பிராந்தியத்தில் மின்சாரம் கிடைக்காமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.



18th July 1964] [திரு. கரு. சீமைச்சாமி]

வைகை ஆற்றிலிருந்து கொஞ்சம் தள்ளி கிணறு வெட்டியிருந்தால் மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். தண்டாயுதபாணி :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே, மின்சாரக் கழகத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நாம் சுதந்திரம் பெற்ற பிறகு பல துறைகளிலே மற்ற மாநிலங்களை விட முன்னேறியிருக்கின்றோம் என்று கூறினால் அது மிகையாகாது. அவ்வாறு எல்லாவற்றிலும் முதன்மை பெற்றிருப்பதற்குக் காரணம் மின்சாரத் துறைதான். தொழிற் துறைக்கும், விவசாயத் துறைக்கும் மின்சாரம் மிக இன்றியமையாததாகி விட்டது. கிராமங்களுக்கு மின்சாரத்தை விஸ்தரித்திருப்பதைப் பார்க்கிறபோது உண்மையிலேயே பெருமைப்படுகின்றோம். மூன்றாவது திட்டகால முடிவிற்குள் நம்முடைய மாகாணத்தில் 19,000 கிராமங்கள் மின்சார வசதியைப் பெற்று விடவேண்டுமென்று திட்டமிட்டிருக்கின்றோம். இதுவரை ஏறத்தாழ 16,000 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக சென்னை மாகாணத்தில் விவசாயத்தில் வட ஆற்காடு மாவட்டம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருப்பதற்குக் காரணம் இந்த மின்சார விஸ்தரிப்புதான். விவசாய உற்பத்திக்கும், தொழிற் துறை பெருக்கத்திற்கும் மின்சாரம் அவசியம் தேவைப்படுகிறது என்பதை மனதிற் கொண்டுதான் இதற்கு முதலிடம் கொடுத்து நல்ல முறையில் செயலாற்றி வருகின்றோம். இந்தப் பொறுப்பை ஏற்று நடத்தும் மின்சாரக் கழகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்று கூறினால் அது மிகையாகாது. அவர்கள் குறிப்பிட்ட திட்டங்களுக்கு மதிப்பிட்ட தொகையை விடக் குறைவாகவே செலவழித்து திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். பெரியாறு முதல் கட்டம், குந்தா முதல் இரு கட்டங்கள், சென்னை மின் நிலைய விஸ்தரிப்பு மூன்றாவது கட்டம், ஆகிய மூன்றுக்கும் மதிப்பிட்ட தொகையை விட 702 லட்சம் ரூபாய் குறைவாகவே செலவழித்து நிறைவேற்றியிருக்கிறார்கள். அதோடு செம்மையாகவும் துரிதமாகவும் செய்து முடித்திருக்கிறார்கள். மூன்றாவது திட்டத்தில் மின்சாரத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 100 கோடி ரூபாயாகும். அதனைத் தற்போதைய நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது 111 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனையெல்லாம் பரிசீலனை செய்துப் பார்த்தால் இந்தக் கழகம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

மின்சார விஸ்தரிப்பு தஞ்சை ஜில்லாவைப் பொறுத்தமட்டில் மிக மிகக் குறைவு என்ற நிலை எல்லோருக்கும் தெரியும். அதற்குக் காரணம் தஞ்சை ஜில்லாவில் மின்சாரத்தை விவசாயத்திற்கு அதிகமாக உபயோகிக்காதது ஒன்று; மற்றொன்று தனியார் துறை கம்பெனிகளிடம் மின்சாரத்தை விஸ்தரிக்கும் பொறுப்பு இருப்பது. இந்த இரண்டு நிலைமைகளைப் பற்றியும் பரிசீலனை செய்து [illegible]

[திரு. எம். தண்டாயுதபாணி] [18th July 1964

யார்த் துறையில் இருக்கின்ற பகுதிகளை சர்க்கார் மேற்கொண்டு, மின்சார விஸ்தரிப்பு இல்லாத பகுதிகளுக்கெல்லாம் மின்சார வசதி செய்து கொடுக்கவேண்டும். இதற்காக கடந்த இரண்டு ஆண்டுகளாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. குறிப்பாக பட்டுக்கோட்டை, ஓரத்தநாடு முதலிய பகுதிகளில் மின்சார விஸ்தரிப்பு மிக குறைவாக இருக்கிறது. இந்தப் பகுதியில் சற்றேறக்குறைய 112 கிராமங்கள் இருப்பதில் 7 கிராமங்களுக்குத்தான் மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டில் 16 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. ஆகவே மிகுதியுள்ள எல்லா கிராமங்களுக்கும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செய்துக் கொடுக்கவேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்காக கனம் அமைச்சர் அவர்களிடத்தில் முன்பாகவே மனு கொடுத்திருந்தேன். 1964-65-ம் ஆண்டுக்குள் விஸ்தரிப்பு தரலாம் என்று அமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார்கள். ஆகவே அதை நிறைவேற்றித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வெட்டைப் பற்றி இங்கே பலர் குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது நமக்கு ஏற்பட்ட மின்சார வெட்டைப்பற்றி எடுத்துச் சொல்லி மத்திய அரசாங்கத்தினிடமிருந்து இரண்டு அனல் மின்சார நிலையம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்தது. எண்ணூரில் 300 மெகா வாட்ஸ் நிலையம் ஒன்றும், தூத்துக்குடியில் 100 மெகா வாட்ஸ் நிலையம் ஒன்றும் நிறுவுவதற்கு மத்திய சர்க்காரிடத்திலிருந்து அனுமதி பெற்றிருப்பதாகத் தெரிகிறது. நாம் இந்த மின்சார வெட்டை தவிர்க்க வேண்டுமானால் நீர் நிலைகளின் மூலமாக கிடைக்கின்ற மின்சாரத்தை மட்டும் நம்பியிராமல் அனல் மின்சாரத்தின் மூலமாகவும், அணு மின்சாரத்தின் மூலமாகவும் நமது தேவையை பெருக்கிக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்தவேண்டும் என்று முடிவு எடுத்து, அதற்காக செங்கற்பட்டு ஜில்லாவில் கல்பாக்கம் என்னும் இடத்தில் வேலை துவக்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகவும் வரவேற்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இதன் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் தந்ததற்கு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. வி. ஆர். பெரியண்ணன்:** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக என்னுடைய மாவட்டத்தை எடுத்துக்கொள்கின்ற நோத்தில் ஒரு ஸ்கீம் ஸாங்ஷன் ஆகி இரண்டு ஆண்டு காலமாகியும் இன்னும் எக்ரிமென்ட் எடுக்க முடியாமல் இருந்து கொண்டிருக்கிறது. சில இடங்களில் எக்ரிமெண்ட் எடுத்தும் 7, 8 மாதம் ஆகியும் இதுவரை எந்தவிதமான வேலையும் துவக்காமல் இருந்து



18th July 1964] [திரு. வி. ஆர். பெரியண்ணன்]

கொண்டிருக்கிறது. இது போன்ற நிலைமை பொதுவாக என்னுடைய மாவட்டத்தில் இருந்துக் கொண்டிருக்கிறது மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில அங்கு வந்திருக்கும் டிவிஷனல் என்ஜினியரிடத்தில் இதைப்பற்றி அடிக்கடி எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அதே நோத்தில் பொதுவாக வேலை துவங்காமல் இருப்பதற்குக் காரணம் கம்பங்கள் அதிகமாக இல்லை என்று சொல்லுகிறார்கள். இதற்காக இருக்கின்ற ஜே. ஈ. இந்தந்த இடத்தில் 1,000 கம்பங்கள் வேண்டும் அல்லது 500 கம்பங்கள் வேண்டும் என்று மேலதிகாரிகளுக்கு எழுதினாலும் சாங்ஷன் வருவதில்லை என்று கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் சொல்லுகிறார்கள். அதோடு மட்டுமல்ல, கடந்த ஆண்டு போதிய அளவு டிரான்ஸ்பாமர் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது டிரான்ஸ்பாமர் இருக்கிறது, லைன் இழுப்பதற்கு கம்பிகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இதைப்பற்றி அமைச்சர் அவர்களும், மின்சார போர்டாரும் கவனித்து ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, கம்பங்களை எடுத்துச் செல்வதற்கு விவசாயிகளுடைய வண்டியைத்தான் ஓட்டி வரவேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது, அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள், வேலை நடைபெற வேண்டிய இடத்திற்கு கம்பங்களை எடுத்துச் செல்வதற்கு வண்டிகளைக் கேட்கிறார்கள். உண்மையிலேயே இவர்களுக்கு வாகன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. இதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்விதம் கம்பங்களை எடுத்துச் செல்வதற்கு விவசாயிகள் வண்டிகளை ஓட்டி செல்லவேண்டியதாக இருக்கிறது. வண்டிகள் இல்லாத விவசாயிகள் வாடகை வண்டிகளை கொடுக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, மின்சார சர்வீஸ் கொடுக்கின்ற நேரத்தில் மீட்டர்களை டிவிஷனல் ஆபீஸிலிருந்து எஸ்.ஓ. ஆபிஸ்க்குக் கொண்டு வருவதற்கு ஒரு நாள், பின்னால் எஸ்.ஓ. ஆபீசிலிருந்து கிணற்றுக்குக் கொண்டு செல்வதற்கு ஒரு நாள் இப்படியாக இரண்டு நாள் வண்டிக்காக விவசாயி செலவு செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆகவே இவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து வண்டி வசதி செய்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அவ்விதமான வசதி செய்து கொடுக்கவில்லை என்றால், இவர்களுக்கு லாரி போன்ற வசதிகள் டிபார்ட்மெண்டிலிருந்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இப்போது பம்புசெட் வைப்பதற்காக கர்ணத்திடமிருந்து வாங்குகின்ற சர்டிபிக்கேட் மட்டும் போதாது. ஆர்.ஐ.யினிடமிருந்தும், தாசில்தாரிடமிருந்தும் சர்டிபிக்கேட் வாங்கி கொடுத்தால்தான் எக்ரிமென்ட் எடுக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். இதன் காரணமாக விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே முன்னால் இருந்தது போலவே கர்ணத்தினிடமிருந்து மட்டும் சர்டிபிக்கேட் போதும் என்ற முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் இருக்கின்ற கொல்லிமலைப் பகுதிக்கு மின்சாரம் தேவை என்று முன்பே சொல்லி வந்திருக்கிறேன். இதைப்பற்றி பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. இப்போது மலைஜாதியினருக்கு என்று பணத்தை ஒதுக்க திட்டமிட்டிருப்பதாக தெரிகிறது. அந்த முறையில் கொல்லிமலை பிரதேசத்திற்கும் மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒகனேக்கல் திட்டத்தை சீக்கிரமாக கொண்டு வருவதற்காக பக்கத்திலுள்ள மாநில அமைச்சர்களோடு நமது அமைச்சர் கலந்து பேசி, நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில் சேந்தமங்கலம் பகுதியில் இரண்டு நாட்கள் தொடர்ந்தாற்போல் மின்சாரம் வரவில்லை. மின்சாரம் வந்தது என்று சொன்னால் ஏதோ ஒரு நிமிடம், இரண்டு நிமிடம் இப்படித்தான் வந்து கொண்டிருந்தது. தொடர்ந்தாற்போல் இரண்டு நாட்கள் மின்சாரம் இல்லாமல் இருந்ததின் காரணமாக நெற்பயிர்களுக்கு எல்லாம் தண்ணீர் விட முடியாமல் விவசாயிகள் பெரிய கஷ்டத்திற்கு உள்ளானார்கள். மின்சார வெட்டு ஏற்படும் காலத்தில் சினிமாக்களுக்கு இரண்டு ஷோ-க்கள், மூன்று ஷோ-க்கள் என்றில்லாமல் ஒன்றிரண்டு காட்சி நேரத்தை குறைத்தார்கள். அப்படியில்லாமல் அறவே சினிமாவுக்கு மின்சாரம் கொடுக்காமல், விவசாயத்திற்கு மட்டும் மின்சாரத்தை கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகள் பம்ப்செட் வைக்கிற நேரத்தில், சர்வீஸ் கொடுக்கும்போது, 150 வாட்ஸ் வரை லைட் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதன் படி 3, 4 பல்ப்-கள் போட்டிருக்கிறார்கள். இதை அங்குள்ள சூப்பர்வைசர்களும் பார்வையிட்டிருக்கிறார்கள். இவ்விதம் லைட்டுகளை கொட்டகைகளில் போட்டிருந்ததை பார்த்துத்தான் சூப்பர்வைசர் சர்வீஸ் கொடுத்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, நான்கைந்து மாதங்களுக்குப் பின்னால் அங்கு மேற்பார்வையிட வந்திருந்த மேல் அதிகாரி, இவ்விதம் லைட் போடக்கூடாது, இவ்விதம் ஐந்தாறு மாதங்கள் போட்டிருப்பார்கள் என்று சொல்லி 70 ரூபாய், 80 ரூபாய், 100 ரூபாய் என்று கட்டணம் விதித்து பில் அனுப்பியிருக்கிறார்கள். இந்த லைட் ஒரு மாதம் கூட உபயோகிக்காதவர்களுக்குக்கூட இவ்விதம் பில் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். உண்மையில் இதற்காக சர்வீஸ் கொடுக்கின்ற நேரத்தில் இதிலிருந்து லைட் போடக்கூடாது என்று சொல்லியிருந்தால் நிச்சயமாக யாரும் லைட் போட்டிருக்க மாட்டார்கள். 150 வாட்ஸ் வரை போட்டுக் கொள்ளலாம் என்று சர்வீஸ் கொடுக்கும்போது சொன்னதின் பேரில் தான் லைட் போட்டார்கள் பின்னால் இப்போது இதற்காக கட்டணம் கட்டவேண்டும் என்று சொல்வது கொஞ்சம் பொருத்தமில்லாமல் இருக்கிறது. மேலும் இவ்விதமாக



உத்தரவு வந்தவுடன் பல விவசாயிகளும் வயர்-ரை கழற்றி வைத்கிறார்கள். இவர்களுக்கு மாதா மாதம் பில் போட்டு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளும் பில்படி கட்டணம் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் கொடுக்கப்பட்ட பில்களை எல்லாம் சேகரித்து வைத்திருக்கிறேன். அதை அரசாங்கத்திற்கும் அனுப்பி வைக்கலாம் என்றிருக்கிறேன். ஆகவே இவ்விதம் நியாயமில்லால் வசூல் செய்யப்பட்ட பணத்தை திருப்பிக்கொடுப்பதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரவில் மின்சாரம் கொடுப்பதால், விளக்கு இல்லாமல் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவது விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே 150 வாட்ஸ்க்குள்ளாக ஒன்றோ இரண்டோ லைட் உபயோகித்துக் கொள்ளலாம் என்ற ஒரு திட்டத்தை அமைச்சர் அவர்கள் போட்டு, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுப்பதைப் பற்றி அமைச்சர் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். இரண்டு ஆண்டுகளாகவே பரிசீலனை செய்துகொண்டிருப்பதாக அமைச்சர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் ஏதாவது ரிசல்ட் கிடைத்திருக்கிறதா, அந்த மாதிரி ஒரு நிலைமையை நிச்சயமாக ஏற்படுத்த முடியும் என்ற உறுதியை எங்களுக்கெல்லாம் அமைச்சர் அவர்கள் தருவார்களா என்று கேட்டு, பொதுவாக விவசாயத்திற்கே தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரத்தைக் கொடுக்க அமைச்சர் அவர்கள் நல்ல முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. எம். எஸ். செல்வராஜன்**: கனம் சபாநாயகர் அவர்களே, மின்சாரக் குழுவினரின் நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன். கடந்த ஏழு ஆண்டுகளாக இந்தக் கழகம் வருவாயைப் பொருத்த வரையில் தன்னைக்கட்டிக் கொண்டு போகிறது என்று சொல்லக் கூடிய முறையில் லாபகரமாக நடந்து, சென்ற வருஷம் மட்டும் மூலதனத்திற்கு வட்டியாக ஒரு கோடி ரூபாய் கொடுக்க முடியாத நிலையில் இருந்திருக்கிறது என்பது திருப்தி தரக்கூடிய விவரம். மற்றொரு அங்கத்தினர் சுட்டிக்காட்டியது போல, பல திட்டங்களில் குறித்த காலத்திற்கு முன்பே திட்டங்களை நிறைவேற்றியது மட்டு மல்லாமல் மூன்று திட்டங்களில் 7 கோடி ரூபாய் அளவுக்கு மிச்சப் படுத்தி அதையும் வேறு திட்டங்களில் செலவு செய்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட 100 கோடி என்பது, 111 கோடி அல்ல 125 கோடி வரையில் அதிகமாகச் செலவு செய்யக் கூடிய நிலைமை பெறுகிறார்கள் என்றால் 25 கோடி ரூபாய் அதிகமாகவும், செலவை மிச்சப்படுத்தியது 7 கோடி ரூபாயையும் சேர்த்து 32 கோடி ரூபாய் அளவுக்கு புதிய வேலைகளை ஏற்றுச் செய்கிற நிலைமை பெற்றிருக்கிறார்கள் என்றால் அவர்கள் எல்லோருக்கும் இந்த அரசாங்கமும் சரி, இந்த மாநில மக்களும் கடமைப்பட்டிருக்கிறார்கள், பாராட்டுதல் அவர்களுக்கு உரியது.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [18th July 1964

தூத்துக்குடியிலும், எண்ணூரிலும் நிறுவப்படும் அனல் மின்சார நிலையங்கள் தீமையிலும் பிறந்த நன்மை என்று சொன்னாலும், ஏதோ கஷ்டம் வந்தது, அந்தக் கஷ்டத்தைக் காட்டி வந்த மின் சார நிலையங்களை பெற முடிந்தது என்பது எனக்கு நிச்சயமாக மகிழ்ச்சி தரவில்லை. இந்த மின்சாரக் கழகமும், ராஜ்ய அரசாங்க மும் சரி, ப்ளானிங் கமிஷனிடம் இந்தக் கஷ்டம் வந்த பிறகு கஷ்டத்தைக் காட்டி அனுமதி கேட்டு வழங்கியிருப்பதற்கு பதில் இந்த அனுமதியை முன்பே வழங்கியிருந்தால், இந்த அனுமதி முன்பே கிடைத்திருந்தால், இந்தக் கஷ்டத்தைக் கூட தவிர்க்க லாம் அல்லவா என்று நினைக்கும்போது, அரசாங்கம் இன்னும் தீவிரமாக ப்ளானிங் கமிஷனை வலியுறுத்திப் பெறவேண்டிய காரியங் கள் இதுபோல என்னென்ன இருக்கலாமோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது. அதையும் கூட அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும் என்று நான் கருதுகிறேன்.

முன்னேற்றக் திட்டங்கள் பல நடந்து வருகின்றன. 19,000 கிராமங்களுக்கு மூன்றாவது திட்டத்திற்குள் மின்சார விஸ்தரிப்புக் கொடுக்கவேண்டும் என்று பெருமையோடு திட்டம் வைத்திருக் கிறோம். இருந்தாலும் கூட எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. என்னவென்றால் 19,000 என்றால் எல்லாம் ரெவின்யூ கிராமங்களா அல்லது நான் நினைக்கிறேன் சுற்றிலும் இருக்கக்கூடிய குக்கிராமங் களையும் சேர்த்து 19,000 கிராமங்கள் என்று கணக்கிடுகிறோம் என்று கருதுகிறேன். இன்னும் மூன்றாவது திட்டத்திற்குப் பின்னால் விடப்படும் எண்ணற்ற குக்கிராமங்கள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். பெருவாரியான கிராமங்கள், பிற்போக்கு பகுதி அல்லது ஹரிஜனங்கள் வசிக்கக் கூடிய பகுதியாக மிகுந்து நிற்கும் என்று கருதுகிறேன். வருஷாவருஷம் 1½ லட்சம் ரூபாய் ஒதுக்கினாலும், 15 லட்சம் ரூபாய் ஹரிஜன க்ஷேம நிதியிலிருந்து சரிக்கட்டப்படும் என்று சொன்னாலும் நிச்சயமாகப் போதாது. திருநெல்வேலி ஜில்லாவிலே நான் விவரம் எடுத்துப் பார்த்தேன். 1,000 குக்கிராமக்களுக்கு ஹரிஜனப் பகுதிகள் உட்பட மின்சாரம் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்ற விவரம் கிடைத்திருக்கிறது. ராஜ்யம் முழுவதிலும் பல நூற்றுக்கணக்கான குக்கிராமங்கள் விடப்படுமானால், 3-வது திட்டத்திற்குப் பின்னரும் இத்தகைய ஒரு நிலைமை இருக்கும் என்பதைப் பற்றி யோசித்து, இதைப் போக்குவதற்கு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைப் பற்றி யோசிக்கவேண்டும். அதோடு ஆரம்பத்திலே பஞ்சாயத்திலோ அல்லது ஒரு கிராமத்திலோ மின் இணைப்புக் கொடுக்கும்போது சேர்க்கப்படாமல் விடப்பட்டிருக்கும் குக் கிராமங்களுக்கு இணைப்பு கொடுக்கவேண்டும் என்று சொல்லும் போது, அந்தத் திட்டத்தை மட்டும் தனியாக எடுத்துப் பார்த்து கட்டுப்படியாகாது என்று சொல்லி அதனால் கால தாமதம் ஏற்படு கிறது. அந்த அளவுக்கு அந்தத் திட்டத்தினால் 10 சத விகிதம் வருமானம் கிடைக்குமா என்று பார்த்தால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் இன்றைய நிலையில் விசேஷமாக இத்தகைய கிராமப் பகுதிகளுக்கு ஏதாவது வழிவகை செய்ய முடியுமா என்று யோசிக்கவேண்டும்.



18th July 1964] [திரு. எம். எஸ். செல்வராஜ்]

இண்டஸ்ட்ரியல் ட்ரெய்னிங் இன்ஸ்டிட்யூட்ஸ் போல, பஞ் சாயத்து யூனியனில் உள்ள யூனிட்டுகளைப் போல கார்ப்பெண்டரி யூனிட்ள்ஸ், ஃபிட்டிங் யூனிட்ஸ் போன்ற யூனிட்டுகளில் மின் சாரத்தை உபயோகப்படுத்தி நவீனக் கருவிகளில் கூட பயிற்சி கொடுக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அத்தகைய பயிற்சி கூட வருஷக் கணக்காக தாமதப்பட்டிருக்கிறது. மின்சார இணைப்பு இல்லாததன் காரணமாக பல பகுதிகளில் மின்சாரத்தை உபயோகப்படுத்தி நவீனக் கருவிகளில் பயிற்சி கொடுப்பது கூட தாமதப்பட்டிருக்கிறது. 10 வருஷ ஒப்பந்தம் செய்ய வேண்டு மென்று சொல்லுகிறார்கள். இந்த முறையில் இதில் ஏற்படும் தாமதங்களைப் பற்றி தீவிரமாகப் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கருதுகிறேன்.

அதைப் போலவே புதிதாகப் பல பகுதிகளில் மின்சார இணைப்பு ஏற்பாடு செய்யும்போது, பாபநாசத்தில் மேல் அணையில் ஒரு திட்டம் தயாராகும் நிலையில் உள்ளது. என்னுடைய ஆலோ சனை ஒன்று. குற்றாலத்தில் குளிக்க வசதியாக இருக்கிறது. ஸீஸன் காலத்தில் மின்சாரத்திற்கு உபயோகப்படுத்துவது கஷ்டமாக இருக்கலாம். வருஷத்தில் 6 மாத காலம் மழை காலத்தில் வெள்ளம் போல அருவியில் வரும் தண்ணீரை 4-5 மாதங்கள் உபயோகப் படுத்திக் கொள்ள முடியுமா என்று பரிசீலனை செய்யலாம் என்று நான் நினைக்கிறேன். நுணுக்க ஞானம் பொருந்திய இலாகா தலைவர், நுணுக்கத்தைக் காட்டும்போது அந்தத் திட்டம் கூட கைகூடலாமோ என்று கருதுகிறேன்.

கிராமப்புறங்களில் இன்றைய நிலையில் இருக்கும் கஷ்டம் நான் அறிந்த மட்டில் பஞ்சாயத்துக்களுக்கு முன்பே திட்டம் தயாரிக் கப்பட்டிருந்தாலும் தெருவிளக்குகள் போடுவதில் கால தாமதம் ஏற்படுகிறது. கடந்த 6 மாத கால விவரத்தை எடுத்துப் பார்த் தால், மார்ச் மாதத்திற்கு முன் மூன்று மாதம், பின் மூன்று மாதம் விவரங்களை எடுத்துப் பார்த்தால் இந்தத் திட்டத்தில் பல பகுதி களில் தெரு விளக்குகள் போடுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. பணம் தாராளமாகக் கிடைக்கவில்லை. ஒதுக்கப்பட்ட பணம் காலியாகிவிட்டது என்று கொடுக்கப்படுகிற காரணமாக, தாமதம் இல்லாமல் தெரு விளக்குக் கொடுக்க உதவி செய்ய முடியும் என்று நான் நினைக்கிறேன். ஜில்லா டெவலப்மெண்ட் கவுன்ஸில் கூட்டம் நடக்கும்போது டிவிஷனல் என்ஜினியருக்கு கீழ்ப்பட்ட அதிகாரிகள் வருகிறார்கள்—சில சமயங்களில் டிவிஷனல் என்ஜினீயர் வருகிறார். அந்தக் கூட்டத்திற்கு ஸூபரிண்டெண்டிங் என்ஜினியர் வந்து ஒரு நாள் காலையில் ஒரு கூட்டம், மாலையில் ஒரு கூட்டம் நடப்பதில் கலந்து கொண்டால் அந்தப் பகுதியிலுள்ள பல கஷ்டங்களுக்கு நிவர்த்தி காண முடியும் என்று கருதுகிறேன்.

இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் மின்சார வேஸ்டேஜ் இருக்கத்தான் செய்கிறது. 17 சத வீதம் வேஸ்டேஜாக இருக் கிறது. இது இந்த ராஜ்யக் கணக்கு என்று கருதுகிறேன்.

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [18th July 1964

மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது பெருமைப்படும் அளவுக்குக் குறைவாக இருக்கிறது. இருந்தாலும் மற்ற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து நமக்கு ஏற்பாடு வேஸ்டேஜ் சரியானது தானா என்று பரிசீலனைச் செய்ய வேண்டியது அவசியம் என்று நான் கருதுகிறேன்.

பல இடங்களில் முன்பு போட்ட ட்ரான்ஸ்ஃபார்மர்கள் சக்தி குறைந்தது என்ற காரணத்தினால் விஸ்தரிப்புகள் வேலை தடைபடுகிறது. நான் அறிந்த மட்டில் திருச்செந்தூர் கோவாப்பரேட்டிவ் நூற்பு மில்லுக்கு சக்தி பொருந்திய ட்ரான்ஸ்ஃபார்மர் பொருந்திய பின்னர்தான் கொடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. மூன்றாவது ஷிப்ட் ஏற்படுத்தும் விஷயத்திலே இதை காரணமாகக்காட்டியிருக்கிறார்கள். ஒளி குறைந்திருக்கிறது. துரிதமாக எவ்வளவு வேகமாக விஸ்தரிப்பு கொடுக்க முடியுமோ, அதற்கு ட்ரான்ஃபார்மரை மாற்றி அமைத்து விஸ்தரிப்புக்கு உதவ வேண்டிய நிலை இருக்கிறது. இதைப் பற்றி பரிசீலனை செய்யும் போது எங்கள் தாலூகாவைப் பொறுத்த மட்டில் இல்லாமல் பல இடங்களில் ட்ரான்ஸ்ஃபார்மர் சக்தி பொருந்தியதாக மாற்றினால் தான் விஸ்தரிப்புக்கு உதவ முடியுமோ என்று கூட நான் கருதுகிறேன். இவற்றையெல்லாம் ஜாக்கிரதையாகப் பரிசீலனை செய்யலாம் என்று நினைக்கிறேன்

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

பாபநாசம் நீர்த்தேக்கத்தை ஆரம்பத்தில் கட்டிய போது தண்ணீர் பாய்மான வசதி, மின்சார உற்பத்தி ஆகிய இரண்டுக்கும் ஏற்றதாகச் செய்தார்கள். ஆனால் இப்போது மின்சார உற்பத்திக்கு முக்கியத்துவமா. அல்லது பாய்மான வசதிக்கு முக்கியத்துவமா என்ற பிரச்சினை எழும்பியிருக்கிறது. அப்போதைக்கப்போது மின்சார இலாகாவிற்கும், நீர்ப்பாசன இலாகாவிற்கும் இணக்கம் ஏற்பட்டு சந்தோஷமாக உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். என்றாலும்கூட இன்று இருக்கிற நிலைமையில் அங்குள்ள பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர் நிலங்களுக்கு தண்ணீர் விட வேண்டியது அவசியம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையில் 47 அடி வரையில் பாபநாசம் தேக்கத்தில் தண்ணீர் இருக்கிறது. மற்ற மேட்டூர் போன்ற தேக்கங்களில் தண்ணீர் நல்ல நிலைமையில் இருக்கும்போது, பாபநாசத்தில் ஸாக்ரிஃபைஸ் பண்ணினாலும்கூட, மின்சாரத்திற்கு வேண்டுமே என்ற எண்ணம் இல்லாமல் அந்த நினைவு கூட இல்லாமல் துரிதமாக திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் தாலூகா வரையில் ரஷ் ஆகிற மாதிரி தண்ணீர் கொடுக்கும்போது பல ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்களைப் பாதுகாக்க முடியும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மின்சார இலாகா மிகவும் வேகமாக காருண்ய எண்ணத்தோடு இத்தகைய விஷயங்களைப் பரிசீலனைச் செய்வது நல்லது என்று கருதுகிறேன். இந்த இலாகா இந்த ராஜ்யத்திற்கு பெருமை தரக்கூடிய ஒரு இலாகா. இதனுடைய வேகமும், இதனுடைய திட்டங்களும் மேற்கொண்டு தொடர்ந்து இதே நிலையில் இருந்து வந்து



18th July 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

மேலும் இந்த ராஜ்யத்திற்கு பெருமை அளித்து, இந்த தேசத்தில் இந்த ராஜ்யம் பெற்றிருக்கக் கூடிய முதல் இடத்தை என்றும் பெறக்கூடிய நிலைமையை இந்த இலாகா உண்டுபண்ணவேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. மாரப்ப கவுண்டர் : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் மின்சார இலாகா அமைச்சர் அவர்கள் இந்த சட்ட சபையில் சமர்ப்பித்திருக்கும் மின்சார இலாகா வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மின்சார இலாகா ஐந்தாண்டுத் திட்டப்படி நமது மாநிலத்தில் எடுத்துக்கொண்ட திட்டங்களையெல்லாம் தீட்டி மூன்றாவது ஐந்தாண்டு திட்ட காலத்திற்குள் முடிவு பெறக்கூடிய அளவுக்கு இந்த வருஷத்திலேயே திட்டங்களை முடித்திருப்பதை நினைக்கிற பொழுது, நாம் அவர்களை பாராட்ட வேண்டியிருக்கிறது. 10-30 a.m.

குறிப்பாக கோவை ஜில்லாவில் மின்சார சப்ளையை எடுத்துக் கொண்டால் கிராமங்கள் தோறும் மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. கோவை ஜில்லா கிராமங்களில் விவசாய கிணறுகள் எவ்வளவு இருக்கின்றனவோ, அந்த அளவுக்கு மின்சாரம் அளிக்கப் பட்டிருக்கிறது. அந்த நிலையை பார்க்கும்பொழுது கோவை விவசாயிகள் விவசாயத்தை நல்ல முறையில் பெருக்கும் அளவுக்கு மின்சாரம் அங்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

அதோடுமட்டுமல்லாமல் நமது மாகாணத்தில் தொழில் சம்பந்தப்பட்ட வரையில் கோவை முதன்மையான ஸ்தானத்தை வகித்து வருகிறது. அந்த நிலையை எடுத்துப் பார்க்கும்பொழுது ஒன்று நமக்குத் தெரிகிறது. மின்சாரத் தட்டு ஏற்பட்ட காலத்தில் கோவை மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல் தொழிலாளர்களுக்கும் இந்த மின்சார விஸ்தரிப்பு மிக உதவியாக இருக்கிறது என்பதை இந்தச் சபையில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

கோவை ஜில்லாவில் கிராமப் பகுதிகளில் அதிகமாக மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக அவிநாசி தாலுக்கா மிகுந்த வறண்ட பிரதேசம். அந்தப் பிரதேசத்தில் ஏராளமான கிணறுகளுக்கு மின்சார சப்ளை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது வறண்ட பிரதேசமாக இருக்கக்கூடிய காரணத்தினால் அங்கு இருக்கக்கூடிய கிணறுகளெல்லாம் தண்ணீர் இல்லாமல் 100 அடி, 150 அடி வரை ஆழமாக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலிருந்தும்கூட, தண்ணீர் அதிகமாக இருக்கிறதா என்றால், இல்லை. இதற்குக் காரணம் மழை இல்லாத ஒரு நிலைதான். அந்த நிலைமையிலும் 10 ஆண்டு காலமாக அங்கு இருக்கக்கூடிய விவசாய மக்கள் மின்சார மினிமம் சார்ஜை குறிப்பாக ஒரு கிணறுக்குக்கூட பாக்கி இல்லாமல் செலுத்தி வந்திருக்கிறார்கள். அம்மாதிரி செலுத்தி வந்த ஒரு பகுதிக்கு இந்த மின்சார இலாகா மினிமம் சார்ஜை

எடுத்துவிட்டிருப்பது ஒரு நன்மையான செய்கையாகும். அதற்காக மின்சார இலாகாவிற்கு நான் பாராட்டுதல் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் பல கிணறுகளுக்கு மின்சார மினிமம் சார்ஜ் கட்ட முடியவில்லை என்ற நிலை இருந்துவருகிறது. அதற்காக மின்சார இலாகா கோர்ட்டுகள் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள். கிராம விவசாயிகள் தாங்களாகவே அந்த நிலையை உண்டுபண்ணக்கூடியவர்கள் அல்ல. கிணறுகளில் தண்ணீர் இல்லை. அந்தப் பகுதிகளில் வேறு நீர்ப்பாசன வசதியும் இல்லை. கிணறுகளுக்கு ஊற்றம் தரக்கூடிய குளங்களோ குட்டைகளோ இல்லை. இம்மாதிரி தண்ணீர் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டதினால், மினிமம் சார்ஜ் கட்ட முடியாத சந்தர்ப்பமும் ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் ஏழை விவசாயிகளுக்கு நல்ல முறையிலே உதவி செய்யக்கூடிய ஒரு நிலையிலே இப்பொழுது மினிமம் சார்ஜை எடுத்துவிட்டாலும்கூட, அவர்கள் மின்சார மினிமம் சார்ஜ் கட்டவேண்டிய சந்தர்ப்பத்தை நீக்குவதற்கு உண்மையான வழிவகைகள் செய்யும்படி மின்சார இலாகா அமைச்சர் அவர்களையும், மின்சார இலாகா பொறியாளரையும் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கிணறுகள் ஆழமாக இருப்பதன் காரணமாக 4, 5, லைட்கள் போடவேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்படுகிறது. 100, 150 அடி ஆழம் இருக்கக்கூடிய கிணறுகளில் இரவு நேரத்தில் தண்ணீர் இறைக்கவேண்டியிருக்கிறது. அந்த நிலையைப் பார்க்கும்பொழுது கீழே ஒரு லைட் போடவேண்டியிருக்கிறது. மேலே ஒரு லைட் போடவேண்டியிருக்கிறது. அது தவிர, களத்தில் மாடு கட்டும் இடம், சாமான்கள் வைக்கக்கூடிய இடம் ஆகியவைகளுக்கு லைட் போடவேண்டிய நிலை இருந்து வருகிறது. ஆகையினால், 3 லைட்கள் தான் போட்டுக் கொள்ளவேண்டும் என்ற ஒரு நிலையை மாற்றி, 5 லைட்களாவது ஒரு ஸர்வீசுக்குக் கொடுக்கும்படி மின்சார இலாகா அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் இருக்கக்கூடிய மோட்டார் பம்பு செட்டுகள் அடிக்கடி 'டிரிப்' ஆகிறது. காரணம், 5, 6 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட எஸ்டிமேட்படி அங்கு இருக்கக்கூடிய டிரான்ஸ்பார்மர்கள் எல்லாம் இருந்து வருகின்றன. ஆனால் இப்பொழுது ஒன்றுக்கு இரண்டாக, 100-க்கு 200-ஆக, கிணறுகளுக்கு டிரான்ஸ்பார்மர்களிலிருந்து மின்சாரம் சப்ளை செய்ய வேண்டியிருக்கிறது. அந்த நிலையில் இந்த டிரான்ஸ்பார்மர்களை மாற்றி, பெரிய நல்ல சக்தி வாய்ந்த கம்பிகளைப் போட்டு, கிணறுகளில் மோட்டார்கள் நல்ல முறையில் டிரிப் இல்லாமல் ஓடுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.



*** திரு. மா. இராசாங்கம்:** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ம் ஆண்டுக்கான மின்சார இலாகா மான்யத்தின் பேரில் என்னுடைய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ள முற்படுகிறேன். சென்னை மாநிலத்தில் திட்டமிட்டு முடிவடைந்த மின்சார திட்டங்களிலே குந்தா அணைக்கட்டு திட்டம் மிக முக்கியமான திட்டம். குந்தா அணைக்கட்டு கட்டுவதற்கு முன்பாகவே செய்யப்பட்ட சில வேலைகளில் சில தவிர்த்திருக்கக்கூடிய கோளாறுகள் இருந்ததாகத் தெரிய வருகிறது. அவிலாஞ்சிக்கும், குந்தாவுக்கும் இடையே தோண்டப்பட்ட டன்னலுக்கு ஆன செலவுத் தொகை ரூ. 1.37 லட்சம். பின்னால் அந்தச் செலவு அவசியமற்ற செலவாக சர்க்காருக்கு ஒரு காலத்தில் தெரிய வந்திருக்கிறது. ஏன் அவசியமற்ற செலவாக பின்னால் தெரிய வந்தது என்றால், அங்கே 'ஸாயில் கண்டிஷன்' சரியில்லை, ஆகவே தேவை இல்லை என்று வேலை முடிந்தவுடனேதான் தெரிய வந்திருக்கிறது. அதற்கு முன்பே பரீட்சார்த்தமாக சர்க்கார் 'ட்ரயல் போரிங்' ( Trial boring ) மூலமாக 'ஸாயில் கண்டிஷன்' நிலைமையைத் தெரிந்துக் கொண்டிருந்தால், அம்மாதிரி வீண் செலவு ஏற்பட்டிருக்காது என்பதை நான் சர்க்காருக்கு உங்கள் மூலம் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, குந்தா அணைக்கட்டுத் திட்டம் சரியான காச்மெண்ட் ஏரியாவில் அமையாத காரணத்தால் தொடர்ந்த மழையில்லை. ஆகவே அடிக்கடி இப்படி மின்சார வெட்டுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வானம் பார்த்த மின்சாரத் திட்டங்களை நாம் கொண்டுவருவதைவிட, அடுத்தடுத்து அனல் மின்சாரத் திட்டங்களை நிறுவ வேண்டுமென்று பல உறுப்பினர்களும் இங்கே குறிப்பிட்டிருக்கிற காரணத்தால் அடுத்துப் போடப்படும் திட்டங்கள் அனைத்தையும் அனல் மின்சாரத் திட்டங்களாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மின்சாரத்தை இரவு நேரங்களில் வழங்குவதினால் விவசாயிகளுக்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுகிறது. அதனால் பல சிக்கல்களும் தகராறுகளும் ஏற்படுகின்றன. இரவு நேரங்களில் மின்சாரம் கொடுப்பதினால் விவசாய வேலையில் பாதி வேலையை பெண்கள் செய்யவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. அதனால் பெண்களை இரவுகளில் விவசாய வேலைக்கு அழைக்கிறபொழுது பல தகராறுகள் ஏற்படுகின்றன. இரவில் நடவு நடுவதற்காக பெண்களை அழைக்க நடு நிசியில் கதவு தட்டி நாட்டுப்புறங்களிலே பல கலவரங்களே நடந்திருக்கின்றன மேலும் வாய்க்கால் வழியாக நடந்து போகிறபொழுது இரவு நேரங்களில் பாம்புகள் வருகின்றன. வாய்க்கால்களில் ஓடி வருகிற தண்ணீர் எந்தப் பகுதியில் உடைந்து செல்கிறது என்று தெரியவில்லை. இப்படி பல இடைஞ்சல்கள் இருப்பதினால், இரவு நேரங்களில் மின்சாரத்தைக் கொடுத்து உதவுவதைவிட பகல் நேரங்களில் கொடுத்து உதவினால் வசதியாக இருக்கும். விளக்குப் போட்டுக்கொண்டு தொழிற்சாலை

கள் நடத்தலாம். ஆனால் விளக்குப் போட்டுக்கொண்டு விவசாயம் நடத்தமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். பகலிலே விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். ஒன்றும் இல்லாமல் போனவனுக்கு, இல்லாமை அவ்வளவு துன்பம் தராது. ஆனால் இருந்தும் இல்லாமை என்பதுதான் அதிகமான துன்பத்தைத் தரும் என்பது தத்துவம். எங்கள் பகுதியிலுள்ள லோயர் கேம்பில் கூடுதலாக மின்சார உற்பத்தி செய்தும் எங்கள் பகுதிக்கு அந்த மின்சாரம் கொடுக்கப்படுவதில்லை. பெரியார் லோயர் கேம்பிலுள்ள குள்ளப் பன் பட்டி, கருணைக்க முத்தன் பட்டி, குரும்ப பட்டி, மற்றும் பிற பட்டிகளுக்கு மின்சார இலாகா உடனடியாக மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று ஆணையிட்டு வெகு காலமானபோதிலும் மின்சாரம் கொடுக்கப்படவில்லை. அவ்வாறு மின்சாரம் கொடுக்கப்படாத பகுதிகளுக்கு உடனடியாக கொடுக்க வேண்டுமென்று உங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இருண்டு கிடக்கிற பகுதிகளுக்கெல்லாம் விளக்கேற்றி வைப்போம் என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உடனே இப்படிப் பட்ட இருண்ட பகுதிகளுக்கு வெளிச்சம் கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரம் திடீர் திடீரென்று நின்று விடுவதால் அதனால் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல் கிறேன். எங்கள் ஊரில் ஒரு கல்யாண நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருக்கிறது. பாதி நடந்து கொண்டிருக்கும்பொழுது பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் வெற்றிலைபாக்கு மாற்றுகிற நேரத்திலே விளக்கு அணைந்துவிட்டது. அதன் காரணமாக அந்த சம்பந்தம் தேவையில்லை என்று மாப்பிள்ளை வீட்டார் சென்று விட்டார்கள். இந்த மின்சாரம் நின்றதன் காரணத்தினால்தானே நமக்குக் கிடைக்கவேண்டிய மாப்பிள்ளை கிடைக்கவில்லையென நினைத்து அந்தப் பெண் அந்த கரண்டினாலேயே உயிர்நீத்த ஒரு சோகக் கதை நடந்திருக்கிறது. இதையாவது ஒரு ஆர்தடாக்ஸ் மனப்பான்மையில் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் மதுரையில் ஒரு டாக்டர் கண் ஆப்ரேஷன் செய்துகொண்டிருந்தபொழுது திடீரென்று கரண்ட் நின்றுவிட்டது. அவ்வாறு திடீரென்று நின்றுவிட்ட காரணத்தினால் அவர் வைக்கவேண்டிய கத்தியானது இடம் மாறி வேறு இடத்தில் பட்டு அதனால் ஒருவர் கண்ணையே இழக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. மின்சாரத் துறை ஒரு நம்பிக்கையான துறையாக வளரவேண்டுமென்பதுதான் நம்முடைய ஆசை. அந்த முறையில் எதிர்காலத்தில் அது ஒரு நம்பகமான துறையாக இருந்து பணிபுரியவேண்டும்.

அடுத்தபடியாக, மின்சாரம் வழங்குவதிலே பாரபட்சம் காட்டப் பட்டு வருகிறது. ஒரு ஊரில் ஒரு தடவை சில தெருக்களுக்கு மின்சாரம் கொடுத்துவிட்டால், அடுத்த தடவை பாக்கியிருக்கிற தெருக்களுக்கு மின்சாரம் கொடுப்பதில்லை. மின்சாரமே கொடுக் கப்படாத ஊர்கள் பல இருக்கின்றன. அவைகளுக்கெல்லாம்



கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். 4, 5 தெருக்கள் கொண்ட ஊர்களில் இரண்டு தெருக்களில் மட்டும் விளக்குகள் இருந்து மற்ற தெருக்களில் விளக்குகள் இல்லாமலிருந்தால் அங்குள்ள மக்கள் என்ன நினைப்பார்கள். ஆகவே, பாரபட்சம் காட்டாமல் ஒரு ஊரில் முதல் முதல் மின்சாரம் கொடுக்கும் போது எல்லா தெருக்களுக்கும் வித்தியாசம் இல்லாமல் மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டும். மேலும் மோட்டார் கனக்ஷன் களுக்கும் உடனடியாக மின்சாரம் சப்ளை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எல். ஆனந்தன் :** கனம் சட்டமன்ற உப தலைவர் அவர்களே, இந்த மின்சார வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் பேச நான் முன்வந்துள்ளேன். தமிழ் நாட்டிலே இன்னும் சுமார் 4,000 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு செய்துகொடுக்கவேண்டுமென்று அரசாங்க அறிக்கை யிலே கண்டிருக்கிறது. அப்படியிருந்தும் கள்ளக்குறிச்சித் தாலு காவில் சுமார் 360 கிராமங்கள் இருக்கின்றன. அந்த 360 கிராமங் களிலே கிட்டத்தட்ட 30 கிராமங்களுக்குத்தான் மின்சார விஸ்தரிபு செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்து பார்த்தால் பாக்கியுள்ள கிராமங்களைப் புறக்கணிக்கப்பட்டதாகத்தான் எடுத்துக்கொள்ள வேண்டும். அது ஒரு மலைப் பிரதேசம். அந்த மலைப் பிரதேசத்தில் ஆழமாக கிணறுகள் வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கும். அப்படி வெட்டப்பட்ட தண்ணீரை விவசாயத்திற்குப் பாய்ச்ச வேண்டுமென்றால் மின்சார சக்தியினால்தான் அது முடியும். இப்படி யிருக்கிற கிராமப் பகுதிகளுக்கு விவசாயத்திற்கு மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று கேட்டு சுமார் 2, 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் செய்துகொடுக்கவில்லை. கள்ளக்குறிச்சித் தாலு காவில் வடக்குப் பகுதியிலுள்ள ரிஷிவந்தியம், சங்காரபுரம் பாக்கம் போன்ற பிர்க்கா பகுதிகளில் இன்னும் மின்சார வசதி செய்துகொடுக்கப்படவில்லை. குறிப்பாக சவுந்தரவல்லிபாளையம், புதுப்பட்டு, ராவுத்தநல்லூர், கருவனூர், ஈருடையான்பட்டி, சீர்ப் பநந்தல், ஏந்தல், அத்தியூர், அரியலூர், கடம்பூர், காடிசித்தூர், செல்லம்பட்டு ஆகிய கிராமங்களுக்கு உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் மாத்தூர், பழய செருவாங்கூட என்ற கிராமங்களுக்கு மின்சார வேலை முடிந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அப்படியிருந்தும் அங்குள்ள மோட்டார்களுக்கு இன்னும் சர்வீஸ் கனெக்ஷன் கொடுக்கவில்லை. அதற்கு என்ன காரணமென்று தெரியவில்லை. ஆகவே அந்த கிராமங்களுக்கு உடனடியாக சர்வீஸ் கனெக்ஷன் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஹரிஜன காலனிகளுக்கு அரசாங்கமே செலவை ஏற்றுக்கொண்டு மின்சார வசதி செய்துகொடுக்கவேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. ஆனால் எந்த ஹரிஜன காலனிக்கும் அரசாங்கம் செலவு செய்வதில்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் பஞ்சாயத்துக்களுக்கு மின்சார வசதி செய்து

கொடுத்தால்தான் ஹரிஜனக் காலனிகளுக்குச் செய்துகொடுக்க முடியும். பஞ்சாயத்துகளுக்கு மின்சார வசதி செய்துகொடுக்க வேண்டுமென்றால், அந்தந்த பஞ்சாயத்துகளின் நிதிநிலையை அனுசரித்துச் செய்யவேண்டியிருக்கிறது. அதனால் ஹரிஜனக் காலனிகளுக்கு மின்சார வசதி செய்துகொடுக்க முடியவில்லை. ஆகவே, எல்லாப் பஞ்சாயத்துகளுக்கும் அரசாங்கமே மின்சார விஸ்தரிப்பு செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மின்சாரக் கழகத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மீது எனது கருத்துரையை சொல்ல விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மின்சாரக் கழகமானது நல்ல பல பணிகளைச் செய்து வந்திருக்கிறது. அந்த மாவட்டத்தில் ஏறக்குறைய மின்சாரம் பம்புசெட்டுகளுக்கும் விவசாயிகளுக்கும்தான் அதிகமாகப் பயன்படுகிறதென்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் ஒருவர் கரண்ட் சார்ஜ் கட்டுவதற்காக அங்கேயுள்ள ஆபீஸ்களுக்குச் சென்று பணத்தை கட்டிவிட்டு வரும்போது இருக்கக்கூடிய சிலபல நிலைமைகளை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதிலே பார்க்கப்போனால், இதற்கு முன்பு ஸ்பெஷல் காரண்டி என்று வசூலித்து வந்தார்கள். ஆனால் அதை இப்பொழுது எடுத்து விட்டு அவர்கள் மீது வரி சுமத்தப்பட்டு இருக்கிறது. முன்பு தண்ணீர் இல்லாவிட்டால், அந்த காரண்டி இருந்தது. இப்பொழுது தண்ணீர் உள்ளவர்களுக்கும் அது வருகிறது. ஒரு ரூபாய் கரண்டு செலவு செய்தால், அதற்கு வரியாக ஏறக்குறைய 30 காசு செலுத்த வேண்டும். சேல்ஸ் டாக்ஸ் போன்று இருக்கிறது, இது இதற்குக் கூடவா விவசாயிகளிடம் வசூலிக்க வேண்டும் என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்குப் பிறகு லோ டென்ஷனுக்கு 10% என்று வைத்து மின்சாரக் கழகத்திற்கு சர்க்கார் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். பம்பு செட் சம்பந்தப்பட்ட ஒரு பில்லை எடுத்துக் கொண்டால் இப்படி பல வரிகள் விவசாயி செலுத்த வேண்டியிருக்கிறது. ஒரு விளக்குக்கு மேல் இன்னொரு விளக்கு என்றால் அதற்கு ஒரு தனி கட்டணம். இப்படி வசூலிப்பது அவ்வளவு சரியல்ல என்பது என்னுடைய எண்ணம்.

இந்த மாதத்திலே வந்திருக்கிற எலக்ட்ரிக் சார்ஜை பார்த்தால் ரொம்ப அதிகமாக இருக்கிறது. ஒரு விவசாயி தாங்க முடியாத அளவுக்கு இருக்கிறது. அவன் ஒரு ரூ. 100 கட்ட வேண்டும் என்றால் அதற்கு வரியாக ஏறக்குறைய 25 ரூபாய் வரியாக கட்ட வேண்டும். ஒரு 500 ரூபாய் கட்ட வேண்டும் என்றால் குறைந்தது 125 ரூபாய் வரி கட்ட வேண்டும். இப்படி தனித்தனி வரியாக போடாமல் இதையெல்லாம் சேர்த்து ஒரு யூனிட் 7 பைசா என்பதை மாற்றி 8 பைசா என்று வைத்து விட்டால்கூட





விவசாயிக்கு கஷ்டங்கள் ஏற்படாது. இந்த சர்சார்ஜுகளை எடுத்து விட்டு யூனிட் ரேட்டை அதிகப்படுத்தினால் யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள். இப்பொழுது 100 ரூபாய்க்கு 25 ரூபாய் வரி. பிறகு லோ டென்ஷன் என்று 10% அதன் மேல் சர்சார்ஜ். அதன் பிறகு மீட்டர் ரென்ட். இப்படி பல ரகங்களில் வசூல் செய்வது விவசாயிகளுக்கு மிக்க தொந்தரவை கொடுக்கிறது. இந்த நிலையை மின்சாரக் கழகம் பரிசீலனைச் செய்து யூனிட் ரேட்டை 8 பைசாவாக மாற்றி மற்ற வரிகளை எடுத்து விட்டு மின்சார கட்டணத்தை அமைக்க முடியுமா என்று பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது பல சிஸ்டங்களாக மாறி இருக்கிறது. மேட்டூர் சிஸ்டம், வேலூர் சிஸ்டம், மெட்ராஸ் சிஸ்டம் என்று. இதில் பணி செய்கிறவர்களை மாற்றுதல் செய்யும்பொழுது பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. பணி செய்கிறவர்கள் ஊர் எந்த பக்கத்தில் இருக்கிறதோ, அது சம்பந்தப்பட்ட சிஸ்டத்திலே அவர்களை மாற்றுதல் செய்ய வேண்டும்.

பிறகு ஓனர்ஷிப்புக்காக தாலூகா ஆபீசிலே சான்று வாங்க வேண்டும் என்று இருக்கிறது. பம்பு செட் அமைக்க எழுதிக் கொடுத்து, கிணறு இருக்கிறது, அந்தக் கிணறுக்கு ஓனர்ஷிப் சர்டிபிகேட்டுக்கு தாலூகா ஆபீஸில் வாங்க வேண்டியிருக்கிறது. தாலூகா ஆபீஸில் அவ்வளவு சீக்கிரமாக கிடைக்கக்கூடிய விஷயமா அது. அது உரிய காலத்தில் வருகிறதா என்றால் கிடையாது. என்னுடைய சொந்த அனுபவத்தைச் சொல்லுகிறேன். செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்பூதூர் தாலூகா தாசில்தாரிடம் நான் போட்ட மனு பல நாட்கள் தாமதப்படுத்தப்பட்டது. அந்த கிராமத்தில் உள்ள மணியத்திற்கும், கணக்குப்பிள்ளைக்கும் தெரியும், கிணறு என்னுடையது என்று. அவர்கள் சான்று கொடுத்து விட்டால் போதும் என்று இருந்தால் நலமாக இருக்கும். தாசில்தாரிடம் வாங்க வேண்டிய அவசியம் என்ன? முன்பு அப்படித்தான் ஒப்புக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது மின்சாரக் கழகத்தில் தாலூகா ஆபீஸில் சான்று வாங்கி வாருங்கள் என்று சொல்வதன் அருத்தம் புரியவில்லை.

கோடைக் காலங்களில் பற்றாக்குறை ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் காலங்களில் முன்னதாகவே எச்சரிக்கை செய்தால் அவர்கள் அதிகமாகச் சாகுபடி செய்யாமல் இருப்பார்கள். அவர்கள் சாகுபடிச் செய்தபிறகு தட்டுப்பாடு ஏற்படுவதால் இரண்டுங்கெட்டான் நிலை ஏற்படுகிறது. பாதிக் கிணறு தாண்டுவது போல பயிர் கதிர் விடும் காலத்தில் ஸ்டாகரிங் செய்கிறார்கள். கரண்டை பாதியாகக் குறைப்பதால் பயிரையும் பாதியாக குறைக்க முடியுமா? ஆகவே பற்றாக்குறை வரும் காலத்தில் ஒரு மாதத்திற்கு முன்பே எச்சரிக்கை செய்தால் நலமாக இருக்கும்.

அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், மின்சாரத்துறையில் அதைச் செய்து விட்டோம், இதைச் செய்துவிட்டோம் என்று. ஆனாலும் பற்றாக்குறை இருந்து கொண்டுதான் இருக்கிறது.

[திரு. எஸ். ஜே. ராமசாமி] [18th July 1964

ரூபாய் 1,000; 1,500 செலவு செய்து விவசாயி பயிரிட ஆரம்பித்தால் நடுவே கரண்டை நிறுத்திவிட்டால் அதன் கதி என்ன ஆவது? அவன் நஷ்டத்தை எப்படி சமாளிப்பான்? இதையெல்லாம் மின்சாரக் கழகத்திற்கு எடுத்துச் சொல்லி, மற்ற நிலைகளையும் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பற்றாக் குறையைத் தவிர்க்க உடனடியாக, அனல் மின்சார திட்டமோ அல்லது வேறு வகையிலோ வழி செய்து எங்களுக்குத் தேவை யான கரண்டைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* SRI R. PONNAPPA NADAR : Sir, I rise to speak a few words regarding the annual financial statement of the State Electricity Board. While doing so, first of all, my congratulations are due to the Electricity Board and the Hon. Minister concerned for the inauguration of the Kodayar Hydro-Electric Scheme in Kanyakumari district. We are extremely fortunate in having that scheme included in the Third Five-Year Plan; even though it was not in the original list, it has been included in the Third Plan and the work is now in progress. I would like to say a few words regarding the working of that project in our district. So far as that project is concerned, work is now going on in full swing. Regarding payment to contractors, some difficulty is being experienced by contractors. So I would request the Electricity Board to make arrangements for prompt payments to the contractors.

Another fact which I would like to bring to the attention of the Electricity Board is that workers are not given sufficient facilities and therefore I would request that sufficient facilities may also be afforded to the workers. Medical facilities are lacking in that area. It is a hilly area and sufficent transport facilities are also lacking. Therefore a direct bus-service should be provided in that place so that workers, who do work there may be benefited. Otherwise the workers who work there have to stop there, since they find it difficult to return home late in the evenings. This should be promptly attended to.

Another thing which I would like to bring to the attention of the Board is with regard to rural electrification. So far as rural electrification is concerned, it may not be very remunerative if it is viewed in a commercial aspect. In spite of that sufficient attention will have to be devoted for expansion of rural electrification, for the benefit of villagers. The practice obtaining in our district is far from satisfactory. So far as Kanyakumari is concerned there are several villages which have to be electrified. Even though work is in progress, I would say that work is progressing at snails speed in certain areas. For example in the border areas of Kerala and Madras State, we see electric lights on the other side, viz., Kerala side wherein there is the Kerala Electricity Board operating, whereas on our side we do not have electric lights. I have brought this to the notice of the District Development Council and the Electricity Department. Yet in spite of sternuous representations, we have not



18th July 1964] [Sri R. Ponnappa Nadar]

yet reached the stage of complete electrification of rural areas. Of course the target that has been fixed by the department has been achieved to some extent. But in the matter of rural electrification, there are certain difficulties also. Also far example there is a place called Payanam near Kuzhithurai Municipality. Meters had been supplied and wiring of houses had been completed in that area. But due to the stay-order of the Telephone Department and Telegraph Department house connection could not be given. There is some difficulty with regard to laying of the wires; there was objection that it would cross with telegraph and telephone wires. That aspect had not been sufficiently gone into when electric installation had been made by the department. Due to that, the stay order has now come from Telephone and Telegraph department. I would earnestly request that sufficient steps might be taken to see to it that the stay order is vacated or other means of electrification provided for.

Another fact which I want to bring to the notice of the Electricity Board is with regard to street-lighting to Panchayats. Solvency certificates have been produced there is inordinate delay in giving street-light connections. Sufficient attention may also be bestowed in this direction and I would once again request the Board to bestow sufficient attention on street lighting. As a whole we have great satisfaction in the functioning of the electricity department and the Board is functioning very well. If these small difficulties are also attended to, it would of great help. I request that priority may be given to rural electrification, even though it may not be remunerative strictly from commercial point of view. With these words I conclude my speech.

**திரு. கே. டி. கோசல்ராம்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ்நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது நான் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். மின்சார போர்டு நினைத்தால் மின்சார வேகத்தில் போக முடியும் என்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த இராஜ்யத் தில் அவர்கள் நிரூபித்திருக்கிறார்கள். அதிலும், இப்பொழுதிருக் கும் மின்சார போர்டின் சேர்மன் அவர்கள் இந்த இராஜ்யத்தின் அபிவிருத்திக்காக அரும்பாடுபட்டு வருகிறார்கள். நமது தேசத் திலுள்ள பிற மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிட்டுப் பார்த் தால், மின்சார அபிவிருத்தித் துறையில் நாம் தலைநிமிர்ந்து பேசக் கூடிய அளவில் இந்த மின்சார போர்டானது செயல்பட்டு வரு கிறது. இந்த இலாகாவில் மின்சார வெட்டு ஏற்பட்டுக் கொண் டிருக்கிறது. அரசாங்கமும் இப்பொழுது இருக்கும் மின்சார போர்டின் தலைவர் அவர்களும் இந்த வெட்டு இருக்காமலிருக்க வேண்டும் என்று எவ்வளவு பிரயத்தனம் செய்தாலும், அது முடி யாமல் போகிறதைப்பற்றி வருத்தப்படாமல் இருக்க முடியவில்லை. அனல் மின்சார நிலையம், அணு மின்சார நிலையம் ஆகியவைகளை 11-00 a.m.

எவ்வளவுக்கு எவ்வளவு சீக்கிரமாகக் கொண்டுவர முடியுமோ, அவ்வளவுக்கு அவ்வளவு இந்த இராஜ்யத்தின் மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும்.

அது தவிர, நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஸ்விட்ஸர்லந்து தேசத்தைப் பார்த்தால், அங்குள்ள மலைகளிலிருந்து எங்கெங்கு தண்ணீர் விழுந்து கொண்டிருக்கிறதோ, அந்த இடங்களில் சிறுகச் சிறுக மின்சாரத்தைச் சேகரித்து அந்தந்த வட்டாரத்திற்கு எவ்வளவு மின்சாரம் தேவையோ அதற்குப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்த வகையில் அவர்கள் சிறுகச் சிறுக மின்சார உற்பத்தி செய்துகொள்ளுகிறார்கள். நமக்குப் பெரிய திட்டங்கள் இனி இல்லையென்றாலும், சிறு சிறு திட்டங்களை எடுத்துக் கொள்ளலாம். எனக்குத் தெரிந்த தாம்பிரபரணி நதியிலிருந்து எடுத்தால், எங்கெல்லாம் சிறிய சிறிய அணைக்கட்டுகள் வருகின்றனவோ அங்கெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு முயற்சிக்கலாம். நானும் முன்னாள் மின்சார இலாகா அமைச்சராக இருந்த கனம் திரு. இராமையா அவர்களும் பல்வேறு சிறிய அணைக்கட்டுக்களைப் பார்க்கும்போது, அங்கெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. என்பதை அப்பொழுது பக்கத்திலிருந்த அதிகாரிகளும் ஒத்துக் கொண்டார்கள். அதற்கு நம்மிடத்தில் மெஷினரி இருக்கிறதா, அதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றனவா, என்றால், எது நமக்குப் பற்றாக் குறையாக இருக்கிறதோ அதைத் திட்டக் கமிஷன் ஒத்துக் கொள்ளாவிட்டாலும், இன்றிருக்கும் நிலைமையில் ஒத்துக்கொள்ள வைப்பதற்கு முடியும். ஆகவே, நமது அதிகாரிகள் அந்த வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

100 கோடி ரூபாய் செலவு செய்யவேண்டிய இடத்தில் 25 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்வதென்றால் அதில் அவ்வளவு சிரமம் இருக்கிறது. 25 கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்து அதிகமான மின்சாரத்தைக் கொடுப்பதாகச் சொல்கிறவர்களை நான் பாராட்டுகின்றேன்.

மின்சார இலாகாவினர் கவனிக்க வேண்டிய மற்றொன்றும் இருக்கிறது. பதனீரைக் காய்ச்சி அதிலிருந்து கருப்பட்டி செய்யும் தொழில் எங்கள் ஜில்லாவில் பெரும் பகுதியில் நடைபெற்று வருகிறது. அதுதான் பெரிய தொழிலாக எங்கள் ஜில்லாவில் அன்றும் இன்றும் இருந்துகொண்டு வருகிறது. மது விலக்கு திட்டத்தின்படி மதுவை ஒழித்த பின்னால் பதனீரிலிருந்து கருப்பட்டி எடுக்கிறோம். அதற்கு இடையூறாக விறகுப் பஞ்சம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. பதனீரைக் கருப்பட்டியாகச் செய்வதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தலாம். விவசாயிகளுக்குக் கொடுக்கும் சலுகைகள் அளவுக்கு பதனீரிலிருந்து கருப்பட்டி தயாரிப்பதற்கும் மின்சாரத்தைக் கொடுத்தால் உதவியாக இருக்கும் என்று ஒரு முறை முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது குறிப்பிட்டார்கள். அது அப்-



பொழுது ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு விஷயம். அது நடைமுறைக்கு வந்திருக்கும் என்று நான் நினைத்தேன். உண்மையிலேயே அதுபற்றிய உத்தரவு வந்துவிடும், வந்துவிடும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், துரதிருஷ்டவசமாக, இதுவரை அது வராமலிருக்கிறது. அதைப் பல முறை நான் கவுன்சிலிலும் சொல்லியிருக்கிறேன். பதனீரிலிருந்து கருப்பட்டி செய்யும் தொழிலில் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். கருப்பட்டி இந்த நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற வகையில் அன்னிய நாட்டுச் செலாவணியை ஈட்டித் தருவதாக இருந்தும், மின்சார உதவியில்லாமல் அந்தத் தொழில் நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழில் சாகடிக்கப்படாமலிருக்க, பதனீரைக் காய்ச்சுவதற்கு மின்சாரத்தை விவசாயத்திற்கு எந்தக் குறைந்த கட்டணத்தில் கொடுக்கிறோமோ அந்த அளவில்—கொடுக்க வேண்டும் என்கிற யோசனையைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அடுத்து, விவசாயிகள் டெபாசிட் கட்டி முப்பது நாட்கள் முடிவதற்குள்ளாக மின்சாரம் கொடுக்கப்பட வேண்டும் என்று ஒரு விதி வைத்திருக்கிறார்கள். மின்சார போர்டிலே சொல்லிவிட்டால் சொன்ன 24 மணி நேரத்திற்குள் மின்சாரம் கிடைத்துவிடும். மின்சார போர்டில் சொல்வதென்றால் வெகு சிலர்தான் சொல்வதற்கு இங்கு வர முடியும். பெரிய அதிகாரிகளைப் பார்க்க வேண்டுமென்றால் ஒரு சிலர் தான் பார்க்க முடியும். அதைப் பெரிய அதிகாரிகளினுடைய நோடீசுக்குக் கொண்டு வந்துவிட்டால் 24 மணி நேரத்திற்குள் கொடுத்துவிடுகிறார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நிச்சயமாக எல்லாப் பாமர மக்களும் அவ்வாறு பெற முடியாது. இருந்தாலும், யார் டெபாசிட் கட்டிவிட்டாலும், டெபாசிட் கட்டி 30 தினங்கள் ஆவதற்குள்ளாக மின்சாரம் கொடுத்துவிட வேண்டும் என்பதைத் திட்டவட்டமாக அதிகாரிகள் நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என்பதை நான் இங்கே ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

அடுத்து, ஜாயிண்ட் பட்டா முறை இருக்கிறது. நிலத்தை ஒருவருக்குப் பின் ஒருவராக விற்றுக்கொண்டிருக்கிறான் விவசாயி. இருந்தாலும், ஜாயிண்ட் பட்டா மாறுவதே இல்லை. ஜாயிண்ட் பட்டாவாக இருந்தால் மின்சாரம் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். ஜாயிண்ட் பட்டாவாக இருந்தால் கடன் கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இதற்கு அங்கு இருக்கிற அதிகாரிகள், அந்த நிலம் யாருக்குச் சொந்தம் என்பதற்குச் சர்ட்டிபிகேட் கொடுத்துவிட்டால் அதை வைத்துக் கொண்டு மின்சார இலாகா வேலையை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எங்கு போனாலும் பஞ்சாயத்துக்களில் ஒரே குறை. "நாங்கள் தீர்மானம் போட்டுவிட்டோம். பணம் கட்டிவிட்டோம். ஒண்ணரை வருஷம் ஆகிறது, இரண்டரை வருஷம் ஆகிறது. மூன்று

தெருவுக்குப் போட்டார்கள், இரண்டு தெருவுக்கும் போடவில்லை" என்பதாக எங்கே போனாலும் சொல்கிறார்கள். மக்களுடைய பிரதிநிதிகளுக்கு இருக்கக்கூடிய சங்கடத்தைக் கவனிக்க வேண்டும். ஒரு ஊரில் இரண்டு சாதிகள் இருக்கும், அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ ஒரு குறிப்பிட்ட சாதி வசிக்கிற தெருவுக்கு மின்சாரம் போய் இருக்கும். அந்த ஊர் பஞ்சாயத்துத் தலைவர் அந்த சாதியைச் சேர்ந்தவராக இருப்பார். அந்தத் தெருவுக்கு மட்டும் மின்சாரம் வந்ததற்கும், அவருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லாமல் கூட இருக்கும். ஆனாலும் ஊர்க்காரர்களின் ஏச்சுபேச்சுக்கு அவர் தான் இலக்காவார். தன்னுடைய சாதிக்காரர் இருக்கிற தெருவுக்கு மட்டும் போட்டுக் கொண்டார் என்பதாக அவர் மீது பழி சுமத்துவார்கள். கூடுமானவரையில் இதற்கு இடமளிக்கக் கூடாது என்றால், ஒரு கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவது என்றால் அந்த கிராமம் முழுவதும் விஸ்தரித்துவிட்டு அடுத்த கிராமத்திற்கு மின்சாரம் கொடுக்கலாம், ஒரேயடியாக வரவில்லை என்ற ஒரே குறைபாடு வேண்டுமானால் இருக்குமே தவிர இத்தகைய பூசல்களுக்கு இடமிருக்காது. ஒரு பஞ்சாயத்து போர்டு தலைவருடைய பதவிக் காலம் 3 வருஷம். அவர் படாதுபாடு பட்டு பணத்தைச் சேகரித்து நடையாக நடந்து தன் பதவிக்காலத்தில் மின்சாரம் வரவில்லை என்றால் வரப்போகிற தேர்தலில் மக்கள் தம்மைப் படாதபாடு படுத்திவிடுவார்களே என்று பரிதபிக்கிறார். அவர் மேல் குறையில்லை. இருந்தாலும் மின்சார இலாகா துரிதமாகச் செயல்படாத காரணத்தினால் இது போல் இரண்டாண்டு, ஒண்ணரையாண்டு ஆகியும் மின்சாரம் வராத இடங்கள் இருக்கின்றன. இத்தகைய இக்கட்டான பரிதாபகரமான நிலைமை ஏற்படாதவாறு சார்மென் அவர்கள் ஓரளவுக்குக் கவனம் செலுத்தினால் மிக நன்றாக இருக்கும். உண்மையில் எந்த அதிகாரியைப் பற்றியும், எந்த அமைச்சரைப் பற்றியும் முகஸ்துதி பண்ணுவது என்பது என்னுடைய சரித்திரத்திலே கிடையாது. மின்சார இலாகா தலைவருடைய திறமையைப் பற்றி நான் நன்றாக அறிவேன். திரு. ராஜாஜி அவர்கள் முதல் மந்திரியாக இருந்த போது கம்பங்களைப் பிடுங்கச் சொன்னார்கள். அவர் போன பின்னால் 35 மைல் நீளத்திற்கு ஒரே வாரத்தில் இவர்கள் மின்சாரக் கனெக்ஷனைக் கொடுத்தார்கள். இப்படி மின் வேகத்தில் செயல்படக்கூடிய ஆற்றல் அவருக்கு உண்டு. ஒன்றிரண்டு விஷயங்களைப் பற்றி அல்ல, பல துறைகளில் அவர் செயல்படுவதை நான் அவர் இலாகாவில் பார்த்து இருக்கிறேன். இப்படி மின்சாரத் துறையில் அபாரமான காரியங்களை எடுத்து நிறைவேற்றி வரும் அவர்கள் இந்தச் சின்ன விஷயங்களிலும் கூடச் சிறிது கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டுக்கான மின்சார போர்டு வரவு செலவு ஒதுக்கீட்டின் மீது பேச வாய்ப்புத் தந்தமைக்கு எனது





நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், நான் பேசும்
போது இப்போது எல்லோரையும் போல சம்பிரதாயத்திற்காகப்
பேச வேண்டுமே தவிர உண்மையிலேயே மனப்பூர்வமாகப் பேசு
வதற்கு இடமும் இல்லை. வாய்ப்பும் இல்லை. காரணம் கடந்த
இரண்டாண்டுகளாக வானூர் தொகுதியில் இரண்டு பஞ்சாயத்
துக்கள் இருக்கின்றன. அந்த இரண்டு பஞ்சாயத்துக்களிலும் கூட
மரக்காணம் யூனியனைப் பொறுத்த அளவில் இரண்டு கிராமங்களுக்
குத்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக
வானூர் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் சிறுவை,
பெரம்பூர், பரிக்கல்பட்டு, பெரும்பாக்கம், பரங்கணி, சேமங்கலம்,
தென் அகரம், கிளியனூர், தேற்குளம் ஆகிய இந்த கிராமங்களுக்
குத்தான் மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. விஸ்தரிக்கப்
பட்டு இருக்கிற இந்த மின்சாரம் முழு அளவு விஸ்தரிக்கப்பட்டு
இருக்கிறதா என்றால் இல்லை. ஊருக்கு மின்சாரம் வந்து இருக்
கும், ஆனால் காலனிக்கு மின்சாரம் வந்து இருக்காது. ஒரு ஊரில்
பத்து விவசாய பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் விஸ்தரித்திருப்
பார்கள்; இருபது பம்பு செட்டுகளுக்கு மின்சார கனெக்ஷன்
கொடுக்க வேண்டியதாக இருக்கும். இந்த மாதிரியான நிலைமை
தான் அதிகமாக இருக்கிறது. இந்த நிலை ஏன் உண்டாகிறது
என்று எங்களுக்குப் புரியவில்லை. அந்தத் தொழில் துறையில்
நுணுக்கம் படித்தவர்களுக்கு ஒரு கால் புரியலாம் என்று நினைக்
கிறேன். நாங்கள் நுணுக்கம் படித்திருந்தால் அதன்
நுணுக்கத்தைத் தெரிந்து சொல்லலாம். அது இல்லாமையினால்
இருக்கக்கூடிய கஷ்டத்தை அதிகாரிகள் இடத்தில் எடுத்து
சொல்ல முடிகிறதே தவிர அதற்குப் பரிகாரம் என்ன என்று கூற
முடியவில்லை. வானூர் பஞ்சாயத்து யூனியன் ஒரு பெரிய சென்ட
ராக இருக்கிற காரணத்தினால் அந்தப் பகுதிக்கு மின்சாரம் விஸ்த
ரிக்க வேண்டியது அவசியம் ஆகிறது. குறிப்பாக வானூர், புளித்த
பள்ளம், உப்பு வேலூர் பகுதி, நல்லாவூர், பேராவூர், ஆதனப்பட்டு,
தென்சிறுவலூர், பூத்துறை, கடப்பேரிக் குப்பம், பொம்மைப்
பாளையம், இரும்பை போன்ற முக்கியமான இடங்களுக்கு மின்
சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டும். அந்தப் பெரிய கிராமங்களுக்கு
மின்சாரம் விஸ்தரிப்பதற்கு நான்கு, ஐந்து வருடங்களுக்கு முன்பு
ஒப்புதலைப் பெற்றும் இதுவரைக்கும் மின்சாரம் விஸ்தரிக்கப்
படாமல் இருக்கிறது. அதுவும் நான் சட்டசபைக் கூட்டத்திற்குக்
கிளம்பி வருவதற்கு முன்னால் எங்கள் தொகுதி எம்.எல்.ஏ. ஆகிய
நீங்கள் இதைப்பற்றி இங்கே எடுத்துச் சொல்ல வேண்டும். உட
னடியாக மின்சாரம் இந்தப் பகுதிக்கு விஸ்தரிக்கும்படியாக நட
வடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள்.
நான் எனக்காகச் சொல்லவில்லை. என் தொகுதியில் உள்ள பொது
மக்கள் சார்பில் சொல்ல விரும்புகிறேன். நான் சொன்ன இந்தப்
பெரிய கிராமங்களுக்கு உடனடியாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட
வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 1961-ல் கோட்டகுப்
பத்தில் லயனைப் போட்டார்கள். இதுவரைக்கும் விளக்குப் போட
வில்லை, என்கிற வேதனை தரும் விஷயத்தை அமைச்சர் அவர்
களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். லயனிய

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [18th July 1964

இருந்தால் கூட ஞாபகம் இருக்காது. லயனைப் போட்டு விட்டு விளக்குப் போடவில்லை என்றால் மக்கள் மிகவும் வேதனை அடைகிறார்கள். இது யாருடைய தவறு என்று தெரியவில்லை. பொதுவாக எனது தொகுதியில் சற்றேறக்குறைய 200 கிராமங்கள் இருக்கின்றன. இந்த 200 கிராமங்களுக்குப் போன வருஷமே விஸ்தரிப்புச் செய்யப் போவதாக அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்காக வேலூர் சூப்பரின்டென்டெண்ட் எஞ்சினியருக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்களே தவிர, அவர்கள் என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார்கள் என்று இதுவரை தெரியவில்லை. எப்படிச் செய்தாலும் எங்களுக்கு மின்சாரம் தேவை. மற்ற பாசன வசதி இல்லாத எங்கள் பகுதியில் கிணற்று நீரையே இறைத்துச் சாகுபடி செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால் உடனடியாக மின்சார போர்டார் இந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச் செய்தாலன்றி உண்மையிலேயே என்னால் பாராட்ட முடியாது. மற்றவர்களைப் போல நானும் பாராட்டிவிட்டுப் போய்விடலாம். ஆனால் இங்கேயுள்ள பத்திரிக்கைக்காரர்கள் "வானூர் தொகுதியைச் சேர்ந்தவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் மின்சார போர்டு அறிக்கையைப் பாராட்டினார்கள்" என்று போட்டுவிட்டால் நான் ஊர் போவதற்குள்ளாகவே என்னைக் கண்டித்து தந்தியும் தபாலும் வந்துவிடும். நான் என்னுடைய தொகுதிக்கே போக முடியாது. ஆகவே தான் இதை ஆதரிக்க முடியாமல் இருப்பதைப் பற்றி வருந்துகிறேன். குறிப்பாக நான் குறிப்பிட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தக்க நடவடிக்கைகளை கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுப்பதால் அவர்களுக்கு எந்த அளவுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள். அப்படிக் கொடுக்கும் போதும் புஞ்சை பயிரிடுகிறவர்களுக்குப் பகலில் தேவையில்லை என்று சொல்லி புஞ்சைப் பயிர்களுக்கு மட்டும் தண்ணீர் பாத்திக்கட்டி நீர் பாய்ச்சும் நிலைமை வருகிறது. இரவு நேரத்தில் மின்சாரத்தைக் கொடுப்பதால் பாத்தி பாத்தியாகத் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகள் மாட்டுக் கொட்டகையிலும், களத்திலும் லைட் போட வேண்டுமென்று சொன்னால் சிலர் அவசியம் என்று சொன்னார்கள், சிலர் தேவையில்லையென்று சொன்னார்கள். எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் சாமான்கள் வைத்துக் கொள்ளப் பயம் ஒன்றும் இல்லை. சேலம் பகுதியில் விவசாயம் செய்யும் இடத்தில் கொட்டகை போட்டுக் கொள்கிறார்கள். அந்த இடங்களில் விளக்கு தேவை படுகிறது. ஆனால் எங்கள் பகுதியில் கிணற்றுக்குப் பக்கத்திலும், கொட்டகையிலும் இரண்டு மூன்று லைட் போட அனுமதித்தால் போதும்.



18th July 1964] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

விவசாயத்தைப் பற்றி மட்டும் சொல்லும்போது டிப்பார்ட்மெண்டில் வேலை பார்க்கிறவர்களைப் பற்றியும் சிலவற்றைச் சொல்லாமல் இருக்க முடியாது. சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கிற சலுகைகளைக் கூட மின்சார போர்டார் தங்கள் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். விஷப் பாம்பு கடித்தால் கூட 10 அடி தூரம் சென்று மனிதன் உயிர் விடலாம்; ஆனால் மின்சாரம் தாக்கினால் அந்த இடத்திலேயே மனிதன் உயிரிழக்கிறான். அந்த நிலையிலுள்ள சிப்பந்திகளுக்கு இந்தச் சர்க்கார் என்ன உத்தரவாதம் அளித்திருக்கிறது? அங்குள்ள சில உத்தியோகஸ்தர்கள் 15 வருஷம், 20 வருஷம் ஆகியும் கூட அவர்களுடைய வேலை ஊர்ஜிதம் செய்யப்படாமல் இருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும் சிந்தித்துக் குறைந்தது 10 வருஷம் உத்தியோகம் செய்த சிப்பந்திகளை நிரந்தரமாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அடுத்த ஆண்டாவது இந்த மின்சார போர்டு பட்ஜட்டை நான் பாராட்டிப் பேச வாய்ப்பும் வழியும் செய்ய வேண்டுமென்று கூறி இப்போது பாராட்ட முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. கே. பொன்னையா: கனம் துணைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார போர்டு பட்ஜட்டை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.

நமது ராஜ்யத்தில் கடந்த மூன்று வருஷ காலமாகவே பருவ மழை சரிவரப் பெய்யவில்லை. காடுகள் அழிக்கப்பட்டதால் மழை பெய்யவில்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். குந்தா பிரதேசத்தில் நமது சர்க்கார் மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதோடு பக்கத்தில் கேரளப் பகுதி இருப்பதால் கேரள அரசாங்கத்தைக் கோரி அங்கும் மரங்களை வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். சீக்கிரத்தில் இந்த நிலைமைக்குப் பரிகாரம் கண்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ய வேண்டும்.

டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் போட்ட சில தீர்மானங்களைப்பற்றிச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். பஞ்சாயத்துக்கள் ஸ்ட்ரீட் லைட் போட வேண்டுமென்று கேட்டால் 'காரண்டி சர்டிபிகேட்' கேட்கிறார்கள். பஞ்சாயத்து என்றால் 'செமி கவர்ன்மெண்ட்' என்று சொல்லலாம். அமைச்சர் அவர்கள் இதுபற்றி கவனித்துப் பஞ்சாயத்துக்கள் காரண்டி சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமா என்பதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

'இண்டர்னல் ஒயரிங் இன் ஹவுஸஸ்' தனிப்பட்ட ஏஜன்சிகளுக்கு ஒயர் பண்ண காண்டிராக்ட் கொடுக்கப்படுகிறது. அதிலே 'கன்சிடரபிள் டிலே' ஆகிறது. ஆகவே, டிப்பார்ட்மெண்ட் எடுத்து ஒயர் பண்ணிக் கொடுத்தால் நன்றாக இருக்கும். இதையும் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

[திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்] [18th July 1964

இருந்தால் கூட ஞாபகம் இருக்காது. லயனைப் போட்டு விட்டு
விளக்குப் போடவில்லை என்றால் மக்கள் மிகவும் வேதனை அடை
கிறார்கள். இது யாருடைய தவறு என்று தெரியவில்லை. பொது
வாக எனது தொகுதியில் சற்றேறக்குறைய 200 கிராமங்கள் இருக்
கின்றன. இந்த 200 கிராமங்களுக்குப் போன வருஷமே விஸ்தரிப்
புச் செய்யப் போவதாக அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள்.
இதுபற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்காக வேலூர்
சூப்பரின்டென்டெண்ட் எஞ்சினியருக்கு அனுப்பியிருக்கிறோம்
என்று சொன்னார்களே தவிர, அவர்கள் என்ன நடவடிக்கைகள்
எடுத்துக் கொண்டார்கள் என்று இதுவரை தெரியவில்லை. எப்படிச்
செய்தாலும் எங்களுக்கு மின்சாரம் தேவை. மற்ற பாசன வசதி
இல்லாத எங்கள் பகுதியில் கிணற்று நீரையே இரைத்துச் சாகுபடி
செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால் உடனடியாக மின்சார
போர்டார் இந்தப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்க ஏற்
பாடு செய்யவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிச்
செய்தாலன்றி உண்மையிலேயே என்னால் பாராட்ட முடியாது.
மற்றவர்களைப் போல நானும் பாராட்டிவிட்டுப் போய்விடலாம்.
ஆனால் இங்கேயுள்ள பத்திரிக்கைக்காரர்கள் "வானூர் தொகுதி
யைச் சேர்ந்தவரும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த
வருமான திரு. ஏ. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் மின்சார
போர்டு அறிக்கையைப் பாராட்டினார்கள்" என்று போட்டுவிட்
டால் நான் ஊர் போவதற்குள்ளாகவே என்னைக் கண்டித்து தந்தி
யும் தபாலும் வந்துவிடும். நான் என்னுடைய தொகுதிக்கே
போக முடியாது. ஆகவே தான் இதை ஆதரிக்க முடியாமல்
இருப்பதைப் பற்றி வருந்துகிறேன். குறிப்பாக நான் குறிப்பிட்ட
குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தக்க நடவடிக்கைகளை கனம்
அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுப்பதால் அவர்
களுக்கு எந்த அளவுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றன என்பதைப்
பற்றி எனக்கு முன்பு பேசியவர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள்.
அப்படிக் கொடுக்கும் போதும் புஞ்சை பயிரிடுகிறவர்களுக்குப்
பகலில் தேவையில்லை என்று சொல்லி புஞ்சைப் பயிர்களுக்கு
மட்டும் தண்ணீர் பாத்திக்கட்டி நீர் பாய்ச்சும் நிலைமை வருகிறது.
இரவு நேரத்தில் மின்சாரத்தைக் கொடுப்பதால் பாத்தி பாத்தி
யாகத் தண்ணீர் பாய்ச்சுவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விவ
சாயிகள் மாட்டுக் கொட்டகையிலும், களத்திலும் லைட் போட
வேண்டுமென்று சொன்னால் சிலர் அவசியம் என்று சொன்னார்கள்,
சிலர் தேவையில்லையென்று சொன்னார்கள். எங்கள் பகுதியைப்
பொறுத்த வரையில் சாமான்கள் வைத்துக் கொள்ளப் பயம்
ஒன்றும் இல்லை. சேலம் பகுதியில் விவசாயம் செய்யும் இடத்தில்
கொட்டகை போட்டுக் கொள்கிறார்கள். அந்த இடங்களில் விளக்கு
தேவை படுகிறது. ஆனால் எங்கள் பகுதியில் கிணற்றுக்குப்
பக்கத்திலும், கொட்டகையிலும் இரண்டு மூன்று லைட் போட
அனுமதித்தால் போதும்.



18th July 1964] [திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்]

விவசாயத்தைப் பற்றி மட்டும் சொல்லும்போது டிப்பார்ட்
மெண்டில் வேலை பார்க்கிறவர்களைப் பற்றியும் சிலவற்றைச்
சொல்லாமல் இருக்க முடியாது. சர்க்கார் சிப்பந்திகளுக்குக்
கொடுக்கிற சலுகைகளைக் கூட மின்சார போர்டார் தங்கள் சிப்பந்
திகளுக்குக் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். விஷப்
பாம்பு கடித்தால் கூட 10 அடி தூரம் சென்று மனிதன் உயிர்
விடலாம்; ஆனால் மின்சாரம் தாக்கினால் அந்த இடத்திலேயே
மனிதன் உயிரிழக்கிறான். அந்த நிலையிலுள்ள சிப்பந்திகளுக்கு
இந்தச் சர்க்கார் என்ன உத்தரவாதம் அளித்திருக்கிறது?
அங்குள்ள சில உத்தியோகஸ்தர்கள் 15 வருஷம், 20 வருஷம்
ஆகியும் கூட அவர்களுடைய வேலை ஊர்ஜிதம் செய்யப்படாமல்
இருக்கிறது. இதைப்பற்றி அமைச்சர் அவர்களும் அதிகாரிகளும்
சிந்தித்துக் குறைந்தது 10 வருஷம் உத்தியோகம் செய்த சிப்பந்தி
களை நிரந்தரமாக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அடுத்த ஆண்டாவது இந்த மின்சார போர்டு பட்ஜட்டை
நான் பாராட்டிப் பேச வாய்ப்பும் வழியும் செய்ய வேண்டுமென்று
கூறி இப்போது பாராட்ட முடியாமைக்கு வருத்தம் தெரிவித்து
எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கே. பொன்னையா:** கனம் துணைத் தலைவர் அவர்களே,
கனம் அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள மின்சார
போர்டு பட்ஜட்டை ஆதரித்து, ஒரு சில வார்த்தைகள் பேச
விரும்புகிறேன்.

நமது ராஜ்யத்தில் கடந்த மூன்று வருஷ காலமாகவே பருவ
மழை சரிவரப் பெய்யவில்லை. காடுகள் அழிக்கப்பட்டதால் மழை
பெய்யவில்லை என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். குந்தா
பிரதேசத்தில் நமது சர்க்கார் மரங்களை வளர்ப்பதற்கு ஏற்பாடு
செய்திருக்கிறார்கள். அதோடு பக்கத்தில் கேரளப் பகுதி
இருப்பதால் கேரள அரசாங்கத்தைக் கோரி அங்கும் மரங்களை
வளர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். சீக்கிரத்தில் இந்த
நிலைமைக்குப் பரிகாரம் கண்டு மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச்
செய்ய வேண்டும்.

டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் போட்ட சில
தீர்மானங்களைப்பற்றிச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக்
கொள்கிறேன். பஞ்சாயத்துக்கள் ஸ்ட்ரீட் லைட் போட வேண்டு
மென்று கேட்டால் 'காரண்டி சர்டிபிகேட்' கேட்கிறார்கள்.
பஞ்சாயத்து என்றால் 'செமி கவர்ன்மெண்ட்' என்று சொல்லலாம்.
அமைச்சர் அவர்கள் இதுபற்றி கவனித்துப் பஞ்சாயத்துக்கள்
காரண்டி சர்டிபிகேட் கொடுக்க வேண்டுமா என்பதைப் பற்றிப்
பரிசீலிக்க வேண்டும்.

'இண்டர்னல் ஒயரிங் இன் ஹவுஸ்' தனிப்பட்ட ஏஜன்சி
களுக்கு ஒயர் பண்ண காண்டிராக்ட் கொடுக்கப்படுகிறது. அதிலே
'கன்சிடரபிள் டிலே' ஆகிறது. ஆகவே, டிப்பார்ட்மெண்ட்
எடுத்து ஒயர் பண்ணிக் கொடுத்தால் நன்றாக இருக்கும்.
இதையும் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும்.

[திரு. கே. பொன்னையன்] [18th July 1964

விவசாயிகளுக்கு இரவில் மின்சாரம் கொடுப்பதன் காரணமாக அவர்கள் மிகுந்த சிரமப்படுகிறார்கள். இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரை கொடுப்பதை மாற்றிப் பகலில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

தோட்டத்தில் பாரம் ஹவுசுக்கு மூன்று லைட் கொடுத்திருக்கிறார்கள். கிணற்றுக்கு லைட் வேண்டும், பக்கத்தில் சாலைக்கு லைட் வேண்டும். ஆகவே, அந்த மூன்றை ஐந்தாகப் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நூறு அடி என்று போட்டிருக்கும் ரெஸ்ட்ரிக்ஷனைத் தளர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ஆ. துரையரசன்: சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய தொழிற்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மின்சார இலாகா நிதிநிலை அறிக்கையின்மீது என் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். நஞ்சைமாவட்டத்தில் குறிப்பாகப் பட்டுக்கோட்டை, அறந்தாங்கி வட்டாரம் ஒரத்தநாடு உள்ளிட்ட பகுதிகளில் மற்றப் பகுதிகளில் செய்யப்படுவதுபோல் துரிதமாக மின்சார விஸ்தரிப்பு வேலை நடைபெறவில்லை. ஒரு வேளை இதற்குக் காரணம் அமைச்சர் அவர்கள் எங்களுடைய பகுதியைச் சார்ந்தவர்களாக இருப்பதால் எங்கே மற்ற உறுப்பினர்கள் தன்னிடம் குறைப்பட்டுக் கொள்வார்களோ என்று கருதி வேலைகள் துரிதமாக நடக்காமல் இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்களோ என்று ஐயப்படும் நிலையிலே அந்தப் பகுதி மக்கள் இருக்கிறார்கள். அந்தப் பகுதியிலுள்ளவர்களில் 80 சதவிகிதம் பேர் புஞ்சைப் பயிர் செய்யக்கூடியவர்கள்; கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் செய்யக்கூடியவர்கள். நாம் நெருக்கடி நிலைமைகளை ஆராய்ந்து விவசாயத் துறையிலே திட்டங்களை அதிவேகமாகத் தீட்டிக் கொண்டிருக்கிறோம். ஆகவே, விவசாயத்திற்கு மின்சாரம் கொடுப்பதில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ளக் கடமைப்படுருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் அறந்தாங்கி ஆவுடையார்கோயில் பகுதிகளில் 108 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பன்னிரண்டு நகரங்களுக்கு மட்டுந்தான் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எங்கிருந்து மின்சாரம் எடுத்துச் செல்லப்படுகிறதோ அந்த வழியில் உள்ள கிராமங்களுக்கு மட்டுந்தான் மின்சாரம் தரப்பட்டிருக்கிறது. அந்தச் சாலையோரக் கிராமங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. ஒரே பஞ்சாயத்து போர்டில் இரண்டு தெருக்களுக்கு விளக்குப் போடப்பட்டு ஒரு தெருவிற்குப் போடப்படவில்லை. குறிப்பாக, சுப்பிரமணியபுரம் பஞ்சாயத்தில் கூகனூர், சித்தகன்னி ஆக இரண்டு கிராமத்திற்கு மின்சாரம் தரப்படவில்லை. இதைக் குறித்தும் அமைச்சர் அவர்களிடம் நேரில் விண்ணப்பம் தந்தேன். அந்த இலாகாவிலிருந்து அது பற்றிக் கவனிக்கப்படும் என்று பதில் கொடுத்திருக்கிறார்களே



18th July 1964] [திரு. ஆ. துரையரசன்]

தவிர, வேலை துவக்கப்படவில்லை. பல பஞ்சாயத்துக்களுக்கு நிதி வசதி போதவில்லை. அதன் காரணமாக அவர்கள் அந்த வேலையை எடுத்துக் கொள்ள முடியவில்லை. அவ்வாறு நிதி வசதி போதாத இடங்களுக்குத் தனிச் சலுகை கொடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, பழங்குடி சமூகத்தினர் வாழும் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிப்பதில் சலுகை அளிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. என்னுடைய வட்டாரத்தைப் பொறுத்த வரை எந்தப் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த கிராமங்களுக்கும், காலனிகளுக்கும் இந்த மின்சார வசதி செய்து கொடுக்கப்படவில்லை. பல கிராமங்களில் பணம் கட்டுவதற்கு வசதியுள்ள 11-30 a.m.
பஞ்சாயத்து போர்டுகள் தயாராக இருக்கின்றன. ஆனால் ஒருசில பஞ்சாயத்துத் தலைவர்கள் ஏதாவது காரணங்களைக் காட்டி பஞ்சாயத்துத் தீர்மானங்களைப் போட மறுத்துக் கொண்டிருப்பதாகவும் புகார்கள் வருகின்றன. அவை கவனிக்கப்பட வேண்டும். அந்த வட்டாரத்தில் மீனவர்கள் அதிகமாக இருப்பதால், அவர்களுக்கு மின்சாரம் தர நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்கள் மீன்களைப் பதப்படுத்தி தொழில் நடத்த மின்சாரம் தேவைப்படுகிறது. ஆகவே அவர்களுடைய தொழிலை நல்ல முறையில் பாதுகாத்துக் கொள்வதற்குத் தகுந்த முறையில் இந்த உதவியை செய்து கொடுக்க வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆடம்பரத்திற்காகச் சினிமா, கேளிக்கை முதலியவைகளுக்கு மின்சாரத்தைக் குறைத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிகமாக மின்சாரத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதைத் துரிதமாக நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். மேலும், என்னுடைய பகுதியில் இருக்கின்ற 600 கிராமங்களுக்கு மின்சார வசதி தரப்பட வேண்டும். இதை உடனடியாக விஸ்தரித்து செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதில் பணிபுரிகின்றவர்களிடம் ஏன் காலதாமதம் ஆகிறது என்று கேட்டால், ஒரு பக்கத்தில் மெட்டிரியல்ஸ் கிடைப்பதில்லை என்று சொல்லுகிறார்கள், இன்னொரு பக்கத்தில் இப்போது நிது வசதிக்கு ஏற்றவாறு வேலைகளைக் குறைக்க வேண்டியிருக்கிறது என்று உத்தரவிட்டிருப்பதாக சொல்கிறார்கள். மேலும் செய்கின்ற வேலைகளிலும் பல குறைபாடுகள் இருப்பதாக குறை சொல்லுகிறார்கள். போஸ்ட்-கள் நிறுவும்போதும், மற்ற வேலைகள் செய்யும்போது, சிமின்ட் கலவைகள் எல்லாம் சரியான முறையில் செய்வதில்லை என்றும், ஏராளமாக குறைகள் இருந்துக் கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி மேல்மட்டத்தில் இருக்கின்றவர்கள் விசாரணை செய்வதற்கு உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக மின்சார இலாகா நிர்வாகத்தைப் பற்றி பாராட்டினாலும், எங்கள் கட்சியிலுள்ள திரு. பூவ கிருஷ்ணன் அவர்கள் சொன்னதுபோல், கீழ் மட்டத்தில் இருக்கின்ற பணியாளர்களுக்கு வேலை உத்தரவாதம் செய்யப்படாமல் இருக்கிறது, ஒரு சிலருக்கு அதிகப்படியான அளவு சர்வீஸ் இருந்தும், பிரமோஷன் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. இதை

யெல்லாம் கவனித்து, அவர்களுக்கு தக்க பிரமோஷன் கொடுக்க வேண்டும், வேலை உத்தரவாதம் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக பட்டுக்கோட்டை, அரந்தாங்கி, ஓரத்தநாடு உட்பட எல்லா இடங்களுக்கும் விவசாயிகள் பயன்படக்கூடிய அளவில், மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, மின்சார போர்டாரின் 1964-65-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது எனது ஒருசில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்தமைக்காக எனது நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில், இந்த மாநிலம், மற்ற மாநிலங்களைவிட மிக விரைவாக முன்னேறி இருக்கிறது என்று சொன்னாலும்கூட, இந்த வேகம் நமது தேவைக்கு ஏற்ற அளவுக்கு முன்னேறியிருக்கிறதா என்று பார்க்கின்றபொழுது நிச்சயமாக நமது தேவைக்குத் தகுந்த அளவு மின்சாரம் உற்பத்தி செய்யப்படவில்லை. இன்னும் பற்றாக்குறையாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நம்மால் அறிந்துகொள்ள முடியும். உபரியாக வருகின்ற அளவுக்கு நம்முடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல நாம் கடமைப்பட்டிருக்கிறோம். பொதுவாக மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலும் முன்னேறியிருப்பதை நாம் பாராட்ட வேண்டியது என்றாலும் கூட, இந்தத் துறையில் இருக்கின்ற ஒரு சில குறைகளை நான் சுட்டிக்காட்ட இந்த சந்தர்ப்பத்தில் ஆசைப்படுகிறேன். பொதுவாக மின்சாரத்தை எடுத்துச் செல்லுகின்ற நேரத்திலும், விநியோகம் செய்கின்ற நேரத்திலும் சற்றேறக்குறைய 17 சதவிகிதம் விரையமாகிறது. உதாரணமாக 1957-58-ம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் 1,043 மில்லியன் வாட்ஸ், இதில் வினியோகம் செய்தது 860.2 மில்லியன் வாட்ஸ். விரயமானது 182.8 மில்லியன் வாட்ஸ், சற்றேறக்குறைய 17 சத விகிதம் விரயமாகியிருக்கிறது. இதைப்பற்றி நுணுக்க அறிஞர்களிடத்தில் கேட்கும்போது இவ்விதம் விரயமாகித்தான் தீரும், இதைத் தவிர்க்க முடியாது என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் மற்ற நாடுகளில் விரயமாகின்ற அளவிற்கும், நம்முடைய நாட்டில் விரயமாகின்ற அளவையும் கணக்கிட்டு, இதை குறைக்க முடியாதா என்பதைப்பற்றி நாம் பரிசீலனை செய்திருக்கிறோமா என்பதைப்பற்றி நான் அறிய விரும்புகிறேன். மேலும் கள்ளத்தனமாக ஏதாவது மின்சாரம் உபயோகிக்கப்படுகிறதா, எந்த விதத்தில் எல்லாம் மின்சாரம் விரயமாகிறது என்பதைப்பற்றி அவ்வப்போது, பொறுப்புள்ள அதிகாரிகள் திடீர் திடீரென்று சோதனை செய்து பார்க்க முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். கள்ளத்தனமாக மின்சாரத்தை உபயோகித்துக்கொண்டிருந்தால் நிச்சயமாக ஏராளமாக விரயம் ஏற்படத்தான் செய்யும். அதே நேரத்தில் டெக்னிக்கல் முறையில் இதை எந்த விதத்தில் குறைக்க முடியும் என்பதைப் பற்றியும் ஆலோசனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரக் கழகத்திற்குப் பொரு





ளாதாரக் கட்டுப்பாடு ஏற்பட்டு, பொருளாதார சீரழிவு ஏற்பட்டது. இதற்காக மின்சாரக் கழகம் கடன் எழுப்பியது, அதற்கு சர்க்கார் உத்தரவாதம் அளித்திருக்கிறது. நமது மாநில அரசு, மின்சாரக் கழகத்திற்கு முன்னால் இருந்த அசெட்டுகளை மாற்றுதல் செய்திருக்கிறது அவ்விதம் மாற்றுதல் செய்ததில் இன்னும் முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. இவ்விதம் கொடுக்கப்பட்டது கடனாகை கொடுக்கப்பட்டதா அல்லது தானமாகக் கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை. தானமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற ஒரு அபிப்பிராயமும் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலையில் சர்க்காருக்கு மின்சாரக் கழகம் 10 சதவிகிதம் வட்டியும் கொடுக்கிறது. இந்தப் பிரச்சினையின் மீது முடிவு ஏற்படாத நிலையில், மின்சாரக் கழகம் எழுப்பிய கடனுக்கு சர்க்கார் உத்தரவாதம் கொடுத்து இருக்கிறது. கடன் வாங்குவதைப்பற்றி மின்சாரக் கழகத்தின் சட்ட திட்டங்களில் அல்லது விதிமுறைகளில் ஒன்றும் சொல்லப்படவில்லை. இந்த நிலையில் மின்சாரக் கழகம் கடனை எழுப்பியிருக்கிறது. கடன் கொடுப்பதற்கு எந்தவிதமான விதி முறையும் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படியானால் சட்டத்தைத் திருத்துவதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், இந்த இலாகாவைப் பொறுத்தவரையில் பல விதிமுறைகள் இருக்கின்றன. சர்வீஸ் கனக்ஷன் பூர்த்தியாகிவிட்டால் மெயின்டனன்ஸ் அண்டு ஆப்ரேஷன் ஆரம்பித்துவிடவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1957-58 முதல் 1962-63 வரை 1 லட்சத்து 22 ஆயிரத்து 161 வேலைகள் நடைபெறுமல் (பெண்டிங்கில்) இருக்கின்றன. சர்வீஸ் வேலைகள் நடைபெறுமல் (53,762 வேலைகள் இருக்கின்றன. மெயின்டனஸ் அன்ட் ஆப்ரேஷன் வேலைகள் நடைபெறுமல் இருப்பது 69,339 வேலைகள். ஆனால் விதிமுறைகளில் சர்வீஸ் கனக்ஷன் வேலை முடிவடைந்த ஒரு வருடத்திற்குள் மெயின்டனன்ஸ் அன்ட் ஆப்ரேஷன் வேலை ஆரம்பிக்க வேண்டும் என்று விதிகளில் இருக்கிறது. ஆனால் ஐந்து ஆண்டுகளாக வேலை நடைபெறுமல் இருப்பது 1 லட்சத்து 22 ஆயிரம் வேலைகள் என்றால், விதிமுறைகளில் சொல்லப்பட்டிருப்பது எல்லாம் வெறும் ஏட்டுச் சுரைக்காய்தானா, இதற்காகப் போடப்பட்டிருக்கின்ற சட்டதிட்டங்கள் எல்லாம் காகிதப்பூதானா என்று தெரியவில்லை. இந்த வேலைகள் எல்லாம் ஏன் விதிமுறைகளின்படி பூர்த்தியாக்கப்படவில்லை என்பதை நான் முக்கியமாக அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதே சமயத்தில் நீர் மின்சாரத்தைப் பொறுத்தளவில், ஏராளமாக நாம் உற்பத்தி செய்கிறோம். பருவ மழை தவறிவிட்டால் நிச்சயமாக மின்சார வெட்டு ஏற்படுகிறது. நிச்சயமாக ஒவ்வொரு வருடமும் பருவ மழை தவறிவிடுகிறது. ஆகவே இனிமேல் நீர் மின்சாரத்தை நம்பியிருப்பதற்கில்லை. இதற்கிடையில் அனல் மின்சாரத்தை நெய்வேலியில் உற்பத்தி செய்கிறோம். அதோடு அணு மின்சாரத்தையும் தயாரிக்க வேண்டும். இதற்காக கல்பாக்கத்தில் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு

[திரு. எம். வி. கரிவேங்கடம்] [18th July 1964

விட்டன என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பூர்வாங்க வேலைகள் எல்லாம் எப்போது முடியும்? எப்போது இந்த அணு மின்சார நிலையம் ஏற்படுத்தப்படும், இதற்காக என்னென்ன துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப்பற்றி அறிந்து கொள்வதற்கு இந்த மன்றமும் ஆவலுடன் இருக்கிறது, நானும் ஆவலுடன் இருக்கிறேன். அதே சந்தர்ப்பத்தில் அனல் மின்சாரம், அணு மின்சாரம் இவைகளைத் தயாரிப்பதோடு, அலைகளின் மூலமாகவும் மின்சாரத்தைத் தயாரிக்க முடியுமா என்பதைப்பற்றி ஒரு சில லட்சம் ரூபாய்கள் செலவானாலும்—அலைகள் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்யமுடியுமா என்பதைப்பற்றி ஆராய்ச்சி நடத்தவேண்டும், கன்னியாகுமரியில் அலைகள் எல்லாம் மிக விசையாக அடிக்கின்றன. இவைகளின் மூலமாக மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்பதைப்பற்றி நாம் நிச்சயமாக ஆராயவேண்டும். அதே சந்தர்ப்பத்திலே ஹொகனெக்கல் நீர் மின்சாரத்தைப் பற்றி மதிப்புக்குரிய நமது அமைச்சர் மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார். அவர்கள் குறிப்பிட்டதில் இரண்டே இரண்டு வார்த்தைகள் எனக்குப் பிடித்திருந்தன. ஒன்று 'இக்கனமிக்' என்ற வார்த்தை; இன்னொன்று 'அட்ராக்டிவ்' என்ற வார்த்தை. சிக்கனமானது என்று குறிப்பிட்டிருக்கிறார். அதே சந்தர்ப்பத்தில் கவர்ச்சிகரமானது என்று குறிப்பிட்டிருக்கிறார். 58 கோடி ரூபாய் செலவிலே 800 மெ. வா. மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்பது சிக்கனமானது, கவர்ச்சிகரமானது என்று சொல்லியிருக்கிறார். அந்தத்திட்டம் சம்பந்தமாகப் பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார். அதே சந்தர்ப்பத்தில் இன்னொரு திட்டம்-மைசூர் அரசாங்கம் 1500 மெ. வா. உற்பத்தி செய்யும் திட்டத்தை அவர்கள் பகுதியில் அமைப்பதற்கு திட்டம் வைத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். 1500 மெ. வா. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்தை மைசூர் அரசாங்கம் நிறைவேற்றினால் நமது ஹொகனக்கல் திட்டம் இல்லையா என்ற கேள்வியை எழுப்ப வேண்டிய நிலையில், நான் இருக்கிறேன். அவர்கள் பகுதியில் 1500 மெ. வா. மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டத்திற்குப் பதில் நம் பகுதியாகவும் அவர்கள் பகுதியாகவும் உள்ள இந்தத் திட்டத்தை ஏன் நிறைவேற்ற முடியாது? அவர்கள் அந்தத் திட்டத்தை எடுத்து நடத்துவது இந்தத் திட்டத்திற்கு எப்படிக் குந்தமாக இருக்கும்? ஏன் கூட்டாக ஆலோசனை நடத்தி சுமுக முடிவுக்கு வந்து ஹொகனெக்கல் திட்டத்தைச் சிக்கனமான முறையில், கவர்ச்சியான முறையில் உள்ள திட்டத்தை 58 கோடி ரூபாய் செலவில் 800 மெ. வா. உற்பத்தி செய்யும் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றக் கூடாது என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதே சந்தர்ப்பத்தில் சென்ற ஆண்டு இந்த மன்றத்தில் நான் ஒரு கருத்து வெளியிட்டிருந்தேன். ஹொகனெக்கல்லில் காவிரியுடன் சின்னாறு என்ற ஆறு கலக்கிறது. அந்த ஆற்றுக்கு ஹொகனெக்கல் நீரைத் திருப்பி அல்லது சின்னாற்று நீரைத் தேக்கி



18th July 1964] [திரு. எம். வி. கரிவேங்கடம்]

நம் பகுதியிலே நீர் மின்சாரத் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று சொல்லியிருந்தேன். அது ஆராய்ச்சியில் இருப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. ஆராய்ச்சி உடனடியாகச் செய்யப்படவேண்டும். நம் பகுதியிலே உடனடியாக சின்னாற்றுக்குக் குறுக்கே ஒரு அணை கட்டி அதிலிருந்து நீர் மின்சாரத்தை நாம் உற்பத்தி செய்ய முடியும். அதே போல இப்போது கல்பாக்கத்திலேயே அணு மின்சார நிலையம் அமைப்பதற்குப் பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். அதே போல ஹொகனெக்கல் பகுதியில் அணு மின்சாரத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்று ஆராய்ச்சி நடந்திருக்கிறது. ஏற்கெனவே அகில இந்திய அணுக்கழகத்தார் இதைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். அப்படி ஒரு திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஹொகனெக்கல் நீர் மின்சாரம் அல்லாமல் அந்தப் பகுதியிலேயே அணுவிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதையும் ஆராய்ச்சி செய்து முடியுமானால் ஹொகனெக்கல் பகுதியில் நீர் மின்சாரத்திட்டத்தையும், அணுமின்சாரத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்தக் கழகத்தைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் பணியாற்றுகிறது. நிர்வாகத் துறையிலே கீழ் மட்டத்தில் பல ஊழல்கள் இருக்கின்றன; கால தாமதங்கள் இருக்கின்றன. அவைகளையும் தவிர்த்தால் நிச்சயமாக இந்தக் கழகம் செயல்படுவதில் ஒரு குறையும் இருக்காது. இந்தக் குறைகளையும் குறைக்க ஆற்றல் மிக்க தலைவர், அறிவு மிக்க தலைவர் நிச்சயமாக முற்படுவார் என்ற நம்பிக்கையிலே இந்தக் கழகத்தைப் பாராட்டி உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. ஆர். எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, நமது தமிழ் நாடானது எத்தனையோ வகைகளிலே முன்னேற்றம் கண்டிருக்கின்றது. ஏனைய மாநிலங்களில் நமது தமிழ் நாட்டைப் பற்றிப் பல சந்தர்ப்பங்களில் பேசி வருகிறார்கள். அத்தகைய முறைகளில் தமிழ் நாட்டில் அதிகப்படியான கிராமங்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்திருப்பது ஒன்று என்பதை யாரும் மறுக்கவில்லை; மறுக்கவும் முடியாது. உதாரணமாக டில்லிக்கு ரயிலில் செல்லும்போது பார்த்தால் பெரிய நகரங்களில் மாத்திரம் தான் மின்சார விளக்கு ஜொலிப்பதைப் பார்க்கலாம். ஆனால் சென்னையிலிருந்து நெல்லைக்குப் போகும்போது எங்கு பார்த்தாலும் மின்சார விளக்குகள் ஜொலிப்பதைப் பார்க்க முடிகிறது. அந்த அளவிற்கு நாடு மின்சாரத்தில் அபிவிருத்தி அடைந்திருக்கிறது என்று பெருமையோடு சொல்ல முடியும். அதற்கு நமது திறமையான சர்க்காரும் திறமையான என்ஜினியர்களும் காரணம் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. நமது நாட்டில் எத்தனை நதிகள் இருக்கின்றனவோ அந்த நதிகளிலெல்லாம் அணையைக் கட்டி நீரைத் தேக்கி இனிமேல் நீர் மின்சாரம் உற்பத்தி செய்ய இடமில்லாத அளவுக்குச் செய்திருக்கிற பெருமை நமது சர்க்காரைச் சாரும்; நமது அதிகாரிகளைச் சாரும் என்று பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இனிமேல் எந்த இடத்திலும் நதிகளைத் தேக்கி அணை கட்டி இந்த மாதிக் காரியம் செய்ய முடியாது என்ற காரணத்தினால், அனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்தி, அணு மின்சார நிலையத்தை ஏற்படுத்தி, மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தி வெட்டு என்பதே இல்லாது சமாளிக்க சக்தியும், ஆற்றலும். அறிவும் மிகுந்த அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்கிறார்கள் என்பதை மீண்டும் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

சமீபத்திலே ஒரு மின்சார வெட்டு வந்தது. அதைப்பற்றி ஏன் முன்னதாகச் சொல்லவில்லை என்று சிலர் குறைப்பட்டார்கள். எப்படிச் சொல்ல முடியும் என்று விளங்கவில்லை. பருவ மழை வருகிறது என்று அதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டிலே நாம் பெரும்பாலும் பருவ மழையை நம்பி வாழ்ந்து வருகிறோம். சமீபத்திலேயே வந்து விடும், பருவ மழை வந்து எப்படியாவது தண்ணீர் பெருகி விடும், இந்தக் கஷ்டம் இல்லாது போய்விடும் என்று அமைச்சரும் அதிகாரிகளும் எதிர் பார்த்துக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் இல்லை. அவர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள். தாமதம் ஆகிக்கொண்டு போனதால் சிறிது வெட்டு ஏற்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. அவர்கள் பட்ட கவலை, அவர்கள் பட்ட வருத்தம் எவ்வளவு என்று சொல்ல முடியாது. அவர்கள் மீது குறை சொல்லுவது நியாயம் ஆகாது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதோடு இப்போது அங்கு வேலை பார்க்கிற தொழிலாளிகளும் கடமையை உணர்ந்து செய்கிறார்கள். அவர்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். எந்த இடத்திற்குச் சென்றாலும் குந்தாவிற்கு மாற்றி விடாதீர்கள் என்று சொல்லுகிறார்கள். என்ன காரணம் என்றால் அங்கே குளிர் அதிகமாக இருக்கிறது, போதுமான பாதுகாப்பு இல்லை என்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் மின்சார போர்டாரும், அங்கு இருக்கிற அதிகாரிகளும் பார்த்து நிச்சயமாக அதற்குப் பரிகாரம் தேடுவார்கள் என்று நம்புகிறேன். அப்படிப்பட்ட கஷ்டமான இடங்களில் அதிகப்படி சம்பளம் கொடுத்து மேலும் வசதிகளைச் செய்து கொடுத்து, 'குந்தாவா? என்னைப் போடுங்கள்' என்று தொழிலாளிகளெல்லாம் கேட்கின்ற அளவுக்கு அதிகாரிகளும் சர்க்காரும் செய்யவேண்டும் என்பதை இந்த இடத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எங்கள் திருநெல்வேலியைப் பொறுத்த வரையில் திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார போர்டார் இருக்கிறார்கள். அவர்கள் லாபத்தை மாத்திரம் குறிக்கோளாகக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அப்படித்தான் இருக்க முடியும். எந்த ஊருக்குப் போட்டால் லாபகரமாக இருக்கும் என்ற கணக்கைத் தவிர, நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும், கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகத் தெரியவில்லை. நாடெங்கிலும் மின்சார அபிவிருத்தி





ஏற்படும்போது, இத்தகைய இரண்டொரு மின்சாரக் கம்பெனிகளையும் சர்க்காரே எடுத்துக்கொள்ள அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக இங்கே ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய பகுதியில் சுத்தமல்லி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு ஓவர்ஹெட் டாங்க் கட்டி மூன்று வருஷங்கள் ஆகின்றன. மின்சார கனக்ஷன் இல்லாமல், நல்ல தண்ணீர் குடிக்கலாம், குழாயைத் திருப்பி விட்டுத் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம். என்று எண்ணிக் கொண்டிருக்கிற மக்கள், மின்சார கனெக்ஷன் கிடைக்காத காரணத்தினால் இந்த வாய்ப்பு கிடைக்காது இருக்கிறார்கள். இதைக் கூடச் சர்க்கார் கவனத்திற்கு ஒன்றிரண்டு தடவை கொண்டு வந்திருக்கிறேன். இத்தகைய சில்லரைக் குறைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு அதிகப்படியாக மின்சாரம் கொடுத்தாலும் எல்லா இடங்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்று சொன்னார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை. வசதி உள்ளவர்கள் இருக்கிற எல்லா வீடுகளுக்கும் மின்சாரம் இருக்கிறது. அதிகமாக லாபம் கிடைக்க வேண்டும் என்ற காரணத்தைக் கொண்டும், அப்படியானால்தான் கன்சம்ப்ஷன் சார்ஜ் கிடைக்கும் என்ற எண்ணத்தோடு அந்தத் தெருவுக்கு மாத்திரம் கொடுத்துவிட்டு, ஏழைகள் வசிக்கும் பகுதியை விட்டு விடுகிறார்கள். அந்த மாதிரி உள்ள அநேக கிராமங்களை நான் சொல்ல முடியும். அத்திமேடு, வேலநத்தம் என்ற கிராமங்களில் என்னுடைய பகுதியில் அப்படி இருக்கிறது. அதை ஒரு கொள்கையாக வைத்துக்கொள்ளக் கூடாது. ஏழை எளியவர்களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லும் நேரத்தில், சோஷலிஸ சமுதாயத்தை அமைக்கப் போகிறோம் என்று சொல்லும் நிலையில், பணக்காரர்கள் இருக்கும் தெருக்களில் மாத்திரம் மின்சார விளக்குகள் ஜொலிக்கவும், ஏழைகள் வசிக்கக் கூடிய இடங்களிலும், ஹரிஜனங்கள் இருக்கக் கூடிய இடங்களிலே அவர்களுக்கு மின்சார விளக்குகள் இல்லாமலிருந்தால், இதுதானா சோஷலிஸம் என்று சொல்லும் தன்மையில் இருக்கிறது என்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதையும் கவனத்தில் எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிர்ஷ்டவசமாக நமது மாநில மின்சார போர்டு டெக்னிக்கல் அனுபவம் உள்ள அப்படிப்பட்ட சேர்மன் தலைமையில் நடந்து வருகிறது. நல்ல திறமையுடன் நடந்து வருகிறது. இந்த நிதி நிலை அறிக்கையில் நல்ல அம்சங்கள் இருக்கின்றன என்று பாராட்டி எனது பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. எஸ். முத்துலிங்கம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தமிழ் நாடு மின்சார போர்டின் 1964-65-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது நான் என்னுடைய தொகுதியில் உள்ள சில பல கருத்துக்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். வந்தவாசி தொகுதியில் இன்னும் அநேக கிராமங்

களுக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் அந்த கிராமங்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஹரிஜனப் பகுதிகளில், ஹரிஜன காலனிகள் இருக்கும் பகுதிகளில் மின்சாரம் அதிகமாக உபயோகப்படுத்துவது கிடையாது. கிராமங்களில் தான் உபயோகப்படுத்துகிறார்களே தவிர, ஹரிஜனக் காலனிகளில் இன்னும் அநேக கிராமங்களில் மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பதினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அது குறித்து அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நிறையக் குறைபாடுகளை என்னிடம் வந்து சொல்லுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் ஹரிஜனப் பகுதியிலுள்ள கிராமங்களில் மின்சாரம் உடனடியாக வழங்க உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெரும்பாலான கிராமங்களில் உள்ள விவசாய மக்களுக்கு பம்புசெட்டுகளுக்கு அக்ரிமெண்டுகள் உடனடியாக வழங்கப்படாமல் இருந்து வருகின்றன. அங்கெல்லாம் பம்பு செட்டுகள் பொருத்தினாலும் கூட, உடனடியாக அந்தப் பம்பு செட்டுகளுக்கு சர்வீஸ் கொடுக்கப்படாமல் இருந்து வருகிறது. அதிக நாள் 'டிலே' ஆகிக்கொண்டு வருகிறது, காலதாமதம் செய்கிறார்கள் என்ற புகார்கள் நிறைய இருந்து கொண்டு வருகின்றன. இப்படியெல்லாம் காலதாமதம் ஏற்படாமல் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுத்து, பம்புகள் செட்டுகளுக்கான எக்ரிமெண்டுகள் செய்யும் வகையிலும் சர்வீஸ் கொடுக்கும் வகையிலும், உடனடியாக டிபார்ட்மெண்டு அதிகாரிகளுக்குச் சிபார்சு செய்து நல்ல முறையில் கவனிக்க வழிவகைகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புறம்போக்கு நிலங்களில் பல வருஷங்களாகப் பயிரிட்டுக் கொண்டுவரும் விவசாயப் பெருங்குடி மக்கள் புறம்போக்கு நிலங்களில் கிணறுகளை வெட்டி பல ஆண்டுகளாக அவைகளிலிருந்து தண்ணீரை இறைத்து விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். அப்படி விவசாயம் செய்துகொண்டு வரும் கிணறுகளில் பம்பு செட்டுகளைப் பொருத்தி அவைகளிலிருந்து தண்ணீர் இறைத்து விவசாயம் செய்ய முற்பட்டால், அதற்குப் பல விதமான இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. காரணம் புஞ்சை நிலங்கள் அல்லது நஞ்சை நிலங்களிலுள்ள சர்க்கார் புறம்போக்கில் கிணறுகள் எடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு ஓனர்ஷிப் சர்டிபிகேட் வாங்குவதில் அவர்களுக்குக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அம்மாதிரியான நிலைமையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, அரசாங்கத்தார் அதை உடனடியாகக் கவனித்து கண்காணித்து, அதை ஆர்ஜிதம் செய்து, அந்த ஜாகாவில் உடனடியாக பம்புசெட்டுகள் பொருத்தி விவசாயம் செய்வதற்கான வழிவகைகள் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, விவசாயிகளுக்கு வழங்கப்படும் பம்புசெட்டு லோன்கள் குறித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பம்புசெட்டுகள் வாங்குவதற்கு அரசாங்கம் விவசாயிகளுக்குக் கடன் வழங்குகிறார்கள். மின்சார போர்டார் அனுமதி இல்லாமல், சர்டிபிகேட் இல்லாமல், பம்புசெட்டுகளுக்குக் கடன் சாங்ஷன் செய்யப்படுவதில்லை. அதிலே பலவிதமான தொல்லைகள் ஏற்படுகின்றன. அது குறித்து அந்தப் பகுதியிலுள்ள சூபர்வைசர்களிடம் போய் அந்த விவசாயப் பெருங்குடி மக்கள் கேட்டால், அந்த சர்டிபிகேட் வழங்குவதற்கு அதிகக் காலதாமதம் செய்து கொண்டு வருகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் பம்பு செட்டுகளுக்கு அப்ளிகேஷன் செய்து கொண்டிருந்தாலும் கூட, காலாகாலத்தில் அவர்களுக்குப் பம்புசெட்டுகள் கிடைக்காமல் இருப்பதால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். அம்மாதிரி இல்லாமல், சர்டிபிகேட்டுகளை மின்சார இலாகாவினர் உடனடியாக வழங்குவதற்கு ஏற்பாடு செய்து, அவர்கள் பம்புசெட்டுகளுக்கான கடன்களைக் காலாகாலத்தில் பெற்று விவசாயத்தைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் என்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

சில கிராமங்களில் மின் விளக்குகள் போட்டிருந்தும், அவை சரியானபடி ஒரு வாரம் கூட எரிவது கிடையாது. காரணம், பல்புகள் 'ப்யூஸ்' ஆகிவிடுகின்றன என்று அடிக்கடி ரிபோர்ட்டுகள் ஏற்படுகின்றன. இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் நல்ல பல்புகளை வாங்கி உபயோகப்படுத்தும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மின்சார இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இந்தத் தொழிலாள மக்களுக்கு அரசாங்கம் வீட்டு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ம. கமலநாதன்:** மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கும் மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். இங்கு பேச எண்ணம் ஏற்படுவதற்கான காரணமே, மின்சாரக் கழகத்தார் சென்ற ஆண்டு இங்கே அங்கத்தினர்கள் பேசியதைக் குறிப்பு எடுத்து, அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்ற ஒரு குறிப்புப் புத்தகத்தைச் சபையின் முன்னிலையில் வைத்துத்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கத்தினர்கள் சொல்லிய, பேசிய குறைகளின் பேரில் என்னென்ன முறையிலே நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள், கவனித்திருக்கிறார்கள் என்ற அளவுக்கு அவர்கள் குறிப்புக் கொடுத்திருக்கிறார்கள். பேசாத உறுப்பினர்களுடைய தொகுதிகளைப்பற்றிய பேசப்படாத குறைகளைக் கவனிப்பதில்லை என்ற அளவுக்குத் தான் கருதவேண்டியிருக்கிறது.

பொதுவாக எல்லா உறுப்பினர்களும் பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையிலே தெரு விளக்குகளைக் குறித்தும், விவசாயிகளுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பது குறித்தும் எடுத்துச் சொன்னார்கள். அதே குறையைத் தான் நானும் எடுத்துச் சொன்னாலும், என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும் தெரு விளக்குப் பிரச்னைதான் மிக அதிகமாகச் சொல்லப்படுகிறது. தெரு விளக்குப் பிரச்னையைப் பொறுத்தவரையில், டிபார்ட்மெண்டார் வரும்பொழுது மிக வேகமாக ஆசைகாட்டி, டெபாசிட்கள் வசூல் செய்வதும், எக்ரிமெண்டுகள் செய்வதும், மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதுமாக இருக்கிறார்கள். ஆனால், அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிற நேரத்தில் ஆண்டாண்டு காலமாகக் காலதாமதம் ஆகிக்கொண்டு வருகிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், எந்த கிராமத்திலும் சரி தெரு விளக்குகள் பிரச்னையைப்பற்றித் தான் மிக அதிகமாகச் சொல்லப்படுகிறது மின்சாரக் கனெக்ஷன் கொடுக்கிற இடங்களில் அதற்குரிய சாமான்களைக் கொண்டுவருவதில் கூட, சம்பந்தப்பட்ட விவசாயிகளே கொண்டுவர வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால், நியாயமாக அந்தப் பொருள்களை யெல்லாம் மின்சாரக் கழகமே எடுத்து வரவேண்டும் என்ற அளவுக்கும் சொல்லப்படுகிறது. அதற்குரிய தொகையையும் மின்சாரக் கழகம் அவர்களுக்குக் கொடுத்துவிடுவதாகவும் சொல்லப்படுகிறது. இது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை.

மின்சார இலாகாவினர் கிராமங்களுக்கு அதிகமான அளவில் மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்று சொன்ன போதிலும், எனது தொகுதியைப் பொறுத்தவரையில் அந்த அளவுக்குக் கொடுக்கப்படவில்லை, மிகவும் பின் தங்கியிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சேலத்தில் வட சேலம் மிகவும் பின்தங்கிய பகுதி என்பது இங்கு எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒரு விஷயம். அதிலும் கிருஷ்ணகிரி, ஹோசூர் போன்ற வட்டங்கள் மிகவும் பின்தங்கியிருக்கின்றன. விவசாயத்தைப் பொறுத்தவரையிலும் பின்தங்கியிருக்கிறது, அதே நேரத்தில் மின்சாரத்தைப் பொறுத்தவரையிலும் மிகவும் பின் தங்கியிருக்கிறது. கிருஷ்ணகிரி விவசாயத்தை நம்பியிருக்கும் ஒரு தாலூகாவாகும். அங்கே ஒரு எ.இ. அலுவலகம் இருந்தது. அது இப்பொழுது தர்மபுரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரியிலேயே நல்ல வசதி இருப்பதனால் அந்த அலுவலகத்தை மறுபடியும் கிருஷ்ணகிரிக்கே மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கிருஷ்ணகிரியில் இருப்பது தான் எல்லோருக்கும் வசதியாக இருக்கும்.

சமீபத்தில் மின்சாரக் கழகத்தைப்பற்றி ஒரு ஊழல் பேசிக் கொள்ளப்படுகிறது. அவர்கள் சமீபத்தில் ரூபாய் 2½ லட்சத்திற்கு ஒரு நிலத்தை வாங்கினார்களாம். அது மின்சார போர்டுக்கு எந்த வகையிலும் உபயோகப்படாது என்று சொல்லப்படுகிறது. அப்படி வாங்கப்பட்ட நிலம் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து வாங்கப்பட்டது என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கு அந்த நிலம் எப்படிக் கிடைத்தது என்று சொல்லப்படுகிறது என்றால், அவர்கள் அரசாங்கத்திலிருந்து அடமானமாகப் பெற்ற அந்தப் புறம்போக்கு நிலத்தை ரூ. 2½ லட்சத்திற்கு மின்சார போர்டுக்கு விற்றுத் தனியாக லாபம் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது எவ்வளவு தூரம் உண்மை என்று சரியான தகவல் கிடைக்கவில்லை. இருந்தாலும், மின்சாரக் கழகத்தைப்பற்றி இம்மாதிரி ஊழல் நடந்திருப்பதாகப் பேசப்படுகிறது. அதற்கு அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் தருவார்கள் என்று நம்புகிறேன்.





**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்கே சந்தேகமாயிருப்பதுபற்றி ஏன் சொல்லுகிறார்கள்?

**திரு. ம. கமலநாதன்:** The Hon. Minister can explain.

சீஃப் எஞ்சியர் (கன்ஸ்டிரக்ஷன்) இடமானது இரண்டு ஆண்டு காலமாகக் காலியாக இருக்கிறது. அதற்குக் காரணம் என்ன என்று தெரியவில்லை. அதற்கும் அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன் 12-00 noon.

* SRI S. NANJUNDA ROW: Mr. Deputy Speaker, Sir, I do not wish to speak for a long time. I just want to point out one or two problems that are facing both the Electricity Board and the villagers. I want to confine my observations only to the extension of electricity to rural areas. Take for example my own constituency, Vedasandur. Nearly three-fourth of the constituency has been coverd during the last 5 years and the people there are very thankful and grateful to the Electricity Board. But still some of the schemes which have been sanctioned two years ago, have not been executed. Of course, I am not saying that the Electricity Board is responsible for this delay but still they may be responsible in a remote way. I wish to point out here that the villagers are also responsible for this delay. They are not co-operating with the Electricity Board. They do not give the work-load. They do not fulfil agreement and so on. Therefore, delays have occurred and they do not realise their responsibility. They should also co-operate with the Electricity Board so far as the village electrification is concerned so that the Electricity Board can give much more quicker service. Still I wish to make a request to the Government to instruct the Electricity Board to execute the work within three months after the scheme has been sanctioned. If such a target is always adhered to, then it would be beneficial both to the Board and the concerned people.

Then, I want to point out one other thing. The delay is due to the entrusting of such execution of the work in rural areas to certain private contractors. I think, when the State believes in nationalisation, in co-operative efforts like forming co-operative societies and such other things, it is not advisable to give labour contracts to private contractors. I do not know why it has been

given to private contractors. So far as the rural electrification work is concerned, it should be entrusted to labour co-operative societies functioning anywhere in the district and the services of those electricity workers who have experience in the rural electrification work should join such co-operative societies and should be entrusted with such work. By saying this, I am not finding fault with the Electricity Board. But if the work is entrusted to a private contractor, he would try to sell his own motors, etc., to the villagers. Until the villagers come forward to purchase motors and pumpsets from him, he will not execute the work in time and also properly. So, I make a request to the Government to see that hereafter the village electrification work is entrusted to labour co-operative societies and not to the private contractors.

Then, I wish to refer to another matter. In the villages, hitherto the people were living in a bullock-cart economy but now their attitude has changed and these people do not know anything about electricity, the use of electric motors and pumpsets. So if anything goes wrong, they have to go out in search of an electrician and bring him. This causes a lot of delay and an agriculturist who has installed a pumpset or a motor is subjected to a lot of misery. Servicing and maintenance are unknown to him. So, I request the Government to introduce a special scheme under which every village would have one trained expert who knows how to deal with electric motors and pumpsets and such young men can do miracles. It will also solve the unemployment problem among the educated youths. If he is given training for six months, he can do a lot of repair work to motors and pumpsets. As an expert on the spot, he can be of great service to the villagers. So, I request the Government to execute such a scheme of training youths for helping agriculturists who are using electricity for agricultural purposes. With these words, I conclude my speech.

* **திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் உதவி சபா நாயகர் அவர்களே, மின்சார போர்டின் நிதி நிலை அறிக்கையை வரவேற்றுச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நமது மின்சார போர்டானது எல்லா ஊர்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்திருப்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். விவசாயத்திற்கும், மற்றும் வீடுகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் சென்ற ஜூன் மாதத்தில் மேட்டூர் பகுதியில் தண்ணீர் இல்லாமல் போனதால், 15 நாட்களுக்கு இரவு நேரத்தில் கரண்ட் சப்ளை செய்யப்பட்டது. என்னைப் பார்த்து ஒரு அங்கத் தினர் கேட்டார் "என்ன ஐயா, இரவு நேரத்தில் கரண்டு கொடுத் தால் எப்படி விவசாயம் செய்ய முடியும் ?" என்று. அதற்கு நான், "மரங்கள் இருந்தாலும், பூ பூக்க வேண்டும், காய் காய்க்க வேண்டும், பழம் ஆகிறபொழுது கல் எடுத்துப் போட்டால் தான் பழம் சாப்பிட முடியும்" என்று சொன்னேன். "அப்படி என்ன ஐயா, மழையே பெய்யாமல் போய்விட்டதா" என்று கேட்டார். "வானம் கருக்கட்டி, மஞ்சி ஓட வேண்டும், இல்லாவிட்டால் எப்படி மழை பெய்யும், அதற்கும் பருவம் இருக்கிறது, மாசி,



பங்குனி, சித்திரை மாதங்களில் மழை பெய்யாது" என்று சொன்னேன். கார்த்திகை மாதத்திலே இடி இடித்துப் பெய்து விட்டால் முதல் பகுதியில் மழை இல்லாமல் போய்விடும், பிற்பகுதியில்தான் பெய்யும். குடும்பப் பெண்களுக்குக் கூட பருவம் ஆகாமல் கலியாணம் செய்தால், எப்படி குடும்பம் விருத்தி அடையும்? அதைப் போலப் பருவ மழை பெய்தால்தான் மின்சார வசதி பெருகும். அதற்குப் பிறகு 10 நாட்கள் கழித்து மேட்டூருக்குத் தண்ணீர் வந்து, கரண்டும் வந்துவிட்டது. நான் சொன்னது நிஜமாக ஆகிவிட்டதே" என்று சொன்னார்.

அடுத்தபடியாக எனது தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சேலம் ஜில்லாவில் ஏற்காடுத் தொகுதி யில் கிணறுகள் கிடையாது. ரோடுகளுக்கும், வீதிகளுக்கும் தான் மின்சார வசதி செய்ய வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். ஏற்காடு டவுனுக்கு மின்சார வசதி இருக்கிறது. நகருக்கு ஏழு மைலுக்கு அப்பால் சேர்வராயன் கோவில் இருக்கிறது. சுவாமி கோவிலுக்கு இரண்டு பர்லாங் தூரம் ரோடு போகிறது. சுவாமி சேவித்து வருவதற்கு அங்கே ஒருசில போஸ்டுகள் நட்டு, விளக்கு கள் போட்டுக் கொடுத்தால், சுவாமி சேவித்து வருபவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு கூட என் தொகுதியில் நாலு கிராமங்களுக்கு பம்பு செட்டு வைக்க அந்தக் கிராம மக்கள் பம்பு செட்டு வாங்கி 1½ வருஷம் ஆகிறது. ஆனால் இன்னும் மின்சார வசதி கொடுக்க ஆர்டர் ஆகவில்லை. நெடும்பட்டி, பூமியம்பட்டி, சாந்தப்பட்டி முதலிய கிராமங்களுக்கு மின்சார வசதி வரவில்லை. அதனால் ஜனங்கள் ரொம்ப வருத்தப் படுகிறார்கள். அங்கே உடனடியாக மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஓலஊர் தாலுகாவில் சேர்வராயன் மலைப் பகுதியில் உள்ள குடும்பம் பட்டி கிராமம் மலை ஜாதி இருக்கும் ஒரு கிராமம். அங்கே மழை பெய்தால் வெள்ளம் வந்து பயிர்களை அழித்து விடுகிறது. ஆகவே அங்கே ஒரு ஓடையாகக் கட்டி வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்படி ஒரு ஓடை கட்டித் தண்ணீ ரைத் தேக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கலெக்ட ருக்கும் அங்கே ராமசாமி கவுண்டர் என்று இருக்கிறார் அவருக்கும் எனக்கும் கூட அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் எந்தவித மான முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஆகவே உடனடியாக ஓடையை அமைத்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். பனைமரத்துப்பட்டியில் இருக்கின்ற பகுதியில் பிடாரி அம்மன் கோவில் இருக்கிறது. அங்கே 15 நாளைக் குத் திருவிழா நடந்து ஜனங்கள் வருகிறார்கள். அந்தக் கிராமத் தில் இருந்து 2 பர்லாங் தூரத்தில் ரோடு இருக்கிறது. இரவு 10 மணி வரையில் மக்கள் கூடியிருக்கிறார்கள். அங்கேயும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகின்றேன். கோணமடுகு, விரால்நத்தம் முதலிய கிராமங்களில் 42 கிணறுகளுக்கு கனெக்ஷன் கொடுக்க ஆர்டர் செய்யப்பட்டிருக்கிறது ; அங்கே 15 கிணறுகள் புதிதாக

[திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர்] [18th July 1964

வெட்டியிருக்கிறார்கள். இவற்றிற்கும் 42 கிணறுகளோடு சேர்த்து மின்சாரம் கொடுத்தால் விவசாயம் செய்ய வசதியாக இருக்கும். இன்னும் தும்பல்பட்டி, கம்மாளப்பட்டி முதலிய கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டும். கொஞ்சம் வேலை செய்து இருக்கிறார்கள். சர்வீஸ் கொடுக்கவில்லை. அதையும் முடித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் கொடுத்த சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மின்சாரக் கழகத்தின் செயல் முறையும் நடைமுறையும் திருப்தியாக இருக்கிறது என்று முதலிலேயே சொல்லக் கடமைப் பட்டு இருக்கிறேன். குறைகள் இல்லாமல் எந்த ஒரு துறையுமே இருக்க முடியாது. ஆகவே இத் துறையிலும் சில குறையாடுகள் நிரம்பி இருக்கின்றன என்பதை நான் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால் அதனுடைய அமைப்பு, பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், பெரும்பாலான மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அதன் தரமும், பலனும் நிரம்பிய தன்மையை நான் காண்கிறேன். பிற மாநிலங்களில் கொடுத்த தொகையைச் செலவழிக்க முடியாத நிலை இருக்கும் பொழுது, இங்கே எவ்வளவு பணம் இருந்தாலும் செலவழிக்க முடியும் என்ற ஒரு தீவிர நிலை இருப்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

அமைச்சர் அவர்களுடைய உரையில் தாப்பட்டு இருக்கின்ற கருத்துக்களும், கருத்துக்களை நமக்கு எல்லாம் புரிய வைக்க உதவு கின்ற விளக்கங்களும், விளக்கப்படங்களும் முறையாக அச்சிடப் பட்டிருக்கின்றன. ஆனால் அந்த விளக்கங்கள் எல்லாம், விளக்கப் படங்கள் எல்லாம் 12 மாநிலங்களோடு ஒப்பிட்டு நம் நிலையின் சிறப்பைக் காட்டுகின்ற அளவில் அமைந்திருக்கின்றன. ஆனால் பிற மாநிலங்களின் நிலை இங்கே காட்டப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். பிற மாநிலங்கள் பற்றிக் காட்டப்படாததால் நம் மாநிலம் தரத்திலோ அல்லது வளத்திலோ அந்த மாநிலங்களிலும் குறைந்து விட்டது என்று நான் சொல்லுவதாக அர்த்தம் அல்ல. ஆனால் அப்படி எண்ண ஏன் இடம் கொடுக்க வேண்டும், என்பதுதான் இங்கே எழும் வினா. பெரிய மாநிலங்கள், உத்தரப் பிரதேசம் போன்றவை மட்டமாக இருக்கலாம், அல்லது உயர்வாக இருக்கலாம். ஆனால் பிற அந்த மாநிலங்களினுடைய நிலைமையையும் ஏன் கொடுக்கப்பெறவில்லை? உத்தரப் பிரதேசத்தினுடைய புள்ளி விவரங்கள், விளக்கங்கள் கிடைக்காமல் இருந்து இருக்கலாம். அவற்றையெல்லாம் சபைக் குத் தெளிவு படுத்த வேண்டியது கனம் அமைச்சர் அவர்களுடைய உரிமையோடு கூடிய கடமை ஆகும் என்பதை நான் புலப்படுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். பிற மாநிலங்களில் முதலீட்டுச் செலவுகள் என்ன, பிற மாநிலங்களின் வருமானம் என்ன, பிற மாநிலங்களின் நிகர லாபம் என்ன என்பனவற்றையெல்லாம் நமக்குக் காட்டுகின்ற முறையில் செய்திருக்கலாம். பிற மாநிலங் களிலே மின்சார சக்தியின் விற்பனை விலை விகிதாசாரம் என்ன? என்பதைக் காட்டி அதோடு நம் மாநிலத்தின் விகிதாசாரம்



18th July 1964] [திரு. சா. கணேசன்]

எவ்வளவு, அதிலிருந்து இது எவ்வளவு மாறுபடுகிறது. நம் மாநிலம் எத்தனை பிற மாநிலங்களைவிடக் குறைந்திருக்கிறது. அல்லது உயர்ந்திருக்கிறது என்பனவற்றையெல்லாம் கொடுத்திருந் தால் அதை ஒப்பு நோக்கி உயர்வைக் காண்பது சாத்தியமாக இருக்கும் என்பதைச்சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். இந்த விஷயங்கள் எல்லாம் கிடைக்குமானால் தான் நமக்குக் கிடைத் திருக்கிற சுமார் 4.6 சதவிகிதம் லாபம் எவ்வளவு சிறப்பு என்று கணிக்க முடியும். மற்ற மாநிலங்களைவிட நம் மாநில விற்பனை விகிதாசாரம் கூடியிருந்து இந்த சதமானம் வந்திருந்தால் பெருமைப்படக் கூடியது அல்ல. குறைந்திருந்தால் இந்த லாபம் பெருமைப்படக்கூடியது என்று கொள்ளலாம். அது எப்படி இருக்கலாம் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அப்படியிருக்கு மானால் இந்தத் துறையை இன்னும் மனப்பூர்வமாகப் பாராட்ட வாய்ப்பும் அதற்கோர் ஆதாரப் பூர்வமான பிடிபாடும் இருக்கும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட எல்லா விபர விளக்கங்களும் கிடைக்கத் தக்க நிலையிலே இதைத் தயாரித்திருந் தால் பயனுடையதாக இருந்திருக்கும். இனியாவது அந்த விளக்கங்களை நமக்குக் கிடைக்கும்படியாகச் செய்ய வசதி உண்டா? வசதி இருந்தால் அதைக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்ளு கின்றேன்.

இனி, திருச்சிராப்பள்ளிக்கும் சேலத்திற்கும் இடைப்பட்ட "கொல்லிமலைத் திட்டம்" என்ற ஒன்று இருக்கிறதே, அது கிட்டத்தட்ட ஆய்வுகளெல்லாம் செய்யப்பெற்று, நிறைவேறி ஆனால், பணி தொடங்கப்படாமல் இருக்கின்ற நிலைமை நமக்குத் தெரியும். அந்தப் பணி தொடங்கப்படுமானால், பிரமாதமாக மின்சாரங்கள் கிடைத்துவிடும் என்று நான் சொல்ல இல்லை. அங்கிருந்து கிடைக்கின்ற மின்சாரம் ஒரு ஜில்லாவின் தேவையை யாவது பூர்த்தி செய்யக் கூடியதாக அமையலாம். இருக்கின்ற வாய்ப்புக்களைப் பெருக்குவது நம்முடைய கடமையும் ஆகும். கேட்டால், இப்பொழுது எல்லாவற்றிற்கும் நம்முடைய அமைச்சர் கள் ஒரே ஒரு அஸ்திரத்தைப் பிரயோகிக்கத் தொடங்கி விடுகிறார் கள். எதற்கெடுத்தாலும், 'பணம் இல்லை', அல்லது 'அவசர நிலைமை' என்பதைச் சொல்வார்கள். அதை நான் தவறு என்று சொல்ல இல்லை; மறுக்கவும் இல்லை. எத்தனையோ துறைகளிலே செல்வம் வீணாகச் செல்லுகின்றபோது, இது மாதிரிப் பயனுடை யனவும், வருமானம் தரத்தக்கனவுமான துறைகளிலே கவனத்தைச் செலுத்துவது பயனுடையதாக இருக்காதா என்று தான் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இனி, நமக்கெல்லாம் தெரியும்—ஜூன் ஜூலை வந்து விட்டால் கல்யாணமே வைக்கக் கூடாது என்றுகூடப் பலர் எண்ண வேண்டிய நிலைமை வந்துவிடுகிறது. தாலி கட்டும் நேரத்தில் அணைந்துவிடுமோ என்று பயப்படக்கூடிய நிலைமை கிட்டத்தட்ட ஒழுங்காக, பின்னே நோக்கிப் பார்க்கின்றபோது, ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை தினங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக் கிறது.

[18th July 1964

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** பொதுவாகப் பகலிலே தாலி கட்டுகிறார்கள். இரவிலே கட்டுவது குறைவு.

**திரு. சா. கணேசன்:** கனம் அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும், பகலாக இருந்தாலும், பெரிய பந்தல் போட்டு, முற்றங்களை அடைத்து, பெரிய மாளிகையினுள்ளே இருக்கும்போது விளக்கு இல்லாமல் முடியாது என்பதை எத்தனையோ கல்யாணங்கள் செய்தும் பார்த்தும் இருக்கிற அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று திண்ணமாக நம்பி மேலே செல்கிறேன்.

இந்த நிலை நமக்குத் தெரிகிற, ஜூன் ஜூலையை ஒட்டி அந்தப் பருவ காலத்திலே . . . (கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்களின் குறுக்கீடு) பொதுவாக அவர்கள் சொல்வது உண்மையானாலும், ஜூலை முழுவதும் ஆடி என்று தள்ளிவிட முடியாது; ஜூலை முற்பாதி ஆனி; மற்ற பாதிதான் ஆடி.

இந்த நிலையிலே, நமக்கு உண்மை நிலையைப் புலப்படுத்திக் கொண்டு இருக்கிறது. இது ஏன் என்பதும் நமக்குத் தெரியும். யார் மீதும் குறை சொல்ல இல்லை. எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும், எவ்வளவு நல்ல எண்ணம் உடையவாக இருந்தாலும், எவ்வளவு யோக்கியராக இருந்தாலும், நீர் இல்லாமல் நீர் மின்சாரம் உற்பத்தி செய்துவிட முடியாது. ஆகவே, அங்கே தவறு ஏதும் இல்லை; பிழை ஏதும் இல்லை. ஆனால், நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடப்படாது. அந்தக் காலங்களிலே இப்படிப்பட்ட தடைகள் வருகின்றனவே, அவை ஏன் வருகின்றன என்பதை நாம் யோசிக்க வேண்டும்.

மழை பெய்வது கேவலம் மனிதனுக்காக மட்டும் அல்ல என்பதைத் தத்துவ நூல்களை உணர்ந்தவர்கள் நன்றாக அறிவார்கள். சிறப்பாக, மரங்களுக்காகவே மழை பொழிகிறது. விஞ்ஞான ரீதியிலே பார்த்தால், மரங்களிலே இருக்கும் ஆகர்ஷண சக்தியானது மேகத்தைத் தன்பால் ஈர்த்து மழையைப் பொழிவிக்கிறது. மெய்ஞ்ஞான ரீதியிலே பார்த்தாலும் விஞ்ஞான ரீதியாகப் பார்த்தாலும் மரம் மழைக்கு ஒரு அடிப்படைக் காரணமாக அமைகிறது என்ற உண்மையை மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

இந்த நிலையில், மழைக்கு ஆதாரமாக இருக்கும் மரங்கள் அடர்ந்த பெரிய மலைகளெல்லாம், மலைத் தொடர்களெல்லாம் இன்று வெறும் பாறைகளாக ஆக்கப்படுகின்றன. பல பெரிய மலைகளில் இருக்கும் வானளாவிய மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டு, வேர் இருந்தால் அதிலிருந்து முளைத்துவிடுமோ என்று அவற்றிலே ஆசிட்டைப் பொழிந்தோ, நெருப்பை இட்டோ கருக்கிவிட்டு, பிறகு அதிலே உழுது பயிர் செய்யத் துவங்கிவிடுகிறார்கள். இது ஒரு பெரிய பிழை ஆகும். இதனால், சிறப்பாக நமக்கு நீர் மின்சாரம் தரத்தக்க பகுதிகளுக்குத் தண்ணீரைத் தருகின்ற பகுதிகளிலே மழை பொழியாமல், நிற்கிறது; பருவ காலங்களிலும்



18th July 1964] [திரு. சா. கணேசன்]

கூட! கேவலம், எங்கள் இராமநாதபுரம் பகுதியிலிருக்கும் பொட்டல் காடுகளைக்கூட 'ரிசர்வ் ஃபாரஸ்ட்' என்று சொல்லி வேலியிட்டு மாடு மேயாதபடி கூடச் செய்கிறார்கள். 'பொட்டல் காடு' என்றால் 'ஃபாரஸ்ட்' என்று எப்படி வந்ததோ தெரியவில்லை. காடு' என்றால் ஆங்கிலத்தில் 'ஃபாரஸ்ட்' என்று மொழி பெயர்ந்து அதனால் வெறும் பொட்டல் காடுகளை எல்லாம் 'ரிசர்வ் ஃபாரஸ்ட்' என்று சொல்லி, முள்ளுக் கம்பி கட்டி வைத்திருக்கிறார்கள். இரண்டரை அடி மூன்று அடி உயரமேயுள்ள "பெரிய விருட்சங்கள்" வளர்ந்து கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் ரிசர்வ் பாரஸ்ட்டாக ஆக்கிவிட்டு, வானளாவிய மரங்கள் அடர்ந்த மலைகளையெல்லாம் தகர்த்துப் பாறைகளாக்கிப் பசுமையாக இருந்த இடங்களையெல்லாம் செம்மேனி ஆக்கியிருக்கும் நிலைமையைக் காண்கிறோம். இது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. அப்படி அக்கறை மேற்கொள்ள வேண்டிய கடமை இந்தத் துறை சம்பந்தப்பட்டது என்று சொல்கிறேன். வேறு துறையும் இதிலே இணைந்திருக்கிறதா என்பதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால், இந்தத் துறையைப் பாதிக்கிற பெரிய ஒன்று என்பதை மனத்திலே கொண்டால், இம்மாதிரி பெரிய மலைகளிலே இருக்கும் மரங்களெல்லாம் வெட்டப்படாமல் காக்கப்படுவதற்குரிய காரியங்களைச் செய்ய வேண்டும்; செய்தால்தான் நிரந்தரமான, மழையாலாய, பலனை நாம் பெற முடியும் என்பதை நாம் மனத்திலே கொள்ள வேண்டும். மரங்கள் வெட்டப்பட்டுப் பயிர் செய்யப்படுகிற இடங்களை மீட்டும் மரம் வளர்த்துக் காடாக்கிக் காக்க வேண்டியது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். மேலும் இப்படிப்பட்ட எதிர்பாராத நிலைமை வந்துவிடுமானால், அதைச் சமாளிப்பதற்காக, ஆங்காங்கே இயந்திரங்களை வைத்து, மின்சாரங்களை அது எந்தவித மின்சாரமாக இருந்தாலும் பெயரைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை--உற்பத்தி செய்து, அந்தந்தப் பகுதிகளைத் தன்னிறைவு உள்ளதாகச் செய்யக்கூடிய அளவுக்கு ஒரு பாதுகாப்பு அமைப்பாக அமையும்படியாகச் செய்ய வேண்டும்.

இந்த நீர் மின்சாரங்களெல்லாம் வருவதற்குமுன்பே, நமது நாட்டில் பல பிராந்தியங்களில், பல பகுதிகளில், பல பட்டணங்களில், இம்மாதிரி பல இயந்திர மின்சாரங்களின் மூலமாகத்தான் எவ்வளவோ தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்தது. சென்ற யுத்த காலத்திலே அத்தனை இயந்திரங்களும் யுத்தத்திற்காக என்று அரசாங்கம் பறித்துக்கொண்டு போய்விட்ட காரணத்தாலே இன்று அவை செயல்படும் நிலை நமக்கு இல்லை. இந்த நிலையை இனி மாற்ற வேண்டும்.

இனி, மற்றொரு கவர்ச்சிகரமான திட்டம். அதைப்பற்றி இப்பொழுது எதுவும் அரசாங்கத் துறையிலுள்ளவர்கள் உறுதியாகச் சொல்ல முடியுமா, முடியாதா என்பது எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்த வரையிலும்கூட, இதைச் செம்மையாக உணர்த்திவிடவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாது. அலை மோதலினால் இயந்திர விசிறிகளைச் சுழலச் செய்து, அதன் மூலம்

மின்சார உற்பத்தி செய்கின்ற முறை எந்த அளவுக்குச் சாத்தியம், அதனுடைய முதலீட்டுச் செலவு எவ்வளவு, அதனால் பெறக்கூடிய மின்சாரம் எவ்வளவு, அதிலே கிடைக்கின்ற லாப நஷ்டம் என்ன என்பனவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, அது முடியுமானால், அது பயனுள்ளதாக இருக்குமானால், லாபகரமாக இருக்குமானால், அது அற்புதமான காரியமாக இருக்கும். நமது தமிழ்நாட்டுக்கு நீளமான கடற்கரை உண்டு. அங்கே அவற்றைப் பயன்படுத்தலாம். இதையெல்லாம் சிந்திக்க வேண்டும். சிந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே நான் கருதுகிறேன். அந்த ஆராய்ச்சியில் கொஞ்சம் நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை. எத்தனையோ துறைகளில் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக நஷ்டம் சிறிது வந்தாலும் அதில் தவறு இல்லை என்ற உண்மைத் தத்துவத்தை, அந்த நன்மை வழியைக் கடைப்பிடித்துக்கொண்டு வருகிற நாம், இப்படி இடையூறுகள் வராமல் காப்பதற்காக ஏதோ சில லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டால். அதைப் பொருட்படுத்த வேண்டாம். அந்த நெறியிலே நின்று பல்வேறு இடங்களில் அனல் மின்சாரத் துறை அமைக்கப்படலாம். நீர் மின்சாரம் தடைப்படும்போதெல்லாம் அனல் மின்சாரத்தைக் கொடுக்கலாம். குவியல் முறை (சென்ட்ரலைசேஷன்) இருக்கிறதே, அது உதவி செய்வதாக இருக்க வேண்டுமேயன்றி உபத்திரவம் செய்வதாக இருந்தால் அதை முற்றிலும் அழித்து ஒழித்துத் தொலைக்க
12-30 noon வேண்டும். டிசென்றலைசேஷன் வேண்டும் என்று காந்தியடிகள் கதறிக்கொண்டு இருந்தார்கள், எல்லாத்துறையிலும். இது மாதிரி பலன் கிடைக்கிறபோது பல்வேறு பிராந்தியங்களுக்கும் பரவலாக கிடைக்கும்படியாக "டிசென்றலைஸ்" செய்வது மிகவும் அவசியமானதாகும். மின்சாரத்தை அந்தத் துறையில் விநியோகிப்பது மிக்க பயன் உடையதாக இருக்கும். எல்லாவற்றையும் சென்றலைஸ் பண்ணுவதனால் பல சங்கடங்கள் வருகின்றன என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அதே மாதிரி பரவலாக்குவதன் மூலம் நஷ்டம் இல்லாமல் லாபத்தைப் பெறுவதற்குரிய ஏராளமான அளவில் இன்னும் மின்சாரம் விநியோகம் ஆகிறது. ஆனால் இதை மனதில் கொள்ள வேண்டும் என்று, உதவி சபாநாயகர் அவர்களே உங்கள் மூலமாக, ஆட்சியாளருக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தத் துறையில் எவ்வளவுக்கு சிக்கனத்தைக் கையாளலாம் என்பதை ஆராய வேண்டும். வீண் விரயத்தைப் பற்றியும் சிக்கனத்தைப் பற்றியும் ஆராய்வதற்கு ஒரு கமிட்டி போடுவது நல்லதாக இருக்கும் என்பது என் அபிப்பிராயம். நான் சில இடங்களைப் பார்த்த அளவில் விரயம் அதிகம் என்றே உணருகிறேன். எனக்கும் இத்துறையில் சிறிது தொடர்பு இருந்த காரணத்தினால் கொஞ்சம் அனுபவம் உண்டு. சாதாரணமாக ஒரு என்ஜினியரும் ஒரு சூப்பிரவைசரும் இரண்டு லயன் மேன்களும் வேலை பார்த்த இடத்தில் இன்று லாரி, ஜீப், பெரிய எஞ்ஜினியர், சின்ன இஞ்சினியர் என்று இப்படிப் பெரிய அளவுக்குச் செலவாகிறது. அன்றிருந்த அளவுதான் இன்றும் மின்சாரம் விநியோம் ஆகிறது. ஆனால்



இப்போது இத்தனை ஆர்பாட்டங்களும் வீண் விரயமும் ஆகிறது என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும். முதலிலே விரயத்தை குறைத்தாலே பெரிய லாபம். ஆகவே இந்தப் பிரச்னையை அணுகி நுணுகி ஆய்ந்து, தேர்ந்து அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்குரிய நல்ல ஒரு குழுவை அமைக்க அரசாங்கம் முன் வர வேணடும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இனி டெம்பரரி கனெக்ஷன் கொடுப்பது என்றால் மூன் நாட்களில் இரண்டு நாளைக்கு முன் சொன்னால் போதும். உடனே கொடுத்து விடுவாாகள். அப்படியே கட்டின டெபாசிட் தொகையிலும் உபயோகப்படுத்திய மின்விசை சார்ஜ் போக பாக்கியை உடனே கொடுத்து விடுவார்கள். முன்பு 10 ரூபாய் டெபாசிட் கட்டிய அதே காரியத்திற்கு இப்பொழுது 50 ரூபாய், 100 ரூபாய் கட்ட வேண்டிய நிலை ஏறபட்டிருக்கிறது என்பதைப் பலரும் நன்றாக அறிவார்களா. ஆனால் தேவை பூர்த்தியான பிறகு மீட்டரை எடுத்துக் கொணடு போன உடனே டெபாசிட் தொகை திருப்பித் தருவது சென்ற கால முறை. இப்பொழுது ஓர் ஆண்டு காலத்திற்கு மேல் ஆனதற்கு ரசீதைக் கொண்டு வந்தே இசசபையில் முன்னொரு முறை காட்டினேன். இப்பொழுதும் பல மாதங்கள் ஆகின்றன, அந்தப் பணத்தைத் திரும்பப் பெறுகின்றதற்கு ஸ்தலத்தில் உள்ள அதிகாரிகளே மீட்டரை எடுத்துச் செல்லும் போது டெபாசிட் தொகையில் அவர்கள் உபயோகித்த கரண்ட் கட்டணம் போக பாக்கி உள்ள பணத்தைத் திருப்பிக் கொடுக்க அவர்கட்கு அதிகாரம் தருவதால் என்ன தவறுகள் ஏற்படக்கூடும்? அந்த ஸ்தல அதிகாரி பிழை செய்தால் அவர் மீது தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவோ விஷயத்தில் ஸ்தல அதிகாரிகளை நம்பி, மிகுந்த பொறுப்புகளை ஒப்படைத்திருக்கும் போது இந்த 50, 60 ரூபாயைத் திருப்பிக் கொடுப்பதில்தானா அவர்களை நாம் நம்பக் கூடாது? இப்படிச் செய்தால் டெபாசிட் தொகை உடனடியாக ரிபண்ட் ஆவதற்கு வாய்ப்பு ஏற்படும். அப்படி இல்லாத காரணத்தினால் இன்றைய தினம் நம்முடைய ஆட்சிக்கும், நாட்டுக்கும் எவ்வளவு கெட்ட பெயர் வருகிறது என்பதை நாம் மனதில் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

இனி அறிக்கையில் பார்க்கிறபொழுது சில மின்சாரக் கம்பெனிகள் கிராமங்களுக்குச் சர்க்கார் துறை விஸ்தரிப்பதைப்போல மின்சாரத்தை விஸ்தரிக்க வில்லை என்று காட்டப்பட்டிருக்கிறது. அது உண்மை. காரணம் என்ன? இன்றைய தினம் இவ்வாறு எத்தனை கம்பெனிகள் இருக்கின்றன? நூற்றுக்கணக்கான கம்பெனிகளை சர்க்கார் தன்மயமாக்கிக் கொண்டுவிட்ட பிறகு எட்டு கம்பெனிகளை விட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த எட்டு கம்பெனிகள் சர்க்கார் துறையைப் போல ஏன் விஸ்தரிக்கவில்லை? இந்தக் கம்பெனிகளைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் சிறிதும் பாரபட்சமின்றி பேசுகிறேன். உள்ளும் தெரியாது. வெளியிலும் தெரியாது. அந்தக் கம்பெனிகள் ஏன் விஸ்தரிக்கவில்லை?. பெரிய அளவில் விஸ்தரித்தால் நாளை சர்க்கார் அதை எடுத்துக் கொள்ளும்

போது தங்களுக்கு ஆன செலவுக்கு ஏற்றபடி நஷ்டஈடு கொடுக்க மாட்டார்களோ என்ற அச்சத்தால்தான் அவர்கள் விஸ்தரிக்கவில்லை. மேலும் டிரான்ஸ்மீட்டர்கள் பழுது அடைந்தாலும்கூட அதை மாற்றாமல் அப்படியே வைத்து ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பது என் அபிப்பிராயம். அல்லது வெறும் சுரண்டல் மனோபாவம் உள்ள நிலையிலே அப்படி இருக்க வேண்டும். ஆகவே இதை அவர்களுக்குத் தெளிவுபடுத்தி "ஒன்று நீங்கள் செம்மையாக எல்லாவற்றையும் செய்யுங்கள், புது இயந்திரங்களை அமைத்து வேண்டும். அல்லது பத்து வருஷத்திற்குள், இருபது வருஷத்திற்போது சரியான நஷ்டஈடு கொடுக்கிறோம்" என்று உறுதி அளிக்க வேண்டும். அல்லது பத்து வருஷத்திற்குள் இருபது வருஷத்திற்குள் அந்தக் கம்பெனிகளை நாங்கள் எடுத்துக் கொள்ளப்போவது இல்லை என்ற உறுதி மொழியையாவது கொடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் அவர்களாகவே சர்க்கார் துறையைப்போல விஸ்தரிப்புச் செய்ய முன்வரமாட்டார்கள். 100, 50 என்று பல கம்பெனிகளை தன்மயமாக்கிவிட்ட பிறகு இந்த 8 கம்பெனிகளை மட்டும் எதற்காக விட்டு வைத்திருக்க வேண்டும்? நான் முதலில் சொன்னவாறு செய்ய முடியாவிட்டால் உடனடியாக இந்த 8 கம்பெனிகளையும் சர்க்கார் தன்மயமாக்க வேண்டும். "தனியார் துறை மோசமாக நடக்கிறது" என்று எடுத்துக் காட்ட சாம்பிளாகவா விட்டு வைத்திருக்கிறார்கள்?

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** இந்தக் கம்பெனிகளும் கூட சர்க்காரிடமிருந்து 'பல்க்' காக மின்சாரத்தை வாங்கித்தான் வினியோகிக்கிறார்கள். ஜெனரேட்டர் வைத்து அவர்கள் உற்பத்தி செய்வது இல்லை.

**திரு. சா. கணேசன்:** அது எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் ஜெனரேட் பண்ணுகிறார்கள் என்று நான் சொல்லவில்லையே. அத் துறையில் எனக்குக் கொஞ்சம் அனுபவம் உண்டு என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு உள்ள கனம் அங்கத்தினரே இப்படிக் குறிப்பிடுவதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்றைய தினம் அவர்கள் தங்களிடம் உள்ள ஓட்டை உடைசல் டிரான்ஸ்மீட்டர்களைக்கூட மாற்றுவதற்கு முன்வரவில்லை என்றுதான் முன்பு சொன்னேன். அந்தக் கம்பெனிகள் தக்க முறையில் விஸ்தரிப்புச் செய்ய முன் வரும்படியான உத்திரவாதத்தை அளிக்க வேண்டும், அல்லது அந்தக் கம்பெனிகளையே சர்க்கார் தன்மயமாக்கிவிட வேண்டும் என்றுதான் நான் கருதுகிறேன். (திரு. ஆர். வி. சுவாமிநாதன்: தன்மயமாக்குவது உங்கள் கட்சிக்குப் பிடிக்காத கொள்கையாயிற்றே.) ஸ்ரீமான் சுவாமிநாதன் அவர்கள் எங்கள் கட்சிக்குப் பிடித்த கொள்கையா, பிடிக்காத கொள்கையா, உகந்த கொள்கையா, விரோதம் இல்லையா, என்கிற ஆராய்ச்சியில் இறங்குகிறார்கள். என்னுடைய கட்சிக் கொள்கைக்கு இது விரோதமா இல்லையா என்பது கேள்வி இல்லை. நான் பொதுவாக எப்பொழுதும் சொல்வேன். பொது விவகாரத்தை எடுத்துக் கொண்டால் மக்களுக்குப் பயன் உள்ளவற்றையே





ஆய்ந்து தேர்ந்து நன்மையை ஏற்றுத் தீமையைக் கடிகின்றபோது எனக்கும் சரி, எங்கள் கட்சிக்கும் சரி, கட்சி மனோபாவம் என்பதே கிடையாது என்பதை நான் சொல்லுகிறேன். அதற்கு மேல் இப்பொழுது இஞ்ச் கூடப் போகவில்லை. ஆனால் எல்லாம் பரவலாக இருக்க வேண்டும் என்பதை முதலிலேயே சொல்லி விட்டேன். பரவலாக இருக்கிறபோது, சில தவறுகள் வருகிறபோது அதை மாற்றக் கூடாது என்று சொல்லிக் கொண்டு இருப்பதால் பயன் ஒன்றும் இல்லை. இருக்கிற தவறுகளை எடுத்துக் காட்டி அவற்றைக் கடிகின்ற வழி என்ன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய தலையாய பணி எதிர்க்கட்சிக்காரர்களுக்கு உண்டு அதில் கட்சி மனோபாவத்திற்கே இடம் இல்லை. இந்த நிலையில் இவற்றையெல்லாம் ஆட்சியாளர் கவனத்திற்குக் கொண்டு வந்து என் உரையை முடித்துக் கொள்ளலாம் என்று இருக்கிறேன். சுருக்கமாகச் சொன்னால், மற்ற மாநிலங்களின் விற்பனை நிலை விவரம் நமக்கு வேண்டும். இந்த மலைகளில் எல்லாம் மரங்கள் வெட்டப்படுவது தடுக்கப்பட வேண்டும். சமீப காலத்தில், 10, 12 ஆண்டுகளில் மரங்கள் வெட்டப்பட்ட பிராந்தியங்களில் எல்லாம் மீண்டும் மரங்கள் வளர்க்கப்பட வேண்டும். உத்தியோகப் பெருக்கமும் விரயமும் இல்லாத நிலையிலே இந்தத் துறை செம்மைப்படுத்தப்பட வேண்டும். அதற்குரிய ஆய்வுக் கமிட்டி அமைக்கப்பட வேண்டும். டெம்பரரி கனெக்ஷன் கொடுப்பதற்குச் சங்கடம் இல்லாத முறையில் ஸ்தல அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும். நீரில்லா காரணத்தால் ஏற்படுகிற பற்றாக்குறையைப் போக்க அனல் மின் நிலையம் அல்லது வேறு வழிகளைக் கண்டுபிடித்து அதைச் செய்யவேண்டும். இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கும், அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு வந்து உரையை முடிக்கிறேன். வணக்கம்.

SRI R. V. SWAMINATHAN: Mr. Deputy Speaker, many hon. Members have, in the course of the discussion, referred to the various aspects of the matter relating to the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year 1964-65. I also want to refer to one or two matters concerning it, Sir, we have to congratulate the Government and also the Hon. Minister in charge of Electricity and the Chairman of the Electricity Board for the tremendous achievement that they have made so far as electricity is concerned. They have put our State on the map of India as the foremost State in the whole country as far as power development is concerned. But the power cut which was unknown to our State upto the year 1950 is causing anxiety to the people and also to the hon. Members of this House. The power cut was introduced, if I am correct, in the year 1950. Of course, this power cut is due to the failure of monsoon and nobody can be blamed for that. But we have to face this situation as such. Every year we are facing such a situation of the failure of the monsoon. In this connection, I want to point out one thing. Though we congratulate the Government on the progress that they

have made in the supply of electricity, they have not done the correct thing in one respect. In estimating their requirements, they have been very, very conservative. They should give due consideration to the preparation of proper estimates for power consupmtion. In the year 1950 their estimated demand was 98 M.W. Now in 1964, their estimated demand appears to be 630 M.W. Look at the vast difference between 98 M.W. and 630 M.W. It shows the tremendous and great achievement that we have made in the supply of electricity due to the execution of the First, Second and Third Five-Year Plans. But the Government, while making their estimates, should make an estimate based on their requirements. We are progressively developing and our industries have developed and therefore they should make an estimate according to their requirements.

So far as the hydro-electric projects are concerned, I think, we have exploited all the resources that are available to the State except perhaps the Hogenakal Project. Now we have to turn to the thermal power. Through the Neyveli Project, we are able to get some power. I think, the time has come when we have to increase the power supply through thermal stations so that we can reach the target of 1,000 M.W. What is the scope for achieving that target? Unless we concentrate on these things, we will not be able to cater to the needs of the vast developing industries and we will be facing difficulties later on. I know that the Hon. Minister himself is not happy over the imposition of power cut every year. So, to avoid such a situation, we must concentrate on increasing the power supply through the establishment of a number of thermal stations, apart from the Neyveli Project. Now there are two thermal stations, one in Madurai and another in Madras City. The thermal station at Madurai produces 14 M.W. of power and the one in the Madras City 60 M.W. They are not sufficient. We must have a thermal power station in each district and the Electricity Board should come forward to consider this aspect of the matter and find out a solution.

Sir, it is very gratifying to note that the Hon. Minister who had recently gone abroad, has come forward to make an experiment on the production of electricity by utilising tidal waves in the sea, as has been done in some foreign countries. We must have power at any cost and then only we can improve the economic position of the country.

The hon. Member, Sri Mathialagan, belonging to the Opposition Party, has expressed anxiety over the establishment of an atomic power station at Kalpakkam. But I really understand that the Planning Commission has given advance sanction to that project and so definitely we are going to have an atomic power station at Kalpakkam. My only plea to the Hon. Minister and also to the Government is that they should take up this scheme of establishing an atomic power station during the Fourth Plan period at any cost.



I also want to refer to one other matter. When the power cut is introduced, besides the difficulties that are caused to the public, the working class also have been put to greater difficulties. For instance, when the power cut was imposed this year, it was only the textile workers who were immediately affected by it. Of course, the managements have declared a lay-off and the workers have been paid half the wages. That is not sufficient. The workers depend on their monthly wages to maintain their families. Unfortunately, this year, the power cut was imposed at a time when they had to pay special fees and purchase books for their school-going children. Therefore, the Government should take some interest in the matter and safeguard the interests of the workers. The workers are not asking for extra benefits. They should be given some funds at their disposal either by way of loans by the management or from their provident fund accumulations. In this connection, I may inform the House that so far as the Madurai workers are concerned, I took up the matter with the management of Harvey Mills and asked them whether they would help the workers by way of giving loans from their provident funds. In the first instance, the management agreed to give loans from their provident fund accumulations subject to the availability of funds. I also approached the Provident Fund Office and they also agreed to help the workers in that way. Then the proposal went up to the Government. In the meantime, the managements have gone back on their commitment and they have refused to give loans on the strength of the provident fund accumulations. Therefore, the Government should come forward to insist on the management to give at least loans equal to the difference between the half wages that are paid during the lay-off period and their actual wages. Otherwise, the workers will be put to great hardship.

Then I come to agriculturists. Of course, agriculturists should be given top priority. But the agriculturists are also facing difficulties whenever they ask for the supply of electricity to their villages. In this connection, I can point out one difficulty that I have experienced. Recently I wanted to fix up a boring-set got through the Agricultural Engineering Department in a well in Paganeri. The Electricity Department wanted a ownership certificate for supplying power to the boring-set. Sir, I am putting a boring-set at the cost of Rs. 2,000 or Rs. 3,000. If it is joint patta, they say to convert it into single patta it will take a long time.

There is one more difficulty. If it is 'natham land' there is difficulty. A man might have built a house in a natham land; it might cost about Rs. 1 lakh or Rs. 50,000. That construction is approved by Government also. When the owner of the house wants to have a pumpset in his house for growing vegetables, etc., the department say 'No'. It is natham land and so we won't give conection. The department is not prepared to put up a line because it is natham land. They are putting all vexatious conditions. I hope the Chairman of the Electricity Board and Govern-

ment would take note of these vexatious conditions and remove the same for the sake of more agricultural production With these words I conclude my speech.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மின்சாரக் கழகத்தின் நிதி நிலை அறிக்கையை இந்தச் சபைக்கு அறிமுகப்படுத்தி நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அச்சடித்து வழங்கியிருக்கும் பிரசங்கத்தை நான் கூர்ந்து படித்தேன். இந்த ஆண்டு சமர்ப்பித்ததை மட்டுமல்ல, சென்ற ஆண்டு அவர் செய்துள்ள பிரசங்கத்தையும் சேர்த்து வைத்துப் படித்துப் பார்த்தேன். காரணம் சென்ற ஆண்டு நடந்த விவாதத்தில் எனக்குக் கலந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. அவருடைய இப்போதைய பேச்சிலும் சரி, சென்ற ஆண்டு பேச்சிலும் சரி, மின்சாரக் கழகத்தைப் பற்றியும், இதிலுள்ள சாதனைகளைப் பற்றியும், அமைச்சர் அவர்களுடைய மகிழ்ச்சியும் பெருமையும் தொனித்து நின்றது. சாதனைகள் இருக்கின்றன, இல்லை என்று சொல்லிவிட முடியாது; திட்டத்தில் ஒதுக்கிய தொகை முழுவதும் செலவு செய்யப்பட்டிருக்கிறது. திட்டத்தினுடைய இலக்குக்கும் மேலாக உற்பத்தி செய்திருக்கிறோம். அதைப்பற்றி எல்லாம் பெருமைப்பட்டுக் கொள்வதை அனுமதிக்கலாம். அதேபோல்தான் இலாகாவையும் பாராட்டினார்கள். மின்சாரக் கழகத் தலைவர் அவர்களையும் சிப்பந்திகளையும் பாராட்டினார்கள். அதையும் அனுமதிக்கலாம். இவைகள் எல்லாம் மகிழ்ச்சிக்குரிய விஷயம் தான் என்றாலும்கூட, அவருடைய பேச்சில் ஒரு முக்கியமான விஷயத்தை அவர் சபையின் கவனத்திற்குக் கொண்டு வராமல், ஏதோ போக்கில் எளிதாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள் என்பதுதான் என் போன்றவர்களுக்கு ஏற்பட்ட கவலை. ஏற்பட்டிருக்கின்ற சாதனைகளைப்பற்றிக் குறைத்து மதிப்பிடுவதற்கு நான் தயாராக இல்லை. இதை எல்லாம் குறை கூறுவதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உற்பத்தியானது மிகச் சொற்பம். 265 மெகா வாட்ஸ் அளவுக்குத்தான் இருந்தது. இரண்டாவது திட்ட காலத்தில் 560 மெகா வாட்ஸ் அளவுக்கு அதிகரித்து இருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கிய தொகை 100 கோடி ரூபாய் என்றும் நடைமுறையில் 111 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று சேர்மன் அவர்களும் 125 கோடி ரூபாய் அளவுக்குச் செலவாகும் என்று அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மின்சார உற்பத்தித் திறன் எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். திட்ட காலத்தில் வேகமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது உண்மைதான். இதற்காக மகிழ்ச்சி அடையலாமே தவிர திருப்தி அடையக்கூடிய மனப்பான்மை இருக்கலாமா என்பதைப் பற்றி பார்க்கிறபொழுது கவலைத்தான் தருகிறது. எனக்கு முன்னால் பேசிய கனம் ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள் கூறினது போல், வருஷம்



வருஷம் மின்சார வெட்டு ஏற்பட்டு அதன் காரணமாகத் தொழிற்சாலைகள் மூடப்படுவதும் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிப்பதைப்பற்றியும், ஒரு அம்சத்தை அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். மின்சார வெட்டு என்பது அது தனியான ஒரு பிரச்னை. ஆனால் நமக்குத் தேவைப்படக்கூடிய அளவுக்கு மின்சாரம் திட்ட காலத்தில் கிடைக்கக்கூடிய நம்பிக்கை இருக்கிறதா? அது சமீபத்தில் ஏற்படுவதற்கு வழியிருக்கிறதா? இல்லையென்றால் அது எப்போது கிடைக்கும் என்பதைப் பார்க்கும்போது, துண்டு விழக்கூடிய நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. கடந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டத்திலும் அதே நிலைதான். ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிலாவது நம்முடைய தேவை எல்லாம் பூர்த்தி செய்யப்படும் என்ற நம்பிக்கைக்கு இடமிருக்கிறதா? அமைச்சர் அவர்களுடைய புள்ளி விவரங்களிலிருந்து நமக்கு என்ன தெரிகின்றது? மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் முடிவில், நம்முடைய உற்பத்தித் திறன் நிச்சயமாக 870 மெகா வாட்ஸ் அளவிற்குக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் நம்முடைய தேவை 1,370 மெகா வாட்ஸ்-சாக இருக்கிறது. இதன்படி பார்த்தால்கூட 500 மெகா வாட்ஸ் துண்டு விழுகிறது. இதைப் பர்க்கும்போது, நம்முடைய தேவையில் மூன்றில் ஒரு பகுதி துண்டு விழுகிறது. இப்போது இரண்டு பகுதிதான் உற்பத்தி செய்கிறோம். இந்த அபாயத்தை நாம் உணர வேண்டும். இந்தக் குறைபாட்டை நீக்குவதில் நாம் எந்த அளவுக்கு அவசர அவசியமாகக் கவனம் செலுத்தியிருக்கிறோம் என்பதைப்பற்றி நாம் ஆலோசிக்க வேண்டும். சாதனையைப்பற்றி சொல்லவேண்டியதுதான், வேண்டாம் என்று சொல்லவில்லை. இவ்விதம் நாம் சொல்லிக் கொண்டேயிருந்தால் நம்முடைய நிலைமை என்னவாகும்? ஒவ்வாரு வருஷமும் சென்னை ராஜ்யம்தான் முதலில் நிற்கிறது என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் நமக்குக் கிடைக்க வேண்டிய உதவியும் கிடைக்காமல் போகலாம். இவ்விதம்தான் சாலைகள் நன்றாக இருக்கின்றன. நமது ராஜ்யம்தான் முதலில் நிற்கிறது என்று சொல்லிக்கொண்டிருந்ததின் காரணமாக பிளானிங் கமிஷனில் என்ன சொல்லிவிட்டார்கள்? மற்ற ராஜ்யங்கள் எல்லாம் உங்களுடைய லெவலுக்கு வரும் வரையிலும் உங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டியதில்லை என்கிற முடிவுக்கு வந்துவிட்டது. அதே போன்று மின்சாரத்திலும் நாம் முன்னேறியிருக்கிறோம்; முன்னேறியிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டேயிருந்தால் சாலைகளுக்கு ஏற்பட்ட நிலைமை இதற்கும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். அதே சந்தர்ப்பத்தில் நம்முடைய தேவைக்கு ஏற்ற அளவு நம்முடைய மின்சார உற்பத்தி ஆகியிருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பின்னால் என்ன நடந்தது என்பதைப்பற்றி நமது தொழில் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அப்போது அவர்கள் வொர்க்ஸ் மினிஸ்டராக இருந்தார். எந்த விதத்தில் சாலைகளுக்கான அலாட்மெண்ட் குறைந்தது என்பது அவர்

களுக்குத் தெரியும். அந்த மாதிரியான அபாயம் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதில் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்பதைத் தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வினியோகத்தில் இருக்கின்ற குறைபாடுகளைப்பற்றி பலர் எடுத்துச் சொன்னார்கள். இவைகளை எல்லாம் நாம் கவனிக்க வேண்டியதுதான். இருந்தாலும் புதிய திட்டங்களுக்காக நாம் பல முயற்சிகள் எடுக்கவேண்டும். நாம் அமைத்திருக்கின்ற முறையின்படி எல்லா கிரிட்-களை எல்லாம் சேர்த்தாலும்கூட துண்டு விழக்கூடியதை சரிப்படுத்த முடியாது. எல்லா கிரிட்-களையும் சேர்ப்பதற்கான வேலைகள் எல்லாம் நடந்து கொண்டிருப்பதை நான் பார்க்கின்றேன். இதனால் நமக்கு என்ன பலன் கிடைக்கும்? எப்படியிருந்தாலும் நாம் நம்முடைய உற்பத்தித் திறனைத்தான் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட வேண்டும். இப்போது மட்டுமல்ல, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய உற்பத்திக்கும் தொழில் அபிவிருத்திக்கும் வேண்டிய அளவுக்கு மின்சாரம் கிடைக்கக் கூடிய அளவில், விவசாயிகளோ அல்லது தொழில் அதிபர்களோ திருப்தி அடையக்கூடிய அளவில் இருக்கிறதா என்று பார்க்கிற பொழுது, கவலைக்குரிய இடமாகத்தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், இந்தச் சபையினுடைய கவனத்திற்கும், அவர்கள் கொடுத்திருக்கின்ற புள்ளி விவரங்களின் மூலமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். ஏற்பட்டிருக்கின்ற சாதனைகளை நான் குறைவாக மதிப்பிடத் தயாராக இல்லை. ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான தேவைகளைத் தயார் செய்யக்கூடிய காலத்தில், அதைப்பற்றி பரிசீலிக்க பங்கெடுத்துக் கொண்ட அனுபவத்தின் மூலமாகச் சொல்லுகிறேன். திட்டத்திற்கு நாம் போட்ட மதிப்பீடுகள் எல்லாம் ஏறத்தாழ சரியானவையாகவே இருந்தன. ஆகவே முன்னால் இருந்த நிலைமைக்கேற்ப நம்முடைய தேவைகளைத் தேடிக்கொள்வதற்கான பரிகாரத்தைத் தேடிக் கொள்ள அமைச்சர் அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தொழில் உற்பத்தியினுடைய வேகம், விவசாய உற்பத்தியினுடைய
1-00 p.m. வேகம், இவை இரண்டையும் பாதிக்கும். விவசாய உற்பத்தி பாதகமானால் என்ன நிலை ஏற்படும் என்று தெரியும். தொழில் உற்பத்தி பாதகமானாலும் என்ன நிலை ஏற்படும் என்று தெரியும். இந்த அளவுக்குத் தொழில்களைப் பெருக்கிவிட்டு, இனி மின்சாரம் பற்றவில்லை, ஆகையால் குறைக்கிறேன் என்று சொன்னால் அது முடியாது. இந்தப் பிரச்னை வளர்ச்சியால் ஏற்பட்டது; வளர்ச்சியால் ஏற்பட்ட கஷ்டம் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். எது இயற்கை என்றால்; ஒன்று முன்னே போகும்; அல்லது பின்னே போகும். ஒரு இடத்தில் நிற்க முடியாது. Nothing is static in this world. Either you must move forward or backward. அது தான் law of nature. அந்த விதி இதற்கும் பொருந்தும். இந்த விதியை யாராலும் மாற்ற முடியாது. இந்தப் பிரச்னையைத்





தைரியமாக எப்படிச் சமாளிக்க வேண்டும், நம்முடைய தொழில் உற்பத்தி எப்படிப் பெருகும், நம்முடைய விவசாய உற்பத்தி எப்படிப் பெருகும் என்று பார்த்து வேண்டிய அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க வேண்டும். வழங்க வேண்டும். என்றால் மலிவாக வழங்க வேண்டும். உற்பத்தி செய்தால் மட்டும் போதாது. உற்பத்தி செய்து மலிவாக வழங்க வேண்டும். வருஷா வருஷம் இந்த நெருக்கடி ஏற்படுவதன் காரணம் பற்றாக்குறை இருப்பது என்பது மட்டுமல்ல, நம் உற்பத்தி அமைப்பிலே பெரும் பாகம் நீர் விசையை நம்பி நாம் உற்பத்தி செய்வது அதிகமாக இருக்கிறது. நீராவியைக் கொண்டு உற்பத்தி செய்வது குறைவாக இருக்கிறது. மின்சார உற்பத்தி எந்தெந்த முறையில் செய்ய முடியும் என்று எல்லோரும் அறிந்திருப்பார்கள். நீர் விசையை உபயோகப்படுத்தலாம். நீராவியை உபயோகப்படுத்தலாம். நீராவியை உபயோகப்படுத்துவதில் எரிபொருளாக எண்ணெயை உபயோகப்படுத்தலாம் அல்லது நிலக்கரியை உபயோகப்படுத்தலாம். நமக்கு நிலக்கரி கிடையாது. எண்ணெயும் கிடையாது. நம் ராஜ்யம் இருக்கும் இடத்திற்கும் நிலக்கரி கிடைக்கும் இடத்திற்கும் உள்ள தூரம் வெகுவாக இருக்கிறது. எண்ணெய் வேண்டுமானால் அமைச்சர் சொன்ன பிறகு நம்பிக்கை வந்திருக்கிறது. எண்ணெய் கண்டுபிடித்து, பக்குவப்படுத்தி, எரி பொருளாக உபயோகப்படுத்தும் நேரம் வரையில் கஷ்டம் இருக்கும். (குறுக்கீடு) இருக்கக்கூடிய எரி பொருள்கள் என்ன? சமீபத்திலே கண்டுபிடித்து ஒரு அளவுக்குப் பயன் படுத்தும் ஒரு பொருள் லிக்னைட். அதை உபயோகப்படுத்தி மின்சாரம் தயார் செய்யலாம். இதை விட மலிவாக உற்பத்தி செய்ய வேண்டும். நீர் விசையில் உற்பத்தி செய்வதை விட மலிவாக நாம் உற்பத்தி செய்ய முடியும். அதுவும் மேட்டூர் திட்டத்தில் உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் விலை மிகவும் மலிவு. அந்த ரேட்டில் உற்பத்தி செய்தால் இனாமாகவே கொடுக்கலாம். மேட்டூரில் உற்பத்திச் செலவு அரை தம்படி (பழைய தம்படி) தான் ஆகிறது. ஐந்து யூனிட் வரையில் டொமெஸ்டிக் கன்சம்ப்ஷனுக்கு ஃப்ரீயாகக் கொடுக்கலாம். மலிவாக உற்பத்தி செய்ய வேண்டுமென்பதில் கவனம் செலுத்த வேண்டும். அந்தக் காலம் எப்போது வருமோ, சோவியத் நாட்டில் மின்சாரத்தை அதிகமாக மலிவாக மட்டுமல்லாமல் இனாமாகக் கொடுக்க திட்டமிட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். திட்டம் வெற்றி அடையும் என்று நான் நம்புகிறேன். மலிவாகக் கொடுக்க வசதி செய்யவேண்டுமென்று சொல்லும்போது இந்த மாதிரி எரி பொருளை உபயோகப்படுத்துவதால், நிலக்கரி, லிக்னைட் போன்றவைகளை உபயோகப்படுத்துவதால் யூனிட்டுக்கு 8-9 பைசா உற்பத்திச் செலவு அதிகமாக ஆகிறது. அதனால் என்ன ஆகிறது? சராசரி பார்த்து, நீர்விசை மின்சாரம், எரி பொருள்களைக் கொண்டு உற்பத்தி செய்யும் மின்சாரம் எல்லாவற்றையும் சேர்த்து சராசரியாக நிர்ணயிக்கும் காரணத்தினால் கட்டணத்தை உயர்த்த வேண்டியிருக்கிறது. கட்டணத்தை உயர்த்தினால் நாம் சண்டை போடுகிறோம். அதே நேரத்தில்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [18th July 1964

**உற்பத்தி** பெருகாவிட்டாலும் சண்டை போடுகிறோம். இது ஒரு சிக்கலான பிரச்னை என்பதை உணர்ந்து எப்படிப் பரிகாரம் காண்பது என்று முயற்சி செய்ய வேண்டும். வருஷா வருஷம் ஏற்படும் நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ள அதிக உற்பத்தி செய்யவேண்டும். செய்வதிலும் இந்த மாதிரி சமன் படுத்த வேண்டும். நீர்விசை தவறிவிட்டால் எரி பொருளைக்கொண்டு உற்பத்தி செய்வது என்று இரண்டுக்கும் இடையில் சம நிலை ஏற்பாடு செய்து அதற்கான திட்டங்களையும் யோசனை செய்து அமைச்சர் அவர்கள் அதற்கான முடிவு எடுக்க வேண்டுமென்று நான் யோசனை சொல்ல விரும்புகிறேன். அதிலே ஏதோ சில யோசனைகளை வைத்திருக்கிறார்கள். அவைகள் விரைவில் முடிவு அடைய வேண்டும். சீக்கிரமே முடிவு அடையும் என்று நம்புகிறேன். அவைகளில் எண்ணூரில் 300 மெ. வா. மின்சாரம் நிலக்கரியை வைத்தும், தூத்துக்குடியில் 100 மெ. வா. மின்சாரமும் உற்பத்தி செய்ய இரண்டு அனல் மின்சார நிலையங்களை வைப்பதாகச் சொல்லுகிறார்கள். இதையும் இன்னும் எவ்வளவு அதிகப் படுத்தலாம் என்று யோசிக்கலாம். இந்த நிலையங்களை வைப்பதால் மின்சாரக் கட்டணம் அதிகமாகி விடுமோ என்ற பயம் இருக்கிறது. நம் ராஜ்யத்தில் தான் நிலக்கரி விலை அதிகம். மின்சார அமைச்சரே தொழில் அமைச்சராகவும் இருப்பதால் நிலக்கரி விலையைக் குறைக்க நடவடிக்கை எடுத்தால் என்ன என்ற யோசனையைக் கூற விரும்புகிறேன். ஏன் நிலக்கரிக்கும் நாஷனல் ப்ரைஸ் வைக்கக் கூடாது என்று கேட்க ஆசைப்படுகிறேன். மற்ற இரும்பு, சிமெண்ட் போன்ற பொருள்களுக்கு நாஷனல் ப்ரைஸ் என்று நிர்ணயிக்கும்போது பின் தங்கிய பகுதிகளுக்கு மலிவு விலையில் கிடைக்க அரசாங்கம் முயற்சி செய்தால் என்ன என்று அவர்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். சோவியத் யூனியனுக்குப் போய் வந்த பிறகு வ்ளாடிவஸ்டாக்கிலிருந்து லெனின்கிராட் வரையில் விலை ஒரே அளவில் இருக்கிறது முக்கியமான அம்சம் என்று அமைச்சர் சொன்னார். தேசீய ஒருமைப்பாடு பற்றிப் பேசும் நாம் நிலக்கரியானது கிட்டத்தட்ட சம விலையில் கிடைக்க முயற்சி எடுத்தால் என்ன என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இதையே முன்பும் சொல்லியிருக்கிறேன். இரண்டு தெர்மல் ஸ்டேஷன்களை புதிதாகப் போட்டாலும் கூட நமக்குப் போதுமானதாக இருக்காது. 400 மெ. வா. அதிக மின்சாரம் கிடைக்கும். அதோடு நெய்வேலியில் அதிகப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். இப்போது இருக்கக் கூடிய நிலையில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 400 மெ. வா. உற்பத்தித் திறனை அதிகப்படுத்த முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அங்கு 1,000 மெ. வா. அதிகப்படுத்தக் கூடாது? அங்கு இருக்கும் லிக்னைட்டைக் கொண்டும் இன்னும் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தினால், மழை இல்லாத காரணத்தினால் பற்றாக் குறை ஏற்படுகிறதே, பவர் கட் ஏற்படுகிறதே அதைத் தவிர்க்கக் கணிசமான அளவு உதவியாக இருக்கும் என்று இன்னொரு யோசனை சொல்லலாமோ என்று யோசிக்கிறேன்.



18th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

நமக்கு நிலக்கரி வருவதில் சமீபத்தில் இருப்பது சிங்கரேணி. ஹைதராபாத்திலிருந்து 40 மைலில் இருக்கிறது. அந்த நிலக்கரியை உபயோகப்படுத்திப் பெரும் அளவுக்கு ஆந்திர அரசாங்கமோ அல்லது மத்திய அரசாங்கமோ நேரடியாக அமைத்தோ—இப்போது நான்கு கிரிட்டுகளையும் ஒன்றாக்கச் செய்ய வேண்டுமென்று சொல்லுகிறோம்—அந்த இடத்திலேயே பெரிய நிலையத்தை அமைத்து ஆந்திர அரசாங்கத்தினால் முடியாவிட்டாலும், மத்திய அரசாங்கமே அமைத்து, ஆந்திர அரசாங்கத்திற்கும்; தெற்கே இருக்கும் ராஜ்யங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கும் முறையில் செய்தால் ட்ரான்ஸ்போர்ட் செய்கிற செலவு குறையும் என்று, நான் நிபுணர் அல்ல, ஒரு சாதாரண மனிதன் என்ற முறையில் சொல்லுகிறேன் இந்த யோசனையை. தெர்மல் பவரை அதிகப் படுத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் முக்கிய விஷயங்கள் சிலவற்றை எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பதால் அவற்றை ஆங்கிலத்தில் பேசலாம் என்று கருதுகிறேன்.

I have been explaining how wide the gap is between our installed capacity and demand for power. At the end of the Third Five-Year Plan our productive capacity will be about 870 M.W. but simultaneously our demand for power will be 1,370 M.W. That means we will be deficit to the tune of 500 M.W. That means there will be more than 1/3rd of our demand not being met. That will be the position. So there is no room for complacency. Although the Hon. Minister has spoken a lot in his speech, I do not want to minimise the achievement registered in our State. Compared to the demand that we have, our capacity to produce electricity will be far short of our requirements. So it is causing great anxiety for people of this State. So our Government must take up with the Union Government and Planning Commission to go in for new schemes in a big way. When going in for now schemes one thing must be borne in mind. There should be a balance between hydro-electric power and thermal power. As you may be aware, production through hydro-electric power is cheapest in our country. We should aim at reducing the cost of production. If we go in for electricity by using coal, it is very costly. Then the cost of production will go up. For taking up new hydro-electric schemes, we do not have sufficient water resources. Our water resources are almost finished. So our Government must take up the matter seriously with the Planning Commission to go in for new schemes. There is one very important scheme which is referred to by the Hon. Minister for Industries in his speech. That is essentially a scheme of Madras State. But unfortunately that has to be located on the river Cauvery. Mysore Government also comes in the way. This scheme should not be linked up with the general dispute between Madras State and Mysore State regarding sharing of Cauvery waters. That is with regard to irrigation. It is concerned with irrigation. But the Hogenakkal scheme is for power production. That should be

[Sri M. Kalyanasundaram] [18th July 1964

treated separately. This hydro-electric scheme will help us to control floods. Power produced by hydro-electric station is also cheap. From that angle this scheme is very important. I am very sorry to note in this connection that Mysore Government is taking up an unhelpful attitude. We have got a ready-made scheme on hand. I think according to information available to me, the investigation is over and the scheme could be put into execution; the moment sanction is got from Planning Commission, the scheme could be pushed through. Mysore may be thinking of a bigger scheme. In the common interests of both the States, the scheme proposed by Madras Government will be helpful not only for Madras but for Mysore also. When we are thinking of a common grid for all the four States in the Southern Zone, I do not think why Mysore State should object to this scheme. If it is found later on that additional schemes are possible in their region, I do not think Madras Government will stand in their way, provided it does not affect interests of our State. There should be the spirit of co-operation. There is no use of getting jealous. We are ready to help them. Also records show that our electricity department can carry out this scheme very efficiently and more quickly. Let them trust us. We are prepared to carry out the scheme and then share the power. I find from the proceedings of the Zonal Council meeting they are a remixing up this Hogenkkal scheme with the problem of sharing of the Cauvery waters. There is no need to mix up this scheme with the general problem of sharing of the Cauvery waters and question of appointment of a River Board. This may be taken up separately. If there is any serious objection to this scheme or if the Mysore Government is unwilling, the Planning Commission should give a direction to construct this scheme as a Centrally Sponsored Scheme and distribute power to both the States, that is both the States of Mysore and Madras. That will for the time being help us to a great extent. I am attaching great importance to this scheme as I have already explained, for two reasons. One is control floods and another is the cost of power produced will be cheaper and we will be in a position to distribute power at a cheap cost.

Another scheme that is contemplated is the Kalpakkam Neuclear Power Station. I think production of electricity through atomic power will be costly. It may not be so costly as power produced from coal. But still it will be costly compared to hydro-electric power. But still we have to go in for this scheme. Last year in his speech the Hon. Minister for Industries promised us that the plant will be of the order of 600 M.W. This year it has come to 400 M.W. I do not know how, when we actually install the plant, it will still go down. Although I am a lay man, I can say one thing. If we go in for neuclear power stations, we must do it in a big way. If we go in for small power stations, by using neuclear power, cost of production will be higher. Even while we begin, let us start in a big way. Let us not go in for small power stations. So I would urge upon the Madras Government



18th July 1964] [Sri M. Kalyanasundaram]

to take up this matter with the Planning Commission and see that the capacity of the plant is raised even to begin with. Otherwise cost of production may become higher. I think we deserve this indulgence because we are far away from coal fields. We deserve this encouragement both from Planning Commission and Government of India. While I welcome they are going to locate it in Madras, I think the capacity must be improved.

Neyveli power generation should be increased to 1,000 M.W. by the end of Third Plan period. Even if all these schemes are fulfilled, we will be far short of meeting our demands. This is a problem arising out of our growth. In addition to industry, we are developing agriculture. We are trying to improve it to the best of our ability. There is greater demand for agricultural pumpsets now. There have been lot of complaints both from the opposition and ruling party that services are not easily available for agricultural pumpsets. That is my experience also. It is easy to get a new scheme sanctioned but it is very difficult to get new services in an already extended area. I am finding it very difficult because especially in areas covered by licensees, the people are anxious to go in for better services. In the case of licensees, they are reluctant to extend the services to new areas on the plea that they do not have funds or materials.

I would like to know from the Hon. Minister, why the proposal to give them loans earmarked for new schemes were dropped? In the schemes included in the Third Five-Year Plan there was provision for Rs. 2 crores to be given to the licensees by way of loans for rural electrification. But I think only about Rs. 50 lakhs have so far been spent. I want to know why this was dropped? This is a convenient excuse for the licensees all over the State to defer all the schemes for rural electrification. They are deferring even extension services in the areas already served.

THE HON. SRI R. VENKATARAMAN: We have decided to stop loans to private licensees and asked private licensees to surrender the areas which they cannot develop with their own resources. When they have found that the Government are not going to give any further loans and advances, they have surrendered large areas which are under their control. The Government are utilising this amount for developing those areas which have been given to us.

SRI M. KALYANASUNDARAM: If this can be carried out, it is all right.

Sir, I was referring to the resources available in our neighbouring States particularly Kerala and Andhra Pradesh. In Kerala there are several rivers which flow westwards and fall into the Arabian Sea. They are not able to utilise them even for irrigation. Why not we approach the Central Government to work out schemes for joint exploitation of these west-flowing rivers not only

[Sri M. Kalyanasundaram] [18th July 1964

for the purpose of irrigation but also for the purpose of power production? That will help both the Kerala and the Madras States. In this matter also there is inordinate delay. There has been discussions several times. I find from the proceedings of the Southern Zonal Council meeting held in May 1963 a reference to this matter and I do not know what action has been taken so far. I think, this House is entitled to know what action has been taken. There was a proposal—

(i) to examine the availability of water in the entire Cauvery river basin including its tributaries and sub-tributaries with reference to the available water utilisation for the existing construction or proposed projects of Madras, Mysore and Kerala States;

(ii) to examine the possibility of diverting surplus water of the west-flowing rivers in Kerala State towards Madras State on the eastern side after meeting the requirements of the Kerala State; and

(iii) to examine the availability of water of any other rivers of Mysore, Madras and Kerala which, even though wholly lying in one State, may have potential for utilisation in the other States. So, there was a proposal to appoint a Committee to examine these points and reach conclusions to the mutual advantage of the three States. We would like to know whether the matter has been taken up for consideration and if so, why there should be so much delay and also what action the Government propose to take to reach a settlement on this question. These are hampering the progress of not only our State but even our neighbouring States. In this connection, I would suggest another thing. The Andhra Government must be persuaded to take up large scale power plan utilising Singareni coal for production of power. If these schemes are thought of and if these schemes materialise, there will be some meaning in having a point grid for all the four States together. If we have a joint grid now, we would only be sharing the poverty. We should be prosperous before we think of helping others. In Tamil there is a proverb which says that we must serve ourselves and then only we can think of our neighbours. We must first serve our State and then think of others. Our proposals are such that they will serve the interests of all the four States. So, these matters may be taken by the Government with both the Planning Commission and the concerned State Governments and the Central Government.

The Hon. Minister has made a proposal to revise the tariff rate. The tariff is already very high. There is already surcharge. Although he says that the surcharge will be removed, the tariff will be revised. It will, of course, to a considerable extent ease the clerical work in the offices. But how is it going to help the consumers? For the consumers the supply of electricity should be made cheaper. He can give a convenient explanation that the cost of electric materials are going up and therefore the cost of electricity must also go up. That is the explanation that he gave for the



18th July 1964] [Sri M. Kalyanasundaram]

rise in the bus fares. He said that because the cost of spare parts and the tax are increasing, the rate of bus fares should also be increased. Then who is there to control the prices? The Government must stop them somewhere. If the Government themselves give this sort of explanation and raise the cost all round, how can they think of stabilising the prices? So, the Government must apply their mind to see that the cost of production is reduced and electricity is made available cheaply, particularly for domestic consumption. Also for agricultural production, this is very important and I would request the Government to consider this aspect of the matter also.

Another point also must be borne in mind. Our staff in the Electricity Department have fulfilled these tasks under great stress and strain. Their sacrifices must be recorded. They are working under starvation wages in several places. Compared to the Central Government scales of pay and the scales of pay prevailing in the Centrally-sponsored projects, the scales of pay of officers, clerks and the skilled workers are very low. Even the Chief Engineer (Electricity) is not getting the same scale of pay as the Chief Engineer of the Highways or the Irrigation Department. So, they have also contributed to the success of the scheme by accepting these low wages and working very hard. Our thanks also must be due to the staff who have helped us. But at the same time many hon. Members have pointed out the defects in its working. Of course, black sheep is everywhere and the administration must be toned up both for securing economy and for improving efficiency. With these words, I resume my seat.

## V.—ANNOUNCEMENT.

### BUSINESS OF THE HOUSE.

MR. DEPUTY SPEAKER: I have to announce to the House that the Business Advisory Committee which met this morning has decided the following revised programme of business for the present sitting of the Assembly:—

**20th July 1964** ..

(i) Further discussion on the State Electricity Board Budget for the year 1964-65.

(ii) Consideration of the amendment carried in the Legislative Council to the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964.

(iii) Consideration and passing of the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 as amended by the Joint Select Committee.

**21st July 1964** .. Consideration and passing of—

(1) The Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964.

(2) The Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964.

(3) The Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964.

(4) The Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964.

[Items (1) to (4): As amended by the Select Committee.]

(5) The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill, 1964.

[Mr. Deputy Speaker] [18th July 1964

22nd July 1964 .. (i) Discussion and Voting on the First Supplementary Statement of Expenditure for the year 1964-65.

(ii) Discussion and Voting on Demand for Grant for Excess Expenditure in the year 1959-60.

(iii) Introduction of Appropriation Bills.

23rd July 1964 .. Non-Official Day.

24th July 1964 .. Consideration and passing of—

(1) Appropriation Bills.

(2) The Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964.

(3) The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill, 1964.

25th July 1964 .. Consideration and passing of—

(1) The Madras Places of Public Resort (Amendment) Bill, 1964.

(2) The Madras Hackney Carriages (Amendment) Bill, 1964.

(3) The Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964.

26th July 1964 .. Holiday.

27th July 1964 .. All other Official Bills.

1-30 p.m. The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 20th July 1964.

The House then adjourned.

## V.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

249. *Government's review on the working of the Travancore Minerals Limited, Quilon for the year ending 31st March 1963 together with the Company's Annual Report, etc. [Laid on the Table of the House in pursuance of section 619-A of the Companies Act, 1956.].*

250. *Notification issued by the Additional Development Commissioner in his Roc. No. 71166/63-F4, dated 30th March 1964, altering the classification of certain village panchayats into town panchayats under section 9 (1) of the Madras Panchayats Act, 1958. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXX of 1958).]*

251. *Notification issued by the Additional Development Commissioner in his Roc. No. 61873/63-F5, dated 22nd March 1964 extending the provisions of the Madras District Municipalities Act, 1920 and the rules framed thereunder to the entire areas of the Annamalai University Campus Township Committee, South Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXX of 1958).]*



18th July 1964]

252. *Notification issued with Proceedings No. 71166/63-F4 of the Additional Development Commissioner, Madras, dated 10th April 1964 revising the orders published in the notification of the Additional Development Commissioner at page 159 of Part II—Section 2 of the Fort St. George Gazette, dated 1st April 1964, regarding the alteration of classification of certain village panchayats as town panchayats. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

253. *Notification issued with G.O. Ms. No. 497, Revenue, dated 25th February 1964 amending the removal of encroachments on lands or buildings belonging to Religious Institutions Rules. [Laid on the Table of the House under section 116 (3) of the Madras Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Madras Act 22 of 1959).]*

254. *Notification issued with G.O. Ms. No. 1586, Food and Agriculture, dated 15th May 1964, extending the Madras Registration of Veterinary Practitioners Act, 1957 (Madras Act XXI of 1957) to the added territories specified in the Second Schedule to the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 (Central Act 56 of 1959). [Laid on the table of the House under section 16 (7) of the Madras Registration of Veterinary Practioners Act, 1957 (Madras Act XXI of 1957).]*

### B. Reports, Notifications and other papers.

*176. *Speech of Hon. Chief Minister while presenting the Statement of Demand for Grant for excess expenditure in the year 1959-60 (English and Tamil).*

*177. *Notice of Demands for Grant for Excess Expenditure in the year 1959-60 (English and Tamil).*

*178. *Introductory Memorandum to the Statement of Demand for Grant for Excess Expenditure in the year 1959-60 (English and Tamil).*

*179. *Speech of Hon. Chief Minister presenting the First Supplementary Estimates for 1964-65 to the Legislature (English and Tamil).*

*180. *Notice of Demands for Grants for further expenditure in the year 1964-65.*

*181. *Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1964-65 (English and Tamil).*

* Placed on the table of the House on 17th July 1964.

## Appendix I.

[*Vide* answer to starred question No. 523, on page 149.]

The details of aerial spraying of pesticides on crops resorted to during 1962–63 and 1963–64 till November are given below :—

| Acreage sprayed. (1) | Cost of operation. (2) |
|---|---|
| | RS. |
| **1962–63.** | |
| 14,834 acres in Pollachi taluk of Coimbatore district (comprising 8,520 acres of groundnut, 3,522 acres of other crops and 2,792 acres of fallow lands). | 1,15,663 |
| 6,347 acres in Vridhachalam taluk of South Arcot district (comprising 4,011 acres of groundnut, 1,013 acres of other crops and 1,323 acres of fallow lands). | 73,510 |
| **1963–64.** | |
| 13,402 acres in Pollachi taluk of Coimbatore district (comprising 7,224 acres of groundnut, 3,408 acres of other crops and 2,770 acres of fallow lands). | 1,13,207 |

Sanction was also accorded for undertaking aerial spraying in Vridhachalam and Villupuram taluks of South Arcot district, but no such spraying operations could be conducted due to non-availability of Helicopter or Aircraft. The areas affected in the South Arcot district by Red Hairy Caterpillar Pests have been sprayed with insecticides by resorting to hand-dusting and hand-spraying.

1962–63–லும், 1963–64–ல் நவம்பர் வரையிலும் பயிர்களுக்கு விமான மூலம் இருமி நாசினி மருந்து தெளித்த விவரம் பின்வருமாறு :—

| மருந்து தெளிக்கப்பட்ட எக்கரா பரப்பு. (1) | இதற்கான செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| **1962–63.** | |
| கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூகாவில் 14,834 எக்கரா. (இதில் நிலக்கடலை பயிராகும் 8,520 எக்கரா, மற்ற பயிர்கள் விளையும் 3,522 எக்கரா, 2,792 எக்கர் தரிசு நிலம் அடங்கும்.) | 1,15,663 |
| தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம் தாலூகாவில் 6,347 எக்கரா. (இதில் நிலக்கடலை பயிராகும் 4,011 எக்கரா, மற்ற பயிர்கள் விளையும் 1,013 எக்கரா, 1,323 எக்கரா தரிசு நிலம் அடங்கும்.) | 73,510 |





| மருந்து தெளிக்கப்பட்ட எக்கரா பரப்பு. (1) | இதற்கான செலவு. (2) |
|---|---|
| | ரூ. |
| **1963–64.** | |
| கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தாலூகாவில் 13,402 எக்கரா. (இதில் நிலக்கடலை பயிராகும் 7,224 எக்கரா, மற்ற பயிர்கள் விளையும் 3,408 எக்கரா, 2,770 எக்கரா தரிசு நிலம் அடங்கும்.) | 1,13,207 |

தென் ஆர்க்காடு மாவட்டம், விருத்தாசலம், விழுப்புரம் தாலூகாக்களில் விமானமூலம் மருந்து தெளிக்கவும், அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஹெலிகாப்டர் அல்லது விமானம் கிடைக்காததால் மருந்து தெளிக்க இயலவில்லை. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிவப்பு கம்பளிப் பூச்சிகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருமிநாசினிகள் கையினால் இயக்கப்படும் யந்திரங்களைக் கொண்டு தூவப்பட்டுள்ளன.

## Appendix II.

[*Vide* answer to starred question No. 544 on page 169]

### Statement.

(*a*) A rising tendency in prices of sugar was noticed towards the end of January 1963 in spite of large releases of sugar during that period. With a view to conserving supplies and ensuring equitable distribution of the available supplies of sugar at fair prices to consumers, the Government of India in the Ministry of Food and Agriculture (Department of Food), New Delhi, promulgated the Sugar (Control) Order, 1963, under the provisions of the Defence of India Rules, 1962. This order came into force throughout the country on 17th April 1963. The Government of India have introduced thereby complete control over the distribution of sugar at the wholesale and at retail stages.

(*b*) Under the scheme the regulation envisaged by this Order is as follows :—

(i) Ex-factory prices have been fixed in eleven regions including the Southern Region consisting of Madras, Andhra Pradesh, Mysore and Kerala ;

(ii) the Government of India will allocate every month quotas of sugar to each State after taking into consideration the supplies available and the off-take of individual States during the last control period, when the system of allotment of monthly quotas was in vogue, and restriction on inter-State movement existed ;

(iii) the State Government will sub-allocate the quotas allotted to them to different areas or districts in the State and nominate licensed sugar dealers to take delivery of the allocated quantity of sugar from particular factories ; and

(iv) the State Government will fix the prices at which the sugar will be sold at wholesale and retail levels taking into consideration the charges incurred in bringing sugar to the areas of consumption plus a reasonable margin for expenses and profit.

[18th July 1964

பதில்—(அ) 1963 ஜனவரி முடிவில் சர்க்கரை ஏராளமான அளவில் சர்க்கரை ஆலைகளிலிருந்து அனுப்பப்பட்ட போதிலும், சர்க்கரை விலைகள் அதிகரித்து வந்ததாகத் தெரிந்தது. சப்ளை நிலைமையைக் காக்கவும், கிடைக்கும் சர்க்கரை சப்ளையை நியாய விலைக்கு எல்லோருக்கும் நிச்சயமாகக் கிடைக்கச் செய்யவும் புது டில்லி, இந்திய அரசாங்க உணவு-வேளாண்மை அமைச்சகம் (உணவுத்துறை) 1962-ம் ஆண்டு இந்தியப் பாதுகாப்பு விதிகளில் கண்ட அதிகாரத்துக்களின்படி, 1963-ம் ஆண்டு சர்க்கரை (கட்டுப்பாட்டு) ஆணையை வெளியிட்டது. இந்த ஆணை 1963 ஏப்ரல் 17-ம் தேதியன்று நாடெங்கிலும் அமலுக்கு வந்தது. அதன்மூலம் இந்திய அரசாங்கம் மொத்த விற்பனை நிலையிலும் சில்லறை விற்பனை நிலையிலும் சர்க்கரைப் பங்கீட்டின்மீது முழு அளவுக் கட்டுப்பாட்டினை அமலுக்குக் கொண்டு வந்தது.

(இ) இந்த ஆணையின்கீழ் அடியிற்கண்டவாறு ஒழுங்குமுறை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது :—

(i) தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், மைசூர், கேரளம் அடங்கிய தென் பிராந்தியம் உட்பட 11 பிராந்தியங்களில் தொழிற்சாலை வாயில் விலைகள் (ex-factory prices) நிச்சயிக்கப்பட்டுள்ளன.

(ii) ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு மாதத்திற்குமான சர்க்கரைக் கோட்டாவை இந்திய அரசாங்கம் அடியிற்கண்டவற்றைக் கருத்தில் கொண்டு ஒதுக்கிக் கொடுக்கும் ; (1) கிடைக்கும் சர்க்கரையின் அளவு ; (2) சென்ற கட்டுப்பாட்டுக் கால அளவில் மாதாந்திர சர்க்கரைக் கோட்டா ஏற்பாடு அமுலில் இருந்தபோதும் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு சர்க்கரை அனுப்புவதில் கட்டுப்பாடு இருந்தபோதும் அந்தந்த மாநிலங்கள் பெற்ற சர்க்கரையின் அளவு ;

(iii) மாநில அரசாங்கம் தனக்களிக்கப்படும் சர்க்கரைக் கோட்டாக்களை மாநிலத்தில் பல்வேறு பகுதிகள் அல்லது மாவட்டங்களிடையே பங்கிட்டுக் கொடுக்கும். பங்கிட்ட சர்க்கரையை குறிப்பிட்ட தொழிற்சாலைகளிலிருந்து பெற்றுக்கொள்ள லைசென்ஸ் பெற்ற சர்க்கரை வியாபாரிகளை மாநில அரசாங்கம் நியமிக்கும் ;

(iv) மொத்த விற்பனை நிலையிலும் சில்லரை விற்பனை நிலையிலும் சர்க்கரையை விற்க வேண்டிய விலைகளை மாநில அரசாங்கம் நிச்சயிக்கும். விற்பனையிடங்களுக்கு சர்க்கரையைக் கொண்டு வருவதற்கும் செலவினையும் மற்றச் செலவுகட்கும், லாபத்திற்குமாக நியாயமான தொகையையும் கருத்தில் கொண்டு அந்த விலைகள் நிச்சயிக்கப்படும்.

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

## Monday, 20th July 1964.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

### மீன் பிடித் துறைமுகம்

*536 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகா, கிள்ளையை ஒரு சிறு மீன்பிடித் துறைமுகமாக அபிவிருத்தி செய்யும் திட்டம் உண்டா ?

THE HON. SRI G. BHUVARAHAN : No.

### அரிசனங்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம்

*551 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவை மாவட்ட அரிசன நலக்குழு அரிசன வீடு கட்டும் திட்டத்தில் தற்போதுள்ள ரூ. 1,000-த்துக்குப் பதிலாக ரூ. 2,000-ஆக உயர்த்தித் தரவேண்டுமென சிபாரிசு செய்துள்ளதா ?

(இ) ஆமெனில், அந்த சிபாரிசைச் சர்க்கார் ஏற்றுக் கொண்டதா ?

THE HON. SRI P. KAKKAN : (i) Yes. The Committee has passed a resolution to that effect.

(ii) The Director of Harijan Welfare, Madras, is examining the proposal.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த அரிசன மக்களுக்கு வீடு கட்டுவது சம்பந்தமாக கோவை மாவட்டத்தில் பரிசீலனை செய்வதாகச் சொல்லுகிறார்கள். மாநிலம் பூராவும் பரிசீலனை செய்து அரிஜன மக்களுக்குக் கட்டும் வீடுகள் இடிந்து விழாமல் கட்டித்தருவதற்கு வேண்டிய அளவில் சிபாரிசு செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஒரு ஜில்லாவிலிருந்து தீர்மானம் வந்திருக்கிறது. பரிசீலனை என்று எடுத்துக் கொள்ளும்போது, மாநிலம் பூராவும்தான் செய்வார்கள். ஏற்கனவே கூட்டுறவு சங்கம் மூலம் கடன் கொடுத்து வீடு கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நாட்டுக்கு ஏற்பட்ட சோதனை காரணமாகப் பின்னாடிதான் அதுபற்றி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று இருக்கிறது.

[20th July 1964

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்பொழுது வீடுகட்டித்தரவேண்டும் என்று அதிகமாக மனுக்கள் வந்திருப்பதால் எல்லோருக்கும் கட்டிக்கொடுக்கப் போதுமான பணம் இல்லாததால், தமிழ் நாடு அரசாங்கம் மனைகள் வாங்கிக் கொடுப்பது எந்த நிலையில் இருக்கிறது, அதற்காக மத்திய சர்க்கார் உதவி கொடுக்கும் கொள்கை எப்படி இருக்கிறது என்பதை யெல்லாம் விளக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மனைக்கட்டுக்கள் அதிகமாக ஏழை அரிஜனங்களுக்கு வாங்கிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் அவா. இருந்தாலும் வீடு கட்டும் திட்டத்தைக் கைவிட்டு விடவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, ஆண்டு ஒன்றுக்கு எத்தனை வீடுகள் கட்டித்தர திட்டம் இருக்கிறது ; ரூ. 1,000-க்கு வீடு கட்ட முடியாது என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே வீட்டுக்கு ரூ. 2,000 ஆக உயர்த்தி திட்டத்தைத் திருத்தி யமைக்க உத்தேசம் உண்டா ? அதை விரைவில் பரிசீலனை செய்து நடைமுறைக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது ரூ. 1,000 என்றால், 750 இனாமாகவும் ரூ. 250 கடனாகவும் வழங்கப்படுகிறது. இதையே ரூ. 2,000 ஆக உயர்த்த வேண்டும் என்றால் செலவு ஜாஸ்தியாக ஆகும். இப்பொழுது இருப்பதுபோல ஐந்தில் ஒரு பங்கு காபிடல் ஷேராகக் கொடுக்கும்போது அதிலே நாலு பங்கு கூட்டுறவு சங்கம் மூலமாகக் கொடுப்பதில் நன்றாகவும் நடக்கிறது, ஓரளவுக்குக் குறைக்கு ஆளாகாமலும் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலத்தில் மூன்றாவது திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் இன்னும் பாக்கி இருக்கின்றன ? அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துத் துரிதமாகச் செய்ய என்ன முயற்சிகள் எடுக்கப் படுகின்றன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** எத்தனை வீடுகள் என்ற எண்ணிக்கை பற்றிய தகவல் என்னிடம் இல்லை. இப்பொழுது 60, 80 வீடுகள் என்று தான் திட்டமிடுகிறார்கள். அதனால் சீக்கிரமாகக் கட்டி விடுகிறார்கள்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த மனை வாங்கிக் கொடுக்கும் திட்டத்தில் தாமதம் ஏற்படுகிறது ; நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்போகும் நேரத்தில், சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போகும் நிலை இருக்கிறது. ஆகவே இது விஷயத்தில் சீக்கிரமாக முடிவு எடுக்க சர்க்காருக்கு அபிப்பிராயம் இருக்கிறதா ?



20th July 1964]

**கனம் திரு. பூ. கக்கன் :** மனைக் கட்டுகள் வழங்குவது சீக்கிரமாக நடக்க வேண்டும் என்றுதான் மாநிலத்தில் ஒரு கமிட்டி போட்டு, காலதாமதத்திற்குக் காரணம் என்ன என்று விசாரணை நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம். விசாரணை செய்திருக்கிறார்கள். அவர்களுடைய ரிபோர்ட்டு பரிசீலிக்கப்படும். ஒரு சிலர் நிலத்தை எடுக்கும் போது அவர்கள் கோர்ட்டுக்குப் போகும் உரிமை இருக்கிறது. ஆகவே கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று சொல்ல முடியாது. ஆனால் நிலம் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்யப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அளித்த பதிலிலிருந்து வீடு கட்டும் திட்டம் கூட்டுறவு முறையில் நடைபெறுவதற்கு ஆதரவு அதிகம் அளிக்கிறார்கள் என்று தெரிகிறது. வீட்டைக் கட்டித்தர வேண்டிய ஏற்பாடுகள் கைவிடப் படக்கூடிய எண்ணம் அரசுக்கு இருக்கிறதா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** அவ்வாறு செய்வதுதான் நல்லது என்று நினைக்கிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய கொள்கை மிகவும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்த வேண்டும் என்பதுதான். ஆகவே அந்தக் கொள்கையைத் தீவிரமாக நிறைவேற்ற, அதற்கு வேண்டிய உதவியை மத்திய சர்க்காரிடம் இருந்து பெற வேண்டிய நடவடிக்கை எடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** மத்திய சர்க்காருடைய உதவி இல்லாமல் எந்தத் திட்டமும் நிறைவேற்றப் படவில்லை. அவர்கள் பாதி, நம் மாநில சர்க்கார் பாதி என்ற அளவில் போட்டுத்தான் செய்கிறோம். அப்படி உதவி செய்ய மத்திய சர்க்கார் தயாராக இருக்கிறார்கள்.

**திரு. கே. பொன்னையா :** தலைவர் அவர்களே, இந்த வீட்டு மனை வாங்கும் திட்டத்தில் கிராமப் பகுதிகளில் தான் தீவிரமாகச் செய்துவருகிறோம். டவுன் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிடிகளிலும் செய்வதில்லை. இந்த விஷயத்தைச் சொன்னால், டிபார்ட்மெண்டார் அவர்களிடமிருந்து 25 சத விகிதம் காண்ட்ரிப்யூஷன் கேட்கிறார்கள். டவுன் பஞ்சாயத்து, முனிசிபாலிடிகளிடம் அதற்கான பணம் இல்லை என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அதிலே சர்க்கார் தலையீட்டினால் சரிசெய்து அங்கும் மனை வழங்கும் திட்டத்தை நிறைவேற்ற முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** பொதுவாக கிராம அரிஜன மக்களுக்குத் தான் சலுகைகள் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஃபர்ஸ்ட் கிரேட் பஞ்சாயத்திலும் செய்கிறோம். நகர சபைகளைப் பொறுத்த மட்டில் அவர்கள் 10 சதவிகிதம் கொடுக்க வேண்டும்.

[20th July 1964

எந்த சபையாவது அப்படிக் கொடுக்க முன்வந்தால், அதற்கான முயற்சிகள் செய்யப்படுகின்றன. பெரிய நகரங்களில் அரிஜனங்களுக்குக் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக மனைக்கட்டுக்கள் வாங்கிக் கொடுக்க தக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. சென்னை நகரத்திலே கூட அந்த முறையில்தான் ஏற்பாடு செய்கிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இதற்கு முன்பு மனைக்கட்டு வாங்கிக் கொடுக்கும்போது, புஞ்சையாக இருந்தால் ஐந்து சென்டும் நஞ்சையாக இருந்தால் மூன்று சென்டும் கொடுத்து வந்தார்கள். இப்பொழுது நஞ்சையாக இருந்தாலும் புஞ்சையாக இருந்தாலும் மூன்று சென்டுக்கு மேல் கொடுக்கக் கூடாது என்று சர்க்கார் அதிகாரிகள் சொல்கிறார்களே, அதன் அடிப்படைக் கருத்து என்ன ?

**கனம் திரு. பூ. கக்கன் :** நஞ்சையாக இருந்தால் மூன்று சென்ட், புஞ்சையாக இருந்தால் ஐந்து சென்ட் என்கிற விதிமுறைகள் இன்னும் மாறவில்லை. இருந்தாலும், சில இடங்களில் இடம் வேண்டுமென்று கோருகிறவர்கள் அதிகமாக இருப்பார்கள். தங்களுக்கு மூன்று சென்ட் மனை கொடுத்தால் போதும் என்று அவர்களே ஒத்துக்கொள்ளும்போது, மூன்று சென்ட் கொடுத்தாலும் பரவாயில்லை என்ற கருத்தில், அப்பேர்ப்பட்ட இடங்களில் மூன்று சென்ட் கொடுக்க முன்வருவார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** நகரசபைப் பகுதிகளில் இருக்கும் அரிசன மக்களுக்குத் தனியாருடைய பூமியை ஆர்ஜிதம் செய்து கொடுக்கும் போது, செலவில் பத்து சதவிகிதத்தை நகரசபை கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்வதாகச் சொல்கிறார்கள். சர்க்காருடைய பூமி நகரசபை எல்லைக்குள்ளே இருந்தால் அந்தப் பூமியை அரிசன மக்களுக்கு வழங்குவதில் ஏன் தாமதம் இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சர்க்கார் பூமி வெறுமனே கிடக்கும் போது, அரசாங்கத்திற்குத் தேவை இல்லாதபோது, அவற்றை ஏழை அரிசன மக்களுக்குக் கொடுக்கலாம் என்று அரசாங்கம் கருதும் நேரத்தில் அரசாங்கம் நிச்சயமாக அவர்களுக்குக் கொடுக்கும்.

*** 552 கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய் துகீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு முறையில் கிராமங்களிலும் நகரங்களிலும் வீடு கட்டும் அரிசனங்களுக்கு அரிசன இலாகாவிலிருந்து 1/5 பாகம் பங்குத்தொகை முழுவதையும் கட்ட அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதுபற்றி 1959-ம் ஆண்டிலேயே பரிசீலனை செய்யப்பட்டது. கிராம வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரிசன உறுப்பினர்கள் பங்கு மூலதனம் செலுத்துவதை



20th July 1964]

எளிதாக்குவதற்காக அவர்களுக்கு அரசாங்க நிதிகளிலிருந்து கடன் வழங்கலாமென அரசாங்கம் முடிவு செய்தது. பங்கு மூலதனத் தொகையில் பாதி கடனாகக் கொடுக்கப்படும். மற்ற பாதியை உறுப்பினர்களே செலுத்த வேண்டும். ஆரம்பப் பங்கு மூலதனம் முழுவதையும் அரசாங்க நிதிகளிலிருந்தே கொடுப்பதற்குப் போதிய காரணமில்லையென்று அரசாங்கத்தார் கருதுகிறார்கள்.

இச்சலுகைகளை நகரக் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசன உறுப்பினர்களுக்கும் ஏன் விஸ்தரிக்கக்கூடாது என்பதை அரசாங்கம் யோசித்து வருகிறது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில், பங்குத் தொகையில் பாதிப் பணத்தை அரசாங்கம் கடனாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அது நடைமுறையில் இருந்தாலுங்கூட, பாக்கிப் பாதிப் பணத்தையும் உடனடியாக அரிசன மக்கள் கட்ட முடியாத காரணத்தினாலேதான், கிராம வீடு கட்டும் திட்டம் அரிசன மக்களுக்கு முழுப்பலனை அளிக்க முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இதை மறு பரிசீலனை செய்து, ஐந்திலொரு பங்குத் தொகை முழுவதையும் அரசாங்கமே அரிசன மக்களுக்குக் கொடுக்க அமைச்சர் அவர்கள் மீண்டும் ஏதாவது வழிவகை செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இது பற்றி அரசாங்கம் ஏற்கனவே பரிசீலனை செய்திருக்கிறது. பாதிப் பணத்தைக் கடனாகக் கொடுத்தால் அதிகமான பேர்களுக்குக் கொடுக்க முடியும் என்ற காரணத்தால், சில பேர்களுக்குக் கொடுத்ததைப் பல பேர்களுக்குக் கொடுக்கலாம் என்ற நோக்கத்தினால்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கூட்டுறவுத் திட்டத்தின்படி ஐந்திலொரு பங்குத் தொகையைக் கொடுக்கவேண்டுமென்ற தேவை இருப்பதால், அரிசன மக்களுக்கு இந்த வீடு கட்டும் திட்டம் வெகுவாகப் பரவவில்லை. ஆகவே, அரிசனங்கள் பத்திலொரு பங்குத் தொகை கொடுத்தால் போதும் என்ற முறையில் இத்திட்டத்தை மாற்றி அமைத்தால், சர்க்கார் பாதித் தொகை கொடுப்பதுபோக பாக்கித் தொகையை அரிசன மக்களே கட்டி விட முடியும். இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்க முடியுமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மதிப்புக்குரிய கூட்டுறவு இலாகா அமைச்சர் அவர்களுக்கு இக்கேள்வியைப் போடலாம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கூட்டுறவுக் கடன்கள் நிலம் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகிறதே தவிர, நிலமில்லாதவர்களுக்குக் கொடுக்கப்படுவதே இல்லை. அப்பொழுது வீடு கட்டிக் கொள்ள ஆசைப்படுகிற ஏழை அரிசன மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

**கனம் சபாநாயகர் :** இது கூட்டுறவு அமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டிய கேள்வி. தனியாகக் கேள்வி போடலாம்.

## பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு வீட்டு வசதி

* 553 **கேள்வி.—திரு. சோ. ஆறுமுகம்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்கு வீட்டு வசதி செய்து தரும் உத்தேசமுண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** முதல் நிலை வட்டாரங்களில் (இப்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சில்களின்) திட்டவாரி பட்ஜெட்டில் வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், வளர்ச்சி அதிகாரிகள், கிராம சேவக்குகள், கிராம சேவிகைகள் போன்றவர்கட்கு மட்டுமே குடியிருப்புகள் கட்டுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்து யூனியன்களில் பணிபுரியும் மற்றப் பணியாளர்கட்குக் குடியிருப்புகள் கட்ட அதில் வகை செய்யப்படவில்லை.

தேசிய நெருக்கடி நீடிக்கும் வரை, பணியாளர்க்குக் குடியிருப்புகள் கட்டும் திட்டத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயினும், 1964-65-ல் பணியாளர்க் குடியிருப்புகள் கட்டுவதற்கான செலவிற்கென ரூபாய் 5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கத்திலிருந்து, ஒவ்வொரு கிராம மாவட்டத்திலும் 10 கிராம சேவக்கு குடியிருப்புகள் கட்ட உத்தேசித்துள்ளது.

**திரு. எம். டி. தியாகராஜ் பிள்ளை:** இப்பொழுது அனேக இடங்களில் கூட்டு மன்றக் காரியாலயங்கள் வைக்கக் கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. அது பற்றி அரசாங்கத்தின் கொள்கை என்ன ? இப்பொழுது அதற்காக நிதி வழங்கப்பட்டு வருகிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** மூலக் கேள்வி, கூட்டு மன்றங்களில் வேலை செய்யக்கூடிய பணியாளர்களுக்குக் குடியிருப்பு பற்றியது. ஆனால், கனம் அங்கத்தினர் கேள்வி கேட்பது, கூட்டு மன்றத்திற்கான கட்டடம் சம்பந்தப்பட்டது. தனிக் கேள்வி போட்டால் நன்றாக இருக்கும்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** பஞ்சாயத்து யூனியனில் பணி புரியும் ஊழியர்களுக்கு அங்கே குடியிருப்புகள் கட்டித்தராத காரணத்தால், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள் அலுவலகத்திற்கு அருகேயே குடியிருக்க முடியாமல் தொலைக்குள்ளாவது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அப்படியானால், தேசிய நெருக்கடி என்கிற காரணத்தை விட்டுவிட்டாவது, யூனியன் அலுவலர்கள் அலுவலகத்திற்கு அருகில் குடியிருக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டாவது அவர்களுக்குக் கட்டட வசதி செய்து தரப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** தேசீய நெருக்கடி தோன்றுவதற்கு முன்பு கட்டடம் கட்டும் திட்டம் நடந்துகொண்டு வந்தது. ஆனால், தேசீய நெருக்கடி தோன்றிய பின்புதான் இந்தத் தடை விதிக்கப்பட்டது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.



**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** நெருக்கடியைக் காரணமாகக் காட்டுகிறார்கள் அமைச்சர் அவர்கள். நெருக்கடி தீர்ந்த பிறகு கட்ட இருக்கிற இந்த வீடுகள் நகரத்தை ஒட்டி இல்லாத தூரத்திலுள்ள கிராமப் பகுதிகளில் கட்டப்படாமல், கூட்டு மன்றங்கள் இருக்கும் இடங்களுக்கு அருகிலேயே கட்டப்பட அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** பஞ்சாயத்து யூனியன் அலுவலகத் தலைமையிடம் எங்கு அமைந்திருக்கிறதோ அதை அடுத்துத்தான் இதுவரையில் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. அதிகமான தூரத்தில் அம்மாதிரி வீடுகள் கட்டப்படுவதாக எந்தவிதமான தகவலும் அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. ஜே. மாதா கவுடர்:** தேசிய நெருக்கடி தீரும் வரையில் வீடு கட்டும் திட்டத்தை நாம் ஒத்திவைத்திருந்தாலும், ஒரே ஆபீசில் பணி புரியும் ஒருசிலருக்கு வீடு கட்டிக் கொடுத்து மற்றும் சிலருக்கு வீடு இல்லையென்று சொன்னால், அதனால் சங்கடம் ஏற்படுகிறது. ஆகவே, வீடு கட்டிக் கொடுக்கப்படாத ஊழியர்களுக்கு வீட்டு வாடகை அலவன்சையாவது அதிகரிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான், 1964-65-ல் பணியாளர் குடியிருப்புகள் கட்டுவதற்கான செலவிற்கென ஐந்து லட்ச ரூபாய் சர்க்கார் ஒதுக்கியிருக்கிறது. இதிலிருந்து ஒவ்வொரு கிராம மாவட்டத்திலும் பத்து கிராம சேவக்குக் குடியிருப்புகள் கட்ட சர்க்கார் உத்தேசித்துள்ளது.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் பெரும்பாலும் அந்த ஊரை ஒட்டி இல்லாமல், ஒரு மைல், இரண்டு மைல் தள்ளியே, அலாதியான இடத்திலே கட்டப்படுவதால், யூனியன் அலுவலகத்தில் வேலை செய்யும் பணியாளர்கள் பக்கத்திலுள்ள கிராமப் புறங்களிலிருந்து வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் அவர்களுக்கு ஏதாவது தனியாகப் பயணப்படி கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இது சம்பந்தமாக இப்பொழுது என்னிடம் தகவல் இல்லை. தனியாக எழுதியனுப்பினால் பரிசீலிக்கலாம்.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** சில பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் ஏற்படவேண்டிய இடங்களில் வீடு இல்லாத காரணத்தால், வேறு ஊர்களில், பத்து, பதினைந்து மைல் தொலைவில் கூட பஞ்சாயத்து யூனியன் அலுவலகங்கள் வைக்கப்பட்டு நடந்து வருகின்றன. அப்படிப்பட்ட இடங்களிலாவது பஞ்சாயத்து யூனியன் அலுவலர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்ட ஏற்பாடு செய்து கொடுக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** ஏற்கனவே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். எந்த இடத்திலாவது அத்தகைய அவசியம் இருக்கிறது என்று சட்ட மன்ற அங்கத்

[20th July 1964

தினர்கள் கருதி, சம்பந்தப்பட்ட கலெக்டரிடம் அதுபற்றி ஆலோசனை கூறினால், அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பண்ணைச் சாகுபடி (அறந்தாங்கி வட்டம்)

* 554 **கேள்வி.—திரு. ஆ. துரையரசன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி வட்டம் ஆவணம் பெருங்குடி கிராமத்தில், அரசாங்கம் நடத்திய பண்ணைச் சாகுபடிக்கு (1) மத்திய சர்க்கார் (2) மாநில சர்க்கார் வழங்கிய தொகை எவ்வளவு ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அறந்தாங்கி வட்டம் ஆவணம் பெருங்குடி கிராமத்தில் கூட்டுப் பண்ணைச் சாகுபடி முறையை அமுல் நடத்த இந்திய அரசாங்கம் தொகை எதுவும் வழங்கவில்லை.

அதற்காக மாநில அரசாங்கம் வழங்கிய தொகையின் விவரம் பின்வருமாறு :—

| நோக்கம். | அளிக்கப்பட்ட உதவியின் அளவு. | |
|---|---|---|
| | கடன். | உதவித் தொகை. |
| | ரூ. | ரூ. |
| (1) | (2) | (3) |
| 1. 10 ரூபாய் வீதத்தில் 50 உறுப்பினர்களுக்குப் பங்கு மூலதனம் செலுத்திய வகையில். | .. | 500 |
| 2. விவசாயக் கருவிகள் வாங்குவதற்கு .. | 2,000 | 2,000 |
| 3. 4 கட்டை வண்டிகள் வாங்குவதற்கு .. | 500 | 500 |
| 4. 10 ஜதை உழவு மாடுகள் வாங்குவதற்கு | 2,000 | 2,000 |
| | 4,500 | 5,000 |

தஞ்சாவூர் மத்திய பாங்கியிலிருந்து சாகுபடிச் செலவுகளுக்காக 15,000 ரூபாய் வரை சங்கம் வாங்கக் கூடிய கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவது குறித்தும் அரசாங்கத்தார் உத்தரவாதம் அளித்துள்ளனர்.

செயலாளராக வேலை செய்ய சீனியர் இன்ஸ்பெக்டர் ஒருவரையும், சங்கத்தின் பண்ணை வேலைகளில் உதவி புரிய வேளாண்மைத் துறை ஃபீல்டுமென் ஒருவரையும் அரசாங்கத்தார் இலவசமாக அனுமதித்தனர்.

**திரு. ஆ. துரையரசன் :** மேற்படி பண்ணை நிறுவப்பட்டதன் காரணம் என்ன ? ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்த நிலத்தினுடைய விஸ்தீரணம் 127.86 ஏக்கர். அது சரியான்படி நடத்தப்படவில்லை என்ற புகார் வந்தது. டெபுடி ரிஜிஸ்ட்ரார்



20th July 1964]

சென்று விசாரணை செய்தார். புது டைரக்டர்களை நியமித்ததற்குப் பிறகும் கூட அது சரியானபடி நடக்கவில்லை. ஆகவே, அதை நிறுத்த வேண்டியதாயிற்று.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** இப்பொழுது தீவிர சாகுபடித் திட்டம் தஞ்சையில் நடக்கிறது. அங்கு 74 கூட்டுப் பண்ணைகள் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றன. அங்கு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரணத்தால் அநேக சங்கங்கள் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, அதைப் பற்றிப் பரிசீலனை செய்து சங்கங்கள் சரிவர செயல்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கனம் அங்கத்தினர் அவர்கள் பொதுவாகச் சொல்கிறார்கள். குறிப்பாக ஏதும் கூறினால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ஆ. துரையரசன் :** அந்த இடத்தைக் கூட்டுப் பண்ணைக்காகத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு அரசினர் ஆராய்ச்சி நடத்தினார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** முன்னரே அந்த நிலம் பரிசீலிக்கப்பட்டது. நன்றாக விளைச்சல் ஏற்படும் என்ற எண்ணத்தால்தான் கூட்டுறவுப் பண்ணைக்கு அனுமதி கொடுக்கப்பட்டது.

**புலவர் கா. கோவிந்தன் :** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து 50 உறுப்பினர்கள் அதில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் 50 பேருக்கு ஆளுக்கு 5 ஏக்கர் வீதம் இருந்தால்தான் நல்ல பலன் கிடைக்கும். அந்நிலை இல்லாத காரணத்தால்தான் அந்தப் பண்ணை பலன் அளிக்காது போயிற்று என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? மேற்கொண்டு புதிய பண்ணைகளை அமைக்கும்போது இதை மனதிற்கொண்டு அமைப்பார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** நூறு ஏக்கர் மொத்தத்தில் இருந்தால் கூட்டுறவுப் பண்ணை வைக்க அனுமதி கொடுக்கலாம். அந்த முறையில் இந்தப் பண்ணைக்கு அனுமதி கொடுக்கப்பட்டு சர்க்காரிலிருந்து ஷேர் கொடுக்கப்பட்டது. மாடுகள், இம்ப்ளிமெண்ட்ஸ் ஆகியவை வாங்கிக் கொடுத்தும் இந்தப் பண்ணை சரியானபடி நடக்க முடியவில்லை.

**திரு. கரு. சீமைச்சாமி :** இந்தக் கூட்டுறவு விவசாய முறையினால் அதிக நஷ்டம் ஏற்படுகிறது என்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, இனிமேலாவது இப்படிப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகளுக்கு அரசாங்கம் பணம் கொடுக்காது தனியார்களுக்குப் பண உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா ?

**கனம் சபாநாயகர் : தனியார் கையில் பணத்தைக் கொடுத்தால் அவர் என்ன செய்வார் ?**

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கூட்டுறவுப் பண்ணைகள் பல ராஜ்யங்களிலும், நமது ராஜ்யத்தில் பல இடங்களிலும் நல்ல முறையில் நடந்து வருகின்றன. சில

இடத்தில் சிறிய கோளாறுகள் ஏற்பட்டாலும் கூட்டுறவுத் துறைக்கு ஊக்கம் அளிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் அரசாங்கம் பல உதவிகளைச் செய்யும்.

**திரு. கே.ஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** ஆவணம் பெருங்குடிப் பண்ணை என்னுடைய தொகுதி பக்கத்தில் இருக்கிறது. அதை நிலச்சுவான்தார் நடத்துகிறபோது லாபகரமாக இருந்தது. கூட்டுறவுப் பண்ணையாகச் செய்த பிறகு நஷ்டம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன? சர்க்கார் நடத்துவதால் இவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது என்றால் இந்தக் கூட்டுறவுப் பண்ணை முறையைக் கைவிட சர்க்கார் முன் வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சர்க்கார் அதை நடத்துவதில்லை. சர்க்கார் அந்தப் பண்ணைக்குக் கடன் கொடுத்து உதவி செய்கிறது. அந்தப் பண்ணையைச் சரியாக நடத்துவதற்கு அதன் தலைவர்கள் சரியானபடி முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

**திரு. ஆ. துரையரசன் :** மேற்படி நிலச்சுவான்தார் நஷ்ட ஈடு கோரி அரசாங்கத்தின் மீது வழக்குப் போட்டிருக்கிறாரா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

## சுற்றுலாத் தலம்

*555 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சிக் கோட்டைக்கு அருகில் ஒரு டூரிஸ்ட் செண்டர் கட்ட கோரிக்கை வந்ததா ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம், ஐயா.

(இ) பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்த மாதிரி டூரிஸ்ட் செண்டர்கள் செஞ்சியில் மட்டுந்தான் கட்டப்படுமா அல்லது தமிழ் நாட்டில் எங்கெங்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ அங்கெல்லாம் பிரயாணிகள் வந்து தங்குவதற்கு டூரிஸ்ட் செண்டர்கள் கட்டப்படுமா ? இதனுடைய அடிப்படைத் திட்டம் என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** எங்கெல்லாம் பிரயாணிகள் வந்து தங்குகிறார்களோ அங்கெல்லாம் டூரிஸ்ட் செண்டர்கள் கட்டுவது இடையாது. சில இடங்களில் ஏற்கெனவே டூரிஸ்ட் ஹோம் இருக்கின்றன. புதிதாக சில இடங்களில் டூரிஸ்ட் ஹோம் கட்ட வேண்டு



மென்று திட்டத்தில் சேர்க்கப்பட்ட இடங்களில் புதிய டூரிஸ்ட் ஹோம் கட்டப்படும். செஞ்சியில் ஏற்படுத்துவது பரிசீலனையில் இருக்கிறது. எந்தெந்த இடத்தில் ஏற்படுத்தத் திட்டம் இருக்கிறது என்பதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதில் கூற முடியும்.

## பயணிகள் விடுதி

*556 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடலூர் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் ஜோதியைப் பார்க்க வரும் யாத்ரீகர்களுக்காக வடலூரில் ஒரு டூரிஸ்ட் ஹோம் கட்ட உத்தேசமுண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இல்லை, ஐயா.

## மதிய உணவு

*557 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், வெண்பாக்கம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த கொடையம்பாக்கம் பள்ளிக்கூடத்தில் மதிய உணவுத் திட்டத்தில் நடைபெற்றுள்ள ஊழல்கள் பற்றி 1963-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் ஊராட்சி மன்றத் தலைவரும் ஊராரும் அரசாங்கத்துக்கு முறையீடு அனுப்பியுள்ளனரா ?

(இ) அப்படியானால் அதன்மீது அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) ஆம், ஐயா.

(இ) முறையீட்டில் குறிப்பிட்டுள்ள குற்றசாட்டுக்கள் கல்வி இலாகா அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டு அவைகளுக்கு ஆதாரமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

**புலவர் கா. கோவிந்தன் :** அந்த ஆசிரியர் அப்போது உணவுத் திட்டத் தலைவராக இருந்தவருக்குத் தெரியாமலே பணத்தை வாங்கிக் கொண்டதாக அந்த வட்டக் கல்வி அதிகாரியும் யூனியன் கல்வி விஸ்தரிப்பு அதிகாரியும் ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். ஆனால் மூன்று மாத காலம் வரையும் அப்பள்ளியைப் பார்வையிடவில்லை என்ற குற்றச்சாட்டு தம்மீது வரும் என்ற காரணத்தால் அதிகாரிகள் மீண்டும் அவரை அழைத்து வேறு ஒரு ஸ்டேட்மெண்ட் வாங்கியிருக்கிறார்கள். இதைப் பற்றி விசாரித்தார்கள் என்று சொல்லும்போது விசாரணையின்போது அந்த

மகஜரை அனுப்பியவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டதா? கல்வி அதிகாரி கூறியதால் அரசாங்கத்தார் ஏற்றுக் கொண்டார்கள் என்பது முறையா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் சர்க்கார் விசாரணை சரியல்ல என்றுதான் சொல்லுகிறார்கள். இதைப் பற்றி எல்லாம் விசாரணை செய்வதற்கு தலைமை அதிகாரி டி.பி.ஐ. இருக்கிறார். அவர் விசாரணை செய்து குற்றச்சாட்டுக்கு இடமில்லை என்று கூறியிருக்கிறார். அதுதான் சரி என்று அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது.

**புலவர் கா. கோவிந்தன்:** கல்வி அதிகாரியினுடைய அறிக்கையை அமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். அந்த அதிகாரியினுடைய அறிக்கையை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அந்தக் கல்வி அதிகாரி குற்றச்சாட்டைக் கொடுத்த பஞ்சாயத்துத் தலைவரையும், அந்த ஊராரையும் விசாரித்தார்களா? அப்படியானால் அவர் யார் யாரை எந்த எந்தத் தேதியில் விசாரித்தார்? அவர்கள் ஸ்டேட்மெண்டில் அதைப்பற்றி என்ன கூறப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** நிர்வாகத்திலே ஒரு அதிகாரியிடத்தில் 'விசாரணை நடத்துங்கள்' என்று சொன்னால் அந்த அதிகாரி யாரை விசாரிக்கவேண்டும், எப்போது விசாரிக்க வேண்டும், எந்த விதமாக விசாரிக்க வேண்டுமென்பதெல்லாம் அவருடைய பொறுப்பு. அந்த வகையில் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் அவர் உசிதப்படி விசாரணை நடத்தி அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கத்தினர் சொல்லுகிறபடிதான் விசாரணை நடக்க வேண்டுமென்று சொன்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதிகாரி எந்த முறையில் விசாரணை நடத்த வேண்டுமென்று நினைக்கிறார்களோ அந்த முறையில் விசாரணை நடத்தி இருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்:** அமைச்சர் அவர்கள் பதிலில் அங்கத்தினர் கூறுகிறபடி விசாரணை நடத்த முடியாது என்று சொன்னார்கள். அவர் கோரியது யாரை எப்படி விசாரணை செய்தார்கள் என்பதைத்தான். அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அரசாங்கம், அதிகாரிகள் விசாரித்து அனுப்புகிற ரிப்போர்ட்டைப் பரிசீலனை செய்கிறதே தவிர, யாரை விசாரித்தார், எதை விசாரித்தார், எப்படி விசாரித்தார், என்ன வாக்குமூலம் வாங்கினார் என்பதையெல்லாம் கூர்ந்து பார்க்க இயலாது. நிர்வாகத் துறையிலே இதற்காகத் தலைமை அதிகாரி இருக்கிறார். அதிகாரி நியாயமான முறையில் விசாரிக்கவில்லை; தவறான முறையில் விசாரணை நடத்தினார் என்ற குற்றச்சாட்டைக் கனம் அங்கத்தினர் பொறுப்புடன் சொல்வதற்குத் தயாராக இருந்தால் அதைப்பற்றி மீண்டும் பரிசீலனை செய்யலாம்.



**புலவர் கா. கோவிந்தன்:** அமைச்சர் அவர்கள் கேட்டதற்காகத்தான் சொல்கிறேன். அந்தக் கல்வி அதிகாரி அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவரையோ, குற்றஞ்சாட்டி அனுப்பியிருக்கிறவர்களையோ விசாரிக்கவில்லை . . . 9-00 a.m.

MR. SPEAKER: The hon. Member cannot go into details. He can complain, if he wants, that such and such things were not being done. Then Government may make enquiries in whatever way they deem fit. This is not the place where the hon. Member can cross-examine the Hon. Minister on details.

**புலவர் கா. கோவிந்தன்:** அமைச்சர் அவர்கள் கூறிய காரணத்தால் அந்தக் கல்வி அதிகாரி சரியான முறையில் விசாரிக்கவில்லை என்று சொல்கிறேன். ஆகவே அப்படிப்பட்ட ஒரு விசாரணையை மீண்டும் செய்ய அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** எந்த முறையில் சரியாக விசாரணை செய்யவில்லை, எந்த முறையில் அவர்கள் ப்ரஜுடிஸ்ஸாக விசாரணை செய்தார்கள் என்று கனம் அங்கத்தினர் கம்ப்ளெயின்ட் செய்து எழுதி அனுப்பினால் அதை சர்க்கார் பார்த்து அதன் பேரில் முடிவு செய்யும்.

**கனம் சபாநாயகர்:** அதைத்தான் சொல்கிறார்கள்.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** மதிய உணவுத் திட்டத்தில் இப்படிப் பலவிதமாக உணவு தயார் செய்து விநியோகம் செய்வதால் பலவித ஊழல்கள் ஏற்படுவதால் உணவு தயார் செய்து கொடுப்பதற்குப் பதிலாக ஏழை மாணவர்களுக்குப் பணமாக அவ்வப்போது கொடுத்துவிட்டால் அவர்கள் இஷ்டம் போல் தயார் செய்து கொள்வார்கள். அப்படிச் செய்ய உத்தேசமுண்டா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்தவிதமான உத்தேசமில்லை. வேறு பதில் சொல்லலாம். வேண்டாமென்று நினைக்கிறேன்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** நடத்தப்பட்ட விசாரணை பகிரங்க விசாரணையா? அல்லது ரகசிய விசாரணையா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** யார் யாரைப் பார்த்துக் கேட்கவேண்டுமோ, சம்பந்தப்பட்டவர்கள் யார் இருக்கிறார்கள் என்று நினைத்தார்களோ அவர்களை டி.பி.ஐ. அதிகாரிகள் மூலம் விசாரணை செய்தார்கள். இதில் ரகசியமும் இல்லை; பகிரங்க விசாரணை என்று எல்லோரையும் அழைத்து விசாரணை செய்யவும் இல்லை.

### சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் (திருவாரூர்)

*558 கேள்வி.—**திரு. ப. ஜெயராஜ்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நன்னிலம் தாலூகாவின் தலைநகராகிய நன்னிலத்திலிருந்து சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை திருவாரூருக்கு மாற்றி இருப்பதை மறுபடியும் நன்னிலத்திற்கு மாற்ற உத்தேசமுண்டா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இல்லை.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை:** நன்னிலம் தாலுகா தலைநகரில் 42 ஆண்டுகளாக இருந்த சப் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் நாகப்பட்டினத்திற்கு மாற்றப்பட்டதால் 30, 40 மைல்கள் கட்சிக்காரர்கள் அங்கு செல்ல வேண்டியிருப்பதால் செலவும் கஷ்டமும் ஏற்படுவதால் திரும்ப நன்னிலம் தலைநகருக்கே அந்தக் கோர்ட்டை மாற்ற ஏற்பாடு செய்வார்களா? அதற்கு முன்னதாக காம்ப் கோர்ட்டாவது ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார்:** இதில் எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கில்லை.

### பிளேக்

*559 **கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ல் கிருஷ்ணகிரி-ஓசூர் பகுதிகளில் பிளேக் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) இறந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:**

| | 1962. | 1963. |
|---|---|---|
| (அ) கிருஷ்ணகிரி தாலூகா .. .. .. | இல்லை. | 6 |
| ஹோசூர் தாலூகா .. .. .. | 10 | 20 |

| | 1962, | 1963. |
|---|---|---|
| (இ) கிருஷ்ணகிரி தாலூகா .. .. .. | .. | 2 |
| ஹோசூர் தாலூகா .. .. .. | 20 | 4 |

(உ) நோய் பரவியுள்ள கிராமங்களுக்கும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சுகாதாரப் பணியாளர் உடனடியாகச் சென்று பார்வையிட்டனர்; அங்குள்ள கிராம மக்களுக்கும் பிளேக் ஊசி போடப்பட்டது. பிளேக் கண்ட கிராமங்களில் எல்லா வீடுகளிலும் B.H.C. சயனோகாஸ் தெளிக்கப்பட்டன. பிளேக் பரவுவதைத் தடுப்பதற்காக, பாதிக்கப்பட்ட கிராமங்களைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் இத்தகைய பாதுகாப்பு முறை மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகள் அனைவருக்கும் அவரைச் சார்ந்தவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது.



**திரு. எம். வி. கரிவேங்கடம்:** நம் மாநிலத்தில் கிருஷ்ணகிரி, ஓசூரில்தான் ப்ளேக் இருக்கிறது. மலேரியா, காலரா போன்றவற்றைக் கூடுமானவரை கட்டுப்படுத்தியிருக்கிறோம். இதையும் கட்டுப்படுத்தி அறவே ஒழிக்க ஆராய்ச்சி நடத்தப்படுகிறதா? அதற்காக என்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** இதைக் கட்டுப்படுத்தி அறவே ஒழிக்க ஒரு குழு, நாஷனல் இன்ஸ்டிட்யூட் ஆப் கம்யூனிகபிள் டிஸீஸஸ், ந்யூ டெல்லியிலிருந்து ஒரு அஸிஸ்டென்ட் டயரக்டர் அவருடன் ஒரு குழு அமைத்து இந்த இடங்களுக்குச் சென்று ப்ளேக் வரக் காரணம் என்ன, தடுப்பதற்கும் வராமல் இருப்பதற்கும் என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதையெல்லாம் அவர்கள் தக்க முறையில் ஆராய்ந்து பார்த்து அவர்கள் ரிப்போர்ட்டை அனுப்பி வைப்பார்கள் என்று மாநில அரசாங்கம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

### ஊழியரின் உண்ணாவிரதம் (சிவகங்கை)

*560 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் சிவகங்கையில் உள்ள மண்வளப் பாதுகாப்பு விவசாயப் பொறியியல் மேற்பார்வையாளர் அலுவலகம் முன்பு மேற்படி இலாகாவில் பணிபுரியும் செல்லப்பா என்பவர் 1964-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26-ந்தேதியில் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அறிவித்தது உண்மையா?

(இ) ஆமெனில், என்ன காரணங்களுக்காக அந்த முடிவைத் தெரிவித்தார்?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவிக்கும் மனு ஒன்று வந்துள்ளது. அதில் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்படும் தேதிபற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. அந்த மனுவை வாபஸ் பெற்றுக்கொண்டதாகத் தெரிவித்திருக்கிறார்.

(இ) மண் வளப் பாதுகாப்புத் துணை உதவியாளர்களின் சம்பள விகிதம் அதிகப்படுத்தப்படாவிடில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக திரு. A. செல்லப்பன் பயமுறுத்தியிருந்தார்.

(*a*) A petition giving notice of undertaking a fast has been received. But no specific date for the commencement of the fast has been indicated in it. He has since withdrawn the threatened strike.

(*b*) Sri A. Chellappa has threatened to go on fast, if the scale of pay of Soil Conservation Sub-Assistants is not enhanced.

[20th July 1964

**திரு. செ. மாதவன்:** இந்த சப்-அஸிஸ்டெண்ட்டுக்கு ஏற்கனவே இருந்த சம்பள விகிதமும் இப்போதுள்ள சம்பள விகிதமும் மாறுபட்டிருக்கிறதா? காரணம் என்ன? சம்பள விகிதம் குறைக்கப்பட்டதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** இப்போதுள்ள சம்பள விகிதம் —1-6-1960 முதல ரூ. 60-4-100. ரிவைஸ்ட்-ஸ்கேல் ரூ. 90-4-110-3-140. அவர்கள் கோரிக்கையில் ரூ. 110-4-130-5-150 வேண்டுமென்று சொல்லிக் கொண்டு உண்ணாவிரதம் இருக்கப் போகிறோம் என்று பயமுறுத்தினார்கள். பயமுறுத்தலை அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் அப்புறம் ஒரு காரியமும் நடக்காது. நியாயமான முறையில் வந்தால் அரசாங்கம் பரிசீலிக்கும். பயமுறுத்தலுக்கு அரசாங்கம் ஒருகாலும் பணியாது.

**திரு. இரா. நாராயணன்:** சப் அஸிஸ்டெண்ட்டுக்கு ஈ.ஓ. (அக்ரி.) ப்ரோமோஷன் கொடுக்கும்போது அவர்கள் சம்பள விகிதத்திற்கும் ஈ.ஓ. (அக்ரி.) ஆக டயரக்ட்டாக அப்பாயிண்ட் ஆகிறவர்களுக்கும் வித்தியாசம் இருக்கிறது. காரணம் என்ன? ஏன் இவர்களுக்கு ஒரே சம்பளமாகக் கொடுக்கமுடியாதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** காரணம் தெரியவில்லை. தனிக் கேள்வி வேண்டும்.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** அரசாங்க ஊழியர்கள் இவ்விதம் உண்ணாவிரதம் இருப்பதாக மிரட்டுவதால் கோட் ஆப் காண்டக்டில் இதுபற்றிப் பரிசீலனை செய்து அதைத் தடுக்க ஏற்பாடு செய்து அரசாங்கத்திற்கு நோடீஸ் அனுப்பினால் சர்விஸிலிருந்து அவர்களை நீக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கோட் ஆப் காண்டக்டில் போடவேண்டியதில்லை. எப்பேர்ப்பட்டவர்கள் இவர்கள் என்று அரசாங்கம் அறியும்.

**கனம் சபாநாயகர்:** ஐ.பி.ஸி. இருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** குறிப்பிட்ட நபர் கோரியதில் நியாயம் இருக்கிறது என்று அரசாங்கம் கருதுகிறதா?

**கனம் திரு. பூ. கக்கன்:** பயமுறுத்தல் நோடீசை வித்ட்ரா செய்து கொண்டார்கள். டயரக்டர் ஆப் அக்ரிகல்ச்சர் பரிசீலனை செய்து அரசாங்கத்தின் பரிசிலனைக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

**திரு. செ. மாதவன்:** நியாயமான கோரிக்கைக்கு உண்ணாவிரதம் இருப்பது காந்தியடிகள் கடைப் பிடித்த புனிதமான கருவியாகும், அப்படிப்பட்ட உண்ணாவிரதத்தை பயமுறுத்தல் என்று சொல்கிறார்கள். உண்ணாவிரதம் என்பதைப்பற்றி சர்க்கார் கொள்கை என்ன? உண்ணாவிரதம் என்று சொன்னால் அது பயமுறுத்தலா என்று கேட்க விரும்புகிறேன்.



20th July 1964]

**கனம் சபாநாயகர்:** எல்லோரும் உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்தால்?

**கனம் திரு. பூ. கக்கன்:** மகாத்மா காந்தி அடிகளுக்கும் வேலைப் பளுக்கும் உள்ள வித்தியாசம் தெரிந்திருக்கலாம். இறுதியாக, வேறு வழியில்லை என்று கடைசியில் உண்ணாவிரதம் ஆரம்பித்தார் காந்தி அடிகள். எடுத்ததற்கெல்லாம் உண்ணாவிரதம் என்றால் கட்டுக்கு அடங்காது. அதற்கு இடமேயில்லை.

**திரு. மீ. கல்யாணசுந்தரம்:** அமைச்சர் அவர்கள் கூறிய பதிலில் இருந்து அவர் உண்ணாவிரதத்தை வாபஸ் பெற்ற பிறகு கோரிக்கையை அனுதாபத்தோடு கவனிக்கப் போவதாக அறிகிறேன். அந்த மட்டும் சந்தோஷம். கோரிக்கையை வைத்தவுடன் அரசாங்கத்திற்குத் தெரிவிக்காமல் எடுத்த எடுப்பில் பயமுறுத்தினாரா? போதுமான அவகாசம் கொடுத்தும் அரசாங்கம் பரிசீலனை செய்ய காலம் கழித்து வந்ததால் உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்தாரா?

**கனம் திரு. பூ. கக்கன்:** அதற்கு முன்பு அனுப்பிய மகஜர், விண்ணப்பங்கள் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

## *Institute of Leather Technology*

* 561 *Q.*—SRI V. S. S. MANI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many students are passing every year from the Institute of Leather Technology in the City of Madras after completing their Diploma Course; and

(*b*) whether it is true that these students face with unemployment problem in this State?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) About 15 students each in Diploma in Leather Technology and Diploma in Leather Goods Manufacture.

(*b*) So far as the Diploma candidates in Leather Goods Manufacture are concerned there is some unemployment. But the training given in the Institute is intended to help candidates to become self-employed. However, efforts are being made to absorb the unemployed candidates in private and Government concerns including the Defence Department.

**திரு. வி. எஸ். எஸ். மணி:** சார், லெதர் டெக்னாலஜி இன்ஸ்டிட்யூட்டில் கொடுக்கப்படுகின்ற பயிற்சியில் ஏராளமான மாணவர்கள், படித்து, தங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் மூன்று இரண்டாண்டு செலவு செய்து இந்தப் பயிற்சியைப் பெறுகின்ற மாணவர்

களுக்கு இந்த மாநிலத்தில் வேலை கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லையென்றாலும் அடுத்த மாநிலங்களிலாவது வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை செய்யுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதில் இரண்டு விதமான டிரெயினிங் கொடுக்கப்படுகிறது. ஒன்று, "டிப்ளோமோ இன் லெதர் டெக்னாலஜி". இன்னொன்று, "டிப்ளமோ இன் லெதர் குட்ஸ் மானுபாக்சர்". தோல் பண்டங்களை உற்பத்தி செய்கின்ற பயிற்சியில் படிக்கின்றவர்கள், இதைப் பயிற்சி முடிந்த பின்னால் தாங்களாகவே ஏதாவது தொழில் செய்து கொள்ளலாம் என்ற எண்ணத்தில் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். இந்த அடிப்படையில் படிக்கின்றவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்று சொல்வது சரியாகாது. தாங்களாகவே தொழில் செய்து கொள்வதற்குத் தகுந்த அளவில் தான் இந்தப் பயிற்சி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

**புலவர் கா. கோவிந்தன்:** தோலைக் கொண்டு தாங்களாகவே பொருட்களை உற்பத்தி செய்து கொள்வதற்குத் தகுந்த முறையில் கொடுக்கப்படுகின்ற பயிற்சிக்கு இந்த வருடமும் இடம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** தாங்களாகவே வேலை செய்து கொள்ளலாம் என்று நினைக்கின்றவர்கள் தான் இந்தப் பயிற்சியில் சேரவேண்டும். அந்த நம்பிக்கை இல்லாதவர்கள் இந்தப் பயிற்சியில் சேரக்கூடாது என்பதைச் சர்க்கார் விளக்கமாகச் சொல்லியிருக்கிறது.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** அவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிலும், தோல் உற்பத்தித் தொழிலும் சென்னையில் அதிகமாக இருக்கின்றன. ஆகவே இந்தப் பயிற்சி பெற்று வருகிறவர்களுக்கு வேலை வாய்ப்பு செய்து கொடுக்கின்ற முறையில் அரசாங்கமே முன் வந்து, தோல் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கான ஒரு தொழிற்சாலையை அமைக்க முன் வருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இப்போது சர்க்கார் சில லெதர் குட்ஸ் யூனிட்டுகளை வைத்திருக்கிறது. ஆனால் தனியார்த் துறையில் தான் இந்தத் தொழில் ஏராளமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தால் சர்க்கார் மேலும் அமைப்பதற்கு உத்தேசமில்லை.

*Textile Mills*

*562 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the rationalisation talks between labour and managements covering the textile mills in Coimbatore region are over;

(b) if so, the details thereof;



(c) whether the Government have any proposal to set up tribunals for similar rationalisation talks for the textile mills in Madras and Madurai regions also; and

(d) if so, when?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The Rationalisation talks between labour and managements of Textile Mills in Coimbatore region resulted in a settlement before the Commissioner of Labour on 26th December 1962 as far as the Spinning Departments were concerned. Talks in respect of other Departments are pending before the Umpire appointed for the purpose.

(b) A copy of the settlement [a] dated 26th December 1962 is placed on the Table of the House.

(c) The reference now pending before the Umpire covers both the Madurai and the Coimbatore regions. As for Madras is concerned, the Buckingham and Carnatic Mills and the Madras Labour Union have reached a settlement between themselves.

(d) Does not arise.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஸார், மேஜைமீது வைத்துள்ள அறிக்கையில் . .

. . . "In respect of mills in Annexure 'B' the wages payable for existing work assignments in the said mills shall be submitted to the Arbitration by the Minister for Labour, Honourable Sri M. Bhaktavatsalam and his decision shall be final and binding on the managements and workers of the said mills."

என்றிருக்கிறது. இது சம்பந்தமான முடிவுகள் ஏற்பட்டு விட்டனவா? அப்படியானால் அதன் விவரங்களைத் தெரிவிக்க முடியுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இது சம்பந்தமாக லேபர் மினிஸ்டர் அவர்கள் தீர்ப்பு கொடுத்துள்ளார்கள், 20-12-1963-ல் தீர்ப்பு கொடுக்கப்பட்டது. இதனுடைய முழு விவரங்களும் வேண்டுமென்றால், தனிக் கேள்வி போட்டால் இந்த விவரங்களை மேஜை மீது வைக்கலாம். குறிப்பாக இதிலுள்ள விவரங்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றால், பீஸ் வீவர்சுக்கு 82 ரூபாய்க்குக் குறையாமலும், டாப்பிங்—பாய்ஸ்களுக்கு 50 ரூபாய்க்குக் குறையாமலும் இருக்கவேண்டும் என்பது தான்.

*Offences under Removal of Untouchability Act*

*563 Q.—SRI P. K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) how many prosecutions were launched under the Removal of Untouchability Act for the last five years; and

(b) the details thereof?

[a] Printed as Appendix I on pages 413-421.

[20th July 1964

THE HON. SRI P. KAKKAN : (a) 282

(b) The details are given below :—

| | | |
|---|---|---|
| 1. | Number of prosecutions launched under the Removal of Untouchability (Offences) Act, 1955 for the last 5 years (i.e.) from 1958 to 1963 (upto 31st October 1963) .. .. .. | 282 |
| 2. | Cases which ended in conviction .. .. .. | 107 |
| 3. | Cases which ended in acquittal .. .. | 94 |
| 4. | Cases which ended in compounding .. .. | 46 |
| 5. | Cases reported as undetected .. .. .. | 8 |
| 6. | Cases referred as mistake of fact .. .. | 6 |
| 7. | Cases which ended in compromise .. .. | 1 |
| 8. | Cases which ended in admonishing the accused .. .. .. .. .. .. | 1 |
| 9. | Cases which are pending enquiry in courts, etc. | 17 |
| 10. | Case in which accused committed suicide while enlarged on bail .. .. .. .. | 1 |
| 11. | Case for which details are not available .. | 1 |
| | Total .. | 282 |

(அ) 282.

(இ). கீழே விவரம் கொடுக்கப்பட்டுள்ளது.

(1) 1958 முதல் 1963 (31—10—1963) வரை கடந்த 5 ஆண்டுகளில் 1955-ம் ஆண்டு தீண்டாமை ஒழிப்பு (குற்றச்) சட்டத்தின் கீழ் தொடுத்த வழக்குகளின் எண்ணிக்கை—282

(2) தண்டனையளிக்கப்பட்ட வழக்குகள்—107

(3) விடுதலையான வழக்குகள்—94

(4) இசைந்து தீர்த்துக்கொண்ட வழக்குகள்—46

(5) துப்பு துலக்க முடியாதவையென்று அறிவிக்கப்பட்ட வழக்குகள்—8

(6) வழக்கு சம்பந்தமான உண்மை நிலையில் தவறு இருப்பதாக அனுப்பப்பட்ட வழக்குகள்—6

(7) சமரசத்தில் முடிவடைந்த வழக்கு—1

(8) குற்றவாளியை எச்சரித்து விட்ட வழக்கு—1

(9) நீதி மன்றங்களில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்குகள்—17

(10) ஜாமீனில் விடுவிக்கப்பட்டபோது குற்றவாளி தற்கொலை செய்து கொண்ட வழக்கு—1

(11) முழு விபரம் கிடைக்காமலிருக்கும் வகையில்—1

மொத்தம்—282



20th July 1964]

**திரு. கே. ஏ. மதியழகன் :** சார் இந்த வழக்குகளில், எந்த மாவட்டத்தில் அதிகமான வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன? இதில் 107 வழக்குகளில் தண்டனை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி எந்த மாவட்டத்தில் வழக்குகளுக்கு கூடுதலாக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது? அதற்கு அடுத்தபடியாக எந்த மாவட்டத்திற்குத் தண்டனை அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கின்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் கொடுக்க முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** தஞ்சாவூர் மாவட்டத்தில் 31—10—1963 வரை 18 வழக்குகள், மதுரையில் 13, திருச்சிராப்பள்ளியில் 12. இவ்விதமாக எல்லா மாவட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமாக தஞ்சாவூர், மதுரை திருநெல்வேலி இந்த மாவட்டங்களில் இருக்கின்றன.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தஞ்சை, மதுரை, திருநெல்வேலி முதலிய மாவட்டங்களில் தீண்டாமைக் குற்றங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், இதைத் தடுப்பதற்குத் தீவிரமாக ஏதாவது திட்டம் மேற்கொள்ளப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** தீவிர சாகுபடி திட்டம் மாதிரி இதற்கு ஒன்றும் செய்ய முடியாது. குற்றங்களைக் கண்டுபிடித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ. ஜி. ஆப் போலீஸ்-க்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். சம்மன் அனுப்பாமலேயே கைது செய்து வழக்குத் தொடரலாம் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது தவிர டெப்யூடி சேவக்-களை வைத்திருக்கிறோம். அவர்கள் மூலமாக பொது இடங்களில், ஹோட்டல்களில் தீண்டாமை குற்றம் நடந்தால் உடனடியாக போலீசுக்கு ரிப்போர்ட் செய்யவேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதோடு வருஷா வருஷம், 25 ஆயிரம் ரூபாய் தீண்டாமை ஒழிப்புக்காக அரிஜன நல இலாகாவிலிருந்து மான்யமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, எந்த இடத்தில் உயர்வு தாழ்வு இல்லாமல் சமமாக நடத்தப்படுகிறதோ அந்த இடத்திற்கு உதவி செய்வதற்காக 1964-65-ஆம் ஆண்டில் 18 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதோடு முதலாவது பரிசாக 1,000 ரூபாயும், இரண்டாவது பரிசாக 500 ரூபாயும் ஒதுக்கப்பட்டு சாமான்களாகவோ அல்லது ரூபாயாகவோ தேர்ந்தெடுக்கப்பட்ட இடத்திற்குக் கொடுக்கப்படுகிறது.

MR. SPEAKER : The hon. Member does not want all that the Hon. Minister is reading. He wants to know whether some scheme will be taken up or not.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் இதற்கு ஏதாவது தீவிர திட்டங்கள் இருக்கின்றனவா என்று கேட்டார்கள். . .

[20th July 1964

கனம் சபாநாயகர்: தீவிர திட்டம் என்பதற்காக இதையெல்லாம் விளக்க வேண்டியதில்லை.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தீண்டாமைச் சட்டம் வந்ததற்குப் பின்னாலே கூட இன்னும் நம் நாட்டிலே தாழ்த்தப்பட்டவர்கள் மேலே துண்டு போட்டுச் செல்ல முடியாது, கோயிலுக்குச் செல்ல முடியாது என்ற நிலை இருக்கிறதே, இதற்குக் காரணம் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தில் உள்ள குறைபாடுகளா? அல்லது அந்தச் சட்டத்தை நல்ல முறையில செயலாற்றுவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுவதா? இதைப்பற்றி அரசாங்கம் ஆலோசித்ததா? அதன் முடிவு என்ன?

கனம் திரு. பூ. கக்கன்: சமூகத்தில் இருக்கும் அநீதியை அகற்ற அரசாங்கம் அக்கறை எடுத்து வருகிறது. இந்த அநீதி பல ஆயிரக்கணக்கான வருஷங்களாக இருந்து வருவதால் அதை உடனடியாக நீக்கிவிட முடியாது என்று எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும் வெகு துரிதமாக அகற்றிக் காட்ட வேண்டுமென்று அரசாங்கம் பாடுபட்டு வருகிறது. நகரங்களை எடுத்துக் கொண்டாலும், தாலுகா நகரங்களை எடுத்துக்கொண்டாலும் இந்த மாதிரி பேச்சே கிடையாது. சில குக்கிராமங்களில்தான் மனமாற்றம் வராமல் இருக்கிறது. அந்த இடங்களில் அதிகாரிகளைக் கொண்டும், ஹரிஜன நலப் பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களைக் கொண்டும் அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படவேண்டும் என்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, போடப்பட்ட வழக்குகளில் இருந்து எந்த வகையில் இந்தத் தீண்டாமை கையாளப்பட்டு வருகிறது என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: அப்போதைக்கப்போது கேஸ் எடுக்கும் போது எஃபெட் இருக்கிறது.

MR. SPEAKER: To give the details of the case, the Hon. Minister has to look into the file and that will take time. We have got only five more minutes to dispose of the remaining questions.

## குடிநீர் திட்டம் (உடையார்பாளையம் வட்டம்)

* 564 கேள்வி.—திரு. இரா. நாராயணன்: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் செந்துறை பகுதியில் குடிதண்ணீர் திட்டத்திற்காக மாவட்டக் கமிட்டியில் எஸ்டிமேட்டுகள் தயார் செய்ய தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டதா?



20th July 1964]

(இ) ஆமெனில், இத்திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. இரா. நாராயணன்: தலைவர் அவர்களே, இந்தக் குடிதண்ணீர் வசதி அந்தப் பகுதியிலே இல்லாத காரணத்தினால் நரம்புச் சிலந்தி என்ற வியாதி ஏற்பட்டு அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்ப்பதற்குத் தவறி விட்ட காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கலாமா வேண்டாமா என்பதைப் பற்றி டெவலப்மெண்ட் கவுன்ஸில் மூலமாகச் சிபாரிசு செய்து அனுப்பியிருந்தார்கள். ஏற்கெனவே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் ஸாங்ஷன் ஆன இடங்களில் கூட தற்போது அவைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. செந்துறை பஞ்சாயத்தைப் பொறுத்த வரையில் திருச்சி கலெக்டருக்கு அரசாங்கம் எழுதி அவர்களுடைய ரிப்போர்ட்டை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. அவரும் பப்ளிக் ஹெல்த் என்ஜினியரோடு கலந்து பேசிய பிறகு எஸ்டிமேட் அனுப்புவதாகக் கூறியிருக்கிறார். எஸ்டிமேட்டைப் பார்க்கும்போது அதை உடனடியாக எடுத்துச் செய்வதற்கு இயலாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

## தொழிற்பேட்டை

* 565 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலத்தில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவும் திட்டம் இப்போது எந்த நிலையில் உள்ளது?

THE HON. SRI R. VENKATARAMAN: A total extent of 26.56 acres of land in Narasojipatti and Reddiyur villages required for establishing the Industrial Colony at Salem has been notified under the Land Acquisition Act. But possession of 19.72 acres of lands has not been taken by the Government as the owners of the lands have filed writ petitions in the High Court challenging the validity of the acquisition proceedings taken by Government.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, அந்த இடத்திலே அந்த அக்விஸிஷன் ப்ரொஸீடிங்கை ஆட்சேபித்து ரிட் மனு தாக்கல் செய்திருப்பதாகச் சொன்னார்கள். வேறு இடத்தில் இதை அமைக்க வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே அமைப்பதற்கு வேலையை துரிதப்படுத்துவார்களா?

[20th July 1964

**கனம் சபாநாயகர் :** அங்கும் ரிட் போட்டால் என்ன செய்வது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** நான் சொல்வதற்கு முன்னதாகவே கனம் சபாநாயகர் முந்திக்கொண்டு விட்டார்கள். அங்கே அப்படித்தான் ஆயிற்று. முதலில் ஒரு இடம் பார்த்தோம். அது கிடைக்காமல் போயிற்று. பிறகு வேறு ஒரு இடம் பார்த்தோம். அதுவும் கிடைக்காமல் போயிற்று. இப்போது பார்த்திருப்பது மூன்றாவது இடம். இதுவும் கிடைக்காவிட்டால் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அந்த ஊருக்கு வராமல் போகலாம். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.

* 566 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லா, சிதம்பரத்தில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க உத்தேசமுண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

### மின்சார உற்பத்தி

* 567 கேள்வி.—திரு. மா. இராசாங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சுருளி ஆற்றிலிருந்து மின்சாரம் எடுப்பதான திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சுருளி ஆற்று நீரைப் பயன்படுத்தி 25 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டு கட்டுவதற்கு உரிய இடங்கள் முதலியவை குறித்துப் பரிசீலனைகள் நடந்து வருகின்றன.

### அரிசன நலக் கமிட்டிகள்

* 568 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 17-ம் தேதி நட்சத்திரக் குறியிடாத 32-ம் என் கேள்விக்கு அளித்த பதிலையொட்டி மாவட்ட அரிசன நலக் கமிட்டிகளில் முன்னாள் எம்.எல்.ஏ.-க்கள் அங்கம் வகிக்கிறார்களே ஒழிய தற்போதைய எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணமென்ன?

(இ) அவர்களையும் இக்கமிட்டியில் நியமிக்க உத்தேசமுண்டா?

(உ) சென்னை மாநகரில் இப்படியொரு கமிட்டி அமைக்கப்படுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) மாவட்ட ஹரிஜன நலக் குழுக்களில் சாதாரணமாக 10 அரசாங்க அதிகாரிகளும் அதிகாரச் சார்பற்ற பத்து பேரும் உறுப்பினர்களாக இருப்பர். சில இடங்களில் தற்போதைய சட்டசபை உறுப்பினர்களும் அத்தகைய குழுக்களில், அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இதைத் தவிர மாவட்டக் குழுவின் கூட்டம் நடைபெறுகின்ற இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் (இவர்கள் ஏற்கனவே குழுவில் உறுப்பினர்களாக இல்லாமலிருந்தால்) சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களாகக் குறிப்பிட்ட கூட்டத்திற்கு வரலாம்.



20th July 1964]

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இத்தகைய குழு ஒன்றை சென்னை மாநகரில் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் மாநில ஹரிஜன நலக் குழு சென்னையில் தலைமை அலுவலகத்துடன் செயல்பட்டு வருகிறது.

(a) The District Harijan Welfare Committees generally have on their strength about 10 Government officials and 10 Non-officials. In some cases, sitting Members of the Legislative Assembly are included as non-officials in such Committees. In addition, Members of Parliament and Members of the Legislative Assembly and Legislative Council of the taluk where the meeting of the District Harijan Welfare Committee is held (who are not already members of the Committee), are invited to attend the particular meeting as co-opted members.

(b) Does not arise.

(c) The need for such a Committee has not been felt as there is a State Harijan Welfare Committee with headquarters at Madras.

**திரு. இராம. அரங்கண்ணல் :** சார், பழங்குடிப் பெருமக்களின் பிரச்னை கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னையாக எல்லோராலும் கருதப்பட்டுக்கொண்டு வருகிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் நடைபெறுகிற ஹரிஜன நல விழாக்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாரையும் சேர்த்துக் கொள்ளாமலேயே நடைபெற்றுக்கொண்டு வருகிறதே, அது நல்லதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் அங்கத்தினர் கேட்டுள்ள கேள்வி சட்ட சபை அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளுவதைப் பற்றியது. அது கட்சிகள் விழாக்களில் கலந்து கொள்வதைப் பற்றி அல்ல. விழாக்களில் கலந்துகொள்வதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு மாவட்ட கமிட்டி தேவையில்லை, ஏனென்றால் ஸ்டேட் வெல்பேர் போர்டு இருக்கிறது என்று சொன்னார்கள், ஸ்டேட் வெல்பேர் போர்டு மாநிலம் முழுவதற்கும் இருக்கிறது. தலைநகரிலும்

இந்தப் பிரச்னை இருக்கிறது. நீண்டத்தகாததாக சென்னை நகரத்தை ஒதுக்குவது நியாயம் அல்ல என்று கருதி இதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** சென்னை நகரத்தில் தீண்டாமை கையாளப்படுவதில்லை. நகரத்தைப் பொறுத்த வரையில் தீண்டாமை ஒழிந்து விட்டது, ஆகையால் தேவையில்லை. ஆனால் இங்கே சில கருவிகள் கொடுக்கிறோம். அதைக் கொடுப்பதிலே அதற்காக ஒரு கமிட்டி வைத்துத் தேர்டுக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல் :** மாநில ஹரிஜன நல போர்டில் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு இடம் இருக்கிறதா ? அப்படி இருந்தால் அந்த எம்.எல்.ஏ.க்களின் பெயரை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இடம் இருக்கிறது. பெயர் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம். . . .

**திரு. இராம. அரங்கண்ணல் :** இல்லை . . . எதிர் கட்சித் தலைவரே அதில் இல்லை . . .

**கனம் திரு. பூ. கக்கன் :** மெம்பர் இருக்கிறார். தனிக்கேள்வி போட்டால் பெயரைப் பார்த்துச் சொல்லலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல போர்டில் ஹரிஜனங்கள் அல்லாத உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதால் அதிகமான உறுப்பினர்களை இனிமேலாவது சேர்த்துக்கொள்ள சர்க்கார் முன் வருவார்களா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** மாநில ஹரிஜன நலக் குழுவில் ஹரிஜனங்கள் அல்லாத அங்கத்தினர்களை அதிகமாகச் சேர்க்க முடியாது. ஏனென்றால் ஹரிஜனங்களுக்கே அதிகமான இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பல ஆண்டுகளாக ஹரிஜன சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**கனம் சபாநாயகர் அவர்களே,** முன்பு திரு. அரங்கண்ணல் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில், இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. அவர்கள் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. மாணிக்கம் அதில் அங்கத்தினராக இருக்கிறார்.

### தண்ணீர்க் குழாய் (அரக்கோணம்)

*** 569 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

**அரக்கோணம் தாலுகா, தக்கோலம் கிராமத்தில் சோதனை தண்ணீர்க் குழாய் போட்டதில் போதுமான தண்ணீர் அரக்கோணம் தொழிற்பேட்டைக்குக் கிடைக்கிறதா ?**



**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அரக்கோணம் தொழிற்பேட்டை இன்னும் செயல்படத் தொடங்கவில்லை. தொழிற்பேட்டைக்கு உள்ளேயே வெட்டப்படவிருக்கும் கிணறுகளிலிருந்து இத்தொழிற்பேட்டைக்கு வேண்டிய தண்ணீர் வசதியைப்பெற உத்தேசிக்கப்படுகிறது.

### அரசாங்க நந்தனர் உயர்நிலைப்பள்ளி, சிதம்பரம்

* 570 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரத்தில் உள்ள அரசாங்க நந்தனர் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்ற அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

THE HON. SRI P. KAKKAN : Not at present.

### *Construction of Hostel (Paramakudi)*

* 571 Q.—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to 9-30 a.m.
construct a Government Boys' Hostel for Harijans and Backward Community students at Paramakudi during 1964?

THE HON. SRI P. KAKKAN : Not at present.

புலவர் கா. கோவிந்தன் : இப்பொழுது உயர்நிலைப் பள்ளிகளை மிகப் பரவலான அளவிலே ஆங்காங்கு துவக்கி வருகிறோம். அதன் காரணமாக அந்தப் பள்ளிகளில் படிக்க வரும் மாணவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. ஆகவே, ஹரிஜன விடுதிகளை மேலும் பல இடங்களில் துவக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** இம்மாதிரி விடுதிகளை வருஷா வருஷம் ஜாஸ்தியாக்கிக் கொண்டே வருகிறோம். இந்த வருஷம்கூட ஹரிஜன மாணவ, மாணவிகளுக்கு 21 விடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது 300-க்கும் அதிகமாக—330, 340 இருக்கும்—விடுதிகள் இருக்கின்றன.

MR. SPEAKER : I think the House has no objection to extend the question hour till the remaining questions are disposed of.

### *Delimitation of Blocks*

* 572 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any proposal for the delimitation of Blocks?

THE HON. SRI S. M. A. MAJID : Yes.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார் : இந்த வட்டாரங்கள் எந்த அடிப்படையில் பிரிக்கப்படும் என்று அறியலாமா ?**

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : சுமார் 65,000 முதல் 80,000 வரை மக்கள் தொகை கொண்ட இடங்கள் வட்டாரமாகப் பிரிக்கப்படும். பப்ளிக் எலெக்ஷன் டிபார்ட்மெண்டு அலுவலகம் பாராளுமன்ற, சட்டமன்றத் தொகுதி எல்லைகளை நிர்ணயிக்கும் வேலையை பூர்த்தி செய்துகொண்டிருக்கிறது. அப்படிப் பூர்த்தி செய்து அதன் பின்பு அவர்கள் எந்த எல்லைகளில் பிரித்துக்கொடுக்கிறார்களோ அந்த அடிப்படையிலும் ஜனத்தொகை அடிப்படையிலும் சர்க்கார் வட்டாரங்களைப் பிரிப்பதற்கு உத்தேசித்திருக்கிறது. குறிப்பாக மொத்த பிளாக்குகள் 375 ஆக இருப்பதைக் கூடுதல் செய்வதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லை.

திரு. ம. கமலநாதன் : தேர்தலுக்கு முன்பு இந்த வட்டார தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இதற்குத் தெளிவான பதில் கூறுவதற்கு இல்லை. தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : May I know at what stage the Delimitation of blocks stands?

The Hon. Sri S. M. A. MAJID : A review has been ordered.

திருமதி ரி. குழந்தையம்மாள் : இந்த பிளாக்குகளைப் பிரிக்கும் பொழுது ஒரே ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸருக்குக் கீழே இருக்கக் கூடிய அளவில் பிரிப்பது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அசெம்பளி, பாராளுமன்ற தொகுதி எல்லைகளை எப்படித் திருத்தி எலெக்ஷன் கமிஷன் அமைக்கிறார்களோ அதை அடிப்படையாக வைத்துக்கொண்டு, கூடிய வரையில் 'மானேஜபிள். வையபிள் யூனிட்' ஆகத் திருத்தி அமைக்க உத்தேசம். இப்பொழுது ஒரு பிளாக்கில் மக்கள் தொகை லட்சத்தின் அளவுக்கு மேலும், லட்ச அளவிலும் இருந்து கொண்டு வருகிறது. அதைக் கூடியவரையில் 'ரெட்யூஸ்' செய்து 65,000 முதல் 80,000 வரை மக்கள் தொகை இருக்கும்படியாக் பிளாக்குகளைத் திருத்தி அமைக்கும் பிரச்னையும் இருக்கிறது.

### சட்டசபைத் தொகுதி நிர்ணயக் கமிட்டி

* 573 கேள்வி—திரு. சோ. ஆறுமுகம் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

திரு. ஜே. எல். கபூர் : தலைமையின்கீழ் நியமிக்கப்பட்ட சட்டசபைத் தொகுதி நிர்ணயக் கமிட்டி சமீபத்தில் எடுத்த முடிவுகள் அடங்கிய அறிக்கையின் நகல் ஒன்று சபைமுன் வைக்கப்படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : The Notification of the Delimitation Commission containing its proposals for the delimitation of Assembly and Parliamentary constituencies in Madras State, has been published in an extraordinary issue of the *Fort St. George Gazette*, dated the 23rd June 1964. The Members of





the House would have received copies of this *Gazette*. Hence it is not necessary to place a copy of the proposals of the Delimitation Commission on the Table of the House.

திரு. இராம. அரங்கண்ணல் : இந்த ஆலோசனை போர்டு கூட்டம் உதகையில் நடைபெறுகிற நேரத்தில் சட்டமன்ற எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. மதியழகன் சிறைச்சாலையில் இருந்த காரணத்தினால் தான், அந்தக் குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று மன்ற உறுப்பினர் ஒருவர் மூலம் அனுப்பிய மனு அரசாங்கத்திற்குக் கிடைத்ததா ? எந்த அடிப்படையில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### *Employment Exchange*

* 574 Q.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the number of persons registered their names with employment exchanges in Madras State from 1st January to 31st December 1963; and

(b) the number of educated unemployed as on 31st December 1963 in the following categories: I. Graduates, II. Professional graduates and III. Matriculates?

The Hon. Sri R. VENKATARAMAN : (a) The total number of persons registered with Employment Exchanges in Madras State from 1st January to 31st December 1963 is 3,10,937.

(b) The total number of unemployed graduates, professional graduates and matriculates as on 31st December 1963 is 2,545, 126 and 38,514 respectively.

### சிறு திட்ட கைத்தொழில்களுக்கு உதவி

* 575 கேள்வி—திரு. முனு. ஆதி : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ல் சைதாப்பேட்டை தாலூகாவில் எத்தனை அரிஜனங்களுக்கு சிறு திட்ட கைத்தொழில்களுக்காக ('Small Scale Industries) எவ்வளவு தொகை அளிக்கப்பட்டது ?

(ஆ) பண உதவி தவிர மூலப்பொருள்களுக்காக வேறு ஏதும் உதவி அளிக்கப்பட்டுள்ளதா ? ஆமென்றால் எவ்வகையில் உதவி அளிக்கப்பட்டது ?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) தொழில்களுக்கு அரசாங்கம் உதவியளிக்கும் சட்டத்தின்கீழ் சைதாப்பேட்டை தாலுகாவில் ஹரிஜன் ஒருவருக்கு 1963-ல் ரூ. 2,000 கொடுக்கப்பட்டது.

(இ) இல்லை.

(a) A sum of Rs. 2,000 was given to *one* Harijan in Saidapet taluk during 1963 under the State Aid to Industries Act, 1922.

(b) No, Sir.

*தீவிர சாகுபடித் திட்டம் (சிதம்பரம் தாலுகா)*

* 576 கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன்: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுகாவில் தீவிர சாகுபடித் திட்டம் அமைக்க உத்தேசமுண்டா?

(இ) ஆமென்றால் எப்பொழுது?

கனம் திரு. பூ. கக்கன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Government aid to Lambadies (Dharmapuri taluk)*

* 577 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government are in receipt of any memorandum from the Lambadies of Manjanaicken Thanda, hamlet of Sanchalanatham village in Dharmapuri taluk requesting for Government aid for the purchase of bulls, etc., and if so, the action taken thereon?

THE HON. SRI P. KAKKAN: The Government have received a petition from the Lambadies, Manja Naicken Thanda requesting them to afford members of that community certain facilities such as subsidy for bulls, assignment of lands, funds for building houses and educational concessions. The petition has been transferred to the Director of Harijan Welfare for disposal.

The Lambadies are included in the list of Backward Classes. They are not, therefore, eligible to enjoy the facilities given to Scheduled Tribes, other than Educational concessions.

' எருதுகள் வாங்க உதவித் தொகை கொடுத்தல், நில ஒப்படை, வீடுகள் கட்டுவதற்கு கடன்கள் தருதல், கல்விச் சலுகைகள் அளித்தல் போன்ற சில வசதிகள் லம்பாடிகள் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கவேண்டும் என்று கோட்டு மஞ்ச நாய்க்கன் தண்டாவைச் சேர்ந்த லம்பாடிகளிடமிருந்து மனு ஒன்று அரசாங்கத்திற்கு வந்துள்ளது. அம் மனு பைசல் செய்யப்படுவதற்காக ஹரிஜன நலத் துறை டைரெக்டருக்கு அனுப்பப் பட்டுள்ளது.



லம்பாடிகள் பின்னிலை வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். எனவே கல்விச் சலுகைகள் தவிர ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு வழங்கப்படும் மற்ற வசதிகளைப் பெற அவர்களுக்குத் தகுதி கிடையாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: லம்பாடிகள் மலைப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை அரசாங்கம் அறியுமா? அப்படியிருந்தால் மலைப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை அவர்களுக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: மலைப் பகுதியில் வசிப்பவர்கள் ஆதிவாசிகள். லம்பாடிகள் ஆதிவாசி மக்களாகக் கருதப்படவில்லை, அவர்கள் பின்தங்கிய மக்களாகக் கருதப்படுகிறார்கள். பின்தங்கிய மக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்கும் 'ஷெட்யூல்டு டிரைப்ஸ்'-க்கு கொடுக்கிற சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காது.

*Kodambakkam Pudur Project*

* 578 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have approved the layout for the Kodambakkam Pudur Project (Part II) covering 600 acres; and

(b) if so, the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) The matter is under examination of the Government.

(b) The Project comprises an area of about 700 acres and provides for 2,900 developed plots of varying sizes from about 850 square feet to 3 grounds and plots for construction of 1,470 three storeyed flats, apartments and tenements for Middle Income and Low Income Group families and for slum dwellers. In addition to this, sites have been reserved for the Physiological Institute of the Defence Department (20 acres), the South Madras General Hospital and the Employees' State Insurance Hospital (50 acres), a major stadium, two high schools, four primary schools, parks and playgronds, public offices and other Institutions, shops and markets and other amenities.

திரு. கே. ஏ. மதியழகன்: பூர்வாங்க வேலைகள் முடிந்து, இந்த இரண்டாவது திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்பொழுது துவக்குவதற்குத் நாள் இந்தத் திட்டத்தை வகுத்து வருகிறோம். டவுன் ப்ளானிங் ஸ்கீம் பிரகாரம் இதற்கான இடங்களெல்லாம் 'டிமார்கேட்' செய்து ஒதுக்கப்படும் வேலை இப்பொழுது தொடங்கி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[20th July 1964

### பிலிம் டெக்னாலஜி பள்ளி

* 579 கேள்வி.—திரு. மா. இராசாங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னை பிலிம் டெக்னாலஜி பள்ளியில் திரைப்படம் எடுப்பதற்கு வேண்டிய மூலப்பொருள்கள் இன்மையால் அப் பள்ளியைத் திறம்பட நடத்த முடியவில்லை என்பது உண்மையா?

THE HON. SRI R. VENKATARAMAN: No. The Institute is being run on sound and proper lines.

திரு. செ. மாதவன்: இந்த இன்ஸ்டிடியூட்டில் இருக்கக்கூடிய இயந்திரங்கள் பல களவாடப்பட்ட செய்தி அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அம்மாதிரி தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் நான் விசாரித்துச் சொல்கிறேன்.

திரு. செ. மாதவன்: இந்த இன்ஸ்டிடியூட்டில் வேலை பார்ப்பவர்களுக்கு ஏனைய இன்ஸ்டிடியூட்டுகளில் இருக்கக்கூடியவர்களுக்குக் கிடைப்பது போல சில விடுமுறை வசதிகள் கிடைக்கவில்லை என்று அரசாங்கத்திற்கு புகார் வந்திருக்கிறதா? அது பற்றிப் பரிசீலிக்கப்பட்டதா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எந்த விதமான புகாரும் வரவில்லை.

### *Training Centre for Tailoring*

* 580 Q.—SRI K. A. MATHIALAGAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of Tailoring Training Centres run by the Government throughout the State;

(b) the number of women who undergo training in these centres annually;

(c) the number of training centres conducted exclusively for women;

(d) the total expenditure incurred by the Government in 1963–64 for running these Tailoring Training Centres; and

(e) whether any financial aid is given to the Tailoring Training Centres conducted by private agencies and if so, the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN: (a) One.

(b) The sanctioned strength is 64. But this year 70 women were undergoing training.



20th July 1964]

(c) One.

(d) An expenditure of Rs. 71,165·99 was incurred during 1963–64.

(e) Yes. Financial assistance in the form of grants-in-aid of the following kinds are granted to the Tailoring Training Centres run by private managements and recognised under the Code of Regulations for Industrial Schools:—

(a) Maintenance grants;

(b) Training grants;

(c) Equipment grants; and

(d) Special grants.

The institutions should satisfy the rules laid down in the Code of Regulations for Industrial Schools to enable them to be entitled to receive grants-in-aid.

திரு. ம. கமலநாதன்: பஞ்சாயத்து யூனியன் லெவலில் நடைபெறுகிற இந்த டெயிலரிங் சென்டர்களில் இருக்கிற பெண்களுக்குக் கொடுக்கிற ஸ்டைபெண்டு மிகவும் குறைவாக இருக்கிறது. மேலும் வருஷம் பூராவும் கண்டினியூ பண்ணினால் தான் இது கொடுக்கப்படுகிறது. இடையில் நிறுத்தினால் வாங்கியிருக்கிற ஸ்டைபெண்டை திருப்பிக் கொடுக்க வேண்டியிருப்பதால், பெண்கள் அதிகமாகச் சேர முன் வரவில்லை. ஆகவே விதிகள் தளர்த்தப்படுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: விதிகள் தளர்த்தப்பட மாட்டாது. முழு டிரெயினிங் யார் எடுத்துக்கொள்ள விரும்புகிறார்களோ அவர்களுக்குத் தான் இந்த உதவி கொடுக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: இந்தப் பயிற்சி பெண்களுக்குக் கொடுப்பதைவிட, ஆண்களுக்குக் கொடுத்தால் பலன் இருக்குமென்று கருதுகிறார்களே, அது உண்மையா? இது விஷயமாக சர்க்கார் ஆவன செய்வார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்ராமன்: பயிற்சி பெண்களுக்கும் தேவை, ஆண்களுக்கும் தேவை. பெண்களைப் பற்றி கேள்வி கேட்டதனால், பெண்களுக்குக் கொடுக்கப்படும் வசதியைப் பற்றி நான் சொல்லியிருக்கிறேன்.

## UNSTARRED QUESTIONS.

### *Old Age Pension*

158 Q.—புலவர் கா. கோவிந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடந்த நிதி ஆண்டின் தொடக்கத்தில் முதியோர் உதவி பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) கடந்த நிதி ஆண்டுக் காலத்தில் (1962–63) மேற்படி உதவி பெற்ற புதியவர் எத்தனை பேர்?

(உ) அதே காலத்தில் இறப்பு அல்லது வேறு காரணங்களால் நிதி உதவி எத்தனை பேருக்கு நிறுத்தப்பட்டது?

[20th July 1964

*A.*—

(அ) முதியோர் பென்ஷன் திட்டம் அரசாங்கத்தாரால் 1962–63 நிதியாண்டின் தொடக்கத்திலிருந்துதான், அதாவது, 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிதான் கொண்டுவரப்பட்டது. எனவே, இக்கேள்விக்கு இடமில்லை.

(இ) 1962–63-ல் முதியோர் பென்ஷன் திட்டத்தின்கீழ் 58,391 அனாதைகளுக்குப் பென்ஷன் வழங்கப்பட்டது.

(உ) 1962–63-ல் முதியோர் பென்ஷன் நிறுத்தப்பெற்றவர்களின் எண்ணிக்கை வருமாறு :—

| | | | நபர்கள். |
|---|---|---|---|
| (i) | மரணம் காரணமாக | .. | 4,191 |
| (ii) | இதர காரணங்களுக்காக | .. | 498 |
| | மொத்தம் | .. | 4,689 |

(*a*) The Old Age Pension Scheme was introduced by the Government only from the beginning of the financial year 1962–63 viz., 1st April 1962. Therefore this question does not arise.

(*b*) In the year 1962–63, pensions have been granted under the Old Age Pension Scheme to 58,391 destitutes.

(*c*) The number of persons to whom the payment of pension was discontinued in the year 1962–63 is given below :—

| | | Persons. |
|---|---|---|
| (i) due to death— | | 4,191 |
| (ii) due to other reasons— | | 498 |
| Total | .. | 4,689 |

*Kayalpatnam Water-supply Scheme*

159 *Q.*—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காயல்பட்டினம் குடி தண்ணீர்த் திட்டத்தின்கீழ் வீடுகளுக்கு நேரடி பைப் கனெக்ஷன் கொடுக்க திட்டமுண்டா ?

(இ) வீடுகளுக்கு கனெக்ஷன் கோரி சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளிடமிருந்து எத்தனை மனுக்கள் வந்திருக்கின்றன ?

(உ) அப்படியானால் வீடுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

(எ) வீடுகளுக்கு கனெக்ஷன் பெற பிரத்தியேகமாக ஏதேனும் கட்டணம் உண்டா ? அதன் விவரமென்ன ?

(ஐ) இத்திட்டத்திற்காக மொத்த பராமரிப்பு செலவு என்ன ?

(ஒ) அது எவ்வாறு ஈடு செய்யப்பட்டு வருகிறது ?

*A.*—

(அ)—(ஒ) There is a case pending in the Supreme Court in regard to Kayalpatnam Water-supply Scheme and the matter is subjudice.

(அ)—(ஒ) காயல்பட்டினம் தண்ணீர் சப்ளை திட்டம் பற்றிய வழக்கு ஒன்று சுப்ரீம் கோர்ட் விசாரணையில் இருப்பதால் இதைப்பற்றி இப்போது பேசுவது சட்டத் தவறாகும்.



20th July 1964]

160 *Q.*—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 963-ல் காயல்பட்டணம் பாதுகாக்கப்பட்ட இணைப்பு குடி தண்ணீர் சப்ளை திட்டத்தினால் அனுகூலமடைந்துள்ள பஞ்சாயத்துகள் எவை எவை?

(இ) அப்பஞ்சாயத்துகளில் இத் திட்டத்தினால் பயன் பெறாத ஊர்கள் எவை எவை?

(உ) அப்படி பயன்பெறாத ஊர் மக்களும் தண்ணீர் தீர்வை செலுத்தி வருவது உண்மையா?

(எ) இத் திட்டத்தின் பயனை அவர்களுக்கும் அளிப்பதற்கு என்ன ஏற்பாடு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது ?

(ஐ) இத் திட்டத்தின் பராமரிப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது ?

(ஒ) பிரதான ரிசர்வாயரில் திட்டமிட்டபடி முழு அளவு தண்ணீர் தேக்கிவைக்கப்படுகிறதா? இல்லை என்றால் ஏன்?

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*New Well Subsidy Scheme (Namakkal taluk)*

203 *Q.*—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் நாமக்கல் தாலூக்காவில் இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் புதிய கிணறு மானிய திட்டத்தின் கீழ் வெட்டப்பட்ட கிணறுகள் எத்தனை?

*A.*—During the Second Five Year Plan 138 wells were sunk under the New Well Subsidy Scheme in Namakkal Taluk.

இரண்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் புதிய கிணறு மானிய திட்டத்தின் கீழ் நாமக்கல் தாலூக்காவில் 138 கிணறுகள் வெட்டப் பட்டன.

*Milk Supply Co-operative Societies for Harijans (Namakkal Taluk)*

204 *Q.*—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

ஹரிஜனங்களுக்கு பிரத்தியேகமாக எத்தனை கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்கள் நாமக்கல் வட்டத்தில் துவக்கப்பட்டுள்ளன?

*A.*—Four Milk Supply Co-operative Societies have been started exclusively for Harijans in the following villages of Namakkal Taluk:—

(1) Karaikurichipudur.

(2) Reckampalayam.

(3) Valayapatti.

(4) Edayappatti.

நாமக்கல் வட்டத்தின் கீழ்க்கண்ட கிராமங்களில் அரிஜனங்களுக்கென்றே நான்கு கூட்டுறவுப் பால் வழங்கும் சங்கங்கள் துவக்கப்பட்டுள்ளன—

(1) காரைக்குறிச்சிபுதூர் (2) ரெக்காம்பாளையம்.
(3) வலையப்பட்டி (4) இடையப்பட்டி

*Crops affected by heavy rains*

205 *Q.*—திரு. கே. நாராயணசாமி பிள்ளை : கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1963 அக்டோபர் மாதத்தில் ஏற்பட்ட கனமழையினாலும், புயலினாலும் நம் மாநிலத்தில் எந்தெந்த மாவட்டங்களில் கரும்பு, வாழை, வெற்றிலை கொடிக்கால் முதலிய பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டது ?

*A.*—Sugarcane, plantain and betelvines were affected in the districts of South Arcot and plaintain and betelvines were affected in the Thanjavur District due to the heavy rain and cyclone during October 1963.

தஞ்சாவூர் மாவட்டத்தில் வாழை, கொடிக்கால் பயிர்களுக்கும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கரும்பு, வாழை, கொடிக்கால் பயிர்களுக்கும் அக்டோபர் மாதம் பெய்த கனமழையினாலும் புயலினாலும் சேதம் ஏற்பட்டது.

*Flood Protection, Coleroon*

206 *Q.*—திரு. எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கொள்ளிடக்கரை வெள்ள பாதுகாப்பிற்காக Lower anicut அணைக் கரைக்கு கிழக்கில் Special Flood Works Department-க்கு ஒதுக்கப்பட்ட தொகை என்ன ?

பூரா பணமும் செலவழிக்கப்பட்டுள்ளதா ?

*A.*—The amount set apart for the year 1963–64 for special flood protection works on the banks of Coleroon, east of the Lower Anicut is, Rs. 5,31,500. An amount of Rs. 5,13,000 has been spent upto February 1964.

லோயர் அணைக்கட்டிற்குக் கிழக்கே கொள்ளிடக் கரையில் விசேஷ வெள்ளப் பாதுகாப்பு வேலைகளுக்காக 1963–64-ம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,31,500. 1964 பிப்ரவரி வரை செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூ. 5,13,000.

*Dearness Allowance to Watchmen of Traveller's Bungalows (Tiruchirappalli)*

207 *Q.*—திரு. சா. ராமசாமி : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் பெருவழித் துறையில் (Highways) நிர்வாகத்திலுள்ள வழிபோக்கர் தங்கும் விடுதிகளில் பணியாற்றும் காவலர்களுக்கு (Watchmen) 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதிமுதல் அதிகப்படி பஞ்சப்படி கொடுக்கப்படுகிறதா ? இல்லையென்றால் காரணமென்ன ?



(இ) அவர்களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் கொடுக்கப்படுகிறது ?

*A.*—(*a*) The watchmen of Travellers' Bungalows in Tiruchirappalli District are paid the enhanced Dearness Allowance of Rs. 5 with effect from 1st July 1962.

(*b*) The pay of these watchmen has been fixed and paid for, according to the General Circular of the District Collector, Tiruchirappalli, fixing the rate annually on the basis of the market rate.

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள முசாபரி பங்களாக்களில் பணியாற்றும் காவற்காரர்களுக்கு 1962-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ம் தேதி முதல் உயர் அகவிலைப்படி ரூ. 5 வழங்கப்படுகிறது.

(இ) மார்க்கெட் வீத அடிப்படையில் ஆண்டுதோறும் சம்பள வீதத்தை நிச்சயித்து திருச்சிராப்பள்ளி கலெக்டர் அனுப்பும் பொதுச் சுற்றறிக்கைகளை அனுசரித்து இந்த காவற்காரர்களுக்கு சம்பளம் நிச்சயிக்கப்பட்டு வழங்கப்படுகிறது.

*Irrigation Schemes (Thanjavur district)*

208 *Q.*—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1964–65-ம் ஆண்டிற்கு நீர்பாசன வடிகால் திட்டங்கள் எத்தனை போட உத்தேசம்.

(இ) அதற்காக ஒதுக்கியுள்ள தொகை எவ்வளவு ?

(உ) அந்த திட்டங்கள் எப்போது நிறைவேற்றப்படும் ?

*A.*—(*a*) Thirty-six.

(*b*) About Rs. 9 lakhs.

(*c*) Efforts will be made to complete as many schemes as possible during 1964–65 itself.

(அ) முப்பத்தாறு.

(இ) சுமார் 9 லட்சம் ரூபாய்.

(உ) 1964–65-ம் ஆண்டிலேயே எவ்வளவு திட்டங்கள் நிறைவேற்ற முடியுமோ, அவ்வளவு திட்டங்கள் நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளப்படும்.

*Hostels for Harijans (Salem district)*

209 *Q.*—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வட்டவாரியாக 1961–62, 1962–63, 1963–64-ம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட அரிஜன ஆண் ஹாஸ்டல்கள் எத்தனை ?

*A.*—Taluk-wise particulars of the number of Harijan Boys' Hostels newly opened as well as the subsidised hostels taken over by the Government in Salem District during each of the years 1961–62, 1962–63, and 1963–64 are furnished below :—

| Name of taluk. | Number of Boys' Hostels opened. During 1961-62. | During 1962-63. | During 1963-64. | Number of Boys' Hostels taken over. During 1961-62. | During 1962-63. | During 1963-64. |
|---|---|---|---|---|---|---|
| 1 Hosur .. | .. | .. | .. | | | |
| 2 Tiruchengode. | .. | .. | .. | 1 | .. | .. |
| 3 Omalur .. | .. | .. | .. | 1 | .. | .. |
| 4 Harur .. | 2 | .. | .. | 1 | .. | .. |
| 5 Salem .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 6 Krishnagiri .. | 1 | 1 | .. | .. | .. | .. |
| 7 Sankari .. | 1 | .. | .. | .. | .. | .. |
| 8 Dharmapuri | 1 | .. | .. | .. | .. | .. |
| 9 Namakkal .. | .. | .. | .. | .. | .. | .. |
| 10 Rasipuram .. | .. | .. | .. | .. | 1 | .. |
| | | | | .. | .. | 1 |
| Total .. | 6 | 1 | .. | 3 | 1 | 1 |

சேலம் மாவட்டத்தில் தாலுக்காவாரியாக 1961–62, 1962–63, 1963–64 இந்த ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஹரிஜன மாணவர் விடுதிகள், அரசாங்கம் எடுத்துக்கொண்ட மானியம் பெறும் மாணவர் விடுதிகள் இவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| தாலூகாவின் பெயர். | புதிதாக ஆரம்பித்த மாணவர்கள் விடுதிகளின் எண்ணிக்கை. 61–62-ம் ஆண்டு. | 62–63-ம் ஆண்டு. | 63–64-ம் ஆண்டு. | எடுத்துக்கொண்ட மாணவர்கள் விடுதிகளின் எண்ணிக்கை. 61–62-ம் ஆண்டு. | 62–63-ம் ஆண்டு. | 1963–64-ம் ஆண்டு. |
|---|---|---|---|---|---|---|
| 1. ஹோசூர் | .. | .. | .. | | | |
| 2. திருச்செங்கோடு | .. | .. | .. | 1 | .. | .. |
| 3. ஓமலூர் | .. | .. | .. | 1 | .. | .. |
| 4. ஹரூர் | 2 | .. | .. | 1 | .. | .. |
| 5. சேலம் | 1 | .. | .. | .. | .. | .. |
| 6. கிருஷ்ணகிரி | 1 | 1 | .. | .. | .. | .. |
| 7. சங்கரி | 1 | .. | .. | .. | .. | .. |
| 8. தர்மபுரி | 1 | .. | .. | .. | .. | .. |
| 9. நாமக்கல் | .. | .. | .. | .. | .. | .. |
| 10. ராசிபுரம் | .. | .. | .. | .. | 1 | .. |
| | | | | .. | .. | 1 |
| மொத்தம் | 6 | 1 | .. | 3 | 1 | 1 |

### *Agricultural Improvement Co-operative Society at Kallakurichi taluk*

210 *Q.*—திரு. எல். ஆனந்தன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோவாபரேடிவ் விவசாய அபிவிருத்தி சங்கம் (Co-operative Agricultural Improvement Society)-யை experiment-ஆக கள்ளக்குரிச்சி தாலூகா சித்தேரிப்பட்டு கிராமத்தில் நடத்திப் பார்க்கலாமென்று 1964-ம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 24-ம் தேதியில் ஆர். வெங்கட சுப்பா ரெட்டியார் representation கொடுத்திருக்கிறாரா ?

(இ) ஆம் எனில், அதன்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

*A.*—(அ) Yes.



(இ) The petition was forwarded to the Registrar of Co-operative Societies, Madras who has referred the matter to the Deputy Registrar, Tirukoilur, for exploring the possibilities of organising an Agricultural Improvement Co-operative Society at Sitteripatti Village in Kallakurichi Taluk (South Arcot District) in consultation with the petitioner. If there are fair chances of successful implementation of the scheme, Registrar will come up to Government with detailed proposals in complete shape.

(அ) ஆம், கொடுத்திருக்கிறார்.

(இ) இந்த மனு சென்னையிலுள்ள கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பப்பட்டது. அவர் தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுகா, சித்தேரிப்பட்டு கிராமத்தில் வேளாண்மை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைப்பது சாத்தியமாவென்று மேற்படி மனுதாரரைக் கலந்தாலோசிப்பதற்காக இந்த மனுவை திருக்கோயிலூரிலுள்ள துணைப் பதிவாளருக்கு அனுப்பியுள்ளார். இத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு இருந்தால், பதிவாளர் அதற்கான விரிவான திட்டங்களை அரசாங்கத்திற்கு அனுப்புவார்.

### *Tourist bungalow at Chidambaram (Construction of)*

211 *Q.*—திரு. ஏ. சிவசுப்பிரமணியன் : கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரத்தில் ஒரு டூரிஸ்ட் பங்களா கட்ட அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

*A.*—ஆம், ஐயா.

### *Irrigation facilities in Pudur village*

212 *Q.*—திரு. சி. ம. அம்பிகாபதி : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நாகைப்பட்டினம் தாலூகா புதூர் கிராமத்தில் கொக்கோடை என்ற இடத்தில் சுமார் 100 ஏக்கர் நிலம் சாகுபடிக்குக் கொண்டுவர பாசன வசதி வேண்டும் என்று மகஜர் வந்துள்ளதா ?

(இ) அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(உ) நடப்பு ஆண்டில் வேலையை துவக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

*A.*—(*a*) Yes.

(*b*) The plans and estimate for converting Pudur Bridge across Vennar at Mile 84/0—1 into a Regulator, to provide irrigation facilities to a block of 105 acres in Pudur Village, at an estimated cost of Rs. 34,000 had been approved by the Chief Engineer (Irrigation) and then returned to the Superintending Engineer concerned for sanction under the 'Special Minor Irrigation Programme' after obtaining the District Collector's concurrence and the consent statement from the ryot beneficiaries to contribute 1/3rd of the cost of the scheme.

(c) The Superintending Engineer will take necessary action to obtain the concurrence of the District Collector and start the work in due course.

(அ) ஆம். வந்துள்ளது.

(இ) 84/0—1 மைலில் வெண்ணாற்றுக்குக் குறுக்கே புதூர் பாலத்தை ரெகுலேட்டராக மாற்றியமைக்கவும், புதூர் கிராமத்தில் 105 ஏகரா பரப் பிற்குப் பாசன வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கவும் ரூ. 34,000 செலவில் திட்டம் ஒன்றைத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அங்கீகரித்து, சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளருக்கு அனுப்பியுள்ளார். மேற் பார்வைப் பொறியாளர் மாவட்டக் கலெக்டரின் சம்மதத்தைப் பெற்ற பின்னும் திட்டத்திற்காகும் செலவில் மூன்றில் ஒரு பங்கினை உதவித் தொகையாக வழங்குவதாக, பாசன வசதிபெறும் ரயத்துகளிடமிருந்து சம்மதக் கடிதம் ஒன்றைப் பெற்ற பிறகும் இத் திட்டத்திற்கு "விசேஷ சிறு பாசனத் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்குவார்.

(உ) மேற்பார்வைப் பொறியாளர், மாவட்டக் கலெக்டரின் இசைவு பெற நடவடிக்கை எடுத்து, வேலையை நாளடைவில் துவக்குவார்.

### *Ice-cream (preparation of)*

213 *Q.*—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஐஸ்கிரீம் கலக்கும் சாயம் சில சமயங்களில் மயக்கம் கொடுப்பதைத் தவிர்ப்பதற்கு ஐஸ்கிரீம் உற்பத்தி சாலைகளை உடனுக்குடன் கவனித்து, விற்பனைப் பொருளை பரிசோதனை செய்ய உத்தேசமுண்டா ?

*A.*—A special circular has already been issued to all the Health Officers instructing them to inspect the places used for the preparation of ice-products including ice-cream more frequently to ensure that hygienic methods are adopted in their preparation and that these places are kept clean under sanitary conditions.

ஐஸ் கிரீம் தயாரிப்பதில் சுகாதார முறைகளைக் கடைப்பிடிப்பதற்காகவும் தயாரிப்புசாலைகள் துப்புரவாக இருப்பதற்காகவும் ஐஸ் கிரீம் உட்பட ஐஸ் பொருள்கள் தயாரிக்கும் இடங்களை அடிக்கடி பரிசோதனையிடும்படி சுகாதார அதிகாரிகளுக்கு விசேஷ சுற்றறிக்கை ஒன்று ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது.

### *Prosecutions under Untouchability Act*

214 *Q.*—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எத்தனை ?

(இ) அவைகளில் தள்ளுபடி செய்யப்பட்ட, தண்டிக்கப்பட்ட வழக்குகள் எத்தனை ?

*A.*—(*a*) 44

| | |
|---|---|
| (*b*) Number of cases ended in conviction .. .. | 24 |
| Number of cases ended in acquittal .. .. .. | 11 |
| Number of cases compounded .. .. .. | 7 |
| Number of cases left undetected .. .. .. | 1 |
| Number of cases found to be false and not therefore referred to Court .. .. .. .. | 1 |
| Total .. | 44 |



(அ) 44.

| | |
|---|---|
| (இ) தண்டனையளித்துத் தீர்ப்புக் கூறப்பட்ட வழக்குகள் .. | 24 |
| விடுதலை செய்து தீர்ப்புக் கூறப்பட்ட வழக்குகள் .. | 11 |
| ராஜி செய்துகொள்ளப்பட்ட வழக்குகள் .. | 7 |
| துப்பு துலக்காமல் விடப்பட்ட வழக்குகள் .. | 1 |
| உண்மையல்ல என்று தெரிந்ததால் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படாத வழக்குகள் .. | 1 |
| மொத்தம் .. | 44 |

### *Compost Manure*

215 *Q.*—**திரு. ச. சிவசுப்பிரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962–63-ல் குமராட்சி பஞ்சாயத்து ஒன்றியபைச் சேர்ந்த எத்தனை ஊராட்சி மன்றங்களுக்கு "கம்போஸ்ட் உரம்" தயாரிக்க கடன் உதவி கொடுக்கப்பட்டது ?

(இ) அவைகளால் தயாரிக்கப்பட்ட உரத்தின் மதிப்பு எவ்வளவு ?

*A.*—(*a*) Nil.

(*b*) Does not arise.

(அ) குமராட்சி பஞ்சாயத்து ஒன்றியபைச் சேர்ந்த எந்த ஊராட்சி மன்றத்துக்கும், கம்போஸ்ட் உரம் தயாரிக்கக் கடன் கொடுக்கப்படவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### *Administrative training to Panchayat Presidents*

216 *Q.*—**திரு. ச. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில்ளிப்பாரா—

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு நிர்வாக பயிற்சி அளிப்பதற்காக புதிதாக ஏதேனும் திட்டம் உண்டா ?

*A.*—There is no new scheme for giving administrative training to the Panchayat Presidents.

பஞ்சாயத்து தலைவர்களுக்கு புதியதாக நிர்வாக பயிற்சியளிக்க திட்டமேதும் இல்லை.

### *Temples and Mutts in the State*

217 *Q.*—**திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள (1) தேவஸ்தானங்கள் (2) மடங்கள் எத்தனை ?

(இ) எத்தனை தேவஸ்தான நிலங்களில் "குத்தகை சாகுபடியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள்" அமைக்கப்பட்டிருக்கின்றன ?

(உ) அரிஜனங்களால் நடத்தப்படும் குத்தகைச் சாகுபடியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன ?

(எ) தேவஸ்தானத்திற்கும், மடத்திற்கும் சொந்தமான நிலங்களில் நன்செய், புஞ்செய் நிலங்கள் எவ்வளவு ?

A.—(அ) Temples .. .. .. .. .. .. 7,760
Mutts .. .. .. .. .. .. .. 118
Specific Endowments .. .. .. .. .. 939
Minor institutions with annual income of less than Rs. 200. 5,178

(இ) 89.

(உ) There are no Co-operative Farming Societies formed exclusively by the Harijans.

(எ) The particulars of lands belonging to religious institutions and Mutts in this State are not readily available. It is considered that the time and labour involved in collecting the particulars will not be commensurate to the purpose that will be served.

### *Car for Chief Minister*

218 *Q.*—திரு. மா. இராசாங்கம் : கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முதல் அமைச்சருக்குத் தரப்பட்டுள்ள புதுக்காரின் (Dodge MSV 7575) விலை என்ன ?

*A.*—Rs. 41,053·93 nP. (inclusive of sales tax).

### *Murders, suicides, thefts, etc.*

219 *Q.*—திரு. மா. இராசாங்கம் : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கொலை, தற்கொலை, களவு ஆகிய ஒவ்வொன்றும் எந்தெந்த ஜில்லாக்களில் அதிகம் நடக்கிறது ?

*A.*—1963-ம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் மிக அதிகமான கொலைகள் நடந்தன. அதற்கு அடுத்தபடியாக கோயம்புத்தூரில் அதிகக் கொலைகள் நடந்தன. சேலம் மாவட்டத்தில் தற்கொலைகள் மிக அதிகமாக நடந்தன. அதற்கு அடுத்தபடியாக மதுரை அர்பனில் அதிகமான தற்கொலைகள் நடந்தன. சென்னை நகரில் சாதாரண களவுகள் மிக அதிகமாக நடந்தன. அதற்கு அடுத்தபடியாக கோயம்புத்தூரில் அதிகமான களவுகள் நடந்தன.

During 1963, the incidence of murder was highest in Salem district, the second being Coimbatore. As regards suicide, the incidence was highest in Salem, the second being Madurai Urban. As regards thefts (ordinary) the incidence has been highest in Madras City, the second being Coimbatore.

### *Compensation under the Estates Abolition Act*

220 *Q.*— Sri N. P. SENGOTTUVELU : Will the Hon. Minister for Works be pleased to state—

(*a*) the amount paid so far in each district as compensation under the Estates Abolition Act ; and

(*b*) the probable amount still to be paid in each district ?

*A.*—(*a*) The following Districtwise particulars of payment of compensation and interim payment as on 31st March 1964



(i.e.) deposited with the Estates Abolition Tribunal and exclusion of tasdic allowance and additional compensation payable under section 38 of the Abolition Act, are furnished :—

| District. (1) | Compensation. (2) RS. | nP. | Interim payment. (3) RS. | nP. |
|---|---|---|---|---|
| Chingleput .. .. .. | 74,58,275 | 16 | 23,50,693 | 97 |
| South Arcot .. .. .. | 9,62,288 | 18 | 2,64,870 | 08 |
| North Arcot .. .. .. | 32,92,262 | 47 | 15,25,781 | 65 |
| Coimbatore .. .. .. | 8,21,928 | 85 | 1,95,769 | 90 |
| Salem .. .. .. .. | 72,67,457 | 40 | 27,00,827 | 03 |
| Thanjavur .. .. .. | 81,79,348 | 22 | 29,23,567 | 33 |
| Tiruchirappalli .. .. .. | 26,60,625 | 81 | 11,67,560 | 95 |
| Tirunelveli .. .. .. | 45,93,996 | 62 | 16,46,995 | 60 |
| Madurai .. .. .. .. | 57,44,359 | 26 | 19,94,795 | 41 |
| Ramanathapuram .. .. | 1,86,73,188 | 66 | 46,52,572 | 44 |
| Madras .. .. .. .. | 61,339 | 90 | 17,951 | 87 |
| Total .. | 5,97,15,070 | 53 | 1,94,41,386 | 23 |

(*b*) The following Districtwise particulars of compensation and interim payment payable from 1st April 1964, are furnished :—

| District. (1) | Compensation. (2) RS. | nP. | Interim payment. (3) RS. | nP. |
|---|---|---|---|---|
| Madurai .. .. .. .. | 2,88,827 | 66 | 41,777 | 19 |
| Ramanathapuram .. .. | 4,88,297 | 04 | 1,05,672 | 80 |
| Tirunelveli .. .. .. | 4,53,907 | 99 | 50,767 | 40 |
| Thanjavur .. .. .. | 2,75,072 | 46 | 59,665 | 21 |
| North Arcot .. .. .. | .... | | 7,793 | 02 |
| Tiruchirappalli .. .. .. | 51,314 | 34 | 10,790 | 63 |
| Salem .. .. .. .. | 1,50,776 | 00 | 10,400 | 00 |
| Chingleput .. .. .. | 69,718 | 00 | 5,000 | 00 |
| For revision cases .. .. | 10,00,000 | 00 | 3,00,000 | 00 |
| Total .. | 27,77,913 | 49 | 5,91,866 | 25 |

(அ) 1964-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ந் தேதி அன்று, நஷ்ட ஈடாகவும் இடைக்காலத் தொகையாகவும் மாவட்டவாரியாகக் கொடுக்கப்பட்ட தொகை பற்றிய விவரங்கள் வருமாறு:—(அதாவது எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்திய தொகையாகும் தஸ்திக் படி, எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்தின் 38-வது பிரிவின்கீழ்ச் செலுத்தத் தக்க கூடுதல் நஷ்ட ஈட்டுத் தொகை ஆகியவை இதில் அடங்காது.)

| மாவட்டம். (1) | நஷ்ட ஈடு. (2) ரூ. | காசு. | இடைக்காலத் தொகை. (3) ரூ. | காசு. |
|---|---|---|---|---|
| செங்கற்பட்டு .. .. | 74,58,275 | 16 | 23,50,693 | 97 |
| தென் ஆற்காடு .. .. | 9,62,288 | 18 | 2,64,870 | 08 |
| வட ஆற்காடு .. .. | 32,92,262 | 47 | 15,25,781 | 65 |
| கோயம்புத்தூர் .. .. | 8,21,928 | 85 | 1,95,769 | 90 |
| சேலம் .. .. .. | 72,67,457 | 40 | 27,00,827 | 03 |

| மாவட்டம். | நஷ்ட ஈடு. | | இடைக்காலத் தொகை. | |
|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | |
| | ரூ. | காசு. | ரூ. | காசு. |
| தஞ்சாவூர் .. .. | 81,79,348 | 22 | 29,23,567 | 33 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 26,60,625 | 81 | 11,67,560 | 95 |
| திருநெல்வேலி .. .. | 45,93,996 | 62 | 16,46,995 | 60 |
| மதுரை .. .. .. | 57,44,359 | 26 | 19,94,794 | 41 |
| இராமநாதபுரம் .. .. | 1,86,73,188 | 66 | 46,52,572 | 44 |
| சென்னை .. .. .. | 61,339 | 90 | 17,951 | 87 |
| மொத்தம் .. | 5,97,15,070 | 53 | 1,94,41,386 | 23 |

(இ) 1964 ஏப்ரல் 1-ம் தேதியிலிருந்து கொடுக்கப்படத்தக்க நஷ்ட ஈடு இடைக்காலத் தொகை பற்றிய மாவட்டவாரியான விவரங்கள் வருமாறு:—

| மாவட்டம். | நஷ்ட ஈடு. | | இடைக்காலத் தொகை. | |
|---|---|---|---|---|
| | ரூ. | காசு. | ரூ. | காசு. |
| மதுரை .. .. | 2,88,827 | 66 | 41,777 | 19 |
| இராமநாதபுரம் .. .. | 4,88,297 | 04 | 1,05,672 | 80 |
| திருநெல்வேலி .. .. | 4,53,907 | 99 | 50,767 | 40 |
| தஞ்சாவூர் .. .. | 2,75,072 | 46 | 59,665 | 21 |
| வட ஆற்காடு .. .. | .... | | 7,793 | 02 |
| திருச்சிராப்பள்ளி .. .. | 51,314 | 34 | 10,790 | 63 |
| சேலம் .. .. | 1,50,776 | 00 | 10,400 | 00 |
| செங்கற்பட்டு .. .. | 69,718 | 00 | 5,000 | 00 |
| மறு ஆய்வு .. .. | 10,00,000 | 00 | 3,00,000 | 00 |
| மொத்தம் .. | 27,77,913 | 49 | 5,91,866 | 25 |

*Veterinary Hospital, Chidambaram*

221 *Q.*— Sri. S. SIVASUBRAMANIAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

Whether there is a proposal to expand the Government Veterinary Hospital at Chidambaram ?

*A.*— No. Sir.

இல்லை ஐயா.

*Causeway across Palar*

222 *Q.*— **புலவர் கா. கோவிந்தன் :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையில் பாலாற்றின் குறுக்கே தற்போது கற்களால், நிறைக்கப்பட்டிருக்கும் மேடைப்பாதை (causeway) போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதினால், அதை சிமிட்டியால் பூச உத்தேசமுண்டா?

*A.*— No.

இல்லை.



*Causeways repair*

223 *Q.*—**திரு. கே. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம்–பெண்ணாடம்–திட்டக்குடி தொழுதூர் 28 மைல் நீளமுள்ள நெடுஞ்சாலையில் சென்ற ஆண்டு வெள்ளத்தால் உடைபட்ட causeway-க்களையும் ரோடு ரிப்பேர்களையும் சீர்ப்படுத்த சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்ன?

*A.*—Immediate repairs were carried out and the pot holes closed and the road restored to traffic. Action is being taken to complete quickly renewal of the water-bound macadam surface. The breaches in the causeway at mile 3/4 were closed and traffic restored.

உடனடி மராமத்து வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. குண்டு குழிகள் மூடப்பட்டு, சாலை போக்குவரத்துக்கேற்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது. மகாடம் சாலையை விரைவில் புதுப்பிக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 3/4-வது மைலில் தாம்போகியில் ஏற்பட்ட உடைப்பு மூடப்பட்டு, போக்குவரத்துக்கேற்ற நிலைக்குக் கொண்டுவரப்பட்டது.

*By- pass road—Construction of (Dharmapuri taluk)*

224 *Q.*—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி தாலூகா மாரண்ட அள்ளியில் மொரப்பூர்–மாரண்ட அள்ளி ரோட்டில் பை பாஸ் ரோட் போட உத்தேசமுண்டா?

*A.*— No.

இல்லை.

225 *Q.*—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தர்மபுரி தாலூகா பாப்பாரப்பட்டியில் தர்மபுரி–பாலக்கோடு ரோடுக்கு பை-பாஸ் ரோடு போட உத்தேசம் உண்டா ?

*A.*— No.

இல்லை.

*Maintenance of roads*

226 *Q.*—**திரு. கே. கோபால கவுண்டர் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ரோடுகள் பராமரிப்புக்காகவும் புதிய ரோடுகள் போடுவதற்காகவும் கடலூர் டிவிஷனுக்கும் விழுப்புரம் டிவிஷனுக்கும் தனித்தனியே 1962–63, 1963–64 வருஷங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது ?

*A.*—The information is furnished below.—

*I. Maintenance.*

| | *Villupuram Division.* (RS. IN LAKHS.) | | *Cuddalore Division.* (RS. IN LAKHS.) | |
|---|---|---|---|---|
| | 1962–63. | 1963–64. | 1962–63. | 1963–64. |
| (a) National Highways .. | 2·27 | 4·96 | 0·50 | 1·64 |
| (b) National Highways Urban Links. | 0·24 | 0·44 | .. | .. |

| | Villupuram Division. (RS. IN LAKHS.) | | Cuddalore Division. (RS. IN LAKHS.) | |
|---|---|---|---|---|
| | 1962–63. | 1963–64. | 1962–63. | 1963–64. |
| (c) Roads maintained by Government. | 11·71 | 13·06 | 13·85 | 18·83 |
| (d) Maintenance of Avenues. | 0·33 | 0·45 | 0·43 | 0·41 |
| (e) Maintenance of Panchayat Union roads under local roads grant. | 5·74 | 5·60 | 5·25 | 6·73 |
| *II. New Formations.* | | | | |
| (1) Plan Works-Ex District Board. | 1·67 | 1·06 | 0·66 | 0·81 |
| (2) Works executed under Village Works Grant Programme. | 5·07 | 4·52 | 5·54 | 2·81 |

தகவல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

**I. பராமரிப்பு.**

| | விழுப்புரம் டிவிஷன். (ரூ. லட்சத்தில்) | | கடலூர் டிவிஷன். (ரூ. லட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | 1962–63. | 1963–64. | 1962–63. | 1963–64. |
| (a) தேசிய நெடுஞ்சாலைகள் | 2·27 | 4·96 | 0·50 | 1·46 |
| (b) தேசிய நெடுஞ்சாலைகள்–நகர்புற இணைப்புகள். | 0.24 | 0.44 | .. | .. |
| (c) அரசாங்கம் பராமரிக்கும் சாலைகள். | 11·71 | 13·06 | 13·85 | 18·83 |
| (d) சாலையோர மரங்களைப் பராமரித்தல். | 0·33 | 0·45 | 0·43 | 0·41 |
| (e) உள்ளூர் சாலைகள் மானியத்தின் கீழுள்ள பஞ்சாயத்து யூனியன் சாலைகளைப் பராமரித்தல். | 5·74 | 5·60 | 5·25 | 6·73 |
| **II. புதிய சாலைகள்.** | | | | |
| (1) திட்டப் பணிகள்—முன்னாள் மாவட்டக் கழகம். | 1·67 | 1·06 | 0·66 | 0·81 |
| (2) கிராமப் பணி மானியத் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட வேலைகள். | 5·07 | 4·52 | 5·54 | 2·81 |

*Overbridge (Dharmapuri taluk)*

227 *Q.*—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தருமபுரி வட்டம் சின்னாற்றின் குறுக்கே மாரண்டஅள்ளி பஞ்சப் பள்ளி ரோடில் அத்திமேடு அருகாமையில் மேல் பாலம் கட்டும் உத்தேசமுண்டா ?





(இ) ஆம் என்றால் எப்போது ?

*A.*— (*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

*Construction of overbridges, Tiruchirappalli district.*

228 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any recommendations have been made by Madras Government for replacing the existing Railway level crossings by over bridges during the Third Plan period, in Tiruchi district ;

(*b*) the order of priority of these schemes ; and

(*c*) the details of the reply received from the Ministry of Railways ?

*A.*—(*a*) The following schemes for the construction of over bridges at the place of existing level crossings in Tiruchirappalli district were recommended to the Government of India in the Ministry of Transport, for inclusion in the Third Five-Year Plan—

(i) At mile 191/7 of Madras-Dindigul Road (N.H. 45) ;

(ii) On Thennur Road in Tiruchy Town (610' away from mile 196/5 of the G.S.T. Road.) ;

(iii) On Hebar Road, North of Palakarai Railway Station in Tiruchy Town (1025' away from mile 197/2 of G.S.T. Road) ;

(iv) At mile 197/6 of G.S.T. Road South of Palakarai Railway Station in Tiruchy Town.

(*b*) The work mentioned against item (i) above was assigned the first place in the list of 16 overbridges schemes proposed on National Highways outside Municipal limits. The remaining three works were assigned the 8th, 9th and 10th places in the list of 22 overbridge schemes proposed within Municipal limits.

(*c*) The Railways will take up schemes for construction of over bridges at the place of level crossings only when the Road authority's share of the cost of the schemes is made available. The Government of India in the Ministry of Transport who are the Road Authority in regard to item (i) above, have deferred the scheme, in view of the limited funds available for the development of National Highways. In regard to the remaining three schemes, the Road authority's share of cost has to be met by the State Government or the Municipalities concerned. These schemes were deferred by the State Government along with eleven other schemes within Municipal limits outside Madras City, in view of the National Emergency.

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தற்போதுள்ள சாலை—இருப்புப் பாதை சந்திப்புகள் உள்ள இடங்களில் மேற்பாலங்களைக் கட்டுவதற்கான அடியிற்கண்ட திட்டங்கள், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படுவதற்காக, இந்திய அரசாங்கப் போக்குவரத்து அமைச்சகத்திற்கு சிபாரிசு செய்யப்பட்டன :—

(i) சென்னை–திண்டுக்கல் சாலையின் 191/7 மைலில் (தேசிய நெடுஞ்சாலை 45) ;

(ii) திருச்சிராப்பள்ளி டவுனில் தென்னூர் சாலையில் (G. S. T. சாலையின் 196/5 மைலிலிருந்து 610 அடிக்கு அப்பால்) ;

(iii) திருச்சிராப்பள்ளி டவுனில் பாலக்கரை ரயில் நிலையத்தின் வடக்கில் ஹீபர் சாலையில் (G. S. T. சாலையின் 197/2 மைலுக்கு 1025 அடிக்கு அப்பால்) ;

(iv) திருச்சிராப்பள்ளி டவுனில் பாலக்கரை ரயில் நிலையத்தின் தெற்கில் G. S. T. சாலையின் 197/6 மைலில்.

(இ) நகராட்சி எல்லைகளுக்கு வெளியில் தேசிய நெடுஞ்சாலைகளின் மேல் கட்ட உத்தேசித்துள்ள 16 மேற்பாலங்கள் பட்டியலில், (1) இனத் திற்கெதிராக சொல்லியுள்ள வேலைக்கு முதலிடம் அளிக்கப்பட்டுள்ளது. நகராட்சி எல்லைகளுக்குள் கட்ட உத்தேசித்துள்ள 22 மேற் பாலங்கள் அடங்கிய பட்டியலில் எஞ்சியுள்ள மூன்று வேலைகளுக்கு 8, 9, 10-வது இடங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

(உ) சாலைகள் அதிகாரசபை இத் திட்டங்களின் செலவில் பங்கு ஏற்றுக்கொண்டால்தான், சாலை—இருப்புப்பாதை சந்திப்பிடங்களில் மேற்பாலங்கள் கட்டும் வேலையை ரயில்வே மேற்கொள்ளும். இந்திய அரசாங்கப் போக்குவரத்து அமைச்சகம் மேலே (1) இனம் சம்பந்தமாக சாலை அதிகார சபையாகும். தேசிய நெடுஞ்சாலைகளின் அபிவிருத்திக்கென குறைந்த நிதி வசதியே கிடைத்ததன் காரணமாக போக்குவரத்து அமைச்சகம் இத் திட்டத்தை ஒத்திப்போட்டது. எஞ்சியுள்ள மூன்று திட்டங்கள் சம்பந்தமாக, சாலை அதிகார சபையின் பங்கினை மாநில அரசாங்கம் அல்லது சம்பந்தப்பட்ட நகராட்சிகள் ஏற்கவேண்டும். தேசிய நெருக்கடி நிலைமை காரணமாக சென்னை நகருக்கு வெளியில் நகராட்சி எல்லைகளுக்குள் வேறு 11 திட்டங்களுடன் இந்தத் திட்டங்களும் மாநில அரசாங்கத்தால் ஒத்திப்போடப்பட்டன.

*Bridge across Vellar (Chidambaram taluk)*

229 *Q.*—திரு. சி. **சிவசுப்ரமணியன் :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம், தாலூகாவிலுள்ள வெள்ளாற்றில் சென்னை, பாண்டிச் சேரி, கடலூர் ரோட்டையும், தஞ்சாவூர், மாயவரம், சீர்காழி, சிதம்பரம் ரோட்டையும் இணைக்கும் சி. முட்லூர், பி. முட்லூர் என்ற இடத்தில் ஒரு பாலம் கட்ட உத்தேசமுண்டா ?

*A.*—Not at present.

தற்சமயம் இல்லை.

*Bridge across Sanath Kumara Nadhi (Dharmapuri taluk)*

230 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the construction of a bridge across the Sanath Kumara Nadhi in Palacode—Kesaraguli road in Dharmapuri taluk will be taken up for execution during the year 1964–65 ?

*A.*—No.

இல்லை.

*Culverts in Morappur—Marandahally road (Construction of)*

231 *Q.*—Sri R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) Whether there is any proposal to construct culverts in the Morappur-Marandahally road in Salem district ; and

(*b*) if so, the number and their location ?





*A.*—(*a*) No.

(*b*) Does not arise.

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Sheep breeding Centre (Chidambaram taluk)*

232 *Q.*—திரு. சி. **சிவசுப்ரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் தாலூகாவில் செம்மறி ஆடுகள் வளர்ப்பு நிலையம் ஒன்றைத் துவக்கும் உத்தேசமுண்டா ?

*A.*—No.

இல்லை.

*Prohibition Cases in Chidambaram taluk*

233 *Q.*—திரு. சி. **சிவசுப்ரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963 ஜூன் முதல் டிசம்பர் வரை சிதம்பரம் தாலூகாவில் போலீசாரால் கண்டுபிடிக்கப்பட்ட மதுவிலக்கு வழக்குகள் எத்தனை ?

(இ) எத்தனை வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது ?

*A.*—(*a*) 448.

(*b*) 397.

(அ) 448.

(இ) 397.

*Tourist Bungalow, Madurai*

234 *Q.*—திரு. கரு. **சீமைச்சாமி :** கனம் செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை சுற்றுலா மாளிகையின் 1963–64-ல் வரவு செலவு எவ்வளவு?

*A.*—மதுரை சுற்றுலா மாளிகையின் 1963–64-ம் ஆண்டு வரவு ரூ. 56,110·41. நடைமுதல் செலவு ரூபாய் 13,863·03. கட்டடம் அதிலுள்ள சாமான்கள் சம்பந்தமான மூலதனங்கள், தேய்மான மதிப்பு இதில் சேரவில்லை.

*Change of sex*

235 *Q.*—திரு சா. **ராமசாமி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில் இதுவரை ஆண்—பெண்ணாகவும், பெண் ஆணாகவும் மாறியவர்கள் எத்தனை பேர் ? மாவட்ட வாரியாக ?

(இ) அவர்களுக்காக அரசாங்கம் விசேஷ சலுகைகள் அளித்துள்ளதா? விவரமென்ன ?

[20th July 1964

*A.*—(*a*) The particulars are furnished below:—

| *Serial number and name of district.* (1) | *Change of Sex.* *From male to Female.* (2) | *Form Female to Male.* (3) |
|---|---|---|
| 1 Madras City .. .. .. .. | 2 | .. |
| 2 Madurai district .. .. .. | 1 | 3 |
| 3 Tirunelveli district .. .. .. | .. | 2 |
| 4 Coimbatore district .. .. .. | .. | 1 |
| 5 Tiruchirappalli district .. .. .. | .. | 2 |
| Total .. | 3 | 8 |

(*b*) No.

(அ) விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர். | இன மாற்றம். ஆணிலிருந்து பெண். | பெண்ணிலிருந்து ஆண். |
|---|---|---|---|
| 1. | சென்னை நகரம் .. .. | 2 | .. |
| 2. | மதுரை மாவட்டம் .. .. | 1 | 3 |
| 3. | திருநெல்வேலி மாவட்டம் .. | .. | 2 |
| 4. | கோயமுத்தூர் மாவட்டம் .. | .. | 1 |
| 5. | திருச்சிராப்பள்ளி மாவட்டம் .. | .. | 2 |
| | மொத்தம் .. | 3 | 8 |

(இ) இல்லை.

*Branch Post Office (Satyamangalam)*

236 *Q.*—திரு. கு. கோபால கவுண்டர் : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) செஞ்சி தாலுக்கா சத்தியமங்கலம் கிராமத்தில் ஒரு சப் போஸ்ட் ஆபீஸ் திறக்கும்படி கோரிக்கை வந்ததா ?

(இ) அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

*A.*—(*a*) & (*b*) Government's information is that representations were received by the Post Master General, Madras Circle for the conversion of the existing extra Departmental Branch Post Office at Satyamangalam village in Gingee taluk into a sub-office and that orders for the conversion have been issued.

(அ) & (இ) : செஞ்சி வட்டம், சத்தியமங்கலம் கிராமத்தில் உள்ள புறத் துறை அஞ்சல் கிளை அலுவலகத்தை உதவி அலுவலகமாக மாற்றும்படி சென்னை வட்டாரம், அஞ்சல் தலைமை அதிகாரிக்கு கோரிக்கை கிடைத்திருப்பதாகவும் அதற்கான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

*Panchayat Union Councils (Tiruttani taluk)*

237 *Q.*—Sri A. RAGHAVA REDDI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state —

(*a*) When were the Panchayat Union Councils for the following places formed after the transfer of Tiruttani taluk to Madras State under the Andhra Pradesh and Madras (Alteration of Boundaries) Act, 1959 ;



20th July 1964]

(i) Tiruttani, (ii) Tiruvalangadu, (iii) Pallipet, and (iv) Ramakrishnarajupet.

(*b*) whether the Courts held that the Pallipet Panchayat Union Council was not validly constituted and whether it was placed afterwards under the administrative control of the concerned Revenue Divisional Officer ;

(*c*) whether the other three panchayat union councils were allowed to function though they were also not validly constituted for the same reasons as the Pallipet Panchayat Union Council ; and

(*d*) if so, for how long were they allowed to continue and when were they actually dissolved ?

*A.*—(*a*) Panchayat Union Councils were constituted in the Tiruttani taluk with effect from 2nd October 1961 the date on which the Madras District Development Councils and Panchayats (Extension to Added Territory) Act, 1961 (Madras Act 28 of 1961) was brought into force in the said area.

(*b*) In Writ Petition No. 1167 of 1961, the High Court, Madras, held (i) that the panchayats in the Added Territory are not and cannot be deemed to be panchayats constituted under the Madras Panchayats Act, 1958, (ii) that there were no presidents of such panchayats continuing to hold office in the Added Territory after 1st April 1960 and (iii) that the said presidents cannot constitute the first panchayat union council in the Added Territory. Against the decision of the High Court, a Writ Appeal was preferred by the Government.

The High Court upheld the earlier decision and pronounced that the panchayats in the Added Territory, if they survived at all, could only be regarded as an aggregate of individuals and that such aggregate of individuals cannot exercise the statutory functions bestowed upon panchayats. A Panchayat Union Council could not, therefore, be constituted for the Pallipet Block. The question of placing the Pallipet Panchayat Union Council under the administrative control of the Revenue Divisional Officer concerned did not arise.

(*c*) & (*d*) The implications of the judgments of the High Court were carefully examined to see whether the findings could be applied to the other panchayats and panchayat union councils in the said Territory. Pending a decision on this question, the other panchayat union councils were allowed to continue. It was found that the High Court's orders applied with equal force in the case of these panchayats and panchayat union councils also in the area. The finding was recently confirmed by High Court in another Writ Petition. The Government, therefore, ordered that the other three panchayat union councils also cannot be deemed to have been validly constituted as the presidents of panchayats who are purporting to act as members of those panchayat union councils are merely aggregates of individuals and cannot exercise the statutory functions under the Act.

[*Note.*—**An asterisk (*) at the Commencement of a speech indicates revision by the Member.**]

## II.—ADJOURNMENT MOTIONS.

### (1) Paucity of seats in Pre-University classes.

### (2) Uncertainty *re* location of Steel Plant at Salem.

Mr. SPEAKER : I have received notices of two Adjournment Motions from Sri K. A. Mathialagan and Sri M. Kalyanasundaram this morning. Sri K. A. Mathialagan's motion relates to paucity

[Mr. Speaker] [20th July 1964

of seats in Pre-University Classes and the consequent unrest and anxiety among parents and students. Sri M. Kalyanasundaram's motion relates to the location of Steel Plant at Salem based on Salem iron ore and Neyveli Lignite, which has caused great disappointment and uncertainty about its location. I hold that both the Adjournment Motions are not in order and therefore do not give my consent to them.

SRI K. A. MATHIALAGAN : May I explain, Sir?

MR. SPEAKER : I ought to have rejected it in my Chamber itself without mentioning it in the House.

## III. CALLING ATTENTION TO COLLAPSE OF SARASWATHI HIGH SCHOOL BUILDING, MANI NAGARAM, MADURAI.

* SRI V. SANKARAN : Sir, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, viz., the panic caused in the minds of parents on account of the building crash of Saraswathi High School, Maninagaram, Madurai, the nervousness on their part to send their children to schools, buildings of which are not strong and stable and the urgent responsibility of Government to examine the strength and stability of all existing school buildings. In this connection, I wish to submit, with your permission, Sir, one thing. Full details, which I have mentioned in my notice have not been sent to the Department. I feel too much has been condensed and some of the important portions have not been brought forward in the Notice. I would like to read the original portion which I have sent to the Department for admission.

MR. SPEAKER : The hon. Member should read only what he has mentioned in the Notice.

SRI V. SANKARAN : Yes, Sir. The panic caused in the minds of parents, on account of the building-crash of Saraswathi High School, Maninagaram, Madurai, the nervousness on their part to send their children to schools, buildings of which, are not sufficiently strong and stable and the urgent responsibility cast on the Government, as a consequence thereof; to examine and satisfy itself as to the strength and stability of all the existing buildings of educational and public institutions and also to ensure itself of the sufficient strength and stability of future buildings of such institutions, at the beginning itself.

SRI R. V. SWAMINATHAN rose.

MR. SPEAKER : The House will have a discussion on this subject to-day.

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement.

The Saraswathi Higher Elementary School in which the mishap occurred is a mixed school situated on the Rajah Mill Road, Madurai Municipality. The school was started in 1953 and



20th July 1964] [Sri R. Venkataraman]

it gradually developed into a very big institution with 3,700 students on its rolls and a staff of 99 teachers (91 women and 8 men).

The School is accommodated in 8 separate buildings. The building that collapsed consists of 2 wings with 3 floors each. It has been constructed from the management funds. The Collector of Madurai has reported that several defects were noticed in the construction of the building. Very little cement appears to have been used, the construction being made of lime mortar and brick. This building accommodates 48 sections and the strength of the pupils that can be accommodated in this building is roughly calculated to be 1,200. One wing of this building collapsed on 4th April 1964. The third floor of this wing came down at 11-45 a.m. on 4th April 1964 on the second floor which in turn collapsed and the inmates who were there at that time were caught under debris. It was a holiday and only children attending the special classes were there at the time of the tragedy.

Within half an hour of this mishap, all officers and men of the Town Police, Fire Brigades, etc., were engaged in rescue operations. Great service was also rendered by the men of the T.V.S. Organisation and the Harvey Mills. The District Superintendent of Police, Madurai (Urban) was in direct charge of the operations. The Divisional Inspector of Schools, Madurai, and the District Educational Officer, Madurai, were also on-the-spot rendering necessary assistance. Between 12 noon and 4 p.m. on 4th April 1964, 196 inmates of the school were rescued and sent to the hospital. Of them 35 were dead (84 students and one meal carrier woman). Out of the rest, 130 were treated as in-patients in the hospital which included the Headmistress and 5 other teachers. Thirty-one were treated as out-patients. The dead bodies were handed over to the parents at 6 p.m. At the hospital adequate arrangements were made for the nursing of the injured persons. Subsequently, one more student died bringing the total to 36 (35 students and 1 woman).

Necessary instructions were issued to the Dean, Erskine Hospital, Madurai, and others concerned that—

(1) the treatment of all children and adults injured in the accident must be completely free in the Government Erskine Hospital, Madurai;

(2) in the case also of those children who were discharged on the 4th instant after treatment and who are re-admitted into the hospital for further examination and treatment, the treatment must be completely free;

(3) in the case of all the injured children and adults who are treated either as in-patients or as out-patients the administration of the expensive drugs, injections, etc., should not be charged but should be free of cost;

[Sri R. Venkataraman] [20th July 1964

(4) the first X-ray as well as any subsequent X-rays taken of the injured must be free; and

(5) if any expensive medicine required for being administered on the injured are not available in the hospital they should be purchased at the cost of the Government and no charges should be collected from the patients.

The Director of Public Instruction has given an assurance to the parents of the school children who are injured that they need not have to sit for the annual examination and that they would be promoted to the next higher class. The Executive Engineer, Public Works Department (Madurai Division) has enquired into the technical reasons for the collapse of the building while the Revenue Divisional Officer, Madurai, has enquired into the other aspects of the accident.

The Government have taken the following action in the matter :—

(a) The Correspondent of the School has been charged with various offences arrested and released on bail.

(b) The District Educational Officer, Madurai, has issued a notice for the withdrawal of the recognition of the Saraswathi Higher Elementary School while the Director of Public Instruction has ordered the withdrawal of the recognition of the allied High School, viz., the Saraswathi High School, Maninagaram, Madurai. The Correspondent has filed writ petitions in the High Court against the orders and they are pending. I think these have been since withdrawn.

The Government propose to take the following further action in respect of the following :—

(a) Measures for the strict enforcement of the rules and regulations relating to Building Rules.

(b) To make it obligatory for the owners and users of all buildings to which the public have access to obtain a licence from the prescribed authorities after production of a certificate from a qualified Engineer (or an Overseer in the case of small buildings) that the buildings are structurally sound.

(c) The need for amending the Madras Educational Rules to make it obligatory for the Education Department to grant recognition to schools after ensuring the structural strength of the buildings in which the schools are housed and to ensure that repairs to school buildings should be undertaken only on holidays or outside school hours.

(d) The necessity to notify to the Director of Public Instruction and the head of the educational institution concerned if and when the executive authority of a municipality declares a building



20th July 1964] [Sri R. Venkataraman]

in which an institution is housed as unfit for occupation so that they may immediately note the serious situation and take appropriate action.

(e) To arrange for the inspection of the buildings by qualified Engineers before disbursing the grants to the private schools in the panchayat union areas and release the grant after the structural strength has been verified.

MR. SPEAKER : There is a discussion on this subject at the end of the day.

THE HON. SRI R. VENKATARAMAN : The Hon. Speaker may fix 12-30 p.m. for starting of the discussion.

MR. SPEAKER : Yes, it would be taken up at 12-30 p.m. or earlier if the business of the House for the day is over by then.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS CINEMAS (REGULATION) AMENDMENT BILL, 1964.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Speaker, Sir, I beg for leave to introduce the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964'.

The motion was put and carried and leave was granted.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

## V.—DISCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1964-65—cont.

MR. SPEAKER : Now the discussion on the Madras State Electricity Board Budget will be resumed.

The hon. the Leader of the Opposition will speak.

* திரு. இரா. நெடுஞ்செழியன் : மதிப்பிற்குரிய அவைத்தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சாரக் கழகத்தின் 1964-65-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை, கனம் தொழில் அமைச்சர் அவர்களால் மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. மின்சாரத்தினுடைய இன்றியமையாத தன்மையை இந்த மன்ற அங்கத்தினர்கள் சென்ற இரண்டு நாட்களாக தெளிவுற கூறிக்கொண்டு வருகிறார்கள். இந்தக் காலத்தில் ஒரு நாட்டின் செல்வத்தை வளர்க்க உறுதுணை புரிகிற ஒரு பெரும் கருவியாக மின்சாரம் விளங்குகிறது என்பதை, அகில உலக நாடுகளில் வளர்ந்து வருகிற நிலைமைகளிலிருந்து நாம் தெளிவாக அறிகிறோம்.

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [20th July 1964

விவசாயத் துறையில் எதிர்பார்க்கப்படுகிற விளைவுகளைப் பெருக்குவதானாலும், தொழில் துறையில் எதிர்பார்க்கப்படுகிற செய் பொருள்களைப் பெருக்குவதானாலும், இப்பொழுது இன்றியமையாத தேவையாக இருப்பதுவும், மின்சாரமாக அமைந்திருக்கும் தன்மையைப் பார்க்கிறோம். நம் மாநிலத்தைப் பொருத்த மட்டில், தேவைப்படும் மின்சாரத்தை அதிகமாக உற்பத்தியாக்கும் முயற்சியில் கனம் தொழில் அமைச்சர் ஈடுபட்டிருப்பதும், தமிழ் நாடு மின்சாரக் கழகத்தினர் மிக்க அக்கறையோடும், ஆர்வத்தோடும் அதை வளர்த்து வருவதும் உள்ளபடியே பாராட்டுவதற்கு உரியனவாகும். 1951-ம் ஆண்டில், இந்த மாநிலத்தினுடைய உற்பத்தித் திறன் அளவு 156 மெகவாட்டாக இருந்த நிலை 1964-ல் கிட்டத்தட்ட 865 மெகவாட்டாக வளர்ந்திருக்கிற நிலையும், 1½ லட்சம் மக்கள் பயன்படுத்திய நிலை, இன்றைக்கு 11 லட்சம் மக்கள் பயன்படுத்துகிற நிலைக்கு உயர்ந்திருக்கும் நிலையும், மின்சாரத்தை விரிவாக்கும் இடங்களைப் பொறுத்தமட்டில் 1,813 இடங்களாக இருந்த நிலை, 1964-ல் 16,674 இடங்களாக விரிவடைந்திருக்கும் நிலையும், விவசாய பம்பு செட்டுகள் பொருத்தவரை, 14,000 சில்லரையாக இருந்த நிலை, 1,88,000-ஆக அமைந்திருக்கவும், தலா நபர் பெறும் மின்சார அளவு 12 யூனிட்டாக இருந்தது, 1964-ல் 80 யூனிட்டாக வளர்ந்திருப்பதும் உள்ளபடியே போற்றிப் பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆனாலும், மாநிலத்தினுடைய தேவைகளை நிறைவேற்றுகிற அளவுக்கு அமைந்திருக்கிறதா என்றால் இல்லை என்பதுதான் புள்ளி விவரங்கள் நமக்கு தெளிவுபட எடுத்துக் கூறுகின்றன. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ் மாநிலத்தில் அதிகமான அளவு உற்பத்தி செய்கிறோம் என்று ஒப்பு நோக்கும் வகையில் பார்க்க கொண்டிருக்கிறது என்றாலும், மாநிலத்தினுடைய தேவையை நிறைவேற்றி மக்களுடைய கஷ்டங்கள் போகும் அளவுக்கு அமைந்திருக்கிறதா என்றால், இன்னும் அமையவில்லை என்பதைத் தான் நாம் அறிகிறோம். அது மட்டுமல்ல. நம் மாநிலத்திலே மின்சார உற்பத்தி இப்பொழுது நீர் மின்சாரத்தைப் பொருத்துத் தான் அமைந்த ஒன்றாக இருக்கிறது. இந்த நீர் மின்சார நிலையத்தைப் பொருத்து உற்பத்தியாகும் மின்சார அளவையும், மழை பெய்யும் நிலையைப் பொருத்தும், தேக்கங்கள் நிறைந்திருக்கும் தன்மையைப் பொருத்தும், அமைந்த ஒன்றாக அமைகிறது. ஆண்டு தோறும் ஜூன், ஜூலைத் திங்களில் பார்க்கும் போது அளவுக்கு அதிகமாக மின்சாரம் உற்பத்தியாகும் நிலை இந்த மாநிலத்தில் இருந்தாலும், நீர் மின்சார நிலையத்தையே நம்பி வாழவேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால் கட்டுப்பாடு என்பது வருந்தத் தக்க ஒன்றாக ஆண்டு தோறும் வந்து கொண்டே இருக்கிறது. அதை நீக்குவதற்கான காரண காரிய விளக்கங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்து வந்திருக்கிறார்கள். ஆண்டு தோறும் நடைபெறும் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து இருந்து கொண்டே வந்திருக்கிறது. அதுவும் குறிப்பாக முக்கியமான தொழிற்சாலைகள் நிறுத்தப்படும் நிலையையும், அதன் காரணமாக



20th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

இலட்சக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்படும் அளவுக்கு ஏற்படும் நிலையும், ஆயிரக்கணக்கான தொழிலாளிகளுக்கு வேலையில்லாமல் போகும் சூழ்நிலையையும் ஆண்டு தோறும் காண்கின்ற ஒன்றாக அமைகின்ற தன்மையைப் பார்க்கிறோம். ஆண்டு தோறும் நிலையாக இருக்கும் அதைப் போக்குதற்கான தக்க ஏற்பாடுகளை அரசாங்கம் முன்கூட்டியே செய்திருக்க வேண்டும். அதைச் செய்யத் தவறிய குற்றச்சாட்டைத்தான் மன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள்.

ஒரு முறை தொழில் அமைச்சர்கூடத் தெரிவித்திருந்தார்கள். இந்த மின்சாரத் தட்டு ஏற்படுவது எதிர்பார்க்கிற ஒன்றாக இருக்கிற காரணத்தினால், பருவநிலையை எதிர்பார்த்து மின்சார உற்பத்தி செய்ய வேண்டிய நிலை இருக்கிற காரணத்தினால், தட்டு ஏற்படும் காலத்தில் மின்சாரத்தை நம்பி வாழும் பெரிய பெரிய தொழிற்சாலைகளெல்லாம் தாங்கள் பழுது பார்க்கும் வேலைகளையும், சரி செய்யும் வேலைகளையும், ஜூன் ஜூலைத் திங்களில் வைத்துக் கொண்டால், தட்டுப்பாட்டின் காரணமாக உற்பத்தி நஷ்டம் ஏற்படாமலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாமலும் தவிர்க்க வழிவகை செய்ய முடியும் என்று அந்த முறையில் தெரிவித்திருந்தார்கள். மின்சாரத்தையே நம்பி வாழும் பெரிய பெரிய நூல் ஆலைகளுக்கும், ஏனைய ஆலைகளுக்கும் அத்தகைய குறிப்பு ஒன்று அரசாங்கம் அனுப்பியிருக்கிறது என்று ஒரு முறை கனம் தொழில் அமைச்சர் எடுத்துத் தெரிவித்தார்கள். அந்த முறை எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அப்படி நிறைவேற்றியதன் காரணமாக தட்டினால் ஏற்படுகிற நஷ்டத்தைத் தவிர்க்க இதுவரையில் ஏதாவது பலன் கிடைத்திருக்கிறதா என்பதையும் நான் அறிந்து சொல்ல விரும்புகிறேன். அந்த ஒரு முறையைக் கொண்டு வருவதன் மூலம் ஓரளவுக்கு உற்பத்தி நஷ்டம் ஏற்படாமலும், வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாமலும் தவிர்க்க முடியும் என்பதனை தொழில் அமைச்சர் ஒரு முறை கூறி இருந்தார்கள். அது எந்த அளவுக்கு, இந்த ஆண்டு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அறிய நான் விரும்புகிறேன். 10 00 a.m.

இப்பொழுது நீர் மின்சார நிலையத்தின் மூலமாக நாம் தேவைப்படுகிற அளவுக்கு மின்சாரத்தைப் பெற்றுவிட்டோம், இன்னும் சிலபல சிறிய திட்டங்கள் இருக்கின்றன, அவை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேறக்கூடிய தன்மையில் இருக்கின்றன என்று எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொருத்த வரையிலும் நீர் மின்சாரத்தை அதிகமாகப் பெறுவதற்கு வாய்ப்புக் கூறுகள் இல்லை, வேறு பல வழிகளைத் தேட வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்பதையும் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொருத்த வரையில் நீர் மின்சாரத்தைப் பெறுவதற்கான வாய்ப்புக்கூறுகள் இல்லாவிட்டாலும், தென் மண்டலத்தைப் பொருத்த வரையில் அந்த வாய்ப்புக் கூறுகள் அதிகம் இருக்கின்றன, அந்த வாய்ப்புக் கூறுகளைப் பயன்படுத்தி

மின்சாரத்தை அதிகமாக அடைந்து, இங்கே ஏற்படுகிற தட்டுப்பாடுகளைத் தீர்ப்பதற்கு வழிவகை இருக்க முடியும் என்று நிபுணர்கள் எடுத்துத் தெரிவிக்கிறார்கள். அதற்கான முயற்சியில் தென் மண்டலக் குழு ஈடுபட்டிருப்பதாகவும் அவ்வப்போது செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன ; அடிக்கடி இந்த மன்றத்திலும் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது; நிபுணர்களும் அவ்வப்போது எடுத்துத் தெரிவித்துக்கொண்டு வருகிறார்கள்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலே பெய்யும் பெரும்பாலான மழைத் தண்ணீர் அரபிக் கடலில் போய்க் கலக்கும் அளவு பயன்படுகிறது. அங்கே மின்சாரத்தை உற்பத்தியாக்கும் முயற்சியிலே கேரள அரசு ஈடுபட்டிருக்கிறது. ஆகவே, கேரளத்திலிருந்து தண்ணீரைப் பெறுவதிலே சில கடினமான நிலைமைகள் இருக்கின்றன என்று எடுத்துத் தெரிவித்தார்கள். மேற்குத் தொடர்ச்சி மலையிலே பெய்கின்ற நீரைக் கேரளப் பகுதியில் இறக்குவதன் மூலமாக மின்சாரத்தை உற்பத்தியாகக்குவதற்கான ஒரு வாய்ப்பு தான் கேரள அரசுக்கு ஏற்படுகிறது. ஆகவே, அந்த மின்சாரத்தை உற்பத்தியாக்கும் வாய்ப்பைப் பெற்ற பிறகு, அதன் மூலம் கிடைக்கும் நீர் பாசனத்திற்குப் பயன்படாத முறையில் அரபிக் கடலில் போய்க் கலக்கிறது என்ற நிலைமை எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேற்குப் பக்கத்தில் அது இறக்கப்படாமல் கிழக்குப் பக்கத்தில் அது இறக்கப்பட வாய்ப்புகள் ஏற்படுமானால் தேவையான மின்சார உற்பத்தி ஆக்குவதற்கு வாய்ப்புக் கூறுகள் ஏற்படுகின்றன. அதிலிருந்து வருகிற நீர் தமிழக மாநிலத்தில் வறண்ட பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து தருவதற்குப் பயன்படக் கூடும். எனவே, இரண்டு வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருகிற நிலைமை கிழக்குப் பகுதியில் அது திருப்பப்படுவதன் மூலமாக ஏற்படுகிறது என்றும், மேற்குப் பகுதியில் செல்கிற அளவுக்கு விடுவதன் மூலமாக மின்சாரம் உற்பத்தியாக வாய்ப்புப் பெற முடியும் என்றும் எடுத்துச் சொல்லப்படுகிறது. இந்தக் கருத்தை அதிகமாக வலியுறுத்துவதன் மூலமாகவும், தென் மண்டலத்திலுள்ள அத்தனை மாநிலங்களில் உற்பத்தியாகும் அத்தனை மின்சாரத்தையும் ஒன்றாக இணைத்து அதன் மூலம் தேவைகளைப் பெறும் முயற்சி நடைபெறுகின்ற காரணத்தால் அதை அதிகமாக வற்புறுத்துவதன் மூலம் இந்த நீர் மின்சாரத்தை அந்த வகையிலே பெருக்குவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறிய சிறிய நீர்ப்பாசனங்களுக்குப் பயன்படுகிற நீர் வீழ்ச்சிகளை நீர் மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்துவதன் மூலமாக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 385 மெகவாட் உற்பத்தியாகக் கூடும். அதை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு முயற்சிகள் அரசினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதும் தெரிவிக்கப்படுகிறது. அது எந்த அளவுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும், எந்த அளவுக்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்திருக்கிறது என்பதையும் நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.



அடுத்தபடியாக, நீர் மின்சாரத்தைப் பெருக்குகின்ற முயற்சியிலே ஒகனக்கல் திட்டம் அதற்குப் பயனளிக்கக்கூடிய ஒன்றாகவும் எளிதாக நிறைவேறக்கூடிய ஒன்றாகவும் இருக்கும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலும், மைசூர் மாநிலமும் தமிழக மாநிலமும் ஈடுபடுகிற ஒன்றாகத்தான் இருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. தமிழகத்தைப் பொருத்த வரை, ஒகனக்கல் திட்டம் நிறைவேற்றப்படுவதன் மூலம் 800 மெகவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி ஆக்க முடியும், அதே சமயத்தில் மைசூர் மாநிலம் ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 1,200 மெகவாட் அளவுக்கு உற்பத்தியாக்க முடியும், இரண்டு திட்டங்களையும் ஒப்பிட்டு நோக்கி இந்திய சர்க்காரினுடைய பரிசீலனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கப்படுகிறது. இரண்டையும் ஒன்றாக ஆக்குவதன் மூலமாக ஏறத்தாழ 130 கோடி ரூபாய் செலவில் மூன்று இடங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் அதிகமான அளவு மின்சாரத்தை பெற முடியும். இரண்டு மாநிலங்களுக்கும் பொதுவாக இருக்கும் காரணத்தால் இந்தத் திட்டத்தை இந்தியப் பேரசினரே மேற்கொண்டு நிறைவேற்றுவதன் மூலமாக இரண்டு மாநிலங்களுக்கும் இடையே இருக்கிற பேச்சுவார்த்தையிலே ஏற்படுகிற தடைபாடுகளை நீக்கவும், திட்டத்தை உருவாக்கிக் கிடைக்கும் மின்சாரத்தைத் தென் மண்டலம் மிக நல்ல முறையில் பயன்படுத்த வழிவகை ஏற்படும் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இந்தியப் பேரரசே இதை நிறைவேற்ற வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதன் மூலமாக அதன் மூலம் கிடைக்கும் பலனை இந்த மாநிலமும் பெற முடியும். மைசூர் மாநிலமும் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. இதை வற்புறுத்த வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், மின்சாரத்தைப் பெருக்குவதற்கு அதிகமான வாய்ப்புக்கூறுகள் பல்வேறு வகையில் இருந்தும் இங்கு நிதி பற்றாக்குறை காரணமாக நிறைவேற்றுவதற்கு வழி இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கிற அகில இந்தியக் குழுவிற்கு நமது கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தலைவராக இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தக் குழுவினர் கூட வற்புறுத்திருக்கிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அதிகமான நிதி ஒதுக்கித் தரவேண்டும், அதுவும் இந்தத் திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்திய அரசு ஒதுக்கித் தந்தால்தான் நிறைவேற்ற வழிவகை செய்ய முடியும் என்று அவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்தத் திட்டத்தை எந்த அளவு இந்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது, அந்தச் சிபார்சுகளை ஏற்றுக் கொள்வதன் மூலமாக இங்கே எதிர்பார்க்கப்படும் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு வழிவகை இருக்கிறதா என்று அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், இந்த மாநிலத்தைப் பொருத்த வரையில், நீர் மின்சாரத்தைப் பெருக்குவதற்கு அதிக வாய்ப்புக் கூறுகள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [20th July 1964

இல்லை என்றும், இருக்கும் திட்டங்கள் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டால் சில அளவுக்குப் பெற முடியும் என்றும் எடுத்துச் சொல்லப்படுகிறது. இன்னும் நீர் மின்சாரத்தைப் பெறுவதற்கு அத்தகைய வாய்ப்புக்கூறுகள் இல்லாத நிலையில் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதன் மூலமாகத் தேவைப்படுகிற மின்சாரத்தைப் பெற முடியும் என்ற கருத்தும் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஐம்பது சத விதம் நீர் மின்சாரத்தின் மூலமாகவும், ஐம்பது சத வீதம் அனல் மின்சாரத்தின் மூலமாகவும், பெறும் வாய்ப்பை உருவாக்கினால்தான் இந்த மாநிலத்தின் தேவையை நிறைவேற்ற முடியும் என்று வல்லுநர்கள் எடுத்துத் தெரிவிக்கிறார்கள். அந்த முறையில், அனல் மின்சார நிலையத்தை அமைக்கும்போது, நீர் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு ஏற்படுகிற செலவை விடச் சற்று அதிகச் செலவு ஏற்படும் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. ஆனால், இந்த நாட்டினுடைய தொழில் உற்பத்தியானாலும், விவசாய வளர்ச்சியானாலும், மின்சாரத்தை நம்பியே வாழ வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். அந்த மின்சாரம் எந்த அளவுக்கு அதிகமாக உற்பத்தி ஆக்கப்படுகிறதோ அதைப் பொறுத்துத் தான் இந்த இரண்டு துறைகளும் வளர வேண்டியனவாக அமைந்து இருக்கின்றன. மின்சார உற்பத்தியைப் பெருக்க அதிகச் செலவு ஆகிறது என்றாலும் கூட, அதன் மூலம் கிடைக்கும் பலன்கள் இதைவிட அதிகமாக அமையக்கூடும். எனவே, அனல் மின்சார நிலையங்களை அமைக்க அதிகச் செலவு ஆகிறது என்ற காரணத்தைக் காட்டி, அந்த நிலையங்களை ஏற்படாமல் நிறுத்தி வைப்பதற்கான அந்தச் சமாதானம் ஏற்படுவதற்கில்லை. எனவே, அனல் மின்சார நிலையத்திற்கு அதிகப்படியாகச் செலவாகும் அத்தகைய நிலைமை ஏற்பட்டாலும், அதன் மூலம் விளைகிற விளைவுகள், பலன்கள் அதிகமாக வருவதற்கு வாய்ப்புக்கூறுகள் இருக்கின்றன. எனவே, அனல் மின்சார நிலையத்தை எங்கெங்கு தொடங்குவதற்கு வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றனவோ, அங்குத் தொடங்குவதற்கான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அனல் மின்சாரத்தைப் பொருத்த வரையில் வைத்திருக்கும் திட்டத்தைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். எண்ணூரில் 300 மெகவாட் அளவுக்கு மின்சாரம் உற்பத்தி ஆக்குவதற்கும், தூத்துக்குடியில் 100 மெகவாட் உற்பத்தியாக்குவதற்கும் திட்டம் மேற்கொள்ளப்படுவது பற்றி வற்புறுத்தப்படுகின்றன என்றும் அவர்கள் எடுத்துத் தெரிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், இப்பொழுது நமக்கு அமைந்திருக்கிற சிறந்த ஒரு வாய்ப்பாக நெய்வேலி அமைந்திருக்கிறது. இப்பொழுது நெய்வேலியில் 250 மெகவாட் வரும் நிலைமையும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 400 மெகவாட்டாக முடியும் என்றும், அதை நான்காவது திட்டத்தில் 600 மெகவாட்டாக்க இந்திய அரசினரை வற்புறுத்திக்கொண்டு வருவதாகவும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்திய அரசினர் என்ன பதில் உரைத்தார்கள் என்பதை நான் அறிந்து



20th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

கொள்ள இயலவில்லை. அதற்கு இந்திய அரசினர் போட்டிருக்கும் திட்டம் என்ன? இப்பொழுது போட்டிருக்கிற அளவிலே 600 மெகவாட் உற்பத்தியாக்கும் முயற்சிக்கு இடம் ஏற்படுத்துவார்களா என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல. மற்றொரு சுரங்கத்தை அங்கு உருவாக்குவதன் மூலமாக அனல் மின்சாரத்தை அங்கே அதிகமாக உற்பத்தியாக்குவதற்கு முயற்சி எடுப்பதன் மூலமாக 1000 மெகவாட் கிடைக்கும் அளவு அதிகமாக ஆக்கிச் செல்ல முடியும் என்று எடுத்துத் தெரிவிக்கப்படுகிறது. இந்த முயற்சிகள் எல்லாம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மேற்கொண்டால் தான் இந்த மாநிலத்தின் தேவையை நிறைவேற்ற முடியும் என்ற கருத்தும் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பலர் சுட்டிக்காட்டியது போலவே, நாம் இப்பொழுது எதிர்பார்க்கிற அளவுக்கு உற்பத்தியாகிற மின்சார அளவையும் திறனையும் நமக்குத் தேவைப்படுகிற அளவையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட, துண்டு விழும் நிலைமை இருக்கும் என்று தான் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் கூட இப்பொழுதிருக்கும் அளவுக்குப் புதிய திட்டங்களை மேற்கொள்ள முடியாத அத்தகைய அளவுக்கு வருகிறபோது, 1005 மெகவாட் அளவுக்குத்தான் உற்பத்தியாக்க முடியும். தேவையின் அளவு 2200 மெகவாட் இருக்க முடியும், அந்த இடையில் இருக்கும் துண்டு விழுகிற தன்மையை நீக்க வேண்டுமென்றால் ஒகேனக்கல் திட்டத்தை அமுலாக்குவதன் மூலமாகவும்; 1000 மெகவாட் அளவுக்கு நெய்வேலி மின்சாரத் திட்டத்தை வளர்ச்சி அடையச் செய்வதன் மூலமாகவும் கல்பாக்க அணு சக்தி மின் நிலையத்தை உருவாக்குவதன் மூலமாகவும் பெற முடியும் என்ற கருத்து வல்லுநர்களால் எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த மாநிலத்தின் தேவைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. அதிகமான அளவுக்கு மின்சாரத்தை உற்பத்தியாக்கப் பயன்படுவதற்கு வழி இல்லை என்று சொல்வதற்கு இல்லை. எனவே, தேவைகள், வளர்ந்து கொண்டு செல்கிற காரணத்தால், தேவைகளை மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஈடு கட்ட முடியாது, துண்டு விழும் நிலை இருக்கும் என்று எடுத்துத் தெரிவித்தார்கள். அதற்கான வாய்ப்புக் கூறுகளை நிறைவேற்றுவதற்கான அத்தகைய முயற்சிகளில் மிகத் தீவிரமாக இந்த அரசு ஈடுபட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. கல்பாக்கத்தைப் பொருத்த வரையிலும், கனம் உறுப்பினர் திரு. மதியழகன் அவர்கள் ஒரு ஐயப்பாட்டை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஐயப்பாட்டை எடுத்துத் தெரிவிப்பதற்குக் காரணம், இந்திய அணு ஆராய்ச்சிக் கழகத்தின் தலைவராக இருக்கும் டாக்டர் பாபா அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கும் கருத்து அண்மையில் பத்திரிக்கையில் வந்திருப்பது தான்—

"No decision has yet been taken to include Kalpakkam nuclear power station in the Fourth Plan; it was yet to be finalised but it was likely to by ready be the end of the Fourth Plan period"

என்று சொல்லப்படுகிறது.

அதுமட்டுமல்ல; மன்ற உறுப்பினர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போலவே, மற்ற மாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழகத்தில் அதிக அளவுக்கு மின் உற்பத்தி ஆகியிருப்பதோடு பயன்படுத்தும் நிலைமையும் வளர்ந்து கொண்டே வருகிறது. ஆகவே, மற்ற மாகாணங்களுக்கு முதலிடம் தரும் வகையில் இங்கே அமைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிற அணு மின் நிலையம் தள்ளிப் போடப்படுகிற நிலைமை ஏற்பட்டு விடலாம் என்ற அச்சம் ஏற்படுகிறது. பாபா அவர்கள் கூறுகின்ற தகவலே அச்சம் தருவதாக இருக்கும் காரணத்தால் கனம் அமைச்சர் அவர்கள் இது பற்றித் திட்டவட்டமான நிலைமை என்ன என்று அறிவிக்க வேண்டும். இரண்டாவது அணு உற்பத்தி நிலையம் அமைப்பது நான்காவது திட்ட இறுதியில் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது. மற்ற மாநிலங்களுக்கு முதலிடம் தரும் வகையில் இது அவ்வாறு தள்ளிப் போடப்படும் என்ற நிலைமை இருப்பதால் அரசினர் இதை மேலும் வற்புறுத்துவதன் மூலம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

கல்பாக்கத்தில் அமைக்கப்படவிருக்கும் அணு மின்சார நிலையத்தை யூரேனியம் தாதுப் பொருளைக் கொண்டு நல்ல முறையில் செயல்படுத்த முடியும் என்று மேல் நாட்டு நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிக்கைக் குறிப்புகளில் இருந்து நன்றாக அறிகிறோம். யூரேனியம் கலந்த தோரியம் என்ற தாதுப் பொருள் தென்னாட்டுக் கடற்கரை மணலில் அதிகமாக இருக்கிறதென்றும், அந்தத் தோரியத்திலிருந்து யூரேனியத்தைப் பிரிக்க வழிவகைகள் இருக்கின்றன என்றும் ஆராய்ச்சிக் கழகத்தினர் கண்டு பிடித்திருக்கிறார்கள். அந்த முறையில் மூலப் பொருள்கள் கிடைக்கிற காரணத்தால் கல்பாக்கத்தில் அணு மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அமைச்சர் அவர்கள் துரிதமாகச் செயலாற்ற வெண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நெய்வேலி மின்சார நிலையத்திலிருந்து பெறுகின்ற மின்சாரத்திற்கு அட்ஹாக் ரேட் படி யூனிட் ஒன்றுக்கு 4.5 பை செலுத்தி வந்தார்கள் என்று அறிகிறோம். இப்போது ஏற்பட்டிருக்கும் முடிவின்படி அந்த ரேட் 5.2 பையாகக் கொடுக்கப்படும். அனல் மின்சார நிலையத்தின் மூலம் பெறப்படுகின்ற மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு 6 பை ஆகுமென்று சொல்லப்படுகிறது. நெய்வேலி மின்சாரத்தை நாம் பெறுவதில் அதிக நஷ்டம் ஏற்பட வழிவகை இல்லை. அதிலிருந்து ஆயிரம் மெகவாட் மின்சாரத்தைப் பெற்று தொழிற்சாலைகளுக்கும், மற்ற பல உபயோகங்களுக்கும் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்வது மிக மிக நல்லது. இவ்வாறு செய்வதன் மூலம் நம்முடைய தேவையை ஓரளவு நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

மற்றொன்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துத் தெரிவித்திருக்கும் கருத்தின் அடிப்படையில் மின்சாரத்தைப் பயன்படுத்துகிற முயற்சியிலும் கூட இரவு ஆறு மணியிலிருந்து



பயன்படுத்துகிற அளவு அதிகமாக இருக்கிறதென்றும், இரவு ஒன்பது மணியிலிருந்து காலை ஆறு மணி வரை பயன்படுத்துகிற அளவு குறைவாக இருக்கிறதென்றும், அந்த நேரத்தில் தொழிற்சாலைகளில் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமானால் அதிகமான பலனைப் பெற வழி ஏற்படும் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற நவம்பர் திங்களில் கணக்கிட்டபடி 6 மணி முதல் 8 மணி வரை செலவழிக்கப்படுகிற மின்சாரத்தின் அளவு 340 மெகவாட் என்றும், 9 மணி முதல் 6 மணி வரை அதன் அளவு 230 மெகவாட் என்றும், தொழிற்சாலைகள் இரவில் மின்சாரத்தைப் பயன்படுத்தும் வழிகளை வகுத்துக் கொண்டால் அதிகப் பலன் ஏற்படும் என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிலை தொழிற்சாலைகளுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் சொன்னார்கள். அது தற்போது எந்த அளவில் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

எண்ணூரில் ஒரு அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்குத் தனிப்பட்டவர்கள் முயன்று, அதற்கு மாநில அரசு சிபாரிசு செய்தும், இந்திய அரசினர் அனுமதி தர மறுத்து விட்டதன் காரணமாக தனியார் துறையில் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்த முடியவில்லை என்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது. அதைப் போன்றே கோவையில் உள்ள மில் அதிபர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் அளவுக்கு தனி அனல் மின் நிலையம் ஒன்றை நிறுவ முயற்சி எடுத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தனியார்கள் தங்களுடைய தேவையை நிறைவேற்றிக் கொள்ள தங்களுடைய சக்திக்கேற்ற அளவுக்கு அனல் மின்சார நிலையத்தை உருவாக்க முன் வந்தும், இந்த அரசு அதை ஆதரித்தும், மத்திய அரசு அனுமதி மறுக்க என்ன காரணம் என்று சொல்லப்படவில்லை. தொழில் அதிபர்கள் தங்களுடைய தேவைக்குத் தனி மின் நிலையங்களை அமைத்துக் கொள்வார்களானால், மின்சாரக் கழகத்தினால் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரம் பொதுத்துறைகளுக்கு, விவசாயத்திற்கு, மற்றைய தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்போதுள்ள நிலையில் அனல் மின்சார நிலையங்களை அமைப்பதற்கு முதலீடு செய்யும் முழுப் பொறுப்பையும் அரசாங்கமே செய்யக்கூடிய நிலை இல்லை. இப்போது தனியார் துறையிலும் முதலீடுகள் இருக்கின்றன. எனவே, தனியார் துறையில் முதலீடுகள் இருக்கின்ற நிலையில் அவர்கள் அனல் மின் நிலையத்தை வைக்க முன் வருகிறபோது அதற்கு ஆக்கம் தருகிற முயற்சியினை நாம் மேற்கொள்ளவேண்டும். பின்னால் அவற்றையெல்லாம் தேசிய மயமாக்கும் நிலைமை ஏற்படுகிறபோது அவற்றை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்கும் வழி ஏற்படும். ஆகவே, அவ்வாறு அனல் மின்சார நிலையங்களை அமைப்பதற்கான முயற்சியை அரசினர் ஏன் மேற்கொள்ளக்கூடாது? கோவை போன்ற இடங்களில் உள்ள மில் அதிபர்கள் அவ்வாறு அனல் மின் நிலையங்களை அமைக்க முன் வருவார்களானால் ஜூன், ஜூலை மாதங்களில் ஏற்படுகிற மின் தட்டுப்பாட்டால் உற்பத்தி பாதிக்கப்படாது, வேலையில்லாத் திண

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [20th July 1964

டாட்டம் ஏற்படாமல் இருக்கும் நிலைமை ஏற்படக்கூடும். ஆகவே, அரசு இதிலே அதிகக் கவனம் செலுத்தி ஆவன செய்ய முன்வர வேண்டும்.

நீர் மின்சாரத்தைப் பெறுவது என்ற முயற்சியிலும், அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்தும் முயற்சியிலும் அரசு போதுமான நடவடிக்கை எடுத்த பிறகு, கடல் அலையிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மேனாடு செல்லுகிறபோது அங்கு கடல் அலையிலிருந்து எப்படி மின்சாரத்தைப் பெறுகிறார்கள் என்பதைக் கண்டறிந்து வந்து அந்த முறைகளைக் கையாள்வதற்குச் சாத்தியக் கூறுகள் இருக்குமா என்பதை ஆராய இருப்பதாகத் தெரிவித்தார்கள். அண்மையில் அமைச்சர் அவர்கள் மேனாடு சென்றிருந்தபோது அமைச்சர் அவர்கள் அது பற்றிக் கண்டறிந்து வந்திருக்கிறார்கள். அந்த முயற்சி பலன் அளிப்பதாக இருக்குமானால் தமிழகத்தைப் பொருத்தவரை 620 மைல் நீளமுள்ள கடற்கரையில் அலைகள் எங்கெங்கு அதிகமாக வலுவோடு அடிக்கின்றதோ அந்தப் பகுதிகளிலிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும். அதோடு சிறிய நீர்வீழ்ச்சிகளிலிருந்து மின்சாரத்தை எடுப்பதன் மூலமாக அந்தந்தப் பகுதிகளில் தேவைகளை நிறைவேற்ற முடியும். இந்தத் திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசால் முதலீடு செய்ய முடியாது என்பது வரவுசெலவுக் கணக்கிலிருந்து தெரிவதால், மத்திய அரசினிடமிருந்து அதிக நிதி உதவி பெற்று நிறைவேற்ற முன்வரவேண்டும்.

இங்கு பெரிய தொழிற்சாலைகள் வைக்க மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை, ஆகவே கனரகத் தொழிற்சாலை வைக்க வாய்ப்பில்லை என்று கூறப்படுகிறது. மின்சாரத்தைப் பெருக்க வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன, என்று இந்த அரசு அடிக்கடி எடுத்துத் தெரிவித்திருக்கிறது. ஆகவே இந்த முயற்சிக்கும், சிறு நீர்ப்பாசன திட்டங்களுக்கும் போதிய அளவு நிதி ஒதுக்க இந்திய அரசை வற்புறுத்திக் கேட்க இந்த அரசுக்கு நியாயம் இருக்கிறது. அந்த முறையில் இத்திட்டங்களை விரைவில் நிறைவேற்ற, நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நிறைவேற்றவும், இம் மாநிலத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் துண்டு விழும் என்று எதிர்பார்க்கிற நிலையைப் போக்கவும் அரசு முன்வர வேண்டும். அறிக்கையில், உற்பத்தியாகிற மின்சாரத்தில் 17 சதவிகிதம் விரயமாகிற நிலை இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களிலும் இந்த அளவிற்கு விரயமாக்கும் நிலைமை உள்ளபடியே இருக்கிறதா என்று தெரியவில்லை. இதைக் குறைக்க வழிவகைகள் இருக்கின்றனவா என்று ஆராய்ந்து அதைக் குறைப்பதற்கான வழிவகைகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த 17 சதவிகிதத்தை குறைக்க முடியும் என்று எடுத்துச் சொல்லப்படுகிறது. இதைக் குறைப்பதற்கான வழிவகைகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். மின்சாரக் கழகத்தைப் பொறுத்தவரையில் 1957-ல் எடுத்துக் கொண்ட நிலையில் அதன் சொத்து விவரத்தைப் பொறுத்த



20th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வரையில் குறிப்பிட்டிருக்கும் கணக்கு இன்னும் சீர் செய்யப்படாமல் இருக்கிறது என்ற குற்றச்சாட்டை பொதுக் கணக்கு குழுவினர் கூட எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த முறையில் எடுத்துச் சொல்லும்போது,

In respect of the assets created out of Revenue prior to 1st July 1957 and transferred to the Madras State Electricity Board on its formation, the value of the assets has not been assessed. Likewise, outstanding revenue due to the State Government amounting to Rs. 2.34 crores as on 30th June 1957 was taken over by the Board on 1st July 1957. As it is now over seven years, since the Board was set up, the Committee suggests that an early decision in regard to treatment of these assets, viz., whether as a loan or as a gift, be taken in the matter.

என்று பொதுக் கணக்குக் குழுகூட சிபாரிசு செய்திருக்கிறது. ஏழு ஆண்டுகள் ஆகியும் அது நன்கொடையா அல்லது கடனா என்ற அளவிற்கு இன்னும் தீர்மானிக்கப்படாமல் இருப்பது வருந்தத்தக்கதொன்றாகும். அதை விரைவில் தீர்மானித்து முடிவு கட்ட தக்க முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

As on 30th September 1963, as many as 1,22,161 work orders were pending(from 1957-58 onwards) of which 53,762 related to service connection works and 8,089 to Operation and Maintenance Works. Under the rules, service connection work orders are to be closed within one month and the Operation and Maintenance Work Orders before the end of the year. The Committee suggests that early steps be taken to close the pending work orders and to avoid such accumulations in future.

என்றும் பொதுக் கணக்குக் குழு சிபாரிசு செய்திருக் கிறது. அது சீர் செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதன் எண்ணிக்கையும் அதிகமாக இருந்து வருகிறது. அதிக காலமாக இந்நிலை இருந்து கொண்டிருக்கிறது என்ற குற்றச் சாட்டு இருக்கிறது. வருடா வருடம் இதுபற்றி எடுத்துச் சொல்லியும் கூட இன்னும் அது சீர்செய்யப்படாமல் இருந்து கொண்டு வருகிறது. ஆகவே இதில் அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதை சீர் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னொரு கருத்து எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக் கிறது. ஸ்டோர்ஸ் வேரிபிக்கேஷன் ஆபீசர்களைப் பொறுத்தவரை மின்சாரத் துறையில் இருப்பவர்களே சீர் செய்வது, தணிக்கை செய்வது என்ற நிலை இருந்து வருகிறது. பொதுக் கணக்குக் குழு வும் சிபார்சு செய்திருக்கிறது. எ.ஜி.-யும் அடிக்கடி எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இதற்காக ஒரு இன்டிபென்டன்ட் பாடி தனியாக இருந்து வெரிபிக்கேஷன் செய்த பிறகுதான் நிலைமை சரியாகும். தமிழ் நாடு மின்சாரக் கழகத்தைப் பொறுத்த வரை யில் அதன் தலைவர், பொறியாளர்கள், மற்றவர்களிடமும் நமக்கு நம்பிக்கை உண்டென்றாலும் திறமையாகவும், நல்லமுறையிலும் வேலைகள் நடந்து வருகின்றன என்றாலும் ஒரு முறை வகுக்கப்பட் டால்தான் எதிர்காலத்தில் நல்ல வழி ஏற்பட முடியும். ஏராளமான

பொருள் செலவு செய்யப்படும் நிலையில், ரெயில்வேத் துறையைப் பொறுத்த வரையிலும், வேறு பல மாநிலங்களில் உள்ள மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலும் தனித் தணிக்கையாளர்கள் இருந்து கணக்குகள் எடுக்கும் வேலையைச் செய்து வருகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அது வற்புறுத்தப்பட்டும் வருகிறது. அப்படிச் செய்வதால் தான் மக்களின் நம்பிக்கை நல்லமுறையில் வளரவும், அதிகப் பணம் செலவு செய்யும் முறையில் இருப்பதை சீர் செய்யவும் வழி ஏற்படும். ஆகவே ஸ்டோர்ஸ் வேரிபிக்கேஷன் ஆபீசர்கள் தணிக்கை செய்யும் முறையை தனியாக ஏற்படுத்தி அதை போர்டின் கீழ் வைத்து அதைச் சரி செய்வதின் மூலம் நல்லமுறையில் நம்பிக்கையை ஊட்டும் முயற்சியை எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். கோவையில் ஸ்டாக் ஏராளமாக இருக்கிறது. அதை அத்திக்கடவுக்கு கொண்டு செல்லவேண்டும் என்பது ஏட்டளவில் இருக்கிறதே தவிர கோவையிலேயே இருப்பதாகத்தான் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் சீர் செய்ய தனியாக தணிக்கை செய்யும் ஒரு நிலையை உருவாக்க முயற்சி செய்யவேண்டும். பெரம்பூரில் மின்சார போர்டுக்கு நிலம் வாங்க 1,20,000 ரூபாய் கொடுத்து வாங்குவது என்பது மூன்று மாதங்களுக்குள் 3½ லட்சம் வரையில் கொடுத்து வாங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று ஒரு பொதுக் குற்றச்சாட்டு இருக்கிறது. அதற்கு இடம் இல்லாத வகையில் அமைச்சர் அவர்கள் இதில் ஈடுபட்டு, ஆராய்ந்து நல்லதொரு சூழ்நிலையை உருவாக்க முயற்சி எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மின்சாரக் கழகத்தினரைப் பொறுத்தவரையில் விறுவிறுப்போடும், சுறுசுறுப்போடும் செயல்கள் நிறைவேறி வருகின்றன என்றாலும் கனம் உறுப்பினர்கள் தெரிவித்தபடி விநியோகிக்கும் முறையில் ஆங்காங்கு விவசாயிகளுக்குப் பயன்படுகிற முறையில் செயல்பட வேண்டும். அதிலுள்ள குறைபாடுகள் பற்றி கனம் உறுப்பினர்கள் ஆண்டுதோறும் எடுத்துத் தெரிவித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே அந்தக் குறைபாடுகளைப் போக்க அரசினர் முன்வருதல் வேண்டும். மேலும் உற்பத்தியைப் பெருக்கி, போட்டிருக்கிற திட்டங்களை நிறைவேற்ற அதிகமான மான்யக் கோரிக்கையை வைத்து அதை இந்திய அரசிடம் இருந்து பெற்று அத்திட்டங்கள் நிறைவேற அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். கனம் உறுப்பினர்கள் கூறிய கருத்துக்களை பயன்படுத்தி அதைச் செயல்படுத்துவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவாதம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என்று சொன்னால் அது சம்பிரதாயத்திற்காகச் சொல்கிற ஒரு பேச்சல்ல, என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக எந்தெந்தத் துறையில் நாம் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டும், அதற்காக என்னென்ன முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும், இன்னும் சிறந்த முறையில் செயல்படுத்துவது எப்படி என்றெல்லாம் நல்ல கருத்துக்கள் கூறப்பட்டன. அவற்றை நான்





வரவேற்பதுடன் அந்தக் கருத்துக்கள் எல்லாவற்றையும் எவ்வளவு சீக்கிரத்தில் அமுல் நடத்த முடியுமோ அப்படி அவற்றை அமுல் நடத்தும் முயற்சிகளை எடுத்துக்கொள்ள மின்சார போர்டும், சர்க்காரும் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விவாதத்தில் பங்கு எடுத்துக் கொண்டவர்கள் பல அபிப்பிராயங்களைச் சொன்னார்கள். அந்த அபிப்பிராயங்களை, ஒவ்வொருவரும் என்ன சொன்னார்கள் என்று எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக அதைத் தொகுத்து என்னென்ன தலைப்புகளின் கீழ் சொல்லப்பட்டது என்று எடுத்துக் கூறலாம் என்று நினைக்கிறேன். முதலாவதாக, மின்சார போர்ட் அமைப்பைப் பற்றி சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. உதாரணமாக இந்த போர்டில் தனியாக ஒரு ஸ்டோர் பர்ச்சேஸ் கமிட்டி இருக்க வேண்டும் என்பது. அந்த ஸ்டோர் பர்ச்சேஸ் கமிட்டி மூலம் நாம் ஸ்டோர்ஸ் வாங்குவது அவசியம் என்று சொன்னார்கள். இப்போதிருக்கிற நடைமுறை சிறப்பாக இருப்பது மல்லாமல் சீக்கிரமாகவும் நடக்க இது உதவியாக இருக்கிறது. நடைமுறை என்ன என்று தெரிந்து கொண்டால் இந்த விதமான கமிட்டி அவசியமா என்பதை கனம் அங்கத்தினர்கள் புரிந்து 10-30 a.m. கொள்வார்கள். இன்றைய நிலைமையிலே நம்முடைய தேவை என்ன என்று ஆங்காங்குள்ள டெக்னிகல் ஆபீசர்கள் எல்லோரும் கணக்கிட்டு இன்டெண்ட் அனுப்புகிறார்கள். அந்த இண்டெண்ட் எல்லாவற்றையும் சேர்ந்து சீப் இஞ்சினியர் எதை வாங்க வேண்டும் என்று பரிசீலனை செய்கிறார்கள். இவ்விஷயம் மின்சார போர்டிலேயே வைத்து ஸ்டோர்ஸ் எவ்வளவு வாங்க வேண்டும் என்பதை முடிவு செய்கிறார்கள். அதற்குப் பிறகு இந்த ஸ்டோர்ஸ்களை வாங்குவதற்கு ஆர்டர் பிளேஸ் பண்ணுவதற்கு முன்பும் இது பரிசீலனை செய்யப்பட்டு எந்த அளவு வாங்க வேண்டியது அவசியம் என முடிவு செய்கிறார்கள். இந்த முறை நடைமுறையில் நல்ல வகையில் செயல்பட்டு வருகிறது. கண்காணிப்பு அதிகமாக இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. நம்முடைய திட்டங்களுக்கு ஏற்ப காரியங்களைச் செய்ய முடிகிறது. நாம் இவ்வாறு வாங்குகிற ஆர்டர்ஸ் இருக்கின்றனவே இவை எல்லாம் அக்கவுண்டெண்ட் ஜெனரலுக்கு உடனடியாக அனுப்பி வைக்கிறோம். இந்த சாமான்கள் எதற்காக வாங்கப்பட்டுள்ளன என்கிற ஒரு குறிப்பையும் அக்கவுண்டெண்ட் ஜெனரலுக்கு அனுப்பி வைக்கிறோம். அதனால் இந்த முறை சௌகரியமாக காரியங்களைச் செய்வதற்கு உதவியாக இருக்கின்றன. பர்சேஸ் கமிட்டி என்று தனியாகப் போட்டால் காலதாமதம் ஆகும் என்று நினைக்கிறேன். நம்முடைய பழைய முறையில் இதுவரை எவ்வித தவறும் ஏற்படவில்லை என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். நாம் வாங்குகிற பர்சேஸ்களை ஆடிட்டுக்கு அனுப்பி வைக்கிறோம். இதுவரை அக்கவுண்டெண்ட் ஜெனரலிடம் இருந்து என்ன இடத்தில் வாங்கப்பட்டது தவறு அல்லது இந்தப் பர்சேஸில் இந்த ஊழல் இருக்கிறது என்பதாக ஒரு சமயத்தில் கூட ஆட்சேபணைக் குறிப்பு வரவில்லை. அதனால் தான் நன்றாக நடக்கின்ற முறையை ஏதோ கொள்கை பூர்வமாக மாற்ற வேண்டும் என்பதை நான் ஒத்துக் கொள்ளவில்லை. ஆகவே தான்

பர்சேஸ் கமிட்டி என்று ஒன்று அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்போது உள்ள நிலைமையே நீடிக்கலாம் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக ஸ்டோர்ஸ் வாங்குகிற விஷயத்தில் அதிகமாக வாங்கி சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்பதாக குற்றச்சாட்டு சொன்னார்கள். பண்டங்கள் எப்போது வேண்டுமானாலும் கிடைக்கும். வாங்கிக் கொள்ளலாம் என்று இருந்தால் அப்போதைக்கப்போது நமக்கு என்ன தேவையோ அதை மாத்திரம் நாம் வாங்கிக்கொள்ளலாம். ஆனால் பண்டங்களின் உற்பத்தி குறைவாக இருந்து வேண்டிய போது வேண்டிய அளவில் கிடைக்கும் என்கிற நிலைமை இல்லாத போது எப்போது கிடைக்கிறதோ அப்போது நாம் பண்டங்களை வாங்கி சேமித்துக் கொள்ள வேண்டிய நிலை தான் இருக்கிறது. குறிப்பாக எத்தனையோ கட்டிடங்கள் இரும்பு கிடைக்கவில்லை என்று அப்படியே இருக்கின்றன. சிமெண்ட் கிடைக்கவில்லை என்பதனால் பல கட்டிடங்களுக்கு பூச்சு வேலை நடக்கவில்லை. அப்படியே நிற்கின்றன என்பதைப் பார்க்கின்றோம். பல பண்டங்களைப் பொறுத்தவரையில் இன்று நமக்கு பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே பண்டங்கள் கிடைக்கிற போது நாம் வாங்கி வைத்துக் கொள்ளுகிறது தான் சிறப்பு. இல்லாவிட்டால் போட்ட திட்டங்களை போட்ட காலத்தில் முடிக்க முடியாது. அதனால் தான் இதை சிறப்பாக கவனித்து எந்தெந்த பண்டங்கள் எவ்வளவு தேவைப்படும் என்பதை முதலிலேயே கவனித்து அதற்கு தகுந்தாற்போல் வாங்கி வைக்கிறோம். இப்படி செய்து வருவதனால் தான்—நம்முடைய மின்சாரத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுங்கள், அது எந்த திட்டமாக இருந்தாலும் குறிப்பிட்ட காலத்திற்கு 2 மாதம், 3 மாதம், 4 மாதம் என்பதாக முன்பே அவைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. குறிப்பிட்ட காலத்திற்கு பின்பு நிறைவேற்றியது என்றே கிடையாது. ஆகவே தான் பண்டங்கள் கிடைக்கிறபோது ஸ்டோர் பண்ணி வைத்துக்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. அதோடு தேவைக்கு அதிகமாக வைத்துக் கொள்ளவில்லை என்பதையும் கணக்கைப் பார்த்தால் தெரிந்துகொள்ளலாம். குறிப்பாக 1964-ஆம் வருஷம் மார்ச் 31-ஆம் தேதி கணக்குப்படி 19 கோடி ரூபாய் பொறுமான சாமான்கள் இருந்தன. மொத்த திட்டத்தின் மதிப்பு 197 கோடி ரூபாய். 197 கோடி திட்டச் செலவிற்கு 19 கோடி சாமான்கள் ஸ்டோர்ஸ் இருந்தன என்று சொன்னால் இது அதிகம் என்று சொல்லமாட்டார்கள். கனம் அங்கத்தினர்கள் பிற ராஜ்யங்களைப் பார்க்கவேண்டும். அவற்றை எல்லாம் பார்த்தால் நாம் அதிகமாகப் பணத்தை பண்டங்களைச் சேர்க்க முடக்கி வைத்துவிட்டோம் என்று சொல்ல முடியாது.

நமக்கு டிரான்ஸ்மிடர் லைன் போட வேண்டுமென்று இருக்கிறது. அதுவும் சீக்கிரம் போட வேண்டுமென்ற திசையில் நம்முடைய கவனம் சென்று கொண்டிருக்கிறது. இப்படி வேகமாக காரியங்களை செய்து கொண்டிருக்கிறபோதே பல இடங்களில் கண்டக்டர்கள் கிடைக்கவில்லை. அதனால் ஒரு சில மாதம் கால தாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. ஆகவே தான் ஸ்டோர்





பர்சேஸ் சம்பந்தமாக இப்போதுள்ள நிலைமையே நீடிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். போர்டுக்கு தனியாக அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபிசர் போடவேண்டும் என்று திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள்.

நம்முடைய போர்டு அங்கத்தினரைப்பற்றி நாம் சற்றுத் தெரிந்து கொள்வது நன்மையாக இருக்கும். நம்முடைய போர்டில் எடுக்கப்படுகிற முடிவுகள் எல்லாம் போர்டு முழுவதும் உட்கார்ந்து எடுக்கின்றது. அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர் டெக்னிகல் ஆபீசர் தனித்தனியாக முடிவு எடுப்பதில்லை. போர்டு முழுவதும் உட்கார்ந்து முடிவு எடுக்கிறார்கள். போர்டில் இருக்கிற மெம்பர்களைப் பார்த்தால் சீனியர் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசர் இருக்கிறார், டெக்னிகல் மென் இருக்கிறார்கள். அதில் குறைபாடு ஒன்றும் ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ப்ரொமோஷன் முதலியவை சம்பந்தமாக அப்பலேட் போர்டு வேண்டும். அதுவும் அவசியம் என்று சொன்னார்கள். சர்க்கார் நிறுவனத்தில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறதோ அதேமாதிரிதான் போர்டிலும் நடைபெறுகிறது. சர்க்காரிலே இன்று சிப்பந்திகள் தங்களுடைய குறைபாடுகளைக் குறித்து மேலதிகாரிகளுக்கு அப்பீல் செய்யலாம். மேல் அதிகாரிகளுடைய உத்தரவாக இருந்தால் அதற்கு மேல் இலாகா அதிகாரிகளுக்கு அப்பீல் செய்து கொள்ள முடியும். முடிவில் கவர்ன்மெண்ட் உத்தரவு போடுகிறது. இது போலவே கவர்ன்மெண்ட் ஸ்தானத்தில் இன்றைய தினம் போர்டு இருக்கிறது. அதிகாரிகளுக்கு மேல் போர்டுக்கு இறுதியான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் எந்த நிர்வாகத்தில் இருக்கிறதோ அந்த நிர்வாகத்தில் போர்டு அமைக்கப்பட்டிருக்கிறது. சிப்பந்திகளைப் பொறுத்த வரையில் ஷாப் சட்டம் இருக்கிறது. அதனால் வேண்டிய வசதிகளைப் பெறுகிறார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் பல சட்டங்கள் இருக்கின்றன. அவற்றின் நன்மைகளை அவர்கள் பெறுகிறார்கள். உத்தியோகஸ்தர்களைப் பொறுத்த வரையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவும் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் எப்படி இறுதி முடிவு செய்கிறதோ, அது போல இறுதியான முடிவு எடுக்கக்கூடிய முடிவு போர்டுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே இன்னும் இதற்கு மேல் அப்பெலட் போர்டு, அதற்கு மேல் கோர்ட் என்பதாக எல்லாம் வைப்பதானது சரியாகாது என்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்னும் நம்முடைய உற்பத்தியை எடுத்துக் கொள்வோமானால் நம்முடைய ராஜ்யத்தில் மின்சார உற்பத்தியை பெருக்குவதற்கு என்ன என்ன வழிகள் உண்டோ அவைகள் எல்லாவற்றையும் எடுத்து இருக்கிறோம். போட்ட திட்டங்களை நிறைவேற்றும் காரியங்களும் இன்னும் என்ன என்ன திட்டங்களைப் போடலாம் என்கிற பரிசிலனையும் ஒன்றாக கவனிக்கப்பட்டு வருகிறது. நீர் வீழ்ச்சி எங்கு இருக்கிறது என்றாலும் அவற்றை மின்சார உற்பத்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th July 1964

திக்கு பயன் படுத்திக் கொள்ள முடியுமா என்பது பரிசீலிக்கப் படுகிறது. இப்படி பரிசீலனை செய்து சற்றேறக்குறைய 381 மெகாவாட்ஸ் உற்பத்திக்கு சிறிய திட்டங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து இருக்கிறோம். இதை நான்காவது, ஐந்தாவது திட்டங்களில் சேர்த்துவிட முடியும். கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் அனுமதி இந்த திட்டங்களுக்கு எந்த அளவு கிடைக்கும் என்று கேட்டார்கள். இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் பிறர் யாருடைய அனுமதியும் நமக்குத் தேவை இல்லை. நம்முடைய நான்காவது ஐந்தாவது திட்டங்களில் நாமே இவற்றைச் சேர்த்துவிட முடியும். அப்படி சேர்ப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து ஹொகனக்கல் திட்டத்தை பொறுத்த அளவில் நாம் மைசூர் ராஜ்யத்துடன் பேசி அவர்களுடைய ஒத்துழைப்பின் மூலமாகத்தான் செய்ய முடியும். இப்படி பிற ராஜ்யங்களோடு பேசி முடிவு எடுக்க வேண்டிய விஷயத்தில் எந்த விஷயத்தையும் நாம் வற்புறுத்துவதன் மூலமாக நிறைவேற்ற முடியாது. நாம் வேண்டிக்கொள்வதன் மூலமாக ஒரு வேலை நிறைவேற்றலாம். அதைத்தான் நாம் இப்போது செய்துகொண்டு இருக்கிறோம். மைசூர் அரசாங்கத்தோடு பேசினோம். இந்தத் திட்டம் இருவருக்கும் உதவிகரமாக இருக்கும். இதற்காகும் செலவை இருவரும் பகிர்ந்து கொள்ளலாம். கிடைக்கின்ற மின்சாரத்தையும் இருவரும் பகிர்ந்து கொள்ளலாம். இதனால் இருவருக்கும் நன்மை கிடைக்கும். இதன் மூலமாக இரு ராஜ்யங்களுக்கும் இருக்கின்ற தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளலாம் என்பதைப்பற்றி எல்லாம் இரண்டு ராஜ்யங்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். இந்தத் திட்டத்திற்காக ராஜ்யங்களுடைய நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு இயலாத நிலைமை ஏற்படுமானால், மத்திய சர்க்காரே இந்தத் திட்டத்தை நிறைவேற்றி இரண்டு ராஜ்யங்களுக்கு பகிர்ந்து கொடுக்கலாம் என்ற ஆலோசனையையும் மத்திய சர்க்காருக்கு சொல்லியிருக்கிறோம். ஆகவே இது சம்பந்தமாக இந்த சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்ததாக, கல்பாக்கத்தில் ஏற்படுத்த இருக்கின்ற அணு மின்சார நிலையத்தைப்பற்றி பேசுகின்றபொழுது, பத்திரிகைகளில் வந்த செய்தியைப்பற்றி பலர் சொன்னார்கள். பத்திரிகைக்காரர்கள் கேள்விகள் கேட்பார்கள். சம்பந்தப்பட்ட தலைவர்கள் பதில் சொல்வார்கள். அவர்கள் எப்படி கேட்கின்றார்களோ அதற்கு தகுந்தவாறு பதிலும் சொல்லுவார்கள். ஆனால் பத்திரிகைகளில் கேள்விகள் வராது, பதில் மட்டும்தான் வரும். இதனால் பல குழப்பங்கள் ஏற்படுவதுண்டு. ஆகவேதான் இந்தத்திட்டத்தை நான்காவது திட்டத்தில் சேர்ப்பதுபற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்று தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஏனென்றால் நான்காவது திட்டமே இன்னும் உருவாகவில்லை. அதற்குள்ளாக இந்தத் திட்டம் சேர்க்கப்பட்டிருப்பதைப்பற்றி



20th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

ஒன்றும் சொல்வதற்கில்லை என்ற முறையில்தான் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்போது டெல்லியில் சமீபத்தில் நடந்த பிளானிங் கமிஷன் கூட்டத்தில், அவர்கள் இதற்காக அட்வான்ஸ் ஆக்ஷனுக்கு உத்தரவு அதாவது பூர்வாங்க வேலைகளுக்கான உத்தரவு கொடுத்துவிட்டார்கள். அதாவது இதற்கான பூர்வாங்கமான வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று க்ளியரன்ஸ் கொடுத்து இருக்கிறார்கள். அணு மின்சாரம் அமைப்பது என்பது மிகவும் கஷ்டமான வேலை. குறைந்தது இதற்காக ஆறு அல்லது ஏழு வருடங்கள் ஆகலாம். மேல் நாடுகளில் அணு மின்சார நிலையங்களை நான் பார்த்திருக்கிறேன். அங்கேகூட சீக்கிரத்தில் இது அமைப்பதற்கு முடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதில் பலவிதமான சிக்கல்கள் இருக்கின்றன. இதற்காக எதை உபயோகப்படுத்துவது, நேச்சுரல் யூரேனியத்தை உபயோகிப்பதா அல்லது என்ரிச்ட் யூரேனியத்தை உபயோகிப்பதா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும். எது பொருத்தமாக இருக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கவேண்டும். இவற்றை வாங்குவதற்காக அட்டாமிக் எனர்ஜி கமிஷனுடைய அனுமதி பெற வேண்டும். இது போன்ற பல சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவே இதை நான்காவது திட்டத்தில் சேர்த்து நாங்கள் கணக்கு போடவில்லை. நான்காவது திட்ட காலத்தில் இதை முடித்துவிடலாம். ஆனால் இதிலிருந்து கிடைக்கின்ற 400 மெகாவாட்ஸ் மின்சாரத்தை நான்காவது திட்டத்தில் சேர்ந்து கணக்குப் போடவில்லை. பிளானிங் கமிஷனில் இதைப்பற்றி பேசும்போதும், மத்திய சர்க்காரிடத்தில் இதைப்பற்றி பேசும்போதும் நான்காவது திட்டத்தில் இதை முடித்துவிட்டால் போதும் என்றுதான் நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். நான்காவது திட்ட காலத்தில் இது தவிர உடனடியாக கிடைக்கின்ற மின்சாரத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் வேறு திட்டங்களைப்பற்றியும் நாம் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். இதுவரையிலும், மத்திய சர்க்காரிலிருந்தும், அட்டாமிக் எனர்ஜி கமிஷன் தலைவர் திரு. பாபா அவர்களிடமிருந்தும் நமக்கு கிடைக்கின்ற பதில்களிலிருந்து நமக்கு திடமான நம்பிக்கை இருக்கின்றது என்பதை நான் உறுதியாக சொல்ல முடியும். ஆகவே இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ராஜ்ய சர்க்கார் எடுக்கத் தொடங்கி விட்டது. முதலில் இதற்கான நிலத்தை நாம் ஆர்ஜிதம் செய்ய வேண்டும். இரண்டாவது ஐந்து மைல் சுற்றளவுக்கு வேறு எந்தவிதமான கிராமங்களும் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ரேடியேஷன் ஹஸார்ட் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், எண்ணூரில் அமைக்கவிருக்கின்ற தெர்மல் ஸ்டேஷன்பற்றி கூறப்பட்டது. எண்ணூரில் அமைக்கவிருக்கின்ற தெர்மல் ஸ்டேஷன் 300 மெகாவாட்ஸ் உற்பத்தித் திறன் உள்ளதாக அமைப்பதற்கு மத்திய சர்க்கார் பூர்வாங்க ஆதரவு கொடுத்து விட்டார்கள். இந்தத் திட்டத்தைத்தான் தனியார்கள் செய்வதாக

இருந்தது. இப்போது அதைச் சர்க்காரே மேற்கொண்டு விட்டதால் தனியார் திட்டம் தேவையில்லை. தனியார் திட்டத்தை நிறைவேற்றுவதிலும்கூட பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்போது தனியார்களுக்கு அதாவது ஹெவி இண்டஸ்ட்ரீஸ் நடத்துகின்றவர்களுக்கு கட்டணமும் சர்சார்ஜும் சேர்த்து 6 ந.பை. வீதத்தில் மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். தனியார் உற்பத்தி செய்தால் நிச்சயமாக 7 அல்லது 8 ந.பை. அளவுக்குத்தான் கொடுக்கவேண்டும். நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை ஹைட்ரோ பவர் மலிவாக கிடைக்கிறது, தெர்மல் பவரின் விலை அதிகமாக ஆகிறது. இவ்விதம் கிடைக்கின்ற இரண்டு பவரையும் சேர்த்து, சமநிலைப்படுத்தி, க்ரிட்டின் மூலமாக இணைத்து நாம் ஓரளவுக்கு குறைவான ரேட்டில் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் தனியார்கள் இந்தத் திட்டத்தை மேற்கொள்வதாக இருநதால் அவர்களுக்கு அதிகம் செலவாகும். அவர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டத்தை தாங்க முடியாமல் அதிக விலைக்குத்தான் கொடுக்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே இது அவர்களுக்கு சுலபமாக இராது. ஆகவே இதை சர்க்காரே முயற்சி செய்து இப்போது 300 மெகாவாட்ஸ் உற்பத்தி செய்கின்ற அளவில் இந்தத் திட்டத்தை எண்ணூரில் அமைப்பதற்கும், 100 மெகாவாட்ஸ் அளவில் தூத்துக்குடியில் அமைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதற்கான வேலைகள் சீக்கிரத்தில் தொடங்கும் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல், பலர் பேசுகின்ற நேரத்தில், இதற்கு முன்பு நீர் மின்சாரத்தை மட்டுமே நாம் நம்பியிருந்து விட்டோம், ஆகவே அடிக்கடி மின்சார வெட்டு ஏற்படுகின்ற நிலைமை ஏற்படுகிறது, இதை நமது சர்க்கார் ஆலோசித்திருக்க வேண்டும் என்றும் இதை அன்றைக்கே செய்திருக்கவேண்டும் என்றும் சொன்னார்கள். முன்பே அனல் மின்சாரத்தை அதிகமாக ஏற்படுத்தியிருக்க வேண்டும் என்ற அளவில் குற்றச்சாட்டாக சொன்னார்கள். நம்முடைய நாட்டில் "அன்றைக்கே சொன்னேன்" என்று சொல்வது ஒரு பெரிய வழக்கம். நான் இதைப்பற்றி சிந்திக்கின்றவர்களுக்கு, தாழ்மையாகக் கேட்டுக்கொள்வது சில குறிப்புகளை நன்றாகப் பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான். அனல் மின்சாரத்தினுடைய விலை அதிகம், நீர் மின்சாரத்தினுடைய விலை குறைவு. 1930-வது ஆண்டு பைக்காரா பவர் உற்பத்தி செய்தபோது, அரை நயா பைசாவுக்கு கொடுக்கலாம், எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னபோது, இதனுடைய விலை அதிகமாக இருக்கிறது, காஸ்ட்லி பவராக இருக்கிறது, ஆகவே இதை எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள் பலர். இதன் காரணமாக டிஸ்ட்ரிப்யூஷன் செய்தவர்கள் வீடு வீடாக சென்று பவரை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதை யாரும் மறந்திருக்கமாட்டார்கள் என்று நம்புகிறேன். அன்றைக்கு அனல் மின்சாரம் ஏற்படுத்தி ஐந்து ந.பை. ஆறு ந.பை. என்று விலையை ஏற்படுத்தியிருந்தால், வெளியிலுள்ளவர்கள் என்ன சொல்வார்கள், நம்முடைய நாட்டில் எவ்வளவோ நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன, இவைகளை எல்லாம் பயன்படுத்திக்கொண்டு



குறைந்த விலையில் மின்சாரத்தைக் கொடுத்திருக்கலாமே, இவர்களுக்கு மூளை இல்லாமல் அனல் மின்சாரத்தை ஏற்படுத்திவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லியிருப்பார்கள். இன்றைக்கு நாட்டில் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்திருப்பதன் காரணமாகவும், நாட்டில் எல்லாப் பொருட்களுக்குமே விலை உயர்ந்திருப்பதின் காரணமாகவும், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதே தவிர, 10 ஆண்டுகளுக்கு முன்னால் நாம் வெறும் அனல் மின்சாரத்தை மட்டும் ஏற்படுத்தியிருந்தால், இன்றைக்கு நமக்கு எந்தவிதத்திலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருக்காது. தொழில் வளமும் ஏற்பட்டிருக்காது. தொழில் வளம் எதனால் ஏற்பட்டது? மின்சாரம் மலிவாக கிடைத்தது. அதன் மூலம் தொழில் வளம் ஏற்பட்டது. தொழில் வளர்ச்சி ஏற்பட்டதின் காரணமாக பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாக இன்றைக்கு அதிக விலை கொடுத்தும் நாங்கள் மின்சாரத்தை வாங்கிக்கொள்ள தயாராக இருக்கிறோம், எங்களுக்கு மின்சாரம் வெட்டு இல்லாமல் கிடைத்தால் போதும், அது எங்களுக்கு கட்டுப்படியாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நீர்வீழ்ச்சியின் மூலமாக எங்கெல்லாம் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அவைகளை எல்லாம் நாம் நிறைவேற்றி, இப்போது அதற்கும் மேலாக அனல் மின்சாரத்தை நிறைவேற்றுவதற்கு முன்வந்திருக்கிறோம். இதனால் ஏற்படுகின்ற அதிகச் செலவை ஏற்றுக்கொண்டாலும், நீர் மின்சாரத்தின் மூலம் குறைந்த செலவில் உற்பத்தி செய்து கிடைக்கின்ற மின்சாரத்தைக் கொண்டும், சமநிலைப்படுத்தி மக்களுக்கு வழங்கலாம் என்கின்ற நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அனல் மின்சாரத்தின் மூலம் விலை அதிகமாக கொடுத்தாலும் தாங்கும், கட்டுப்படியாகும் என்ற நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதில் போர்டோ அல்லது சர்க்காரோ அனல் மின்சாரத்தைப் பெருக்குவதற்கு தவறிவிட்டார்கள் என்று யாரும் நினைக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் எடுத்த முடிவு, நாம் எடுத்த நடவடிக்கைகள்—அன்றைக்கு என்ன ஆலோசித்தார்களோ தெரியாது—எப்படியிருப்பினும் இன்றைக்கு இருக்கின்ற நிலைமையில் அன்றையிலிருந்து செய்து வருகின்ற நடவடிக்கைகள் எல்லாம் நியாயமான முறைகள், சிறந்த முறைகள் என்பதை என்னால் சொல்ல முடியும். அதன் காரணமாக இன்றைக்கு என்ன விலை கொடுத்தாலும் மின்சாரத்தை வாங்கிக் கொள்ளலாம் என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அரை ந.பை. வுக்கு கொடுக்கிறோம் என்று சொன்னபோது எங்களால் வாங்க முடியாது என்கின்ற நிலைமை இருந்தது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே அனல் மின்சாரத்தை அமைப்பதற்கான இந்தத் திட்டம் சிறப்பான கட்டத்தில்தான் அமைந்திருக்கிறது. சரியான நேரத்தில்தான் அமைந்திருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் நெய்வேலியில் அனல் மின்சார நிலையத்தை 250 மெகாவாட்ஸிலிருந்து 400 மெகாவாட்ஸாக உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். நெய்வேலியிலிருந்து கிடைக்கக்

கூடிய மின்சாரம் சற்று விலை அதிகமாக இருந்தாலும்கூட, அதை பயன்படுத்துவதற்கு நாம் தயாராக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறோம். இந்த 400 மெகாவாட்ஸ் அளவாக இருப்பதை 600 மெகாவாட்ஸ் அளவாக உயர்த்த வேண்டுமென்று சொல்லி, நான்காவது திட்டம் வரும்போது அதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். நான்காவது திட்டம் வந்த பிறகு தான் அதைச் சேர்த்திருக்கிறார்களா இல்லையா என்று தெரியுமே தவிர, இன்றைக்கு இருக்கிற நிலைமையில் அதைச் சேர்ப்பதற்கான எல்லாவிதமான முடிவுகளும் எடுத்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் சேர்த்துக் கெள்ளளப்படும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

அதேபோல இரண்டாவது மைன்-கட் ஏற்படுத்தி இன்னும் 1,000 மெகாவாட்ஸ் மின்சாரம் நீங்கள் உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். 1,000 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்வதென்றால் சற்றேறக்குறைய 5, 6 ஆண்டுகளுக்கு மேல் ஆகும். ஆனால் 2, 3 ஆண்டுகளுக்குள் வேலைகளைச் செய்து இந்த ஆண்டு 100 மெகாவாட்ஸ், அடுத்த ஆண்டு 100 மெகாவாட்ஸ் என்ற முறையில் வைத்துக்கொண்டு போனால் நமது உயர்ந்து வருகிற தேவையை ஓரளவுக்குப் பூர்த்தி செய்ய முடியும் என்று சொன்னோம். நமது தேவை என்று சொல்லும்போது, நாம் கணக்கிடும் முறையிலும் மத்திய சர்க்கார் கணக்கிடும் முறையிலும் சில மாறுபாடுகள் இருக்கின்றன. நாம் தமிழ் நாட்டுக்கு இவ்வளவு தேவை என்று சொல்லும்போது, இங்கே எத்தனை தொழில்களுக்கு லைசென்சுகள் கொடுக்கப்படுகிறது, எந்த அளவுக்கு நமது ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ் வளர்ந்து கொண்டு வருகின்றன, அடுத்தாற்போல விவசாயத்திலே எந்த அளவுக்கு அதிகமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி வருகிறார்கள், நமது ரூரல் எலெக்ட்ரிஃபிகேஷன் திட்டம் என்ன, இந்த முறையில் எல்லாவற்றுக்கும் எவ்வளவு தேவை என்று கணக்கிட்டுச் சொல்லுகிறோம். மத்திய சர்க்காரில் எப்படிக் கணக்கிடுகிறார்கள் என்று சொன்னால், ஒரு யூனிட் மின்சாரத்தை உபயோகப்படுத்தவேண்டுமென்றால் 80 ரூபாய் அதற்கு முதலீடு வேண்டும். 1,000 யூனிட் மின்சாரம் தேவை என்று சொன்னால் 80 × 1,000 இத்தனை ரூபாய் இன்வெஸ்ட் பண்ண வழி இருக்குமோ இருக்காதோ என்று சொல்லி, தேவை இவ்வளவு தான் குறைந்ததாக இருக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். மூன்றாவது திட்ட காலத்திலே அவர்கள் மதிப்பீடு செய்வதையும், ராஜ்ய சர்க்கார் மதிப்பீடு செய்வதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது ராஜ்ய சர்க்கார் மதிப்பீடு சரியாக இருந்திருக்கிறது என்று நாங்கள் எடுத்துக் காட்டியிருக்கிறோம். நம்முடைய வளர்ச்சி அடிப்படையில் நான்காவது திட்டத்திற்கு நமது தேவை என்பது இன்றைக்கு நமக்குக் கிடைத்திருக்கும் அளவை விட இரட்டிப்பு மடங்கு என்று எடுத்துச் சொல்லி நேற்று முன் தினம் ப்ளானிங் கமிஷன் உபதலைவர் அசோக் மேத்தா அவர்கள் ராஜ்ய சர்க்கார் முதல் அமைச்சர் அவர்களிடத்திலும் இதர அமைச்சர்களிடத்திலும் பேசிய காலத்தில் அதை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம்.





அதை நிறைவேற்றுவதற்கான வழிகளில் சர்க்கார் முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தாற்போல, மேற்குத் தொடர்ச்சி மலையில் இருக்கிற நதிகள் அரபிக் கடலில் சென்று கலந்து விடுகின்றன, அதைப் பயன்படுத்துவதற்கான வழிகளைச் செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அதுவும், நான் ஹொகேனக்கல் திட்டத்திற்குத் சொன்னதுபோல மற்ற மாநிலங்களின் ஒத்துழைப்பைப் பெற்றுத் தான் செய்ய முடியும். மற்ற மாநிலங்களுக்கு ஆங்காங்கு இப்போது உற்பத்தி செய்கிற மின்சாரம் தேவைக்கு அதிகமாக இருக்கலாம். ஆனால் நம்முடைய அபிவிருத்தி அதிகமாகிக் கொண்டு வரும்போது ஆங்காங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் ஒரு நாளும் தேவைக்கு அதிகமாக இருக்காது. தனக்கு வேண்டிய மின்சாரத்தைப் பெறுவதற்கு ஒவ்வொரு ராஜ்யமும் தன்னுடைய எல்லா முயற்சிகளையும் செய்யவேண்டுமே தவிர, பிற ராஜ்யங்களிலிருந்து நம் ராஜ்யத்திற்கோ, அல்லது நம் ராஜ்யத்திலிருந்து பிற ராஜ்யங்களுக்கோ மின்சாரம் சப்ளை செய்யும் நிலை வருகிற 15, 20 ஆண்டுகளுக்கு ஏற்படும் என்று கனவு கூடக் காண முடியாது என்று சொல்ல விரும்புகிறேன். காரணம் என்ன என்றால் அதிகமாக மின்சாரம் மற்ற ராஜ்யங்களில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தவுடன் தங்களுடைய மாநிலம் பூராவும் ரூரல் எலெக்ட்ரிஃபிகேஷன் செய்ய முன் வருவார்கள். அதோடு மின்சாரம் கிடைக்கிறது என்று சொன்னால் இன்றைக்கு எத்தனை தொழில் அதிபர்கள் வேண்டுமென்று வருகிறார்களோ, அதை விடப் பன்மடங்கு அகில இந்தியாவிலிருந்தும் அங்கே தொழில்கள் வைக்க முன் வருகிறோம் என்று சொல்லுவார்கள். மதிப்பிட்டு இன்றைக்கு இருக்கிற தேவையைக் கணக்கிட்டுச் சொல்லுகிறோமே தவிர, எந்த அளவுக்கு உயரும் என்று பார்த்து அதன்படி கணக்குப் பார்த்தால் மற்ற ராஜ்யங்களிலிருந்து கிடைப்பது கடினம் என்று நினைக்கிறேன். மற்ற ராஜ்யங்களில் இருக்கிற நதிகளைத் திருப்பி வசதி செய்துகொள்ள வேண்டும் என்று சொன்னாலும், அவர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் இணங்குவார்களா என்பது சந்தேகம். நம்முடைய முயற்சி மூலமாக நம் மாநிலத்தில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்பது இந்த சர்க்காருடைய முடிவு.

அதே சமயத்தில் நமக்கு தண்ணீர் பற்றாக்குறை இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கிக்கொள்ள பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டு வருகிறோம். கனம் அங்கத்தினர் கல்யாணசுந்தரம் அவர்கள்கூட சொன்னார்கள் அன்றைக்கு. நம் சதர்ன் சோனல் கவுன்சில் கூட்டத்தில் நடந்த விவாதத்தை எடுத்துக்காட்டி இதையெல்லாம் பூர்த்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தினுடைய மின்சாரத் தேவையை எந்த அளவுக்கு எவ்வளவு சீக்கிரமாகப் பூர்த்தி செய்ய முடியுமோ அதற்கான வழிகள் எல்லாம் இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th July 1964

அடுத்து சில தனியான அபிப்பிராயங்கள் ஒவ்வொரு இனத்தைப் பற்றிச் சொல்லப்பட்டன. உதாரணமாக, புலவர் கோவிந்தன் சொன்னார்கள், நமக்கு இரிகேஷன் ப்ராஜெக்ட்ஸ் எங்கெல்லாம் இருக்கிறதோ அந்த இடத்திலெல்லாம் நீரிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய முயற்சி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நாம் இப்போது செய்துகொண்டிருக்கிறோம். இப்போது அறிக்கையைப் பார்த்தால் 355 மெகாவாட்ஸ் என்று போட்டிருக்கிறதே, அது எந்த இடங்களில் அணைகள் இருக்கிறதோ அந்த இடங்களில் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. அணைகள் கட்டும்போது பிற்காலத்தில் மின்சாரம் எடுப்பதற்கு உபயோகப் படுத்த முடியுமா என்று பார்த்து அப்போதே டன்னல் எல்லாம் போட்டு வைத்திருக்கிறோம். இனிமேல் ஜெனரேட்டர் வைக்கும் வேலைதான் இருக்கிறதே தவிர, மேட்டூர் டன்னல் ஸ்கீம் என்று மலையைக் குடைந்து கொண்டிருக்கிறோமே அந்த நிலை ஏற்படாது.

அடுத்து சொல்லப்பட்ட குறைகளெல்லாம் தங்களுக்கு சீக்கிரத்திலே மின்சாரம் கிடைக்கவில்லை, கால தாமதம் ஏராளமாக ஆகிறது என்ற முறையில் ஒரு பெரிய குறையைச் சொன்னார்கள். அந்தக் குறை இல்லை என்று சொல்லவில்லை. வருஷம் ஒன்றுக்கு 2,000-க்கு மேல் இருக்கிற கிராமங்களுக்கு மின்சாரத்தைக் கொடுத்து, வருஷம் ஒன்றுக்கு 25,000 பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்தாலும் போதவில்லை என்பது எதைக் காட்டுகிறது என்றால், நம்முடைய தேவை அதிகமாக வளர்ச்சி அடைகிறது என்பதைக் காட்டுகிறதே தவிர, செய்கிற சேவை குறைவாகப் போய் விட்டது என்று காட்டவில்லை. ஏதோ 100 கிராமங்களுக்குக் கொடுத்தோம், 200, 300 கிராமங்களுக்குக் கொடுத்தோம் என்று சொன்னால், 200, 300-க்குத் தானே கொடுத்தீர்கள் என்று சொன்னால், அதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல முடியும். 2,000-க்கு மேல் கொடுத்தும் கூட இன்னும் பல கிராமங்களிலிருந்து புகார் வருகிறது என்று சொன்னால் தமிழ் நாட்டின் வளர்ச்சி எதிர் பார்த்ததைவிட இன்னும் மேலாக இருக்கிறது என்பதே. அதன் காரணமாகத்தான் மின்சாரம் கொடுத்து விடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அந்த முறையில் கொடுப்பதில் நமக்கு சில லிமிட்டேஷன்ஸ் இருக்கின்றன. நம்மிடத்தில் போதிய மின்சாரம் இல்லை. மின்சாரம் என்றால் இரண்டு கம்பை நட்டு கம்பியை இணைத்து விடுவது அல்ல. ஜெனரேஷன் செய்ய வேண்டும். கெப்பாசிட்டி வேண்டும். அதே போல விவசாயத்திற்குக் கொடுப்பதைப்பற்றி பலர் குறை சொன்னார்கள். இருக்கிற மின்சாரத்தை எவ்வளவு சிக்கனமாகப் பங்கீடு செய்ய முடியுமோ அந்த அளவுக்கு செய்து. . . .

There is noise coming from the gallery. The Hon. Deputy Speaker may warn the visitors that they should be silent.

MR. DEPUTY SPEAKER : There is rush of visitors.

THE HON. SRI R. VENKATARAMAN : The best thing would be not to allow any more visitors till the visitors in the gallery are sent out.



20th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அந்த கிராமங்களுக்கு நாம் இன்றைக்கு போதிய அளவுக்குக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னால், நாம் வேகமாக வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதைக் குறிப்பிட்டு செய்ய வேண்டிய அளவுக்குச் செய்யவில்லை என்று யாரும் சொல்ல முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய ராஜ்யத்திலே கடந்த 10 ஆண்டு காலத்தில் திடீரென்று ஒரு விழிப்பு ஏற்பட்டுவிட்டது. அந்தத் திடீர் 11-00 a.m. விழிப்பின் காரணமாக இன்றைக்கு எல்லா நாடுகளிலும் 100 ஆண்டுகளில் நடந்தவைகளையெல்லாம் நாம் உடனே இப்பொழுதே வேண்டுமென்று விரும்புகிறோம். அந்த விழிப்பை நான் வரவேற்கிறேன். அந்த விதமான விழிப்பு இல்லையென்று சொன்னால், தினம் 10 பேர்கள் தங்கள் கிராமங்களுக்கு மின்சாரம் வேண்டும் என்று என்னிடம் வந்து எழுதிக் கொடுக்கவில்லை என்று சொன்னால், இவ்வளவு தூரம் நாங்கள் துரிதமாக வேலை செய்ய மாட்டோம். அதையும் ஒத்துக்கொள்கிறேன். அந்த விழிப்புத் தான் சர்க்கார் இன்னும் வேகமாக வேலை செய்வதற்கு தூண்டுகிறது. அது சர்க்காரை வேகமாகச் செல்ல உந்துகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் இது சம்பந்தமாக வேலை செய்கிற அதிகாரிகளுக்கு நாம் நன்றியறிதலையும்; பாராட்டுதலையும் தெரிவிக்க வேண்டும். அவர்களுடைய உற்சாகம் குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நாம் பேசுகிற பொழுது, குற்றச்சாட்டு சொல்லும்பொழுது, அவர்கள் தவறு செய்கிறார்கள், அவர்கள் சரியான முறையில் வேலை செய்யவில்லை என்ற ஒரு மனப்பான்மையை ஏற்படுத்தக்கூடாது. தவறுகளே இல்லை என்று நான் சொல்லவில்லை. பல இடங்களில் நமக்கும் அவசரம், அவர்களுக்கும் தேவை. அவசரத்தின் காரணமாக நாம் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம்; தேவையின் காரணமாக சில பேர்கள் வாங்குவதற்கு தயாராக ஆகிவிடுகிறார்கள் என்ற நிலை இல்லை என்று யாரும் சொல்ல முடியாது. ஆனால், கூடுமான அளவுக்கு அந்த விதமான நிலைமை ஏற்படாமல், இம்மாதிரி தவறு செய்பவர்களைப்பற்றி சர்க்காருக்கு எழுதினால், நாங்கள் நிச்சயமாக கண்டிப்பாக நடவடிக்கை எடுத்துக்கொள்வோம், எடுத்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். உதாரணமாக என்னிடத்தில் 2, 3 'பைல்'-கள் இருக்கின்றன. எனக்கு 'அனானிமஸ்' கடிதங்கள் வருகின்றன. அல்லது பெயர் படிக்க முடியாதபடி எழுதின கடிதங்கள் வருகின்றன. ஏதோ ஒரு இடத்தில் தவறாக மின்சார போர்டில் இருப்பவர் 'எனக்குப் பணம் கொடுத்தால்தான் கொடுப்பேன்' என்று சொல்லுவதாகவும், பணத்தை எதிர்பார்த்து ஒத்திப்போடுவதாகவும் எனக்கு இரண்டு கடிதங்கள் வந்தன. அவை இரண்டையும் உடனடியாக "This may be investigated as a test case." என்று 'மார்க்' செய்து எழுதி அனுப்பினேன். ஒரு மாதம் கழித்து அவர் 'நான் கோபத்தில் எழுதி விட்டேன், நான் 'வித்டிரா' செய்து கொள்கிறேன்' என்று எழுதி விட்டார்கள்.

இந்தவிதமான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, பொது மக்களுடைய ஒத்துழைப்பு பெருவாரியாக இருக்குமாறு, கீழ் மட்டத்தில் ஏதாவது தவறுகள் இருப்பதை நாம் தீர்க்க முடியுமானால் அதைச் செய்வதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார கட்டணம் சம்பந்தமாக பேசப்பட்டது. மின்சாரக் கட்டணம் சம்பந்தமாக நான் அறிக்கையில் சொன்னது போல, இதற்கு தனிக் கமிட்டி ஒன்று போட்டு, அதை அவர்கள் விசாரணை செய்து, அவர்களுடைய சிபார்சை அனுப்பியிருக்கிறார்கள். அந்த சிபார்சுகளின் அடிப்படையில் சர்க்கார் முடிவு எடுக்கும். அவ்வாறு சர்க்கார் முடிவு எடுத்த பிறகுதான் நாம் இதை விவாதிக்க முடியும். பட்ஜெட்டும் சரி, இம்மாதிரி 'ரேட்' சம்பந்தமாகவும் சரி, சர்க்கார் பரிசீலனை செய்து முடிவு எடுத்த பிறகு தான், அது சரியா, தப்பா, குறைவா, அதிகமா என்று விவாதிக்கலாம், அதற்கு முன்பாக விவாதம் செய்ய முடியாது. ஆனால், முடிவு எடுக்கும்பொழுது நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதனால் விவசாயமோ, அல்லது நம்முடைய ராஜ்யத்தில் வளர்ந்து வருகிற தொழிலோ பாதிக்கப்படாத முறையில் சர்க்காருடைய கட்டணம் அமையும் என்ற உறுதியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கிற செலவுகள், உற்பத்திச் செலவு, நாம் இப்பொழுது நெய்வேலியிலிருந்து வாங்குகிற மின்சார விலை எல்லாவற்றையும் பார்த்து, எவ்வளவு நியாயமான முறையிலே நம் நாட்டில் இருக்கக்கூடிய தொழில் அபிவிருத்தி கெடாமலும், விவசாயம் பாதிக்கப்படாமலும் இருக்க வேண்டுமோ அந்த முறையில் இந்தக் கட்டணம் அமையும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடிக்கடி 'ஷட் டவுன்' ஏற்படுகிறது. அதன் காரணமாக நமக்கு பல தொல்லைகள் உண்டாகின்றன என்பதை எடுத்துச் சொன்னார்கள். இந்த 'ஷட் டவுன்' பற்றிய புகார்கள் எல்லாம் ஜூன் மாதத்தில் தண்ணீர் இறுதியாகப் போகும்பொழுதுதான் வரும். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், நம்முடைய சிஸ்டம் 'ஆடமாடிக் சிஸ்டம்'. 'லோடு' அதிகமானால், தண்ணீர் நமக்கு அதிகமாக இருந்தால் தண்ணீர் அதிகமாக வந்து அதன் மூலம் மின்சார உற்பத்தி அதிகமாகிவிடும். லோடு அதிகமாகி நமக்கு தண்ணீர் இல்லாவிட்டால், 'லோடை' குறைக்கின்ற முறையிலே அது தானாகவே 'ஷட் டவுன்' ஆகிவிடும். இல்லாவிட்டால், 'கிரிட்' பூராவும் எறிந்து போய்விடும். இது தவிர்க்க முடியாதது. திடீரென்று ஒரு ஸ்விட்ச் போட்டு 3,000 கிலோ வாட் இயந்திரம் ஓட்ட ஆரம்பித்தால் ஒரு 'புல்' ஏற்படுகிறது. நமது ராஜ்யத்தில் பார்த்தால் இதுவரையில் எல்லோரும் 'ஸ்டாண்டர்டு எகுவிப்மெண்டு' போட்டு செய்யவில்லை. எது எது கிடைக்கிறதோ, அவைகளையெல்லாம் போட்டு இதற்கு முன்னால் ஏற்பட்ட தொழில் ஸ்தாபனம் எல்லாவற்றையும் வைத்துவிட்டார்கள். இப்பொழுது அதைக் கொஞ்சம் கொஞ்சமாக சரிப்படுத்த முயலுகிறோம். 'ஸ்டாண்டர்டு எகுவிப்மெண்டு' தான் போடவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அதற்



காகக்கூட என்னிடம் வந்து ரொம்பப் பேர் புகார்கள் சொல்லுகிறார்கள். உங்களுடைய 'சீப் எலக்டிரிகல் இன்ஸ்பெக்டர்' போடுகிற நிபந்தனைகள் எங்களால் தாங்க முடியவில்லை" என்று சொல்லுகிறார்கள். ராஜ்யம் பூராவும் 'ஸ்டாண்டர்டு எகுவிப்மெண்டு' போட்டுவிட்டால், இம்மாதிரி ஏற்படுகிற சில்லரைத் தகராறுகளை தவிர்க்க முடியும். எல்லோரும் உடனடியாகப் பார்க்கும் பொழுது, புதியதாக வாங்கும்பொழுது 'ஸ்டாண்டர்டு எகுவிப்மெண்டு' வாங்கிப் போடுவது நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு வருகிறோம் இந்த முறையிலே நம்முடைய 'டிரான்ஸ் மிஷன் சர்வீசில்' இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். சில சமயங்களில் அவர்களுடைய 'இன்ஸ்டாலேஷன' தவறாகக் கூட இருக்கும் அந்தத் தவறுகளைக்கூட எலக்டிரிசிடி போர்டின் தவறு என்று சொல்லி விடுகிறார்கள். அதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். தன்னுடைய 'இன்ஸ்டாலேஷன் தவறு' என்பதையும் பார்க்க வேண்டும்.

அடிக்கடி ஜூன் மாதத்தில் மின்சாரத் தட்டு ஏற்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதை நாம் தவிர்ப்பதற்கான முறைகளில் என்னென்ன செய்ய வேண்டும் என்று பார்க்கிற பொழுது, இரண்டு யோசனைகளைச் சொன்னார்கள். 'நீங்கள் ஏன் கடைசி வரையிலும் தண்ணீர் 'எக்ஸாஸ்டு' ஆகிற வரையிலும் 'பவர்' கொடுத்துவிட்டு திடீரென்று இனிமேல் 'பவர்' கிடையாது என்று சொல்லுகிறீர்கள்? முன்பே 20, 30 சதவிகிதம், குறைத்துக் கொண்டு வந்தால், அந்தத் தட்டுப்பாடு இல்லாமல் போய்விடும் அல்லவா?' என்று திரு. சங்கரன் அவர்கள் கேட்டார்கள். நான் அவரை உடனே கேட்டேன், 'அது உங்களுடைய அபிப்பிராயமா? அல்லது நீங்கள் இண்டஸ்ரியலிஸ்டை கலந்து கொண்டு சொல்லுகிறீர்களா?' என்று கேட்டேன். "நீங்கள் 3, 4 மாதங்களுக்கு முன்பே 20, 30 சதவிகிதம் குறைத்துக் கொடுத்துக் கொண்டு வந்தால், அதனால் ஏற்படுகின்ற அவஸ்தை இதைவிட மிகவும் அதிகம். நாம் இப்பொழுது செய்கிறபடி செய்தால் ஏதோ 10, 15 நாட்களுக்கு 'லே ஆப்' கொடுத்துவிடலாம், 15 நாட்களுக்கு 'மெயிண்டெனன்ஸ் வொர்க்' செய்து கொள்ளலாம், 'லீவு' இருப்பவர்களுக்கு அதை 'அட்ஜஸ்டு' செய்துகொள்ளலாம். அந்த விதமான நிலைமை இல்லாமல், 20, 30 சதவிகிதம் எப்பொழுதுமே 'கட்' செய்து கொடுத்தால், 8 மணி நேர வேலை என்றால், 7 மணி நேரம்தான் வேலை செய்ய முடியும், 6 நாட்களுக்கு செய்கிற வேலை 5 நாட்களுக்குத்தான் செய்ய முடியும், எப்படி பவரை அட்ஜஸ்டு செய்து கொள்வது என்பதில் பெரிய பிரச்னை ஏற்பட்டுவிடும்" என்று தான் நான் பல பேரை கலந்து பேசியபொழுது சொன்னார்கள். "இது தான் சிறந்த முறை 'பவர் கட்' இல்லாமலே இருப்பது சாலச் சிறந்தது, "பவர் கட்" வரும் நிலைமை இருக்குமானால், இப்பொழுது நாம் அனுஷ்டிக்கிற முறை தான் சரி" என்று சொன்னார்கள். ஆகவே, அந்த முறையை நாம் இன்றைக்கு அமுல் நடத்திக்கொண்டு வருகிறோம். அதில் பிழை ஒன்றும் இருக்காது என்று நான் நினைக்கிறேன்.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [20th July 1964

அதுமட்டுமல்லாமல், 'பாலார் பேஸின் ரூல்ஸ்' பற்றிச் சொன்னார்கள். இது தீராத தலைவலியாக இருந்து வருகிறது. ரெவின்யூ இலாகாவில் செய்யக்கூடிய காரியங்களை எலக்டிரிஸிடி போர்டின் தவருகச் சொல்லுகிருர்கள். என்ன காரணத்திஞல் 'பாலார் பேஸின் ரூல்ஸ்' போட்டிருக்கிறேம் என்பதை நம்முடைய ரெவின்யூ இலாகா அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மான்யக் கோரிக்கை வரும்பொழுதும் விளக்கிச் சொல்லியிருக்கிருர்கள், அதனுடைய அவசியத்தைச் சொல்லியிருக்கிருர்கள். மின்சார போர்டைப் பொறுத்த அளவில் சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வரவேண்டும் என்பதைத் தவிர்த்து, தாசில்தார் சர்டிபிகேட் கொடுத்தால் போதும் என்பதாக இப்பொழுது விதிகள் போட்டிருக்கிறேம். ஆங்காங்கு கலெக்டர்களுக்கும் உங்களுடைய சர்டிபிகேட்டுகளை சீக்கிரம் கொடுத்துவிடுங்கள்' என்றும் சொல்லியிருக்கிறேம். இருந்தாலும் கஷ்டம் என்னவென்ருல், 'ஜாயிண்டு பட்டா' இருக்கும்பொழுது, 'ஓனர்ஷிப்' சரியா, இல்லையா, அவருடையது தானு, இல்லையா என்பது தெரியவில்லை. அந்தவிதமான சில பிரச்னைகள் இருக்கத்தான் செய்யும். அப்படி அவர்களுக்கு 'ஓனர்ஷிப்' சரியா, இல்லையா என்று பார்க்காமல் மின்சாரம் கொடுத்துவிட்டால், பின்னர் அவர்களிடமிருந்து பணம் வசூல் செய்யப்போகும்பொழுது 'இது என்னுடையது அல்ல. நான் கொடுக்கவேண்டியது அவசியமில்லை' என்றெல்லாம் சொல்லி கோர்ட்டுக்குச் சென்று வாதாடுகிருர்கள். ஆகவே தான் முதலில் 'ஓனர்ஷிப' சம்பந்தமாக சர்டிபிகேட் வேண்டும் என்று கேட்கிறேம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து டிரான்ஸ்மிஷினில், டிஸ்டிரிப்யூஷனில் 17 சதவிகிதம் இன்றைக்கு நஷ்டம் ஆகிக்கொண்டிருக்கிறது என்று சொன்ஞர்கள். 'டிரான்ஸ்மிஷன் லாஸ்" 17 சதவிகிதம் என்று சொல்லுகிறபொழுது, அது பல "items" சேர்ந்தது. ஒன்று 'டிரான்ஸ்மிஷன் லாஸ்' மற்றொன்று நாம் இலவசமாக பல இடங்களுக்கு மின்சாரம் கொடுப்பது. மின்சார இலாகா சிப்பந்திகளுக்கு இலவசமாகக் கொடுப்பது, அந்தந்த 'பாக்டரியை, இன்ஸ்டிடியூஷன்ஸ்' போன்றவைகளுக்குக் கொடுப்பது, இவையெல்லாம் சேர்ந்து 17 சதவிகிதம் தான். இந்த 17 சதவிகிதம் ஏதோ நஷ்டம் என்று எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழிலாளர் விடுதிகளுக்கு, ஆபீஸ்களுக்கு, நம்முடைய இன்ஸ்டாலேஷன்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. (குறுக்கீடு) தமிழ் நாட்டில் யாரும் மின்சாரம் திருடவேயில்லை என்று நான் சொல்ல இயலாது. அம்மாதிரி சொல்ல வேண்டும் என்று தான் என்னுடைய விருப்பம். ஆனல், அம்மாதிரி சொல்ல முடியாது. அம்மாதிரி ரொம்ப அதிகமாக இருப்பதாக நான் நினைக்கவில்லை. காரணம், நன்ருக கவனித்துப் பார்க்கிறபொழுது, குறைந்தபட்சம் 10 சதவிகிதம் டிரான்ஸ்மிஷன் லாஸாகப் போகும். அதுவும் நம்முடைய ராஜ்யத்தை எடுத்துக் கொண்டால் ஏறக்குறைய 55,000 மைல்களுக்கு டிரான்ஸ்



20th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

மிஷன் லையன்கள் இருக்கின்றன. பிற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று சொல்வதிலே பொருத்தம் இருக்காது. அவர்களுக்கு இவ்வளவு பரந்த ரூரல் எலெக்டிரிபிகேஷன் கிடையாது. அவர்கள் ராஜ்யம் பூராவும் விநியோகம் செய்வதில்லை. ஒரே இடத்தில் உற்பத்தி செய்து, அதே இடத்தில் விநியோகம் செய்தால், அதில் டிரான்ஸ்மிஷன் லாஸ் இருக்காது. 55,000 மைலுக்கு டிரான்ஸ்மிஷன் லையன்கள் இருக்கிற இந்த ராஜ்யத்தில் 10 சதவிகிதம் அதிகம் என்று எந்த நிபுணர்களும் சொல்ல மாட்டார்கள். மேற்கொண்டு ஏற்படுகிற 7 சதவிகிதத்தை எடுத்துக்கொண்டால், சொந்த உபயோகம், தொழிலாளர்கள் வசிக்கிற இடங்கள், இவற்றை எல்லாம் சேர்த்துப் பார்த்தால், அது அதிகமில்லை என்று நான் சொல்ல வேண்டும். இந்த விஷயத்தில் மற்ற ராஜ்யங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கில்லை. நம்முடைய ராஜ்யத்தில் விநியோகம் செய்கின்ற அளவு இந்தியாவிலேயே வேறு எந்த ராஜ்யத்திலும் இல்லை. ஆகவே அவர்களை ஒப்பிடுவதிலே உபயோகம் இருக்காது.

அடுத்து மின்சார போர்டின் பாண்டுகளை வாங்குகிறவர்களுக்கு சிரமம் இருக்கிறது என்று திரு. சீராமுலு சொன்ஞர்கள். அந்த சிரமத்தைத் தவிர்க்க வேண்டுமென்று சொன்னல் இன்கம்-டாக்ஸ் கிளியரன்ஸ் செர்டிபிகேட் வாங்கி ஸ்டேட் பாங்கில் கொடுத்து விட்டால், கிடைக்க வேண்டிய பணம் கிடைத்துவிடும். அப்படி கொடுக்காவிட்டால், டிடக்ஷன் அட் ஸோர்ஸ், சட்டப்படி செய்ய வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. சீராமுலு : அதுபோன்ற பாண்டுகள் வாங்கக்கூடிய ஆட்கள் எல்லோரும் இன்கம் டாக்ஸ் கட்டுவதில்லை. சிறிய நிலச்சுவான்தார்களும், சிறிய வியாபாரிகளும், சிறிய ஆட்களும் தான் ரூ. 100, ரூ. 200-க்கு என்று வாங்குகிருர்கள். ரூ. 100-க்கு பாண்டு வாங்கினவருக்கு 4¾ சதவிகிதம் வட்டி என்று சொல்லும் பொழுது இன்கம் டாக்ஸ் போக ரூ. 1.66 தான் கிடைக்கிறது. ஆகவே இன்கம் டாக்ஸ் கட்டாதவர்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்கம் டாக்ஸ் கட்டாதவர்களும் கிளியரன்ஸ் செர்டிபிகேட் வாங்கிக் கொடுத்து விடலாம். இன்கம் டாக்ஸ் அசெஸ்மென்ட் பண்ணவில்லை என்று செர்டிபிகேட் வாங்கிக்கொடுக்கலாம்.

திரு. பி. வி. சீராமுலு : அப்படி வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று சொன்னல், அதற்காக ஒரு ஆடிட்டரிடம் போய் வாங்க வேண்டிய செலவு ரூ. 20 அல்லது ரூ. 25 ஆகிறது. ரூ. 1-66 ந. பை. பெறுவதற்காக ரூ. 20 செலவு செய்ய வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகிருர்கள்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதுதான் இன்றைக்கு இருக்கிற இன்கம் டாக்ஸ் சட்டம். மின்சார போர்டிற்காக அந்தச் சட்டத்தை மாற்றி அமைக்க முடியாது.

அடுத்தாற்போல, பிரைவேட் லைசென்ஸிகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அவர்களைப் பொறுத்தவரையில், நாம் ஒரு நல்ல திட்டமான முடிவு எடுத்து, கடன் கொடுக்கவில்லை என்று செய்ததினால் தான். அவர்கள் இப்பொழுது பல பகுதிகளை சர்க்காருக்கே கொடுத்துவிட்டார்கள். திரு. தர்மலிங்கம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த முடிவை ஒட்டி, இந்தத் திட்டத்தின்படி, எதை அவர்கள் டெவலப் செய்ய முடியாது என்று நினைக்கிறார்களோ அதை எடுத்துக் கொண்டு விட்டோம். அவர்கள் இப்பொழுது குறைவாகத்தான் இடம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். உடனே அவர்களிடமிருந்து அந்த இடங்களை வாங்க வேண்டுமென்று சொன்னால், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும். அதிகமாக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்கும். லைசென்சு காலம் முடியும்பொழுது எடுத்துக்கொண்டால், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்காது. ஆகவே பிற்காலத்தில் பார்த்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன் இப்போது இருக்கிற சில நிலைமைகளைத் தீர்ப்பதற்கு சர்கார் வேண்டிய உதவி செய்யும்.

விவசாயிகளுக்கு 5 விளக்குகள் வேண்டுமென்று சொன்னார்கள். திருமதி சௌளந்தை அம்மாள் அவர்கள் இதைப் பற்றிச் சொன்னார்கள். 5 விளக்குகள் கொடுப்பதைப் பற்றி யாரும் உத்தரவு ஒன்றும் போடவில்லை 8 ந.பை. விவசாய ரேட் பிரகாரம் நீங்கள் மூன்று போட்டுக் கொள்ளலாம், மேலே போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொன்னால் எலெக்டிரிஸிடி டாரிப் பிரகாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறோம். அதனாலே விவசாய ரேட்டிலே டொமஸ்டிக் கன்ஸம்ஷன் பூராவும் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் நியாயமில்லை அதனால்தான் . . . .

திரு. பி. வி. சீராமுலு : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார். இந்த இன்கம் டாக்ஸைப் பற்றி கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்பொழுது . . . .

MR. DEPUTY SPEAKER : Theer is no point of order in what the hon. Member says.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "டாக்ஸ் டிடக்ஷன் அட் ஸோர்ஸ்" என்ற பிரின்ஸிபிள் இருக்கிறது. அதன் பிரகாரம் தான் டிடக்ஷன் செய்வார்கள். அதற்கு மேல் விவரம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று கனம் அங்கத்தினர் விரும்பினால் எனக்குக் கடிதம் எழுதினால், உடனே பதில் அனுப்புகிறேன்.

விவசாயத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன். விவசாயிகளைப் பொறுத்த வரையில், 100 தாலுகாக்களிலே 35 தாலுக்காக்களில் குரூப்பிங் ரெஸ்டிரிக்ஷன்னை எடுத்து விட்டோம். கூடுமான அளவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக அந்த ரெஸ்டிரிக்ஷன்னைக் குறைத்து விடவேண்டுமென்பது சர்க்காருடைய நோக்கம். எந்த அளவுக்கு பவர் உற்பத்தி ஆகிறதோ, அதை ஒட்டி அந்த ரெஸ்டிரிக்ஷன்னை கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து விடலாமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





நிலம் வாங்குவதிலே ஏதோ தவறு இருப்பதாக கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால், விசாரணை செய்து வேண்டிய விவரங்களைச் சேகரித்துக் கொடுக்கிறேன். எங்கு நடந்தாலும், அது தவிர்க்கப் பட வேண்டுமென்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது. இது சம்பந்தமாக அவர்கள் ஏதாவது ஒரு கேள்வி போட்டால், வேண்டிய விவரங்களைச் சேகரித்துக் கொடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக இந்த விவாதத்திலே பங்கு எடுத்துக் கொண்டவர்கள் எல்லோரும் சிறந்த ஆலோசனைகளைத் தெரிவித்துள்ளார்கள். எந்தவிதமான விருப்பு வெறுப்புமில்லாமல், நமது தமிழ் நாட்டின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டுமென்ற முறையில், எல்லாத் தரப்பில் இருக்கிறவர்களும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க் கட்சியில் உள்ளவர்களும்—தெரிவித்த கருத்துக்கள், ஆலோசனைகள் எல்லாவற்றிற்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கடலிலிருந்து மின்சாரம் எடுப்பதைப்பற்றி கண்டு அறிந்ததாக கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதனுடைய சாத்தியக் கூறுகள் எப்படி இருக்கும் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்னும் சில நாட்களிலே நான் அதைப் பற்றி ஆர்டிகிள் எழுத இருக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : பிரைவேட் கம்பனிகளுக்குக் கடன் கொடுப்பதை நிறுத்திவிட்டதன் காரணமாக, கிராமங்களிலே உள்ள பல குடித் தெருக்களுக்கு விளக்குகள் போடும்பொழுது, சேரிகளுக்கு எக்ஸ்டென்ஷன் செய்யப்படவில்லை. கடன் கொடுத்தால்தான் செய்வோம் என்று சொல்லுகிறார்கள். சர்க்கார் இதைக் கவனத்தில் கொண்டு, ஹரிஜன நல இலாகா சற்று அதிகமாகத் தொகை ஒதுக்கி, இதைக் கவனிப்பதற்கு ஆலோசனை சொல்லுவார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : எந்த ஊருக்கு என்று எழுதி அனுப்பினால், பரிசீலனை செய்து பார்க்கலாம்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஹொகனேகல் பகுதியிலே அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த சாத்தியக் கூறுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசாங்கம் அதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இயலாது என்பது தான் நிபுணர்களின் அபிப்பிராயம்.

புலவர் கா. கோவிந்தன் : ஜுன்—ஜுலைத் திங்களின் தான் மின்சார தட்டுப்பாடு ஏற்படுகிறது. ஆகவே அணைக்கட்டுகளில் அந்த இரண்டு மாதங்களுக்கு வேண்டிய அளவுக்கு அதிகமாகத்

[புலவர் கா. கோவிந்தன்] [20th July 1964

சேர்த்து வைத்துக் கொள்ளும் வகையில், அணைக்கட்டின் உயரத்தை உயர்த்த முடியுமா என்று பார்க்கவேண்டுமென்று தெரிவித்தேன். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன கூற இருக்கிறார்கள்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : தமிழ் நாட்டிலே தண்ணீர் இல்லை. அணைக்கட்டின் உயரத்தை உயர்த்துவதன் மூலமாக தண்ணீர் கிடைக்குமென்று நான் நம்பவில்லை.

**திரு. வி. ஆர். பெரியண்ணன்** : தலைவர் அவர்களே, லோட்டு போடும் விஷயத்தில், மூன்று லோட்டுகள் போடலாம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். போடும் மூன்று லோட்டுகளையும் ஸ்விச் போர்டிலேயே போட்டுக்கொள்ளலாமா என்பதற்கு விளக்கம் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். லோட்டு கட்டணம் அதிகமாக வசூலிக்கிறார்களே, அதுபற்றியும் அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: எனக்கு டீடெய்ல்ஸ் ஆப் அட்மினிஸ்ட்ரேஷன் தெரியாது. மின்சாரம் வேண்டும் என்றால் அதற்கான ஏற்பாடுகள் செய்கிறோம். தனிப்பட்ட கிராமங்கள் சம்பந்தமாக ஏதாவது வேண்டுமென்றால், தனியாக எழுதி அனுப்பினால், பரிசீலனை செய்யலாம்.

## IV.—GOVERNMENT BILLS—*cont.*

## (2) THE MADRAS BHOODAN YAGNA (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 10 OF 1964).

THE HON. SRI P. KAKKAN : Mr. Deputy Speaker, Sir, I move—

'That the amendments made by the Legislative Council in respect of the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964), as passed by the Legislative Assembly be taken into consideration'.

கனம் சபாநாயகர் அவர்களே, இம்மாநில சட்ட மன்றம் நிறைவேற்றிய தமிழ்நாடு நிலக்கொடை கேள்வி (திருத்த) மசோதாவில் (சட்ட மன்ற மசோதா 10-1964), சட்டப் பேரவை (Legislative Council) செய்துள்ள திருத்தங்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என நான் பிரேரேபிக்கிறேன்.

சட்ட மன்றம் நிறைவேற்றிய இந்த மசோதாவை சட்டப் பேரவை 1964 ஏப்ரல் 22-ம் தேதியன்று ஆலோசனைக்கு எடுத்துக் கொண்டது. மசோதாவின் 4-வது, 11-வது பகுதியில் சில திருத்தங்களை நிறைவேற்றியது, இம் மன்றத்தில் கொண்டுவரப்பட்ட இந்த மசோதாவின் சிறப்பான அம்சங்களைப் பற்றி நான் ஏற்கனவே 31-3-1964-ல் விரிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

31-3-1964-ல் இம்மன்றம் நிறைவேற்றிய மசோதாவின் 9-வது பகுதி, 1958-ம் ஆண்டு தமிழ்நாடு பூதான யக்ஞச் சட்டத்தின் 24-வது பிரிவுக்குப் பதிலாக புதிய பிரிவு ஒன்றை அமைத்துக் கொள்ள-



20th July 1964] [திரு. பூ. கக்கன்]

வகை செய்கிறது. அப்பிரிவின் படி, வேறு யாதொரு சட்டத்தில் என்ன சொல்லியிருப்பினும், இந்த சட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்ட அல்லது செய்யப் பட்டதாக கருதப்படுகிற ஒவ்வொரு அறிவிப்பும் நிலக்கொடையும் பத்திரப் பதிவு செய்வதிலிருந்தும், முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்தும், வில்லங்கச் சான்றிதழ்க் கட்டணம் செலுத்துவதிலிருந்தும் விலக்கு பெறும்; எப்போதுமே அவ்வாறு விலக்கு பெற்றிருப்பதாகக் கருதப்படும் அதன் பின்னர், 1958-ம் ஆண்டு தமிழ் நாடு பூதன யக்ஞச சட்டத்தின் கீழ் நிலம் நன்கொடையாக வழங்கப் பட்டத்தைக் குறித்து தவறுகளோ, ஊழல்களோ ஏற்படாமல் இருக்க அதைப் பற்றி பகிரங்கமாக அறிவிக்க வேண்டியது அவசியமெனக் கருதப் பட்டது. எனவே அறிவிப்புகளை உறுதிப்படுத்தி வெளியிடும் உத்தரவை (அறிவிப்புகளை செய்ண்ட் ஜார்ஜ் கோட்டை அரசாங்க இதழில் வெளியிடுவதோடு கூட) பதிவு செய்வதற்கும் வகை செய்து அரசாங்கம் சட்டப்பேரவையில் திருத்தங்களைக் கொண்டு வந்தது. இதனையொட்டி சட்டப்பேரவை இம்மசோதாவின் 4-வது, 11-வது பகுதிகளுக்கு அவசியமான திருத்தங்களை நிறைவேற்றியது. சட்டப் பேரவை திருத்திய 4-வது பகுதியின்படி, மாநிலபோர்டு, நிலக்கொடை அறிவிப்பினை உறுதிப் படுத்தும் ஆணையை நடவடிக்கைக் குறிப்புடன் பெற்றுக் கொண்டு, அந்த ஆணையை செய்ண்ட் ஜார்ஜ் கோட்டை அரசாங்க இதழில் வெளியிடவேண்டும். மேலும், அந்த ஆணைக்கு நகல் ஒன்றை அது சம்பந்தப் படுகிற நிலம் எந்தப் பத்திரப் பதிவு அதிகாரியின் தல அதிகார வரம்புக்குள் உள்ளதோ அந்த அதிகாரிக்கு, 1908-ம் ஆண்டு இந்தியப் பத்திரப் பதிவுச் சட்டத்தின் கீழ் (மத்தியச் சட்டம் 16/1908) அனுப்பவேண்டும். சட்டப் பேரவை திருத்தியபடி பதிவு அதிகாரி அந்த ஆணையைப் பதிவு செய்யவேண்டும். சட்டப் பேரவை திருத்திய 11-வது பகுதியில், பின் வருமாறு வகை செய்யப்பட்டுள்ளது; "திருத்தச் சட்டத்தின் தொடக்கத்துக்கு முன்பு, பூதான யக்ஞச் சட்டத்தின் 17-வது பிரிவை சேர்ந்த (4) உட் பிரிவின் கீழ் ஓர் அறிவிப்பை உறுதிப்படுத்தும் ஒவ்வோர் ஆணை விஷயமாகவும், மாநில போர்டு அத்தொடக்கத்திலிருந்து நான்கு மாதங்களுக்குள் அந்த ஆணைக்கு அத்தாட்சி செய்த நகல் ஒன்றினைப் பத்திரப் பதிவு அதிகாரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். அந்த ஆணை சம்பந்தப் படுகிற நிலம் எந்தப் பதிவு அதிகாரியின் தல அதிகார வரம்புக்குள் உள்ளதோ அந்த அதிகாரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர் அந்த ஆணையைப் பதிவு செய்ய வேண்டும்". பூதான யக்ஞத்திற்காக நன் கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலங்களை எந்த நபர்களின் பெயர்களுக்கு மாற்ற உத்தேசிக்கப்படுகின்றதோ அந்த நபர்களுக்கு அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்பதும் மேற்சொன்னவாறு பத்திரப் பதிவில் அடங்கும் சட்டப் பேரவை நிறைவேற்றிய இத்திருத்தங்களை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என நான் பிரேரேபிக்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is—

'That the amendments made by the Legislative Council in respect of the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 10 of 1964), as passed by the Legislative Assembly, be taken into consideration'.

The motion was put and carried.

*Clause* 4.

THE HON. SRI P. KAKKAN: Sir, I move—

'That the following amendment to Clause of the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964, made by the Legislative Council be agreed to'—

In clause 4, for items (v) and (vi), *substitute* the following items:—

(v) for sub-section (5), the following sub-section shall be *substituted* namely:—

"(5) (*a*) Where the Inquiry Officer passes an order under sub-section (4) confirming a declaration, he shall, as soon as may be, communicate the order along with the record of his proceedings to the State Board.

(*b*) As soon as may be after the receipt of the order referred to in clause (*a*), the State Board shall—

(i) publish such order in the Fort St. George Gazette; and

(ii) send a copy of such order duly authenticated by any officer authorised by the State Board in this behalf to the registering officer under the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908) within the local limits of whose jurisdiction the land to which the order relates is situate and such registering officer shall register such order:

Provided that no fee shall be payable for such registration and it shall not be necessary for any officer of the State Board to appear in person or by agent at the registration office in any proceeding connected with such registration.";

(vi) for sub-section (6), the following sub-section shall be *substituted*, namely:—

"(6) Upon such registration, all the right, title and interest of the donor in such land shall, notwithstanding anything contained in any other law for the time being in force but subject to the provisions of section 23, stand transferred to, and vest in, the State Board for the purposes of the Bhoodan Yagna."'

The motion was put and carried.



*Clause* 11.

THE HON. SRI P. KAKKAN: Sir, I move—

'That the following amendment to clause 11 of the Madras Bhoodan Yagna (Amendment) Bill, 1964, made by the Legislative Council be agree to:—

In clause 11,—

(*a*) in the opening paragraph and in sub-clause (*a*), after the words "under the principal Act", insert the words "as in force immediately before the commencement of this Act";

(*b*) Add the following provision:—

"Provided that in the case of every order confirming a declaration under sub-section (4) of section 17 of the principal Act before the commencement of this Act, the State Board shall, within four months from the date of such commencement, send a copy of such order authenticated by an officer authorized by the State Board in this behalf to the registering officer under the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908) within the local limits of whose jurisdiction the land to which the order relates is situate and such registering officer shall register such orders:

Provided further that no fee shall be payable for such registration and it shall not be necessary for any officer of the State Board to appear in person or by agent at the registration office in any proceeding connected with such registration.

Provided also that not withstanding anything contained in section 11 or sub-section (5) of section 17 of the principal Act, as in force immediately before the commencement of this Act, the right, title and interest of the donor in such land shall stand transferred to and vest in the State Board or the Sarvodaya Panchayat, as the case may be, only on registration of the copy of the order under the first proviso.

*Explanation.*—For the removal of doubts, it is hereby declared that if in any case the declaration or grant of any land donated under the principal Act has been registered under the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908) before the commencement of this Act, the copy of the order confirming the declaration in respect of such land under sub-section (4) of section 17 of the principal Act shall not be deemed to require registration under this section".'

The motion was put and carried.

[20th July 1964

(3) THE MADRAS PREVENTION OF BEGGING (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 4 OF 1964) AS AMENDED BY THE JOINT SELECT COMMITTEE.

* THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Mr. Deputy Speaker, Sir, I move—

'That the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964) as amended by the Joint Select Committee be taken into consideration'.

Sir, there are two enactments which deal with the beggar problem in this State. They are the Madras Police Act, 1888 (Madras Act III of 1888) and the Madras Prevention of Begging Act, 1945 (Madras Act XIII of 1945). Sections 71-A to 71-L of the former Act provide for the prevention of begging in the City of Madras and the latter in the other parts of the State. While answering supplementaries to a Legislative Assembly Question on the beggar problem, my predecessor had given an assurance that the existing enactments would be suitably modified for the purpose of putting down the beggar nuisance effectively.

The Bill to amend the Madras Prevention of Begging Act, 1945 (Madras Act XIII of 1945) and to apply it to the City of Madras also was introduced in the Legislative Assembly and was referred to the Joint Select Committee.

The Joint Select Committee called for memoranda from individuals and institutions interested in the Bill and also visited certain institutions. It also recorded oral evidences in regard to the Bill. After detailed consideration, the Committee has made some amendments in the Bill. The important changes made by the Joint Select Committee are the following:—

Clause 4 deals with definitions. The Committee decided that the term "public place" should be an "inclusive definition" and that places of public worship should also be included in it specifically. The clause has been amended accordingly.

Clause 5 provides for penalty for begging. The Committee decided that there should be an enhanced punishment which may extend to six months for second or subsequent conviction. This clause has been amended accordingly.

The Committee has also decided that certain powers regarding the order of further detention in Special Home of Beggars and also for transfer of beggars from one work-house or special home to another work-house should also be exercised by such authority as may be prescribed.

The Committee has made provisions for release of beggars on parole and also for release of beggars subject to conditions. The relevant provisions of the Bill have accordingly been recast.

With these words, I request that the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964, as amended by the Joint Select Committee, be taken into consideration.



20th July 1964]

MR. DEPUTY SPEAKER: Motion moved—

'That the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964) as amended by the Joint Select Committe be taken into consideration'.

11-30 a.m.

**திரு. மீ. கலியாணசுந்தரம்**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவின் ஆய்வுக் குழுவிலே நான் ஒரு அங்கத்தினராக இருந்தேன். இந்த மசோதாவின் கருத்துக்களை ஆதரிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால், சட்டம் இயற்றி மட்டும் இந்தப் பிரச்னையைச் சமாளித்துவிட முடியாது. சமுதாயத்திலே நடக்க வேண்டிய பல சீர்திருத்தங்களில் இதுவும் ஒன்று. மது விலக்குச் சட்டம் இயற்றியிருக்கிறோம். அதனால் மட்டும் அதைத் தடுத்துவிட முடியவில்லை. விபசாரத்தை ஒழிப்பதற்குச் சட்டம் இயற்றியிருக்கிறோம். அதனால் மட்டும் அதைத் தடுத்துவிட்டதாகத் திருப்தி அடைய முடியாது. அது போன்றே பிச்சை எடுப்பதைத் தடுக்கவும் சட்டம் இயற்றி மட்டும் நாம் அந்தப் பழக்கத்தைத் தடுத்துவிட முடியாது என்பதையும் நன்றாகத் தெரிந்தேதான் இந்தச் சட்டத்திற்கும் நான் ஆதரவு கொடுக்கிறேன்.

நம்முடைய நாட்டிலே எவ்வளவோ அபிவிருத்திகள் ஏற்பட்டிருந்தாலும்கூட, பிச்சை எடுப்பது இன்னும் பல இடங்களில் இருப்பதை பார்க்கும்போது வேதனை அளிக்கக் கூடியதாக இருக்கிறது. பஸ் ஸ்டாண்டுகளிலும், இரயில் நிலையங்களிலும், ஓடும் இரயில் வண்டிகளிலும் கூட பிச்சை எடுப்பது அதிகரித்து வருகிறது. அது சமுதாயத்திற்கு ஒரு தொல்லையாகும். அந்தத் தொல்லையிலிருந்து தனி நபர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் அரசாங்கத்திற்கு உண்டு. அதே சமயத்தில், பிச்சை எடுக்கும் பிரச்னை எவ்வாறு வளர்ந்து வருகிறது, ஏன் வளர்ந்து வருகிறது, அதற்குள்ள நியாயமான காரணங்கள் என்ன என்பதைப் பற்றியெல்லாம் ஆராய வேண்டும். சமீபத்தில் அத்தகைய ஆராய்ச்சி நம்முடைய ராஜ்யத்தில் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. நடந்த ஆராய்ச்சிகளெல்லாம் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முந்திய வை. மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் அமுல் நடந்த பிறகு என்ன அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது, பிச்சை எடுப்பதை எந்த அளவுக்குத் தடுக்கிறோம் என்பதைப் பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டும். சமுதாய நல அபிவிருத்தியைப்பற்றிக் குறிப்பிடும் அத்தியாயத்தில் இனி வரக்கூடிய ஐந்தாண்டுத் திட்டத்திலும் இது சேர்க்கப்பட வேண்டும் என்றும் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பிச்சை எடுப்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அடிப்படைக் காரணம், நாட்டிலிருக்கும் வறுமையும் பொருளாதார ஏற்றத்தாழ்வும் தான். வாழ வேறு வழி இல்லாததும் முக்கியமான காரணமாகும். பிச்சை எடுக்கப் போக [illegible] காரணம் என்ன என்பதைப் பார்க்கவேண்டும். [illegible]

கள் பிச்சை எடுக்கப் போகிறார்களே, அதைத் தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். சக்தி இல்லாதவர்கள் பிச்சை எடுக்கப் போக வேண்டிய நிலையில் இருப்பவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிப்பது என்பதைப் பற்றியும் ஆராய்ந்து அதற்கும் இதில் இடம் அளிக்க வேண்டும். ஆனால், இந்த மசோதாவில் இருக்கும் பலவீனம் என்னவென்றால், சக்தி உடையவர்கள் பிச்சை எடுத்தாலும் சரி, சக்தி இல்லாதவர்கள் நோயின் காரணமாக அல்லது வேறு அங்கஹீனம் காரணமாகப் பிச்சை எடுத்தாலும் சரி, எல்லோரும் ஒரே மாதிரித்தான் கருதப்படுகிறார்கள். எல்லோரும் ஒரே மாதிரித் தான் தண்டிக்கப்படுகிறார்கள். பாகுபாடு இல்லாத அளவுக்குத் தண்டனை இருக்கிறது என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும். இந்தக் குறைபாட்டை எப்படிப் போக்க வேண்டுமென்றால், இதற்கான தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். சக்தி உடையவர்கள் பிச்சை எடுத்தால், அவர்களுக்குத் தண்டனை கொடுத்து, அதாவது அவர்களுக்கு வேலை செய்வதற்கான பயிற்சி அளித்து அவர்களை வேலைக்கு அனுப்புவதில் முயற்சி எடுக்க வேண்டும். அது ஒரு தனி வகை. சக்தி இல்லாதவர்கள், அங்கஹீனமுள்ளவர்கள், நோயாளிகள், பிழைப்புக்கு வேறு வழியின்றி பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள், ஆகிய அப்பேர்ப்பட்டவர்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுப்பது என்பதையெல்லாம் ஆராய்ந்து, தடுப்பு நடவடிக்கையிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும். தற்பொழுது தடுப்பு நடவடிக்கையாக இருக்கும் ஏற்பாடுகள் மிக மிகச் சொற்பமாகவே இருக்கின்றன. அப்படிச் சொற்பமான ஏற்பாடுகளை வைத்துக் கொண்டு, தீவிரமாகச் சட்டம் செய்வது சரியா என்பதையும் பரிசீலிக்க வேண்டும். சட்டத்தை இயற்றி விட்டாலுங்கூட வேகமாக அமுல் நடத்த முடியாது. அதற்கு மாற்று ஏற்பாடுகள் என்ன என்ன அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வழிகள் என்ன என்ன என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். அதற்கு என்னுடைய யோசனை என்னவென்றால், ஒவ்வொரு மாவட்டத்திலும் பிச்சை எடுப்பவர்களை வைப்பதற்கு, அவர்களுக்கு மாற்று வேலை கொடுத்து, அவர்களுடைய சக்திக்கேற்ப அவர்களைப் பயன்படுத்தி, உருவான வேலையில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு வேண்டிய நிலையங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்துவது அவசியம் என்று நான் கருதுகிறேன். சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், அதை ஒரு தனி இலாகாவாகவே ஏற்பாடு செய்து, குறைந்தது ஒவ்வொரு மாவட்டத்திலும் பிச்சை எடுப்பவர்களைத் தடுப்பதற்கு, அவர்களை வைத்துப் பராமரிப்பதற்கு, அவர்களுக்கு பயிற்சி கொடுத்து வேறு வேலைகளில் ஈடுபடச் செய்வதற்கு உள்ள வாய்ப்புகள் அளிக்கக்கூடிய ஸ்தலங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

நம்முடைய சட்டத்தில் இன்னொரு முக்கியமான திருத்தம் செய்திருப்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோயில்களைக் கூட இதில் சேர்த்திருக்கிறோம். கோயில்களின் முன்பு பிச்சை எடுப்பதும் இதில் தடை செய்யப்பட்டிருக்கிறது. அது செலக்ட் கமிட்டியில் தெரிந்தே சேர்க்கப்பட்டது. கோயில்கள், இன்னும் மற்றப் பொது இடங்கள் ஆகியவை பொதுவாக யாத்திரிகர்கள், குறிப்பாக வெளிநாட்டு யாத்திரிகர்கள் வரக்கூடிய இடங்களாக இருக்கின்றன. அந்த இடங்களில் போய்ப் பார்த்தால், நம் நாட்டுக்கே கேவலம் அளிக்கக்கூடிய நிலையில் பிச்சைக்காரர்கள் சூழ்ந்து கொள்வார்கள். உண்மையை யாரும் புரிந்து கொள்வதைப்பற்றிக்கூட கவலைப்படவில்லை. இல்லாத கௌரவம் வேண்டும் என்று யாரும் விரும்ப வேண்டிய அவசியம் இல்லைதான். ஆனால், கோயில் போன்ற பொது இடங்களில் வெளி நாட்டவர்கள் பார்வையிடப் போகும்போது பிச்சைக்காரர்கள் தொல்லை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நான் சில சந்தர்ப்பங்களில் நேரடியாகப் பார்த்த அனுபவம் எனக்கு உண்டு. மாமல்லபுரம் போன்ற இடங்களுக்கு அன்னிய நாட்டவர்கள் வந்து பார்க்கும் போது அவர்களைச் சூழ்ந்துகொண்டு பிச்சை எடுப்பதானது வெளிநாட்டவர்கள் மத்தியில் நம்முடைய நாட்டைப் பற்றி அவர்கள் இழிவாக நினைக்கக்கூடிய நிலை ஏற்படுமோ என்று நாம் அஞ்ச வேண்டியதாக இருக்கிறது. கோயில்கள் போன்ற பொது இடங்களில் முன்பு பிச்சைக்காரர்கள் சூழ்ந்திருப்பது சரியல்ல. அதைத் தடுக்க வேண்டியது தான். அதே சமயத்தில் பிச்சை எடுக்காத வண்ணம் அவர்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். தமிழ் நாட்டில் இரண்டு பழமொழிகள் உண்டு, "ஏற்பது இகழ்ச்சி" என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், "ஐயம் இட்டு உண்" என்றும் சொல்லியிருக்கிறார்கள். 'பிச்சை எடுப்பது கேவலம்' என்று சந்தேகத்திற்கு இடமில்லாமல் சொல்லி, அதே சமயத்தில் 'பிச்சை இட்டுச் சாப்பிடு' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே முரண்பாடு இருப்பதாக நான் கருதவில்லை. பிச்சை எடுக்கக் கூடாது என்றால், வசதி படைத்தவர்கள், பிச்சை எடுக்கக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தாமல் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்பது தான் அதற்குப் பொருத்தமான அர்த்தமாக இருக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டுதான் இப்பொழுது சமுதாயம் பூராவிலும் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். அதற்காக அரசாங்கம் குறுக்கிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிலர் சொல்லலாம், 'அரசாங்கமே குறுக்கிடக் கூடாது, லெஸ் கவர்ன்மெண்ட் அண்டு நோ மோர் கவர்ன்மெண்ட்' என்று. அப்படிக் கூட பெரிய அறிவாளிகள் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஜனநாயக சோஷலிசம் என்று பேசிவிட்டு, அரசாங்கம் குறைந்த பட்சம் தான் தலையிட வேண்டும் என்றால், அது அஸ்திவாரத்திலிருந்தே கல்லைப் பிடுங்கிவிடுவதாகத்தான் ஆகும். ஜனநாயக சோஷலிசத்தை உருவாக்கவேண்டுமென்ற லட்சியத்தை அரசாங்கம் உண்மையாகவே வைத்திருப்பார்களானால் அரசாங்கம் ஜனங்களுக்குச் சாதகமாகக் குறுக்கிட வேண்டிய அவசியம் இருக்கும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் குறுக்கிடாவிட்டாலும்,

ஜனங்களுக்கு விரோதமாக இருக்கிறபோது, குறுக்கிட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்குப் பயந்து கொண்டு தான் சிலர், 'அரசாங்கம் தலையிடுகிறது, ஜனநாயக சோஷலிசம் என்றால், அரசாங்கம் குறுக்கீடு குறைவாக இருக்கவேண்டும், அரசாங்கம் எவ்வளவு குறைந்தபட்சம் குறுக்கிட வேண்டுமோ அவ்வளவு குறைவாகக் குறுக்கிட வேண்டும்' என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு இந்தச் சட்டம் சங்கடமாக இருக்கக்கூடும். 'பிச்சை எடுக்கக்கூட சுதந்திரம் இல்லையா' 'இதுவா ஜனநாயகம்?' என்று கேட்கக்கூடும். பிச்சை எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏன் ஏற்பட்டது? அதற்குச் சமுதாயம் பொறுப்பாளி அல்லவா? பிச்சை எடுப்பதைத் தடுத்து அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க வேண்டிய பொறுப்பு சமுதாயத்திற்கு இருக்கிறது என்று வருகின்றபோது, தனிப்பட்ட ஒவ்வொருவரும் செய்யக்கூடியது ஏதோ சில நயா பைசாக்கள் கொடுக்கலாம். அவ்வளவுதான் இருக் முடியும். அப்படிப் பலரும் தங்களாலியன்றதைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவைகளெல்லாம் பிச்சை எடுப்பதைத் தடுக்க உதவியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கோயில்களில் தான தருமம் செய்வதெல்லாம் கூட கேவலமாகப் பிச்சை எடுப்பதைத் தடுக்கப் பயன்படவில்லை. அதைத் தடுக்க நம்முடைய தலைமுறையிலாவது முயற்சி எடுக்க வேண்டும், இனி வரக்கூடிய தலைமுறையிலாவது பிச்சை எடுப்பது என்பது அறவே இருக்கக் கூடாது என்றால் அதற்கு அரசாங்கம் குறுக்கிட்டு முயற்சிகள் எடுக்க வேண்டும். சட்டத்தைப் போட்டு மட்டும் தடுத்துவிட முடியாது. பஸ் ஸ்டாண்டுகளிலும் ரயில்வே ஸ்டேஷன்களிலும் நான்கு பேர், ஐந்து பேர் கொண்ட குடும்பமும் கூடப் பிச்சை எடுக்கும் அளவுக்கு இருக்கும் நிலைமையைப் பார்க்கிறோம். அப்படிப்பட்டவர்கள் பிச்சை எடுக்காமல் இருக்கமாற்று ஏற்பாடுகளைச் செய்யவேண்டிய கடமை சமுதாயத்திற்கும் அரசாங்கத்திற்கும் உண்டு. அந்தக் கடமையை நிறைவேற்ற வேண்டுமானால், அரசாங்க நிதியிலிருந்து மட்டும் செலவு செய்ய வேண்டும் என்று நாம் சொல்ல முடியாது. எப்படிக் கல்விக்காக தனியார்கள் முன்வந்து முயற்சி எடுக்கிறார்களோ, அதைப் பயன் படுத்தி, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் கட்டப்பட்டிருக்கின்றனவோ, அதே போல், இந்தப் பராமரிப்பு ஆலயங்களையும் அமைப்பதற்கு, குறிப்பாக நம்முடைய கோயில்களில் இருக்கும் வசதிகளையெல்லாம் பயன்படுத்த வேண்டும். கோயில் உண்டிகள் வைத்துப் பணம் சேர்க்கிறது. அப்படிக் கோயில்களில் இருக்கும் உண்டிகளில் வரும் பணத்தில் ஒரு பகுதியை இந்த நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதற்கும், கோவில்களினுடைய வருமானத்திலும் ஒரு பகுதியைப் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் அதற்கு உதவி செய்யக்கூடிய முறையில் அவர்களுடைய பொறுப்பிலே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக இந்தப் பிரிவைக் கவனிப்பதற்கு ஒரு தனி அதிகாரியை நியமிப்பது கூட நலமாக இருக்கும். இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு டைரக்டர் ஆப் பப்ளிக் ஹெல்த்துக்கு நேரம் இருக்காது என்று நினைக்





கிறேன். போலீசாரின் கண்காணிப்பில் இந்தப் பொறுப்பை விடுவதும் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. அதற்கு என்று ஒரு வெல்பேர் அதிகாரி தனியாக நியமிக்கப்பட்டு, இதற்கான நடவடிக்கை எடுக்க செய்ய வேண்டும்.

சென்னை நகரத்தில் இருக்கும் சில பிச்சைக்காரர்கள் விடுதிகளை நான் பார்க்க நேர்ந்தது. அந்த விடுதிகளெல்லாம் பார்ப்பதற்கே மிகவும் கேவலமான நிலையில் இருந்தன. அவ்வாறு அவை நிர்வகிக்கப்பட்டிருக்கின்றன என்பது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. அந்த விடுதிகள் நகரத்தின் மிகவும் முக்கியமான இடங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. இனி இப்படிப்பட்ட விடுதிகள் ஏற்படுத்தும்போது, அவற்றை நகரத்திற்கு வெளியே இருக்கும் விசாலமான இடங்களைத் தேடிப் பார்த்து, அங்கே நல்ல கட்டடங்களைக் கட்டி வேலை செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். சிறுவர்களாக இருந்தால் அவர்களுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுப்பதற்கும் தொழில் கற்றுக் கொடுப்பதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தி அதற்கும் கவனம் செலுத்துமாறு, கேட்டுக்கொண்டு, இந்தச் சட்டத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கு என்று கொண்டு வந்திருக்கிற இந்த சட்டத்தை வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சட்டம் பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்கான சட்டம் என்று தலைப்பிடப்பட்டிருந்தாலும் உள்ளே இருக்கிற விதி முறைகள் குறிப்பிட்ட சில பேர்களுக்காகத்தான் அமைந்திருக்கிறது. நம்முடைய நாட்டில் சாதாரணமாக பொருளாதார நிலை உயர்ந்திருக்கிறது என்று கூறப்படுகிற இந்த நேரத்தில் நம்முடைய நாட்டு நிலைமை எப்படி இருக்கிறது என்று எண்ணிப்பார்க்க வேண்டும். நாட்டில் இருக்கிற அவ்வளவு பேரும் தங்களிடத்தில் இருக்கிற பொருள்களை பிறருக்கு கொடுக்கக்கூடிய நிலையில் யாருடைய பொருளாதார நிலையும் உயர்ந்ததாகச் சொல்ல முடியாது. தம்மிடத்தில் உள்ள பொருளை பிறருக்கு கொடுக்கக்கூடிய நிலையில் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். அதுதான் உயர்ந்தது. அதைவிட உயர்ந்தது என்ன என்று சொன்னால் "யாராவது இந்தா உனக்கு நான் ஐந்து ரூபாய் கொடுக்கிறேன்" என்று சொன்னால் "வேண்டாம் என்னிடத்தில் இருக்கிறது" என்று சொல்லக்கூடிய வள வாழ்வைத்தான் ஒவ்வொருவரும் பெறுவது மிகச் சிறந்தது. இந்த நிலை நம் நாட்டில் இப்போது உண்டாகி இருக்கிறதா என்றால் இல்லை. கோசல நாட்டில் இரப்போர் இன்மையால் ஈவோரும் இல்லாத நிலைமை இருந்தது என்று கம்பர் சொல்லியிருக்கிறார். கொடுப்போர் என்கிறவர்களுக்கு வாங்குவோர் இல்லை என்ற நிலை இருந்திருக்கிறது என்று சொல்வார்கள். அந்த நிலையை நாம் உருவாக்க வேண்டும். அந்த நிலையை நாம் உருவாக்கவில்லை. அந்த நிலை உருவாகாத நேரத்தில் பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்காக நாம் சட்டத்தைக் கொண்டு வருகிறோம்.

பிச்சைக்காரர்கள் என்று ஓர் இனம் இல்லை. சூழ்நிலை காரணமாகத்தான் பிச்சைக்காரர்கள் உருவாகிறார்கள். அந்த நிலை உருவாவதற்கு நாம் இடமளிக்கக் கூடாது. பிச்சைக்காரர்களை உருவாக்காமல் இருப்பதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றை எடுக்க வேண்டும். பிச்சை எடுக்கக்கூடிய சூழ்நிலையை பரவலாக உற்பத்தி செய்து விட்டு பிச்சைக்காரர்களை மட்டும் தடுத்து நிறுத்துவது என்று சொன்னால் அது நடைமுறைக்கு மாறுபட்டதாக அமையும். ஊருக்கு ஒரு பிச்சைக்காரர் விடுதியை ஏற்படுத்தினாலும் அந்த நிலையை சமாளிக்க முடியாமல் போகும்.

அடுத்து பிச்சைக்காரர்கள் யார் என்று விளக்கம் கூறுகிற நேரத்தில் யார் யாரையோ கூறியிருக்கிறார்கள். அதில் விடப்பட்டுள்ள பல இனங்கள் இருக்கின்றன. சாதாரணமாக நகரங்களில் மேளதாளங்களை முழங்கிக் கொண்டு திருப்பதிக்கு கோவிந்தா போட்டுக்கொண்டு போகிறவர்களில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் எல்லாம் இந்தப் பிச்சைக்காரர்கள் இனத்தில் சேர்க்கப்பட வேண்டியவர்கள் தான். சென்னை நகரைப் பொறுத்த வரையில் நடைபாதையில் உட்கார்ந்து கொண்டு கை ரேகை பார்க்கக்கூடியவர்களைக் கூட பிச்சைக்காரர்கள் இனத்தில் சேர்த்து தடை செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். அதற்கு தக்க வகையில் இந்த சட்டத்தைத் திருத்தி பிச்சை எடுக்கின்ற சூழ்நிலை உண்டாகாது தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று கூறிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்காக இந்த திருத்த மசோதா கொண்டு வரப்பட்டு இருக்கிறது 1945-ம் ஆண்டிலேயே அன்னியர்கள் ஆட்சியிலேயே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. சட்டம் இருந்ததே ஒழிய அந்தச் சட்டத்தை நடைமுறையில் கொண்டு வரவில்லை. அதன் பிறகு இத்தனை ஆண்டுகளுக்கு பின்னால் கூட திருத்தச் சட்டம் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முன் பிச்சைக்காரர்கள் சூழ்நிலையின் காரணமாக பிச்சை எடுக்கும் நிலை ஏற்படாமல் இருப்பதற்கான வழி வகைகளை நமது அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்றைக்கு நாட்டு மக்கள் எதிர் பார்க்கக்கூடிய பிரச்னை எங்களைப் பொறுத்த அளவில் பிச்சை எடுப்பதையே தொழிலாக வைத்துக் கொண்டிருப்பவர்களை விட்டு வைக்கக்கூடாது. வறுமையின் காரணமாக பிச்சை எடுக்கிறவர்கள் ஜனநாயக சோஷலிச அமைப்பில் பிச்சை எடுக்க வேண்டிய நிலை இல்லாதவாறு வாழ்க்கையில் வளம் பெற அரசாங்கம் தக்க வழிகளை மேற்கொள்ள கடமைப் பட்டு இருக்கிறது. அத்தகைய ஒரு சூழ்நிலையை கொண்டு வருவதற்கு கடந்த 2, 3 ஐந்தாண்டுத்திட்டங்களில் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளாத காரணமாகத்தான் இன்றைய தினம் நாட்டில் பிச்சைக்காரர்கள் இருக்கும்படியான சூழ்நிலையை





இருக்கிறது என்று சொல்லி இதை நாங்கள் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. இந்த சட்டத்திலே பிச்சைக்காரர்களைப்பற்றி விளக்கியிருக்கிறார்கள். ஏற்கெனவே உள்ள அந்தச் சட்டத்தில் அந்த டெபெனிஷன் இல்லை. அந்த டெபெனிஷன் கீழ் ஒரு ப்ரொவைசோ இப்பொழுது கொடுத்திருக்கிறார்கள். அதிலே நம் சர்க்கார் இந்தச் சட்டத்தை எப்படி நடைமுறைக்கு கொண்டு வரும் என்பதற்கு எத்தனை அதிகாரத்தை நமது சர்க்கார் எடுத்துக்கொள்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெக்கிங் என்றால் என்ன என்பதை விளக்கி இருக்கக்கூடிய இடம் அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த டெபெனிஷனை அரசாங்கம் கொடுத்து விட்டு அதில் இன்ன பகுதியை விலக்கிவிடலாம் என்று வைத்துக் கொண்டால் அது அவ்வளவு பொருத்தமாகாது என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல 9-வது பிரிவிலே அன்னியன் கொண்டு வந்த சட்டத்திலேயே இந்த வார்த்தை காணப்படுகிறது.

but does not include soliciting or receiving money, food or gift for such purpose as may be prescribed.

பிச்சை எடுப்பதை தண்டிக்கலாம். அரசாங்கம் நினைத்தால் வொர்க் ஹவுசில் அவர்களைப் போடலாம் என்று போட்டிருக்கிறது. இந்தப் பிரிவு எந்த அளவுக்கு செயல் படுத்தலாமோ அந்த அளவுக்கு செயல்படும். அல்லது செயல் படாமல் இன்—ஆப்பரேஷனாக இருக்கக்கூடிய வாய்ப்பு இந்த ஒன்பதாவது பிரிவுக்கு இருக்கிறது. அப்படியின்றி மூன்றாவது பிரிவிலேயே இதையும் அமைத்து இதை நல்ல முறையில் செயல் படுத்துவதற்கு ஏற்ற வகையில் இது பயன்படும்படி அமைக்க வேண்டும் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் பெக்கிங் என்ற வகையில் வேறு சில இனங்களையும் சேர்த்தாக வேண்டும். குறிப்பாக ஜோஸ்யம் சொல்லுகிறார்கள். புலவர் சொல்வதைப் போல ரோடு ஓரங்களில் மட்டும் அல்ல, கைரேகை பார்க்கும் ஜோஸ்யர்கள் சட்டமன்ற விடுதிகளுக்கு வருகிறார்கள். அடுத்த முறை அமைச்சராக வர முடியுமா, சட்ட மன்ற பதவியையாவது நிலை நிறுத்திக்கொள்ள முடியுமா என்பதைப்பற்றி ஆருடம் தெரிந்து கொள்வதில் அங்கத்தினர்களுக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால் சட்ட மன்ற விடுதிக்கே இப்படி வருவதை தடுக்க வேண்டும் என்றால் இவர்களையும் கூட பிச்சைக்காரர்கள் ஜாபிதாவில் சேர்க்கவேண்டும். இது மத்திய சர்க்கார் இந்தியன் பீனல் கோடை திருத்தம் செய்தபோது இதையும் சேர்த்திருக்கிறது. ஆனால் நம் மாநில சர்க்காருக்கு ஆருடம் சொல்பவர்கள் மேல் ஏன் இவ்வளவு இரக்கம் வந்ததோ தெரியவில்லை. ஜோஸ்யம் கேட்பதிலே இவர்களுக்கு ஆர்வம் இருக்கலாம். ஆனால் பொது மக்களுக்கு தொல்லை தரத்தக்க வகையில் இதை நீடிப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே சமயத்தில் மூன்றாவது பிரிவியே 'செண்டன்ஸ்' பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 'ஆறு மாதம் சிறைத் தண்டனை'

என்று சொல்லியிருக்கிறார்கள். இது கடுமை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். பிச்சை எடுத்தால் ஜெயில் என்பதைப் பார்க்கவே பயப்படுவார்கள். ஆறு மாதம் என்பதை மூன்று மாதம் என்று திருத்திக் கொண்டால் நல்லது என்று கூறி, அமைச்சர் அவர்கள் இதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. கே. ஏ. மதியழகன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சுகாதார அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கிற வகையில் நானும் சில வார்த்தைகள் சொல்லலாம் என்று கருதுகிறேன். பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்காக ஏற்கெனவே உள்ள சட்டத்திற்குத் திருத்த மசோதா இன்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பேசிய கனம் மாதவன் அவர்களும், புலவர் கோவிந்தன் அவர்களும், திரு. கலியாணசுந்தரம் அவர்களும் குறிப்பிட்டது போல் இது சமுதாய வாழ்வில் மிக முக்கிய பிரச்சினையாகும். பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு பிச்சை எடுப்பதைத் தொழிலாக வைத்துக் கொண்டு இருப்பவர்களைத் தடுப்பதற்கு இன்று நாம் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம். விலைவாசி ஏற்றத்தைத் தடுப்பது, பிளாக் மார்க்கட்டைத் தடுப்பது போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டிய நாம் இன்றைய தினம் பிச்சையெடுப்பதைத் தடுப்பதற்குத் திருத்த மசோதா கொண்டு வரவேண்டிய நிலையிலே உள்ளோம். ஏற்கெனவே இதற்கென்று சட்டம் இருந்தது பல பேருக்குத் தெரியாது. ஏனென்றால் பிச்சையெடுப்பது கோயில்களின் அருகிலும், பஸ் ஸ்டாண்டுகளிலும், மற்றும் தெருக்களிலும் இவ்வளவு அதிகமான அளவுக்கு வளர்ந்திருக்கும் காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும், இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்த மசோதாகூட பிச்சையெடுத்தால் தண்டனை, அபராதம், என்ற அளவிலேதான் இருக்கிறதே தவிர, பிரச்சினையை உண்மையிலேயே அனுதாபத்துடன் கவனிப்பதாக இல்லை.

இந்த நிலைமைக்கு ஆட்சியிலுள்ளவர்கள் தவறு என்று மட்டும் சொல்லவில்லை நம்முடைய சமுதாயத்திற்கே இது ஒரு அறைகூவல் என்று சொல்வேன். ஜனநாயக சோஷலிசம் என்பதை நாம் ஏற்றுக்கொண்டு, நம்முடைய மிகச் சிறந்த தலைவர்களால் அது நிறைவேற்றப்பட்டு வருகிறது என்று சொல்லக்கூடிய இன்றுவரை பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்கள் பெருகி வருகிறார்கள் என்றால் அது சிந்தித்துப் பார்க்கத் தக்க ஒன்றாகும். இந்த நிலைமையை நீக்குவது சமுதாயத்தில் உள்ள பொது வாழ்வில் உள்ள ஒவ்வொருவருடைய பொறுப்பும் கடமையும் ஆகும். இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்த மசோதா அந்தப் பணியில் ஒரு சிறு அம்சம் என்றுதான் சொல்வேன். இதைப்பற்றிப் புலவர்கள் பாடியிருப்பது கனம் தட்சிணாமூர்த்தி அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.





இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக இவ்வுலகியற்றியான்,

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார். ஒருவன் பிச்சை எடுத்து வாழ வேண்டிய நிலைமை ஏற்பட்டால் இவ்வுலகத்தைப் படைத்த ஆண்டவனே ஒழியட்டும் என்று கூறுகிறார். எனக்கு புலவர்களைப் போல் அர்த்தங்கள் சொல்வதற்கு அதிகமாகத் தெரியாது. அப்படி இல்லாவிட்டால் அந்த நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற அரசன் அல்லது அரசாங்கம் ஒழியட்டும் என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். நம்முடைய நாட்டில் மத மௌடிக எண்ணங்களின் காரணமாகத்தான் இந்தப் பிச்சை எடுக்கும் நிலைமை நீடித்துக் கொண்டு வருகிறது. ஆகவே, பிச்சை எடுக்கும் நிலைமை நாட்டில் . இருப்பதற்கான அடிப்படையான காரணத்தை ஆராய்ந்து அதைப் போக்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும். நமது சுகாதார அமைச்சர் அவர்கள் இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிற சட்டத்தால் பெரிய பலன் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. ஏற்கனவே தூசு பிடித்திருந்த ஒரு மசோதாவைத் துடைத்து நம்முடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறார். நம்முடைய அரசியல் சட்டத்திலே கூறியிருப்பதை நான் கவனமூட்ட விரும்புகிறேன். அரசியல் சட்டத்தில்

"The State shall in particular direct its policy towards securing that the citizens, men and women equally, have the right to an adequate means of livlihood"

என்றும், நம்முடைய 'டைரக்டிவ் பிரின்சிபிள்' என்று சொல்லப்பட்ட நெறிமுறைக் கொள்கைகளில் 41-வது விதியாக—

The State shall, within the limits of its economic capacity and development make effective provison for securing the right to work, to education and to public assistance in cases of unemployment, old age, sickness and disablement and in other cases of undeserved want.

என்று நம்முடைய அரசியல் சட்டத்திலே எழுதி வைத்திருக்
கிறார்கள். 'ரைட் டு ஒர்க்' (**Right to work**)என்று எழுதி வைத்
திருக்கிறோமேதவிர அது எங்கே செயல்படுத்தப்பட்டிருக்கிறது?
ரஷ்யா போன்ற நாடுகளில் உழைக்க உரிமை அரசியல் சட்டத்தில்
" அடிப்படை உரிமைகள் " என்ற பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது.
நம்முடைய அரசியல் சட்டத்தில் அப்படி இல்லை. நம்முடைய
தொழில் அமைச்சர் அவர்கள் நான் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில்
சொல்லும்போது மூன்று லட்சம் பேர்கள் வேலைத் தேடித்தரும்
நிறுவனத்தில் மனுப் போட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள்.
ஒவ்வொரு தனி மனிதனுக்கும் உழைக்க உரிமை, வாழ உரிமை,
உண்ண உரிமை கொடுத்திருப்பதாக நமது அரசியல் சட்டத்தில்
நெறிமுறைக் கொள்கைகளிலே காணப்படுகிறதே தவிர, அது அடிப்
படை உரிமையில் சேர்க்கப்படாத காரணத்தால் இன்று பலர்
சோம்பேறிகளாக, திடகாத்திரர்கள் கூடப் பிச்சைக்காரர்களாக

இருக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம். மௌடிக சமுதாய எண்ணங்களினால்தான் இந்த நிலைமை நம்முடைய நாட்டிலே நீடித்துக் கொண்டிருக்கிறது. பிளேக் நோய், கொசுவால் ஏற்படுகிற மலேரியா நோய் இருக்கிறது என்றால் கொசுவைப் பிடித்துக் கொன்று விடுவதால் மலேரியா நோய் ஒழிக்கப்பட்டு விடாது. கொசுவின் உற்பத்திக்குக் காரணமான சூழ்நிலையை அறிந்து அதைப் போக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டால்தான் அதை ஒழிக்கமுடியும். அந்த அடிப்படையில் வறுமையை ஒழித்து சமதர்ம சமுதாயத்தை ஏற்படுத்தினால்தான் இவற்றிற்குப் பரிகாரம் காண முடியும். இதனை ஆட்சிபீடத்தில் உள்ளவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கூறி, நம்முடைய சுகாதார அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை முழு மனதுடன் வரவேற்கிறேன்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பிச்சை எடுப்பதைத் தடை செய்வதற்காகக் கொண்டு வரப் பட்டிருக்கிற திருத்த மசோதாவைப் பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த மசோதா உண்மையிலேயே வரவேற்கத்தக்க மசோதாதான். ஆனால் இந்த மசோதாவுக்கு, என்று வேலை இல்லை என்ற நிலைமை ஏற்படுகிறதோ அன்றுதான் இந்த நாட்டுக்கு நல்ல காலம் என்று நான் கூறுவேன். 'தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதி கூறினான். 'இல்லாதான் என்றொருவன் இனி இல்லை' என்ற நிலைமையைக் காண ஆசைப்பட்டான் கம்பன். ஆனால் வள்ளுவன் 'இரந்து உயிர் வாழும் நிலைமை ஒருவனுக்கு இருந்தால் இவ்வுலகை இயற்றியவனே கெடுக' என்றார். இவற்றிலிருந்து பிச்சையெடுப்பது சமுதாயத்தில் எவ்வளவு அவமானகரமானது என்று கருதப்பட்டது என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த நிலைமை ஒழிக்கப்பட வேண்டியதொன்று என்று கருதப்பட்டும் இன்னும் நாம் இதை ஒழிக்கவில்லையென்றால் எங்கோ தவறு இருக்கிறது என்றுதான் அர்த்தம். அந்தத் தவறைத் திருத்தி வழி காண்பது அரசாங்கத்தின் கடமை. பிச்சை எடுக்கின்ற நிலைமை நாட்டில் இல்லையென்று சொல்லும் அளவுக்கு நாட்டின் பொருளாதாரத்தை வளர்த்துத்தான் ஆகவேண்டும். ஆகவே, இப்போது கொண்டு வந்திருக்கிற திருத்த மசோதாவினால் முழுப்பரிகாரத்தையும் தேடமுடியுமா என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இப்போது கொண்டு வரப்பட்டுள்ள திருத்த மசோதா நல்ல எண்ணத்திலே கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாகப் பிச்சை எடுப்பவர்களைத் தடுப்பதற்கும், திடகாத்திரர்களாக இருப்பவர்கள் பிச்சை எடுத்தால் அவர்களைப் பிடித்து அவர்களை ஒர்க் ஹவுஸ்களுக்கு அனுப்பவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. நகரப் புறங்களில் நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஆங்காங்கு உட்கார்ந்து கொண்டு பிச்சை எடுத்துக்
12-00 noon கொண்டிருப்பதைப் பார்க்கவே வேதனையாக இருக்கிறது. ஏன்? கோட்டை வாசலுக்குள்ளே வரும்போது இருபுறமும் தொத்து நோய், தொழு





நோய் உள்ளவர்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. தொழு நோய், தொத்து நோய் உள்ளவர்களை பிச்சைக்காரர்கள் என்று பிடித்துப் போனால் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட் ஆறு மாதம் போடுகிறார்கள். அவன் உள்ளே சென்று ஆறு மாதங்கள் இருந்து விட்டு வெளியே வருகிறான். வெளியே வந்த பின் அவனை ஆதரிக்க ஆள் கிடையாது. மீண்டும் பிச்சை எடுக்கிறான். ஆக பிச்சை எடுப்பது, தண்டனை அடைந்து உள்ளே செல்வது, மீண்டும் வெளியே வந்து பிச்சை எடுப்பது என்று இப்படித்தான் நிலைமை இருக்கிறது. ஆகவே இந்தப் பிரச்னைக்கு முழுமையாக ஏதாவது பரிகாரம் காண முடியுமா என்று அரசாங்கம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஐ.ஜி. யோ அல்லது அரசாங்கமோ, குருடன், முடவன், வேலை செய்து பிழைக்க லாயக்கற்றவன் என்றிருப்பவர்களை பிடித்து விடுதியில் ஆயுள் காலம் வரை, தண்டனை காலம் தீர்ந்த பின்னரும் அங்கு இருக்க ஏற்பாடு செய்யலாம் என்றிருக்கிறது. அரசாங்கம் அல்லது ஐ.ஜி இப்படி உச்ச கட்டத்திற்கு நிலைமை எட்டினால்தான் அங்கு இருக்க முடியும். அதில் பலவித இடைஞ்சல்கள் இருக்கும். அது எட்ட காலம் ஆகும். ஆகவே தொத்து நோய், தொழு நோய், வேறு வேலைக்கு லாயக்கற்றவர்கள் இவர்கள் பிச்சை எடுத்து அவர்கள் தண்டிக்கப்பட்டால் அவர்கள் வெளியே வராமல் ஆயுள் காலம் வரை அவர்கள் விடுதியில் இருக்க ஏற்பாடு செய்தால் வருங்காலத்திலாவது பிச்சைக்காரத் தொழிலை நடத்துவதைத் தடுக்கலாம். பல பிச்சைக்காரர்களை நாம் ரோடுகளிலும், பஸ் ஸ்டாண்டுகளிலும் காண்கிறோம். அவர்கள் திடகாத்திரர்களோடு உறவாடுவதைக் காண்கிறோம், சிறு குழந்தைகளோடு உறவாடுவதைக் காண்கிறோம். ஒருவர் எச்சிலை மற்றவர் சாப்பிடுவதைக் காண்கிறோம். இதனால் குழந்தைகளுக்கும், திடகாத்திரர்களுக்கும் கூட இந்த தொத்து நோய் வருகிறது. அப்படியிருப்பதன் காரணமாக வருங்கால சந்ததியினர் பாதிக்கப்படுவார்கள். அதைத் தடுக்க வேண்டும். பிச்சை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று இருப்பவர்களையும் விடுதியில் இருப்பதற்கு வழி செய்து கொடுப்பது மிக அவசியம். இல்லாவிடில் பிழைக்க வழியில்லாதிருந்தால், ஆதரவற்றவர்களாகயிருந்தால் முதியோர் பென்ஷன் கொடுப்பது போல் அவர்களுக்கும் 20 ரூபாய் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு யாராவது அவர்களுக்கு உணவு கொடுக்க முன்வருவார்கள். பிச்சைக்கார விடுதிகளைச் சென்று பார்த்தோம். அங்கு தொழு நோய் உள்ளவர்களையும் அடைத்திருக்கிறார்கள். அங்கு தக்க மருத்துவ வசதி இல்லை. ஒருவரும் அங்கு வந்து தங்கள் உடல் நோய் தீர்ந்து வெளியே வந்ததாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆகவே இப்படி தொழு நோய் பிடித்தவர்கள், ஆதரவற்றவர்கள் இவர்கள் விடுதியில் இருப்பதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும். அவர்கள் வெளியே செல்லவேண்டுமென்றால் அவர்கள் மீண்டும் இந்தப் பிச்சைத் தொழிலில் ஈடுபடாத அளவில் இருக்கவேண்டும். உடல் உரம் இருந்தும் கூட சிலர் உழைக்க முன் வருவதில்லை. உழைக்க உரிமை உண்டு. ஆனால் உழைக்க மனது தேவை. இந்த உழைப்பு சிலருக்கு சுலபமாக இருக்கிறது.

நாள் ஒன்றுக்கு 2 அல்லது 3 ரூபாய் சம்பாதித்து விடலாம் பிச்சை எடுப்பதின் மூலம் என்று சிலர் கருதுகிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பிடித்து வொர்க் ஹவுஸுக்கு அனுப்பலாம். அவர்கள் மீண்டும், வெளியே வந்து பிச்சை எடுத்தால் கடுமையான தண்டனை கொடுத்திருக்கிறார்கள். உழைத்துப் பிழைக்க வேண்டும், அப்படி உழைத்துப் பிழைக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு ஏற்படவேண்டும். அதற்காகத்தான் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டுகள் முதல் ஏழு ஆண்டுகள் வரை போடலாம் என்றிருக்கிறது.

'If then is place in the workhouse or special houses'

என்றிருக்கிறது. விடுதியில் இடம் இருந்தால் பிடித்துக் கொண்டு போகலாம் என்ற நிலை இல்லாமல், உடல் உரம் படைத்தவர்கள் பிச்சை எடுப்பார்களேயானால் அவர்களை பிடித்துச் சென்று விடுதியில் வைத்து அவர்களிடம் உழைப்பை வாங்கி, வெளியே சென்றால் பிச்சை எடுப்பதில்லை என்ற உணர்ச்சியை அவர்களிடம் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்ய முடியாவிட்டால், அதற்கு வேண்டிய நிதி வசதியில்லை என்றால், அற நிலையங்கள் அதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் தர்ம உணர்ச்சி படைத்த பணக்காரர்கள் இதற்காக முன் வந்து உதவி செய்வது அவசியம். மாவட்டம் ஒன்றுக்கு குறைந்தளவு நான்கு வொர்க் ஹவுஸ்களும், நான்கு ஸ்பெஷல் ஹோம்ஸும் இருந்தால் தான் பிரச்னையைச் சமாளிக்க முடியும். பெரிய க்ஷேத்திரங்களில் தான் பிச்சை எடுப்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அக்கோவில்களில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை இவர்களுக்கு என்று ஒதுக்கி வைத்து இவர்களை பராமரிக்க செலவு செய்தால் அது பக்தர்களுக்குக்கூட ஓரளவு ப்ரீதியாக இருக்கும். திரு. மதியழகன் அவர்கள் கூறினார்கள், மௌடீகத்தால்தான் பிச்சை எடுக்கிறார்கள் என்று. நாம் நம் பொறுப்பை தட்டிக் கழிப்பது சரியல்ல. வறுமை காரணமாகத்தான் பிச்சை எடுக்கிறார்கள் என்பதை ஒத்துக்கொண்டு அதை எம்முறையில் தீர்ப்பது என்று பார்க்க வேண்டும். கொடுப்பவர்கள் மீது குற்றம் சொல்வதில் அர்த்தம் இல்லை. கொடுத்தாலும் வாங்க ஆள் இல்லை என்ற சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவது கஷ்டம்தான். அறநிலையங்களுக்குச் செல்லும்போது பிச்சைக்காரர்களுக்கு காசு போடாமல் பிச்சைக்காரர்கள் உதவி நிதி என்று ஒரு உண்டி வைத்து அதில் போடும்படி செய்து விட்டால், அந்தப் பணம் மூலம் நோய் வாய்ப்பட்ட பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைக்க வசதியாக இருக்கும். அதை வருகிற பக்தர்களும் ஏற்றுக்கொள்வார்கள். அரசாங்கத்திற்கும் பணக் கஷ்டம் குறையும். பிரச்னையையும் ஓரளவு தீர்த்து விட முடியும். ஆகவே நல்ல வருவாய் உள்ள அற நிலையங்கள் கட்டாயமாக பிச்சைக்கார விடுதிகள் ஆரம்பித்து தக்க உதவிகள் செய்ய தயாராயிருக்கவேண்டும் என்று அரசாங்கம் ஒரு உத்தரவு பிறப்பித்தால் ஓரளவு இப்பிரச்னையை அறநிலையங்கள் ஏற்றுக் கொள்ளும் என்று நினைக்கிறேன். இன்று கல்வி நிலையங்களுக்காக மனம் உவந்து பலர் பல லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து



கல்லூரிகள் ஆரம்பிக்கிறார்கள். அதேபோல் ஆதரவற்ற பிச்சைக்காரர்களுக்காக அப்படிப்பட்டவர்கள் உதவி செய்ய முன் வந்தால் அதை ஏற்றுக்கொள்ள அரசாங்கம் தயாராக இருக்கிறது என்ற நிலை இருந்தால் அந்தப் பணம் அரசாங்கத்திற்குப் போய் சேரும் என்பதினால் தாராளமாக பலர் உதவி செய்ய முன்வருவார்கள். சென்னை நகரில் சில கிருஸ்தவ மிஷன்கள் நன்கு நடத்தி வருகிறார்கள், சிலயிடங்களில் "லிட்டில் சிஸ்டர்ஸ் ஆப் தி புவர்", "ப்ரன்ட் இன் நீட் சொஸைட்டி" என்பவை நடத்தப்பட்டு வருகின்றன. வயதானவர்கள், வேலைக்கு லாயக்கில்லாதவர்கள், வீட்டிலிருந்து தொந்தரவு என்று விரட்டப்பட்டவர்கள் இவர்களுக்காக அழகான ஆசிரமம் போன்று வைத்து பராமரித்து வருவது பாராட்டத்தக்கது. அதைப் பார்த்து வந்தோம். அரசாங்கத்தைக் காட்டிலும் நான்-அபிஷியல் ஏஜன்ஸியிடம், சமூக சேவையில் அக்கறை உள்ளவர்களிடம் இந்த வேலையை ஒப்படைத்தால் அவர்கள் மனசாட்சிக்கு பயந்துகொண்டு நடந்து கொள்வார்கள். தயாசதன் என்ற விடுதி நடந்து கொண்டிருக்கிறது. நோய்வாய்ப்பட்டிருக்கும் பிச்சைக்காரர்களையும் அவர்களுக்காக பிச்சை எடுக்கும் பிள்ளைகளையும் பராமரிப்பது சமுதாயத்தின் கடமை. அற உணர்ச்சி படைத்த இயக்கங்கள் இப்படி உதவ முன் வருமானால் அவற்றிற்கு தக்க ஆதரவு தர அரசாங்கம் தயங்கக் கூடாது. பிச்சைக்காரர்கள் டெபனிஷனை விரித்திருக்கிறோம். திரு. மாதவன் அவர்கள் சொன்னார்கள், கிளி ஜோஸ்யம் சொல்பவர்கள், கை பார்க்கிறவர்கள், "பார்சூன் டெல்லர்கள்" இவர்களை உள்ளே அனுப்பினால் என்னவென்று கேட்டார்கள். குறுகிய அளவில் இருக்கும்போதே எந்த அளவிற்கு இப்பிரச்னையைச் சமாளிக்க முடியும் என்றிருக்க எல்லோரையும் இதில் சேர்ப்பதென்றால் என்னாவது? கிளி வைத்திருப்பவன் கையை நீட்டினால் சொல்கிறான். கையை நீட்டாவிட்டால் தொல்லை கொடுக்க மாட்டான். அப்படி தொல்லை கொடுத்தால் போலீஸுக்கு போன் செய்தால் அவர்கள் பிடித்துக் செல்வார்கள்.

(கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: "பார்சூன் டெல்லர் தான்" கை நீட்டுகிறான் என்று சொல்கிறார்.)

திரு. மாதவன் அவர்கள் அடுத்த முறை நான் சட்டசபை அங்கத்தினராக வருவேனா இல்லையா என்று கேட்டு இவர் கையை நீட்டினால்தான், பலன் சொல்லிவிட்டு அவன் கையை நீட்டுவான். மூர்மார்க்கட்டில் ரஷ்யன் சர்க்கஸில் இல்லாத வித்தையைக் கூட காட்டுகிறார்கள். கடைசியில் 2 அல்லது 4 அணா வாங்கிப் போட்டு கொள்வான். கொட்டகை போட்டு செய்தால் 5 அல்லது 10 ரூ. வாங்குவான்.

'Soliciting or receiving alms in a public place, whether under the pretence of singing, dancing, performing tricks or selling articles or otherwise'

என்று போட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லும் போது It is only pretence of singing என்று சொல்வார்கள். உண்மையாக இருந்தால் பிடிக்க மாட்டோம்,

பிச்சைக்காக செய்தால் உள்ளே தள்ளி விடுவோம் என்று சொல்லலாம். இதை நிர்ணயிப்பது நம் கையில் இல்லை. ஒரு போலீஸ்காரன் நினைத்தால் உள்ளே அடைத்து விடலாம். எனக்குத் தெரிந்த வரையில் நல்ல வித்தை இல்லை என்றால் யார் தடுக்க முடியும்? ஆக, அதை அமுல் நடத்துவதில் கஷ்டம் இருக்கிறது. அதே போன்று, மகமதியர் மதத்தில் சில பேர்கள் பக்கிரிகளாக இருந்து வருகிறார்கள். இவர்கள் குடும்பத்திலுள்ள ஒருவர் பக்கிரியாக மாறவேண்டும் என்ற மதக்கோட்பாடு இருக்கிறது. அந்த முறையில் அவர்கள் பிச்சை எடுக்க முன் வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட பத்து பேர்களை எங்கள் பக்கத்தில் உள்ளே அடைத்துவிட்டார்கள். இவ்விதம் உள்ளே அடைத்து விட்டால் பின்னால் அவர்கள் பிராயசித்தம் செய்யவேண்டும். இவ்விதமான பல கஷ்டங்கள் இருக்கின்றன. முதலாவதாக சென்னைச் சட்டத்தில் குறுகியதாக இருந்தது. பம்பாய் சட்டத்தில் தான் விரிவாக இருந்தது. ஆகவே இந்த விரிவான அளவில் நாமும் கொண்டு வருவதால் பல கஷ்டங்கள் ஏற்படலாம் என்று நான் நினைக்கிறேன். இப்போது நம்மிடத்தில் இருக்கக் கூடிய வொர்க்ஸ்-ஹோமில் போதிய இடம் இல்லாமல் இருக்கிறது. இந்த நிலைமையில் கிளி ஜோஸ்யம் சொல்லுகின்றவர்களையும், எட்டயபுரம் ஜோஸ்யம் சொல்லுகின்றவர்களையும், பக்கிரிகளையும் பிடித்துக்கொண்டு போனால் அதற்கு எங்கே இடமிருக்கிறது? ஆகவே இந்த பிரச்னையை தீர்க்கின்ற முறையில் குறுகிய அளவிலேயே "பெக்கிங்" என்பதை வைத்துக்கொண்டு நிலைமையை சமாளித்துக்கொள்ள முடியும். அப்படியில்லாமல் . .

'Soliciting or receiving alms in a public place, whether under the pretence of singing, dancing, performing tricks or selling articles or otherwise'

என்றெல்லாம் சட்டத்தை கொண்டு வந்தால் நிலைமையை சமாளிப்பதற்கு கஷ்டமாகிவிடும். பாவம், குரங்கை வைத்துக்கொண்டு வயிறு பிழைப்பவர்களையும், நரிக்குறவர்களையும், மதத்தின் பேரால் பிச்சை எடுக்கின்ற பக்கிரி போன்றவர்களையும், அவையில் ஏறி பாடுவதற்கு அதிர்ஷ்டம் கிடைக்காமல் தெருவிலே நின்று திறமையாக பாடுகின்ற பாடகர்களையும், மூர்மார்க்கட்டில் நின்று கொண்டு தங்களுடைய திறமைகளை காட்டிக்கொண்டிருப்பவர்களையும் பிடித்துக்கொண்டு உள்ளே அடைப்போமானால், பெரிய அவல நிலை தான் ஏற்படும் என்று நான் அஞ்சுகிறேன். ஆகவே "பெக்கிங்" என்பதில் இருக்கக்கூடிய "டெஃபினிஷனை"-பற்றி மாற்றவேண்டும் என்று செலக்ட் கமிட்டியிலும் வாதாடினேன். என்னுடைய குரல் தனிக்குரலாக இருந்ததால் நான் வெற்றி பெற முடியவில்லை. ஆகவே குறுகிய அளவோடு இந்த பிரிவை நிறுத்தி விட்டு, பாடுகின்றவர்கள், நடிக்கின்றவர்கள், டிரிக்ஸ் செய்கின்றவர்கள், பூம் பூம் மாடுகளை ஓட்டிக் கொண்டு வருகின்றவர்கள் இவர்களை எல்லாம் பிடிக்கக்கூடிய அளவில் போடக் கூடாது. இல்லாவிட்டால் போலீஸ்காரர்கள் இதை அமல் நடத்தும்போது பலவிதமான கஷ்டங்கள் ஏற்படும். பொதுவாக எல்லோருமே தன்னிடத்தில் இருக்கின்ற ஒரு தொழிலை அல்லது திறமையை



வெளிப்படுத்தித்தான் கூலியை பெறுகின்றார்கள். அந்த முறையில் கலைகளை வெளிப்படுத்துகின்ற முறையை கொலை செய்கின்ற அளவில், நாம் இந்தப் பிரிவுக்கு சட்டத்தில் விரிவான அளவு தேவையில்லை, குறுகிய அளவிலேயே வைத்திருந்தால் நல்ல முறையிலும் இருக்கும், சாலச் சிறந்ததாகவும் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற லோக்கல் பாடீஸ், அற நிலையங்கள், இவைகள் எல்லாம் அதிகமான அளவில் விடுதிகளை ஏற்படுத்துவதில் அதிக அக்கரை காட்டவேண்டும். சென்னை நகராண்மைக் கழகத்தைப் பொறுத்தவரை, நகராண்மைக் கழகம் நடத்துகின்ற விடுதியைப்போய் பார்த்தோம். அதில் நல்ல உடல் உரம் பெற்றிருக்கின்றவர்களையும், நோயாளிகளையும் ஒன்றாகச் சேர்த்து வைத்திருக்கிறார்கள். சுகாதாரத்தையே காக்கவேண்டிய இவர்கள் ஏன் இப்படி வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதுவும் நகரத்தில் மத்தியில் வைத்து, மற்றவர்களுக்கும் எளிதில் பரவும்படியான முறையில் வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி கனம் சுகாதார அமைச்சர் அவர்கள் வேகமாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். நோயாளிகளை சேர்த்து வைத்து நல்ல மனிதர்களையும் கெடுப்பது நல்லதல்ல. சுகாதாரத்தை கடைபிடிக்க வேண்டிய நகராண்மைக் கழகமே இவ்விதம் நடத்துகிறது என்றால் வேறு யார் சுகாதாரத்தை கடைபிடிக்க முடியும்? நாங்கள் அங்கே போய் பார்த்தபோது, அங்குள்ள நோயாளிகளுக்கு கையில் க்ளௌஸ் கூட கொடுக்கப்படவில்லை. இவ்விதமான விடுதிகளை வைத்திருப்பதை விட மூடிவிடுவது நல்லது என்று நினைக்கிறேன். இந்த இடத்தில் நோயாளிகளுக்கு எந்த விதமான மருந்தும் கொடுக்கப்படுவதாக தெரியவில்லை. இந்த நிலையில் நாம் மேலும் பலரை பிச்சைக்காரர்கள் என்று பிடித்துக்கொண்டு போய் உள்ளே அடைத்தால் எப்படி சமாளிப்பது? ஆகவே அரசாங்கம் இதில் அதிக அக்கரை காட்டி, அதிகமான விடுதிகளை திறப்பதற்கு முன்வரவேண்டும். அதோடு இதற்கான வேலைகளை அரசாங்கத்தால் செய்ய முடியவில்லை என்றால், இதற்காக தயாராக இருக்கின்ற சேவகர்களிடம் இந்த வேலையை ஒப்படைத்தாலும் நல்லது என்பதையும் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற பிச்சைக்காரர்கள் ஒழிப்புச் சட்டம் மிகத் தீவிரமாக கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம், தைரியமான முயற்சி. இதை அமல் நடத்துவதில் அரசாங்கம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். திருமதி அனந்தநாயகி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல் சட்டத்திலிருக்கின்ற சில பகுதிகள் மத உணர்ச்சியை புண்படுத்தக்கூடிய நிலைமையில் அமையுமோ என்று நான் அஞ்சுகிறேன். [illegible] கள், அற நிலையங்கள், இவைகளில் பிச்சை கொடுப்பது [illegible] நாம் வைத்திருக்கிறோம். இந்தப் பிரிவை அமல் நடத்தும்போது

[திரு. எம். எஸ். செல்வராஜன்] [20th July 1964

புலவர் கோவிந்தன் அவர்கள் சொன்னது போல் தீவிரமாக அமுல் நடத்தினால் பிச்சை கொடுக்கவேண்டும் என்று அனுஷ்டானமாக வைத்திருப்பவர்கள் இருக்கும்போது, ஏற்பதற்கும் யாரேனும் இருந்து ஆகவேண்டியிருக்கிறது. இதை அமல் நடத்தும்போது நிலைமை எங்கே கொண்டு போய்விடும் என்று நான் அஞ்சுகின்றேன். சில பகுதிகளில் சிலர் கடமைகளை ஆற்றவேண்டும், தங்களுடைய மூதாதையர்களுக்கு சந்ததியார்கள் சில கடமைகளை ஆற்ற வேண்டும் என்ற அடிப்படையில் கோவில்களில், சில குறிப்பிட்ட இடங்களில் சென்று தர்மம் கொடுப்பது வழக்கம். இந்த வழக்கம் இப்போதும் பலரால் கடைபிடிக்கப் பட்டு வருகிறது. இஸ்லாமிய மதத்தில் தனது வருமானத்தில் ஒரு பங்கை கட்டாயமாக தர்மத்திற்காக செலவு செய்யவேண்டும் என்ற கோட்பாடு இருந்து வருகிறது. இதையெல்லாம் நினைத்துப்பார்க்கின்ற நேரத்தில், வெறும் நியூஸென்ஸ் என்ற அடிப்படையில் மட்டும் வைத்துக் கொண்டு இந்தச் சட்டத்தை எப்படி அமல் நடத்த முடியும் என்பதுதான் எனது சந்தேகம். நரிக்குறவர்கள், குறவர்கள் இவர்களைப் போன்றவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுப்பதற்காகவும், இன்னும் பல அபிவிருத்திகளை செய்து கொடுப்பதற்காகவும் பல முயற்சிகள் அரசாங்கத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. அவர்கள் என்றென்றைக்கும் நாடோடிகளாக அலைந்து கொண்டிருப்பதற்குத்தான் விரும்புகின்றனர். நிலையாக ஓரிடத்தில் அமர்வது என்பதும் மிகவும் கஷ்டமான காரியம். ஆகவே பிச்சை எடுக்கிற நிலைமையில் இருக்கின்றவர்களை எல்லாம் வொர்க்ஸ் ஹோமில் கொண்டுபோய் விட்டுவிடுவதால் மட்டும் நிலைமை சரியாகிவிடுமா என்பதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை இரண்டாகப் பிரித்துக்கொண்டால் இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் ஓரளவுக்கு நிறைவேறுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஒன்று, சோம்பேறிகள், வெறும் வயிறு பிழைப்பதற்காக இது ஏற்ற இடம் என்று கருதக்கூடும். அதே நேரத்தில் வியாதியஸ்தர்கள், அங்கஹீனமானவர்கள், உழைப்பதற்கு சக்தியற்றவர்கள் இவர்களுக்கெல்லாம், நாம் அமைக்கவேண்டும் என்று கருதக்கூடிய விடுதிகள் சிகிச்சை பெறக்கூடிய இடமாகவும் அமையக்கூடும், அவர்கள் நினைத்தால் கூட சிகிச்சை செய்ய முடியாது, அந்த நிலைமையில் எந்தவிதமான செலவும் இல்லாமல் தனக்கு ஏற்பட்டிருக்கின்ற பிணியை போக்குவதற்கு இந்த சட்டத்தின் மூலமாக ஏற்படுகின்ற வசதிகள் உதவிபுரியக்கூடும் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் சோம்பேறிகளாக இருக்கின்றவர்களுக்கும் பிச்சை எடுக்கவேண்டும் என்ற உணர்ச்சியையும் தடுக்கும் அளவுக்கு நாம் மாறுதல் செய்தாக வேண்டும். நாம் இயற்றியிருக்கிற சிற்சில சட்டங்கள் செயலற்றுப் போய்விடுகின்றன. அதாவது மத சம்பந்தமான அனுஷ்டானங்களோடு சம்பந்தப்பட்டிருக்கின்ற சில சட்டத்திட்டங்கள் செயலற்றதாகிவிடுகிறது. சாதாரணமாக கோவில் வட்டாரத்தில் பலியிடக்கூடாது என்று நாம் சட்டம் போட்டிருக்கிறோம். ஆனால் ஒரு சிறிய இடத்தில் கூட இதை நாம்



20th July 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

சரியான அளவுக்கு அமல் நடத்த முடிவதில்லை. மத அனுஷ்டானங்கள் எல்லாம் அந்த அளவுக்கு மக்களிடத்தில் வேரூன்றி போய் இருக்கிறது. இந்த நிலைமையில் எந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை அமல் நடத்த முடியும் என்பதைத்தான் நாம் ஆலோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாக கிராமப் பகுதிகளில் காக்காய்க்கு சாப்பாடு போட்ட பின்னால் தான், தான் உண்பது என்கின்ற நிலைமை இப்போதும் இருந்து வருகிறது. ஈய ஒரு கையிருந்தால் பெற்றுக்கொள்வதற்கும் ஒரு கரம் இருந்தாக வேண்டும் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே "பிச்சை எடுப்பது" என்பதற்கு அதிகமான அளவில் பொருள் விஸ்தரிப்பு இல்லாமல் சில குறிப்பிட்ட அளவுக்கு மட்டும் சட்டத்தை வைத்துக்கொண்டால், நல்லது என்று நான் கருதுகிறேன்.

ஆலயங்களில், திருமதி அனந்தநாயகி அவர்கள் சுட்டிக் காட்டியது ஒரு நல்ல குறிப்பு என்று கருதுகிறேன், சிலருக்கு தர்மம் கொடுத்துத்தான் ஆகவேண்டும், ஏழை எளியவர்களுக்கு கொடுத்துத்தான் ஆகவேண்டும், அங்கங்களை இழந்தவர்களுக்கு தர்மம் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்ற எண்ணம் உடையவர்கள் உண்டு. அந்த முறையில் முன்னதாகவே மனதிலே சங்கல்பம் கூட செய்து கொள்ளுவார்கள். அத்தகையவர்களுக்கு ஏற்றாற்போல 'சாரிட்டி பாக்ஸ்' என்று அந்த இடங்களில் வைத்து, அத்தகைய தர்மம் ஏற்றுக்கொள்ளும் இடம், இதில் சேர்க்கும் பணமானது அத்தகைய ஏழை எளியவர்களுடைய நல்வாழ்வுக்காக கொடுக்கப்படும் என்ற நிலைமையை உண்டுபண்ணுவது நல்லது. நான் சில மாதங்களுக்கு முன் ரிஷிகேஷம் ஹரித்துவார் போயிருந்தேன். அந்த ஊர்களுக்குப் பல பேர்கள் பல தேசங்களிலிருந்தும் வருகிறார்கள். அங்கு இருக்கக் கூடிய தொழுநோய்க்காரர்கள், மற்ற நோயாளிகளைப் பொறுத்த வரையில் ராஜ்ய அரசாங்கம் சமீபத்திலே திட்டமிட்டு, பில்கிரிம் டாக்ஸ் போல டாக்ஸ் விதித்து அதைக் கொண்டு அவர்கள் பராமரிப்பை ஏற்றுக்கொள்கிறார்கள். அந்த அளவுக்கு நாம் இங்கே பரிசீலிக்கலாம்.

கிராமத்தில் இருக்கும் நடன ஆடல் பாடல் கோஷ்டிகள் சிறு ஆர்ட்டிஸான் கலைஞர்கள் மாதிரி இருந்து கிராமத்தில் உள்ள மக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்துவதற்கு இச்சட்டத்தால் கெடுதல் ஏற்படுமோ என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டத்தை வேகமாக விஸ்தரிப்பதன் காரணமாக உத்தியோகஸ்தர்கள் தங்களுக்கு ஏதோ அதிகாரம் இருக்கிறது என்று எண்ணிக்கொண்டு அதிக சிரமத்திற்கு அவர்களை ஆளாக்கி விட்டு, எந்த அளவுக்கு அதை முறையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமோ அந்த அளவுக்கு மீறிப் போகாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சுட்டிக் காட்டியபடி சர்க்கார் என்றால் 'எல்லாவற்றிற்கும் சர்க்கார்' என்று இருப்பது கூடாது. 'லெஸ் கவர்ன்மெண்ட்' என்ற மாதிரிதான் இருக்க

வேண்டும். சமீபத்திலே திரு. ஜெயப்ரகாஷ் நாராயணன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள், அவர்களை நினைத்துத்தான் கனம் அங்கத்தினர் சொன்னார் என்று கருதுகிறேன். அரசாங்கத்தின் பொறுப்பு குறையவேண்டும். அப்போதுதான் மக்களுடைய மனத்தரம் உயர்ந்து மக்கள் பொறுப்பு அதிகம் ஏற்படும். அந்த அளவுக்கு அரசாங்கம் தன்னுடைய அதிகார வரம்பைச் சுருக்கி, மக்களுடைய மனத்தரம் உயர, சமுதாயத்தின் தரம் உயர, இந்த சட்டம் உபயோகமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த முறையில் மக்கள் மனத்தரம் உயர, சமுதாயத்தின் தரம் உயர இந்தச் சட்டம் வரவேற்கத் தகுந்தது. இதை அமல் நடத்துவதிலே மிக ஜாக்கிரதை வேண்டுமென்று சுட்டிக்காட்டி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. இரா. நெடுஞ்செழியன்: மதிப்புக்குரிய சட்ட மன்ற துணைத் தலைவர் அவர்களே, பொது நலத் துறை அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ள பிச்சை ஒழிப்பு திருத்த மசோதாவைப் பற்றி, அதை ஆதரித்துச் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இந்த பிச்சை ஒழிப்புச் சட்டம் வந்து நீண்ட நாள் ஆகியிருந்தாலும், அது இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படாமலேயே இருந்து வந்திருக்கிறது என்பதைத்தான் மன்ற உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்தார்கள். பிச்சை ஒழிப்பு பற்றிய கருத்துக்கள் பன்னெடுங்காலமாக இந்த நாட்டில் வலியுறுத்தப்பட்டு வந்த தன்மையை பல உறுப்பினர்களும் சுட்டிக் காட்டினார்கள். நமது ஆன்றோர்களும், சான்றோர்களும், புலவர் பெருமக்களும் கூட பிச்சை எடுப்பது இழிவு, பிச்சை கொடுப்பதும் இழிவு, பிச்சை எடுப்பதை அனுமதிப்பவர்களுக்கும் இழிவு, பிச்சை எடுப்பது சமுதாயத்திற்கே இழிவு, நாட்டுக்கே இழிவு என்று கருதி, சட்டத்தின் மூலமாக இதைத் தீர்க்கவேண்டிய கட்டம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் சான்றோர்களும் ஆன்றோர்களும் நீதி நெறியை வற்புறுத்தியதன் மூலமாக, பிச்சை ஒழிப்பை வற்புறுத்தி வந்தார்கள். அந்த அடிப்படையில் 'ஏற்பது இகழ்ச்சி' என்று சொல்லிப் பார்த்தார்கள். திருவள்ளுவர் கூட, மன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல—

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்ற முறையில் பிச்சை எடுக்கிறவர்களுக்கு இழிவு என்பது மட்டுமல்லாமல், பிச்சை எடுப்பதை அனுமதிக்கும் தன்மையே கண்டிக்கப்படவேண்டிய ஒன்று என்று அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொன்னார்கள். பிச்சை எடுப்பது இழிவு தருகிற ஒன்று என்று சொல்லும்போது—

"ஆவிற்கு நீரென்றிரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்த தில்"





என்ற முறையில் இன்னும் கடுமையாக இன்னொரு குறளில் வலியுறுத்துகிறார். தங்களுக்கு வேண்டுமென்று பிச்சை எடுக்காவிட்டாலும், ஒரு பசு நீர் இல்லாமல் வரட்சியால் வாடுகிறது என்று அதற்கு நீர் வேண்டுமென்று ஒருவன் மற்றொருவனிடத்தில் நீர் கேட்டாலும், இதை விட இழிவு தருகிற வேறு ஒன்று இல்லை என்று அவ்வளவு கடுமையாகச் சொல்லியிருக்கிறார். பிச்சை எடுப்பது என்பது இழிவு தரத்தக்க செயல் என்று சொல்லி வந்தாலும் பல நூறு ஆண்டுகளாக பிச்சை எடுப்பது இருந்து வருகிறது. நீதி நெறி மூலமாக, அற நெறி மூலமாக திருத்துகிற முயற்சி தோல்வியுற்ற அத்தகைய நிலையில் சட்டத்தின் மூலமாகத் தடுத்து நிறுத்த வேண்டிய அத்தகைய கட்டம் ஏற்பட்டது. சட்டம் இயற்றினாலும், எனக்கு முன்னால் பேசிய மன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியது போல, சரிவர அமல் நடத்தப்படாத காரணத்தினால் பிச்சை எடுக்கும் தொழில் பரவி வந்திருக்கிற தன்மையைப் பார்த்திருக்கிறோம். இந்த முறையில் பிச்சை எடுக்கிறவர்கள் மூன்று தரப்பினராக இருப்பதைக் காண்கிறோம். அங்கஹீனப் பட்டு, உறுப்புகள் இழந்து எந்த வேலையும் சரிவரச் செய்ய முடியாத நிலையில், ஆதரிப்போரும், அரவணைப்போரும், அற்ற நிலையில் பிச்சை எடுத்துத்தான் தங்கள் வாழ்க்கையை நடத்தவேண்டிய கட்டாயத்திற்குச் சில அங்கஹீனர்கள் வருகிறார்கள். மற்றொன்று தொழு நோய் பிடித்து, வேறு நீங்கா நோய் பிடித்து, வேறு எந்தத் தொழிலும் செய்ய முடியாத நிலையில் இருப்பவர்களும் இந்தத் தொழில் மூலமாகத்தான் வாழ்க்கையை நடத்திக் கொள்ள வேண்டும் என்று பிச்சை எடுக்கும் கட்டாயத்திற்கு வந்துள்ளவர்கள் இருக்கிறார்கள். இன்னும் சிலர் வறுமை காரணமாக, வேறு எந்தத் தொழிலும் கிடைக்காது, இந்தத் தொழிலில் ஈடுபட்டு தங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கு பிச்சை எடுக்கும் கட்டாயத்திற்கு ஆளாகின்றார்கள். இன்னும் சிலர், வேறு எந்தத் தொழிலாக இருந்தாலும் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டும், உடல் உழைப்பு வேண்டும், அதன் மூலம் பொருள் ஈட்டி வாழ்வதை விட இந்தத் தொழிலில் எளிதாகவும் வருவாய் தருவதாகவும் இருக்கிற தொழில் என்று இந்த பிச்சை எடுக்கிற தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த முறையில் மூன்று தரப்பினர்கள் இருக்கிறார்கள். அதைக் கண்டறிந்து, தடுத்து நிறுத்த தக்க நடவடிக்கைகளை அரசினர் மேற்கொள்ள இருக்கிறார்கள். அண்மையில் கூட நான் செய்தித்தாளில் பார்த்ததாக ஞாபகம், சைனா பஜாரில் ஒருவர் பிச்சை எடுத்து 3,000 அல்லது 4,000 ரூபாய் சேர்த்து வைத்திருப்பதாகச் செய்தி வந்தது. வேறு தொழிலில் ஈடுபட்டு இருக்கக் கூடியவர்களை விட இந்தத் தொழிலில் சேமிப்புக் கூடி வைத்துக்கொள்ள இயலுகின்றது என்று இதைத் திரும்பத் திரும்பச் செய்கிறார்கள் என்று கண்டிருக்கிறோம். இப்போது அரசினர் முயற்சி எடுத்துத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலையில் இருக்கிறோம். இப்போது மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னது போல பிச்சை எடுப்பது என்பது பிச்சை எடுக்கிறவர்களுக்கு மட்டும் இழிவு தருகிறது என்பது மட்டுமல்லாமல், சமுதாயத்திற்கே இழிவு தருகிறது, நாட்டுக்கே

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]* [20th July 1964

இழிவு தருகிறது, வெளிநாட்டிலிருந்து வருகிறவர்கள் சைனா பஜார் போன்ற சாலைகளில் செல்லுகிறபோது அவர்களைச் சுற்றிக் கொண்டு அவர்களுக்கு அருவருப்பு ஏற்படக்கூடிய நிலையில், அவர்களை விட்டு நீங்காத அளவுக்கு அவர்களுக்குத் தொந்தரவுகொடுத்து நாமே கூட அந்த முறையில் அருவருப்பு அடையும் அத்தகைய காட்சியைப் பார்க்கிறோம். இது நாட்டுக்கு இழிவு தருகிற அத்தகைய காட்சியாகும். இதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்றால், இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறவர்களை மாற்றித் தீரவேண்டும். மாற்றித் தீரவேண்டும் என்று சொல்லும்போது அவர்களை வேறு வேலையில் ஈடுபடுத்தும் அளவுக்குத் தனியாக வைத்து, உடல் உழைப்பு உள்ளவர்களுடைய ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்தி அதன் மூலமாக வருமானம் தேடுவதன் மூலமாகவும், பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபடுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுப்பதன் மூலமாகவும் தடுத்து நிறுத்த முடியும். பெரிய நகரங்களிலும், மாவட்டங்களிலும் இத்தகைய பிச்சைக்காரர்கள் கண்ணில் படாத அளவுக்கு ஆங்காங்கு தொழிலகங்கள் அமைத்துத் தீரவேண்டும். பிச்சை எடுப்பதற்கென்று வெளியில் செல்லாதவாறு உடல் உழைப்பு, ஆற்றல், அறிவு மூலமாக; ஆற்றலைப் பயன்படுத்தி, தொழில் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் எதிர் காலத்தில் செம்மையான வாழ்க்கை நடத்த திட்டம் தீவிரமாகத் தீட்டப்படவேண்டும். அரசினர் முதலீடு செய்து தொழிலகங்கள் அமைக்க, பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க பெரும் தொகை செலவு செய்ய இயலாது என்றாலும், கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சொல்லியது போல நிறைந்த வருமானம் இருக்கிற கோவில்களிலிருந்து, மடாலயங்களிலிருந்து வழிவகை செய்து அவற்றின் மூலமாக வருமானம் கிடைக்கக் கூடிய அளவுக்கு தொழிலில் ஈடுபடுகிறவர்களைக் காப்பாற்ற வழிவகை செய்ய இயலும். அந்த அளவுக்கு இந்தச் சட்டத்தை தீவிரப்படுத்த முன் வருதல் வேண்டும். சட்டம் தீவிரமாக ஆக்கப்பட்டால்தான் இந்தத் தொழிலில் ஈடுபடுவோர்களின் எண்ணிக்கை குறையும். 'பஞ்சத்துக்கு ஆண்டியா, பரம்பரை ஆண்டியா' என்று ஒரு பழமொழி உண்டு. அந்த முறையில் பரம்பரையாக பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களும் உண்டு. பஞ்சத்திற்காக ஈடுபட்டு ஒருவர் ஒருவராக பிச்சை எடுப்பது மாறி குடும்பமே, தாய் தந்தை, பிள்ளைகள் நான்கு பேர்கள் சேர்ந்து பிச்சை எடுக்கும் நிலைமை வந்திருக்கிறது. இந்தத் தொழிலில் வசதி இருக்கிறது, வாய்ப்பு இருக்கிறது என்ற நிலைமை ஏற்படுமானால் ஊரே வருகிற அளவுக்கு வருமோ நிலைமை என்று அஞ்சத் தக்க அளவுக்கு இருக்கிறது.
12-30 p.m. இந்த நிலையைத் தடுத்து நிறுத்தி, இந்தத் தொழிலினால் பிழைக்க முடியாது, வருமானம் கிடைக்காது என்ற அளவுக்கு இதை அமலுக்குக் கொண்டுவரவேண்டும். அப்படி அமலுக்குக் கொண்டு வரவேண்டுமானால், சிறையில் அடைத்து 3 மாதம் 4 மாதங்களுக்குப் பிறகு அவர்களை வெளியே விட்டுவிட்டால், மீண்டும் அந்தப் பழைய தொழிலில் ஈடுபடுகின்ற அளவுக்குத்தான் போவார்



20th July 1964] *[திருமதி ஜோதி வெங்கடாசலம்]*

கள். அவர்கள் உள்ளத்தை மாற்றி அவர்களுடைய வாழ்க்கை நிலைமையை உயர்த்துவதற்கு திட்டங்கள் தீட்டும் அளவுக்கு தொழிலகங்களை ஏற்படுத்தி, தொழிலகங்களின் செலவினத்தை அவர்களின் உழைப்பின் மூலமே சரிக்கட்டுவதற்கான திட்டங்களை மேற்கொண்டு, முக்கியமான பெரிய நகரங்களில் முதலில் அவைகளைக் கையாண்டு, அதற்கு அடுத்து சிறிய நகரங்களில் கையாண்டு, பிறகு அந்த வட்டாரங்களில், பகுதிகளில் கையாளுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஏட்டு அளவில் சட்டம் இருந்துவிடாமல், அதை நடைமுறைப்படுத்துவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு, சட்டத்தின் முழு நோக்கத்தையும் நிறைவேற்றி, அதன் மூலம் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கு, வசதிகள் ஏற்படுத்துவதற்கு, வறுமையைப் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்காக தீவிரமான திட்டங்களை அரசினர் தீட்டுதல் வேண்டும். அப்படித் தீட்டுவதற்கு மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் உறுதுணையாக அமையும் என்ற முறையிலே இந்த மசோதாவை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

MR. DEPUTY SPEAKER: We will finish the general discussion on the Bill and then have one hour discussion under Rule 57 to-day. Tomorrow we will take up the clause-by-clause consideration of the Bill.

* **கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கனம் அங்கத்தினர்கள் இந்த மசோதாவின் மீது பேசியது குறித்து முதன்முதலில் என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பல அங்கத்தினர்கள் எடுத்துக்கூறியபடி, பிச்சைக்காரர்களுடைய நோய்களை ஒழிக்கவேண்டும், தடுக்கவேண்டும், பிச்சை எடுப்பதை ஒழித்துவிட வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். வடநாட்டுப் பக்கத்தில் சென்று பார்க்கிறபொழுது, அங்கே பிச்சைக்காரர்களே இல்லை, இருக்கிற சில பிச்சைக்காரர்களும் நம்முடைய மாநிலத்திலிருந்து வந்தவர்கள் என்று கூறும்பொழுது, அதைக் கேட்பதற்கு நமக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. பிச்சை எடுப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். வேலையில்லாமல் இருப்பது ஒரு காரணமாக இருக்கலாம். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூறியமாதிரி, பிச்சை எடுத்து அதில் கொஞ்சம் சேமித்து வைக்கும் நிலைமையில் அது ஓரளவுக்கு லாபகரமாக இருப்பதினால் பிச்சை எடுக்கலாம். அதுவுமன்றி கஷ்டமில்லாமல், சிரமம் இல்லாமல் சம்பாதிக்கலாம் என்ற ஒரு காரணத்தினாலும் பிச்சை எடுக்கலாம். கனம் அங்கத்தினர் திரு. மதியழகன் கூறியதுபோல, உண்மையாக கஷ்டப்படாமல், வேலை செய்து சம்பாதிக்க வேண்டும் என்ற அக்கறை ஏற்படாமல், பிச்சை எடுப்பதில் ஈடுபட்டு, அதிலிருந்து வருகிற வருவாயில் ஓரளவுக்கு சேமித்து வைக்கிற சந்தர்ப்பமும் ஏற்படுகிறது என்பதை உணர்ந்து அவர்கள் பிச்சை எடுப்பதில் ஈடுபட்டு வருகிறார்கள். கோவில்களிலும், பல பொது இடங்

களிலும், 'பஸ் ஸ்டாப்' போன்ற இடங்களிலும் பிச்சை எடுப்பது ஒரு பெரிய 'மெனேஸாக' இருக்கிறது நம்முடைய நாட்டில். அதை அறவே ஒழித்துவிட வேண்டும். இவர்களுக்கெல்லாம் அரசாங்கமே விடுதிகள் ஏற்படுத்திக்கொடுக்க இயலாது. சமூக சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள், தனியார் துறையிலே, பிச்சைக்காரர்களுக்கு சில விடுதிகள் ஏற்படுத்தி, அவர்களை அங்கே கொண்டுபோய் வைத்து காப்பாற்றுகிறார்கள். சென்னையிலே அம்மாதிரி சில விடுதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த விடுதிகள் நல்ல முறையில் இல்லை, நோய்வாய்ப்பட்டிருப்பவர்களும், நோயில்லாதவர்களும் ஒன்றாகக் கலந்து ஒரே இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கனம் உறுப்பினர் திருமதி அனந்தநாயகி கூறினார்கள். இவர்களையெல்லாம் தனிப்பட்ட முறையில் வைத்து, தொழுநோய் இருப்பவர்களுக்கு சிகிச்சை அளித்து, மற்றவர்களை அவர்களோடு சேர்க்காமல் இருப்பதற்கு வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்பதுதான் நோக்கம். முக்கியமாக இருக்கிற 'தயா சதனம்' சென்னையிலிருந்து வெளிப்புறத்தில் அந்த விடுதியை ஏற்படுத்துவதாக இருக்கிறார்கள். ஏற்கனவே அதற்கெல்லாம் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மாதவன் அவர்கள் பிச்சைக்காரர்கள் ஏற்படாமல் இருப்பதற்கு வழிவகைகள் செய்யவேண்டுமென்று கூறினார்கள். இனி வருங்கால சந்ததிகள் பிச்சைக்காரர்களாக ஏற்படாமல் இருப்பதற்கு நான் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை கடைப்பிடிப்பது பெரும் அளவிற்கு ஏதுவாக இருக்கும். பிச்சை எடுக்கிறவர்கள் எந்த முறையில் எடுத்தாலும், அதைக் தடுக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். குழந்தைகளைக் கூட பிச்சை எடுப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள் பெரியவர்களாக இருப்பவர்கள். குழந்தைகளை 'கிட்நாப்' செய்துகொண்டு போய், அங்கஹீனர்களாக்கி, பெரியவர்கள் பிச்சை எடுக்காமல், அந்தக் குழந்தைகளை பிச்சை எடுப்பதில் ஈடுபடுத்துவதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் இருக்கவேண்டும், அவர்களின் மீது கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுத்து கடுமையாக தண்டிக்கவேண்டும் என்ற காரணத்தினால்தான், ஒரு முறை பிச்சை எடுத்தால் ரூபாய் 50 அபராதம் அல்லது ஒரு மாதம் சிறை தண்டனை என்று விதித்திருப்பதோடு அல்லாமல், மறுமுறையும் பிச்சை எடுப்பதில் ஈடுபட்டால், அவர்கள் 6 மாதங்களுக்கு சிறை செல்லவேண்டும் என்ற அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்காகத்தான் 6 மாதங்களுக்கு சிறை தண்டனை விதிக்கவேண்டும் என்று கண்டிப்பான விதியை கொண்டுவந்திருக்கிறோம்.

அத்துடன், போலீஸ்காரர்கள் இவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டு போகும்பொழுது சில கஷ்டங்கள் ஏற்படும், சில சமயங்களில் போலீஸ்காரர்கள் பிச்சை எடுக்காதவர்களை பிச்சைக்



தார்கள் என்று சொல்லி வலுக்கட்டாயமாக பிடித்துக்கொண்டு போவார்கள் என்று கூறினார்கள். அப்படி அவர்கள் பிடித்துக் கொண்டு சென்றாலும் கூட, மாஜிஸ்டிரேட்தான் தண்டனை கொடுக்க வேண்டும். வழக்கை தகுந்த முறையிலே விசாரித்து தண்டனை அளிக்கக்கூடிய அதிகாரம் மாஜிஸ்டிரேட்டுக்குத்தான் உண்டு என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திடகாத்திரமாக இருக்கக்கூடிய பிச்சைக்காரர்களுக்கு ஸ்பெஷல் ஹோம்ஸ், வொர்க் அவுஸ் வைத்து, அவர்கள் எந்த முறையில் எந்த வேலை செய்யமுடியுமோ அந்த வேலைகளையெல்லாம் அவர்கள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கொண்ட விடுதிகளை அமைக்க தனியார் துறையிலே உள்ளவர்கள் முன்வந்தால், அவர்களுக்கு அரசாங்கம் தக்க முறையிலே ஓரளவுக்கு கிராண்டுகள் வழங்கும், அம்மாதிரி இப்பொழுது வழங்கிக்கொண்டு வருகிறோம்.

ஜோஸ்யம் சொல்லுகிறவர்களையும் பிடித்துச் செல்லவேண்டுமென்று சொன்னார்கள். அவர்களையெல்லாம் பிச்சை எடுப்பதாகக் கருத இயலாது. அதுவும் பல தொழில்களில் ஜோசியம் சொல்வது ஒரு தொழில் என்றுதான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த விதத்தில் இருப்பவர்களையெல்லாம் பிச்சைக்காரர்கள் என்று பாகுபாடு செய்து கொண்டு வந்து சேர்ப்போமானால், தனியார் துறையிலும், அரசாங்கமும் சேர்ந்து எத்தனை விடுதிகள் ஏற்படுத்தினாலும், அவர்களையெல்லாம் கொண்டு வந்து சரிக்கட்டுவது இயலாத காரியம். இருந்தபோதிலும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கவேண்டும். இப்பொழுதுகூட, ஹோம்ஸ்க்கு டாக்டர்கள் சென்று பார்வையிட்டு, அவ்வப்பொழுது நோய்வாய்ப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகிறார்கள். விடுதிகளை நடத்துகிறவர்களிடமும் தக்க முறையில் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் என்றும் கூறிவிட்டு வருகிறார்கள். ஆகவே இவை நல்ல முறையில் நடந்துவருகின்றன. தனியார் துறையில் எத்தனை பேர்கள் இம்மாதிரி விடுதிகளை ஆரம்பிக்க முன்வந்தாலும், அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் ஓரளவுக்கு கிராண்டு கொடுப்பதற்கு தயங்காது. அம்மாதிரி விடுதிகளை அதிகரிப்பதற்கு தனியார் துறையில் அதிகமாக முன்வராததால்தான், பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்கு இயலாமல் இருக்கிறது.

கோயில்களைப் பொறுத்தமட்டில் கனம் அங்கத்தினர்கள் கூறிய யோசனைகளையெல்லாம் மனதில் வைத்து, அரசாங்கம் அவைகளைப் பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்று கூறி, இந்தத் திருத்த மசோதாவை கனம் அங்கத்தினர்கள் ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The question is 'that the Madras Prevention of Begging Amendment Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964), as amended by the Joint Select Committee be taken into consideration'.

The motion was put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I move—

'That the clause by clause consideration of the Bill be taken up on 21st July 1964'.

The motion was put and carried.

## VI. DISCUSSION FOR SHORT DURATION *RE.* COLLAPSE OF BUILDING OF SARASWATHI HIGH SCHOOL, MANINAGARAM, MADURAI.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரையில் ஒரு பள்ளியின் கட்டடம் இடிந்து விழுந்து, அதனால், 36 உயிர்கள் பலியான நிகழ்ச்சி நம்முடைய தமிழ் நாட்டையே அதிர்ச்சி அடையச் செய்த ஒரு நிகழ்ச்சியாகும். அதுபற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் இன்று காலையில் இந்தச் சபையின் முன்பு ஒரு அறிக்கை வைத்தார்கள். அந்த அறிக்கை எனக்குப் பெரிதும் வியப்பைக் கொடுத்தது. ஏதோ இந்த நிகழ்ச்சியானது சாதாரணமாக நடக்கக்கூடிய சம்பவங்களிலே ஒன்று போன்று அதைப் பற்றி அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். அமைச்சர் அவர்கள் கவனித்து இந்த அறிக்கையைத் தயாரித்தார்களா அல்லது ஏதோ சம்பிரதாயப்படி 41-வது விதியின்படி கொடுக்கப்பட்ட மோஷனுக்கு சம்பந்தப்பட்ட இலாகா ஒரு அறிக்கையைத் தயாரித்து அதை இங்கே வாசித்தார்களா என்று புரியவில்லை. எப்படி இருப்பினும் அமைச்சர் அவர்கள் தான் இதற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் கவனிக்க வேண்டியது என்ன? இது ஒரு சாதாரண விபத்தல்ல, பஸ்ஸிலே போகிறபொழுது, திடீரென்று டிரைவர் எங்காவது மோதி, அதிலே 10 அல்லது 15 பேர் செத்தால், அது வேறு விஷயம். அல்லது ஆற்றிலே படகு கவிழ்ந்து, அதிலே சிலர் செத்தால், அது விஷயம் வேறு. இது ஒரு பள்ளிக்கூடக் கட்டடத்தைப் பொருத்த விஷயம், அதிலும் படிக்கச் சென்ற மாணவிகளைப் பொருத்தது. அதிலும் அந்த நிகழ்ச்சியிலே, அதிர்ஷ்டமோ என்னவோ தெரியவில்லை, அன்று பள்ளிக்கூட நாள் அல்ல; விசேஷ வகுப்புக்கள் வைத்து, அதற்காகச் சென்றவர்கள் இந்த விபத்திலே சிக்கிக்கொண்டார்கள். பள்ளிக்கூட நாளாக இருந்து, எல்லா வகுப்புகளும் இருந்திருந்தால் இன்னும் எத்தனையோ உயிர்கள் பலியாகியிருக்கும் என்பதை நினைக்கும் பொழுது, இந்த நஷ்டம் இப்படியாவது போயிற்றே என்று நினைக்க வேண்டியிருக்கிறது. கல்வி இலாகாவினர் பொது மக்கள் முன்பு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிற இந்த சமயத்தில், அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையைப் பார்க்கும் பொழுது, வியப்பாக இருக்கிறது. மதுரை மக்கள் பொதுக் கூட்டத்தில் இந்த மாதிரி ஒரு அறிக்கையை அமைச்சர் அவர்கள் படித்திருப்பார்களேயானால், அரசாங்கத்தைப் பற்றி அவர்கள் என்ன நினைப்பார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும்.



கல்வி இலாகாவிலே கடந்த 10 ஆண்டுகாலமாக அசிரத்தை இருந்து வருகிறது என்பதற்கு இது ஒரு சான்று. ஏதோ ஒரு கட்டிடம் விழுந்துவிட்டது என்று நாம் இதை எடுத்துக் கொள்ள முடியாது. எல்லா விதிகளையும் தளர்த்தி, பள்ளிக்கூடங்களை நடத்த முடியும், அதற்கு கல்வி இலாகாவின் அங்கீகாரத்தைப் பெற முடியும் என்பதை உணர்த்தி, இதிலே எவ்வளவு குறை பாடுகள் இருந்திருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்க வேண்டும். ஏதோ சம்பிரதாயமாக, அப்படி கலெக்டர் விசாரணை நடத்தினார், கட்டிடம் எப்படி இருக்கிறது என்பதைப் பற்றி எக்ஸிகூடிவ் என்ஜினியர் விசாரணை நடத்தினார் என்ற முறையிலே அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். கல்வி இலாகா விதிகளிலே என்ன பலஹீனம் இருக்கிறது, நடைமுறையிலே என்ன பலஹீனம் இருக்கிறது, கல்வி இலாகா அதிகாரிகள் கவனிக்காததினால் என்ன தவறுகள் ஏற்பட்டன, இந்தக் கட்டிடம் எப்படி அனுமதிக்கப்பட்டது என்ற அளவுக்கு ஒரு பெரிய விசாரணை நடந்திருக்க வேண்டும். இதை ஒரு சாதாரண விஷயமாகக் கருதாமல், ஒரு நீதிபதியைப் போட்டு, கல்வி இலாகா அதிகாரிகள் எந்த முறை யிலே நடந்துகொண்டார்கள் என்பதைப் பற்றி ஒரு பகிரங்க விசாரணை நடத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருந்தும்கூட, இந்த விபத்தை ஒரு சாதாரண நிகழ்ச்சியாகக் கருதியிருக்கிறார்கள். சாதாரணமாக, தீப்பிடித்தால், கலகம் நடந்தால், ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தால் விசாரணை நடத்துகிற மாதிரி, ஒரு ஆர்.டி.ஓ. வை வைத்து விசாரணை நடத்தி யிருப்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களுக்கு இது திருப்தி அளிக்காது. யாரையும் பாதுகாக்க வேண்டுமென்று நடந்து கொள்ளக்கூடாது. உண்மை வெளிவரட்டுமே. யாரையும் பாதுகாப்பது என்பது இந்த நிகழ்ச்சியை மூடி மறைப்பதாகும். ஜனநாயகத்தில் எந்த விஷயமாக இருந்தாலும், மக்களுக்குத் தெரிவிப்பது தான் நல்லது. அதுதான் நிர்வாகத்தைப் புனிதப்படுத்துவதற்கும், நிர்வாகம் ஒழுங்காக நடப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அந்த மாதிரி ஒரு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது நிகழ்ச்சியை விட வேதனை தருவதாக இருக்கிறது.

இந்த விபத்தில் 36 குழந்தைகள் உயிர் நீத்திருக்கிறார்கள். இந்தப் பெரிய சம்பவத்திலே இவ்வளவு அஜாக்கிரதை இருந்தால், மற்ற இலாகாக்களிலே எவ்வளவு அஜாக்கிரதை இருக்கும் என்பதை அரசாங்கம் உணரவேண்டும். எந்தக் கட்சியின் அரசியலுக்காகவும் இதை உபயோகிக்கக் கூடாது. பொதுவாக, நிர்வாகத்தை எப்படித் திருத்த வேண்டும் என்பதில் கவலை செலுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் இந்தக் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கட்டிடம் கட்டி எத்தனை வருஷங்கள் இருக்கும் என்பதைப் பற்றி எக்ஸிகூடிவ் என்ஜினியர் சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன். கட்டிடம் [illegible] [illegible] பயோகப்படுத்தவில்லையென்று கலெக்டர் [illegible]

திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சிமிண்ட் உபயோகிக்கவில்லையென்றால் காரையாவது உபயோகித்திருப்பார்களா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. அந்தக் கட்டிடம் எப்படியிருந்தது என்பதை நேரிலே பார்த்தவர்கள் இந்தச் சபையிலே இருக்கிறார்கள். சம்பவம் நடந்தவுடனே பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்தவர்களும் இந்தச் சபையிலே இருக்கிறார்கள். பொதுமக்கள் நிறைய உதவியளித்த பிறகுதான், அமைச்சரவர்கள் குறிப்பிட்ட மற்ற அதிகாரிகளெல்லாம் அந்த இடத்திற்குப் போனதாக எனக்குத் தகவல். ஆனால், அது அவ்வளவு முக்கியமான பிரச்னையல்ல. முக்கியமான பிரச்னையென்னவென்றால் இந்தக் கட்டிடம் கட்டியபோது கட்டடம் கட்டுவதற்கு டவுன் பிளானிங் லைசென்ஸ் வழங்கப்பட்டதா, டவுன் பிளானிங் சட்டப்படி முனிசிபல் கமிஷனிடமிருந்து லைசென்ஸ் வாங்கப்பட்டதா? முனிசிபல் அதிகாரிகள் இந்தக் கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்தார்களா, இவ்வளவையும் புறக்கணித்து விட்டு இந்தப் பள்ளிக்கூடம் அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்ற பெயரில் ஏன் இவ்வளவு சலுகைகள் கொடுக்கப்படவேண்டுமென்பதை நினைக்கும்பொழுது, உண்மையிலேயே கல்வி இலாகாவினருக்கு பொறுப்பு மிகவும் அதிகமாக இருக்கிறது, அது மன்னிக்க முடியாத பொறுப்பு என்பது என்னுடைய அபிப்பிராயம். அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை இந்தச் சபையில் கொடுத்தால்தான் அரசாங்கம் இந்த விஷயத்தில் அக்கறை காட்டுகிறது என்று மக்கள் நினைப்பார்கள். இல்லாவிட்டால் பல விபத்துக்கள் ஏற்படுகிற மாதிரி இதுவும் ஒன்று, எவ்வளவு உயிர்கள் போனாலும் அதைப்பற்றி அரசாங்கம் கவலைப்படுவதில்லை என்ற நிலைமைதான் ஏற்படும்.

இது ஒருபுறமிருக்க, நிவாரணம் அளிப்பதிலும் என்ன அசிரத்தைகள் காட்டப்பட்டிருக்கின்றன என்பதை நாம் பார்க்க வேண்டும். நிவாரணப் பட்டியலை கனம் அமைச்சரவர்கள் படித்தார்கள். டைரக்டர் ஆப் மெடிகல் சர்வீஸஸ் அவர்கள், கொடுக்கப்பட்ட மருந்துகளுக்குக் கட்டணம் வாங்கக்கூடாது என்று உத்திரவு போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மருந்துகளுக்கு கட்டணம் வாங்கக்கூடாதென்றோ அல்லது தக்க மருந்துகளை கடையிலிருந்து வாங்கிக் கொடுப்பதற்காகவோ உத்திரவு போட்டு இப்படி இலவசமாக சிகிச்சையளித்துவிட்டோம் என்று சொல்வதானது ஒரு பெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய விஷயமல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இவ்வளவு பெரிய விபத்து ஏன் ஏற்பட்டது என்று அரசாங்கம் பதில் சொல்ல கடமைப்பட்டு இருக்கும்பொழுது, வைத்திய உதவி இலவசமாக அளித்துவிட்டோம் என்று சொன்னால்—இதை மதுரை நகர் மக்களிடத்தில் போய் சொன்னால்—வைத்திய செலவுக்குக்கூட வசூலிக்கலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இருந்ததோ என்று சந்தேகிக்கக்கூடிய வகையில்தான் பொருள் கொடுக்கும். அது ஒரு பெரிய விஷயமல்ல. வைத்திய இலாகா அதிகாரிகள் உடனே கஷ்டப்பட்டு வேலைசெய்து பாதிக்கப்பட்ட



வர்களுக்கு சிகிச்சையளித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அதை ஒரு தனிச் சலுகையாகக் காட்டி பட்டியலில் சேர்த்திருப்பது அவ்வளவு பொருத்தமல்ல. இந்த உயிர் துறந்த குழந்தைகள் படித்து நன்கு முன்னேறி அவர்களை நம்பி வாழ்க்கை நடத்த விரும்பிய குடும்பங்கள் எத்தனையென்று நாம் பார்க்கவேண்டும். இந்த விபத்தில் சிக்கிய குழந்தைகளின் பெற்றோர்கள் ஹார்வி மில்லில் வேலைபார்க்கும் தொழிலாளிகளின் குடும்பங்கள். இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் தொழிலாளிகளின் குடும்பங்கள். அந்தப் பெற்றோர்கள் இப்பொழுது எப்படி அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். உயிரைத் திருப்பிக்கொடுக்கமுடியுமென்று நான் சொல்லவில்லை. யாரைத் தண்டித்தாலும் சரி, கல்வி இலாகா அதிகாரிகளைத் தண்டித்தாலும்சரி, இந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகளைத் தண்டித்தாலும்சரி, இறந்த குழந்தைகளின் உயிரை திருப்பிக் கொடுக்க முடியாது. இந்தக் குழந்தைகளை இழந்த குடும்பங்களுக்கு, இந்த விபத்திலே பலத்த காயமடைந்து அதனாலே கஷ்டப்பட்டு இன்னும் தேறாமல் இருக்கக்கூடியவர்களுக்கு என்ன உதவிகள் செய்யமுடியும் என்பதிலே அரசாங்கம் அக்கறை காட்ட வேண்டும். பலரிடமிருந்து நிதி திரட்டப்பட்டு ரொம்ப நாட்கள் ஆனபோதிலும் சமீபத்தில்தான் ஒரு குடும்பத்திற்கு ரூ. 500 வீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 5,000 கொடுத்தால்கூட அது ஒரு குழந்தையின் மதிப்பாக இருக்கமுடியாது. அதற்கு மேலும் கொடுக்கலாம். ஆனால் இப்படிப்பட்ட ஒரு பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறபொழுது அரசாங்கம் எவ்வளவு கவலையோடு இருக்கிறது என்பதை மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டுமானால் அந்தக் குடும்பங்களுக்குப் போதுமான நிதியுதவி செய்வதற்கு அரசாங்கம் உடனடியாக முன்வந்திருக்கவேண்டும். வசூலான பணத்தில்கூட ஒரு பகுதி நிவாரணம் கொடுக்கவும், இன்னொரு பகுதி பள்ளிக்கூட கட்டடம் கட்ட என்றும் பிரித்திருப்பது தவறானது. அரசாங்கம் வேறு நிதியிலிருந்தாவது அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் அளித்திருக்க வேண்டும். இதில் கல்வி இலாகா செய்திருக்கிற தவறுக்கு அரசாங்கம் செய்யும் பிராயச்சித்தமாக, சர்க்கார் நிதியிலிருந்து உதவி அளிப்பதில் அமைச்சரவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. ஆதலால் மக்கள் இதையெல்லாம் மறந்துவிட்டார்கள் என்று நினைக்க வேண்டாம். மக்கள் ஞாபகக் குறைவு உள்ளவர்கள் அல்ல. மக்களுக்கு ஆத்திரம் வந்தால் என்ன ஆகும் என்பதை நினைத்துப் பார்த்து தக்க பரிகாரம் காண வேண்டும். அன்றைக்கு மக்களுக்கு ஆத்திரம் வந்த நேரத்தில் அந்த நிர்வாகி அங்கு வந்திருந்தால் என்ன பாடு பட்டிருப்பார் என்று சொல்ல முடியாது. இப்படிப் பொறுப்பற்ற முறையில் ஒருவர் சுயநலத்திற்காக செய்த இப்படிப்பட்ட காரியத்திற்காக மக்கள் தக்க தண்டனை கொடுத்திருந்தாலும் அது பொருத்தமானதே. கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்கள் ஒருவர் சுயநலத்திற்காக நடத்தும் பள்ளிக்கூடத்தை அனுமதித்து, தனி ஒருவருடை

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [20th July 1964

வருமானத்திற்குப் பயன் படும் அளவில் நடத்திய பள்ளிக்கு உதவியளித்து இருக்கிறார்கள் என்பதுதான் என் குற்றச்சாட்டு. இம்மாதிரி எத்தனையோ நிர்வாகிகள் திரிந்து கொண்டு இருக்கிறார்கள், அரசாங்கச் சலுகைகளை அடைந்து கொண்டும் பொது மக்களிடம் வசூல் செய்துகொண்டும், நூற்றுக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். இப்படி விபத்து நேர்ந்த காலத்தில் அங்கு அந்த நிர்வாகி மட்டும் வந்திருந்தால், மக்கள் அவருக்கு தக்க தண்டனை கொடுத்திருப்பார்கள். நல்ல காலம் கைது செய்தார்கள். அவரைக் கைது செய்து மக்களிடமிருந்து தப்ப வைக்க உதவி செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். கோர்ட்டுக்குப் போய் என்ன தண்டனை கொடுக்கிறார்கள் என்பதைப் பற்றி கவலை இல்லை. ஆனால், கல்வி இலாகா அதிகாரிகள், கட்டடம் ஒழுங்கானதா என்றுகூடப் பார்க்காமல், கட்டிடத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ரெகக்னிஷன் கொடுக்கும்போதே கட்டடம் சரியானதுதானா என்று பார்க்க வேண்டாமா. நிறைய எலிமெண்டரி, ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்களும், ஹைஸ்கூல்களும் திறந்துக் கொண்டே போகிறோம். அதிகமான பள்ளிகளுக்கு அங்கீகாரம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம். அதே சமயத்தில் அதை நடத்த முன்வரும் நிர்வாகிக்கு அந்தஸ்து இருக்கிறதா, அதை நடத்த அவருக்கு வாய்ப்புகள், வசதிகள் இருக்கின்றனவா, அவருடைய பூர்வ சரித்திரம் என்ன என்ற விவரங்களை எல்லாம் பார்க்க வேண்டாமா? இம்மாதிரியான விவரங்கள் அரசாங்கத்திற்குத் தெரியுமோ என்னவோ, அதே நிர்வாகியைப் பற்றி என்னிடம் கத்தை கத்தையாக ரிகார்டுகள் இருக்கின்றன. வேண்டுமானால் அமைச்சருக்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். முதலில் அவர் ஒரு ஆசிரியரே அல்ல. வேறு ஒருவருடைய சர்ட்டிபிகேட்டை வைத்துக் கொண்டு தான் ஆசிரியராக இருந்திருக்கிறார். அவர் கல்வி இலாகாவால் விலக்கப்பட்டவர். பின்னால் அந்தத் தொடர்பை வைத்துக் கொண்டு வேறு ஒரு ஜில்லாவிற்கு மாறி—அவர் திருநெல்வேலியைச் சேர்ந்தவர், அங்கிருந்து மதுரைக்கு வந்தார்—கல்வி இலாகாவினர் சலுகைகளைப் பெற்று, கட்டடம் மட்டும் கட்ட ஏற்பாடு செய்து—அடித்தளம் சொந்தம் இல்லை—மேலே மட்டும் கட்டடம் கட்டிக் கொள்கிறேன் என்று சலுகைகளைப் பெற்று, பிள்ளைகளை இம்மாதிரியான பேராபத்துக்கு உள்ளாக்கி இருக்கிறார். சரியான நீதி வழங்கவில்லையென்றால் அரசாங்கம் மக்கள் கோபத்தினின்றும் தப்ப முடியாது. இம்மாதிரி கல்வி இலாகாவினர் செய்திருப்பது ஃபேவரிடிஸம், நெபாடிஸம் தான். இன்றைக்கு அரசாங்கம் செய்திருக்கும் பரிகாரம் போதுமானது அல்ல. குழந்தைகளைப் பறிகொடுத்த குடும்பங்களுக்குப் போதுமான நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்தாக வேண்டும். அங்கஹீனம் ஆனவர்களுக்கு, தக்க முறையில் நஷ்டஈடு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் எப்படி நஷ்டஈடு கொடுக்க முடியும் என்றே தெரியவில்லை. ஏதாவது மோட்டார் விபத்தாக இருந்தாலும் பாதுகாப்பு இருக்கிறது. க்ளெய்ம்ஸ் டிரிப்யூனல் நியமித்திருக்கிறார்கள். நஷ்ட ஈடு கோர முடியும். இந்த விபத்தில் அகப்பட்டுக்கொண்ட குழந்தைகளுக்கு யாரிடம்



20th July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

போய் நஷ்ட ஈடு கோருவது? இது ஒரு படிப்பினையாகத்தான் அமைய முடியும். இம்மாதிரிக் கட்டடங்களில் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கான இன்ஷூரன்ஸ் எந்த வகையில் செய்ய வேண்டும் என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதனால்தான் ஒரு பகிரங்க விசாரணை வேண்டும் என்று கோருகிறோம். தனிப்பட்டவர்கள் சுயநலத்திற்காக இப்படிச் செய்கிறார்கள். ஏதோ பெர்மிட் வாங்குவதுபோல் நினைத்துச் செய்கிறார்கள். உட்கார்ந்த இடத்திலிருந்தே பொருள் திரட்டலாம் என்று இம்மாதிரிச் செயல்களில் ஈடுபடுகிறார்கள். இதை ஒரு படிப்பினையாகக் கொண்டு, நிறையப் பொருள் வசதி உள்ள, பொறுப்புள்ள ஒரு சில ஸ்தாபனங்களைத் தவிர, அப்படிக் கல்விக்காக உழைக்க முன்வருகிறவர்கள் நீங்கலாக, வேறு தனியார்களுக்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இம்மாதிரியான விபத்துக்களை அரசாங்கம் எச்சரிக்கையாக எடுத்துக்கொண்டு செயல்படவேண்டும். ஏதோ பல விதங்களில் ஏற்படுகிற தீ விபத்து, மோட்டார் விபத்து போல் இதை நினைக்கிறார்கள் போல் இருக்கிறது கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்தால். அப்படி இதை எடுத்துக்கொண்டுவிடாமல், நான் கூறியிருக்கிற ஆலோசனைகளையும் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டுமுடிக்கிறேன்.

* **திரு. வை. சங்கரன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பள்ளிக்கூட விபத்து சம்பந்தமான விவரங்களெல்லாம் இந்நேரம் பத்திரிகைகள் மூலமாக எல்லோருக்குமே தெரியும். ஆனால், உண்மையிலேயே, நேரிடையாக அந்த இடத்தில் இருந்து இடர்பாடுகளை அகற்றி இறந்துபோன காயமுற்ற பெண்களை தூக்கி எடுத்து வந்தவர் களுக்குத்தான் அந்த கோரவிபத்தின் கொடுமையும் கண்றாவியும் தெரிய முடியும். இறந்த பெண்கள் பலரின் உடம்பில் ஒரு காயம் இல்லை; படுக்கையில் தூங்கிக் கொண்டு இருந்த மாதிரி காணப்பட்டார்கள். அவர்கள், கண், வாய், மூக்கு முழுதிலும் சுண்ணாம்பும் தூசியும் மணலும் புகுந்துகொண்டு, அவர்கள் மூச்சுத் திணறி, திக்கு முக்காடி இறந்திருக்க வேண்டும். கட்டடத்தில் கட்டைகள் விழுந்து அடிப்பட்டாலும் அது ஒரு பக்கம். ஆனால் இறந்தவர்களில் பலர் சுண்ணாம்பு, மணல் தூசி அடைத்து மூச்சுத் திணறி இறந்திருக்கிறார்கள், என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். அந்த அளவுக்கு அது 'ஸெட்' ஆகாத, புது புது என்ற ஈரச் சுண்ணாம்பு; அதை வைத்துக் கொண்டு 9, 12 அங்குல அகலத்தில் 50 அடி உயரமுள்ள இரண்டு மாடிக் கட்டடம் கட்டி இருந்தார்கள். இந்த இரண்டு மாடிக் கட்டடத்தில் 1,200 பெண்கள் படித்தார்கள். இந்த கட்டடத்திற்கு 3 அல்லது 4 அடி அகலமுள்ள ஒரே ஒரு வாயில் தான். அந்தக் குழந்தைகள் உயிரைக் குடிக்க அமைத்த பொறி போல அதன் அமைப்பு இருந்திருக்கிறது. அந்த ஒரே வழியாகத் தான் 1,200 பெண்களும் வந்து போகவேண்டும். அங்கே குடிக்கத் தண்ணீருக்கு குழாய்கூடக் கிடையாது. லாவட்ரிகூட கட்டடத்திற்குள்ளே கிடையாது. பெரும் பகுதியான பருவம் அடைந்த பெண்கள்கூட வெளியில் இருக்கிற தெரு பொது [illegible]

[திரு. வை. சங்கரன்] [20th July 1964

போக வேண்டும். அதுபோன்று எலிமெண்டரி நெஸஸிடிகள்கூட இல்லாத பள்ளிக்கூடமாக இருந்தது என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள வேண்டி இருக்கிறது. இவ்வாறு உள்ள கட்டடத்தில் பள்ளிக்கூடம் நடத்த யார் யார் பெறுப்பாக இருந்தார்களோ அவர்களெல்லாம் தண்டிக்கப்படவேண்டும். ஏதோ ஆங்கிலத்தில் சொல்லுவார்களே, after the horses bolted away ஸ்டேபிளை மூடுவது என்று, அதுபோல, பின்னால் இப்போது, இனி இதுபோன்ற விபத்துக்கள் நேராது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வந்தாலும், நடந்த இந்த விபத்துக்கு யார் யார் பொறுப்பு என்று கண்டு பிடித்து தக்க நடவடிக்கை யாவது எடுக்கவேண்டும். கல்வி இலாகாவைக் கேட்டால், அவர்கள்
1-00 p.m. அங்குள்ள முனிசிபாலிடியின் மீது அந்தப் பழியைச் சுமத்துகிறார்கள். "எங்களுக்குக் கல்வி சம்பந்தமான பொறுப்புதான் இருக்கிறது. போதிய accommodation இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமேயல்லாது கட்டடத்தின் ஸ்ட்ரெங்த் முதலியவை எங்களுக்குத் தெரியவேண்டியதில்லை. அது எங்கள் பொறுப்பு இல்லை" என்று சொல்லி அவர்கள் அந்தச் சுமையை முனிசிபாலிடியின் மீது சுமத்த முற்படுகிறார்கள். அதேபோல், முனிசிபாலிடியைக் கேட்டால், "நாங்கள் அடிக்கடி நோடீஸ் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். ப்ராஸிக்யூட் பண்ணிக்கொண்டு இருக்கிறோம், கட்டடம் சரியாக இல்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம், மேற்கொண்டு டவுன் ப்ளானிங் டைரக்டரிடம் அப்பீல் போய்க் கொண்டிருக்கிறது, கட்டடத்தை இடிப்பதற்கு இன்றுள்ள சட்டப்படி நாங்கள் நடவடிக்கை எடுக்க முடியாது, அபராதம் ஐந்து, பத்து ரூபாய் போட்டிருக்கிறோம்" என்று அவர்களைக் கேட்டால் அவர்கள் சொல்கிறார்கள். டவுன் ப்ளானிங் இலாகாவினர் என்ன சொல்வாரோ தெரியவில்லை. இதற்கெல்லாம் காரணம் எனக்குத் தோன்றுவது என்னவென்றால், கட்டட விதிகளில் ஓரளவு ஓட்டைகள் இருக்கின்றன. அந்தக் காரணத்தால் யாரும் அப்பீல் போட்டுவிட்டு நீடித்திருக்கலாம். புறம்பாக கட்டினாலும் அதுவரை யாரும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கமுடியாது என்ற நிலைமை இருப்பதாகத் தெரிய வருகிறது. எப்படியோ யார் செய்த வினையோ, மொத்தத்தில் பெரிய கொடுமை அங்கு ஏற்பட்டுவிட்டது. மானேஜ்மென்டோடு மட்டும் இது போவது அல்ல. இதை இன்னும் நன்றாகப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது ஏற்கனவே இது சம்பந்தமாக என்க்வையரி ஒன்று நடந்திருக்கிறது. அந்த என்க்வையரியில் என்ன முடிவு ஆயிற்று, யார் அதற்குப் பொறுப்பு என்கிற விவரங்களை மக்கள் தெரிந்துகொள்ள மிகவும் விரும்புவார்கள். விரும்புவது அவர்களுடைய உரிமை. அந்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டிய கடமை சர்க்காருடையது. அந்தக் கடமையைச் சீக்கிரத்தில் சர்க்கார் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தச் சம்பவம் ஏதோ சிறிய விஷயமாகக் கருதப்பட்டு இருப்பதுபோல் அறிக்கை காணப்படுகிறது. அந்தச் சம்பவத்திற்கு அளிக்க வேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகத்



20th July 1964] [திரு. வை. சங்கரன்]

தெரியவில்லை. ஏதோ ஆகாயத்தில் பறக்கும் விமானம் திடீரென்று மாத்தாக வெடித்து விபத்து ஏற்பட்டால், எப்படி கருதப்படுமோ அதுபோன்று கருதப்படக்கூடிய சம்பவம் அல்ல அது. பல உயிர்கள் மாண்டிருக்கிற அந்தச் சம்பவத்தினால் 'மால்ஃபீஸன்ஸ் அண்டு மிஸ்ஃபீஸன்ஸ்' என்று சொல்வார்களே அதுபோல, ஒரு சிலர் செய்யவேண்டிய கடமையைச் சரியான முறையில் செய்யத் தவறியதன் காரணமாக, செய்யக்கூடாததை செய்த காரணத்தால் அந்தப் பெரிய விபத்து ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சர்க்கார் உணர்ந்தாகவேண்டும். அதற்கான மேல் நடவடிக்கையைக் கண்டிப்பாக எடுக்க வேண்டும். காலையில் அமைச்சர் அவர்கள் கொடுத்த ஸ்டேட்மென்டில், என்க்வையரி என்ன ஆயிற்று, அதன் முடிவு என்ன, என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பது பற்றிய விவரங்கள் எல்லாம் கொடுத்திருக்கவேண்டும். அந்த ஸ்டேட்மென்ட் முழுமையாக இல்லாத காரணத்தால், சர்க்கார் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயத்தைத் தெரிவிக்கவில்லை என்றுதான் கருத வேண்டியிருக்கிறது. அந்த விவரங்கள் எல்லாம் அளிக்கப்பட்டால் தான் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் சரியாகச் செய்ததாகக் கருதப்பட முடியும். ஆகவே, இது சம்பந்தமாக தீவிர நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த சம்பவத்தை ஏதோ ஒரு சிறிய விஷயமாகக் கருதிவிடக் கூடாது. ஏனென்றால், அதை விட ஒரு அசம்பாவிதமான, அதைவிட ஒரு அவலமான மோசமான நிகழ்ச்சி வேறு எதுவும் நடந்திருக்க முடியாது. அதனால், சர்க்கார் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, யார் தவறு செய்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அந்தச் சம்பவம் நடந்த ஒரு சில தினங்களில் ஸ்டேட் ஹவுஸிங் போர்டின் முன்னாள் தலைவராக இருந்த திரு. ஞானஒளிவு அவர்கள் ஆசிரியருக்குக் கடிதம்' என்ற பகுதியில் சில விஷயங்கள் எழுதியிருந்தார். இன்றைக்கிருக்கும் கட்டட விதிகளில் பல ஓட்டைகள் இருப்பதன் காரணமாக மதுரை சம்பவம் போன்றவை நடக்க ஏதுவாக இருக்கின்றன என்று அழகாக அதில் அவர் எழுதியிருந்தார். தற்போதைய விதிகளின்படி முனிசிபாலிடிக்கும், டவுன் ப்ளானிங் டைரக்டருக்கும், கவர்ன்மெண்டுக்கும் அப்பீலுக்கு மேல் அப்பீலாக, எத்தனை தடவை வேண்டுமானாலும் போட்டுக் கொண்டிருக்கலாம், அதற்குள் முனிசிபாலிடி இடிக்க முடியாது என்ற வகையில் கட்டட விதிகள் இப்பொழுது இருக்கின்றன, அது போல் இருக்கக்கூடாது ஒவ்வொன்றிடத்திலும் ஒரே அப்பில்தான் இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர் குறிப்பிட்டிருக்கிறார். எந்த முறையில் கட்டட விதிகளை மாற்றியமைக்கவேண்டும் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார். அந்த யோசனைகளைச் சர்க்கார் பரிசீலித்து ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், முனிசிபாலிட்டிக்கோ, முனிசிபல் கவுன்சிலுக்கோ, டவுன் ப்ளானிங் டைரக்டருக்கோ, அரசாங்கத்திற்கோ அப்பீல் செய்துகொள்ளும்போது, முடிவு செய்து அறிவிக்க குறிப்

பிட்ட ஒரு காலத்திற்கு மேல் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று ஒரு டைம் லிமிட் நிர்ணயித்து கட்டட விதிகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்பீல் செய்துக்கொண்டு, அதன் மேல் இறுதி முடிவு தெரிகிற ஒருசில ஆண்டுக்குள் வரம்புமீறி கட்டடத்தைத் தாராளமாகக் கட்டிவிடுகிறார்கள். கட்டடம் கட்டின பினனல் அதைத் தடுக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. கட்டியதை இடிப்பதென்றாலும hardship ஆக போகிறது. இது பற்றியெல்லாம்கூட திரு. ஞானஒளிவு அவர்கள் அதில் எழுதியிருக்கிறார். ஆகவே, அப்பீலுக்குப் போனபின், மேற்கொண்டு முடிவு தெரியும்வரை கட்டடம் கட்டப்படாமல் அதே நிலையில் இருக்க வேண்டும், கட்டடத்தில் சிறிய டீவியேஷன் இருந்தால்கூட அதை இன்ஜினீர்கள் அப்போதைக்கு அப்போது கண்காணிக்கவும் அப்புறப்படுத்தவும் அதிகாரம் இருக்கவேண்டும் என்று சொல்கிறார். ஆகவே, கட்டட விதிகள் நல்ல முறையில் மாற்றியமைக்கப்பட்டு, மதுரை சம்பவம் போன்ற கொடுமையான சம்பவம் இனி யாவது நடக்காதிருக்க ஆவன செய்யவேண்டும்.

அந்தச் சம்பவத்தில் ஒரு பாவமும் கனவிலும் கண்டறியாத பச்சிளம் சிறுமிகள், முப்பது எழுவரின் உயிர்கள் வாழ்வுப்படிக் கட்டில் காலெடுத்து வைக்குமுனனரே பறிக்கப்பட்டு உள்ளது. உயிரிழந்த குழந்தைகளின் பெற்றோர்களில் அநேகர் மில் தொழிலாளிகள்; மற்றவர்கள் மாதம் சுமார் 100 ரூபாய் அளவுக்கு ஊதியம் பெறுகிற ஆரம்ப ஆசிரியர்கள் போன்றவர்கள். குழந்தைகள் நன்றாகப் படித்துப் பட்டம் பெற்று, தத்தளித்துக் கொண்டிருக்கும் தங்கள் குடும்பத்தைக் கரையேற்றுவார்கள் என்று ஆசை கொண்டிருந்தவர்கள். காலையில் இன்முகத்தோடு பூ வைத்து, பொட்டிட்டுப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவைத்த தங்கள் குழந்தைகளை மாலை வருவதற்குள் பிணக்கோலமாக, பாடையில் இட்டு, இடுகாட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டியிருந்த பெற்றோர்களின் அப்போதைய மனோநிலையை அங்கு கூட இருந்தவர்கள்தான் ஓரளவு தெரிந்துகொண்டிருக்க முடியும். குழந்தைகளை இழந்த அந்தப் பெற்றோர்களில் ஒருசிலருக்கு இழந்த அந்த ஒரு பெண்ணைத் தவிர வேறு குழந்தையே இல்லை. ஒரு சிலருக்கு ஆண் குழந்தை இருந்தாலும், பெண் குழந்தை என்று இருந்தது இது ஒன்றுதான். ஒரு சிலருக்கு இழந்தார்கள் என்றால் இவளுக்கு பின் இருக்கும் குழந்தை 1 வயது 1½ வயது குழந்தைதான். இப்படிப்பட்ட நிலையில்தான் அன்று குழந்தைகளை இழந்த பெற்றோர்கள் தவித்தார்கள். தங்களுக்கு ஆதாரவாக நம்பியிருந்த குழந்தைகளை இழந்த பெற்றோர்களுக்கு எந்தவித ஈடும் செய்துவிட முடியாது. இருப்பினும் அவர்களுக்கு "ஸொலேஷியம்" என்ற வகையிலாவது கணிசமான தொகை அளிப்பதைத்தவிர வேறு எதுவும் செய்யக்கூடியது இல்லை. 'இறந்தவர்களுக்காக யாருக்கு காம்பன்ஸேஷன் அளிப்பது?' என்று சிலர் ஏதோ விதண்டாவாதம் செய்கிறார்கள். அந்த முறையில் இதை அணுகக் கூடாது. பெற்றோர்கள் ஈடு செய்ய முடியாத நஷ்டத்தை அனுபவித்திருக்கிறார்கள். அத்தனை பேர்களும் பொருளாதாரத்தில்



பிற்பட்டவர்கள். அவர்களுக்கு ஸொலேஷியம் அளித்தால்தான் அவர்களுக்கு ஓரளவு ஆறுதல் ஏற்பட முடியும். அதை அளிக்க வேண்டும். நிவாரண கமிட்டி போட்டு தொகை வசூலிக்கப்பட்டதிலிருந்து பெண்களை இழந்த பெற்றோர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500 வீதம் கொடுப்பதாக ஏற்பட்டாகியிருக்கிறது. அது போக மேற்கொண்டு 18,000 ரூபாய் கலெக்டரிடம் இருக்கிறது. அந்தத் தொகையைக் கொண்டு வேறு ஏதோ கட்டடத்திற்கு உபயோகிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. அது பொருத்தமா என்று சிந்திக்கவேண்டும். மேலும், அந்த நிதி திரட்டியதன் நோக்கமே, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, அந்த நிதியிலிருந்து ஒவ்வொரு பெற்றோருக்கும் மேலும் ரூபாய் 500 வீதம் கொடுத்தால் சரியாகப் போய்விடும். அந்த வகையிலாவது உதவி செய்ய சர்க்கார் அட்வைஸ் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இன்னும் என்ன என்ன விதத்தில் கட்டட விதிகளை திருத்தியமைக்கலாம் என்பதை ஆராய்ந்து அதன்படி திருத்தியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தை நண்பர் திரு. கலியாணசுந்தரம் அவர்கள் எழுப்பியதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், இந்தச் சம்பவ தினத்தன்று நான் நேரடியாக அங்கு இருந்து, அதில் என்னால் முடிந்த சேவையைச் செய்தேன். அன்று நான் அங்கு கண்ட சம்பவங்களை இச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள், காலையில் எழுப்பிய பிரச்சினைக்கு ஒரு ஸ்டேட்மென்ட் வாசித்தார்கள். அதை அவர்கள் வாசிக்கும் போது எனக்கு சிரிப்புத்தான் வந்தது. இந்த விஷயத்தை "லைட்" ஆக "ட்ரீட்" செய்து சொல்ல வேண்டிய முக்கிய விஷயத்திற்குக் கூட முக்கியத்துவம் தாராமல் ஸ்டேட்மெண்டு கொடுக்கப்பட்டது. நான் கனம் அமைச்சர் அவர்களை குறை சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை. அரசாங்கத்தில் இருக்கும் அமைச்சர்கள் ஏதாவது ஸ்டேட்மென்ட் இங்கு கொடுக்கிறார்கள் என்றால், அவர்கள் சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து ரிபோர்ட் கேட்டு, அந்த ரிபோர்ட்டை நம்பி அவர்கள் இங்கே ஸ்டேட்மென்ட் படிக்கிறார்கள். அதிகாரிகள் எவ்வளவு அலட்சியப்படுத்தி இந்த ஒரு முக்கியமான விஷயத்தில் ரிபோர்ட் கொடுத்திருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்கள் படித்த ஸ்டேட்மென்டிலிருந்து நெரிய வருகிறது. இதற்கு முன் வேறு பல பிரச்னைகளைக் குறித்து அமைச்சர்கள் பல ஸ்டேட்மென்ட்களைப் பார்ப்பதுண்டு. அவற்றை யம் இலாகாவினர் ரிபோர்ட்களின் பேரில்தான் கொடுத்திருக்கிறார்கள். அவையெல்லாம் சரிதான் என்று நான் நினைத்துக் கொண்டிருப்பேன். ஆனால், இந்த சம்பவம் நடந்த அன்று நான் அந்த இடத்தில் நேரடியாக இருந்திருக்கிறேன். அங்கு நடந்த சம்பவ விவரங்கள் எனக்குத் தெரிந்ததை வைத்துப் பார்க்கும்

[திரு. ஆர். வி. சுவாமிநாதன்] [20th July 1964

போது, அமைச்சர் அவர்களுடைய ஸ்டேட்மெண்ட் இலாகாவினரால் மிகவும் அலட்சியமாகத் தயாரித்து அனுப்பப்பட்டிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது.

அந்தப் பள்ளிக்கூடக் கட்டடத்திற்குச் சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் எனக்கு ஒரு சிறிய ஆபீஸ் அறை உண்டு. அதில் அன்று சுமார் 11-45 மணிக்கு நான் அலுவல் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது பீரங்கிக் குண்டு சப்தம் மாதிரி ஒரு சப்தம் கேட்டது. சில ஊர்களில் பகல் 12 மணிக்கு நேரத்தை அறிவிக்கக் குண்டு போடுவதுண்டு. மதுரையில் நேரத்தை அறிவிக்கக் குண்டு போடுவதில்லையென்றாலும், ஏதோ பழைய ஞாபகத்தில் நினைத்துக்கொண்டேன் 12 மணிக் குண்டுதான் போடுகிறார்களோ என்று. ஆனால், அப்பொழுது 12 மணி ஆகவில்லையே என்று சற்று சந்தேகம் ஏற்பட்டது. இருந்தாலும் சாதாரண அலட்சியத்தோடு இருந்துவிட்டேன். சற்று நேரத்திற்கெல்லாம் பெரிய கூட்டமாக ஜனங்கள் ஓடிக்கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்து, பக்கத்திலிருந்த ஆளைக் கூப்பிட்டு "எங்கே அப்பா அவர்களெல்லாம் ஓடுகிறார்கள்?" என்று கேட்டேன். அந்த ஆள் கொஞ்ச நேரத்தில் விஷயத்தைத் தெரிந்துகொண்டு ஓடிவந்து, "பள்ளிக்கூடம் விழுந்து விட்டது, பிள்ளைகள் ஆபத்தான நிலையில் இருக்கிறார்கள்" என்று சொன்னான். 15 நிமிஷங்களுக்குள்ளே நான் அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தேன். அந்தப் பதினைந்து நிமிஷங்களுக்குள்ளே அங்கே லட்சம் ஜனங்கள் என்று சொல்லலாம், அந்த அளவுக்குக் கூட்டம் கூடிவிட்டது. அது தொழிலாளர்கள் வசிக்கும் பகுதி. பெரும்பாலும் ஹார்வி மில்லில் வேலை செய்வோர் வசிக்கும் பகுதி. அந்த இடத்தை நெருங்கவே பலர் பயந்துகொண்டிருந்தார்கள். காரணம் என்னவென்றால் இந்த அசெம்பிளி கட்டடத்தைப்போல் அது நான்கில் ஒரு பாகம் தான் இருக்கும். நான்கு பக்கமும் அடைக்கப்பட்ட சுவர். ஒரே ஒரு சின்ன வாசல், கோட்டைக்கதவு மாதிரி. திமர் என்று அந்தக் கட்டடம் அப்படியே கலகலத்து இடிந்தபொழுது ஒரு பெரிய அதிர் வெடி போட்டது போல இருந்தது. ஓடி வந்து பார்த்தோம். கிழக்குப் பக்கத்தில் இருந்த சுவர் அப்படியே நொறுங்கி உள் பக்கம் சாய்ந்து இருந்தது. மேற்குப் பக்கத்துச் சுவரும் அப்படியே கலகலத்து நின்றது. தெற்குப் பக்கத்து வாசல் சுவரும் இடிந்து உள்ளாகச் சரிந்திருந்தது. எங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. போலீசுக்கும் தீயணைக்கும் படையினருக்கும் யாரோ டெலிபோன் செய்து இருக்கிறார்கள். அவர்களும் வந்தார்கள். கட்டடத்திற்குள் என்ன இருக்கிறது என்று ஒன்றுமே தெரியவில்லை. முதல் நான்தான் பயர் எஞ்சின் ஏணியை இடிந்து நின்ற சுவற்றில் சாத்தி அதன் மேல் ஏறி உள்ளே குதிக்க முயன்றேன். நான் ஏறினபிறகு பல தொண்டர்கள் எனக்குப்பின் தொடராக ஏறி மேலே வந்தார்கள். சுவர் அப்படியே கலகலத்து நின்றது. கால் வைத்துக்கொள்வதற்கு அரை அடி கூட இடமே இல்லை. "ஐயா, ஐயா நீங்கள் கீழே இறங்கி விடுங்கள்" என்று என்னைக் கூட எனக்கு வேண்டியவர்கள் மிகவும் வற்புறுத்தினார்கள். இடிந்த சுவற்றின் மேல் நிற்கிற நான் ஏதாவது விபத்துக்குள் அகப்பட்டுக்



20th July 1964] [திரு. ஆர். வி. சுவாமிநாதன்]

கொள்வேன் என்கிற பயம் அவர்களுக்கு. நான் இறங்கவில்லை. எனக்குப் பின்னால் வந்த சுவற்றின்மேல் ஏறியவர்களை உள்ளே குதியுங்கள் என்றேன். அவர்கள் குதித்தார்கள். இங்கே ஒன்றும் இல்லையே ஐயா என்றார்கள். உள்ளே ஒரு குழந்தை இருப்பதுகூட தெரியவில்லை. ஆனால் வெளியே இருப்பவர்களோ இன்னும் பல குழந்தைகள் வெளியே வரவில்லை என்கிறார்கள். உள்ளே குதித்தவர்கள் இடிந்து சரிந்திருந்த கல் மண்ணை கையால் கிண்டினார்கள். ஒரே தூசு வெறும் சுண்ணாம்பு தூசு. சிமெண்டுப் பொருள் என்பதே கிடையாது அவ்வளவும் காரைப்பொடி. கிண்டிக் கிண்டிப் பார்த்தோம். அதற்குள் போலீசார்களும் அந்தப்பள்ளி வாசல் புறம் சரிந்திருந்த பகுதியை அகற்றிவிட்டு உள்ளே வந்தார்கள். எல்லோரும் கிண்டிப் பார்க்க ஆரம்பித்த பின் ஒன்று இரண்டாக அந்த பச்சிளம் பெண் குழந்தைகளின் சடலம் நீக்கப்பட்டது. வாழ்க்கையில் என்னைப்போன்ற கல் நெஞ்சக்காரன் கிடையாது என்று என் நண்பர்கள் சொல்வார்கள். ஆனால் உண்மையில் அன்றைய தினம் நான் அழுதுவிட்டேன். அதுவும் இந்த இடிபாடில் அகப்பட்ட ஒரு குழந்தையை புழுதி கிளறி எடுத்து கையில் தூக்கியபொழுது அந்தப் பரிதாபகரமான நிலையிலே அந்தக் குழந்தை தன் ஒரு கையை என் கழுத்தில் கொடுத்து அணைத்துக் கொண்டபோது நான் உண்மையில் கதறி விட்டேன். அங்கு நேரில் இருந்து பார்த்தவர்களுக்குத்தான் ரத்தம் கொதிக்கும் உணர்ச்சியை உணர்ந்திருக்க முடியும். நாங்கள் எல்லாம் உள்ளே குதித்து அந்தக் குழந்தைகளை மீட்கும் பணியில் ஈடுபட்டு வேலை செய்து கொண்டிருக்கும்போதுதான் டி.வி.எஸ். ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் வந்தார்கள். வந்தவர்கள் அப்படியே நின்றார்கள். இன்றையதினம் அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையில் டி.வி.எஸ். ஸ்தாபனத்தார் ஆற்றிய தொண்டை பாராட்டியிருக்கிறார்கள். என்னைப்பாராட்ட வேண்டும் என்று சொல்லவில்லை. என்போன்று அந்த மீட்சி வேலையில் ஈடுபட்டவர்களைப் பாராட்ட வேண்டும் என்று சொல்லவில்லை. ஆனால் உண்மைக்கு மாறாக ஒரு அதிகாரி—அமைச்சர் அவர்களுக்குத் தெரியாது. அவர் இங்கே இருந்தார். "இதோ பாருங்கள் உங்களைப்பற்றி பாராட்டி எழுதியிருக்கிறேன்" என்று டி.வி.எஸ். ஸ்தாபனத்தாரிடம் அற்ப சலுகைகளை பெற்றுக் கொள்ளலாம் என்கிற நினைப்பிலோ என்னவோ இந்த மாதிரி அவர்கள் பெரிதும் ஈடுபட்டதாக அறிக்கை தயாரித்து இருப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. உண்மைக்கு மாறுபட்ட இத்தகைய அறிக்கை ஒரு அதிகாரி தயாரித்தார் என்றால் அவருடைய மனோபாவம் எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம். மதுரை முனிசிபாலிட்டியார் அந்த கட்டடத்தை இடித்துத் தள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். பள்ளி நிர்வாகி அதை இடிக்க மறுத்து வந்ததால் அதை முனிசிபாலிட்டியாரே இடித்துத்தள்ள நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளி அதிகாரியோ சென்னைக்கு வந்து அவ்வாறு இடித்துத் தள்ளுவதற்கு ஸ்டே வாங்கியிருக்கிறார் என்றால் அத்தகைய ஒரு ஸ்டேயைக் கொடுத்தது யார், எந்த அதிகாரத்தின்மீது அந்த அதிகாரி ஸ்டே கொடுத்தார் என்பதைப்பற்றி விவரத்தை

**கனம்** அமைச்சர் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இத்தனை குழந்தைகள் மாண்டு இருக்கின்றன என்றால் நிச்சயமாக அந்தப் பாவம் அந்த அதிகாரியைத்தான் சுற்றும்.

அடுத்து, இன்னொன்று அந்தக் காலத்தில் ஜில்லா போர்டில் நான் வைஸ்-பிரசிடெண்ட்டாக இருந்து இருக்கிறேன். பிரசிடெண்ட், வைஸ் பிரசிடெண்ட் ஆகிய நாங்கள் பள்ளிக் கூடங்களுக்குச் சென்றால் அந்தப் பள்ளிக்கூட கட்டிடம் எப்படி இருக்கிறது என்று பார்ப்போம். அப்படி பார்க்கக்கூடிய அதிகாரம் கல்வி அதிகாரிகளுக்கு இருக்கிறது. மதுரை டிவிஷனல் ஆபிஸ் இருக்கிறது. டி.ஈ.ஓ. இருக்கிறார். டெபுடி இன்ஸ்பெக்டர் கள் இருக்கிறார்கள். இருந்தும் அந்த அதிகாரிகளில் யாராவது ஒருவர் அந்தக் கட்டிடத்தில் பள்ளிக்கூடம் நடப்பது குழந்தை களுக்கு ஆபத்தானது என்று சொல்லியிருக்கிறார்களா என்று கேட்டேன். அந்த அதிகாரிகள் பெப்பெப்பே பெப்பெப்பே பெப்பெப்பே என்று விழித்தார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விஷயம் மிகவும் முக்கியமானதாகையால் சபை யின் அனுமதி பெற்று இதை பிற்பகல் 2 மணி வரை நீடிக்கலாம் என்கிற யோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கனம் உதவி சபாநாயகர்:** அது பற்றி பிறகு அமைச்சர் அவர்கள் அவசியமானால் ஒரு பிரேரணையைப் பிரேரேபிப்பார்கள். கனம் அங்கத்தினர் ஆர். வி. சுவாமிநாதன் தொடர்ந்து பேசலாம்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன்:** கல்வி இலாக்கா இன்ஸ்பெக்டர் 'கட்டிடம் எப்படி கட்டப்பட்டிருக்கிறது என்பதைக் கவனிப் பது எங்களுடைய வேலை இல்லை' என்று கூறினார். அந்தப் பள்ளிக் கூட உரிமையாளர் எப்படியாவது முனிசிபாலிடியைச் சரி செய்து அனுமதி வாங்கி விட்டார் என்றாலும், அந்தக் கட்டிடம் சரி இல்லை, மோசமாக இருக்கிறது என்று ஏன் சொல்லவில்லை என்று கேட் டால் அது அவர்களுடைய வேலை இல்லை என்று சொல்லித் தட்டிக் கழிப்பது சரியல்ல. அதற்குக் கல்வி அதிகாரிகளும், கல்வி இலாகா வும் தகுந்த பதில் கூறியே ஆகவேண்டும். நம்முடைய தேசத்தில், குறிப்பாக நம்முடைய மாகாணத்தில் உள்ள மக்கள் என்ன கஷ்டம் வந்தாலும் அது ஆண்டவனுடைய சித்தம் என்று நினைத்து பொறுத்துக் கொண்டு போகிறார்கள். அந்தக் காலத்தில் கூறு வார்கள்—ஒருவன் பெரிய காரில் போவான்; இன்னொருவன் கட்டை வண்டி இழுத்துக் கொண்டு போவான். வண்டி இழுப்பவன் காரில் போகிறவனைப் பார்த்து 'முன் ஜென்மத்தில் அவன் புண்ணியம் பண்ணியிருக்கிறான்; ஆகவே காரில் போகிறான்; நான் என்ன பாவம் செய்தேனோ வண்டி இழுக்கிறேன்' என்றுதான் சொல்வான். ஆனால் இன்றுள்ள நிலைமையோ காரில் போகிறவனைக் கைவண்டி இழுக்கச் செய்கிறேன் என்று சொல்லக்கூடிய நிலைமையாகும். என்னைப் பொறுத்தவரையில் நான் 'அவனைக் கைவண்டி இழுக்க வைப்பேன் என்று சொல்லாதே; உனக்கும் ஒரு கார் வேண்டும் என்று சொல்' என்றுதான் சொல்வேன். மதுரையில் இவ்வளவு



பெரிய துக்ககரமான சம்பவம் நிகழ்ந்திருப்பதற்குப் புரட்சிகர மான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கலாம். ஆனால் நம்முடைய ஜனங்கள் அமைதியான ஜனங்கள்; சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஜனங்கள். ஆகவே, அமைதியுடன் இருக்கிறார்கள். ஆனால் ஜனங்கள்தான் அமைதியாக இருக்கிறார்களே என்று நினைத்து அற்பமான விஷயம் போல் ஜில்லா அதிகாரிகள் ரிப் போர்ட் அனுப்பியிருக்கிறார்களே அதே மாதிரி நினைத்து விட்டால், பின்னால் மிகுந்த மனோவேதனையை அளிக்கக்கூடிய அளவுக்கு நிலைமைகள் ஏற்படும் என்பதை நான் கூற விரும்புகிறேன். இதை என்னுடைய கட்சியைச் சேர்ந்த அரசாங்கத்திற்கு நான் தாழ்மை யோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கட்டிடம் இடிந்து விழுந்த அன்று நான் அங்கே 'பிள்ளைகளைத்
தூக்கி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிக் கொண்டிருந்தேன். இடிந்த
கட்டிடத்தில் நின்று கொண்டிருந்த சுவற்றில் ஒரு கயிற்றைக்
கட்டி இலேசாக இழுத்த உடன் அந்தச் சுவர் அப்படியே விழுந்து
விட்டது. அந்தச் சமயத்தில் நான் அந்தக் கட்டிடத்தின் உள்ளே
இறங்கினேன். நான் இதையெல்லாம் பெருமையாகச் சொல்ல
வில்லை. காலை 11-¾ மணியிலிருந்து 3½ மணி வரை அங்கேயே
இருந்தேன். என்னுடைய சட்டையெல்லாம் கிழிந்துவிட்டது.
சாமிநாதன் என்று யாரும் அடையாளம் கண்டு கொள்ள முடியாத
நிலையில் இருந்தேன். நண்பர் சங்கரன் அவர்கள் கோர்ட்டில்
இருந்து திரும்பி வரும்போது என்னைப் பார்த்தார்கள். கம்யூ
னிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே.டி.கே. தங்கமணி அவர்கள் முதலில்
என்னைப் பார்த்தபோது என்னை அடையாளம் கண்டு கொள்ள
வில்லை. பின்னர்தான் 'ஆர். வி. சாமிநாதனா!" என்று ஆச்சரியத்
துடன் கேட்டார்கள். அந்தத் தெருவில் உள்ள ஐந்தாறு வீடுகளைக்
காட்டி இவையெல்லாம் யாருடைய வீடுகள் தெரியுமா என்று
ஜனங்கள் கேட்டார்கள். அதற்குப் பதிலாக 'அந்த வீடுகள் எல்
லாம் இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தவருக்குச் சொந்த
மானவை' என்று சொன்னார்கள். அப்போதுதான் நான் உணர்ந்
தேன் 'இந்த மாதிரிப் பள்ளிக்கூடங்களை நடத்துவதுகூட ஒரு
வியாபாரமாக நடந்து வந்திருக்கிறது' என்பதை. பள்ளிக்கூடம்
கட்டுவதற்கு வந்த பணத்தையெல்லாம் தனக்கு என்று வீடுகள்
கட்டப் பயன்படுத்தியிருக்கிறார். அவ்வாறு வீடுகள் கட்டி வாட
கைக்கு விட்டிருக்கிறார்.

இந்த நிலைமையில் அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தவர்
என்ன சொல்கிறார் என்றால் 'மறுபடியும் பள்ளிக்கூடத்தை நடத்
தப்போகிறேன்' என்று சொல்கிறார். சிறு பிள்ளைகளுக்கு எல்லாம்
மிட்டாய் கொடுத்து 'பள்ளிக்கூடம் நடத்துகிறேன்' என்று
சொல்லி அவர்களைத் தன்னுடைய வீட்டில் சேர்த்துக் கொண்டிருக்
கிறார். அப்படி அங்கே பிள்ளைகளைச் சேர்த்து பாடம் சொன்னால்
பின்னால் ரெக்கக்னிஷன் வாங்கலாம் என்ற எண்ணத்தில் அவ்வாறு
செய்து வருகிறார். இது ஒரு வியாபாரமாகவே போய்விட்டது.
மானேஜ்மெண்ட் ஸ்கூல் நடத்தி லட்சக் கணக்கில் பணம் சம்பாதித்
திருக்கிறார்கள் என்று அன்றுதான் நான் தெரிந்து கொண்டேன்.
இதை நண்பர் வெங்கட்டராமன் அவர்களும்—கல்வி இலாகாவை

வைத்திருக்கும் முதல் அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை—முதல் அமைச்சர் அவர்களும் நன்கு ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும். நான் ரொம்ப பரிசுத்தமான இந்து. இங்கு கிறிஸ்தவர்கள், ரோமன் கத்தோலிக்கர்கள் பள்ளிக்கூடங்கள் கட்டுகிறார்கள். அவர்கள் சிறிய பள்ளிக்கூடம் நடத்தினாலும் சரி, பெரிய பள்ளிக்கூடம் நடத்தினாலும் சரி, மிக உயர்ந்த முறையில், அருமையான முறையில் நடத்துகிறார்கள். உண்மையிலேயே அந்த கிறிஸ்தவ மிஷினரிகளுக்கு தமிழ நாட்டு மக்கள் மிகவும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்துக்கள் மட்டுமல்ல, முஸ்லிம்களும், மற்ற மதத்தினரும் பள்ளிக்கூடம் நடத்தினால் அது பணம் சம்பாதிக்கவே நடத்துகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை ஆனால் கிறிஸ்தவ மிஷினரிகள் மிக உயர்ந்த முறையிலே நடக்கின்றன. என்னிடம் ஒருவர் வந்து மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடம் நடத்த அனுமதி வாங்கித் தாருங்கள் என்று கேட்டார் "வியாபாரம் செய்யத் தொடங்கி விட்டீர்களா? வேறு ஏதாவது வியாபாரம் செய்யுங்கள். வீணைகப் பாவத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள்" என்றுதான் சொன்னேன். இந்த ஒரு நிகழ்ச்சியை மனதில் கொண்டு 'மானேஜமெண்ட் ஸ்கூல் வேண்டாம்' என்று ஒரு நமஸ்காரம் செய்து அவற்றையெல்லாம் அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஆர்.டி.ஓ. ரிப்போர்ட் வந்திருக்கிறது. இதைப் பற்றிய விவரங்களை அரசாங்கமே நன்கு அறிந்து கொள்ள வேண்டும். இது ஒரு குறிப்பிட்ட ஒரு கட்சியை மட்டும் பொறுத்த விஷயமோ அல்லது இது அரசாங்கத்தை மட்டும் பொறுத்த விஷயமோ இல்லை. அரசாங்க அதிகாரிகள் தப்புப் பண்ணியிருக்கிறார்கள். ஆகவே, இதைப் பற்றி எல்லாம் விரிவாக ஆராய்ந்து ரிப்போர்ட் கொடுக்க தனிப்பட்ட முறையில் ஒரு 'நான்-அபிஷியல்' கமிட்டி போட்டு விசாரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கட்டடத்திற்குப் பிறகாவது புதிய நல்ல காரியங்கள் நடை பெறவேண்டுமென்று கருதுகிறேன். ஆசைப்படுகிறேன். அதற்காக அரசாங்கம் ஒரு 'நான்-அபிஷியல்' கமிட்டி போட்டு விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இவ்வளவு நேரமாக இரண்டு மூன்று கனம் அங்கத்தினர்கள் மிக விரிவான முறையிலே மதுரையில் நடந்த பள்ளிக்கூடக் கட்டிட விபத்தைப் பற்றிக் கூறினார்கள். நான் அந்த நாளில் சென்னையில் இருந்தேன். இந்தச் சம்பவம் ஏற்பட்டது என்று அறிந்தவுடன் அன்றைக்கே புறப்பட்டு அடுத்த நாள் காலையில் மதுரைக்குச் சென்றேன். அங்கு சென்று காலையில் பெண் குழந்தைகள் எல்லாம் அலங்கரித்துக் கொண்டு பள்ளிக்கு வந்ததும் திரும்பிச் செல்லும்போது அந்தக் குழந்தைகள் அலங்கோலமான நிலையிலே ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டதையும் கேட்கும்போது நெஞ்சம் பதைத்தது; வயிறெல்லாம் அப்படியே கொதித்தது என்று சொன்னால்கூட அது



மிகையாகாது. அன்று நல்ல வேளை சனிக்கிழமை. எல்லா வகுப்புகளும் நடைபெறவில்லை. ஸ்பெஷல் வகுப்புகள் மட்டும் நடந்ததன் காரணமாக ஒரு சில குழந்தைகள் மாத்திரந்தான் அன்றைய விபத்துக்கு உள்ளாயினர். இந்த விபத்தைப் பற்றி மிகச் சுலபமான முறையில் யாரும் சொல்லி அணைத்துவிட முடியாது. இந்தப் பள்ளிக்கூடத்தின் கட்டிடம் ஒரு சமாதியைச் சுற்றி கல்லாலான ஆறடிச் சுவற்றின்மேல் கட்டப்பட்டது. அந்தச் சுவற்றின் மேல் மூன்று மாடிக் கட்டிடம் கட்டினால் தாங்குமா என்பதைப்பற்றிக் கவனிக்காது கட்டப்பட்டது முதல் குற்றம்.

அந்தக் கட்டடத்திற்கு ப்ளான் போட்டு அந்தப் பிளானைப் பாஸ் செய்ய முனிசிப்பாலிட்டிக்கு அனுப்பி வைத்து அது பாசாகாமல் கட்டியது இரண்டாவது குற்றம். முனிசிப்பாலிட்டி பாஸ் செய்யவில்லை. ஆனால் கட்டிடம் கட்டியாகிவிட்டது. அதை இடிக்க முடியுமா என்பதற்காக சென்னைக்கு வந்து டவுன் ப்ளானிங் ஆபிசுக்குச் சென்று ஸ்பெஷல் பெர்மிஷன் எடுத்துச் சென்றது மூன்றாவது குற்றம். கட்டடம் சம்பந்தமான குற்றங்கள் இவை. கல்வி பற்றி கவனிக்கும் உத்தியோகஸ்தர்கள் அந்தக் கட்டடத்திற்குச் சென்று அங்கு பள்ளிக்கூடம் நடத்தலாமா கூடாதா என்பதை சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்படி சிந்தித்துப் பார்த்தார்களா இல்லையா என்பதைப் பற்றி இப்போது யாருக்கும் தெரியவில்லை. முனிசிப்பாலிட்டி கல்வி இலாகா பேரில் குற்றம் சுமத்தி விட வேண்டுமென்று நினைக்கிறார்கள். கல்வி இலாகா முனிசிப்பாலிட்டி பேரில் குற்றம் சுமத்த நினைக்கிறார்கள். ஆகவே ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு விபத்து ஏற்பட்ட வுடன் அறிக்கை விடுத்துக் கொண்டார்கள். அதெல்லாம் இங்குள்ள அனைவருக்கும் தெரிந்த விஷயமே. தப்பித்துவிட வேண்டுமென்று அறிக்கை போட்டால் போதாது. இந்த விபத் தைப் பார்த்தவர்கள், அங்கு அப்போது சென்று சேவை செய்த வர்கள், கட்டடம் கட்டியிருக்கும் முறையைப் பார்த்தவர்கள் உள்ளனர். மதுரை மக்களுக்கு அறிக்கை மட்டும் மனத் திருப்தி அளிக்காது என்று இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாதிரி எவ்வளவு கட்டடங்கள் இருக்கின்றன? இந்த மாதிரி ஸ்பெஷல் பெர்மிஷன் யார் யாருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது? என்பதெல்லாம் விசாரித்தால்தான் தெரியும். இது நடந்துவிட்டது. ஆகவே குற்றம் செய்தவர்களை என்ன செய்ய முடியும் என்று நினைத்தாலும்கூட இதை சாதாரணமாக நினைத்து விட்டு விடக் கூடாது. குற்றம் செய்தவர்களுக்கு மன்னிப்பு கொடுக்கலாம். ஆனால் இந்தக் குற்றம் செய்வதற்கு யார் யார் உடந்தையாக இருந்தார்கள் என்பது மட்டும் மதுரை மக்களுக்கு தெரிந்தால் அதுவே போதுமானது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சுவர் மீது அலாக்காக, குழந்தைகள் விளையாடுவது போல் கட்டைகளை வைத்து கட்டப்பட்டிருக்கிறது. அஸ்திவாரம் பேரில் கட்டப்பட்ட கட்டடமாகத் தோன்றவில்லை. ஆகவே நன்கு பரிசீலனை செய்து இருந்து கல்வி இலாகாவால் எப்படி ரெக்கக்னிஷன் கொடுக்கப்

[திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம்] [20th July 1964

பட்டது, அந்தக் கட்டடம் முனிசிபாலிட்டியின் பெர்மிஷன் இல்லாமல் எப்படிக் கட்டப்பட்டது, யாரிடம் ஸ்பெஷல் பெர்மிஷன் வாங்கினார்கள் என்பதெல்லாம் மதுரை மக்களுக்கு தெரிய வேண்டும் அதற்குண்டான நிவாரணங்களை சர்க்கார் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் சர்க்காருக்குத்தான் நல்ல பெயர் கிடைக்கும். அப்படிச் செய்தால் தான் இதுமாதிரி குற்றம் யாரும் செய்ய முன் வரமாட்டார்கள், பயமும் இருக்கும். ஆகவே குற்றம் செய்தவர்களைக் கண்டு பிடித்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விபத்து ஏற்பட்ட பிறகு அங்குள்ள பெரிய மனிதர்கள் பணக்காரர்கள் முன்வந்து எவ்வளவோ உதவிகள் செய்தார்கள். மதுரை ராமனுட் சேம்பர் ஆப் காமேர்ஸ் உணவு, மருந்துகள் எல்லாம் கொடுத்தார்கள். சர்க்காரும் எல்லாம் செய்தார்கள். இந்த விபத்துக்குள்ளான மக்களுக்கு தாராளமாக வேண்டிய உதவிகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறந்த குழந்தைகளின் பெற்றோர்களுக்கு நிவாரணம் அளித்ததாகக் கூறுகிறார்கள். 500 ரூபாய் கொடுத்த தாக. இன்னும் கூடுதல் கொடுக்கலாம். அங்கயீனமான குழந்தைகளாக இருந்தால் அவர்களுக்கு மிக மிக அதிகமான அளவில் நிவாரணம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

### VII.—GOVERNMENT MOTION FOR SUSPENSION OF RULE 58 OF THE ASSEMBLY RULES.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Deputy Speaker, Sir, under Rule 244 of the Madras Assembly Rules, I move—

"That Rule 58 be suspended and the time extended till the discussion on the subject is concluded".

The motion was put and carried unanimously.

### VI.—DISCUSSION FOR SHORT DURATION *RE*-COLLAPSE OF BUILDING OF SARASWATHI HIGH SCHOOL, MARINAGARAM, MADURAI—*cont.*

1-30 p.m. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மதிப்பிற்குரிய உதவி சபா நாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் பேச வேண்டுமென்று நினைக்கும்போது உண்மையிலேயே நின்று பேச முடியாத ஒரு சூழ்நிலைதான் என் போன்ற பெண்களுக்கு ஏற்படுகிறது. ஒரு உயிரைக் கொன்றால் உடனே அவர்களுக்கு தூக்கு தண்டனை கொடுக்கிறோம், அரசாங்கத்திலிருந்து. ஆனால் 36 உயிர்களைக் கொன்றவர்களை, தாய் தகப்பன்களை பரிதவிக்க விட்டவர்களை, இன்னும் வைத்திருப்போம் என்றால் அது அவர்களுக்கு ஊக்கம் கொடுப்பது போலாகும் என்றுதான் சொல்லவேண்டும். என்னைப் பொறுத்த வரையில், அந்தச் சம்பவம் நடந்ததற்கு சிறிது பின் தங்கிச் சென்றேன். கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியபடி, கயிற்றைப் போட்டவுடன் சுவறு விழுந்தது. நூலை வைத்து சோப்பை அறுத்தால் எப்படி அறுபடுமோ அதேபோன்று கயிறைப் போட்டவுடன் அந்தக் கட்டடம் இரண்டாக விழுந்தது. அந்த முறையில் இருந்த கட்டடத்தை கட்டிய என்ஜினியர் யார்? எப்படி அதை அலவ் செய்தார்கள்? சுண்ணாம்பு போட்டார்களா?



20th July 1964] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

பொறுக்கு மணலை வைத்து செய்தார்களா என்று பார்க்க வேண்டும். திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள், ஆண் குழந்தை வைத்திருக்கிறார்கள் என்று. ஒரு சில குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகளில் ஒரு குழந்தை ஸ்பாட்டில் இறந்துவிட்டது. இன்னொரு குழந்தையை தூங்கும்போது எடுத்தவுடனே அந்தப் பகுதி முடி வந்துவிட்டது. அந்தக் குழந்தை குற்றுயிராக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது. அக் குழந்தைகளின் தாய் தந்தையை பார்க்க மிக பரிதாபமாக இருந்தது. ஒரு சிலர் தங்கள் பிழைப்பிற்காக பள்ளிக்கூடம் வைத்து விடுகிறார்கள். இதுகுறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், ஏனோதானோ என்று அறிக்கை சமர்ப்பித்துக் கொண்டிருந்தால் மக்களுக்கு பதில் சொல்லும் நிலை வெகு விரைவில் வந்து விடும் என்று அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பட்டிக்காடானால் பாவாயில்லை. டவுனில் கட்டிய பள்ளிக்கூடம், பல நிபுணர்கள் பார்த்து, கல்வி அதிகாரிகள் பார்த்து இன்ஸ்பெக்டர் அம்மா அவர்கள் போக்கில் ரிப்போர்ட் செய்திருக்கிறார்கள். ரெயில் போகும்போது கட்டடம் நடுங்குகிறது என்று கூறியும் அவர்கள் ரிப்போர்ட் எழுதாமல் இருந்தால் அவரை ஏன் வேலையில் வைத்திருக்கவேண்டும்? அவர்களுக்கு குழந்தைகள் இருந்து, அக்குழந்தைகள் இப்படி இறந்திருந்தால் தெரியும் அவர்களுக்கு . . . . .

MR. DEPUTY SPEAKER: The Hon. Member should be brief.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: எங்கள் உள்ளம் தாய் உள்ளம். இன்ஸ்பெக்ஷன் செய்த அத்தனை அதிகாரிகள் பேரிலும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும். கல்வி இலாகாவைப் பொறுத்தவரை பல பேர்கள் சிபார்சுக்கு வந்திருக்கிறார்கள். உலகத்திலேயே நடக்காததொரு சம்பவம், இந்தியாவில், அதுவும் தமிழ் நாட்டில் மதுரையம்பதியில் நடந்திருக்கிறது, வேதனை தரும் விஷயமாகும். இதை ஏனோ தானோ என்று விடாமல் தக்க நடவடிக்கைகள் எடுத்து யார் யாருக்கு தண்டனை கொடுக்கவேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டும் என்று இறந்த குழந்தைகள் சார்பிலும், காயப்பட்ட குழந்தைகள் சார்பிலும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் சட்ட மன்றத் துணைத் தலைவர் அவர்களே, மதுரை நிகழ்ச்சி, எவ்வளவு இரங்கத் தக்க நிகழ்ச்சி என்பதும், அந்த நிகழ்ச்சியை நேராக கண்டவர்களும், செவியால் கேட்டவர்களும், எப்படிப்பட்ட ஆளாத் துக்கத்திற்கும் துயரத்திற்கும் ஆள்பட்டார்கள் என்பதை இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் தெரிவித்ததிலிருந்து மிக நன்றாக அறியலாம். இந்தப் பிரச்னை இந்த மன்றத்தில் விவாதத்திற்கு வந்ததின் மூலமாக மதுரையில் ஏற்பட்ட இந்த அவல நிலை, இனிமேல் எங்கும் ஏற்படாத அளவுக்கு பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. இடிந்து விழுந்த பள்ளிக்கூடம், இனிமேல் இடிந்து விழவிருக்கின்ற பள்ளிக்கூடத்தின் மேல்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [20th July 1964

எடுக்கவேண்டிய நடவடிக்கைகளுக்கு அறிகுறியாகவும், இவை சம்பந்தமாக இனிமேல் அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்கும் இந்த விவாதம் உறுதுணை புரியும் என்று நான் கருதுகிறேன். மதுரையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், மதுரை மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும், உருக்கமாக எடுத்து தெரிவித்ததிலிருந்தும், அவர்களுடைய உள்ளங்கள் எவ்வாறு குமுறிக் கிடக்கின்றன என்பதையும் நம்மால் புரிந்து கொள்ள முடிந்தது. அதே போன்றுதான் நாட்டில் இருக்கின்ற லட்சக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான மக்களுடைய உள்ளங்கள் குமுறிக்கொண்டு கிடந்தன என்பதை"யும் நாம் உணருகின்றோம். இதில் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் மூலமாக எதிர்காலத்தில் பள்ளிக்கூடங்கள் நடத்துகின்றவர்களுக்கு நல்லதொரு படிப்பினை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியும். இந்தக் கட்டடம் இடிந்து விழுவதற்கான காரண காரியங்களை மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்தார்கள். நடந்த விவரங்களையும் மன்ற உறுப்பினர்கள் தெளிவாக எடுத்துத் தந்தார்கள். இந்தக் கட்டடம் இடிந்து விழுந்த காட்சியை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் நேரில் கண்டு வருந்தி அவர்கள் வெளியிட்ட செய்தியும் பத்திரிகையில் வந்திருந்தது. "இந்தக் கட்டடத்திற்கு பள்ளிக் கூடம் நடத்த எப்படி அனுமதி கொடுத்தார்கள் என்பதே ஆச்சரியமாக இருக்கிறது" என்று அவர்கள் கூறிய சொற்றொடரையும் பத்திரிகைகளில் வெளியிட்டிருந்தார்கள். அவ்வளவு பயங்கரமான சூழ்நிலையில் அந்தக் கட்டடம் அமைந்திருந்தது. இதை இயற்கையால் ஏற்பட்ட அவல நிலை என்று எடுத்துக்கொள்வதற்கும் இடமில்லை. இதன் மீது, இந்தக் கட்டடத்தின் மீது அதிகாரிகள் தக்க நேரத்தில் நடவடிக்கைகள் எடுத்திருந்தால், இதை தடுக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தால், இதன் மீது போதிய கவனம் செலுத்தியிருந்தால், இந்தக் கோரமான நிகழ்ச்சி ஏற்படாமல் செய்திருக்க முடியும். அத்தகைய நிலைமை இல்லாததின் காரணமாகத்தான் இந்த கோர நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து இந்த அரசாங்கம் எடுத்துக்கொள்ளுகின்ற நடவடிக்கைகளைப் பொறுத்துத் தான் எதிர் காலத்தில் நல்ல முறையில் பள்ளிகளை நடத்துவதற்கு வழிவகை ஏற்பட முடியும். இதை ஒட்டிதான் மன்ற உறுப்பினர் தந்திருக்கின்ற கருத்துக்களுக்கேற்ப அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இடிந்து விழுந்த பள்ளிக் கட்டடம், ஏதோ முன்னால் சமாதி இருந்த இடத்தில் கட்டப்பட்டிருந்ததாகவும், கட்டடம் பழமையாக இருந்ததினால் மேலும் பள்ளியை நடத்துவதற்கு ஆணையரிடத்தில் அனுமதி கேட்டதாகவும், அதற்கு ஆணையர் அனுமதி கொடுக்க மறுத்ததாகவும், அதற்குப் பின்னால் மேலிடத்தில் சென்று அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இவ்விதம் இந்தக் குற்றத்தைச் செய்த அதிகாரி யார் என்று கண்டுபிடித்து தண்டனை கொடுப்பதின் மூலமாக, இனிமேல் அனுமதி கொடுக்கின்ற விஷயத்தில் அதிகாரிகளுக்கு சிறந்ததோர் எச்சரிக்கையாகவும் இது அமையக்கூடும். தகுந்த நேரத்தில் இதற்கு அனுமதி கொடுக்காமல் தடுத்து நிறுத்திப்



20th July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

படி உத்தரவு போட்டிருந்தால், இந்த கோர நிகழ்ச்சி ஏற்பட்டிருக்காது; 37 பேர்களின் உயிர்களை இழந்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது; இவர்களை இழந்த பெற்றோர்கள், உற்றார்கள், உறவினர்கள் இவர்களின் கண்கள் கலங்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இதை பார்த்த மக்கள் இன்று ஆருத்துயரில் ஆழ்ந்திருக்கிறார்கள். மேலும் இப்போதும் பல கட்டடங்கள் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்ற செய்தியும் பத்திரிகைகளில் வந்துக்கொண்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட கட்டடத்தில் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று ஆணையருக்கு விண்ணப்பித்ததாகவும் அதற்கு ஆணையர் மறுத்ததாகவும் பின்னால் பள்ளிக்கூடம் நடத்துகின்ற நிர்வாகிகளுக்கு தொடர்ந்து நடத்த தங்களுக்கு உரிமை இருக்கின்றது என்று கூறி, டௌன் பிளானிங் ஆபீஸருக்கு விண்ணப்பித்ததாகவும், அவரும் இவருடைய கோரிக்கைக்கு சிபாரிசு செய்யவில்லை என்றும் கூறப்பட்டது. இதையும் மீறி அனுமதி அளித்தது யார், என்று கண்டறிய வேண்டியது அரசாங்கத்தின் முழு முதற் கடமையாகும். தனியார் கட்டுகின்ற பள்ளிக்கூடங்களில் கல்வி அதிகாரிகள் கட்டடத்தைப் பார்க்கும்போது, எவ்வளவு அகலம், எவ்வளவு உயரம், எத்தனை பிள்ளைகள் வசதியாக இருக்கலாம், விளையாடுவதற்கு இடமிருக்கிறதா என்று பார்க்கிற அளவுக்குத்தான் அவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பள்ளிக்கூடக் கட்டடம் உறுதியானது தானா, இதில் பள்ளிக்கூடம் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா என்று பார்ப்பதற்கு இவர்களுக்கு (கல்வி அதிகாரிகளுக்கு) உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. சாதாரணமாக சர்க்கார் கட்டடங்கள் கட்டுவதென்றால், பொதுப்பணித்துறையை சார்ந்த என்ஜினியர்கள் கட்டடம் கட்டுவதற்கான திட்டத்தைப் போடுகிறார்கள், அதை நிறைவேற்றித் தருகிறார்கள், கட்டடம் சரியாக இருக்கிறது, உறுதியாக இருக்கிறது என்பதற்கு என்ஜினியர்கள் சான்றிதழ் தருகிறார்கள். அதேபோன்று தனியார் கட்டுகின்ற கட்டடம் உறுதியானது தானா என்று பார்த்து அதற்கு சான்றிதழ் கொடுப்பதற்கான எந்தவிதமான ஏற்பாடும் இருப்பதாக தெரியவில்லை. ஆகவே அதிகாரிகள் தனியார் கட்டுகின்ற கட்டடங்களை பார்வையிடுகின்ற நேரத்தில், இவ்வளவு அகலம், நீளம் என்று பார்க்கின்ற உரிமை மட்டுமல்லாமல், கட்டப்பட்டிருக்கிற கட்டடம் உறுதியானது தான் என்று பொதுப்பணித் துறையைச் சார்ந்த என்சினியர்கள் சான்றிதழ் தரக்கூடிய நிலைமை இருந்தால், இம்மாதிரியான அவல நிகழ்ச்சி ஏற்படாதவாறு தடுக்க முடியும் என்று கருதுகிறேன். இந்தக் கோர நிகழ்ச்சி பொதுமக்களின் மனதில் எவ்வளவு கவலையை உண்டுபண்ணியிருக்கிறது என்பதை உணர்ந்து இதில் எந்தவிதமான கட்சி வேறுபாடும் இல்லாமல், பிரச்னையைப் பொறுத்தவரை இது எந்தவிதமான கட்சிப் பிரச்னையும் அல்ல, இது கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னை, இது மனிதப்பிரச்னை, மனிதாபிமான பிரச்னை, நாட்டின் வாழ்க்கைப் பிரச்னையில் ஒன்று என்று கருதி, எல்லாக் கட்சி உறுப்பினர்களும்

யும் கொண்ட ஒரு குழு அமைத்து, ஒரு விசாரணையை நடத்தி, அவர்கள் கொடுக்கின்ற அறிக்கையின் மீது நடவடிக்கை எடுக்க அரசினர் முன்வருவார்களேயானால் அது நாட்டு மக்களுக்குத் திருப்தி அளிக்கக்கூடியதொன்றாக அமையக் கூடும். வெறும் அதிகாரிகளே விசாரணை செய்து, அதிகாரிகளே தரக்கூடிய அறிக்கைகளையே மட்டும் நம்பிக்கொண்டிருக்கும்படியான அலட்சியப்போக்கில் இருந்தால், ஏதோ அறிக்கையை விட்டார்கள் என்று மட்டும் நினைத்து பொதுமக்களின் மனம் குமுறிக்கொண்டிருக்கும். மேலும் இனிமேல் கட்டப்படுகின்ற கட்டடங்களுக்கு சான்றிதழ் கொடுக்க வேண்டும் என்ற முறை வகுக்க வேண்டும். இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்ற பள்ளிக்கூட கட்டடங்கள் பல 100, 150 வயதுள்ளவைகளாகவும் இருக்கின்றன. அவைகள் எல்லாம் உறுதியானது தானா, தொடர்ந்து அதில் பள்ளிக்கூடம் நடத்தலாமா, இல்லையென்றால் அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டியது மிகமிக முக்கியம்.

மேலும், வியாபார நோக்கத்தோடு பள்ளிக்கூடம் நடத்துகின்றவர்கள் இருப்பார்களேயானால் அத்தகைய பள்ளி நிர்வாகத்தை எல்லாம் அரசினரே ஏற்றுக்கொள்வதற்கு முன் வருதல் வேண்டும். மதுரையைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பள்ளிக்கூடத்தை நடத்துவதற்கு மேலும் நடத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இதில் படித்த பிள்ளைகள் தொடர்ந்து படித்துக்கொள்வதற்குரிய வாய்ப்பையும் வசதியையும் அரசாங்கம் செய்து கொடுத்தல் வேண்டும். இடிந்து விழுந்த பள்ளியில் படித்துக்கொண்டிருந்த பிள்ளைகள் மேலும் தொடர்ந்து படிப்பதற்கான எல்லா வசதிகளையும் இதற்கான பொறுப்பை பெற்றோர்களிடம் விடாமல் அரசாங்கமே மேற்கொள்வதற்கு முன் வருதல் வேண்டும். வியாபார நோக்கில் யாரேனும் பள்ளிக்கூடம் நடத்துவதாக இருந்தால் அவர்களிடமிருந்து பள்ளிகளை எல்லாம் அரசினரே வாங்கி, எதிர்காலத்தில் அரசாங்கமே அப்பள்ளிகளை எல்லாம் நடத்துவதற்கு முன் வருதல் வேண்டும். கடமை உணர்ச்சியோடு, பள்ளிக்கூடங்கள் நடத்துவதாக இருந்தால் அவர்களுக்கு விலக்கு அளிப்பதில் தவறு இல்லை, வியாபார நோக்கத்தோடு நடத்துவதாக இருந்தால் அதை அரசாங்கமே ஏற்றெடுத்து நடத்துவது மிகவும் நல்லது. மதுரையில் நடந்த இத்தகைய நிகழ்ச்சி எதிர்காலத்திற்கு சிறந்ததொரு படிப்பினையாக அமைதல் வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு யார் காரணம், என்ன காரணம் என்பதை கண்டறிய, நான் முன்பு கூறியது போல் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து விசாரணை செய்ய, இந்த அரசு முன் வருதல் வேண்டும். அதன் மூலம் உறுதியான பலன் கிடைக்கும், அதன் மூலமாக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு உதவியாகவும், தெளிவாகவும் இருக்கும் என்று தெரிவித்து என் வார்த்தைகளை முடிக்கிறேன். வணக்கம்.





**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, மதுரையிலே நிகழ்ந்த நிகழ்ச்சி மிகவும் துக்ககரமானது, வருந்தத்தக்கது. நமது மாகாணத்தில் இருக்கின்ற மக்கள் அனைவரையும் ஆழ்ந்த துக்கத்தில், வருத்தத்தில் ஆழ்த்தியது என்பதில் யாரும் வேறு அபிப்பிராயம் கொள்ளவில்லை. இந்த நிகழ்ச்சி தமிழ்நாட்டுக்கு இருந்த நல்லபெயருக்கு ஒரு குறைபாடாக அமைந்துவிட்டது என்று நாங்கள் கருதுகிறோம். தமிழ்நாட்டில் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது, தமிழ்நாட்டில் கல்வி முன்னேறியிருக்கிறது, தமிழ்நாட்டில் எல்லோருக்கும் இலவசக் கல்வி கிடைக்கின்றது, கிராமங்கள் தோறும் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன என்றெல்லாம் கல்வித்துறையில் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த நமக்கு இது ஒரு கேடாக நடந்துவிட்டது என்பதை நாங்கள் உணருகின்றோம். அதற்காக நாங்கள் மிகவும் வருத்தப்படுகின்றோம்.

இது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பித்ததைப்பற்றி குறிப்பிட்டார்கள். இதில் விவரங்கள் மட்டும் கேட்கப்பட்டது. எனவே உடனடியாக என்னென்ன செய்யப்பட்டது, என்ன நடந்தது, என்கின்ற விவரங்கள் கொடுக்கப்பட்டதே தவிர வேறு ஏதோ இதைப்பற்றிய முழு ரிப்போர்ட்டையும் தயாரித்து கொடுக்கவில்லை. காரணம் என்னவென்றால், ரூல் 41-ன் கீழ் கொடுக்கப்படும் அறிக்கை ஃபாக்சுவலாக இருக்கவேண்டும். அந்த முறையில் தான் இருந்த ஃபாக்ட்ஸ்களை மட்டும் கொடுத்தோம்.

இந்த அறிக்கை தயாரிப்பதில் ஏதாவது குறைபாடு இருக்கிறது என்று சொன்னால், ஃபேக்ட்ஸ் ஏதாவது சொல்லப்படாமல் இருந்தால், அல்லது ஏதாவது விவரங்கள் எல்லாம் பூராவாக இல்லாவிட்டால் அதைக் குறைபாடு என்று சொல்லலாம். மற்ற முறையிலே, இது ஏதோ மூடி மறைக்கவேண்டுமென்று, கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் சொன்னார்களே, அந்த மாதிரி தயாரிக்கப்படவில்லை. விவரங்களெல்லாம், சர்க்காரிடத்தில் இருப்பதெல்லாம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இதற்குப் பொறுப்பு யார் என்று அறிந்து கொள்வதற்கு முன் யார் யாருக்கு என்னென்ன பொறுப்பு இருக்கிறது என்று பார்த்தால் நன்றாகத் தெரியும். சர்க்காரிடத்தில் மான்யம் வாங்கிக் கட்டடம் கட்டுகிறவர்கள் மான்யம் பெறுவதற்கு முன்னால் சர்க்கார் இலாகாவிலிருந்து சர்ட்டிஃபிகேட் வாங்கி, சரியாகக் கட்டப்பட்டிருக்கிறது, தொகை பூராவும் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று ருசுப் படுத்திய பிறகு தான் தொகை வாங்க முடியும். சர்க்காரிடத்தில் மான்யம் வாங்காமல் தனியார் கட்டடம் கட்டினால் அவர்கள் சர்க்காரிடத்திலே, கல்வி இலாகாவிலிருந்து, எந்த வித சர்ட்டிஃபிகேட்டும் வாங்கத் தேவையில்லை. விதிகளில் இப்போது இருக்கிற நிலைமை அது. மதுரையில் இந்தப் பள்ளி சர்க்காரிடத்தில் மான்யம் வாங்காமல் அவர்கள் கட்டினார்கள். அதனால்தான் கல்வி இலாகா அதிகாரிகள் அந்தக் கட்டடத்தைப் பரிசிலனை செய்து சரியாகக் கட்டப்பட்டிருக்கிறதா இல்லையா என்று பார்த்து

சர்ட்டிஃபிகேட் கொடுக்கவில்லை. மான்யம் வாங்காத காரணத்தினால் அவர்கள் எந்த விதமான சர்ட்டிஃபிகேட்டும் வாங்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய் விட்டது. ஒரு கட்டடம் கட்டுவதற்கு முன்னால் நாம் முனிசிபாலிட்டியில் பர்மிஷன் வாங்கவேண்டும், இப்போது இருக்கும் சட்டப்படி சட்டம் எப்படி இருக்கிறது என்று சொன்னால் ப்ளான் போடவேண்டும், ப்ளான் அப்ரூவ் ஆகவேண்டும், ப்ளான்படி அவர்கள் கட்டியிருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். ப்ளான் படி அல்லாமல் சுண்ணாம்புக்கு பதில் களிமண் வைத்துக் கட்டினாலும், அல்லது களிமண்ணுக்கு பதில் மணலை வைத்துக் கட்டினாலும், இப்போது இருக்கும் விதிகள் படி, சரியா இல்லையா என்று பார்த்துச் சொல்ல சட்டம் இடம் கொடுக்கவில்லை. இந்த இடத்திலே என்ன ஏற்பட்டது என்று சொன்னால் முனிஸிபாலிட்டிக்கு பர்மிஷனுக்குப் போட்டார்கள். அது கொடுக்கப்படவில்லை. பர்மிஷன் கொடுக்கப்படவில்லை என்று சொன்ன பிறகு அவர்கள் எடுத்து விடவேண்டுமென்றும் உத்தரவு போட்டார்கள். அதன் மீது அவர்கள் அப்பில் போட்டார்கள். அந்த அப்பில் போடப் பட்டபோது ஸ்டே கொடுக்கவில்லை . . .

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** அவர்கள் மனு போட்டார்களே, ப்ளான் கொடுத்தார்களே, அப்போது அதை ஸாங்ஷன் செய்யவில்லையா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்கள் அப்ரூவ் பண்ணவில்லை என்பது தான் எங்களுக்கு இருக்கக் கூடிய தகவல், ப்ளான் கொடுத்து விட்டு கட்டி விட்டார்கள். கட்டி விட்ட காரணத்தினால் இடித்து விடவேண்டுமென்று உத்திரவு போட்டார்கள். அதன் மீது அப்பில் போட்டார்கள் அவர்கள், ஸ்டே கொடுக்கப்பட்டது என்று சொல்லுவது சரியல்ல. ராஜ்ய சர்க்காரில் இருக்கிற எந்த அதிகாரியும் இந்தக் கட்டடத்தை இடித்து விடவேண்டுமென்று போடப்பட்ட உத்திரவுக்கு ஸ்டே கொடுக்கவில்லை. உடனடியாக மதுரை முனிசிபாலிட்டி இடிந்து விடலாம். ஸ்டே ஒன்றும் கிடையாது. அவர்கள் அதற்கு மேலும் அப்பீல் போட்டுக்கொண்டிருந்தார்கள். இடிப்பதற்காக போட்ட உத்திரவை நிறைவேற்றுவதில் சற்று காலதாமதம் ஆகியிருக்கிறது.

கல்வி அதிகாரிகள் ஒரு பள்ளிக்கூடத்தை இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது பொதுவாக கட்டடம் கண்ணால் பார்த்தால் எவ்வளவு தெரியுமோ அந்த அளவுக்குப் பார்ப்பார்கள். பள்ளியில் ஃபர்னிச்சர் எப்படி இருக்கிறது என்று பார்ப்பார்கள். மற்றபடி அங்கு இருக்கிற வசதிகள் பிள்ளைகள் படிப்பதற்கு ஏற்றதாக இருக்கிறதா என்று இதைத்தான் இன்ஸ்பெக்ஷன் செய்வார்கள். ஒரு கட்டடத்தை சாதாரண மனிதர், நான்-டெக்னிக்கல் மேன் வெளியிலிருந்து பார்த்தால் சரியாக இருக்கிறதா இல்லையா என்று சொல்ல முடியாது. உள்ளே மணலை வைத்துக் கட்டி, மேலே சுண்ணாம்பைப் பூசி விட்டால் உள்ளே இருக்கிற மணல், தெரியாது, வெளியே இருக்கிற சுண்ணாம்பு தான் தெரியும்,





இன்ஸ்பெக்ஷன் செய்தபோது தவறு செய்து விட்டார்கள் என்று சொல்லுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்று கருதுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** இன்ஸ்பெக்ஷன் செய்தபோது கண்டுபிடித்தார்களா இல்லையா என்பது ஒருபுறம் இருக்க, இப்போது அமைச்சர் அவர்கள் பேசும்போது சர்க்கார் மான்யம் பெற்றிருந்தால்தான் சர்ட்டிஃபிகேட் பெறவேண்டும் என்று சொன்னார்கள். மதராஸ் எஜுகேஷனல் ரூல்ஸ் பிரகாரம் ரெகக்னிஷன் கொடுக்கும்போது அக்காமடேஷன் என்பதற்கு சுற்றி நான்கு சுவர் இருந்தால் போதுமா? தகுந்த கட்டடம் இருக்கிறதா இல்லையா என்று பார்த்துத்தான் கொடுக்கவேண்டும். ரெகக்னிஷன் கொடுத்தது, அதோடு ஹைஸ்கூலாக மாற்றுவது என்ற பிரச்னை வேறு இருந்திருக்கிறது. அந்த முறையில் இடத்தைப்பற்றி பரிசீலனை செய்யாமல் அங்கீகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மான்யம் கூட தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அதைத்தான் நான் சொன்னேன். ஒரு என்ஜினியர் சர்ட்டிஃபிகேட் வேண்டுமென்றால் அதையெல்லாம் பரிசீலனை செய்து கொடுக்கவேண்டும். அக்காமடேஷன் போதுமானதாக இருக்கிறதா என்று பார்க்கும்போது வெளியிலிருந்து பார்த்து, 10 பிள்ளைகள் உட்கார முடியுமா, 40 பிள்ளைகள் உட்கார முடியுமா, போதுமான இடம் இருக்கிறதா என்று பார்த்துத்தான் செய்ய முடியும். இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் போய் ஒரு கட்டடத்தைப் பார்த்து வெளியிலிருந்து அந்தக் கட்டடம் இன்ஹெரெண்ட் டிஃபெக்ட்ஸ்—அதாவது உள்ளடங்கிய தவறுகள் இருக்கின்றனவா என்று பார்த்துச் சொல்ல முடியாது என்று நினைக்கிறேன். ஆகையால் இன்ஸ்பெக்ஷன் செய்வதில் தவறு ஏற்பட்டு விட்டது என்று சொல்லப் போதிய ஆதாரம் இல்லை. இது எல்லாவற்றுக்கும் பொறுப்பு யார் என்று சொன்னால் பள்ளியை நடத்தியவர்தான் என்பதில் யாரும் எந்த வித சந்தேகமும் கொள்ள முடியாது, அவரும் மறுக்க முடியாது. அதனால்தான் 304-ஏ செக்ஷன்படி நெக்லிஜெண்ட்' ஆக்ட் பிரகாரம், அவர்கள் மரணம் விளைவித்த குற்றச்சாட்டாக, அவர்கள் மீது நாம் சார்ஜ் போட்டிருக்கிறோம். அந்த நிலைமையை நாம் பார்க்கும்போது, இன்றைக்கு நம் விதிகளில் குறைபாடு இருக்கிறது என்று தெளிவாகிறது. அந்தக் குறைபாட்டை நீக்க இப்போது சட்டம் கொண்டுவர இந்த செஷனிலேயே பில் கொண்டு வந்திருக்கிறோம். ப்ளேஸஸ் ஆஃப் பப்ளிக் ரிஸார்ட் ஆக்ட் என்று ஒன்று கொண்டு வந்து இந்தக் கூட்டத்திலேயே அதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அந்தச் சட்டப்படி பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், மற்றும் பொதுமக்கள் எந்தெந்த இடங்களுக்கு வருகிறார்களோ அத்தகைய கட்டடங்களுக்கு ஃபிட் ஃபார் ஆக்குபேஷன் என்று ஃபிட்னெஸ் சர்ட்டிஃபிகேட் ஒன்று வாங்கினால்

தான் பள்ளிக்கூடம் நடத்தலாம், ஆஸ்பத்திரி நடத்தலாம் என்று நியதி செய்யப்போகிறோம். என்ன இருந்தாலும், மான்யம் வாங்கினாலும் வாங்காவிட்டாலும் எஜுகேஷன் க்ராண்ட் பெற்றாலும் பெறாவிட்டாலும், சொந்தப் பணத்தில் கட்டினாலும் கடன் வாங்கிக் கட்டினாலும், ப்ளேஸெஸ் ஆஃப் பப்ளிக் ரிஸார்ட் என்ற முறையில் பொது மக்கள் எங்கு சேருகிறார்களோ அந்தக் கட்டடங்களுக்கு சர்ட்டிபிகேட் ஆஃப் ஃபிட்னெஸ் வாங்கவேண்டும் என்று கொண்டு வருகிறோம். அடுத்தாற்போல தொடர்ந்து மூன்று வருஷங்களுக்கு ஒரு முறை சரியான கண்டிஷனில் இருக்கிறது என்று சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும் என்றும் கொண்டுவரவேண்டும் என்று இருக்கிறோம். எக்ஸிஸ்ட்டிங் பில்டிங்ஸைப் பொறுத்த வரையில் உடனடியாக ஆறு மாதங்களுக்குள் இந்தக் கட்டடங்களெல்லாம் ப்ளேஸெஸ் ஆஃப் பப்ளிக் ரிஸார்ட் ஆகட் படி சரியாக இருக்கிறது, தவறு இல்லாமல் இருக்கிறது என்று சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும் என்று செய்திருக்கிறோம். இந்த மசோதா இப்போது உடனடியாக இந்த செஷனிலேயே வரும். அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாம் என்று யோசனை செய்து கொண்டிருக்கிறோம்.

பணம் பொது மக்கள் கொடுத்ததிலிருந்து ஓரளவு நிவாரணம் கொடுத்திருக்கிறோம். போதாது என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு எந்த அளவுக்கு நிவாரணம் கொடுக்க முடியுமோ அந்த அளவுக்குச் செய்ய நான் தயாராக இருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம்:** கனம் அமைச்சர் இப்போது கனம் அங்கத்தினர் கலியாணசுந்தரம் அவர்கள் கேட்ட கேள்விக்கு, அக்காமொடேஷன் மாத்திரம்தான் கல்வி இலாகா பார்க்கவேண்டுமென்று சொன்னார்கள். அதே நேரத்தில் அந்தக் கட்டடத்திற்கு ப்ளான் அப்ரூவ் செய்யப்படவில்லை, முனிஸி பாலிட்டி எந்த விதமான அனுமதியும் கொடுக்கவில்லை என்று இருக்கும்போது அதையும் கல்வி இலாகா கவனித்து இருக்க வேண்டாமா என்று கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அவருக்கு அது தெரிய நியாயம் இல்லை. அதற்கும் இப்போது ஒரு ப்ரொவிஷன் செய்கிறோம். அதாவது இப்போது முனிஸிபாலிட்டியில் அப்ரூவ் செய்தார்களா இல்லையா என்று கல்வி அதிகாரிக்குத் தெரியாது. கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதற்கு அவர்களுக்கு எனது நன்றி. இன்னொரு விதி போடுகிறோம். எந்த எந்தக் கட்டடங்கள் பொது மக்கள்
2-00 p.m. சேர, தங்க, புழங்க சரியானதாக இல்லை என்று நினைக்கிறார்களோ அப்படிப்பட்ட உத்திரவுகளைப் போடும்போது அந்தந்த இலாகாக்களுக்கும் அந்த உத்திரவின் நகலை அனுப்பிவிடவேண்டுமென்றும் ஏற்பாடு செய்திருக்கிறோம். ஒரு முனிசிபாலிடி ஒரு பள்ளிக்கு கட்டடத்திற்கு அனுமதி இல்லை என்று மறுத்துவிட்டால்,



அதனுடைய காபியை அங்கு இருக்கிற 'டி.ஈ.ஓ.' எஜுகேஷனல் அதாரிட்டிக்கு, அனுப்பிவிடவேண்டும். அப்படி அனுப்பிவிட்டால், அவர்களுக்குத் தெரியும் அந்தப் பள்ளிக்கு அனுமதியில்லை என்று; உடனடியாக அதற்கு ரெகக்னிஷன் கொடுக்க மாட்டார்கள், மறுத்துவிடுவார்கள். ஆகவே, இவ்விதமாக இன்றைக்கு சட்டங்களிலே, இருக்கிற எல்லாவிதமான குறைபாடுகளையும் நீக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம்.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** கனம் அமைச்சர் அவர்கள் சொல்லுவது வரவேற்கத்தக்கதுதான். முனிசிபாலிடிக்கோ, கார்பரேஷனுக்கோ ப்ளான் சமர்ப்பிக்கப்பட்டால், இரண்டு மாதங்களுக்குள் அதை ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா என் பதைத் தெரியப்படுத்தவேண்டும். அப்படி ஒன்றுமே தெரிவிக்க வில்லை என்றால், "deemed to have been sanctioned" ஏற்றுக் கொண்டமாதிரி வைத்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு இடம் இருக்கிறது. அதனால்தான் இந்தத் தவறை செய்கிறார்கள். அப்படிக் காலதாமதம் இல்லாமல் குறைப்பதற்கு முனிசிபாலிடி யையோ, கார்பரேஷனையோ முடுக்கிவிடுவதில் நாம் அக்கறை செலுத்தினால், இம்மாதிரி தவறுகள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கார்ப்பரேஷன், முனிசி பாலிடிகளில் பில்டிங் ரூல்ஸில் இருக்கப்பட்ட விஷயம் அது. அதைப் பரிசீலனை செய்யலாம். நாம் இப்பொழுது குறிப்பாக நிர்மாணம் செய்திருப்பது என்னவென்று சொன்னால், பள்ளிகள், அல்லது பிரைவேட் நர்ஸிங் ஹோம், அந்த விதமான கட்டடங் களுக்கு அனுமதி கொடுக்கவில்லை என்றால், முனிசிபாலிடி அந்த உத்தரவின் காப்பியை சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளுக்கு அனுப்பிவிடவேண்டும். அப்படி அனுப்பிவிட்டால் இப்பொழுது நாம் புதியதாகக் கொண்டுவர இருக்கிற சட்டப்படி 'பிளேஸஸ் ஆப் பப்ளிக் ரிசார்ட்'-களுக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். அப்படி அனுமதி இல்லாவிட்டால் இவ்விதமாக பள்ளி முதலிய வைகளையெல்லாம் நடத்த முடியாது.

நான் இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். இந்த சம்பவம் நடந்த மறு நாளே சென்று நான் அந்த இடத்தைப் பார்வையிட்டேன். குழந்தைகளையும் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தேன். இது ஒருவருடைய மனதிலிருந்து மறக்க முடியாத சம்பவம் என்று சொன்னால், அது மிகையாகாது. இந்த விதமான நிகழ்ச்சி ஏற்படாமல் இருப்பதற்கு நாம் எல்லாவிதமான முயற்சிகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். அதில் எந்த கருத்து மாறுபாடும் கிடையாது. இந்தக் கட்டடத்தில் பள்ளிக்கூடம் வைத்தவர் கிரிமினல் சட்டப்படி 'லையபிள்' ஆக இருப்பதோடு மட்டு மல்லாமல் அவர்கள் 'டார்ட்ஸ்' சட்டப்படி 'லையபிள்' ஆக இருக்கிறார்கள். சட்டம் படித்தவர்களுக்கு இது தெரியும். திரு. சங்கரன் முதலியவர்களுக்குத் தெரியும். சர்க்கார் எந்த நிவாரணம் கொடுக்கிறார்களோ அந்த நிவாரணத்தோடு நிற்காமல் இந்த விதமான பிழை இழைத்தவர்கள் பேரில் அந்த விதமான நடவடிக்கை

எடுப்பதற்கும் வழிகள் இருக்கின்றன. சட்டங்கள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சம்பவத்தைக் குறித்து மேலும் என்ன விவரங்கள் வேண்டுமானாலும், அது சம்பந்தமாக கேள்விகள் போட்டால், அவைகளை சேகரித்துக் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். இப்பொழுதே ஓன்றிரண்டு 'ஷார்ட் நோட்டீஸ் குவெஸ்டின்ஸ்' வந்திருக்கின்றன. அவற்றிற்கு இந்தக் கூட்டம் முடிவதற்கு முன்னாலேயே பதில் தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கோசல்ராம் :** அமைச்சர் அவர்கள் சொல்லும் பொழுது, 'சிவில் சூட்டு' மூலமாக சிவில் கோர்ட்டில் வழக்காடலாம் என்று சொன்னார்கள். ஏழையாக உள்ளவர்கள், வறுமையில் உள்ளவர்கள் அம்மாதிரி 'சூட்' போட முடியாமல் இருப்பவர்களாக இருக்கிறார்களே, அவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்வதற்கு முன்வந்தால் நன்றாக இருக்காதா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவர்களுக்குக் கூட வழி இருக்கிறது 'சிவில் ப்ரொசீஜர் கோடில்'. இன்பார்மா பாபரிஸில் அவர்கள் வழக்குப் போடலாம். நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இம்மாதிரி தவறுகள் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பல வழிகள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் எடுக்கவேண்டும். சர்க்காரைப் பொறுத்த அளவில் நாங்கள் 304-ஏ செக்ஷன்படி பிராஸிகியூஷன் செய்திருக்கிறோம். தனி நபர்களைப் பொறுத்த அளவில் அவர்கள் நேரடியாக வழக்குத் தொடரலாம். சர்க்கார் இன்னும் என்னென்ன உதவியைச் செய்யவேண்டுமோ அதையும் செய்யத் தயாராக இருக்கிறோம். மற்றபடி கனம் அங்கத்தினர்கள் சொல்லிய பல ஆலோசனைகளையும் நாங்கள் கவனிக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஆர். வி. சுவாமிநாதன் :** கனம் மந்திரி அவர்கள் சொன்ன பொழுது இந்தக் கட்டடம் சரியான முறையிலே உள்ள கட்டடமா, இல்லையா என்பதும், முனிசிபாலிடி அனுமதி மறுத்து விட்டார்கள், கட்டடத்தை இடிக்கும்படி உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பதும் கல்வி இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு தெரிய சந்தர்ப்பம் இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அங்குள்ள விஷயம் என்னவென்றால் முனிசிபாலிடியின் அனுமதி இல்லாமல் கட்டியிருக்கிறார்கள். முனிசிபாலிடியிலிருந்து 20, 30 பேர்கள் கட்டடத்தை இடிக்க வந்திருக்கிறார்கள். இடிக்கிற சமயத்தில் 'இப்பொழுது இடிக்க வேண்டாம், நீங்கள் போய் நாளைக்கு வாருங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். வெளியே ஒரு பெரிய 'டெமான்ஸ்டிரேஷனே' ஆகிவிட்டது. அதன்பேரில் அவர்களுக்குத் தெரியும். ஒரு சந்தர்ப்பத்திலே கல்வி அதிகாரி இருக்கும்பொழுது 'ட்ரைன்' வந்தபொழுது கட்டடமே ஆடியதால் குழந்தைகள் பயந்துகொண்டு வெளியே ஓடினார்கள். அப்பொழுது 'அந்த மாதிரி ஒன்றுமில்லை, வெளியே போகாதீர்கள்'





என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அம்மாதிரி கல்வி இலாகா அதிகாரிக்குத் தெரிவித்திருக்கும்பொழுது, எப்படி அவருக்குத் தெரிய முடியாது என்று நினைக்கிறார்கள் கனம் மந்திரி அவர்கள். இந்தமாதிரி நடந்தது உண்மையா என்பதைத் தெரிந்துகொள்வதற்கு, ஒரு 'நான்-அபிஷியல் கமிட்டி' அமைத்து உண்மையைத் தெரிந்து கொள்ளலாமே, இதைச் செய்ய முடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் சொல்லியது பற்றி அவர்களிடம் விவரம் இருக்குமானால், உடனே எந்த அதிகாரி என்று எழுதிக்கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களை நான் அந்த விதமாக சம்பவம் நடந்ததா என்று விசாரிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். இன்றைக்கு இம்மாதிரி பிழைகள் ஏற்படுவதற்குக் காரணமாக நம்முடைய விதிகளில் இருக்கிற குறைபாடுகளை நீக்குவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம், இனி இந்த சம்பவம் ஏற்படாது என்பதை விளக்கிச் சொன்னேன் தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவரைக் கண்டிப்பதற்கு, தண்டிப்பதற்கு சர்க்கார் ஒரு நாளும் தயங்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ ஒரு கல்வி அதிகாரி தவறு செய்தால், நாங்கள் போய் அவரைக் காப்பாற்றவேண்டும் என்ற அவசியம் இல்லை. அதுமாதிரி செய்கிற நோக்கம் கிடையாது. ஆனால், நம்முடைய சட்டத்தில் நியாயம் ஒன்று இருக்கிறது. யாராக இருந்தாலும் அவர் பேரில் தப்பு இருக்கிறது என்று ருசு ஆகாமல், அவர் பேரில் உண்மையாகவே தவறு இருக்கிறது என்று தெரியாமல், தண்டனை அவருடைய வாழ்க்கையைக் கெடுக்கக்கூடாது. தண்டனை கொடுக்கக்கூடாது. கனம் அங்கத்தினர் அவர்களிடம் விவரங்கள் இருந்தால், அவைகளை எழுதி அனுப்பவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned. 2-06 p.m.

## VIII.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

### A. Statutory Rules and Orders.

255. *Notification issued with G.O. Ms. No. 1469, Revenue, dated 21st May 1964 creating the additional check posts and change of location of one check post under the Madras General Sales Tax Act, 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Madras General Sales Tax Act, 1959 (Madras Act 1 of 1959).]*

### B. Reports, Notifications and other papers.

* 182. *The Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms (Amendment) Bill, 1964.*

*183. *The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Bill*, 1964.

*184. *The Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill*, 1964 *with Annexure*.

*185. *The Madras Rinderpest (Amendment) Bill*, 1964.

*186. *Annexure to the Madras Hackney Carriage (Amendment) Bill*, 1964.

*187. *Annexure to the Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment) Bill*, 1964.

188. *List of unstarred questions from Nos.* 158 *to* 237.

* Sent to Members on 17th July 1964.



## APPENDIX I.

[*Vide* answer to starred Question No. 562 on page 264–625].

## MEMORANDUM OF SETTLEMENT UNDER SECTION 12 (3) OF THE INDUSTRIAL DISPUTES ACT, 1947.

PRESENT:

SRI T. N. LAKSHMINARAYANAN, I.A.S.,
*Commissioner of Labour, Madras.*

| Name of the parties to the dispute. | The workers and the management of the textile mills listed in the Annexures *A* and *B* hereto. |
|---|---|
| (1) | (2) |
| Representing Employers .. | 1 Sri D. C. Kothari, Chairman, Southern India Mill Owners' Association, Coimbatore. |
| | 2 Sri G. K. Devarajulu, Managing Agent, Lakshmi Mills Company, Limited, Coimbatore. |
| | 3 Sri M. Ramasamy, Manager, Vasantha Mills, Coimbatore. |
| | 4 Sri K. Venkatesalu, Manager, Coimbatore Spinning and Weaving Mills, Coimbatore. |
| Representing Employees .. | 1 Sri P. S. Chinnadorai, President, Hind Mazdoor Sabha, Tamilnad Branch, Coimbatore. |
| | 2 Sri Jagannathan, President, Coimbatore District Textile Workers' Union, Coimbatore. |
| | 3 Sri R. Kissen, Coimbatore District Mill Workers' Union and T.N.T.U.C., Madras. |
| | 4 Sri Marudachalam, Secretary, National Textile Workers' Union, Coimbatore. |
| | 5 Sri K. Ramaswamy Naidu, Indian National Trade Union Congress, Coimbatore. |
| | 6 & 7 Sri S. Doraiswamy and Sri K. Gopal, Coimbatore district Dravida Panchalai Thozhilalar Munnetra Sangam, Coimbatore. |

[20th July 1964

SHORT RECITAL OF THE CASE.

In pursuance of clause 7 of the settlement, dated 30th June 1960 and further to the reference of the issues relating to nationalisation to Sri P. N. Ramaswamy, Industrial Tribunal, a settlement is arrived at on the following terms (in regard to the issues covered by them) as a result of the good offices of the Minister for Finance and the Commissioner of Labour, Madras.

TERMS OF SETTLEMENT.

I. This settlement will apply to the mills mentioned in Annexure 'A' in Coimbatore region comprising of the districts of Coimbatore, Salem, Tiruchirappalli, South and North Arcot.

II. In modification of the existing spindle assignments and wages rates in the spinning department, the following revised spindle assignments and wages therefor are agreed to :—

A. Spinning—

| Count group. | Work assignment. | Basic wages. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | spindles. | RS. |
| 10s and below .. .. | 150 | 67·00 |
| Over 10s to 17s .. .. | 200 | 67·00 |
| Over 17s to 29s .. .. | 300 | 67·00 |
| Over 29s to 44s .. .. | 400 | 67·00 |
| Over 44s .. .. | 600 | 67·00 |
**கனம் திரு. வெ. ராமையா :** இந்த திட்டத்தைக் குறித்து மிக அதிகமான கவனமும் கருத்தும் அரசாங்கம் செலுத்தி வருகிறது. காரணம் இந்த திட்டம் அமையும்போது அந்த வட்டாரத்தின் நீர்ப்பாசன தேவை பூர்த்தி ஆக வேண்டும். இது ஒரு சரிபடுத்தும் திட்டம். முதலில் இதைக் கொஞ்சம் செலவில் செய்தால் போதும் என்று நினைத்தார்கள், பின்னால் வைகை அணை வந்ததின் காரணமாக ஏற்பட்ட புது மாறுதலுக்குப் பிறகு இந்தச் சீர் செய்யும் திட்டம் மிக்க லாபகரமாக அமையவேண்டும்



என்று விசேஷ அதிகாரிகளை நியமனம் செய்து இதை விரிவாக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அவசரப்பட்டு, சென்ற வருஷமே எதிர்பார்த்தோம் இந்த வருஷமும் வரவில்லை என்றெல்லாம் நினைக்கக் கூடிய மனப்பான்மை கனம் சீமைச்சாமிக்கு மட்டு மின்றி, மற்ற அங்கத்தினர்களுக்கும் இருக்குமேயானால், நீர்ப் பாசன வேலைகள் பொருத்த மட்டில், நம் இராஜ்யத்திற்கு லாபமாக அமையாது.

### வைகை நீர்த்தேக்கத்தின் கீழுள்ள ஆயக்கட்டு

*513 **கேள்வி.—திரு. மா. இராசாங்கம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதி லளிப்பாரா—

வைகை அணை வாய்க்கால் நீரை திருமங்கலம் தாலுக்கா விக்ரமன்குளம் கண்மாயில் இருந்து முதலைக்குளம் பெரிய கண் மாய்க்குப் பாயவிடாததற்குக் காரணமென்ன?

THE HON. SRI V. RAMAIAH : Mudalaikulam Periya kanmoi lies outside the Vaigai Reservoir Project ayacut. Hence it is not entitled to Periyar waters.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** சார், இந்த முதலைக்குளம் சம்மந்தமான திட்டம் வைகை கால்வாய் திட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து பிறகு கைவிடப்பட்டிருக்கிறது ஏன் என்று தெரியவில்லை. இதைச் சேர்க்க அமைச்சர் முயற்சி எடுப்பார்களா?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்பொழுது கண்மாயைப் பற்றிய கேள்விக்கு, திட்டம் இல்லை என்று பதிலளித்தேன். அங்கத்தினர் சொல்வது பற்றி மறு பரிசீலனை செய்ய நியாயம் இருந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். தனிக் கேள்வி போட்டால், விசேஷமாகப் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியும்.

### கிராமத் தொண்டர் படை

*581 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) நமது மாநிலத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ம் தேதி அன்று துவக்கிய கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ள தொண்டர்கள் எத்தனை பேர்?

(இ) தலைமைத் தொண்டர்கள் எத்தனை பேர்?

(உ) சூதாட்டம்; கள்ளக்கடத்தல்; சாராயம் காய்ச்சுதல்; கறுப்பு வியாபாரம் செய்வோர் போன்ற நாட்டின் தீய சக்திகளை களைவதற்கு வேண்டிய வேலைகளில் ஈடுபட இவர்களுக்கு அதிகாரம் வழங்க உத்தேசமுண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) கிராமத் தொண்டர் படையில் சேர்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 1,472,533.

(இ) தலைமைத் தொண்டர்களின் எண்ணிக்கை 15,058.

(உ) இல்லை

**திரு. எஸ். நஞ்சுண்ட ராவ்:** சார், அரசாங்கம் எதிர்பார்த்தது போல கிராமப்படை நடைபெறவில்லை என்பதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதுதான் அரசாங்கத்தின் நம்பிக்கை.

**திரு. மு. பொ. வடிவேல்:** கிராமத்தில் தொண்டர் படையமைப்பு ஏட்டளவில் தான் இருக்கிறது, செயலளவில் இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே, அந்தத் தொண்டர்படை அமைப்பை வேறு அதிகாரிகள் பொறுப்பில் கொடுத்து, அதை நல்ல முறையில் செயல்படச் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** 'வாலண்டியர் ஃபோர்ஸ்' என்பது அதற்குப் பெயர். அதை எப்படி 'மொபிலைஸ்' செய்வது என்பது பஞ்சாயத்து யூனியன் தலைவர்களின் கையில் இருக்கிறது. அவர்கள் கூட்டுறவு முயற்சியினால்தான் இது வெற்றி பெற முடியும். பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய கூட்டுறவினாலும் ஒத்துழைப்பினாலும் அநேக சாலைகள் போடப்பட்டிருக்கின்றன என்பதைக் கனம் அங்கத்தினர்களில் பலர் அறிவார்கள் என்று நினைக்கிறேன். ஆகையால்தான், இந்தத் திட்டம் பூரண வெற்றியளித்திருக்கிறது.

**திரு. கரு. சீமைச்சாமி:** இந்தத் தொண்டர் படையினருக்குத் துப்பாக்கிச் சுடும் பயிற்சி அளிப்பது பற்றிய திட்டம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ? அப்படிப்பட்ட பயிற்சி அளிக்கப்பட்டால் தேசிய நெருக்கடி சமயத்தில் நாட்டைப் பாதுகாக்க அவர்கள் உபயோகப்படமாட்டார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை. அத்தகைய நிலைமை ஏற்படும்போது கனம் அங்கத்தினருடைய இந்த யோசனையைப் பற்றியும் ஆலோசிக்கலாம்.

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, கிராமத் தொண்டர் படையில் உள்ள தொண்டர்களின் மூலம் எதிர்பார்க்கப்படும் தொண்டுகள் என்ன ? அவை எந்த வகையில் நிறைவேறி வருகின்றன ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** விவசாய உற்பத்திப் பெருக்கத்தில் அவர்கள் உதவியாக இருப்பார்கள். கிராம வேலைகளிலும் அவர்கள் கவனம் செலுத்தலாம். விஸ்தரிப்பு அதிகாரிகளுடன் அவர்கள் ஒத்துழைக்கலாம். விவசாய உற்பத்திப் பெருக்கம்பற்றிய அறிவுரைகளை கிராமப் பொது மக்களிடம் அவர்கள் எடுத்துக் கூறலாம். 'மாஸ் எஜுகேஷன்' விஷயத்திலும், அவசர நிலைமைகளில் ஏற்பட்டிருக்கும் பிரச்னைகளிலும் மக்களுக்கு எந்தவிதமான கல்வியை அளிக்க வேண்டுமோ அதைச் செய்யலாம். அவசர கால நிலைமையில் கிராமங்களில் பீதி ஏற்படாத அளவுக்கு பொது மக்களிடத்தில் விவரங்களை எடுத்துக் கூறலாம்.



**திரு. இராம. அரங்கண்ணல்:** இந்தத் திட்டம் நல்ல முறையில் அமுல் நடத்தப்படவில்லை என்று ஆளுங் கட்சியிலிருந்தும், எதிர்க் கட்சிகளிலிருந்தும், பல கனம் உறுப்பினர்கள் கருதுகிறார்கள். ஆனால், அமைச்சர் அவர்கள், 'இதில் பூரண வெற்றி ஏற்பட்டு விட்டது' என்று சொன்னார்கள். எந்த ஆதாரங்களின் மீது அமைச்சர் அவர்கள் அந்த முடிவுக்கு வந்திருக்கிறார்கள் ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** பல கிராமங்களில் பல லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள சாலைகளை இத்தொண்டர் படையினர் போட்டிருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. கனம் அங்கத்தினர் தனியாகக் கேள்வி போட்டால், எத்தனை ரூபாய் பெறுமானமுள்ள எத்தனை சாலைகள் எந்த எந்த இடங்களில் போட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்களை ஜில்லாவாரியாகக் கணக்கெடுத்துக் கொடுக்க முடியும்.

**திரு. முனு. ஆதி:** கிராமத் தொண்டர் படைக்காக அரசாங்கம் பணம் ஒதுக்கியிருக்கிறதா ? அதற்கு இந்தத் தொகையைச் செலவழிக்க ஏதாவது திட்டம் வைக்கப்பட்டிருக்கிறதா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** பணம் ஒன்றும் ஒதுக்கவில்லை.

**திரு. மு. பொ. வடிவேல்:** கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவர்கள் கூட்டம் நடத்தினால்கூட உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்குப் பெரும் கஷ்டமாக இருக்கிறது. அதிலும், கிராமத் தொண்டர் படையினரைக் கூட்டுவது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதற்காக ஒரு பஞ்சாயத்து ஒரு மணி வாங்க ஒதுக்கப்பட்டிருக்கிற ரூ. 100 தொகை விரயம் அல்லவா? தமிழ் நாட்டில் 12,500 கிராமங்களுக்கு 100 ரூபாய் வீதம் செலவழிப்பது தடுத்து நிறுத்தப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** கனம் அங்கத்தினர் அவர்கள் ஜனநாயகத்தில் பூரண நம்பிக்கை கொண்டிருப்பவர் என்று நினைக்கிறேன். ஜனநாயகத்தில் கிராம மக்களுடைய பற்றை இன்னும் அதிகப்படுத்துவதற்கு இதைவிட உயர்ந்த சந்தர்ப்பம் வேறு இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

**திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கிராமத் தொண்டர் படையினர் கதர்க் குல்லாய், கதர்ச் சட்டை போடவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள் என்பது உண்மையா ? அப்படியென்றால், மாற்றுக் கட்சியினரும் கலந்துகொள்ள வாய்ப்பு இல்லாமல் போய்விடும் அல்லவா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** கதர்க் குல்லாய், கதர்ச் சட்டை தான் போடவேண்டும் என்று எந்தவிதமான வற்புறுத்தலும் இல்லை. பாட்ஜ் மாத்திரம் குறிப்பிட்ட அளவில் போட்டிருக்க வேண்டும்.

[21st July 1964

**கனம் சபாநாயகர் :** எல்லாக் கட்சியினருமே கதர் போடுகிறார்களே ! கனம் எதிர்க் கட்சித் தலைவர் திரு. நெடுஞ்செழியன், திரு. கருணாநிதி, திரு. மதியழகன், இன்னும் மற்றவர்கள் கூட கதர் உடை அணிந்துகொண்டிருக்கிறார்கள் போல் தெரிகிறதே ! (சிரிப்பு).

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, கிராமத் தொண்டர் படையினர் கதர் உடை அணிந்துகொண்டிருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரைக் கால் சட்டையும், அரைக் கை சட்டையும் கதரில் போட்டிருக்க வேண்டும் என்று அடிஷனல் டெவலப்மென்ட் கமிஷனர் கட்டாய உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? "கிராமத் தொண்டர் படையமைப்பு எந்த நிலையில் இருக்கிறது ?" என்று சென்ற பட்ஜெட் கூட்டத்தின்போது கேட்டதற்கு, முதல் அமைச்சர் அவர்கள் "அது ஆரம்ப நிலையில் இருக்கிறது" என்று பதிலளித்தார்கள். அப்படியிருக்க ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள், 'இது மிகவும் வெற்றிகரமாக நடைபெறுகிறது' என்று சொல்கிறார். எந்த அமைச்சர் சொல்வதை ஏற்றுக்கொள்வது ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முதல் அமைச்சர் அவர்களைக் கேள்வி கேட்ட நேரத்தில் ஆரம்ப நிலையில் இருந்திருக்கலாம். அதை வைத்து அவர்கள் அப்பொழுது பதில் சொல்லியிருக்கக் கூடும். இப்பொழுது கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கிற நேரத்தில் உள்ள நிலைமையை வைத்து நான், "இந்தத் திட்டம் நல்ல வெற்றியை அளித்திருக்கிறது, மக்களுடைய ஒத்துழைப்பின் காரணமாக" என்று பதில் அளிக்கிறேன்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, கிராமத் தொண்டர் படையினர் அநேக சாலைகளைப் போட்டிருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால், அந்தந்த யூனியனிலுள்ள கண்டிராக்டர்களை நிர்ப்பந்தப்படுத்திச் சாலைகளைப் போடச் சொல்வது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நிர்ப்பந்தம் இருப்பதாகத் தெரியவில்லை. எங்கெங்கு நிர்ப்பந்தம் இருந்திருக்கிறதென்று கனம் அங்கத்தினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அந்த நிர்ப்பந்தங்களை அகற்றுவதற்கு முயற்சி செய்கிறேன்.

**திரு. ப. உ. சண்முகம் :** தொண்டர் படையைக் கூட்டுவதற்கு ஒவ்வொரு பஞ்சாயத்தும் மணி வாங்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த மணி அடித்தால் தொண்டர் படை கூடவேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. ஒவ்வொரு பஞ்சாயத்தும் இப்படி மணி வாங்கவேண்டுமென்ற உத்தரவின்படி எத்தனை பஞ்சாயத்துக்கள் மணி வாங்கி வைத்திருக்கிறார்கள்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அதெல்லாம் பஞ்சாயத்துக்களே செய்யக்கூடிய ஏற்பாடாக இருக்கலாம். அம்மாதிரி உத்தரவு இருப்பதாகத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் கவனிக்கலாம்.



21st July 1964]

### அரிசனங்களின் வீட்டு மனை (நெல்லை தாலுகா)

* 582 **கேள்வி—திரு. ஆர். எஸ். ஆறுமுகம் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) நெல்லை தாலுகா தச்சநல்லூர் பஞ்சாயத்தில் ஆனந்தபுரம் (நன்னியாதிரியான்பச்சேரி) அரிசனங்களின் வீட்டு மனைகளின் தளத்தை உயர்த்தும் திட்டத்திற்கு உதவித் தொகையாக ரூ. 520 கட்டும்படி நெல்லை கலெக்டர் மேற்படி ஊர் அரிசனங்களிடம் கேட்டது உண்மையா ?

(இ) அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம். நில மட்டத்தை உயர்த்துவதற்கான செலவில் பாதித் தொகையை ஹரிஜனங்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்கப்பட்டது. முதலில் போட்ட செலவு மதிப்பீட்டின்படி இப்பாதித்தொகை ரூ. 2,150 ஆகும். ஆனால், ஹரிஜனங்கள் ரூ. 520 மட்டும் வசூல் செய்து, மேற்கொண்டும் நன்கொடை திரட்ட தங்களால் இயலாது என அறிவித்து விட்டனர்.

(இ) திருத்த மதிப்பீட்டின்படி நில மட்டத்தை உயர்த்துவதற்கான செலவு ரூ. 3,780 ஆகும். எனவே ஆர்ஜிதம் செய்யப்பட்ட நில மட்டத்தை உயர்த்துவதற்கான செலவில் எஞ்சிய தொகையாகிய ரூ. 3,260 அரசாங்கம் வழங்கியுள்ளது. இவ் வேலையை நிறைவேற்ற டெண்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. காண்டிராக்டர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் இவ்வேலை காண்டிராக்டருக்கு விடப்படும்.

### *Government offices in private buildings*

* 583 *Q.*—SRI K. CHEEMAICHAMY, SRI C. M. AMBIKAPATHI : } Will the Hon. the Minister for Works be pleased to state the total amount paid as rent for private buildings occupied by State Government offices during the year 1961-62, month-war?

THE HON. SRI V. RAMAIAH : The total amount for the year is Rs. 33,04,877·00. Month-wise details are not readily available.

**திரு. கரு. சீமைச்சாமி :** வாடகைக் கட்டடங்களில் அரசாங்க அலுவலகங்களை வைக்காமல், அரசாங்கத்திற்கே சொந்தமாகக் கட்டடம் கட்டத் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அத்தகைய திட்டம் அரசாங்கத்தில் இருக்கிறது. ஆனால், கட்டடங்கள் கட்டவேண்டுமென்று நடவடிக்கை எடுக்கும்போது, தேசிய நெருக்கடி வந்துவிட்டது. அதன் காரணமாக, அந்த வேலையைச் சற்றுத் தளர்த்தியிருக்கிறோம். முக்கியமாக சேப்பாக்கத்தில் ரெவினியூ போர்டு கட்டத்திற்கு முன்னால் பார்த்தால் அஸ்திவாரம் போடப்பட்ட நிலையிலேயே கட்டடம் நிறுத்திவைக்கப்பட்டிருப்பது தெரியும். நெருக்கடியின் காரணமாக அது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

[21st July 1964

அப்படிப்பட்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு வேண்டிய முயற்சியை உடனடியாக எடுக்கவேண்டுமென்ற முயற்சியிலேதான் அரசாங்கம் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, 1961-62-ம் ஆண்டில் வாடகையாகக் கொடுத்த மொத்தத் தொகை ரூபாய் 33 லட்சம் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களுக்காகத் தனிப் பட்டவர்களுக்கு வாடகையாகக் கொடுத்த தொகை எவ்வளவு என்று அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

THE HON. SRI V. RAMAIAH : I do not have the break-up of the figures. If the hon. Member puts a separate question, I will answer it.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** அரசாங்க அலுவலகங்கள் பூராவுமே சொந்தக் கட்டடத்தில் இருக்க வேண்டுமென்கிற திட்டம் உண்டா? அந்தத் திட்டம் நிறைவேறுவதற்கு எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்?

**கனம் திரு. வெ. ராமையயா:** சொந்தக் கட்டடங்கள் இருக்க வேண்டும் என்ற முறையிலேதான் திட்டத்தைப் போட்டுப் படிப் படியாகக் கட்ட வேண்டுமென்று முயற்சி எடுக்கிறோம். சென்னை நகரத்தைப் பொறுத்த வரையில், தேனாம்பேட்டையில் டி.எம்.எஸ். ஆபீஸ் காம்பவுண்டில் மூன்று நான்கு கட்டடங்கள் கட்டி முடித்திருக்கிறோம். அங்கு இன்னும் இரண்டு கட்டடங்கள் வர வேண்டியிருக்கின்றன. சேப்பாக்கத்தில் ரெவின்யூ போர்டு கட்டடத்திற்கு முன்னால் ஒரு பல அடுக்குக் கட்டடம் கட்டி, சென்னை நகரத்தில் வாடகைக் கட்டடங்களில் இருக்கும் அரசாங்க அலுவலகங்களை அதில் வைக்கவேண்டுமென்பது உத்தேசம். அதே போன்று ஜில்லா தலைமையிடங்களிலும், அங்குள்ள தேவைக்குத் தகுந்த முறையில் கட்டடம் கட்டுவதற்காக ப்ளான் எல்லாம் தயார் செய்திருக்கிறோம். தேசீய நெருக்கடி காரணமாகத்தான் அந்த வேலைகளும் துரிதமாக நடத்தப்பட முடியாமல் இருக்கின்றன.

**திரு. ஜே. மாதா கவுடர் :** சென்னை நகரிலுள்ள வாடகைக் கட்டிடத்தில் இருக்கும் எல்லா சர்க்கார் அலுவலகங்களையும் செக்ரடேரியட்டுக்கு மாற்றிவிட்டு, செக்ரடேரியட்டை நகரத்திற்கு வெளியே தள்ளி ஒருபுறத்தில் கட்ட திட்டம் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா.

**கனம் திரு. வெ. ராமையயா :** அதற்குத் தனியாக ஒரு கேள்வி வேண்டும்.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, சத்தியமூர்த்தி பவனில் விமென் வெல்பேர் ஆபீசை வைத்து மாதம் 1,500 ரூபாய் வாடகை கொடுக்கப்படுவதாகச் சொல்வது உண்மையா?



21st July 1964]

**கனம் திரு. வெ. ராமையயா :** அங்கே சோஷல் வெல்பேர் போர்டின் அலுவலகம் இருக்கிறது. வாடகை என்ன என்று தெரியாது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஒரு கட்சி காரியாலயத்தில் சர்க்கார் காரியாலயத்தை வைத்து, வாடகையாகக் கொடுப்பது நல்ல மரபு என்று கருதுகிறார்களா?

**கனம் திரு. வெ. ராமையயா :** என்னைப் பொறுத்த வரையில் சென்னை நகரத்தில் அந்தக் கட்டிடம் சோஷல் வெல்பேர் போர்டுக்குக் கிடைத்தது லாபம் என்று கருதுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** செக்ரடேரியட் இருக்கிற இடம் நெருக்கடி அதிகமாக இருக்கிறது. இலாக்காக்கள் விரிவு அடைந்து வருவதனால் இடம் போதவில்லை என்று இந்தக் கட்டிடத்தை வேறு எங்காவது மாற்ற யோசனை உண்டா?

**கனம் திரு. வெ. ராமையயா :** இப்போது எவ்வித யோசனையும் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** தனியார் கட்டிடங்களுக்கு வாடகையாக 33 லட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். இதற்கெனவே ஒரு ஐந்தாண்டுத் திட்டமாவது தயாரித்து கூடிய சீக்கிரத்தில் தேசீயநெருக்கடி தலையிடாமல் மாவட்ட தலைநகரங்களிலும் சென்னை நகரத்திலும் அரசாங்க கட்டிடங்களை கட்ட ஏற்பாடு செய்ய முடியுமா?

**கனம் திரு. வெ. ராமையயா :** அரசாங்கம் எந்த எந்த காரியத்தை எப்படி செய்ய வேண்டும் என்பதை பொதுவாக ஆராய்ந்து முடிவு எடுக்கிறது. இந்த கட்டிடங்களை கட்டுவது பற்றியும் எல்லா பிரச்னைகளையும் வைத்து பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

*** 584 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட தலைமையிடத்தில் எத்தனை அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்படுகின்றன?

(இ) ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வாடகை கொடுக்கப்படுகிறது?

(உ) எத்தனை கட்டிடங்களை காலிசெய்யும்படி கோரப்பட்டிருக்கிறது?

(எ) புதிய கட்டிடங்களை கட்டும் திட்டம் ஏதாகிலும் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையயா :** (அ) 54.

(இ) ரூபாய் 64,376.

(உ) இதுபற்றிய முழு விவரமும் கிடைக்கவில்லை.

(எ) இல்லை.

### ஆரம்ப சுகாதார நிலையம்

*** 585 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் செய்யாறு வட்டத்தில் எத்தனை "பிரைமரி ஹெல்த் ஸெண்டர்"கள் உள்ளன?

(இ) ஜனத்தொகைக் கணக்குப்படி அவை போதுமானவையா?

(உ) இல்லை என்றால், அதிக ஸெண்டர்கள் திறக்கப்படுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) செய்யாறு தாலுகாவில் தற்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையம் எதுவுமில்லை.

(இ) & (உ) :செய்யாற்றில் 32 படுக்கை வசதி கொண்ட அரசாங்க மருத்துவமனை ஒன்றைத் தவிர, 6 கிராம மருந்துச் சாலைகளும் உள்ளன. செய்யாறு வட்டத்தைச் சேர்ந்த பெமம் பாக்கம் வட்டாரத்திலுள்ள பெருங்காட்டூரில் ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. அது பூர்த்தியானவுடன் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தாரின் கொள்கையாக இருந்த போதிலும், தேசீய நெருக்கடி நிலைமை காரணமாகவும்; நிதிகள் போதாததாலும் இதை நிறைவேற்றமுடியவில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, தேசீய நெருக்கடி காரணமாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். கட்டிடம் கட்டுவதற்குள் தனியார் கட்டிடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** வசதி உள்ள கட்டிடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை ஏற்படுத்த ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அந்தமாதிரி கட்டிடங்களை கொடுக்க யாராவது முன் வந்தால் அது பரிசீலிக்கப்படும்.

**திரு. மு. பொ. வடிவேல் :** பிற்பட்ட வட்டாரங்களில் உள்ள இடங்களுக்காவது தேசிய நெருக்கடி விதியை தளர்த்த முன் வருவார்களா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** எங்கெல்லாம் ரூரல் டிஸ்பென்ஸரியை ஆரம்பித்து ஏற்படுத்தலாமோ அங்கு எல்லாம் அவைகளை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய முடியும்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** தேசீய நெருக்கடி குறுக்கிட்டாலும் வாடகைக் கட்டிடம் வாங்குவதில் இத்தனை ஆண்டுக்குள்ளே வாடகைக் கட்டிடத்தை விட்டு சொந்தக் கட்டிடத்திற்கு செல்ல வகை செய்ய வேண்டும் என்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** நமது மாநிலத்தில் 374 பிளாக்குகள் இருக்கின்றன. ஒவ்வொரு பிளாக்கிலும் ஆரம்பச் சுகாதார நிலையம் ஏற்படுத்த வேண்டியதுதான் நம்முடைய நிதி வசதிக்குத் தக்கவாறு அவற்றுக்கு கட்டிடம் கட்டுவது பற்றி முடிவு செய்யப்படும். இனாமாக யாராவது கட்டிடம் கொடுக்க முன் வந்தாலும் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

* 586 கேள்வி.—**திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-ல் தென்னாற்காடு மாவட்டத்தில் எத்தனை ஆரம்பச் சுகாதார நிலையங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது?

(இ) இதில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளவை எத்தனை? எங்கெங்கே?

(உ) குமராட்சி யூனியனில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா? எந்த இடத்தில்?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** (அ) 1963-ல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் எதையும் ஏற் படுத்த அனுமதி வழங்கப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) குமராட்சி பஞ்சாயத்து யூனியனுக்கு ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் அனுமதிக்கப்படவில்லை.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றாக நினைவு இருக்குமென்று கருதுகிறேன். நான்கு மாதங்களுக்கு முன்பு இனாமாக ஒரு கட்டிடம் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்க எழுதிக் கொடுக்கப்பட்டது. அந்த இடத்தில் இது வரையில் ஆரம்ப சுகாதார நிலையம் திறக்கப்படாததற்குக் காரணம் என்ன என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட விஷயம் டி.எம்.ஓ.-க்கு எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அவர்களது முடிவு வந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

### *Price of rice*

* 587 *Q.*—SRI M. KALYANASUNDARAM, SRI T. KARCHA GOWDER, SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) the reasons for the sudden spurt in the prices of rice in Madras City recently;

(*b*) whether it is a fact that Andhra Government have placed restrictions on the free movement of rice to the City; and

(*c*) if so, whether the matter has been taken up with the Government of Andhra Pradesh?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** (அ)—(உ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அரிசி விலை உயர்ந்திருக்கிறது என்பதை ஒப்புக்கொண்டதுபற்றிச் சந்தோஷப்படுகிறேன். இந்தத் தடைகள் நீக்கப்பட்ட பிறகும் சென்னையில் அரிசி விலை இறங்கவில்லை. பதிலாக ஏறிக் கொண்டிருப்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** ஆந்திராவில் அரிசிக்கு 40 சத விகிதம் லெவி வைத்திருந்ததை சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு எழுதி 25 சத விகிதம் ஆகத் தளர்த்த முன் வந்திருக்கிறார்கள். இப்போது அரிசி விலை மொத்த வியாபாரத்தில் குறைந்துதான் இருக்கிறது.

**திரு. கே. ஏ. மதியழகன்:** அரிசி விலைகள் உயர்ந்து போகாமல் இருக்க அரிசி விலையை எப்படி நிர்ணயிப்பது என்பது பற்றி இந்திய சர்க்கார் உணவு அமைச்சரிடம் ஏதாவது யோசனை சொல்லியிருக்கிறார்களா? அப்படியானால் அந்த யோசனையின் விவரத்தை கூறுவார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்போது அதைப்பற்றி நாங்கள் வெளியிட தயாராய் இல்லை. மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறோம். அவர்கள் அது பற்றி வெளியிடுவார்கள்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்காரிடம் 4,000 டன் ஒதுக்குமாறு கேட்டிருந்தார்கள். இரண்டாயிரம் டன் கூட கிடைக்கவில்லை. மேற்கொண்டு அலாட்மென்ட் கிடையாது என்றும் தெரிகிறது. ஆகவே இனி விலை ஏறாமல் இருப்பதற்கு விலை எவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அதைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இந்த யோசனைகளையெல்லாம் வைத்துக்கொண்டு மத்திய சர்க்கார் உணவு மந்திரியிடம் நம்முடைய கருத்துக்களை தெரிவித்திருக்கிறோம். அவர்களது முடிவு 20-ம் தேதியே அறிவிக்கப்படும் என்று எதிர்பார்த்தோம். சீக்கிரத்தில் அந்த முடிவு வெளியாகும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சென்னை நகரத்தில் எத்தனை நியாயவிலைக்கடைகள் உள்ளன. அதில் நெல்லூர் அரிசி கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்போது என்னிடத்தில் அந்த தகவல் இல்லை. மாநிலம் முழுவதற்கும் 700 சொச்சம் நியாயவிலைக் கடைகள் இருப்பதாக நினைவு. சென்னை நகரத்திற்கு மட்டும் தனியாக என்னிடம் இப்போது விவரம் இல்லை.

---

[a] 531–532-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



**திரு. ஜே. மாதா கவுடர்:** தடைகள் தளர்த்தப்பட்ட பிறகு அரிசி விலை குறைந்தது. ஆனால் இப்போது அதுவே அதிகமாகி விட்டது என்று சொல்லப்படுகிறது. அதற்கு காரணம் கேரளாவுக்கு அதிகமாக அனுப்பப்படுகிறதாக சொல்லப்படுகிறது. அதை பரிசிலிப்பார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** அது பற்றி தகவல் இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர்:** அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையில் "தென்மண்டலத்திற்குள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு அரிசி தாராளமாக போக ஆரம்பித்ததும் நிலைமை சீர்திருந்தி விடும் என்று எதிர்பார்க்கலாம் எனச் சொல்லியிருக்கிறார்களே அதன்படி ஏதாவது நிலைமை சீர்திருந்தி வருகிறதா? ஆந்திராவில் இருந்து நம் மாநிலத்திற்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு டன் அரிசி கிடைக்கிறது என்று அறிய முடியுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** ஸோனல் ஸிஸ்டம் தென்மண்டல ராஜ்யத்திற்கு என்றே ஏற்பட்டது. அதன் பிரகாரம் இந்த நான்கு ராஜ்யத்திற்குள் அரிசி தாராளமாக வந்து கொண்டும் விற்பனை ஆகிக் கொண்டும் இருக்கும்.

**திரு. முனு. ஆதி:** விறகுக் கடை காய்கறிக் கடையை அரசாங்கம் நடத்துவது போல் அரசாங்கமே அரிசிக் கடைகளையும் நடத்த முன்வருமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** 'ஃபேர் பிரைஸ் ஷாப்' அந்த முறையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. அ. ராகவ ரெட்டி:** ஆந்திராவிலிருந்து நெல்லூர் அரிசி வரலாம் என்று ஏற்பாடு செய்திருந்தாலும், போதுமான அளவுக்கு வராததன் காரணமாக விலை குறையவில்லை. ஆகவே, தாராளமாக அரிசி வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்:** இப்போது தாராளமாக அரிசி வரவேண்டுமென்பதற்காகத்தான் ரோடு மார்க்கமாகவும், ரயில் மார்க்கமாகவும் கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ரயில் மார்க்கத்தில் இடம் கிடைப்பது கஷ்டமாக இருந்தது. அதைப் பற்றி மத்ய சர்க்கார் உணவு அமைச்சர் அவர்களிடம் கூறப்பட்டு அவர் அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதாகக் கூறியுள்ளார்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு சொசைடிகளில் தேவையான அளவுக்கு நெல்லூர் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு மலிவான விலைக்கு விற்கப்படுகிறதா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: கூட்டுறவு சொசைடிகளைச் சேர்ந்தவர்கள் எல்லாம் ஆந்திராவில் இருந்து நெல்லூர் அரிசி வாங்கி விற்கிருர்கள்.

### *Rice procurement*

* 588 *Q.*—SRI M. KALYANASUNDARAM, SRI T. P. ALAGAMUTHU: Will the Hon Minister for Food be pleased to state—

(*a*) the details of the modified scheme of procurement of rice and paddy in the State for the year 1963–64;

(*b*) the target fixed for building up the stock in the State and the actual quantity procured in each district in 1962 and 1963; and

(*c*) whether samples of rice procured would be kept in the Legislature Library for inspection by the Members?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ)—(உ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

* 589 கேள்வி.—திரு. மு. ரா. கிருஷ்ணமூர்த்தி, திரு. ப. உ. சண்முகம்: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ராஜ்யத்தில் இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள நெல் எவ்வளவு டன்?

(இ) கொள்முதல் செய்ய கடைபிடிக்கும் கொள்கை என்ன? கொள்முதல் விலை மூட்டைக்கு எவ்வளவு?

(உ) கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி மத்திய சர்க்காரிடம் கருத்து தெரிவிக்கப்பட்டதா? அப்படியாயின் அதன் விவரமென்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ), (இ), (உ): 8-1-1964 முதல் 27-6-1964 வரை அமுலில் இருந்த கட்டாய கொள்முதல் திட்டத்தின் கீழ் அரிசி மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டது. நெல் அல்ல. அரிசி மில் சொந்தக்காரர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும் மட்டுமே அரிசிக் கொள்முதல் செய்யப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கையாயிருந்தது. ஆனல் அதே நேரத்தில் நெல் உற்பத்தியாளர்கள் அவர்களாகவே கொடுத்தால் அந்த நெல்லைக் கொள்முதல் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு அரிசிக் கொள்முதல் விலையிலிருந்து நெல்லைத் தீட்டுவதற்கும் மற்றத் தொடர்பான செலவுகட்கும் ஆகும் கட்டணங்களைக் கழித்துக்கொண்டு விலை கொடுக்கப்பட்டது. உற்பத்தியாளர்களுக்கு நியாயமான குறைந்த அளவு விலையை நிர்ணயிப்பதும், வியாபாரிகள் அரிசிக் கொள்முதல் விலைகளைக் காட்டி நெல் கொள்முதல் விலைகளை அதிகமாய் குறைந்து

[a] 532-534-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



விடாமல் செய்வதும்தான் இதன் நோக்கமாகும். மதுரை மாவட்டத்திலுள்ள ஓர் உற்பத்தியாளரிடமிருந்து 30 மூட்டை நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மாநில அரசாங்கத்தின் முறையீட்டின் மேல், இந்திய அரசாங்கம் 23-3-1964-லிருந்து அரிசிக் கொள்முதல் விலையை மணங்கு ஒன்றுக்கு 2 ரூபாய் அல்லது குவின்டால் ஒன்றுக்கு ரூ. 5.36-ஆக உயர்த்தியுள்ளது. 27-6-1964 முதல் இந்தக் கொள்முதல் திட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்டது.

* 590 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் முடிய எத்தனை டன் அரிசி கொள்முதல் செய்யப்பட்டது?

(இ) வியாபாரிகள் மூலம் எத்தனை டன்? கூட்டுறவு சங்கங்கள் மூலம் எத்தனை டன்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: (அ) 1963-ல் நிர்பந்தமற்ற அரிசிக் கொள்முதல் செய்யும் திட்டம் நமது மாநிலத்தில் அமலில் இருந்தது. இந்தத் திட்டத்திற்குப் பதிலாக, 8-1-1964 முதல் சட்டபூர்வமான கொள்முதல் திட்டம் அமலுக்கு வந்தது. 7-1-1964 வரையில் நிர்பந்தமற்ற கொள்முதல் திட்டத்தின்கீழ், மொத்தம் 50,800 டன் கொள்முதல் செய்யப்பட்டது. 8-1-1964 முதல் 29-2-1964 வரையில் சட்ட பூர்வமான கொள்முதல் திட்டப்படி 18,337 டன் கொள்முதல் செய்யப்பட்டது.

(இ) வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்தது எவ்வளவு என்பதற்கு உடனடியாகத் தகவல் ஏதும் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன்: கனம் அமைச்சர் அவர்கள், விவசாயிகள் ஒரு நியாய விலை பெறுவதற்கும், வியாபாரிகள் அதிகமான அளவில் விலையை உயர்த்தி விடாமல் இருப்பதற்கும் கொள்முதல் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்று சொன்னர்கள். அந்தக் கொள்கையில் சர்க்கார் எந்த அளவுக்கு வெற்றியடைந்திருக்கிறர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கிச் சொல்வார்களா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: லட்சம் டன் கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டமிட்டதில் 71,000 டன் வரை கொள்முதல் செய்திருக்கிறேம்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: கொள்முதல் திட்டம் கட்டாயமாக இருந்தாலும் சரி, நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்தாலும் சரி திட்டம் இப்போது அடியோடு கைவிடப்பட்டது. விவசாயிகளுக்கு நியாய விலை கிடைக்கவும், அரிசி நியாயமான விலைக்கு விற்கப்படவேண்டுமென்றும் திட்டமிடப்பட்ட அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்று நடவடிக்கைகள் என்ன?

[21st July 1964

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இந்த யோசனையை எல்லாம் வைத்துத்தான் மத்திய அரசாங்க உணவு அமைச்சர் அவர்கள் கூட்டிய சதர்ன் ஸோன் கூட்டத்தில் யோசனைகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இதிலே எடுக்கப்பட்ட முடிவைப் பற்றிய பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் '27–6–1964-ல் இருந்து கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டது ; அரிசி விலையைக் குறைக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ளது' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் கொள்முதல் வேலையினால் விலைவாசி குறையமுடியாது ; அந்தத் திட்டம் தோற்றுவிட்டது என்று மத்திய சர்க்கார் முடிவுக்கு வந்து விட்டார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

**திரு. இராம. அரங்கண்ணல் :** கொள்முதல் விஷயத்தில் அவர்களாகக்கொடுப்பது, நாம் வலியுறுத்திப் பெறுவது என்கிற முறைகளில் எல்லாம் போதுமான அளவுக்குக் கொள்முதலைப் பெற முடியவில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது. ஆகவே அதிகமான உற்பத்தி செய்து அதிகமான மூட்டைகளை யார் தருகிறார்களோ அவர்களுக்கு அதிகப்பணம் கொடுக்கிற வகையில், மூட்டைக்கு இரண்டு ரூபாய் என்ற வகையில் முன்பு இருந்த கூப்பன் முறையைக் கொண்டு வர அரசாங்கம் முன் வருமா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** விலை நிர்ணயத்தைப் பற்றி முடிவு செய்யும்போது இந்தப் பிரச்சினை யோசிக்கப்படும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கொள்முதல் போன்ற பிரச்சினைகள் எல்லாம் மத்திய உணவு அமைச்சருடைய பரிசீலனையில் இருந்து வருவதாகத் தெரிவித்தார்கள். அந்த முடிவுகள் எப்போது வெளிவரும் ? எப்போது நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** கூடிய சீக்கிரம் அந்தத் தகவலை மத்திய அரசாங்கத்திலிருந்து வெளியிடுவார்கள்.

**திரு. ஜே. மாதா கவுடர் :** அரிசி மில்களைச் சர்க்காரே எடுத்து நடத்தவேண்டுமென்பதைப் பற்றி தென் மண்டல உணவு அமைச்சர்கள் கூட்டத்தில் யோசித்தார்களா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்த விவரங்களையெல்லாம் இப்போது சொல்லத் தயாராக இல்லை.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** ராஜ்யத்தில் 700-க்கு மேற்பட்ட நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. கொள்முதல் செய்வது கைவிடப்பட்டதால் அந்தக் கடைகளுக்கு அரிசி சப்ளை செய்ய மாற்று ஏற்பாடுகள் என்ன மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன ?



21st July 1964]

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** நியாய விலைக் கடைகளுக்குத் தேவையான அரிசியை மத்திய சர்க்கார் ஸ்டோரிலிருந்து சப்ளை செய்கிறார்கள்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** தஞ்சை மாவட்டத்தில் 1963-64 முடிய எத்தனை லட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யலாம் என்று உத்தேசிக்கப்பட்டது ? எத்தனை லட்சம் டன் கொள் முதல் செய்யப்பட்டது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** அந்தத் தகவல் இல்லை.

**திரு. இராம. அரங்கண்ணல் :** அரிசியின் மாதிரிகள் சட்டப் பேரவை நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சிதம்பரத்திலிருந்து வந்திருக்கிற அரிசியைப் பார்த்தால் கல்லும் அரிசியும் கலந்ததாக இருக்கிறது. இங்கு வந்திருக்கும் அரிசியே இப்படி இருக்கிறது என்றால் விற்கப்படுகிற அரிசி எப்படியிருக்கும் ? அமைச்சர் அவர்கள் அதை பார்வையிட்டார்களா ?

**கனம் சபாநாயகர் :** அரிசியை மட்டும் பாருங்கள், கல்லை ஏன் பார்க்கிறீர்கள் ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** வந்திருக்கும் அரிசியை சாம்பிளுக்கு வைத்திருக்கிறோம். அதை பார்த்திருக்கிறீர்கள். அதைச் சமைத்துச் சாப்பிட்டால் நன்றாயிருக்கும்.

**திரு. மு. சண்முகம் :** அரசாங்கம் நெல் கொள்முதல் செய்வதில் நியாயவிலை என்று அரசாங்கம் நிர்ணயிப்பது எந்த ஆதாரத்தில் செய்யப்படுகிறது ? உற்பத்தி செய்யும் விவசாயிகளின் கருத்தைக் கொண்டா ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** ஓரளவிற்கு உற்பத்தி செய்யக் கூடியவர்களைப் பாதிக்காமல் இருக்க வேண்டும் என்பதை மனதில் வைத்துத்தான் செய்வார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** புவனேஸ்வரத்தில் நம் முன்னாள் முதல் அமைச்சர் திரு. காமராஜ் அவர்கள் தலைமையில் நடந்த மகாநாட்டில் விலைவாசியைக் குறைப்பதற்கு ஒரு அம்சமாக அரிசி ஆலைகளை தேசியமயமாக்குவது என்று வலியுறுத்தி பேசப்பட்டு ஒரு முடிவு செய்யப்பட்டது. ஆனால் இன்று இந்த சர்க்கார் அதில் தயக்கமும், தடுமாற்றமும் காட்டுகிறது. அரிசி ஆலைகளை தேசியமயமாக்குவதில் இந்த சர்க்காரின் திட்டவட்டமான கொள்கை என்னவென்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

**Mr. SPEAKER :** This does not come under this question It is a policy matter.

[21st July 1964

### விவசாய வருமான வரி

* 591 கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-63-ம் ஆண்டு நம் மாநிலத்தில் விவசாய வருமான வரி விதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) வசூலித்த தொகை எவ்வளவு ?

**கனம் திரு. வெ. ராமையா :** (அ) 40,193 நபர்கள்.

(இ) ரூபாய் 1,34,11,425.85.

**திரு. மு. பொ. வடிவேல் :** விவசாய வருமான வரியாக வசூலிக்கப்படும் தொகை வசூலிக்கும் அதிகாரிகளுக்கு சம்பளம் கொடுக்கக் கூடப் போதவில்லை என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா ?

**கனம் திரு. வெ. ராமையா :** செலவு எவ்வளவு என்ற விவரம் என்னிடம் இல்லை. ஆனல் கனம் அங்கத்தினர் கூறுவது சரியாக இருக்காது.

**திரு. அ. ராகவ ரெட்டி :** விவசாயிகளுக்கு சர்க்கார் பல சலுகைகள் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது அக்ரிகல்சரல் இன்கம் டாக்ஸை எடுத்து விடும் உத்தேசம் உண்டா? அப்படியானல் அதன் நிலை என்ன ?

**கனம் திரு. வெ. ராமையா :** விவசாயிகளுக்கு சலுகை எவ்வளவோ வழிகளில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இது விவசாயிகளுக்கு விவசாயத்திலிருந்து வரும் லாபத்திலிருந்து கொஞ்சம் விவசாயிகள் நன்மைக்கும் பொதுமக்கள் நன்மைக்காகவும் வசூலிக்கப்படுகிறது.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** சாதாரணமாக எல்லா விலைவாசிகளும் உயர்ந்திருக்கிறது. இப்போது இந்த இன்கம் லிமிட் வைத்திருக்கிறோம். அதை உயர்த்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமையா :** இப்போது ஒன்றும் ஆலோசனை இல்லை.

### துறைமுகங்கள் (அபிவிருத்தி செய்தல்)

* 592 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிய துறைமுகங்கள் ஏதாகிலும் அபிவிருத்தி செய்யும்படி மத்திய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரமென்ன ?



21st July 1964]

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The proposals for developing certain new Minor Ports in the State are engaging the attention of the Government and the Government of India (Ministry of Transport) can be addressed in the matter, after they are finalised.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** எந்தெந்த சிறிய துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கு நம் அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் இங்கு கூறுவார்களா ?

**கனம் திரு. வெ. ராமையா :** சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த வரை புது துறைமுகங்களில் விசேஷ கவனம் செலுத்துவதற்கு முன்பு நடைமுறையில் இருக்கும் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தாகவேண்டும். உடனடியாக கடலூர் துறைமுகத்தை நல்ல போக்குவரத்துக்கு லாயக்குள்ள துறைமுகமாக ஆக்குவதற்கு ஒரு பெரிய திட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் வரை செலவு செய்து வேலைகள் தொடங்கி விட்டது. அதுபோல் தூத்துக்குடி துறைமுகம், இன்னும் நாகப்பட்டினம் இதுபோன்ற துறைமுகங்களில் இப்போது பல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த துறை முகங்கள் இல்லாமல் இன்னும் ஏராளமான துறைமுகங்கள் இருக்கின்றன. குறிப்பாக தென் ஆற்காடில், போர்ட்டோ நோவோ, தஞ்சை ஜில்லாவில் அதிராம்பட்டணம், ராமநாதபுரம் ஜில்லாவில் தொண்டி பாம்பன், தனுஷ்கோடி, கீழக்கரை, பின்னர் குலசேகரப்பட்டணம், குளச்சல் இதுபோன்ற துறைமுகங்கள் இருக்கின்றன. இவையெல்லாம் பட்டியலில் உள்ள துறைமுகங்கள். இதில் தீவிர கவனம் செலுத்தியாக வேண்டும். இத்திட்டத்தில் இல்லாவிட்டாலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்கு வேண்டிய முயற்சிகள் எல்லாம் எடுக்கவேண்டும். புது துறை முகங்கள் ஏற்படுத்துவதற்கும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறோம். என்னூர் இருக்கிறது. அதை புதிதாக அமைத்தாக வேண்டும். சென்னை பெரிய துறைமுகத்திற்கு ஒரு உப துறைமுகமாக சில பண்டங்களை இறக்குமதி செய்ய அத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்ற ஒரு ஆலோசனை இருக்கிறது. அதேபோல் திருநெல்வேலி ஜில்லாவில் புன்னக்காயல், வேப்பலோடை இவற்றை புதிதாக அமைக்க வேண்டும் என்று அதுவும் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

### *Quarters for teachers*

* 593 *Q.*—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Chief Minister be pelased to state—

(*a*) whether Government of India have agreed to advance loans to the States for construction of elementary school buildings and staff quarters for women teachers in rural areas; and

(*b*) if so, whether any allotment has been made to the Madras State and the details of the same?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes.

(b) No.

### " தமிழ்நாடு இல்லம் ", டில்லி.

*594 கேள்வி.—திரு. முனு. ஆதி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டில்லியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு (Madras House) ஆன செலவில் மத்திய அரசாங்க மானியம் ஏதேனும் கிடைத்ததா ? ஆமெனில் எவ்வளவு ?

(இ) இந்த இல்லத்தில் தமிழக அமைச்சர்கள் மட்டுமே தங்க அனுமதிக்கப்படுவார்களா அல்லது தமிழகத்திலிருந்து செல்லும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்க அனுமதிக்கப்படுவார்களா ?

(உ) இந்த இல்லத்திற்காக ஆண்டுதோறும் எவ்வளவு செலவாகும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) No.

(b) According to the Rules for occupation of Rooms in 'Madras House', Governor, Ministers, Speaker, Chairman, Officers of this Government on official business and Members of the Legislative Assembly and Council of this State are eligible to stay in 'Madras House'. Members of Parliament of this State have NOT specifically been mentioned in the Rules as they are provided with quarters in Delhi by the Government of India.

(c) The total expenditure for the current year is estimated at Rs. 70,100.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** மத்திய அரசாங்கம் பணம் கொடுக்காதது மட்டுமல்ல. நிலம் கூட சும்மாக் கொடுக்கவில்லை. நிலத்தை விலைக்கு வாங்கி நம் அரசாங்கச் செலவில் கட்டப்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் டெல்லிக்குச் சென்றால் வசதியாக தங்கவும், அரசாங்க வேலைகளை ஒழுங்காக கவனிக்கவும் இந்த வசதி அவசியமென்று கருதுகிறேன். அதே சமயத்தில் அமைச்சர்களுடன் செல்கிற உதவியாளர்கள், ப்யூன்கள் இவர்கள் இதேமாதிரி இடத்தில் தங்க வசதி வேண்டாம், ஆனால் அக் காம்பவுண்டிற்குள்ளாவது அவர்கள் தங்குவதற்கு வசதி செய்து கொடுக்க உத்தேசமுண்டா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது அமைச்சர்களுடனும், மற்ற அதிகாரிகளுடனும் செல்கிறவர்களுக்கு அங்கு தங்க இடம் இருக்கிறது.

**திரு. முனு. ஆதி :** செலவு 70,000 ரூபாய் என்று சொன்னார்கள். அதன் வருமானம் எவ்வளவு என்று சொல்லமுடியுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** வருமானத்திற்கு தனிக் கேள்வி போட்டால் கணக்குப் பார்த்துச் சொல்ல முடியும்.



**திரு. மா. இராசாங்கம் :** டெல்லியில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு இல்லத்திற்கு 'மதராஸ் ஹவுஸ்' என்று பெயர் பலகை மாட்டப்பட்டிருக்கிறதா ? அல்லது தமிழ் நாடு இல்லம் என்று பெயர் போடப்பட்டிருக்கிறதா ? 'மதராஸ் ஹவுஸ்' என்றிருந்தால் அதை தமிழ் நாடு இல்லம் என்று பெயர் மாற்ற சர்க்கார் ஆலோசனை கூறுமா ?

**கனம் சபாநாயகர் :** தங்கள் வீட்டுக்குத் தாங்கள் பெயர் வைத்துக் கொள்ள ஆலோசனை எதற்கு ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது 'மெட்ராஸ் ஹௌஸ்' என்று பெயர் போட்டிருக்கிறது. 'மெட்ராஸ் ஹௌஸ்' என்று சொன்னால்தான் உலகம் பூராவுக்கும் நன்கு தெரிகிறது.

**திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் :** டெல்லியில் கட்டப்பட்டிருக்கும் தமிழ் நாடு இல்லத்தில் தமிழ் நாடு சட்டசபை அங்கத்தினர்கள் போனால் தங்கலாமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தங்கலாம் என்று சொன்னேன். இலவசமாகத் தங்கலாமா என்று கேட்டால் இல்லை என்று சொல்கிறேன்.

### தீ அணைக்கும் நிலையம்

*595 கேள்வி.—திரு. இரா. நாராயணன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் வட்டத்தில் தீயணைக்கும் நிறுவனம் ஒன்று ஏற்படுத்த இடம் பார்க்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆமெனில் அது எப்போது அமைக்கப்படும் ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) 1964-65-ல் பெரம்பலூரிலும் இதர மூன்று நகரங்களிலும் தீ அணைப்பு நிலையம் நிறுவும் திட்டம் குறித்து அரசாங்கம் அண்மையில் ஆலோசித்தது. ஆனால், நிதி நிலைமை கஷ்டமாயிருப்பதால், இத் திட்டத்தை அடுத்த ஆண்டில் மீண்டும் ஆலோசிக்கலாமென அரசாங்கம் முடிவு செய்தது.

*596 கேள்வி.—திரு. கி. நாராயணசாமி பிள்ளை : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1964-ல் எந்தெந்த இடங்களில் தீயணைக்கும் படைகள் புதிதாக அமைக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஓரிடத்தில் தீயணைப்பு நிலையத்தை ஏற்படுத்துவது, அந்த இடத்தில் துரித வளர்ச்சியையும் அங்கே தொழிற்சாலை விபத்துக்கும், வீட்டு விபத்துக்களும் மற்ற தீ விபத்துக்களும் ஏற்படுகிற நிலையையும் பொறுத்திருக்கிறது. இந்த

விஷயங்களைப் பரிசீலித்துப் பார்த்து, திருநெல்வேலி, பெரம்பலூர் கோயம்புத்தூர் (இரண்டாவது தீ அணைப்பு நிலையம்), திண்டிவனம் ஆகிய நகரங்கள் ஒவ்வொன்றிலும் 1964-65-ல் ஒரு தீ அணைப்பு நிலையத்தை நிறுவும் திட்டத்தை அரசாங்கம் அண்மையில் ஆலோசித்தது. ஆனால், தற்போதைய இக்கட்டான நிதிநிலை காரணமாக இத் திட்டத்தை அடுத்த ஆண்டில் மீண்டும் ஆலோசிப்பதென அரசாங்கம் முடிவு செய்தது.

* 597 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுகாவிலுள்ள மேஜர் பஞ்சாயத்துக்களான காட்டுமன்னார்குடி; ஸ்ரீமுஷ்ணம்; பரங்கிப்பேட்டை முதலிய நகரங்களில் தீயணைக்கும் நிலையங்கள் திறப்பதற்கு உத்தேசமுண்டா ?

**கனம் திரு. பூ. கக்கன்** : இல்லை.

ஹொகேனகல் மின்சார திட்டம்

* 598 கேள்வி.—திரு. வி. ஆர். பெரியண்ணன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஹொகேனகல் மின்சார திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

(இ) இத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டுள்ளது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : (அ) & (இ) இத்திட்டம் தமிழ்நாடு, மைசூர் ஆகிய இரு மாநிலங்களுக்கும் சம்பந்தப்படுவதாகும். இந்த இரு மாநிலங்களும் இது குறித்து கடிதப் போக்கு வரத்து நடத்தி வருகின்றன. நமது மாநில எல்லைகளுக்குள் இத் திட்டத்தைப் பற்றிய விரிவான பரிசீலனை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாநில மின்சார போர்டு இத்திட்டத்திற்காக ரூ. 40 லட்சம் ஒதுக்கியுள்ளது.

**தொல்பொருள் ஆராய்ச்சி**

* 599 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்தில் உள்ள பாலிமேடு என்கிற பல்லவ மேட்டைச் சோதித்து தொல்பொருள் ஆராய்ச்சி நடத்த உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில் அதன் விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.



**திரு. இராம அரங்கண்ணல்** : இந்த பல்லவமேடு புராதனமான காண இடமாக இருக்கிறது. பல கலைகளை எல்லாம் அங்கு 9–30 a.m.
முடிகிறது. காஞ்சிபுரத்தில் இருக்கின்ற இந்த இடம் இப்போது மண் மூடிக் கிடக்கின்றது. ஆகவே அதை எடுத்து அரசாங்கம் ஆராய்ச்சி செய்வது நல்லது என்று கருதுகின்றதா ? அப்படி யானால் அதை சீக்கிரம் எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is only a suggestion for action.

*Land Tax (Collection of)*

* 600 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardship caused to the ryots of the Periyar Ayacut in Madurai district in the current fasli by Revenue authorities demanding land tax 60 per cent in excess of the previous fasli and by their adopting stringent measures to collect the same before March 1964 when the ryots cannot harvest their second crop; and

(*b*) if so, what measures the Government propose to take?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government are not aware of any particular hardship caused to the ryots of Periyar Area in the Madurai District. The enhanced assessment and enhanced water cess for Faslis 1372 and 1373 are liable to be collected before the end of March 1964 in the ordinary course and no avoidable hardship could possibly have been caused.

(*b*) Does not arise.

**திரு. வை. சங்கரன்** : சாதாரணமாக ஒவ்வொரு வருடமும் நில வரியை நான்கு தவணைகளாக அதாவது பெப்ருவரி, மார்ச், ஏப்ரல், மே இந்த மாதங்களில் வசூல் செய்வது வழக்கம். இந்த ஆண்டு எல்லா வரியையும் பெப்ருவரி மாதத்திலேயே கொடுத்து விடவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தார்கள். இல்லையென்றால் ஜப்தி செய்வது போன்ற கெடுபிடி நடவடிக்கைகள் எல்லாம் எடுத்தார்கள். இதைப்பற்றி நான் இந்த ஷார்ட் நோட்டீஸ் கேள்வி அப்போதே கொடுத்திருந்தேன். அது தக்க நேரத்தில் வராததால் இதனுடைய ஆப்ஜக்டே போய்விட்டது. இவ்விதம் கெடுபிடிகள் நடந்து வந்தது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதை பிற்காலத்திலாவது மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

(பதில் இல்லை)

* 601 *Q*.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the hardships caused to the ryots of Ranipet Division in North Arcot district as a result of the orders issued to the Village Officers of Ranipet

[21st July 1964

Division by the Revenue Divisional Officer, Ranipet, to collect the taxes due for faslis 1372 and 1373 by the end of March, 1964; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: (a) The Government are not aware of any particular hardship caused to the ryots of Ranipet division in North Arcot District. The taxes due for faslis 1372 and 1373 are liable to be collected during this period in the ordinary course and no avoidable hardship could possibly have been caused.

(b) Does not arise.

**திரு. ரா. சு. வீரப்பசெட்டியார்:** ராணிப்பேட்டை டிவிஷனில் இருக்கின்ற வில்லேஜ் ஆபீஸர்கள் 72, 73-வது பசலிகளுக்கு கொடுக்கவேண்டிய வரிகளை உடனடியாக கொடுக்கவேண்டும் என்று நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள் என்று தகவல் வந்திருக்கிறது. இது விஷயத்தில் அரசாங்கம் தலையிட்டு விவசாயிகளை தொந்தரவு படுத்தாமல் இருக்கும்படியான அளவில் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** கனம் அங்கத்தினர் அவர்களுக்கு வந்த தகவல் எனக்கு வரவில்லை. இதைப்பற்றி எனக்கு தனியாக எழுதி அனுப்பினால், அதைப்பற்றி விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** பொதுவாக வரி வசூல் செய்வது தற்போது கொடுமையாக வசூலிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக எங்கள் பகுதியில் வரி கொடுக்கவில்லை என்பதற்காக வீட்டிலுள்ள கதவு முதலியவைகளை எல்லாம் பிடுங்கி மந்தையில் கொண்டு போட்டுவிடுகிறார்கள். கூரைகளை பிரித்து போடுகிறார்கள்; பண்ட பாத்திரங்களை எல்லாம் எடுத்து போட்டு விடுகிறார்கள்; கேஸ்களும் போட்டுவிடுகிறார்கள்; இந்த விவரங்கள் எல்லாம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தெரியுமென்றால் இதைத் தடுக்கின்ற முறையில் முன்னால் வசூல் செய்து வந்ததுபோல் நான்கு தவணையாக வசூல் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரிப்பணம் வசூலாக வேண்டும். இல்லாவிட்டால் திட்ட வேலைகள் நடைபெறாது. முன்பு இருந்தது போல் அதிக நிர்பந்தம் இருக்கக்கூடாது, கொடுமைகள் இருக்கக்கூடாது என்று நிதானமாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் அரசாங்கம் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

### *Jeep Cars to Police Inspectors*

* 602. *Q.*—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to supply Jeep Cars to every Circle Inspector of Police to facilitate detection of crimes?



21st July 1964]

THE HON. SRI P. KAKKAN: No, Sir.

**திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** இப்போதுள்ள நிலைமையில் போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் 200, 300 சதுரமைல் சுற்றளவுக்கு இருக்கின்ற இடங்களுக்கு எல்லாம் அடிக்கடி போகவேண்டியிருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் ஏதாவது சம்பவங்கள் நடந்தால் அந்த இடங்களுக்கு உடனே சென்று கேஸ்கள் எடுப்பதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே இவர்கள் உடனடியாகப் போவதற்கு வசதி செய்து கொடுக்கின்ற அளவில் இவர்களுக்கு ஜீப் கார்கள் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்டிருக்கும் கேள்வியில் சர்க்கிள் இன்ஸ்பெக்டர்களுக்கு ஜீப் கொடுக்க உத்தேசமுண்டா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் இப்போது உடனடியாக இல்லை என்று சொன்னேன். பொதுவாக போலீஸ் அதிகாரிகளுக்கு சில குறிப்பிட்ட இடங்களுக்கு ஜீப் வசதிசெய்து கொடுப்பதற்கு ஆலோசனை நடந்து கொண்டிருக்கிறது.

### பாலம் கட்டுதல்

* 603 **கேள்வி.—திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தஞ்சை ஜில்லாவில் ஓடும் எந்தெந்த ஆறுகளுக்கு குறுக்கே பாலம் கட்ட திட்டம் போடப்பட்டது?

(இ) எவ்வளவு செலவில்?

(உ) 1963-ம் ஆண்டோடு கட்டி முடிந்த பாலங்கள் எத்தனை?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** (அ) சபையில் ஓர் அறிக்கை[a] வைக்கப்பட்டுள்ளது.

(இ) ரூபாய் 145.16 லட்சம்.

(உ) ஒன்பது பாலங்கள்.

* 604. *Q.*—SRI C. CHIRANJEEVULU NAIDU: Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether there is any proposal to construct a river bridge across the Kushasthali river near Pallipet in Chingleput district; and

(b) if so, when this work will be taken up?

**கனம் திரு. வெ. ராமைய்யா:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

---

[a] Printed as Appendix III on pages 535–538 infra.

[21st July 1964

* 605 *Q.*—SRI C. SRINIVASAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to construct an over-bridge near the level-crossing at Manamadurai Junction on Madurai—Mandapam Road; and

(*b*) if so, when this work will be taken up?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) இல்லை.

(இ) இக் கேள்வி எழாது.

*Loan to Milk Supply Societies*

* 606. *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the total amount of assistance sought for by the Registrar of Co-operative Societies for the grant of loans and subsidy for the purchase of milch animals to the Harijan Members of Milk Supply Societies for the years 1962–63 and 1963–64 ; and

(*b*) the amount of assistance actually allotted during these years?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஸார், பால் வழங்கும் சங்கத்தில் சேர்ந்து மாடுகளை வாங்குவதற்காக அரிஜனங்களுக்கு என்று; அந்த இலாகாவிலிருந்து 100 ரூபாய் மான்யம் கொடுக்கப்பட்டு வந்தது. இந்த சலுகை இப்போது நடைமுறையில் இருக்கிறதா ?

**கனம் திரு பூ. கக்கன் :** பால் மாடுகள் வாங்குவதற்காக அரசாங்கம் மான்யமாகவும், கடனாகவும் பணம் கொடுத்து வருகிறது. அரிஜன நல இலாகாவிலிருந்து கூட்டுறவு மூலமாக உதவி செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** ஏற்கனவே கூட்டுறவு மூலமாக அரிஜன நல இலாகாவிலிருந்து 100 ரூபாய் மான்யமாக கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது. அப்படி நிறுத்தியிருந்தால், இந்த உதவியை தொடர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. பூ. கக்கன் :** பால் மாடுகள் வாங்குவதற்கு கூட்டுறவு வாயிலாக, அரிஜன நல இலாகாவிலிருந்து 125 ரூபாய் மான்யமாகவும் 125 ரூபாய் கடனாகவும் கொடுக்கப்பட்டு வருகிறது. எந்த உதவியும் நிறுத்தப்படவில்லை.

a Printed as Appendix IV on pages 538–539 infra.



21st July 1964]

**சைக்கிள் தொழிற்சாலை (கிருஷ்ணகிரி)**

* 607 **கேள்வி.—திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரியில் சைக்கிள் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசமுண்டா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) The Government sanctioned a scheme for the establishment of a Cycle Assembly Unit in the departmental Industrial Estate, Krishnagiri, as a small-scale industrial unit, for implementation during the Third Five-Year Plan. The cost of the scheme is Rs. 1,30,000 (Rupees one lakh and thirty thousand) non-recurring towards the purchase of machinery and equipment and Rs. 2,43,000 (Rupees two lakhs and forty-three thousand) recurring per annum towards the purchase of raw materials, consumable stores, contingencies and employment of the required staff.

The building for the Unit is nearing completion.

**திரு. எம். வி. கரிவேங்கடம் :** ஸார், இந்தத் தொழிற்சாலையில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ? இதில் சைக்கிள்கள் எப்போது தயாரிக்கப்படும் ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இப்போது கட்டடம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் கட்டடம் கட்டி முடிந்து விடும் என்று நினைக்கிறேன். கட்டட வேலை முடிந்ததும் வேலை துவக்கப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த வரையில் கட்டடம் கட்டி முடிவுக்கு வந்து, இதற்கு வேண்டிய எல்லா மெஷினரிகளும் கூட வந்தாய் விட்டது என்று தெரிகிறது. ஆகவே இதில் விரைவில் வேலை துவங்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கட்டடம் முடிந்துவிட்டால் வேலை துவங்குவதற்கு காலதாமதம் இருக்காது.

*Drainage Scheme (Tiruthuraipundi taluk)*

* 608 *Q.*—SRI C. M. AMBIKAPATHI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to expedite the Kilaithangiar Drainage Scheme and Valavanar Drainage Scheme in Tiruthuraipundi taluk in Thanjavur district; and

(*b*) the year in which the scheme is proposed to be completed?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Proposals for tackling the drainage problem in Kilaithangiar and Valavanar drains are under the consideration of the Chief Engineer (Irrigation).

(*b*) The proposals have not yet been [illegible]

[21st July 1964

### கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் வீடுகள்

*609 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ம் ஆண்டுகளில் கவர்ன்மெண்ட் எஸ்டேட்டில் சர்க்கார் சிப்பந்திகளுக்கு ஏதேனும் வீடுகள் கட்டப்பட்டனவா?

(இ) அங்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டு இருந்ததே, அது எந்த அளவு நிறைவேறியுள்ளது?

(உ) இதுவரை எத்தனை அங்கத்தினர்களுக்கு அங்கு வீடுகள் தரப்பட்டுள்ளன?

(எ) வீடுகள் பெறுவதற்காக அங்கத்தினர்களுக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள் யாவை?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (d): A statement[a] is placed on the Table of the House.

திரு. முனு. ஆதி: இந்த அறிக்கையில் இறந்து போன இரண்டு உறுப்பினர்களுடைய குடும்பங்கள் இரண்டு வீடுகளில் இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் குடியேறினபோது, அவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்களா, அல்லது இறந்து போன பின்னால் உறுப்பினர்களின் குடும்பங்கள் குடியேற்றப்பட்டனவா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இவர்கள் உறுப்பினர்களாக இருந்தபோது அலாட் செய்யப்பட்டது என்றுதான் நினைக்கிறேன். இது குறித்து தனியாக கேள்விபோட்டால் எல்லா விவரங்களையும் சொல்ல முடியும்.

திரு. கரு. சீமைச்சாமி: சட்டமன்ற உறுப்பினர்களுக்கென்று தனியாக ஹாஸ்டல் கட்டுவதற்காக தொகை ஒதுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதற்கான வேலை எப்போது துவக்கப்படும்? இதற்கு அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கை எடுப்பார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: கனம் அங்கத்தினர் அவர்கள் இந்தக் கேள்வியை கொஞ்சம் நன்றாக கவனித்திருந்தால், சட்டசபை அங்கத்தினர்களின் விடுதிக்கும், இதிலுள்ள க்வார்ட்டர்ஸ்க்கும் சம்பந்தம் இல்லை என்று தெரிய வரும். சட்டசபை உறுப்பினர்களுக்கு ஆஸ்டல் கட்டுவதற்காக தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### *Compulsory Insurance Scheme*

*610 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to introduce Compulsory Insurance Scheme to the personnel of the Police Department?

THE HON. SRI P. KAKKAN: No, Sir.

[a] Printed as Appendix V on pages 539—542 infra.



21st July 1964]

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: ஸார், இந்த போலீஸ் இலாகாவில் இருப்பவர்கள் தினந்தோறும் பெரும் ஆபத்தான நிலையில் பணிபுரிய வேண்டியிருப்பதால் அவர்களுக்கு இந்த இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் கொண்டு வர முடியுமா? அரசாங்கத்திலிருந்தே ப்ரீமியம் கட்டி அந்த ஸ்கீமைக் கொண்டு வந்தால் நல்லது. அப்படி இல்லையென்றாலும் போலீஸ் இலாகாவில் இருப்பவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் கொண்டுவந்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதையாவது அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: போலீசாருக்கு இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் கொண்டுவருவதற்கில்லை என்ற பதிலைத் தான் சொன்னேன். இதர ஸ்கீம் இருக்கின்றது. ப்ராவிடென்ட் ஃபண்ட், லிபரலைஸ்ட் பென்ஷன் ஸ்கீம் இவற்றில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களே தவிர கம்பல்சரி இன்ஷ்யூரன்ஸ் ஸ்கீம் கிடையாது.

திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: அவர்களை இன்ஷ்யூர் செய்ய வேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தி அவர்கள் இன்ஷ்யூர் செய்ய அரசாங்கம் அவர்களுக்கு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: கட்டாயப்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கட்டாய இன்ஷ்யூரன்ஸ் கட்டாத போலீசார் எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன்: கட்டாய இன்ஷ்யூரன்ஸ் இப்போது இல்லை. முன்பு இருந்ததை அபாலிஷ் செய்து விட்டார்கள். ஏற்கெனவே கட்டியிருந்தவர்கள் எண்ணிக்கை என்ன என்ற விவரம் இப்போது இல்லை. அதைப்பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**

## II.—ADJOURNMENT MOTION *RE*: PROPOSED STRIKE BY MADRAS CITY COLLEGE STUDENTS

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர விரும்புகிறேன்:—

"The proposed strike of the students of Colleges in Madras City in support of the fast being observed by the students of the Madras Presidency College and the consequent hardship experienced by the students and their parents."

இப்போது சென்னையில் உள்ள விக்டோரியா விடுதியில் உள்ள மாணவர்கள் சென்ற ஆறு நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, நேற்றிலிருந்து ஒரு மாணவர் நீண்ட உண்ணாவிரதத்தில்

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]* [21st July 1964

ஈடுபட்டும், மேற்கொண்டு 10 மாணவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபடும் நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது. மேலும், நேற்று மாநில கல்லூரியில் உள்ள மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு தொள்ளாயிரத்துச் சில்லரை மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் வெளியேறியிருக்கிறார்கள். வேலை நிறுத்தம் இன்றும் தொடர்ந்து நடைபெறுகிறது. சென்னை நகரில் உள்ள மற்ற கல்லூரி மாணவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்னை முக்கிய பிரச்னையாகும். மாணவர்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதற்கான காரணத்தை உடனடியாகக் கண்டறிந்து அதை நீக்கினாலொழிய நிலைமை மோசமாகப் போகுமோ என்று எண்ணவேண்டியிருக்கிறது. அரசினர் இந்தப் பிரச்னையில் தலையிட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கம் தலையிட்டால் தான் அதற்கான காரணத்தை அறிந்து இரு சாராருக்குமிடையே சுமுக உறவு ஏற்படுத்த முடியும். மாணவர்கள் விடுதியைச் சேர்ந்த காப்பாளராக இருக்கிற வார்டன் மீது குற்றச்சாட்டுகளைக் கூறியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு வேலை நிறுத்தம் செய்து அப்போது முடிவு எடுக்கப்பட்டு, அத்தகைய குறைகளை வார்டன் நீக்கத் தவறியதால் இந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது. விடுதி வார்டனுக்கும் அங்கு இருக்கிற மாணவர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டிருக்கிறது. அரசினர் தலையிட்டு சுமுக உறவு ஏற்படுத்த வேண்டும். மாணவர்களை மட்டும் பாதிக்கும் பிரசனையாகக் கூட இல்லாமல் பெற்றோர்களையும் பாதிக்கும் பிரச்னையாக இருக்கிறது. இந்த நிலைமையில் நடவடிக்கை எடுக்காவிட்டால் கட்டுப்பாடற்ற நிலைமை வளருமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திற்கும் மாணவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் வந்த செய்தி மூலமாக அறிகிறோம். உடனடியாக நடவடிக்கை எடுப்பதன் மூலமாக, அரசினர் தலையீடு மூலமாகவும் இந்த நிலைமையைச் சீர்திருத்த முடியும் என்று நினைக்கிறேன். உடனடியாக அரசாங்கம் தலையிடாவிட்டால் சென்னை மாநிலத்தின் பெயருக்கே இழுக்கு ஏற்படுமோ என்று அஞ்ச வேண்டிய நிலை இருக்கிறது. அதைப்பற்றி விவாதிக்கத் தங்கள் இடம் ஒதுக்கித் தந்து, மாணவர்களுக்கும் விடுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இடையே சுமுகமான உறவு ஏற்படும் முறையில், அதற்கு உறுதுணை புரியும் முறையில் சரியான முடிவு எடுக்க உதவியாக இருக்கும் என்று கூறிக்கொண்டு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குத் தாங்கள் ஆதரவு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இதிலே இரண்டு கருத்துக்கள் இருக்கின்றன. ஒன்று மாணவர்களிடத்திலே ஏதோ கிளர்ச்சி இருக்கிறது, அதிலே சர்க்கார் தலையிட்டுத் தீர்த்து வைக்கவேண்டும் என்பது. இரண்டாவது இது ஒத்திவைப்புப் பிரேரணைக்கு உகந்ததா என்பது.

சர்க்கார் எந்த விதமான பிரச்னை எப்போது எழுந்தாலும் அதை கவனிக்கத் தயாராக இருக்கிறார்கள். அதைப்பற்றி என்றும் தயங்கியது கிடையாது. ஆனால் இது ஒத்திவைப்புப்



21st July 1964] *[திரு. ஆர். வெங்கட்டராமன்]*

பிரேரணைக்கு உகந்ததா என்றால் ஒரு ஹாஸ்டலில் சில மாணவர்களுக்கும் நடத்துகிறவர்களுக்கும் இடையே ஏதோ தகராறு ஏற்பட்டது என்ற காரணத்திற்காக அதை மாணவர்கள் பிரச்னையாகவோ, ராஜ்யத்தில் இருக்கிற எல்லா மாணவர்கள் பிரச்னையாகவோ, பொது மக்களுக்கு முக்கிய பிரச்னையாகவோ கருத முடியாது. ஒரு பிரச்னை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு ஏற்றதாக இருக்கவேண்டுமென்று சொன்னால் "It must be of public importance". அந்த அளவுக்கு இது இல்லை. இந்தப் பிரச்னை ஒத்திவைப்புப் பிரேரணைக்கு ஏற்றதல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: Victoria Hostel is not a Government institution and anything happening there will not be a direct Government responsibility for which Rule 42 will apply.

Moreover, anticipated actions cannot form the subject matter of adjournment motions. Adjournment motions should relate to recent occurrences. Further the Hon. Minister is making a statement to-day under Rule 41 on an allied subject. I withhold consent to the motion.

SRI M. KALYANASUNDARAM: On a point of order, Sir. The Hon. Speaker said that it is not an important matter to come under the purview of Rule 42. Even to allow a matter under Rule 41, it should be a matter of public importance . . .

MR. SPEAKER: The Hon. Member is asking how it will be proper to allow it under Rule 41 and whether there is any difference between the two Rules. I am able to see the hon. Member's point. There is a lot of difference between Rules 41 and 42. Rule 42 presumes failure on the part of the Government to run the administration properly and if there is something dangerous or emergent, it should come before the House for discussion to shape the policy of the Government in that matter. Under Rule 41, we are allowing notices leniently. If the hon. Member wants that I should be very strict, I will disallow the notice.

## III.—CALLING ATTENTION TO THE AGITATION IN THE VICTORIA HOSTEL, MADRAS

SRI V. R. NEDUNCHEZHIYAN: I wish to call the attention of the Hon. Chief Minister to a matter of urgent public importance, viz., the strained relations between the students and management of the Victoria Hostel, Triplicane, Madras, the decision of students to go on fast unto death, etc.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, I wish to make the following statement.

The agitation of the students of Victoria Hostel, Triplicane, seems to be mainly over the non-admission of some studer's and the question of replacing the present dividing mess system by a

[Sri R. Venkataraman] [21st July 1964

contract system. They also allege victimisation of some students and want the present Warden of the Hostel to be removed from that office.

The Government do not generally interfere in the internal administration of non-Goverment institutions. The Hostel in question is a private registered trust, managed by a Governing Body consisting of responsible persons. They have done their best to meet the requirements of the students and the Government do not propose to intervene in the matter.

**திரு. இரா.நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையைப்பற்றி வார்டன் மாணவர்களை அழைத்து வைத்து கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பேசி ஒரு சுமுகமான முடிவுக்கு வருவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இது சம்பந்தமாக மாணவர்கள் என்னை வந்து சந்தித்தார்கள். நான் முதல் அமைச்சர் அவர்களிடம் பேச, மாணவர்களை முதல் அமைச்சர் அவர்களிடம் அனுப்பினேன். அவர்கள் ஆஸ்பத்திரியில் இருந்தால் கூட, 3, 4 மாணவர்களை அழைத்து இது சம்பந்தமாகப் பேசினார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் 'வார்டனை நீக்கவேண்டும் என்றெல்லாம் அஜிடேஷன் செய்வது நன்றாக இருக்காது. நீங்கள் இப்பொழுது இந்த கிளர்ச்சியை வாபஸ் பண்ணிக்கொண்டு சாதாரணமாக முன்பு போல் ஹாஸ்டலில் இருங்கள். நான் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த பிறகு இதை விசாரிக்கிறேன். சொந்தப் பொறுப்பில் விசாரிக்கிறேன்' என்று கூட மாணவர்களிடம் சொன்னதாக என்னிடம் சொன்னார்கள். மாணவர்கள் முதலில் முதல் அமைச்சர் அவர்களிடம் ஒன்றும் சொல்லவில்லை. அவர்கள் போய்விட்டார்கள். ஆனால் திரும்பி வந்து உடனடியாக ஏதாவது பரிகாரம் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். அந்த விதமாகச் செய்ய இயலாத நிலைமை ஏற்பட்டிருப்பதால் மேற்கொண்டு நடவடிக்கை ஒன்றும் இதில் எடுக்க முடியவில்லை.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS INDUSTRIAL ESTABLISHMENTS (NATIONAL AND FESTIVAL HOLIDAYS) AMENDMENT BILL, 1964.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964."



21st July 1964]

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (2) THE MADRAS LEASE-HOLDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) AMENDMENT BILL, 1964

THE HON. SRI V. RAMAIAH : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964.

MR. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras Lease-holds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

### (3) THE MADRAS PREVENTION OF BEGGING (AMENDMENT) BILL, 1964 (L.A. BILL NO. 4 OF 1964) AS AMENDMENT BY THE JOINT SELECT COMMITTEE.

MR. SPEAKER : Now we will take up the clause-by-clause consideration of the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964.

Clauses 2 and 3 were put and carried.

*Clause 4.*

MR. SPEAKER : The question is—

"That Clause 4 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

"In the proposed Clause 1 to section 2 of the Principal Act, after the word 'dancing' and before the words 'performing tricks' *insert* the words 'fortune telling'."

SRI M. V. KARIVENGADAM : Sir, I second the amendment.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

***திரு. செ. மாதவன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, பிச்சை எடுப்பதை 'டிபைன்' செய்திருக்கிறார்கள் சட்டத்திலே. அதைப் பற்றி நேற்றே குறிப்பிட்டேன். 'பார்சூன் டெல்லிங்' என்ற வார்த்தைகளை அதில் சேர்க்க வேண்டும் என்று சொன்னேன். அவர்கள் பதில் அளித்தார்கள். அவர்கள் அதற்கு அமைச்சர்

[திரு. செ. மாதவன்] [21st July 1964

பதிலில் எங்கேயோ அவர்கள் தங்களுடைய திறமையைக் காட்டுவதை நாம் ஏன் தடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். இந்த டெபினிஷனை நன்றாக படித்துப் பார்த்தால் 'அண்டர் தி பிரடென்ஸ் ஆப்' என்ற வார்த்தைகளை சேர்த்திருக்கிறோம். அதனால் ஜோஸ்யம் கூறுபவர்கள், குருவி ஜோஸ்யம் கூறுபவர்கள் பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டால்தான் இது அவர்களைக் கட்டுப்படுத்தும். அவர்கள் எந்த இடத்திலாவது இருந்து அந்தத் தொழிலைப் பார்த்தால், இந்த வார்த்தைகளை சேர்ப்பதினாலே அவர்களைக் கட்டுப்படுத்தாது. அதை உணர்ந்து 'அண்டர் தி ப்ரிடென்ஸ் ஆப்' என்ற வார்த்தைகள் இருப்பதால் 'பார்சூன் டெல்லிங்' என்ற வார்த்தைகளைச் சேர்ப்பதில் தவறு இல்லை என்று கருதுகிறேன். மேலும், ஏற்கனவே இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சட்டத்தில் 'பார்சூன் டெல்லிங்' என்பது இருக்கிறது. மத்திய சர்க்காரால் போடப்பட்ட அந்த சட்டத்திலிருந்து நாம் வேறுபட்டு செல்வதற்குக் காரணமில்லை. ஆகவே, இந்த வார்த்தைகளைச் சேர்க்கலாம் என்று நம்புகிறேன். இதனால் உண்மையாகவே திறமை படைத்தவர்கள், ஜாதகம், ஜோஸ்யம் சொல்லுவதில் திறமை படைத்தவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற அச்சம் கனம் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட வேண்டிய அவசியமில்லை. நம்முடைய ஸ்தல நிர்வாக அமைச்சர் கைரேகை பார்ப்பதில் கெட்டிக்காரர். அவர்களைப் போன்றவர்களை இந்தச் சட்டம் நிச்சயம் கட்டுப்படுத்தாது. பிச்சை எடுப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் ஜோஸ்யம் பார்ப்பது, ஜாதகம் பார்ப்பது போன்றவைகளை செய்யக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. ஆகையால் இந்த வார்த்தைகளை கட்டாயம் சேர்க்கவேண்டும், என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : இப்பொழுது பிரச்னை, யாருக்கு ஜோஸ்யத்தில் நம்பிக்கை இருக்கிறது, இல்லை என்பது அல்ல. இப்பொழுது இருக்கிற பிரச்னை இந்தச் சட்டத்திலே இந்த வார்த்தைகளைச் சேர்க்க வேண்டுமா என்பது தான். இதை ஆய்வுக் குழுவிலே நன்றாக ஆராய்ந்து பார்த்து, எல்லோரும் இதைப்பற்றி பேசி, கடைசியில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆகவே, இந்தத் திருத்தத்தை இப்பொழுது ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

*SRI S. NANJUNDA ROW : Mr. Speaker, Sir, Clause 4 deals with the definition of 'begging', 'Begging' means—

"Soliciting or receiving alms in a public place, whether under the pretence of singing, dancing, performing tricks or selling articles or otherwise . . . . ."

I just want a clarification regarding only one point. Sir, if the term "performing tricks" is included in this definition, even the snake charmer or the snake catcher would come under this



21st July 1964] [Sri S. Nanjunda Rao]

definition. Now a snake charmer performs certain tricks in the public street—and no doubt it is a nuisance—and gets alms. But if he is prevented from taking to this profession, what will happen to the society. Suppose there is a snake in a place and we want somebody to catch it. But according to this clause, if snake charmers and snake catchers are done away with, the innocent people who do not know how to deal with the situation, would suffer. I want certain safeguards to be provided in this clause.

MR. SPEAKER : What safeguard does the hon. Member want?

SRI S. NANJUNDA ROW : Professional snake charmers should be allowed to continue their profession. They are useful for the welfare of the society. I represent a constituency where there are innumerable snakes like cobras. In Vedasandur we want snake charmers only to catch snakes and not for the purpose of receiving alms. So, I want to know whether snake charmers will come under this definition.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பாம்பு பிடிப்பதை ஒரு தொழிலாக வைத்து பாம்பு பிடித்து அதன் தோலை உறித்து பதனிட்டு விற்பனை செய்பவர்களாக இருந்தால், அது டெபினிஷன் கீழே வராது. 'அண்டர் தி ப்ரிடென்ஸ் ஆப்' என்ற வார்த்தைகள் இருப்பதால், பாம்பு பிடித்து, அதைத் தெருவிலே விளையாட்டுக் காட்டி மக்களிடையே காசு கேட்பதாக இருந்தால், அது அனுமதிக்கப்பட மாட்டாது.. உலகத்தில் எத்தனையோ சமுதாயம் பாம்பு பிடிப்பவர்கள் இல்லாமல் மேம்பட்ட சமுதாயமாக இருக்கிறது. இன்னமும் பாம்பு பிடிப்பவர்களை வைத்துத்தான் இந்த சமுதாயம் இருக்கவேண்டும் என்ற நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The amendment was put and lost. 10 a.m.

Clause 4 was put and carried.

*Clause 5.*

MR. SPEAKER : The question is—

"That Clause 5 do stand part of the Bill."

SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

"In the proposed new section 3 (i) of the Principal Act, in item (b) *for* the words "six months" *substitute* the words three months"."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

[21st July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : This matter was gone into fully and thoroughly by the Select Committee. Unless some convincing reasons are adduced, we do not want to depart from the conclusions of the Select Committee.

(Sri S. Madhavan did not speak.)

MR. SPEAKER : So the hon. Member Sri S. Madhavan is not giving convincing reasons.

The amendment was put and lost.

Clause 5 was put and carried.

Clauses 6 to 12 were put and carried.

*Clause* 13.

MR. SPEAKER : The question is—

"That Clause 13 do stand part of the Bill".

MR. SPEAKER : Is the hon. Member Sri S. Madhavan moving his amendment?

THE HON. SRI R. VENKATARAMAN : There is a slight mistake in the amendment given notice of by the hon. Member Sri S. Madhavan. In the Principal Act there is no Clause 15 at all.

SRI S. MADHAVAN : I am not moving that amendment.

MR. SPEAKER : The hon. Member Sri S. Madhavan is not moving that amendment. Further it is out of order.

SRI S. MADHAVAN : Yes, Sir. I move the following amendments :—

In the proposed new section 14 (1) of the Principal Act, in line four, after the word " person " and before the word " liable ", *insert* the word " legally ".

In the proposed new section 14 (2) of the Principal Act, after the word " person " and before the word " liable ", *insert* the word " legally ".

In the proposed new section 14 (3) of the Principal Act, after the word " varied " and before the words " by the Magistrate ", *insert* the words " or cancelled ".

The amendments were duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.



21st July 1964]

* **திரு. செ. மாதவன் :** இந்தப் பதினான்காவது பிரிவுக்கு கொடுக் கப்பட்டிருக்கும் திருத்தங்களைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். முதலிலே "லீகலி" என்ற வார்த்தையை சேர்க்க வேண்டுமென்று கொடுத்திருக்கிறேன். சாதாரண சிவில் ஜெயிலுக்கு அனுப்பப்படுகிறவர்களுக்கு டிகிரி ஹோல்டரை பணம் கட்டச் சொல்வதுபோல, சிறைக்கு அனுப்பப்படுகிறவர் களுக்காக அவர்களைப் பெற்றெடுத்தவர்கள் பணம் கொடுக்க வேண்டுமென்று இந்தப் பிரிவு கூறுகிறது. ஒருவர் செய்யும் குற்றத் திற்காக இன்னொருவரை லையபிள் ஆகச் செய்வதாகும். பொதுவாக, "லையபிள்" என்ற வார்த்தை போடப்பட்டிருக்கிறது. அப்படிப் பொதுவாகப் போட்டிருந்தாலும், "லீகலி லையபிள்" என்ற பிரிசம்ஷன் இருக்கிறதென்று கனம் அமைச்சரவர்கள் வாதாட லாம். ஒரு ஸேஃப்டி இருக்கவேண்டுமென்ற காரணத்தால் "லீகலி" என்ற வார்த்தையை சேர்க்கவேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், 1956-ஆம் வருஷ மத்திய சர்க்கார் சட்டம் ஹிந்து அடாப்ஷன் அன்டு மெயின்டனன்ஸ் சட்டப்படி, தான் பெற்றெடுத்த பிள்ளை களைக்கூட ஒரு குறிப்பிட்ட வயதிற்குள்ளாகத்தான் மெயின்ட னன்ஸ் செய்வதற்கு அவர்களுக்கு லையபிலிடி இருக்கிறதென்று சட்டத்திலே இருக்கிறது. மேலும், அந்தச் சட்டத்திலே யார் யார் டிபென்டன்ஸ் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. அவர்களை எப்பொழுது பராமரிக்கவேண்டுமென்பதற்கு விதி முறைகளும் அந்தச் சட்டத்திலே போடப்பட்டிருக்கின்றன. அப்படி சட்டங்கள் ஏற்கனவே வரையறுக்கப்பட்டுவிட்ட காரணத் தால் "லீகலி" என்ற வார்த்தையைச் சேர்த்தால் விளக்கமாக அமையுமென்று நான் கருதுகிறேன். ஒருவருக்கு பொறுப்பைக் கொடுப்பதற்கு முன்னால் அவருக்கு சட்டப்படி அந்தப் பொறுப்பு இருக்கிறதா என்று பரிசீலிக்கவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், இதையும் நீதிமன்றம் பரிசீலிக்குமென்று கனம் அமைச்சரவர்கள் சொல்லிவிடலாம். மாஜிஸ்டிரேட் என்று போட்டிருக்கிற காரணத்தால் நீதிபதி அவர்கள் சட்டத்தைப் பரிசீலித்து யார் லையபிள் என்று சொல்வார்கள் என்று வாதாடலாம். அதனால் "லீகலி" என்ற வார்த்தையைப் போட்டு விட்டால் நலமாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பிரிவிலே சப் கிளாஸ் (3)-ல் கேன்சல் என்ற வார்த்தையைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். ஏற்கெனவே இந்தப் பிரிவின்கீழ் உத்திரவு போட்டு விட்டால் மாற்றுவதற்கு அந்த நீதிபதிக்கு உரிமையுண்டு என்று இருக்கிறது. மாற்றுவதற்கு எப்பொழுது உரிமையுண்டோ, அப்போது கேன்சல் செய்வதற்கும் உரிமையுண்டு என்று நான் நம்புகிறேன். ஆகவே, "கேன்சல்" என்ற வார்த்தையையும் சேர்த்தால் பொருத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கையோடு, இந்த இரண்டு திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

[21st July 1964

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : சட்டப்படி 'லையபிள்" என்று சொன்னால், லீகலி லையபிளாகத்தான் இருக்கமுடியும். "லையபிள்" என்று பார்க்கிறபொழுது சட்டப்படி லையபிலிடி இருக்கிறதா என்றுதான் பார்ப்பார்கள். பொது அபிப்பிராயத்திலே தார்மீகமாகச் செய்யவேண்டிய விஷயத்திலே லையபிலிடி இருக்கிறதா என்று பார்க்கமாட்டார்கள். சட்டப்படி லையபிளாக இருந்தால்தான் அந்த லையபிலிடி உரியதாகும். ஆகவே, "லீகலி லையபிள்" என்று போடுவதற்கு அவசியமில்லை. அது சரியுமல்ல என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மாஜிஸ்டிரேட் அவர்களுக்கு தங்களுடைய உத்திரவை கேன்சல் செய்வதற்கும் உரிமை வேண்டுமென்று கனம் அங்கத்தினர் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அவர் அவ்வாறு கேன்சல் செய்யக்கூடாது என்பதுதான் சர்க்காருடைய நோக்கம். ஆர்டரைத்தான் "வேரி" செய்யலாம். யாருடைய கஸ்டடியில் இருக்கவேண்டுமென்று சொல்லலாமே தவிர, அதை அவர் கேன்சல் செய்யலாம் என்று சர்க்காருக்கு நோக்கமில்லை. ஆகையினால் இந்தத் திருத்தங்களை நான் எதிர்க்கிறேன்.

The amendments were put and lost.

Proposed section 14 was put and carried.

SRI S. MADHAVAN : Sir, I move—

"In the proposed new section 15 (1) of the Principal Act, *add* the following as first proviso before the existing one :—

"Provided that such a dependant person shall not have attained the age of eighteen years; and."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The amendment is before the House for discussion.

*திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, முதலிலே இந்த 13, 14 செக்ஷன்களை சப்ஸிடிடியூட் செய்ய வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். அதற்குப்பின்னால் பல பிரிவுகள் வரும்போது அவை எப்படி சேர்க்கப்படுகிறது என்பதற்கான வாசகம் இல்லை. '**Add**' என்று போட்டிருந்தால் சரியாக இருக்கும். "ஃபாலோயிங் செக்ஷன்ஸ்" என்று இருப்பதனால் தன்னாலே சேருவதாக ஆகுமா என்று தெரியவில்லை. அப்படி சேரும் என்று வாதம் செய்தால் அப்போது 14-வது செக்ஷனோடு இன்வர்ட்டட் கமாக்கள் முடிந்திருக்கின்றன. அது சரியாகாது. அதை கவனிக்க வேண்டும் என்று அமைச்சரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

15-வது பிரிவில் குற்றம் செய்தவர்களை தண்டிக்க வேண்டும் என்று சட்டம் செய்தோம். இப்பொழுது கூட சேர்ந்து இருப்பவர்களையும் வொர்க் ஹவுசுக்கோ அல்லது ஸ்பெஷல் ஹோமுக்கோ அனுப்பலாம் என்று சேர்த்து இருக்கிறோம்.



21st July 1964] [திரு. செ. மாதவன்]

அது எப்படி செல்லுபடியாகும், அரசியல் அமைப்பு சட்டப்படி, செல்லுமா என்று எனக்கு சந்தேகம் இருக்கிறது. குற்றம் செய்தவர்களை தண்டிக்கலாம். அவருடன் சேர்ந்து இருப்பவர்களை யாரை வேண்டுமானாலும் தண்டிக்கலாம் என்பது எப்படி சரியாகும். முன்பு நான் கூறினேன். ஹிந்து அடாப்ஷன் அண்டு மெயிண்டினன்ஸ் சட்டப்படி யார் யார் dependants என்ற விவரங்களை செக்ஷனிலேயே கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது யாராவது ஒருவர் பிச்சை எடுக்கும் தொழிலை செய்து விட்டு, அந்த சட்டப்படி சேர்ந்து இருப்பவர்கள் அத்தனை பேரையும் ஸ்பெஷல் ஹோமுக்கு அனுப்பக்கூடிய சூழ்நிலை வந்து விடுமோ என்று அச்சப்படுகிறேன். ஆகவே சேர்ந்திருப்பவர்களை அம்மாதிரி அனுப்புவதற்கு முன்னால் வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று இருப்பதை வரவேற்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த பிரிவு எதற்காகப் போடப்பட்டிருக்கிறது என்ற கருத்தை விவரமாக சொன்னால் இதில் இருக்கும் நியாயம் புலப்படும். ஒரு தாயார் பிச்சை எடுக்கலாம். அவளுடன் குழந்தைகள் இருக்கலாம். பிச்சை எடுக்கும் தாயாரை மாத்திரம் வொர்க் ஹவுசுக்கு அனுப்பினால் குழந்தைகள் என்ன ஆவது? ஆகவே அவர்களையும் பராமரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காக அவர்களையும் அங்கே அனுப்ப வேண்டும். அதே சமயத்தில் வேறு யாராவது பராமரிக்கிறேன் என்று வந்தால் இந்த proviso-வின் கீழ் வந்து சொல்லலாம். அதற்கு இடம் இருக்கிறது. வயது வந்தவர்களாக இருக்கிறவர்களை சேர்க்கக்கூடாது என்று திரு. மாதவன் சொல்கிறார்கள். ஒரு சீக்காளி மனைவியாக இருக்கலாம். மனைவி பிணியால் பாதிக்கப்பட்டிருக்கலாம். கணவன் வொர்க் ஹவுசுக்கு அனுப்புவதுதான் நலமாக இருக்கும். அது தண்டனை அல்ல. ஆனால் பாதுகாப்பாக வைத்து சாப்பாட்டுக்கு வழி செய்கிறோம்.

இந்த செக்ஷனிலே மாஜிஸ்ட்ரேட்டு கன்விக்ட் செய்யலாம் என்கிறபொழுது சேர்ந்தவர்களை அனுப்புவது கன்விக்ஷன் இல்லை. வொர்க் ஹவுசில் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுத்து அவர்கள் ஏதாவது செய்யக்கூடிய வேலையைக் கொடுத்து உணவும் கொடுத்து பராமரிக்க வேண்டும் என்று பிரிவு சொல்லுகிறது. இதிலே மாஜிஸ்ட்ரேட்டுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவர் பார்த்து முடிவு செய்வார்கள். இது சாதாரணமாக பிச்சை எடுப்பவர்களுடைய டிபென்டென்சுக்கு ஒரு நன்மைக்காக செய்யப்பட்டது. அவர்களுக்கு ஏதோ கஷ்டம் கொடுக்க வேண்டும் என்று செய்யப்படவில்லை. அவர்களை ஜெயிலுக்கு அனுப்ப வில்லை. பாதுகாப்புக்குத்தான் அனுப்புகிறோம்.

The amendment was by leave withdrawn.

Proposed section 15 was put and carried.

Proposed section 16 was put and carried.

**SRI S. MADHAVAN**: Sir, I move—

"In the proposed new section 17 (1) of the Principal Act, for the words ' Solicit or receive alms ' *substitute* the word 'beg ';

In the proposed section 17 (2) of the Principal Act, for the words ' solicit or receive alms ', *substitute* the word ' beg '."

The amendments were duly seconded.

MR. SPEAKER: The amendments are before the House for discussion.

* **திரு செ. மாதவன்**: தலைவர் அவர்களே, இந்த 17-வது பிரிவுக்கும் ஏற்கெனவே உள்ள பெக்கிங் டெபனிஷன் பிரிவுக்கும் முரண்பாடு இருப்பதாக கருதி திருத்தம் கொடுத்திருக்கிறேன். இங்கே மூன்று பிரிவுகள் இருக்கின்றன. மூன்றாவது பிரிவில் " for the purpose of begging " என்று போட்டிருக்கிறது. ஆனால் மற்ற இரண்டில் அப்படிப் போடப்படவில்லை. பெக்கிங் டெபனிஷனிலே Solicit or receive alms என்பது ஒரு பகுதி தான் அதை உபயோகித்திருக்கிறார்கள். அதே மாதிரி " Whoever employs or causes any person " என்று போட்டு ' solicit or receive alms ' என்று மட்டும் போடுகின்ற காரணத்தால் பெக்கிங் டெபனிஷனிலே வரக்கூடிய மற்ற குற்றங்கள் " like dancing, singing, performing tricks, selling articles, etc ". போன்றவைகள் கட்டுப்படாமல் போகும் என்று கருதுகிறேன். அதுதான் அரசாங்கத்தின் நோக்கமா என்று புலப்படவில்லை. நோக்கம் அதுவாக இருக்காது என்று நினைக்கிறேன். 3-வது பிரிவில் for the purpose of begging என்று போட்டுவிட்டு முதல் இரண்டு பிரிவிலும் பிரித்துப் போடப்பட்டிருக்கிறது. மூன்றுக்கும் ஒரே காரணம்தான் என்பதனால் beg என்ற வார்த்தையைச் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: கனம் சபாநாயகர் அவர்களே, 14 வயதிற்கு உட்பட்டவர்களை பிச்சை எடுக்கவோ அல்லது பிச்சை வாங்குவதற்கு உபயோகப் படுத்துவதோ தவறு. எத்தனை வயதானாலும் சரி, மற்றவர்களை கையை ஒடித்து காலை ஒடித்து அங்கஹீனம் மாதிரிக் காட்டி, exhibit செய்வது தண்டிக்கப் படவேண்டியது. இதனால்தான் இரண்டு பிரிவுகள் வந்தன. இங்கே முதல் பிரிவில் 14 வயதிற்கு உட்பட்டவர்களை உபயோகித்தால் அது தண்டிக்கப் படும் என்று செய்திருக்கிறோம். பிற்பாடு, 14 வயதிற்கு உட்பட்டோ அல்லது மேற்பட்டோ இருந்தாலும், மற்றவர்களை காண்பித்து இரக்கம் உண்டாகும்படி செய்வது தவறு. அதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

The amendments were by leave withdrawn.

Proposed section was put and carried.

Proposed sections 18 to 29 were put and carried.

Clause 13 was put and carried.



Clause 1 was put and carried

*Enacting Formula.*

MR. SPEAKER: The question is—

" That the enacting formula do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARMAN: Sir, I move—

"In the encating formula *for* the words Fourteenth Year *substitute* the words " Fifteenth Year."

The amendment was put and carried.

The enacting formula as amended was put and carried.

The long title was put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Sir, I move—

" *That the Madras Prevention of Begging (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 4 of 1964), as amended, be passed.*"

The motion was put and carried and the Bill as amended was passed.

(4) THE MADRAS (TRANSFERRED TERRITORY) RYOTWARI SETTLEMENT BILL, 1964 (L.A. BILL NO. 13 OF 1964), AS AMENDED BY THE SELECT COMMITTEE.

* THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir, I move—

" *That the Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. No. 13 of 1964), as amended by the Select Committee, be taken into consideration.*

Sir, in moving this motion, I wish to refer briefly to the land revenue system prevailing in the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district and the important changes made in the Bill by the Select Committee.

In the Kanyakumari district and Shencottah taluk, basic tax is paid under the Travancore-Cochin Land Tax Act, 1955. Under this Act, as amended by the Madras Coinage (Alteration of References) Act, 1960 a basic tax, at the uniform rate of 2 P. per cent of land, which works out to Rs. 2 per acre, is charged in respect of all lands except certain categories of land which are exempt from the provisions of the Act. under section 7 thereof. This section says that the Act is not applicable to lands held or leased by the Government or any land or class of lands which the Government may, by notification in the Gazette, either wholly or partially, exempt from the provisions of the Act and, in pursuance of this provision, the former Travancore-Cochin Government have

[Sri R. Venkataraman] [21st July 1964

exempted the Sreepandaravaka lands belonging to Sree Padmanabhaswami temple at Trivandrum from the provisions of this Act.

Sir in *Moopil Nair* vs. *the State of Kerala*, the Supreme Court struck down the Travancore-Cochin Act XV of 1955 as amended by the Travancore-Cochin Land Tax (Amendment) Act, 1957 as unconstitutional, on the main ground that the levy of tax was sought to be made at a flat rate irrespective of the quality of land and, consequently, of its productive capacity. The Court also held that section 7 of the Act was discriminatory. In view of the above decision, it has become necessary to replace the Travancore-Cochin Act XV of 1955 by a new Act, which will not be open to the objections pointed out by the Court.

Under the Ryotwari system prevailing in the rest of the State, lands are assessed at different rates varying with the fertility of the soil, quality of irrigation, out-turn, marketing facilities, etc. The ryotwari settlement takes into consideration a number of things like classification of soils, ascertaining "Grain values" in terms of certain standard grains, determining commutation prices and conversion of grain values into money, etc. In the ryotwari settlement of the Kanyakumari district and the Shencottah taluk, however, some of these things will not require to be done, as it is proposed to adopt the rates of assessment adopted in the appropriate re-settlement notification.

The Ryotwari settlement effected on the above principles will not be open to the objections pointed out by the Supreme Court. In view of the obvious advantages of such a settlement and in the interests of uniformity, it is proposed to extend the Ryotwari system as in force in the rest of the State to the Kanyakumari district and Shencottah taluk, repealing the Travancore-Cochin Act XV of 1955.

In this connection, I may mention that when the Supreme Court struck down the Travancore-Cochin Act XV of 1955 as amended by Kerala Act X of 1957, the Kerala Legislature passed the Kerala Land Tax Act 1961 which also repealed the 1955 Act. Kerala Act 13 of 1961 was also struck down as unconstitutional by the Kerala High Court and it is this Act that has been validated by the Constitution (Seventeenth Amendment) Act, 1964. This constitutional protection does not extend to Travancore-Cochin Act XV of 1955 in the Kanyakumari district and Shencottah taluk, which, Sir, is applicable to us.

This Bill is designed to bring about uniformity of land revenue system by applying a tried and tested system of land assessment. That also fully satisfies the criteria laid down by the Supreme Court.



21st July 1964] [Sri R. Venkataraman]

Out of the total extent of occupied holdings of 2,70,000 acres, 1,84,000 acres are dry and the bulk of these lands will get tangible relief from the assessment that they now bear. Out of the balance of 86,000 acres only a part of the wet area may be assessed at a higher rate than the basic tax and water- rate now charged. This only results from an equitable distribution of land revenue assessment based on inherent fertility of soils. I would also draw the attention of the House to an important factor. The present burden on these very lands should be computed reckoning with both Basic tax and water cess and their legal obligation to pay Thiruppuvaram. I can assure the House that even if the ryotwari rates be higher than the present Basic tax and water rate, the assessment will certainly be far less than the combined incidence of basic tax and water rate and Thiruppuvaram. The ryotwari system has its own inherent safeguards against disproportionate assessment based, as it is, on inherent fertility of soils, and I can assure the House that the grain out-turn of each field will be ascertained and assessment related to it and this will result in equitable rates of assessment being fixed which will ensure parity within the District and comparability with the rates prevailing in the neighbouring districts.

I wish to mention here that as a corollary to the introduction of the Ryotwari settlement in the Kanyakumari district and the Shencottah taluk as in the rest of the State, the Government will be undertaking legislation shortly to extend the Madras Agricultural Income-Tax Act to these areas, replacing the Travancore Agricultural Income-tax Act in force therein. As under the Madras Agricultural Income-Tax Act, holdings below 12½ standard acres are exempt and as the bulk of holdings in the Kanyakumari district and Shencottah taluk are small holdings below 12½ standard acres, most of the pattadars will not have to pay agricultural income-tax at all.

(Mr. Deputy Speaker in the Chair.)

The Select Committee has made a few changes in the Bill.

The definition of 'landholder' in Clause 2 has been modified, so as to specifically exclude lessees under the Kuthagapattam Rules, so as to avoid any possible plea that they are also covered by the definition. The definitions of 'financial year' and 'oodukoor holdings' have also been omitted as they have no relevance in the Bill as amended. In Clause 9, the provision for effecting ryotwari settlement within a period of three years from the date of publication of the proposed Act, has been modified, so as to remove the time-limit in order to avoid the necessity to amend the Act if it is actually found that the settlement cannot be completed within three years. I may however add that Government would take all steps to complete settlement operations as expeditiously as possible.

The view was expressed by some members of the Select Committee that the new settlement rates should take effect from 1st July 1964 and not retrospectively from 1st July 1963. This view has been accepted by the Government and I will be moving official amendments to clauses 10 and 11 of the Bill.

Sir, I request the House to accept the motion.

MR. DEPUTY SPEAKER: Motion moved.—

"That the Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964), as amended by the Select Committee, be taken into consideration."

*SRI A. KUNJAN NADAR: Mr. Deputy Speaker, Sir. I oppose the Bill. I am not opposing it for opposition sake or for defeating the Government. This Bill vitally and adversely affects the interests of the ryots of Kanyakumari district. I challenge the very objects and reasons of the Bill. What is this Moopil Nair business. Many members may not know what the Moopil Nair's case means. Moopil Nair is a big jenmi in Malabar having thousands of acres of uncultivated land. When basic tax was applied to his tenure, he had to pay thousands of rupees for his uncultivated land. He rushed to the Supreme Court saying that was very much affected and the legislation had done a great injustice to him. To impose the same tax for cultivated and uncultivated land is a very great injustice. That came up for the Supreme Court's decision. Unfortunately one aspect of the question was not presented before the Supreme Court. Basic tax is only a token tax to signify the symbol of relationship between the sovereign and the tenant. The actual tax is the Agricultural Income-tax which always goes along with the basic tax. Both go together and have always to be taken together. This aspect was not placed before the Supreme Court. Probably the Court would have given a different decision if this aspect was presented before it. Now there is some legal difficulty. I say in Kerala also we have got a Government of the same party, viz., Congress. In the Centre also we have the Congress Government. When the Kerala Government argues that the Constitution must be amended because the Moopil Nair's case has affected the basic tax, our Government argues just the other way. This Government wants to go back a century behind and introduce ryotwari system in Kanyakumari district to get over the evil effects of the Moopil Nair's case. I say this should not be. If Kerala Government can get over the evil effects of this case, there is no reason why this Government, a more powerful and influential Government cannot do so, especially at this time when Madras holds the reins of power in Delhi. Inclusion of our existing Act relating to Basic Tax also in the Constitution is only a very simple and formal affair. It is very simple.



Regarding uniformity I challenge the Government on the same plea of uniformity. We stand for uniformity on an all-India basis in many things. In many cases we strive for it. Why not uniformity in land tax also. We want a land system which is uniform throughout India. Undoubtedly basic tax is the best land tax system to be adopted for the whole of India. We must have a bigger perspective to have uniformity throughout India. Why not adopt this basic tax for the rest of Madras? For the sake of uniformity in a limited area we should not go back 50 years behind history. This ryotwari system is not new to us. It is not a case of introducing a new tenure or system of assessment in our area. We have once tried it. We have bitter experience of it. We have discarded it as useless and unwanted. We have introduced ryotwari principle of assessment under the settlement of 1910. That means more than half a century back. The tenants of Kanyakumari and Shenkottah had to undergo very great and untold hardship. There was a very big agitation both inside and outside the legislature. Thousands of tenants had to abandon their lands because of their incapacity to pay the tax. If one were to see the Government revenue records, how many sales were effected during this period under the Revenue Recovery Act that would be an eloquent testimony of our growing hardship. Consequently the Government appointed the Land Revenue Commissioner to go into the whole question. A report was submitted and Government were convinced that that system was burdensome to the ryot and is suitable to conditions in Kanyakumari and Shenkottah taluks. Consequently the basic tax was introduced in 1946. The basic tax system is a progressive and scientific system of land tax, than the ryotwari system of land tax. The ryotwari system was conceived by foreign rulers for their purpose. It is feudalistic in conception. According to this every inch of land must be subject to tax according to fertility. That means a share of the produce must go to the State. The settlement is done on that basis. It is high time we give up this old conception. The basic tax, on the other hand, is based on the principle that only the amount one can afford to pay need be paid. Only up to that amount he will be taxed. That is the principle. On merits basic tax system is far in advance of the ryotwari system of assessment.

With regard to our peculiar conditions in Kanyakumari district, I wish to say that we are very densely populated. We have no living space even. According to '1951 Census' the density of population is 1,444 per square mile including reserve forests, lakes and everything. If we take the occupiable area alone, the average will be about 2,400 per square mile, which is perhaps the biggest density of population in the world. In 1964 the condition will be alarmingly worse. The uneconomic fragmentation of land is very prominent in Kanyakumari district. The per capita land in 1951 is only 44 cents. Almost 90 per cent of the holdings are very small having an area of 20 cents, 15 cents and 10

cents. Ninty per cent of the lands are below one acre. So, introducing the Ryotwari System would be only for taxing the poor, those who cannot afford to pay the tax. It is true that those who pay income-tax may get some relief by this measure. Only the rich pays agricultural income tax. The rich may get some relief. So, I pray that this Bill should not be introduced in Kanyakumari district and Shencottah taluk, especially when the whole people of Kanyakumari are against this Bill. I cannot agree with the Hon. Minister for Industries when he says that the people of Kanyakumari are unaware of the good aspects and good intentions of the Bill. They do know all the aspects of the Bill. They have bitter experience of this Ryotwari System. It should not be introduced against their will. Even the Congress Members will not dare to get up and say that they want this Bill. They may be silent. That is their diplomatic silence. Against the unanimous will of the people of Kanyakumari district, the Government should not introduce this Bill.

Introducing this Bill means that we are dragging the people to 1910, the year in which we introduced the Bill, i.e., 53 years behind. That is the main reason, why I oppose this Bill.

Ryotwari Bill means a new settlement. Regarding Settlement, I would like to say a few words. When we say that there is a lot of corruption in the public life and among the public servants why should we have these settlements. Settlement means, a temptation to corruption. Recently, we had Resurvey in Kanyakumari district. From my personal knowledge, I can inform the house that the ryots have paid lakhs and lakhs of rupees to the subordinates of the Survey Department. Whether they are justified in paying the amount or not is a different question. If the Settlement has to be done, that means another taxation—illegal taxation—which involves lakhs of rupees from the poor ryots' pockets. When we have established Vigilance Commission and Anti-corruption Squads, why should we create such tempting opportunity, tempting situations for unnecessary and further corruption.

With regard to tenures, we have got some peculiar tenures. We have got tenures like Sreepandaravakai, Thiruppuvaram, Edavagai, Jenmykaram and so on. The Hon. Minister was saying that even if Ryotwari is introduced the Government is not going to get any additional revenue. That means that the unwanted Ryotwari is introduced only for the benefit of Sreepadmanabaswamy Temple. These tenures have got a history behind it. The T.C. State unequivocally declared that they stood for the early and unconditional abolition of these tenures. Many of these tenures are since abolished in the Kerala State by the payment of lump-sum compensation. Edavagai is abolished by paying 16 2/3 times the annual revenue. The Sreepadam and Kandukirshi tenures were abolished by payment of compensation at 8 1/3 times the annual



amount due. The Government was, all along, contemplating the abolition of the Sreepandaravakai and Thiruppuvaram tenures by paying lump-sum compensation and the Government appointed a Committee to abolish 'Melvaram' and 'Thiruppuvaram'. The Damodaran Asan Committee was constituted. The Committee consisted of representatives of Maharaja, representative of the Padmanabaswami temple and also representatives of the people and the Government. The Committee had come to the conclusion that in many cases the Thiruppu right do not exist at all. The Asan Committee recommended the abolition of these tenures by payment of 16 2/3 compensation. The Travancore-Cochin Government decided to abolish these tenures by payment of 8 1/3 times the annual dues as compensation. To this also the Temple has agreed. Now legally, these tenants are as good as basic tax tenants. They are having pattas as good as basic tax pattas. There are many causes for creating these tenures. Thiruppuvaram is only an assignment of rent and not a tax. Now the position is this. If these out-dated and oppressive tenures are to be abolished, the ryots have to bear the burden of ryotwari tax. The Travancore-Cochin Government borrowed money from the temple. Some collection, which was due to the Government was allowed to be collected by the temple. When the basic tax was introduced, the basic tax was introduced here also. In addition to the basic tax, the ryots were made to pay melwaram and Thiruppuvaram also. We say that the additional payment above basic tax is illegal. We were prepared to pay to the temple only to the extent of our dues to the Government that is basic tax and not more. The Thiruppuvaram tenants simply refused to pay since 1953. It was also held by the Travancore High Court full bench ruling that the liability to pay the Thiruppu holder rests with the Government and not with the tenant. Anything above the basic tax is an illegal collection and there was no legal sanction to compel us to pay the tax. The T. C. Government repeatedly declared that it stood for the total and early abolition of these tenures. The tenants organised themselves and refused to pay thirupuvaram from 1953 onwards. Till this moment, we have not paid, we are not going to pay, whatever be the consequences. The Government is not bold enough to take coercive steps against us to collect the amount, because they have got their own doubts about the legality of it.

Now, what is our Government going to do? Instead of abolishing the right of the Thirupu-holders, the Government wants to give a perpetual life to their right by agreeing to pay a recurring instead of abolishing it by paying 8-1/3 times. The annual amount which comes to a few lakhs of rupees our Government has agreed to pay an annual recurring amount of 1½ lakhs rupees for a thousand years to come annual amount of Rs. 1½ lakhs from our Treasury. That should not be. Then what about this amount of 1½ lakhs? We pay much more than what they have asked for.

[21st July 1964

MR. DEPUTY SPEAKER : The hon. Member has taken more than twenty-five minutes.

SRI A. KUNJAN NADAR : It is not a question of minutes, Sir. I must have my say in the matter. What Sree Padmanabhaswami temple authorities say is that they are prepared to give up and relinquish their right provided the basic tax collections are given to them. Now what does the Government pay? They say that annual compensation, that is the annual tasdik allowance payable to Sree Padmanabhaswami temple, is to be calculated on the basis of the estimated ryotwari assessment. They ask for basic tax collections but we say, 'No.', we will pay you the ryotwari rate. For the first class wet land in the Kanyakumari district, we pay Rs. 2 as basic tax and Rs. 2 as water cess. But when the ryotwari assessment comes into operation, we will have to pay at least Rs. 20 or 25. They demand Rs. 2 but we pay Rs. 25. This is the tragic state of affairs. We have had bitter experience of the Kerala Government when we negotiated with them in the past. The whole of Shenkottah taluk was given to us. But more than half including the rich fertile areas have been given to them back by our foolary. Even for drinking water, we have now to depend on the Kerala Government. Also, the Government House worth lakhs of rupees at the tip-end of India has been given as a gift to Kerala. In dividing the transport assets, we were satisfied with a few condemned buses. So many other things have been given to them. The State is governed by very magnanimous and philanthropic people. It may be said that it is only the Government which pays and the ryots need not worry. But the Government money is our money it belongs to the ryots. It is the tax-payers' money which is going to be a recurring liability for thousand years to come. Is it statesmanship or is it anything else? I do not understand. Give them a lump-sum and clear off the wholething look after our business. For these reasons I appeal to the Hon. Members of this House not to look at this as a party question or Kanyakumari question or a prestige question. I demand that the Ryotwari Bill be withdrawn. If the Government wants to introduce any Bill affecting our taxation system, it must be done only after a thorough study of the conditions in the Kanyakumari district and how it would affect the poor ryots there. I wanted to refer to so many other things but the time at my disposal is limited. Many of my amendments have been disallowed and that shows the sort of democracy that unfortunately we have here.

MR. DEPUTY SPEAKER : The hon. Member should not say that we have a sort of democracy here, as it is a reflection on the Hon. Speaker. If the amendment is not in order, it would be disallowed.

SRI A. KUNJAN NADAR : I refer to the rules and not to the speaker. Anyhow, I withdraw.

*திரு. செ. மாதவன் : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் மீது இருக்கக் கூடிய வரிப் பளுவை அதிகரிக்கும்போது இந்த அரசாங்கம் தன் கடமையை மறக்கிறது



21st July 1964] [திரு. செ. மாதவன்]

என்ற குற்றச்சாட்டை நான் எதிர்க்கட்சிகள் சார்பில் சுமத்த விரும்புகிறேன். நம் தொழில் அமைச்சர் அவர்கள் அடிக்கடி இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். எங்களைக் குறை கூறுவதற்கு முன்னால் எங்கள் கொள்கைகளை நாங்கள் கூறியிருக் கிறோம், நாங்கள் சொன்ன கொள்கைகளிலிருந்து பின்வாங்கியிருக் கிறோமா என்று சுட்டிக் காட்டுங்கள் என்று சொல்லியிருக் கிறார்கள். அவர்களுக்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி ஆட்சி பீடத்திற்கு வருவதற்கு முன்னாலிருந்து ஏழை விவசாயிகளின் மீதுள்ள வரிப் பளு அந்நிய ஆட்சியில் அதிகமாக இருக்கிறது, நிலத்தின் மீதுள்ள பளுவைக் குறைக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள், பம்பாயிலே. காங்கிரஸ் கட்சி சார்பில் எவ்வளவோ போராட்டங்கள் நிலவரிக் காக அன்னியனை எதிர்த்து நடத்தப்பட்டிருக்கிற வரலாறு தெரியும் அமைச்சர்களுக்கு. அப்படியிருந்தும் குறிப்பாக ஒரு மாவட்டத் தில் என்றாலும்கூட அங்குள்ள விவசாயிகள் வரிப்பளு அதிகரிக் கிறது என்று எதிர்க்கும்போது அதை சிறிது கூட ஆலோசிக்காமல் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவது ஜனநாயகத்தைப் புறக் கணிப்பதாகும் என்று நான் இங்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அத்தனை அரசியல் கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து, அத்தனை சட்டமன்ற அங்கத்தினர்களும் கூட எதிர்ப்பு தெரிவித்து கண்டனம் தெரிவித் ததற்கும் பின்னால் கூட, காங்கிரஸ் கட்சி அமைப்பின் சார்பாக மனு கொடுத்தும், இந்தச் சட்டத்தை முழுமூச்சாக எதிர்த்த பின்னரும் கூட ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த அரசாங்கம் இந்தச் சட்டத்தை கொஞ்சம் கூட பின்வாங்காது மக்களிடையே திணிக்க விரும்புகிறது, ஜனநாயகத்தைப் புறக் கணிக்க விரும்புகிறது என்ற குற்றச் சாட்டை நான் இங்கே வைக்க ஆசைப்படுகிறேன். நில வரியைக் குறைக்கவேண்டும் என்பது மட்டுமல்ல. நில வரியை முற்றிலும் நீக்கவேண்டு மென்கிற கருத்து நாட்டில் பரவி வரும் இந்தக் காலத்தில் நில வரியை அதிகப்படுத்தும் ஒரு சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டு வந்தது தங்களிடம் அதிக பலம் இருக்கிறது என்று, ஜனநாயகத்தில் மிருக பலம் என்று சொல்வார்கள், அந்தப்பலம் இருக்கின்ற காரணத்தினால்தான் ஜனநாயகத்தை மதிக்க இந்த அரசாங்கம் தவறுகிறது என்ற குற்றச்சாட்டை இங்கு நான் கூற ஆசைப்படுகிறேன். இந்த மன்றத்தில் பலமுறை நம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். அன்று பல ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாட்டின் வருமானத்தில் விவசாய வரி மூலம் பெறக் கூடிய வருமானம் அதிக அளவில் இருந்தது. பெர்சென்டேஜ் அதிகமாக இருந்தது, இன்று அது குறைந்து விட்டது என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சுமார் 6 கோடி ரூபாய்தான் வருமானமாக இருக்கும் ஒரு நிலையில்தான் விவசாய வரி இருக்கிறது. அந்த வருமானத்தைக் கூட நீக்கி விட்டு பெரும் பான்மையான விவசாயிகளுக்கு நன்மை கொடுக்கும் ஒரு

[திரு. செ. மாதவன்] [21st July 1964

காரியத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மறுப்பது
ஆச்சரியமாகயிருக்கிறது என்று கூறிக் கொள்ள ஆசைப்படு
கிறேன். ரயத்துவாரி செட்டில்மென்ட் இந்த மாநிலத்தில்
ஏற்கனவே இருக்கிறதென்ற கருத்தை ஆதாரமாக அமைச்சர்
அவர்கள் கூற முன்வருவார்கள். இந்த ரயத்துவாரி செட்டில்
மென்ட் மூலம் வரி போடுவதற்கே இந்த அரசாங்கத்திற்கும், இந்த
மன்றத்திற்கும் உரிமை உண்டா என்பதில் சந்தேகப்படுகிறேன்.
காரணம், நம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் ஒரு வரி
போடவேண்டுமென்ருல் சட்டத்தின் மூலம் வரி போடவேண்டும்.
சட்டமன்றத்தின் அனுமதி பெற்று வரி போடவேண்டும் என்று
இருக்கிறது. ரயத்துவாரி செட்டில்மென்ட் மூலம் வரி போட
எந்தச் சட்டமும் இந்த நாட்டில் இல்லை என்பதை நான் அமைச்சர்
அவர்களுக்கு கவனமூட்ட ஆசைப்படுகிறேன். வெள்ளைக்காரன்
காலத்தில் இந்த வரி திணிக்கப்பட்டாலும் கூட அன்று கூட சட்ட
பூர்வமாக அவர்கள் வரியைத் திணிக்கவில்லை. இந்த வரியைத்
திணிக்க எந்தச் சட்டமும் இன்று நம் "ஸ்டாட்யூட் புக்கில்"
இல்லை என்பதை நான் இங்கு இம்மன்றத்தின் கவனத்திற்கு
கொண்டுவர ஆசைப்படுகிறேன். ஒரு வாதம் தரப்படலாம். இது
11-0 a.m. "காமன் லா" என்ற அளவில் வரலாம், "காமன் லா" என்ற
அளவில் வரும் என்று நீதிபதிகள் தீர்ப்புக் கொடுத்திருக்கிருர்கள்
என்று கூறலாம். ஆனுல் அப்படிப்பட்ட ஒரு வாதத்தை நாம்
ஏற்றுக்கொள்வதற்கு முன்னுல் இந்த சட்டமன்றமோ அல்லது
சட்டத்தின் மூலமாகவோ ஒரு வரியை திணிக்கப்படவில்லை என்கிற
கருத்தை ஏற்றுக்கொண்டு புதிதாக ஒரு சட்டத்தை கொண்டு
வந்து இங்குள்ள நிலவரிகளை எல்லாம் ஒரு சட்டத்தின் கீழ்
கொண்டு வருவதற்கு ஆட்சியாளர்கள் ஆலோசிக்கவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். மூப்பில் நாயர் கேஸில் ரயத்வாரி
செட்டில்மெண்ட் முறைதான் ஸயன்டிஃபிக்-காக இருக்கிறது,
பேசிக் டாக்ஸ் முறை ஸயன்டிஃபிக்-காக இல்லை என்று கூறின
தாகவும், இந்த ஆட்சியாளர்கள் காரணத்தைக் கூறலாம். ஆனுல்
இது சரியான முறைதானு என்பதை அரசாங்கம் சிந்தித்துப்
பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆட்சியாளர்கள்
இதை ஏன் சிந்திக்க மறுக்கிருர்கள் என்பது தான் தெரியவில்லை.
உதாரணத்திற்கு நான் சொல்லுகிறேன். ஒரு கண்மாய் ஆயக்
கட்டின் கீழ் பலதரப்பட்ட நிலங்கள் இருக்கின்றன. ஆனுல்
அத்தனை நிலங்களும் ஒரேமாதிரியாக இருக்குமா? அதிலுள்ள
வருமானம் எல்லாம் ஒன்ருக இருக்குமா என்பது சந்தேகப்படக்
கூடிய விஷயம். இது விவசாயிகளுக்கு நன்ருகத் தெரியும்.
ராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரையில் பிற்பட்ட பகுதி
களில் மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய முடியும், அதிலும்
பல இடங்களிலும் வருமானம் பலவிதமாக இருக்கும், வருமானம்
ஒன்ருக இராது என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.
இந்த நிலை இருக்கும்போது, மழை பெய்தால் விவசாயம் செய்யக்
கூடிய ஒரு நிலத்திற்கும், தண்ணீர் ஒழுங்காக கிடைத்து விவசாயம்



21st July 1964] [திரு. செ. மாதவன்]

செய்கின்ற நிலத்திற்கும் இருக்கின்ற வித்தியாசத்தைப்பார்க்க
வேண்டும். அதை உத்தேசித்துத்தான் வெள்ளைக்கார ஆட்சி
யாளர்கள், ரெமிஷன் என்ற ஒரு திட்டத்தைக்கொண்டு வந்தார்கள்.
ஆனுல் இந்த ரெமிஷன் திட்டத்தில் ஊழல்கள் இருக்கின்றன.
விதி முறைகள் சரியாக இல்லை, என்றெல்லாம் இந்த சர்க்கார்
அமைத்த குழு ஒன்று 1952-ல் சுட்டிக்காட்டியிருக்கிறது, அது
மட்டுமல்ல, இங்குள்ள விவசாய அமைச்சர் அவர்களே, இந்தத்
திட்டத்திலுள்ள விதி முறைகள் சரியாக இல்லை, இதை மாற்றியாக
வேண்டும் என்பதை அப்பட்டமாக இங்கேயே ஒப்புக்கொண்டிருக்
கிருர்கள். செட்டில்மெண்ட் அதிகாரி இன்னின்ன நிலம் இன்னின்ன
தரம் என்று தானே நிர்ணயிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை தான்
இருக்கிறது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ரயத்
வாரி செட்டில்மெண்ட் எந்த அடிப்படையில் கொண்டு வரப்
பட்டது என்பதை ஆராய்ந்து பார்க்கும்போது, சர்வாதிகார
அடிப்படையில், ஆட்சியில் இருப்பவனுக்கு, நாட்டிலுள்ள குடி
மக்கள் மீது ஆதிக்கம் இருக்கவேண்டும், குடிமக்கள் மீது
ஆதிக்கம் இருப்பதற்காக இவர்களுடைய நிலங்கள் மீது
ஆதிக்கம் இருக்கவேண்டும், அதே போன்று நிலங்களில்
இருக்கின்ற பயிர்கள் மீது ஆதிக்கம் இருக்கவேண்டும். அந்த
அடிப்படையில் குடிமக்களுடைய நிலத்தின் மீதும், அதில் விளையும்
பயிர்கள் மீதும் அரசனுக்கு ஆதிக்கம் இருக்கவேண்டும். அது
தான் ஸாவரன்டி அல்லது பழைய ஃப்யூடல் சிஸ்டம் என்ற
முறையில் இருந்து வந்தது. ரயத்வாரி சிஸ்டம் பிரிட்டிஷ்
ஏகாதிபத்திய காலத்தில் திணிக்கப்பட்டது. அதன் பின்னுல்
இதை மறு பரிசீலனை செய்வதற்கு இந்த அரசாங்கம் தயங்குவது
வேடிக்கையாக இருக்கிறது. அதைக்கண்டு நான் மிக வெட்கப்
படுகிறேன். இன்னெரு வாதத்தையும் நான் கூற ஆசைப்படு
கிறேன். ரயத்வாரி செட்டில்மெண்டில் நியாயம் இருக்கிறது
என்ற வாதத்தை கூற முற்படலாம். அது சரியல்ல என்பதை
நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சாதாரணமாக நஞ்சை
புஞ்சை என்ற இரண்டு தரங்களை வைத்திருக்கிருர்கள்.
புஞ்சைக்கு ரயத்வாரி முறையில் வரி குறைவு, நஞ்சைக்கு வரி
கூடுதல். ஆனுல் புஞ்சையில் கியாஷ்கிராப் போட்டால் வருமானம்
அதிகரிக்கும். நஞ்சையில் நெற்பயிர் மட்டும் விவசாயம் செய்யும்
போது வருமானம் குறைகிறது. வருமானம் கூடுதல் குறைவாக
இருக்கிறது என்று எடுத்துக்கொண்டால் எப்படி இந்த ரயத்வாரி
ஸிஸ்டம் ஸயன்டிஃபிக்-காக இருக்கும்? குறிப்பாக கன்னியா
குமரி மாவட்டத்திலிருக்கின்ற நிலங்களுடைய தரங்களைப்பற்றி
அந்த மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச்
சொல்லியிருக்கிருர்கள். அதே நேரத்தில் நாம் வரியை கூடுதலாக
போடுகிறோம். அதனுல் நஞ்சையில் எல்லாம் கியாஷ் கிராப்பை
ஏற்படுத்துகிற நிலைமையை நாம் காண முடியும். ஆகவே
இப்போது விதிக்க நினைத்திருக்கின்ற ரயத்வாரி முறை எந்த
அளவுக்கு அந்தப் பகுதிக்குப் பொருத்தமாகும் என்பதை
கேட்க விரும்புகிறேன். ஃபெர்டிலிட்டி ஆஃப் ஸாயில் அதாவது

மண்ணின் தரத்தை வைத்து நிலத்தின் தீர்வையை போடுவோம் என்று சொல்லுகிறார்கள். அதுவும் ஒரு தனிப்பட்ட மனிதனுடைய முடிவுக்குத்தான் விடப்பட்டிருக்கிறது. இது எந்த அளவுக்கு நியாயம் என்பதைப்பற்றி நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் ரயத்வாரி செட்டில்மெண்ட் போடுவதற்கு முன்னால் அங்கு இதனால் பாதிக்கப்படுகிற மக்களின் பிரச்னை என்ன என்பதை நாம் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய வரிப்பளு இதனால் கூடுதலாகும் என்பதை கனம் குஞ்சன் நாடார் அவர்கள் மிக தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை கட்சிகளும், காங்கிரஸ் கட்சியும் சேர்ந்து மெமோராண்டம் தந்திருக்கின்றன. அதில், இப்போது நாங்கள் குறைந்த அளவில் வாட்டர் டாக்ஸ்-ம், பேஸிக் டாக்ஸ்-ம் சேர்த்து கொடுத்துக்கொண்டு வருகிறோம், அது குறைந்தது நான்கு ரூபாய். கூடுதலான அளவு 9 ரூபாய் என்றும், இந்த நிலையில், ரயத்வாரி செட்டில்மெண்ட் முறை வந்தால் 15 ரூபாய் முதல் 20, 25 ரூபாய் வரை நாங்கள் வரி கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவிருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாதிரியாக வரியைக் கூட்டுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்பதைக் கேட்க நான் ஆசைப்படுகிறேன். இன்னொரு கருத்தையும் நாம் சிந்திக்கவேண்டும். பேஸிக்-டாக்ஸைப்பற்றி மூப்பில் நாயருக்கும் கேரள அரசாங்கத்திற்கும் நடந்த வழக்கில் பேஸிக்-டாக்ஸ் சட்டப்படி செல்லாது என்று இந்திய தலைமை நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியது. அதை சந்தர்ப்பமாக வைத்துக்கொண்டு, அதை பயன்படுத்தி நிலவரியை உயர்த்துவது எந்தவிதத்தில் பொருத்தமாகும். ஆகவே இந்த வாதத்தை அமைச்சர் அவர்கள் சொல்ல முன் வரமாட்டார்கள் என்று நினைக்கிறேன். கேரள ராஜ்யத்திற்கும் தான் இவ்விதம் உயர் நீதி மன்றம் சொன்னது பொருத்தமாயிற்று. அங்கும் காங்கிரஸ் அரசாங்கம்தான் ஆட்சி நடத்துகிறது. அங்கும் ஜனநாயக ஆட்சிதான் அரசாங்கத்தை நடத்துகிறது. ஆர்டிகிள் 31-வது பிரிவுபடி வாலிடேட் செய்ய முன்வந்திருக்கிறது. அதை சிந்திப்பதற்கு ஏன் இந்த அரசாங்கம் மறுக்கின்றது என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவுக்கு அத்தனை விவசாயிகளும் சேர்ந்து இதை எதிர்க்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம் கேரளாவில் இருந்தபோது, நம்மோடு சேரவேண்டும் என்று போராடிய காலத்தில் தங்களுக்கு நன்மைகள் கிடைக்கும் என்ற நினைப்பில் தான் நம்மோடு சேர்ந்தார்கள். தமிழர்களுடைய அரசாங்கம் அவர்களுக்கு நன்மை செய்யும் என்று கருதித்தான் இங்கு வந்தார்கள். காங்கிரஸ் கட்சியும் இதை முன்னால் சொல்லியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஏன் இப்போது அவர்களுக்கு வரியைக் கூட்டவேண்டும்? இப்போது அவர்கள் பேஸிக் டாக்ஸ்-ம் அக்ரிகல்சர் இன்கம் டாக்ஸ்-ம் சேர்த்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலிருந்து அவர்களுக்கு கிடைக்கக் கூடிய நன்மை என்னவென்றால், அக்ரிகல்சர் இன்கம்டாக்சில், 3,000



ரூபாய் வரை விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, அங்குள்ள சிறிய நிலச்சுவான் தார்கள் யாரும் இந்த வருமான வரிச்சட்டத்தின் கீழ் வரமாட்டார்கள். இதை அங்குள்ள மக்களே குறிப்பிட்டார்கள். ஒரு சில பேர்கள் மட்டுந்தான் விவசாய வருமான வரி கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போது அவர்கள் குறைந்த அளவில் வரி கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அவர்களுக்கு ஏன் திடீரென்று வரிப் பளுவை அதிகமாக்கவேண்டும் என்பதை நாம் சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே இன்னொரு கருத்தையும் நாம் பார்க்கவேண்டும். ரயத்வாரி செட்டில்மெண்ட் முறையை கொண்டு வரும்போது வருமானத்தையும் கணக்கெடுத்து பார்த்தால், அரசாங்கத்திற்கு ஏதாவது வருமானம் கூடுகிறதா என்று பார்த்தால், அரசாங்கத்திற்கு வருமானம் கூட வில்லை என்பதை அமைச்சர் அவர்களே கூறுகிறார்கள். இந்த நிலைமையில் அங்குள்ள அத்தனை அரசியல் கட்சிகளும் எதிர்க்கிறார்கள். அங்குள்ள மக்கள் எல்லாம் எதிர்க்கிறார்கள். அரசாங்கத்திற்கோ வருமானம் கூடவில்லை. அப்படியிருக்கும்போது ஏன் இப்படிப் பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். இதற்கு தெளிவான விளக்கமேயில்லை. அரசாங்கத்திற்கு வருமானம் கூடுதலாக வருகிறது, இந்தச்சட்டத்தை திணிப்பதால் என்று சொன்னால்கூட அதில் பொருள் உண்டு. ஆனால் அத்தனை மக்களும் எதிர்க்கின்றார்கள், அத்தனை அரசியல் கட்சிகளும் எதிர்க்கின்றன, அப்படியிருக்கும்போது இவ்விதமான ஒரு சட்டத்தைக்கொண்டு வருவதில் எவ்விதமான பொருளும் இல்லை என்பதை சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அதோடுகூட, இந்தச் சட்டம் அந்தப் பகுதிக்கு வரக்கூடிய காரணத்தினால் அந்தப் பகுதியிலே விவசாய உற்பத்தி பாதிக்கப் படும் என்பதை அத்தனை பேரும் உணர்ந்திருக்கிறார்கள். காரணம் அந்தப் பகுதியிலே பெரும்பான்மையான நிலங்கள் நன்செய் நிலங்கள். நன்செய் பயிர்கள் பயிரிட முடியும். நன்செய் பயிர் பயிரிட அங்கு உள்ள மழைப் பருவம் தோதாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது அத்தனை பேரும் நன்செய் பயிரிட்டால் வரி கூடும் என்ற பயத்தினால் நன்செய் பயிர் பயிரிடாமலேயே, நெல் பயிர் விளைவிக்காமலே போகலாம் என்று அத்தனை பேர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்க வேண்டும்.

அங்கு தென்னை மர சாகுபடி இருக்கிறது. தென்னை மர சாகுபடி புன்செய் தானியமாகக் கருதப்படுகிறது. புன்செய் நிலத்திற்குள்ள வரி அளவுக்குப் போகவேண்டுமென்று தென்னை சாகுபடி செய்ய முற்பட்டு விட்டால், அந்தப் பகுதியில் உள்ள மக்கள் கதி என்ன என்று இந்த அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு கருத்தை இங்கே வலியுறுத்திக்கூற ஆசைப்படுகிறேன். சிறு நிலச்சுவாந்தார்களுக்குப் பயன் இருக்கக் கூடிய ஒரே சட்டம் இன்றைக்கு அங்கே உள்ள பேசிக் டாக்ஸ், விவசாய

வருமான வரி உள்ள சட்டம் என்று யோசிக்கவேண்டும். அந்தச் சட்டத்தை இந்தப் பகுதிக்கு நீடிக்கலாமா? மாநிலம் முழுவதற்கும் யூனிஃபார்மிட்டி வேண்டுமென்று ஒரு வாதமாக இருக்கிறது. மாநிலம் பூராவுக்கும் ஒரே விதிப்பு முறை இருக்கவேண்டும் என்ற காரணத்தினால் அந்தச் சட்டத்தை, அந்த முறையை நாம் ஏற்றுக் கொள்ளலாமா என்று யோசிக்கவேண்டும். எனக்கு முன்னால் பேசிய திரு. குஞ்சன் நாடார் அவர்கள் எடுத்துக் கூறியது போல, நம் பகுதிக்கு பேசிக் டாக்ஸ் முறையை நுழைக்கலாமா, அங்கு உள்ள நில வரி முறையை இங்கே கொண்டுவரலாமா என்று பார்க்கவேண்டும். அப்படிப் பார்த்தால் இங்கே புன்செய் நிலத்துக்கு வரி குறைவாக இருக்கிறது. அந்த பேசிக் டாக்ஸை இங்கே கொண்டு வந்தால் புன்செய் நிலத்திற்கு வரி கூடும் என்று இந்தப் பகுதி மக்கள் ஆட்சேபிக்கலாம் என்று கூறுவார்கள். பேசிக் டாக்ஸை மறுபடியும் பரிசீலனை செய்து, புன்செய் நிலத்திற்கு போடும் வரி கூடுதலாக இருந்தாலும், நன்செய் நிலத்துக்கு வரிச் சலுகை இருப்பதால் அதை மக்கள் வரவேற்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். அப்படிச் செய்ய இயலாவிட்டால், நம் மாநிலத்தைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கக்கூடிய பகுதிகளைப் பொறுத்தவரையில் அதைப் பரிசீலிக்காவிட்டாலும் இருக்கிற இடத்திலாவது, கன்னியாகுமரி மாவட்ட மக்களுக்காவது இந்தச் சலுகை நீடிக்கவேண்டும் என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் ஆலோசிக்கவேண்டும். ஆகவே இந்தச் சட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும், அல்லது வாபஸ் வாங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த ரயத்வாரி சட்டம் கன்னியாகுமரிக்குப் புகுத்தப்படுவதற்குள்ள இரு காரணங்களை அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். ஒன்று தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களில் இருப்பதைப் போன்ற வரி விதிப்பு கன்னியாகுமரிக்கு இருக்க வேண்டும் என்பது. இன்னொன்று, பேசிக் டாக்ஸ் என்ற அடிப்படை வரி போடக்கூடாது என்ற அடிப்படையில் சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்திருக்கிற தீர்ப்பு. இதற்கு மாற்றுக் கருத்தையும் மதிப்புக்குரிய குஞ்சன் நாடார் அவர்கள் சொன்னார்கள். பேசிக் டாக்ஸ் வசூலிப்பது சட்ட விரோதம் என்று இருப்பினும் கேரள அரசு அதற்கு ஒரு மாற்று கண்டு பிடித்தது. சட்டத்தையே திருத்திக்கொண்டது. அதே போல தமிழ்நாட்டு அரசாங்கம் சட்டத்தைத் திருத்திக்கொண்டால் என்ன? இந்தக் கருத்துக்களை வைத்து நோக்கும்போது, தமிழ்நாட்டில் இதர மாவட்டங்களில் இருப்பதைப் போன்ற நிலை, ஒன்று போன்ற நிலைமை கன்னியாகுமரிக்கு வரவேண்டும். அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். ஆனால் இன்றைய உலகில் வரி விதிக்கும் முறையையே மாற்றி அமைக்கவேண்டுமென்று அரசியல் நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள் கருத்தில் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாகச் சொன்னால், நில வரியே இருக்கக்கூடாது





என்று சொல்லுகிற கருத்து நாட்டிலே பரவலாக நிலவிக்கொண்டி
ருக்கிறது. நிலவரியையே ரத்து செய்யவேண்டும், ரயத்வாரியாக
இருந்தாலும், பேஸிக் டாக்ஸாக இருந்தாலும், நிலவரி வசூலிப்பது
என்பது இல்லாமல் போகவேண்டுமென்ற கொள்கை நாட்டிலே
பரவி வருகிறது. ஊன்றி கவனித்தால் இதிலே ஆழ்ந்த பொருள்
இருக்கிறது. ஆனால் நிலத்திற்கு வரி போட்டு வசூலிக்காமலிருந்
தால் அரசாங்கத்திற்கு வருமானம் எப்படி கிடைக்கும் என்ற
கேள்வி ஏற்படும்போது, அதற்கு விவசாய வருமான வரியை
வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்கிறேன். எல்லா
நிலங்களுக்கும் வரியைப் போடுவதைவிட நிலத்திலிருந்து
கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டு வரி விதிப்பது
நியாயமானது, நல்லது என்ற கருத்து பெரியோர்கள் கூறுகிற
ஒன்று. அந்த அடிப்படையில் வைத்துப் பார்த்தால் பேசிக்
டாக்ஸ்கூட வசூலிக்கவேண்டாமென்று நான் கூறுவேன். விவசாய
வருமான வரியை அமுலுக்குக் கொண்டு வந்தாலேயே பேஸிக்
டாக்ஸிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தைக் காட்டிலும்
அரசாங்கத்திற்கு வருமானம் கூடுதலாகக் கிடைக்கும். கன்னியா
குமரி மட்டுமல்ல, இதரப் பகுதிகளுக்கும் கூட அதைக் கொண்டு
வரலாம். ரயத்வாரி சிஸ்டத்திற்கே இந்த வித வருமான வரி
ஒன்று மட்டும் வைத்தால், அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸ் மட்டும்
வைத்தால் போதும், இந்த வரியை விட வருமானத்தை அதிக
மாகப் பெற வாய்ப்பு அளிக்கும். அதே நேரத்தில் சிறு சிறு
அளவுக்கு நிலத்தை வைத்திருக்கிற நில உடைமையாளர்களுக்கும்
விவசாயிகளுக்கும் பளு குறையும் என்று கூறிக்கொள்ள ஆசைப்
படுகிறேன். சிறு சிறு அளவுக்கு நிலத்தை வைத்திருப்பவர்கள்
தான் விவசாயத்திலே நேரடியாக ஈடுபட்டிருப்பவர்கள். அவர்கள்
தான் நெல் உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கிறவர்கள். அவர்களுக்கு
நெல் உற்பத்தியைச் செய்வதில் கூடுதல் அக்கறை ஏற்பட வேண்டு
மென்றால் அவர்களுக்கு அதிக இன்சென்டிவ் ஏற்பட வேண்டு
மென்றால் வரிப்பளுவைக் குறைக்க வேண்டும். அந்த அடிப்படை
யில் வைத்துப் பார்க்கும்போது கன்னியாகுமரியில் பெரும்
பான்மையான மக்கள் சிறு சிறு அளவுக்கு நிலத்தை வைத்துக்
கொண்டிருப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் 90 சதவிகிதம்
பேர்கள் இருக்கிறார்கள். அக்ரிகல்சரல் இன்கம்-டாக்ஸ் கூட
கொடுக்க வேண்டாதவர்கள். அவர்கள் மீது தான் இந்த ரயத்
வாரி முறையில் அதிக வரியைப் போடவேண்டிய நிலைமை
ஏற்படுகிறது. கன்னியாகுமரியில் எதிர்ப்பு எதற்காக இருக்கிறது
என்றால் இப்போது செலுத்துகிற வரியைவிட கூடுதல் வரிச்சுமை
ஏற்பட்டுவிடக்கூடாது ரயத்வாரி முறையில் என்ற காரணத்தினால்
அதை எதிர்க்கிறார்களேயொழிய மற்றபடி இல்லை. இப்போது
பேசிக் டாக்ஸ் அடிப்படையில் ஏக்கருக்கு இரண்டு ரூபாய்
செலுத்துகிறோம். ரயத்வாரி முறை வரும்போது 15 அல்லது 20
ரூபாய் என்று செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். ரயத்வாரி
முறையில் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய 15 ரூபாய்,
அதற்கு மேல் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியனுக்கு [illegible]
[illegible] எடுத்தால் 25 ரூபாய் வரி செலுத்த வேண்டி

யிருக்குமே என்ற அச்சம் ஏற்படுகிறது. ஒரு ஏக்கர் வைத்திருக்கிற விவசாயி இப்போது 2 ரூபாய் வரி, வாட்டர் செஸ் 5 ரூபாய், ஆக மொத்தம் 7 ரூபாய் செலுத்துகிறார். சேர்த்து எடுத்தால் 10 ரூபாய்க்கு மேல் வராது. இனி 25 ரூபாய், 30 ரூபாய் செலுத்த வேண்டுமே என்று பார்க்கும்போது அச்சப்படுகிறார்கள். ஆகையால் தான் ரயத்வாரி முறை என்று வந்தவுடனே பயம் ஏற்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் ஏக்கருக்கு 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரையில் வரி செலுத்துகிறார்கள். அதைப் பார்க்கும்போது ஒரே அச்சம். ரயத்வாரி முறையில் இவ்வளவு கூடுதல் வரி செலுத்த வேண்டுமே என்ற அச்சம் ஏற்படுகிறது. யூனிஃபார்மிட்டி வேண்டியதுதான். வேண்டாமென்று சொன்னாலும் நிற்கப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் கவனித்துக்கொள்ள வேண்டியது இப்போது செலுத்துகிற வரியை விட கூடுதல் வராமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்த ஒன்று செய்தால் போதும், அது கன்னியாகுமரி மக்களுக்குச் செய்கிற பேருதவி என்று கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

* **புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தின் நிலச்சீர்த்திருத்தம் குறித்து இந்த அரசு கொண்டு வந்திருக்கிற சட்டங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

அரசாங்கம் நடைபெற வேண்டுமென்று சொன்னால் வருவாய் தேவை என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால் இந்த வருவாய் நிலவரியாகத்தான் இருக்கவேண்டும் என்று இந்த நூற்றாண்டிலும்கூட நினைப்பது மிக மிகப் பிந்திய அறிவைத்தான் காட்டும். ஒரு காலத்தில் அரசுக்கு வேறு வருவாய் இல்லை என்று இருந்தது. அந்த நாளில் நில வருவாய் அரசின் வருவாயாக இருந்தது. ஆனால் இப்போது அரசின் வருவாய் பல வகையில் பல துறையில் பரவி இருக்கும் காலத்தில் மீண்டும் நிலவரியை நம்பி வாழ்வது, நிலவரி அரசின் வாழ்விற்கு இன்றியமையாதது என்று கூறிக்கொள்வது தவறானதாகும். நாம் இந்த நாட்டில் 'வானம் பொழியுது, பூமி விளையுது, உனக்கு என்ன வரி' என்று கேட்ட குரலை, வீர உரையை ஆற்றிய பரம்பரையிலே வந்திருக்கிறோம். அந்த குரல் உரை, நம்மை ஆண்ட வெள்ளைக்காரர் காலத்தில் எழுப்பப்பட்ட உரை, அது இந்த நேரத்திற்குப் பொருந்தாது என்று கூற முடியாது. ஆட்சி பீடத்தில் யார் இருந்தாலும் சரி, அப்பொழுது தவறு என்று பட்ட நீதி, இப்பொழுது அந்த இடத்திற்கு வேறு ஆள் வந்ததன் காரணமாக நியாயம் உடையதாக ஆகி விடாது என்பதை இந்த நாட்டில் உள்ளவர்கள் அத்தனை பேர்களும் உணர்வார்கள். நிலவரி தேவையில்லை என்று முடிவு எடுக்கக்கூடிய ஒரு காலத்தில் நாம் இருக்கிறோம். நமது முதல் அமைச்சர் அவர்கள் பல முறை பேசிய பொழுது 'நில வருவாய்; இப்பொழுது அரசாங்கத்தின் வருவாயைப் பார்க்கிற நேரத்தில், மிகச் சிறு பகுதியாகும்' என்று கூறியுள்ளார்கள். மிகச் சிறு பகுதியாக இருக்கிற ஒரு வரியை





மீண்டும் பொது மக்கள் தலையிலே சுமத்தி, அவர்கள் பளுவை ஏன் அதிகப்படுத்த வேண்டும் என்று யாரும் கேட்பார்கள். அதுமட்டுமல்ல, பழைய காலத்தில் கூட நிலவரி இருந்ததா என்றால்', இல்லை என்று தான் சொல்ல வேண்டும். 'ஆறில் ஒரு கடமை', அவர்களுக்கு எவ்வளவு வருவாய் வருகின்றதோ அதில் ஆறில் ஒன்றைக் கொடுக்க வேண்டும் என்ற நிலை தான் இருந்தது. அது நிலத்திற்கு விதித்த வரியாகாது; நிலத்திலிருந்து வந்த பொருளுக்கு விதித்த வரியாக உணரவேண்டும். அப்பொழுதே பொருந்தாத அப்படிப்பட்ட ஒரு வரியை இப்போது வைத்துக்கொள்ள தேவையில்லை. ஒரு காலத்தில் அந்த வரியை நீக்கிவிட்ட அரசன் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்று அழைக்கப்பட்டான். சுங்கம் தவிர்த்த சோழ நல்லூர் என்று ஒரு ஊரின் பெயர் இருக்கிறது. அப்படிப்பட்ட முற்போக்கான ஒரு நிலையை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து, தரம் பார்த்து வரி விதிக்கின்ற முறை கூட தவறானது. ஒரு காலத்தில் நஞ்சையும், புஞ்சையும் இருந்த நிலை வேறு. இப்பொழுது நஞ்சையும் புஞ்சையும் இருக்கின்ற நிலை வேறு. முன்பு நஞ்சை என்று சொன்னால் அதில் நெல் விளையும், கரும்பு விளையும், வாழை விளையும். புஞ்சை என்று சொன்னால் வரகு, கம்பு, சோளம் இவை தான் விளையும். ஆனால், இப்பொழுது நிலை மாறி இருக்கிறது. இப்பொழுது புஞ்சையிலே கரும்பு விளைகிறது, நெல் விளைகிறது, வாழை விளைகிறது, பாக்கு விளைகிறது. ரப்பர் விளைகிறது, காப்பி விளைகிறது, தேயிலை விளைகிறது. ஆகவே, புஞ்சை நிலத்தின் வருவாய் அதிகரித்திருக்கிறது. புஞ்சை என்ற காரணத்தினால் தரத்தைக் குறைத்து, நஞ்சை என்ற காரணத்தினால் தரத்தை உயர்த்தி போட்ட வரி முறை இருக்கிறதே அது ஒரு காலத்தில் ஏற்பு உடையதாக இருந்தது. இப்பொழுது ஏற்பு உடையதா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். குமரி மாவட்டத்தில், அது நம்மோடு இணையாத காலத்தில் இப்படிப்பட்ட ஒரு நிலவரி முறை இருந்தது. அந்த நிலவரி முறை தவறானது என்பதை அறிந்து, தரம் பிரித்து வரி விதிக்கின்ற முறை தவறு என்பதை அறிந்து, எல்லா நிலத்திற்கும் ஒரே வரி, அடிப்படை தீர்வை, அதன் பிறகு நிலத்தில் வருகிற வருவாய்க்கேற்றவாறு ஒரு வரி விதிப்பு முறை அங்கே அமுலில் இருக்கிறது. நல்ல முறையில் நுழைக்கப்பட்ட அந்த முறையை ஒழித்துவிட்டு, பழைய, காலம் கடந்த, மற்றவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு வரி முறையை மீண்டும் அங்கே நுழைப்பது முறைதானா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, இந்த வரியை எந்த நாட்டில் கொண்டு வருவதாக இருக்கிறார்களோ, அந்த நாட்டினுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கவேண்டும். நம்முடைய நாட்டிலுள்ள நஞ்சையின் நிலை வேறு, புஞ்சையின் நிலை வேறு. குமரி மாவட்டத்தில் நஞ்சையின் நிலை வேறு, புஞ்சையின் நிலை வேறு. புஞ்சை என்று சொன்னால் குறைவான தீர்வை, நஞ்சை என்று சொன்னால் அதிகமான தீர்வை போடுகின்ற இந்த முறையை அங்கே நுழைத்தால், அது

சரியாக அமையாது. அங்கே நஞ்சைகளையெல்லாம் மலைப் பகுதிகளில் இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் போடுகின்ற உரங்கள் மழை பெய்த உடனேயே கடலில் சென்று கலந்து விடுகிறது. ஆகவே, நஞ்சையிலிருந்து வருகிற வருவாய் குறைவாக இருக்கிறது. ஆனால், புஞ்சை நிலத்தில் ரப்பர் முதலியவை விளைவதன் காரணமாக வருவாய் நிறைய வருகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிற நாட்டில், புஞ்சைக்கு தரத்தைக் குறைத்து வரியைக் குறைத்துவிட்டு, நஞ்சைக்கு தரத்தை உயர்த்தி அதிக வரியை விதிக்கும் முறையை புகுத்துவது முறை தானா, நல்லது தானா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்தபடியாக, அங்கு இருக்கிற நில முதலாளிகளையும், இங்கே இருக்கிற நில முதலாளிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அங்கே இரண்டு ஏக்கர்களுக்கு மேல், மூன்று ஏக்கர்களுக்கு மேல் நிலம் வைத்திருக்கும் நில முதலாளிகளைப் பார்க்க முடியாது ஒரு நிலை இருக்கிறது. அங்கே கால் காணி, அரைக் காணி என்ற அளவிலேதான் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிற காரணத்தினால், அடிப்படை தீர்வை போடுகின்ற அந்த அளவோடு அங்கே நிறுத்திவிட்டிருக்கிறார்கள். விவசாய வருமான வரி போடக்கூடிய அளவுக்குக்கூட அவர்கள் வரவில்லை. ரூ. 2 மட்டும் கொடுத்துக் கொண்டிருந்த அப்படிப்பட்ட ஒரு முறையை மாற்றி, தரம் பிரித்து வரி விதிக்கும் முறையை நுழைத்து, அதனால் குறைந்த வருமானம் உள்ள நிலத்திற்கு, நில முதலாளிகளுக்கு அதிக வரியை விதிப்பது முறைதானா என்பதை இந்த அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும். இரண்டு ரூபாய் அடிப்படை தீர்வை என்ற நிலை போய், தரம் வாரியாக பிரித்து நஞ்சைக்கு அதிக வரி விதிக்கும் இந்த முறை வந்தால், அந்த நில வரியை அடிப்படையாக வைத்து பஞ்சாயத்து வரி, மற்ற வரிகள் போடுகின்ற நேரத்தில், வரி எந்த அளவுக்குக் கூடும் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, வேறு சில சீர்திருத்த சட்டங்கள் கொண்டு வந்து, ஜமீன் ஒழிப்பு முறை, இனாம் ஒழிப்பு முறை என நம் நாட்டில் இருப்பது போன்ற ஒரு முறையைக் கொண்டு வந்த, அந்த வரிகளை நீக்கிவிட்டாலும், கரயத்வாரி செடில்மெண்டின் கீழே கொண்டு வருகிற நேரத்தில், அரசு மேற்கொண்டிருக்கிற சில நடவடிக்கைகளை அந்த நாட்டு மக்கள் வெறுக்கிறார்கள். அரசுக்கு தாங்கள் கொடுக்கவேண்டிய நிலை இல்லை. நாங்கள் எந்த வரியும் கொடுக்கக்கூடிய நிலையிலே இல்லை, கொடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. கொடுக்கக்கூடிய தேவையும் இல்லை என்ற அளவுக்கு அந்த நாட்டு மக்கள் உணர்கிறார்கள். அந்த அரசு அவர்களிடமிருந்து எந்த வரியையும் வாங்க முடியாது, வாங்குவது சட்டப்படி செல்லாது என்ற அளவுக்கு அந்த வரியை வாங்குவதை கைவிட்டிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு நிலையில், அந்த மக்கள் மறுக்கின்ற அந்த வரியை, மன்னர்களால் வாங்க முடியாது என்று கைவிடப்பட்ட வரியை, அதற்கு உயிர் கொடுத்து, அந்த அரசுக்கு வருஷா வருஷம் இவ்வளவு கொடுக்கிறோம் என்று சொல்லும் முறை இருக்





கிறதே, அது தேவை தானா? மக்களுக்கு நிலச் சீர்திருத்தம் செய்கிறோம் என்று சொல்லி மன்னர்களுக்கு மறைமுகமாக ஒரு ஆதிக்கத்தை தேடுகிறது இந்த அரசு என்ற நினைப்பு அந்த நாட்டு மக்களுடைய எண்ணத்தில் இருக்கிறது என்பதை இந்த அரசு உணர வேண்டும். அது மட்டுமல்ல. ஜமீன் ஒழிப்பு முறை, இனாம் ஒழிப்பு முறை கொண்டு வருகிற நேரத்தில் நஷ்ட ஈடாக மொத்தமாக இவ்வளவு தொகை கொடுப்பது என்று தான் சட்டம் இயற்றியிருக்கிறோம். அப்படியில்லாமல் அந்த அரசுக்கு ரூ. 1½ லட்சம் ஆண்டுதோறும் கொடுப்பது என்பதை இந்த அரசு ஏன் மேற்கொள்ளவேண்டும் என்பதையும் அந்த நாட்டு மக்கள் ஐயத்தோடு கேட்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலையை ஏற்கிற நேரத்தில், தமிழக அரசுக்கும், குமரி மாவட்டத்தில் அப்பொழுது இருந்த அரசுக்கும், அந்த அரசின் அரசருக்கும் இவர்களுக்கும் இடையே யாராவது தரகர்கள் இருந்து இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டைச் செய்தார்களோ என்று கூட இந்த நாட்டு மக்கள் ஐயப்படுகிறார்கள். அதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கவேண்டியதில்லை என்பதையெல்லாம் மனதில் வைத்தால், இந்த வரி முறை கூடாது. ஒருமைப்பாடு என்ற நிலை இருக்க வேண்டுமானால், அது நல்ல முறை. அடிப்படை தீர்வை, வருவாய்க்கேற்ற வரி என்ற முறை நல்ல முறை என்ற காரணத்தினால் தமிழ் நாட்டில் அதை நுழைக்க வேண்டும். அப்படி நான் கூறுகிற நேரத்தில் அமைச்சர் அவர்கள் எழுந்து, அடிப்படை தீர்வை ரூ. 2 இங்கே வைப்பது என்று சொன்னால், இங்கே புஞ்சைக்கு 6 அணா கூட வரி இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை மாற்றிவிட்டு, ஏழை விவசாயிகளை ரூ. 2 கொடுக்கச் சொல்லுவது, குமரி மாவட்டத்திற்கு நன்மை செய்கிறோம் என்று சொல்லி தமிழ் நாட்டு ஏழை விவசாயிகள் தலையில் கை வைப்பதாக இருக்கிறதா? என்று கேட்கக்கூடும். நான் சொல்லுகிறேன். அடிப்படை தீர்வை ரூ. 2 இருக்கவேண்டும் என்ற நிலையை நாம் கொண்டு வரத் தேவையில்லை. இங்கே இருக்கிற புஞ்சைக்கு குறைந்த பட்சத் தீர்வை எதுவாக இருக்கிறதோ, அல்லது தீர்வை தான் அடிப்படை தீர்வை என்று வைத்துவிட்டால், அந்த நாட்டு மக்கள் அதற்காக வருத்தப்பட மாட்டார்கள், இந்த நாட்டு மக்கள் அதற்காக வருத்தப்பட மாட்டார்கள், இந்த நாட்டு மக்களும் வருத்தப்படமாட்டார்கள். ஆகவே, அடிப்படை தீர்வை குறைந்த அளவுக்கு விதித்துவிட்டால், வருமானம் எந்த அளவுக்கு வருகிறதோ, வருமானத்திற்கு ஏற்றவாறு வரி விதிக்கலாம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும். அதுதான் நல்ல முறை. நியாயமான முறை என்பதை எடுத்துக் கூறி, அப்படிப்பட்ட முறைக்கு மாறாக வருகிற இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன் என்று சொல்லி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நமது தொழில் அமைச்சர் அவர்களால் பொறுக்கு கமிட்டியில் திருத்தியவாறு இங்கே கொண்டுவரப்பட்டுள்ள ரயத்வாரி

[திரு. கே. ஏ. மதியழகன்] [21st July 1964

செட்டில்மெண்டு மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன் என்று கூறுவதற்கும், இந்த மசோதாவை மறுபரிசீலனை செய்வதற்குக்கூட அல்ல, இந்த மசோதாவை திருப்பிப் பெறவேண்டும், பேசிக் டாக்ஸை வைத்துக்கொள்வது கூட கூடாது, இந்த மாநிலம் முழுவதுக்கும் அடிப்படையாக அமைந்த சோஷலிஸ்டு கொள்கையின் அடிப்படையில் நிலவரியே இல்லாத ஒரு மசோதாவைக் கொண்டு வரவேண்டும் என்று சொல்லுவதற்காகவும், நான் இந்தத் தீர்மானத்தின் பேரில் இந்த மன்றத்தின் முன்னால் பேச வந்திருக்கிறேன். இந்த மசோதாவை முதலில் பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனைக்கு விடவேண்டும் என்று பிரேரேபித்து பேசிய நேரத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள் அவர்களுக்கே உள்ள வழக்கமான மிக நளினமான, நாசூக்கான முறையில் இங்கே பல காரியங்களை எடுத்துரைத்தார்கள். அப்படி எடுத்துரைத்த நேரத்தில் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்காக சொல்லப்பட்ட காரணங்கள் மூன்று. சுப்ரீம் கோர்ட்டு இது செல்லுபடியாகாது என்று கூறி விட்டது, ஆகவே அதற்கு ஒரு சட்டம் கொண்டு வரவேண்டும் என்பது ஒன்று. இரண்டாவது காரணம், ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், 'யூனிபார்மிடி' இருக்கவேண்டும், இங்கு ஒன்றும் அங்கு ஒன்றும் இருக்கக்கூடாது என்பது மூன்றாவது இதில் அநுகூலம் இருக்கிறது. நன்மை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் நான் இந்த மாமன்றத்தின் முன்னால் குமரி மாவட்டத்திலே இருக்கிற பல்லாயிரக் கணக்கான, லட்சக்கணக்கான உழவப் பெருங்குடி மக்கள் பெயராலும், அவர்களுடைய நல்வாழ்வின் பெயராலும், விவசாய உற்பத்தியின் பெயராலும், ஜனநாயக சோஷலிசத்தின் பெயராலும் இந்த மசோதாவை மிகவும் வன்மையாக எதிர்க்கிறேன். இதைத் திருப்பிப் பெற வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகக் கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பெரும் தலைவருக்காக, ஜன
11-30 a.m. நாயக சோஷலிசத்தைக் காக்கப் போகிறார் என்பதற்காக நீங்கள் எல்லோரும் திருவிழாக் கொண்டாடி விட்டு அதே நேரத்தில் குமரி மாவட்ட மக்களுக்கு, காமராஜரின் பிறந்த நாள் பரிசாக இப்படிப்பட்ட ஒரு கொடுமையான வரிப் பளுவைக் கொண்டு வந்திருப்பது மிக மிக துரதிஷ்டமானது. ரயத்துவாரி முறையைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குமரி மாவட்டப் பெருங்குடி மக்களுக்கு அது புதிதல்ல. ஏறக்குறைய 1910ம் ஆண்டு முதற்கொண்டே செட்டில்மெண்ட் செய்யப்பட்ட காலத்திலிருந்து அனுபவித்து வந்த முறைதான். ஆனால் அந்த வரிப்பளுவை அவர்களால் தாங்க முடியவில்லை என்பதற்காகத் தான் பேசிக் டாக்ஸ் முறை கொண்டுவரப்பட்டது. ஆகவே இது குமரி மாவட்ட மக்களுக்கு ஒன்றும் புதிதல்ல. ரயத்துவாரி முறையிலே அனுகூலம் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குமரி மாவட்ட காங்கிரஸ் பிரதிநிதிகள் அந்த மாவட்ட மக்களின் குமுறலை எதிரொலிப்பார்கள் என்று நான் கருதினேன். அது நடக்கக் காணோம். இதே ரயத்துவாரி முறை அங்கே 30, 40 வருஷங்களாக இருந்து, ஏக்கருக்கு ரூ. 30, 40 என்று



21st July 1964] [திரு. கே. ஏ. மதியழகன்]

வரி கொடுக்க வேண்டிய நிலைமை இருந்ததால், 1939-ல் அங்கே ஒரு கமிஷனை நியமித்தார்கள். 1946-ல் தான் சர். சி. பி. ராமசுவாமி அய்யர் அவர்களால்—ஒருமைப்பாட்டுக் குழுவிற்குத் தலைவராக நியமித்தீர்களே, அவரால்—இந்த பேசிக் டாக்ஸ் முறை கொண்டுவரப்பட்டது. அன்று ஏக்கருக்கு ரூபாய் ஒன்றாக இருந்த வரி இன்று ரூபாய் இரண்டாக ஏறியிருக்கிறது. அதை மாற்றி, இப்பொழுது ரூ. 15, 20, 25 கொடுக்க வேண்டுமென்ற ஒரு வரி முறையை ஏற்படுத்தி, அதுதான் ரயத்துவாரி முறையினால் ஏற்பட்ட நன்மை என்று எடுத்துச் சொன்னார்கள். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கிற மசோதா மிகவும் பிற்போக்கானது, காலத்திற்கு ஒவ்வாதது என்பதை நான் மிகவும் வேதனையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பழைய ஏகாதிபத்திய காலத்து வெள்ளைக்காரர்கள்கூட இப்போது இந்த மாதிரி ஒரு மசோதாவைக் கொண்டு வருவதற்குப் பயன்பட்டிருப்பார்கள். ஒரு மாவட்டத்திற்கு மட்டும் இந்த வரிப் பளுவை நீடிப்பது நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சுனம் மாதவன் அவர்கள் எடுத்துக் கூறியது போல, சுப்ரீம் கோர்ட் சட்டம் செல்லுபடியாகாது என்று சொல்லி விட்டால், ஏன் கேரளாவில் செய்தது போல நமது ராஜ்யத்திலும் செய்திருக்கக் கூடாது என்று கேட்கிறேன். பொறுக்குக் கமிட்டியிலேகூட, அமைச்சர் அவர்கள் "திருவாங்கூர் கொச்சி 15/1955-வது சட்டம் கேரள நாட்டிற்குப் பொருந்தாது. அதை அவர்கள் மாற்றி, 13/1961-வது வருடத்திய சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். அதைத்தான் இப்பொழுது திருத்தி இருக்கிறார்களே தவிர, நமக்குப் பொருந்தும் சட்டத்தைத் திருத்தவில்லை" என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியிருப்பதை நான் படிக்கிறேன்.

Explaining the legal position the Chairman stated that in 1956 the State Reorganisation Act, 1956 came into force and Travancore-Cochin Act XV of 1955 which was in force at the time applied to the transferred territory. That Act was amended by the Kerala Legislature and the Act so amended was struck down by the Supreme Court as unconstitutional. The Constitution Seventeenth Amendment Act, did not validate that Act, but only validated Act XIII of 1961 which was a complete enactment of the Travancore-Cochin Act XV of 1955, as the 1961 Act was also held unconstitutional by the Kerala High Court. Hence so far as the Madras State was concerned, it had become necessary to replace Travancore-Cochin Act XV of 1955 by a new legislation. The Constitution should be amended if the Travancore-Cochin Act XV of 1955 as in force in the transferred territory is to be validated.

அவர்கள் நமது நாட்டின் சட்ட மந்திரியாக இருக்கிறார்கள். கேரள ராஜ்யத்தில் இருக்கிற சட்ட இலாகாவைவிட நமது ராஜ்யத்திலே இருப்பது தரத்தில் குறைவானதா? சட்டம் உருவாக்க இயலாதவர்களா? நாமும் கேரள ராஜ்யத்தைப் போல

[திரு. கே. ஏ. மதியழகன்] [21st July 1964

செய்திருக்கலாமே தவிர, சுப்ரீம் கோர்ட் சொல்லிவிட்டது, ஆகவே சட்டம் செல்லாது என்று சொல்லுவது சரியான முறையாக இருக்காது. நமது சட்டமன்றத்திற்கும் நமது பாரம்பரியத்திற்கும் அது உகந்ததல்ல.

அடுத்தபடியாக, "யுனிபார்மிடி" என்று சொன்னார்கள். அப்படி என்றால், குமரி மாவட்டத்தில் கட்டாய இலவசக் கல்வி 20 ஆண்டுகளுக்கு முன்பே கொண்டுவரப்பட்டிருக்கிறது. அங்கே யார் யார் பிறக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் கட்டாயமாக இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்ற சட்டம் இருக்கிறது. நமது மாநிலத்தில் மற்ற இடங்களில் இல்லை. யுனிபார்மிடிக்காக அதை ரத்து செய்கிறோம் என்று சொன்னால் கோமாளிக் கூத்தாகாதா? மேலும் இதனால் லாபம் இருக்கிறது என்று சொன்னார்கள். ரூ. 2 கொடுத்தவர்கள் இந்த வரியின் மூலமாக என்ன கொடுக்க வேண்டியிருக்கும் என்ற பயங்கர விஷயத்தைச் சொன்னார்கள். தோவாளையில் இருக்கிறவர்கள் ரூ. 15-ம் அகஸ்தீஸ்வரத்தில் இருக்கின்றவர்கள் ரூ. 11-ம், கல்குளத்தில் இருக்கிறவர்கள் ரூ. 9-ம், விளவங்கோட்டிலிருக்கிறவர்கள் ரூ. 6-ம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ரூ. 2 கட்டினவர்கள் மீது ரூ. 15 வரை கட்டக்கூடிய ஒரு பெரிய வரிப்பளுவை நாம் அவர்கள் தலைமீது சுமத்துகிறோம். இப்படியெல்லாம் வரி போட்டும் நில வரியின் மூலம் ரூ. 6 கோடி தான் வருகிறது. ஆனால் விற்பனை வரியை எடுத்துக்கொண்டால், ஏராளமானவர்கள் அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறார்கள் என்பது தெரியும். குமரி மாவட்டத்தில் ½ ஏக்கர், ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்கள்தான் ஏராளமாக இருக்கிறார்கள். சிறிய நிலம் வைத்திருப்பவர்கள். அவர்கள் எல்லோரும் இப்படி ரூ. 2-லிருந்து ரூ. 16 கொடுப்பதற்காகத்தான் இங்கே தமிழ் நாட்டிற்கு வந்தார்களா? அதற்காகத்தான் திரு. கொச்சி தமிழர் போராட்டம் நடத்தினார்களா? அதற்காகத்தான் சிறைக்குச் சென்றார்களா? இப்படிச் செய்வதுதான் தமிழர் ஆட்சியா என்று நான் வேதனையோடு கேட்கிறேன். குமரி மாவட்டத்தில் இந்த மசோதாவை தேர்தல் பிரச்னையாக்கி இன்றைக்கு ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ராஜினமா செய்துவிட்டு நிற்பார்களேயானால், ஒருவர்கூட தேர்தலிலே வெற்றி பெறமாட்டார்கள் என்பதை நான் உறுதியுடன் திட்டவட்டமாக சொல்ல முடியும். இந்த அறை கூவலை ஏற்கவேண்டுகிறேன். சாதாரணமாக உழவனை நுகத்தடியில் மேலும் மாட்டுவதுதானா ஜனநாயக சோஷலிசம்? ஜனநாயக சோஷலிசத்தைப்பற்றி நேற்று கடற்கரையிலே கூடிப் பேசினார்களே . . . . (மணி அடிக்கப்பட்டது)

**Sri K. A. MATHIALAGAN**: Sir, I may be permitted to have two more minutes.

**Mr. DEPUTY SPEAKER**: Yes.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்**: கடற்கரையைப் பற்றிப் பேசாமல், கனம் அங்கத்தினர் மசோதாவைப் பற்றி பேசலாம்.



21st July 1964]

**திரு. கே. ஏ. மதியழகன்**: மக்கள் மத்தியிலே ஜனநாயக சோஷலிசத்தை பற்றிப் பேசிவிட்டு, இப்படி ஒரு பழமையான, கவைக்கு ஒவ்வாத மசோதாவைக் கொண்டு வந்துவிட்டு, பொது மக்கள் சந்தேகிக்கும்படிச் செய்யலாமா? அரசாங்கம் கொண்டு வரும் வரிக் கொள்கையிலே இந்த ஜனநாயக சோஷலிசம் எதிரொலிக்க வேண்டாமா? ஏழைகளுடைய வருமானத்தைப் பெருக்க வேண்டும், பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையே யுள்ள மேடுபள்ளங்களை சமநிலைப்படுத்துவது சோஷலிசம் என்றால், அது எங்கே நிலவுகிறது? வரி டிமிக்கி கொடுக்கிறவர்கள் நம் நாட்டில் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். பெரும் லட்சியத்திற்காகப் பாடுபடுகிறோம் என்று சொல்லிவிட்டு, இப்படிச் செய்தால், அதை மக்கள் பார்த்துக்கொள்ள முடியுமா? இதுதான் முற்போக்கான கொள்கையா? மதிப்பிற்குரிய கணேசன் அவர்களின் கட்சியைப்பற்றி இங்கே பேசினார்கள். நிலவரி இல்லாமல் செய்யவேண்டுமென்று அவர்களே சொல்லும் நேரத்தில், எங்களுக்குத்தான் ஜனநாயக சோஷலிசம் தெரியும் என்று சொல்லிவிட்டு, இப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டு வந்தால், அது எதற்கு அறிகுறி என்று கேட்க விரும்புகிறேன். இந்த மசோதா குமரி மாவட்ட மக்களை கசக்கி பிழியப் போகிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒரு பக்கம் கமிட்டி போடுகிறார்கள். அடிப்படை விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். வருமானத்தை அதிகரிக்க வேண்டும், மக்கள் செழிப்பாக வாழவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இப்படி பிற்போக்கான, காலத்திற்கு ஒவ்வாத, வெள்ளைக்காரர்கள் கூட கொண்டுவர பயப்படக்கூடிய ஒரு மசோதாவைக் கொண்டு வருவது எப்படி ஜனநாயக சோஷலிசத்திற்குப் பொருந்தும் என்று கேட்கிறேன். ஏழை எளியவர்களின் வயிற்றில் இது அடிக்கும் என்ற காரணத்தால், இந்த மசோதாவை திருப்பிப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேண்டுமானால், டாக்டர் ஸர். ஸி. பி. ராமசுவாமி அய்யர் அவர்களையே கேட்டுப் பார்க்கலாம். எங்களிடத்தில் வேண்டுமானால் சர்க்காருக்கு மரியாதை இல்லாமல் இருக்கலாம். ஏனென்றால் மக்கள் பிரதிநிதிகளை மதிக்கத் தெரியாதவர்கள். ஆனால் டாக்டர் ஸர். ஸி. பி. அவர்களை கேட்பதற்கு ஏன் வெட்கப்படவேண்டும். நிலவரி மூலம் மொத்தம் ஆறு கோடி வருவதனால் என்ன லாபம்? கன்னியாகுமரி மாவட்ட மக்கள் மட்டுமல்ல, மற்ற மாவட்ட மக்கள் கூட இந்த நிலவரியே இருக்கக்கூடாது என்று கோரிக் கொண்டிருக்கும் காலத்தில், இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதன் பயனை இவர்கள் 1967-ல் குமரி மாவட்டம் காங்கிரசுக்கு தக்க பதிலை அளிப்பார்கள் என்பதனை உணர்ந்து, ஏழை எளியவர்களைக் கொடுமைப் படுத்தாதீர்கள், ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செய்யாதீர்கள் என்று சொல்லி, இந்த மசோதாவைக் கொண்டு வர இந்த சந்தர்ப்பம் கூட சரியானதல்ல என்பதனை எடுத்துச் சொல்லி, கூடிய சீக்கிரமே நிலவரியை ஒழிக்கும் சட்டத்தை சட்டமன்றத்தில் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

-600 008.

[21st July 1964

***திரு. சா. கணேசன்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் சபைக்கு முன்னே கொண்டு வரப்பெற்றிருக்கும் மசோதா காலத்திற்கும நியாயத்திற்கும் ஒவ்வாத ஒன்று என்பதை நான் அழுத்தமாக புலப்படுத்திக் கொள்ளுகிறேன். எந்தக் காலத்திலோ, நிலத்தின் நிலையான அடிப்படையில் அமைக்கப் பெற்ற ஒன்றை அந்த அடிப்படை தகர்ந்து மாறிவிட்டிருக்கிற இந்தக் காலத்தில செயல் படுத்துவது என்பது நியாயம் இல்லை, புத்திசாலித்தனமும ஆகமாட்டாது.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் அதாவது 1825-வது ஆண்டை ஒட்டி சர் தாமஸ் மன்ரோ என்பவர் இதற்கு விதையிட்டவர். அப்பொழுது இது ஒன்றுதான் அரசாங்க வரி, பாண்டியன் சோழன் காலத்தில் நிலவரி ஒன்றுதான் அரசாங்கத்திற்கு வரியாக வருவதாக இருந்தது என்பதையும் நாம் அறிவோம். அப்பொழுது விதித்த வரியும் வருமான அடிப்படையில் விகிதாசாரப்படி அதையொட்டி நிலமும் நன்சை புஞ்சை என்று கணிக்கப்பட்டது. அன்று கணிக்கப்பட்ட முறையில் இன்று நன்சை புஞ்சை செயல்படவில்லை என்பதை நாம் அறிவோம். அன்று மிகுந்த வருமானத்தைத் தருகிறதாக நஞ்சை கருதப்பட்டது; நன்செயில் நெல், மஞ்சள், கரும்பு போன்றவைகள் பயிரிடப் பெற்றன. அதே போல புன்செய் நிலத்தில் விலை குறைவான புன்செய் தானியங்கள், பயறு வகைகள் போன்றவை பயிரிடப்பெற்றன. ஆனதனுல் நஞ்செய் நிலத்தின் வருமானம் மிக்கதாகவும், புன்செய் நிலத்தின் வருமானம் குறைந்ததாகவும் கணிக்கப்பட்டு இருந்தது. அன்று இருந்த நிலைமை முற்றிலும் மாறி, சிறந்த நன்செய் நிலத்தை விட சில புஞ்சை நிலங்கள் பதின்மடங்கு வருமானம் தருகின்ற நிலைமையைக் காண்கிறோம். உணவுப் பயிர் மட்டும் வளரும் காலமாக இருந்தது மாறி, பலபணப் பயிர்கள் வாணிபத்திற்கும் ஏற்றுமதிக்கும், பயிரிடப்படும் நிலைமை வந்து விலைகளெல்லாம் ஏறி இருக்கிற நிலைமையில், இந்தமாதிரி வரி விதிக்கும் நிலை வந்தால் அது கடுமையானதாக மட்டும் கருதப்படமாட்டாது, கொடுமையானதாகவும் இருக்கும் என்பதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன். இன்றைய நன்செய் நிலங்களிலெல்லாம் வருகிற வருமானத்தைக் கணக்கிட வேண்டும். அது மட்டுமல்ல. கேரளத்திலிருந்து நம்மோடு சேர்ந்திருக்கிற அந்தப் பகுதியில் அன்று விதிக்கப்பட்டது ரயத்துவாரி நிலத்திற்கு வரி என்கிற நோக்கோடு விதிக்கப்படவில்லை என்பதை மறந்து விடப் படாது. வரியை நேரிடையாக விதிக்கவில்லை. ஒரு நஞ்சை நிலத்திற்கு வரி விதிக்க ஒரு ஏக்கரில் நன்ருக வேளாண்மை செய்தால் என்ன வரும் என்ற அடிப்படையில் கணித்து விளைவில் ஒரு பாதியை தன்னுடையதாகக் கணக்கிட்டார்கள். அப்படி கணக்கிட்ட தொகை பணமாக மாற்றுவதில், விலைக்கு ஏற்ப பாதிப் பணத்திற்கு வரி என்று பெயரிடப்பட்டிருந்த அந்த நிலையைப் புரிந்து கொண்டால் நலமாக இருக்கும். அதைப் புரிந்து கொள்ளத் தவறி இருக்கிறோம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



21st July 1964] [திரு. சா. கணேசன்]

அதற்குப் பிறகு ஸர். ஸி. பி. அவர்கள் கிட்டத்தட்ட 20-ம் நூற்றுண்டின் முற்பகுதியின் கடைசி பாகத்தில் ஒரு நெறிமுறையை அமைத்தார்கள். அந்த உண்மைகளை எல்லாம் இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். மேலும் மொத்தமாக மாநில அளவில் பார்த்தால் நிலவரி மொத்த வரிகளில் சுமார் இருபதில் ஒரு பங்குதான் ஆகும். அதாவது கிட்டத் தட்ட ஆறு கோடியை ஒட்டிய அளவில்தான் நிலவரி இருக்கிறது. பிற வருமானங்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்போது 120 கோடிக்கும் மேம்படுகின்ற நிலைமையைக் காணமுடியும். காந்திய நெறியில் செல்லுகிறோம் எனறு எண்ணிக் கொண்டும், சொல்லிக் கொண்டும், எந்த எண்ணத்தோடு செயல்படும் நாம் இந்தியாவின் முதுகெலும்பாக உள்ள, நாட்டிற்கு தங்கள் உடலையும் உழைப்பையும் தருகின்ற, ஒரு பகுதியினரான எளியவர்களுக்கு இந்த வரியினுல் வரும் பணம் வேண்டாம் என்று சொல்வதனுல் ராஜ்ய பரிபாலனம் எந்த அளவுக்கும் தடைப்பட்டுவிட மாட்டாது. அதற்கு மாருக விவசாயத்தில் அவர்களுக்கு அக்கறையும், ஆர்வமும் பெருகி, உண்மையான தேவையான பொருள்கள் பெருகி உணவுப் பஞ்சம் நீங்கி, ஏற்றுமதிக்கும் வாய்ப்பு இருக்கும் நிலையிலே நாம் வளர முடியும். இந்த ஆறு கோடியும் நிகர நிலையானது என்று சொல்ல மாட்டேன். ஆறு கோடி வருமானம் வரும்போது, அதை வசூலிக்க பல இலாகாக்களுக்கு செலவிடும் தண்டச் செலவுகளைக் கழித்து விட்டால் மீதம் உள்ளது நாலு கோடிதான்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : மெட்ராஸ் லாண்ட் ரெவின்யூவைப் பற்றிப் பேசவில்லையே, இந்த விவாதம் சென்னை ராச்சியத்தில் இருக்கும் ரயத்துவாரி பற்றியது அல்ல. அதைப் பற்றி அங்கத்தினர் பேசுகிருரோ என்று தெரியவில்லை. அப்படி ரயத்துவாரி முறையை விவாதிக்க பட்ஜட்டிலே காலம் ஒதுக்கப்படுகிறது. அப்பொழுது விரிவாகப் பேசலாம். கன்யாகுமரியை ஒத்த அளவில் எப்படி இருக்கிறது என்று சொன்னுல் பயன் உள்ளதாக இருக்கும்.

**திரு. சா. கணேசன்** : கன்யாகுமரி நிலவரி பற்றிப் பேசும் போது மற்ற வகையிலும் என்ன கஷ்டம் நஷ்டம் என்று எடுத்துச் சொல்ல வேண்டியிருப்பதால் இரண்டையும் இணைத்துத்தான் பேச வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே இந்தமாரி ஸ்டேட் முழுவதற்கும் நாலு கோடி என்றுல் குமரி மாவட்டத்திற்கு மட்டும் எவ்வளவு குறைந்த தொகைவரும் என்பதை நாம் உணர்ந்துக் கொள்ளலாம். இந்தத் திட்டம் வருவதற்குக் காரணமே மாநிலம் பூராவும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதுதான் நோக்கம் என்றுல் மற்றபடி அங்கே இருக்கும் வாய்ப்புக்கள் இங்கே வரவேண்டும் இங்கே உள்ள வாய்ப்புக்கள் அங்கே போகவேண்டும். அப்படி முழுவதும் செய்யப்

படாத நிலைமையில் கிடைத்திருந்த வாய்ப்புக்கள் குறைக்கப்பட்டு பொறுப்புகள் மட்டும் ஏறுகின்ற நிலைக்கு வருவது பொருத்தமாக இராது என்று தான் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்த முறையைத் தவிர்த்துவிட்டால் எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டிய கடமை இருப்பதால் பிறவற்றையும் சேர்த்துச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படு கிறது. கேரளத்தில் மட்டுமல்ல. இலங்கை, இங்கிலாந்து போன்ற நாடுகளிலும் கூட அடிப்படைத் தீர்வை முறை தான் அமலில் இருக்கிறது. அதற்கு மேலே ஒருவருக்கு ஏராளமான நிலபுலன் இருந்து வருமானப் பெருக்கம் இருக்குமானால் அந்த நில வருமான அடிப்படையிலே வருமான வரி விதிப்பதன் மூலமாக இதை நிறைவேற்றிக் கொள்ளலாம். வருமான வரிக்குள்ள விதி முறைகள் வழிமுறைகளை மேற்கொண்டு இதையும் செய்வது செம்மையானதாக இருக்கும். ஆகவே அடிப்படை வரியை இங்கு கொண்டுவர வேண்டுமே அல்லாமல் பிற்போக்கானதாகக் கருதப் படுகிற ரயத்துவாரி வரிமுறையைக் கொண்டுவரக் கூடாது. ரயத்துவாரி உடைமைமுறை காக்கப்பட வேண்டும், ரயத்துவாரி வரி முறை அகற்றப்பட வேண்டும் என்பதைத் தான் நான் அழுத்தமாகச் சொல்லிக்கொள்ள ஆசை உள்ளவனாக இருக்கிறேன்.

இந்தக் காரணங்களையெல்லாம் வைத்து பார்க்கிறபோது பரிவு என்கிற ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. எல்லா இடங் களிலும் சட்டம் நீதி நியாயம் என்பன மட்டும் ஒன்றை நிறைவு படுத்திவிட மாட்டா. எல்லாவற்றையும் கணித்து அதற்கு மேலே பரிவு கொண்டு செயல்படுகிறபொழுது தான் ஆட்சியின் மீதும் ஆட்சியாளர்கள் மீதும் நல்ல எண்ணம் ஏற்படும் என்பது மட்டும் அல்ல; அத்தகைய முறையினாலே பயனும் இன்பமும் ஏற்படும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள வேண்டியவனாக இருக் கிறேன்.

அங்கிருந்து எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களையெல்லாம் பட்டு, இன உணர்வு காரணமாக, அல்லது மொழி அடிப்படைக் காரண மாக, தமிழ்நாட்டோடு சேர்ந்த அவர்களுக்கு, நம்மோடு வலிய வந்து சேர்ந்து மகிழ எண்ணியிருக்கிற அவர்களுக்கு, முடிந்த அளவு சலுகைகள் கொடுப்பது நியாயம், இல்லையென்றால், மேற் கொண்டு சிரமங்கள் கொடுக்காமலாவது இருப்பது தான் தருமம். அந்தப் பரிவு உணர்ச்சியினாலாவது இந்த மசோதாவைக் கைவிட்டு விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எத்தனையோ துறைகளில் பழைய நிலையில் உள்ள நமது மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும் உள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு மாநிலம் முழுவதிலும் திருத்தப்பட வேண்டிய எல்லாவற்றையும் சேர்த்து, ஒத்த முறையாக அமைப்பதற்கு ஒரே விதியைக் கொண்டுவந்து நிறைவேற்றுவது பயனுடையதாகவும், நன்மை பயப்பதாகவும் இருக்கும். நஷ்டம் ஒன்றும் பிரமாதம் இல்லை.





சில லட்சம் தான். கணக்கு மூலமாகப் பார்க்கின்றபோது, வருமானக் குறைவு ஏற்படும் போல் தோற்றலாம். அவற்றை மறந்து, அவற்றை தள்ளி வைத்து, எல்லாவற்றிற்கும் ஒரே அமைப்பாகக் கொண்டுவந்து அதைப் பரிசிலனை செய்து நடத் தினால்தான் சிறப்பும் பயனும் உடையதாக இருக்கும் என்று கூறி இந்த மசோதாவை அரசாங்கம் மிகப் பரிவோடு வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

திரு. பீ. வீ. சீராமுலு: ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். இந்த மசோதாவைப் பற்றிக் காங்கிரஸ் உறுப்பினர்கள் எது ஒன்றும் பேசாததைப் பற்றி . . .

MR. DEPUTY SPEAKER: There is no point of order.

*THE HON. SRI R. VENKATARAMAN: The Minister speaks not only for his party but for the country as long as he is in office.

கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த விவாதமானது நம்முடைய மசோதா எதைக் குறிக்கிறதோ அதற்கும் அப்பால் இருக்கக்கூடிய பல்வேறு பெரிய பொதுப் பிரச்னைகள் எல்லா வற்றையும் பேசுவதற்கு இடம் அளித்திருக்கிறது. பலர் ஆலோ சனைகள் கூறுகிறபோது, 'ரயத்துவாரி முறையே தவறு' என்று பேசினார்கள். இன்னும் சிலர் பேசுகின்றபோது, 'நில வரியே ஒழித்து விட வேண்டும்' என்று சொன்னார்கள். சட்டசபையில் இவையெல்லாம் சொல்வதற்கு அந்தந்த சந்தர்ப்பங்கள் இருக் கின்றன. நிலவரியை ஒழித்துவிட வேண்டுமென்றால் பட்ஜெட் டிலே சொல்வது வழக்கம். அப்பொழுது கேட்பார்கள். 'நில வரி மூலமாக வரும் ஆறு கோடி ரூபாயில் எந்த இனத்தை எடுத்துவிட வேண்டும் என்று சொல்கிறீர்கள்?' என்று. நிலவரியே வேண்டா மென்று ஒரு புறம் சொல்லிக் கொண்டு, அதே சமயத்தில், வசதி களெல்லாம் இன்னும் இரட்டிப்பாக உயர்த்தப்பட வேண்டும் என்று சொன்னால் அது பொருத்தமற்ற வாதமாகும். அதை யெல்லாம் பட்ஜெட்டிலே விரிவாகப் பேசுவது சிறப்பாக இருக்கும்.

இப்பொழுது நமக்கிருக்கிற பிரச்னை, இந்த மசோதாவினால் கன்யாகுமரி மாவட்டத்தில் இருக்கும் ஏழை மக்கள்,—நான் வற்புறுத்தி மீண்டும் சொல்கிறேன்—ஏழை எளிய மக்கள் பாதிக் கப்படுவார்களா? என்பது. இதுவரையில் பேசிய ஒவ்வொரு கனம் அங்கத்தினரும், "ஏழை மீது வரி போட்டுவிட்டீர்கள், ஏழை மீது வரி உயர்த்திவிட்டீர்கள், ஏழைகள் மீது நீங்கள் தாங்க முடியாத பளுவை ஏற்றிவிட்டீர்கள்" என்றேதான் பேசினார்கள். அது உண்மையா என்று நாம் இப்பொழுது ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

கன்யாகுமரியிலே நில வரிக்கு உட்பட்ட நிலம் 2,70.000 ஏக்கர் ஆகும். அந்த இரண்டு லட்சத்து எழுவது ஆயிரம் ஏக்கர் நிலத் திலே சற்றேறக்குறைய ஒரு லட்சத்து எண்பதாயிரம் ஏக்கர்

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st July 1964

புஞ்சை. இந்த ஒரு லட்சத்து எண்பதாயிரம் எக்கர் நிலத்திற்குச் சென்னை ராஜ்யத்தில் இருக்கும் புஞ்சை ரயத்துவாரி முறைப்படி ஆறணா, பன்னிரண்டணா, பதினான்கணா இந்த விதமான வரிதான் வரும். எஞ்சியிருக்கின்ற எழுபது, எண்பதாயிரம் ஏக்கர்களில் சிலர் திருப்புவாரம் கட்ட வேண்டும். தண்ணீர் தீர்வை கட்ட வேண்டும். அந்தவிதமான நிலங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தீர்களானால், தண்ணீர்த் தீர்வை, வருமான வரி திருப்புவாரம் இவையெல்லாம் கட்டுகின்றவர்களின் மொத்தத் தொகையையும் எடுத்து, ரயத்துவாரி முறையின்படி நாம் இப்பொழுது விதிக்கின்ற வரியையும் எடுத்துப் பார்த்தால் இது குறைவாக இருக்கும். யார் திருப்புவாரம் கட்டவில்லையோ, யாருக்குத் தண்ணீர்த் தீர்வை குறைவாக இருக்கிறதோ—அதாவது குளத்தில் பாசனம் செய்கிறார்களோ—அந்த ஒரு சிறு பகுதிக்குத்தான் அதுவும் அவர்களுடைய நிலம் உயர்ந்த ரக நஞ்சை நிலமாக, முதல் தரமான நிலமாக இருந்தால், அந்தப் பகுதி மக்களுக்குத்தான் இன்றைக்கு ரயத்துவாரி முறையிலே வரி ஏறும். நான் தாழ்மையாக கனம் அங்கத்தினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். யாருக்காக நாம் இப்பொழுது பேசுகின்றோம்? 'ஏழை எளியவர்கள்' என்று சொல்வார்களானால், புஞ்சையிலே இன்றைக்கு விவசாயம் செய்து ஒரு ரூபாய்க்குக் குறைவாகக் கொடுக்கின்றார்களே அவர்கள் எல்லோருக்கும் நாம் பெரிய நிவாரணம் அளிக்கின்றோமே, அவர்களுடைய நன்மைக்காக இதை வரவேற்க வேண்டாமா? அல்லது, இன்றைக்குத் திருப்புவாரம் முதலியவைகள் கட்டி, அதிகமாக தொகை கொடுக்கிறார்களே, அவர்களுக்கு இன்றைக்கு குறைகிறதே, அதை நாம் எடுத்துப் பார்க்க வேண்டாமா? ஒரு சிறு பகுதியினர் முதல் தரமான நிலம் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் அந்த முதல் தரப் பகுதி நிலம் வைத்துக்கொண்டிருக்கின்றவர்கள் திருப்புவாரம் கட்டாமல் இருக்கின்றவர்கள், அந்தப் பகுதியினருக்குத்தான் இந்த ரயத்துவாரி முறையிலே வரி ஏறும் என்று சொன்னால் அந்தச் சிறு பகுதியினருக்காக, மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய எல்லாவிதமான சலுகையும் அளிக்கக் கூடாது, 'வரி ஏறிவிட்டது, வரி ஏறிவிட்டது' என்று சொல்வது நியாயமா என்று நான் கேட்கிறேன். 'வரி ஏறிவிட்டது' என்று சொல்கிற போது இந்தச் சிறு பகுதியினரைத் தான் நினைத்துப் பேசுகிறார்களே தவிர, கன்யாகுமரியிலே இருக்கிற ஏழை எளியவர்களுக்கு ஆபத்து ஏற்படுவதைப்பற்றி அவர்கள் நினைக்கவே இல்லை. என்னைப் பார்த்து, "இது தானா ஜனநாயக சோஷலிசம்?" என்று கேட்கிறார்கள். ஜனநாயக சோஷலிசத்தின் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், ஏழை எளியவர்களுக்கு வரியைக் குறைப்போம், கொடுக்கக்கூடிய வசதி இருக்கிறவர்களுக்கு வரியைக் அதிகரித்துத்தான் போடுவோம். அது தான் ஜனநாயக சோஷலிசம். இன்றைக்கு முதல் தர நிலம் வைத்து, முதல் தர நீர்ப்பாசன வசதி (இர்ரிகேஷன் சோர்ஸ்) பெற்றிருந்து அந்த விதமான வசதி பெற்றிருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு ஏன் இரண்டு ரூபாயக்கு மேல் வரி உயர்த்தக்கூடாது என்று ஜன



[திரு. ஆர். வெங்கட்டராமன்]

நாயக சோஷலிசத் தத்துவத்தின் அடிப்படையில் அவர்களை நான் கேட்கின்றேன். இன்றைக்கும் முதல் தர நிலம் வைத்துக்கொண்டு நீர்ப்பாசன வசதி பெற்றுக்கொண்டிருக்கிறார்களே ஒரு சிறு குழுவினர், அவர்களை மனத்திலே வைத்துக்கொண்டு, 'கன்யாகுமரியில் இருக்கும் அத்தனை பேர்களுக்கும் வந்துவிட்டது ஆபத்து' என்றெல்லாம் பேசுவது முறையாகாது; அது அங்குள்ள விவரங்களுக்கு உண்மைக்கு மாறானது என்று நான் அவர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: இந்த வரித் திட்டத்தினால் பாதிக்கப் படுபவர்கள் மிக மிகக் குறைவாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக அந்தப் பகுதியில் ½ ஏக்கரா, ஒரு ஏக்கரா, 5 ஏக்கரா என்பதாக மிகக் குறைவாக நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர் என்கிற விவரத்தை 12-00 noon
இந்தச் சபைக்கு அளிப்பது மிகவும் அனுகூலமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: மொத்தமாகக் கணக்குகள் எல்லாம் சேகரிக்கப்பட்ட பின்பு தான் எவ்வளவு என்று சொல்ல முடியும். சாதாரணமாகப் பார்த்த எஸ்டிமேட்டில் 20 ஆயிரம் ஏக்கராக்களுக்கு மேல் வராது என்று நினைக்கிறேன். மொத்தம் இரண்டு லட்சம் ஏக்கரா உள்ள இடத்தில் 20 ஆயிரம் ஏக்கரா என்பது மிகவும் குறைவு.

இன்னும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். முதல் தரமான நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்கள், நல்ல இர்ரிகேஷன் வசதி பெற்றிருக்கக்கூடியவர்கள் எங்கள் கொள்கைப்படி 2 ரூபாய்க்கு மேல் வரி கொடுக்கத்தான் வேண்டும். இரண்டாம் பட்சம் குறைந்த தரமான நிலத்தை வைத்துக் கொண்டிருக்கக் கூடியவர்கள், பாசன வசதி இல்லாத நிலத்தை வைத்துக்கொண்டிருக்கக் கூடியவர்களுக்கு 2 ரூபாய்க்கும் குறைவாகக் கூட வரி விதிக்கத் தான் வேண்டும். அதுதான் சோஷலிசம். ஆகவேதான் இதை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. புலவர் கா. கோவிந்தன் அவர்கள் 6 அணாவுக்கு மேல் வரி விதிக்கக் கூடாது என்று சொல்லவில்லை. இரண்டு ரூபாய்க்குமேல் வரிவிதிப்புக் கூடாது என்ற உறுதியை அளிப்பீர்களா என்று கேட்டார்கள். தரமற்ற நிலத்தை வைத்துக்கொண்டு, நீர்ப்பாசன வசதியே இல்லாத நிலத்தை வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு 6 அணாவுக்கு மேல் வரி விதிக்கலாம். இதனால் ஏராளமான பேர்கள் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால் முதல் தரமான நிலத்தை வைத்துக்கொண்டு, நல்ல நீர்ப்பாசன வசதியும் உள்ள தான் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கக்கூடிய ஒரு இவர் 2 ரூபாய்க்கு மேல் வரி கொடுக்கும்படியாக இருந்தால் அவ்வாறு கொடுக்கும்படி செய்யக் கூடாது என்பது தான். திராவிட முன்னேற்றக் கழகத்தின் சோஷலிசமா என்று கேட்க [illegible]

விரும்புகிறேன். வரி கொடுக்கும் சக்தி உள்ளவர்களுக்கு வரி விதிப்பதில் தவறு இல்லை. வரி கொடுக்கக்கூடியவர்களுக்கு, அவர்களுடைய வருமானத்துக்கு ஏற்றபடி சிறிது வரியைக் கூடுதல் செய்வது தவறு, அவ்வாறு செய்யக்கூடாது என்பது தான் அவர்களுடைய கட்சியின் சோஷலிசமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பேசிய நேரத்தில் தன் கட்சியின் கொள்கையை விளக்கினார்கள். அவர்களுடைய கவனத்திற்கு பொறுக்குக் கமிட்டியின் கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஒரு மெமாராண்டம் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதில் அவர் கூறியுள்ள விஷயத்தைப் படிக்க விரும்புகிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister is not yielding.

புலவர் கா. கோவிந்தன்: ஆறு அணா கொடுக்கக்கூடியவர்களுக்கு வரி உயர்த்துவதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. இரண்டு ரூபாய்க்கு மேல் வரி கொடுக்கக்கூடாது என்று சொல்கிறார்களே, இவர்கள் யாருக்காக வாதாடுகிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். இந்த கொள்கையை நாங்கள் மட்டும் சொல்லவில்லை. எல்லோரும் சொல்கிறார்கள். இதில் எந்த அளவுக்கு நியாயம் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும்.

THE HON. SRI R. VENKATARAMAN: The hon. Member wanted to make some personal explanation, that is why I yielded. But he is explaining something. I am not yielding.

SRI A. KUNJAN NADAR: The Hon. Minister has said that regarding the dry lands they are to be benefited by the Ryotwari Settlement. Will the Hon. the Minister be prepared to introduce a clause in the Act itself guaranteeing that dry land holders need not pay more than 2 rupees, i.e., the present basic tax.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அந்த மாதிரி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. காரணம் என்னவென்று சொன்னால் ரயத்துவாரி செட்டில்மெண்ட் என்று செய்கிறபோது என்னென்ன விதிப்படி செய்ய வேண்டும் என்று வகுத்து பல ஆண்டு காலமாக அந்தக் கொள்கை நம் நாட்டில் இருந்து வந்திருக்கிறது. அந்த முறையை இந்தப் பகுதிக்கும் உபயோகப்படுத்தினால் இந்த விதமான நிலைமைதான் ஏற்படும். அவர்களுடைய பயம். கவலை எல்லாம் 40 வருஷங்களுக்கு முன்பு திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் ஒரு ரயத்துவாரி முறையிருந்ததை அந்த ராஜ்ய பழைய ரயத்துவாரி முறை இப்போது வந்து விடுமோ என்பதுதான். நிச்சயமாக அது வராது. தமிழ் நாட்டில் இணைந்த காரணமாக தமிழ் நாட்டு ரயத்வாரி முறையேதான் அவர்களுக்கு வரப் போகிறது. இந்த முறையின் காரணத்தினால் அவர்களுக்கு எந்த





விதமான பாதகமும் ஏற்படாது, என்று சொல்ல விரும்புகிறேன். இது பற்றி ஆய்வுக் குழுவில் விளக்கமாகச் சொன்னேன். மிகுந்த பயத்தோடும், அச்சத்தோடும் வந்தவர்களுக்கு இந்த விஷயத்தை எடுத்து விளக்கினேன். இது உங்கள் எல்லோருக்கும் நன்றாகத் தெரியும்.

அடுத்து நம்முடைய நாட்டில் பலவிதமான நில உடைமை முறைகள் இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் பரிசீலித்து, ஒரு விதமான முறையே இந்த மாநிலம் முழுவதும் ஏற்படுவதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறோம். நீண்டகாலத்திற்கு முன்பே ஜமீன் முறையை ஒழித்தோம். அப்புறம் இனாம் முறையை ஒழிக்க வேண்டுமென்று சட்டம் செய்திருக்கிறோம். இன்னும் பல்வேறு இடத்தரகர் நிலைமை இருந்து கொண்டிருந்ததை ஒழித்து இருக்கிறோம். இனி இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் கன்னியாகுமரி பகுதியில் பண்டார வகை கிடையாது. திருப்புவாரம் கிடையாது. ஜமீன்கரம் கொடுக்க வேண்டாம். தமிழ் நாடு பூராவும் ரயத்வாரி முறையின் கீழ் வரும் என்கிற உன்னதமான கொள்கையின் அடிப்படையில்தான் இது கொண்டுவரப்படுகிறது.

அந்தப் பகுதிக்கு ரயத்துவாரி முறை கொண்டு வருவது சட்டப்படி சரியாகுமா என்று கேட்டார்கள். நம்முடைய அரசியல் அமைப்பு ஆர்டிகள் 13-ஐ அவர்கள் படிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:

"All laws in force in territory of India immediately before the commencement of this Constitution, in so far as they are inconsistent with the provisions of this Part, shall, to the extent of such inconsistency, be void.

In this Article, unless the context otherwise requires—

'law' includes any Ordinance, order, bye-law, rule, regulation, notification, custom or usage having in the territory of India the force of law;".

இதன்படி இந்த முறைகள் எல்லாம் அங்கே அமலில் இருக்கிறது. ஆகவே சட்டத்தில் எந்தவிதமான பிரச்னையும் கிடையாது.

அடுத்தாற்போல், இந்த முறையைக் கொண்டு வருவதன் மூலமாக விவசாயம் பாதிக்கப்படுமா என்பது பிரச்சினை. விவசாயம் பாதிக்கப்படும், உணவு உற்பத்தி பாதிக்கப்படும் என்று சிலர் சொன்னார்கள். அது எப்படி வரும் என்பது தான் தெரியவில்லை. வரிவிதிப்பை எடுத்துவிடலாம். லாண்டு டாக்ஸை ரத்து செய்து விடலாம். "சுதந்திராக் கட்சியைப் பாருங்கள். நிலவரியை எடுத்து விட வேண்டும் என்று சொல்கிறார்கள்" எனச் சொன்னார்கள். வரியை எடுப்பதில் கஷ்டம் இல்லை. ஆனால் வரிகளை எடுத்துவிட்டு வசதிகளைச் செய்து கொடுப்பது என்பது தான

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [21st July 1964

கஷ்டம். வெள்ளைக்காரன் காலத்தில் இவ்வளவு வரியா போட்டான்? ஆனால் இத்தனை வசதிகளைக் கொடுத்தார்களா என்று பார்க்க வேண்டும். இத்தனை ஆஸ்பத்திரிகள் உண்டா? இத்தனை பள்ளிக்கூடங்கள் உண்டா? இத்தனை தொழிற்சாலைகள் உண்டா? இத்தனை ரோடுகள் உண்டா? இத்தனை பேர்களுக்கு வேலை உண்டா? இதையெல்லாம் நாம் பார்க்க வேண்டும். வரியையே எடுத்துவிட வேண்டுமென்று சொல்வது, மிகச் சுலபம். ஒரு பெண் அப்படிச் செய்ய முடியாது. அவர்கள் வரியே வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்றால் திட்டமும் வேண்டாம் என்று சொல்கிறார்கள். திட்டம் வேண்டாம் என்கிற கொள்கையை எப்போது நம்மால் ஒத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறதோ அப்போது வரியே வேண்டாம் என்று சொல்ல முடியாது.

முடிவாக நான் நிச்சயமாகச் சொல்வேன், இந்தச் சட்டத்தினால் கன்னியாகுமரி பகுதிக்கு நல்ல நிலைமை ஏற்படும். ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு ஏற்படும். மூன்றில் இரண்டு பங்கு நிலக்காரர்களுக்கு வரி குறையும். அதன் மூலமாக இந்தக் கன்னியாகுமரி பகுதியில் உள்ளவர்களுக்கு சீரும், சிறப்பும் ஏற்படும் என்று சொல்லி இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் திட்டமே வேண்டாம் என்று நாங்கள் சொல்வதாகச் சொன்னார்கள். வரி வேண்டாம் என்கிறார்கள். வசதியைக் கொடுப்பது என்பது அவர்கள் திட்டத்தில் இல்லை என்று சொன்னார்கள். அதைப்பற்றிச் சொல்லப் போனால் நீளப் போகும். நான் நீள இழுக்க விரும்பவில்லை. எங்களுடைய கொள்கையைப் பற்றி நாங்கள் விடுத்துள்ள மெமராண்டத்தில் அவர்கள் பார்க்கலாம். அதில் நாங்கள் வெளியிட்டுள்ள 21 வகைத் திட்டங்களைப் பார்க்கலாம். கனம் அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்திருப்பார்கள். அப்படி இருந்தும் ஏன் இப்படிச் சொன்னார்கள் என்று புரியவில்லை. திட்டமே வேண்டாம் என்று நாங்கள் யாரும் எங்குமே சொன்னது இல்லை. திட்டங்களுக்கு என்று கடன் வாங்காதீர்கள். வாங்குகிற கடனை நம்முடைய கொடுக்கும் சக்திக்கு ஏற்றபடி வாங்குங்கள். இப்படித்தான் நாங்கள் சொல்லி வருகிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** கனம் அமைச்சர் அவர்கள் இதனால் ஏழை எளியவர்கள் பாதிக்கப்பட மாட்டார்கள்; வசதியாக இருக்கிறவர்களுக்குத்தான் வரி என்று சொன்னார்கள், ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் அரை ஏக்கர், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் என்று ஐந்து ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அந்த வகையில் ஐந்து ஏக்கருக்கும் குறைவாக உள்ளவர்கள் எண்ணிக்கை எவ்வளவு? ரெவின்யூ செகரடரி அவர்கள் இங்கே இருப்பதால் அந்த விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிந்து அறிவிப்பார்களா?



21st July 1964]

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister is not yielding. The hon. Member cannot press for the information.

SRI K. A. MATHIALAGAN: It is very important point, Sir.

MR. DEPUTY SPEAKER: The hon. Minister is not yielding.

**திருமதி டி. என். அனந்தநாயகி:** சார், இரண்டு ஏக்கர் வரை வரி விதி விலக்குக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டைப் பார்த்தால் தெரிகிறது. அந்த விலக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது தமிழ் நாடு பூராவும் கொடுக்க அரசாங்கம் முன் வருமா? (ஆரவாரம்.)

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் நில வருமானமாக எவ்வளவு வருகிறது? புது மாற்றங்களுக்குப் பிறகு எவ்வளவு வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இதைப் பற்றி செலக்ட் கமிட்டி ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் வரி லாபம் எதுவும் இல்லை.

SRI M. WILLIAM: In the Bill for abolition of Zenmikaram, it is stated that the Act of 1071 is repealed, but no mention has been made about 1108 Act.

THE HON. SRI R. VENKATARAMAN: I will come to it when I deal with that particular Bill. I have provided for it in that Bill.

SRI M. WILLIAM: I also wish to know whether fruit-bearing trees on the dry lands are liable to be taxed.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** ரயத்துவாரி முறை அசெஸ்மெண்ட்படி, அந்த விதிகளின்படி, புஞ்சையாக டிரீட் பண்ணவேண்டும். புஞ்சைக்கு என்ன வரி உண்டோ அதுதான் போடப்படும்.

**திரு. கே. ஏ. மதியழகன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏழை விவசாய மக்கள் எவ்வளவு பேர் பாதிக்கப்படுவார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தர மறுக்கிறார்கள். அந்த விவரத்தை இந்த சபை தெரிந்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. இது மிக முக்கியமான ஒன்று.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister is not yielding.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and declared carried.

(Mr. Speaker in the Chair.)

A poll was demanded and the House divided thus :—

*Ayes*—64.

Sri K. Parthasarathy
„ N. S. M. Chinniah Gounder
„ S. Chinnayyah
„ C. M. Ambikapathy
„ L. Anandan
„ M. Chelliah
Hon. Sri P. Kakkan
Hon. Sri V. Ramaiah
Hon. Srimathi Jothi Vencatachellum
Sri R. Krishnaswamy Naidu
„ A. S. Dhakshinamoorthy Gounder
„ M. Dhandayuthapani Pillai
„ T. P. Elumalai
„ K. Gopala Gounder
„ K. S. G. Haja Sheriff
„ P. Jayaraj
„ Kadambavana Sundaram
„ A. K. Kaliappa Gounder
„ T. Karcha Gowder
„ C. Kothandarama Bhagavathar
„ R. Krishnaswami Gopalar
„ M. Kulandaiswamy Gounder
„ M. Maruthanayagam Pillai
„ V. A. Muthiah
„ M. P. Muthukaruppannaswamy Goundar.
„ T. M. Nallaswamy
„ S. Nanjunda Raw
Hon. Sri Nallasenapathi Sarkarai Manradier.
Hon. Sri G. Bhuvarahan
Hon. Sri S. M. A. Majeed
Srimathi T. N. Anandanayaki
Srimathi A. Suares
„ P. K. R. Lakshmikantham
„ A. S. Ponnammal
„ Krishnaveni
„ Lakshminarasamma
„ Parvathi Arjunan
„ M. K. Ranganayaki
Sri K. Narayanaswami Pillai
„ N. Duraipandi
„ K. P. Palanisamy
„ G. D. Perumal Raju
„ R. Ponnappa Nadar.
„ K. Ponniah
„ Ponnuswamy
„ R. Rajagopalswamy Naicker
„ A. Ramachandra Rayer
„ N. Ramachandra Reddy
„ A. L. Ramakrishna Naidu
„ N. S. Ramalingam
„ S. Ramalingam
„ R. Rangaswamy
„ S. Sadasivam
Dr. B. Natarajan
Sri A. P. C. Veerabahu
„ S. Sangili
„ V. Sankaran
„ A. Senapathi Gownder
„ N. Shanmugasundaram
„ N. Soundarapandian
„ C. Srinivasan
„ K. B. Palani
„ M. William

*Noes*—41.

Sri A. Kunjan Nadar
„ V. R. Nedunchezhiyan
„ K. A. Mathialagan
„ Saw Ganesan
„ A. P. Dharmalingam
„ Rama Arangannal
„ A. Raghava Reddi
„ K. Mookiah Thevar
„ V. S. S. Mani
„ K. Cheemaichamy
„ M. Shanmugam
„ N. Rajangam
„ V. Arunachalam
„ N. Chinnamunisamy Chetty
„ S. Madhavan
„ A. Thiagarajan
„ P. Murugaiyan
„ A. Duraiyarasan
„ V. R. Periannan
„ P. V. Sriramulu
„ M. Kamalanathan
Sri C. G. Viswanathan
„ S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. V. Velappan
„ C. Manickam
„ T. Chinnasamy
„ M. R. Krishnamurthi
„ Munu Adhi
„ S. Murugaiyan
„ P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri K. Thirupathy
„ C. K. Chinnaraji
„ M. P. Vadivelu
„ S. Arumugham
„ A. G. Balakrishnan
„ R. Narayanan
„ S. Ramaswamy
„ V. Krishnamurthy
„ R. Sampangi

*Ayes*—64. *Noes*—41.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 9 were put and carried.



*Clause* 10.

MR. SPEAKER : The question is—

" That clause 10 do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

" In sub-clause (1) of clause 10 *for* the expression ' 1st July 1963 ', *substitute* the expression ' 1st July 1964 '."

Sir, the object of this amendment is not to make the operation of this settlement retrospective.

The amendment was put and carried.

Clause 10, as amended, was put and carried.

*Clause* 11.

MR. SPEAKER : The question is—

" That clause 11 do stand part of the Bill."

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

" In sub-clause (1) of clause 11 *for* the expression ' as due for the fasli year commencing on the 1st July 1963 or for any subsequent fasli year ', *substitute* expression ' as due for the fasli year commencing on the 1st July 1964 '."

The amendment was put and carried.

Clause 11, as amended, was put and carried.

Clauses 12 to 20 were put and carried.

*Clause* 21.

MR. SPEAKER : The question is—

" That clause 21 do stand part of the Bill. "

SRI A. KUNJAN NADAR : Sir, I move—

" *For* the existing clause 21, *substitute* the following :—

' An appeal shall lie to the High Court on the decision of the Board of Revenue within two months from the date of decision.

SRI RAMA ARANGANNAL : Sir, I second the amendment.

SRI P. V. SRIRAMULU : Sir, I move—

" *For* existing clause 21, *substitute* the following :—

" 21. *Bar of suits in Civil Courts.*—(1) No suit shall lie in any Civil Court to set aside or modify the rates of assessment imposed at, a ryotwari settlement.

(2) Except as otherwise provided in this Act, the decision of any authority or officer under this Act shall be final and no Civil Court shall have jurisdiction to decide or deal with any question which by or under this Act is required to be decided or dealt with by the authorities or officers under this Act."

SRI M. KAMALANATHAN : Sir, I second the amendment.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

SRI A. KUNJAN NADAR : Sir, in this clause provision is made for the remedy before the law Courts. The Judiciary is the only hope and remedy for a citizen against the excess or irregularity committed by the executive. So a final appeal should lie to the High Court for the party affected by an order of the executive and there must be such a remedy open to him. Nobody should think that his order is final. After all, there is no harm in having such a remedy, as that remedy may be exercised only by a very few persons in extreme cases. So, I request that my amendment may be accepted.

* திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த 21-வது பிரிவில் ஒரு திருத்தத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம். இந்த செட்டில்மெண்ட் ப்ரொஸீடிங்ஸ்-லில் எந்தெந்த நிலத்திற்கு என்னென்ன வரி என்று தீர்மானிப்பது ஒன்று. இன்னொன்று எந்தெந்த நிலம் எந்தெந்த தரத்தைச் சார்ந்தது என்று தீர்மானிப்பது ஒன்று. எந்தெந்த தரத்திற்கு எந்தெந்த வரியை நிர்ணயிப்பது என்பதைப்பற்றி அரசாங்கம் நிர்ணயிக்கிறது. அதே போன்று எந்தெந்த நிலம் எந்தெந்த தரத்தை சேர்ந்தது என்று ரெவின்யூ அதிகாரிகள் தீர்மானிக்கிறார்கள். அரசாங்கம் தீர்மானிக்கின்ற ரேட்டைப்பற்றி அப்பீல் செய்வதற்குள்ள உரிமையை கோர்ட்டுக்குப் போகின்ற உரிமையை அரசாங்கம் மறுத்திருக்கிறது. இதைப் பற்றி நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் ஒரு தனிப்பட்டவனுடைய நிலம் இன்னின்ன தரத்தை சேர்ந்தது என்று நிர்ணயிக்கும்போது அதை மறுப்பதற்கான உரிமை, அதை மறுத்து சிவில் கோர்ட்டுக்குப் போவதற்கான உரிமையை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டும் என்பதை அமைச்சர் அவர்களே முன்பு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால்தான் இப்போது இருப்பது.

'No suit shall lie in any Civil Court to set aside or modify any Ryotwari assessment . . . . .'

என்று பொதுவாக இருக்கிறது. தரத்தைப்பற்றியோ, இன்னின்ன நிலத்தில் இன்னின்ன தரம் விதித்தது சரியல்ல என்று சொல்வதற்கு, கோர்ட்டில் போய் அப்பீல் செய்வதற்கு உரிமை கொடுக்கப்படவில்லை. பொதுவாக ரயத்வாரி அஸெஸ்மெண்ட் என்று சொல்லியிருப்பதால், ஒரு தனிப்பட்ட அதிகாரி நிர்ணயிக்கக்கூடிய தரம்தான் விவசாயிக்கு முடிவாகக்கூடிய நிலைமைதான் இப்போது இருந்துகொண்டிருக்கிறது. செட்டில்மெண்ட் அதிகாரி இன்னின்ன நிலத்திற்கு, இன்னின்ன தரம் என்று நிர்ணயித்து, இன்னின்ன தரத்திற்கு இன்னின்ன வரி என்று சர்க்கார் நிர்ண



யித்து சர்க்கார் நோட்டிஃபிக்கேஷன் செய்து விடுவார்கள். இவ்விதம் செய்யக்கூடிய முடிவு தனிப்பட்ட ஒருவர் செய்யக்கூடிய முடிவாகத்தான் இருக்கமுடியும், அதைத் தட்டிக் கேட்கவேண்டுமென்றால், போர்ட் ஆஃப் ரெவின்யூ-வுக்கோ அல்லது செட்டில்மெண்ட் டைரக்டருக்கோதான் போகவேண்டும். சிவில் கோர்ட்டுக்குப் போகக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நான் கேட்பது, ரேட் ஆஃப் அஸெஸ்மெண்ட்-டைப்பற்றி வேண்டுமென்றால் தட்டிக்கேட்பதற்கு சிவில் கோர்ட்டுக்குப் போகக்கூடாது என்று போட்டுவிட்டு, என்னுடைய நிலம் இன்னின்ன தரத்தைச் சேர்ந்தது அல்ல என்று சிவில் கோர்ட்டுக்குச் சென்று கேட்பதற்கு உரிமையை கொடுக்க வேண்டும் என்பது [3-20 p.m.] தான், அதற்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, ரெவின்யூ சம்பந்தமான எல்லாப் பிரச்னைகளுக்கும் நம்முடைய ராஜ்யத்தில் இருக்கின்ற விதிகள்படி போர்ட் ஆஃப் ரெவின்யூதான் அப்பலேட் அத்தாரிட்டி. அதற்கு மேல் ஹைக் கோர்ட்டில் ரிட்-டின் மேல் தான் போக முடியும். அதே போல்தான் இந்த மசோதாவிலும் 14-வது கிளாஸைப் பார்த்தால் நன்கு தெரியும். அதாவது ஏதாவது டிஸ்ப்யூட் ஏற்படுமானால், அதாவது ஒருவருடைய நிலம் இந்தத் தரத்தை சேர்ந்தது என்று செட்டில்மெண்ட் ஆபீஸர் முடிவு செய்வார்கள். அதற்கு மேல் அப்பீல் செய்யவேண்டுமானால் போர்ட் ஆஃப் ரெவின்யூ-வுக்கு செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் அப்பீல் செய்து கொள்வதற்கு ஹைக் கோர்ட்டுக்குப் போக முடியாது இப்போதுள்ள விதிகளின்படி. ரிட் மூலமாகத்தான் ஹைக் கோர்ட்டுக்குப் போக முடியும். இதுதான் இப்போது ரெவின்யூ சம்பந்தமாக இருக்கக்கூடிய விதிமுறை. இதுவேதான் கனம் மாதவன் அவர்கள் சொன்ன கருத்துக்களுக்கும் பொருந்தும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

The amendments were put and lost.

Clause 21 was put and carried.

Clauses 22 to 28 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"*That the Madras (Transferred Territory) Ryotwari Settlement Bill, 1964 (L.A. Bill No. 13 of 1964), as amended be passed.*"

The motion was put and carried and the Bill as amended was passed.

(5) THE KANYAKUMARI SREEPANDARAVAKA LANDS (ABOLITION AND CONVERSION INTO RYOTWARI) BILL, 1964 (L. A. BILL NO. 14 OF 1964), AS AMENDED BY THE SELECT COMMITTEE

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

"*That the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill*, 1964 (*L.A. Bill No.* 14 *of* 1964), *as amended by the Select Committee, be taken into consideration.*"

In moving the motion, I wish to explain briefly what Sreepandaravaka lands are and the important changes made in the Bill by the Select Committee.

Sreepandaravaka lands are lands belonging to Sree Padmanabhaswami Temple at Trivandrum. They are found only in Kanyakumari district and not in Shencottah taluk. Their extent in Kanyakumari district is 4,163.67 acres under wet and 12,483.43 acres under dry. They are exempt from basic tax, by a notification issued by the former Travancore-Cochin Government under Section 7 of the Travancore-Cochin Land Tax Act, 1955 (Travancore-Cochin Act XV of 1955). But they are assessed to a favourable assessment called Rajabhogam. The total Rajabhogam payable on lands in Kanyakumari district is Rs. 2,337.76 nP. In addition to the Rajabhogam, the tenants on the lands pay rent, both in kind and in cash, to Sri Padmanabhaswami Temple. The average annual collection of rent by the temple during the ten years from 1946 to 1955-56 was Rs. 67,910. The tenants have been, for a long time, agitating for relief from their liability to pay rent to the temple. The Government have accordingly brought forward this Bill, under which the tenants will be relieved of this liability and the lands will be converted into ryotwari. Suitable rates of assessment for the lands will be fixed under L.A. Bill 13 of 1964.

It is estimated that, after ryotwari settlement is effected in respect of Sreepandaravaka lands, the net ryotwari assessment from the lands, after deducting Rajabhogam and collection charges, will be Rs. 64,589. The temple is now maintaining some Devaswoms in Kanyakumari district. These Devaswoms will hereafter be under the control of the Kanyakumari Devaswom Board. A sum of Rs. 18,000 which is the estimated cost of maintenance of these Devaswoms, will be deducted from the net ryotwari assessment of Rs. 64,589 and the balance Rs. 46,589 will be paid by the Government to Sree Padmanabhaswami temple, every year, as tasdik allowance.

Sree Padmanabhaswami temple is a major thiruppu-holder and under the L.A. Bill 15 of 1964, it is estimated that it will be entitled to a tasdik allowance of Rs. 85,411 per annum in lieu of its income from thiruppuvaram. The temple has agreed to accept a sum of Rs. 1.50 lakhs per annum as tasdik allowance, in lieu of its rental income from Sreepandaravaka lands and its income from thiruppuvaram. The Select Committee considered that having regard to the understanding, the temple should be protected against



any deficit, should the tasdik allowance to the temple in lieu of thiruppuvaram and compensation for Sreepandaravaka land as finally determined fall short of Rs. 1·50 lakhs.

In this State where Government have to pay compensation to an institution, they have always been paying it in the shape of annual tasdik allowance instead of in a simple lump sum payment. This ensures the efficient and continued maintenance of the institution.

Clause 12 provides that until ryotwari settlement is effected under L.A. Bill 13 of 1964, every person who becomes entitled to ryotwari patta in respect of a Sreepandaravaka land will be liable to pay land revenue to the Government at the rate fixed by the prescribed authority with due regard to the rate of assessment for the nearest ryotwari land of similar description and with similar advantages. The Committee has modified this clause to the effect that the nearest ryotwari land of similar description and with similar advantages for the purpose of this clause will be such a land in the neighbouring district of Tirunelveli. The object is that it will not go beyond the assessment in Tirunelveli district.

Clause 20 provides that, in cases where the rent due from Sreepandaravaka lands is in arrears for more than three financial years on the appointed day, they shall be deemed to be discharged, if the arrears due for any three financial years are paid, within two years of the appointed day, in not more than two instalments per year. The Committee has modified this clause so as to provide that in such cases, if an amount equal to the arrears due for the three financial years immediately preceding the appointed day has been paid before such date, or is paid within three years of such date, the entire arrears will be deemed to be discharged and that in the latter case, the arrears may be paid in six half-yearly instalments.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER : Motion moved—

"That the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill 1964 (L.A. Bill No. 14 of 1964), as amended by the Select Committee, be taken into consideration."

SRI A. KUNJAN NADAR : Sir, I welcome this Bill. My only objection is the grace shown by this Government is taken away by the previous ryotwari business. As it was contemplated by the Kerala Government, I would suggest that the right of Sree Padmanabhaswami temple shall be terminated by the payment of lump-sum amount as compensation. Sree Padmanabhaswami temple is an institution which does not need and is not to be run by the tasdik allowance given by Madras Government. This is a long-standing institution and it is a rich institution, which can go on for ever even without this tasdik allowance. It is richer than our Government even. It has lot of wealth and money; to say that it is the policy of the Government to pay tasdik allowance to institutions may not be proper for institutions run in other States.

It may be justification for institutions run in our State. The temple authorities themselves would be agreeable to such a course. I pray that that may be done.

* **திரு. வை. சங்கரன்** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டெம்பிள் இனும் டென்யூரையெல்லாம் எடுக்கும்போது நம் ராஜ்யத்திலே உள்ளதை எடுக்கும்போதுகூட இதே மாதிரி. பேஸிசில் தான் ஆன்யுவல் டாஸ்டிக் அலவன்ஸ் கொடுப்பதாகத் தீர்மானித்தோம். அப்போது கனம் அங்கத்தினர் குஞ்சன் நாடாரோ, மற்றவர்களோ இந்த மாதிரி செய்ததைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நாம் எப்போதும் ஒரே நியாயத்தைத்தான் கொள்ள வேண்டும். நம் ராஜ்யத்தில் இருக்கிற டெம்பிளுக்கு ஒரு நியாயம், வேறு ராஜ்யத்தில் இருக்கிற டெம்பிளுக்கு வேறு நியாயம் என்று இருக்கக்கூடாது. எல்லோருக்கும் ஒரே நியாயம்தான் வழங்கவேண்டும். அடிப்படை ஒரே மாதிரியாக இருக்க வேண்டும். அந்தக் கோயிலுக்கு அதிகப் பணம் இருக்கிறது, இல்லை என்பது கன்ஸிடரேஷன் இல்லை. ஒரே மாதிரி பேஸில் இருக்க வேண்டும் என்று இந்த முறையில் நமது அரசாங்கம் செய்திருக்கிறது. அதில் எந்தவிதத் தவறும் இல்லை, அது சரிதான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அங்கத்தினர் குஞ்சன் நாடார் அவர்கள் சொன்னதிலே, திருவாங்கூரில் அவர்கள் முதலில் லம்ப்சம்மாக காம்பென்சேஷன் கொடுத்துவிடவேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் தீர்மானம் செய்தது ரயத்துக்களிடத்திலிருந்து வாங்கி லம்ப்சம்மாகக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம் செய்தார்கள். இன்றைக்கு சர்க்கார் கொண்டு வந்திருக்கிற சட்டத்திலே ரயத்துக்கள் கொடுக்க வேண்டியதில்லை. ரயத்துவாரி செட்டில்மெண்ட்டில் என்ன டாக்ஸ் வருமோ அதைக் கொடுக்கவேண்டும். சர்க்கார் compensation தொகையைக் கொடுக்கவேண்டும். கனம் அங்கத்தினர் போன பில்லிலே சொன்னார்கள். அதற்குப் பொருத்தம் இந்த இடத்தில் தான் என்று, அப்போது பதில் சொல்லாமல் இருந்தேன். ஏதோ திருவாங்கூரில் அவர்கள் கொண்டு வந்த திட்டம் மேலானது என்று சொன்னால் அது தவறாகும். ஆனால் அந்த திட்டத்தில் ரயத்துக்களிடமிருந்து compensation வாங்கிக் கொடுத்து விட வேண்டும் என்று கண்டிருக்கிறது. ஆனால் நமது திட்டத்தில் ரயத்துக்களிடமிருந்து என்ன லாண்ட் ரெவின்யூ வசூல் செய்ய வேண்டுமோ அதைத்தான் வசூல் பண்ணப் போகிறோம். சர்க்கார் இந்தப் பணத்தை பண்டாரவகாவுக்கு, அதாவது மக்கள் செலுத்த வேண்டியதை சர்க்கார் செலுத்துகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த தர்ம ஸ்தாபனங்களுக்கு தஸ்திக் அலவன்ஸ் கொடுப்பது தான் நியாயமான முறை, ஒழுங்கான முறையாகயிருக்கும்.



திரு. சங்கரம் அவர்கள் சொன்னதுபோல் அதைத்தான் நம் ராஜீயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த மசோதாவைக் ராஜீயத்தில் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். இந்த மசோதான்வக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964 (L.A. Bill No. 14 of 1964), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 7 were put and carried.

### *Clause* 8.

**திரு. பி. வி. சீராமுலு** : கனம் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரில் உள்ள கீழ்க்கண்ட திருத்தத்தை நான் முன் மொழிகிறேன்—

"*Omit* sub-clause (2) of Clause 8."

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* **திரு. செ. மாதவன்** : கனம் தலைவர் அவர்களே, இந்த எட்டாவது பிரிவில் ஒரு பொதுவான பிரச்னையைக் கூறுகிறேன். இந்த மசோதாவில் 'லாண்டு ஹோல்டர் ரயத்' என்ற நிலை இல்லாமல் டெனண்டுக்கு பட்டா கொடுத்துவிடுகிறார்கள். அப்படி இருந்த போதிலும், பட்டா கொடுக்காத நிலங்கள் சர்க்காருக்குச் சேரும் என்று பிரிவு வந்திருக்கிறது. ஏற்கெனவே 1948-ம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் ஏற்பட்ட ஒரு நிலையை நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன். அப்பொழுதே பட்டா கேட்க வேண்டும். கிடைக்காமல் போய் அல்லது பட்டா கேட்காமல் விட்டிருக்கக்கூடிய நிலங்களை 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்று எடுத்தார்கள், புறம்போக்கு என்று எடுத்தார்கள். அதனுடைய விளைவு என்ன ஆகிவிட்டது? பட்டா நிலங்களைக் கூட புறம்போக்கு அல்லது 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்ற நிலையை உண்டாக்கி, நீண்ட நாட்களுக்குப் பின்னால் அப்பீல் போட முடியாமல், பட்டா கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இந்தப் பிரிவிலே அப்படி பட்டா கொடுக்கப்படாத நிலங்களுக்கு எப்படி உரிமை வழங்கப்படலாம் என்பதைச் சட்டத்தில் போடாமல், தனியாக விதிகள் மூலம் உரிமை வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம்முடைய உயர் நீதி மன்றத்தில் இந்த நிலைமை பரிசீலிக்கப்பட்டு இப்பொழுது சீப் ஜஸ்டிஸ் ஆக இருக்கக்

கூடிய ஒரு டிவிஷன் பெஞ்சில் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின்படி தனிப்பட்ட இரண்டு ரயத்துக்கள் ஒரு நிலம் சம்பந்தமாக யாருக்கு பட்டா என்று வழக்கு போட்டாலும், அல்லது தனிப்பட்ட இரண்டு லாண்டு ஹோல்டர்கள் தன்னுடைய நிலத்திற்கு யாருக்கு பட்டா கொடுக்க வேண்டும் என்று வழக்குப் போட்டாலும், அந்த வழக்கு சம்பந்தப்பட்ட மட்டிலே அதை சிவில் கோர்ட்டு தீர்மானிக்கலாம். அதைப் போன்ற பல வழக்குகள் சிவில் கோர்ட்டில் வந்திருக்கின்றன. அதுவும் உரிமைப் பிரச்னைதான். யாருக்கு அந்த நிலம் உரிமை என்ற பிரச்னை வந்த காரணத்தினால் அந்தத் தீர்ப்பின் மூலம் சிவில் கோர்ட்டுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டது. அதன் பின்னால் சமீபத்தில் ஒரு தனி நீதிபதி அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய உயர்நீதி மன்றத் தீர்ப்பில் அதில் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. 'கவர்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்று செட்டில் மெண்டில் முடிவாகிவிட்டால், அதை எதிர்த்து சிவில் கோர்ட்டுக்குச் செல்லக்கூடாது என்ற தீர்ப்பு வந்தது. இந்தத் தீர்ப்பு வந்தவுடனேயே நமது அரசாங்கம் என்ன செய்தது என்றால், போர்டு ஆப் ரெவின்யூ என்ன செய்தது என்றால் அவர்கள் அதிகாரிகள் அத்தனை பேர்களுக்கும் ஒரு சர்குலர் அனுப்பினார்கள். அந்தத் தீர்ப்பு அப்பொழுது எந்த சட்ட ரிபோர்ட்டிலும் வரவில்லை. இப்பொழுதுதான் வந்திருக்கிறது. ஆனால் அப்படி வருவதற்கு முன்னாலேயே, நம்முடைய சர்க்காரும் ரெவின்யூ போர்டும் உடனடியாக அத்தனை அதிகாரிகளுக்கும் ஒரு சர்க்குலர் அனுப்பினார்கள். இந்தத் தீர்ப்பை டைப் செய்து, தீர்ப்பின் நகலையும் அனுப்பினார்கள். அந்த சர்க்குலரில் குறிப்பிட்டிருந்தது என்னவென்றால் எந்த வழக்கு சிவில் கோர்ட்டுக்கு வந்தாலும், அந்த டிவிஷன் பெஞ்சு தீர்ப்பின் பிரகாரம் சிவில் கோர்ட்டுக்கு வரப்பட்ட வழக்குகள் அவ்வளவிலும், பின்னாலே வந்த தீர்ப்பை அடிப்படையாக வைத்து, அந்த வழக்குகளை எதிர்த்து, சிவில் கோர்ட்டுக்கு ஜூரிஸ்டிக்‌ஷன் இல்லை என்று வழக்காடவேண்டும் என்பதுதான். இதன் விளைவாக அத்தனை சிவில் வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதனுடைய விளைவு என்ன என்பதைக் கொஞ்சம் சட்ட அமைச்சர் அவர்கள் தயவு செய்து இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நான் முன்னால் சொன்னமாதிரி, முதல் தீர்ப்பின்படி இரண்டு ரயத்துகளுக்கு இடையே உரிமைப் பிரச்னை வந்தால், சிவில் கோர்ட்டுக்கு அதைத் தீர்த்து வைக்க உரிமை உண்டு. உதாரணத்திற்கு எடுத்துப் பார்த்தால், சர்க்காருக்கு பாத்தியமா, தனிப்பட்ட விவசாயிக்குப் பாத்தியமா என்பதும் உரிமைப் பிரச்னைதான். ஆனால், உயர்நீதி மன்ற முடிவிலே இதையும் 'கிளாஸிபிகேஷன் ஆப் லாண்ட்ஸ்' என்று சொல்லியிருக்கிற காரணத்தினாலே, செடில்மெண்டு உத்தரவுதான் 'பைனல்' என்று முடிவு செய்யப்பட்டிருக்கின்றது. உயர் நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு ஓரளவுக்கு முரண்பட்ட நிலையிலே இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. கீழே உள்ள சிவில் கோர்ட்டு நீதிபதிகளுக்கு எந்தந்த தீர்ப்பைப் பின்பற்றுவது



என்று தெரியாமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதைத் தயவு செய்து அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும். உயர் நீதி மன்றம் சொல்லக்கூடிய கருத்துத்தான் இந்தக் கருத்து. 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்று செல்லிவிட்டால் அதுவும் ஒரு தனி மனிதனுடைய உரிமையைப் பறிப்பதாகும். உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். பல இடங்களில் ஒருவருடைய நிலம் 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' புறம்போக்கா அல்லது அவர்களுக்கு பட்டா கொடுத்திருக்கிறதா என்றால், தெரியாத சூழ்நிலை இருக்கிறது. இது எப்படி என்று நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஒருவருக்குப் பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. சிறு சர்வே நம்பரில் ஒரு நிலம் இருக்கும். அந்த நிலத்தை ஏதோ ஒரு காரணம் காட்டி 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்று எடுத்துவிடுகிறார்கள். அது நிலச் சொந்தக்காரருக்குத் தெரியாமலேயே இருக்கிறது. எப்பொழுது தெரியவருகிறது என்றால், கர்ணம் அல்லது கணக்குப் பிள்ளை "இந்த நிலத்தை 'கவர்ன்மெண்டு அஸெஸ்டு வேஸ்டு' என்று எடுத்துவிட்டார்கள், சர்க்காருக்குச் சொந்தம் என்று எடுத்துவிட்டார்கள் செட்டில்மெண்டில் ஆகையால் 'பி' மெமோ நான் கொடுக்கிறேன்" என்று சொல்லி 'பி' மெமோ கொடுத்தால்தான், அந்த நிலம் சர்க்காருடைய நிலமாக்கப்பட்டு விட்டது என்று பட்டா உரிமை உள்ளவர்களுக்குத் தெரிகிறது. இப்படிப்பட்ட பல வழக்குகள் சிவில் கோர்ட்டுகளில் இருக்கின்றன. இதற்கு நம்முடைய சர்க்கார் பின்னாலே 'சூவோ மோட்டோ ப்ரோஸீடிங்ஸ்' என்று டைரக்டர் ஆப் செடில் மெண்டுக்கு ஒரு அதிகாரம் கொடுத்தார்கள். இப்படிப்பட்ட ஒரு 'மிஸ்டேக்' ஏற்பட்டால் அதை டைரக்டர் ஆப் செடில்மெண்டு அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், 'சூவோ மோட்டோ பரொஸீடிங்ஸ்' எடுக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. தனிப்பட்ட அதிகாரியினுடைய 'டிஸ்கிரஷனில்' வைத்திருக்கிறார்கள். நீதிமன்றத்திற்குச் செல்வதற்குப் பதிலாக, தனிப்பட்ட அதிகாரியினுடைய விருப்பு, வெறுப்பைப் பொருத்துத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் பல விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனக்குத் தெரிந்து பல வழக்குகள் இன்றைக்கு நீதி மன்றத்தில் இருக்கின்றன. நீதிபதிகளே என்ன சொல்லுவது என்று புரியாமல் இருக்கிறார்கள். மறுபடியும் உயர்நீதி மன்றம் வரைதான் இந்தப் பிரச்னை போகப்போகிறது. டிவிஷன் பெஞ்சுக்கும், தனிப்பட்ட ஜட்ஜின் தீர்ப்புக்கும் வேறுபட்டுள்ள சூழ்நிலையைக் குறிப்பிட்டு பேசத்தான் போகிறார்கள். அதற்கு முன்னால் இந்த நிலை ஏழை விவசாயிகளைப் பாதிக்கின்ற காரணத்தினால், இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் தனியாக அதிகாரிகளுடன் கலந்து ஆலோசனை செய்து இதனால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சர்க்காருக்கு 'வேஸ்டு' ஆகக்கூடிய நேரத்தில், அது ஏற்கனவே பட்டாதாருக்கு உரிமையாக இருந்தால், எவ்வித ஒரு காரணத்தைக் கொண்டும் அவருக்கு பட்டா வழங்கப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால், அவருக்கு

சிவில் கோர்ட்டுக்கு போவதற்கு உரிமை வழங்கப்படவேண்டும் என்ற கருத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும், பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே இப்பொழுது திரு. மாதவன் அவர்கள் பேசிய பிரச்னை வேறு. சட்டசபை முன்னால் இருக்கிற பிரச்னை வேறு. இப்பொழுது சட்டசபைக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற பிரச்னை என்னவென்றால், எந்த டெனண்டு உழவனுக்கு ஸ்ரீபண்டாரவகை நிலம் உரியது என்று இருக்கிறதோ, அவருக்கு பட்டா கொடுக்க வேண்டும். யாருக்கும் அந்த விதமான உரிமை இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால், அது சர்க்காரில் 'வெஸ்டு' ஆக வேண்டும். அது தான் இருக்கிற நிலைமை. இதுதான் நம்முடைய நாட்டினுடைய சட்டம்கூட, சர்க்காரிலே வெஸ்டு பண்ணுகிறதை சர்க்காருக்குச் சொந்தமா, இல்லையா என்று 'விசாரணை' செய்ய வேண்டும், அதற்கு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்று திரு. மாதவன் அவர்கள் சொல்லுகிறார்கள். குறிப்பாக இரண்டு ஜட்ஜ்மெண்டுகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். எனக்கு ஞாபகம் வருகிறது. இரண்டு தனிப்பட்ட நபர்கள் தங்களுக்கு நிலத்தில் உரிமை இருக்கிறது என்று சொல்லி
1-00 p.m. வாதாடினால், சிவில் கோர்ட்டு அந்த வழக்கை விசாரிக்கலாம் என்று இருக்கிறது. சர்க்காரிலே வெஸ்ட் ஆகிவிட்டது என்று சொன்னால், புரோசிடிங்ஸ் எடுக்கலாம். அதற்கு மேல் டைரக்டர் ஆஃப் செட்டில்மெண்டுக்கு அப்பீல் செய்யலாம். அதற்கு மேல் போர்டு ஆஃப் ரெவென்யூவுக்குப் போக வேண்டும். அதனால் எந்த விதமான உரிமையும் இல்லாத நிலைமை ஏற்பட்டு விட்டது என்று சொல்வதற்கில்லை. சர்க்கார் நிலம் என்று சொன்னால், அதற்கு உரிமைகள் வேறு. தனி நபர் இருவருக்குள்ளே ஒரு சண்டை சச்சரவு இருக்கிறது, தங்களுடைய நிலம் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது என்றால் அதற்கு வழிவகைகள் வேறு இருக்கின்றன. யாருக்கும் ஸ்ரீபண்டாரவகா நிலம் சொந்தமில்லை என்ற நிலைமை ஏற்பட்டால் தான் அது சர்க்காருக்கு சொந்தமாகும். அவ்வாறு சர்க்காருக்கு வரும் என்று சொன்னால், போர்டு ஆஃப் ரெவின்யூ வரை அப்பீல் செய்வதற்கு வழிவகை இருக்கிறது. இந்தப் பிரச்னை சம்பந்தமாக ஏதாவது நம்முடைய இதர சட்டங்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால், அதைப் பற்றி எனக்கு எழுதி அனுப்பும்படி மாதவன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதைத் தனியாகப் பரிசீலனை செய்யலாம்.

SRI P. V. SRIRAMULU : I don't press my amendment.

The amendment was by leave withdrawn.

Clause 8 was put and carried.

Clauses 9 to 19 were put and carried.



*Clause 20.*

**திரு. பி. வி. சீராமுலு :** என்னுடைய பெயரில் உள்ள திருத்தத்தை நான் முன்மொழிகிறேன்.

" *For* the existing Clause 20, *substitute* the following :—

'20. Arrears of rent to be discharged—All arrears of rent due on the appointed day to the temple in respect of Sreepandaravaka lands shall be deemed to be discharged and no tenant shall be liable to pay any arrears of rent outstanding on the appointed day.' "

The amendment was duly seconded.

SRI S. MADHAVAN : Sir, I move—

" that in sub-clauses (3), (4) and (5) of clause 20, *substitute* the words 'two financial years' *for* the words 'three financial years' wherever they occur. "

The amendment was duly seconded.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for Discussion.

* **திரு. செ. மாதவன் :** இந்த பழைய பாக்கிகளை வசூலிப்பதைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இந்த மன்றத்திலே சட்டம் கொண்டுவந்து, 12 வருஷங்களுக்கு வசூலிக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டு, நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு மூன்று பசலிகளுக்கு என்று திருத்தியமைத்தது நமக்கு நினைவிருக்கும். அதே அடிப்படையில் ஒரு திருத்தத்தை இந்தச் சட்டத்திலும் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏனைய சட்டங்களிலே உள்ள நிலங்களுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள இன்றைய நிலைமைக்கும் வேறுபட்ட சூழ்நிலை இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தெரியும், இந்தப் பகுதியிலே பழைய பாக்கிகளை வசூலிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு, 10, 12 ஆண்டுகள் ஆகியும்கூட பழைய பாக்கிகளைக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள். அப்படி வசூலிக்கப்படாத ஒரு நிலைமை இருக்கிற ஒரு பகுதியிலே, வசூலிப்பதற்கு ஒரு வாய்ப்பும் கொடுப்பது சரி தானா என்பது முதல் ஆட்சேபனை. ஆகவே இந்தச் சட்டத்திலே பழைய பாக்கிகள் அத்தனையும் ரத்து செய்ய வேண்டுமென்பது முதல் யோசனை. இரண்டாவதாக, அப்படி ரத்து செய்வதற்கு மனம் இல்லாவிட்டாலும், 1948-ம் வருடத்திய ஆக்ட் 26/1940-ல் இருக்கிறபடி குறிப்பிட்ட இரண்டு பசலிகளுக்குக் கொடுத்துவிட்டால் பழைய பாக்கிகள் ரத்து ஆகிவிடும் ஆகிவிடும் என்ற சட்டத்தை இந்த அரசாங்கமே கொண்டுவந்திருக்கிறது. அந்தச் சட்டத்தையாவது பின்பற்றலாம். மற்றப் பகுதியிலுள்ள இனம்களுக்கும் இந்தக் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள இனம் பிரச்னைகளுக்கும் வேறுபாடு இருக்கிறது. பழைய பாக்கிகளை வசூலிப்பதிலே வேறுபாடு

[திரு. செ. மாதவன்] [21st July 1964

இருக்கிறது என்ற கருத்தை ஒப்புக்கொள்ளுவதற்காகவாவது, இரண்டு பசலி தத்துவத்தை ஏற்றுக்கொண்டு, எங்களுடைய இரண்டாவது திருத்தத்தை—இரண்டு பைனான்ஷியல் வருஷங்கள் என்று போட்டிருக்கிறோம், ஒரே ஒரு வருஷத்தைத் தான் குறைக்கச் சொல்லுகிறோம்—ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள கொள்கைப் படி, ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் சபாநாயகர் அவர்களே, பழைய பாக்கிகள் எல்லாம் ரத்து ஆகிவிட்டன என்று சொல்லுவது நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைக்குச் சரியாக இருக்காது. ஒருவருடைய சொத்தை எடுப்பதற்கு முன்னால், காம்பன்சேஷன் கொடுக்க வேண்டுமென்று ஒப்புக்கொண்டவர்கள் நாம். பழைய பாக்கிகள் அத்தனையும் ரத்து செய்து விட்டோம் என்று சொல்லுவதற்கு இயலாது. இரண்டு வருஷமா, மூன்று வருஷமா என்று பார்க்கிறபொழுது ஜமீந்தாரி முறை இருந்த இடத்திலே 2 வருஷம் compensation போதும் என்று சொன்னோம். மைனர் இனாம்களைப் பொறுத்த வரையில் 3 வருஷங்கள் என்று சொல்லியிருக்கிறோம். இது மைனர் இனாம் போன்ற வகையைச் சேர்ந்ததால், 3 வருஷம் என்று போடுவதுதான் நியாயம். அதுவும் இல்லாமல் பேச்சுவார்த்தை நடத்தி, 3 பசலிகளுக்கு வசூல் செய்து கொடுக்கிறோம், பழைய பாக்கிகளைக் கேட்காமல் இருக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டதனாலே, 3 வருஷம் என்று போடப்பட்டிருக்கிறது.

The amendments were put and lost.

Clause 20 was put and carried.

Clauses 21 to 32 were put and carried.

TheSchedule was put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

* **THE HON. SRI R. VENKATARAMAN :** Sir, I move—

"*That the Kanyakumari Sreepandaravaka Lands (Abolition and Conversion into Ryotwari) Bill, 1964 (L.A. Bill No. 14 of 1964), be passed.*"

The motion was put and carried and the Bill was passed.

(6) THE MADRAS (TRANSFERRED TERRITORY), THIRUPPUVARAM PAYMENT ABOLITION BILL, 1964 (L.A. BILL NO. 15 OF 1964), AS AMENDED BY THE SELECT COMMITTEE.

**THE HON. SRI R. VENKATARAMAN :** Sir, I move—

"*That the Madras (Transferred Territory), Thiruppuvaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 15 of 1964), as amended by the Select Committee, be taken into consideration.*"



21st July 1964] [Sri R. Venkataraman]

In moving this motion, I wish to explain briefly what thiruppuvaram is, and the important changes made in the Bill by the Select Committee.

"Thiruppuvaram" literally means "deviated revenue" and is either on assignment of revenue or on assignment of rent, payable in kind or in cash or in both in respect of certain lands in Kanyakumari district and Shencottah taluk to the total extent of 25,000 acres. It is payable to religious, educational or charitable institutions or to individuals on condition of rendering service to such institutions, or to individuals personally, without any condition of service. According to section 9 of the Travancore-Cochin Land Tax Act, 1955 (Travancore-Cochin Act XV of 1955), Thiruppuvaram is payable by the holders of the lands liable to it, in addition to the basic tax payable in respect of the lands to the Government. This dual levy has proved burdensome to the thiruppu-landholders. The Government have therefore, brought forward this bill, under which the thiruppu-landholders will be relieved of their liability to pay thiruppuvaram and the lands will be convicted into Ryotwari under the other three previous Bills.

The Government will pay compensation to the thiruppu-holders. In the case of individuals entitled to receive thiruppuvaram without any obligation to render service, the compensation will be an amount equal to 16-2/3 times the aggregate of the annual amount of thiruppuvaram payable to them. In the case of institutions and service thiruppu-holders, the compensation will be paid in the shape of annual tasdik allowance equal to the aggregate of the annual amount of thiruppuvaram payable to them. The service thiruppu-holders will be bound to render the service and the tasdik allowance will be paid to them only so long as they render the service and if they fail to render the service, the tasdik allowance will become the absolute property of the institution concerned. Sree Padmanabhaswami temple at Trivandrum is a major thiruppu-holder and, under this Bill and under L.A. Bill No. 14 of 1964, the temple will be entitled to an annual tasdik allowance of not less than Rs. 1·50 lakhs, in lieu of its income from thiruppuvaram and its rental income from Sreepandaravaka lands.

In this State, when the Government have to pay compensation to an institution they have always been paying it in the shape of an annual tasdik allowance instead of in a single lump-sum payment. This ensures the efficient and continued maintenance of the institution.

The Select Committee has made certain changes in the Bill.

The Committee considered that the term "landholder" had already acquired a specific connotation by virtue of the definition in the Madras Estates Land Act, 1908 and that therefore, it is not appropriate to refer to it in the present Bill. It has, therefore, substituted the term "thiruppu-landholder" for the term "landholder", wherever it occurs in the Bill.

[Sri R. Venkataraman] [21st July 1964

The Committee has also modified the definition of "thiruppuvaram" in clause 2 (10), so as first to describe the nature of thiruppuvaram, namely that it is an assignment of revenue or rent, in whole or in part, payable in favour of any religious, educational or charitable institution or individual, and then to set out its attributes, namely, that it should be entered in the revenue accounts or recognised by customary law as such.

The Committee also considered that the Bill should contain provision to ensure that, after the appointed day, a third party does not have any enforceable claim against the Government or the thiruppu-holder in respect of any rights relating to thiruppuvaram which accrued before the appointed day and that he can only proceed against the compensation or tasdik allowance payable to the thiruppu-holder under this Bill. Clause 3 has accordingly been suitably modified and a new clause has also been inserted as clause 26, renumbering the subsequent clauses.

The Committee considered that a new provision should be inserted that, in cases where the grant of thiruppuvaram burdened with service is deemed to have lapsed on account of failure to perform the service before the appointed day, it shall be deemed to have lapsed with effect from the date of such failure, so that it can operate as a conditional limitation and that there is no liability to pay thiruppuvaram for the intervening period between the date of failure to perform the service and the date of enforcement of the other declaring the thiruppuvaram to have lapsed. A new clause 10 has accordingly been inserted renumbering the subsequent clauses.

The Committee also considered that the term "standard paragraph" occurring in clause 15 renumbered as 16 should have the same meaning, in all parts of the Kanyakumari district and Shencottah taluk. An explanation has accordingly been inserted to that clause stating that, for the purpose of that clause, a "standard paragraph" means a measure equivalent to 13.11 litres.

The Committee considered that the words "with interest thereon at three per cent per annum" occurring in sub-clause (5) of clause 22 renumbered as 23, may be omitted as the Government need not pay interest on amounts due to institutions as they are paid full tasdik allowance. The sub-clause has been amended accordingly.

Clause 25 of the Bill as introduced provides that in cases where thiruppuvaram dues are in arrears for more than three financial years on the appointed day, they shall be deemed to be discharged if the arrears due for any three financial years are paid within two years of the appointed day in not more than two instalments per year. The Committee has modified this clause (now renumbered as clause 27) so as to provide that, in such cases, if an amount equal to the arrears due for the three financial years immediately preceding the appointed day had been paid before such date or is



21st July 1964] [Sri R. Venkataraman]

paid within three years of such date, the entire arrears shall be deemed to be discharged; and that in the latter case the arrears may be paid in six half-yearly instalments.

Sir, I request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved—

"That the Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill, 1964 (L.A. Bill No. 15 of 1964) as amended by the Select Committee, be taken into consideration."

* SRI A. KUNJAN NADAR: Sir, I welcome this Bill. While
doing so, I have to point out certain legal aspects with regard to
payment of compensation arising out of the abolition of Thiruppu-
varam. The Thiruppuvaram tenure has been created due to so
many causes and there are so many thiruppu-holders—Sree Padma-
nabhaswami temple and other temples and even individuals. Most
of these thiruppu-holders have lost their right to collect Thiruppu-
varam by the length of time and many of these thiruppus are not
in existence either because the thiruppu-holder is not in existence
or the intention with which it has been created is not there. So,
during the time of the last settlement, the then Travancore Govern-
ment wanted to abolish this tenure. But the abolition required a
comprehensive enquiry as to which thiruppus now exist and whcih
do not. Then again, this matteer came up for consideration at the
time of enacting the Basic Tax Act. Then also the Government
wanted to institute an enquiry and then abolish it. But the basic
land tax could not wait for this enguiry. So, it was again post-
poned to a future date. Now, we pay the thiruppu-holders com-
pensation without enquiring into the legal liability to pay and into
the fact that many of the thiruppus are not now in existence. So,
I would suggest that before the Government make their final
payment a comprehensive enquiry into this matter should be made.

Then with regard to the legal position, I have got my own
doubts. The main thiruppu-holders are Sree Padmanabhaswami
temple and in many cases the thiruppus were created by the
Government by taking loans from the temple funds and some
arrangement was also made for payment of interest on this loan.
So, the legal liability even when it was created was with the then
Travancore Governmet which created these thiruppus. That is
to say, the then Travancore Government borrowed money for
Government purposes for the whole of Travancore and not for
Nanjinad or Kanyakumari district from a particular person. It
was by accident that some arrangement was made regarding some
land in Kanyakumari district to pay interest. They could as well
have created this obligation regarding some lands in Quilon or some
other place, and the tenants do not have any legal liability in the
matter. So, the whole legal liability rested with the then Travan-
core Government. This loan was taken not for this particular

[Sri A. Kunjan Nadar] [21st July 1964

area but for the whole State. Therefore, the legal liability rested with the then Travancore-Cochin Government and subsequently with the Kerala Government. So the question whether our Government have got a legal liability to pay has to be examined. We are taking this liability. In any case the arrears, three years' arrears should not be collected. It should be written off because we say it is illegal as far as the tenants are concerned. Government had allowed these arrears to accrue because that Government was in a helpless position to collect them. Even if the Thiruppuvaram is not abolished, we are not going to pay whatever be the steps the Government might take. In view of that, the three years arrears may be written off gracefully.

THE HON. SRI R. VENKATARAMAN: Mr. Speaker, Sir. If there was liability on the part of the previous Government of Travancore-Cochin State to pay Thiruppuvaram to the temple from lands which are situate in Kanyakumari district, burdened with the demand of thiruppuvaram, as successor Government this Government has to honour it. There can be no escape from that position. I know there are some people in Kanyakumari district who have been disputing the right to pay thiruppuvaram. A mere dispute is no conclusion. If it is not possible for some to pay, what we, Government, intend to do now should not be objected to. In any event I want to point out that it is not the tenants who are going to pay. It is not the people, for whom we are going to give ryotwari patta and who will have to pay according to ryotwari assessment hereafter, who are going to pay. It is the Government which has no honour its obligation. There will be no additional buurden on the part of theryots to pay anything by way of thiruppuvaram. So, I request the House to accept the motion.

MR. SPEAKER: The question is—

"That the Madras (Transferred Territory) Thiruppuvaram Payment Abolition Bill. 1964 (L.A. Bill No. 15 of 1964), as amended by the Select Committee, be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

*Clause* 2.

MR. SPEAKER: The question is—

"That Clause 2 do stand part of the Bill."

SRI A. KUNJAN NADAR: Sir, I move the following amendment:—

"In item 10 (1) of Clause 2, *for* the words 'revenue accounts', *substitute* the words 'settlement register'."

I am not moving my other amendment.

The amendment was duly seconded.



21st July 1964]

MR. SPEAKER: The clause and the amendment are before the house for discussion.—

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) அபிவிருத்தி செய்த திறந்த வெளி மனைக்கட்டுகளில் 526 குடும்பங்களுக்கு மறு வாழ்வு அளிப்பதற்காக, 5,17,400 ரூபாய் செலவில் சேலம் நகராட்சி மன்றம் வகுத்த ஐந்து சேரி அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் 1961 ஏப்ரலில் அங்கீகரித்துள்ளது. மேற்படி நகராட்சி மன்றத் திற்கு நிதி உதவி கொடுப்பதற்கு முன்பாகவே, இத்திட்டத்தை நிறைவேற்றும் வேலை மாநில வீட்டு வசதி போர்டுக்கு மாற்றப் பட்டது. வேறு எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அது நிதி உதவி கொடுக்கும்படிக் கேட்கவில்லை.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** மாநில வீட்டு வசதி போர்டின் யூனிட் சேலத்திற்காக பிரத்தியேகமாக அமைக்கப்படுமா ? சேலம் நகரத்திற்கு மற்றபடி வீட்டு வசதி திட்டங்கள் விஸ்தரிக்கப் படுமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இரண்டாவது கேள்விக்கு ஆம். முதல் கேள்விக்கு, இல்லை.

### தலைமை மருத்துவமனை (தென்னாற்காடு)

* 619 **கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் பொதுப் பணித்துறை அமைசர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்ட தலைமை மருத்துவ மனை கட்டிய காண்டிராக்ட்காரரின் தவறு காரணமாக அந்த மருத்துவ மனையை அரசாங்கமே கட்டியது உண்மையா ?

(இ) அரசாங்கத்திற்கு அதனால் அதிகப்படியாக ஏற்பட்ட செலவென்ன ?

(உ) நஷ்டம் ஏற்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக் காரரிடம் நஷ்டத்தினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

THE HON. SRI V. RAMAIAH : (a) Yes. The contractor to whom the work was entrusted originally did not complete the work even after the grant of two extensions of time beyond the contract period, increasing the stipulated contract period of 10 months to 25 months. His contract was therefore terminated. Though tenders were called for twice for the completion of the balance of work, there was no response. The work was therefore taken up for execution departmentally and completed.

(b) An additional expenditure of Rupees one lakh and nine thousand was incurred besides the loss of time in putting the building to use.

(c) The matter is under consideration.

9-00 a.m. **திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** சார், இந்த தனிப்பட்ட ஒப்பந்தக்
காரர் அரசாங்கத்தின் காலவரையறை கடந்தும், இந்த ஆசுபத்திரி
யில் வேலை முடிந்து ஒன்றரை வருஷமாகியும் நஷ்டம் ஏற்பட்டது
என்று சொல்லக்கூடிய ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் ரூபாயையும்
காண்டிராக்டரிடமிருந்து அரசாங்கம் வசூல் செய்வதற்கு கால
தாமதம் ஆவதற்கு காரணம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் அவர்கள்
அட்வகேட் என்று நினைக்கிறேன். இவரிடமிருந்து பணத்தை
வசூல் செய்வதற்கு முறைப்படி நடவடிக்கை எடுத்துக்கொண்
டாலும், சட்டப்படி சில விதிமுறைகள்படிதான் நடவடிக்கை
எடுக்க முடியும். அந்த அளவில் எல்லா நடவடிக்கைகளையும்
அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அரசாங்கம் இதில்
நடவடிக்கை எடுக்காமல் தூங்கிக்கொண்டிருக்கவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த காண்டிராக்டரை, பொதுவாக
அரசாங்கத்தினிடத்திலிருக்கின்ற காண்டிராக்டர் பட்டியலி
லிருந்து நீக்கி விடுவதற்கு அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறதா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இந்த வேலையைப் பொறுத்தவரை
யில் ஏன் காலதாமதம் ஏற்பட்டது என்பதைப்பற்றி சம்பந்தப்
பட்ட அதிகாரிகள் பரிசீலனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.
முடிவு எடுக்கும்போது நியாயத்திற்கு புறம்பாக ஏதாவது நட
வடிக்கை எடுத்து அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வரக்கூடாது.
ஆகவே இது சம்பந்தமாக அதிகாரிகள் பரிசீலனை செய்து தக்க
நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரி
வித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, சட்டப்பரிசீலனை
பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் ஏழை
விவசாயிகள் சிறிது கிஸ்தி கொடுக்கவில்லை என்றால் உடனடியாக
ஜப்தி செய்வதற்கு இந்த சர்க்கார் வேண்டிய அதிகாரத்தை
கொடுத்திருக்கிறது. அப்படியிருக்கும்போது இப்பேர்ப்பட்ட
காண்டிராக்டர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டிய பணத்தை
வசூல் செய்யாமல் இருப்பதற்கு காரணம், இப்பேர்பட்ட காண்டி
ராக்டர்களின் தயவு இந்த சர்க்காருக்கு தேவையாக இருக்கின்றது
என்ற காரணத்தினலா என்பதை அறிய விரும்புகிறேன்.

**Mr. SPEAKER** : Can the hon. Member indicate any other provision under which action could be taken against the contractor ?

**திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இரண்டரை வருஷமாகியும் இந்தப்
பணம் காண்டிராக்டரிடமிருந்து வசூல் ஆகவில்லை. பெரிய வசதி
படைத்த காண்டிராக்டராகத்தான் இருக்க முடியும். அப்படி
யானல் ஏன் இவ்வளவு காலமாக இவரிடமிருந்து வசூல் செய்ய
முடியவில்லை ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அரசாங்கத்தைப் பொறுத்த
வரையில் எந்தவிதமான காலதாமதத்தையும் ஏற்படுத்தவில்லை.
சட்டப்படி எந்தவிதமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ, அந்த
முறைப்படி, பெரிய காண்டிராக்டராக இருந்தாலும் சரி, சிறிய





காண்டிராக்டராக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுத்துக்
கொள்ளுகிறோம். இந்த சட்டசபையும், பார்லிமெண்டும்
இயற்றக்கூடிய சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ
அந்த முறையில்தான் நாம் நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே
இதில் எந்தவிதமான காலதாமதமும் இல்லை.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே,
முறையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று
அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதன்படி என்ன
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் விவரங்
கள் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எந்தெந்த அதிகாரி என்னென்ன
நடவடிக்கை எடுக்க முடியுமோ அவைகள் எல்லாம் எடுக்கப்பட்டு
வருகின்றன. இதனுடைய முழு விவரங்கள் எல்லாம் வேண்டு
மென்றால், கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனியாக
கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன். என்னைப்
பொறுத்த வரையில் எந்தவித காலதாமதமும் இல்லாமல், நட
வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, எந்தவிதமான அஜாக்கிரதை
யும் இல்லை என்பதை என்னால் சொல்ல முடியும்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் அமைச்சர் அவர்கள் சொன்
னார்கள். கனம் சபாநாயகர் அவர்களுக்கும், எனக்கும் மற்றவர்
களுக்கும் தெரிந்தபடி சட்டமுறைப்படி எல்லா நடவடிக்கைகளும்
எடுக்கப்பட்டு வருவதாக, ஆனால் கோர்டில் மூன்று வருஷத்திற்குள்
ளாக வசூல் செய்தாக வேண்டும், இல்லாவிட்டால் "லிமிட்டேஷன்
பார்" ஆகிவிடும். இந்த அரசாங்க ஆசுபத்திரி கட்டடம் கட்டி
முடிந்து ஒன்றரை வருஷத்திற்கு மேலாகிவிட்டது. அப்படி
வசூல் செய்ய வேண்டிய ஒரு லட்சத்து ஒன்பதாயிரம் ரூபாயையும்
சிவில் ஸூட் போட்டுத்தான் வசூலிக்கவேண்டும். மூன்று
வருடங்கள் ஆகிவிட்டால் லிமிட்டேஷன் பார் ஆகிவிடும். இதன்
மீது நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு காரணம், இந்த
குறிப்பிட்ட காண்ட்ராக்டர் பண்ருட்டி மண்டல காங்கிரஸ்
கமிட்டித் தலைவர் என்பதாலா என்பதைப்பற்றி இங்கே அமைச்சர்
அவர்கள் தெளிவாக பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் அங்கத்தினர் அவர்கள்
கொண்டு வந்திருக்கக்கூடிய குற்றச்சாட்டு, எனக்கு மிக அதிர்ச்
சியை தருகிறது. எனக்குத் தெரிந்த வரையில் தக்க நட
வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இதில் சட்டப்படி ஏற்படு
கின்ற காலதாமதம் தவிர யாருடைய தயவுக்காகவும் நடவடிக்கை
எடுக்க தவறவில்லை. சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டி
ருக்கும்போது எப்படி லிமிட்டேஷன் பார் ஆகும் என்று
தெரியவில்லை.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இதனுடைய வேலை முடிந்து
இரண்டு வருடம் ஆகிறது.

**Mr. SPEAKER** : No interruption please.

[22nd July 1964

**திரு. கே. ஏ. மதியழகன் :** பாயின்ட் ஆஃப் ஆர்டர், இதில் நஷ்டம் ஏற்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரரிடம் நஷ்டத்தினை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று தான் கேள்வியில் கேட்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வி தங்களால் அனுமதிக்கப்பட்டது. அதே நேரத்தில் இதற்கான விவரங்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியவர்கள், ஆனால் அவர்கள் உப கேள்விகள் கேட்கும்போது, அவர்கள் உண்மையான விவரங்களை கொடுப்பதில்லை. . . .

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** "உண்மையான விவரங்கள் கொடுப்பதில்லை" என்று சொல்வது தவறு, "சரியான விவரங்கள்" என்று வேண்டுமானால் சொல்லலாம். . . .

**திரு. கே. ஏ. மதியழகன் :** "சரியான விவரங்கள்" கொடுப்பதில்லை. நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது, அதற்கு என்ன நடவடிக்கை ஏற்பட்டிருக்கிறது என்றுதான் கேட்கிறோம். ராமசாமி படையாச்சி அவர்கள் இருந்த காலத்திலேயே. . . .

MR. SPEAKER : The hon. Member may please put the question and not go on making a speech. What is the point of order?

SRI K. A. MATHIALAGAN : I am raising a point of order. I say the Hon. Minister is witholding facts. It is to be treated as contempt of the House. Whenever we ask questions, the Hon. Ministers give only vague answers. So I request the Hon. Speaker to instruct Hon. Ministers to give us all facts.

MR. SPEAKER : So the hon. Member is making a general accusation against Hon. Ministers.

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member Sri K. A. Mathialagan has made a very serious allegation about Hon. Ministers withholding facts. It is wholly untrue. If the Hon. Speaker were to kindly look into the question, it might be found that we have furnished all the necessary details. But I can't study the minds of individual members on specific things which they bear in mind. There is no question of our hiding any facts. It is a serious allegation which the hon. Member has made.

Sri K. A. Mathialagan rose. . . .

MR. SPEAKER : The hon. Member may please resume his seat.

What I want to say is this. Hon. Members may raise any point. They may even allege that matters, which are in the possession of Hon. Ministers are being withheld by them. But then hon. Members must make that allegation with authority. The question here is whether any action has been taken to recover the loss incurred by Government, from the said contractor. The Hon. Minister has said "Yes. action is being taken." But hon. Members want further particulars.



22nd July 1964]

Sri K. A. Mathialagan rose . . .

MR. SPEAKER : The hon. Member must hear what I say. I can't answer if he asks me for any details. When the Hon. Leader of the Opposition wanted to know what were the various steps taken by Government, the Hon. Minister said that a separate question might be put, when he would gather the details and give the answer. What more the hon. Members want? Therefore I don't think there is any point of order.

SRI V. KRISHNAMOORTHI : Sir, on a point of order. I request the Hno. Speaker to allow half an hour discussion.

MR. SPEAKER : Is it a point of order?

Sri V. Krishnamoorthi arose . . . .

MR. SPEAKER : The hon. Member may please resume his seat.

SRI V. KRISHNAMOORTHI : In view of the importance of this matter which involves more than 1 lakh of rupees loss to Government, I want that the Hon. Speaker may allow half an hour discussion on this question.

MR. SPEAKER : The hon. Member cannot get it by force.

SRI V. KRISHNAMOORTHI : We are very much interested in this question . . . .

Sri K. A. Mathialagan and some other Members also rose . . .

MR. SPEAKER : Are all hon. Members going to speak at the same time? Regarding the hon. Member Sri V. Krishnamoorthi, he had already requested for a half an hour discussion.

Half an hour discussion must be requested for. It can't be raised by a point of order. The hon. Member Sri V. Krishnamoorthi must know that first. The Hon. Minister has replied to the question of the Hon. Leader of the Opposition, that a separate question might be put when he would collect and give all the details. What I say is, if the hon. Member Sri V. Krishnamoorthi wants to put more questions, let him give notice of a separate question. I will admit it. Let him then come prepared with all facts and figures.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலக் கேள்விக்காவது அல்லது அரை மணி நேர விவாதத் திற்காவது இடம் அளிப்பதன் மூலம் இதைப்பற்றிய விவரங்களை அறிய வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, a short notice question may be put and the Government will collect all the information and give it.

MR. SPEAKER : Yes, that is right.

### சிறிய நீர்ப்பாசனத் திட்டத்திற்கு சிமெண்ட்

* 620 கேள்வி—திரு. செ. மாதவன் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின்கீழ் நடைபெறும் வேலைகளுக்கு சிமெண்ட் ஒதுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இத்திட்ட வேலைகள் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதா ?

THE HON. SRI P. KAKKAN : (a) No.

(b) Does not arise.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த சிறிய நீர்பாசனத் திட்டங்களில் வேலைகளுக்கு யார் மூலமாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது ? அதற்கு அனுசரிக்கப்படும் கொள்கைகள் யாவை ?

கனம் திரு. பூ. கக்கன் : சிறிய நீர்ப்பாசன திட்டமெல்லாம் பஞ்சாயத்துக்கள் மூலமாகச் செய்யப்படுகின்றன. அதற்கென்று ஜூனியர் என்ஜினீயர் இருக்கிறார். ஹைவேஸ் டிவிஷனல் என்ஜினீயர் பொறுப்பாக இருந்து பணியைச் செய்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷனைப் பொறுத்த வரையில் பி. டபிள்யு.டி அதிகாரிகள் உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் இந்த வேலையைச் செய்கிறார்கள்.

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை யார் நிறைவேற்றுகிறார்கள் என்பது என்னுடைய கேள்வி அல்ல. யார் மூலமாக சிமெண்ட் ஒதுக்கப்படுகிறது ? ஃபுட் ப்ரொடக்ஷன் மூலமாகச் செய்யப்படும் வேலைகளுக்கு அந்த இலாகாவிலேயே அலாட் செய்கிறார்கள். இந்த இலாகாவில் செய்யப்படும் வேலைகளுக்கு அப்படி கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா ?

THE HON. SRI P. KAKKAN : No complaint has so far been received from the local officers to the effect that the progress of the execution of the work is held up due to inadequate supply of cement. என்று தகவல் வந்திருக்கிறது. அந்த மாதிரி கொடுக்கப்படவில்லை என்று தகவல் கிடையாது. தாசில்தார் தான் வருகிற சிமெண்ட்டை அலாட் பண்ணுகிறார்கள். கலெக்டர் அவர்கள் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் அலாட் செய்கிறார்கள். அதன் மூலம் தான் செய்யப்படுகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : In view of the fact that the minor irrigation works are being executed through panchayat unions, may I request the Government to enhance the allotment that is being made to the panchayat unions so as to enable the panchayat unions to meet their requirements of cement?

THE HON. SRI P. KAKKAN : If the hon. Member puts a separate question, I will answer it.





திருமதி சி. குழந்தையம்மாள் : தலைவர் அவர்களே, மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமுக்காக சிமெண்ட் கேட்டபோது அது பற்றாக் குறை காரணமாகவும், எமர்ஜென்சி காரணமாகவும், அதற்கு சிமெண்ட் அதிகமாக உபயோகப்படுத்தக் கூடாது என்று காரை யிலே கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் இனிமேலாவது ஓரளவு சிமெண்ட் கிடைக்க நம்முடைய கட்டுப் பாட்டைத் தளர்த்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : சிமெண்ட் தாராளமாக இருக்கும்போது நிச்சயமாக கட்டுப்பாட்டைத் தளர்த்துவார்கள்.

திரு. முனு. ஆதி : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடம் போய் விவசாயிகள் கேட்கும்போது தாசில்தாரிடம் போங்கள் என்று சொல்லுகிறார். தாசில்தாரிடம் போய் கேட்கும் போது கமிஷனரிடம் போங்கள் என்று அவர் சொல்லுகிறார். விவசாயிகளுக்கு சிமெண்ட் கொடுக்கப்படுவதில்லை. விவசாயி களுக்கு சிமெண்ட் கிடைக்க வேறு ஏதேனும் செய்ய அரசாங்கத் திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : பஞ்சாயத்து யூனியனில் கமிஷனராகப் பணியாற்றுவது டெபுடி கலெக்டர் தான். அவர்கள் நல்ல முறை யில பணியாற்றுகிறார்கள். பொறுப்பு கமிஷனருக்கு இருக்கிறது பஞ்சாயத்து யூனியன் வேலையை கவனிக்க அவர்கள் தான் இதை கவனிப்பார்கள். ஆகவே இப்போது இருக்கும் திட்டத்தை மாற்றுவதற்கில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Highways Research Station*

* 621 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) whether any ' no objection ' certificates were obtained by the Highways Research Station from the Employment Exchange during 1962–63 and the posts to which such certificates were taken and when they were taken; and

(b) the details as to how the certificates were utilised and selections made?

THE HON. SRI V. RAMAIAH : (a) No.

(b) Does not arise.

### சென்னை கன்னியாகுமரி கரையோர சாலை

* 622. கேள்வி—திரு. முனு. ஆதி :
திரு. கி. நாராயணசாமி பிள்ளை : } கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை, கன்னியாகுமரி கரையோர சாலையை மத்திய பெருஞ்சாலையாக்கும் திட்டம் குறித்து மத்திய அரசாங்கத் திடமிருந்து தகவல் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) இத்திட்டம் நிறைவேறுவதில் ஏற்பட்டுள்ள தடங்கல் என்ன ?

(உ) எப்போது இத்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசம் ?

THE HON. SRI V. RAMAIAH: (a) to (c): The East Coast Road Scheme is one among the several schemes recommended to the Government of India for inclusion in the Third Five-Year Plan for National Highways. The Government of India, however, due to limited funds, did not accommodate this scheme in the Third Five-Year Plan for National Highways in this State. They were again addressed in the matter with no better results. Pending approval of Government of India, this Government sanctioned the investigation and preparation of plans and estimates for the scheme. According to the preliminary survey, the cost of the scheme is expected to be Rs. 9.25 crores. Meanwhile to accommodate the enormous increase in industrial and defence traffic during the past decade a scheme for improvements to roads in and around industrial areas to the tune of Rs. 10 crores has been drawn up and the Government of India have been addressed for treating the works comprised in the Scheme as Centrally sponsored schemes and grant financial assistance to the extent of Rs. 10 crores. This Industrial Development Road Scheme includes provision of bridges at major river crossings, and upgrading the southernmost portion to provide continuity for utilising the existing roads on the East Coast. The work will be taken up should the Government of India agree to give necessary financial assistance.

**திரு. முனு. ஆதி :** தலைவர் அவர்களே, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிடைக்காது என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். அதை மேலும் மாநில அரசாவது அக்கறை எடுத்து நான்காவது திட்டத்திலாவது எடுத்துக்கொள்ள உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** மாநில அரசு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க நிச்சயமாக அக்கறை எடுப்பது மாத்திரமல்ல, என்னுடைய முயற்சி இந்த மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே வேலையைத் தொடங்க வேண்டும் என்பது. அதற்கான முயற்சிகளெல்லாம் எடுக்கப்பட்டு வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவான பிறகு சென்னை நகரத்தில் இருக்கக்கூடிய எல்லோருக்கும் தெரியும், இங்கே ஏராளமாக தொழில்கள் வந்த பிறகு தேவையே கடுமையாக வளர்ந்திருக்கிறது. இண்டஸ்ட்ரியல் ரோட்டையெல்லாம் அதிகப்படுத்த வேண்டும், அதே நேரத்தில் பலப்படுத்தவேண்டும், இன்னும் ஏராளமாகப் போடவேண்டும் என்ற தேவை இருக்கிறது. அதையெல்லாம் பரிசீலனை செய்யும்போது நமது மாகாணத்தைப் பொறுத்த வரையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏராளமாக பணம் ஒதுக்கவேண்டும், ஈஸ்ட் கோஸ்ட் ரோடைப் பொறுத்த வரையில் விரைவாக நடத்த வேண்டுமென்று இன்வெஸ்டிகேஷன் நடத்தி முடித்திருக்கிறார்கள். இன்றைக்கு சில ஜில்லாக்களில் போய் பார்த்தால் மாகாண அரசாங்க நிதியைக் கொண்டு ஆங்காங்கு ரோடை சீர்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மொத்தமாக சீர்பெற்றாக வேண்டும் அதற்கு விசேஷ கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறோம்.



**திரு. மா. இராசாங்கம் :** மதுரையிலிருந்து குமுழிக்கும் திண்டுக்கல்லிலிருந்து குமுழிக்கும் போகும் ஸ்டேட் ஹைவேஸ் ரோடை. . . .

MR. SPEAKER: This question does not arise out of the main question. The main question relates to the coastal road from Madras to Kanyakumari.

**திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம் :** தூத்துக்குடி துறைமுக அபிவிருத்திக்காகவும், சேதுசமுத்திரத் திட்டத்தை விரைவில் அமல் நடத்தவும் இந்த ரோடு மிக அத்தியாவசியமாக இருக்கிறது. ஆகவே, முதலில் இந்த ரோடை எடுத்து வேலை செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா :** இதையெல்லாம் மனதில் வைத்துத் தான், அதே நேரத்தில் மாகாணத்தில் இருக்கிற மற்ற தேவைகளை வைத்துத்தான் திட்டம் உருவாக்குகிறோம். மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மூன்று வருஷங்களுக்கு முன்பு இந்த ரோடுகளைப் பொறுத்தவரையில் மத்திய அமைச்சர் ஸ்ரீமான் ராஜ்பகதூர் அவர்கள் சொன்னார்கள், சேது சமுத்திர ரஸ்தாவைப் போடவேண்டுமென்று சொல்லும்போது, 'ராமையா அவர்கள் இந்த ரோடைப் போடவேண்டுமென்று சொல்லுகிறார், மற்ற ரோடுகளையெல்லாம் விட்டு விட்டு இந்த ரோடைப் போட்டு விடுவோமா, என்று சொன்னார். அரசாங்கம் ஈஸ்ட் கோஸ்ட் ரோடை மாத்திரம் நினைக்கவில்லை. நமது திட்டங்கள் மாகாண தேவைக்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கிறது. ஈஸ்ட் கோஸ்ட் ரோடையும் போட முயற்சி எடுத்திருக்கிறோம். தூத்துக்குடி துறைமுகங்கள், சேதுசமுத்திரத் திட்டம் மட்டுமல்ல, அதை விட ஃபிஷரீக்கு, கடலூர் பிராந்திய மீனவர்களுக்கு உபயோகமாக, மீன் பிடி தொழில் வேகமாக வளர மிகவும் அவசியம் என்று வற்புறுத்திக் கூறிக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்த கிழக்குக்கரை ஓர ரோடு, நான் நேற்று குறிப்பிட்டது போலவே. பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும், இப்பொழுது இருக்கிற அவசர நிலைமைக்கும் மிகவும் அவசியம். ஆகவே, இதை அவசர கால திட்டமாகக் கருதி, மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே இதையும் அனுமதிப்பதற்கு சர்க்கார் முயற்சிப்பார்களா ?

MR. SPEAKER: Hon. Members are repeating only what others are saying.

**திரு. எம். தண்டாயுதபாணி :** இந்தச் சாலையின் மொத்த நீளம் எவ்வளவு? மாகாண அரசின் நிதியைக் கொண்டு எந்தெந்த ஜில்லாவிலே வேலை செய்யப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** மொத்த நீளத்தினுடைய விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. ஆனால் எனக்கு ஞாபகம், இராமநாதபுரம் ஜில்லாவிலும், தஞ்சை ஜில்லாவிலும் மாகாண அரசாங்கத்தினுடைய கொஞ்ச நிதியைக் கொண்டு அதைப் பழுது பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் நினைக்கக்கூடிய தேவையை பூர்த்தி செய்யக்கூடிய முறையிலே அந்த ரோடு அமையும்.

**திரு. எம். எஸ். செல்வராஜ் :** இந்த ரோடினுடைய முழு பாகமும் போடப்பட்டு பூர்த்தியாகி விட்டதா? ஸ்டேட் ஹைவேஸிலாவது அவசரமாக முழு பாகத்தையும் எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமையா :** தனியாகக் கேள்வி போட வேண்டும்.

### மாணவர் உணவு விடுதிகள் (அரிசனங்கள்)

* 625 **கேள்வி—திரு. இரா. நாராயணன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசாங்க பள்ளிகளில் உள்ள உணவு விடுதிகளில் உள்ள எல்லா மாணவர்களும் சொறி ஏற்பட்டு அவதிப்படுவது உண்மையா?

(இ) எல்லா உணவு விடுதிகளுக்கும் மருந்துகள் கொடுக்கப்பட்டு வருகிறதா?

(உ) எதனால் இந்த வியாதி பரவி வருகிறது என்பதை அரசாங்கம் விசாரித்ததா?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) அரிசன நலத்துறையினால் அரசாங்க நிதியிலிருந்து நடத்தி வரும் ஹாஸ்டல்களை கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறேன். கல்வித் துறையினர் இந்த ஹாஸ்டல்களை நடத்துவதில்லை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், மூப்பைக்குடிக்காடு அரசாங்க மாணவர் விடுதியில் இருந்த உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் சென்ற ஆண்டு சொறி, சிரங்கினால், பாதிக்கப்பட்டிருந்ததாக அரசினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு எந்த ஹாஸ்டலிலிருந்தும் அல்லாது மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படவில்லை.

(இ) அரசாங்க விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களுக்கு நோய் கண்டால், அவர்கள் அருகிலுள்ள மருத்துவமனைக்கோ அல்லது உள்ளூரிலுள்ள அரசாங்க மருத்துவ மனைகளுக்கோ எடுத்துச் செல்லப்படுகிறார்கள். இம்மாநிலத்திலுள்ள அரசாங்க விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கு அவ்வப்போது மருத்துவ பரிசோதனை செய்வது பற்றியும் அரசாங்கம் யோசித்து வருகிறது.

(உ) ஆம். மருத்துவ அதிகாரிகளின் அறிக்கைப்படி சொறி, சிரங்கு பரவுவதற்கான காரணங்கள் கீழ் வருமாறு:—

(1) இடவசதியும், காற்றோட்டமும், வாய்ந்த சுகாதார சூழ்நிலையின்மை

(2) சிறுவர்கள் குளிக்கவும், துணிகள் துவைக்கவும், துணிகளை உலர்த்தவும் போதிய வசதிகள் இன்மை;

(3) சலவைத் தொழிலாளர்களின் உடல் பரிசீலனை செய்யப்படாமை; துணிகளைத் துவைக்கையில் அவற்றிலுள்ள கிருமிகள் முற்றிலும் நீங்காத வகையில் துவைத்தல்;

(4) இச் சிறுவர்களுக்கு 'பி' விட்டமின் சத்துக் குறைந்திருத்தல்.



**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்தக் குறிப்பிட்ட தமிழ் நாட்டு ஹரிஜன ஹாஸ்டலை அரசாங்கமே எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு திருச்சி ஜில்லா கலெக்டர் சிபார்சு செய்திருக்கிறார்களா? அரசாங்கம் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்தது? இதிலே தங்கியிருக்கக்கூடிய மாணவர்களுக்கு நோய் அதிகரிப்பதற்குக் காரணம் உணவு சத்து பற்றாக்குறை. விலைவாசி உயர்ந்திருக்கக் கூடிய காரணத்தினால், சர்க்கார் அளிக்கக்கூடிய உதவித் தொகையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** லப்பைக்குடி ஹாஸ்டல் அரசாங்க ஹாஸ்டல் இல்லை. தனிப்பட்டவர் நடத்தும் ஹாஸ்டல்தான். இப்பொழுது ஒரு மாணவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 16 கொடுத்து செலவிடப்படுகிறது. நிதிநிலைமைக்கு தக்கபடிதான் கொடுத்து உதவி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா ஹாஸ்டல்களிலும் இம்மாதிரி complaint இல்லை. இந்த ஒரு ஹாஸ்டலைப் பொருத்த மட்டில் தான் இந்த மாதிரி complaint இருக்கிறது. மாணவர்கள் சுத்தமாக இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும்.

**திரு. இரா. நாராயணன் :** இந்த உணவு விடுதிகளில் போதுமான இடமில்லாமல் இட நெருக்கடி காரணமாக சொறி, சிரங்கு உண்டாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அம்மாதிரி இட நெருக்கடியை தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது விடுதிகள் வருடா வருடம் அதிகமாக ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. விடுதிகள் ஏற்படும் பொழுது, மாணவர்கள் ஜாஸ்தியாக வருகிறார்கள். மாணவர்களை குறைத்து சேர்த்தோமானால், அவர்களுடைய படிப்பு கெட்டு விடும். ஆகவே, கூடுதலாக மாணவர்களை சேர்க்கவேண்டியிருக்கிறது. இருந்தாலும், நிதி நிலைமைக்கு தக்கபடி ஒவ்வொரு ஜில்லாவிலும் விடுதிகள் கட்டவேண்டும் என்று நாம் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நாட்டிற்கு சோதனை வந்தால் அதிகப்படியான ஹாஸ்டல்கள் புதியதாக கட்ட முடியவில்லை. நிதி நிலைமை நன்றாக இருக்கும் காலத்தில் மேலும் விடுதிகள் கட்டுவது பற்றி அரசாங்கம் யோசிக்கும்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** இம்மாதிரி வியாதி பரவி வருவதற்கு பல்வேறு காரணங்களை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து பார்த்து தெரிவித்தார்கள். அந்தக் காரணங்களை அவைகளை நீக்குவதற்கு அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** இப்பொழுது தான் பரிசீலனை செய்து காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல்தான் அதுபற்றி ஆலோசனை செய்யவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: இப்படிப்பட்ட தொத்து வியாதிகள் வருவதற்கு 'வைடமின் டெபிஷியன்ஸி-யும் ஒரு காரணம் என்று சொன்னார்கள். இப்பொழுது 'வைடமின் டாப்லட்ஸ்' விலைக்கு வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் ஹரிஜன மாணவர்களுக்கு 'வைடமின் டாப்லட்ஸ்' வாங்கிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இந்த ஒரு விடுதியிலுள்ள மாணவர்களுக்குத்தான் இம்மாதிரி சொறி, சிரங்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்த ஒரு விடுதி மாணவர்களுக்கு மட்டும் 'வைடமின் டாப்லட்ஸ்' வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்வதுபற்றி யோசிக்கலாம். மற்ற விடுதிகளில் உடல் நலம் நன்றாக இருக்கக்கூடிய மாணவர்களுக்கும் வைடமின் டாப்லட்ஸ் வாங்கிக் கொடுக்க தேவையில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா: விலைவாசி உயர்வை அனுசரித்து உதவித் தொகை அதிகமாகக் கொடுப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. பூ. கக்கன்: அதைப்பற்றித்தான் திரு. கலியாண சுந்தரம் கேட்ட கேள்விக்கு பதில் சொன்னேன். இப்பொழுது இருக்கிற நிதி நிலைமையில் உதவித் தொகையை உயர்த்துவதற்கு இல்லை.

திரு. சா. கணேசன்: போஷாக்கு உணவில் குறைவு என்று ஒரு விதமான புகார் வந்திருப்பதன் காரணமாக, தீட்டப்பட்ட அரிசிக்குப் பதிலாக, முழுவதும் கைக்குத்தல் அரிசியைக் கொடுத்தால், அதன் மூலம் ஓரளவுக்கு கிட்டத்தட்ட போதுமான அளவுக்குக் கூட போஷாக்கு கிடைத்துவிடுமே? அதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு செயல்படுத்துமா? அல்லது செயல் படுத்துகிறதா?

கனம் திரு. பூ. கக்கன்: கனம் அங்கத்தினர் நல்ல ஆலோசனை கூறியிருக்கிறார்கள். அதன்படி தான் அரசாங்கம் செய்கிறது. எங்கெல்லாம் கைக்குத்தல் அரிசி கூட்டுறவுத் துறை மூலமாக கொடுக்கமுடியுமோ, அங்கெல்லாம் விடுதிகளுக்கு கைக்குத்தல் அரிசிதான் கொடுக்கிறோம், மாணவர்கள் கைக்குத்தல் அரிசிதான் சாப்பிடுகிறார்கள். அதிலும் காலேஜ் மாணவர்கள் கைக்குத்தல் அரிசி சாப்பிடுவதற்கு கொஞ்சம் அசிரத்தை காட்டுகிறார்கள். அவர்களுக்கு கைக்குத்தல் அரிசி சாப்பிடுவது நல்லது என்று புத்தி சொல்லுகிறோம். எங்கெல்லாம் கைக்குத்தல் அரிசி 'அவைலபிள்' ஆக இருக்கிறதோ அங்கெல்லாம் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்.

## ஆடு—கம்பளி விஸ்தரிப்பு நிலையங்கள்

* 624 கேள்வி—திரு. கி. நாராயணசாமி பிள்ளை: கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் பதினாக எங்கெங்கே [Sheep and wool centres] அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?



கனம் திரு. பூ. கக்கன்: 1964–65-ல் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை பகுதியில் ஆடு கம்பளி விஸ்தரிப்பு நிலையங்கள் மூன்றினை ஏற்படுத்த அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது. அங்கு 1962–63-ல் அனுமதிக்கப்பட்ட ஆடு கம்பளி விஸ்தரிப்பு நிலையங்கள் மூன்று ஏற்கெனவே செயலாற்றி வருகின்றன. புதியதாக ஏற்படுத்தவிருக்கும் ஆடு கம்பளி விஸ்தரிப்பு நிலையங்கள் மூன்றினை எங்கு நிறுவுவது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

The Government have sanctioned the establishment of three Sheep and Wool Extension Centres during 1964–65 in Tiruvanna-malai area in North Arcot where the three Sheep and Wool Exten-sion Centres sanctioned during 1962–63 are already functioning. The exact places where the three Sheep and Wool Extension Centres are to be newly established have not yet been finalised.

திரு. இரா. நெடுஞ்செழியன்: கனம் அவைத்தலைவர் அவர்களே, இந்தத் தொழில் நிலையங்களுக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப் பட்டிருக்கிறது, ஆறுக்கும் சேர்த்து?

THE HON. SRI P. KAKKAN: The amount is not available.

திரு. சா. கணேசன்: முன்பு வந்த கேள்வி மூலம் இம்மாதிரி ஆடுகள் மூலமாக ரோமம் உற்பத்தி செய்கிற தொழிலுக்கு ஆடுகளை வளர்ப்பதற்காக சில நாடுகளிலிருந்து வந்த ஆடுகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை மனதில் வைத்து, உஷ்ணப் பிராந்தியங்களுக்கு ஒருவகை ஆடுகள் என்றும், குளிர்ந்த பிராந்தியங்களுக்கு வேறு வகை ஆடுகள் என்றும் பிரித்து, அதன்படி செயல்படுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: ஆடுகள் வளர்ப்பதிலே பயிற்சி பெற்று, நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் தான் நம்முடைய அரசாங்கத்திலே உத்தியோகம் பார்க்கிறார்கள். ஏதோ ஒரு இடத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த சில ஆடுகள் சீதோஷ்ணஸ்திதியின் மாறுதலின் காரணமாக திடீரென்று இறந்துவிட்டன. நிபுணர்கள் பார்த்து எங்கெல்லாம் வைக்கலாம் என்று சொல்லுகிறார்களோ அந்த இடத்தில் பார்த்துத்தான் அரசாங்கம் வைக்கிறது.

திரு. பி. கே. மூக்கையா தேவர்: 'ஷீப் ப்ரீடிங் செண்டர்' மதுரை ஜில்லாவிலே கொடைக்கானலில் வைப்பதாக இருந்தது. அந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது என்பது உண்மையா? அதனுடைய சீதோஷ்ண ஸ்திதிதான் நல்ல முறையில் அமைந்திருக்கிறது, நல்ல முறையில் அங்கே வாய்ப்பு இருக்கிறது என்று அந்த இடம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டது. மறுபடியும் அதுபற்றி பரிசீலனை செய்து அந்த இடத்திலேயே வைப்பதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. பூ. கக்கன்: கொடைக்கானலில் வைக்கவேண்டும் என்று தான் ஏற்கனவே மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபார்சு செய்திருக்கிறது. மத்திய அரசாங்கம் இடம்

[ 22nd July 1964

கேட்டதற்கு, நாங்கள் இடம் கொடுப்பதற்கும் ஒத்துக்கொண் டோம். இபபொழுது சமபத்தில் இந்த மாநிலத்திற்கு வந்திருந்த மத்திய உணவு விவசாய மந்திரி அவர்களிடமும் சொல்லியிருக் கிறோம். அநேகமாக சாதகமாக இருக்கும் என்று நான் நமபு கிறேன்.

MR. SPEAKER : I think the House has no objection to extend the question till the remaining questions are disposed of.

### போலீஸ் கமிஷனருக்குரிய அதிகாரங்கள்

* 625 கேள்வி.— திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

சென்னை மாநகரில் போலீஸ் கமிஷனருக்கு அளிக்கப்பட்டு இருக்கும் மாஜிஸ்டிரேட்டுக்குரிய அதிகாரங்களை ரத்து செய்யும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.

9-30 a.m. திரு. இராம. அரங்கண்ணல் : நீதியும் நிர்வாகமும் வெவ்வேறாக இருக்க வேண்டும் என்ற கொள்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற நேரத்தில் சென்னை மாநகரத்தில் மட்டும் போலீஸ் கமிஷனருக்கு நீதி அதிகாரங்கள் வழங்கி இருப்பானேன் ? அது நல்லதா ?

கனம் திரு. பூ. கக்கன் : நல்லது என்று அரசாங்கம் நினைக் கிறது. அதனால் தான் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : இப்படி நல்லது என்று சர்க்கார் நினைக்கிற காரணத்தால் 24 மணி நேரத்திற்குள் பக்கத்தில் இருக் கிற மாஜிஸ்டிரேட்டிடம் யார் கைது செய்யப்பட்டாலும் போலீஸ் அதிகாரிகள் ஒப்படைக்க வேண்டுமென்று அடிப்படை உரிமை மற்ற இடங்களில் இருந்தும் கூட, வெள்ளைக்கார நாட்டில் இருப் பது போல, சென்னை மாநகர மக்களை மட்டும் 14 நாட்களுக்கு மேல் சிறையில் வைக்கும்படியான நிலைமைகள் அடிக்கடி ஏற்படு கின்றன என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட் டிருக்கிறதா ? அந்த அதிகாரத்தை எடுப்பதற்கு இனிமேலாவது அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு பூ. கக்கன் : முன்பு எல்லாம் அடிக்கடி இந்த மாதிரி கைது செய்யும் பழக்கமே கிடையாது. ஆனால் இப்பொழுது அன் பாகள் அந்தமாதிரி சூழ்நிலையை அடிக்கடி உண்டுபண்ணுவதால், நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது.

(கே. 626 எடுத்துக்கொள்ளப்பட்டது. கே. 625 சம்பந்தமாக உப-கேள்விகள் போடுவதற்கு பல அங்கத்தினர்கள் எழுந்தனர்.)

MR. SPEAKER : The time is already up. There are fifteen more questions.

SRI K. A. MATHIALAGAN : This is an important and serious question. The Hon. Speaker should allow more time.



22nd July 1964]

MR. SPEAKER : The hon. Member can raise it as resolution. The time alloted for questions is already over.

THE HON. SRI R. VENKATARAMAN : I think there is a misunderstanding in the House. Where the hon. Members dis-agree with the policy of the Government, they can raise it in the discussion on the Supplementary Demand and they cannot raise it by putting questions.

MR. SPEAKER : Yes. I have not finished even half the number of questions in the list.

புலவர் கா. கோவிந்தன் : கேள்விகளைக் குறைத்துப்போட்டால் உப கேள்விகள் போடுவதற்கு வாய்ப்புக் நலமாக இருக்கும். உப கேள்விகள் போடுவதற்கு வாய்ப்புக் கொடுத்தாலதான் அரசாங்கத்தினிடமிருந்து நாங்கள் விளக்கம் பெற முடியும்.

கனம் சபாநாயகர் : அப்படிச்செய்தால் கேள்விகளுக்கெல்லாம் சீக்கிரமாக பதில் வருவதில்லையென்று அங்கத்தினாகள் சொல் வார்கள் The hon. Member can get the rule amended so as to provide for more hours for questions.

புலவர் கா. கோவிந்தன் : நான் கையூக்குவதை கனம் சபா நாயகர் அவர்கள் பார்ப்பதில்லை. என்பக்கமும அவர்கள் திரும்பு வது இல்லை.

MR. SPEAKER : Every day we are taking thirty questions. Usually, I am allowing more number of supplementary questions. Usually, one or two supplementaries are allowed. Especially, Pulavar Govindan is given the largest number of chances and the hon. Member cannot complain. Hereafter, I will cut down his chances and distribute his chances among others. If the hon. Member wants, he can give notice of a Resolution and this cannot be raised by a question.

### பஞ்சாயத்து யூனியன்

* 626 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் உள்ள காவேரிப்பாக்கம், நெமலி ஆகிய இரு பஞ்சயத்து யூனியன்களிலிருந்து சில பஞ்சாயத்து கிராமங்களை அரக்கோணம் பஞ்சாயத்து யூனியனில் சேர்க்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : இவ்விஷயம் பரிசீலனையில் இருந்து வருகிறது.

SRI C. CHIRANJEEVULU NAIDU : May I know how many Panchayat Unions are going to be disturbed like this and what is the decision of the Government on this point now?

THE HON. SRI S. M. A. MAJID : It is under examination of the Government. I have no specific figures as to the number of Panchayat Unions to be disturbed at present.

**திரு. எம். தண்டாயுதபாணி:** இதுபோன்று பிரிக்கப்பட்ட பஞ்சாயத்துக்கள் எல்லா இடங்களிலும் இருப்பதால், தேர்தலுக்கு முன்பாகப் பிரித்து, தேர்தல் நடத்தும் உத்தேசம் அரசாங்கத் துக்கு உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** சில நாட்களுக்கு முன்பு இதே மாதிரிக் கேள்விக்குப் பதில் அளிக்கும்பொழுது, இப்பொழுது முடிவு எடுப்பதற்கில்லை, எலெக்ஷன் கமிஷன் அசெம்பிளி, பார்லி மெண்ட் தொகுதிகளைப் பிரிவினை செய்து, அதற்குப் பின்புதான் முடிவு எடுக்க முடியும் என்று தெரிவித்திருக்கிறேன்.

**திரு. ம. கமலநாதன்:** இப்படி சில பஞ்சாயத்துக்கள் ஒரு பஞ் சாயத்து யூனியனிலிருந்து மற்றொரு பஞ்சாயத்து யூனியனுக்குச் சேருகிற சமயத்தில், அந்தப் பஞ்சாயத்து யூனியன் அந்தப் பஞ்சா யத்துக்களை ஏற்றுக் கொள்வதற்கில்லை என்று தீர்மானம் போட்டு நிறைவேற்றி அனுப்பினால், அரசாங்கம் என்ன செய்யும்?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இவைகளை எல்லாம் கலெக்டர் அவர்களுக்கு மறுபடியும் அனுப்பி, அவர்கள் என்ன சொல்லுகிறார் கள் என்று அறிந்து, சர்க்கார் முடிவு எடுக்கும்.

***627 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன்:** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஒரு பஞ்சாயத்து யூனியனிலுள்ள திட்டங்களுக்கு ஒதுக்கப் பட்ட தொகையில் செலவழியாத தொகையை தேவைப்படும் மற்றைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு மாற்றும் உத்தேசம் உண்டா?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத்:** இல்லை.

## குடிதண்ணீர் அளிப்பு (தூத்துக்குடி)

***628 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக் குப் பதிலளிப்பாரா—

(அ) தூத்துக்குடி துறைமுகத்திற்கு ஆற்றுத் தண்ணீர் சப்ளைக்குரிய திட்டத்தில் ஆற்றிற்கும் துறைமுகத்திற்கும் இடையி லுள்ள கிராமங்களுக்கும் (wayside villages) குடி தண்ணீர் அளிப் பதற்கு வகை செய்யப்படுமா?

(இ) அப்படி பலன் பெறும் கிராமங்கள் எவை எவை?

**கனம் திரு. வெ. ராமையா:** (அ) இவ்விஷயம் ஆலோசனையி லுள்ளது.

(இ) இத்திட்டம் சம்பந்தமான விவரங்களை இன்னும் முடிவு செய்யவில்லை.





**திரு. எம். எஸ். செல்வராஜன்:** அந்தக் குடிதண்ணீர்த் திட்டம் தூத்துக்குடி துறைமுகத்திற்கு மாத்திரமா அல்லது விஸ்தரிக்கப் படும் தூத்துக்குடி நகருக்கும் அங்கு வளர இருக்கும் தொழிற் சாலைகளுக்கும் சேர்த்து அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** தூத்துக்குடி ஹார்பருக்கு திட் டத்தைத் தயாரித்து அதற்கு மேலே அந்த நகரம் தொழிற் துறை யிலே வளர்ச்சியடையும்போது அதற்கு எவ்வளவு தேவைப்படும் என்று பரிசீலனை செய்யப்படும்.

**திரு. சி. பொன்னுசாமி:** தூத்துக்குடித் துறைமுகத்திற்கு தண்ணீர் வசதிக்கும் அந்த நகரத்தில் வளரும் தொழில்களுக்கும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்தும் தாம்பிரபரணியிலிருந்தும் இரண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அது வரும் பகுதிகளி லுள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சர்வே செய்திருக்கிறார்களா? அப்படியானால் அந்த கிராமங்கள் எல்லாம் இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப் படுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** அவையெல்லாம் பரிசீலனை யிலிருக்கிறது என்று நான் சொன்னேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** தூத்துக்குடி குடிதண்ணீர் திட்டத்தை எப்படி அமல் நடத்த வேண்டுமோ அதைப்போலவே பொதுவாக மத்திய அரசாங்கம் நடத்தும் எல்லாத் திட்டங் களிலும் அருகிலுள்ள பகுதிகளில் மக்கள் குடியேறி வசிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எங்கெல்லாம் குடிதண்ணீர் திட்டத்தை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளுகிறார்களோ அங் கெல்லாம் அருகிலுள்ள கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்யக்கூடிய ஒரு இணைந்த திட்டத்தை தயாரிக்கவேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் நமது அர சாங்கம் கோருவார்களா?

**கனம் திரு. வெ. ராமையா:** இது ஒரு பொதுவான கேள்வி. எங்கு மத்திய அரசாங்கம் தொழிற்சாலைகள் வைக்கின்றதோ அது போன்ற இடங்களில் பெரிய திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அருகிலுள்ள கிராமங்களுக்கு குடிதண்ணீர் கொடுக்கவேண்டுமென் பதை பரிசீலனை செய்யவேண்டுமென்று சொன்னார்கள். கனம் அங் கத்தினர் தனிப்பட்ட தொழிற்சாலைகளைக் குறித்து எனக்கு எழுதி னால், பரிசீலனை செய்து மத்திய அரசாங்கத்திற்கு எழுதி நட வடிக்கையெடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படும்.

## அரசாங்க ஊழியர்களுக்கு வீட்டு வசதி

***629 கேள்வி—திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கும், [illegible] ஊழியர்களுக்கும் அரசாங்கம் கட்டிடங்களைக் கட்டி வாடகைக்கு விடும் உத்தேசமுண்டா?

[22nd July 1964

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir, schemes for provision of rental storeyed apartments/flats for low-paid State Government employees (drawing less than Rs. 500 per mensem) and for provision of open developed plots for Last Grade Government Servants have already been taken up by the State Housing Board, for execution.

A statement showing the details of the several projects, is placed on the Table of the House.

### திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அணைக்கட்டு

* 630 கேள்வி.—திரு. நா. சௌந்தரபாண்டியன் : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பணகுடி மலையிலுள்ள காளிச் சாம்பான் அணைக்கட்டை பழுது பார்க்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டதா ?

(இ) ஆமெனில், விவரமென்ன ?

THE HON. SRI P. KAKKAN : (a) At present there is no proposal for carrying out repairs to the Kalisamban anicut.

(b) Does not arise.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : அந்தக் காளிச்சாம்பான் அணை பழுதுபார்க்கப்படாமல் இருப்பதினால் பல நூற்றுக்கணக்கான நஞ்சை நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்காமல் இருப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ? கூடிய சீக்கிரம் அதை எடுத்து நடத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எற்கனவே இதை ரிப்பேர் செய்ய வேண்டுமா என்று பரிசீலனை செய்யப்பட்டபொழுது கீழே ஒரு அணைக்கட்டுக் கட்டுவதால் அது தேவையில்லையென்று அரசாங்கம் கருதிற்று. கிட்டத்தட்ட 1,200 ஏக்கர் பாசனம் பெறுவதினால் அதைச் செய்யவேண்டியதில்லையென்று நான் நினைக்கின்றேன்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : பணகுடி மலையின் அடுத்த பக்கத்திலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகிற தண்ணீர் பாலாற்றிலிருந்து கடலில் போய் விழுகிறது. அதைப் பரிசீலனை செய்து அந்தத் தண்ணீரை இந்தப் பக்கத்திற்குத் திருப்புவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நம்முடைய மாகாணத்திலே கிடைக்கக் கூடிய தண்ணீரையெல்லாம் பயன்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் அவா. அதைப் பரிசீலனைசெய்து கன்னியாகுமரி மாவட்டத்தில் முக்கியமான திட்டங்களை அரசாங்கம் மேற் கொண்டுவருகிறது. கனம் அங்கத்தினர் குறிப்பிட்டதுபோல

* Printed as Appendix I on pages 654–655



22nd July 1964]

சாத்தியமிருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்வதற்குப் பொதுப் பணித்துறை அமைச்சரிடம் தனிக்கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

### பக்கிங்காம் கால்வாய்

* 631 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பக்கிங்காம் கால்வாயில் படகு போக்குவரத்துக்காக என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன ?

கனம் திரு. வெ. ராமையா : சபையில் ஓர் அறிக்கை* வைக்கப்பட்டிருக்கிறது.

A paper* is placed on the table of the House.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்த தூர் வாரி இயந்திரங்கள் அரசாங்கப்பட்டறையில் வேலை நடக்கிறதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது முடியும். அது எப்பொழுது வேலை செய்ய ஆரம்பிக்கும் என்பதை அறியலாமா ?

கனம் திரு. வெ. ராமையா : மெஷின் வந்து விட்டது. எப்பொழுது முடியும் என்று திட்டவட்டமாகச் சொல்லுவதற்கில்லை.

### நெடுஞ்சாலைத் துறை

* 632 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு : கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நெடுஞ்சாலை ( Highways ) துறையில் பத்து, பதினைந்து ஆண்டுகளாகப் பணிபுரியும் ரோடுரோலர் டிரைவர்களை பர்மனென்ட் செய்யாததன் காரணமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : The Government issued orders provincialising 1,110 posts of workers in the non-provincialised work charged Establishment of the Highways and Rural Works Department. According to this, the strength of Road Roller drivers has been fixed as 148 permanent posts and 74 temporary posts. The services of temporary drivers will be made permanent according to their seniority as and when vacancies occur in the 148 permanent sanctioned posts. The redistribution of the posts for the various circles had to be examined by the Chief Engineer (Highways and Rural Works) in consultation with the Superintending Engineer and the Director, Highways Research Station. The Chief Engineer has since issued final orders. Now the Superintending Engineers have called for the Service Registers and Service

* [illegible]-ம் பக்கங்களில் இரண்டாவது இணைப்பாக [illegible]

Rolls of the personnel to decide seniority, etc., to enable them to issue orders. Necessary instructions have been issued to the Superintending Engineer and the Director, Highways Research Station to finalise scrutiny and issue early orders.

### அரிசன காலனிக்காக வீட்டு மனை (திண்டுக்கல் தாலுகா).

*633 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டுக்கல் தாலுகா பாளையம், மதுரா, பள்ளப்பட்டி கிராமங்களில் அரிசன காலனிக்காக வீட்டு மனை ஆர்ஜிதம் செய்ய உத்தேசமுண்டா?

(இ) அந்தக் கிராமத்தில் எத்தனை தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் இருக்கின்றன?

**கனம் திரு. பூ. கக்கன்:** (அ) ஆம். திண்டுக்கல் தாலுகாவைச் சேர்ந்த பாளையம் கிராமத்தில் குக்கிராமமாகிய பள்ளப்பட்டியிலுள்ள ஹரிஜனங்களுக்காக வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்வதற்கு கலெக்டரிடமிருந்து வேலைத் திட்டம் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) மேற்படி கிராமத்தில் சுமார் 100 ஹரிஜனங்கள் வசிக்கின்றனர்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** சார், பள்ளப்பட்டி கிராமத்திலிருக்கும் நத்தமே மேலும் ஒரு 100 குடிகளுக்கு அஸைன் செய்யும் அளவுக்கு நிலம் இருந்தும், சாதி இந்துக்கள் பள்ளர்களை விலக்க வேண்டும், பள்ளர்கள் தனியாக வசிக்க வேண்டும் என்ற காரணத்தினால், ஒரு சேரியை உற்பத்தி பண்ண வேண்டும் என்று அரசாங்கத்தை இந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள் என்பது உண்மையா? இதில் அரசாங்கம் நல்ல நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர் சொல்வது எப்படி என்று தெரியவில்லை. நான் அந்த ஜில்லாவாரி விவரம் . எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஏற்கனவே அரிஜனங்களுக்கு ஒரு இடம் பார்த்து இருந்தார்கள். எப்படியோ அந்த நிலத்தை கிருஷ்ணசாமி சேர்வை என்பவர் அஸைன்மெண்ட் வாங்கி விட்டார்கள். அவர் அந்தஸ்து உள்ளவர்தான், பாகப்பிரிவினையின்போது அவருடைய அண்ணாச்சி பணக்காரராகவும், இவர் ஏழையாகவும் ஆகிவிட்டார். அதனால் இதை அவருக்குக் கொடுக்கலாம் என்று கொடுத்து விட்டார்கள். ஆனாலும் இப்பொழுது அதே இடத்தை அரிஜனங்களுக்காக அக்வயர் பண்ண ஏற்பாடு செய்திருக்கிறோம். ஏதோ அரிஜனங்களுக்குக் கஷ்டம் கொடுக்க வேண்டும் என்று செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





**திரு. ப. உ. ஷண்முகம்:** ஒருவருக்கு அடமானம் செய்து விட்டு மீண்டும் அதையே சர்க்கார் விலை கொடுத்து வாங்குவது சரியா? அடமானம் செய்யும் போதே அதைப்பற்றி யோசிக்க வேண்டாமா?

**கனம் திரு. பூ. கக்கன்:** சில அதிகாரிகள் செய்துவிட்டார்கள். அதை எவ்வாறு செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்ய அரசாங்கம் முனைந்திருக்கிறார்கள்.

**திரு. மா. இராசாங்கம்:** சார், கனசேர்வைப் பட்டியில் . . .

MR. SPEAKER: No, let the hon. Member ask about Palayam.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது சாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்கப்படுகிறதா? அப்படி கேட்கவேண்டும் என்று ஆர்ஜிதம் செய்யும் அதிகாரிகளுக்கு அரசாங்கம் ரகசிய உத்தரவு போட்டிருப்பது உண்மையா?

**கனம் திரு. பூ. கக்கன்:** ஜாதி இந்துக்களுக்கு ஆட்சேபணை இருக்கிறதா என்று கேட்பதில்லை. ஆனால் பொதுவாக ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா என்று பார்க்கிறோம்.

### கூட்டுறவு முறையில் வீடுகட்டும் திட்டம்

*634 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் எத்தனை தாலூகாக்களில் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டம் அமுலில் இருக்கிறது?

**கனம் திரு. பூ. கக்கன்:** தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள பன்னிரெண்டு வட்டங்களிலும் கூட்டுறவு முறையில் வீடுகள் கட்டும் திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா:** சார், தலை நகரங்களில் கூட்டுறவு முறையில் வீடு கட்டும் திட்டம் இருக்கிறது. அதை கிராமப்புறங்களுக்கும் விஸ்தரிக்க ஆலோசிக்கப்படுமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இந்த ரூரல் கோவாப்பரேடிவ் ஹவுசிங் ஸ்கீம் பஞ்சாயத்திலே செய்யவேண்டும்.

**திரு. ம. கமலநாதன்:** தலைவர் அவர்களே, இந்த ரூரல் ஹவுசிங் ஸ்கீம் கிராம நத்தம் புறம்போக்கில் வீடு கட்டுபவர்களுக்கு சரியான டைட்டில் கொடுக்க முடியாத சூழ்நிலை இருப்பதால்தான் "failure" ஆகிறது என்பதை அரசாங்கம் உணருமா?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** இத்தனை இடைஞ்சல்களும் இருந்துதான் அது எப்படியோ 'சக்ஸீட்' ஆகவேண்டும்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், இவ்வளவு இடைஞ்சல்களுக்கும் மத்தியில் சில சொஸைட்டிகள் இயங்குவது ஆச்சரியம்தான். அதிலேகூட அவைகளுக்கு அறவே பணம் ஒதுக்குவது [illegible]

22nd July 1964]

யாது. புது சொசைட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன் இருக்கிற சொசைட்டிகளுக்கு பணம் ஒதுககப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** 1964-65-க்கு இரண்டு லட்சம் ரூபாய் ஒதுககியிருக்கிறோம். அதை இப்பொழுது ஐந்து லட்ச மாக உயர்த்தியிருககிறோம்.

**திரு. சி. கொளந்தைசாமி கவுண்டர் :** சார், மலைஜாதிகளுக்கு வீடு கட்ட ஒன்றரை வருஷமாக நானும் அலைந்து பார்க்கிறேன். பள்ளிக்கூடம் கட்ட கட்டிடம் கிடையாது. பனமரத்துப்பட்டி பக்கத்தில் இருக்கிற தும்பல்பட்டியிலே பள்ளிக்கூடத்துக்கு, பஞ்சாயத்து ஆபீசுக்கு, இதற்கு எல்லாம் கட்டிடம் கிடையாது. நானும் தாசிலதாரிடம், கலெகடரிடம் சென்று சொல்லிப்பார்த் தாகி விட்டது. பார்க்கிறோம், பார்க்கிறோம் என்கிறார்களே தவிர, திட்டத்தை செய்யவில்லை. இது விஷயத்திலே சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** இது வீடு கட்டும் திட்டம். பஞ்சாயத்து ஆபீசு, பள்ளிக்கூடம் அது பற்றி என்னுடைய சகா மந்திரிக்கு கேள்வி போட்டால் அவர்கள் பதில் சொல்வார்கள்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, to implement the rules regarding the Rural Housing Scheme properly, will the Government come forward to simplify them and also not insist on the title deeds as is being done now?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, if the society is not satisfied about the title of the person who applies for a loan, then it will become difficult to recover the money from that person. Therefore, generally we insist on a proper title being proved in favour of the person who wants a loan.

**திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை :** சபாநாயகர் அவர்களே, இப்பொழுது வீடு கட்டும் கூட்டுறவு சொசைட்டிகளுக்கு ஐந்து லட்சம் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அநேக சங்கங்கள் பணம் இல்லாததால் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை எப்பொழுது கொடுக்க ஏற்பாடு செய்யப்படும்?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஆர்.சி.எஸ். அவர்களுக்கு இவ்வளவு அளவுக்கு கடன் அப்ளிகேஷன்கள் வாங்கி அனுப்பும் படி உத்தரவு போட்டிருக்கிறோம்.

### *Employment to Scheduled Castes*

* 635 Q.—SRI S. MADHAVAN :
SRI M. KARUNANIDHI : } Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Government have taken steps to implement the recommendations of the Seminar on Employment of Scheduled Castes and Scheduled Tribes; and



22nd July 1964]

(b) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (a) & (b) The recommendations made by the Seminar on Employment of Scheduled Castes and Scheduled Tribes are under consideration.

**திரு. செ. மாதவன் :** செமினாரில் பேசிய பரிவுரை என்ன? அதுபற்றி அரசாங்கத்தின் கருதது என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** பல முக்கியமான கருத்துக்களை தெரிவித்திருககிறார்கள். அதை டைரக்டருக்கு அனுப்பி பரி சீலனை செயது ரிபோர்ட் கொடுக்கும்படி சொல்லப்பட்டிருக் கிறது.

### *Idikki Project*

* 636 Q.—SRI P. K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(a) the details of the discussions held between the Madras and Kerala Governments on the Idikki Project; and

(b) when the project is likely to be taken up for execution?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The possibility of diversion to this State of the surplus waters of the west flowing rivers of Kerala, including the surplus waters of the Periyar at Idikki, was discussed between the Ministers of the two States in July 1963, when it was agreed that the Engineers of the two States should examine the availability of the supplies in the various west flowing rivers. The Chief Engineer (Irrigation), Madras, has since carried out his investigation and submitted a report. Copies of the report have been sent to the Government of Kerala and their reply is awaited.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** இந்தத் திட்டம் மிக முக்கிய
மானது. நீண்ட நாட்களாகப் பரிசீலனையில் இருந்துவருகிறது.
ஆகவே, இதில் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டும். கேரள
அரசாங்கத்தார் இடிக்கி ஒப்பந்தத்திற்குத் தயாராக இருக்
கிறார்கள். காண்ட் எடுக்கவும் அவர்கள் ஆரம்பித்துவிட்டார்கள்.
அவர்கள் தயாராக இருக்கிறபோது, இதில் உடனடியாக முடிவு
எடுப்பதற்கு ஏன் தாமதம் ஏற்படவேண்டும்? தாமதத்திற்குக்
காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமையயா :** வேறொரு அரசாங்கத்துடன்
பேச்சு வார்த்தை நடத்தவேண்டிய விஷயம் இது. அவர்கள்
தயாராக இருந்து நமக்குக் கொடுக்க முன்வந்தால் நிச்சயமாக
மிக வேகமாக நமது அரசாங்கம் அந்தத் திட்டத்தை நடத்தி
முடிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், இதுபற்றி
மற்றொரு அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்திக்
கொண்டிருக்கும்போது, இதைக் குறித்து அதிகமாக நாம்
கேள்விகள் கேட்டு, அதற்கு நான் பதில் சொல்வதை எதிர்
பார்க்காமலிருந்தால் கொஞ்சம் நன்றாக இருக்கும்.

[22nd July 1964

## போலீஸாருக்கு வீடுகள் (தென் ஆற்காடு)

* 637 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னாற்காடு ஜில்லாவில் போலீஸாருக்கு என்று 1963–64-ல் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை ?

(இ) அதற்கான செலவு என்ன ?

(உ) மேலும் எத்தனை வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது ?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) 1963–64-ல் போலீஸ் பணியாளருக்காக தென ஆற்காடு மாவட்டத்தில் குடியிருப்பு விடுதி எதுவும் கட்டப்படவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தென் ஆற்காடு மாவட்டத்தில் தற்போது பதினான்கு குடியிருப்பு விடுதிகள் கட்டப்பட்டுவருகின்றன. மேற்கொண்டும் ஏழு விடுதிகள் கட்டுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

## மழையின் காரணமாக பயிர்ச் சேதம்

* 638 **கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் பெய்த பெரும் மழையின் காரணமாக ஆறுகள், கால்வாய்கள் முதலியன உடைப்பு எடுத்து அறுவடைக்கு தயாராய் இருந்த சம்பா கதிர் முதலிய பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது உண்மையா ?

(இ) அப்படியானால் சர்க்கார் எடுத்துள்ள பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) ஆமாம்.

(இ) தஞ்சை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு குறுகியகால நெல் பயிர் செய்வதற்காக ஏக்கருக்கு ரூ. 75 வீதம் உடனடிக் கடன் வசதி அரசாங்கம் அளித்துள்ளது. நிலவரியும் வஜா செய்வதற்கு லாயக்கான நிலங்களுக்கு வஜா செய்யப்படும். வருங்காலத்தில் இம்மாதிரி வரும் வெள்ளப் பெருக்கையும் அதன்மூலம் ஏற்படும் நஷ்டத்தையும் தவிர்க்க தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா ஆறுகள், வடிகால்கள் குறித்து விரிவான ஆய்வு வேலைகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. கே. ஏ. மதியழகன் :** தஞ்சை மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள அந்த வடிகால் திட்டத்தின் வேலைகள் துவங்கப்பட்டனவா ? அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று கூற முடியுமா ?



22nd July 1964]

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இவ்வளவு சுலபமாக அந்த வேலை நடக்குமானால் கஷ்டமே இல்லை. தஞ்சை மாவட்டத்திற்கு மட்டு மல்ல; தமிழ்நாட்டுக்கே அது ஒரு பெரிய பிரச்னை. நூற்றுக் கணக்கான வருஷங்கள் அந்தப் பிரச்னை முறையாகக் கவனிக்கப் படாமல் இருந்த காரணத்தால் பெரிய சேதங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது அரசாங்கம் மிகத் தீவிரமாகக் கவனம் செலுத்துகிறது. நேற்றையத்தினம்கூட, அமெரிக்கா விலிருந்து வந்திருந்த நிபுணர்கள் அரசாங்கத்தோடு பேசிவிட்டு, ஐந்து தினங்கள் அந்த ஜில்லாவில் சுற்றிப் பார்த்துவர போயிருக் கிறார்கள். ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்கள் திரும்புவார்கள். இது மிகப் பெரிய பிரச்னையாக இருப்பதால், எந்த வேலையை எடுத்தாலும் மிக நுணுக்கமாகப் பரிசீலனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதற்குவேண்டிய இன்வெஸ்டிகேஷன் எல்லாம் நமது ராஜ்ய நிபுணர்கள் ஆராய்வு நடத்திக்கொண்டிருக் கிறார்கள். அதோடு வெளிநாட்டவர்களுடைய ஆலோசனையையும் கேட்டு ஒரு பெரிய திட்டமாக உருவாக்கவேண்டும்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** இந்தத் திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்படுவது ஒருபுறமிருக்க, அதற்கு முன்னால் அவசரமாகக் கவனிக்கப்படவேண்டியதும் இருக்கிறது. ஆறுகள், கால்வாய் களினுடைய கரைகள் உயரம் போதாமல் இருக்கின்றன. மழை பெய்தவுடன் உடைப்பு ஏற்பட்டுவிடுகிறது. கரைகளை உயர்த்திக் கட்ட அரசாங்கம் விசேஷமான அக்கறை எடுத்துக்கொள்ளுமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** உடனுக்குடன் செய்ய வேண்டிய மராமத்து வேலைகள், இந்தத் திட்டங்கள் உருவாகி நடைபெறும் வரைக்கும் காத்திருக்காமல், எதை எதை எவ்வப்போது செய்ய வேண்டுமோ அதை மராமத்து இலாகா செய்யும் என்று, [illegible] சொல்லலாம்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** நம்முடைய இன்ஜினியர்கள் இந்த வடிகால் திட்டத்தைப்பற்றி விரிவான ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தோம். அதற்குமேல் செயல் திட்டம் உருவாக்கும் விஷயத்தில் அவர்களைச் சர்க்கார் விரைவு படுத்துமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** முதலில் அவர்கள் பரிசீலனை செய்து திட்டம் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பெரும் பிரச்னையை அணுகும்போது, ஆரம்பத்தில் இருந்த கஷ்டங்களை விட இப்பொழுது அதில் இருக்கும் கஷ்டங்கள் இன்னும் அதிகமாகத் தெரியும் காரணத்தால், இன்னும் திருப்தி தரக்கூடிய முறையில் அமையவேண்டும் என்பதற்காக எல்லா முயற்சிகளும் நாம் எடுத்துக்கொள்கிறோம்.

* 639 **கேள்வி.—திரு. மா. இராசாங்கம் :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பெரியகுளம் தாலுகா, எரசக்கநாயக்கனூர் கிராமத்தில் வெள்ளத்தால் வேளாண்மைக்கு சேதம் ஏற்பட்டுள்ளது எவ்வளவு?

(இ) அரசாங்கம் எடுத்த நிவாரண நடவடிக்கைகள் என்ன?

(உ) இனிமேல் இப்படி சேதம் ஏற்படாமல் இருக்க எடுத்த நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (a) The extent of standing crops damaged is 5 acres and the value of the damage is Rs. 2,000.

(b) No relief was granted to the ryots.

(c) An estimate for Rs. 35,000 is under preparation for strengthening the entire length of the bund of the supply channel to Naickenkulam tank of Erasakkanayakkanur village and for its stone revetment.

**திரு. மா. இராசாங்கம் :** சர்க்கார் எடுத்திருக்கும் நடவடிக்கையின்படி, வெள்ளாமைக் காடுகளில் ஏற்படுகிற வெள்ளத்தைத் தடுப்பதற்குத் தான் வழி இருக்கிறதே தவிர, இந்தப் புதிதாக எடுத்த நடவடிக்கை அந்த ஊரில் இருக்கிற பொது மக்களுக்கு ஆபத்து விளைவித்திருக்கிறது. ஆகவே, அதை மறு பரிசீலனை செய்து, மாற்று நடவடிக்கை எடுக்க சர்க்கார் முன்வருமா?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** இப்பொழுது ஒரு எஸ்டிமேட் போட்டுப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். இது கனம் அங்கத்தினருடைய முடிவின்படி போதாது என்று நினைத்தால், அந்த எஸ்டிமேட்டை நிறுத்திவிட்டுப் பூர்வாங்கமாக மறு பரிசீலனை செய்வதற்குக் கனம் உறுப்பினர் ஆலோசனை சொல்லி எழுதினால், அதை அரசாங்கம் கவனிக்கும்.

*** 640 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1963-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்த மழையால், கிராமங்களில் குறுகிய காலச்சாகுபடி செய்துள்ள நில விஸ்தீரணம் எவ்வளவு?

(இ) அந்த நிலங்களுக்கு தண்ணீர் விடுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) 302.80 ஏக்கர்.

(இ) குறுவை சாகுபடி செய்யப்படும் நிலங்களுக்கு 1964 பிப்ரவரி 29-ந் தேதி வரையில் பாசனத்திற்காக நீர் விடப்பட்டது. தண்ணீர் விடுவது, கல்லணை கால்வாய் விஷயத்தில் 15—3—1964 வரையிலும், காவிரி, வெண்ணாறு கிளைகள் விஷயமாய் 31—3—1964 வரையிலும் நீடிக்கப்பட்டது. அதன் பிறகு, கோடைப் பாசனத்திற்கு இயற்கையாக ஓடும் நீரைப் பயன்படுத்தவும் அனுமதியளிக்கப்பட்டது. ஆறு அல்லது வாய்க்காலில் தண்ணீர் ஓட்டம் கணிசமாக இல்லாதபோது, ஆற்றிலும் வாய்க்காலிலும் மேல்மட்ட தண்ணீரை பம்ப்பு செய்துகொள்ளவும், நீர் மட்டம் குறைவாக இருக்கையில், ஆறு, வாய்க்காலில் குரம்பு அமைக்கவும் விவசாயிகள் அனுமதிக்கப்பட்டனர்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.



[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the member.]

## II.—CALLING ATTENTION TO NEED FOR POSTPONEMENT OF RECOVERY OF GOVERNMENT LOANS IN THE NILGIRIS DISTRICT.

**திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் சபாநாயகர் அவர்களே, 'லேட் ப்ளைட்' என்னும் நோய்ப் பிடிப்பினால் நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்குப் பயிர் விளைச்சல் குன்றிவிட்டதன் காரணத்தால் ஓராண்டுக்கு அரசாங்கக் கடன்கள் வசூலிப்பதைத் தள்ளி வைக்கும் அவசியம் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் பொது பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : The "Late Blight" disease on the potato crops in the Nilgiris district, started spreading in the year 1961. On the assessment made by the Board Member regarding the damage caused by the "Late Blight", the Government postponed the collection of loan instalments in fasli 1370 in the first instance and it had been extended year after year up to 1st July 1964. The "Late Blight" still continues to prevail, though not in a virulent form during the current year. As a result of the crop digging experiment on the yield of the potato crops, the Collector of Nilgiris has reported that the present straitened circumstances of the ryots in this district are not solely due to "Late Blight" which is prevailing only in a mild form. They are due to other factors also, such as, scarcity of potato seeds, want of timely rains and lack of adequate credit facilities. The amount of loans outstanding as on date is Rs. 11·85 lakhs. This amount represents the loans granted under the Agricultural Loans and Land Improvement Loans Acts, loans granted by the Agricultural Department and Soil Conservation Loans and interest thereon. 10-00 a.m.

The Collector of the Nilgiris has now suggested that the demand due for faslis 1373 to 1375 amounting to Rs. 10·25 lakhs may be ordered to be postponed further to fasli 1375 and that the remaining arrears of about Rs. 6 lakhs relating to the period prior to fasli 1373 may be ordered to be collected from 1st July 1964 for the following reasons :—

(i) As a result of the postponement of the collection of loan instalments during the years 1952–53 to 1954-55 and 1961–62 to 1963–64 due to adverse seasonal conditions, the loans disbursed during the year 1950–51 and the subsequent years are still outstanding.

(ii) As the rules require the collection of all the postponed instalment in one lump sum immediately after the period of postponement the loanees may not be in a position to pay the entire loan arrears in one lump sum on the expiry of the period of postponement and it will also render it impossible to take steps even under the Revenue Recovery Act on a distant future date, in order to recover the huge arrears.

[Sri R. Venkataraman] [22nd July 1964

(iii) The several postponements have not only helped the loanees to evade payments, but have also adversely affected their repaying capacity.

(iv) The prevailing higher price for potato will enable the ryots at least to repay about 35 per cent of the arrears pending collection from 1st July 1952.

(v) The loan arrears relate not only to the loans granted for agricultural purposes but also for non-agricultural purposes, such as, construction and repair of houses, purchase of articles required for carpentry, blacksmithy, etc.

The proposal of the Collector is under examination. I may, therefore, inform the hon. Member that the "Late Blight" is now prevailing in a mild form and that the need for any further postponement of the collection of loans will be looked into carefully.

## III.—ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE COMMITTEE ON PUBLIC ACCOUNTS.

MR. SPEAKER : I have to announce to the House that the following fourteen Members were duly nominated for election of fourteen Members of the Madras Legislative Assembly to the Committee on Public Accounts for the year 1964-65 :—

1. Srimathi T. N. Anandanayaki.
2. Sri K. S. Ardhanareeswara Gounder
3. Sri K. Cheemaichamy.
4. Pulavar K. Govindan.
5. Sri R. Govindarajulu Naidu.
6. Sri R. Krishnaswami Naidu.
7. Sri K. A. Mathialagan.
8. Sri V. R. Nedunchezhiyan.
9. Sri V. R. Periannan.
10. Sri V. Sankaran.
11. Sri T. L. Sasivarna Thevar.
12. Sri A. R. Subbiah Mudaliar.
13. Sri R. Subramaniam.
14. Sri R. V. Swaminathan.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., *fourteen*, I hereby declare them to have been duly elected to the Committee on Public Accounts for the year 1964-65.

The Hon. the Chief Minister, who is in charge of Finance, and the Chairman, Committee on Estimates are ex-officio members of the Committee.



22nd July 1964] [Mr. Speaker]

Under rule 174 of the Assembly Rules, I nominate Sri V. R. Nedunchezhiyan to be the Chairman of the Committee.

### (2) ELECTION TO THE COMMITTEE ON ESTIMATES.

MR. SPEAKER : I have also to announce to the House that the following fourteen Members were duly nominated for the election of fourteen Members of the Madras Legislative Assembly to the Committee on Estimates for the year 1964-65 :—

1. Sri A. G. Balakrishnan.
2. Sri A. P. Dharmalingam.
3. Sri T. P. Elumalai.
4. Sri V. S. S. Mani.
5. Sri V. A. Muthiah.
6. Sri K. Narayanaswamy Pillai.
7. Srimathi A. S. Ponnammal.
8. Sri A. Raghava Reddy.
9. Srimathi Rajathi Kunchithapatham.
10. Sri S. J. Ramaswamy.
11. Sri R. Rangaswamy.
12. Sri N. Shanmugasundaram.
13. Sri K. S. Subramania Gounder.
14. Sri R. S. Veerappa Chettiar.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fourteen, I hereby declare them to have been duly elected to the Committee on Estimates for the year 1964-65.

The Hon. the Chief Minister, who is in charge of Finance also, and the Chairman of the Committee on Public Accounts are members of the Committee ex-officio.

Under rule 165 of the Assembly Rules, I nominate Sri K. S. Subramania Gounder to be the Chairman of the Committee.

## IV.—GOVERNMENT BILLS.

### (1) THE MADRAS CITY TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1964.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That leave be granted to introduce the Madras City Tenants Protection (Amendment) Bill, 1964".

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

[22nd July 1964

## V.—GOVERNMENT MOTION.

### CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

" That item III, viz., Demand for Grant for Excess Expenditure in the year 1959–60 be taken up before Item II, viz., First Supplementary Statement of Expenditure for the year 1964–65 ".

The motion was put and carried.

## VI.—VOTING ON DEMAND FOR GRANT OF EXCESS EXPENDITURE IN 1959-60—DEMAND No. XIII—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI R. VENKATARAMAN : Since there is no discussion on the Demand for Grant for excess expenditure in the year 1959–60, I move the Demand.

On the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,811 under Demand No. XIII—Administration of Justice—to make good the excess expenditure incurred in 1959–60 ".

The Demand was put and carried and the Grant was made.

## VII.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964–65—GENERAL DISCUSSION.

* திரு. இராம. அரங்கண்ணல் : கனம் தலைவர் அவர்களே, 2 கோடியே 81 லட்சம் ரூபாய் அதிகச் செலவுக்கான துணை மான்ய கோரிக்கையின்மீது பேச ஆரம்பிக்கின்ற நேரத்தில் இந்த அதிகச் செலவுகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும், ஊழியர்களுக்கான படிகளை மாற்றி அமைப்பதற்கும் சில கூடுதல் இனங்கள் வந்திருப்பதை நான் பார்க்கிறேன். இந்த இனங்களில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமா என்பது ஒரு புறம் இருந்தாலும், இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற காரியங்கள் நல்லமுறையில் நடப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த அளவில் நாம் எப்படி காரியங்கள் ஏற்று நடத்துகிறோமோ அதை ஒட்டித்தான் நம்முடைய மாநில மக்களுடைய எதிர்கால வாழ்வு இருக்கும் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம்.

அதற்கு அடுத்தபடியாக விற்பனை வரி வசூலில் நம்முடைய மாநில அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக கடந்த சில நாட்களாக அறிந்து கொண்டு வருகிறோம். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் காமதேனு என்றும், கற்பக விருட்சம் என்றும் வருணிக்கிற அளவு வருமானம் வரக்கூடிய ஒரு கட்டமாகவே இதைக் கருதிக்கொண்டு இருக்கிறோம். விற்பனை வரியை ஏமாற்றுகின்ற ஆட்களிடமிருந்து எப்படியாவது பணத்தை வசூலிக்க



22nd July 1964] [திரு. இராம. அரங்கண்ணல்]

வேண்டுமென்பதில் எல்லோருக்கும் அக்கறை இருக்கிறது. ஆனாலும் இந்த விற்பனை வரி வசூலில் நாம் எந்த அளவு தீவிரம் காட்டுகிறோமோ அந்த அளவு பெரிய வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்களா, சிறிய வியாபாரிகள் பாதிக்கப்படுகின்றார்களா; என்பதைப்பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய தினம் விற்பனை வரி பல கட்ட விற்பனை வரியாக இருக்கிற காரணத்தினால் உற்பத்தியாகிற இடத்தில் மட்டும் வரி விதிக்கப்படாமல் எல்லா இடங்களிலும் விதிக்கப்படுகிறது. இதனால் இன்றைய தினம் சில்லரை வியாபாரிகள் பெரிய சங்கடங்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விற்பனை வரியைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் இது பல முனைகளில் இருந்து பொதுமக்களை தாக்குகின்ற காரணத்தினால் விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. விலைவாசி உயர்வுக்கு விற்பனை வரியும் ஒரு காரணம் என்று மத்திய அரசின் நிதி அமைச்சர் கூறியிருப்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே பொது மக்களுக்கு உதவிகரமாகவும், சில்லரை வியாபாரிகளை இது அதிகம் பாதிக்காமல் இருக்கத் தக்க வகையிலும், வரி ஏய்ப்புச் செய்கின்ற பெரிய வியாபாரிகளிடமிருந்து இந்த வரியை அவர்கள் ஏய்ப்பதற்கு இடமின்றி வசூலிப்பதற்கும் முறையாகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். இது விஷயத்தில் விற்பனை வரி இலாகா தக்க கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன். இதைச் சொல்கிற நேரத்தில் விற்பனை வரியில் துப்புத் துலக்குவதற்கும், அங்கங்கே நடைபெறுகிற மோசடியைக் கண்டு பிடிப்பதற்கும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு அவர்களுடைய செலவிற்காக 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதேபோல நமது மாநிலத்தில் 18 லட்சம் ரூபாய் செலவில் லஞ்சப் புகார் கண்காணிப்பு நெறியாளரகம் ஏற்படுத்தி சமுதாயத்தில் விழிப்போடு இருந்து கூறப்படும் குற்றங்குறைகளைப் பரிசீலனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய நிறுவனமாகும். விவசாயிகளுடைய நிலைமை எப்படி இருக்கிறது, உற்பத்தி எப்படி இருக்கிறது, மில்காரர்கள் சரியாக அரிசி தருகிறார்களா என்பதையெல்லாம் கண்காணிக்க போர்டு ஆப் ரெவின்யூ பார்வையின் கீழ் சிவில் சப்ளைஸ் இன்ஸ்பெக்டரேட் என்று எட்டு லட்சம் ரூபாய் செலவில் ஒரு துப்பு துலக்குகிற நிறுவனத்தை அமைப்பதாக இருக்கிறார்கள். நான் குறிப்பட விரும்புவது, டைரக்டர் ஆப் விஜிலன்ஸ் அமைப்பு ஏற்படுத்தி அந்த அமைப்பு சமுதாயத்திலே லஞ்சமும் ஊழலும் ஏற்படாமல் இருப்பதைக் கண்காணிக்க என்பதற்காக இருக்கும்போது, அந்த அமைப்பையே விரிவுபடுத்தி, யார் யார் விற்பனை வரி கொடுக்காமல் இருக்கிறார்கள், எப்படி மோசடி செய்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பையும் அளிக்கலாம். அதே போன்று சில மில்காரர்களைக் கண்காணிப்பது போன்றவற்றுக்காக போர்டு ஆப் ரெவின்யூவில் அமைக்கப்பட்டிருக்கும் துப்பு துலக்கும்

நிறுவனத்தையும் இதனுடன் இணைத்து அந்தப் பொறுப்பையும் இந்த அமைப்பிடமே கொடுத்து விடலாம். நாம் செய்கின்ற திட்ட வேலைகள் எல்லாம் எப்படி நடைபெறுகின்றன, அவைகளினால் எந்த அளவுக்குப் பலன் ஏற்படுகிறது என்பதையெல்லாம் கண்டு கூற ஒரு 'இவால்யூயேஷன் டிப்பார்மெண்ட்' தனியாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு தனித் தனியாக நிறுவனங்களை அமைத்து அதற்காகப் பணத்தைச் செலவழிப்பது வீண் என்பது என்னுடைய கருத்தாகும். டைரக்டர் ஆப் விஜிலென்சைப் பொறுத்தவரை ஒரு போலீஸ் அதிகாரியை டைரக்டராக நியமித்திருக்கிறார்கள். இருப்பினும் அவர்களுக்கு ஆலோசனை கூற ஒரு சீஃப் எஞ்சினியர், கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர், நல்ல வக்கீல்கள் ஆகியோரை ஆலோசனையாளர்களாக அளித்திருக்கிறார்கள். அதே போல் இன்னும் ஒரு நல்ல அதிகாரியை, ஹைகோர்ட் நீதிபதியாகப் பார்த்துப் போட்டு அவர்களிடம் விற்பனை வரி இலாகாவில் இருக்கும் துப்பு துலக்கும் நிறுவனம், சிவில் சப்ளைஸ் இன்ஸ்பெக்டரேட் போன்ற எல்லாப் பொறுப்புகளையும் கொடுத்தால் நலமாக இருக்கும் என்ற அபிப்பிராயத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் நம்முடைய கண் முன்னே இருக்கிற பிரச்சினை கல்லூரிப் பிரச்சினையாகும். இதற்காக 3½ லட்சம் ரூபாய் துணைமான்யத்தில் கோரப்பட்டிருக்கிறது. இது போதாது என்பது எங்களுடைய அபிப்பிராயமாகும். குடியாத்தம், கிருஷ்ணகிரி, கடலூர் ஆகிய இடங்களில் புதிய கல்லூரிகள் துவக்கப்பட்டிருக்கின்றன. கல்லூரிகள் திறக்கப்படுகின்ற நேரங்களில் பெற்றோர்கள் படுகின்ற அவதியும், அவர்களுடைய பிரதிநிதிகளாக இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் படுகின்ற அவதியும் கல்லூரி தலைவர்கள் படுகின்ற அவதியும் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். இன்றையதினம் ஏராளமான மாணவர்கள் கல்லூரியில் இடம் கிடைக்காத காரணத்தால் வெளியிலே நின்று கொண்டு என்ன செய்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு பரீட்சைத் தாள்கள் வெளியான காரணத்தினாலோ அல்லது உண்மையிலேயே திறமை அதிகமாகி விட்ட காரணத்தினாலோ 65,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் பரீட்சையிலே தேறி இருக்கிறார்கள். கடந்த அக்டோபரில் 15,000 பேர் தேறியிருக்கிறார்கள். மொத்தம் 80,000 பேருக்குக் கல்விச் சலுகை அளிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். அந்த அளவுக்குக் கல்லூரிகளில் இடம் இருக்கிறதா என்றால் இடம் இல்லாததோடு மட்டுமல்ல, எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தில் 'எலிஜிபிள் ஃபார் யூனிவர்சிடி கோர்ஸஸ் ஆப் ஸ்டடி' என்று போட்டு விட்டு கல்லூரியிலே சேரவேண்டுமென்று சொன்னால் 350 மார்க் இருக்கிறதா, 300 மார்க் இருக்கிறதா என்று பார்த்து சேர்த்துக்கொள்கிற கட்டம் இன்று நாட்டிலே இருக்கிறது. அப்படிப் பார்த்தால் பிற்பட்ட வகுப்பினரும் மற்றவர்களும் எவ்வாறு



கல்லூரியிலே இடம் பெற முடியும்? பல கல்லூரிகளில் இன்றையதினம் ஜாதிப் பிரச்சினைகளும், மதப் பிரச்சினைகளும் குறுக்கிட்டுக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமையைச் சுட்டிக் காட்டுவதற்கு உள்ளபடியே வருந்துகிறேன். பிராடெஸ்டெண்டா, கத்தோலிக்கரா, முஸ்லிமா, பிராமினா, நான்-பிராமினா என்ற பாகுபாடெல்லாம் செய்து கல்லூரிகளிலே சேர்த்துக் கொள்ளப்படுகிற நிலைமை வளர்ந்து வருவதைத் தடுக்கவேண்டும். இந்த இடமின்மையைத் தவிர்க்க ஷிப்ட் சிஸ்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறிய யோசனையை வரவேற்கிறோம் என்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த ஆண்டே அந்த முறையினைக் கொண்டு வந்திருப்பார்களேயானால் உள்ளபடியே பாராட்டி இருப்போம். அவ்வாறு அந்த முறையைக் கொண்டு வந்திருந்தால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்றையதினம் வீதியில் இருக்கவேண்டிய கட்டம் ஏற்பட்டிருக்காது. செங்கற்பட்டு நகரத்தில் பெண்களுக்காக ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்படுவதாகச் சொல்லி, இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, மாணவிகள் கல்லூரியில் சேரலாம் என்று கெஜட்டில் விளம்பரப்படுத்தினார்கள். அந்தக் கல்லூரியில் சேரலாம் என்ற ஆசையில் 80 மாணவிகள் விண்ணப்பம் செய்தார்கள். ஆனால் கல்லூரி திறக்கப்பட வேண்டிய நேரத்தில் செங்கற்பட்டுக்கு கல்லூரி கிடையாது; மனுப் போட்ட மாணவிகள் எல்லாம் வட சென்னையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெண்கள் கல்லூரியில் சேரலாம் என்று திடீரென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். தங்களுடைய பெண்கள் கல்லூரியில் படிக்க வேண்டுமென்ற ஆசையால் உள்ளூரிலிருப்பவர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அவர்கள் சென்னைக்குப் படிக்க வரவேண்டுமென்று சொன்னதால் பல பேர் வர முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. வசதி இருக்கின்ற ஒரு சிலர் வர முன்வந்தும் இடம் கிடைக்காமல் அவதிப்படுகின்ற நிலைமையையும் பார்க்கின்றோம். எந்தக் காரணத்தினால் அரசாங்கம் செங்கற்பட்டிலே ஒரு கல்லூரியை ஏற்படுத்த முன்வந்தது? பிறகு ஏன் அது கைவிடப்பட்டது? நம்முடைய (கல்வி) முதலமைச்சர் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களாலேயே செங்கற்பட்டு மாவட்டத்தில் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு இடம் உண்டா இல்லையா என்பதை நிர்ணயிக்க முடியவில்லையா? இந்த நிலைமைகள் எல்லாம் எதைக் காட்டுகிறது என்பதை நம்முடைய அமைச்சரவை சிந்தித்துப் பார்க்கவேண்டும். எந்தக் காரணத்தினாலே செங்கற்பட்டிலே கல்லூரி திட்டமிட்டபடி ஏற்படவில்லையென்று கேட்டால் மத்திய அரசு அமைச்சர் 'அந்த இடத்தில் ஓராண்டு மாத்திரந்தான் கல்லூரி நடத்துவதாக இருந்தது; பிறகு வருகிற ஆண்டு அது பொன்னேரிக்கு மாற்றப்படும்; அங்கு இருப்பவர்கள் அதற்காக ஐந்து லட்சம் ரூபாய் தருவதாகக் கூறி இருக்கிறார்கள்' என்று கூறியிருக்கிறார். இதெல்லாம் எதைக் காட்டுகிறது? இது

நம்முடைய அரசாங்கத்தினுடைய பலவீனத்தைக் காட்டவில்லையா? முடிவெடுப்பதிலே நமக்கிருக்கின்ற அவசரத்தைக் காட்டவில்லையா?

அடுத்தபடியாக இந்த துணை மானியக் கொள்கையிலே வீட்டு வசதி போர்டினுடைய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக, அதிகாரிகள் நியமிக்க 37,000 ரூபாய் கோரப்பட்டிருக்கிறது. வீட்டு வசதி போர்டைப் பற்றிப் பேசவேண்டுமென்றால் ஏராளமாகப் பேசலாம். நான் குறிப்பிட விரும்புவது, இந்த வீட்டு வசதி போர்டினுடைய ஆடிட் ரிபோர்ட் சபை முன்னாலே வைக்கப்பட வேண்டுமென்று அதனுடைய 119-வது விதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் வீட்டு வசதி போர்டு ஆடிட் ரிபோர்ட் என்றைய தினம் இந்தச் சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது? இது வைக்கப்படாததற்கு என்ன காரணம் என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா? அது இந்தச் சபை முன் வைக்கப்படாதற்குக் காரணம் அங்கே தணிக்கை செய்ய அதிகாரிகள் இல்லை; அதற்கான அதிகாரிகளை நியமிப்பதற்காகத்தான் 37,000 ரூபாய் கோரியிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடும். ஆனாலும் அந்த முறையை . . . .

(Mr. Speaker rang the time bell.)

SRI RAMA ARANGANNAL: Sir, I want five more minutes.

MR. SPEAKER: The hon. member has already taken fifteen minutes. If he takes some more time, other hon. Members would get only five minutes.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்த வீட்டு வசதி போர்டின் கணக்குகளை இதுவரை ஆடிட் செய்யாததற்குக் காரணம் என்ன? ஒரு பொறுப்பான நிறுவனத்தின் கணக்குகள் ஏழெட்டு ஆண்டு காலமாக ஆடிட் செய்யப்படாமல் இருக்கின்றன. அங்கு இருக்கும் நிலைமைகளைப் பற்றி யோசிக்கும்போது மிகவும் மோசமான நிலைமைகள் இருப்பதை அறிகிறோம். வீட்டு வசதி போர்டில் பணியாற்றி விலகிய எந்த உயர்தர அதிகாரியும், சேர்மனும் கட்டடம் கட்டிக் கொடுக்கும் பணியிலோ, கட்டடச் சாமான்கள் விற்பனை செய்யும் வேலையிலோ ஈடுபடக் கூடாது என்ற விதியை ஏற்படுத்த வேண்டும். ஹவுசிங் போர்டு தன்னுடைய ஸ்கீம்களை எல்லாம் தானே ஏற்று நடத்துவதில்லை. பொதுப் பணித் துறைக்கும் விடுவதில்லை. தனிப்பட்ட காண்டிராக்டர்களிடம் விட்டு அதனுடைய காரியங்களை ஹவுசிங் போர்டு செய்து வருகிறது. நான் கேள்விப்படுகிறேன், ஹவுசிங் போர்டைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரும், முன்னால் இருந்த சேர்மன் ஒருவரும் ஒரு காண்ட்ராக்ட் கம்பெனி ஆரம்பிக்க இருக்கிறார்களாம். இதையெல்லாம் நான் விளக்கமாக கூற விரும்பவில்லை. சாதுர்யம் படைத்த தொழில் அமைச்சர் அவர்கள் தொழிலாளர் இயக்கத்தையும், சோஷியலிச தத்துவத்தையும் உண்மையாக உணர்ந்த தொழில் அமைச்சர் அவர்கள் நான் பேச விரும்புகிற பிரச்னையை





புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். ஆகவே அப்பிரச்சினையை நான் விட்டு விட்டு அடுத்தபடியாக போலீஸ் பற்றி மட்டும் ஒன்று கூறி முடித்துக் கொள்ள விரும்புகிறேன். போலீசாருக்கு மின்சார வசதிக்காக 1,31,000 ரூபாய் துணை மதிப்பீட்டில் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் போலீசார் இல்லங்களில் இரவில் 6-ல் இருந்து 10 மணி வரைதான் லைட் எறிய வேண்டும். அதற்குப் பின்னர் லைட் எறியக் கூடாது என்றிருப்பதாகச் சொல்கிறார்கள். அதைக் கவனித்து இரவு பூராவும் லைட் எறிய வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரத்தின் போது சென்னைமாநகரில் இருக்கிற போலீஸ் கமிஷனருக்கு தரப்பட்டிருக்கிற நீதி அதிகாரத்தைப் பற்றி நான் குறிப்பிட்டுச் சொன்னேன். நம் சபையின் இன்றைய முதல்வர் அவர்கள் இது கொள்கையைப் பொறுத்த பிரச்னை என்று சொன்னார்கள். கொள்கையை வகுக்க வேண்டியது ஆளும் கட்சியின் கடமை என்று சொன்னாலும் சென்னை மாநகரத்திற்கு மட்டும் ஒருதலைப்பட்சமான நீதி இருப்பானேன்? வெளி ஊரில் யாராவது ஒருவரை போலீசார் ரிமாண்டில் வைக்கிறார்கள் என்றால் உடனடியாக மாஜிஸ்ட்ரேட்டிடம் ஜாமின் கோரி அவரை ஜாமினில் கொண்டுவர முடியும். ஆனால் சென்னை நகரைப் பொறுத்தவரை யாராவது ஒருவரை சந்தேகித்து ரிமாண்டில் வைத்தால் கமிஷனருக்கு ஜாமின் மனு போடவேண்டும். கமிஷனர் அதை ஏற்றுக்கொண்டு ஜாமீன் கொடுத்தால், ஜாமீன் கொடுப்பவரின் யோக்கியதையைப் பற்றி ஆராய அந்த மனுக்கள் சம்பந்தப்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்கு, எந்த போலீஸ் அதிகாரி கைது செய்தார்களோ அவருக்குத்தான் திரும்பி அனுப்பப் படும். அந்த அதிகாரி விரும்பினால் உடனே அந்த மனுவை சர்டிபை செய்து கமிஷனருக்கு அனுப்பலாம். அவர் விரும்பாவிட்டால் பத்து நாட்கள் வரை காலம் தாழ்த்திய பிறகு அந்த மனுவை அனுப்பலாம் என்ற இப்படிப்பட்ட அநீதி நடந்து கொண்டிருக்கிறது. அந்த பத்து நாட்கள் எந்தக் குற்றமும் செய்யாத, நிரபராதியான ஏழை எளிய மக்கள் சிறையில் கிடந்து வேதனைப் படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இது நியாயமா, நீதியா? இது எந்தக் கொள்கைக்கு பொறுத்தமாகும்? நீதி, நிர்வாகம் பிரிந்து இருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். இன்று சட்டக் போலீஸ் கமிஷனராக இருக்கும் திரு. அருள் அவர்கள் கமிஷன் ரிப்போர்ட் விசாரணை நடந்த நேரத்தில் அவர்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். போலீஸ் கமிஷனருக்கு சென்னை மாநகரில் தரப்பட்டிருக்கிற நீதி அதிகாரம் தேவையற்றது, அதை எடுத்து விடலாம், அது அவசியமற்றது என்று போலீஸ் உயர்தர அதிகாரியான அவரே அந்தக் கருத்தை வழங்கியிருக்கிற நேரத்தில் நாட்டை ஆளும் கட்சி, அதிலும் ஜனநாயகத்தை [illegible] வேண்டுமென்ற ஆர்வம் உள்ள ஒரு அரசாங்கம் ஏன் இந்த ஒருதலைப்பட்சமான [illegible] சென்னை மாநகரத்திற்கு மட்டும் வழங்கவேண்டும்? சென்னைமாநகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம்

வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதைக் காண்கிற நீங்கள் எப்படி
யாவது உங்கள் வளர்ச்சியைக் காட்டி, பலணிகளை ஏற்பாடு செய்து,
எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், பாராட்டுகிறோம், வரவேற்
கிறோம். உங்கள் உற்சாகத்தை உள்ளபடியே பாராட்டுகிறோம்.
ஆனால் இந்த மறைவான வழிகளில் ஏதாவது செய்து விடலாம்,
எப்படியாவது பிடித்து சிறைக்குள்ளே தள்ளிவிடலாம் என்றால்
இந்தக் கொடுமையை தேர்தல் காலம் வரும்போது நாங்கள்
தாங்குவது பெரிதாக இருக்கிறது. எந்த நேரத்திலும் பிடித்துக்
கொண்டு போய் கமிஷனரிடம் ரிமாண்ட் செய்வது, கமிஷனருக்கு
—மேலிருந்து உத்தரவு அனுப்புவது—அதன் காரணமாக நல்ல
வேலை செய்யக்கூடியவர்களைப் பிடித்துப் போட்டு விட்டால் தேர்தல்
முடிந்து ஒரு வாரம் கழித்துத்தான் அவர்களைக் கொண்டு
வரவேண்டியிருக்கிறது. இது கொள்கையைப் பொறுத்த விஷயம்
என்று சொன்னார்கள். இந்தக் கொள்கையில் நம் அரசாங்கம்
செல்லுமானால் நல்லதல்ல. அது ஜனநாயகத்திற்கு பொருத்தமும்
அல்ல. அது சோஷியலிச முறைக்கும் பொருத்தமானதல்ல. அது
தர்பார் நடத்தும் ஆசையைக் காட்டுமே தவிர நீதி வழங்குவதாகக்
காட்டாது. வெளி மாவட்டங்களில் இல்லாத அதிகாரம் சென்னை
மாநகரில் மட்டும் போலீஸ் கமிஷனருக்கு இருப்பானேன் என்று
கேட்டு என் உரையை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன்.

**MR. SPEAKER** : There are fifteen hon. Members to speak apart from four or five leaders of parties. All the five leaders may take about one hour and thirty minutes. All the fifteen hon. Members may take another one hour and thirty minutes. That works out to five or six minutes for each hon. Member and not more than that. Now, the hon. Member, Sri P. U. Shanmugham will speak.

திரு. ப. உ. சண்முகம் : சட்டமன்றத் தலைவர் அவர்களே,
சர்க்கார் சார்பில் இந்த மன்றத்தின் அங்கீகாரத்திற்காக வைக்கப்
பட்டிருக்கிற உபமான்யக் கோரிக்கை மீது என் கருத்துக்களை
தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். உப மான்யக்
கோரிக்கையாக கேட்கப்பட்டிருக்கும் தொகை 2 கோடி 82 லட்சம்
ரூபாயாகும். இந்த உபமான்யக் கோரிக்கையை நான் துருவித்
துருவிப் படித்துப் பார்த்தேன். இதில் வந்திருக்கிற வார்த்தை
களைக் கூட்டிப் பார்த்தேன். அதிகப்படியாக நான் கண்ட ஒரு
வார்த்தை, சரிக் கட்டுகிறோம், சரிக் கட்டுகிறோம்; சரிக் கட்டு
கிறோம் என்ற வார்த்தைகளைத்தான் பார்க்க முடிகிறது. சரிக்
கட்டுகிறோம், சரிக்கட்டுகிறோம் என்று கூறி அடையாள மான்ய
மாக ஒதுக்கி வைத்து, இந்த ஆண்டே வேலையைச் செய்யப் போகி
றோம் என்று சொல்லி விட்டு, அந்த வேலைகளுக்கு இவ்வளவு பணம்
செலவாகும் என்று குறிப்பிட்டு விட்டு பின் ஏன் அடையாள
மான்யமாக கேட்கிறீர்கள் என்று புரியவில்லை. அடையாள மான்ய
மாகக் கேட்டு செலவு எவ்வளவாகும் என்று தெரியாவிட்டாலும்
சரி, ஆனால் எவ்வளவு ஆகும் என்றும் தெரிகிறது. இந்த ஆண்டே
செய்து முடிக்கப் போகிறோம் என்றும் சொல்கிறார்கள். பின் ஏன்





அடையாள மான்யமாகக் கேட்பானேன். இப்படி இருக்கிற
இனங்கள் 42. இவற்றிற்காக செலவிடப் போவதாக சொல்லப்
பட்டுள்ள தொகை, கேட்டிருக்கிற மான்யத் தொகையை விட
2 கோடி, 82 லட்சம் ரூபாய் அதிகம். அதுதான் வேடிக்கை.
அடையாளத் தொகை 2 கோடி, மான்யம் கோருகிறார்கள். ஆனால்
5¾ கோடி இந்த மான்யத்தில் 91 லட்சம் ரூபாய். ஆக ஏறக்குறைய
அடங்கியிருக்கிறது. இந்த ஆண்டே செலவு செய்ய அரசாங்கத்
திற்கு தைரியம் இருக்குமானால் மொத்தத்தையும் ஏன் மான்யக்
கோரிக்கையில் சொல்லியிருக்கக் கூடாது? இந்த ஆண்டு வரவு
செலவுத் திட்டத்தைப் பார்த்தால் 3 கோடி, 34 லட்சம் ரூபாய்
பற்றாக்குறை ஏற்பட்டு இருக்கிறது. மொத்தத்தில் எல்லா வேலை
களையும் செய்து முடித்துவிட்டால் இந்த ஆண்டு வரவு செலவுத்
திட்டத்தின் பற்றாக்குறை 9 கோடியாகும். எப்படியாவது சரிக்
கட்டுகிறோம் என்று சொன்னால் எந்த மாயாஜால வித்தையையும்
செய்து சரிக்கட்ட முடியாது. சரிக்கட்ட இரண்டு மூன்று வழிகள்
தான் உள்ளன. ஒன்று வரி போட வேண்டும். வரி போட இந்த
அரசாங்கம் எதையும் விட்டு வைக்கவில்லை, எல்லாம் போட்டாகி
விட்டது. இல்லாவிடில், கடன் வாங்க வேண்டும். கடன் வாங்கு
வதற்கு எல்லாத் துறைகளையும், கையாண்டுவிட்டாகி விட்டது.
இனி கடன் வாங்க முடியாது. அடுத்தபடியாக, எடுத்துக் கொண்டி
ருக்கிற வேலைத் திட்டங்களை தள்ளி வைக்கவேண்டும். ஆனால்
எந்த வேலையைத் தள்ளி வைத்து விட்டு எந்த வேலைகளைச்
செய்யப் போகிறார்கள்? அதைத் தெளிவுபடுத்தியிருக்க வேண்டும்.
இந்த மான்யக் கோரிக்கையை கோரும் அரசாங்கம் நிதிநிலைமை
எப்படி சரிக்கட்டப் போகிறோம் என்பதை விளக்க வேண்டும். [illegible]-01
மிச்சத் தொகையைச் சரிகட்டுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்
கள். எந்த மான்யத்தில் மிச்சப்படுத்தப் போகிறார்கள்? எந்த
வேலைகளைக் குறைக்கப் போகிறார்கள்? அமைச்சர் அவர்கள் ஒன்று
சொல்லலாம். நாங்கள் போட்டிருக்கிற திட்டங்களுக்கு அதிகத்
தொகை ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லக் கூடும். அப்படிச்
சொல்வார்களா? எந்தத் திட்டத்திற்கு அதிகமாக ஒதுக்கப்பட்
டிருக்கிறது? அனாவசியமாக தொகையை ஒதுக்க வேண்டிய
அவசியம் என்ன? 1964 ஜனவரியில் அனுமதிக்கப்பட்ட வேலை
களுக்கு புது மான்யம் கொண்டு வந்திருக்கிறார்கள். 1964 ஜனவரி
யில் அனுமதிக்கப்பட்ட வேலைக்கு செலவு செய்யப்பட்ட பணம்கூட
புது மான்யக் கோரிக்கையில் வந்திருக்கிறது. காரணம் என்ன?
விற்பனை வரி நமூனாக்கள் அச்சடிப்பது, ஜெனரல் சர்ஜன்ஸ் நியமிக்க
இவற்றிற்கு புது மான்யக் கோரிக்கை வந்திருக்கிறது. இது அனு
மதிக்கப்பட்டது 1964 ஜனவரியில். ஏன் சென்ற வரவு செலவுத்
திட்டத்தில் இதையும் சேர்த்து படித்திருக்கக் கூடாது? [illegible]
கேட்பது கேக் சுட இருந்தால் மன்னித்துக் கொள்ளவேண்டும்.
அந்த இலாகாக்கள் தூங்கிக் கொண்டிருந்ததா? ஏன் தலைமை [illegible]
செலவுத் திட்டத்தை நாங்கள் செய்ய வேண்டும்? [illegible]
[illegible] தீவிரமாக ஆய்க்க வேண்டியவர் [illegible]
[illegible] கப்பட்டிருக்கிறார்கள். அந்த அதிகாரியின் ஸ்தானத்தை [illegible]

[திரு. ப. உ. சண்முகம்] 22nd July 1964]

குறிப்பிடும்போது ஐ.ஜி.-க்கு தகுதியான ஒரு இடத்தில் நியமிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. லஞ்சத்தை ஒழிக்க ஐ.ஜி-க்கு சமமான ஒரு உத்தியோகம் தேவைதானா. அப்படி ஒரு உத்தியோகத்தை ஏற்படுத்தினால் நாட்டு மக்கள் என்ன நினைப்பார்கள்? லஞ்சம் என்பது பணம் கொடுத்து வாங்குவது மட்டுமல்ல. காட்டப்படும் தனிச் சலுகைகளும் லஞ்சம்தான். ஒன்றுக்கு மட்டும் பெயர் அல்ல லஞ்சம். காலத்திற்கு காலம் மாறும். காட்டப்படும் சலுகைகளும் லஞ்சம்தான். ஒருவருக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று ஒரு பெரிய பதவியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம் என்று மக்கள் குற்றஞ் சாட்ட மாட்டார்களா? இதற்கு ஒரு உயர்ந்த உத்தியோகத்தை ஏற்படுத்துவது எந்த வகையில் நீதி, நியாயாம். நில ஆர்ஜிதத்திற்காக ஏராளமாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை நான் தடுக்கவில்லை. இன்று கேள்வி நேரத்தின் போது பார்த்தேன். உள்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது யாரோ ஒருவருக்கு எப்படியோ அடமானம் செய்து விட்டார்கள், அதை பணம் கொடுத்து வாங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். வேடிக்கையாக இல்லையா இது. மின்சார இலாகாவிற்கு ஒரு இடம் எடுக்கப்பட்டது பற்றி எங்கள் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். பெயரை நான் கூற விரும்பவில்லை, அமைச்சர் அவர்கள் தகவல் கேட்டால் நான் சொல்கிறேன். ஒருவர் ஒரு இடத்தை 1,20,000 ரூபாய்க்கு வாங்கினார். அதை மூன்று மாதம் வைத்து கொண்டிருந்துவிட்டு பின்னர் அந்த இடத்தை 3,80,000 ரூபாய்க்கு சர்க்காருக்கு விற்கிறார்கள்.
10-30 a.m. இந்த அக்கிரமம் நடக்கலாமா, இது நியாயமா? இவைகள் எல்லாம் லஞ்ச ஊழல் இல்லையா? இவ்விதமாக தனிப்பட்ட செலவுகள் செய்வதற்கு என்ன காரணம்? நில ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றால் குறைந்தது ஓராண்டு காலம் ஆகிறது. சர்க்கார் ஒரு நிலத்தை ஆர்ஜிதம் செய்யவேண்டுமென்றால் சுகாதாரத்திற்கு உட்பட்டது தான் என்று பப்ளிக் ஹெல்த் டைரக்டர் பரிசீலனை செய்து உத்தரவிட வேண்டும், அதன் பின்னால் ரெவின்யு இலாகாவுக்கு சென்று இது யாருடைய நிலம் என்பதைப் பற்றி பார்க்க வேண்டும். இவ்விதம் பார்த்து வருவதற்குள் ஆறு மாதம் ஒரு வருடம் என்றாகிவிடுகிறது. அதற்குள் தனிப்பட்ட நபர் ஒருவர், இந்த நிலத்தை சர்க்கார் எடுக்கப்போகிறது என்று விவரத்தை அறிந்து அதே நிலத்தை தன் பெயருக்கு வாங்கிக்கொள்ளுகிறான். அதன் பின்னால், அதே நபரிடமிருந்து அதிகமான அளவில் பணம் கொடுத்து சர்க்கார் வாங்குகிறது. இந்த நிலைமை நீடிக்கலாமா? இப்படிப்பட்ட நடவடிக்கைகளை செய்துவிட்டு, இப்போது உப மான்யக் கோரிக்கை கொண்டு வந்து நிதி வேண்டும் என்று கேட்பது உண்மையிலேயே வெட்கமாக இருக்கிறது. சற்றேறக்குறைய ஐந்தேமுக்கால் கோடி ரூபாய்க்கு திட்டத்தை தயாரித்து விட்டு, இப்போது இரண்டேமுக்கால் கோடி ரூபாய்க்கு உப மான்யம் கேட்பதற்கு என்ன அவசியம்? இதையெல்லாம் ஏன் வரவு செலவு திட்டத்தில்



22nd July 1964] [திரு. ப. உ. சண்முகம்]

சேர்த்திருக்கக்கூடாது? செலவு செய்யவேண்டிய பணத்தை பல துறைகளிலும் வைத்துவிட்டு, இவ்விதம் வேறு பல இனங்களில் கொண்டு வந்து சரிகட்டுவது என்ற முறையில் மான்யம் கேட்பது சரியல்ல, இதைப்பற்றி சர்க்கார் கவனிக்க தவறிவிடுகிறது என்ற குற்றச்சாட்டை தெரிவித்துக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்ளுகிறேன்.

* திருமதி டி. என். அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த துணை மான்யக் கோரிக்கையை உண்மையாகவே நான் வரவேற்கிறேன். காரணம், புதிய பல திட்டங்களுக்கு பணம் இல்லை என்கின்ற குறை இருக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு, காலாகாலத்தில் திட்ட வேலைகளை எல்லாம் முறையாக நடத்த வேண்டும் என்று தான் அரசாங்கம் முன் வந்திருக்கிறது. குறிப்பாக வட சென்னையைச் சேர்ந்திருக்கின்ற நான் அரசாங்கத்திற்கு மிகவும் என் வந்தனத்தை தெரிவித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது; காரணம், பெண்களுக்கு என்று ஒரு கல்லூரியை ஏற்படுத்துவதற்காக இதில் உப மான்யம் கேட்கப்பட்டிருக்கிறது. இது போன்று வேறு இரண்டு கல்லூரிகளும் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் எல்லா துறைகளிலும் வேலைகள் காலதாமதம் இல்லாமல் நடைபெற வேண்டும் என்பதற்காகத்தான் இந்த உப மான்யக் கோரிக்கைகள் வந்திருக்கின்றன, ஆகவே இந்த சபை அதை வரவேற்க கடமைப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். காரணம் மக்களின் பிரச்னைகள் என்ன என்று கண்டு அதை தீர்ப்பதற்கு—அதில் ஏதாவது இடர்பாடுகள் இருந்தாலும், அதையெல்லாம் நீக்கி—வேலைகளை நடத்த முன் வருவது தான் வளர்ச்சி அடைந்த பொருளாதாரத்திற்கு அழகு.

பொதுவாக கல்லூரிகள் அதிகமாக வேண்டும் என்கின்ற கோரிக்கை எங்கும் இருந்து கொண்டிருக்கிறது. கல்விப்பிரச்னை சம்பந்தமாக எந்தவிதமான நெருக்கடி இருக்கிறது என்பது நகரத்தில் வசிக்கின்ற பிரதிநிதிகளுக்கு நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். ஒவ்வொரு கல்லூரிக்கும் 40, 50 பேர்கள் வந்து ஸீட் வாங்கித்தரவேண்டும் என்று உயிரை வாங்கிவிடுகிறார்கள். இப்போது கல்லூரிகளுக்காக போகவேண்டும் என்று மனு செய்கின்றவர்களில் ஆறில் ஒரு பங்கு மாணவர்களுக்குத்தான் கல்லூரிகளில் இடம் கிடைக்கின்றது. இந்த நிலைமையில் புதிய கல்லூரிகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் புதிய வழிகளை நிச்சயமாக கண்டு பிடிக்கவேண்டியது மிகவும் அவசரமும், அவசியமும் ஆன ஒன்று என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்கார் கல்வி அமைச்சர் திரு. சக்ளா அவர்கள், ஷிப்ட் முறை வைத்தாவது கல்லூரிகளில் மாணவர்களை அதிகமாக சேர்க்கவேண்டும். காலையிலும், மாலையிலும், ஷிப்ட் முறை ஏற்படுத்தி முடிந்தால் மூன்றாவது ஷிப்ட் முறையும் ஏற்படுத்தி, கல்லூரிகளில் படிக்க துடிப்பவர்களுக்கு இடம் இல்லை, இடமில்லை என்று சொல்லக்கூடிய நிலைமை இல்லாதவாறு பார்த்துக்

[திருமதி டி. என். அனந்தநாயகி] [22nd July 1964

கொள்ளவேண்டும் என்று சொல்லியிருப்பதை நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் இதைக்கூறுகிறேன் என்றால், பல இடங்களிலும் கல்லூரிகளில் இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டார்கள் என்றும், தன்னுடைய வாழ்நாளில் ஒரு வருடம் வீணாகிவிட்டது என்று மனமுடைந்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும் நாம் செய்திகளை அறிந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய பல்கலைக் கழகம், ஏன் இந்த ஷிப்ட் முறையை கொண்டு வருவதற்கு மறுக்கிறது என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல, மாலை நேர கல்லூரிகளை துவக்கப்போவதாக சொல்லப்பட்டது, ஆனால் இதுவரையிலும் துவக்கப்படவில்லை. மற்ற மாகாணங்களில் எல்லாம் ஆர்ட்ஸ் கோர்ஸ், ஹிஸ்டரி, எகனாமிக்ஸ் இவைகளை எடுத்து படிப்பதற்கு வசதியாக இருக்கும் முறையில் மாலை நேர கல்லூரிகளை வைத்திருக்கிறார்கள். இந்த மாகாணத்தில் மட்டும் அது வராமல் இருக்கிறது. இதற்கு யார் முட்டுக்கட்டை போடுகிறார்கள் என்பதை கண்டறிந்து, அந்த முட்டுக்கட்டையை உடைத்தெறியவேண்டிய கடமை இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது. மற்ற மாநிலங்களில் இருக்கின்றவர்கள் கல்லூரிக்கு போகாமலேயே பி.ஏ., இண்டர் போன்ற பரீட்சைகளை எழுதி தேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, ஆனால் இங்கு மட்டும் அந்த வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. கல்லூரியில் சென்று நேரிடையாக படித்தால் தான் "கேரக்டர்" ஏற்படும் என்று சொல்வது சரியல்ல. கல்லூரிக்குப் போகாமல் இருந்தாலும் 'கேரக்டர்' ஏற்படும். ஆகவே ஏதாவது நொண்டிச் சாக்குகளை சொல்லிக் கொண்டிருக்காமல், எப்படியாவது இந்த அரசாங்கம் மெட்ராஸ் யூனிவர்ஸிட்டியை கலந்து இதற்கு ஏதாவது ஒரு பரிகாரம் தேட வேண்டியது மிக அவசரம், அவசியம் என்பதைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும், ஸயன்ஸ் கோர்ஸ் சம்பந்தமாக படிப்பதற்கு 1939-வது ஆண்டில் எவ்வளவு இடங்கள் வைத்திருந்தார்களோ அந்த இடங்கள்தான் இப்போதும் இருக்கின்றன. ஏதோ பத்து, பதினைந்து இடங்கள் வேண்டுமானால் அதிகரித்திருக்கலாம். போகின்றவர்களுக்கெல்லாம் ஸயன்ஸ் கோர்ஸில் இடமில்லை இடமில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தால் அது அவ்வளவு நல்லதல்ல. படிப்பதற்கு மாணவர்கள் முன் வரும்போது இடத்தை ஏற்படுத்துவதற்கு எப்படியாவது நடவடிக்கை எடுக்க வேண்டும். புதிதாக கல்லூரிகள் அமைப்பதற்கு இடமில்லை என்று சொன்னாலும், இருக்கின்ற கல்லூரிகளிலாவது ஷிப்ட் முறையை புகுத்தி வருகின்ற மாணவர்களுக்கு எல்லாம் இடவசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு வற்புறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மெடிகல் கல்லூரிகளுக்காக நாம் பல கிராண்ட்களை கேட்டிருக்கிறோம். கீழ்பாக்கம் ஆசுபத்திரியை எடுத்துவிடப்போகிறோம், இதை எடுத்து கொண்டு போய் [illegible] வைக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். அது சரியல்ல, இருக்கின்ற



22nd July 1964] [திருமதி டி. என். அனந்தநாயகி]

ஆசுபத்திரியை அப்படியே வைத்து விட்டு, அங்கேயும் ஒரு ஆசுபத்திரி வைப்பதற்கு முயற்சி எடுப்பது தான் நல்லது. கீழ் பாக்கத்தில் இருக்கின்ற ஆசுபத்திரி, லண்டன் தோட்ட ஆசுபத்திரி என்று நல்ல பெயர் வாங்கியிருக்கிறது. அதே போன்று தான், சென்னை நகரில் இருக்கின்ற பைத்தியக்கார ஆசுபத்திரியை குற்றாலத்திற்குக் கொண்டு போகப் போகிறோம் என்பதை அறிந்து எங்களைப்போன்ற நகரப் பிரதிநிதிகள் மிகவும் வேதனைப்படுகிறோம். இருக்கின்ற ஆசுபத்திரியையே விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அது மட்டுமல்ல, அங்கு தனியாக வேண்டுமென்றால் ஒரு ஆசுபத்திரியை புதிதாக ஏற்படுத்துவதற்கு முயற்சி எடுக்கலாம். அது தான் சரியானதாக இருக்கும்.

அதே போன்றுதான், தமிழ் மருந்துகளை மேம்பாடடைய செய்வதற்காக நாம் பல நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருந்தோம். நம்மைப் பார்த்து பிற மாகாணங்கள் எல்லாம் விரைவாக முன்னேறிக்கொண்டிருக்கின்றன. எங்கே நாம் தமிழ் மருந்தைப் பரப்புவதற்கு முயற்சி எடுத்து கல்லூரியை ஏற்படுத்தினோமோ அது இன்றைக்கு தாழ்ந்து கிடக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. நம்முடைய முயற்சியைப்பார்த்து ஆரம்பித்த மாகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் எல்லாம் இதை முன்னேற்றமாக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த முயற்சியில் அரசாங்கம் ஊக்கம் காட்ட வேண்டும். அதற்காக எவ்வளவு மான்யம் கேட்டாலும் கொடுக்க நாம் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போன்று, எஸ்.ஏ.பி. பொலீஸ்காரர்களுக்கு ஒரு சிறிய தேவை இருக்கிறது. இதைப்பற்றி நான் அடிக்கடி இங்கே சொல்லி வந்திருக்கிறேன். இந்த எஸ்.ஏ.பி. போலீஸ்காரர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுப்பதில், கொஞ்ச பேர்களுக்குத்தான் நாம் கொடுத்திருக்கிறோம். ஆவடியில் கொஞ்சப் பேர்களுக்கு வீட்டுவசதி இருக்கிறது. தனியாக வீடு எடுத்து இருப்பவர்களுக்கு வீட்டுவாடகை கொடுப்பதில்லை. நகரத்தில் போலீஸ்காரர்களுக்கு இருப்பதற்கு சிற்சில இடங்களில் மட்டும்தான் க்வார்ட்டர்ஸ் வசதி இருக்கிறது. அனேகம் பேர்கள் தனியாக வாடகைக்கு வீடு எடுத்து இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு வீட்டுவாடகை அலவன்ஸ் கொடுக்க வேண்டியது மிகவும் நியாயமானது. இதைப்பற்றி முன்னாள் முதலமைச்சர் அவர்களிடத்தில் போலீஸ்காரர்களின் மனைவிமார்கள் முறையிட்டு மனுவையும் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இதுவரையிலும் உயிர் வந்ததாக தெரியவில்லை. ஆகவே இவ்விதம் இறந்து போயிருக்கும் இந்த மனுவுக்கு அவசர அவசரமாக உயிர் கொடுப்பதாக இருந்தால், அது மிகவும் போற்றத்தக்கதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*[திருமதி டி. என். அனந்தநாயகி]* [22nd July 1964

அடுத்தபடியாக, இவ்விதம் நாம் துணை மான்யத்தைக் கேட்கும்போது சில உண்மைகளை நாம் அறிந்து கொள்ளவேண்டும். அதாவது (1964) ஆடிட் ரிபோர்ட்டைப் பார்க்கும்போது, ஏன் இந்தத் தொகைகள் ஸரண்டர் செய்யப்பட்டிருக்கின்றன என்று தெரியவில்லை. இந்த ரிப்போட்டின் 153-ம் பக்கத்தில் பார்க்கும்போது, "டோட்டல் ஸேவிங்ஸ்" என்பதில் 8 கோடி 62 லட்சம் என்றிருக்கிறது. ஆனால் ஸரண்டர் செய்யப்பட்டிருக்கின்ற தொகையைப்பார்த்தால் 5 கோடி 83 லட்சம் என்றிருக்கிறது. "அன்ஸரண்டர்ட் சேவிங்" என்ற இனத்தில் 2 கோடி 79 லட்சம் என்றிருக்கிறது. இவ்விதம் ஸரண்டர் செய்வதை காலாகாலத்தில் செய்கின்ற தொகையைக் கொண்டு தான் மற்ற இனங்களுக்கு சரிகட்டுகிறோம், சரிகட்டுகிறோம் என்று இதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தலைப்பின் கீழ் அனுமதித்த் தொகை செலவு செய்யப்படாமல் ஸரண்டர் செய்யும் போதுதான், இன்னொரு தலைப்பில் எடுத்த வேலை செய்தாக வேண்டியிருக்கிறது. காலாகாலத்தில் டிப்பார்ட்மெண்ட்டுகள் ஸரண்டர் செய்தால் தேவைப்படுகிற பிற இனங்களுக்கு ஒதுக்குவதற்கு வசதியாக இருக்கும். காலாகாலத்தில் ஸரண்டர் செய்யாமல் பல இலாக்காக்கள் இருந்துகொண்டிருக்கின்றன. இவ்விதம் அசிரத்தையாக இருக்கின்ற இலாகாக்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். கல்வி இலாகாவில் கூட, ஸரண்டர் செய்யப்பட்டது 44 லட்சம் என்றும், "அன்ஸரண்டர்ட் சேவிங்" என்பதில் 40 லட்சம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நமக்கோ பணம் மிகவும் தேவையாக இருக்கிறது. எங்கு பார்த்தாலும் பணம் தேவை, பணம் தேவை என்று எல்லோரும் அலறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் கொடுக்கிற பணத்தையும் காலாகாலத்தில் செலவு செய்யாமல் ஸரண்டர் செய்கின்றார்கள். அவ்விதம் ஸரண்டர் செய்வதை காலாகாலத்தில் ஸரண்டர் செய்தால் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மொத்தமாகப் பார்க்கும்போது, 2 கோடி 79 லட்சம் ரூபாய் ஸரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. நாம் இப்போது உதவி மான்யமாக கேட்டிருப்பது இரண்டே முக்கால் கோடி ரூபாய்தான். முன்பாகவே எட்டு கோடி ரூபாய் ஒதுக்கப்படும்போது, வரவு செலவு திட்டத்தில் சரியாக கொண்டு வரவேண்டும், பின்னால் வந்து உப மான்யம் கேட்கக்கூடாது என்று சொல்லியிருந்தால், இம்மாதிரி உப மான்யம் கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. இலாகாக்களும் ஒழுங்காக பணத்தை பயன்படுத்திக் கொள்ள முயற்சி எடுப்பார்கள்.

அதே போன்று ஹரிஜன நல இலாகாவிலே அட்வைஸரி கமிட்டியிலே பார்த்தோம். பணம் போதவில்லை என்று சப்ளிமெண்ட்டரி கிராண்ட் வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். நாமும் சப்ளிமெண்ட்டரி கிராண்ட் கொடுத்திருந்தோம். ஆனால் கொடுத்த பணத்தை செலவிடாமல் வைத்திருக்கிறார்கள். இப்போது எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு 50 பேர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். மிகவும் வறுமையில் இருக்கிறவர்களுக்குக்கூட நம்மால் கொடுக்க முடியவில்லை. ஏன் செலவழிக்கவில்லை என்றால் மார்ச் மாதம் 29-ம் தேதி கிடைத்ததால் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் செலவழிக்க முடியவில்லை என்று சொல்லி சும்மா இருக்கிறார்கள். வாங்கிய உதவி மான்யத்தை முன்னதாகவே கேட்டு வாங்கிக் கொள்ளக் கூடாதா, 29-ம் தேதி வாங்கிய மான்யத்தை 31-ம் தேதிக்குள் செலவழிக்க முடியாது என்றால், நாம் உப-மான்யக் கோரிக்கையில் கொடுத்ததைத் தான் இந்த முறையில் பயன்படுத்தி யிருக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது சிறு சிறு தவறுகள் எந்த இலாகாவில் இருந்தாலும் அத்தகைய தூங்கு மூஞ்சி இலாகாவிற்கு சவுக்கடி கொடுத்து எழுப்ப வேண்டிய பொறுப்பு சர்க்காருக்கு மட்டுமல்ல, இந்த சட்ட சபைக்கும் இருக்கிறது. நாம் கொடுக்கும் பணத்தை மார்ச் மாதம் 29-ம் தேதி வாங்கி செலவழிக்காமல் இருந்தால், நாம் கொடுக்கவேண்டுமென்று ஆர்வத்தோடு கொடுத்தாலும், செலவழிக்கத் தவறியதன் காரணமாக உண்மையான நோக்கம் நிறைவேறவில்லை என்பதுதான் வருத்தத்தைக் கொடுக்கிறது. இப்போதுகூட பல இனங்களிலும் உபமான்யக் கோரிக்கைகள் கேட்டிருக்கிறார்கள். மான்யங்களைக் கொடுப்பது மாத்திரமல்லாமல், கேட்டிருக்கிற மான்யத்தை பயன்படுத்துவார்களா, இருக்கிற இடையூறுகளை எடுத்துக் கூறியிருக்கிறார்களா என்று பார்த்து, இல்லாவிட்டால் செலவழிக்கமுடியாமல் இருக்கிற காரணம் என்ன என்று கேட்டுத் தெரிந்துகொண்டு எந்த எந்தத் திட்டங்களை முதலில் எடுத்துக் கொள்ளலாம் என்று யோசிக்கலாம்.



22nd July 1964] *[திருமதி டி. என். அனந்தநாயகி]*

இப்போது பப்ளிக் வொர்க்ஸுக்குகூட அதிகமாகக் கேட்டிருக்கிறார்கள். உடனடியாகச் செய்யவேண்டுமென்று, சிறு அணைகள் கட்ட, பாலங்கள் கட்ட தொகை வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது வரவேற்க வேண்டியதுதான். எங்கள் தொகுதியில் இருக்கிற பேஸின் பிரிட்ஜை உடனடியாக எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லியும் அது எந்த மான்யத்திலும் வராமல் இருக்கிறது. பேஸின் பிரிட்ஜ் இன்றைக்கு இருக்கிற நிலையில் என்றைக்கு இடிந்து விழுமோ என்று இருக்கிறது. அதிலே டிராஃபிக் அதிகமாகப் போகிறது. ஆந்திர மாநிலத்திற்குப் போகும் லாரிகளும் மற்ற வண்டிகளும் எக்கச் சக்கமாகப் போகிறது. அதைப்பற்றி அமைச்சருக்குக் கடிதம் கொடுத்தோம். நேரில் வந்து பாருங்கள் என்று சொன்னோம். அந்தப் பாலத்தை உடனடியாக எடுத்து சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு எனது வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி: பெருமதிப்புக்குரிய தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டின் மீது நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கல்லூரிகளிலே இட நெருக்கடி காரணம் எஸ். எஸ். எல். ஸி.-யில் ஏராளமான மாணவர்கள் இந்த மாகாணத்தில் தேர்ச்சி பெற்று ஓரளவுக்கு, கேள்வித் தாள்கள் வெளியானது காரணமோ என்னவோ, அதிக மார்க்குகளை வாங்கி தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். சென்ற ஆண்டு கல்லூரிகளுக்கு அடிஷனலாகக் கொடுக்கப்பட்டதே அதேதான் இந்த ஆண்டும் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதிக மாணவர்களுக்கு இடம் இல்லாமல் இருக்கிறது. செக்ஷனுக்கு ஐந்து என்று கூடுதலாகச் சேர்த்துக் கொள்ள அனுமதித்தால் கூடுதலாக கிட்டத் தட்ட 1,000 மாணவர்களுக்கு இடம் கிடைக்கும். கல்லூரியில் இடம் கிடைக்காததால் சில மாணவர்கள் தற்கொலைகள் செய்துகொண்டதாக அறிகிறோம். மேலும் தற்கொலைகள் நடக்கலாம். அதற்கு வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதால் அரசாங்கம் இதை கவனித்து இடங்களை மேலும் அதிகப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, மதுரையில் சரஸ்வதி பள்ளிக்கூடம் இடிந்து விழுந்ததைப் பற்றி நான் எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். அந்தப் பள்ளிக்கூடம் இடிந்து விழுந்த பிறகு நமது பொதுப்பணித் துறை அமைச்சரும், தொழில் அமைச்சரும் போய் இடிந்து விழுந்திருந்த அந்த கோரக் காட்சியை, மனித இதயம் பொறுக்காத காட்சியைப் பார்த்தார்கள். பக்கத்திலே லேபர் ஸ்கூல் நல்ல சிமெண்ட் கான்கிரிட்டில் கட்டிய பள்ளிக்கூடத்தில் மூன்றாவது அடுக்கில் பள்ளி நடத்தக் கூடாது என்று அனுமதி கொடுக்கவில்லை. இந்தப் பள்ளியிலே மூன்றாவது அடுக்கிலே பள்ளி நடத்த அனுமதி கொடுத்திருக்கிறார்கள். . . .

MR. SPEAKER: We have discussed that topic day before yesterday. So the hon. Member need not dilate too much on that but go on to some other points.

திரு. கரு. சீமைச்சாமி: ஆகவே, இந்த நிலைமைக்கு யார் பொறுப்பு என்று பார்த்து அதற்கு பகிரங்க விசாரணை செய்ய வேண்டும் என்று, மதுரை மக்களுக்கு திருப்திபடுத்த ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்துள்ள அகதிகள் பிரச்னை தேசீய பிரச்னை என்று இந்தத் துணை மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பர்மாவிலிருந்து கப்பலில் வந்து இறங்கி விட்டார்கள். அவர்கள் பிரச்னை தேசீயப் பிரச்னை இல்லையா? கிழக்கு இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள் பர்மாவிலும், சிங்கப்பூரிலும் 7 லட்சம் பேர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு கப்பல் அனுப்பினால் மட்டும் போதுமா? கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அகதிகள் இங்கே வருவதற்கு முன்னால், வீடுகள், ஸ்டேஷன்கள், தொழில் நடத்த வசதிகள் எல்லாம் மத்திய அரசாங்கம் சொன்னவுடனே மாநில அரசாங்கம் செய்கிறதே, பர்மாவிலிருந்து வருகிற அகதிகளுக்கு இந்த அரசாங்கம்



என்ன செய்கிறது என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு இந்த மாதிரி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த விலைவாசிப் பிரச்னை வருகிறது. அதைக் கட்டுப் படுத்தவேண்டும் என்பது காற்றை கட்டுப்படுத்துவது போல ஆகும். இந்த விலைவாசிக்கு காரணம் ஆட்சியினுடைய திட்டங்கள் தான் என்று என்றால் நிச்சயமாகச் சொல்ல முடியும். 14 அணாவிற்கு விற்ற அரிசி இன்று 1 ரூபாய் 14 அணாவிற்கு விற்கிறது. விலைவாசியானது 100 சதவீதம் உயர்ந்திருக்கிறது. அரசாங்கமே லட்சக் கணக்கான டன் அளவுக்கு பஃபர் ஸ்டாக் வைத்திருப்பதும் ஒரு காரணம். உணவு அமைச்சர் கூட சொன்னார்கள். நியாய விலைக் கடைகளுக்கு நாங்களே சப்ளை செய்கிறோம் என்று சொன்னார்கள். அது உண்மை. வியாபாரிகள் பதுக்கி வைக்கிறார்கள் என்றால் நீண்ட நாள் பதுக்கி வைக்க முடியாது. தானியங்கள் வீணாகிப் போய்விடும். அரசாங்கம் கோடிக் கணக்கில் செலவு செய்து குடவுன்களைக் கட்டி அதிலே தானியங்களை சேமித்து வைத்திருந்தால் எலிகள், பெருச்சாளிகள் எல்லாம் தான்யங்களைத் தின்று பல கோடிக்கணக்கான ரூபாய் அளவுக்கு தான்யங்கள் வீணாகிப் போகின்றன. உணவு உற்பத்தி அதிகமாகி இருந்தால் இந்த அளவுக்கு விலைவாசி ஏறி இருக்காது. உணவு உற்பத்தி 2 சதவீதம் ஏறியிருக்கிறது. 13 சதவீதம் பண வீக்கம் ஏற்பட்டிருக்கிறது. அதிக நோட்டுகள் அடித்து, வெளி நாடுகளிலிருந்து கடன்கள் வாங்கிச் செலவு செய்ததே காரணம். உற்பத்தி பெருகினால் விலைவாசி இறங்கியிருக்கும். விவசாயத்தைப் பொறுத்த வரையில் பொதுப்பணித் துறை அமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன், இது ஒரு தேசீயப் பிரச்னை ஆகும். ஆகவே மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்வது கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தைச் செழிப்பு அடையச் செய்ய இடுக்கி திட்டம் அவசியமானது. தஞ்சை மாவட்டத்தைப் போல மதுரை மாவட்டத்தைப் போல கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் வர இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக லஞ்சத்தைப் பற்றி வெகுவாகப் பேசப் படுகிறது. லஞ்சத்தை ஒழிக்கவேண்டும் என்று திரு. நந்தா சொல்லுகிறார். எப்படி ஒழிப்பது என்றால் அதிகாரத்தை வைத்து ஒழிக்க முடியும் என்று நினைக்கிறார்கள். அதிகாரம் எங்கிருந்து வருகிறது என்றால் அதிகாரமே லஞ்சத்திலிருந்து வருகிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக தேர்தலில் நின்று ஜெயித்து வந்த நாம் எந்த முறையில் வாக்கு பெற்று வந்தோம்? அந்த முறையையும் மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த லஞ்சமே பர்மிட், கோட்டா, லைசென்ஸ் ஆகிய இந்த

[திரு. கரு. சீமைச்சாமி] [22nd July 1964

மூன்றினாலும் தான் வருகிறது என்று சொல்லுகிறேன். இந்த முறையை மாற்றி அமைத்து அதற்கு ஓய்வு பெற்ற தனிப்பட்ட உயர்தர அதிகாரிகளைக் கொண்ட போர்டு மூலம் இதைச் செய்ய வேண்டும். அரசாங்கமே வைத்துக்கொண்டு நிச்சயமாக இந்த லஞ்சத்தை ஒழிக்க முடியாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாப் மாநில முதன் மந்திரி அவர்கள் தன்னுடைய சொத்துக்களைத் தெரிவித்தது போல நமது மாநில மந்திரிகளும், உயர் தர அதிகாரிகளும் வெளியிடவேண்டும். அந்த முறையில் வெளியிட்டால் அது ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும் என்று சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. பி. வி. சீராமுலு : தலைவர் அவர்களே, இந்த துணை மான்யக் கோரிக்கையின் பேரில் இரண்டொரு வார்த்தைகள் சொல்ல இருக்கிறேன். குறிப்பாக வர்த்தகத் துறையிலே சென்ற ஆண்டு இந்த சர்க்கார் 32 கோடி ரூபாய் பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் அதற்கான செலவை கணக்கிட்டுப் பார்க்கும்போது 2 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. 32 கோடி ரூபாய் வருவாய்க்கு 2 கோடி ரூபாய் தான் செலவழித்திருக்கிறார்கள் என்றால், வருவாய் துறையில் அந்த அளவுக்குப் பெற்றிருந்தாலும்கூட வர்த்தகர்களுக்கு அவ் வர்த்தக அலுவலகங்களிலும் அந்தத் துறையிலே உள்ள இடங்களிலும் உட்கார இடமில்லை, நிற்கவும் இடமில்லை, குடிக்கத் தண்ணீர் கிடையாது, சிறுநீர் கழிக்கவும் வழியில்லை. வட்டங்களிலும், மாவட்டங்களிலும் உள்ள அலுவலகங்களில் எடுத்துக்கொண்டாலும் வர்த்தகர்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள், வேதனை அடைகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி வருவாய் துறையில் வர்த்தகத் துறையிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு ஓரளவு வியபாரிகளுக்கு சௌகரியம் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சென்ற கூட்டத்தொடரிலே கனம் முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எப்போது செய்யப்படும் என்பது திட்டவட்டமாக அறிவிக்கப்படவில்லை. ஆனால், துணை மான்யக் கோரிக்கையிலாவது அதுபற்றி வரும் என்று நினைத்தேன். ஒன்றும் வரவில்லை. அக்டோபர் இரண்டாம் தேதி அண்ணல் காந்திஜியின் நினைவு நாளை வைத்தாவது, இந்த நாளில் சேலம் ஜில்லாவை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரியில் கல்லூரி வந்துவிட்டது என்ற பெருமை அடை பொருளே தவிர, அது வந்ததும் எங்களுக்கு வேதனை அதிகமாகிவிட்டது. சேலம் மாவட்டத்தில் 7,000 பிள்ளைகள் எஸ்.எஸ்.எல்.சி. படிக்கிறார்கள். தென் சேலத்தில் 1,200 பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள வகுப்பில் இடம் இருக்கிறது. கிருஷ்ணகிரிக் கல்லூரியில் 240 பிள்ளைகள்தான் சேர்க்க அனுமதி கொடுத்



22nd July 1964] [திரு. பி. வி. சீராமுலு]

திருக்கிறார்கள். 240 பிள்ளைகளைச் சேர்க்க வாய்ப்பு இருக்கும் பொழுது, 460 பேர்களிடமிருந்து அப்ளிகேஷன் வந்தது. வேறு எந்தக் கல்லூரிக்கும் போக வேண்டுமென்றால், தென் சேலத்தில் இருக்கப்பட்ட 3 கல்லூரிகளுக்கு செல்ல வேண்டும். எப்படி வடநாட்டில் 'இட்லி சாம்பார் கோ பாக்' என்று சொல்லுகிறார்களோ, அப்படி "வட சேலத்திலுள்ளவர்களே; நீங்கள் போங்கள் கிருஷ்ணகிரிக்கு உங்கள் கல்லூரிக்கு கிருஷ்ணகிரிக்கு செல்லுங்கள்" என்று தென் சேலத்துக்காரர்கள் அங்கே இடம் தர மறுக்கிறார்கள். திட்டவட்டமாக வரையறுத்து, இரண்டு கூறுகச் செய்து எங்களுக்கு 800 பிள்ளைகளை சேர்த்துக்கொள்ள வாய்ப்பு வேண்டும் என்று கோருகிறேன்.

கிட்டத்தட்ட நான்கு ஆண்டு காலமாகியும் கிருஷ்ணகிரி பெண்கள் பயிற்சி பள்ளிக்கு ஒரு கட்டடம் இல்லை, ஒரு ஹாஸ்டல் இல்லை. நான்கு ஆண்டுகாலமாக அந்தப் பயிற்சிப் பள்ளியில் இருக்கிற 200 மாணவிகள் படிக்க வசதியில்லாமல் மிகவும் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 2 லட்சம் அரசாங்கம் கொடுத்து, அதே சமயத்தில் நிலம் வாங்காத காரணத்தினால் ரூ. 2 லட்சமும் திருப்பி அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுவிட்டது. இப்பேர்ப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாகாமல், அடுத்த ஆண்டிலாவது கிருஷ்ணகிரி பெண்கள் பயிற்சி பள்ளிக்கு தனி இடத்தை வாங்கி அங்கே பள்ளி, ஹாஸ்டல் நிறுவ அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் மாவட்டத்தில் ரயில்வே செஸ் நிதி ரூ. 25 லட்சம் இருக்கிறது. அந்தப் பணம் கிட்டத்தட்ட 10 ஆண்டு காலமாக சேலம் மத்திய பாங்கில் போட்டு வைக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். அங்கே மருத்துவக் கல்லூரி ஒன்று வேண்டுமென்று பல கூட்டங்களிலும் சரி, டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் கூட்டங்களிலும் சரி, பல நிர்மானங்கள் போட்டு அனுப்பியும் இதுவரையில் அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைக்கவில்லை. கலெக்டரைக் கேட்டால் இன்னும் அரசாங்கத்திடமிருந்து ஒன்றும் வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆனால் டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்டு கவுன்சில் பூரண அதிகாரத்தோடும், மெஜாரிட்டியுமாக உள்ளவர்கள் சேர்மன்கள் ரூ. 25 லட்சத்தையும் ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் ரூ. 50,000 வீதம் பங்கு போடவேண்டுமென்று சொல்லுகிறார்கள். தொகை சேர்ப்பது மிகவும் கஷ்டம். ரூ. 25 லட்சம் சேர்த்து வைத்திருப்பதை பங்கு போடுவது சுலபம். அப்படி பங்கு போடாமல் அரசாங்கம் பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தத் தொகையை வைத்து அங்கு ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பிக்கனஹள்ளி கிராமத்தில் ஏரி கட்ட 5½ லட்சம் செலவில் திட்டத்தை இதுவரையில் நிறைவேற்றவில்லை. 15 ஆண்டுகளுக்கு மேலாக 3 சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே அதைப்பற்றி வாதாடியிருக்கிறார்கள். அதைப்பற்றி கேள்வி எழுப்பப்பட்டிருந்தாலுங்கூட, ஒரு வார்த்தை கூட இங்கே சொல்லப்படவில்லை. அந்த ஏரியை பரிசீலனை செய்து, அதற்கு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வடசேலம் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி, அதற்கென்று தனியார் துறையிலே அல்லது கூட்டுறவு துறையிலோ சர்க்கரை ஆலைகளோ, அல்லது நூற்பு ஆலைகளோ அல்லது வேறு எந்தவிதமான ஆலைகளோ துவங்கும்படியாகக் கேட்டுக்கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பொதுவாக இன்றைக்கு கல்விக்காக ஓரளவு மான்யம் கோரப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக பல அங்கத்தினர் கூறியது போல் நானும் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். இந்த வருஷத்தில் கல்லூரியில், அதுவும் குறிப்பாக பி.யு.ஸி. வகுப்பில் இடம் கிடைப்பது என்பது பெண்களுக்கு பிள்ளை வரம் தேடுவதைவிட அதிகக் கஷ்டமாக இருந்தது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், ஒரு மெம்பர்கூட 'பெற்றோர்களுக்கு நாங்கள் பிரதிநிதி' என்று கூறினார்கள். காரணம் தெரியவில்லை. எங்களில் சிலரே அதிகக் குழந்தைகளைப் பெற்றவர்களாக இருக்கிறோம். நாங்களே பெற்றோர்கள் என்ற முறையிலே எங்கள் குழந்தைகளைப் பிடித்துக் கொண்டு கல்லூரி வாயிலில் நிற்கும்படியான ஒரு கலக்கம் ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிறது. அல்லது இனிமேல் அம்மாதிரி கலக்கம் ஏற்படுமோ என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, எலிஜிபிள் உள்ள எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும்படி செய்ய வேண்டும். இந்த வருஷத்தில் 380, 400 மார்க்குகள் வாங்கியுள்ள மாணவர்களுக்குக் கூட இடம் கிடைக்காத நிலைமை இருக்கிறது. உண்மையாகச் சொல்லப் போனால் சமீபத்தில் பத்திரிகையில் ஒரு அறிக்கை கூட வந்தது. கல்லூரியில் இடம் கிடைக்காததால் ஒரு மாணவர் தற்கொலை செய்துகொண்டதாக செய்தி வந்தது. உண்மையில் அவர் ஒருவருக்குத்தான் தைரியம் இருந்தது என்று சொல்லலாம். அவரைப்போல ஆயிரம் மாணவர்கள் இடம் கிடைக்காமல் இருக்கிறார்கள். அவர்கள் யாருக்கும் தற்கொலை செய்துகொள்ள தைரியம் வரவில்லை. அவ்வளவு இழிவான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1,000 மாணவர்கள் 380, 400 மார்க்குகளுக்கு மேலே எடுத்துவிட்டு, கல்லூரியில் இடம் கிடைக்காமல் வருஷம் பூராவையும் வீணாக்கக்கூடிய நிலைமையில் தவிக்கிறார்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சாதாரணமாக எஸ்.எஸ்.எல்.ஸி.யிலிருந்து எவ்வளவு பேர்கள் கல்லூரிக்கு வருவார்கள் என்று





ஓரளவுக்கு கணித்து, அதற்குத் தகுந்தபடி கல்லூரிகளை விஸ்தரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். எம்.எல்.ஏ. என்ன செய்யலாம். தந்தி அடிக்கலாம், அல்லது பத்திரிகையில் அறிக்கை விடலாம். 'ஊதுகிற சங்கை ஊதினால், விடியும்போது விடியட்டும்", என்ற நிலைமை தான் இருக்கிறது. நாங்கள் எந்த விதமான ஆதரவும் அளிக்க முடியாது. சர்க்கார் தான் இந்த நிலைக்கு முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். 'எலிஜிபிளிடி பார் காலேஜ் கோர்ஸ்' என்று சொன்ன அளவுக்கு அந்த மாணவர்களுக்கு கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் அனாதரவாக விட்டு விடக் கூடாது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அடுத்தபடியாக, போலீஸ் சம்பந்தமாக சில வார்த்தைகள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். போலீஸ் இலாகாவிற்கு ஓரளவுக்கு மான்யம் கோரியிருக்கிறார்கள். பொதுவாக போலீஸ்காரர்கள் எம்.எல்.ஏ.-க்களுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். பொதுவாக 'பப்ளிக் ரெப்ரஸென்டேஷன்', செய்தால், நியாயமான பொதுக் காரியங்களைப் பற்றி அவர்கள் 'ரெப்ரஸெண்டு' செய்யும்பொழுது, அவர்களுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு கொடுக்கவேண்டும். 'டி.ஐ.ஜி.' போலீஸ்காரர்கள் எப்படி உயர் அதிகாரிகளான முதலியவர்களுக்கு மதிப்பு கொடுக்கிறார்களோ, அப்படி 'எம்.எல்.ஏ.-க்களும் ஒரு இலாகாவைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கும் மரியாதை கொடுக்கவேண்டும் என்ற முறையை மனதில் கொள்ளவேண்டும். ஏதோ ஒரு அங்கத்தினரை ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு கான்ஸ்டபிள் அவமதித்து விட்டார் என்று புகார் செய்தால் கான்ஸ்டபிள் தன்னுடைய கடமையைச் செய்திருப்பார் மெம்பர் தான் பொறுப்பான முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்ற அளவுக்குச் சொல்லும்படியான நிலைமை இல்லாமல், அந்த நிலைமையில் மாறுதல் ஏற்படவேண்டும். ஏனென்றால் மந்திரிகள் யார் என்று பார்க்க வேண்டும். அவர்களும் எம்.எல்.ஏ. இனத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

**கனம் திரு. பூ. கக்கன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இது பொது விவாதம் அல்ல. மான்யக் கோரிக்கையில் இருக்கிற விஷயத்தைப்பற்றிப் பேசினால் பதில் சொல்லலாம். பொதுவாக பேசினால், பதில் சொல்லுவதற்கு இடமில்லை.

**SRI V. SANKARAN** : This Supplementary Demand covers all Demands Police Demand also comes and therefore, I am entitled to say something about the irregularities in the Police Department also.

மந்திரிகளும் எம்.எல்.ஏ.-க்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஏதோ ஒரு அளவுக்கு செல்வாக்கு கூட இருப்பதினால், சந்தர்ப்ப சூழ்நிலையினால், ஓரளவுக்கு அதிருஷ்டத்தின் காரணமாகவோ இன்று மந்திரிகளாக இருக்கலாம். இந்த 206 பேர்களும் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். இந்த

[திரு. வை. சங்கரன்] [22nd July 1964

உணர்ந்து எம்.எல்.ஏ.-க்களின் மானம், மரியாதையை பாதுகாக்க மந்திரிகள் முன்வரவேண்டும். அவர்களை விட்டுக்கொடுத்தால், அவர்களுடைய மானம் மரியாதைக்கு சரியான பாதுகாப்பு கிடைக்காது. மேலதிகாரிகள் சொல்லுவதை கேட்டுக்கொண்டு, ஒரு கான்ஸ்டபிள் சொல்லுவதை கேட்டுக்கொண்டு, அவர்கள் சொல்வது சரி, எம்.எல்.ஏ. பொறுப்புள்ள முறையில் நடந்து கொள்ளவில்லை, என்று 'எம்.எல்.ஏ.'-ஐ 'லெட் டவுன்' செய்து விட்டால், அவர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் கிடைக்காது. சில அட்வகேட்கள் கோர்ட்டுகளில் ஜட்ஜுகளாக வந்தவுடன் இப்படித்தான் நடக்கிறார்கள். நான்கு வருஷம் கழிந்து அவர்கள் திரும்பவும் அட்வகேட்டாக வரவேண்டும் என்பதை மறந்து ஜட்ஜாக வந்தவுடன் ஏதோ தேவலோகத்திலிருந்து பூலோகத்திற்கு வந்துவிட்டமாதிரி நினைக்கிறார்கள்.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நான் எப்பொழுதும் மந்திரியாக இருக்கப்போவதில்லை. ஒரு நாளைக்கு எம்.எல்.ஏ. வாகவும் வருவேன். அங்கத்தினர் அவர்கள் அதை எடுத்துக்காட்டி பேசவேண்டாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வை. சங்கரன்:** நான் ஒரு மந்திரியையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகத்தான் சொன்னேன். மந்திரிகளும் எம்.எல்.ஏ.-க்களில் ஒருவர் என்ற முறையிலே, எம்.எல்.ஏ.-க்களுடைய மானத்தையும், மரியாதையையும் காப்பாற்ற மந்திரிகள் முற்படவேண்டும். அதில் தவறிவிடக்கூடாது.

**கனம் திரு. பூ. கக்கன்:** கனம் அங்கத்தினர்களும் மானத்துடனும் மரியாதையுடனும் நடந்துகொள்ளவேண்டும். அதை விட்டுவிட்டு, அதிகாரி சொல்லுவதை கேட்கக் கூடாது என்று சொன்னால், நான் எப்பொழுதும் பூராவும் அங்கே இருந்து கொண்டு பார்த்துக்கொண்டு இருப்பேனா?

**திரு. வை. சங்கரன்:** யார் கம்ப்ளெய்ன்ட் கொடுத்தாலும் அவர்களை விசாரிக்காமல் கூட, பொதுவாக மேல் அதிகாரிகள் கொடுத்த ரிபோர்ட்டை வைத்துக்கொண்டு ஒன்றும் சொல்லக்கூடாது என்பதைத்தான் பொதுவாகச் சொன்னேன். யாரையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை இந்த நிலைமை எம்.எல்.ஏ-க்களுக்கு ஏற்படக்கூடாது என்றுதான் பொதுவாகச் சொன்னேன்.

11-00 a.m. அடுத்தபடியாக, முதியோர் பென்ஷன் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பல முதியோர்கள் அனாதைகளாக இருக்கிறார்கள். கிழவர்களைவிட கிழவிகள்தான் அதிகமாக இருக்கிறார்கள். கையெழுத்து வாங்கி தாசில்தாரிடம் மனுக்களை கொடுத்து விடுகிறார்கள். அப்படிக் கொடுத்த பிறகு அவை என்ன கதியாகின்றன என்று தெரியவில்லை. திரும்பத் திரும்ப எம்.எல்.ஏ.க்களிடம் வருகிறார்கள். ஏதோ நாங்கள் வாங்கிக் கொடுக்க முடியும் என்று நினைக்கிறார்கள். பென்



22nd July 1964] [திரு. வை. சங்கரன்]

ஷன் கிடைப்பதற்கு பல மாதங்கள் ஆகின்றன. ஒருசில மாதங்களுக்குள் கிடைக்கும் என்ற உறுதி இருந்தால் தேவலை. கிடைக்கும் என்று ஆசைப்பட்டு, பிறகு கிடைக்காமல்போனால், அதனால் சீக்கிரமாக அவர்கள் இறந்து விடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. எம்.எல்.ஏ.-க்கள் வீட்டிற்கு வந்து, நாங்கள் நினைத்தால் நடக்கும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே இரண்டு மாதங்களுக்குள் பென்ஷன் கிடைக்குமாறு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

துவரம்பருப்பு, உளுந்து எல்லாம் பிற மாநிலங்களிலிருந்து நமது மாகாணத்திற்கு வரவேண்டியிருக்கிறது. குறிப்பாக, உத்திரப் பிரதேசம், மத்தியபிரதேசம், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாகாணங்களிலிருந்து வர வேண்டியிருக்கிறது. அங்கு பூரண ரெஸ்டிரிக்ஷன்ஸ் இருக்கின்றன. ராஜஸ்தான், மத்திய பிரதேசத்தைப் பொறுத்தவரையில் ஓரளவு ரெஸ்ட்டிரிக்ஷன்லை எடுத்து விட்டார்கள் என்று சொல்லப்படுகிறது. பஞ்சாபிலிருந்து தான் கிட்டத்தட்ட 95 சதவிகிதம் வரை வர வேண்டியிருக்கிறது. இங்குள்ள வியாபாரிகளிடம் ஒரு மாத ஸ்டாக்தான் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த ரெஸ்டிரிக்ஷன்களை எடுக்காவிட்டால், பருப்பு விலை மேலும் ஏறிக்கொண்டே போகும். ஆகவே இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொற்கொல்லர்கள் சம்பந்தமாக, சில சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவர்களை பாக்வேர்டு என்று கருதுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே "ஆசாரி, கம்மா" போன்றவர்கள் பாக்வர்டு கம்யூனிடி லிஸ்டில் இருக்கிறார்கள். அவர்களை "மோஸ்ட் பாக்வர்டு" என்ற ஜாபிதாவில் சேர்த்துக் கொள்ளலாம். ஏற்கெனவே வறுமையினால் வாடித் தவிக்கிறார்கள். சர்டிபிகேட் வாங்குவதிலே அவர்களுக்கு கஷ்டம் இருக்கிறது. இவற்றை எல்லாம் ஒரு ஹ்யூமன் அவுட்லுக்கோடு பார்க்கவேண்டும். உடனடியாக அவர்கள் எல்லோரையும் மோஸ்ட் பாக்வர்டு கிளாஸில் சேர்ப்பதுடன், சீக்கிரமாக சர்டிபிகேட் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் ஸ்டீல் பிளாண்ட் சம்பந்தமாக சர்க்கார் டோக்கன் கிராண்டு வாங்கியிருக்கிறார்கள். தஸ்தூர் கம்பெனி அறிக்கையைப் பார்த்தால், அதை ஆந்திராவுக்கு மாற்றி விடுவார்களோ என்ற ஐயப்பாடு இருக்கிறது. அங்கேயும் வேண்டுமானால் வைக்கட்டும். ஆனால் நம்முடைய பகுதியிலே நின்று விடக்கூடாது. இலவு காத்த கிளியைப் போல, காத்திருந்தவன் சொத்தை நேற்று வந்தவன் கொண்டு போனான் என்ற நிலைமை ஏற்படக்கூடாது.

(சிரிப்பு)

(உதவி சபாநாயகர் மணி அடித்து, திரு. அ. பெ. தர்மலிங்கத்தைப் பேச அழைத்தார்).

**கனம் உதவி சபாநாயகர்:** பல அங்கத்தினர்கள் பேச வேண்டுமென்று விரும்புவதால், ஐந்து நிமிஷங்களுக்குள் முடிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

[22nd July 1964

திரு. அ. பெ. தர்மலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மதிப்பீட்டில் பெரும்பாலும் அதிகமாக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது அதிகாரிகளை அதிகப்படுத்துவதற்கும், அதிக சம்பளத்தில் பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருப்பதற்காகவும் வாங்கப்படும் அங்கீகாரம் என்றே நான் கருதுகிறேன். தோட்டத்திலே பாதி கிணறு என்று சொல்லுவார்கள். அதேபோல நிறைவேற்றப்படுகிற திட்டங்களுக்காக அதிகமானவர்களை நியமிப்பது ஓரளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு உபயோகமாக இருந்தாலும், நடைபெறுகிற வேலைகள் அதிகமான அளவுக்கு நடைபெறுகின்றனவா என்று பார்க்க வேண்டும். அந்த வகையில் இந்தத் துணை மதிப்பீட்டில் விவசாயத்திற்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி நடைமுறையில் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தீவிரச் சாகுபடித் திட்டம் என்று பெயரளவிலே திட்டம் தீட்டப்படுகிறதே தவிர அதனால் சரியான பலன் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். வேண்டுமென்றால், புள்ளி விவரங்கள் மூலமாக, பல லட்சக்கணக்கான டன்களை ஏட்டில் காட்டலாமே தவிர, நாட்டிலே நடைமுறையில் ஒன்றுமில்லை. இப்பொழுது நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டங்கள் காரணமாக, விவசாயிகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயச் சட்டங்கள் விவசாயிகளின் நன்மைக்காகச் செய்யப்பட்டாலுங்கூட அவற்றின் முழுப்பலனையும் அவர்களால் அடைய முடியவில்லை. சாதாரண விவசாயி ஒருவன் ரெண்ட் கோர்ட்டிலே தோல்வி கண்டு விட்டால், நேரே ஹைகோர்ட்டுக்குப் போக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஹைகோர்ட்டுக்கு வந்து வாதாடுகிற அளவுக்கு அவர்களுக்கு வசதியில்லாத காரணத்தால் கோர்ட்டுக்கு போகமுடிவதில்லை. விவசாய உற்பத்தியும் செய்ய முடியவில்லை. எவ்வளவு தீவிரமாக சாகுபடித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தாலுங்கூட விவசாயம் நடைமுறையில் நன்கு நடைபெறவில்லை. நாம் இயற்றும் சட்டங்களில் பல தவறுகள் இருக்கிற காரணத்தால் நிலச்சுவான்தார்கள் அவற்றிலுள்ள ஓட்டை உடைசல்களைப் பயன்படுத்திக்கொண்டு, ஹைகோர்ட் அல்ல, சுப்ரீம் கோர்ட் அல்ல, பாராளுமன்றத்திற்குக் கூடச் சென்று அங்கே சட்டம் நிறைவேற முடியாத அளவுக்கு செல்வாக்குப் படைத்தவர்களாக இருக்கிறார்கள். இவ்வாறு விவசாயிகளுக்குப் பல இடைஞ்சல்கள் இருப்பதினால் அவர்கள் தக்க காலத்தில் விவசாயம் செய்ய முடியவில்லை.

என்னுடைய தொகுதியிலிருந்து இன்றைக்கு ஒரு மனு வந்திருக்கிறது. மூன்று, நான்கு ஆண்டுகளாக நிலத்தில் இறங்கி விவசாயம் செய்துங்கூட அப்பேர்ப்பட்ட விவசாயத் தொழிலாளர்களை அகற்றுவதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறதென்று தெரிந்து, அவர்களை வெளியேற்றப் பார்க்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் ஹரிஜனங்கள். நாளைய தினம் ஏலம் நடைபெற இருக்கிறது. அவர்கள் யாரும் கேட்கக்கூடாது என்று மறியல் செய்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாக சொல்கிறார்கள்.



22nd July 1964] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

அந்த விவசாயிகள் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் அல்ல. காங்கிரஸ் கட்சியையும், அந்தக் கட்சிக்குத் துணையாக இருக்கிற திராவிடர் விவசாய தொழிற் சங்கத்தையும் சேர்ந்தவர்கள். அமைச்சர் அவர்களிடத்திலே சட்டத்தை திருத்த வேண்டுமென்று மனுக் கொடுத்திருக்கிறார்கள். என்றாலும் நாளை வெளியேற்றப்படக்கூடிய நிலைமையில்தான் அவர்கள் இருக்கிறார்கள். தீவிர சாகுபடித் திட்டத்திற்குப் பதிலாக விவசாயிகளினுடைய மனதிலே ஒரு நல்ல நம்பிக்கை ஏற்படும் விதத்தில் அவர்களது நிலத்தை அவர்களே விவசாயம் செய்ய முடியும் என்ற ஒரு உறுதிப்பாட்டை உண்டாக்க வேண்டும். அப்படிப்பட்ட காரியத்தில் முயற்சிகள் எடுக்கவேண்டுமே தவிர, வெறும் புள்ளிவிவரங்களைக் காட்டி எவ்வளவோ லட்சங்கள் என்று சொல்வதில் பயனொன்றும் இருக்காது. இப்பொழுது அரிசியின் விலையையும் நெல்லின் விலையையும் குறைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதே நேரத்தில் விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருட்களின் விலை குறைந்திருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? விவசாயிக்கு உற்பத்திக்கான பொருள்கள் காலாகாலத்தில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் அரிசி விலையை மட்டும் குறைத்து விட்டால் போதாது. விவசாய உற்பத்திக்குத் தேவையான பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

அகதிகள் பிரச்னைக்காக ரூ. 9 லட்சம் கோரப்பட்டிருக்கிறது. இந்த அகதிகள் பாகிஸ்தானிலிருந்து வந்து இங்கே குடியேற்றப்பட்டிருக்கிறார்கள். தேசம் பூராவும் ஒன்று என்று நினைக்கிறவர்கள் வேண்டுமானால் அவர்கள் நம்மைச் சார்ந்தவர்கள் என்று நினைக்கலாம். அதே சமயத்தில் நம்முடைய நாட்டிலே பிறந்து பர்மாவுக்குச் சென்று அங்கேயிருந்து இப்பொழுது திரும்பி வருகிற அகதிகளின் நிலையை நாம் எண்ணி பார்க்க வேண்டும். ஏற்கனவே பலர் இங்கு வந்து விட்டார்கள். அவர்களில் பலர் இன்று இங்கே பெரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள். அப்படி அவர்கள் முன்பே இங்கு வராமலிருந்தால் அவர்களும் அகதிகளாகத்தான் இருக்க முடியும். வந்தவர்களுக்கெல்லாம் வாரி வழங்கினான் தமிழன் என்று பெருமைப் பட்டுக்கொள்ளலாமே தவிர, நம்முடைய சொந்தக்காரர்களை, நம்மைச் சார்ந்தவர்களைக் காப்பாற்றுவதற்கு வசதி செய்யப்படவில்லை. பாகிஸ்தானிலிருந்து விரட்டப்பட்ட அகதிகள் எந்தக் காரணத்திற்காக விரட்டப்பட்டார்களோ அதே காரியத்தைத்தான் இங்கும் செய்கிறார்கள். சமீபத்தில் பல இடங்களில் கலவரம் நடந்திருக்கின்றது. அவர்களுக்காக கட்டப்பட்ட வீடுகள் பல இன்னும் காலியாகவே இருக்கின்றன.

(கனம் உதவி சபாநாயகர் மணி அடித்து, திரு. மாதா கவுடரை பேச அழைத்தார்.)

* திரு ஜே. மாதா கவுடர்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ஆம் ஆண்டு துணை மதிப்பீட்டை நான் வரவேற்கிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் புதுப்பணிகள் என்ற துறையிலே அதிகமான தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். வருட ஆரம்பத்தில் நாம் சில பணிகளை மேற்கொள்ளாமல் இருந்து விட்டால் அவற்றை துணை மதிப்பீட்டில் சேர்த்துக் கொள்வது ஒவ்வொரு வருடமும் நடக்கக்கூடிய காரியமாக இருக்கிறது. இந்தத் துணை மதிப்பீட்டிலே ஏதாவது ஒரு இடத்திலே நீலகிரி ஜில்லாவிற்கென்று ஏதாவது பணம் ஒதுக்கியிருக்கிறார்களா என்று பார்த்தால், ஒரு நயாபைசா கூட இல்லை. நீலகிரி ஜில்லாவில் பிரச்னையே இல்லையென்று கருதிவிட்டார்களா என்று பார்க்கும் பொழுது, நீலகிரி ஒரு சிறிய ஜில்லாவாக இருந்தாலும்கூட பிரச்னைகள் அதிகமாக இருக்கக்கூடிய ஒரு ஜில்லா. அந்த ஜில்லாவை துணை மதிப்பீட்டில் சேர்க்காததைக்குறித்து நான் உண்மையிலே வருந்துகிறேன். கல்லூரிகளைப் பொறுத்தவரையில் சென்னையிலோ அல்லது மற்ற பெரிய ஜில்லாக்களிலோ மட்டும் அதிகமாக கல்லூரிகளை ஏற்படுத்திக் கொண்டு போகிறார்கள். எந்த ஜில்லாக்களில் கல்லூரிகள் இல்லையென்பதைப் பார்த்து அந்த ஜில்லாவிலே ஏற்படுத்த வேண்டுமேயல்லாது இப்படி பெரிய நகரங்களிலே மட்டும் ஏற்படுத்திக்கொண்டு போனால் கிராமப் புறங்களில் உள்ளவர்கள் எல்லோரும் சென்னை நகரத்தை நோக்கி வரும்படி இருக்கும். எல்லோரும் சென்னைக்கு வந்து படிக்க வேண்டும் என்ற ஒரு ஏற்பாட்டைச் செய்தால் பிற்காலத்தில் அதனால் பல சிக்கல்கள் ஏற்படும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட பிற்பகுதியில் நீலகிரி ஜில்லாவில் ஒரு பாலிடெக்னிக் நிறுவப்படும் என்று இரண்டு ஆண்டுக்கு முன்பே அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சொன்னார்கள். இதுவரையில் அது நடைபெறவில்லை. நீலகிரியிலே பாலிடெக்னிக் எப்பொழுது ஏற்படுத்தப்படும் என்பதைப் பற்றி திட்டவட்டமாக சொல்லாமல் இருப்பதைப் பார்த்து வருந்துகிறேன். இந்த ஆண்டு துணை மதிப்பீட்டில் கூட ஒரு டோக்கன் கிராண்ட் கூட போடாமல் இருப்பதைப் பார்த்து வருத்தப்படுகிறேன். தயவு செய்து அமைச்சர் அவர்கள் கூடிய விரைவில் ஆவன செய்ய வேண்டும் என்று வலியுறுத்திக் கூறுகிறேன். ஒரே ஒரு கல்லூரி தான் நீலகிரி ஜில்லாவில் இருக்கிறது. அதிலே ஆண்களும் பெண்களும் சேர்ந்து படிக்கிறார்கள். இன்றைக்கு சோஷலிச சமுதாய பாதையில் செல்லும் நாம் 11-வது வரை இலவசக்கல்வி என்று சொல்லிவிட்டதன் காரணமாக ஏராளமான மாணவ மாணவிகள் படிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி படித்து பாஸ் செய்கிறவர்களுக்கு, பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி எங்கள் மாவட்டத்தில் இல்லை. இந்த மன்றத்திலே முதல் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட கல்லூரிக்கு அந்த வட்டார மக்கள் கொடுக்க வேண்டிய தொகை கொடுக்கவில்லை. பெண்களுக்கு எப்படி ஒரு தனிக் கல்லூரியை ஏற்படுத்துவது என்று சொன்னார்கள். அந்த வட்டாரத்தைப் பொறுத்தவரையில் அதன் பொருளாதார நிலை என்ன என்று பார்க்க வேண்டும். அந்த ஜில்லாவின் நிலையைப் பார்க்க வேண்டுமே தவிர கல்லூரி கொடுக்க மாட்டேன் என்று



சொல்வது சரியில்லை. ஆகவே பெண்களுக்கு என்று ஒரு கல்லூரி நீலகிரியில் ஏற்படுத்த வேண்டும். அந்த ஜில்லா அதிகமான பிற்பட்ட மக்கள் வசிக்கும் ஒரு ஜில்லா. இப்பொழுது அதிகமாக பெண்கள் படிக்க முன் வந்திருக்கிறார்கள். அவர்கள் உயர் நிலைப் பள்ளிகளை விட்டு வெளியேறினால் அவர்கள் படிக்க என்று ஒரு தனிக் கல்லூரி வசதி கிடையாது. அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நாம் உயர் நிலை பள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டே போகும் போது நம்மிடம் ஒரு திட்டம் இருக்கிறதா என்றால் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். மாணவ மாணவிகளுடைய மொத்த எண்ணிக்கை உயர் நிலைப்பள்ளிகளில் எவ்வளவு, அவர்களில் 50 சத வீதம் தேறினாலும் அவர்களுக்கு கல்லூரிகளில் எத்தனை இடம் இருக்கிறது என்பனவற்றை எல்லாம் ஒட்டு மொத்தமாக பார்த்து திட்டம் போடுவது இல்லை. அதனால்தான் கல்லூரிகளில் இடம் இல்லாத நெருக்கடி ஏற்படுகிறது. தயவு செய்து ஒன்று அதிகமாக கல்லூரிகளை ஏற்படுத்துங்கள்; அல்லது தொழிலமைச்சர் அவர்கள் சொல்லுவதைப் போல ஷிப்டு முறையை உடனடியாக அமுலாக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சொல்லி முடிக்கிறேன்.

* **திரு. கேஆர். ஆர்எம். கரியமாணிக்கம் அம்பலம்:** மதிப்பிற்குரிய உப தலைவர் அவர்களே, 1964-65-க்கான துணை மானியக் கோரிக்கை மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் ஜில்லாவின் கிழக்குப் பகுதியாகிய கிழக்கு ராமநாதபுரத்தில் 8 மாத காலமாக மழையே இல்லாமல் மிக்க வரட்சி ஏற்பட்டு இருக்கிறது. அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஆடு மாடுகள் கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகின்றன. மனிதர்களும் கஷ்டப்படுகிறார்கள். கண்மாய், ஆறு, கேணி எல்லாம் வறண்டு ஆபத்தான நிலையில் இருக்கிறது. பெரும்பகுதியில் கேணியில் நல்ல தண்ணீரே கிடையாது. அங்கு எல்லாம் ஊறுணிகளில்தான் அதிகமாக குடி தண்ணீர் வசதி ஏற்படுத்த முடியும். ஊறுணிகளை மராமத்து செய்ய பிளாக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. பிளாக்குகளில் ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு ஊறுணி என்ற விகிதாசாரத்தில் மராமத்து செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் ஒரு பஞ்சாயத்தை எடுத்துக்கொண்டால் 20 கிராமங்கள் கூட இருக்கின்றன. ஒரு கிராமத்தில் மட்டும் வசதி செய்து விட்டு பாக்கி 19 கிராமங்களில் குடி தண்ணீர் வசதி இல்லாமல் இருந்தால் அந்த ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை அமைச்சர்கள் நேரிடையாக பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் குடி தண்ணீர் மிகக் கஷ்டமாக இருப்பதால் எல்லா கிராமங்களுக்கும் குறைந்தது குடி தண்ணீராவது கிடைக்க சர்க்கார் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

[திரு. கே.ஆர். ஆர்.எம். கரியமாணிக்கம் அம்பலம்]
[22nd July 1964

விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகின்றன. எந்தப்பொருளை எடுத்துக்கொண்டாலும் விலைவாசிகள் ஏற்றமாக இருக்கிறது. நடுத்தர வகுப்பினர் ஏழை மக்கள் வாழ்வதற்கே வகையற்ற நிலையில் விலைவாசிகள் ஏறியிருக்கின்றன. விலைவாசி ஏற்றம் என்றால் அரிசி விலை தான் ஏறி இருக்கிறது என்று அரசாங்கம் நினைக்கிறது. ஆனால் அரிசி மட்டுமல்ல. மற்ற உணவுப் பண்டங்களுக்கு ஆகக் கூடிய அத்தனை சாமான்களின் விலையும் ஏறி இருக்கிறது. இதற்கு ஏதாவது உடனடியாக வழி வகை செய்தாலொழிய நாட்டில் பெரிய கஷ்டம், கிளர்ச்சி ஏற்படக்கூடிய நிலை தான் இருக்கிறது என்பதை உணர்ந்து உடனடியாக இந்த விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

விவசாய அபிவிருத்தி ஏராளமாக ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது என்பது அரசாங்கத்தின் புள்ளி விவரம். விவசாய அபிவிருத்தி அதிகமாக நாட்டிலே ஏற்பட்டிருந்தால் இத்தனை விலை ஏற்றம் ஏற்பட்டிருப்பதற்கு காரணம் என்ன என்பதனை அரசாங்கம் யோசித்ததோ இல்லையோ புரியவில்லை. விவசாய அபிவிருத்தியிலே இப்பொழுது எங்கு பார்த்தாலும் ரசாயன உரத்தையே நிலங்களுக்குப் போடுகிறார்கள். ரசாயன உரத்தினாலேதான் விவசாயத்திற்கு கேடு ஏற்படுகிறது என்பது என்னுடைய அபிப்பிராயம். நான் ஒரு விவசாயி. நான் கண்டறிந்த உண்மையை கூறுகிறேன். ரசாயன உரத்தை எங்கு பார்த்தாலும் உபயோகப்படுத்தி குடி தண்ணீர் கூட கெட்டு விட்டது. எங்கும் நிலங்கள் உப்பு மயமாக போய் விட்டது. கால்நடைகளை வைத்து உரங்கள் தயாரிப்பது கூட தடை பட்டு விட்டது. மேலும் புறம்போக்கு நிலங்களே இல்லாமல் ஆக்கி விட்டதால் கால்நடை அபிவிருத்தி இல்லை. அதனால் எருவும் இல்லை. கிராமங்களில் தழை உரங்களை தயாரிக்கக்கூடிய தரிசு நிலங்களை எல்லாம் பாரஸ்ட் டிபார்ட்மெண்டில், தென்னை, முந்திரி, இதர காடு அபிவிருத்தி இவைகளுக்கு எடுத்துக் கொள்ளும் நிலை தான் இருக்கிறது. ஆகவே தழை உரச் செடிகளை அவர்கள் அகற்றி விட்டார்கள். விவசாயத்திற்கு தழை உரம் கிடையாது. மேலும் விவசாயிகளுக்கு அத்தியாவசியமான கடலைப் பிண்ணாக்கு விவசாயிகளுக்கு நியாய விலையில் கிடைக்கும் நிலை இல்லாமல் இருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கும், அன்னிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டு விடுகிறது. அத்தியாவசியமான பொருளான கடலைப் பிண்ணாக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கும்படி செய்து, ஏற்றுமதியைத் தடை செய்து வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* திரு. எம். எஸ். செல்வராஜன் : தலைவர் அவர்களே, அமைச்சர் கொண்டு வந்திருக்கும் துணை மானியக் கோரிக்கையை ஆதரிக்கிறேன். ஏறக்குறைய மூன்று கோடி ரூபாய் கோரி இருப்பதிலே ஒரு பெரும் பகுதியை சர்க்கார் சிப்பந்திகள் அலவன்சுக்காக



22nd July 1964] [திரு. எம். எஸ். செல்வராஜன்]

செலவழிக்கப்படுகிறது என்பது மகிழ்ச்சியைத் தருகிறது. பாதுகாப்பு இனங்களுக்காகவும், உணவு உற்பத்திக்காகவும் கணிசமான அளவுக்கு செலவாகிறது என்பதைப் பார்க்கிறோம்.

சமீபத்திலே பத்திரிகையிலே ரூ. 10 கோடி வரையில் ரூரல் வாட்டர் சப்ளை அண்ட் சானிடேஷன் என்கிற இனத்தின் கீழ் மத்திய சர்க்கார் ராச்சிய சர்க்காருக்குக் கொடுத்திருந்தும், 1½ கோடிதான் செலவாகி, 8½ கோடி லாப்ஸ் ஆனதாக செய்தி படித்தேன். மிகவும் வருத்தப்படுகிறேன். எந்த அளவுக்கு எத்தகைய நிலையில் உபயோகப்படுத்த முடியாமல் போனது என்று அரசாங்கம் முறையாக பதில் சொல்லுவார்கள் என்று கருதுகிறேன்.

விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் போது, 600 மைல் நீளமுள்ள கடல்கரையில், கிடைக்கக்கூடிய மீன்களை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடிகிறதோ அந்த அளவுக்கு அது நம் உணவுப் பிரச்சினையை ஒரு அளவுக்குத் தீர்க்கும் பொருளாக இருக்கும் என்று கருதுகிறேன். நம்முடைய அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய முயற்சியை மேலும் ஊக்குவிப்பதற்கு கன்யாகுமரியிலிருந்து சென்னை வரைக்கும் உள்ள கடற்கரைப் பகுதி நெடுஞ்சாலையை மிகவும் துரிதமாக எடுத்து நிறைவேற்ற முன்வர வேண்டும். 'டிஃபென்ஸ் பர்பஸ்'ஸுக்கு உபயோகப்படுவது மாத்திரமல்லாமல், கடலோரமாக இருக்கும் சிறு சிறு இணைப்பு ரோடுகளும் பூர்த்தியடையக் கூடிய நிலைமை ஏற்படும். அந்த அளவுக்கு முயற்சி செய்யலாம்.

திருநெல்வேலிக்கென்று சாங்ஷன் செய்யப்பட்ட மெடிகல் கல்லூரி அந்தரத்தில் நிற்கும் நிலைமை இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. ஒவ்வொரு தரமும் பெரிய பொறுப்புள்ள எதிர்க் கட்சியினரும், ஆளும் கட்சியில் இருக்கும் அங்கத்தினர்களும் கூட இதைப்பற்றிப் பிரஸ்தாபித்துக் கொண்டே இருக்கவேண்டிய நிலை ஏன் என்று ஒன்றும் புரியவில்லை. அரசாங்கம் இதுவரையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா என்று தெரியவில்லை. எந்த அளவிற்குத் துரிதமாக இதை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு இதை நிச்சயமாக நம்பிக்கையோடு நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன். சென்ற தடவை இதைச் சுட்டிக்காட்டியது போல, கீழ்ப்பாக்கம் மெடிகல் கல்லூரியில் இருக்கும் பெயர்ப் பலகையையாவது 'திருநெல்வேலி மெடிகல் காலேஜ் அட் கீல்பாக்' என்று போட்டு, இங்கு பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு முயற்சி செய்யலாம். 'திருநெல்வேலி மெடிகல் காலேஜ் அட் கீல்பாக்' என்று போர்டிலே எழுதிவிடலாம். நில ஆர்ஜிதம் செய்யக்கூடிய நடவடிக்கை மாத்திரம் போதாது. திருநெல்வேலியில் ஏதேனும் பொருத்தமான இடத்தில் உடனடியாக அதை நிறுவுவதற்கு வழிவகை [illegible] மாகச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

[எம். எஸ். செல்வராஜன்] [22nd July 1964

ஆசிரியருக்கு இருபது பிள்ளைகள் என்கிற அரசாங்க உத்தரவு ஏறக்குறைய பிப்ரவரி மாதத்தில் பிறப்பிக்கப்பட்டது என்று நான் நினைக்கிறேன். அந்த உத்தரவு அமுலுக்கு வந்தால், ஸூபர்நியூமரரி டீசர்ஸ், சப்ளிமெண்டரி டீசர்ஸ் போக, எண்ணாயிரம் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று மன்றத்திலே ஒரு வாக்குறுதி கொடுக்கப்பட்டது. சமீபத்தில் அந்த உத்தரவு கூட நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன். அப்படியானால், திருநெல்வேலி ஜில்லாவில் மாத்திரம் இன்றைய தினம் பதவியில் இருக்கும் 2,500 ஆசிரியர்களில் ஒருவருக்குக்கூட வேலை வாய்ப்பு கிடைக்குமா என்று நான் அஞ்சுகிறேன். ஒரு மாவட்டத்திலேயே இந்த நிலைமை ஏற்படுமானால், இந்த ராஜ்யம் முழுவதிலும் எத்தனை ஆயிரம் ஆசிரியர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. ஆகவே, படித்தவர்களிடையே உள்ள இந்த வேலையில்லா நிலைமையை அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலனை செய்து, அந்த உத்தரவை முறையாக அமுல் நடத்த முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பர்மா அகதிகளுக்குப் புனர் வாழ்வு அளிக்கக்கூடிய இந்த நேரத்தில், இலங்கையிலிருந்து வந்தவர்கள், அரசியல் தியாகிகள், தங்கக் கட்டுப்பாட்டினால் அவதிப்பட்ட பொற்கொல்லர்கள், இன்னும் இப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் கொடுக்கப்பட்ட மானியங்களை அரசாங்கம் நல்ல எண்ணத்தோடு கொடுத்தது என்றாலும், இன்னும் சில இடங்களில் போதிய அளவு பாரங்கள் முதலியவை கிடைக்காத கஷ்டங்களை அவர்கள் உணருகிறார்கள். இலங்கையிலிருந்து வரக்கூடியவர்களுக்கு வியாபாரம் செய்வதற்கு கடன் உதவி செய்ய வேண்டும் என்ற ஒரு கொள்கையை அரசாங்கம் வகுத்திருப்பதாக நினைக்கிறேன். ஆனால், பஞ்சாயத்து யூனியன் மன்றத்திலே ஆயிரம் ஆயிரம் மனுக்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றுக்கெல்லாம் என்ன நிவாரணம் ஏற்படும் என்று தெரியாமல் இருக்கிறது.

நான் தெரிந்து கொண்டிருக்கும் விவரப்படி, திருநெல்வேலி ஜில்லா, திருச்செந்தூர் தாலுக்காவில் 800 முதல் ஆயிரம் மக்கள் வயது வந்தோர்களுக்கான பென்ஷன் பெற்று வருகின்றனர். 500 முதல் 600 மனுக்கள் வரையிலும் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றில் ஒரு மனுகூட கடந்த ஒரு வருஷ காலமாகப் பரிசீலனை செய்யப்பட்டு பென்ஷன் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருக்கும் பணத்திற்குத் தகுந்தாற்போல்தான் அரசாங்கம் பென்ஷன் கொடுக்க முடிகிறது என்று நான் கருதுகிறேன். ஆனால், இன்று கொடுத்திருப்பதைவிட 25 சத விகிதமாவது அதிகமானவர்களுக்கு இத்தகைய பென்ஷன் கொடுப்பது என்ற முறை இருக்குமானால், இன்னும் பல்லாயிரக்கணக்கான பேர்கள் திருப்தி அடையக்கூடிய நிலைமை ஏற்படும், வீணாக மனுக்கள் சேகரித்து வைத்துவிட்டு அவர்கள் வீடு வீடாகச் சென்று உதவி தேடும் கஷ்டங்களைப் போக்க வேண்டும்.

[மணி அடிக்கப்பட்டது.]



22nd July 1964]

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன். இந்த வருஷத்தில் கல்லூரிகளில் மாணவர்களுக்கு இடம் கிடைக்கின்ற பிரச்சினை மிகவும் கஷ்டமாக இருந்தது. அதைப்பற்றி இங்கிருக்கும் அனைவருக்கும் தெரியும். ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்லூரிகளில் இடம் வேண்டியிருந்தும், இங்கேயிருக்கும் சர்வகலாசாலையினர் முப்பதாயிரம் இடங்களுக்கு மட்டும் தான் அனுமதி கொடுத்திருக்கிறார்கள் என்ற காரணத்தால், ஏறக்குறைய பதினைந்தாயிரம் மாணவர்களுக்கு மேல் கல்லூரிகளில் இடம் கிடைக்காமல் அவர்கள் நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதற்கான காரணங்களை இந்த அரசாங்கம் நன்கு பரிசீலிக்கவில்லை; மாணவர்களுக்கு உதவவில்லை; மாணவர்களினுடைய வாழ்க்கைக்கு இந்த அரசாங்கம் நல்ல பல செயல்களைச் செய்யவில்லை என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் முயற்சி செய்திருக்குமானால் யூனிவர்ஸிடி ஆக்டைக்கூட அமெண்டு செய்திருக்கலாம். அல்லது இங்கிருக்கும் கல்லூரிகளில் சிப்ட் முறையை வைத்து இங்கே மாணவர்களுக்கு இடந் தேடித் தந்திருக்கலாம். ஆனால், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பிரச்சினை வந்துகொண்டிருக்கிறது. இந்தப் பிரச்சினையை நன்றாக ஆலோசித்துப் பார்க்காமல், ஏதோ சில தலைமை இடங்களில் பழைமையான கொள்கை உடையவர்கள் இருக்கிறார்கள் என்ற காரணத்திற்காக, அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்திற்கு அக்கறை இருக்கின்ற காரணத்தால், பத்தாயிரம், பதினைந்தாயிரம் மாணவர்கள் இன்றைய தினம் இடம் கிடைக்காமல் தெருவிலே திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை இந்த அரசாங்கம் நன்றாகச் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இதற்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றவர்களை உடனடியாக நீக்குவதற்கோ, அதற்குரிய விதிகளைத் தளர்த்துவதற்கோ இந்த அரசாங்கம் இந்த ஆண்டு இல்லையென்றாலும் அடுத்த ஆண்டுக்குள்ளாகிலும் நல்ல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

புதிய கல்லூரிகளை நான்கு திறந்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்கள் கல்லூரி திறக்க வேண்டுமென்றால், யூனிவர்சிடிக்கு செக்யூரிடி டெபாசிட் கட்ட வேண்டும். இரண்டு லட்சம், மூன்று லட்சம், ஐந்து லட்சம் ரூபாய் என்று இப்படிக் கட்டவேண்டுமென்றால், எங்கே போவது பணத்திற்கு? இப்பொழுதெல்லாம் கல்லூரி ஆரம்பிப்பது பிஸினஸுக்காக அல்ல. நல்ல எண்ணத்தோடு ஆரம்பிக்கப்படுகின்றன. இவற்றை நடத்துவதற்கே பணம் இல்லையென்றால், டெபாசிட் எப்படிக் கட்ட முடியும்? இந்த மானியக் கோரிக்கையில் சுமார் மூன்று லட்சம் ரூபாய்க்கு மேல் இந்த அரசாங்கம் கேட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். நான்கு கல்லூரிகளைத் திறப்பதற்கு மூன்று லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய ஆயிரம் சொச்சம் மாணவர்களுக்கு

அனுமதி தருவதற்கு மூன்று லட்சம் ரூபாய் எப்படிப் போதும்? ஏன் நாம் பத்து, பதினைந்து கல்லூரிகளை நம்முடைய மாநிலத்தில் திறக்கக்கூடாது? இந்த அரசாங்கம் மேலும் மேலும் பரிசீலனை செய்து, வருகிற ஆண்டிலாவது தமிழகத்தில் பத்து கல்லூரிகளைத் துவங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன். இந்தக் கல்லூரிகளைத் திறப்பதன் மூலமாக மாணவர்களுக்கு உறுதுணையாக இந்த அரசாங்கம் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். அப்படித் துவங்கப்படுகிற கல்லூரிகளில் ஒன்றைத் தென்னாற்காடு மாவட்டத்தில் வைத்தால், அங்கிருக்கும் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். அந்தக் கல்லூரியை விழுப்புரத்தில் அல்லது கள்ளக்குறிச்சியில் துவங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக் கொள்கின்றேன். அதற்காக மக்கள் நன்கொடையாக ஏதாவது தரவேண்டுமென்றால், இந்த ஆண்டு வசூலித்தது போல, மேலும் ஒரு லட்சம் வசூல் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். இதைப் போல ஒவ்வொரு மாவட்டத்திலும் பரவலான முறையில் குழுக்களை அமைத்து தொகை வசூல் செய்து அந்தந்தப் பகுதியில் உள்ளவர்கள் அரசாங்கத்திற்குச் செலுத்துவார்களானால், நாங்கள் கல்லூரி துவங்கத் தயாராயிருக்கிறோம் என்று அப்போதே சொன்னார்கள். அதற்காக ஒரு கமிட்டியைப் போட்டு, ஆங்காங்கு ஒரு அரசாங்கக் கல்லூரியைத் திறப்பதற்கு அரசாங்கம் முன் வருவார்களானால், அதற்கு ஒரு லட்சமோ ஒன்றரை லட்சமோ கூட வசூல் செய்து கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

விலைவாசியைப்பற்றி மந்திரிகள் பேசிக்கொண்டே வருகிறார்கள். இருபத்திரெண்டு ரூபாய்க்கு விற்ற நெல் எப்பொழுது 36 ரூபாய்க்கு விற்றது? அறுவடை காலத்தில் 22 ரூபாய், தை மாதத்தில், ஆனால் விலை கேட்பது 36 ரூபாய். யாருக்கு இந்த லாபம் செல்கிறது? எங்கோ இருக்கிற கள்ளப் பணங்களைக் கொண்டு வந்து வியாபாரிகள் 22 ரூபாய்க்கு வாங்கி, கிடங்கிலே வைத்துவிட்டு, மூன்று மாதம் கழித்து 36 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்றால், இந்த அரசாங்கம் ஏன் டிஃபென்ஸ் ஆஃப் இந்தியா ரூல்ஸைப் பயன்படுத்தவில்லை? அப்படிச் செய்து விலைவாசியைக் குறைத்திருக்கலாம் அல்லவா? 'ப்ரொக்யூர்மெண்ட் பாலிசி ஃபெயில் ஆய்விட்டது' என்று ஏன் சொல்கிறார்கள்? இருபத்திரெண்டு ரூபாய்க்கு மார்க்கெட்டிலே நெல் விற்கிறது என்றால், 18 ரூபாய்க்குக் கேட்டால் யார் கொடுப்பார்கள்? ஏன் நீங்கள் 22 ரூபாய்க்கு ஓபன் மார்க்கட்டிலே வாங்கக் கூடாது? என்று நான் அரசாங்கத்தை கேட்க விரும்புகிறேன். சாதாரண வியாபாரிகள் 22 ரூபாய்க்கு வாங்குகிறார்கள். அரசாங்கம் 22½ ரூபாய்க்கு வாங்கிச் சேர்த்து வைத்து 23 ரூபாய்க்கு மக்களுக்கு விற்க முடியாதா? எது எதற்கோ பணத்தை விரயம் ஆக்கும்போது, இதற்காக ஐந்து கோடி ரூபாய் ஒதுக்கி, ஓபன் மார்க்கெட்டில் நெல்லை வாங்கி, கிடங்குகளில் வைத்திருந்து சித்திரை மாதத்தில் 23, 24 ரூபாய்க்கு விற்க முடியாதா? இவைகளையெல்லாம் இந்த



அரசாங்கம் செய்ய முடியாத காரணத்தால் அல்ல, செய்யக் கூடாது என்ற காரணத்தால் இப்படிச் செய்து வருகிறார்கள். ஆகையால், இந்த அரசாங்கம் இதிலே செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இரண்டாவதாக .... (மணி அடிக்கப்பட்டது)

*திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்: கனம் துணை சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது நான் சில கருத்துக்கள் சொல்ல முன் வருகிறேன். தீவிர சாகுபடித் திட்டத்திற்காகவும், உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காகவும் ரூபாய் 9,25,000 இந்தத் துணை மானியக் கோரிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது அரசாங்கம் மேற்கொண்டுள்ள சில திட்டங்களைச் சரியாக அமுல் நடத்தாமலிருப்பதன் காரணமாக எதிர்பார்க்கிற பலன் ஏற்படவில்லை என்பது என்னுடைய கருத்தாகும். கிராம சகாயக் ஸ்கீம் சரிவர செயல்படவில்லை. ஆகையால், அரசாங்கத்திலேயே ஒவ்வொரு தாலுக்காவிலும் விதைப் பண்ணைகள் வைத்து, விவசாயத்திற்குத் தேவையான விதைகளை ஸப்ளை செய்ய ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் இந்தத் திட்டங்கள் நடைபெறும் என்பது என்னுடைய அபிப்பிராயம் ஆகும். மேலும், ஒவ்வொரு யூனியன் எல்லையிலும் ஒவ்வொரு ட்ராக்டர் வைத்து விவசாயிகளுக்கு உதவி செய்தால் அதுவும் உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு மிகவும் ஒத்தாசையாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அடுத்தபடியாக, நீர்ப்பாசனத்திற்கு 50 லட்சம் ரூபாய் துணை மானியக் கோரிக்கையில் கோரப்பட்டுள்ளது. சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், நடு நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும் இது ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. அனேக வாய்க்கால்கள் மேடிட்டு இருப்பதினால் தண்ணீர் பாய வேண்டிய நிலங்களுக்குக் கூட தண்ணீர் பாயாமல், பாய வசதி இல்லாமல் இருக்கிறது. முதலில் அவைகளைச் சரிப்படுத்தினால் சிறிய நீர்ப்பாசனத் திட்டம் வெற்றிகரமாக நடக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். மேலும் எஸ்.எம்.ஐ.பி. இலாகாவினர் அவர்கள் எடுத்துக் கொள்ளும் வேலை மிக மந்தமாக, தாமதமாகப் பரிசீலனை செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது. ஆகையால் அவைகளைத் துரிதப்படுத்த வேண்டும். 11-30 a.m.

அதோடு சிறிய நீர்ப்பானத் திட்டங்களை நாம் மேற்கொள்வோமானால் கூடிய சீக்கிரத்தில் பல்லாயிரக் கணக்கான ஏக்கராக்களைப் பாசன வசதி உள்ளதாகச் செய்ய முடியும் என்பது என் அபிப்பிராயம். உதாரணமாக எங்கள் பகுதியில் [illegible]ந்தல்மலைத் திட்டம் இருக்கிறது. அதை எடுத்துச் செய்தால் ஆயிரம் ஏக்கராக்கள் பாசன வசதி பெறும் என்று நினைக்கிறேன். அதோடு நடுத்தர திட்டமாகிய சின்னாறு திட்டம் இருக்கிறது. அதையும் கவனித்தால் 15,00 ஏக்கர் பயனடையும். இப்படி அரசாங்கம் சிறிய நடுத்தர பாசனத் திட்டங்களை அமுல்

ஆக்கினால் தேசிய நெருக்கடி உள்ள இந்தக் காலத்தில் உணவுப் பற்றாக்குறை இன்றி விவசாயத்தைப் பாதுகாக்க முடியும் என்று தான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அகவிலை கூடுதலினால் எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் படியை உயர்த்துவதன் மூலம் 1.5 கோடி ரூபாய் கோரப்பட்டுள்ளது. இதில் கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றி ஒன்றும் கூறப்படவில்லை. கிராம உத்தியோகஸ்தர்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு மட்டும் 4 அணாவிற்கு ஒரு படி அரிசியோ, 4 அணாவுக்கு ஒரு கெஜம் துணியோ கிடைப்பதில்லை என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆகவே அகவிலைப்படி உயர்வை அவர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கிராம உத்தியோகஸ்தர்களைப் பற்றிய நிலைமையைக் கூடிய சீக்கிரம் நல்ல முறையில் ஆராய்ந்து இந்தத் துணை மானியப் பட்டியலில் இப்பொழுது சேர்க்காவிட்டாலும் அந்தச் செலவையும் சேர்க்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு எச். ஆர். ஈ. போர்டில் நீதி நிர்வாகம் இரண்டும் ஒன்றாக உள்ளது. அதனால் பலவிதமான கஷ்டங்கள் பொது மக்களுக்கு ஏற்படுகின்றன. ஆகையால் நீதி நிர்வாகத்தைப் பிரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி. சி. குழந்தையம்மாள்** : உதவி சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த உதவி மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். என்னுடைய தொகுதி வறண்ட பிரதேசம். அதற்காக புதிய குளம், கிணறுகளை அமைக்க நிதி நிலை அறிக்கையிலேயே நாம் பணத்தை ஒதுக்கினோம். அந்தப் பணத்தை செலவு செய்யாமல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் நாங்கள் கேட்டபோது அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு சாங்ஷன் கோரி போர்டுக்கு அனுப்பி இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இருந்தும் பல திட்டங்கள் சாங்ஷன் ஆகவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று தீவிரமாக விசாரிக்கிறபோது அந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்ளுவது நஷ்டமாக இருக்குமே தவிர லாபகரமாக இருக்காது என்று சொல்லி விட்டார்கள். லாப நஷ்டக் கணக்கைப்பார்த்து இந்தத் திட்டங்களை எடுத்துக் கொள்வதில்லை என்று முடிவு செய்வதானது மிகவும் வருந்தத் தக்கதாகும். இந்த ஆண்டு ஒரு குடம் ஜலம் 4 அணா வீதம் வாங்கக் கூடிய மிகவும் கஷ்டமான நிலை அந்தப் பகுதியில் இருந்து இருக்கிறது. ஒரு புதிய திட்டத்தை எடுத்துக் கொண்டால் இன்றைய தினம் எல்லாப் பொருள்களும் விலை ஏறிக்கொண்டு வருகிற காரணத்தினால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற செலவு அதிகமாகலாம். திட்டத்தினால் கிடைக்கக் கூடிய பயன் அதற்காகும் செலவைவிடக் குறைவு என்பதினால் திட்டத்தைக் கை



விடுவது என்பது சரியாக இருக்காது. கோயம்புத்தூர் ஜில்லாவில் 35 திட்டங்களை நாங்கள் அனுப்பி இருந்தோம். அதில் நான்கு திட்டங்களைத் தவிர மற்றவற்றை எல்லாம் லாபகரமாக இராது என்று கைவிட்டு விட்டதாக தெரிகிறது. கோயம்புத்தூர் பகுதி வறண்ட பிரதேசமாக இருப்பதினால் வறண்ட காலங்களில் அந்த மக்கள் அடைகிற கொடுமையைப் பார்க்கும்போது எப்படியாவது இந்த திட்டங்களை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இதற்கு தடையாக உள்ள கொள்கையை பி.டபிள்யூ.டி. இலாகாவினர் மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதாகவும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமாக இந்த ஆண்டு சில சங்கடங்கள் இருந்தன. அதிகமான மாணவர்கள் கல்லூரிகளில் சேர முன் வந்ததினால் வகுப்பில் மாணவர்களுடைய தொகையை அதிகப் படுத்திக் கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டது. பி.ஏ., பி.எஸ்.ஸி. மாணவர்களுடைய நிலை ஒருவாறு சமாளிக்கப்பட்டது என்றாலும் சென்ற ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு பி.யூ.சி. வகுப்பு மாணவர்களுடைய பிரச்னைதான் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மாணவிகளை விட மாணவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. எந்த ஜில்லாவில் உள்ள கல்லூரியில் இடம் இருந்தாலும் அவர்கள் சேரத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அவர்களுடைய கஷ்டத்தை உணர்ந்து அரசாங்கம் இதில் தலையிட்டு ஏதாவது வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஸ்பெஷல் மைனர் இர்ரிகேஷன் திட்டங்களைத் தீவிரப்படுத்த வேண்டும் என்பதாக சேலம், வேலூரில் இருக்கிற எஞ்சினியர்களுக்குத் தக்க உத்தரவு கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. ம. கமலநாதன்** : உப தலைவர் அவர்களே, இந்த உப மானியக் கோரிக்கையின் மீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நான் குறிப்பாக ஆரம்பக் கல்வியைப் பற்றி மட்டுமே பேச விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் 300 ஜனத்தொகை இருக்கிற இடத்தில் ஒரு மைல் தூரத்திற்குள்ளாக யாருடைய அனுமதியும் இன்றி பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பப் பாடசாலைகளைத் திறந்து கொள்ளலாம் என்று சொன்னார்கள். டிசென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ் தேவை, அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்பதுதான் காந்திஜியின் கொள்கை. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகத்தான் பஞ்சாயத்து ராஜ்யம் அமைக்கப்படுகிறது என்று எல்லாம் சொன்னார்கள். ஆனால் நடைமுறையில் பஞ்சாயத்து யூனியன்களுக்கு ஆரம்பப் பாடசாலைகள் திறந்து கொள்ளக்கூடிய அதிகாரமே இல்லாமல் போய்விட்டது. காரணம், கல்வி இலாகா இயக்குநருடைய

[திரு. ம. கமலநாதன்] 22nd July 1964]

அனுமதியைப் பெற்றேதான் திறக்க வேண்டும் என்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் அரசியல் காரணம் இருக்குமோ என்று சந்தேகப்படுகிறேன். தேர்தல் அறிக்கையில் நாங்கள் இத்தனை ஆரம்பப் பாடசாலைகளைத் திறந்திருக்கிறோம், இத்தனை ஆசிரியர்களை நியமித்திருக்கிறோம் என்று அவர்கள் எடுத்துக் காட்டுகிறார்கள். ஆகவேதான் நாங்கள் ஐயப்படுகிறோம். 1963-64-ல் இரண்டு ஜி.ஓ.க்கள் போட்டு இருக்கிறார்கள். அதிலே குறிப்பாக ஒரு ஆசிரியருக்கு 25 மாணவர்கள்தான் என்றும், அதற்கு மேல் போனால் அதிக ஆசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால் அதேசமயம் மற்றொரு ஜி.ஓ.வில் பஞ்சாயத்து யூனியன்கள் அதிக ஆசிரியர்களை நியமித்துக் கொள்வது என்றாலும், புதிய ஆரம்பப் பாடசாலைகளைத் திறப்பது என்றாலும் கல்வி இலாகா இயக்குநருடைய முன் அனுமதியைப் பெற்றுத்தான் செய்ய வேண்டும் என்கிறார்கள். கல்வி இலாகா இயக்குநருக்கு அரசாங்க நிதி நிலையை அனுசரித்துத்தான் அனுமதி அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். நாங்கள் கல்வி இலாகா இயக்குநரை அணுகிக் கேட்கிறபோது "நான் என்ன செய்வேன்? உங்கள் கோரிக்கை நியாயமானது. ஆனால் அரசாங்கம் மொத்தம் இவ்வளவுத்தான் ஆசிரியர்கள் என்று குறிப்பிட்டு விட்டார்கள். அந்த எண்ணிக்கைக்குள் தான் நாங்கள் எல்லாப் பள்ளிகளுக்குமாகப் பிரித்துக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது," என்று வருத்தம் தெரிவித்துக் கொள்கிறார்கள். "எனக்கு என்னமோ கொடுக்க வேண்டும் என்று தோன்றினாலும் அரசாங்கம் விதித்திருக்கிற விதிகளின்படி ஒன்றும் செய்ய முடியவில்லை" என்கிறார்கள்.

எது எப்படியிருந்தாலும் அரசாங்கம் ஒரு ஆணையைப் போட்டுவிட்டு, அதே நாளில் மற்றொரு ஆணையை அதற்குப் புறம்பாகப் போடுகிறார்கள் என்றால் அது பொதுமக்களை ஏமாற்றவா அல்லது தேர்தல் நேரத்தில் இவ்வாறெல்லாம் மக்களிடத்தில் எடுத்துச் சொல்லவா என்று நான் கேட்க விரும்புகிறேன். இப்போது இருக்கிற நிலையில் 1:25 என்று டீச்சர்-பியூப்பில் ரேஷியோ இருந்தாலும், நடைமுறையில் ஒரு ஆசிரியருக்கு 60 மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரியில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதைப் பற்றிச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன். எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்த மாணவர்களுக்கு 'எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்' என்று சர்டிபிகேட் கொடுத்து விடுகிறோம். அரசாங்கக் கலைக் கல்லூரியிலும் சரி, தனிப்பட்டவர்கள் கல்லூரியிலும் சரி, 400 மார்க் வாங்கியவர்களிலிருந்து தான் படிப்படியாக இடம் கொடுத்து வருகிறார்கள். அதனால் பல ருக்கு இடம் கிடைக்காத நிலைமை ஏற்படுகிறது. எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ் என்று சர்டிபிகேட் கொடுத்துவிட்டு 300 மார்க் அதற்குக் கீழே மார்க் வாங்கியவர்களுக்கு இடம் கொடுக்காத நிலைமை இருக்கிறதென்றால் அதற்கு என்ன காரணம்?



22nd July 1964] [திரு. ம. கமலநாதன்]

கல்லூரிகளில் பணம் கொடுக்கிறவர்களுக்கு . . . (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உதவி சபாநாயகர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற உப
மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை
நான் இந்த மன்றத்தின் முன்னாலே சமர்ப்பிக்கிறேன். முதலாவ
தாக, பொது விற்பனை வரி என்ற தலைப்பின் கீழ் வருகிற
கோரிக்கை உண்மையிலேயே வரவேற்கப்பட வேண்டிய ஒரு
கோரிக்கையாகும். விற்பனை வரி, வர்த்தக வரி கட்டாமல் பல
கோடிக் கணக்கான ரூபாய் ஏமாற்றப்படுகின்றது என்று இந்த
மாமன்றத்திலே, நாங்கள் எடுத்துச் சொன்ன நேரத்தில், நிதி
யமைச்சராகவும் இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் 'யாரும்
இங்கு வரியை ஏமாற்றவில்லை; சரியாகத்தான் வசூலிக்கப்படுகிறது'
என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வர்த்தக வரி இலாகா
வும் அதனைச் சார்ந்த அதிகாரிகளும் எடுத்துக் கொண்டிருக்கும்
தீவிர நடவடிக்கைகளினால் பல விவரங்கள் புலனாகி இருக்கின்றன.
இந்த விற்பனை வரியில் பல கோடிக்கணக்கான ரூபாய் ஏமாற்றப்
படுகிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்ன நேரத்தில்
அலட்சியமாகக் கருதினார்கள். ஆனால் அந்த உண்மை இப்போது
விளங்குகிறது. இன்றைக்கு ரெவின்யூ போர்டிலே இருக்கிற வர்த்
தக வரித் துறைத் தலைமை அதிகாரியும், மற்ற அவரது துணை அதி
காரிகளும் உண்மையிலேயே மிகவும் பாராட்டுக்குரியவர்கள். இன்
றைக்கு திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் திடீர்
சோதனை செய்ததில் பூஜை அறைக்குள்ளும், மனைவியின் புடவை
கள் வைக்கப்பட்டிருக்கும் அறையிலும் வைக்கப்பட்டிருந்த
கணக்குகள் அகப்பட்டன என்று தெரிகிறது. இந்தத் துறையின்
மூலம் சர்க்காருக்கு இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் புதிதாக அதிக
வருமானம் வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரி
கள் சர்க்காருக்கு இந்த ஆண்டு 10 கோடி ரூபாய் புதிதாக அதிக
வருமானம் வரும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த
அதிகாரிகள் சர்க்காருக்கு மட்டும் நன்மை செய்யவில்லை; பொது
மக்களுக்கும் நன்மை செய்திருக்கிறார்கள். ஏனென்றால் ஏழை
அப்பாவி மக்கள், விவசாயிகள். நேற்றைய மசோதாவின் மூலம்
அகப்பட்டுக்கொண்ட கன்னியாகுமரி ஏழை விவசாய மக்கள்
போன்றவர்களிடமிருந்துதான் வரிகள் தவறாது வசூலிக்கப்படு
கின்றனவே தவிர, வர்த்தக வரியை ஏய்ப்பவர்கள் பல ஆண்டு
களாகச் சரியானபடி கண்காணிக்கப்படாமல் விடப்பட்டு
வந்திருக்கிறார்கள். இப்போது வர்த்தக வரியை வசூலிப்பதற்காக
எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் தீவிர நடவடிக்கையைக்
கண்டித்து ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுக்குக்
கஷ்டமாக இருப்பதாகவும் வீட்டுக்குள் வந்து சோதனை செய்வ
தாகவும் புகார் செய்திருப்பதாக அறிகிறேன். நான் கூறுவேன்—
இந்த அதிகாரிகளுக்கு இன்னும் அதிக அதிகாரம் கொடுத்து
இந்த மாதிரிப் பொது ஜன விரோதிகளை ஒழிப்பதற்கு
வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.
இந்த நடவடிக்கைகளை ஆட்சேபித்து காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள்
ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள், அரசாங்கத்திற்குத் தந்திகள்

[திரு. கே. ஏ. மதியழகன்] [22nd July 1964

அந்திருக்கிறார்கள், என்றெல்லாம் பத்திரிகையிலே பார்த்தேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் அவர்களுக்கு மறுப்புரைத் தந்திருக்கிறார்கள். அந்தச் சுபாவத்தை நான் பாராட்டுகிறேன்.

**திரு. சி. பொன்னுசாமி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். கனம் அங்கத்தினர் அவர்கள் ஒரு கட்சியைப் பற்றி 'கள்ளத்தனமாக' என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறார். அது பார்லிமெண்டரி வார்த்தையா ?

**கனம் உதவி சபாநாயகர் :** கனம் அங்கத்தினர் அந்த மாதிரி வார்த்தையைச் சொல்லவில்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** ஆகவே, இன்றையதினம் இந்த அதிகாரிகளைப் பாராட்டும் நேரத்தில் மேலும் இந்த இனத்திற்காக 10 லட்சம் ரூபாய் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளுங்கள்; இந்தத் துறையை மேலும் திறம்பட செயலாற்றச் செய்யுங்கள். இந்த வகையிலே நல்ல முறையிலே நடவடிக்கைகளை எடுத்துவரும் தொழில் அமைச்சர் அவர்களைப் பாராட்டுகிறேன்.

அடுத்தபடியாக விலைவாசி உயர்வைப் பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இன்று தீவிர சாகுபடித் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். உணவு தானிய வியாபாரிகளிடமிருந்து கொள்முதல் செய்யத் திட்டமிட்டார்கள். இப்போது அதை நிறுத்தி விட்டார்கள். இந்த சர்க்காரும் மத்திய சர்க்காரும் உணவுக் கொள்கையில் உறுதியான வழியைப் பின்பற்றாத காரணத்தால் அந்தப் பிரச்சினை இன்றைய தினம் பயங்கரமாக உருவெடுத்திருக்கிறது. தீவிர சாகுபடித் திட்டம் என்கிறார்கள்; சிற்றூறு பட்டணங்கால் திட்டம் என்கிறார்கள். ஆனால் உணவு தானிய. . . (மணி அடிக்கப்பட்டது.)

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1964-65-ம் ஆண்டு துணை மதிப்பீடு கோரிக்கையினை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை வழங்க நான் ஆசைப்படுகிறேன். எனக்கு முன் பேசிய கனம் மதியழகன் அவர்கள் சொன்னது போல் விற்பனை வரி இலாகாவிலே நமது அமைச்சர் அவர்கள் அதிக அதிகாரிகளை நியமித்து, அதிக ஜீப்புகளைக் கொடுத்து அநேக ஜில்லாக்களில் திடீர் சோதனை செய்து பல கள்ளக் கணக்குகளை எல்லாம் கண்டு பிடித்து வெளியே கொண்டு வந்ததற்காக கனம் அமைச்சர் அவர்களை இந்த மன்றம் மகிழ்ச்சியுடன் பாராட்டுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி சமூகத் துரோகிகளில் இன்னும் பலரை நாம் வெளியே கொண்டு வரவேண்டும். மாநில அரசாங்கத்தின் மிக முக்கியமான வரியாகிய விற்பனை வரியின் மூலம் 25 கோடி ரூபாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இப்போது போகிற போக்கைப் பார்த்தால் 50 கோடி ரூபாய் அளவுக்கு வரி வசூலாகும் என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதிலே எந்த விதமான பயமுறுத்தலுக்கும் அமைச்சர் அவர்கள் இடம் கொடுக்காமல் தீவிரமாக அமல் படுத்தவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.



22nd July 1964] [திரு. டி. கார்ச்சா கவுடர்]

இலவசக் கல்வித் திட்டம் சென்ற நிதி ஆண்டில் நமக்கு வழங்கப் பட்டது. அது மிக நல்ல திட்டம் என்றாலும் தனியார் பள்ளிகளிலே உபாத்தியாயர்களுக்காக அளிக்கப்பட்டுள்ள மானியம் குறைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையை உடனடியாகக் கவனிக்கவேண்டும். தனியார் பள்ளிகளிலே சர்விஸ் கார்ரண்டி கிடையாது. அங்கே அதிகமாகச் சம்பளம் கொடுக்கப் படுகிறது என்று அநேகம் பேர் போய் வேலைக்குச் சேர்ந்திருக்கிறார்கள். ஆகவே, உபாத்தியாயர்களுக்கு ஏற்கனவே கிடைத்து வந்த சம்பளம் கிடைக்கச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நீலகிரி ஜில்லாவில் . . . (மணி அடிக்கப்பட்டது.)

*** புலவர் கா. கோவிந்தன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன் வைக்கப்பட்டிருக்கின்ற முதல் துணை மானியக் கோரிக்கையில் லஞ்ச ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு கோரிக்கை வந்திருக்கிறது. அந்தத் துறையை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், லஞ்சம் ஒழியவேண்டுமென்று சொல்லி விட்டு, லஞ்சம் ஒழிய முடியாத வகையிலே சில நடவடிக்கைகளை அரசாங்கம் செய்து கொண்டிருந்தால் எவ்வாறு லஞ்சத்தை ஒழிக்க முடியும்? ஆளும் கட்சியினர், நாட்டிலே உள்ள வர்த்தக முதலாளிகளிடத்தில் இருந்து நன்கொடை என்ற பெயரால் வாங்குவது லஞ்சமாகாதா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆளும் கட்சி நடத்திய ஒரு விழாவுக்காக இந்த நாட்டிலே இருக்கிற பெரிய பெரிய முதலாளிகளிடத்தில் இருந்து லட்சக்கணக்கான ரூபாயை நன்கொடையாக, மக்கள் அத்தனைபேரும் அறியத் தக்க வகையிலே வாங்கியிருக்கிறார்கள். அந்த வர்த்தக நிலையத்தினர் ஆளும் கட்சி விழாவுக்கு அளித்த நன்கொடையை நாடெல்லாம் அறியும் வகையில் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த முதலாளிகளை லஞ்ச ஒழிப்புக்காக என்று நியமிக்கப்பட்டிருக்கிற நெறியாளர் அணுகவே அஞ்சமாட்டார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சீஸரின் மனைவி சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும் என்கிற ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. அம்முறையில் இந்த அரசும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நடந்து கொள்ளவேண்டும்.

காந்தி கிராமத்தில் உள்ள ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்கு, ஒரு மாணவர் விடுதி கட்ட மான்யம் கேரியிருக்கிறார்கள். 'ஆதாரப் பயிற்சி மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் மாதா மாதம் அளிக்கும் தொகை செகண்டரி ஆசிரியர் என்றால் 18 ரூபாய், ஹையர் கிரேட் ஆசிரியர் என்றால் 12 ரூபாய் என்ற முறை வகுக்கப்பட்டிருக்கிறது. இது எந்தக் காலத்தில் ஏற்பட்டது? அந்தக் காலத்தில் இருந்த பொருளாதார நிலை என்ன, அப்போதிருந்த விலைவாசி நிலை என்ன என்று சிந்தித்துப் பார்த்து இதை உயர்த்த அரசாங்கம் முன் வரவேண்டும். ஹரிஜன நல இலாகா விலுள்ள கல்லூரி மாணவர்களுக்கு உதவி தருகிறபோது 40 ரூபாய்க்குக் குறையாமல் தருகிறது. ஒரு கல்லூரி மாணவருக்கு

[புலவர் கா. கோவிந்தன்] [22nd July 1964

உணவிற்கு 40 ரூபாய் ஆகிறது என்பதை உணர்ந்து கொடுக்கும் அரசு, இந்த ஆசிரியர் பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு மட்டும் 12 ரூபாய், 18 ரூபாய் என்று கொடுத்தால் இது எந்த முறையில் பொருந்தும்?

அடுத்து, பாகிஸ்தானிலிருந்து வருகிற அகதிகளுக்கு செலவு செய்ய ஒரு மான்யம் கோரியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். வருகிறவர்களை எல்லாம் வரவழைத்து அவர்களுக்கு வாழ்வு அளிக்கக் கடமைப்பட்டிருக்கும் தமிழ்நாடு எந்தக் காலத்திலும் அதற்குப் பின் வாங்கியது கிடையாது. ஆனால் இந்நாட்டில் பிறந்து, இங்கு வளர்ந்து, இங்கு வாழ முடியாத காரணத்தினால் பிழைப்பு தேடி வெளிநாடுகளுக்குச் சென்று இப்போது 'போங்கள் உங்கள் நாட்டிற்கு' என்று அவர்கள் விரட்டப்படும்போது. அங்குள்ளவர்களை வாழ வைத்தும் தாங்கள் வாழ முடியாது திரும்பும்போது, அப்படி வருபவர்களுக்கு இந்த அரசு எந்த விதமான உதவிகளைச் செய்திருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். ஒரு பழமொழி உண்டு. 'தன்னைப் பெற்ற தாய் மடிப் பிச்சை எடுக்கும்போது தனயன் காசியில் கோதானம் செய்தானும்' என்று சொல்வதுண்டு. அதேபோன்று வருகிற பாகிஸ்தான் அகதிகளுக்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்போது பர்மா, இலங்கை போன்றவிடங்களிலிருந்து வரும் தமிழர்களுக்கு வாழ்வு அளிக்க இந்த அரசு தவறி விட்டது என்று கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 2 கோடி 82 லட்சம் ரூபாய் அளவிற்கு, இன்னும் அதிகப்படியாக மான்யம் வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கோரியிருக்கிறார்கள். இதில் அடையாள மான்யமாகப் போட்டிருக்கக் கூடியவை பல. அவற்றில் ஓரளவு மிச்சம் இருக்கும் என்பது உண்மையே. இருப்பினும் கேட்டிருப்பதை விட அதிகம் ஏற்படலாம் என்று நினைக்கிறேன். வரி மூலம் நாம் அதிகமாக வசூலித்திருக்கிறோம். 1956-57-ல் இருந்து பார்க்கும்போது ஆண்டு ஒன்றுக்குப் பத்து கோடிக்கு அதிகமாகவே வந்துகொண்டிருக்கிறது மொத்த வருமானம். வரியிலிருந்து மட்டும் 1961-62-ல் 43 கோடி இருந்தது. 1964-65-ல் 67 கோடி அளவில் வரி போட்டிருக்கிறோம். மொத்தமாகப் பார்க்கும்போது எவ்வளவு அதிகமாக வரி போட முடியுமோ அவ்வளவு அதிகமாகப் போட்டாகி விட்டது. மத்திய சர்க்கார் வரியைப் பார்க்கும்போது 1956-57-ல் 573 கோடியாக இருந்தது 1,662 கோடியாக உயர்ந்திருக்கிறது. வரி மூலம் மூன்று மடங்கு அவர்கள் வருமானம் உயர்ந்திருக்கிறது. நம் பங்கு என்ன? கிரான்ட்ஸ் இன் எய்ட் இருக்கலாம். நம் ராஜ்யத்திற்குள்ள பங்கு 16 கோடியிலிருந்து 19 கோடி அளவிற்குத்தான் இருக்கிறது. மற்ற ராஜ்யங்கள் தங்கள் கோட்டாவைப் பூர்த்தி செய்திருக்கிறார்களா, இல்லையா என்று சொல்ல முடியாது. ஆனால் இங்கு நம் ராஜ்யங்கள் ஒதுக்கப்பட்டதை விட அதிகமாக வசூல் செய்வதில் வெற்றி அடைந்திருக்கிறோம். அது, மக்கள் கேட்ட வரியைக் கொடுத்திருக்கிறார்கள் என்றுதான் அர்த்தம். திட்டங்களும் வெற்றிகரமாக நடந்திருக்கின்றன



22nd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது. இப்போது நான்காவது பைனான்ஸ் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. நம் ராஜ்யத்தைச் சேர்ந்தவர் அதன் சேர்மனாக இருப்பதால் சங்கடமாக இருக்குமோ என்ற அச்சம் இருக்கிறது. நமக்குக் கிடைக்க வேண்டிய பங்கை, பூரா வருவாய் துறையும் மத்திய சர்க்காருக்குப் போவதால், அதிகப்படுத்தி வாங்கி நம் நிதி நிலையை அபிவிருத்தி செய்ய கவனம் செலுத்தவேண்டும். அதற்காக மெமோரண்டம் தயாரித்து கமிஷனிடம் கொடுக்கும்போது இந்த சபை முன் அதை வைத்து இந்த சபையின் ஆதரவைப் பெற்று, இந்த சபையின் கருத்தை அறிந்து பைனான்ஸ் கமிஷனின் முன் நம் யோசனையை வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம் மான்யக் கோரிக்கையில் கேட்கப்பட்டிருக்கும் தொகை பெரும்பாலும் நல்ல திட்டங்களுக்காகவே கேட்கப்படுகிறது. வைத்திருக்கும் திட்டங்களில் ஆட்சேபிக்கக் கூடியது இல்லை. வேளாண்மைத் துறையில் தீவிர சாகுபடி செய்ய வேண்டுமென்கிற முயற்சி இருக்கிறது. முயற்சிதான் இருக்கிறதே தவிர அது வெற்றி அடையுமா? இத்துறையில் போட்ட இலக்கு ஏன் நிறைவேறவில்லை? நம் உணவு நிலையைச் சமாளிக்கும் அறிகுறி இருக்கிறதா என்று பார்த்தால் நம் தேசத்தில் அந்த நிலை இருக்கிறதா, நம் ராஜ்யம் என்று தனியாக இல்லை, தேசத்தில் உள்ளது நம்மையும் பாதிக்கும், நிலைமை கவலையாக இருக்கிறது. ஆகவே உணவு உற்பத்திப் பெருக்குத் திட்டம் அதிகப் பலனைத் தருவதாக இருக்க வேண்டும். கூட்டுறவுப் பண்ணை முறையிலும் அரசாங்கமே நேரடியாக நடத்தும் பண்ணை முறையிலும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கூட்டுறவு அமைச்சர் அவர்கள் நேற்று சொன்னதைப் பார்த்தால் அவர்களுக்கே நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்ற சந்தேகத்தைக் கிளப்பியிருக்கிறார்கள். ஒரு விமானத்திற்கு விபத்து ஏற்பட்டால் விமானத்திலேயே போகக் கூடாது என்றிருக்கக் கூடாது. ஒரு பண்ணையில் ஒரு கோளாறு ஏற்பட்டால், அரசாங்க விதைப் பண்ணையில் தவறு ஏற்பட்டதால் அதனால் அரசாங்கம் நடத்துவது எல்லாமே மோசம் என்ற முடிவிற்கு வர முடியாது. உற்பத்தியை அதிகப்படுத்துவதில் அரசாங்கம் ஈடுபடவேண்டும். உற்பத்தியான பொருள்களை அரசாங்கமே ஏற்று விநியோகிப்பதில் எந்தளவிற்கு அரசாங்கம் ஈடுபடுகிறதோ அந்த அளவிற்குத்தான் விலைவாசியை ஓரளவில் நிறுத்தி வைக்க முடியும். ஆகவே கொள்முதல் செய்வது அவசியமாகிறது. உணவு தானிய மொத்த வியாபாரத்தையும் அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்பது அவசியமாகிறது. உற்பத்தியான பொருள்கள் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்கவில்லையென்றால் எவ்வளவு திட்டம் போட்டு வெற்றி பெற்றாலும் என்ன பிரயோஜனம்? நம் பட்ஜட் 1956–57-ல் 56 கோடி இருந்தது. 1964-65-ல் 140 கோடி. இதையும் சேர்த்தால் 142 கோடி ஆகும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் 150 கோடி அளவிற்கு வளரலாம். பழைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கிருந்து விடை பெற்றுக் கொள்ளும்போது 100 கோடி ஆக்கிப் பார்க்கவில்லையே என்ற வருத்தத்தோடு போனார்கள். இப்போது

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [22nd July 1964

150 கோடி ரூபாய் அளவிற்கு விரிவடைந்திருக்கிறது. அப்படியிருந்தும் என்ன பலன்? மக்களிடம் அதிருப்திதான் ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர்களின் பதில் யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. விலைவாசியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்கப்போகிறது என்ற நம்பிக்கை ஊட்டப்பட்டது. அமைச்சர்கள் கூடி என்ன முடிவு எடுத்தார்கள்? ஒரு முடிவும் எடுக்காமல் கலைந்து விட்டார்கள். தென் பிராந்திய உணவு அமைச்சர்களும் மத்திய உணவு அமைச்சரும் கூடிப் பேசினார்கள். என்ன முடிவு எடுத்தார்கள் என்று தெரியவில்லை. இருந்த கட்டுப்பாட்டையும் ரத்து செய்து விட்டு இஷ்டம் போல் வாங்கலாம், விற்கலாம் என்ற நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். இதனால் விலை அதிகமாகிக் கொண்டு போகிறது. விலைவாசியை ஒரே நிலையில் வைக்க வேண்டும். விலைகளை ஏற்றிக்கொண்டே போகக் கூடாது. அரசாங்கமே விலைவாசியை உயர்த்தும் ராக்கட் மாதிரி ஆகிவிடுகிறது. பஸ் கட்டணத்தை உயர்த்தினார்கள். "உயர்ந்தால் என்ன? சக்தி இல்லாதவர்கள் நடந்து போங்கள்" என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னதைப் பார்த்தேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அப்படி யாரும் சொல்லவில்லை. அதை வேறு நீங்கள் சொல்ல வேண்டாம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சொல்லாமல் இருந்தால் சந்தோஷம். அதுமாதிரி பதிலை யாரும் சொல்ல வேண்டாம். விலை ஏறினால் சாப்பிடாமல் இருங்கள் என்று சொல்லி விடாமல் இருக்கவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்திருக்கும் நடவடிக்கை போதாது. உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். இல்லாவிடில் திட்டத்தில் வெற்றி பெற்றோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். காலம் கடத்தியாகிவிட்டது. ஏழெட்டு ஆண்டுகளாக வாக்குறுதி கொடுத்தார்கள்; அவை நிறைவேறவில்லை. மூன்று நாட்களுக்கு மேல் ஒருவன் பட்டினி கிடந்தால் கிளர்ச்சி
12-00 noon செய்யலாம் என்று இருக்கிறது. மக்கள் பொறுமையைச் சோதிக்க வேண்டாம். விலைவாசியைக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. அதிலே தனியாக அதிகாரிகள் போட்டு பணம் கேட்டிருக்கிறார்கள். இந்த அதிகாரி என்ன செய்யப்போகிறார் என்று தெரியவில்லை. கொள் முதலே ரத்து செய்தாகிவிட்டது. இனிமேல் இது சம்பந்தமாக இந்த அதிகாரி என்ன செய்யப்போகிறார், இவருடைய வேலைகள் என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்கம் கூற வேண்டும், அல்லது இனிமேல் எந்தத் துறையில் கட்டுப்பாடு வரப் போகிறது என்பதைப்பற்றியாவது விளக்கம் கூற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், விற்பனைவரி வசூல் செய்வதைப்பற்றியும், அதற்காக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றியும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இதன் மூலம் 30 கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வரும் என்றும் குறிப்பிட்டார்கள்.



22nd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

விற்பனை வரியைக் கொடுக்காமல் சர்க்காரை ஏய்ப்பவர்கள் மீது தீவிரமாக நடவடிக்கை எடுக்கக்கூடிய எல்லோரையும் நாம் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் பழைய சட்டசபைக் கூட்டங்களிலும், முன்பும், ஏதோ விற்பனை வரி அதிகாரிகள் எல்லாம் கொடுமைப்படுத்துகிறார்கள் என்ற குறையை எல்லோரும் சொன்னார்கள். அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு அதிகாரிகள் தீவிரமாக நடவடிக்கை எடுக்காமல் இருந்தார்களோ என்னமோ தெரியவில்லை. அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு வியாபாரிகளோடு அதிகாரிகள் ஒத்துழைத்து வாக்கூடிய நிலைமை இருந்தது. இதன் காரணமாக வழக்குகள் கூட பெருவாரியாக இல்லாமல் இருந்தது. வக்கீல்களுக்குக் கூட வருமானம் குறைந்தது. என்ன முறையில் கணக்கைச் சரியாக எழுதிக் காட்ட முடியும் என்பதில் பல சார்ட்டர்ட் அக்கௌன்டண்ட்ஸ் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இவர்களுக்கு இந்தத் துறையில் கிடைத்த வருமானத்தைப் போன்று வேறு எந்தத் துறையிலுள்ளவர்களுக்காவது வந்திருக்குமா என்பது சந்தேகமே. வரி ஏய்ப்பு அதிகமாக இருக்கிறது என்பதை அறிந்து அதற்காக தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்ற அதிகாரிகளைப் பாராட்டுகிறேன். பாராட்டுதலை யாருக்குச் செலுத்துவது என்பது முக்கியமல்ல; தீவிரமாக யார் நடவடிக்கை எடுத்திருந்தாலும் அவர்களைப் பாராட்ட வேண்டியதுதான். ஆனால் இதைப்பற்றி நன்றாக ஆலோசித்துப் பார்க்கும்போது, ஜனங்களிடம் பெரியதொரு கிளர்ச்சியை உண்டு பண்ணவேண்டும் என்ற எண்ணத்தோடு, வேண்டுமென்றே சில அதிகாரிகள், மக்கள் ஆத்திரமடையக் கூடிய வகையில் சில நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். ஏதோ வைக்கோல் வண்டிகளையும் சாதாரண ஆட்களையும் பிடித்து வழக்குகளைப் போடுவதின் மூலமாக மக்களின் மத்தியில் ஆத்திர மேற்பட்டு இதைப்பற்றிய ஒரு அரசாங்க உத்தரவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு வேலை செய்கின்ற அதிகாரிகளும் இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் விரும்பக்கூடிய அளவில் வியாபாரிகளோடு ஒத்துழைப்பதற்கு வழி செய்கின்ற முறையில், இதை உண்டுபண்ணுகிறார்களா என்பதை நாம் மிக ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஏதோ ஜனங்கள் கூச்சல் போடவேண்டும், அதன் மூலமாக அரசாங்கம் ஏதாவது உத்தரவு போட்டுவிட்டால், அதைச் சாதகமாக வைத்துக்கொண்டு அதிகாரிகள் வியாபாரிகளோடு ஒத்துழைப்பதற்கு வசதியாக இருக்கும் என்று எண்ணுகிறார்களா என்று தெரியவில்லை. அந்த முறையில் சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஆகவே அதிகாரிகள் நிதானமாகவும், உறுதியாகவும் இதில் போகவேண்டும். அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொன்று, கல்வி சம்பந்தமாக, நான்கு புதிய கல்லூரிகளை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வளவு செய்தும் பலன் என்ன? இந்த வருடமும் பார்த்தோம், எங்கு பார்த்தாலும் மக்களிடம் அதிருப்திதான் இருந்து கொண்டிருக்கிறது. பி.யு.ஸி.க்கு மாணவர்களைச் சேர்க்கும் விஷயத்தில்

[திரு. மீ. கலியாணசுந்தரம்] [22nd July 1964

அரசாங்கக் கல்லூரியில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புக்கு, காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்களைப் போட்டிருக்கிறார்கள். அதில் எனக்குப் பொறுமை இல்லை. ஏனென்றால் இதில் வாழ்த்துக்களை விட, வசவுகள்தான் அதிகம் கிடைக்கும் என்பதும் எனக்குத் தெரியும். எம்.எல்.ஏ.-க்களை இதில் போடுவது மிகவும் தவறு என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். எம்.எல்.ஏ.-க்களை இந்த வம்புக்கு இழுக்காமல் இருப்பதுதான் நல்லது. தனியாக இதற்கு ஒரு கமிட்டியைப் போடட்டும். மாவட்ட ரீதியாக எத்தனை ஸ்தாபனங்கள் இருக்கின்றன என்று பார்த்து தகுதிக்குத் தகுந்தவாறு அனுமதி கொடுக்கட்டும், அதே போன்றுதான் தனியார் நடத்தும் கல்லூரிகளிலும் அந்தந்த மாவட்டத்திலுள்ள கமிட்டியின் மூலமாகத்தான் அனுமதி கொடுக்கவேண்டும் என்ற முறை இருக்கவேண்டும். இல்லையென்றால் சொந்தக்காரர்களைச் சேர்த்துக் கொண்டார்கள், மதம், ஜாதி, இந்த அடிப்படையில் சேர்த்துக் கொண்டார்கள் என்ற புகார்கள் இருந்துகொண்டுதான் இருக்கும். சில தனியார் கல்லூரிகளில் 400-க்குக் குறைந்த மார்க் உள்ளவர்களை சேர்க்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். அதே நேரத்தில் 290, 270 மார்க் வாங்கினவர்களை எல்லாம் சேர்த்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் மக்களிடத்தில் பெரும் அதிருப்தி இருக்கிறது. ஆகவே இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டைரக்டர் ஆஃப் விஜிலன்ஸ் பற்றி சில வார்த்தைகளைக் கூறிக் கொண்டு முடித்து விடுகிறேன். இதற்காகத் தனியாக ஒரு அதிகாரியை நியமித்திருக்கிறோம். இவருக்கு விசாரணை செய்யக் கூடிய அதிகாரம் இருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை. பொதுவாக மாவட்டத்தில் நேரிடையாக அதிகாரிகளிடத்தில் சென்று தங்கள் குறைகளைச் சொல்வதற்கு மக்களுக்கு வாய்ப்பும் வசதியும் இருக்க வேண்டும். லஞ்ச ஒழிப்புக்காக நடவடிக்கைகள் எடுக்கும்போது, லஞ்ச ஒழிப்புக் கமிட்டி செய்த சிபாரிசுகளையும் பரிசிலனை செய்து மேற்கொள்ளப்படவேண்டும். லஞ்ச ஒழிப்பு இயக்கத்தில் கவனிக்கப்பட வேண்டியது, ஏன் இந்த லஞ்சம் ஏற்படுகிறது என்பதைத்தான். எங்கு பார்த்தாலும் நிர்வாகத்தில் கால தாமதம் ஏற்படுவதும் ஒன்று. இதை மாற்ற வேண்டும். அதேபோன்று லஞ்சத்திற்கு எதிராக வளருகின்ற மனப்பான்மையை வளர்க்கவேண்டும். லஞ்சம் என்பது கீழே இருப்பவர்களிடம் மட்டும் நடக்கவில்லை, மேலேயிருந்து இதைப் பார்க்க வேண்டும். அதோடு சபாநாயகர் அவர்களைத் தலைவராகப் போட்டு Code of Conduct for Legislators and Ministers என்ற ஒரு முறையை நாம் ஏற்படுத்தி வைத்திருப்போமானால், நன்றாக இருக்கும். அதை யார் ஆரம்பிப்பது என்று பார்க்கக் கூடாது. நாமேதான் முதலில் ஆரம்பிக்க வேண்டும். மற்றவர்களுக்கு நாம் முதற்படியாக இருக்கலாம். இன்றைக்கு லஞ்சம் வாங்கக்கூடியவர்கள் அதிகாரிகள் மட்டும்தான் என்று எண்ணக் கூடாது. உத்யோகப்பற்றற்றவர்களிடம் இந்த லஞ்சம் இருந்து வருகிறது. பஞ்சாயத்துக்களிலும், பஞ்சாயத்து யூனியனிலும் நம்மால் பார்க்க முடிகிறது. முன்னால் தாசில்தாரிடம் லஞ்சம் கொடுத்து வாங்கக்கூடிய சலுகையை இப்போது பஞ்சாயத்து சேர்மெனிடமிருந்தோ அல்லது பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்தோ பெற்றுக்கொள்கிறோம். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். ஆகவே அதிகாரிகள் மட்டும்தான் இதில் குற்றவாளிகள் என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. லஞ்சம் ஒழிப்பது என்ற முறையை நாம் மேலேயிருந்து ஆரம்பிக்கவேண்டும். அதற்கு வசதியாக நாம் Code of Conduct for Legislators and Ministers— என்ற முறையை வகுத்து, சபையில் கொண்டுவந்து அதை விவாதித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



22nd July 1964] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

* **திரு. சா. கணேசன்:** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது நம் முன் வந்திருக்கிற உபரி செலவை அங்கீகரிப்பதற்குரிய மானியத்தை அடிப்படையாகக் கொண்டு சில கருத்துக்களைச் சமர்ப்பிக்க விரும்புகிறேன். விற்பனை வரியைப்பற்றிப் பலர் பேசினார்கள். விற்பனை வரி தகிடுதத்தத்தால் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு நஷ்டம் வருகிறது, வந்துகொண்டேயிருக்கிறது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். செம்மையான முறையில் இந்த விற்பனை வரி முழுவதும் வசூல் செய்யப்படுமானால், நேற்று நம்முடைய அமைச்சர் அவர்கள் கேட்டார்களே, நிலவரியை நீக்கிவிட்டால், எந்த வருமானத்தைக் கொண்டு, அதை நிரப்புவது என்று? இந்த வரியைக்கொண்டு நிலவரியால் ஏற்படுகின்ற துட்டியை நிரப்பலாம் என்பதை ஆணித்தரமாகச் சொல்ல முடியும். ஆகவே வரி தகிடுதத்தத்தைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கிற அதிகாரிகளுக்குப் பூரணமான சுதந்திரத்தையும் அதிகாரங்களையும், வாய்ப்பையும் வழங்கவேண்டும். அந்த முறையில்தான் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, ஆட்சிக்கு உதவி செய்ய முடியும். அதே நேரத்தில் இந்த அதிகாரிகளுக்கு நல்ல பாதுகாப்பு இருக்கவேண்டும், அதாவது உடலுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்ற பொருளில் அல்ல; செயல்புரிய, தடையில்லாத, எல்லா வகையிலும் அதிகாரிகளுக்கு உறுதி கொடுக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய, இனிமேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வெளியே வரும் என்று எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் திருப்திகரமாக இருக்கிறது என்கிற அளவில் சொல்லி, இந்த முறையை உறுதிப்படுத்தும் அளவில், மேலும் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யவேண்டும் என்று தங்கள் மூலமாக அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இனி, கல்வி விஷயத்தைப்பற்றி, பல முறை இந்த மன்றத்தில் என் கருத்துக்களைப் புலப்படுத்தி வந்திருக்கிறேன். ஒரு முறை நான் எனது கருத்துக்களைச் சொல்லி முடித்ததும், நமது முதலமைச்சர் அவர்கள், "அவர்கள் சொல்லுவதை அப்படியே ஏற்றுக்கொள்கிறோம்" என்று சொன்னார்கள். ஆனால் இன்று வரையிலும், ஒரு பலனும் ஏற்படவில்லை என்பதை மிகுந்த புண்ணோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூன்றாவது, நான்காவது வகுப்புக்களுக்கெல்லாம் அதில் படிக்

[திரு. சா. கணேசன்] [22nd July 1964

கிற பிள்ளைகள் தூக்க முடியாத அளவுக்கு நோட்டுப் புத்தகங்கள் வாங்கவேண்டுமென்ற கட்டளைகள் இருக்கின்றன. இது கல்வித் துறைக்கு இருக்கின்ற ஒரு சாபக் கேடு. பள்ளிப் படிப்பு எல்லாம் முடிந்த பிறகு நோட்டுப்புத்தகங்களைப் பார்க்கும்போது, அதில் கால்வாசி கூட பயன்படுத்தப்படவில்லை என்பதை நம்மால் கண்டு கொள்ள முடியும். அன்றைய தினம் நான் கூறியதை அப்போதிருந்த அமைச்சர் அவர்கள், கல்வித்துறை அதிகாரிகள் எல்லோரும் மிகவும் பாராட்டினார்கள். ஆனால் பயனைத்தான் இன்னும் காணோம். இதற்கென்று தனியாக ஓர் உத்தரவு போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். "இளம் பிள்ளைகளுக்கு இத்தனை நோட்டுப் புத்தகங்களுக்கு மேல் வாங்கவேண்டும் என்று சொல்லுவது சட்ட விரோதமானது; ஆசிரியர் அதற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்; அல்லது பள்ளி நிர்வாகம் அதற்குப் பதில் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறது" என்று விதிக்க வேண்டும். இன்றைக்குப் பார்த்தால் 40 புத்தகங்கள், 50 புத்தகங்கள், 200 பக்கங்கள், 400 பக்கங்கள்; இவ்வளவும் ஐந்தாம் வகுப்பு படிக்கும் குழந்தைக்கு. இது அநியாயமான நியதி என்று நான் சொல்லிக் கொள்கிறேன்.

இனி, பாடப் புத்தகங்கள் நம் சர்க்காரே அச்சிட முன் வந்திருக்கிறது. அதனாலே பலன் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். அதைப்பற்றி இப்போது நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. காலம் போகப் போகத்தான் அதனுடைய பலனைப் பற்றியோ, அதிலுள்ள குறையைப் பற்றியோ விமர்சிக்க முடியும். புத்தகங்களுக்கு அரசாங்கம் போட்டிருக்கிற விலை அக்கிரமம் என்று நான் சொல்லவில்லை—நியாயமான விலை தான். ஆனால் புத்தகங்கள் எங்கும் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் சொல்லுகிறார்கள், வியாபாரிகளுக்குக் கழிவு கிடையாது, அதாவது டிஸ்கவுண்ட் கிடையாது என்று. ஆனதால் அதை வாங்க, விற்க வியாபாரிகள் முன்வர மாட்டார்கள். வாங்கினால் கூடுதலாக விலை வைத்து விற்க முடியாது. ஆனால் சர்க்காருக்குத் தான் தெரியுமே, ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை பள்ளிகள் இருக்கின்றன என்று. ஆங்காங்கு டிஸ்ட்ரிக்ட் எஜுகேஷனல் ஆஃபீஸர்ஸ் எல்லாம் இருக்கிறார்கள். இன்ஸ்பெக்டர்ஸ் ஆஃப் ஸ்கூல்ஸ் இருக்கிறார்கள். அந்தந்தப் பகுதியிலுள்ள பள்ளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு அந்தந்த அதிகாரிகளுக்கு அனுப்புவதன் மூலம் அந்தந்தப் பள்ளிகளுக்குச் செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும்.

அது போக, புத்தகம் வெளியிடும் நிலையில் இருக்கிற குற்றச்சாட்டுகள். இதோ கையிலே வைத்திருக்கிறேன்; அரசாங்கத்திலே அச்சுப் போட்ட புத்தகம். சிவப்பாக இருக்கிற புத்தகம் ஐந்தாம் படிவத்திற்கு. பச்சையாக இருக்கிற புத்தகம் நான்காம் படிவத்திற்கு. ஐந்தாம் படிவத்திற்கான புத்தகம் 18 பாயிண்ட் டைப்பிலே அச்சிடப்பட்டிருக்கிறது. அதிலே 7-வது லெஸனை



22nd July 1964] [திரு. சா. கணேசன்]

எடுத்துக்கொள்கிறேன். "This is my shirt, what colour is it?" இப்படி சென்டென்ஸ் வருகிறது. இது ஐந்தாம் படிவத்திற்கு. இப்போது நான்காம் படிவத்திற்கான புத்தகத்தை எடுத்துக் கொள்கிறேன். இந்தப் புத்தகம் அச்சிடப்பட்டிருப்பது 12 பாயிண்ட் டைப். இதிலும் 7-வது லெஸனில் முதல் சென்டென்ஸை எடுத்துச் சொல்லுகிறேன். "There are two men on the road in front of the school" இந்த சென்டென்ஸில் மூன்று ப்ரிபோஸிஷன். இதைப் படித்த பிறகு அந்தப் புத்தகத்தை ஏன் படிக்க வேண்டுமென்று புரியவில்லை. பெரிய வகுப்புக்குப் பெரிய எழுத்து; சிறிய வகுப்புக்குச் சிறிய எழுத்து என்ற விதியா? இந்த மாதிரி பாடப் புத்தகங்களை அமைக்கிறார்கள், அச்சிடுகிறார்கள் என்றால் நமது நாட்டில் கல்வி எங்ஙனம் உருப்படி ஆகும் என்று கேட்டால் குற்றம் சுமத்துவதாக எடுத்துக்கொள்ள வேண்டாம். நியாயமான, சட்ட ரீதியான முறையில் குறை சொல்லுகிறேன். இதை நிவர்த்திக்க வேண்டாமா? இது மாதிரி பல பிழைகள் உள்ளன. மற்ற எல்லாப் புத்தகங்களையும் கூடக் கொண்டு வந்திருக்கிறேன். நேரம் இல்லை என்று சொல்லுவதால் இந்த ஒன்றிரண்டோடு நிறுத்திக் கொள்கிறேன். அதோடு மற்றொரு வேடிக்கை என்ன என்றால் நான்காவது படிவத்திற்கு எத்தனை பாடங்கள் என்றால் 29 பாடங்கள் வருகின்றன. அதே நேரத்தில் ஐந்தாவது படிவத்திற்கு 24 பாடங்கள்தான் வருகின்றன. 24-வது பாடத்தின் சென்டென்ஸைப் படிக்கிறேன். Murugan was a cap seller. He sold caps. They were cheap. இது ஐந்தாவது படிவத்தின் இறுதிப் பாடத்தின் சொற்றொடர்கள். நான்காவது படிவத்தின் சொற்றொடர் எப்படி இருக்கிறது என்று ஏற்கனவேயே பார்த்தோம். பாடங்களை எப்படி அமைப்பது என்பதில் நமது பழங்கால முறைகள் நமக்குத் தெரியும். தமிழ் மட்டுமல்ல, பிற்காலத்தில் ஆங்கிலம் வந்த பிறகு கூட Nelson Reader, Harihara Iyer's Primer Longmans, Oxford முதலிய புத்தகங்களை ஒப்பிடவேண்டும். இவர்களெல்லாம் ப்ரைமரி லெஸனிலிருந்து க்ராஜுவேட் லெஸன் வரையில் அடுக்கி வைத்திருக்கிறார்கள். முதல் பாடத்தில் இத்தனை சொற்கள் வரும், அடுத்த பாடத்தில் இந்தச் சொற்களோடு இத்தனை சொற்கள் கூடும் என்று வகுத்திருக்கிறார்கள். ஆரம்ப காலத்தில் ஆத்திச்சூடியில் எத்தனை சொற்கள் இருக்கின்றன? இந்த மாதிரி கன்ஜங்க்ஷன், ப்ரிபோஸிஷன் இல்லாமல், 'அறம்', 'செய' 'விரும்பு' என்று வார்த்தைகள் இருக்கின்றன. அதற்கு மேலே, கொன்றை வேந்தனை எடுத்துக்கொண்டால் 'அன்னையும்' 'பிதாவும்', 'முன்னறி', 'தெய்வம்', என்று கன்ஜங்க்ஷன் எல்லாம் வரும். இப்படி இருக்கிறது, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் இருந்த அழகு. அதைப் புரிந்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் நாம் ஒரு அளவிலாவது செம்மைப்படுத்த சொற்கள் இருக்கின்றன? இந்த மாதிரி கன்ஜங்க்ஷன், ப்ரிபோஸிஷன் வேண்டாமா? இதைக் கவனித்து குறைகளை அகற்றுவது ஆட்சியாளர்களுடைய கடமை.

அது நிற்க, நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். நமது மாநிலத்தின் இலச்சினை, அதாவது க்ரெஸ்ட் இன்னும் திருந்தவில்லை. இப்போது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'உப மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும்' என்ற புத்தகத்தில் பார்த்தால் அந்த க்ரெஸ்ட்டின் நடுவிலே, கோபுர ஸ்தூபிகளின் நடுவில் ஒரு பூ மாதிரி இருக்கிறது. மேன்மை தங்கிய கவர்னர் அவர்களிடமிருந்து நமக்குக் கிடைத்த இன்விடேஷனில் பார்த்தால் அங்கு பெரிய மலர் போல, ஸ்டார் மாதிரி, இருக்கிறது. அதைத் தவிர நமக்குத் தருகிற கூடுகள் இருக்கின்றன. அதிலே பார்த்தால் நான்கு ஸ்தூபிகளுக்கு நடுவில் ஒரு கொடிக் கம்பு மாதிரி இருக்கிறது. இவைகளெல்லாம் இப்போதுதான் நான் வாங்கிக்கொண்டு வந்தேன். இந்த நிலையில் இருக்கிறது. இப்படியெல்லாம் நமது க்ரெஸ்ட் இருக்குமானால், நமக்கு இது குறைவு இல்லையா? பார்க்கிறவர்கள் இழிவாகக் கருத மாட்டார்களா? எல்லாவற்றிலும் ஒருமுகம் வேண்டுமென்று பேசுகிறபோது, நமது ஆட்சிக்குரிய, நமது மாநிலத்துக்குரிய இலச்சினையில் கூட ஒரு நிலை இல்லையென்றால், அதைப்பற்றி என்ன சொல்வதென்று எனக்குப் புரியவில்லை. ஐம்பது பேர்களைக் கொண்டு காக்கா போடச் சொன்ன மாதிரி ஒவ்வொன்றும் வெவ்வேறு தோற்றமுள்ளதாயிருக்கிறது. இது கேவலம் இல்லையா என்பதை உணரவேண்டும். அரசாங்கத்திலே என்ன எஸ்டிமேட் போட்டிருக்கிறார்களோ அந்த எஸ்டிமேட்டில் 75 சதவிகிதம் அளவில் கீ-ட்ராயிங், ப்ளாக் மேக்கிங், எம்போஸிங் டை எல்லாம் செய்து தர முடியும் என்றாலேயே. இதற்கு மேல் சொல்வது அதிகப் பிரசங்கம் ஆகும் என்று சொல்லி நிறுத்திக் கொள்கிறேன். காண்ட்ராக்ட் என்ற பேரில்கூட எடுத்துக் கொள்ளத் துணிகிறேன் என்றால் காண்ட்ராக்ட்டுக்காக நான் வரவேயில்லை, அவ்வளவு அழுத்தமாகச் சொல்லுகிறேன். இதைத் திருத்த வேண்டுவது இன்றியமையாத கடமை. அதையும் உடனடியாகச் செய்யவேண்டும். இல்லாவிட்டால் இது பொறுத்துக்கொள்ளக் கூடிய ஒன்று அல்ல என்று விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

அதே மாதிரி, இப்போது (உபமானியக் கோரிக்கை விளக்க உரையைக் காட்டி) இதையெல்லாம் நமக்கு அச்சிட்டுக் கொடுத்திருக்கிறார்கள். இதைக் கூட கனம் அமைச்சரிடம் காட்டினேன். "கண்ணைக் குத்துகிறது" என்று சொன்னார்கள். இந்தப் புத்தகத்திலேயே எத்தனை வகையான டைப்புகள்? இதிலே 'தி', 'து', 'னை', 'அ' எல்லாம் வேறு டைப். மற்றதெல்லாம் தின் ஃபேஸ். இவை மட்டும் திக் ஃபேஸ். பாடி, பாயிண்ட் எல்லாம் எவ்வளவு முக்கியமோ அதே போல ஃபேஸும் முக்கியம். ஒரே பாயிண்டில் ரோமன் ஆக இருக்கும், இட்டாலிக்காக இருக்கும், தின்னாக இருக்கும், திக்காக இருக்கும் டைப்புகள் எல்லாவற்றையும் அபேதகமாகப் போட்டு கண்ணைக் குத்துவதைப் பார்க்கிறோம். இந்த மாதிரி இருப்பது நமக்குக் குறைவு இல்லையா? அச்சுத் துறையில் எல்லா மாநிலங்களையும் விட நம் மாநிலம் முன்னணியில் இருக்கிறது. எல்லாக் காட்சிகளிலும் போட்டிகளிலும் நமது மாநிலம் வென்று வருகிறது. இதற்கு நமது சர்க்கார் அச்சு ஆஃபீஸ்



மட்டும் விதி விலக்காக இருக்க வேண்டுமா? அல்லது திருஷ்டி பரிகாரமாக இருக்க வேண்டும் என்று இப்படிச் செய்கிறதா? என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இனி, இது மாதிரி ஆசிரியர்கள் விஷயங்கள், மற்ற விஷயங்கள் எல்லாம் நிறைய இருக்கின்றன. அவற்றையெல்லாம் சொல்ல அதிக நேரம் இல்லை. சொற்களைச் சொல்லும்போது கூட அவற்றை ஒழுங்குப்படுத்திக்கொள்ள வேண்டும். எங்களைப் போன்றவர்கள் கேட்கும்போது 'சிறு நீர்ப்பாசனம்' என்று சொல்லுகிறார்கள். ஆங்கிலத்திலும் வாட்டர் இர்ரிகேஷன் என்பதில்லை; அது இர்ரிகேஷன்தான். இர்ரிகேஷன் என்றால் காற்றையும் மண்ணையுமா இர்ரிகேட் பண்ணப் போகிறோம்? நீரைத்தான் இர்ரிகேட் பண்ணவேண்டும். பாசனம் என்றால் போதும். 'உளவு நாய்' என்று சொன்னால், அதைக் கிண்டல் செய்யப்படாது. 'போலீஸ் நாய்' என்று சொன்னால் ஒரு மாதிரியாக இருக்கிறது என்று மாற்றிச் சொல்லுகிறோம். 'உளவு நாய்' என்று சொல்லும் போது 'நாயைக் கொண்டு உழுவதா' என்று கிண்டல் செய்யாமல், ஒழுங்காகச் சொற்களை அமைத்துப் பழக்கத்தில் கொண்டுவர வேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் நிறைய விஷயங்கள் இருந்தாலும் நேரம் இன்மை காரணமாக முடித்துக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:** அந்தப் புத்தகங்களை இப்படிக் கொடுங்கள். நான் அதிலேயே வேறு பாடம் படித்துக் காட்டுகிறேன்.

**திரு. சா. கணேசன்:** வேறு இடத்தில், தயாரிப்பாளர்கள், தவறிப் போய்ச் சரியாகச் செய்திருக்கலாம். ஆனால் நான் காட்டிய பகுதிகள் ஏன் இப்படி இருக்கின்றன என்பதுதான் கேள்வி.

***திரு. இரா. நெடுஞ்செழியன்:** மதிப்பிற்குரிய சட்டமன்ற துணைத்தலைவர் அவர்களே, இந்த ஆண்டு ரூ. 2 கோடி 82 லட்சத்திற்கு துணை மான்யக் கோரிக்கைகள் இந்த மன்றத்தினுடைய ஆய்வுக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ரூ. 2 கோடி 82 லட்சத்தில் புதிய பணிகளுக்கென்றும், சில வளர்ச்சிக்குரிய பணிகளுக்கென்றும், விவசாயத்தை வளர்ப்பதென்றும், சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத்திற்கு என்றும் தொகைகள் கோரப்பட்டிருக்கின்றன. இந்த மதிப்பீடு செய்கின்ற வகையிலே, இந்த மன்ற உறுப்பினர்கள் சிலபல குறைபாடுகளை எடுத்துத் தெரிவித்தார்கள். மதிப்பீடு வருகிற வகையிலே, துணை மதிப்பீடுகளில் கோரிக்கைகள் கேட்டு, பிறகு அவை நிறைவேற்றப்படாமல் திருப்பித் தருகிற அத்தகைய குறைபாடுகள் வந்து சேருகின்றன. இலாகாவினர் எந்தெந்த இனத்தில் எந்தெந்த அளவுக்குச் செலவிடவேண்டும் என்பதைத் திட்டவட்டமாக முன் கூட்டியே திட்டமிடாததன் காரணமாக சிலபல துறைகளிலே ஏராளமான தொகை தேங்கிக் கிடக்கவும், கடைசி நேரத்தில் பார்த்து, மார்ச்சுத் திங்களில் அவற்றைத் திருப்பித் தரவும், அதனால் எந்த இனத்திற்கு தேவைப்படுகிறதோ அந்த இனத்திற்குச் செலவிடப்பட முடியாத சூழ்நிலை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd July 1964

ஏற்படுகிறது என்ற குற்றச் சாட்டை ஆண்டுதோறும் நடை பெறுகிற விவாதத்தின்போது பல மன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டி வந்திருக்கிறார்கள். அண்மையில் கூட அந்த நிலைமை சுட்டிக்காட்டப்பட்டது. இந்தப் பிரச்னையில் அரசு முக்கியமாக கவனம் செலுத்தவேண்டும். திட்டமிடுகிற வகையிலே முறையாக, செம்மையாக முன்கூட்டியே ஆராய்ந்து, தேவைப்படுகிற அளவுக்கு துணைமான்யக் கோரிக்கைகள் கேட்பதற்கும், அவைகளை நிறைவேற்றுவதற்குமான முயற்சிகளை அரசினர் மேற்கொள்ளுதல் வேண்டும். இதைப்பற்றிக் கூட பொதுக்கணக்குக் குழு சிபார்சு செய்திருக்கிறது. நான் மீண்டும் அதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

"ரெவின்யூ செலவினங்கள் குறைத்து மதிப்பிடப்பட்டனவா என்பதும், துறைகள் நமக்கு வழங்கப்பட்ட நிதிகளை ஒழுங்கான முறையில் செலவிடுகின்றனவா என்பதும் கண்காணிப்பதற்காக நிதித் துறையினர் மேற்கொண்ட கட்டுப்பாடு நடவடிக்கைகள் நடைமுறையில் கொண்டுவரப்பட்டனவா என்பதும் நிதித் துறை யினரால் பரிசீலிக்கப்பட வேண்டும். அவ்வாறு பரிசீலனை செய்கையில், நிர்வாகப் பணிகள் விஷயமாக அதிகரித்து வருகிற செலவுகளையும் சமூக அபிவிருத்திப் பணிகளின் விஷயமாக அதிகரித்து வருகிற தேவைகளையும் கருத்தில் கொள்ளவேண்டும். மேலும், நிதித் துறையினர் தங்களது மதிப்பீடுகளை உண்மை நிலைக்கேற்ற அடிப்படையில் தயாரிக்க வேண்டும்." என்று ஆண்டுதோறும் பொதுக்கணக்குக் குழு வற்புறுத்திக் கொண்டே வருகிறது. இந்த ஆண்டும் இதை பொதுக்கணக்குக் குழு மீண்டும் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறது. இதில் அரசினர் மிகவும் கவனம் செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மேலும்,

"மூலதனப் பிரிவிலும், மாநில அரசினர் வழங்கும் கடன் களும் முன் பணங்களும் என்பதன் கீழும் ஏராளமான தொகை மிகுந்து விட்டது."

என்ற தன்மையையும் பொதுக்கணக்குக் குழு சுட்டிக் காட்டி யிருக்கிறது. மேலும் சொல்லுகிறபொழுது,

"துறைகள் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்களை திட்ட மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு முன்பாக அவற்றின் விவரங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். பிரஸ்தாப நிதியாண்டில் நிறைவேற்றப்பட்டுவிடும் என்று நியாயமான நம்பிக்கை அளிக்கக்கூடிய வேலை திட்டங்கள் மட்டுமே சேர்க்கப்படுவதற்காக நிதித் துறையினர் தீவிரமாகக் கண் காணிக்க வேண்டும்"

என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறது பொதுக் கணக்குக் குழு.

அரசினர் பல்வேறு துறைகளுடைய அலட்சியப் போக்கின் காரணமாகவோ என்னவோ, மேலெழுந்தவாரியாகத் திட்டமிடு வதன் காரணமாகவோ என்னவோ சில துறைகளில் அதிகமாக துணைமான்யக் கோரிக்கைகள் கேட்டுப் பெற்று, கடைசியில் செலவழிக்க முடியாத அளவுக்கு, திருப்பித் தருகிற அளவுக்கு, நிலைமைகள் வந்திருக்கின்றன. திட்டமிடப்பட்டு, இவ்வளவுதான்



22nd July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

செலவாகும் என்று தெரிந்திருந்தும்கூட, அதை முன்கூட்டியே கேட்காத அளவுக்கு, அடையாளமாக ஒரு தொகை பெற்று, பிறகு அதிகமாகச் செலவழிக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளைக் கண்டறிந்து அரசு அவற்றை மாற்றி அமைத்தால் தான், இத்தகைய மான்யக் கோரிக்கைகளின் தொகையை உண்மையாகவே தேவைப்படுகிற அளவுக்கு செலவிடுவதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும்.

மேலும், சிக்கன நடவடிக்கையை இந்த அரசு மேற் கொண்டிருக்கிறது என்று முன்பு நமது நிதி அமைச்சராக இருந்தவர் இந்த மன்றத்தின் முன் எடுத்துரைத்தார். எந்த வகையிலே சிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன இதுவரையிலே என்பது தெரியவில்லை. எந்த ஒரு துறை யிலும் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதன் காரணமாக செலவினத்தைக் குறைக்க எந்த முயற்சியும் எடுத்ததாகத் தெரிய வில்லை. துணை மான்யக் கோரிக்கைகளில் கூட சில புதிய துறை களிலே புதிய நிர்வாக அமைப்பு ஏற்படுத்தித் தீரவேண்டிய அளவுக்கு அவசியம் ஏற்பட்டிருக்கிறது. புதிதாக சிறிய ஆயுதத் தொழிற்சாலைக்காக ரூ. 3 லட்சம் துணை மான்யம் கோரப் பட்டிருக்கிறது. வேறு சில நிர்வாக அமைப்புகளும், தனித் தனியாக துணைமான்யக் கோரிக்கைகள் கோரப்பட்டிருக்கின்றன. சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டு, வேறு பல துறைகளில் மிகுந்திருக்கிற அதிகாரிகளையும், அலுவலர்களையும் இதில் மாற்றிக் கொள்வதற்கு வழிவகை கிடைக்காதா என்பதைப் பார்த்து, இதன் மூலம் ஏற்படும் அதிகச் செலவினத்தைக் குறைப்பதற்கு வழி வகைகள் கிடைக்குமா என்பதையும் அரசினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்த மன்றத்தில் முன்பு கனம் முதல் அமைச்சர் அவர்களால் வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறதே தவிர, அது முறைப்படி நிறைவேற்றப்பட்டிருப்பதாக இதுவரையில் தெரியவில்லை. அதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டதாகவும் தெரியவில்லை. எந்தெந்த இலாகாவில் செலவினத்தைக் குறைப்பதற்காக முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதற்கான அறிக்கையும் தயாரித்திருப்பதாகத் தெரியவில்லை. இந்த முயற்சி களை மேற்கொண்டு, சிக்கன நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வளர்ந்து வருகிற செலவினத்தைக் குறைப்பதற்கு அரசினர் உறுதியாக முன் வருதல் வேண்டும். அப்படி வந்தால்தான் இப்படிப்பட்ட மானியக் கோரிக்கைகள் அதிகமாக வளராமல் இருப்பதற்கு வழிவகைகள் ஏற்படக்கூடும்.

கல்வி நிலையைப்பற்றி மன்ற உறுப்பினர்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். கல்வியைப் பெறவேண்டும் என்ற ஆர்வம் எங்கு பார்த்தாலும் வளர்ந்து வருகிற அத்தகைய தன்மையைப் பார்க்கிறோம். இந்த ஆண்டு மாணவர்கள் கல்லூரி களில் சேருவதற்கு எவ்வளவு தொல்லைகள் பட்டார்கள், துயரத்தை ஏற்றுக்கொள்வதற்கான அவசியத்திற்குத் தள்ளப் பட்டார்கள் என்பதை அத்தனை பேர்களும் நன்கு உணருகிறோம். இந்த ஆண்டில் 100-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகள்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd July 1964

திறக்கப்பட வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையை வைத்துப் பார்த்தால், அடுத்த ஆண்டு எப்படிப்பட்ட நிலை உருவாகுமோ என்று அச்சப் படவேண்டிய அவசியத்திற்கு நாம் ஆளாகியிருக்கிறோம். 10-வது வகுப்பிலே படித்து வருகிற அத்தனை மாணவர்களையும் ஏற்றுக் கொள்கிற அளவுக்கு கல்லூரிகளில் இடங்கள் ஏற்பாடு செய்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்றால், இல்லை. தேறி வருகிற மாணவர்களில், அவர்களில் வேறு பல பணிகளை ஏற்றுக்கொள்ளச் செல்லுபவர்களைத் தவிர, கல்லூரியில் படித்து தங்களுடைய படிப்பை உயர்த்திக்கொண்டு, மேல் படிப்புக்குச் செல்ல வேண்டும் என்று எண்ணுகிற மாணவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டு, அதற்குத் தேவையான அளவிற்கு கல்லூரிகளில் இடம் ஒதுக்கப் பட்டனவா என்று கணக்கு எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தக் கணக்கு எடுக்கப்பட்டிருக்குமானால் இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படுவதற்கு வழிவகைகள் ஏற்பட்டிரா. இம்மாதிரி முன் கூட்டியே திட்டமிடாததன் காரணமாக இப்பொழுது சில பல இடங்களில் நாம் பத்திரிகைச் செய்திகள் படிக்கிறோம். மாணவர்கள் பி.யூ.சி. வகுப்பில் சேருவதற்காக பல கல்லூரிகளில் அலைந்து திரிந்து இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால் தற்கொலை செய்துகொண்டு இறந்தார்கள் என்ற நிலை ஏற்பட்டிருக் கிறது. செய்தித் தாள்களில் நாள் ஒன்றுக்கு ஒருவர் இருவர் இம்மாதிரி தற்கொலை செய்து கொண்ட செய்தியைக் கண்ட வண்ணமாக இருக்கிறோம். இன்னமும் மாணவர்கள் அலைந்து திரிந்த வண்ணமாக இருக்கிறார்கள், இடம் கிடைக்காமல். கல்லூரியில் சேருவதற்கான உரிமை பெற்றிருப்பவர்களுக்கு, வாய்ப்பு கிடைக்காது தவிக்கும் நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இன்னும் ஏற்றுக்கொள்ளப்படாமல், இடம் கிடைக்காமல் அலைந்து திரிந்து கொண்டிருக்கிற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது.

பொறி இயல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் சேருவதற்கு முதலில் தனித்தனியாக அந்தந்தக் கல்லூரியில் இருந்த முறையை மாற்றி, அதற்கு என்று ஒரு குழு ஏற்படுத்தி அத்தனை கல்லூரிகளுக்கும் மாணவர்களைத் தேர்ந்து எடுக்கிற ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவினர் மாணவர்களைப் பொறுக்கி எடுத்து அந்தந்தப் பொறியியல் கல்லூரிகளுக்கும், அந்தந்த மருத்துவக் கல்லூரிகளுக்கும் மாணவர்களை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதுபோல, இப்பொழுது நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதனால் கலைக்கல்லூரிகளுக்கு மாணவர்களைப் பொறுக்கியெடுத்து மாணவர்களை அனுப்பி வைப்பதற்கு ஒரு குழு அந்தந்த மாவட்டத்திற்கும், அந்தந்தத் தலை நகரத்திற்கும் அமைக்கிற முறையை இனிமேலாவது மேற் கொண்டால்தான் நிலைமையை ஓர் அளவுக்கு சமாளிக்க முடியும். எல்லாக் கல்லூரிகளிலும் கேட்ட அளவுக்கு, விரும்புகிற அளவுக்கு இடங்கள் இருக்கின்றன, இருக்கும் என்ற உறுதிப்பாடு ஏற்படுகிற காலத்தில் இத்தகைய குழுவிற்கு அவசியம் இல்லை. அப்பொழுது மாணவர்கள் விரும்பியபடி கல்லூரிகளில் போய்ச் சேருவதற்கு



22nd July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வழிவகை ஏற்படும். ஆனால் இப்பொழுது விரும்புகிறவர்கள் விரும்பும் வண்ணம் கல்லூரிகளில் சேர முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கல்லூரியிலும் ஒவ்வொரு விதமான முறையை வைத்துக்கொண்டு, அந்த முறையின் அடிப் படையில் மாணவர்களைத் தேர்ந்து எடுக்கிறார்கள். அதற்கு என்று பொதுவாக ஒரு வரைமுறை வைத்துக்கொள்ளப்படவில்லை. அவரவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அத்தகைய வரைமுறைகளின் படி அவரவர்கள் நடக்கிறார்கள். இந்த நிலைமையில் இட நெருக்கடி ஏற்பட்டு இருக்கிறது. பலபேர் சிபாரிசு இல்லாதவர்கள் சிபாரிசு செய்ய முடியாதவர்கள் இடம் கிடைக்காத அளவுக்கு, அவர்கள் அதிக மார்க்குகள் வாங்கியிருந்தாலும் இடம் கிடைக்காத அளவுக்கு தவிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் கலைக்கல்லூரியைப் பொறுத்தவரையில், ஒரு குழு அமைத்து அதற்கு கனம் உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரிப் தலைவ ராக இருப்பதனால் சட்டமன்றத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் கூட 10 நாட்களாக அவரைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருக்கிற அளவுக்குத்தான் நிலைமை இருந்து கொண்டு வருவதைப் பார்க் கிறோம். ஏதோ ஒருவர் கிடைத்திருக்கிற காரணத்தினாலே அந்த ஒருவர் மூலம் மாணவர்களைச் சேர்ப்பதற்கு வழிவகை ஏற்படும் என்ற ஆர்வத்தில் அப்படி உறுப்பினர்கள் அலைந்து திரிந்து கொண்டு இருக்கிறார்கள். இதை உணர்ந்துகொண்டு, அதற்கு 12-10 p.m.
பயந்துகொண்டு அதிக நேரம் மன்றத்தில் தங்காமல், வெளியில் எழுந்து போகவேண்டிய சூழ்நிலைக்கு அவர்கள் ஆளாகியிருக் கிறார்கள். கலைக் கல்லூரிக்கு ஒரு குழு அமைத்திருப்பதன் காரணமாக இம்மாதிரி செய்ய வேண்டியிருக்கிறது. அந்தந்தக் கல்லூரிகளில் 300 மார்க், 400 மார்க் வாங்கிய அப்படிப்பட்ட மாணவர்களைத்தான் எடுப்போம் என்று சொல்லி, அப்படிப்பட்ட அளவு மார்க்குகள் வாங்காத மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டிருக் கிறார்கள். அப்படிப்பட்ட மாணவர்களும், அவர்களின் பெற்றோர் களும் சென்னையிலே சுற்றிச் சுற்றி 10, 15 நாட்களாக அலைந்து திரிந்த வண்ணமாக இருக்கிறார்கள், ஏக்க வடிவில் காணப் படுகிறார்கள். ஒவ்வொரு கல்லூரியிலும் காத்துக் காத்து, கிடந்து கிடந்து, பல கல்லூரிகளில் அலைந்து திரிந்து, பல இடங்களில் சிபார்சு தேட வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நெருக்கடி நிலைமை ஏற்படக் காரணம், இருக்கிற இடங்கள் குறைவு, இடத்திற்காக விண்ணப்பம் செய்துகொண்டவர் களுடைய எண்ணிக்கை அதிகம். அதிக மார்க்குகள் வாங்கு பவர்களை மட்டும் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வது என்ற நிலை ஏற்படுமானால், பல குடும்பங்களில், பல இடங்களில், பரம்பரை யாகப் படிக்காமல் இருக்கிற குடும்பங்களில், ஓரிருவர் படித்து, அவர்களுக்கு மார்க்கு குறைந்திருந்தாலும், 250, 260 மார்க்குகள் வாங்கியிருந்தாலும், அவர்களுக்கு இடம் கொடுப்பதில் சற்று சலுகை தந்தால்தான் அந்தக் குடும்பத்தினருக்கும், அவர்களை ஒட்டிய உற்றார் உறவினருக்கும் நல்லதொரு சூழ்நிலை ஏற்படும். இதற்கென்று ஒரு தனிக் குழு அமைத்து, நிலைமைகளைப்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [22nd July 1964

பரிசீலித்து, அதன் மூலம் கலைக்கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அடுத்த ஆண்டிலாவது மேற்கொள்ளுவதற்கு அரசினர் முன்வருதல் வேண்டும்.

சென்னையைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையில், சென்னை நகரத்தில் மக்கள் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. சென்னை மாநகர ஆட்சி மன்றம் புதியதாக 13 உயர்நிலைப் பள்ளிகள் திறப்பதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தும், 6 உயர்நிலைப் பள்ளிகள்தான் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. 13 உயர்நிலைப் பள்ளிகளை அனுமதிக்கத்தக்க அளவுக்கு தேவையை உணர்கிறோம். இதை உணர்ந்து அரசினர் இந்தத் தேவையை நிறைவேற்றும் அளவுக்கு முயற்சிகள் எடுக்கவேண்டும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கீழ்ப்பாக்கத்திலே உள்ள நாட்டு மருத்துவக் கல்லூரியும், நாட்டு மருத்துவ மனையும் அகற்றப்படுகிற பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னையாக இருந்துகொண்டு வருகிறது. கீழ்ப்பாக்கத்தில் இருக்கிற நாட்டு மருத்துவ மனையையும், கல்லூரியையும் குற்றாலத்திற்கு அகற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. அலோபதி மருத்துவ முறைதான் நாட்டில் எங்கும் இருந்துகொண்டு வருகிறது என்றாலும், அதைப் பயன்படுத்தி அதன் மூலமாக மருத்துவ வசதி செய்து கொடுக்கும் முயற்சியைத் தான் அரசினர் மேற்கொண்டிருக்கிறார்கள் என்றாலும், நாட்டிலே இருக்கிற நோய்கள் முழுவதும் அலோபதி முறையினால் தீர்க்கப்படவில்லை. நாட்டு மருத்துவ முறையின் மூலம் தீர்க்கப்படும் நோய்களையும், நாட்டு மருத்துவ முறையினால் தீர்க்கப்பட்டுள்ள நோயாளிகளின் எண்ணிக்கையையும் கணக்கிட்டுப் பார்க்கிறபொழுது, நாட்டிலேயிருக்கிற மொத்த அளவிலே பார்க்கும்பொழுது, நாட்டு மருத்துவ முறையும் இருந்து தீரவேண்டும் என்ற நிலைமை புலப்படும். சென்னையைப் பொறுத்தவரையில், பல்வேறு அலோபதி மருத்துவ மனைகளும் கல்லூரிகளும் இருக்கின்றன. சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத்திற்கே அது தலைநகரமாக இருக்கிற இடம். ஒரு நாள் பஸ்கள் வேலை நிறுத்தம் செய்த நேரத்திலே கணக்கிட்டுப் பார்க்கிறபொழுது இங்கே இருக்கிற நாட்டு மருத்துவ மனைக்கு பஸ் போக்கு வரத்து இல்லாமல் மக்கள் சென்று வருவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்த அந்த நாளிலே, 650 பேர்கள் அங்கு வந்து வைத்தியம் செய்து போய்க் கொண்டிருந்த நிலை இருந்திருக்கிறது. சென்னையிலே ஒரு நாட்டு மருத்துவ மனைக்கு, அதிலும் குறிப்பாக ஒரு மாவட்டத்தின் தலைநகராக மட்டுமல்லாமல் மாநிலத்தின் தலைநகராக இருக்கிற சென்னையில் இடமுண்டு. அதற்குத் தேவையும் இருக்கிறது, அது நியாயமும்கூட. அதன் மூலமாகத்தான் அந்த முறையில் வைத்தியம் பார்த்துக்கொள்ள விரும்புகிறவர்களுக்கு வசதிகள் ஏற்படுத்த முடியும். சென்னை நகரிலுள்ள அத்தனை பேரும் பெரிய மருத்துவ மனைக்குச் சென்று அங்கே இடம் பெறுவது கடினமாக இருக்கிறது. அலோபதி மருத்துவ முறையில்தான் தங்களுடைய



22nd July 1964] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நோயைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பாதவர்கள், மருந்துகள் வாங்க வசதியற்றவர்கள் நாட்டு மருத்துவ முறையை விரும்புகிற அளவுக்கு இருக்கிறார்கள். நாட்டு மருத்துவ முறைக்கும் பெரிய அளவில் நோயாளிகள் வருகிறார்கள் என்ற நிலைமை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆகவே சென்னை மாநகரம் ஒரு நாட்டு மருத்துவ மனையைத் தாங்கும். சென்னை மாநிலத்தின் தலைநகரில் இயங்கி வருகிற ஒரு மருத்துவ மனையை அகற்றுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அந்தக் கல்லூரியையும், மனையையும் இங்கே வைத்து அதன் மூலம் நாட்டு மருத்துவ முறையிலே பயின்று வருகிறவர்களை எதிர்காலத்தில் கிராமப் புறங்களுக்கு அனுப்புவதன் மூலம் நாட்டு மருத்துவ முறையில் வசதி செய்து கொடுப்பதற்கு வாய்ப்பு ஏற்படும். குற்றாலத்தில் மருத்துவ மனையையும், கல்லூரியையும் அமைப்பதிலே தவறில்லை. ஆனால் சென்னை மாநகரில் இருக்கிற மருத்துவ மனையையும் கல்லூரியையும் அங்கு அகற்ற வேண்டிய அவசியமில்லை. அவற்றை சென்னை மாநகரத்திலேயே நிலை நிறுத்தவதற்கு அரசினர் முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. DEPUTY SPEAKER: The Hon. Minister requires half an hour for reply. I would therefore request the hon. the Leader of the Opposition to finish his speech as early as possible.

திரு. இரா. நெடுஞ்செழியன்: இலவசக் கல்வி முறையை நடைமுறையில் கொண்டு வந்து தனியார் நடத்துகிற அத்தகைய பள்ளிகளுக்கு மான்யம் கொடுப்பதன் மூலமாக பள்ளிகள் நடப்பதற்கு இப்பொழுது வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக ஆசிரியர்களுடைய சம்பளம் குறைக்கப்படுகிற பல அவல நிலைமைகள் தனியார் நடத்துகிற பள்ளிகளில் ஏற்பட்டிருக்கின்றன. அத்தகைய நிலைமைகளை அரசினரின் கவனத்திற்கு ஆசிரியர்களின் சங்கம் கொண்டு வந்திருக்கிறது. எடுத்துக்காட்டிற்காக, நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய தொகுதியாகிய திருவல்லிக்கேணியில் கெல்லட் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அங்கு ஏற்பட்டிருக்கிற அத்தகைய நிலைமைகளை விளக்கிக் காட்டுவதன் மூலம், அந்த நிலைமைகளை சீர்படுத்த வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் தனியார் நடத்துகின்ற பள்ளி என்ற வகையிலே அங்கு ஒரு ஆசிரியர் ரூ. 200 சம்பளமும், ரூ. 30 படியும் ஏற்கனவே வாங்கிக் கொண்டிருந்தால், இப்பொழுது ரூபாய் 150 சம்பளமும், ரூபாய் 30 படியும் வாங்குகிற அளவுக்கு ரூபாய் 50 குறைக்கப்பட்டிருக்கும் அளவுக்கு நிலைமை இருக்கிறது. மற்றொரு ஆசிரியர் ரூபாய் 160 சம்பளமும், ரூபாய் 30 படியும் ஏற்கெனவே வாங்கிக்கொண்டு இருந்தால் இப்பொழுது 145 ரூபாய் சம்பளமும், ரூபாய் 15 படியும் அதாவது மொத்தத்தில் ரூபாய் 30 குறைந்து ரூபாய் 160 வாங்கக்கூடிய கட்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார். அதே போல் ரூபாய் 140 சம்பளமும் படியும் வாங்கினவர், இப்பொழுது ரூபாய் 102-ம் படியும்

*[திரு. இரா. நெடுஞ்செழியன்]* [22nd July 1964

*வாங்குகிற கட்டத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார். ரூபாய் 230 சம்பளமும், ரூபாய் 30 படியும் வாங்கிக் கொண்டு இருந்த மற்றொரு ஆசிரியர் 155 சம்பளமும், ரூபாய் 30 படியும் வாங்க வேண்டிய கட்டத்திற்கு ஆளாகி இருக்கிறார். சாதாரண வேலைக் காரர்களை எடுத்துக் கொண்டாலும்கூட, ரூபாய் 55 சம்பளமும், ரூபாய் 15 படியும் வாங்கினவர்கள் இப்பொழுது ரூபாய் 15 சம்பளமும், ரூபாய் 40 படியும் ஆக மொத்தம் ரூபாய் 55 வாங்க வேண்டிய நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஏற்கனவே ரூபாய் 70 வாங்கி குடும்பம் நடத்தி வந்த வேலைக்காரர் இப்பொழுது ரூபாய 55 வாங்கி வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டத்திற்கு ஆளாக்கப் பட்டு இருக்கிறார். இனிமேல் எடுக்கின்ற ஆசிரியர்களை அரசாங்கம் வகுத்து தந்திருக்கிற சம்பள விகிதத்திலே எடுக்கலாம். ஆனால் இப்பொழுது இருக்கிற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் சிறிது அளவு கூட குறையாத அளவுக்கு அவர்கள் வாங்கிக் கொண்டிருந்த சம்பளத்தையும் படியையும், நீடித்து கொடுப்பதற்கு வழிவகை கண்டுபிடிக்க வேண்டும். அரசாங்கமே மானியமாகத் தந்தாலும் சரி, பொருளாதார வசதி பெற்று இருக்கக்கூடிய தனியார் பள்ளி களின் நிர்வாகத்தினரும், அரசினரும் முயன்று அவர்களுக்கு கிடைத்து வந்த சம்பளத்தில் ஒரு ரூபாய் கூட குறையாத அளவுக்கு நடைமுறையில் அவர்கள் சம்பளம் பெறும்படி முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.*

*உணவுப்பிரச்னையைப் பற்றி பலர் இங்கே எடுத்துச் சொன்னார் கள். சர்க்கார் தக்க நடவடிக்கைகளை காலாகாலத்தில் எடுத்துக் கொண்டிருந்தால் இந்தமாதிரி நிலைமை வந்திருக்காது. தும்பை விட்டு, வாலைப் பிடிக்கிற மாதிரி விலைவாசிகள் ஏறிய உடனேயே அந்தந்த கட்டத்தில் அரசினர் தங்களுக்குள்ள அதிகாரங்களை உப யோகித்து இதைத் தடுத்து நிறுத்தாததன் காரணமாக இன்றைக்கு விலைவாசிகள் உயர்ந்து இந்திய அரசினரும், மாநில அரசினரும் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கான முயற்சிகளை எடுத்திருந்தாலும் கூட திருப்தி அடையக்கூடிய அளவுக்கு அத்தகைய முயற்சிகள் இல்லை. உணவுப் பிரச்னையைப் பற்றிச் சொல்லும்போதும், விலைவாசிகளை தடுத்து நிறுத்தாதன் காரண மாக இன்று அன்றாடக் கூலிகளும், வாரக்கூலி வாங்குகிறவர்களும் மாதச்சம்பளம் பெறுகிறவர்களும், நடுத்தர வகுப்பினரும், கீழ்த்தர வகுப்பினரும், மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுடைய நிலைமைகள் மிகமிக பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பதை நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதை சரிப் படுத்துவதற்கு சர்க்கார் முயல வேண்டும்.*

*விற்பனை வரியைப்பற்றி இந்த மன்றத்தில் உள்ள பல உறுப் பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதிகமான அளவுக்கு பதுக்கல்கள் இருப்பதன் காரணமாக, பொது விவாதத்தின் போதே கனம் அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று வாக்குறுதி*



22nd July 1964] *[திரு. இரா. நெடுஞ்செழியன்]*

*அளித்தார்கள். அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கணக்குகள், வெளிக்கொண்டு வரப்பட்டிருக் கின்றன. இது மக்களுக்கு மகிழ்ச்சி தருகின்ற அளவில் இருக்கிறது. மேலும் இந்த நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட வேண்டும். சட்டம் முறைப்படுத்தப்பட வேண்டும். அதற்காக எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள் பாராட்டத்தக்க முறையிலே அமைந்திருக்கின்றன. அவற்றை மேலும் தீவிரமாக்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளு கிறேன்.*

*லஞ்ச ஒழிப்புக்கான நடவடிக்கைகளை மேலும் தீவிரமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு பர்மா அகதிகள் பிரச்னை யைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு நல்ல முறையில் நிவா ரணம் அளிக்கும் வகையிலே அரசினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். மன்ற உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய கருத்துக்களையும், வெட்டுப் பிரேரணையை ஒட்டி மன்ற உறுப்பினர்கள் தந்து இருக்கிற கருத்துக்களையும் மனதிலே கொண்டு, அவற்றை நிறைவேற்றி வைப்பதற்கு அமைச்சர்களும், அமைச்சர் அவையும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.*

***கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக்கோரிக்கையின் மீது விவாதம் நடந்த போது கனம் அங்கத்தினர்கள் பல நல்ல கருத்துக்களைச் சொன் னார்கள். பதில் சொல்லுகிறபோது அந்த அங்கத்தினர்கள் இங்கே இருந்தால் இன்னும் உற்சாகமாக பதில் சொல்ல முடியும். ஏதோ பேசி விட்டு போய் விட்டார்கள் என்று சொன்னால் பதில் சொல்லுவதிலும் கூட உற்சாகம் போய் விடுகிறது. குறிப்பாக ஓர் இரண்டு விஷயங்களை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.*

*கனம் அங்கத்தினர் சண்முகம் பேசுகிறபோது, இந்த அறிக்கையிலே சரிக்கட்டப்படும், சரிக்கட்டப்படும் என்று போட் டிருக்கிறதே, கலோக்கியல் முறையிலே சொல்லுகிற மாதிரி சர்க்கார் பண்ணுகிறார்களோ என்று கேட்டார்கள். நம்முடைய விதிகளை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் எல்லோரும் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டால்தான் நிலைமை என்ன என்பது புரியும். நம்முடைய நிதி விதிகளின்படி ஆண்டு தோறும் ரூபாய் 30,000 செலவழிக்கிற இனங்களுக்கும் "நான்- ரெகரிங் எக்ஸ்பென்டிசர்", மொத்த மூலதனமாக ரூபாய் 1 லட்சம் செலவழிக்கிற இனங்களுக்கும் அவ்வப்போது சட்டசபையிலே வந்து மானியக்கோரிக்கை மூலமாக அனுமதி பெற வேண்டும்.*

*பட்ஜெட் தயாரிக்கும்போது ஓட்டு மொத்தமாக சில இனங் களுக்குப் போட்டு விடுகிறோம். உதாரணமாக மைனர் இர்ரிகேஷன் ஸ்கீம் என்று எடுத்துக்கொண்டால், அங்கே ஒரு கோடி, இரண்டு கோடி என்று போட்டு விடுவோம். அதே மைனர் இர்ரிகேஷன் ஸ்கீமிலே ஆண்டுதோறும் ரூ. 30 ஆயிரத்திற்கு மேல், மூலதனம் ஒரு லட்சத்திற்கு மேல் ஆகிறது என்றால், அது உபரி மானியக்*

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [22nd July 1964

கோரிக்கையாக வைத்து மானியமாகப் பெற வேண்டும். முதலிலே பட்ஜெட்டிலே ஓட்டு மொத்தமாகப் போட்ட தொகைக்குள்ளாகவே அதைச் சரிக்கட்ட முடியும் என்று எழுதியிருக்கிறது. அதில் தவறு கிடையாது. அதுதான் சட்டசபைக்கு நிதி விஷயங்களிலே நல்ல கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று செய்யப்பட்ட முறை; அந்த முறைப்படி பொதுவாக என்னென்ன ஒதுக்கீடுகள் செய்கிறோமோ, அவற்றைத் தனித்தனியாக அந்தந்த இனத்திற்கு செலவழிக்க அனுமதி கோருகிறோம். அதே போலத்தான் இப்பொழுது கூட்டுறவு மில்கள் வைக்கிறோம். மொத்தமாக கூட்டுறவுத் துறைக்கு என்று மானியம் கோருகிறோம். பின்னால், தனி மில்களுக்கு 5 லட்சம், 10 லட்சம், இன்னின்ன மில்களுக்கு இவ்வளவு இவ்வளவு என்று கேட்கிறோம். ஆகவே தான் இது ஓட்டு மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட இனத்திலிருந்து சரிக்கட்டப்படும் என்று சொல்லப் படுகிறது.

இரண்டாவது ஒரு புகார் ஸ்ரீமதி அனந்தநாயகி சொன்னார்கள். ஸரண்டர் எல்லாவற்றையும் முன்னமேயே சொல்லி விட்டால், அதை வேறு இனங்களுக்கு செலவழிக்க உதவியாக இருக்கும் என்று சொன்னார்கள். அதைக் குறித்து விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. உதாரணமாக எலக்ட்ரிசிடி போர்டுக்கு ரூ. 10 கோடி என்று ஒதுக்கி இருக்கிறோம்; பப்ளிக் ஹெல்த் துறைக்கு 6 கோடி ஒதுக்கி இருக்கிறோம். ஆனால் பப்ளிக் ஹெல்திலே நமக்குப் போதுமான சாதனங்கள் கிடைக்கவில்லை. ஆஸ்பத்திரிக்கு நிலம் ஆர்ஜிதம் செய்ய இயலவில்லை என்றால், பல்வேறு வகைகளில் அந்த ஆறு கோடியைச் செலவழிக்க முடியாமல் போகிறது என்றால், ஆண்டு நடப்பிலே அது தெரிந்துவிடும். அப்பொழுது அதிலிருந்து வேறு துறைக்கு இரண்டு கோடியை எடுத்துக் கொள்ளுகிறோம். விரிவடைந்து வரும் எலக்ட்ரிக்சிடிக்கு அதிகமாக செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று அதற்கு மாற்றிக் கொடுக்கிறோம். அந்த இரண்டு கோடியை கொடுக்கும் போது, சட்டசபைக்கு வந்து எலக்ரிசிடிக்கு 2 கோடி அதிகரிக்க வேண்டும் என்று மானியக் கோரிக்கை கொண்டு வருகிறோம். ஆனால் பப்ளிக் ஹெல்த்தில் ஆறு கோடியை நாலு கோடியாகக் குறைக்க, சபைக்கு வரவேண்டியதில்லை; ஆண்டு இறுதியில் கணக்குக் கொடுக்கும் போது, கொடுத்த ஆறு கோடியில் நாலு கோடிக்குத்தான் கணக்கு வரும். அதிகப்படியான இரண்டு கோடியை ஏற்கனவே எடுத்துச் செலவழித்தாகி விட்டது. எலக்ட்ரிசிடிக்கு ரூ. 10 கோடி என்றது ரூ. 12 கோடி என்றாகி விட்டது. அந்த அதிகப்படியான இரண்டு கோடிக்கு மானியக் கோரிக்கை வைத்து வாங்குகிறோம். ஆனால் அப்படி மானியம் கோரும்போது, எந்த இனத்திலிருந்து எடுக்கிறோம் என்று சொல்வதில்லை. வருஷ இறுதியில் இன்ன இனத்தில் குறைவு என்று காட்டுகிறோம். அப்படிச் செய்யாமல் முதலிலேயே எலக்ட்ரிசிடிக்கு அதிகம் 2 கோடி, பப்ளிக் ஹெல்த்தில் சரண்டர் 2 கோடி என்று சொன்னால், மொத்தம் 10 ப்ளஸ் 2 ப்ளஸ் 2 ஆக 14, பப்ளிக் ஹெல்த்தின் பாகம் 4 கோடி ஆக மொத்தம் 18 கோடி என்று ஆகிவிடும். அத்தனைக்கு நிதி இடையாது. அதனால்தான்



22nd July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்].

சொல்லுகிறேன். இந்த முறையைத் தெரிந்து கொள்ளவேண்டும், என்று மானியத்தொகை உபரியாக இருக்கும்போது அதை சரண்டராக காண்பிக்கிறோம். சரண்டர் ஏற்பட்டு இருக்கிறது என்றால் அது முதலிலேயே வேறு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். அதைத் தனித்தனியாக இன்னின்ன துறைக்கு மாற்றப்பட்டது என்று காட்டுவது இல்லை. (திருமதி அனந்தநாயகி எழுந்தார்) It is not necessary to discuss it further. (திரு. அ. பெ. தர்மலிங்கம் எழுந்தார்). நேரம் இல்லை. இப்பொழுது ஒரு மணிக்கு கில்லடின் வந்து விடும். திரு. கணேசன் அவர்கள் எவ்வளவோ பாடம் படித்தார்கள். நானும் படிக்க வேண்டாமா ? கொஞ்சம் இடம் கொடுங்கள். இப்பொழுது இங்கே பல கருத்துக்கள் சொல்லப்பட்டன. இரண்டு மூன்றைப் பற்றி மட்டும் சொல்லுகிறேன். டயம் இல்லாத காரணத்தால்.

விற்பனை வரி வாய்ப்புகளை கண்டு பிடிக்க எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பாராட்டுதல் தெரிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சட்டப்படி நியாயமாக எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சபையில் ஆதரவு கொடுப்போமேயானால், வேலை செய்யும் அதிகாரிகளுக்கு ஊக்கம் ஏற்படும். யாரோ பாதிக்கப்பட்டவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு சட்டசபையிலே ஆதரவு கொடுக்கா விட்டால் இந்தத் துறையில் வேலை செய்யும் அதிகாரிகளுக்கும் மனக் குறைவு ஏற்பட்டு, பலக்குறைவும் ஏற்படும். ஆகவே தான் அடிக்கடி இந்த விற்பனை வரி இலாகா சம்பந்தமாக பேசும்போது சொல்கிறேன், பாக்கி வர வேண்டிய தொகைகளை எல்லாம் வசூல் செய்து விட்டால் நம்முடைய நான்காவது திட்டத்துக்கு புது வரி போட வேண்டிய அவசியமே இருக்காது என்று. சட்டசபையிலே மாத்திரம் அல்ல, வர்த்தகர்கள் உடைய கூட்டத்திலே அவர்கள் கூட்டத்திற்கு சென்று இருந்தபோது அந்த வகையில் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் அமைத்தது பற்றி குறிப்பிடப்பட்டது. டைரக்டர் ஆப் விஜிலென்ஸ் இந்த வரியை ஏய்ப்பதை கண்டு பிடிக்க முடியாது. வரி வசூல் செய்யும் இலாகாவினர்தான் அதைச் செய்ய வேண்டும். அதற்காகத்தான் ரெவின்யு போர்டில், வரி இலாகாவில் அனுபவம் உள்ள ஒருவரை கமிஷனராக வைத்திருக்கிறோம். அவர்கள் வரியை ஏய்ப்பவர்களை கண்டு பிடித்துக் கொடுத்தால் விஜிலென்ஸ் டைரக்டர் தவறு செய்தவரை பிடித்து நடவடிக்கை எடுக்க உதவுவார்கள். ஆனால் வரி ஏய்க்கிறவரை கண்டு பிடிப்பது விற்பனை வரி இலாகா தான் செய்ய வேண்டும். இந்தமாதிரி யார் தவறு செய்தாலும் அவரைப் பிடிக்க முயற்சி செய்கிறோம். வர்த்தகர்கள் ஆனாலும் சரி, அதிகாரிகள் ஆனாலும் சரி, இவர்களிடம் எந்தவிதமான குறைபாடும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குற்றம் உள்ளவர்களை கண்டு பிடிக்க எல்லா முயற்சிகளும் செய்யப்படும். ஆனால் இந்த வேலையை முதலிலே கமிஷனர் தான், ஏமாற்றுகிறதை, குற்றங்கள் செய்கிறவர்களை விஜிலென்ஸ் இலாகாவிற்கு சொல்ல வேண்டும். ஆனால் இந்த இரண்டு இலாகா பணியையும் சேர்த்து வைக்க இயலவில்லை.

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [22nd July 1964

திரு. அரங்கண்ணல் ஹவுசிங் போர்ட் ரிபோர்ட்டை வைக்கவில்லை என்று சொன்னார்கள். ஒரு மோஷன் கூட கொடுத்தார்கள். 1960-ல் தான் இந்த ஹவுசிங் போர்ட் அமைக்கப்பட்டது. முதல் வருஷக்கணக்கை தயார் செய்து ஆடிட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் தணிக்கை செய்து அனுப்பினார்கள். அந்த ரிபோர்ட்டு 300 பக்கம் கொண்டதாக இருந்தது. ஆடிட்டர்களுடைய முறைப்படி இதிலே சிறுசிறு தவறுகள், மாற்றங்கள்கூட சொல்லப்பட்டிருந்தன. ரூலைப் பின்பற்றாது முதலிய சிறிய தவறுகளும் மற்ற எல்லாவற்றையும் இதில் ஏராளமாக போட்டிருந்தது. அதை ஆடிட்டருக்கே அனுப்பி, "நீங்கள் சம்மரைஸ் செய்து, முக்கியமான தவறுகள் எவை எவை என்று தோன்றுகிறதோ அவற்றை குறிப்பிட்டுக் கொடுத்தால் பிரசுரம் செய்கிறோம்" என்று எழுதி அனுப்பினோம். அவர்கள் அந்த முறையில் ஒரு ரிபோர்ட்டை தயாரித்து அனுப்பினார்கள். அது வரையில் எனக்கு விஷயம் தெரியாது. ரிப்போர்ட்டை சட்டசபை முன் வைக்கலாமா என்று ஃபைலை சர்க்குலேட் செய்தபொழுது சட்டத்தைப் பார்த்தேன். ஆடிட் ரிப்போர்ட்டை வைக்க வேண்டும் என்று இருந்தது. இந்த ரிப்போர்ட் அப்படி ஆடிட் ரிப்போர்ட் ஆகுமா என்ற சந்தேகம் எழுந்தது. முழு ரிபோர்ட்டையுமே அச்சடித்துக் கொடுக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன். இதனால் ஏற்பட்டது 3 மாத கால தாமதம். அதற்கு மேல் இல்லை. இது தவிர்க்க முடியாதது. நடைமுறையிலே காலதாமதம் ஆகக்கூடிய சில அம்சங்கள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றன. காரணம் என்ன? ரிப்போர்ட்டை தயார் செய்கிறவர்கள் கொஞ்சம் தீவிரமாக பரிசீலனை செய்து தயார் செய்ய வேண்டி இருக்கிறது.

போலீஸ் கமிஷனர் பற்றிச் சொன்னார்கள். கமிஷனராக இருக்கிறவர்கள் அவர்களே மாஜிஸ்ட்ரேட்டாகவும், இருப்பது தவறாக இருக்கிறது என்று சொன்னார்கள். இது பல முறை இங்கே விவாதிக்கப்பட்ட விஷயம். கமிஷனருக்கு ஜுடிசியல் அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை. லா அண்ட் ஆர்ட்ரை மெயின்டென் செய்ய அவர்களுக்கு கொஞ்சம் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரப்படி அவர் ஒருவரை அரஸ்ட் செய்யவும், ரிமாண்டில் வைக்கவும் 144, 41 போன்ற பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்க, சிற்சில காரியங்கள் செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சர்க்கார் லா அண்ட் ஆர்டரை சரியாக வைக்க வேண்டும் என்று இந்த முறையை நம்புகிறார்கள்.

